வெளியீடு 3-8-2005 Issued 3-8-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஜூலை 31, 2004—தொகுதி 64

**Saturday the 31st July, 2004 —Volume 64**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31'04
P04.
185247

[Price Rs. 3.00

573
21.2.06

**31–7–2004**

## உள்ளடக்கம்

[stamp]

பக்கங்கள்


| | |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | xi-xv |
| Governor and Council of Ministers | xvii-xx |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xxi-xxiii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxv-xxxv |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-54 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 13, 14, 15, 16, 17 மற்றும் 18 - இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) | 54,225-952 |
| (இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 19 - இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) | 54,953-1024 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஒன்றியங்களின் வனப் பகுதியிலுள்ள ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம். | 54-57 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 57 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 57 |
| (இ) அரசு உறுதிமொழிக் குழு | 58 |
| (ஈ) மனுக்கள் குழு | 58 |

பக்கங்கள்

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

| | |
|---|---|
| (அ) தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004 | 58-59 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 59-60 |
| (இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 60-61 |
| (ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 61 |
| (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2004 | 138 |
| (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2004 | 143-144 |
| (எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2004 | 158 |
| (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004 | 159-160 |
| (ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2004 | 160-161 |
| (ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2004 | 161-162 |
| (ஓ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2004 | 162-163 |
| (ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2004 | 163-164 |

பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2004—2005, விவாதமும் வாக்கெடுப்பும்**

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 1 — மாநிலச் சட்டமன்றம்<br>(ஆ) கோரிக்கை எண் 2 — ஆளுநர் மற்றும் அமைச்சரவை<br>(இ) கோரிக்கை எண் 12 — கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>(ஈ) கோரிக்கை எண் 15 — நிதித் துறை<br>(உ) கோரிக்கை எண் 35 — திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை<br>(ஊ) கோரிக்கை எண் 48 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 62-70, 123-127 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 62,64-65, 66,68,69 79 |
| (எ) கோரிக்கை எண் 10 — வணிக வரித் துறை— வணிக வரிகள் | 70-71,127 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 70,80 |
| (ஏ) கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை<br>(ஐ) கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை | 71-75,80-123, 127-129 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 71,73,80, 91-92,93-94 102-103, 118-120 |
| (ஒ) கோரிக்கை எண் 33 — நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை<br>(ஓ) கோரிக்கை எண் 40 — ஊரக வளர்ச்சித் துறை | 75-79, 80-123, 129-130 |

பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2004-2005, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் | 75,77,80-81,122 |
| திரு. எச். ராஜா | 81-102 |
| திருமதி சி.எம். சூரியகலா | 103-109 |
| திருமதி சான்ட்ரா டான் க்ரவல் | 109-111 |
| திரு. லா. சந்தானம் | 111-119, 120-122,123 |

(ஔ) கோரிக்கை எண் 11 — சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை
(அஅ) கோரிக்கை எண் 25 —வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
(அஆ) கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—மீன் வளம்
(அஇ) கோரிக்கை எண் 21 — உள் துறை—காவல்
(அஈ) கோரிக்கை எண் 22 — உள் துறை — தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்
(அஉ) கோரிக்கை எண் 37 — பொதுத் துறை
(அஊ) கோரிக்கை எண் 9 — பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
(அஎ) கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு
(அஏ) கோரிக்கை எண் 8 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—பால் வளம்
— 130-137



தமிழ்நாடு ... 
0/85247
சென்னை-600 008
நூலகம்



D
V2,1:31'.P04
P04.V64



பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2004-2005, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அஐ) கோரிக்கை எண் 28 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா
(அஒ) கோரிக்கை எண் 31 — தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
(அஓ) கோரிக்கை எண் 27 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்
(அஔ) கோரிக்கை எண் 47 — இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
— 130-137

**6. அறிவிப்புகள்—**

| | |
|---|---|
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 137 |
| (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004-2005, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆசெ) | 139 |
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 143 |
| (ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92, 1992-93, 1993-94, 1994-95, 1995-96 மற்றும் 1996-97, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆசெ) | 144-145 |
| (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 158 |
| (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 159 |
| (எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 160 |
| (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 161 |

பக்கங்கள்

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.) 162

(ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.) 163

(ஓ) தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.) 203

7. **கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004-2005, வாக்கெடுப்பு—** 139-142

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 139-140

8. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92, வாக்கெடுப்பு—** 146-147

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 146

9. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1992-93, வாக்கெடுப்பு—** 148-150

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 148

10. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1993-94, வாக்கெடுப்பு—** 150-151

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 150

11. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1994-95, வாக்கெடுப்பு—** 152-153

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 152

12. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1995-96, வாக்கெடுப்பு—** 154-155

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 154

13. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1996-97, வாக்கெடுப்பு—** 155-157

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 155-156





பக்கங்கள்

14. **அரசினர் தீர்மானங்கள்—**

(அ) பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 164-165

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 214

15. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2004 165-167

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 165,166

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2004 167-169

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 167,168

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2004 169-171

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 169,170

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004 171-172

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 171,172

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2004 173-174

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 173,174

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2004 174-176

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 175,176

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2004 176-178

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 176-177,178

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2004 178-180

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 178,179

பக்கங்கள்

**15. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**
தொடர்ச்சி

(ஐ) தமிழ்நாடு வேளாண் வருமானவரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004 — 180-184

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 180-183, 184

(ஒ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 184-187

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 185-187

(ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 187-189

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 187,189

(ஔ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 189-191

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 189,191

(அஅ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 191-193

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 191,192-193

(அஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 193-195

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 193,194-195

(அஇ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 195-197

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 195,196

(அஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 197-199

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 197,198



பக்கங்கள்

**15. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**
தொடர்ச்சி

(அஉ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004 — 199-201

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 199, 200-201

(அஊ) தமிழ்நாடு விலங்குகளையும் பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தல் (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு, 2004 — 201-203

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் — 201,202-203

(அஎ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004 — 203-205

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 204,205

(அஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 206-207

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 206,207

(அஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 208-209

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 208,209

(அஒ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 210-211

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 210,211

(அஓ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 212-213

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 212-213

**16. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 215-224

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி ஏனைய அனைத்திந்தியப் பணிகள் மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.*

2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   *பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.*

3. நிதி மற்றும் உணவு அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   *நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.*

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

10. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.



11. வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

12. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

13. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:

கால்நடை பராமரிப்பு.

14. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.*

17. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

19. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

*மீன்வளம்.*

20. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

21. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

*தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.*



22. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

*செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

23. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.*

-------

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR — Thiru P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance and Food** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies. Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

9. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

11. **Minister for Agriculture and Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development, Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

12. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes and Co-operation.



13. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

14. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

15. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

16. **Minister for Education and Backward Classes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees, Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

17. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

20. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

21. **Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

22. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply.

23. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

-----



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி. எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ. கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 23-7-2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |

19. ஆண்டிவேல், திரு. ப. .. வேடசந்தூர்
20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ,
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. க. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்



136. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



182. மில்லர், திரு. அ. .. கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்

211. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி

217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1

220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி



228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி

231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 16, தாரண—திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 ஜூலை 31, சனிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."*

*எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி தேவையானதைக் கொடுத்து உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா எண் 101, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

101—

### தடுப்புச் சுவர்

***1894—திரு. தா. பச்சைமால்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதியில் கடலரிப்பால் பாதிக்கப்படும் கடற்கரை கிராமங்களில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பணி எடுக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி குமரி மக்களின் இதய தெய்வமாக விளங்கும் எங்கள் அன்னையே, தங்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மீனவர் சமுதாய மக்கள் கடல் அரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதை எல்லாம் சீர்செய்கின்றவண்ணம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கி, கடியப்பட்டினம், மண்டைக்காடு, சின்னவிளை, பெரியவிளை ஆகிய பகுதிகளிலே கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, அந்தப் பணிகள் முடிவுற்றுள்ளன. அதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு மீனவர் சமுதாய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சைமன் காலனி, வாணியகுடி, குரும்பனை பகுதிகளில், கடல் அரிப்பைத் தடுப்பதற்காக தூண்டில் வளைவுப் பணிகள் திட்ட மதிப்பீட்டிற்குள் நடைபெறாமல், கடல் சீற்றத்தால் இன்றைக்கு மீனவர் சமுதாய மக்கள் மீன் பிடிக்கச் செல்ல இயலாத நிலையுள்ளது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, அந்த மீனவர் சமுதாய மக்களின் நலன் காக்கின்றவண்ணம் உடனடியாக தூண்டில் வளைவுப் பணிகளை நிறைவேற்றிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை கிராமங்களிலே தூண்டில் வளைவு அமைக்கப்பட வேண்டுமென்ற குமரி மாவட்ட மீனவர்களுடைய நீண்ட நாள் கனவினை நனவாக்குகின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே குமரி மாவட்டத்திலே





7 இடங்களிலே கடற்கரை கிராமங்களிலே தூண்டில் வளைவு அமைப்பதற்கான அனுமதியை வழங்கி, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு, நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணக்குடி, பள்ளம், புத்தன்துறை, கேசவன்துறை, பொழிக்கரை போன்ற கிட்டத்தட்ட 11 மீனவர் கிராமங்களிலே தூண்டில் வளைவு அமைப்பதற்காகப் பொதுப் பணித் துறையினர், அதற்கான proposal-ஐ அனுப்பியிருக்கிறார்கள். HUDCO நிதியுதவியின் மூலமாகவோ அல்லது அரசினுடைய நிதியுதவியின் மூலமாகவோ, இந்த ஆண்டு மேற்படி கிராமங்களிலே தூண்டில் வளைவு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற 7 தூண்டில் வளைவுப் பணிகளிலே நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட பெரியகாடு மீனவர் கிராமத்திலே அமைக்கப்பட்டுவருகின்ற தூண்டில் வளைவுப் பணி முடிவடையக்கூடிய நிலையில் இருக்கிறது. இருந்தாலும்கூட, தூண்டில் வளைவு என்பது முழுமைபெறுகின்றபோது, ஆழிக்கடல் என்ற பகுதி வரை அந்தத் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டால்தான் அந்தக் கடலினுடைய சீற்றம் முழுமையாக உள்ளே வராமல் மீனவர்கள் எளிதாகத் தங்களுடைய படகுகளைக் கொண்டு மீன் பிடிக்கச் செல்ல முடியும். அதனால் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலே, ஆழிக்கடல் பகுதி வரை அந்தத் தடுப்புச் சுவர் வராத காரணத்தினால், இன்றைக்கு மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதற்கு சிரமப்பட்டு வருகின்றார்கள். எனவே, மக்களினுடைய கோரிக்கையின் அடிப்படையிலே பொதுப் பணித் துறை அதிகாரிகளும், ஐ.ஐ.டி.-யினுடைய ஆய்வுக் குழுவினரும் அந்தப் பணியினைப் பார்வையிட்டு.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** பார்வையிட்டு, அதற்கான திருத்திய மதிப்பீட்டை இன்றைக்குத் தயார் செய்து இருக்கிறார்கள். எனவே, திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையிலே HUDCO நிதியுதவியின் மூலமாகவோ அல்லது உபரி நிதியின் மூலமாகவோ இந்தப் பணியினை பெரியகாடு கிராமத்திற்குச் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆழிக்கடல்

பகுதி வரை தூண்டில் வளைவுப் பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தப் பணியும் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாகர்கோவில் தொகுதியில் இன்னும் பல இடங்களில் தடுப்புச் சுவரும், தூண்டில் வளைவுப் பாலமும் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பணிகள் குறித்தும், ஏற்கெனவே அவரிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கிற காரணத்தினால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கனிவுடன் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், கன்னியாகுமரி மாவட்டத்திலே கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவிற்கு என்று சொல்லி, 37 கோடி ரூபாயைச் செலவு செய்திருக்கிறார்கள். மொத்தம் 57 கோடி ரூபாய். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிக்கு 37 கோடி ரூபாய். இதிலே விடுபட்ட கிராமங்களும் இருக்கின்றன. அவற்றையும் நீங்கள் தத்தெடுக்க வேண்டும். அங்கேயும் தடுப்புச் சுவர்களையும், கடல் அரிப்புச் சுவர்களையும் அமைத்துத் தரவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கிறேன். அதேபோல—குளச்சல் என்று சொன்னாலே—டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில், எங்களுக்கு மருத்துவக் கல்லூரியைத் தந்துவிட்டீர்கள். நேற்றைக்கு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் 138 கோடி ரூபாய்க்கு இரப்பர் பூங்காவை அறிவித்து விட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்தத் தொழிலும் கிடையாது. அந்த மாவட்டத்தில் பொருளாதார மறுமலர்ச்சி வரவேண்டும் என்று சொன்னால், குளச்சலிலே ஒரு துறைமுகம் வரவேண்டும் என்பது வெகு நாளைய ஆசை. அம்மா அவர்களும் அறிவித்து இருந்தார்கள். அது நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குமரி மாவட்டத்தைத் தத்தெடுத்து இருக்கிற காரணத்தினாலே, குமரி மாவட்டத்தில் அந்தத் துறைமுகப் பணிகளை இந்த ஆண்டிலேயே தொடங்கி, அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விடுபட்டிருக்கின்ற இடங்களையும் அரசு மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே இருக்கின்ற 7 மாவட்டங்களில், 29 இடங்களில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக ஒரு திட்ட மதிப்பீடு 169 கோடி ரூபாய்க்குத் தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் நீர் வள ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது என்பதனையும், அதோடு சேர்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், கடல் அரிப்பினால் பாதிக்கப்படுகின்ற கிராமங்களில் தடுப்புச் சுவரோ அலலது தூண்டில் வளைவுப் பாலமோ அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அரிப்பால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளான டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், இராயபுரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, கடல் அரிப்பு ஏற்படுகின்ற நேரத்தில், ஏற்படுகின்ற கஷ்டங்களைப் போக்குவதற்காக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதிக்குட்பட்ட புராதன நகரங்களான தரங்கம்பாடி, பூம்புகார் உள்ளிட்ட தமிழகத்திலுள்ள அனைத்து மீனவக் கிராமங்களிலும் ஏற்படும் கடல் அரிப்பின் பாதிப்பைத் தடுக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு தடுப்புச் சுவர் அமைக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 102, திரு. லா. சந்தானம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 31

**102—**

**சாலையைச் செப்பனிடுதல்**

***17879—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வத்தலகுண்டு-பேரையூர் சாலையில் பிரிந்து இடையப்பட்டி புதுக்கோட்டைக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டுகளில் இச்சாலையின் முக்கியத்துவம் கருதி, முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப் பொறுத்த அளவிலே, எல்லாச் சாலைகளும் ஓரளவுக்கு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதிலே இந்தச் சாலையும் மிக முக்கியமான சாலை என்கின்ற காரணத்தினால்தான், அதை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற வினாவினை எழுப்பி இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, அதை கவனத்திலே எடுத்துக்கொண்டு இந்த ஆண்டு அதற்குரிய நிதியினை ஒதுக்கித் தந்து செப்பனிட வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற சாலையின் பெயர் வத்தலகுண்டு-பேரையூர் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலை இடையப்பட்டி-திருச்சான்புரம்-புதூர் சாலை எனத் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சாலையின் மொத்த நீளம் 5 கிலோ மீட்டர் ஆகும். இச்சாலையின் கி.மீ. 0/0-விருந்து 1/0 பகுதி நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 1/0-லிருந்து 3/2 பகுதி, மாவட்ட இதர சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மேம்படுத்தப்பட்டு உள்ளது. மீதியுள்ள கி.மீ. 3/2 முதல் 5/0 வரை உள்ள பகுதிக்கு, வரும் நிதி ஆண்டில்



2004 ஜூலை 31]

முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**103—**

**உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தம்**

***32132—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அரசு ஆய்வு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19-11-2001-ல் உலக வர்த்தக மைய இணைப்புப் பிரிவு—WTO Nodal Cell—ஒன்று, தமிழக அரசால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, பல்வேறு துறைகளையும், பங்கு வர்த்தகதாரர்களையும் ஒருங்கிணைத்து, ஒரு பாலமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கென இந்தியப் பொருளியல் பணி பதவித் தரத்தில், ஒரு தனி அலுவலர் செயல்பட்டு வருகிறார். இவர் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலாளரின் நேரடிப் பார்வைக்குட்பட்டும், வளர்ச்சி ஆணையாளரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழும் செயல்படுகிறார். உலக வர்த்தக மைய இணைப்புப் பிரிவு—WTO Nodal Cell—மைய அரசின் கருத்தினைச் சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்குத் தெரிவித்து, அறிக்கைகளைக் கோரிப் பெற்று, உரிய காலங்களில் அதனைக் கொண்டு செல்வதுடன், நமது மாநில அனைத்துத் துறைகளின் ஒட்டுமொத்த அறிக்கையினை நடுவண் அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு உடனுக்குடன் அனுப்புகிறது.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்லாந்து நாட்டிலிருந்து ஸ்டார்ச் இறக்குமதி செய்யப்படுவதாக அறிகிறோம். வேளாண்மை உற்பத்திப் பொருளுக்கு, உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால், விலை வீழ்ச்சி ஏற்படும் என்ற அச்சம் உள்ளதை அரசு அறியுமா? இதனால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது; இதைச் சரிக்கட்ட அரசின் செயல்பாடுகள் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, WTO—World Trade Organisation—ஒப்பந்தத்தின் அடிப்படையில், Globalisation—உலகமயமாக்குதல்—என்ற நடவடிக்கையை மைய அரசு ஒப்புக்கொண்டது. கிராமப்புற விவசாயப் பொருளாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது என்பதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு உணர்ந்து, இதை மைய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல, அந்த மாவுப் பொருளைப் பொறுத்தவரைக்கும், Tapioca Starch and Maize Starch—ஆக, இரு வகை starch உற்பத்தி—நமது நாட்டிலே பெருமளவு செய்யப்படுகிறது. குச்சிக் கிழங்கு மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களிலிருந்து தயாராகும் இந்த starch-ஐ, வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக, தாய்லாந்து நாட்டிலிருந்து, மைய அரசு பெருமளவு இறக்குமதி செய்வதற்கு WTO என்ற போர்வையின்கீழ் அனுமதி தந்திருக்கிறது. அதனால், நமது நாட்டிலுள்ள, தமிழகம் மட்டுமல்ல, அகில இந்திய அளவிலே இருக்கின்ற மக்காச்சோளம் மற்றும் குச்சிக் கிழங்கு போன்ற starch-க்குத் தேவையான விவசாயப் பொருள் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு, விலை வீழ்ச்சி ஏற்பட்டு, ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. WTO-விலே, import duty-யை அதிகப்படுத்த வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த starch-க்கு, இன்னும் பல பொருட்களுக்கு import duty-யை மைய அரசு அதிகப்படுத்துகிறபோதுதான், WTO என்ற இந்த உலக வர்த்தக நிறுவனத்தின் ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பிலிருந்து விவசாயப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியும் என்று மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்; நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.



2004 ஜூலை 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள், உலக வர்த்தக நிறுவனத்தின் மூலமாக ஒப்பந்தம் செய்து கொண்டதன் பயனாக, நமக்கு ஏதாவது நன்மை உண்டா? அதிலும் குறிப்பாக, அந்த ஒப்பந்தம் செய்து கொண்டதனால்—தற்போது starch-ஐப் பற்றிக் கூறினார்கள்; மேலும்—Tea-யினுடைய விலை, பால் பொருளினுடைய விலை, ஆக, அனைத்தின் விலைகளும் குறைந்து, இப்போது விவசாயிகள் எல்லாம் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான வகையிலே, நம்முடைய தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மைய தொழில் அமைச்சராக மறைந்த திரு. முரசொலி மாறன் இருந்தபோது உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால், குறிப்பாக அந்த Doha Rounds என்று சொல்லக்கூடிய அந்தப் பேச்சுவார்த்தையின் மூலமாக, இந்தியாவிற்குப் பெரிய வெற்றி, WTO-வில் ஏற்பட்டது என்ற ஒரு எண்ணம் உருவாகக்கூடிய நிலையினை அப்போது மைய அரசு உருவாக்கியது; அந்த அமைச்சர் அவர்களும் கூறியிருந்தார்கள். ஆனால், உண்மை நிலை அதுவல்ல; விவசாயத்தில் உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்படுகிற பாதிப்புகள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன என்ற ஓர் அறிவிப்பைத் தந்தார்கள். அப்படி அது நீக்கப்படவில்லை. அதைப்போலவே, முதலீடு வெளிநாடுகளிலேயிருந்து, இந்தியாவிற்கு, விவசாயத் துறைக்கும் அதிகம் வரும் என்று சொன்னார்கள். அப்படி விவசாயத் துறைக்கு வெளிநாடுகளிலிருந்து அதிகமான முதலீடு வரவில்லை; மற்ற துறைகளுக்கு முதலீடு வந்ததேயொழிய-60 முதல் 70 சதவீதம் இந்தியப் பொருளாதாரம் விவசாயத்தை நம்பி இருக்கிறது—Agro—based industries-க்கு அவர்கள் கூறியதுபோல முதலீடு வரவில்லை. பாதிப்பு அதிகமாக உலக வர்த்தக ஒப்பந்தத்தால் ஏற்பட்டது. ஸ்டார்ச் மட்டுமல்ல, Tea இந்தியாவிலே, உலகத்திலேயே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் உலக வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டோம் என்ற போர்வையிலே, வெளிநாடுகளிலிருந்து Tea

வெகு அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டதால், Tea உற்பத்தியில் விலை வீழ்ச்சி பெரிதும் இந்தியாவில் ஏற்பட்டது. நீலகிரி மாவட்டத்தினுடைய சிறு விவசாயிகள் எல்லாம் பெரும் பாதிப்புக்கு இதனால் உள்ளானார்கள். இதற்கு மைய அரசு அப்போது எடுத்த நடவடிக்கையும், உலக வர்த்தக ஒப்பந்தமும்தான் காரணம். அது மட்டுமல்ல. பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. Juices இறக்குமதி செய்யப்படுகின்றன. Chocolate, sweets போன்றவையும் இறக்குமதி செய்யப்படுகின்றன. நமது நாட்டிலே நிறைய பால் உற்பத்தி ஆகிறது. பால் powder எல்லா மாநிலங்களிலும் உற்பத்தி ஆகிறது; Surplus production இருக்கிறது; அதிகப்படியாக உற்பத்தி ஆகிறது. ஆனாலும்கூட, வெளிநாடுகளிலிருந்து பால் powder இறக்குமதி செய்ய, இந்த உலக வர்த்தக ஒப்பந்தம் என்ற போர்வையிலே அனுமதியை மைய அரசு தந்துவிட்ட காரணத்தால், பால் உற்பத்தி இந்தியாவிலே பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. தமிழ்நாட்டில்கூட நாம் நிறைய பால் powder-ஐ விற்க முடியாத நிலை இன்று உருவாகி இருப்பதற்குக் காரணம், இந்த உலக வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் அப்போது இதில் முக்கிய பொறுப்பு வகித்த, அமைச்சராக இருந்த மறைந்த மாறன் காலத்தில் பால் powder இறக்குமதிக்கும் அவர்கள் அப்போது அனுமதி தந்துவிட்டார்கள். இப்படிப்பட்ட காரணங்களால் பெரிய பாதிப்பு ஏற்பட்டது. இதற்கு அடுத்து CANCUN என்ற ஒரு பேச்சுவார்த்தை—சுற்றுப் பேச்சு வார்த்தை — உலக வர்த்தக ஒப்பந்தத்தினுடைய குறைகளைப் போக்க மேற்கொள்ளப்பட்டது. அதிலும் முன்னேற்றம் இல்லை. அதுவும் தள்ளிப் போடப்பட்டுவிட்டது. இந்த நிலையில் விவசாயப் பொருளாதாரம் இந்தியாவில் பெரிதும் பாதிப்புக்கு உலக வர்த்தக ஒப்பந்தத்தால் உள்ளாகி இருக்கிறது. Intellectual Property Rights என்று சொல்லக்கூடிய தனி மனிதனுடைய கண்டு பிடிப்புகளுக்குக்கூட உலக வர்த்தக ஒப்பந்தத்திலே பாதுகாப்பு இல்லை. இந்தியாவிலே, குறிப்பாக indigenous medicines, அதாவது நமது மூலிகைகள் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்ற பல அற்புத மருந்துகளுக்குக்கூடப் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் உலக வர்த்தக ஒப்பந்தத்தில், அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற காரணத்தால், வெளிநாட்டிலே இருக்கிறவர்கள் நமது கண்டுபிடிப்புகளைத் திருடிக் கொண்டுபோய் அவர்கள் patent செய்துவிடுகிறார்கள். அதனால், இந்தியக் கண்டுபிடிப்புகளுக்கு, பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருக்கிற கண்டுபிடிப்புகளுக்குக்கூட பாதிப்பு ஏற்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகள் உலக வர்த்தக ஒப்பந்தத்தை வலியுறுத்துகிற அதே





நேரத்தில், 40 ஆயிரம் கோடி, 50 ஆயிரம் கோடி என்று விவசாயிகளுக்கு subsidy வழங்குகிறார்கள். ஆனால் அதே உலக வர்த்தக ஒப்பந்தத்தைச் சொல்லிக் காட்டி, இந்தியாவிலே விவசாயிகளுக்கு subsidy கொடுப்பது கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று மைய அரசு மாநில அரசை வற்புறுத்தி, விவசாயிகளுக்குத் தொல்லையைத் தருகிறது. இவற்றையெல்லாம் மாற்ற வேண்டும் என்றும், Import duty அதிகம் போடப்பட வேண்டும் என்றும், அதன் மூலமாக விவசாய விளைபொருட்கள், சிறு தொழில்கள்—SSI Units--இவையெல்லாம் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மைய அரசை வற்புறுத்தி வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**104—**

## வேலைவாய்ப்பு

***38746—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், வட சென்னை அனல் மின் திட்டத்திற்கும், எண்ணூர் துறைமுகத்திற்கும் நிலம் அளித்த பெரும்பாலான மக்களுக்கு அரசு வேலைவாய்ப்பு அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில், வட சென்னை அனல் மின் நிலையக் கட்டுமானத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும்போது நிலத்தில் குடியிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவர் வீதம் பணி வழங்கப்பட்டுவிட்டது.

என்னூர் துறைமுகக் கட்டுமானப் பணியில் வாரியத்திற்கு நேரடித் தொடர்பு இல்லாததனால், அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாரியம் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என்னூர் துறைமுகக் கட்டுமானப் பணியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாவிட்டாலும், இது மத்திய அரசு தொடர்புடையதால் மத்திய அரசை, துறை வற்புறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியே, பொன்னேரி தொகுதியில் வட சென்னை அனல் மின் நிலையக் கட்டுமானத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும்போது நிலத்தில் குடியிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவர் வீதம் பணி வழங்கப்பட வேண்டும் என்பது. என்னூர் துறைமுகக் கட்டுமானப் பணியில் வாரியத்திற்கு நேரடித் தொடர்பு இல்லாததனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே, அந்தக் கருத்தின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கு அந்தக் கருத்துரு அனுப்பி வைக்கப்படும். அதே நேரத்திலே, இதிலே என்ன பிரச்சினை என்றால், பொன்னேரி தொகுதி, வட சென்னை அனல் மின் நிலையத்திற்கு நிலம் அளித்த மொத்தம் 891 பேரில் 241 பேருக்கு வேலை வழங்கப்படவில்லை; எனவே, அவர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்பது மின் வாரியத்தின் கருத்து. எனவே, யார் அந்த 241 பேர் என்கின்ற ஒரு பட்டியலைப் பொறுத்தவரை அங்கே இருக்கின்ற அந்தக் கிராம மக்களிடையே ஒரு சிக்கல் இருக்கின்றது. அந்தப் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலே கொடுத்துவிட்டால், அந்த 241 பேருக்கும்கூட வாரியத்திலே வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**105—**

## சமுதாய நலக் கூடம்

***48959—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரத்தில் அருள்மிகு தில்லையம்மன் கோயில் அருகே கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தைப் பயன்பாட்டில் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில், சிதம்பரம் நகரத்தில் அருள்மிகு தில்லையம்மன் திருக்கோயில் அருகே கட்டப்படும் சமுதாய நலக் கூடத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கு 28,00,000 ரூபாய்க்கான மதிப்பீடு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகளைச் சுற்றுலா வளர்ச்சித் துறையின் மூலமாக விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**106—**

## மருத்துவமனை

***23967—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யும் வசதி ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்வதற்குரிய அறையுள்ளது. பிரேதப் பரிசோதனையும் இங்கு செய்யப்பட்டு வருகிறது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்பாகக் கேட்கப்பட்ட கேள்வி. அதற்குப் பின்னாலே துறையினுடைய நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு அங்கே பிரேதப் பரிசோதனை நடந்து கொண்டிருக்கிறது. கோரிக்கையை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களுடைய சார்பிலே மனமார்ந்த நன்றிகளைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கந்தர்வகோட்டை மருத்துவமனை என்பது புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே உள்ள ஒரேயொரு தாலுகா மருத்துவமனை; சுற்றிலும் கிராமப்புறங்கள் நிறைந்த மருத்துவமனை. ஏறத்தாழ புதுக்கோட்டைக்கும், தஞ்சாவூருக்கும் இடையிலே அமைந்த இந்தப் பகுதியிலே இன்றைக்கு ஒரு மருத்துவர் மட்டுமே செயல்பட்டு வருகிறார். காலையிலே, அந்த O.P. Hours என்று சொல்லக்கூடிய நேரத்தில் புறநோயாளிகளை மட்டுமே பார்த்து வருகிறார்கள். அந்தப் பொது மக்களுடைய மிக நெடிய கோரிக்கை, 24 மணி நேரமும் அங்கே ஒரு மருத்துவர் தங்கியிருக்க வேண்டும் என்பது. ஆகையினால், அங்கே ஒதுக்கப்பட்டுள்ள அந்த மருத்துவப் பணியிடங்களை —post—ஐ 5 மருத்துவப் பணியிடங்களாக உயர்த்தி, அங்கே 24 மணி நேரமும் மருத்துவர் தங்கி இருந்து சேவை புரிய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், தமிழகத்தில் உள்ள வட்டம், வட்டம்சாரா மற்றும் மாவட்டத்தினுடைய மருத்துவமனைகளையெல்லாம் தரம் உயர்த்துவதற்கு, நடவடிக்கை எடுப்பதற்காகக் கிட்டத்தட்ட ரூ.580 கோடி உலக வங்கியிடம்



2004 ஜூலை 31]

கேட்கப்பட்டிருக்கிறது. அதிலே உங்களுடைய மாவட்டம், முதலாவதாக—first phase-லே—இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்த்தால் அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனையினுடைய அடிப்படை வசதிகளை எல்லாம் உடனடியாக அளித்துவிட்டு, அதற்கு மேலாக, அங்கே மருத்துவர்கள் உடனடியாக நிரப்பப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோதனைகளைக் கடந்து சாதனைகளைப் புரிந்து வருகிற ஆட்சியாக, தடைக்கற்களை எல்லாம் உடைத்தெறிந்து படிக்கற்களாக மாற்றி வருகிற ஆட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இன்றைக்கு வெற்றிநடை போட்டுக் கொண்டு வருகிறது. அதை நிரூபிக்கக்கூடிய வகையில், உலக வங்கியின் மூலமாக நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதியின் மூலமாகத் தமிழகத்தில் உள்ள அத்துணை மருத்துவமனைகளும் இன்றைக்குப் பயன்பெறுகின்றபோது அதிலே முதல் மாவட்டமாக, புதுக்கோட்டை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த மக்களும் என்றென்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பிலே மீண்டும் ஒரு முறை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் எப்போது தொடங்கும், எப்போது செயல்படுத்தி முடிக்கப்படும், எப்போது பயன்பாட்டிற்கு வரும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போது இந்தத் திட்டத்தை புதுக்கோட்டைக்கு வந்து திறந்து வைப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய இறுதிக் கட்ட நடவடிக்கை இந்த மாத இறுதிக்குள்ளாகவே முடிந்துவிடும். குறைந்தது இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதி ஒதுக்கியவுடனே அதற்கான டெண்டர் வைக்கப்பட்டு, உடனடியாகக் குறைந்தது 6 மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவமனைகளில் மாலை 5½ மணிக்கு மேல் பிரேதப் பரிசோதனைக்கு வரும் பிரேதங்களை மறுநாள்தான் பரிசோதனை செய்ய முடியும் என்ற நிலை உள்ளது. அந்தப் பிரேதங்களை வைக்க குளிர்சாதன வசதியுடன்கூடிய அறையினைக் கட்டித் தர அரசிடம் கருத்துரு உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், இதுபோன்ற மருத்துவமனைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் பல்வேறு திட்டங்களையெல்லாம் கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, உறுப்பினருடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, ஈரோடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய அத்தனை தாலுகா மருத்துவமனை, Non-Taluk Hospital மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் உலக வங்கியினுடைய நிதி கோரப்பட்டிருக்கிறது. அந்த நிதி கிடைத்தவுடனேயே உங்கள் மாவட்டத்திலேயும் அதற்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 107, திரு. அ. நடராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**107—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***40294–திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, கருப்பூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஒன்றும் தற்சமயம் இல்லை.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது குத்தாலம் தொகுதியைச் சார்ந்த குத்தாலம் ஒன்றியத்தில் உள்ள கருப்பூர் ஊராட்சி, விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த கிராமம் ஆகும். அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள திருவாவடுதுறை, திருவேலங்காடு, கருப்பூர், பேராவூர், பாளையூர் ஆகிய கிராமங்களில் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமேயானால் 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். பேருந்து வசதியும் கிடையாது. எனவே, அந்தத் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், கிட்டத்தட்ட 1,413 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. மத்திய அரசின் இலக்கின்படிப் பார்த்தால் 1,176 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இருக்கவேண்டும். இருந்தபோதிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இதுபோன்ற கிராமப் பகுதிகளில், அங்கே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் எல்லாம் உடனடியாக நல்ல சிகிச்சை பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க

வேண்டுமென்றால் அங்கு ஜனத்தொகை 30,000-க்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு ஒரு விதியை நிர்ணயித்து இருக்கிறது. தற்போது பேரூராட்சிகளை எல்லாம் சிற்றூராட்சிகளாக மாற்றி அனைத்து கிராம மக்களும் பயன் அடையும் வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய தமிழக அரசு, அனைத்து கிராம மக்களும் பயன் அடையும் வகையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், 30,000 ஜனத்தொகை என்று இருப்பதைக் குறைத்து 20,000 அல்லது 25,000 ஜனத்தொகை இருந்தாலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம் என்று மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கும்போதே, அதற்கான பதிலையும் சொல்லிவிட்டார். 30,000 மக்கள் தொகை என்பது மத்திய அரசினுடைய இலக்கு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றையதினம் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள் நடவடிக்கையைப் பெரிதும் பாராட்டி, அந்த அடிப்படையிலே இந்த சதவிகிதம் மாறுமா என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கும் சிபாரிசு செய்வதன் மூலமாக மத்திய அரசுக்கு உடனடியாகக் கடிதம் எழுத நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தும் திட்டத்தில் எனது தொகுதியில் உள்ள குத்தாலம் ஒன்றியம், குடவாசல் ஒன்றியம் ஆகிய பகுதிகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக நடவடிககை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மருத்துவத் துறையிலே நடைபெற்று வருகிற நல்ல திட்டங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் சொல்லி வருகிறார்கள். இன்னும் ஒரு சில தாலுகா தலைமை இடங்களிலே மருத்துவமனையோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையமோ இல்லை. இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் புதிதாக, மருத்துவமனைகளையும், ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தொடங்குகின்ற நேரத்தில், ஆரம்ப சுகாதார நிலையமே இல்லாத தாலுகாவினுடைய தலைமை இடங்களில் அத்தகைய நிலையங்களைத் தொடங்க அரசு முன் வருமா? அப்படி முன்வருகின்ற நேரத்தில் பெரம்பலூர் தொகுதியிலே வேப்பந்தட்டை தாலுகா—வேப்பந்தட்டை தாலுகாவினுடைய தலைமையிடம்—வேப்பந்தட்டையிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவியின் நல்லாட்சியிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 206 தாலுகாக்கள் இருக்கின்றன. இந்த 206 தாலுகாக்களையும் எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே மட்டும் 156 தாலுகா மருத்துவமனைகளும், 80 Non-Taluk—வட்டம் சாரா மருத்துவமனைகளும் இருக்கின்றன. கிட்டத்தட்ட கணக்கிலே எடுத்துக் கொண்டால், 236 மருத்துவமனைகள், Taluk, Non-Taluk —இவற்றைச் சேர்த்து வருகின்றன. அதற்கு மேலாக இன்றையதினம் 29 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் இருக்கின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, மூன்று மாவட்டங்களிலே இன்றையதினம் மருத்துவமனையினுடைய தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வேலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே இருக்கக்கூடிய வாலாஜாபேட்டை அரசு

மருத்துவமனையும், அதேபோல் திருச்சியை எடுத்துக்கொண்டால், அங்கே இருக்கக்கூடிய மணப்பாறை அரசு மருத்துவமனையும் தலைமை மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோல், குமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அங்கு இருக்கக்கூடிய பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு அம்மாவினுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் ஏதாவது புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கின்ற கருத்துரு இருக்கிறதா? ஏனென்றால், பழைய காலத்தில் நிறைய கிராமங்களிலே ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்பதற்காக 10,000 ரூபாய் பணத்தைக் கட்டி, காத்துக் கொண்டிருக்கிறார்கள். சோழவந்தான் தொகுதியிலேகூட, சித்தாலங்குடி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று, 10,000 ரூபாயைக் கட்டி, காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் வழங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா? அதோடுகூட, எனது தொகுதியிலே இருக்கின்ற உசிலம்பட்டி, செல்லம்பட்டி ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன்களிலேயும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகள் இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. சென்ற ஆண்டேகூட செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ வசதி வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில், அமைச்சரவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த உறுதியை மீண்டும் பெற விரும்புகிறேன். அதோடு, இந்த ஆண்டே அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்து தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப உங்களுடைய செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும். அது மட்டுமல்லாமல், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக அங்கு இருக்கக்கூடிய பொது மக்கள் எல்லாம் நிலங்கள் கொடுத்து, பணமும் கட்டி, தயார் நிலையிலே இருக்கிறார்கள் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, மத்திய அரசினுடைய இலக்குப்படி பார்த்தால் 1,176தான் இருக்கவேண்டும். மக்கள் தொகையைக் கணக்கெடுத்துக் கொண்டால், 30,000 மக்கள் தொகையும், மலைவாழ்ப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் 20,000 மக்கள் தொகையும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. இருந்தபோதிலும், இது சம்பந்தமாக, இங்கே இருக்கக்கூடிய பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, இன்றையதினம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதன் அடிப்படையிலே, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை வருகின்ற ஆண்டிலே புதியதாக அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 108, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**108—**

## பார்வையற்றோருக்கு மின்னணு கைத்தடிகள்

***41956—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜஸ்தான் மாநிலத்தைப்போல பார்வையற்றவர்களுக்கு மின்னணு கைத்தடிகள் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. எம்.ஏ. ஹக்கீம்.

[2004 ஜூலை 3

*(மாண்புமிகு உறுப்பினர் தம் இருக்கையில் ஏதோ தேடிக்கொண்டிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: என்ன செய்கிறீர்கள்?

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த switch button-கள் மேலே இவ்வளவு புத்தகங்களை வைத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: முதலிலேயே நீங்கள் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியதுதானே?

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**: முதலிலேயே எடுத்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் அரசியல் பார்வையற்றோர்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்ற காரணத்தினால் காலியிடங்கள் பெருத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு நான் பணிவோடு இந்தக் கேள்வியைக் கேட்டு, அமைச்சர் வாயிலாக நான் பதிலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அரசியல் பார்வையற்றோர் அதிகமாகி வருகின்ற காரணத்தால் அறிவுக் கண்ணாடி வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவருடைய பார்வையைக் குறைப்பதற்காக, பார்வையில்லாதவர் என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்காகவே கருப்புக் கண்ணாடியைப் போட்டு அவர் மறைத்துக் கொண்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, அவருக்கு அறிவுக் கண்ணாடியா அல்லது பார்வையற்றோருக்கான கண்ணாடியா என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் தங்கள் வாயிலாக விளக்கம் தெரிவிக்கவேண்டும்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடத்திலே பதில் கேட்க, அவர் என்னிடத்திலே பதிலைக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு, பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன், அது



2004 ஜூலை 31]

பார்வையற்றோர் என்பதை வெளிப்படுத்துவதற்கு முடியாதபடி பாதியை மறைத்துக்கொள்வதற்கும், கருப்புக் கண்ணாடியின் வழியாகவே இந்த நாட்டை அவர் பார்த்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால், உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடியாமல் அவர் தவித்து, திணறிக் கொண்டிருப்பதற்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், அதே நேரத்தில் உண்மைகளைத் தெரிவிக்கக்கூடிய ஒரு புரட்சிகரமான அரசாங்கம் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் நடக்கிறபோது, அதைக் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்காகவே, அந்தக் கண்ணாடிக்குள்ளேயும் இன்னொரு கருப்புக் கண்ணாடியையும் இணைத்து வைத்து, அவர் தன்னுடைய வாழ்க்கையை மறைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே, நாட்டின் உண்மைகள் தெரிவதில்லை. ஆனால், அந்த உண்மைகளை எதிர்காலத்தில் தமிழக மக்கள் தெரிவிக்கிற விதத்தில், அரசின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்ட மக்களாக, 2006-ல் புரட்சிகரமாக தங்களுடைய அதிரடித் தீர்ப்பை இந்த நாட்டு மக்கள் வழங்குவார்கள். அப்போது அந்தக் கண்ணாடிகளுக்கு உண்மை புரியும். நான் கேட்க விரும்புவது, குறைந்தபட்சம் கருத்துக் கண்ணாடி; கருப்புக் கண்ணாடியல்ல, அறிவுக் கண் திறப்பதற்கு கருத்துக் கண்ணாடிகள் வழங்குவதற்காகவாவது, காலியாகக் கிடக்கின்ற அந்தப் பெரியோர்களுக்கு, நண்பர்களுக்கு அரசு கண்டிப்பாக உதவி செய்ய முன் வரவேண்டும். அதைச் செய்யுமா என்பதை நான் பணிவோடு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிறவியிலேயே கண் பார்வை இல்லாதவர்களுக்கு வழங்கப்படுவதுதான், அரசின் சார்பிலே இலவசமாகத் தரப்படுவதுதான் கண் கண்ணாடி. ஆனால், இடையிலே கண் தெரியாமல் நடித்துக் கொண்டு, தாங்கள் மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யக்கூடிய திருட்டுத்தனமாகப் போட்டுக் கொண்டிருக்கக்கூடிய கண்ணாடிகளுக்கெல்லாம் கருத்துக் கண்ணாடியோ அல்லது அறிவுக் கண்ணாடியோ கொடுத்தால் அதுபோன்ற திருடர்களுக்குப் பயனில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 109, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 31

**109—**

## மாணவர் விடுதி

***16293—திரு. நா. சந்திரமோகன்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஆயங்குடிபள்ளம் மற்றும் கொள்ளிடம் பகுதியில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கு ஆயங்குடிபள்ளத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் அதிக அளவில் ஆதி திராவிட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். குலசேகரபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியிலும், கோதண்டபுரம் இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியிலும், ஆயங்குடிபள்ளம் வெங்கடேசா மேல்நிலைப் பள்ளியிலும் ஆதி திராவிட மாணவர்கள் கிராமங்களிலிருந்தும், நீண்ட நெடுந்தூரம் நடந்து சென்றும், சைக்கிளில் சென்றும், பள்ளியில் படித்து வருகின்றனர். மேற்கண்ட ஆதி திராவிட மாணவர்கள் தங்கிக் கல்வி பயில்வதற்கு, கொள்ளிடம் பகுதியிலுள்ள ஆயங்குடிபள்ளத்தில் ஓர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியை அடுத்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, புதியதாக ஆரம்பித்து, கட்டடம் கட்டிக் கொடுக்கவும், ஆதி திராவிட மாணவர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ள புதிய கட்டடத்தில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனவும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



2004 ஜூலை 31]

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் 1,076 மாணவ, மாணவியர் விடுதிகளும், பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு 26 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இதிலே 574 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தன. மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த மூன்று ஆண்டுகளில் 366 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கான செலவு ரூ.115.29 கோடி ஆகிறது. நடப்பாண்டில் 100 வாடகை விடுதிகளை அரசு சொந்தக் கட்டடங்களாகக் கட்டுவதற்கு, ரூ.31.50 கோடி செலவில் புதிய கட்டடங்களை தாட்கோ மூலம் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.*

*அனைத்து விடுதிகளிலும், உண்டு உறைவிடப் பள்ளி, தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்திவரும் விடுதிகளிலும் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்களின் உணவுக் கட்டணத்திற்கு, ஒரு மாணவருக்கு ரூபாய் 300 ஆக உயர்த்தி வழங்கி வருவதன் காரணமாக, ஓர் ஆண்டுக்கு ரூபாய் 39.11 கோடி செலவாகிறது. தற்போதைய நிலையில் திட்டம் சாராச் செலவினங்களையும் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் காரணமாகவும், தொடர் செலவினம் ஏற்படக்கூடிய எந்த ஒரு செயற்குறிப்பினையும் ஏற்க இயலாத நிலை உள்ளதால், நாகப்பட்டினம் மாவட்டம், ஆயங்குடிபள்ளத்தில் புதியதாக ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே, இங்கு புதிய கட்டடம் கட்டும் கேள்வி எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையில் உள்ளவாறு, பல இடங்களில் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க விரும்புகின்றனர். காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட விடுதிகள் ஆரோக்கியமான சூழ்நிலையில் அனைத்து வசதிகளோடு பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு மாளிகைபோல் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதாலும், மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை 300 ரூபாயாக உயர்த்தி, சுத்தமான, சுவையான உணவு வழங்கப்படுவதாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தங்கள் குழந்தைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிய விடுதிகளில் சேர்த்துப் படிக்க வைக்க ஆவலோடு வருகிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையும்,*

மாணவ, மாணவியர்களின் விருப்பத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொன்னம்பலம்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியில்தான் அதிகமான மாணவர் விடுதிகள் உள்ளன. அதிலும் குறிப்பாக, மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவ, மாணவியர்கள், பிற மாவட்டங்களிலிருந்து சுமார் ஏழு மாவட்டங்களிலிருந்து வந்து இங்கே பயில்கிறார்கள். அவர்களுக்கு விடுதியில் இடம் கிடைக்காததால் நிறைய மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். இந்த ஏழு மாவட்டங்களிலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த மாணவர்களுக்குப் பரிந்துரைக் கடிதங்கள் கொடுத்துள்ளார்கள். நிறைய மாணவர்களுக்கு இடம் கிடைக்காததால் சிரமப்படுகிறார்கள். ஆகவே, விடுதிகளில் மாணவர் எண்ணிக்கையைக் கூட்டித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில் இந்தக் கேள்விக்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அனைத்து மாணவர்களுக்கும் இலவச bus pass மற்றும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் என அனைத்து மாணவிகளுக்கும் இலவச மிதிவண்டிகள் என்று கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்காக முதலிடம் கொடுத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில், அவினாசி தொகுதிக்குட்பட்ட சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அதில் முன்னூறுக்கும் மேற்பட்ட ஆதி திராவிடர், அருந்ததிய மாணவியர்கள், மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.



ஆகவே அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக—தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி இல்லாமல், மாணவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே—ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக அடுத்த ஆண்டிலாவது அரசு மாணவர் விடுதி கட்டித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *110*, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**110—**

## மாணவர் விடுதி

***36518—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பரமக்குடியில் ஏற்கெனவே மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதால், புதியதாக மாணவர் விடுதி அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *111*, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 31

111--

## புதிய வழித்தடம்

***18329—திரு. தி. வேல் முருகன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் மாவட்டம், திட்டக்குடியிலிருந்து திருப்பதி மற்றும் பெங்களூர் செல்ல, புதிய வழித்தடத்தை இயக்கிட, அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; (அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் திட்டக்குடியிலிருந்து திருப்பதி மற்றும் பெங்களூர் ஆகிய இடங்களுக்குப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், திட்டக்குடி அருகிலுள்ள விருத்தாசலத்திலிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம் மூலமாக, திருப்பதி மற்றும் பெங்களூருக்குப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. சென்னை மாவட்டத்திற்கு 135 பேருந்துகளைப் புதியதாக வாங்கப்போவதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பிலே தெரிவித்திருந்தார்கள். சென்னை மாநகரைப் பொறுத்த அளவிலே உட்புறச் சாலைகள் 2,475 கிலோ மீட்டரைக் கொண்டதாகவும், 14,567 தெருக்களைக் கொண்டதாகவும் உள்ளன. இந்த உட்புறச் சாலைகளுக்குப் பேருந்து செல்லத்தக்க அளவிலே, இருக்கிற வழித்தடங்களைத் தேர்வு செய்து புதிய பேருந்துகளை இயக்கிடவோ அல்லது மினி பேருந்துகளை இயக்கிடவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 ஜூலை 31]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களுடைய கருத்து, இப்போது அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ.கு.சீ. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதி என்பது, அடித்தட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், முக்கிய அடிப்படை வசதிக்கும் இயங்குகின்றன. இலாப நோக்கோடு பார்க்காமல், ஏற்கெனவே நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்க அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய தொகுதியில் கோட்டுப்பாக்கம் கிராமத்திற்குச் சென்று வந்த பேருந்துகள் நின்று போயின. அவற்றை மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், வந்தவாசி வட்டம், போளூர் வட்டம், ஆரணி வட்டத்திலிருந்து பேருந்துகளை இயக்கி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியை முடியுங்கள்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** இடைப்பட்ட பெரணமல்லூர், சேத்துப்பட்டு, தேசூர் பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த அளவிலே, இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதில்லை. இது commercially oriented service sector. இது ஒரு தொழில் நிறுவனம் போல செயல்பட்டாலும்கூட, மக்களுடைய வசதிகளுக்காக சில நேரங்களில் நஷ்டத்தை ஏற்றுக் கொண்டுகூட, நஷ்டம் வருகிற வழித்தடங்களில்கூட மக்களுடைய தேவைகளுக்காகப் பல இடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. அவருடைய தொகுதியிலே நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவாரா என்று கேட்டிருக்கிறார்கள். அதை அவர் கோரிக்கையாக எழுதிக் கொடுத்தால், அதை அரசு பரிவுடன் கவனிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைதூரப் பகுதிகளுக்குப் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குகிறபோது, அவை இரவு நேர Express-களாக இருக்கிற அந்தப் பேருந்துகளில் இருக்கை வசதிகளுக்குப் பதிலாக, படுக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இயக்குகிறபோது அதற்குப் பொது மக்கள் மத்தியிலே எந்த அளவிற்கு வரவேற்பு இருக்கும் என்று தெரியவில்லை. இதற்கு வரவேற்பு இருக்கிறதா என ஆய்வு செய்து, அப்படிப் பொது மக்கள் மத்தியிலே அதற்கு வரவேற்பு கிடைக்கும் என்று அரசு கருதுமானால், அதைப் பற்றியும் அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 112, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**112—**

## பேருந்து இயக்குதல்

***41320—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பௌர்ணமி கிரிவலத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பௌர்ணமி கிரிவலத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் மூலம் போதிய அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 ஜூலை 31]

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் புகழ்பெற்ற ஸ்தலமாகத் திகழ்ந்து வருகிறது. ஆண்டுதோறும் மாசி மாதம் நடைபெறும் தேர்த் திருவிழாவில் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள். ஆடிக் கிருத்திகை தினத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காவடி எடுக்கிறார்கள். மாதந்தோறும் கிருத்திகை தினத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் முருகப் பெருமானை தரிசித்துச் செல்கிறார்கள். 9 ஆண்டுகளுக்கு மேலாக பௌர்ணமி தினத்தன்று வள்ளிமலையைச் சுற்றி மக்கள் கிரிவலம் வந்து, தங்களுடைய பிரார்த்தனையை நிறைவேற்றி வருகிறார்கள். ஆந்திர மாநிலம் சித்தூரிலிருந்தும் பெருமளவு பக்தர்கள் வருகிறார்கள். சுற்றியுள்ள வேலூர், ஆற்காடு, இராணிப்பேட்டை நகரங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். பக்தர்களின் வசதிக்காக இரவு நேரங்களில் பௌர்ணமி தினத்தன்று சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பௌர்ணமி கிரிவலத்திற்கு வரும் பக்தர்கள் வசதிக்காக அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவும், தனியார் மூலமாகவும் போதிய சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இன்னும் கூடுதலாக இயக்க வேண்டுமென்றால், தேவைக்கு ஏற்ப எவ்வளவு பேருந்துகள் இயக்க முடியுமோ, அந்த அளவிற்கு சிறப்புப் பேருந்துகளை அரசு இயக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு தகவலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதல் தகவலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு மட்டுமல்ல, தமிழகத்திலே எந்தப் பகுதியிலே, எப்பொழுது மக்கள் கூடுகின்ற, எந்த விழாக்களாக இருந்தாலும் சரி, எந்த நிகழ்ச்சிகளானாலும் சரி, அந்த இடங்களுக்கு அந்தந்தப் பகுதிகளிலே உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு ஏற்கெனவே அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, வழித்தட எண் 144-ஏ மற்றும் 165, சித்தூரிலிருந்து பொன்னை, வள்ளிமலை, திருவலம், இராணிப்பேட்டை வழியாக சென்னைக்கு இயக்கி வந்த பேருந்துகள் பக்தர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தன. மக்களின் நலன் கருதி, மீண்டும் மேற்கண்ட வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மக்கள் கூட்டம் எங்கு அதிகமாக இருந்தாலும் சிறப்புப் பேருந்து உடனடியாக விடப்படும் என்று சொன்னார்கள். முந்தையதினம் மதுரை மாவட்டத்திற்கு 250 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு எங்களுடைய மதுரை மாவட்ட மக்களின் சார்பாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில தினங்களுக்கு முன்பாக, தென் மாவட்ட மக்களுடைய நலனைக் கருதி, மதுரையிலே High Court கிளை ஒன்று புதியதாகத் திறக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மக்கள் அதிகமாக வந்து சென்று கொண்டு இருக்கின்றார்கள். அதிகமாக மேலூரிலிருந்து, High Court கிளைக்கு வழக்குகளுக்குப் போக இருப்பதால் மிகவும் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கின்றது. ஆகையால், மதுரையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற புதிய High Court கிளைக்கு, மேலூர் தொகுதியிலிருந்தும், உசிலம்பட்டியிலிருந்தும், சேடப்பட்டியிலிருந்தும், திருமங்கலம் தொகுதியிலிருந்தும் தனியாக சிறப்புப் பேருந்துகள் காலையிலும், மாலையிலும் விடப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பேருந்துகள் என்றால் அந்த நிகழ்ச்சிகள் நடக்கின்ற நாளுக்கு மட்டும் இயக்குவதுதான் சிறப்புப் பேருந்து. மதுரை உயர் நீதிமன்றக் கிளையைப் பொறுத்தவரையிலே சிறப்புப் பேருந்து அல்ல; தினந்தோறும் அந்த உயர் நீதிமன்றக் கிளைக்கு வருகின்ற அளவிற்கு regular-ஆகவே போதிய அளவிற்குப் பேருந்துகள் விடுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மாணிக்கராஜ்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்ட போக்குவரத்துக் கழகம், மற்ற போக்குவரத்துக் கழகங்களைவிட பெரும் நட்டத்தில் இயங்கி வருகிற கழகம். அங்கு bus போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலை இருந்தது. அமைச்சர் அவர்களிடம் பல முறை கேட்கிறபோது, புதிய bus வாங்குகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரையின் பேரில், இரண்டு bus route-கள் வழங்கப்படும் என்கிற உறுதிமொழியை அளித்திருந்தார். அதன் அடிப்படையிலே புதிய bus-கள் வாங்கும்போது திருநெல்வேலி மாவட்ட போக்குவரத்துக் கழகத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரையின் பேரில் புதிய தடங்கள் வழங்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கோட்டம் தனியாக இயங்கவில்லை. அது மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தனியாக திருநெல்வேலி போக்குவரத்துக் கோட்டம் என இயங்கியபோது பெருமளவில் அது நட்டத்தை ஈட்டி வந்தது. இப்பொழுதும் அந்தப் பகுதி மட்டும் என்று பார்த்தால், தனியாகக் கணக்கு எடுத்தால், அது நட்டத்திலேதான் வரும். இருந்தாலும், இலாபம் வருகின்ற திண்டுக்கல், விருதுநகர், மதுரை போன்ற மற்ற பகுதிகளோடு அது இணைக்கப்பட்டிருப்பதால், அதன் மூலமாக இப்பொழுது திருநெல்வேலியும் கூடுதல் பலனைப் பெற்று வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதோடு நீங்கள் மட்டுமல்ல, இங்கேயிருக்கின்ற உங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் துறை அமைச்சர் அவர்களும்கூட அந்தப் பகுதியினுடைய போக்குவரத்துப் பேருந்துகளுக்கு உதிரிப் பாகங்கள் வழங்குவது, சிறப்புப் பேருந்துகள் இயக்குவது மற்றும் புதிய பேருந்துகளை அதிகமாக வழங்குவது பற்றி கேட்டிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதிக்கு—திருநெல்வேலி பகுதிக்கு—தேவையான அளவிற்கு, இன்றையதினம் மதுரை கோட்டத்திற்கு வழங்கப்படுகின்ற 250 புதிய பேருந்துகளில், அந்தப் பகுதிக்கும் தேவையான அளவிற்கு, தேவைக்கேற்ப வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்திலே, இடது பக்கமும், வலது பக்கமும் உங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் இருந்து கொண்டு, நமது ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும், தங்களுடைய பகுதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில்—திருநெல்வேலி பகுதியில்—தேவையான அளவிற்குப் புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, புதிய வழித்தடங்களைத் தொடங்க ஆவன செய்திருக்கின்ற இந்த நல்ல வேளையிலே, விளாத்திகுளம் to ஆத்தாங்கரை வழியாக, எருக்கங்குடி மாரியம்மன் கோயிலுக்கு ஒரு வழித்தடமும், விளாத்திகுளம் to வீரபாண்டியபுரம் வழியாக தூத்துக்குடிக்கு ஒரு வழித்தடமும் வழங்க அமைச்சர் முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கோரிக்கையை எழுத்து மூலமாகக் கொடுப்பாரேயானால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு





அதைப் பரிவுடன் ஆய்வு செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**113—**

**பழச்சாறு தொழிற்சாலை**

***7689அ—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அலங்காநல்லூர் ஒன்றியம், முடுவார்பட்டி அருகே பழச்சாறு தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் ஒன்றியம், முடுவார்பட்டி கிராமம் அருகே பழச்சாறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதி என்பது மிகப் பின்தங்கிய பகுதியாகும். அங்கே தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. மழை பெய்யாததால் விவசாயமும் பொய்த்து விட்டது. நமது நத்தம் தொகுதியைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் தொகுதியும் பக்கத்தில் இருக்கிறது. அங்கேயும் மாம்பழம் அதிகமாக விளைச்சல் உள்ளது. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு மாம்பழச்சாறு தொழிற்சாலை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழச்சாறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லையென்று சொன்னாலும், தனியார் தொழில் முனைவோர்கள் யாரேனும் தொழிற்சாலை அமைப்பதற்கு முன்வந்தால், டிட்கோ நிறுவனம் அவர்களுடன் இணைந்து அந்தத்

[2004 ஜூலை 31

தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுத் திட்டத்திற்கு அதிகபட்சமாக டிட்கோ எவ்வளவு நிதியை வழங்கும், தனியார் முதலீடு எவ்வளவு செய்ய வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னால் அருமை அண்ணன் ஹக்கீம் பேசும்போது அந்த ஏடுகளையெல்லாம் கீழே தள்ளிவிட்டார், மைக்கைப் போடவில்லையென்று சொன்னார். இங்கே எனக்கு முன்னால் பெரிய ஏடுகள் குவிந்திருக்கின்றன. "சர்வர் சுந்தர"த்தில் நாகேஷ் எடுத்துச் செல்வதுபோல, எங்கள் உடம்பைத் தூக்கிக் கொண்டு, இதையும் தூக்கிக் கொண்டு நாங்கள் செல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் கருணைகூர்ந்து, இதை நாங்கள் தங்கியிருக்கின்ற அறைக்குக் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்து தந்தால் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பழச்சாற்றை விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டீர்கள். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழில் முனைவோர்கள் டிட்கோ நிறுவனத்துடன் சேர்ந்து தொழில் நடத்த வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்ச முதலீடு—தொழிலுக்கான முதலீடு—5 கோடி ரூபாய் குறைந்தபட்ச முதலீடு இருக்க வேண்டும். அது கூட்டுத் துறையாக இருந்தால் 26 விழுக்காடுகளும், இணைத் துறையாக இருந்தால் இரண்டு விழுக்காடு முதல் 11 விழுக்காடுகளும், வழிகாட்டுத் துறையின் மூலமாக வந்தால் ஒரு விழுக்காடும் வைத்து டிட்கோ நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஒவ்வொரு ஒன்றியத்திலும் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் ராஜாங்கம் அவர்களே அவர்களுடைய தொகுதியில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன்வந்தால் அரசு அனைத்து முயற்சிகளையும், உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 ஜூலை 31]

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஹக்கீம், என்ன?

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். நிறைய செய்திக் குறிப்புகள் இருக்கின்றன. நான் இரண்டொரு புத்தகங்களைப் பார்த்தேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்--விடைகள் நேரம் முடியட்டும். திரு. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழிற்சாலைகள் எல்லாம் அமைவதற்கு முன்னோடி மாநிலமாக நல்லதொரு தரமான அமைப்பை உருவாக்கிய தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் புதியதொரு பெரிய தொழிற்சாலை அமைக்க ஏதாவது வாய்ப்பு உண்டா? தமிழகத்திலே இதுவரை எத்தனை தொழிற்சாலைகள் சிறப்பாக....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே எத்தனையோ வாய்ப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** இல்லை, அது ஒரு கோடி ரூபாய் அளவிலே. மேலும், பல்வேறு அதிக முதலீட்டிலே, அதிக வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என அறிய விரும்புகிறேன். மேலும், எத்தனை தொழிற்சாலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன? நலிந்த தொழிற்சாலைகள் எவ்வளவு என அறிய விரும்புகிறேன். பெரணமல்லூர் பகுதியிலே காகிதத் தொழிற்சாலை மற்றும் மாம்பழத் தொழிற்சாலை அமைக்க ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றுக்கும் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வினா எண் 111, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 31

**114—**

**கால்நடை கிளை மருத்துவமனை**

***20970–திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, எறும்பூரில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்று சொன்னார்கள். ஆனால், சேத்தியாத்தோப்பிலிருந்து கம்மாபுரம் வரை சுமார் 16 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையில் இருக்கின்ற எறும்பூர் கிராமத்தைச் சுற்றி சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்தால், எறும்பூர், சின்ன நற்குணம், நெல்லிக்கொல்லை, குறிஞ்சிக்கொல்லை, மதிவாணமேடு, ஆனைவாரி, அம்மன்குப்பம், கத்தாழை, முத்துகிருஷ்ணாபுரம், மணக்காடு, நல்லதண்ணீர்குளம் ஆகிய பல்வேறு கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும். கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு விதிகளில் இடமில்லை என்றாலும், சிறப்பு நேர்வாக தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களிடத்திலே சொல்லி விதிகளைத் தளர்த்தி, கால்நடைகளைக் காப்பாற்ற முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேத்தியாத்தோப்பிலிருந்து கம்மாபுரம் வரை 16 கிலோ மீட்டர் தூரம் என்றும், இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையில் இருக்கின்ற எறும்பூர் கிராமத்தைச் சுற்றி சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள்



இருக்கின்றன என்றும் சொன்னார்கள். அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்தால் எறும்பூர், சின்ன நற்குணம், நெல்லிக்கொல்லை, குறிஞ்சிக்கொல்லை, மதிவாணமேடு, ஆனைவாரி, அம்மன்குப்பம், மேல்பழையமாதேவி, கீழ்பழையமாதேவி, கத்தாழை, முத்துகிருஷ்ணாபுரம், மணக்காடு, நல்லதண்ணீர்குளம் ஆகிய பல்வேறு கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும் என்றும் சொன்னார்கள். கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு விதிகளில் இடமில்லை என்றாலும், சிறப்பு நேர்வாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே சொல்லி, விதிகளைத் தளர்த்தி, கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, கிளை நிலையம் அமைப்பதற்கு இந்த நிதியாண்டில் நிதிநிலைமையைச் சீர்செய்து அம்மா அவர்கள் கொடுத்தால், உடனடியாக அவர்களுக்கு அங்கே கிளை நிலையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில், நல்லதொரு பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் கோட்டத்திற்கு இந்த ஆண்டு 250 பேருந்துகள் புதியதாக வாங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இலாகாவையே மாற்றுகிறீர்கள்.

வினா எண் 115, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**115—**

**உயிரியல் பூங்கா**

***10585–திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

*(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உயிரியல் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.*

*வினா எண் 116, திரு. ஆர். வடிவேல், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

*முற்பகல் 11-05*

**116—**

## சாலை வசதி

***50492—திரு. ஆர். வடிவேல்:**

*மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட நக்கணா மலையில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு சாலை வசதி அளிக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட நக்கணா மலைக்குப் பொது மக்கள் மற்றும் கால்நடைகள் சென்றுவர இரண்டு மீட்டரில் நடைபாதை உரிமை தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதனை சாலையாக மாற்றி அமைக்க, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். வனச் சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2004 ஜூலை 31]

**திரு. ஆர். வடிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்கணா மலை ஊராட்சியில் சுமார் 1,100 மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். இந்த ஊராட்சிக்குச் செல்ல, வாணியம்பாடியிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மலை அடிவாரத்திலிருந்து மேலே செல்லக்கூடிய வழிப்பாதை 9 கிலோ மீட்டர் உள்ளது. இவர்கள் அரசால் வழங்கப்படுகிற பொருட்களை எடுத்துச் செல்வதற்கும்—அவர்களுக்கு உடல் நலம் சரியில்லை என்றால், வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்குத்தான் வரவேண்டும். இந்த நிலையில், அந்த மலைவாழ் மக்களுக்கு—மாண்புமிகு அம்மாவின் அரசு பாதையை அமைத்துக் கொடுக்க முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலைப்பாதை செங்குத்தாக இருக்கின்றது. நிறைய கொண்டை ஊசி வளைவுகள் இருக்கின்றன. இவற்றை வனத் துறை ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில் மத்திய அரசுக்குப் பிரேரணை அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. ஆர். வடிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊராட்சிக்குச் செல்லும் சாலைக்கு பாரதப் பிரதமர் திட்டத்தின் அடிப்படையில் ரூ.1.29 கோடி, அதாவது ரூபாய் ஒரு கோடியே 29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தச் சாலை வனத் துறைக்குச் சொந்தமானதால் அது நிலுவையிலுள்ளது. ஆகவே, தாயுள்ளம் கொண்ட அம்மாவின் ஆட்சியில் அதற்கு வனத் துறை பரிந்துரை செய்து, இந்தச் சாலையை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மைய அரசின 1980 ஆம் ஆண்டு வனச் சட்டப்படி, மைய அரசினுடைய அனுமதி வாங்க வேண்டும். இந்தப் பிரேரணையை மைய அரசுக்கு அனுப்பி, அனுமதி வாங்கி, அந்தச சாலை அமைக்கப்படும் எனபதைத் தெரிவித்துக்கொளகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பெ. பழனியப்பன்.*

**திரு. பெ. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியிலே இருக்ககூடிய சாலைகளை சீரபடுத்திச் செய்ய*

வேண்டுமென்று சொன்னால்--அங்கே நெடுஞ்சாலைத் துறை சாலைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. அப்பேர்ப்பட்ட சாலைகளைப் பழுதுநீக்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால்—அங்கே வனத் துறை சில கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. வனத் துறை மூலமாக அனுமதி பெறவேண்டுமென்று சொன்னால், அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி அங்கே அந்த மக்களுக்கு சாலை வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், எப்படி நாம் அங்கே இருக்கக்கூடிய மரங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோமோ, அதைப்போல அந்த மலைப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதர்களுக்குப் போக்குவரத்து ஏற்படுத்திட வேண்டும். பள்ளிகளுக்குச் செல்கின்ற குழந்தைகள், உடல் நலம் சரியில்லாத நேரத்தில் தரைதளப் பகுதிக்கு, மருத்துவமனைக்கு வரக்கூடிய அந்த நோயாளிகளைப் பாதுகாக்கிற வகையிலே, வனத் துறை கட்டுப்பாட்டை நீக்கி—அது நெடுஞ்சாலைத் துறை சாலையாக இருந்தாலும் சரி, அல்லது ஒன்றியச் சாலையாக இருந்தாலும் சரி, அந்தச் சாலைகளைச் சீர்செய்வதற்கு வனத் துறை அனுமதி அளிக்க நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சாலைகள் அமைப்பதற்குத்தான் மைய அரசினுடைய அனுமதியை வாங்க வேண்டும். முன்னாலேயே ஒன்றியத்தின் மூலமாகவோ, நெடுஞ்சாலைத் துறை வழியாகவோ சாலை அமைக்கப்பட்டிருந்தால் மேற்படி சாலையைப் புதுப்பிக்க வனத் துறை எந்தவித இடையூறும் செய்யாது. நெடுஞ்சாலைத் துறை வழியாக மேம்பாடு செய்வதற்கு வனத் துறை ஒத்துழைப்புக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

*முற்பகல் 11-10*

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை உள்ளே செல்கின்ற சாலைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்



அவர்கள் சொன்னார்கள். ஆனால், புதுப்பிக்கப்பட வேண்டிய சாலைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்தப் பதில் வனத் துறை அதிகாரிகளுக்கு முறையாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றதா? வனத் துறை இதைச் செயல்படுத்துமா என்பதை—புதுப்பிப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்பதை எடுத்துக் கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன். ஏன் என்று சொன்னால், ஏற்கெனவே போடப்பட்ட சாலையை—நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன்—ரூபாய் 10 இலட்சம் செலவில் டெண்டர் விடப்பட்டு, 1½ ஆண்டுக்காலம் ஆகியும், புதுப்பிக்கப்படவேண்டிய சாலைக்கும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று எங்கள் பகுதியிலுள்ள வனத் துறை அதிகாரிகள் அதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். ஒரு நல்ல பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, அந்தச் சாலையைப் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களே அனுமதி வழங்குவர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மூலமாக முன்னால் சாலை அமைக்கப்பட்டிருந்தால், அமைக்கப்படும்பொழுதே வனத் துறையினுடைய அனுமதி பெற்றுத்தான் அமைக்கப்பட்டிருக்கும். புதுப்பிப்பதற்கு அனுமதி தேவையில்லை. அப்படித் தடையாக இருந்தால், விசாரித்து, தக்க நடவடிக்கை எடுத்து, அந்தச் சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு அருகில் குற்றாலம் இருக்கிறது. அந்தக் குற்றாலத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் கடந்த ஆண்டு வந்திருந்தீர்கள். ஆனால், அந்தச் சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அதற்கு ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். திரிகூட இராசப்பக் கவிராயர் அழகாகப் பாடியிருக்கிறார், குற்றாலத்தைப் பற்றி.

"வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்;

கானவர்கள் விழி எறிந்து, வானவரை அழைப்பார்;
கவன சித்தர் வந்து வந்து, காயசித்தி விளைப்பார்;

தேன் அருவித் திரை எழும்பி, வானின் வழி ஒழுகும்;
செங் கதிரோன் பரிக் காலும் தேர்க் காலும் வழுகும்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வழுகுகிற காரணத்தினால்தான் சாலை அவ்வளவு மோசமாக இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** உரையை முடித்துக்கொள்ளுகிறேன். (சிரிப்பு)

தேன் அருவித் திரை எழும்பி, வானின் வழி ஒழுகும்;
செங் கதிரோன் பாரிக் காலும் தேர்க் காலும் வழுகும்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிக் காலும்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

கூனல் இளம் பிறை முடித்த வேணி அலங்காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே!

முழங்கு திரைப் புனல் அருவி கழங்கு என முத்து ஆடும்;
முற்றம் எங்கும் பரந்து, பெண்கள் சிற்றிலைக் கொண்டு ஓடும்;

கிழங்கு கிள்ளி, தேன் எடுத்து, வளம் பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பு ஒடித்து, வெம்பு தினை இடிப்போம்;

செழுங் குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்;
தேன் அலர் செண்பக வாசம் வான் உலகில் வெடிக்கும்;

வழங்கு கொடை மகராசர், குறும் பலவில் ஈசர்,
வளம் பெருகும் திரிகூட மலை எங்கள் மலையே!





ஆடும் அரவு ஈனும் மணி கோடி வெயில் எறிக்கும்;
அம்புலியைக் கவளம் என்று தும்பி வழிமறிக்கும்;

வேடுவர்கள் தினை விரைக்கச் சாடு புனம்தோறும்;
விந்தை அகில் குங்குமமும் சந்தனமும் நாறும்;

காடுதொறும் ஓடி வரையாடு குதி பாயும்;
காகம் அணுகா மலையில் மேக நிரை சாயும்;

நீடு பலவீசர், கயிலாசகிரி வாசர்,
நிலை தங்கும் திரிகூட குற்றாலமலை எங்கள் மலையே!"

என்று திரிகூட இராசப்பக் கவிராயர் பாடியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாடிய புலவருக்கு என்ன பரிசு வேண்டும்? (சிரிப்பு)

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மட்டுமல்ல, அந்தப் பழத் தோட்ட அருவிக்குத் தாங்களும் கடந்த ஆண்டு வந்திருந்தீர்கள். அந்தச் சாலை ரொம்ப மோசமாகப் பழுதடைந்து, தங்களுடைய வண்டியே செல்ல முடியாமல், வண்டி நின்று நாங்கள் இறங்கித் தள்ளிவிட்டோம். பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையைப் புதுப்பித்து, வனத் துறை மூலமாக அனுமதி வாங்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஆண்டு வனத் துறை அமைச்சரை அழைத்துக் கொண்டு போய், அவருக்கு அந்த அனுபவத்தை ஏற்படுத்துங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 117, திரு. ஆஸ்டின், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**117—**

**ஓய்வூதியம்**

***16251—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, மின்சார வாரியத்தில் வழங்குவதுபோல் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மின்சார வாரியத்தில் வழங்குவதுபோல் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியைக் கேட்பதற்கு முன்பாக, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து கேள்வியை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக அடிக்கல்லை மட்டும் போட்டுவிட்டு, All India Medical Council-க்கு அனுமதி கேட்டுக் கடிதம்கூட எழுதாமல், மாவட்டத்து மக்களை...(மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கெல்லாம் நேற்று நன்றி சொல்லிவிட்டார்கள். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஆஸ்டின்:** வாய்ப்புக் கிடைக்கவில்லை, அதனால்தான் இன்றைக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஆஸ்டின்:** மாவட்டத்து மக்களைக் கடந்த ஆட்சியாளர்கள் ஏமாற்றி வந்த நிலையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே,





துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியினை ஒதுக்கி, All India Medical Council மூலமாக அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களுடைய சார்பில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆவின் நிறுவனமானது, கடந்த காலத்திலே நஷ்டத்திலே இயங்கி வந்தது. தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 2003-2004 ஆம் ஆண்டிலே நஷ்டத்தை எல்லாம் சரி செய்து, கிட்டத்தட்ட 13 இலட்சம் ரூபாய் இலாபத்திலே இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. சுமார் 118 ஊழியர்கள் அங்கே பணியாற்றி வருகின்றார்கள். அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஏற்கெனவே அவர்கள் வாங்கி வந்த 49 சதவிகிதம் பஞ்சப்படியானது, 2003-லே 52 சதவிகிதமாகவும், இந்த ஆண்டிலே 55 சதவிகிதமாகவும் அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அதுபோல, ஏற்கெனவே 5 சதவிகிதம் Personal pay வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்து இருந்தது. இந்த உயர்த்தப்பட்ட பஞ்சப்படியும், Personal pay-யும் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, உடனடியாக இந்தப் பணம் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஒன்றியத்தைப் பொறுத்தவரை, அவர் குறிப்பிட்ட அந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணம், சில உரிமைகள், அவர்களுக்குத் தேவையான அந்த உதவிகளை ஆய்வு செய்து, அங்கிருந்து அந்தக் கோரிக்கைகள் நம்முடைய ஆவின் Commissioner அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்குமேயானால், அது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அதுபோல, ஆவின் ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வருங்கால வைப்பு நிதித் திட்டம், சிறப்பு சேம நலத் திட்டம் மற்றும் பணிக்கொடைத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் நிதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**118—**

## ஆவின் பால் உறைகள்

***32037—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உபயோகப்படுத்தப்பட்ட ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்தி சில தனியார் போலி பால் தயாரிப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(அ)* சில தனி நபர்கள் பாலில் தண்ணீர் கலப்பதுடன், உபயோகப்படுத்தப்பட்ட ஆவின் பால் உறைகளையும் மீண்டும் பயன்படுத்துகிறார்கள் என்று புகார்கள் வந்துள்ளன.

*(ஆ)* அவர்கள்மீது காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கேள்வியாகவே கேட்டு விடுகிறேன். இப்படி எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை வழக்குகள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளன? தனியார் பால் ருசியாகவும், பால் அதிக நாட்கள் கெடாமல் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் Hydrogen Per Oxide, Caustic soda, Sona seal போன்ற இரசாயனப் பொருட்கள் கலக்கப்படுகின்றன. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உட்கொள்கின்ற உணவு என்பதால், இதனால் குடற்புண் போன்ற நோய்கள் உருவாகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தனியார் பாலுக்குத் தரக் கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்படுமா? தமிழகத்திற்குத் தேவையான அளவிற்குப் பால் கொள்முதல் உள்ளதால், தனியார் பாலுக்கு நுழைவு வரி விதித்தால் ஆவின் பால் விற்பனை அதிகரிக்க



2004 ஜூலை 31]

வாய்ப்பு உள்ளது. ஆகவே, தனியார் பாலுக்கு நுழைவு வரி விதிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக 10 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்தக் கண்காணிப்புக் குழுக்கள் 17-12-2002 அன்று திடீர் சோதனை நடத்தியபோது, திருவாளர்கள் அல்லிமுத்து மற்றும் பன்னீர்செல்வம் என்கிற நபர்கள் பாலில் தண்ணீர் கலப்பதோடு, ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்துவதைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது புகார் செய்து அண்ணா நகர் காவல் நிலையத்தில் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதைப்போலவே, 27-12-2002 அன்று நடத்திய திடீர் சோதனையின்போது திரு. கோவிந்தன் என்பவர் பாலில் தண்ணீர் கலப்பதுடன், ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்தியதைக் கண்டுபிடித்து, அவர்மீது புகார் செய்து, ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடக்காவண்ணம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தவறிழைத்தவர்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாரபட்சமற்ற கடுமையான நடவடிக்கையை எதிர்வரும் காலத்திலே எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இப்பொழுது தமிழகத்திலே மக்களுடைய தேவைக்குப் போதுமான அளவிற்குப் பால் உற்பத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

மேலும் தனியாருடைய பாலினுடைய தரத்தைச் சோதிப்பதற்கு ஏற்கெனவே பால் வளத் துறையின் கட்டுப்பாட்டில் அதற்குரிய வசதிகள் இல்லாமல் இருந்த நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் 31-3-2004 முதல் ஒரு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தைச் செயல்படுத்துகிற ஒரு வாய்ப்பை இந்தத் துறைக்கு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்தத் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் மூலமாக இதுவரை 51 பால் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே 26 தனியாருடைய பால் மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன.

இதுபோன்ற தனியார் பால் நிறுவனங்கள்மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிற பாலின் தரம் பால் வளத் துறையின் மூலமாகவும், நகராட்சி, மாநகராட்சிகள் மூலமாகவும் தேவையானபொழுது பரிசோதிக்கப்பட்டு வருகிறது. அப்படி எங்காவது அதிலே குறை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் எடுக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 119, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**119—**

## பேருந்து நிலையம்

***9188–திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து நெரிசல் காரணமாக வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வாழப்பாடி பேருந்து நிலையத்தில் தற்போது போக்குவரத்து இடையூறு இல்லாமல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு வாழப்பாடி பகுதியில் போதுமான இட வசதி இல்லை. வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான அவசியமும் எழவில்லை.





**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், பேருந்து நிலையத்தை அகலப்படுத்தி இருப்பதனால் அங்கு நெரிசல் அதிகமாக இல்லை என்று கூறினார்கள். ஆனால், அகலப்படுத்திய பிறகும் இன்னும் போக்குவரத்து நெரிசலில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால், வாழப்பாடி பஞ்சாயத்து யூனியன் அமைந்துள்ள பகுதிக்கு மேற்குப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 10 இலட்சம் கடனுதவி பெற்று பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரப்பளவு 0.75 ஏக்கர் ஆகும். மேற்கூறிய பேருந்து நிலையத்தில் 1 உணவு விடுதி மற்றும் 8 கடைகள் கட்டப்பட்டு, வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டக் கடன் தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், வாழப்பாடி பேருந்து நிலையத்திற்குள் தற்போது ரூ.9.67 இலட்சம் மதிப்பீட்டிலே சுற்றுப்புறச் சுவர், பேருந்துகள் நிறுத்துமிடம், தீப்பிடிக்காத கூரை, நவீனக் கழிப்பிடம், இலவச சிறுநீர் கழிப்பிடம், சைக்கிள் நிறுத்துமிடம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வாழப்பாடி பேருந்து நிலையத்தில் தற்போது போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு வாழப்பாடி பகுதியில் போதுமான இட வசதி இல்லை. மேலும், பேருந்து நிலையம் தற்போது செயல்பட்டு வரும் இடத்தில் இருப்பதுதான் பொது மக்களின் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும். எனவே, வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 120, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**120—**

## நினைவாலயம்

***23322—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்டத் தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த இடத்தில் நினைவாலயம் கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த இடத்தில் நினைவாலயம் கட்டும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,

பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்,

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்

சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!"

என்றார் மகாகவி பாரதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு என்ன, அவையிலே ஒரே கவிதை மழையாக இருக்கிறது?

**திரு. கு. அன்பழகன்:** யாருக்காக இந்த வைர வரியைப் பாடினார் என்றால், சுதந்திரப் போராட்ட வீரர், அரசியல் ஞானி, தியாகச் செம்மல், அரசியல் விற்பன்னர் என்று சொல்லக்கூடிய சுப்பிரமணிய சிவாவுக்காக மகாகவி பாரதி அவர்கள் பாடினார்கள். இந்தக் கருத்தை மையமாக வைத்து பாரதிதாசன் அவர்கள்,



"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எனை
மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை"

என்று பாடினார்கள்.

*முற்பகல் 11-25*

அந்தக் காலத்திலே அருஞ்சிறை, வெஞ்சிறை, கொடுஞ்சிறை என்று சிறை வாசங்கள் இருந்தன. நம்முடைய சுதேசிக் கப்பலோட்டிய வ.உ.சி. அவர்களும், சுப்பிரமணிய சிவா அவர்களும் தீவாந்தர தண்டனை பெற்றவர்கள். அப்படிப்பட்ட அருஞ்சிறையிலே அடைக்கப்பட்டு, ஆசாரம் கொடி கட்டிப் பறந்த காலத்தில் உயர்மிகு வகுப்பில் தோன்றினாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வீட்டில் வசித்த அந்தச் சமதர்மத் தெய்வம் சுப்பிரமணிய சிவா அவர்கள் சிறைச்சாலையிலிருந்தபோது slow poison மூலமாக, கொஞ்சங்கொஞ்சமாக அவருடைய உடலிலே தொழுநோயைப் புகுத்தி, வெளியே வருகின்றபோது ஒரு தொழுநோயாளியாக வந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், அதை ஒரு நல்ல கருத்தரங்கம் போட்டு வைத்துக்கொள்ளலாம். என்ன வேண்டும்? கேள்வி என்ன, சொல்லுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** அப்படிப்பட்டவர், என்னுடைய வத்தலகுண்டிலே வாழ்ந்தவர், எங்கள் வத்தலகுண்டு பகுதியிலே இருந்துதான் இப்படிப்பட்ட தீரச் செயல்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டடி மனை இப்போது பார்ப்பதற்கு அலங்கோலமாக இருக்கிறது. ஆகவே, இந்தியச் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு நம்முடைய தங்கத் தலைவி, தன்னிகரில்லாத் தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அங்கே ஒரு நினைவாலயம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் பிறந்த இடத்தில் நினைவாலயம் கட்டுவதற்கு இப்போது வாய்ப்பு இல்லை. இருப்பினும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுடைய சமாதி அமைந்துள்ள இடம்,

[2004 ஜூலை 31

மருத்துவத் துறையிலிருந்து செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு தற்போதுதான் மாற்றப்பட்டுள்ளது. சமாதி அமைந்துள்ள இடத்தை மேம்படுத்தும் வகையிலே ரூபாய் 2 இலட்சம் நிதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒதுக்கீடு செய்து, இந்த நிதியைக் கொண்டு சமாதி அமைந்துள்ள இடத்தில் சுற்று மதில்சுவர் எழுப்பி, நுழைவு வாயில், ஆர்ச் மற்றும் கேட் அமைத்தல், மின் விளக்கு வசதி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை பொதுப் பணித் துறையின் மூலமாக மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப் பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 13, 14, 15, 16, 17 மற்றும் 18— இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)@**

**(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 19— இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)@@**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஒன்றியங்களின் வனப் பகுதியிலுள்ள ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. கே.வி. முரளிதரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. முரளிதரன்.

@ 225 முதல் 952 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

@@ 953 முதல் 1024 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களின் வனப் பகுதியில் உள்ள தொட்டபேளூர், கும்ளாபுரம் போன்ற ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தருமபுரி மாவட்டம், ஒசூர் கோட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட தொட்டபேளூர், மேல்பேவநத்தம் மற்றும் கும்ளாபுரம், மாடக்கல், உரிகம், கோட்டையூர், நாட்றாம்பாளையம், மஞ்சுகொண்டபள்ளி, பேளாவனம் கிராமங்களுக்கு அருகில் கீழ்க்கண்ட கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:

**I. கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம்**

| வ. எண். | கால்நடை மருந்தகம் | வ. எண். | கால்நடை கிளை நிலையம் |
|---|---|---|---|
| 1. | கெலமங்கலம் | 1. | உள்ளுகுறிகை |
| 2. | தேன்கனிக்கோட்டை | 2. | குண்டுமாரணப்பள்ளி |
| 3. | இராயக்கோட்டை | 3. | சந்தானப்பள்ளி |
| | | 4. | கண்டகானபள்ளி |
| | | 5. | லிங்கனம்பட்டி |
| | | 6. | கும்மனூர் |

[திரு. ப.வெ. தாமோதிரன்] [2004 ஜூலை 31

**II. தளி ஊராட்சி ஒன்றியம்**

| வ. எண். | கால்நடை மருந்தகம் | வ. எண். | கால்நடை கிளை நிலையம் |
|---|---|---|---|
| 1. | தளி | 1. | பாளையம்கோட்டா |
| 2. | அஞ்செட்டி | 2. | ஜாவலகிரி |
| 3. | மடகொண்டபட்டி | 3. | காக்கதசம் |
| 4. | பெத்தபெலகொண்டபள்ளி | 4. | ஆண்டேவனப்பள்ளி |
| | | 5. | பென்னாகூர் |
| | | 6. | தேவகானப்பள்ளி |

தற்போது இத்துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 2004–2005–ல் கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் கிளை நிலையங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிளை நிலையம் வீதம் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும். மேலும், கால்நடை மருத்துவ நிலையங்கள் இல்லாத கிராமங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்கள் அமைத்து மருத்துவ வசதி செய்து தரும்படி மண்டல இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை நன்றாகப் படித்துப் பார்த்தேன். 2004–2005–ல் கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் கிளை நிலையங்களில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப் பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறீர்கள். அரசுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கால்நடை மருத்துவ நிலையங்கள் இல்லாத கிராமங்களுக்கு, கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்கள் அமைத்து, மருத்துவ வசதி செய்து தரும்படி மண்டல இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்படுமென்று கூறியிருக்கிறீர்கள். ஆனால். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் 25 கி.மீ. தூரம் இருக்கிற



2004 ஜூலை 31] [திரு. கே.வி. முரளிதரன்]

காரணத்தினால், கால்நடைகளை அந்த மருத்துவமனைக்குக் கொண்டு வரவேண்டுமென்றால், 25 கி.மீ. 30 கி.மீ. கொண்டு வர வேண்டும். அதற்கு, மேல் பேவநத்தம், தொட்டபேளூர், கும்ளாபுரம், மாடக்கல், உரிகம், கோட்டையூர், தக்கட்டி, நாட்றாம்பாளையம், மஞ்சுகொண்டபள்ளி ஆகிய ஊர்களில் கால்நடை கிளை நிலையங்கள் இந்த ஆண்டு அமைத்துத்தர கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் முன்வருவாரா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க மாநில திட்டக் குழு விதித்துள்ள தடை இன்னும் அமலில் உள்ளது. ஆகவே, அங்கே புதிய கால்நடை கிளை நிலையங்கள் தற்போது துவக்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, தகுதிக்கேற்ப, கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 221 முதல் 246 வரையிலான 26 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். முனைவர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 153 முதல் 158 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2004 ஜூலை 31

### (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள். திரு. லா. சந்தானம்.*

**திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2004 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 27 முதல் 29 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

### (ஈ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 69 முதல் 77 வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*



2004 ஜூலை 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 1 — மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004–2005 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,66,96,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 174, திரு. மு. அப்பாவு.*

**திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதியிலிருந்து சென்னை வர இரயில்வே பாஸ் வழங்க வேண்டும். விரும்பியவர்களுக்கு தற்போதைய முறையில் பணம் பெற்றுக்கொள்ள வழிவகை செய்ய வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,66,96,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 140, திரு. ப. அரசன்.*

***திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*



*"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,66,96,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 258, திரு. ஜெக. வீரபாண்டியன்.*

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் 1 கோடி வரை உயர்த்தித் தரவேண்டும் என்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,66,96,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 204, திரு. கே.வி. முரளிதரன்.*

***திரு. கே.வி. முரளிதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு வருடத்தில் குறைந்தது நூறு நாட்கள் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெற வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,66,96,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

*முற்பகல் 11–35*

### (ஆ) கோரிக்கை எண் 2 — ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 2– ஆளுநர் மற்றும் அமைச்சரவை. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,22,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 111, திரு. ப. அரசன்.*

***திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,22,03,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 177, திரு. மு. அப்பாவு.*

**திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,22,03,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

## (இ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,098,47,97,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,79,44,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.13,53,57,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 170, திரு. ப. அரசன்.*

***திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு அமைப்புகளுக்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,098,47,97,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,79,44,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,53,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 190, திரு. மு. அப்பாவு.*

**திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகாவில் உள்ள புஷ்பவனம், வடக்கங்குளம், யாக்கோபுரம், சொத்தன்குளம் (இருக்கன்துறை பஞ்சாயத்து) அரசர்குளம், கொத்தங்குளம், நக்கனேரி போன்ற ஊர்களுக்கு புதிய நியாய விலை கிளைக் கடைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,098,47,97,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,79,44,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,53,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 220, திரு. கே.வி. முரளிதரன்.*

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, அஞ்செட்டி ஊராட்சி, எருமுத்தனப்பள்ளி, தொட்டமஞ்சி ஊராட்சி—கெம்பகரை, மாடக்கல் ஊராட்சி, அருளநத்தம், கெலமங்கலம் ஒன்றியம், இருதாளம், அனுசோனை ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,098,47,97,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,79,44,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,53,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 15 – நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15—நிதித் துறை. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.551,48,11,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.21,11,32,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 142, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,48,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,11,32,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரை வறண்ட ML தேரி, புத்தன்தருவை, வைரவன்தருவை பகுதிக்குக் கொண்டு செல்லும் திட்டத்திற்கு ரூ. 167 கோடியும், தோவாளை கால்வாய்க்கு இணையாக ஒரு வெள்ளப் பெருக்குக் கால்வாய் வெட்ட ரூ. 78.90 கோடியும், பழையாற்றில் சுசீந்திரம் அருகே மின் நீரேற்றி மூலம் ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் கொண்டு வர ரூபாய் 18.70 கோடியும் நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,48,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,11,32,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 225, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே. வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பிற்பட்ட தொகுதியான தளி தொகுதியில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக ரூ.50 கோடி தனி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,48,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,11,32,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 35—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 35–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை., மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.59,51,67,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8,51,80,000/–க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 143, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.59,51,67,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,51,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 352, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.59,51,67,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,51,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 213. திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகப் பெரிய ஒன்றியமான தளி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு மலைவாழ் பழங்குடியின மக்கள் வாழும் ஒன்றியமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.59,51,67,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,51,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஊ) கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,610,01,60,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 367, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,610,01,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

## (ஏ) கோரிக்கை எண் 10 — வணிக வரித் துறை — வணிக வரிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள். மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.322,08,66,000/—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 160, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியிலுள்ள வணிக வரி அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.322,08,66,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 189, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழைகள் அதிக அளவில் பயன்படுத்தும் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடு, செங்கற்கள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.322,08,66,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

முற்பகல் 11—10

## (ஏ) கோரிக்கை எண் 19 – உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19–உயர் கல்வித் துறை. மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.647,08,43,000/—, மூலதனக் கணக்கில் ரூ.2,72,79,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ. 1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 153, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.647,08,43,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,72,79,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 196, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொறியியல் கல்லூரி நடத்துகின்றவர்கள் தங்களிடம் படிக்கின்ற மாணவர்களுக்கு படித்து முடித்து 5 ஆண்டு காலம் பணி வழங்க உத்தரவாதம் வழங்குகின்றவர்களுக்கு மட்டுமே பொறியியல் கல்லூரி நடத்த அனுமதியளிக்க வேண்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.647,08,43,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,72,79,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 226, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொகுதி மையமாக விளங்கும் தளியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியைத் தனியாகப் பிரித்து, புதியதாக மாணவிகளுக்காக அரசினர் உயர்நிலைப் பள்ளி (பெண்கள்) ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.647,08,43,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,72,79,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 268, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறையில் புதிய சட்டக் கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.647,08,43,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,72,79,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஐ) கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,112,73,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.60 00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 152, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில், அம்மாப்பட்டினம், ஆவுடையார் கோவில், மீமிசல் ஆகிய இடங்களில் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,142,73,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 234, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டுமானால், அந்த மாநிலங்களிலேயே பள்ளி இறுதி வகுப்பு (S.S.L.C.) தேர்ச்சி பெறவேண்டும் என்று நடைமுறையில் உள்ளதுபோல், நம் மாநிலத்திலும் அதே விதிமுறையை உருவாக்கி அமல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,142,73,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 269, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியிலுள்ள நீடூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,142,73,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 357, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள தனியார் உதவி பெறும் பள்ளிகளில் 1991 முதல் தரம் உயர்த்தப்பட்டு அங்கீகாரம் பெற்று நிதி உதவியின்றிப் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,142,73,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஒ) கோரிக்கை எண் 33 — நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33– நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.863,47,61,000/–, மூலதனக் கணக்கில் ரூ.633,18,47,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.158,21,70,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 173, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகராட்சி மக்களின் குடிநீர்த் தேவை நிறைவடைய, அதிக இடங்களில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.863,47,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.633,18,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.158,21,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 240, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை நகரில் புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்துவதற்காக 'டுபிட்கோ' (TUFIDCO)- விலிருந்து கடன் வாங்கத் தாமதம் ஆவதால், அந்தக் கடனைக் காலதாமதம் இன்றி உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.863,47,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.633,18,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.158,21,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 272, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் நகர் முழுவதும் சாலைகள் சேதமடைந்துவிட்டன. அனைத்துப் பகுதிகளுக்கும் தரமான சாலைகள்



அமைக்க மயிலாடுதுறை நகராட்சிக்குக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.863,47,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.633,18,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.158,21,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 350, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி, பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்பெறும் பணகுடி பேரூராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் 20 வீடுகளுக்கு 1 குடிநீர் இணைப்பு வீதம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.863,47,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.633,18,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.158,21,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஒ) கோரிக்கை எண் 40 — ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40-ஊரக வளர்ச்சித் துறை. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,611,17,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.341,43,94,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 146, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளின் குடிநீர் மின்சாரக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,611,17,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.341,43,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 216, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கிராம தார்ச் சாலைகள் அனைத்தும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் இச்சாலைகளை, தனி நிதி ஒதுக்கீடு செய்து பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,611,17,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.341,43,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை செறுதியூர், கோடங்குடி ஊராட்சியிலுள்ள நெடுமருதூர் சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,611,17,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.341,43,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 355, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப் பஞ்சாயத்துகளில் இயங்கி வரும் குடிநீர் மின் மோட்டார்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,611,17,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.341,43,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டு, அதற்கு விளக்கத்தை எனது பதிலுரையில் தெரிவிப்பேன் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

---

@ 1025 முதல் 1179 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் III, IV, V மற்றும் VI ஆக அச்சிடப்பட்டுள்ளன.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளுக்கு என்னுடைய விளக்கத்தை இறுதியில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற

@ 1180 முதல் 1194 வரையிலான பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 1195 முதல் 1302 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் VIII மற்றும் IX ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப் பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நிதி, திட்டம், வளர்ச்சி, வணிக வரி, உயர் கல்வி, பள்ளிக் கல்வி உள்ளிட்ட பல்வேறு மானியக் கோரிக்கைகளிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திற்கு உள்ளேயும், சட்டமன்றத்திற்கு வெளியேயும் நடக்கின்ற பல்வேறு நிகழ்வுகள், நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து, அதனுடைய ஒரு follow up-ஆக நடந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, அது பற்றிய என்னுடைய கருத்துகளையும் முன்னதாக எடுத்து வைக்க விரும்புகிறேன். பாராளுமன்றத் தேர்தல் நடந்தபோது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், பாரதிய ஜனதா கட்சியும் கூட்டணி அமைத்து மக்களைச் சந்தித்தது. அதிலே பாரதிய ஜனதா கட்சியோடு மிகத் தீவிரமாக இணைந்து பணியாற்றி, மாநிலம் முழுவதும் சென்று, வாஜ்பாய் அவர்களுடைய தலைமைக்காக மக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டியமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல்களின் மூலமாக ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவது ஜனநாயகத்தினுடைய ஒரு பகுதி. ஒவ்வொரு முறையும் மாநிலத்திற்காக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் நடப்பது, மத்தியிலே மத்திய அரசாங்கத்தை அமைப்பதற்காக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் நடப்பது என்பது, நாம்

@ 1303 முதல் 1419 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் X மற்றும் XI ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

மேற்கொண்டிருக்கின்ற அரசமைப்புச் சட்டத்தினுடைய பங்காக இருக்கிறது. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் ஐந்தாண்டுகளுக்குத் தொடர வேண்டும் என்பதிலே பாரதிய ஜனதா கட்சி உறுதியாக இருக்கிறது. ஆனால், நடந்துவிட்ட தேர்தலுக்குப் பிறகு மத்தியிலே ஒரு புதிய அரசு அமைந்ததன் பின்பாக, நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்ற பல்வேறு நிகழ்வுகள் இந்நாட்டினுடைய மைய அரசு அரசியலமைப்புச் சட்டப்படிதான் நடத்தப்படுகிறதா அல்லது சில அரசியல் கட்சிகள் அவரவர்களாக அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்களா என்கின்ற சந்தேகத்தை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கிறது. ஏதோ, தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பதுபோல, பல நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 11–50*

சமீபத்திலே கும்பகோணத்திலே, மிகக் கொடூரமான, சோகமான ஒரு சம்பவம் நடந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களும் உடனடியாக அங்கு அன்றையதினமே சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்தை வழங்கினார்கள். பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற முன்னாள் துணைப் பிரதமர் திரு. அத்வானிஜி போன்றவர்களும், ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களும், தமிழகத்தினுடைய எதிர்க் கட்சியினுடைய தலைவர்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் அனைவருமேகூடச் சென்றார்கள். அந்தத் துக்கத்திலே பங்கு பெற்றோம். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது, அவர்களுடைய துன்பத்திலே பங்கு பெறுவது என்பது வேறு. ஆனால், அரசியல் சட்டத்தையே மதிக்காமல் நடப்பது என்பது வேறு. இரண்டையும் நாம் ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டுவிட முடியாது. அந்த இடத்திலே வந்து ஒரு பிரதம மந்திரியினுடைய நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்குவதாகப் பிரதமர் சொல்லலாம் அல்லது பிரதமர் அலுவலகத்தினுடைய ஓர் அதிகாரிகூடச் சொல்ல முடியும். ஆனால், ஒரு கட்சியினுடைய தலைவர் சொல்ல முடியாது. ஆனால், திருமதி சோனியா காந்தி அவர்கள் இங்கே வந்து, மத்திய அரசு நிவாரணம் வழங்கும் என்று அறிவித்தார்கள். இதெல்லாம் பிரதமருடைய அதிகாரத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்கான முயற்சி தொடர்ந்து திட்டமிட்ட ரீதியில் நடக்கிறதோ என்கின்ற சந்தேகம் பல்வேறு நிகழ்வுகளை எனக்கு ஞாபகப்படுத்துகிறது.



உதாரணத்திற்கு, சென்னையிலே Port Trust-லே ஒரு விழா. இது மத்திய அரசாங்கத்தினுடைய விழா. அதிலே மத்திய அரசாங்கத்தோடு எந்தவிதமான தொடர்பும் இல்லாத திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் எப்படித் திறப்பாளராகப் பங்குபெற்றார் என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அது மாத்திரம் அல்ல. அதற்கான விளம்பரத்திலே, பத்திரிகைகளிலே பிரதமருடைய படம் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், அதனுடைய பொதுச் செயலாளர்—ஏனென்றால் இவர்களுக்கு மத்திய அரசிலே எந்தப் பங்கும் இல்லை. ஆனால் அவர்களுடைய—படங்களைப் போட்டு விளம்பரம் செய்யப்படுகிறது என்று சொன்னால், பிரதமர் என்பவர் ஒருவர் இருக்கிறார் என்கின்ற நினைப்பே கூட்டணிக் கட்சிகளுக்கு இல்லையோ என்று எண்ணுகின்ற அளவிற்கு அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சில கட்சிகள் அவர்களாகச் சேர்ந்து மத்திய அரசைத் தன் இஷ்டம்போல் நடத்திக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

ஏன், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, அந்தக் கட்சியைச் சார்ந்த ஒரு முதல்வர் மற்ற மாநிலங்களோடு மேற்கொண்டிருக்கின்ற, 23 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கின்ற ஓர் ஒப்பந்தத்தை இரத்து செய்கிறார். ஆனால் பிரதம மந்திரி, தான் பிரதம மந்திரி என்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்துவதை விட்டுவிட்டு ஏதோ நான் போய் நீதிமன்றத்திலே முறையிடுகிறேன் என்று உச்ச நீதிமன்றத்திலே முறையிட்டிருப்பதுகூட பிரதமர் தன்னுடைய அதிகாரத்தைச் செயல்படுத்துகின்ற நிலையிலே இல்லை என்பதையே காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

அதே மாதிரியாக தலைமறைவான அமைச்சரைப் பற்றிக் கருத்துச் சொல்ல வேண்டும்; பிரதம மந்திரி பாராளுமன்றத்திலேஅறிக்கை தர வேண்டுமென்று கேட்டால், அதைத் தருகின்ற அதிகாரம்கூட தனக்கு இருப்பதாக பிரதமர் உணராத நிலையிலே இன்றையதினம் அரசாங்கமானது நடந்து கொண்டிருக்கிறது. அதனுடைய ஒரு பாதிப்பாக, பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, தமிழகத்திலும் எப்படியோ உடனடியாக ஆட்சிக்கு வந்து விட வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, DPA—அது Democratic Progressive Alliance-ஆ அல்லது Dynasty Promotion Alliance-ஆ என்று எனக்குத் தெரியவில்லை. எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அந்த DPA-ஐச் சார்ந்த தலைவர்கள், பாராளுமன்றத் தேர்தலில் தோற்றுவிட்ட காரணத்தினாலே தமிழக அரசு

இராஜினாமாச் செய்ய வேண்டுமென அறிக்கை கொடுக்கிறார்கள். அதற்காக அவர்கள் கவர்னரைச் சந்திக்க நினைக்கிறார்கள். ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். சந்திக்கட்டும். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், ஒரு மாநிலத்திலே இருக்கின்ற ஒரு கட்சி, ஆட்சியிலே இருக்கின்ற கட்சி, நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுவிட்ட காரணத்தினாலே, இராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொன்னால், இவர்கள் ஒரு முன்மாதிரியாக, கேரள அரசாங்கத்திலேயிருந்து இராஜினாமாச் செய்துவிட்டு *(மேசையைத் தட்டும் ஒலி)* நாங்கள் செய்திருக்கிறோம், அதை நீங்கள் செய்யுங்கள் என்று தமிழகத்திலே அவர்கள் வலியுறுத்தினால்கூடப் பரவாயில்லை. One has to practise before preaching. ஆனால், அது இங்கே நடைபெறவில்லை.

*முற்பகல் 11–55*

அதேபோல, பஞ்சாபிலே இருக்கின்ற காங்கிரஸ் அரசாங்கமும் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். ஏனென்றால், அவர்களும் அங்கே மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்து இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், உண்மையிலே இப்போது சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று சொன்னால், கடந்த இரண்டு நாட்களாக நடந்த மார்க்சியவாதி கம்யூனிஸ்ட் கட்சியினுடைய Politbureau-விற்குப் பிறகு மேற்கு வங்காளத்தினுடைய முன்னாள் முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் கூறியிருக்கின்ற கருத்தைப் பார்த்தால், மத்திய அரசாங்கத்தோடு எங்களுக்குக் கடுமையான கருத்து பேதம் இருக்கிறது என்று அவர் சொல்லியிருப்பதைப் பார்த்தால், இங்கே அவர்கள் முயற்சியை மேற்கொள்வதற்கு முன்பாக அங்கே அவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல நாடாளுமன்றத்திலே மிகக் கடுமையான குற்றங்களுக்கு உள்ளாகியிருக்கின்ற, கற்பழிப்பு, கொலை, ஆள் கடத்தல், ransom, இம்மாதிரியான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கின்ற அமைச்சர்கள் நீக்கப்பட வேண்டுமென்கின்ற நியாயமான கோரிக்கைக்காக பாரதிய ஜனதா கட்சி மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளினுடைய உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் போராடியபோது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அதனுடைய தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தன்னுடைய திருவாய் மலர்ந்தருளி, 'எங்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புங்கள், உங்களுடைய பிரச்சினைகளுக்காகப் பேசுகின்றோம்



என்று சொல்லி வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர்கள் அங்கு தர்ணா நடத்துவார்களேயானால், அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தர்ணா நடத்த வேண்டியிருக்கும்' என்று சொன்னார். ஆனால், இவர் அதைப் பற்றிப் பேசலாமா? கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சேப்பாக்கம் தொகுதி மக்களுக்காக ஒரு வரியாவது, ஒரு நிமிடமாவது இந்தச் சட்டமன்றத்திலே வந்து திரு. கருணாநிதி அவர்கள் பேசியிருக்கிறாரா? *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படியானால், சேப்பாக்கம் தொகுதி மக்கள் தர்ணா நடத்தலாமோ! ஆகவே, மூன்று ஆண்டுகளாக இவர்களுடைய தலைவர் சட்டமன்றத்திற்கு வரவில்லை என்பது மாத்திரமல்ல, மூன்று ஆண்டுகளாக ஓரிரு தினங்கள் தவிர்க்க முடியாமல் இருந்தாலன்றி, அனைத்து நாட்களிலும் வந்த காரணத்தினாலே என்னாலே உறுதியாகச் சொல்ல முடியும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வந்தபோதெல்லாம் வெளியே போவது எப்படி என்றே அவர்கள் பேசி வைத்துக்கொண்டு வந்ததுபோலவே *(மேசையைத் தட்டும் ஒலி)* சட்டமன்றத்திலே நடந்து கொண்டார்கள். ஆனால், இப்பொழுது இன்றையதினம் சட்டமன்றத்தை பகிஷ்காரம் செய்வது, புறக்கணிப்பது என்று அவர்கள் முடிவு செய்திருப்பதற்கும், பாராளுமன்றத்திலே நடக்கின்ற சம்பவத்திற்கும்கூடத் தொடர்பு இருப்பதாகவே நான் கருதுகிறேன். ஏனென்றால், தெரிந்தோ தெரியாமலோ தேசிய ஜனநாயகக் கூட்டணி பாராளுமன்றத்திலே போராட்டம் நடத்தக் கூடாது என்று சொல்லிவிட்ட காரணத்தினாலே இப்பொழுது தமிழகத்திலே வந்து இங்கு நாம் முன்பு போலவே ரகளை செய்வோம் என்று செய்வார்களேயானால் 'நீங்கள் அங்கு ஒன்று சொன்னீர்கள்; இங்கு ஒன்று செய்கிறீர்கள்' என்று மக்கள் கேட்டு விடுவார்கள் என்ற காரணத்தினாலே புறக்கணிக்கிறார்களோ என்னவோ, தெரியவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை, நான் முதல் நாளிலேயே சொன்னபடி, சட்டமன்றமானது அதிக நாட்கள் நடத்தப்படவேண்டும் என்று Presiding Officers' Conference–ல் ஏற்பட்ட கருத்தொற்றுமையின் அடிப்படையிலே நடைபெற வேண்டும் என்கின்ற கருத்திலே பாரதிய ஜனதா கட்சி உறுதியாக இருக்கிறது. அதிலே வேறுபாடு இல்லை. ஆனால், அதற்காக பிரதான எதிர்க் கட்சி, அவர்களுடைய கூட்டணிக் கட்சிகள் நாங்கள் சட்டமன்றத்திற்கே வர மாட்டோம் என்று சொல்வதைவிட, சட்டமன்றத்திற்கு வந்து, அவர்கள் அவர்களுடைய கருத்துகளைக் கூறி இருந்திருக்க வேண்டும். அதுதான் சரியான ஜனநாயகக் கடமையாக இருக்க முடியும்.

[திரு. எச். ராஜா] [2004 ஜூலை 31

அதே சமயத்திலே, தமிழகத்தினுடைய அரசாங்கத்தை—பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை, அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 356–ஐப் பயன்படுத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஜனநாயக ரீதியான அரசுகளைக் கலைப்பதை பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கிறது. அதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆங்காங்கு கடந்த ஒரு வார காலமாக நடக்கின்ற குற்றங்கள்மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஏனென்றால், வேலியே பயிரை மேய்வதைப்போல, சில காவல் துறை அதிகாரிகள்கூட ஈடுபட்டிருக்கிறார்கள். நேற்றையதினம் தமிழக அரசு உறுதியான ஒரு நடவடிக்கையை முன்னாள் உள் துறைச் செயலருக்கு எதிராக எடுத்திருப்பதிலிருந்து அரசாங்கம் உறுதியான நடவடிக்கையை எடுக்கும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தமிழகத்திலே அரசியல் சட்டப் பிரிவு 356–ஐப் பயன்படுத்துகின்ற அளவிற்கு ஒரு பெரிய வெகு ஜனப் போராட்டமோ அல்லது சட்டம்–ஒழுங்கு சீர்குலைவோ ஏற்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்தியிலே அமைந்திருக்கின்ற அரசாங்கம் மாநில அரசுகளுக்கு எதிராகப் பாரபட்சமற்ற முறையிலே நடக்க வேண்டுமென்பதைக்கூட அவர்கள் கடைப்பிடிப்பதில்லை. ஏனென்றால், எதிர்க் கட்சி ஆளுகின்ற மாநிலம் என்கின்ற காரணத்தினாலே முதன்முறையாக இப்போது அங்கே கை வைத்திருக்கிறார்கள். பிறகு எங்கெல்லாம் கை வைப்பார்களோ, தெரியவில்லை. Pradhan Mantri Gram Sadak Yojana—பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு இராஜஸ்தான் அரசாங்கத்துக்கு மத்திய அரசு உத்தரவு போட்டிருக்கிறது. ஆகவே, அந்த மாதிரியாக பாரதிய ஜனதா கட்சி, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மத்தியிலே இருந்த காலத்திலே எந்தவிதத்திலும் ஆளுகின்ற கட்சிகளின் வேறுபாட்டின் அடிப்படையிலே எந்த ஒரு மாறுபாட்டையும் நாம் கையாளவில்லை. ஆனால், புதிய அரசு பொறுப்பேற்ற உடனேயே அம்மாதிரிச் செயல்களில் ஈடுபடத் துவங்கி இருக்கிறது. இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்ற மக்கள், இன்று மத்தியிலே இருக்கின்ற ஆட்சியைப் பார்த்து, இப்படி ஒரு ஆட்சி அமைந்துவிடும் என்று நாங்கள் எண்ணிப் பார்த்து இருந்தால் நிச்சயமாக இந்த மாதிரி வாக்களித்து இருக்க மாட்டோம் என்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பேசிக்கொள்கிறார்கள். அதற்கு எதிர்காலத்திலே அவர்கள் வெளிப்படையாக உரக்க, தங்களுடைய தீர்ப்பின் மூலமாக வழங்குவார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.



2004 ஜூலை 31] [திரு. எச். ராஜா]

மத்திய தேர்தல் ஆணையத்தினுடைய முக்கியமான பணி—எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் இருக்கின்ற வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டிய பணி, தேர்தல் ஆணையத்திற்கு இருக்கிறது. ஆனால், நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் சரி, அதற்கு முன்பாக நடந்த சட்டமன்றத் தேர்தலிலும் சரி, பல்வேறு வாக்காளர்கள், அடையாள அட்டை பெற்றவர்கள்—ஏனென்றால் இந்த அடையாள அட்டையே, இதுவே பல்நோக்கு அடையாள அட்டையாக இருக்க வேண்டும் என்கின்ற நோக்கோடுதான் அன்றைய துணைப் பிரதமராக இருந்த திரு. அத்வானிஜி அவர்கள் இந்த முயற்சியை மேற்கொண்டார்கள். ஆனால், இங்கு வாக்காளர் அடையாள அட்டை வைத்து இருப்பவர்களுக்கே வாக்குரிமை இல்லாத ஒரு சூழ்நிலையை நம்மால் பார்க்க முடிந்தது. தேர்தல் ஆணையம் என்பது சுயேச்சையாகச் செயல்படுகின்ற அமைப்பு. அது, யார் மத்தியிலே ஆட்சியில் இருந்தார்கள், யார் மாநிலத்தில் ஆட்சியில் இருக்கிறார்கள் என்று அரசாங்கத்தை நிச்சயமாகக் குற்றம் சொல்ல முடியாது. ஒரு blemishless, flawless electoral roll கொடுக்க முடியாததற்கு முழுப் பொறுப்பும் தேர்தல் ஆணையமாகத்தான் இருக்க முடியுமேயொழிய, அரசாங்கமாக இருக்க முடியாது என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

நம்முடைய பாரத நாட்டிலே, பண்டைக் காலங்களிலே இருந்து, மூன்று விஷயங்கள் மக்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் ஒரு பழக்கம் இருந்து வந்தது. வித்தியா தானம், அன்ன தானம், ஔஷத தானம்—அதாவது, கல்வி, உணவு, மருத்துவம் ஆகியவை மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட காலம் இருந்து வந்தது. வீடுகளின் முன்னால் இருக்கின்ற திண்ணைகள் எல்லாம் பள்ளிக்கூடங்களாக இருந்த காலம் உண்டு. A Beautiful Tree என்கின்ற ஒரு புத்தகத்திலே படித்தது எனக்கு நினைவிருக்கிறது. "1850–களுக்கு முன்பாக, இந்த நாட்டிலே 99 சதவிகிதம் கல்வி அறிவு இருந்திருக்கிறது. Macaulay–ன் system வந்த பிறகுதான், இப்போது கல்வி அறிவு விகிதமானது குறைந்து கொண்டிருக்கிறது" என்பதை நான் அதிலே படித்திருக்கிறேன். எனவே, கல்விக் கூடங்கள் வியாபார மையங்களாக மாறுவது தடுக்கப்பட வேண்டும்.

அதிலும், இப்போது, கும்பகோணத்திலே நடந்துவிட்ட சம்பவத்திற்குப் பிறகு, அரசாங்கம்—அது இயல்புதான்—ஒரு சம்பவம் நடந்த பிறகு, உடனடியாக அது பற்றி அதிரடியான நடவடிக்கைகள்

மேற்கொள்வது என்பது இயல்பாக இருந்தாலும்கூட, கூரைகளை நீக்க வேண்டும் என்பது, மாற்று ஏற்பாடு இருப்பதை உறுதி செய்து கொண்டுதான், நாம் கூரைக்கூடங்களைப் பள்ளிக்கூடங்களிலே இருந்து நீக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், குழந்தைகள் திறந்தவெளியிலே இருப்பதாகக்கூடச் செய்திகள் சொல்கின்றன; ஆகவே, அது தடுக்கப்பட வேண்டும். Universalisation of Education—அனைவருக்கும் கல்வி என்பதில் நாம் எந்தவிதத்திலும் சமரசப் போக்கினை கடைப்பிடிக்க முடியாது. ஆனால், அதே சமயத்தில், பாதுகாப்பு முக்கியம். எனவே, அதுவும் nursery பள்ளிகளுக்குத் தேவையான விளையாடுகளமும், திறந்தவெளியும் இருப்பதை உறுதி செய்த பிறகே, அதற்கான அனுமதியை வழங்குவதை அரசு உறுதிப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பள்ளிக்கூடங்கள் என்பது ஏதோ மாணவர்களுக்குப் பாடம் பயிற்றுவிக்கின்ற கூடமாக அல்லாது, பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குகின்ற பயிற்சிக் களமாகவும் இருக்கின்ற காரணத்தினாலே, முன்பெல்லாம் moral instruction வகுப்புகள் இருந்தன. ஆனால், இப்போது அதை எடுத்துவிட்டார்கள். ஆகவே, பள்ளியினுடைய curriculum–ல் moral instruction–க்காக வழிவகை செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

'சர்வ சிக்ஷா அபியான்' மூலமாக, 2010–க்குள்ளாக, 14 வயது நிரம்பியிருக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும், எட்டாவது வரை இடைவிடாத கல்வி கொடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால்தான், இந்த 'சர்வ சிக்ஷா அபியான்' திட்டமானது வாஜ்பாய் அவர்களுடைய அரசினால் கொண்டு வரப்பட்டது. ஆனால், புதிய மத்திய அரசாங்கம் இதற்காக education cess என்று அனைத்து மத்திய வரிகளிலும் 2 சதவிகிதம் புதிய வரியினை விதித்திருக்கிறார்கள். ஆனால், அதிலே பொதிந்துபோய் இருக்கின்ற ஒரு விஷயம் என்னவென்று சொன்னால், சென்ற ஆண்டு கல்விக்காக ஒதுக்கப்பட்டதைவிட, இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டிலே ஆயிரம் கோடி ரூபாய்தான் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய நிதியமைச்சரின் கூற்றுப்படியே, நான்காயிரம் கோடி ரூபாய் இந்த Central cess–ன் மூலமாக வருமென்று சொன்னால், மூன்றாயிரம் கோடி ரூபாய் அதிலே இருந்து மற்ற செயல்களுக்காக மாற்றப்படுகிறது. ஆனால், தமிழகத்திலே இந்த 'சர்வ சிக்ஷா அபியானு'க்கான நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒன்றிலிருந்து ஐந்தாவது வரை 96 சதவிகிதம் குழந்தைகள் இப்போது மாணவர் சேர்க்கை இருக்கிறது; அதை நான் வரவேற்கிறேன்.



2001–லிருந்து 2003 வரை, 10,178 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மேலும், 12 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பெற்றோர்–ஆசிரியர் கழகங்கள் மூலமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள், ஐந்திலிருந்து பத்தாண்டுகளாக மிகக் குறைந்த தொகுப்பூதியத்திலே பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போது, ஏற்கெனவே பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் மூலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு விசேஷமான தேர்வாணையத்தின் மூலமாக அவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும். ஏனென்றால், அவர்கள் இந்தப் பணியிலே தங்களைப் பல ஆண்டுகளாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் நான் இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிராமப்புறப் பொது மக்கள், பொது அறிவு மற்றும் கல்வி அறிவு பெறுவதற்காக, G.O.No. 66–ன்மூலம், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நாள் 30–1–1996–ன்படி, 625 ஊர்ப்புற நூலகங்களைத் திறக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை வெளியிட்டார்கள். ஊர்ப்புற நூலகங்களிலே நூலகர்களாக, 1,500 ரூபாய் தொகுப்பூதியத்திலே முழு நேரப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். நிர்வாகத் தீர்ப்பாயத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும், அவர்கள் பொது நூலகங்கள் துறையின்கீழ் இயங்கும் கிளை நூலகங்களிலே உள்ள மூன்றாம் நிலை நூலகர் பணியில் நியமனம் செய்ய ஏற்கெனவே தீர்ப்பு பெற்றிருக்கிறார்கள். எனவே, அவர்களையும் முழு நேரப் பணியாளர்களாக அரசாங்கம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 2001–லிருந்து 2003–க்குள்ளாக 867 கிராமப்புற நூலகங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தக் கிராமப்புற நூலகங்களிலே, தினந்தோறும் 40 ரூபாயிலே, Library Science படிக்காதவர்கள்கூட வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதற்குங்கூட Library Science படித்தவர்களை, தகுதி படைத்தவர்களை நூலகர்களாகச் சேர்க்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றிலிருந்து எட்டாவது வகுப்பு வரை மாணவர் சேர்க்கை விழுக்காடு 95–க்கும் அதிகமாக இருக்கிறது. ஆனால், எட்டிலிருந்து பத்து வகுப்புகள் படிப்பவர்களுடைய விழுக்காடு மிக வேகமாகச் சரிந்து, அது 70.6 சதவிகிதமாகவும், மேல்நிலைப் பள்ளிகளில்

படிப்பவர்களுடைய விழுக்காடு 39.63 சதவிகிதமாகவும், மிக steep fall அதிலே இருக்கிறது. ஆகவே 8-வதுக்குப் பிறகும் மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடருவதற்கு—அரசாங்கம் எப்படி சர்வ சிக்ஷா அபியானிலே 1-லிருந்து 8-வது வரை முயற்சி மேற்கொண்டு இருக்கிறதோ—அடுத்த கட்டமாக, 8-வதுக்குப் பிறகு படிக்கின்ற மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–05*

மேலும், தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்–ஆசிரியர் விகிதம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், தனியார் துறையிலே மாணவர்–ஆசிரியர் விகிதம் அதிகமாக இருக்கிறது. இதுதான் கல்வியை வியாபாரமாக ஆக்குகின்ற ஒரு யுக்தியோ? ஏனென்றால், அரசுப் பள்ளிகளிலே குறைவாக இருக்கிறது, 39-க்கு அதிகமாகச் செல்லவில்லை. ஆனால், தனியார் பள்ளியிலே, தொடக்கப் பள்ளியிலே மாணவர்–ஆசிரியர் விகிதம் ஒரு ஆசிரியருக்கு 54 மாணவர்கள் என்று இருக்கிறது. அதுவே உயர்நிலைப் பள்ளியிலே மிக அதிகமாக, சராசரி ஒரு ஆசிரியருக்கு 67 மாணவர்கள் என்று இருக்கிறது. எனவே, 1 : 40-ஐத் தனியார் துறையிலும் நாம் implement செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 6,7,8 வகுப்புகளில், 14–6–2002 ஆம் தேதியிட்ட அரசாணையின் மூலம் இடைநிலை ஆசிரியர் பணி இடங்களுக்குப் பதிலாக இடைநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால், இன்று வரை இடைநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, இதற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

உயர் கல்வியைப் பொறுத்தவரை, சுயநிதிக் கல்லூரிகளிலே சுப்பிரமணியம் Committee-யின் ஒற்றைச் சாளர முறை பற்றிய பரிந்துரையை, அதன்படி மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று இருந்ததை உயர் நீதிமன்றமானது இரத்து செய்தது. இரத்து செய்து அவர்கள் சில நிபந்தனைகளையும் அதிலே விதித்து இருக்கிறார்கள். சிறுபான்மை அல்லாத கல்லூரிகள் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்றும், சிறுபான்மைக் கல்லூரிகள் 70 சதவிகிதம்



சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்க்க வேண்டும் என்றும், மீதம் உள்ள 30 சதவிகித இடத்தை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றமானது தீர்ப்பு அளித்து இருக்கிறது. இந்த நிபந்தனைகளை எதிர்த்து, சுயநிதிக் கல்லூரிகள் சார்பிலே வழக்கு போடப்பட்டு இருக்கிறது. அதேபோல, உயர் நீதிமன்றத்திலே—சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் சங்கம் நுழைவுத் தேர்வு நடத்தி உள்ளது. அதற்கான தகுதிப் பட்டியலை வெளியிடக் கூடாது என அரசும் நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறது. இதன் காரணமாக இன்றையதினம் நாம் ஜூலை மாதம் 31 ஆம் தேதியிலே இருக்கின்ற காலகட்டத்திலும்கூட பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளின் Academic year இன்னும் துவங்கப்படாமல் இருக்கிறது. இதற்கு மேலும் 2 வழக்குகள் வேறு இருக்கின்றன. அவற்றின் தீர்ப்பு எப்போது வரும் என்று தெரியவில்லை. எனவே, மாணவர்களும், பெற்றோர்களும் மிகப் பெரும் கவலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசாங்கமானது, சுயநிதிக் கல்லூரிகளினுடைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், நீதிமன்றம் ஆக, மூவருமாகச் சேர்ந்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை உடனடியாகக் காண வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலே தற்போது புதிதாக அறிவிக்கப்பட்ட....

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிக்கின்ற நிலை, அண்ணா பல்கலைக்கழகம் திட்டமிட்டபடி அந்தப் பொதுத் தேர்வை நடத்தி, ஜூலை 5 ஆம் தேதி கவுன்சிலிங் நடத்துவதற்குத் திட்டமிட்டு இருந்தது. ஆனால், மாணவர்களும், தனியார் பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்தவர்களும் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்து, அதில் தடை ஆணை பெற்று, அந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் Bench-ல் இன்றைக்குத் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றது. இதிலே அரசாங்கத்திற்குப் பங்கு எதுவும் இல்லை. உச்ச நீதிமன்றம் Islamic Academic Educational Institution and others Vs. Karnataka என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பின்படி அமைக்கப்பட்ட Subramaniam Committee, Justice Thiru Raman Committee-யினுடைய தீர்ப்பை எதிர்த்துத்தான் இந்த வழக்கு போடப்பட்டு

இருக்கின்றதே தவிர, அரசாங்கத்தினுடைய நிலையை எதிர்த்து வழக்குத் தொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குக் காரணம் அரசுதான் என்று நான் சொல்லவில்லை என்றாலும், மாணவர்கள், பெற்றோர்களினுடைய மிகவும் கவலையான ஒரு சூழ்நிலையைப் போக்குகின்ற வண்ணத்தில் அரசாங்கமே நீதிமன்றத்தை..

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் காரணம் இல்லை என்பது இங்கு இருக்கிறவர்களுக்குத் தெரியும். ஆனால், அரசாங்கம்தான் இதில் ஏதோ குளறுபடி செய்கின்றது என்ற ஒரு எண்ணத்தை இங்கு இருக்கின்ற எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சில தொலைக்காட்சியைச் சேர்ந்தவர்களும் ஏதோ அரசாங்கம்தான் திட்டமிட்டுக் கொண்டு இந்த மாணவர்களுக்குச் செய்வதாக ஒரு பொய்யான தோற்றத்தை, தவறான தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் சேர்க்கையிலே தமிழக அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகவும் ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். நீதிமன்றத்திலே இந்த வழக்கை விரைவாகத் தீர்ப்பதற்கு தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கின்றது. இந்த வழக்கினுடைய தீர்ப்பு வந்தவுடனே உடனடியாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுத் தயார் நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே ரொம்ப சுலபமாகக் கிடைப்பது Court-லே stay-தான். யார் வேண்டுமானாலும் போகலாம், யார் வேண்டுமானாலும் வாங்கலாம். என்னயிருந்தாலும் அரசாங்கம் pro-active-ஆக இதிலே முயற்சி எடுத்து deadlock-ஐ உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–10*

சென்னைப் பல்கலைக்கழகத்திலே தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய fees structure தனியார் கல்வி நிறுவனங்களையே விஞ்சிவிடும் அளவிற்குச் சென்றிருக்கிறது. சரித்திரம், தமிழ் போன்ற பாடத் திட்டத்திற்கு முதுகலைப் (M.A.) பட்டப் படிப்பிற்கு ரூ.1,300 ஆக இருந்த



கட்டணம் இப்போது ரூ.4,190–ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல, Ph.D. மாணவர்களுடைய கட்டணமானது ரூ.1,350 ஆக இருந்தது, ரூ.6,120 ஆகவும், M.Phil. படிக்கின்ற மாணவர்களுடைய கட்டணமானது ரூ.2,245–ஆக இருந்தது, ரூ.4,795 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் U.G.C. யினுடைய grants-ஐப் பெற்று நடத்தப்படுகிற, பல்வேறு நிதி நிறுவனங்களுடைய நிதி ஆதாரத்தைப் பெற்றிருக்கிற ஓர் அமைப்பாகும். மேலும் ஏழையெளிய மாணவர்கள், சுயநிதிக் கல்லூரிகளிலே படிக்க வசதி இல்லாதவர்கள் அரசுக் கல்லூரிகளைத்தான் நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. அதிலும்கூட, திறமை இருக்கிறது, அவர்கள் நல்ல முறையிலே படிக்க முடியும்; ஆனால், பணம் இல்லை என்று சொன்னால் படிப்பே அவர்களுக்குக் கானல் நீராகிவிடும். எனவே, உயர்த்தியிருக்கிற இந்த exorbitant fees structure–ஐக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கு...

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொறியியல் கல்லூரிகளிலே சேர்கின்ற மாணவர்களுடைய கட்டணங்களை நிர்ணயிக்கிற அதிகாரம், இன்றைக்கு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி அமைக்கப்பட்ட இராமன் Committee தான் அந்த மாணவர்களுடைய, தனியார் பொறியியல் கல்லூரிகளிலே சேர்கிற மாணவர்களுக்கு என்ன கட்டணங்களை விதிக்க வேண்டும் என்பதை அந்தந்தப் பொறியியல் கல்லூரிகள் இராமன் Committee–ன் முன்பு கொடுக்கின்றதை வைத்து, அந்தக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால், தனியார் பொறியியல் கல்லூரிகள் பல, அந்த இராமன் Committee–ன் முன் சென்று அறிவிக்காததால், நீதிபதி இராமன் Committee ஒரு பொறியியல் கல்லூரிக்கு என்ன செலவாகும், ஒரு மாணவனுக்கு என்ன செலவாகும் என்று, அரசாங்கம் அமைத்த அந்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, திரு. இராமன் Committee, அவர்களாகவே ஒரு பரிந்துரையை அளித்திருக்கிறார்கள். ஒரு மாணவனுக்கு ரூ.32,500 என்று கட்டணம் நிர்ணயம் செய்து அறிவித்திருக்கிறார்களே தவிர, தனியார் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்குக் கட்டணம் நிர்ணயிக்கிற அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை என்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. ஆகவே, இந்தத் தனியார் கல்லூரிகளிலே சேர்கிற மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த கட்டணத்தை தமிழக அரசாங்கம் நிர்ணயிக்கவில்லை. உச்ச நீதிமன்றக் கட்டளையின்படி அமைக்கப்பட்ட

நீதிபதி இராமன் அவர்கள் Committee-யால்தான் இந்தக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தனியார் பொறியியல் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுடைய கட்டணம் ரூ.34,000 ஆக இருந்தது. ஆனால் இன்றைக்கு நீதிபதி இராமன் அவர்கள் Committee பரிந்துரைத்திருக்கும் கட்டணம் ரூ.32,500 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தனியார் பொறியியல் கல்லூரிகளினுடைய fees structure-ஐப் பற்றிப் பேசவில்லை. சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய fees structure-ஐப் பற்றித்தான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். மேலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 300 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, உடனடியாக உயர் கல்வியின் தரத்தினையும், மாணவர்களுக்கான வசதிகளையும் மேம்படுத்தும்வண்ணம் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்றும், ஆராய்ச்சி மாணவர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1962 ஆம் ஆண்டு முதல் தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த 445 Marker-களில் 227 பேர் ஏற்கெனவே பணி நிரந்தரம் வழங்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், நான் சென்ற ஆண்டு கூட்டத் தொடரிலேகூட மீதமிருக்கிற 218 Marker-களும் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டிருந்தேன். இப்போதும் அரசாங்கத்தின் முன்பாக இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்து, அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில் தேவகோட்டை கல்வி மாவட்டம், கல்லல் ஒன்றியம், செம்பனூரில் உள்ள மெகா. அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்காக 13-2-2003-லேயே நன்கொடையாளர்களும், பெற்றோர்களுமாகச் சேர்ந்து 2 இலட்சம் ரூபாயை சிவகங்கை கருவூலத்திலே செலுத்தியிருக்கிறார்கள். ஆகவே, செம்பனூர் அரசுப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-15

அதேபோல, சாக்கோட்டை ஒன்றியம், தீர்த்தலைக்காடு, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்காகவும் நிதியானது ஏற்கெனவே செலுத்தப்பட்டு இருக்கிறது. அதற்கும் உடனடியாக அரசு அனுமதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உடற்கல்வி பல்கலைக்கழகத்தையும் அனைத்துவிதமான infrastructure-ம் இருக்கின்ற காரைக்குடி நகரிலே அமைக்க வேண்டுமென மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

2000-2001-ல் தமிழகம் முழுவதும் நியமிக்கப்பட்டுள்ள 2,396 கம்ப்யூட்டர் ஆசிரியர்கள் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றனர். அந்தத் தனியார் நிறுவனத்தினுடைய ஒப்பந்தமானது, ஆகஸ்ட் 15-ல் அதனுடைய காலம் நிறைவுறுகின்ற காரணத்தால், ஏற்கெனவே இவர்கள் பணியாற்றி இருக்கின்ற காரணத்தால், இவர்களை அரசுப் பணியில் நிரந்தரம் செய்து தக்க ஊதியம் வழங்க வேண்டுகிறேன்.

1996-1998-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, ஓய்வுபெற்ற 15,000 அரசு ஊழியர்களுக்கு 40 சதவிகிதம் ஓய்வு பணிக்காலக் கொடைகள் கொடுக்கப்பட்டன. மீதி 60 சதவிகித ஓய்வூதியம், ஒப்படைப்பு ஓய்வூதியம் ஆகியவை தரப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்போது 2003-2004-ல் வட்டியுடன் தருவதாக அறிவித்திருந்தது. சென்ற ஆண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், இந்த ஒப்படைப்பு ஓய்வூதிய நிலுவை 3 தவணைகளாகத் தரப்படும் என்றும், சிறு சேமிப்புப் பத்திரங்கள் மூலமாகத் தருவதாகவும் அறிவித்து இருந்தார். ஆனால், இன்னமும் தரப்படவில்லை. ஓய்வுபெற்றவர்களுடைய நலன் கருதி, அவர்களுடைய பணிக் கொடை, ஓய்வூதியம், ஒப்படைப்பு ஓய்வூதியம் ஆகியவற்றினை ஒரே தவணையாகத் தரவேண்டும் என நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பள்ளிகளில் Arts and Crafts-க்கான ஆசிரியர்களை நியமிப்பதில், விவசாயம் மற்றும் நெசவுக்கான ஆசிரியர்கள் 1998-ல் இருந்து நியமிக்கப்படாமல், அவர்களுடைய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அதையும் நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரை, உள்ளாட்சித் துறையிலே பெண்களுக்கான இட ஒதுக்கீடு காரணமாக கிராமப்புறங்களில் ஒரு மௌனப் புரட்சியே நடந்து கொண்டிருக்கிறது. 'அடுப்பு ஊதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு' என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் மாறி, பாரதி சொன்னதைப் போல, இப்போது சட்டங்கள் இயற்றவும், பட்டங்கள் பெறவும் பெண்கள் முன் வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்திலே அரசியலிலே அதிகமான பின்னணியோ, பொது வாழ்விலே பின்னணியோ இல்லாமல் வந்திருக்கின்ற இவர்களுடைய திறமையை வளர்ப்பதற்கு, உள்ளாட்சி பெண் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கிராம சபைக் கூட்டங்களிலே மக்கள் கலந்துகொள்வதற்கு ஆர்வம் அவ்வளவாகக் காட்டுவதில்லை. எனவே, பல்வேறு சுய உதவிக் குழுக்கள் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக நாம் ஒரு பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதன்மூலமாக கிராம சபைக் கூட்டங்களிலே மக்களுடைய பங்களிப்பினை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சிகளுக்கான மின் கட்டணங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. ஏனென்றால், பல்வேறு ஊராட்சிகளிலே வருகின்ற வருமானம் மின் கட்டணத்தைக் கட்டுவதற்குக்கூடப் போதுமானதாக இல்லை. ஆகவே, அவர்கள் மின் கட்டணத்தைச் செலுத்துகின்ற காரணத்தினால் மற்ற அத்தியாவசியக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். எனவே, மின் கட்டணத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வீட்டு வரி, சதுர அடிக் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளது. இது சாமானிய மக்களைப் பாதிக்கின்ற காரணத்தாலே முந்தைய வீட்டு வரி கணக்கீடு முறையையே பின்பற்ற வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள ஏரிகளில் கருவேல மரங்கள் ஏலம் விடப்பட்டு 5 ஆண்டுகள் ஆன பிறகும், ஊராட்சிகளுக்கான பங்குத் தொகை இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பங்குத் தொகையை ஊராட்சிகளுக்கு உடனடியாக அரசு தருமானால் ஊராட்சியிலே செய்யப்பட வேண்டிய பணிகளை அவர்கள் தொடர முடியும், அதற்கு வசதியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பல்வேறு ஊராட்சிகளில் பஞ்சமி நிலங்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வசதி படைத்தோர் வசம் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் கடும்



நடவடிக்கை எடுத்து. அந்த நிலங்களை மீண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–20*

மாநில நிதி ஆணையத்தின் ஊராட்சிகளுக்கான நிதி காலதாமதமின்றி உடனடியாக வழங்கப்பட வேண்டும். 8 சதவிகிதம் நிதிப் பங்கீடு குறைவாக இருக்கின்ற காரணத்தால், இதை 20 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஜனநாயக நிர்வாக அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். எப்படி மத்திய அரசின் நிதி அதிகாரங்கள் மாநிலத்திற்கு அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டுமோ, அதுபோல மாநில அரசும்கூட அதிகாரங்களைப் பஞ்சாயத்துகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்ட ஷரத்து 243(g) ஊராட்சிகளின் பட்டியல் 11–ல் குறிப்பிடப்பட்டுள்ள 29 துறைகளில், சமூக நீதி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அதிகாரங்களை அந்தந்த மாநில அரசுகள் வழங்கலாம் என்று கூறுகிறது. எனவே, 29 துறைகளையும் மேலாண்மை செய்வதற்குத் தேவையான அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்திக்கடவு–அவினாசி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். ஏனென்றால், 2002–2003 ஆம் ஆண்டு கொள்கைக் குறிப்பில் அறிவித்த பிறகு அதில் எந்தவிதமான பணியும் தொடங்கவில்லை. எனவே, அதைத் துவங்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகத்திலே குடிநீர் மேம்பாட்டிற்கு நாம் கவனம் கொடுத்து செயலாற்ற வேண்டிய அவசியத்தைத் தாங்கள் அறிவீர்கள். குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களிலே, அதிலும் குறிப்பாக, பொன்னமராவதி, திருப்பத்தூர், கல்லல், தேவகோட்டை போன்ற பகுதிகளிலே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அதிலும் கல்லல் பகுதியிலே நிலத்தடி நீர் உவர் நீராக இருக்கிறது. அங்கு ஊற்று இருக்கிறது; தண்ணீர் வருகிறது. ஆனால்

உவர் நீராக இருக்கின்ற காரணத்தால், திருச்சி—இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை, 2001–2002 கொள்கை விளக்கக் குறிப்பிலே, அது துவங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைத் துவங்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, எங்கு குடிநீர்ப் பிரச்சினை இருந்தாலும், காரைக்குடியைப் பொறுத்தவரை, எங்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை என்பதை நாங்கள் கேட்டறியாதவர்கள். ஏனென்றால், சம்பை ஊற்றுப் பகுதி, அது ஒரு காலத்திலே நாங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற காலத்திலே அதுவாகத் தண்ணீர் கொட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். அந்த அளவிற்கு வளமான குடிநீர்ப் பகுதி. இப்போது அங்கு பல்வேறுவிதமான Mechanic shops மற்றும் வீடுகள் மூலமாக அந்த இடம் மாசுபட்டுப் போயிருக்கிறது. பக்கத்திலே இருக்கின்ற தொழில் நிறுவனத்திலே அதிகமாகத் தண்ணீர் எடுக்கப்படுவதாலும் காரைக்குடியினுடைய குடிநீர் ஆதாரத்திற்கு அச்சுறுத்தல் இருக்கிறது. எனவே, தமிழக அரசு உடனடியாக இதிலே தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற வளர்ச்சிக்கு முக்கியமானது வீட்டு வசதி. பல்வேறு நகரங்களிலே இருக்கின்ற உண்மையான நிலை என்னவென்று சொன்னால், அங்கீகாரமற்ற குடியிருப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், அந்த அங்கீகாரமற்ற குடியிருப்புப் பகுதிகளிலே சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பல்வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கீகாரமானது அளிக்கப்படவில்லை. ஆகவே, இப்பொழுது இருக்கின்ற அங்கீகாரம் இல்லாத குடியிருப்புகளுக்கு உடனடியாக அங்கீகாரம் அளிப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அதே சமயத்திலே முறையான வளர்ச்சி தேவை என்கின்ற காரணத்தினாலே, இனிமேல் அங்கீகாரமற்ற முறையிலே புதிய குடியிருப்புகள் வருவதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. எனவே, ஏற்கெனவே இருக்கின்ற அங்கீகாரமற்ற குடியிருப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வீட்டு வசதியைப் பொறுத்தவரை முக்கியமானதொரு பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு



வர விரும்புகிறேன். இது, இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற, முன்மொழியப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளிலே வரவில்லையென்றாலும், என்னுடைய கருத்தைக் கூறுவதற்கு அனுமதிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள்—இது ஒரு white elephant ஆக மாறிக் கொண்டிருக்கிறது. பல நிர்வாக அலுவலர்கள்—Special Officers பல ஆண்டுகளாக அங்கு இருந்துகொண்டு, சட்ட விரோதமாக பினாமிகளை வைத்துக்கொண்டு, அவர்கள் அங்கு land grabbing dhadhas போல செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, காரைக்குடி சூடாமணி நகர் கூட்டுறவுச் சங்கத்திலே 21 பேர்களுக்கு ஏற்கெனவே இடம் ஒதுக்கப்பட்டு document register ஆனதை இரத்து செய்து, அதையே அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு, அதுவும் ஏற்கெனவே ஆக்கிரமித்திருப்பவர்களுக்கே நாங்கள் கொடுக்கிறோம் எனத் தீர்மானமே நிறைவேற்றி, கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–25

கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு தீர்மானம் போடுகிறார்கள், ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர்களுக்கே அதை நாங்கள் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லி. அது எப்படியென்று சொன்னால், திருடன் திருடப் போகிறானே என்று அனைத்தையும் அவன் கையிலே ஒப்படைப்பதைப்போல செயலாற்றியிருக்கிறார்கள். அதேபோல, காரைக்குடி, கழனிவாசல், N.G.O. காலனியிலும் 93 உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அவர்களுக்குப் பதிவு செய்த document–ஐ இரத்து செய்து மறு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்த இடங்களிலே, இரண்டு கூட்டுறவுச் சங்கங்களிலும், பொது இடங்களை, அதிலும் 20, 25 கோடி ரூபாய்க்கு, அவர்கள் அதை ஆக்கிரமித்து பலருக்கும் அந்த இடத்தைப் பதிவு செய்து கொடுத்திருக்கிறார்கள். எனவே, இது தொடர்பாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச். ராஜா:** ஐந்து மணித் துளிகளில் பேச்சை முடித்துக் கொள்கிறேன். சென்னையிலே, சைதாப்பேட்டை தொகுதியிலே இருக்கின்ற மஸ்தான் தோட்டக் குடியிருப்பில் 18–10–2002 அன்று, குடியிருப்பவர்களுக்கே வீட்டைச் சொந்தமாக்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த பிறகும்கூட, இன்னும் அவர்களுக்கு

ஒப்படைக்கப்படாமல் இருக்கிறது. அதற்குச் சொல்லப்படுகின்ற காரணம் என்னவென்று சொன்னால், original allottees இல்லையென்று சொல்கிறார்கள். 47 ஆண்டுகளுக்குப் பிறகு original allottees இருப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே அவர்களுடைய வாரிசுதாரர்களை நாம் verify செய்து, அவர்களுக்கே, அந்த 50 வீடுகளுடைய வாரிசுதாரர்களுக்கே ஒப்படைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வாரியக் குடியிருப்புகள் வாடகையை சென்னையிலே சதுர அடிக்கு 5 ரூபாயாகவும், சென்னைக்கு வெளியே சதுர அடிக்கு 3 ரூபாயாகவும் உயர்த்தியிருக்கிறது. ஏற்கெனவே இருந்த கட்டடம் அது. அதிலே குடியிருப்பவர்கள் ஓய்வூதியம் பெறுபவர்கள். நடுத்தர வர்க்கம் அல்லது நடுத்தர வர்க்கத்திற்குக்கீழ் இருப்பவர்கள். எனவே, அரசாங்கம் அவர்களுடைய சிரமத்தைக் கணக்கிலே கொண்டு, கருணை அடிப்படையில் இதற்கான வாடகையைக் குறைத்து இதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். ஏற்கெனவே இதற்காக ஓர் ஆணையர் நீதிமன்றத்தின் மூலமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். எனவே, அந்த ஆணையத்தின் மூலமாக அவர்களுடைய சிரமத்தைப் போக்குவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவைப் பொறுத்தவரை, மத்திய, மாவட்டத் தொடக்க வேளாண்மை வங்கிகளிலுள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி காலியிடங்களைப் பூர்த்தி செய்வதில் கூட்டுறவுப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நேரடிப் பணி நியமனம் செய்ய வேண்டும். ஏனென்றால், கடித எண் 17535/DC-1/99-3, நிலை எண் 77-ல், 1-5-2000 அன்று ஆணையின்படி மத்திய மாவட்டத் தொடக்க வேளாண்மை வங்கிகளில் பணியாளர்கள் நியமனம் செய்யும்பொழுது வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக 85 சதவிகிதமும், கூட்டுறவுப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்தும் நியமிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 15 சதவிகிதம் இடத்தை, தொடக்க வேளாண்மை வங்கிகளின் பணியாளர்களை சாதிய சுழற்சி முறையில் 1:1 என்ற விகிதத்தில் பணி நியமனம் செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், கடந்த காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் அறிவுரை இல்லாமல் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு 3 சதவிகிதம் அபராத



வட்டியும், 2.5 சதவிகிதம் தவறுதல் வட்டியும் வசூலிக்கப்படுகிறது. கீரனூரில் ஒருவர் 1997-ல் 2,94,600 ரூபாய் டிராக்டர் கடன் வாங்கியிருக்கிறார். அவர் 2003 வரை 3,82,258 ரூபாய் கட்டியும் இருக்கிறார். ஆனால், இருந்தும்கூட, அவர் மேலும் 2,99,739 ரூபாய் கட்ட வேண்டுமென அவருக்குத் தாக்கீது வந்திருக்கிறது. எனவே, இம்மாதிரியாக இப்பொழுது மத்திய அரசே வங்கிகளிலே கடனுடைய அளவை 9% ஆகக் குறைத்துக் கொண்டிருக்கும்பொழுது, வட்டி விகிதத்தையும் குறைத்து—ஏனென்றால், அதற்கு 17.5% வட்டி வசூலிக்கப்படுகிறது. எனவே, வட்டி விகிதத்தைக் குறைத்து—விவசாயிகளுடைய பணி முன்னேறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பித்தளைப் பாத்திரத் தொழில் நசிந்து வருகிறது. ஏனென்றால், இப்போது எவர்சில்வர் மற்றும் alloy ஆகியவை வந்த பிறகு பித்தளைப் பாத்திரத் தொழில் நசிந்து வருகிறது. எனவே brass மற்றும் copper sheet-க்கு வரி 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல வீட்டு உபயோகப் பாத்திரங்களுக்கு 4% வரி இருக்கிறது. ஆனால், குத்து விளக்கு மற்றும் தூபக்கால் மற்றும் சூடத்தட்டு போன்றவற்றுக்கெல்லாம், brassware என்று சொல்லி, அதற்கு 12% வரி விதிக்கப்படுகிறது. அதையும் 4% ஆகக் குறைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தேன்கனிக்கோட்டை பஸ் ஸ்டாண்டிற்கு, TUFIDCO திட்டத்தின்கீழ் ஏற்கெனவே அங்கிருந்து கருத்துரு இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கும் மாநில அரசு ஒப்புதல் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கைகளில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துகளை—காவல் துறையைப் பற்றிய ஒரு கோரிக்கை இருக்கிறது. அதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு தெரிவிக்க விரும்புகிறேன். காரைக்குடி, கழனிவாசல் காவலர் குடியிருப்பில் வசிக்கும் 37 காவலர்கள் 13 ஆண்டுகளுக்கு முன்பே வீடுகள் ஒதுக்கீடு பெற்றனர். ஆனால், வீடு கட்டித் தர, வீட்டுக்காக இடத்திற்கு 19,426 ரூபாய் அன்றே செலுத்தப்பட்டது. 1991-லே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக M.I.G.-க்கு 1,26,100 ரூபாயும், L.I.G. வீட்டுக்கு 74,700 ரூபாயும் நிர்ணயித்து, 1993-லேயே காவலர்கள் அரசிடம் கடன் பெற்றுப் பணம் செலுத்தியுள்ளனர். ஆனால், 30-1-2004 உத்தரவுப்படி, செயற்பொறி[illegible] விலை

18624
சென்னை-600 009
நூலகம்

62,700 ரூபாய் என்றும், 1994–லிருந்து 2004 வரை 15 சதவிகிதம் வட்டி வசூல் செய்யவும் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1993–ல் பணம் செலுத்தியபோது எந்த நிலுவை பற்றியும் கூறப்படவில்லை. எனவே, இதில் பலரும் பணி ஓய்வுபெற்றிருக்கிற காரணத்தால் இவர்களுக்கு உடனடியாக வீடு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, கல்லூரியிலே பல்கலைக்கழகங்களால் வசூலிக்கப்படுகின்ற மாணவர் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். தமிழகத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 1993–லிருந்து அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் கல்லூரிக் கட்டணங்கள் இன்று வரை–2004 வரை கல்லூரிக் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளதுபோல, Ph.D. படிப்புக்கும் கட்டணம் உயர்த்தப்படவில்லை. இன்று வரை அரசும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் உயர்த்தப்படவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, கல்லூரிக் கட்டணங்கள் போன்ற தேர்வுக் கட்டணங்கள் சில பல்கலைக்கழகங்களால் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கூறி, இந்த அரசு குறைப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பள்ளிகளிலே Moral Science பாடம் எடுக்கப்படவில்லை என்று கூறினார்கள். ஆனால், வாரத்திற்கு இரண்டு வகுப்புகள் Moral Science எடுக்கப்பட வேண்டும் என்று இன்றைக்கும் அந்த ஆணை இருக்கிறது. பள்ளியிலே Moral Science எடுக்கப்படுகிறது என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மற்றொரு கருத்தை இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஏதோ தமிழகத்திலே இந்த ஆட்சியிலே மாணவர்களுடைய கல்விக் கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டுவிட்டது என்று எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால், அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1991–லேயிருந்து 1996 வரை பள்ளியிலே இருக்கிற பள்ளிக் கட்டணம், ஆறிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களின் கட்டணம் 26 ரூபாய் 50 பைசா என்று இருந்தது. ஒன்பதாவதிலிருந்து பத்தாவது படிக்கின்ற மாணவர்களின் பள்ளிக் கட்டணம் 34 ரூபாய் 50 பைசாவாக இருந்தது. பதினொன்றாவதிலிருந்து பன்னிரண்டாவது படிக்கும் மாணவர்களுடைய பள்ளிக் கட்டணம் 85 ரூபாயாக இருந்தது. இன்றைக்குக் கல்விக் கட்டணத்தை உயர்த்தி விட்டதாகக் கூறிக் கொண்டிருக்கிறவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1996–லே ஆட்சிக்கு வந்த பிறகு ஆறாவது படிக்கின்ற மாணவர்களின்—பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின்—கட்டணத்தை ஆறு ரூபாயாக உயர்த்தி, 24 ரூபாய், 26 ரூபாய் என்று இருந்ததை, 32 ரூபாய் 50 காசாக உயர்த்தினார்கள். ஒன்பதாவதிலிருந்து பத்தாவது படிக்கின்ற மாணவர்களின் கல்விக் கட்டணத்தை 34 ரூபாயை 13 ரூபாய் உயர்த்தி, 47 ரூபாய் 50 பைசாவாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. பதினொன்றாவதிலிருந்து பன்னிரண்டாவது வரை படிக்கின்ற மாணவர்களுடைய கட்டணத்தை 13 ரூபாய் கூடுதலாக உயர்த்தி 103 ரூபாய் 50 பைசாவாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சூரியகலா.

***திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு வேதங்களைச் சுருக்கினால், சத்தியப்படி வாழ், தருமப்படி நில் என்று வரும். உண்மை வழி நின்று, தருமப்படி ஆட்சி செய்யும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களுக்கு என் வணக்கத்தைக் கூறி, 2004–2005 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பு தந்த அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' 'கூட்டுறவே நாட்டுயர்வு'—இச்சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. ஏழு வள்ளல்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். எட்டாவது வள்ளலாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மக்களுக்கு வேண்டியதை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையின் மாபெரும் வளர்ச்சிக்கு அம்மா அவர்களின்

பொற்கால ஆட்சியே காரணம். நலிந்த பிரிவினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் பயன்படும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடன் உதவி வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுத்தவர் நம் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய வாழ்வில் இன்றியமையாதது உணவு. தமிழக மக்கள் அனைவருக்கும் ரேஷன் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 வீதம் வழங்கியது நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

18–5–2004–ல் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதன் மூலம் குடும்ப அட்டை பெறாத குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 'H' முத்திரை செயலாக்கம் இரத்து செய்யப்பட்டது. வருமான வரம்பு நீக்கப்பட்டது. அனைத்துத் தரப்பு மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட இந்த முடிவால் நிச்சயமாக அனைவரும் பயன்பெறுவார்கள். இதற்காக அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிர்க்கொல்லி நோய்க்கு வழங்கப்படும் முக்கிய பத்து மருந்துகளுக்கு முழு வரி விலக்கு வழங்கியது இவ்வரசே ஆகும்.

இசைக் கலைஞர்களின் நலனைக் கருதி இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரி விலக்கு வழங்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு.

வனங்கள், இயற்கை அன்னை மனித இனத்துக்கு அளித்த நன்கொடை. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இவ்வரசு அதிக அக்கறை காட்டி வருகிறது. குறிப்பாக, நுண்ணுயிர்கள், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் வசிக்க உயிரினச் சூழலை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு உள்ளது. தமிழகத்தில் உள்ள பயன்படாத தரிசு நிலங்களையும் பயன்படும் வகையில், தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம் ஓர் உன்னதமான திட்டம் ஆகும்.



தமிழ்நாடு பெருமைமிகு சுற்றுலாத் தலமாகப் பெருமை பெற்றதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி என்று ஒதுக்கீடு செய்த நிதியை 2004–2005 ஆம் ஆண்டு ரூபாய் 30.35 கோடியாக உயர்த்தி இத்துறை மேம்பாடு அடைய அம்மா அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருவது பாராட்டுக்குரியது ஆகும். இதை எல்லாம் பார்த்துப் பொறுக்க முடியாத, சட்டசபையில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேச வழிவகை இல்லாத எதிர்க் கட்சியினர் நடு road–ல் போட்டி மன்றம் நடத்துகிறார்கள். அம்மா அவர்களிடம் நேருக்கு நேர் பேசத் துணிவு இல்லாதவர்கள்—அம்மாவைக் கண்டாலே நடுக்கம் திரு. கருணாநிதிக்கு—நடு road–ல் அமர்ந்து ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குகிறார்கள்.

சட்டசபையில் கலந்துகொள்ளத் துப்பு இல்லாத கோபாலபுரத்துக்காரர் சென்னைத் துறைமுக நிகழ்ச்சியில் மட்டுமே பங்கேற்பது, வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல். சட்டசபையில் அம்மாவைப் பார்த்துப் பேச அவருக்கே பயம். அவர் கட்சியினருக்கு எப்படி வரும் தைரியம்?

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து உள்ளார்கள். தேசிய நதி நீர்த் திட்டத்தின்கீழ் ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் திட்டம் சிறப்பானதாகும். ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளைக் கடைப்பிடித்து வருகிறது தமிழக அரசு.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், குடிசை வாழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியின்கீழ் ரூபாய் 649.81 கோடி நிதி ஒதுக்கி 79,302 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும், 56,009 மாணவர்கள் தொழில்நுட்பப் பயிலகத்திலும் அதிக எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்த்து, மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக அம்மாவின் அரசு விளங்குவது பாராட்டுக்குரியதாகும்.

L.K.G. முதல் plus 2 வரை தமிழ் கட்டாயக் கல்வி முறையை அறிமுகம் செய்து தமிழர்களின் மனதில் நீங்கா இடம்பெற்ற அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்வித் துறையில் பெருமை சேர்க்கும் வகையில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலும் மாணவ, மாணவியர் fail ஆகாமல் தேர்ச்சி பெற அறிவிப்புச் செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

வாய் அளவில் தமிழ், தமிழ் என்று வாய் கிழியப் பேசுவதைவிட செயல் வடிவம் தந்து மக்களைக் காக்கின்ற தெய்வமாக, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தாய்க்குலம் போற்றும் திருவிளக்காக அம்மா விளங்குகிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே இதுவரை இல்லாத வகையில் 14,909 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியது அம்மா அவர்களின் அரசு என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்'. வள்ளுவரை மறக்காமல் வேலூர் மாவட்டத்தில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஏற்படுத்திய நமது அம்மாவின் அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

வள்ளுவத்தை வாழவைத்த பெருமையினால் உலகத் தமிழர்களின் ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அம்மா அரசு மேற்கொண்டுள்ள போர்க்கால நடவடிக்கைக்கு எடுத்துக்காட்டாக, புதிய வீராணம் திட்டம் உருவாக்கப்பட்டு, இத்திட்டத்தை 18 மாதத்திற்குள் நிறைவேற்ற, பணிகள் முழுத் தீவிரமாக நடைபெற்று, பணி முடியும் தருணத்தில் உள்ளது. சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நீக்கி, செம்மையான நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக அம்மாவின் அரசு செயல்படுவதை மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையை எடுத்துக்கொண்டால் பொது மக்களுக்கும், காவல் துறைக்கும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் எந்தவிதத் தயக்கமும் இன்றி காவல் நிலையத்தை அணுகலாம். பெண்கள் நலன் பாதுகாக்க அனைத்து மகளிர் காவல் நிலையத்தை ஏற்படுத்தி ஒட்டுமொத்தப் பெண்கள் சமுதாயத்தைக் காத்திட்ட நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, பெண்கள் சமுதாயத்தின்



சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாடு காவல் துறை உலக அளவில் பாராட்டப்படுகிறது என்றால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் சிறந்த நிர்வாகம்தான் காரணம். வேலைநிறுத்தம் என்ற பெயரில் மக்கள் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு உண்டானபோது, காவல் துறை சிறப்பாகச் செயலாற்றி சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்தது பாராட்டுக்குரியது. இதுவரை 118 மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. பெண்களின் குறைகளைத் தீர்க்கும் பொருட்டு நடமாடும் ஆலோசனை மையங்களை உருவாக்கி, மக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது அம்மா அவர்களின் அரசு. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 188.

**திருமதி சி.எம். சூரியகலா:** இந்தியாவிலேயே முதன்முதலாக அனைத்து மகளிர் அதிரடிப் படை அணியை உருவாக்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். ஆண்களுக்கு இணையாக பெண்களும் குதிரைச் சவாரி, படகு ஓட்டுதல், மணலில் ஓடுதல், தொலைதூர ஓட்டப் பயிற்சி, கயிற்றில் சரிந்து இறங்கும் பயிற்சி, வாகனம் ஓட்டுதல், குறி தவறாமல் சுடுதல், யோகாசனம், தியானம், ஆயுதம் இல்லாமல் போராடுதல் போன்ற கலைகளில் முழுமையாகத் தேர்ச்சி பெற்று, ஆண்களுக்கு இணையாக பெண் கமாண்டோக்களை உருவாக்கிய பெண்களின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தியாவிலேயே அரவாணிகள் என்றால் அவர்களைக் கேவலமாகப் பார்ப்பதும், கேலி செய்வதும், அவர்களைப் பல்வேறு வகையில் துன்புறுத்துவதுமாக இருந்து வந்தது. ஆனால், நமது புரட்சித் தலைவி அம்மாவின் பொற்கால ஆட்சியில் அரவாணிகளுக்கும் பொற்காலம் என, அவர்களுக்குத் தனியாகக் குடியிருப்புகள், தனியாக ரேஷன் அட்டை, அரசு அலுவலகங்களில் வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் தொடங்க மானியத்துடன் கடன் உதவி என்று பல்வேறு வகைகளில் அரவாணிகளுக்கு உதவிகள் செய்து, அவர்களும் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து செல்ல வழிவகை செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை முழக்கம் வெற்றிபெறச் செய்த பெருமை அம்மா அவர்களைச் சாரும். தலைமைச் செயலாளர் பொறுப்பில் ஒரு பெண்மணியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச்

செயலாளர் பொறுப்பில் ஒரு பெண்மணியும், தமிழக அரசு தேர்வாணையத் தலைவராக ஒரு பெண்மணியும், வக்ஃபு வாரியத் தலைவராக ஒரு பெண்மணியும் மற்றும் பல்வேறு குழுக்களிலும் பெண்மணிகள் இடம் பெறுவதற்கு வழிவகுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கங்கள் வழங்கி தீயணைப்புத் துறைப் பணியாளர்களைப் பெருமளவு ஊக்குவித்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

என்னுடைய தொகுதியில் ஒரு சில கோரிக்கைகளை முன்வைக்க விழைகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் என்னுடைய கோரிக்கையை எழுதிக் கொடுத்துள்ளேன். அவர் நிச்சயமாகச் செய்து தருவார் என்றும் நம்புகிறேன்.

தேரோடும் வீதி என சாலை வளர்ச்சி, தெருவெல்லாம் புகழ்பாட நாளும் மலர்ச்சியென, அம்மா அவர்கள் குடியாத்தம் நகருக்கு ஒரு புறவழிச் சாலையையும், நீண்ட நாள் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் கொண்டு வருமாறு வேண்டுகிறேன்.

பிற்பகல் 12–45

குடியாத்தம் தொகுதியில் உள்ள பரதராமிக்கு ஒரு கால்நடை மருத்துவமனை நியமித்துத் தருமாறும், அப்படியே தமிழ்நாட்டின் எல்லைப்புறமான வனத் துறையின் ஓய்வு விடுதி முற்றிலும் பழுதடைந்துள்ளதால் அம்மா அவர்கள் அந்த ஓய்வு விடுதியை புதியதாகக் கட்டித் தரவும் வேண்டுகிறேன்.

பரதராமியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மக்களின் நன்மை கருதி 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பின் மறு உருவாய், அண்ணா தி.மு.க. என்ற பேரியக்கத்தின் அச்சாணியாய், அகிலமெல்லாம் வாழ்த்துகின்ற—அம்மா என்ற வார்த்தைக்கு அளவற்ற பொருள் உருவாய்—தாய்க்குலத்தின் பொற்காலம்—தவமான தவம் இருந்து வந்ததொரு நற்காலம்—என வாழ்ந்து வரும் நல் முத்தாய், அரியணை என்னும் முள் கிரீடத்தைத் தமிழக மக்களுக்காகச் சுமக்க



வந்த மாமலையாய், பால் பண்ணை தொடங்கி, பத்தாயிரம் மகளிர் வயிற்றில் பால் வார்த்த மகாலட்சுமியாய், கந்துவட்டிக்காரர்கள் கண் சுழற்றிக் கழுத்தைப் பிடித்திடும் கடன் சுமையிலிருந்து காத்திட்ட அன்னையாய், இக்காலம் ஒரு பொற்காலம், எந்நாளும் தொடரும் ஒரு நற்காலம் எனக் கூறி, வாய்ப்புத் தந்த அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சான்ட்ரா டான் க்ரவல்.

***Tmt. SANDRA DAWN GREWAL:** Hon. Deputy Speaker Sir, I thank you for this opportunity given to me on this occasion.

Our beloved leader, the Honourable Chief Minister of Tamil Nadu, with her unflinching commitment to her people has stood tall in the face of all adversity and has, with her dedication, service, vision and courage put the State of Tamil Nadu on the path to prosperity and development.

Our beloved Leader, on resuming office of Chief Minister after the people of Tamil Nadu reposed their faith in her with an absolute mandate has indeed fulfilled all their aspirations and hopes.

The Honourable Chief Minister's total dedication and vision is reflected in her unique 15 point programme, which is at the very heart of economic growth and social development. The Honourable Chief Minister's 15 point programme is a guiding force for future development and progress in areas of rural development, poverty alleviation, agriculture and infrastructure development, to name a few.

The initiative in taxation reforms, power, labour reforms and infrastructure development will definitely provide the much needed thrust in the investment climate, which will not only result in a surge in the industrial production but also increase employment opportunities, making headway in rapid advancements for healthy and prosperous living.

The 15 point programme is one of its kinds in the entire world in that it caters to the specific requirements of the poor and needy, while at the same time maintaining a healthy capital investment environment.

This people-friendly Government has provided better policing which has directly improved law and order maintenance. Under the leadership of our dynamic Chief Minister, (Thumping of desks) the State of Tamil Nadu is experiencing peace and communal harmony as never before.

The Government's plans in the irrigation and agriculture sector in the face of the acute water shortage and successive monsoon failure have been structured so that the people, particularly in the rural areas will be benefited through the Drought Relief Measures, Food for Work Programmes and the New Veeranam Project.

In the environment and forest sector, the Government's initiatives are worthy of praise. Much emphasis has been laid on conservation of earth's natural resources and this is clear from the proposed budget outlay.

Our Chief Minister's grit and resolve in caring for the rural people can be seen in the Government's war-footing initiatives in rural infrastructure development, rural employment and rural education.

Tamil Nadu has always been a popular tourist destination. In the past, the potential of this sector has not been tapped to its maximum. However, the Government's measures in reduction of taxes and providing better facilities will definitely yield much better results and boost the local economy and provide increased employment opportunities in sectors like hospitality, transportation, restaurants, entertainment centres and a lot more.

*பிற்பகல் 12–50*

The Hon. Chief Minister has a special place in her heart for the youth of our State. She has been understanding to take special care to provide Sports Development plans, free text-books, education programs, improved infrastructure facilities in schools and in imparting quality education.

In the guiding hands of our leader, the youth can be assured of a bright future. Various measures in school education will pave the way for Tamil Nadu emerging as "the best State in education in India" (Thumping of desks).

May I humbly request the Hon. Chief Minister for a one-time grant in the Chief Minister's Special Component Programme for one Government-aided Anglo Indian School to be chosen for either



infrastructure development or renovation once a year. May I also request possible reservation opportunities for Anglo Indians in State Government Departments in order to foster a closer relationship and encourage employment in the Government sector.

Our Hon. Chief Minister, the only truly committed leader, who has worked unflinchingly to uplift the downtrodden, minorities, dalits and the needy, has transformed Tamil Nadu and provided excellent governance to the expectations of the people and has gained admiration and respect (Thumping of desks).

I know no greater honour than to be a part of this noble Government.

நன்றி, வணக்கம்.

**HON. DEPUTY SPEAKER:** Thank you Hon. Member, for your excellent speech. *மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள்.*

**திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு மானியக் கோரிக்கைகளை முன்னிறுத்தி, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளான இன்று என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மிக அமைதியாகவும், ஒழுக்கத்தோடும் நிறைவுபெறுகின்ற இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பங்கு கொண்டு, தமிழகத்தினுடைய அமைதியான ஒரு சூழலை எடுத்துச் சொல்கின்ற ஒரு கட்டாயத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். இன்றைய சூழ்நிலையில் நாம் எல்லாம், இந்த நாடும், தமிழக மக்களும் பல்வேறு நலத் திட்டங்களைப் பெற்று, இனிது வாழ வேண்டும்,*

*கடுமையான இந்த வறட்சி பாதிக்கப்பட்ட நேரத்திலும், அந்த மக்களைப் பல்வேறு நலத் திட்ட உதவிகளின் மூலமாகக் காப்பாற்றிட வேண்டும் என்கின்ற சீரிய நோக்கத்தோடு திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல வேளையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்குக் குறிப்பிட்டதுபோல, பல்வேறு மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன, அதற்கு மத்திய அரசு உதவ வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் எழுந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், தமிழகத்திலேயிருந்து பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர்கள், இங்கு அறிவிக்கப்படாத பிரதம மந்திரியாக சிலரை அரசு*

விழாக்களிலே அழைத்து, பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர, அந்த ஆட்சியிலே பங்கு பெற்றிருக்கிறவர்கள், தமிழகத்திலும் கடுமையான வறட்சி இருக்கிறது; இந்த மாநிலமும் வறட்சி பாதித்த மாநிலத்தில் ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமென்கின்ற அக்கறையைக்கூடச் செலுத்தாதவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்டவர்கள், ஜனநாயகத்தின் மூலமாக இந்த அமைச்சரவையும், இந்தச் சட்டமன்றமும் 5 ஆண்டுகள் நிலைத்து இருக்க வேண்டும் என்கின்ற அங்கீகாரத்தைத் தமிழக மக்கள் அளித்து புரட்சித் தலைவி அவர்களை ஆட்சிப் பீடத்தினுடைய முதலமைச்சராக அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டு, ஏதோ நாடாளுமன்றத்திற்கு நடந்த ஒரு தேர்தலில் அதிர்ஷ்டவசமாகத் தங்கள் அணி வெற்றிபெற்று விட்டது என்பதைக் காரணமாக வைத்துக்கொண்டு, இந்தச் சட்டமன்றத்திற்கும், தமிழக மக்களினுடைய மனப்போக்குக்கும், அவர்களுடைய எண்ணங்களுக்கும் எதிராக, இந்தச் சட்டமன்றத்தைப் பற்றியும், தமிழகத்திலே அமைதியான ஒரு சூழல் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில், அதற்குப் புறம்பாகவும், மாநில ஆளுநரைச் சந்தித்து, தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு சீரில்லை என்று மனு கொடுக்கிறார்கள் என்று சொன்னால், இந்தச் சட்டமன்றத்திலே குறுக்கு வழியிலே வந்துவிடலாம் என்கின்ற ஒரு நப்பாசையை வைத்துக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-55

'நெஞ்சுக்கு நீதி' என்று புத்தகம் எழுதுகிறார்கள். இந்த நாடு போற்றுகின்ற பெரும்புலவன் வள்ளுவன் குறிப்பிடுகின்றபோது,

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

என்று சொன்னான். தயவுசெய்து நீங்கள் நன்றாக சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நெஞ்சமே உங்களைச் சுட்டுவிடும். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களை எல்லாம் நீங்கள் சீர்தூக்கிப் பாருங்கள். கடந்த காலங்களிலே தமிழகத்திலே ஏற்பட்டிருந்த இனக் கலவரம், மதக் கலவரம், அமைதியற்ற சூழல், இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது இன்றைக்கு ஒரு துளிகூட சட்டம்-ஒழுங்கு கெடவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உங்கள் மனசாட்சியே சொல்லும்.



இதே சென்னை நகரிலே—சட்டத்தைக் காவல் காக்கின்ற இடம், காப்பாற்றுகின்ற சிறைக்கூடம், தப்பு செய்தவர்களைத் தண்டித்து, அவர்களை நல்லவர்களாக்க வேண்டும் என்கின்ற ஒரு பக்குவத்தை ஏற்படுத்துகின்ற அந்த சிறைக்கூடத்திலே, சென்னையிலே—மத்திய சிறைச்சாலையிலே ஏற்பட்ட கலவரத்தின் மூலமாக, தீ வைக்கப்பட்டு எத்தனை கைதிகள் மாண்டார்கள்? ஒரு நேர்மையான சிறை அதிகாரி கொல்லப்பட்ட சம்பவங்களை எல்லாம் நீங்கள் மறந்துவிட்டீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல் கோயம்புத்தூரிலே நடந்த வெடிகுண்டு வீச்சு. அதன் மூலமாக ஏறத்தாழ 43 பேர், ஒரு நேர்மையான காவல் துறை அதிகாரி செல்வராஜ் என்பவர் கொல்லப்பட்டதை, சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லுகிற நீங்கள், அதையெல்லாம் நெஞ்சார நினைத்துப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பிற்குரிய இடதுசாரிக் கட்சி நண்பர்களே, கடந்த காலத்தில் நீங்கள் இதே அவையில் எழுப்பிய அபயக் குரலை நாங்களும் கேட்டுக் கொண்டுதான் இருந்தோம். பொது விநியோகக் கடைகளிலே ஊழல் நடைபெறுகிறது என்று சொல்லி, அதைத் தட்டிக் கேட்ட ஒரு பெண் கவுன்சிலர், உங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) லீலாவதி அன்றைக்குப் படுகொலை செய்யப்பட்டார். அதுவும் யாரால் படுகொலை செய்யப்பட்டார் என்பது நீங்கள் அறிந்த ஒன்றுதான். அந்த மனசாட்சியை எல்லாம் மறந்துவிட்டு நீங்கள் ஆளுநரிடம் போய், சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது தமிழகத்திலே என்று சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

காங்கிரஸ் கட்சி நண்பர்களே, நீங்களும் சேர்ந்து திருநெல்வேலி நகரிலே ஒரு ஊர்வலத்தை நடத்தி, மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை வலியுறுத்துகிறோம் என்று செல்லுகின்ற நேரத்தில், அன்றைக்கு அந்த ஊர்வலத்தைத் தடுத்து போலீஸ்காரர்கள் நடத்திய தடியடியிலே 17 பேர் தாமிரபரணி ஆற்றிலே மூழ்கி மடிந்தார்களே (மேசையைத் தட்டும் ஒலி) அதை எல்லாம் நீங்களும் பார்த்துக் கொண்டு இருந்தவர்கள்தானே! நீங்கள் எந்த மனசாட்சியோடு ஆளுநரிடத்திலே போய் மனு கொடுக்கிறீர்கள் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

முஸ்லீம் லீகைச் சேர்ந்த நண்பர்கள், அன்றைக்கு பழனிபாபா மதக் கலவரத்தின் மூலமாகக் கொலை செய்யப்பட்டாரே, அன்றைக்கு நீங்களெல்லாம் அந்தச் சட்டம்-ஒழுங்கைப் பற்றி நன்கு அறிந்தவர்கள்.

அதேபோல மதுரையிலே ஒரு பேராசிரியர் பரமசிவம் என்பவர், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் படுகொலை செய்யப்பட்டார். பேருந்தை மறித்து ஒரு போராட்டம் நடத்துகின்ற நேரத்திலே, சிவகாசியிலே துப்பாக்கிச் சூட்டை நடத்தி 3 பேர் கொல்லப்பட்டார்கள். அங்கு, அன்றைக்கு அந்த சிவகாசி நகரமே ஓர் அமைதியிழந்த இடமாக, போக்குவரத்துகளெல்லாம் ஸ்தம்பிக்கப்பட்டு, அன்றைக்கு மின் கம்பங்களெல்லாம் சாலையிலே வெட்டிச் சாய்க்கப்பட்டு, மிக இக்கட்டான சூழ்நிலையில் இருந்த நேரத்தில், உங்களுடைய அமைச்சர்கள்கூட அங்கு போய் ஆறுதல் சொல்ல முடியவில்லை. எங்களைப் போன்றவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இடத்திற்குச் சென்று, அந்த மக்களினுடைய துயரத்திற்கு, கண்ணீரைத் துடைத்து ஆறுதல் சொல்லிவிட்டு, அமைதியை ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை.

சென்னையிலே, பத்மா என்கின்ற பெண் (குறுக்கீடு) அதுதான், பத்மனாபா... விடுதலைப் புலிகள் நிகழ்ச்சிகள் பல. சிறைச்சாலைகளிலேகூட அவர்கள் தனிச் சுரங்கத்தை ஏற்படுத்தி தப்பித்துச் செல்லுகின்ற நிலையை எல்லாம் அன்றைய காலத்திலே நாம் பார்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எல்லாம் பார்த்துவிட்டு, இன்றைக்கு நீங்கள் தயவுசெய்து உங்கள் நெஞ்சத்துக்கே நீதியைத் தேடிக் கொள்ளுங்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள். தாங்கள் கடந்து வந்த ஆட்சிக் காலங்களையெல்லாம் நீங்கள் திரும்பிப் பாருங்கள். அதையெல்லாம் திரும்பிப் பார்த்துவிட்டு, உங்கள் மனதைச் சற்று உற்றுப் பாருங்கள். உங்களுடைய மனசாட்சியே உங்களை நிச்சயமாகச் சுட்டுவிடும்.

நீங்கள் வள்ளுவன் வழி வந்தவர்கள் என்று இந்த நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த வள்ளுவனுடைய குறளைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். உண்மையான நிலை உங்களுக்குப் புரியும். எனவே, தயவுசெய்து இப்படிப்பட்ட குறுக்கு வழிகளிலே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நல்ல அரசாங்கத்தை, மக்களுக்குத் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு நல்ல அரசாங்கத்தை, மக்கள் மத்தியிலே இன்னும் செல்வாக்குப் பெற்றிருக்கின்ற ஒரு



அரசாங்கத்தை—நீங்கள் 7 பேர் சேர்ந்து வாக்குகளைப் பெற்றிருக்கிறீர்கள். தனியாக நின்று ஒரு கட்சி வாக்கைப் பெற்றிருக்கிறது. அதற்கும், இதற்கும் நீங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள். என்றைக்கும் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே முதல் ஓட்டு வங்கியைப் பெற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் நிச்சயமாகப் புரிந்துகொள்வீர்கள். அது உங்களுக்கும் தெரியும்.

வருகின்ற காலத்தில், உண்மையான ஜனநாயகக் கோட்பாட்டை நீங்கள் கடைப்பிடிக்க விரும்பினால், தனித்தனியாக வாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனித்தனியாக உங்களுடைய இயக்கத்தின் சார்பிலே போட்டி போடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழக மக்கள் யாரை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துகிறார்களோ அதை ஏற்றுக்கொள்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கூட்டணித் தத்துவத்தையே—ஒரு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967-லே, நல்லவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும்; நல்லவர்களாகச் சேர்ந்து ஒரு கூட்டணியை உருவாக்க வேண்டும். அதன் மூலம் நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட அணிதான் அன்றைக்கு 1967-லே. இன்றைக்கு அந்தக் கூட்டணி தேய்ந்துபோய், கொள்கை அற்ற அளவிலே, பதவிக்கு வர வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, நேற்று வரை மத்திய அரசிலே பங்கு பெற்றுவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்னால், 3 நாட்களுக்கு முன்னால் வெளியே வந்து, இன்னொரு கூட்டணியைத் தயார் செய்து கொண்டு. அதன் மூலமாக இன்றைக்கு மத்திய ஆட்சியிலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மனசாட்சியற்றவர்கள், நாளைக்குத் தனித் தனியே வாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் உண்மையான ஜனநாயகம். யாருக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். எனவே, இன்றைக்குக் கூட்டணியிலே இருக்கின்ற கட்சிகளெல்லாம் தங்களுடைய மனசாட்சிகளை உற்று நோக்குங்கள். இந்தத் தமிழகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது, எந்தச் சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது, எங்கே, என்ன தவறுகள் நடக்கின்றன என்பதை உற்றுப் பார்க்க வேண்டும்.

இங்கு ஒரு தொலைக்காட்சி—எதை எடுத்தாலும், அங்கு கொள்ளை, இங்கு கொலை, போலீஸ்காரர்கள் இல்லத்திலேயே திருட்டு என்று, இதைப் பரப்புவதற்காக ஒரு தொலைக்காட்சி. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று நான்கூட நினைக்கின்றேன். இந்த ஆட்சிக்கு ஒரு கெட்ட பெயரை விளைவிக்க வேண்டும் என்பதற்காக ஏதோ ஒரு பின்னணி இருக்கிறது. அந்தப் பின்னணிதான் இதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறது என்பதை மிகக் கவனமாக (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் புரிந்து கொண்டு, அது எந்தப் பின்னணி என்பதை ஆராய்ந்து அதை ஒடுக்க வேண்டும். ஒடுக்குவதற்கு உங்களிடத்திலே சக்தி இருக்கிறது, திறமை இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்குத் துணை நிற்கின்ற அந்தக் காவலர்களுக்காக ஒரு கோரிக்கையையும் வைக்க நான் விரும்புகின்றேன். கடந்த காலத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் 1979-லே 242 துணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) ஆய்வாளர்கள் (குறுக்கீடு) துணை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் 15 ஆண்டுகள் கழித்து 1994-லே உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஏறத்தாழ 25 ஆண்டுகளைத் தாண்டி விட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே D.S.P. அளவிற்குச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு எந்தவிதமான நிதி இழப்பீடும் இல்லை. அவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு என்கின்ற ஒரு நிலை வேண்டும். அதன்மூலமாக ஓர் அந்தஸ்தைப் பெற வேண்டும் என்று நினைக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் இங்கு இல்லை என்று சொன்னாலும், நிச்சயமாக இந்த அவையினுடைய நடவடிக்கைகளை எங்கிருந்தாவது கேட்டுக் கொண்டிருப்பார்கள். தெரிந்து கொண்டிருப்பார்கள் என்கின்ற முறையில், அதை அவர்கள் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல Sub-Inspector-களுக்கு ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைச் சென்ற சட்டமன்றத்தில் கொடுத்திருக்கிறார்கள். அது இன்னும் நிறைவு செய்யப்படவில்லை என்கின்ற நிலையிலே, அந்த அதிகாரிகளுக்காக அதை மீண்டும் வலியுறுத்தி அவர்களுக்கும் சட்டம்-ஒழுங்குப் பிரிவிற்குச் செல்வதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நிறைய துறைகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தத் துறைகளில் எல்லாம் ஒவ்வொரு கோரிக்கையை வைப்பதற்குக்கூட நேரம் இருக்குமா என்று தெரியவில்லை. இருந்தாலும், எங்களுக்கு என்று, இந்த சட்டசபையிலே இடம் பெற்று இருக்கின்றவர்களுக்கு என்று, இன்றைக்குச் சட்டமன்றம் என்கின்ற ஒரு மானியக் கோரிக்கை இங்கு இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்காக சில கோரிக்கைகளை வைப்பதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

ஏற்கெனவே சென்ற அரசு வழங்கிய அதே சம்பளத்தைத்தான் இன்றைக்கு நீங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசு, நமது அரசு வந்ததற்கு ஏதாவது ஒரு மாற்றம் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. மீண்டும் இந்த 3 ஆண்டுகளாக மற்றவர்கள் நமக்குக் கொடுத்ததையே பெற்றுக் கொண்டு இருக்கிறோமே, நாம் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு ஏதாவது ஒரு மாற்றம் இருக்க வேண்டாமா என்கின்ற சிந்தனை எல்லோருடைய இதயங்களிலும் இருக்கிறது. அமைச்சர் பெருமக்களுடைய உள்ளங்களிலும்கூட அது இருக்கிறது. (சிரிப்பு) எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதற்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்படுத்தித் தர வேண்டும். சற்று இந்தச் சம்பள விகிதத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தொகுதி மேம்பாட்டு நிதியினை எல்லோருமே ஓரளவுக்கு உயர்த்த வேண்டும் என்று சொல்கின்றார்கள். அது 99 இலட்சமாக—1 கோடி வேண்டாம்—அது சரியாக இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) பூஜ்ஜியம், பூஜ்ஜியமாக வருகிறது. 99 இலட்சமாக அந்த நிதியினை--(குறுக்கீடு) 99 இலட்சத்து 99 ஆயிரத்து 999 என்று, அந்த நிதியினை அது மாதிரி உயர்த்தித் தர வேண்டும் என்று சொல்லி, அன்போடு நிதி அமைச்சர் அவர்கள் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

கல்வியைப் பொறுத்த அளவிலே, ஓரளவிற்கு ஒரு நாடு வளர்ந்த நாடாகக் கருதப்படுமேயானால், அதற்கு அடிப்படை ஆதாரமாக இருப்பது கல்விதான் என்கின்ற முறையில் அந்தக் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு அரசு பல்வேறு நல்ல காரியங்களை ஆற்றிக் கொண்டிருந்தாலும்கூட, இன்னும் இந்தப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நியமிக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்தப் பள்ளிகளுடைய மாணவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல், அந்தப் பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை என்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. உதாரணமாக, ஒரு மேல்நிலைப் பள்ளியிலே 1,200 மாணவர்கள் படிக்கிறார்கள் என்று சொன்னால், நமது அரசினுடைய கொள்கையின்படியே, 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கின்ற ரீதியில், 1,200 மாணவர்களுக்கு ஏறக்குறைய 30 ஆசிரியர் பணியிடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் உண்மையிலேயே, எங்கள் கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஒன்றினை நாங்கள் சென்று பார்க்கின்றபோது, மாணவர்கள் 1,200 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு 13 ஆசிரியர் பணியிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 40 சதவிகிதப் பணியிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 60 சதவிகிதப் பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை என்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே, தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்தமான கல்விக்கூடங்களையும் ஆய்வு செய்துகூட, மாணவர்கள் சேர்க்கைக்கு, எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல அந்தப் பணியிடங்களை ஒதுக்கித் தர வேண்டும். இனி புதிதாக நியமிக்கப்படுகிற ஆசிரியர்களை அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு நீங்கள் அவசியம் ஒதுக்கித் தர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்குத் தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்— வருகின்ற 1–12–2004–க்குள்ளாக தமிழகத்தில் இருக்கின்ற, அனைத்து அரசுப் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, அதன்படி 22,817 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு நியமனம் செய்யப்படும்போது, மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் கூறியது போல அந்தக் கள்ளர் சீரமைப்புப் பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்புவதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு மிக்க நன்றி. அதுபோல் செய்து கொடுத்தால் நிச்சயமாக அந்தப் பள்ளி மாணவர்கள் எல்லாம் இந்த அரசுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதுபோல, கும்பகோணத்திலே நடந்த தீ விபத்தின் காரணமாக, பல்வேறு இடங்களிலே அரசு சார்பிலே நடத்தப்படுகின்ற பள்ளிகளில் எல்லாம் கூரைகள் பிரிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு மாணவர்கள் எல்லாம் போதிய அளவிலே கட்டட வசதி இல்லாமல் படிக்கும் ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கருத்திலே கொண்டு, இந்த ஆண்டு அந்தப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டும். கடந்த காலங்களில்கூட ஓரளவிற்கு மத்திய அரசு 'சர்வ சிக்ஷா அபியான்' திட்டத்தின் மூலமாக, ஒரு தொகுதிக்கு 7, 8 பள்ளிகளுக்குக்கூட வழங்குகின்ற ஒரு சூழல் இருந்தது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துமா, அப்படியெல்லாம் பள்ளிக் கட்டடங்கள் வழங்குவதற்கு முன்வருமா என்பது இன்றைக்கு வரைக்கும் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தீ விபத்து ஏற்பட்ட பிறகு, தமிழகத்தில் இருக்கின்ற அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறுகின்ற பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இருக்கின்ற அந்தக் கூரைகள் உடனடியாக அகற்றப்பட வேண்டுமென்று கூறி, 30–7–2004–க்குள்ளாக அனைத்துக் கூரைகளும் அகற்றப்பட்டு, தீப்பிடிக்காத கூரைகள் போடப்பட வேண்டுமென்று தமிழக முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு குழுவையும் நியமித்திருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தினுடைய இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு நியமனம் செய்யப்பட்டு, 30–7–2004–க்குள்ளாக இந்தப் பணியை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மொத்தம் இருக்கின்ற 48,000 பள்ளிகளிலே 4,501 பள்ளிகளில்தான் கூரைகள் இருக்கின்றன. அந்த 4,501 பள்ளிகளிலே நேற்றைய தேதி வரை 4,478 பள்ளிகளிலே அந்தக் கூரைகள்

அகற்றப்பட்டிருக்கின்றன. அகற்றப்பட்டது மட்டுமல்லாமல் அங்கே தீப்பிடிக்காத கூரைகள் போடுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, 'அனைவருக்கும் கல்வித்' திட்டத்திலே பள்ளிகளுக்கு ரூ.2,000 வீதம், அந்தப் பள்ளியிலே maintenance செய்வதற்கு 2,000 ரூபாயும், மற்றவற்றிற்கு என்று 5,000 ரூபாயும், ஆக மொத்தம் 7,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த 7,000 ரூபாயை இந்த ஆண்டு அரசுப் பள்ளிகளில் அகற்றப்பட்ட கூரைகளுக்குப் பதிலாக தீப்பிடிக்காத கூரைகள் உடனடியாகப் போடுவதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இன்றைக்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

*பிற்பகல் 1-15*

அதேபோன்று, ஊராட்சியில் இருக்கின்ற நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளுக்கு உடனடியாக தீப்பிடிக்காத கூரைகளைப் போடுவதற்கு அந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற General Fund–பொதுக் கணக்கிலேயிருந்து அந்தப் பணத்தை எடுத்து உடனடியாக அந்தக் கூரைகளை வேயவேண்டுமென்று இன்றைக்கு அந்தந்த ஊராட்சிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்கு இன்றைக்குப் பொதுப் பணித் துறை மூலமாக கிட்டத்தட்ட 11 கோடி ரூபாயை அந்தப் பள்ளியில் maintenance செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 11 கோடி ரூபாயை அந்தப் பள்ளியில் இருக்கின்ற அந்தக் கூரைகளை அகற்றி, தீப்பிடிக்காத கூரைகளை அமைப்பதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று முதல்வர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இன்றைக்கு அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. லா. சந்தானம்**: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதுபோல இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், தனியார் மூலமாக, சிறுபான்மையினர் மூலமாக நடத்தப்படுகின்றன. அதிலே கடந்த காலங்களிலே தனியார் பள்ளிகளிலே சேர்ந்து பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களை், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற 40 இடங்களோடு அரசு சார்பிலே 40 மாணவர்களை, பயில்வதற்காக அனுப்பி வைக்கிறோம். அந்த நிலையிலே அவர்களுக்கு இன்னும் அந்தக் கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்படவில்லை. அதோடுகூட, அவர்களுக்கு



ஓரிரு ஆசிரியர்கள்தான் அரசின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், ஓரிரு ஆசிரியர்கள் வழங்கப்பட வேண்டுமென்கின்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். காரணம், அரசுத் தரப்பிலே 40 மாணவர்கள், மாணவிகளைப் பயில்விக்கின்ற ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள், தங்களுக்கு ஓரிரு ஆசிரியர் பணியிடங்களை அரசு சார்பிலே ஒதுக்கித் தரவேண்டுமென்கின்ற ஒரு நிலையை அரசுக்குக் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஏற்கெனவே அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற இடம் 40. அதோடு நமது அரசு—40 பிள்ளைகள், ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்கள்—இந்தத் தனியார் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டு, இடையிலே நீதிமன்றத்தின் மூலமாக அந்தப் பள்ளிகளெல்லாம் நீக்கப்பட்டு, நிலுவையிலே இருந்தவர்கள், இந்த அரசு பொறுப்பேற்ற உடனே ஏறத்தாழ 27,000 பேர் அதிலே பயில வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, நமது இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே அரசின் சார்பில் 40 பிள்ளைகளைச் சேர்க்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது அவர்கள் 80 மாணவ, மாணவிகளுக்குப் பயிற்றுவிக்கின்ற ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால் அரசின் சார்பில் ஓரிரு ஆசிரியர்கள் எங்களுக்கு வழங்கப் பெறவேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது, ஏற்கெனவே அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அவர்களுக்கு உரிய கல்விக் கட்டணம்கூட இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்கின்ற சூழல் இருக்கிறது. அதை முடிந்த அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நிறைய பள்ளிகள்—நாம் புதிதாக இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தியிருக்கிறோம். புதிதாகப் பள்ளிகளை உருவாக்கியிருக்கிறோம். புதிதாக ஏற்படுத்தப்பட்ட அந்தப் பள்ளிகளிலே மாணவர் விடுதிகள் இல்லை. கடந்த 3 ஆண்டுகளாக, பழைய மாணவர் விடுதிகளை புதுக் கட்டடங்களாக அமைத்துத் தருகின்ற, வாடகைக் கட்டடங்கள் இல்லாமல் அரசின் தரப்பிலே புதிதாக மாணவர் விடுதிகள் கட்டுகின்ற ஒரு பணியை இந்த அரசு சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறது. இன்றைக்கு ஏறத்தாழ 972 மாணவர் விடுதிகள் இருக்கின்றன. ஆனால், இந்த ஆண்டு நிறைய இடங்களிலே மாணவர் விடுதிகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டும் என்று, புதிதாக உருவாக்கப்பட்ட பள்ளிகளில் இருந்து, அந்தப் பகுதி

மாணவர்களிடத்திலேயிருந்து கோரிக்கை வருகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து, புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பள்ளிகளுக்கு இந்த 972-உடன் சேர்த்து இந்த ஆண்டு 100 விடுதிகள் புதிதாகத் துவங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு உள்ளாட்சிகளைப் பொறுத்த அளவிலே (குறுக்கீடு) நானும் நேரத்தைப் பார்த்துக் கொண்டு, கணக்கு வைத்துக் கொண்டுதான் பேசிக் கொண்டு இருக்கிறேன்—பல்வேறு நலத் திட்டங்கள் மத்திய அரசின் சார்பிலே வருகின்றதை எல்லாம் நாம் கூடுதலாகச் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வறுமை ஒழிப்புத் திட்டமாக இருந்தாலும் சரி, பிரதமர் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்களாக இருந்தாலும், இந்திரா குடியிருப்பு போன்ற திட்டங்களுக்கு எல்லாம் அரசினுடைய நிதியைக் காட்டிலும் அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். இருந்தாலும், இன்னும் குடிநீர்ப் பஞ்சம் என்பது தீரவில்லை என்கின்ற நிலையில், குடிநீருக்காக நீங்கள் ஏற்கெனவே ஒதுக்கிய நிதிகள் எல்லாம் அந்தந்த மாவட்டங்களிலே செலவு செய்யப்பட்டுவிட்டன என்கின்ற நிலையில், குடிநீர் ஆதாரத்தைப் பெறுவதற்கு, இன்னும் கிராமங்களிலே குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசு ஒரு நிதியை ஒதுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே இருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூபாய் 471 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுடைய தொகுதிக்கு, வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு உசிலம்பட்டி வடக்கு மற்றும் செல்லம்பட்டி வடக்கு மற்றும் 85 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும், வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு செல்லம்பட்டி மற்றும் 99 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** இந்த விவாதத்திலே பங்கு கொண்டு, என்னுடைய கருத்துகளைக் கூற அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 1 — மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்.

திரு. மு. அப்பாவு, திரு. ப. அரசன், திரு. ஜெக. வீரபாண்டியன், திரு. கே.வி. முரளிதரன் ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,66,96,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை.

திரு. ப. அரசன், திரு. மு. அப்பாவு ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,22,03,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

திரு. ப. அரசன், திரு. மு. அப்பாவு, திரு. கே.வி. முரளிதரன் ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,098,47,97,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,79,44,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.13,53,57,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள்



அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஈ) கோரிக்கை எண் 15—நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15—நிதித் துறை.

திரு. ப. அரசன், திரு. மு. அப்பாவு, திரு. கே.வி. முரளிதரன் ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.551,48,11,000/-, மூலதனக் கணக்கில் ரூ. 1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ. 21,11,32,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**(உ) கோரிக்கை எண் 35—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.

திரு. ப. அரசன், திரு. மு. அப்பாவு, திரு. கே.வி. முரளிதரன் ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 59,51,67,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8,51,80,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 1-25

**(ஊ) கோரிக்கை எண் 48 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்.

திரு. மு. அப்பாவு முன்மொழிந்த வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,610,01,60,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**(எ) கோரிக்கை எண் 10 — வணிக வரித் துறை-வணிக வரிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள்.

திரு. ப. அரசன், திரு. மு. அப்பாவு ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.322,08,60,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**(ஏ) கோரிக்கை எண் 19—உயர் கல்வித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை.

திரு. ப. அரசன் திரு. மு. அப்பாவு, திரு. கே.வி. முரளிதரன், திரு. ஜெக. வீரபாண்டியன் ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.647,08,43,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,72,79,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஐ) கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை.

திரு. ப. அரசன், திரு. கேவி. முரளிதரன், திரு. ஜெக. வீரபாண்டியன், திரு. மு. அப்பாவு ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,142,73,01,000/-, மூலதனக் கணக்கில் ரூ.60,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.3,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



### (ஒ) கோரிக்கை எண் 33 — நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.

திரு. ப. அரசன், திரு. கேவி. முரளிதரன், திரு. ஜெக. வீரபாண்டியன், திரு. மு. அப்பாவு ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.863,47,61,000/-, மூலதனக் கணக்கில் ரூ.633,18,47,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.158,21,70,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஓ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40 — ஊரக வளர்ச்சித் துறை.

திரு. ப. அரசன், திரு. கேவி. முரளிதரன், திரு. ஜெக. வீரபாண்டியன், திரு. மு. அப்பாவு ஆகியோர் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,611,17,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.341,43,94,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 1-30

பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

இப்பொழுது கில்லட்டின் நேரம். இன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் ஒதுக்கப்பட்ட கடைசி நாள்.

பேரவை விதி 185 (3)-ன்படி மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்ட கடைசி நாளில் பிற்பகல் 1-30 மணிக்கு மீதமிருக்கும் அனைத்து மானியக் கோரிக்கைகளையும் வாக்கெடுப்பிற்கு விடவேண்டும். அதன்படி மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்பிற்கு விடுகிறேன்.

### (ஔ) கோரிக்கை எண் 14—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14 — சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.110,15,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.82,38,64,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 1420 முதல் 1479 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (அஅ) கோரிக்கை எண் 25 — வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை @

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25 — வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.62,76,81,000/-, மூலதனக் கணக்கில் ரூ.99,52,15,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.108,50,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (அஆ) கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை-மீன் வளம் @@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7–கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை–மீன் வளம்.

@ 1480 முதல் 1530 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@@ 1531 முதல் 1557 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XIV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.64,58,26,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,66,82,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (அஇ) கோரிக்கை எண் 21 — உள் துறை-காவல் @

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21–உள் துறை–காவல்.

"உள் துறை–காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,187,87,57,000/–, மூலதனக் கணக்கில் ரூ. 138,52,23,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

---

@ 1558 முதல் 1626 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



### (அஈ) கோரிக்கை எண் 22 — உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் @

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22–உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்.

"உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.67,63,12,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

### (அஉ) கோரிக்கை எண் 37 — பொதுத் துறை @@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37–பொதுத் துறை.

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.117,19,04,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

---

@ 1627 முதல் 1651 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XVI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@@ 1652 முதல் 1677 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்புகள் இணைப்புகள் XVII மற்றும் XVIII ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

**(அஊ) கோரிக்கை எண் 9 — பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை @**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.153,79,57,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,99,43,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**(அஎ) கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி - பண்பாடு @@**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44–தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.37,48,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

@ 1678 முதல் 1704 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்புகள் இணைப்புகள் XIX மற்றும் XX ஆக அச்சிடப்பெற்றுள்ளன.
@@ 1705 முதல் 1757 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**(அஏ) கோரிக்கை எண் 8 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால் வளம் @**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8–கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால் வளம்.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 13,02,38,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பிற்பகல் 1–35

**(அஐ) கோரிக்கை எண் 28 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா @@**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.16,15,17,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.11,20,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

@ 1758 முதல் 1787 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.
@@ 1788 முதல் 1847 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (அஒ) கோரிக்கை எண் 31 — தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை @

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.*

*"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 177,30,29,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,10,05,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (அஓ) கோரிக்கை எண் 27 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் @@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்.*

*"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.27,29,98,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.32,00,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

@ 1848 முதல் 1941 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXIV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.
@@ 1942 முதல் 1985 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (அஔ) கோரிக்கை எண் 47 — இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை @

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 47—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை.*

*"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 27,39,62,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 20,74,03,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 6. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

@ 1986 முதல் 2029 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXVI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[2004 ஜூலை 31

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2004 ஜூலை 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4–30*

*பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2004-2005."

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 31

"2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-7-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 3 | நீதி நிருவாகம் | .. | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 31,62,00 | .. | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை–கால்நடை பராமரிப்பு | 52,07 | .. | .. |



2004 ஜூலை 31]

| கோரிக்கை | | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 47,78,00 | 15,00 | .. |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 61,13,54 | .. | 68,95,00 |
| 13 | எரிசக்தித் துறை | 7,12,50,00 | .. | .. |
| 15 | நிதித் துறை | 2 | .. | .. |
| 16 | கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணிநூல் | 16,31,03 | .. | 83,56,96 |
| 17 | கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | .. | .. | 75,00 |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 14,86,03 | 20,00 | .. |
| 19 | உயர் கல்வித் துறை | 5,50,10 | 1 | .. |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | 36,76 | 43,00,00 | .. |
| 21 | உள் துறை–காவல் | 3,32,97 | .. | .. |
| 23 | உள் துறை–சிறைச்சாலைகள் | .. | 1,25,00 | .. |
| 26 | தொழில் துறை | .. | .. | 2,36,45,99 |

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | .. | .. | 3,91,00 |
| 33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 15,64,00 | 81,50,00 | .. |
| 35 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 18,00,00 | .. | .. |
| 38 பொதுப் பணித் துறை | .. | 76,15,40 | .. |
| 39 வருவாய்த் துறை | 4,06,60 | .. | .. |
| 40 ஊரக வளர்ச்சித் துறை | 1 | .. | .. |
| 41 பள்ளிக் கல்வித் துறை | 10,45,52 | .. | .. |
| 43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 56,18,50 | .. | .. |
| 44 தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு | 10,00 | .. | .. |
| 47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 25,65 | .. | .. |
| பெரு மொத்தம் | **998,62,80** | **202,25,41** | **393,63,95** |



## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92, 1992-93, 1993-94, 1994-95, 1995-96 மற்றும் 1996-97, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-92, 1992-93, 1993-94, 1994-95, 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன:

**1991-92**

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I,P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1991-1992 in excess of the amount authorized or granted for those services and purposes for that year."

**1992-93**

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I,P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1992-1993 in excess of the amount authorized or granted for those services and purposes for that year."



**1993-94**

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I,P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1993-1994 in excess of the amount authorized or granted for those services and purposes for that year."

**1994-95**

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I,P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1994-1995 in excess of the amount authorized or granted for those services and purposes for that year."

**1995-96**

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I,P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1995-1996 in excess of the amount authorized or granted for those services and purposes for that year."

**1996-97**

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I,P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1996-1997 in excess of the amount authorized or granted for those services and purposes for that year."

பிற்பகல் 4-35

## 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1991-92 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-92 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28-7-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1991-92 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



**நிறைவேற்றப்பெற்ற 1991-92 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | |
| 5 | முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 5,97,743 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் | 13,63,999 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 1,57,80,744 |
| 17 | கல்வி | 76,80,21,135 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 3,43,10,021 |
| 20 | வேளாண்மை | 64,95,05,570 |
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 10,28,00,583 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 1,37,49,679 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 4,70,52,570 |
| 44 | எழுதுபொருள்—அச்சுத் துறை | 4,78,582 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 31,01,895 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 33,75,985 |
| 50 | நகராட்சி நிருவாகம் | 23,836 |
| **மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | **164,01,62,342** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | | |
| 57 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 3,06,32,146 |
| 58 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 39,22,690 |
| **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | | **3,45,54,836** |
| **பெரு மொத்தம்** | | **167,47,17,178** |

[2004 ஜூலை 31

## 9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1992–93, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1992–93 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992–93 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1992–93 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



2004 ஜூலை 31]

### நிறைவேற்றப்பெற்ற 1992–1993 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | |
| 5 | முத்திரைத் தாள்கள்–நிருவாகம் | 27,15,256 |
| 7 | மாநிலச் சட்டமன்றம் | 8,37,330 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 1,60,63,237 |
| 20 | வேளாண்மை | 14,96,50,355 |
| 24 | தொழில்கள் | 27,85,202 |
| 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 4,77,89,386 |
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 3,81,747 |
| 37 | பொதுப் பணிகள்–கட்டிடங்கள் | 4,38,41,387 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 5,24,62,270 |
| 44 | எழுதுபொருள்–அச்சுத் துறை | 63,07,403 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 3,10,50,554 |
| **மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | **35,38,84,127** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | | |
| 57 | சாலைகள்–பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 35,68,278 |
| 60 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 3,17,261 |
| **மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | | **38,85,539** |

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 62 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 13,34,38,551 |
| பெரு மொத்தம் | **49,12,08,217** |

## 10. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1993-94, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1993-94 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993-94 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28-7-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1993-94 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



**நிறைவேற்றப்பெற்ற 1993-1994 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 11 மாவட்ட நிருவாகம் | 13,05,634 |
| 19 பொதுச் சுகாதாரம் | 1,99,09,539 |
| 20 வேளாண்மை | 8,29,60,053 |
| 22 கால்நடை வளர்ப்பு | 40,13,494 |
| 37 பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும் | 1,05,69,250 |
| 38 சாலைகளும் பாலங்களும் | 17,06,86,956 |
| 45 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 3,87,09,652 |
| 49 நகராட்சி நிருவாகம் | 84,67,745 |
| **மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **33,66,22,323** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 56 சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 2,11,72,544 |
| **மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | 2,11,72,544 |
| **பெரு மொத்தம்** | **35,77,94,867** |

## 11. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1994–95, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1994-95 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-95 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28-7-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1994-95 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.*

### நிறைவேற்றப்பெற்ற 1994–95 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 7 | மாநிலச் சட்டமன்றம் | 8,74,108 |
| 8 | தேர்தல்கள் | 7,94,049 |



| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| 20 | வேளாண்மை | 1,47,95,37,271 |
| 21 | மீனளம் | 2,54,10,751 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 35,29,162 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 8,00,626 |
| 36 | பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 17,13,018 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 4,68,87,912 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 23,99,77,503 |
| 42 | பல்வகை | 4,79,48,735 |
| | **மொத்தம்–அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **184,74,73,13** |
| **ஆ.** | **வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 53 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,52,91,093 |
| 56 | சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 3,58,84,553 |
| 57 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 45,80,155 |
| 60 | பல்வகை மூலதனச் செலவு | 5,23,22,806 |
| | **மொத்தம்–ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **10,80,78,607** |
| **இ.** | **கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 61 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 12,14,10,935 |
| | **பெரு மொத்தம்** | **207,69,62,677** |

[2004 ஜூலை 31

## 12. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1995–96, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1995–96 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1995–96 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1995–96 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.*

**நிறைவேற்றப்பெற்ற 1995–96 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**



| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| | **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 30 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 12,33,68,843 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 63,14,325 |
| 34 | நுகர்பொருள் வழங்கல் | 13,89,417 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 39,49,84,149 |
| 40 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 4,25,76,363 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 42,76,41,268 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 5,89,18,077 |
| | **மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **105 ,51,92,442** |
| | **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 56 | சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 6,82,22,632 |
| | **மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | 6,82,22,632 |
| | **பெரு மொத்தம்** | **112,34,15,074** |

## 13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1996–97, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1996–97 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1996–97 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்*

ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1996–97 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 1996–97 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | |
| 5 | முத்திரைத் தாள்கள்–நிருவாகம் | 8,80,837 |
| 8 | தேர்தல்கள் | 42,12,121 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 33,03,699 |
| 20 | வேளாண்மை | 28,78,09,784 |
| 26 | கதர்–கிராமத் தொழில்கள் | 1,266 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 1,14,60,900 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,695 |



| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| 35 | பாசனம் | 17,95,15,568 |
| 36 | பொதுப் பணிகள்–கட்டடங்கள் | 7,79,796 |
| 39 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 35,86,207 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 1,72,54,07,564 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 23,38,96,272 |
| 50 | சுற்றுலா | 18,34,528 |
| **மொத்தம்–அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | **245,26,91,237** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | | |
| 53 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,09,69,507 |
| 56 | சாலைகள்–பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 35,57,49,749 |
| 57 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,98,83,302 |
| 59 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 27,08,252 |
| **மொத்தம்–ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு** | | **38,93,10,810** |
| **பெரு மொத்தம்** | | **284,20,02,047** |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும், மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 14. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட அனைத்துச் சட்டமுன்வடிவுகளும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 15. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2004). மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 31

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2004 ஜூலை 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 4-45

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 31

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்ப்டுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2004**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.



2004 ஜூலை 31]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

பிற்பகல் 4–50

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2004 ஜூலை 31] [திரு. சி. பொன்னையன்]

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2004), மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.



2004 ஜூலை 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் **28**/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2004 @) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமா?

---

@ 23-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப் பெற்றுள்ளது.



***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத்'க முறை அவர்களே, Dr. Johna Mathai, தலைவர், வரி விசாரணை Con:ம், ஆக பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் முதன்முதலாக 1955 ஆம் ர்கள். வேளாண்மை வருமான வரி விதிக்கும் முறை அமல்படுத்தப் ஏக்கர் இந்தச் சட்டம் அமலில் இருக்கும்போது மலைத்தோட்டப் பயிர்ப்புச் மட்டும் வரி விதிக்கப்பட்டது. பின்னர் 1958 ஆம் ஆண்டின் திட்டப் சட்டத்தின்படி மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம்மீதும் வரி விதிக்கும் முறை புகுத்தப்பட்டது. இதற்கு. பொதுவாக இணக்க முறையில் 20 பகிர்மான ஏக்கர் வரையில் வரி விலக்கும், வருமான அடிப்படையில் ரூ.10,000-க்கும் மேலாக வரி விதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிற்பகல் 4-55

அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவற்றிலும் 1950 மற்றும் 1957-லிருந்து வேளாண்மை வருமான வரி விதிக்கும் முறை நடைமுறையில் உள்ளது. இவ்விரு மாநிலங்களில், கேரள அரசு தனது சட்டம் 15/91-ல் 1-4-1981-லிருந்தும் 1-12-1982 முதல் மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம்மீதான வரி இரத்து செய்யப்பட்டது. இவ்வாறாக அண்டை மாநிலங்களில் மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம் மீதான வரியை இரத்து செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் மலைத்தோட்டம் அல்லாத பயிர்கள்மீது வரி விதிப்பு செய்யப்பட்டு வந்துள்ளது.

எனவே, திருத்தச் சட்டம், 40/91-ன்படி மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம்மீதான வரி இரத்து செய்யப்பட்டு, மலைத்தோட்டப் பயிர்களான டீ, காபி, இரப்பர், ஏலக்காய், கிராம்பு, பாக்கு மற்றும் மிளகு ஆகியவற்றிற்கு மட்டும் 1-4-2002 முதல் வரி விதிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி 8 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே வரி விதிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இச்சட்டத்தின்கீழ் இரண்டு வகையான வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறது. ஒன்று, இணக்க முறை. இரண்டு, வருமான அடிப்படை. தமிழ்நாட்டில் இணக்க முறை வரி விதிப்பு 1955 முதல் நடைமுறையில் உள்ளது. 8 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் வரிதாரருக்கு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம் 1955-ன்படி 1-4-1992 முதல் இணக்க முறை பதிவு முறைப்படி வரி விதிப்பிற்கு உட்படுகிறார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 31

INDCOSERVE புள்ளிவிவரப்படி தமிழ்நாடு முழுவதும், தேயிலைப் பயிரின்கீழ் 1 இலட்சத்து 726 ஏக்கர் நிலமும், coffee-யின்கீழ் 67,350 ஏக்கரும் ஏலப் பயிரின்கீழ் 9,200 ஏக்கரும், இரப்பர் 23,293 ஏக்கரும் 2002-2003-ல் பயிர் செய்யப்பட்டது.

1-4-1992 முதல் சட்டம் 40/91, 1997-98-ல் மாநில அரசுக்கு வருமானமாக 36.36 கோடி ரூபாய் வருமானம், மிகுதியான வருமானமாகக் கிடைத்துள்ளது. இந்த மிகுதியான வருமானம் கிடைத்ததற்கு அடிப்படை ஆதாரமான வருமான வரி அடிப்படையில் வரி விதிக்கும் நபர்களுக்கு, அவர்கள் கோரிய செலவினத்தை முழுவதுமாக அனுமதித்த பிறகு கிடைக்கும் நிகர வருமானத்தில் விதிக்கப்பட்ட வரியாகும். இவ்வாறாக 1997-98 ஆம் ஆண்டில் உச்ச நிலையில் இருந்துள்ள கேட்பு வருமானம் கடந்த மூன்று ஆண்டுகளாக தோட்டத் தொழில் பயிர்கள் எதிர்கொண்டுள்ள உலக அளவிலான விலை வீழ்ச்சி முதலியவற்றால் சரிந்தது. இவ்விலை வீழ்ச்சியின் அளவுகோல் விவசாயிகளுக்கு அதிகப்படியான நஷ்டத்தினை ஏற்படுத்தியது. இதனால் மலைத்தோட்டப் பயிர் விவசாயிகள் சங்கம் தற்போதுள்ள விவசாய வருமான வரியினைக் குறைத்தும், மத்திய வருமான வரியினைக் கருத்திற்கொண்டு வரி விதிக்கவும், வேளாண்மை வருமான வரியினை 10 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்யக் கோரியும் கோரிக்கை விடுத்ததில், தமிழ்நாடு அரசு விவசாயிகளின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டும், பருவ மழை பொய்த்ததனால் ஏற்பட்ட சீர்கேடுகள், தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை மற்றும் விலை வீழ்ச்சி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும் இவற்றை முன்னேற்றுவதற்கான அவசியத்தினையும் கருத்திற்கொண்டும், சரியான நேரத்தில் வேளாண்மை வருமான வரியினை முழுவதுமாக இரத்து செய்ய முடிவு எடுத்துள்ளது. ஆகவே, சரியான நேரத்தில் வேளாண்மை வருமான வரியினை மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுவதுமாக இரத்து செய்ய ஆணையிட்டுள்ளார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி மாண்புமிகு நிதி அமைச்சர் 1-4-2004 முதல் மலைத்தோட்டப் பயிர்மீதான வேளாண்மை வருமான வரி முழுவதுமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவித்ததன்பேரில், 1-4-2004 முதல் பெறப்படும் வேளாண்மை வருமானம் 2005-2006 வரி ஆண்டிற்கு வரி விதிப்பிற்கு



2004 ஜூலை 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இதன் மூலம், 3,479 இணக்க முறை வரிதாரர்களும், 288 வருமான அடிப்படை வரிதாரர்களும், ஆக மொத்தம் 3,767 வரிதாரர்கள் பயன் அடைவார்கள். இவ்விலக்களிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள 1,50,667.93 ஏக்கர் மலைத்தோட்டப்பயிர் நிலங்கள் முழுவதுமாக விலக்களிப்புச் செய்யப்படுகிறது. இந்நிவாரணத்தினால், நலிவடைந்த மலைத்தோட்டப் பயிர்த் தொழில்கள் விரைவாக முன்னேறவும், தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக் குறையாது இருக்கவும், மேலும் கூடும் வகையில் வேளாண்மை வருமான வரியை இரத்து செய்வது இன்றியமையாதது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 5–00

### (ஔ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப உறுப்பினரிடையே சொத்துரிமை மாற்றம் நடைபெறும்போது, சொத்து மாற்ற ஏற்பாடு (settlement), உரிமை விடுப்பு (release), பாகப் பிரிவினை (partition) மற்றும் கூட்டாண்மைக் கலைப்பிற்கான பாகப் பிரிவினை ஆகிய முறை ஆவணங்களைப் பொறுத்த அளவில், முத்திரைத் தீர்வை ஆகியவை, தற்போதைய 4 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான உச்ச அளவுத் தொகை ரூபாய் 10,000 எனவும் நிர்ணயிக்கப்படும். குத்தகை ஆவணங்களைப் பொறுத்தவரை, முத்திரைத் தீர்வை விதிக்க, தற்போது நிலவி வருகிற சிக்கலான முறை சீரமைக்கப்பட்டு, எளிமையான முறை அறிமுகப்படுத்தப்படும் என்றும், மற்றும் மூல ஆவணங்களை வைப்பீடு செய்வது தொடர்பானதாக உள்ள உடன்பாடு ஒன்றைக் குறிப்பிடும் சான்றுமுறை ஆவணம் ஒன்றாகக் கொள்ளப்பட வேண்டிய ஆவணங்களில் கடிதம், குறிப்பு அல்லது குறிப்பாணையை உள்ளடக்குவது எனவும், இத்தகைய சலுகை தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பலன் தரும் என்பதால் இந்தச் சலுகையை உடனே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அறிவிப்புகளைச் செயல்படுத்த வேண்டுமெனில், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்திற்குத் தகுந்த திருத்தங்கள் வெளியிட வேண்டும். இச்சட்டமுன்வடிவு இதற்குச் செயல் வடிவம் கொடுக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

@ 28-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயுத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஒ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 23-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஔ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 26-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

பிற்பகல் 5–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஅ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 26-7-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2004 ஜூலை 31] [திரு. செ.ம. வேலுசாமி]

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அ-ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 27-7-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2004 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2004 ஜூலை 31] [திரு. செ.ம. வேலுசாமி]

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆஇ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 27-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 28-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 31

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 5–10

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2004 ஜூலை 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஉ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2004), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது பேசவேண்டுமா? திரு. ராஜா, ஏதாவது பேசவேண்டுமா? (குறுக்கீடு).

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 28-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஊ) தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தல் (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தல் (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2004), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தல் (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 30-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தல் (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ழ) தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 15. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (அள) தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும்

விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2004), மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 60 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 60 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

@ 31-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 5-15

## (அஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2004), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 30-7-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஜ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2004), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 31-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஏ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2004), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 31-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2004 ஜூலை 31

## (அஓ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2004), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 31-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.



2004 ஜூலை 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 5–20

## 14. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை,

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம், நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 5–20 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.



## 16. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

111. 2002-2003 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக் கழகத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

112. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

113. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

114. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

115. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

116. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பன்னிரண்டாவது அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*117. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*118. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*119. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*120. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) பிரிவு 16-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*121. 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (வருவாய் வரவினங்கள்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*122. 2003 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*123. 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (வணிகம்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*





## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*156. 2002-2003 ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்ற புத்தகம். (தமிழ்)*

*157. 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு—ஆண்டு ஆய்வு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)*

*158. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)*

*159. மானியக் கோரிக்கை எண் 12 — கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*160. மானியக் கோரிக்கை எண் 15 — நிதித் துறை பற்றிய கொள்கை விளககக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*161. மானியக் கோரிக்கை எண் 35 — திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*162. மானியக் கோரிக்கை எண் 48 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*163. மானியக் கோரிக்கை எண் 10 — வணிக வரித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*164. மானியக் கோரிக்கை எண் 14 — சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*165. மானியக் கோரிக்கை எண் 14 — சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை-வனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் திருத்தம் வெளியிடப்பட்டது குறித்து. (தமிழ், ஆங்கிலம்)*

*166. சுற்றுச் சூழல் துறையின் செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

*167. வனத் துறையின் செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)*

[2004 ஜூலை 31

168. மானியக் கோரிக்கை எண் 25 — வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

169. மானியக் கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை — மீன் வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

170. மானியக் கோரிக்கை எண் 7— மீன் வளத் துறை பற்றிய மக்கள் சாசனம். (தமிழ், ஆங்கிலம்)

171. மானியக் கோரிக்கை எண் 21 — தமிழ்நாடு காவல் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

172. மானியக் கோரிக்கை எண் 22 — தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

173. மானியக் கோரிக்கை எண் 37 — பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

174. மானியக் கோரிக்கை எண் 37 — தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

175. மானியக் கோரிக்கை எண் 9 — பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

176. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் செயல்முறைத் திட்டம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

177. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் “மக்கள் சாசனம்” , 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

178. மானியக் கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)



2004 ஜூலை 31]

179. மானியக் கோரிக்கை எண் 41 —பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

180. மானியக் கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

181. மானியக் கோரிக்கை எண் 8 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை — பால் வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

182. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் மக்கள் சாசனம், 2004.

183. மானியக் கோரிக்கை எண் 28 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

184. மானியக் கோரிக்கை எண் 31 — தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

185. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் வரவு-செலவுத் திட்ட செயலாக்கம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

186. மானியக் கோரிக்கை எண் 27 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

187. மானியக் கோரிக்கை எண் 33 — நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் — மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

188. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம்—மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நிருவாகச் செயல்திறன் பற்றிய குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

189. மானியக் கோரிக்கை எண் 40 — ஊரக வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

190. ஊரக வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

191. ஊரக வளர்ச்சித் துறையின் 'ஊரகச் சாலைகள் மேம்பாடு' என்னும் சிறு நூல். (தமிழ்)

192. ஊரக வளர்ச்சித் துறையின் 'ஆரோக்கியமான சூழலை நோக்கி' என்னும் சிறு நூல். (தமிழ்)

193. ஊரக வளர்ச்சித் துறையின் 'சம்பூரண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்' என்னும் சிறு நூல். (தமிழ்)

194. ஊரக வளர்ச்சித் துறையின் 'ஒருங்கிணைந்த கிராமப்புற வீட்டு வசதி' என்னும் சிறு நூல். (தமிழ்)

195. ஊரக வளர்ச்சித் துறையின் 'பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்' என்னும் சிறு நூல். (தமிழ்)

196. ஊரக வளர்ச்சித் துறையின் வளர்ச்சிக்கான பயிற்சித் திட்டங்கள். (தமிழ்)

197. மானியக் கோரிக்கை எண் 47 — இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

198. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2004)

199. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை. (2003-2004)

200. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2003-2004)

201. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2003-2004)

202. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2004)





203. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஆறாவது அறிக்கை. (2003-2004)

204. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. (2003-2004)

205. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2003-2004)

206. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2004)

207. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பதாவது அறிக்கை. (2003-2004)

208. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2004)

209. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2003-2004)

210. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2003-2004)

211. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2003-2004)

212. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2004)

213. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. (2003-2004)

214. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (2003-2004)

215. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. (2003-2004)

216. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2004)

[2004 ஜூலை 31

217. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பதாவது அறிக்கை. (2003-2004)

218. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2004)

219. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2003-2004)

220. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2003-2004)

221. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து நான்காவது அறிக்கை. (2003-2004)

222. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2004)

223. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2003-2004)

224. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2003-2004)

225. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2003-2004)

226. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2004)

227. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2003-2004)

228. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2003-2004)

229. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து எட்டாவது அறிக்கை. (2003-2004)

230. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2003-2004)



2004 ஜூலை 31]

231. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2003-2004)

232. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2004)

233. மனுக்கள் குழுவின் அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2004)

234. மனுக்கள் குழுவின் எழுபதாவது அறிக்கை. (2003-2004)

235. மனுக்கள் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2004)

236. மனுக்கள் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2003-2004)

237. மனுக்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2003-2004)

238. மனுக்கள் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. (2003-2004)

239. மனுக்கள் குழுவின் எழுபத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2004)

240. மனுக்கள் குழுவின் எழுபத்து ஆறாவது அறிக்கை. (2003-2004)

241. மனுக்கள் குழுவின் எழுபத்து ஏழாவது அறிக்கை. (2003-2004)

242. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

243. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

*244. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)*

*245. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)*

*246. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)*

*247. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)*

*248. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 105 வரை)*



## இணைப்பு I

*(54ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### @ உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன்

***(பட்டியல்கள் 13 முதல் 18 வரை)***

### பட்டியல் 13

**1—**

**உச்ச நீதிமன்றக் கிளை**

**வினா எண் 3961—திரு. ஆஸ்டின்:** *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் உச்ச நீதிமன்றத்தின் கிளையை அமைக்க மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றினை அமைக்கக் கோரி 1980 ஆம் ஆண்டு முதல் மைய அரசை தமிழக அரசு கோரி வருகிறது. இக்கோரிக்கைக்கு மைய அரசின் அனுமதி இதுகாறும் கிடைக்கவில்லை. மதுரையில் உயர் நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றினை அமைக்கும் பணி நிறைவு செய்யப்பட்டு அது செயல்பட துவங்கியதும் சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றினை அமைத்துத் தருமாறு கோரி மைய அரசை தமிழக அரசு மீண்டும் வலியுறுத்தும்.*

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2—

## புதிய நீதிமன்ற வளாகம்

**வினா எண் 8122—திரு. மே.ப. காமராஜ்:** *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் முன்சீப் நீதிமன்றத்தில் புதிய நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் ஓமலூரில் தற்போது புதிய நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

3—

## தொலைக்காட்சி, வானொலி மூலம் விளம்பரம்

**வினா எண் 11882—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மழைக் காலங்களில் மின் விபத்துக்களைத் தடுக்க பொது மக்களுக்குத் தொலைக்காட்சிகள் மற்றும் வானொலிகள் மூலம் விளம்பரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) தலைமை அரசு மின் ஆய்வாளர் அவர்களால் குறிப்பாக மழைக் காலங்களில் சேமநல அறிவிப்புகள் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலி மற்றும் ஒளிபரப்பப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் 14 ஆம் தேதியிலிருந்து 20 ஆம் தேதிவரை வாரியத்தில் கொண்டாடப்படும் மின்சார சேமிப்பு வாரத்தில் பொதுமக்களுக்கு சேம அறிவிப்புகள் நன்றாக விளக்கப்படுகின்றன.

4—

## மின் உற்பத்தி நிலையம்

**வினா எண் 12165—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மின் உற்பத்தி நிலையம் அமைக்க தனியார்கள் விண்ணப்பித்துள்ளனரா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இந்திய அரசின் அறிவுரையின்படி, 18-2-1995-க்குப் பின் மின் வாரியங்கள் தனியார் மின் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு கருத்தளவு ஒப்பந்த முறையை (Private Projects by MoU route) பின்பற்ற முடியாது. மின் வாரியங்கள் பன்னாட்டு ஒப்பந்த முறைப்படி தான் (International Competitive Bidding route) தனியார் மின் திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். 2001-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் வாரியம் தனியார் மின் திட்டங்கள் தேர்ந்தெடுக்க பன்னாட்டு ஒப்பந்தப்புள்ளி எதுவும் கோரவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2004 ஜூலை 31

5—

## குடும்ப நீதிமன்றம்

**வினா எண் 12945—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் குடும்ப நீதிமன்றம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

6—

## மின் இணைப்பு

**வினா எண் 14441—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நீர்த்தேக்கம் மூலம் மேற்கு, கிழக்கு வாய்க்கால் பாசன விவசாயிகளுக்கு நீர்வரத்து குறைவதால், விவசாயிகள் கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுப்பதில் முன்னுரிமை வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்பொழுதுள்ள வாரிய விதிமுறைகளின்படி விவசாயிகள் சுயநிதித் திட்டத்தின்கீழ் வாரியத்திற்கு ஆகும் செலவு ரூ.50,000/-க்குள் இருந்தால் ரூ.25,000/- மட்டும் கட்டணமாகச் செலுத்தி முன்னுரிமை பெற்று மின் இணைப்பு பெற்றுக்கொள்ளலாம். மற்றும் வாரியத்திற்கு ஆகும் செலவு



2004 ஜூலை 31]

ரூ.50,000/-க்கு மேல் இருந்தால் வாரியத்திற்கு ஆகும் மொத்த செலவுத் தொகையைக் கட்டணமாகச் செலுத்தி முன்னுரிமை பெற்று மின் இணைப்பு பெற்றுக்கொள்ளலாம்.

7—

## மின் இணைப்பு

**வினா எண் 14445—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலும் எடப்பாடி சங்ககிரி தொகுதியிலும் உள்ள வைப்புத் தொகை கட்டமுடியாத சிறு விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க உடனே அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்களிடம் வைப்புத் தொகை எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. மாறாக விண்ணப்பதாரர்களிடம் விண்ணப்பப் பதிவுக் கட்டணமாக ரூ.50/- மட்டுமே வசூலிக்கப்படுகிறது. எனவே அனைத்து விவசாய மின் இணைப்புக் கோரும் விண்ணப்பங்களும் எவ்வித பாகுபாடும் இன்றி பதிவு மூப்பு அடிப்படையில் வரிசைக்கிரமமாக குறியீட்டின்படி மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

8—

## மின் ஊழியர்களுக்குக் குடியிருப்புகள்

**வினா எண் 15181—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 110/11 கே.வி. துணை மின் நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு அவ்விடங்களிலேயே குடியிருப்புகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு மின் வாரியத்தில் 110/11 கே.வி. துணை மின் நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு அவ்விடத்திலேயே குடியிருப்புகள் கட்டித்தர தேவைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

**9—**

### பிள்ளையார் குடியிருப்பு

**வினா எண் 16411—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, பிள்ளையார் குடியிருப்பு கிராம மக்கள் மின்சாரக் கட்டணத்தை பிள்ளையார் குடியிருப்பு கிராமத்திலேயே செலுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பிள்ளையார் குடியிருப்பில் முகாம் வசூல் மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு தற்போது பிள்ளையார் குடியிருப்பு கிராமத்தில் முகாம் வசூல் மையம் இயங்கி வருகிறது.*

**10—**

### உயர் நீதிமன்றத்திற்குக் கட்டடம்

**வினா எண் 18367—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*அறந்தாங்கியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றிற்குக் கட்டட வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

*உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. மைய அரசின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் பரிசீலனை செய்யப்படும்.*

**11—**

### சிறப்பு நீதிமன்றம்

**வினா எண் 18374—திரு. எச். ராஜா:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தீவிரவாதிகளை பல நீதிமன்றங்களுக்கும் கூட்டிச் செல்ல வேண்டிய காரணத்தால் அவர்கள் காவல் துறையினரிடமிருந்து மீட்கப்படுகிற நிலை உள்ளதால் அனைத்து தீவிரவாத வழக்குகளையும் ஒரே சிறப்பு நீதிமன்றம் அமைத்து அந்த நீதிமன்றம் சென்னையிலேயே செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): தீவிரவாத வழக்குகளை விசாரிப்பதற்கென ஏற்கெனவே சென்னை அருகே பூந்தமல்லியில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.*

[2004 ஜூலை 31

12—

## குடும்ப நீதிமன்றம்

**வினா எண் 18670—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் குடும்ப நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

13—

## புதிய கம்பி வடம்

**வினா எண் 19153—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி 3-வது வட்டத்திலுள்ள நகர்கள் மற்றும் பிரதான தெருக்களில் அதிகமாக மின் தடை ஏற்படுவதைக் களைய புதிய கம்பி வடம் (கேபிள்) மற்றும் மின் மாற்றிகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இப்பகுதிகளில் புதிய கம்பி வடம் (கேபிள்) அமைக்கப்பட்டு தடையில்லா சீரான மின் விநியோகம் பராமரிக்கப்படுகிறது.



2004 ஜூலை 31]

14—

## கூடுதல் நீதிமன்றம்

**வினா எண் 19648—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்யும் கூடுதல் நீதிமன்றம் சேலத்தில் ஏற்படுத்த அரசின் செயல்திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

15—

## மின் பொறியாளர் அலுவலகம்

**வினா எண் 20399—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை. வாரியத்தில் தற்போதைய நிதி நிலை காரணமாக அறந்தாங்கியில் செயற்பொறியாளர் அலுவலகம் கட்ட சாத்தியமில்லை.

[2004 ஜுலை 31

16—

## மின் கம்பிகளால் உயிர்ச் சேதம்

**வினா எண் 20530—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பல வருடங்களுக்கு முன்பு பொருத்தப்பட்ட மின் கம்பிகளால் உயிர்ச் சேதம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அம் மின்கம்பி எப்போது சீரமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த மூன்று ஆண்டு காலத்தில் நாட்ராம்பள்ளி தொகுதியில் பழைய மின் கம்பி தானாக அறுந்து விழுந்து உயிர்ச் சேதம் விபத்து ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) பழைய அலுமினிய கம்பிகள் அனைத்தும் ஏற்கெனவே மாற்றப்பட்டுவிட்டன.

17—

## மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 20654—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதியிலுள்ள இலத்தூர் கிராமத்தில் அதிக மின்னழுத்தமுள்ள மின் மாற்றிகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதிய 100 கே.வி.ஏ. திறனுடைய மின் மாற்றி 13-1-2003 அன்று அமைக்கப்பட்டுவிட்டது.

18—

## மின் கட்டண பாக்கித் தொகை

**வினா எண் 20722—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்திற்கு மின் கட்டணம் பாக்கி வைத்துள்ள தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) பாக்கித் தொகை எவ்வளவு?

(இ) அவற்றை வசூலிக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின்சார வாரியத்துக்கு மின் கட்டணம் பாக்கி வைத்துள்ள தொழிற்சாலைகள் எண்ணிக்கை - 653.

(ஆ) மின் கட்டண பாக்கித் தொகை 30-4-2003 அன்று வரை ரூ.494.41 கோடி.

(இ) ஆம்.

19—

## மின் நிலையத்தின் கூடுதல் உற்பத்தித் திறன்

**வினா எண் 20723—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் மொத்த அளவு (எம். டபிள்யூ) எவ்வளவு?

(ஆ) அது தமிழகத்தின் மின்தேவைக்குப் போதுமானதாக உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இயங்கும் மின் நிலையங்களில் மொத்த உற்பத்தித் திறன் 8240 மெகாவாட்டுகள் ஆகும்.

(ஆ) இதுவரை எட்டப்பட்டுள்ள உச்ச மின் தேவை 6960 மெகாவாட்டாகும். எதிர்வரும் 2003-2004 ஆம் ஆண்டில் மின் தேவை 7600 மெகாவாட்டாகவும், சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 13.3 கோடி யூனிட்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கையிருப்பிலுள்ள நிறுவு திறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் நிறுவு திறன் ஆகியவற்றைக் கொண்டு மின் தேவையை நிறைவேற்ற முடியும்.

**20—**

### அனல் மின் நிலையம்

**வினா எண் 21555—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க கீழ்க்கண்ட சிரமங்களினால் அரசிடம் கருத்துரு எதுவும் இல்லை.



2004 ஜூலை 31]

பிரதான இயந்திரங்கள் அமைப்பதற்கு ஏதுவாக உள்ள இடத்தைத் தயார் செய்வதற்காக, தற்சமயம் இயங்கி வரும் 4-வது 210 மெகாவாட் அலகுக்கு அருகில் 30 மீட்டர் உயரமுள்ள மலையை கவனமாக தகர்த்து அகற்ற வேண்டியிருக்கும்.

குளிர்ந்த மற்றும் சூடான நீர் நிலத்தடி வரத்து வழி அமைப்பதற்காக மலையை கணிசமான நீளத்திற்கும், ஆழத்திற்கும் குடைய வேண்டியிருக்கும்.

மேட்டூர் உள்நாட்டில் அமைந்திருப்பதால் துறைமுகங்களுக்கு அருகில் உள்ள அனல் மின் நிலையங்களுடன் ஒப்பிடும்போது நிலக்கரி கொண்டுவர அதிகச் செலவாகிறது.

**21—**

### மின் இழப்புகள் சீர்செய்தல்

**வினா எண் 21580—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கம்பித் தொடரில் மின் இழப்புகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த அரசிடம் நவீன உத்திகள் பரிசீலனையில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்களை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின் இழப்பைக் குறைப்பதற்காக ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி பலன் தந்துள்ள உத்திகளைத் தவிர வேறு நவீன உத்திகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2004 ஜூலை 31

**22—**

**மின் பொறியாளர் அலுவலகம்**

**வினா எண் 22784—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் மின்சார வாரிய செயற் பொறியாளர் அலுவலகம் நடப்பு நிதியாண்டில் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகரில் மின்வாரிய செயற் பொறியாளர் அலுவலகம் நடப்பு நிதியாண்டில் துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**23—**

**உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 23266—திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரியில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 462, உள் (நீ.ம.3) துறை, நாள் 4-5-2001-ல் நாங்குநேரியில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

**24—**

**மின் விநியோகம்**

**வினா எண் 24239—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பூலாங்கால் பகுதியில் மின் கம்பிகள் மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பூலாங்கால் பகுதியில் மொத்தம் ஆறு எண்ணிக்கை மின் மாற்றிகள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் பூலாங்கால் பகுதியில் உள்ள வீடுகள், தெரு விளக்குகள் மற்றும் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் விநியோகம் செய்து வருகின்றன.

பூலாங்கால் பகுதியில் அமைந்துள்ள மின் மாற்றிகளில் மின்பாதைகளில் பூரண திறன் பெற்ற மின் கம்பிகளே அமையப்பெற்றுள்ளன. மின்பாதையில் ஆரம்பத்தில் மின்மாற்றியில் 230 வோல்ட் அளவும், முடிவில் 215 வோல்ட் மின் அளவும் இருப்பதால் குறைந்த மின் அழுத்தக் குறைபாடு எதுவும் இல்லை. எனவே மின் கம்பிகள் யாவும் ஏற்கெனவே மாற்றி அமைக்கப் பட்டுவிட்டதாலும், மின் அழுத்தம் சீரான முறையில் இருப்பதாலும் தற்சமயம் மாற்றி அமைக்கப்பட வேண்டிய மின் கம்பிகள் எதுவும் இல்லை.

[2004 ஜூலை 31

**25—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 25627—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது தொடங்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மாமல்லபுரத்தில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு தமிழ்நாடு மின்வாரியத்தின் 10-வது பெருந்திட்டம் பகுதி 3-ல் பரிசீலனையில் உள்ளது. இதன் திட்ட மதிப்பீடு சுமார் ரூ.180 இலட்சங்கள் ஆகும். இத்துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தைப் பெற்று, துணை மின் நிலையம் 2003-2004-க்குள் அமைக்கப்படும் என தமிழ்நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது.*

**26—**

## மின் நிலையத்தில் கூடுதல் அளவிடுகள்

**வினா எண் 26777—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்க கூடுதலாக அளவீடுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனல் மின் நிலையத்தில் கூடுதல் அளவீடுகள் அமைக்கும் திட்டம் எதுவும் வாரியத்திடம் தற்சமயம் இல்லை.*

**27—**

## அனல் மின் நிலைய தொழிலாளர் நலன்

**வினா எண் 26786—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பணிபுரியும் அனைத்து நிரந்தரத் தொழிலாளர்களுக்கும் குடியிருக்க அனல் மின் நிலையம் மூலம் அடுக்குமாடி வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 2685. தற்பொழுது உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 1290. அனைத்து நிரந்தரத் தொழிலாளர்களுக்கும் அடுக்குமாடி வீடு கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை. தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலைமைக்கிணங்க மேட்டூரில் மற்ற வட்டங்களில் பொறுப்பிலுள்ள பழைய குடியிருப்புகளைச் சீர் செய்யவும், அடுக்குமாடிக் குடியிருப்புகள் புதியதாக கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 180 பேருக்கு குடியிருப்பு வசதி செய்து தரப்படவுள்ளது.*

*(ஆ) நிதி நிலைமைக்கேற்ப இது பரிசீலிக்கப்படும்.*

**28—**

### நீதிமன்றம் துவங்குதல்

**வினா எண் 27552—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தனி தாலுகா ஆக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாகி விட்டதால் நீதிமன்றங்கள் எடப்பாடியில்துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போதைக்கு இல்லை.

**29—**

### தனி நீதிமன்றம்

**வினா எண் 27558—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வருகின்ற வழக்குகளை விசாரிக்க தருமபுரி மாவட்டத்தில் அரசு ஒரு தனி நீதிமன்றம் அமைக்குமா?.*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





**30—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 31041—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி வட்டம், வல்லம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வல்லம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

**31—**

### மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றுதல்

**வினா எண் 31140—திரு. ராதாரவி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, கோட்டூர்புரம் மற்றும் மடுவங்கரை பகுதிகளில் மின் கம்பிகளை (Underground Cables) பூமிக்கடியில் பதிக்க வேண்டிய அவசியத்தை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணி மேற்கொள்ளப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை, கோட்டூர்புரம் மற்றும் மடுவங்கரை பகுதிகளில் மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. கிண்டி கோட்டம் மடுவங்கரை பகுதியில் 5 திட்ட மதிப்பீடுகள் ரூ.6.97 இலட்சத்தில் அனுமதிக்கப்பட்டு வேலை துவங்கியிருக்கிறது. மேலும் அடையார் கோட்டத்தில் 9 மதிப்பீடுகள் ரூ.35 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு அனுமதி வழங்கும் நிலையில் உள்ளது.*

*(ஆ) இதற்கு அதிக செலவாகும் என்பதால் படிப்படியாக செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**32—**

## மின் கம்பி வடங்கள் பதித்தல்

**வினா எண் 31144— திரு. ராதாரவி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, சைதாப்பேட்டை தொகுதியிலுள்ள 132-வது வட்டத்தில் மேல்நிலை மின் கம்பிகள் அடிக்கடி பழுதுபடுவதால் பூமிக்கடியில் மின் கம்பி வடங்கள் பதிப்பதற்கான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, சைதாப்பேட்டை தொகுதியிலுள்ள 132-வது வட்டத்தின் மேல் நிலைக் கம்பிகள் அடிக்கடி பழுதுபடுவதால் பூமிக்கடியில் மின் கம்பி வடங்கள் பதிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு பெருமாள் கோவில் தெரு, நியூ காலனி தெரு, வள்ளுவர் தெரு மற்றும் அண்ணா தெருவில் ஒவ்வொரு தெருவிற்கும் ரூ.10 இலட்சம் செலவில் மின் கம்பி வடம் பதிக்கப்பட்டுவிட்டன.*





**33—**

## தனி மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 31145—திரு. ராதாரவி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, சைதாப்பேட்டை தொகுதி பார்சன் நகரில் அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுவதால் அங்கு தனி மின் மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மின் தடை நீக்கப் பிரிவிலும், சைதை மேற்குப் பிரிவு அலுவலக ஆவணங்களைப் பார்த்ததில் கடந்த மூன்று மாதங்களில் பார்சன் நகரில் இருந்து மின் தடங்கல் புகார் எதுவும் வரவில்லை. 15-3-2003 அன்று பார்சன் நகருக்கு மின்சாரம் அனுப்பும் மின் மாற்றியில் மின் பளுவினையும், மின் அழுத்தத்தையும் அளந்து பார்த்ததில் மின் பளு மின் மாற்றியின் திறனுக்குள் இருப்பதாகவும் மின் அழுத்தம் சரியான அளவில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. அதனால் இங்கு தனி மின் மாற்றி அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.*

**34—**

## ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுதல்

**வினா எண் 32010—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் 23-வது வட்டம் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகள் தங்கும் இல்லங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இத்தகு செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

35—

## மின் பற்றாக்குறையைக் களைதல்

**வினா எண் 34757—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, வாளாடி பகுதியிலுள்ள மின் பற்றாக்குறையைக் களைய அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

லால்குடி தொகுதி, வாளாடி பகுதியில் உள்ள மின் அழுத்தக் குறையை நிவர்த்தி செய்யும்பொருட்டு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

36—

## உயர் அழுத்த மின் பாதை அமைத்தல்

**வினா எண் 36529—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நிலவும் மின் தடையைச் சரிசெய்ய கள்ளக்குறிச்சி துணை மின் நிலையத்திலிருந்து சங்கராபுரம் துணை மின் நிலையத்திற்குப் புதியதாக உயர் அழுத்த மின் பாதை அமைக்க ஒப்புதல் அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம். திருக்கோவிலூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நிலவும் மின் தடையைச் சீர்செய்ய 110 கி.வோ. உயர் அழுத்த மின் பாதை கள்ளக்குறிச்சி துணை மின் நிலையத்திலிருந்து சங்கராபுரம் துணை மின் நிலையத்திற்குப் புதியதாக நிறுவ நடப்பு (2003-2004) நிதி ஆண்டில் முடிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.

(ஆ) நடப்பு நிதி ஆண்டில் பணிகளை முடித்து உபயோகத்திற்குக் கொண்டுவர ஆவன செய்யப்பட்டு வருகிறது.

37—

## துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 38960—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் 66/11 கி.வோ. வழித்தட துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் கருத்துரு தற்போது ஏதும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இல்லை.

[2004 ஜூலை 31

**38—**

## காற்றாலைகள் மூலம் மின்சாரம்

**வினா எண் 41350—திரு. ச. ராமராஜ்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*போடிநாயக்கனூர் தொகுதி, தேவாரம் பகுதியிலிருந்து சில்லமரத்துப்பட்டி பகுதிவரை காற்றாலைகள் மூலம் மின்சாரம் எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**39—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 41832—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உடுமலைப்பேட்டை கிழக்கு பகுதி, பாப்பான் குளத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*உடுமலைப்பேட்டை கிழக்குப் பகுதி, பாப்பான் குளத்தில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஏதும் இல்லை.*



2004 ஜூலை 31]

**40—**

## மின் உற்பத்தி நிலையத் திட்டம்

**வினா எண் 41835—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வட சென்னை பகுதியில் அமைக்க உள்ள மின் உற்பத்தி நிலையத் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு மின்சார வாரியம் இந்திய அரசு நிறுவனமான தேசிய அனல் மின் கழகத்துடன் கூட்டாகச் சேர்ந்து வட சென்னையில் 2X500 மெகாவாட் அனல் மின் நிலையம் நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்காக தேசிய அனல் மின் கழகம்-தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் என்ற ஒரு கூட்டு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தை நிறுவுவதற்காக திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, குருவி மேடு சடையன் குப்பம்/வல்லூர் கிராமத்தில் உள்ள உப்புத் துறையைச் சேர்ந்த சுமார் 956 ஏக்கர் நிலங்கள் மற்றும் 882 ஏக்கர் தனியார்/தரிசு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.*

*இத்திட்டத்திற்கான நிலத்தைக் குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்வதற்காக உரிய அதிகார அமைப்புகளின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக நில திட்ட அட்டவணை துரிதமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. விவரங்கள் முடிவு செய்யப்பட்டதும் வருவாய் அதிகாரிகள் மூலம் நிலத்தைக் கையகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

*அவ்விடத்தில் சுற்றுச் சூழல் தாக்கம் மதிப்பீடு ஆய்வு, இடக்கிடக்கை ஆய்வு, முதனிலை புவியியல் தொழில்நுட்பப் புலனாய்வு மற்றும் பிற குறிப்பிட்ட ஆய்வுகள் மேற்கொள்ளத் தேவையான அனுமதி மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மற்றும் துணை உப்பு ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவற்றின் முன்னேற்றம் பற்றி ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.*

[2004 ஜூலை 31

41—

**துணை மின் நிலையங்களில் மின் சக்தி அதிகரிப்பு**

**வினா எண் 42038—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியப் பகுதிகளிலுள்ள துணை மின் நிலையங்களில் மின் சக்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தினை 110/33-11 கி.வோ. துணை மின் நிலையமாக உயர்த்திட அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*(ஆ) நடப்பு நிதி ஆண்டில் (2003-2004) பணிகள் முடிந்து துணை மின் நிலையம் உபயோகத்திற்குக் கொண்டுவர அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.*

42—

**துணை மின் நிலையம்**

**வினா எண் 42039—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாமல்லபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மாமல்லபுரத்தில் (பூஞ்சேரியில்) 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.*

*(ஆ) துணை மின் நிலையத்திற்குண்டான நிலம் கையகப்படுத்திட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலம் கிடைத்தவுடன் பணிகள் தமிழ்நாடு மின்வாரியத்தால் துவங்கப்படும்.*

43—

**உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 43168—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டுதல் உள்ளிட்ட 74 செயற்குறிப்பு மைய அரசின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் நிதி உதவி கோரி மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் நிதி உதவி கிடைத்ததும் இச்செயற்குறிப்புமீது நடவடிக்கை எடுக்கப்படும்.*

44—

### துணை மின் நிலையம்

**வினா எண் 45700—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் மாதிரி வேளூர், கொண்டல் ஊராட்சிகளிலும் மற்றும் மாதிரி வேளூர் பூங்கொடி கிராமத்திலும் 33 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூங்கொடி கிராமத்தில் ஒரு ஆளில்லா 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பெறப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மேற்படி துணை மின் நிலையம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகால மிகு பகுதி 2003-2007-க்குள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.*

45—

### துணை மின் நிலையம்

**வினா எண் 45704—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி துணை மின் நிலையத்தினை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாக மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

46—

### அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

**வினா எண் 49112—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கூடுதலாக கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கட்டடங்கள் கட்டுவதற்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ. 55 இலட்சம் அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சிறப்பு சட்டப் பள்ளி செயல்படுவதற்கென ஒரு கட்டடம் பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. அதில், தரைத் தளத்திற்கான கட்டுமான வேலைகள் முழுமையடையும் தருவாயில் உள்ளன.*

[2004 ஜூலை 31

47—

## சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம்

**வினா எண் 49272—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் அரசு சட்டக் கல்லூரி நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால், சேலம், தேனி, நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரிகள் (Constituent Colleges) தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில், சேலத்தில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

48—

## சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம்

**வினா எண் 52402—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, புத்தூர் ஊராட்சி, சீனிவாசா சுப்பராயர் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி அருகில் சட்டக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால், நாகப்பட்டினம், தேனி, சேலம், கன்னியாகுமரி மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதிதாக சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரிகள் (Constituent Colleges) தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

49—

## திருக்கோயில் திருப்பணித் திட்டம்

**வினா எண் 54603—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், ருத்ராங்கோயில், ருத்ரகோட்டி திருக்கோயில் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், ருத்ராங்கோயில், ருத்ரகோட்டி திருக்கோயில் பழுதடைந்துள்ளதால், திருப்பணி செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பொறியாளரால் ரூ.6,40,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நன்கொடையாளர்கள் மூலம் சில முக்கியத் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள திருப்பணிகள் முடிக்கப்படவுள்ளன. திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டவுடன் மகாகும்பாபிஷேகம் செய்யப்படும்.

[2004 ஜூலை 31

50—

## திருக்கோயிலுக்கு புதிய தேர்

**வினா எண் 7175—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை அருள்மிகு மாரியம்மன் கோயில் தேர் எரிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய தேர் உருவாக்க நிதியுதவி செய்யுமா?

(இ) புதிய தேர் உருவாக்க குழு அமைக்க அரசு அனுமதி வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செவ்வாய்ப்பேட்டை பகுதியிலுள்ள திரு. கி. மாணிக்கம் செட்டியார் மற்றும் எட்டு நபர்கள் சேர்ந்து புதிதாக தேர் உபயமாக செய்துதர சம்மதித்துள்ளனர். ரூ.32.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தேர் செய்வதற்கு பெறப்பட்ட வரைபடத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி உபயதாரர் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதால், புதிய தேர் உருவாக்க நிதியுதவி செய்யும் அவசியம் எழவில்லை.

(இ) புதிய தேர் செய்யும் மொத்த செலவினத்தையும் உபயதாரர்கள் ஏற்க முன்வந்துள்ள நிலையில் தனியாக இதற்கென குழு அமைக்கும் அவசியம் எழவில்லை.

51—

## திருக்கோயிலை சீரமைக்கும் பணி

**வினா எண் 10473—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையிலுள்ள பழமையான சென்றாயப் பெருமாள் கோயிலைப் புதுப்பித்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையிலுள்ள பழமையான சென்றாயப் பெருமாள் திருக்கோயில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருவதால், இத்திருக்கோயிலை திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பாகப் புதுப்பிக்க இயலாது.

52—

## திருக்கோயிலுக்கு ராஜகோபுரம் கட்டுதல்

**வினா எண் 10558—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரம், கோட்டையிலுள்ள பரவாசுதேவ சுவாமி திருக்கோயிலுக்கு 7 நிலைகளைக் கொண்ட ராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தருமபுரி நகர், கோட்டை, அருள்மிகு பரவாசுதேவ சுவாமி திருக்கோயிலில் நிதி வசதி இல்லாததால், 7 நிலைகள் கொண்ட இராஜகோபுரம் கட்ட இயலாது.

**53—**

## திருக்கோயிலை சீரமைத்தல்

**வினா எண் 10817—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் அருள்மிகு சிவபெருமான் திருக்கோயில் மிகவும் பழுதடைந்துள்ளதால், உடன் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் அருள்மிகு சிவபெருமான் திருக்கோயிலுக்கு எவ்வித வருமானமும் இல்லாத நிலையிலும், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் பொதுமக்களை ஈடுபடுத்தி நன்கொடைகள் வசூலிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லாததாலும், உடன் பழுதுபார்க்கும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**54—**

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 12393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில், வெள்ளரி வெள்ளியிலுள்ள பசுபதி ஈஸ்வரர் திருக்கோயிலைப் புதுப்பிக்கவும், தினசரி பூஜைகள் நடைபெறவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில், வெள்ளரி வெள்ளியிலுள்ள அருள்மிகு பசுபதி ஈஸ்வரர் திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.5000/-க்கு உட்பட்டுள்ளதால், ஊரில் உள்ள முக்கியப் பிரமுகர்களுடன் கலந்து பேசி திருக்கோயிலைப் புதுப்பித்து, திருப்பணியினை முடிக்கவும், வாரத்தில் வெள்ளிக்கிழமை மட்டும் நடைபெறும் பூசையை தினசரி ஒரு கால பூசையாக நடத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**55—**

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 12570—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, செம்மேடு கிராமத்தில் பாழடைந்துள்ள சிவன் கோயிலை அரசு புதுப்பித்துத்தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், செம்மேடு கிராமத்திலுள்ள அருள்மிகு காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோயில் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்ய சுமார் ரூ.10.00 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. திருப்பணி வேலைகளை மேற்கொள்ள திருக்கோயிலில் நிதி வசதியில்லை. திருப்பணி செய்யும் செயற்குறிப்பும் தற்போது இல்லை. திருப்பணி செய்ய பொது மக்களும், உபயதாரர்களும் ஆர்வமுடன் முன்வரும் நிலையில், அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். நன்கொடையாளர்கள் கிடைத்ததும், திருப்பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2004 ஜூலை 31

56—

## திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்துதல்

**வினா எண் 18431—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூரில் உள்ள பழமை வாய்ந்த அருள்மிகு சக்தி விநாயகர் கோயிலைச் செப்பனிட்டு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை-11, பெரம்பூர், 12, நெல்வயல் சாலை, சர்வே எண்.467/18-ல் அமைந்துள்ள அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில் உபயதாரர்கள் மூலம் பழுதுபார்க்கப்பட்டு 6-2-2003 நாளன்று திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டது.

57—

## திருக்கோயிலுக்கு மின் இணைப்பு வசதி

**வினா எண் 18970—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகா, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியிலுள்ள கன்னுகுயினால் ஊரிலுள்ள பழுதடைந்த சிவன் கோயிலை சீர்செய்யவும், புதிய மின் இணைப்பு வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகா, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியிலுள்ள கன்னுகுயினால் ஊரிலுள்ள ஓட்டுவில்லை கட்டடத்தில் தற்போது நல்ல நிலையில் உள்ள சிவன் கோயிலை நிதி வசதி இல்லாத காரணத்தினால், கருங்கற்களால் மாற்றி கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இலவச மின்சாரத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க பரிசீலிக்கப்படுகிறது.

58—

## கலைக் கல்லூரிக்குக் கட்டட வசதி

**வினா எண் 19063—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையிலுள்ள ஸ்ரீதேவி குமரி மகளிர் கலைக் கல்லூரி ஒரே வளாகத்தில் செயல்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி ஒரே வளாகத்தில் செயல்பட தேவைப்படும் கட்டடங்கள் கட்ட நடவடிக்கையில் உள்ளது.

(ஆ) 2003-2004 ஆம் கல்வி ஆண்டில் மேற்படி கல்லூரி ஒரே வளாகத்தில் செயல்படும்.

[2004 ஜூலை 31

59—

## குளத்தை தூர்வாரிச் செப்பனிடுதல்

**வினா எண் 20418—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி அருகிலுள்ள எட்டியத்தளி சனீஸ்வர பகவான் ஆலயக் குளத்தை தூர்வாரிச் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*இல்லை.*

60—

## திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 20644—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகரம், திருவப்பூர், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவப்பூர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



2004 ஜூலை 31]

61—

## திருக்கோயில் கும்பாபிஷேகப் பணிகள்

**வினா எண் 20799—திரு. பி.கே.டி. நடராஜன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சித்தரேவு கிராமத்தில் உள்ள வரதராஜப்பெருமாள் திருக்கோயில் கும்பாபிஷேகப் பணிகள் பாதி முடிவுற்ற நிலையில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பணி நிறைவு செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இத்திருக்கோயிலின் திருப்பணிகள் செய்வதற்கு நிதியில்லாத காரணத்தால் நிறைவுபெறாத நிலையில் நின்றுவிட்டது. எனினும் இத்திருக்கோயிலுக்கு, திருப்பணிக் குழு அமைத்து பொதுமக்களிடம் இருந்து நன்கொடை வசூல் செய்யும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் மேற்படி ஆலயத் திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட முன்வரும் பட்சத்தில் அறநிலையத் துறையும் ஒத்துழைப்பு நல்கும்.*

62—

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 20871—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை கிராமத்தில் அமைந்துள்ள களப்பாளீஸ்வரர் கோயில் மிகவும் பழுதடைந்துள்ளதால், இதனை செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தர் கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபம் ஒன்று ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள நிலையில் புதியதாக திருமண மண்டபம் கட்டும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**66—**

## பக்தர்களுக்கு பாதுகாப்பு, சுகாதார வசதிகள்

**வினா எண் 22213—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு பவுர்ணமி அன்று கிரிவலம் வரும் பக்தர்களுக்கு அரசு செய்து வரும் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகள் கூடுதலாகச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*கிரிவலப் பாதையில் திருக்கோயில் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தற்போது 41 இடங்களில் 161 குழாய்கள் மூலம் குடிநீர் வசதியும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே 28 எண்ணிக்கையில் கழிவறைகளும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே 8 குளியல் அறைகளும், ஆண்களுக்கான ஓய்வு அறைகள் இரண்டும் மற்றும நீர்த்தேக்கத் தொட்டிகள் 4 இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள நிலையில், மேற்கூறிய வசதிகள் சேவார்த்திகளுக்குப் போதுமானதாக உள்ளன. இது தவிர மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினர் மூலம் கிரிவலப் பாதையில் பௌர்ணமி நாளன்று சேவார்த்திகள் வசதியாக கிரிவலம் செல்வதற்கு சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.*



**67—**

## திருக்கோயிலுக்கு புதிய தேர்கள் செய்தல்

**வினா எண் 25601—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் ஐந்து தேர்கள் புதிதாக செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் 5 மரத்தேர்கள் இருந்தன. கடந்த 24-08-1987 அன்று ஏற்பட்ட தீ விபத்தில், 2 தேர்கள் முற்றிலும் எரிந்து சாம்பலாகிவிட்டன. மீதமுள்ள 3 தேர்கள் நல்ல நிலையில் உள்ளன. எரிந்துவிட்ட 2 தேர்களுக்குப் பதிலாக, புதிய மரத்தேர் செய்ய ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டில் பூம்புகார் நிறுவனம் மூலம் 80% மரங்கள் சேகரம் செய்யப்பட்டும், இப்பணிக்கு அரசு நிதியாக ரூ.14,45,000/- வழங்கப்பட்டும், மீதமுள்ள தொகை பொதுமக்கள் நன்கொடையாக பெறப்படவும் உள்ளது. தேர் திருப்பணி ஜனவரி 2003-ல் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தேர் திருப்பணி முடிவுபெற்றதும், அடுத்தகட்டமாக அருள்மிகு சண்டிகேஸ்வரருக்கு புதிய மரத்தேர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**68—**

## திருக்கோயில் தேர்த் திருப்பணி

**வினா எண் 25641—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை அருள்மிகு மாரியம்மன் கோயில் தேர் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?*

[2004 ஜூலை 31

(ஆ) ஆம் எனில், எப்போது தேர்த் திருப்பணி நடைபெறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிய தேர் ரூ.26,00,000/- மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் செய்ய தீர்மானிக்கப்பட்டு, மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்கப்பட்டு முடிக்கப்படும்.

**69—**

## கோயில் திருக்குளத் திருப்பணி

**வினா எண் 25642—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் சுகவனேஸ்வரர் ஆலயத் திருக்குளத்தில் மழைநீர் சேகரிக்கும் திட்டத்தின்கீழ், திருக்குளத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளம் திருப்பணி செய்யப்பட்டு, திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது.

(ஆ) வினா எழாது.



2004 ஜூலை 31]

**70—**

## திருக்கோயில் திருப்பணி மற்றும் கும்பாபிஷேகம்

**வினா எண் 25643—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி பகுதி, நெத்திமேடு அருள்மிகு காளியம்மன் கோயிலில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகர், நெத்திமேடு அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் திருப்பணிகள் தற்போது 90% முடிக்கப்பட்டுள்ளது என்பதையும், அனைத்து பணிகளையும் முடித்து 26-1-2004, 02-02-2004 மற்றும் 04-02-2004 ஆகிய மூன்று தேதிகளில் ஒன்றில் மகா கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**71—**

## புதிய தேர் செய்தல்

**வினா எண் 27172—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சிங்கப்பெருமாள்கோயில் அருள்மிகு நரசிங்கப்பெருமாள் தேர் முழுவதும் சிதைந்துவிட்டது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய தேர் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2004 ஜுலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சிங்கப்பெருமாள்கோயில், அருள்மிகு நரசிங்கப்பெருமாள் திருக்கோயிலின் வருடாந்திர 7-ஆம் நாள் பிரம்மோற்சவ உற்சவத்திற்கு பயன்பட்டு வந்த மரத்தேர் பழுதடைந்து விட்டதால், உபயதாரர்களைக் கொண்டு, துறையின் அனுமதியுடன் ரூ.25,00,000/- மதிப்பீட்டில், புதிய திருத்தேர் செய்யும் பணியை துவக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.*

**72—**

## கிரிவலப் பாதை அமைத்தல்

**வினா எண் 27227—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம், நெத்திமேடு கரியபெருமாள் மலைக்கோயிலில் கிரிவலப் பாதை அமைக்க அரசு நிதியுதவி செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*சேலம், நெத்திமேடு, கரியபெருமாள் கோயிலில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் கிரிவலப் பாதை அமைக்க இயலாது.*

**73—**

## திருக்கோயில் கும்பாபிஷேகம்

**வினா எண் 33765—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளத்தூர் தொகுதி, கொடும்பாளூரில் உள்ள பழங்கால மூவர் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய அரசு முன்வருமா?*



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், கொடும்பாளூர், அருள்மிகு மூவர் கோயில், புதுக்கோட்டை திருக்கோயில்களுடன் இணைந்த திருக்கோயில். இத்திருக்கோயில் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டு மத்திய தொல்பொருள் துறையின் கண்காணிப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இத்திருக்கோயில் திருப்பணி வேலைகளை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. ஆயின், மத்திய தொல்பொருள் துறை முன் வந்தால், தேவையான ஒத்துழைப்பினை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை தரும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

**74—**

## ஆலயத்தின் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 34758—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, சென்னை, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான மதிப்புமிக்க மனைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான மதிப்புமிக்க மனைகள் சுமார் 227 நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதில் சென்னை-41, பாலவாக்கம் கிராமத்தில் 6.79 ஏக்கர் மனைகளை 179 பேரும், திருவான்மியூரில் 60,657 சதுர அடி நிலப்பரப்பை 48 பேர்களும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள். இவர்களை வெளியேற்ற சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

75—

## கோயில் சிற்பங்களை சீரமைத்தல்

**வினா எண் 35647—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், குடுமியான் மலையிலுள்ள பழங்காலக் கோயில்கள் சிற்பங்களை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், குடுமியான் மலையிலுள்ள அருள்மிகு சிகாகிரீஸ்வரர் திருக்கோயில், புதுக்கோட்டை திருக்கோயில்களுடன் இணைந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் இந்திய தொல்பொருள் பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலின் பழங்கால கோயில் சிற்பங்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் மூலம் நன்கு பாதுகாக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிப்பு செய்து வருகிறார்கள். மத்திய தொல்பொருள் துறை மூலம் பழமை மாறாமல் மராமத்து வேலைகளையும் செய்து வருகிறார்கள்.

76—

## பணி நியமனம்

**வினா எண் 35798—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, பண்பொழியில் உள்ள அருள்மிகு திருமலைக்குமாரசாமி கோயிலுக்குரிய 585 ஏக்கரில் உள்ள 12,000 தென்னை மற்றும் மா, பலா மரங்களைப் பராமரிக்க காவல் பணி 2-ம், துப்புரவு பணி, மடப்பள்ளி பணி, வாசல் பலவேலை, காணியாட்சி மற்றும் பரிச்சாரகர் போன்ற பணிகளில் நியமனம் செய்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயில் பணியாளர்களின் ஊதிய செலவுகள் திருக்கோயில் வருவாயில் 40 விழுக்காடுகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பண்பொழி அருள்மிகு திருமலைக்குமாரசாமி திருக்கோயில் பணியாளர்களின் ஊதியங்கள் தற்போது 13.20 விழுக்காடாக உள்ளது. திருக்கோயில் வருவாயை உயர்த்திய பின் காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

77—

## திருக்கோயில் கும்பாபிஷேகம்

**வினா எண் 35893—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, தங்கசாலையிலுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணியசாமிக் கோயிலில் வைதீக முறைப்படி 1993 ஆம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் நடைபெறாததால் கும்பாபிஷேகம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சென்னை, தங்கசாலை, அருள்மிகு சிவசுப்பிரமணியசாமி திருக்கோயில் திருப்பணி ரூ.7,00,000/-மதிப்பீட்டில் உபயதாரர்களால் செய்யப்பட்டு வருகிறது. வரும் ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**78—**

## தெப்பக்குளத்தை தூர்வாருதல்

**வினா எண் 36984—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் தெப்பக்குளத்தை தூர்வாரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் தெப்பக்குளத்தில் ரூ.6.50 இலட்சம் செலவில் தூர்வாரும் பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டு, 2003ஆம் ஆண்டு ஆடிக் கிருத்திகைப் பெருவிழா தெப்பத் திருவிழா நல்லமுறையில் நடைபெற்றது.

**79—**

## கோயில் நிலங்களுக்கு வாடகை நிர்ணயம்

**வினா எண் 38282—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் நிலங்களுக்குரிய சொந்தமான மனைகள், குடியிருப்புகள் மற்றும் கட்டடங்களுக்கு மதிப்பு அடிப்படையில் உள்ளதைவிட கூடுதலாக வாடகை நிர்ணயம் செய்யப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வாடகை நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயில் நிலங்களுக்குரிய சொந்தமான மனைகள், குடியிருப்புகள் மற்றும் கட்டடங்களை வாடகைக்கு விடும்போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் அரசால் 1999 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறைகளில் கட்டடத்தின் மதிப்பில் குறிப்பிட்ட விழுக்காடு அல்லது அப்பகுதியில் நிலவும் தற்கால வாடகை இவற்றில் எது அதிகமோ அத்தொகை நியாய வாடகை நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

**80—**

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 39349—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், அருள்மிகு ஸ்தலசயனப்பெருமாள் திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம் அருள்மிகு ஸ்தலசயனப்பெருமாள் திருக்கோயிலில் முழு அளவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 13-5-1998 அன்று மகாசம்ப்ரோக்ஷனம் நடைபெற்று நல்ல நிலையில் உள்ளது. எனவே தற்போது மேற்படி திருக்கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**81—**

## சங்கு தீர்த்தக் குளத்தைப் பராமரித்தல்

**வினா எண் 39356—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் சங்குதீர்த்தக் குளத்தைப் பழுதுபார்த்து, பராமரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் சங்குதீர்த்தக் குளத்தைப் பழுதுபார்த்து பராமரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இக்குளம் சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்திருக்குளத்தின் படிக்கட்டுகளைச் சீரமைக்கவும், மதில் சுவர் அமைக்கவும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.9,80,000/- மதிப்பீட்டில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு திருக்கழுக்குன்றம் பேரூராட்சி மூலம் பணிகள் துவங்கப்பட உள்ளது.

**82—**

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 43978—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், நாமக்கல்-திருச்சி சாலையில் அ. மேட்டுப்பட்டி கிராமத்தில் கரைபோட்டான் ஆற்றின் கரையில் உள்ள சிவகாமசுந்தரி சமேத சிதம்பர ஈஸ்வரர் ஆலயம் இடிந்து விழும் நிலையிலுள்ளதால், அதனைப் புதுப்பித்து சீரமைக்கவும், கும்பாபிஷேகம் நடத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல்-திருச்சி சாலையில் அ. மேட்டுப்பட்டி கிராமத்தில் கரைபோட்டான் ஆற்றங்கரையில் உள்ள அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத சிதம்பர ஈஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதாலும், ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் இல்லாத திருக்கோயில் என்பதாலும், இதனைப் புதுப்பிக்க இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வாயிலாக எவ்வகை நிதி உதவியும் வழங்க வழிவகை இல்லை.

**83—**

## திருக்கோயிலுக்கு மின் விளக்கு அலங்காரம்

**வினா எண் 45663—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை திருக்கோயிலுக்கு நிரந்தரமாக மின் விளக்கு அலங்காரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் மலைக்கு நடந்துவரும் பாதை, வாகனங்கள் வரும் பாதை, தங்கரதம் செல்லும் பாதை, திருக்கோயில் சுற்றி வரும் பாதை, முன் மண்டபம், அர்த்த மண்டபம், சேவார்த்திகள் உணவருந்தும் கூடம், சித்தர் சந்நிதி போகும் வழி ஆகியவற்றில போதிய அளவு மின் விளக்குகள் நிரந்தரமாக அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விளக்குகளே. திருக்கோயிலுக்கும்,

மருதமலைக்கும் போதிய அளவு பொலிவுடன் தோற்றமளிக்கின்ற வகையில் அமைந்துள்ளதால், கூடுதலாக நிரந்தர மின்விளக்கு அலங்காரம் அவசியமில்லை. விழாக் காலங்களில், கூடுதல் மின்விளக்கு அலங்காரம் அவ்வப்போது செய்யப்பட்டு வருகிறது.

**84—**

## திருத்தேரைப் புதுப்பித்தல்

**வினா எண் 47493—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சி, எட்டாவது கோட்டத்திலுள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் திருத்தேர் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அத்தேரைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* இத்திருத்தேர் பழுதுபட்டு சிதிலமடைந்துள்ளதால் புதுப்பிக்க இயலாது என்பதாலும், புதிதாக திருத்தேர் செய்ய தோராயமாக ரூ.20.10 இலட்சம் செலவு பிடிக்கும் என்பதாலும், இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தாலும், பழுதடைந்த திருத்தேரினைப் புதுப்பிக்கவோ அல்லது புதிய தேர் செய்யவோ இயலாத நிலை உள்ளது.

**85—**

## திருக்கோயில் குளத்தைத் தூர்வாருதல்

**வினா எண் 47847—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில், வைத்தியநாதசுவாமி திருக்கோயில் குளத்தினைத் தூர்வாரி, தண்ணீர் நிரப்பிக் கொடுக்க அரசு முன் வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதி, அருள்மிகு வைத்தீஸ்வரன் கோயில், வைத்தியநாத சுவாமி திருக்கோயில் திருக்குளம் தற்போது சுத்தமாகவும் நீர் நிரம்பியும் உள்ளதால், இத்திருக்குளத்தைத் தூர்வாரி, நீர் நிரப்ப வேண்டிய அவசியம் எழவில்லை.

**86—**

## செயற்கை உறுப்பு பொருத்துதல்

**வினா எண் 14109—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாகன விபத்தின்போது உடலுறுப்புகளை இழந்தோருக்கு அரசு செலவில் செயற்கை உறுப்பு பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வாகன விபத்தின்போது உடல் உறுப்புகளை இழந்தோருக்கு அரசு செலவில் செயற்கை உறுப்பு பொருத்தும் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும் அரசு கே.கே. நகர் புனர்வாழ்வு நிலையத்தில் வாகன விபத்தின்போது கைகால்கள் இழந்தோருக்கும் குறைந்த செலவில் செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 2002 ஆம் ஆண்டில் மட்டும் 318 நபர்களுக்கு செயற்கை அவயங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் விவரம்:-

| | |
|---|---|
| செயற்கைக் கால்கள் | 186 |
| செயற்கைக் கைகள் | 132 |

[2004 ஜுலை 31

87—

## ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 16215—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொள்ளிடத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வசதியுடன் 30 படுக்கைகள் கொண்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அமைக்கப்படவேண்டும் என்ற இவ்வரசின் கொள்கையின்படி, மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட தகுதியிருப்பின், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிட வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.*

88—

## ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 16213—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*



2004 ஜுலை 31]

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. ஆனால், மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் தகுதியுடைய ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஒன்றியத்தில் நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் இவ்வாறு மேம்படுத்தப்பட தகுதியுடையதாக இருப்பின் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.*

89—

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 17000—செல்வி சி. கனகதாரா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) திண்டுக்கல் மாவட்டம், விருவீடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு டி.ஜி.ஓ. மருத்துவர் நியமனம் செய்யும் எண்ணம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், விருவீடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு டி.ஜி.ஓ. படித்த பெண் மருத்துவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

[2004 ஜூலை 31

90—

## தரமான மாத்திரைகள்

**வினா எண் 18375—திரு. எச். ராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் பள்ளி மாணவர்கள் இரும்பு சத்துள்ள மாத்திரைகள் உட்கொண்டதால் பாதிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இனி இம்மாதிரியான மாத்திரைகளை வழங்குமுன் அதன் தரத்தினைப் பரிசீலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2002 ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில் ஒரு சில பள்ளி மாணவர்கள் வெறும் வயிற்றில் இரும்புச் சத்து மாத்திரை உட்கொண்டதால் பாதிப்பு ஏற்பட்டு, தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது பள்ளி மாணவர்கள், உணவு உட்கொண்டபின்தான் இரும்புச் சத்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

(ஆ) தரமான மாத்திரைகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் வாங்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

91—

## அவசர ஊர்தி வழங்குதல்

**வினா எண் 23427—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி அரசு பொது மருத்துவ மனைக்கு அவசர ஊர்தி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் ஏற்கெனவே ஒரு அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்) நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இந்த ஊர்தியே இந்த மருத்துவமனைக்குப் போதுமானதாகக் கருதப்படுகிறது. மேலும் ஒரு அவசர ஊர்தி வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

92—

## இரத்த சேமிப்பு வங்கி

**வினா எண் 23432—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில், அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே, இரத்த சேமிப்பு வங்கி ஆகியவை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில், அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு செயல்பட்டு வருகிறது. இரத்த சேமிப்பு வங்கி தொடங்கும் திட்டம் படிப்படியாக செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

93—

## காசநோய்ப் பிரிவுக் கட்டடம்

**வினா எண் 28140—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அரசினர் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தனி காசநோய் பிரிவுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2004 ஜூலை 31

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்தி அமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் செயல்பட்டு வருவதால் காசநோயாளிகளுக்கு தரம் வாய்ந்த மருந்துகள் இலவசமாக வீட்டிற்கு அருகிலேயே கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் காச நோயாளிகளுக்கு உள் நோயாளிகள் சிகிச்சை அவசியமற்றது என்று உலக சுகாதார நிறுவனம் கருதுகின்றது. அது தவிர காசநோயாளிக்கென்று சுமார் 4,000 படுக்கைகள் பல்வேறு மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய நிலையில், தனி காசநோய் பிரிவுக் கட்டடம் சீர்காழி அரசு மருத்துவமனையில் கட்ட அரசுக்கு உத்தேசமில்லை.

**94—**

## சிறப்பு மருந்துவர்களால் சிகிச்சை அளித்தல்

**வினா எண் 28310—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து தாலுகா மருத்துவமனைகளிலும் வாரம் ஒருநாள் அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருநாள் சிறப்பு மருத்துவர்கள் (முடநீக்கியல், புற்றுநோய், நீரிழிவுநோய், காசநோய்) Visiting Doctors என்கிற அளவில் மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தற்போது மேற்குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சைகள் கூடுமானவரை அந்தந்த தாலுகா மருத்துவமனைகளிலேயே தகுதிவாய்ந்த மருத்துவர்களால் அளிக்கப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 31]

**95—**

## மருத்துவமனைக்கு கருவிகள்

**வினா எண் 28552—திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1½ வருட காலத்தில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு வாங்கப்பட்டுள்ள கருவிகள் என்ன?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு ரூபாய்?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு 2000-2001 மற்றும் 2001-2002 நிதியாண்டுகளில் கீழ்க்காணும் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன:

*2000-2001*

| கருவியின் பெயர் | | கருவியின் மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. 300 எம்.ஏ. நுண்கதிர் கருவி | - 1 | 3.5 இலட்சங்கள் |
| 2. டெண்டல் சேர்கள் | - 4 | 8 இலட்சங்கள் |
| 3. அறுவை அரங்கு விளக்குகள் | - 2 | 8 இலட்சங்கள் |

*2001-2002*

| | கருவியின் பெயர் | | கருவியின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அப்பர்/ஜி.ஐ.என்டாஸ்கோப் மற்றும் கொலனாஸ்கோப் | 1 | 8 |
| 2 | அறுவை அரங்கு விளக்குகள் | 3 | 8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | செயற்கை அவயங்கள் பொருத்தும் நிலையத்தை வலுப்படுத்தும் பொருட்டு இன்ஃப்ரா ரெட்லேசர், இன்டர் பெரேன்சியல் தெரபி கன்டினியூவஸ் பல்ஸ்ட் ஷார்ட் வேவ் டயாதெர்மி போன்ற கருவிகள் | | | 3.65 |
| 4 | மயக்கவியல் துறையை வலுப்படுத்தும் பொருட்டு பல்ஸ் ஆக்ஸிமீட்டர்கள் சக்ஸன் அப்பரட்டஸ் மற்றும் லாரிங்காஸ்கோப்புகள் | | | 1.73 |
| 5 | குழந்தைகள் அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு ரேடியண்ட் வார்மருடன் கூடிய நியோனேட்டல் ரிசஸிட்டேசன் யூனிட்டுகள் | | | 4.3 |
| 6 | மைய அரசின் தேசிய புற்றுநோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின்கீழ் டெலிகோபால்ட் தெரபி கருவி | | | 1.50 |
| 7 | சி.டி. ஸ்கேன் | | | 77.50 |
| 8 | எம்.ஆர்.ஐ. ஸ்கேன் | | | 479 |

(ஆ) அவற்றின் மதிப்பு ரூ.751.68 இலட்சங்கள்.

**96—**

## குடும்பக் கட்டுப்பாடு

**வினா எண் 29849—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002-ல் தமிழ்நாட்டில் வாசக்டமி என்ற நவீன முறையில் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட ஆண்கள் எத்தனை பேர்?

(ஆ) திட்டத்தை ஊக்கப்படுத்த அரசின் நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002-ல் தமிழ்நாட்டில் 'வாசக்டமி' குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட ஆண்கள் 507 பேர்.

(ஆ) குடும்ப நலத் திட்டத்தில் ஆண்களின் பங்கேற்பினை ஊக்குவிக்கவும், ஆண் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், பணிகள் முடுக்கிவிடப்பட்டு, களப் பணியாளர்கள் தகுதி வாய்ந்த தந்தையரை அதிக அளவில் குடும்ப நலத் திட்டத்தை ஏற்பதற்கு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**97—**

## உணவுப் பொருள் கலப்படம்

**வினா எண் 30522—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யும் வியாபாரிகள மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1954 ஆம் வருடம் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் (ம) உணவுக் கலப்படத் தடுப்பு விதிகள் 1955-ன்கீழ் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யும் உற்பத்தியாளர்கள் வினியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

98—

## இருதய அறுவை சிகிச்சை அரங்கு

**வினா எண் 30812—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு நாளைக்கு அறுவை சிகிச்சை அரங்கில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகள் எத்தனை?*

*(ஆ) அதில் இருதய சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சைகள் எத்தனை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்குகளில் ஒரு நாளைக்கு சராசரியாக 116 (நூற்று பதினாறு) அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.*

*(ஆ) ஏப்ரல் 2003-லிருந்து தினமும் இரண்டு திறந்த இருதய அறுவை சிகிச்சைகளும் (Open Heart Surgery) குறைந்தபட்சம் மூன்றுமுதல் நான்கு மூடிய இருதய அறுவை சிகிச்சைகளும் (Closed Heart Surgery) செய்யப்படுகின்றன.*

99—

## துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம்

**வினா எண் 31384—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், அக்ராகரம் ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், அக்ராகரம் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. துணை சுகாதார நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. யூனிசெப் மூலம் பெறப்பட்ட நிதியிலிருந்து இத்துணை சுகாதார நிலையத்திற்கான பழுதுகள் சரிபார்க்கப்பட்டது. எனவே, தற்போது துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தரும் திட்டம் எதுவும் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

100—

## மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 32101—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இந்திய மருத்துவத் துறையில் பி.எஸ்., எம்.எஸ். படித்தவர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*இந்திய மருத்துவத் துறையில் பி.எஸ்., எம்.எஸ். படித்தவர்கள் சென்னை மற்றும் கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இதைத்தவிர, மற்ற இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

[2004 ஜூலை 31

101—

## ஊட்டச்சத்து உதவித் தொகை

**வினா எண் 33700—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து உதவித் தொகை நிலுவையை உடனடியாக வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்க வேண்டிய 10 கோடி ரூபாய் மத்திய அரசிடம் வேண்டப்பட்டுள்ளது. மத்திய அரசு இத்தொகையை மாவட்ட ஆட்சியாளருக்கு வழங்கியவுடன், மாவட்ட ஆட்சியாளர் மூலம் நிலுவைத் தொகையை வழங்கிட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.*

102—

## மருத்துவமனையில் படுக்கை வசதி

**வினா எண் 33677—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளை பாய் விரிப்பில் படுக்க வைப்பதை மாற்றி கட்டில் போடப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையின் மொத்த படுக்கை வசதிகள் 1020. ஆனால் சராசரியாக சேர்க்கப்படும் தினசரி உள்நோயாளிகள் எண்ணிக்கை 1098. வார்டுகளில் உள்ள படுக்கை வசதிக்கு மேல்*



2004 ஜூலை 31]

*அதிகப்படியாக வரும் நோயாளிகளை தரையில் பாய் விரித்துப் படுக்க வைத்து சிகிச்சை வழங்கப்படுகிறது. கூடுதல் படுக்கை வசதிகள் செய்து தர தற்பொழுது மருத்துவமனையில் காலியாக கட்டடங்கள் இல்லாததால், புதிய கட்டடம் கட்டி படுக்கை வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

103—

## பல் மருத்துவர் நியமனம்

**வினா எண் 37369—திரு. எஸ். மகாலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அவிநாசி அரசு பொது மருத்துவமனையில் பல் மருத்துவர் நியமிக்கப்படுவாரா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி மருத்துவமனையில் ஏற்கெனவே ஒரு பல் மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.*

104—

## அவசர ஊர்தி வழங்குதல்

**வினா எண் 37792—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரம் தொகுதி, வடபொன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஓர் அவசர ஊர்தி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே அவசர கால ஊர்தி (ஆம்புலன்ஸ்) வழங்கப் படுகிறது. சங்கராபுரம் தொகுதி, வடபொன்பரப்பை (வடபொன்பட்டி அல்ல) ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருவதால், அவசர கால ஊர்தி வழங்கவில்லை.*

**105—**

## மகப்பேறு மருத்துவப் பிரிவு

**வினா எண் 41158—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மகப்பேறு மருத்துவப் பிரிவு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு மருத்துவப் பிரிவு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*



**106—**

## பரம்பரை சித்த வைத்தியர்கள்

**வினா எண் 41771—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரம்பரை சித்த வைத்தியர்கள் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) 1970 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மத்திய அரசின் இந்திய மருத்துவர் மத்தியக் கழகச் சட்டத்தின்படி, தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலும் பரம்பரை மருத்துவர்கட்கு பதிவு/என்லிஸ்ட்மெண்ட் வழங்குதல் இயலாது.*

*(ஆ) வினா எழவில்லை.*

**107—**

## மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 42405—திரு. எஸ். தாமோதரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகாசி, எம். புதுப்பட்டி அரசு மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவும், விருதுநகர் யூனியன், கன்னிசேரி மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவும் உயர்த்தித் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*எம். புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. இந்த ஒன்றியத்தில் 62 படுக்கை வசதிகளுடன் சிவகாசி அரசு மருத்துவமனை செயல்படுவதால், எம். புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. அதேபோல, விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கன்னிசேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை இதே ஒன்றியத்தில் 240 படுக்கை வசதிகளுடன் கூடிய விருதுநகர் அரசு மருத்துவமனை உள்ளதால் தரம் உயர்த்த இயலாது.*

**108—**

## பேருந்துகளுக்கு உதிரி பாகம் வழங்குதல்

**வினா எண் 4089—திருமதி சி.எம். சூரியகலா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுப் பேருந்துகளுக்கு உதிரி பாகம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தேவைக்கேற்றவாறு தேவையான உதிரி பாகங்களை வாங்கி, பேருந்துகளை நன்முறையில் இயக்கி வருகின்றன.*

**109—**

## பணிமனைக் கட்டடம்

**வினா எண் 4900—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியிலுள்ள கீரனூர் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) வினாவில் கோரியுள்ளவாறான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ வாய்ப்பு இல்லை.*

**110—**

## பேருந்து வசதி

**வினா எண் 5701—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேசிய நெடுஞ்சாலை என்.எச்.45-ல் அமைந்திருக்கும் செங்கல்பட்டு நகரின் பெரும்பாலான பேருந்துகள் நகரின் உள்ளே வராமல் செல்லுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பேருந்துகள் நகரின் உள்ளே வர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை என்.எச்.45-ல் அமைந்திருக்கும் செங்கற்பட்டு நகரினை, கட்டண நிலையாகக் கொண்டுள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சாதா மற்றும் சொகுசுப் பேருந்துகளும் மற்றும் வேலூர், கோயம்புத்தூர், தருமபுரி, கும்பகோணம், நாகர்கோயில் மற்றும் மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர, மற்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள், செங்கற்பட்டு பேருந்து நிலையம் உள்ளே சென்று வருகின்றன.*

[2004 ஜூலை 31

111—

### இலவசப் பயணச் சலுகை

**வினா எண் 5899—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நகரப் பேருந்து செல்லாத கிராமங்களில் இருந்து பயணம் செய்து படிக்கும் மாணவர்களுக்கு வெளியூர் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறதா?*

*(ஆ) இல்லையெனில், இத்திட்டத்தை அமுல்படுத்தும் எண்ணம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.*

112—

### பேருந்து வழித்தடத்தை மாற்றுதல்

**வினா எண் 6002—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை - ஆனைமலை, பூலாங்கிணறு ரோடு வழியாகச் செல்லும் நகரப் பேருந்து ஒன்றை சடையப்பகவுண்டன்புதூர் வழியாகச் செல்ல அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு எடுக்க உள்ள நடவடிக்கை யாது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) உடுமலைப்பேட்டையிலிருந்து ஆனைமலை-பூலாங்கிணறு சாலை வழியாகச் செல்லும் நகரப் பேருந்தினை சடையப்பகவுண்டன்புதூர் வழியாக மாற்றி இயக்கினால், வழித்தடதூரம் 30.0 கி.மீ.-க்கும் அதிகமாவதால், நகரப் பேருந்தாக இயக்கிட இயலாத நிலை ஏற்படும். மேலும், நேரிடைப் பயணிகள், கூடுதல் கட்டணம் செலுத்தவேண்டிய நிலை ஏற்படும். இதனால், பயணிகளிடமிருந்து எதிர்ப்புகள் வரும் என்பதால், வழித்தடத்தை மாற்றி இயக்க இயலாத நிலை உள்ளது.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

113—

### செங்கோட்டைக்கு நிரந்தரப் பேருந்து

**வினா எண் 7002—திரு. கு. அண்ணாமலை:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தென்காசியிலிருந்து அய்யாபுரம், அழகப்பபுரம், வேதம்புதூர் வழியாக செங்கோட்டைக்குச் செல்ல ஒரு நிரந்தரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தென்காசி-செங்கோட்டை (வழி) அய்யாபுரம், அழகப்பபுரம், வேதம்புதூர், சுப்பிரமணியபுரம் ஒரு சுற்று வழித்தடமாதலால், இவ்வழியாக செங்கோட்டைக்குச் செல்ல நேரடிப் பயணிகள் விரும்பமாட்டார்கள். பயணிகள் அடர்வும் போதிய அளவு இருக்காது. எனவே, தென்காசியிலிருந்து அய்யாபுரம், அழகப்பபுரம், வேதம்புதூர் வழியாக செங்கோட்டைக்கு பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

114—

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 7010—திரு. கு. அண்ணாமலை:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கீழப்பாவூர் ஒன்றியம், சுரண்டைக்கு இரட்டைகுளம் வழியாக வந்துகொண்டிருந்த நகரப் பேருந்து கடந்த மார்ச் மாதம் நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*கீழப்பாவூர் ஒன்றியம், சுரண்டைக்கு இரட்டைகுளம் வழியாக வந்துகொண்டிருந்த நகரப் பேருந்து மிகவும் நஷ்டத்தில் இயங்கி வந்ததால், 4-5-2001 முதல் நிறுத்தப்பட்டது. நஷ்டத்தில் இயங்கியதால் நிறுத்தப்பட்ட இப்பேருந்தை மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

115—

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 7013—திரு. கு. அண்ணாமலை:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கீழப்பாவூர் ஒன்றியம், புல்லுக்காட்டுவலசை, மடத்தூர், சிவநாடானூர், கல்லூரணி வழியாக இயங்கி வந்த நகரப் பேருந்து வழித்தடம் எண் 6ஏ, 27 (தென்காசி டெப்போ) ஆகியவை நிறுத்தப் பட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தடம் எண் 6ஏ மற்றும் 27 நகரப் பேருந்து, பயணிகள் அடர்வு மிகக் குறைவாக இருந்ததாலும், மிகக் குறைவாக வருவாய் ஈட்டியதாலும், ஏப்ரல் 2001 முதல் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டது. பின்னர் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைக்கேற்ப தடம் எண் 6ஏ, 12-1-2002 முதல் 7 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 27-ஐ மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*



116—

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 7014—திரு. கு. அண்ணாமலை:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கீழப்பாவூர் ஒன்றியம், சுரண்டை பேரூராட்சி, பாவநாசபுரம், அம்மையாபுரம், ஆனைகுளம் வழியாக இயங்கிக் கொண்டிருந்த நகரப் பேருந்து தடம் எண் 7ஏ, 3 (புளியங்குடி டெப்போ) நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*கீழப்பாவூர் ஒன்றியம், சுரண்டை பேரூராட்சி, பாவநாசபுரம், அம்மையாபுரம், ஆனைகுளம் வழியாக இயங்கிக் கொண்டிருந்த நகரப் பேருந்து தடம் எண் 7ஏ மற்றும் 3 நிறுத்தம் ஏதும் செய்யப்படாமல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.*

117—

## ஆட்டோமெடிக் சிக்னல் பொருத்தும் திட்டம்

**வினா எண் 7212—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் நகரில், சாலைகளில் முக்கிய இடங்களில் ஆட்டோமெடிக் எலக்ட்ரிக் சிக்னல் பொருத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலம் நகரில், கடை வீதி சந்திப்புப் பாதை, பாலக்கரை சந்திப்பு இடம் மற்றும் கம்மாபுரம் பிரிவு பாதை ஆகிய இடங்களில் ஆட்டோமெடிக் சிக்னல் பொருத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப அவை பொருத்தப்படும்.

**118—**

## போக்குவரத்து துணைப் பணிமனை

**வினா எண் 7577—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டையில் போக்குவரத்து துணைப் பணிமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வினாவில் கோரியுள்ளவாறான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.



**119—**

## போக்குவரத்துக் கழகப் பணிமனை

**வினா எண் 7725—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி தாலுகாவில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) காரியாபட்டியில் தற்போது தனியாக பணிமனை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**120—**

## மினி பஸ் திட்டம்

**வினா எண் 7739—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மினி பஸ் திட்டம் மேலும் விரிவுபடுத்த அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிற்றுந்து திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

121—

## இலவசப் பேருந்துப் பயண அட்டை

**வினா எண் 7746—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாலுகாக்கள் அளவில் பணிபுரியும் பத்திரிகை நிருபர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) வினாவில் கோரியுள்ளது போன்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.*

122—

## பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 8894—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வந்தவாசி தொகுதி, வந்தவாசி-ஒரத்தி வழியாகவும், கீழ்வில்லிவனம் வழியாக செல்லும் தடம் எண் 104சி, 104ஈ பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*வந்தவாசி-ஒரத்தி வழித் தடத்தில் பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதி உள்ளதால், தடம் எண் 104சி, 104ஈ ஆகிய வழித் தடங்களை மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



123—

## பேருந்துகளுக்கு பாகங்கள் வாங்குதல்

**வினா எண் 11118—திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான பணிகள் அதற்குத் தேவையான பாகங்கள் அரசுப் போக்குவரத்து என்ஜினிரிங் கழகங்களிலிருந்து மட்டுமே மேற்கொள்ளப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான பணிகள், அதற்குத் தேவையான பாகங்கள் பேருந்து உற்பத்தியாளர்களிடமிருந்து தேவைக்கேற்ப வாங்கப்பட்டு வருகின்றன.*

124—

## பணிமனை அமைத்தல்

**வினா எண் 12791—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் அரசுப் போக்குவரத்துக் கழகம் பணிமனை அமைக்க திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் அரசுப் போக்குவரத்துக் கழகம் பணிமனை அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.*

[2004 ஜூலை 31

125—

## பேருந்து உற்பத்திக் கூடம்

**வினா எண் 14933—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக பேருந்து உற்பத்திக்கூடம் ஒன்று தொடங்க அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் உற்பத்திக்கூடம் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் தேவைக்கேற்ப பேருந்து உற்பத்திக்கூடங்கள் உள்ளன.

(ஆ) இக்கேள்வி எழாது.

126—

## பேருந்து வழித்தடம்

**வினா எண் 15304—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி-உத்திரமேரூர் நகரப் பேருந்து தடம் எண் டபிள்யூ 6 (வழி) வழூர், இரும்பேடு தடத்தில் சரிவர இயங்கவில்லையாதலால், மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளனர் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் தொடர்ந்து அதே வழித்தடத்தில் இயக்கி மக்கள் பயனடைய அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி-உத்திரமேரூர் நகரப் பேருந்து தடம் எண் டபிள்யு 6 (வழி) வழூர், இரும்பேடு தடத்தில் அனைத்து நடைகளும் குறித்த நேரத்தில் தடமுடக்கம் இன்றி இயக்கப்பட்டு வருகிறது.

127—

## புதிய பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 15313—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பணிமனையிலுள்ள அரசுப் பேருந்துகள் பெரும்பாலும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதடைந்துள்ள பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி பணிமனையில் பழுதடைந்துள்ள பழைய அரசுப் பேருந்துகளுக்கு பதில் புதிய பேருந்துகள் மாற்றி இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இயக்கத்திலுள்ள பழைய பேருந்துகளுக்கு பதில் புதிய பேருந்துகளை மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**128—**

## பேருந்து வழித்தடம்

**வினா எண் 15441—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கும்பிகுளம் ஊராட்சி, தெற்கூர் கிராமத்திற்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 200 (தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி) தற்போது நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கும்பிகுளம் ஊராட்சி, கும்பிகுளம், தெற்கூர் கிராமத்திற்கு தற்போது தடம் எண் 200 இயக்கப்பட்டு வருகிறது.

**129—**

## அரசு காசநோய் மருத்துவமனை

**வினா எண் 16960—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு காசநோய் (T.B.) மருத்துவமனைக்கு மருந்துகள், உணவுப்பொருட்கள் வாங்க அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

(ஆ) வரும் நிதியாண்டில் இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறையில் உள்ள காசநோய் மருத்துவமனை சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் செயல்படும் மருத்துவமனையாதலால் எந்த நிதியும் அரசால் ஒதுக்கப்படுவதில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**130—**

## பேருந்தை இயக்குதல்

**வினா எண் 17438—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில், சீர்காழியிலிருந்து புதுத்துறை, திருநகரி, நெப்பத்தூர், மங்கைமடம் வழியாக பூம்புகாருக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில், சீர்காழியிலிருந்து புதுத்துறை, திருநகரி, நெப்பத்தூர், மங்கைமடம் வழியாக பூம்புகாருக்கு பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளதால், சீர்காழியிலிருந்து பூம்புகாருக்கு நேரடிப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

[2004 ஜூலை 31

**131—**

## மோட்டார் வாகன ஆய்வாளர் நியமனம்

**வினா எண் 18149—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காலியாக உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் பணியிடங்கள் எவ்வளவு?*

*(ஆ) இவற்றை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை, 1-ல்-2, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-2-ல்-36.*

*(ஆ) மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1 பதவி உயர்வுக்குத் தகுதியானவர் தேர்ந்த பெயர் பட்டியல் தயாரிக்க 2003-2004 ஆம் ஆண்டுக்கான குறிப்பிட்ட நாள் 15-03-2003 ஆகும். அவ்வமயம், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1 பதவி உயர்வுக்குத் தகுதியானோர் மூலம் மேற்கண்ட பதவி நிரப்பப்படும். மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-2 பதவி நேரடி நியமனம் மூலம் தேர்வாணையத்தால் நிரப்பப்படும் பதவியாகும். புதிய நியமனங்களுக்குத் தற்போது தற்காலிகத் தடை உள்ளது. இத்தடை நீக்கப்பட்டவுடன் இப்பணியிடங்கள் நிரப்பப்படும்.*

**132—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 18324—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி-குறிஞ்சிப்பாடியிலிருந்து பண்ருட்டிக்கு வரிசாங்குப்பம் வழியாக அரசுப் பேருந்து இயக்க இயலுமா?*



2004 ஜூலை 31]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குறிஞ்சிப்பாடி-பண்ருட்டி இடையே வரிசாங்குப்பம் வழியாகவும் மற்றும் பண்ருட்டி-குள்ளஞ்சாவடி தடத்தில் வரிசாங்குப்பம் வழியாகவும் எண் டி20/பி மற்றும் எண் 23 பேருந்துகள் முறையாக ஆறு நடைகளில் இயக்கப்படுகிறது.*

**133—**

## மினி பேருந்துகள்

**வினா எண் 19144—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் பகுதிகளில் அனுமதிக்கப்படாத வழித்தடங்களில் இயக்கப்படும் மினி பேருந்துகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிற்றுந்துகள் தொடர்பாக அடிக்கடி தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தணிக்கையின்போது அனுமதிச் சீட்டுக்குப் புறம்பாக இயக்கும் வாகன உரிமையாளர்களுக்கு உடனுக்குடன் தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பரமத்திவேலூர் பகுதியில் இயங்கும் சிற்றுந்துகளுக்கு 1-1-2000 முதல் 31-3-2003 முடிய 89 சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டன. இந்த நடவடிக்கையின்மூலம் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 206-ன்கீழ் ரூ.1,24,100.00 இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில்*

இயங்கும் அனைத்து சிற்றுந்துகளும் தொடர்ந்து சோதனை செய்யப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**134—**

## பேருந்து வசதி

**வினா எண் 19895—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரம் தொகுதியில் எத்தனை சிறு பேருந்துகள் (Mini Bus) இயக்கப்படுகின்றன?*

*(ஆ) அவை முறைப்படி இயக்கப்படுகின்றனவா?*

*(இ) புதிய வழித்தடங்களுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் மொத்தம் ஒன்பது சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சிற்றுந்துகள் முறைப்படி இயக்கப்பட்டு வருகின்றன என்றும், அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் இயக்காமல், தடம் மாறி இயக்கப்படும்போது இந்த வாகனங்களுக்கு தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டு, வாகன உரிமையாளரிடம் இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு, 31-12-2002 வரை பல்வேறு குற்றங்களுக்காக ஏழு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்களிடமிருந்து அபராதத் தொகை ரூ.21,000/- வசூலிக்கப்பட்டுள்ளது.

(இ) மூன்று புதிய வழித்தடங்களுக்கு அனுமதி கோரிய விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.



**135—**

## மினி பேருந்து வசதி

**வினா எண் 26228—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேருந்து வசதிகள் இல்லாத (சரியான சாலை வசதிகள் இல்லாத) கிராமங்களுக்கு மினி பேருந்து வசதிகள் செய்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது பேருந்து செல்லும் பாதையில் 4 கிலோமீட்டர் தூரம், கிராமப்புறங்களில் பேருந்து செல்லாத பாதையில் (Unserved Rural Areas) 16 கிலோமீட்டர் தூரம், ஆக மொத்தம் 20 கிலோமீட்டர் தூரம் வரையில் சிற்றுந்துகள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன. மினி பேருந்து பெர்மிட் கோரி வரும் விண்ணப்பங்கள் சட்டப்படி பரிசீலிக்கப்பட்டு, எங்கெல்லாம் மினி பேருந்து செல்ல முடியுமோ அவ்விடங்களில் மினி பேருந்துகளை இயக்க அனுமதி வழங்கப்படுகிறது. சரியான பாதையில்லாத பகுதிகளில் சாலைப் பாதுகாப்பு கருதி, நெடுஞ்சாலைத் துறையோ, உள்ளாட்சி மன்றங்களோ மினி பேருந்து இயக்க இயலாது எனக் கருதினால், அவ்வழித்தடங்களில் அனுமதி வழங்கப்படுவதில்லை.

**136—**

## சாலை வரி விதிக்கும் திட்டம்

**வினா எண் 26563—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதிதாக வாங்கப்படும் கார், மோட்டார் சைக்கிள்களுக்கு ஆயுட்கால வரி கட்டுவதைத் தவிர்த்து, ஒவ்வொரு ஆண்டும் சாலை வரி விதிக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிற்றுந்துகள் செல்லும் தூரத்தை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**140—**

## போக்குவரத்து முறைப்படுத்தும் திட்டம்

**வினா எண் 31666—திரு. ராதாரவி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை நகரில் நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகரித்து வருவதால், போக்குவரத்து முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* சென்னை மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*(ஆ)* சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. சென்னை நகரில் புறநகர் பேருந்து நிலையம், பிராட்வேயிலிருந்து கோயம்பேட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது.

2. வாகனப் போக்குவரத்தை முறைப்படுத்த தானியங்கி சிக்னல்கள் மற்றும் சாலையின் மத்தியில் தடுப்புச் சுவர் அமைக்கப்படுகின்றன.

3. சாலை விதிகளை மீறும் வாகனங்களைக் கண்டறிய நகரத்தின் முக்கிய சாலை சந்திப்புகளில் சி.சி.டி.வி. நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



4. சிக்னலுக்காக நிற்கும் வாகனங்கள் புறப்பட எவ்வளவு நேரம் உள்ளது என்பதைக் காட்டும் கவுண்ட் டவுன் டைமர் கருவிகள் முக்கிய சாலைகளில் பொருத்தப்பட உள்ளன.

5. சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து போக்குவரத்து சம்பந்தப்பட்ட கருவிகள் வாங்க நிதி ஒதுக்கப்படுகிறது.

6. சென்னையில் முக்கிய சாலைகளில் லாரிகள் பகலில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் சர்வீஸ் தவிர (Essential Services).

7. டிராபிக் வார்டர் அசோசியேஷன் மற்றும் சிடிசன் பார் சேப் ரோடு போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்த உதவுகிறார்கள்.

8. சென்னை, அண்ணா சாலையில் நான்கு வழிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று, ஈ.வே.ரா. சாலையிலும் அமல்படுத்தப்படவுள்ளது.

**141—**

## விபத்துக்களைத் தடுத்தல்

**வினா எண் 36390—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை மற்றும் பெருநகரங்களில் ஷேர் ஆட்டோக்களில் அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வதால் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* ஆம்.

142—

## மாட்டுக் கடன் வழங்கும் திட்டம்

**வினா எண் 16392—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருமானத்தை அதிகரிக்க மாட்டுக் கடன் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மாட்டுக் கடன் எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருமானத்தை அதிகரிக்க மாட்டுக் கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

143—

## ஆடு வளர்ப்போர் சங்கம் அமைத்தல்

**வினா எண் 20553—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் ஆடு வளர்ப்போர் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மக்களிடையே சங்கம் அமைக்க ஆர்வம் இல்லாததால் ஆடு வளர்ப்போர் சங்கம் அமைக்க சாத்தியம் இல்லை.

(ஆ) எழாது.

144—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 20624—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியத்திலுள்ள மூக்கம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

145—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 20918—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.*

*(ஆ) எழாது.*

**146—**

## நடமாடும் கால்நடை மருந்தகம்

**வினா எண் 25480—திரு. எஸ். மாணிக்கராஜ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியத்திற்கு என சகல வசதிகளுடன் நடமாடும் கால்நடை மருந்தகம் நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**147—**

## ஆடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 26899—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை மலைப் பகுதிகளில் ஆடு வளர்ப்புத் திட்டத்தை உருவாக்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) வினா எழாது.*

**148—**

## நடமாடும் கால்நடை மருத்துவமனை

**வினா எண் 27331—திரு. என்.கே. பெருமாள்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**149—**

## கால்நடை மருத்துவ நிலையம் அமைத்தல்

**வினா எண் 31028—செல்வி சி. கனகதாரா:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேரணாம்பட்டில் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தற்போது அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**150—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 32033—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி ஒன்றியம், நெய்வேலியில் அரசு கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) முசிறி ஒன்றியம், நெய்வேலியில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.*

*(ஆ) எழாது.*

**151—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 37141—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பாச்சாரப்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

*(ஆ) எழாது.*

**152—**

**கால்நடை சுகாதார முகாம்கள்**

**வினா எண் 41839—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழக அரசால் நடத்தப்படும் கால்நடை சுகாதார முகாம்களை நடப்பாண்டில் உடுமலைப்பேட்டையில் நடத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தமிழக அரசால் நடத்தப்படும் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் (2003-04) உடுமலைப்பேட்டை கோட்டத்தில் 39 முகாம்கள் நடத்துவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.*

**153—**

**கால்நடை துணை மருத்துவமனை துவக்குதல்**

**வினா எண் 47124—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தொன்னாம்பட்டினம் பெருந்தோட்டம், காரைமேடு ஆகிய ஊராட்சிகளில் கால்நடை துணை மருத்துவமனையைத் துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில திட்டக் குழுவின் பரிந்துரையின்படி, புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட தடை உத்தரவு தற்போது அமலில் உள்ளது. துறையில் தற்போது செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் அனைத்தையும் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தொன்னாம்பட்டினம், பெருந்தோட்டம், காரைமேடு ஆகிய கிராமங்களில் புதிதாகக் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்கத் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**154—**

## கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

**வினா எண் 47281—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, வேட்டலூரில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, வேட்டலூரில் கால்நடை கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.



**155—**

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 48484—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஊராட்சி ஒன்றியம் பெருங்குறிச்சி பகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஊராட்சி ஒன்றியம், பெருங்குறிச்சி கிராமத்திற்கு 4 கி.மீ. தொலைவில் சித்தாநந்தூர் கால்நடை கிளை நிலையமும், 5 கி.மீ தொலைவில் சோழசிராமணி மற்றும் நல்லூர் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. தவிர, பிரதிவாரம் புதன்கிழமைதோறும் திருச்செங்கோடு நடமாடும் கால்நடை மருந்தகம் மூலம் அப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதிய சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் போதுமானதாக உள்ளதால் பெருங்குறிச்சி பகுதியில் புதிதாகக் கால்நடை மருந்தகம் அமைக்கத் தேவையில்லை.

(ஆ) எழாது.

**156—**

## கால்நடை துணை மருத்துவ நிலையம்

**வினா எண் 49069—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மருதவஞ்சேரியில் கால்நடை துணை மருத்துவ நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம்

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மருதவஞ்சேரியில் கால்நடை கிளை நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**157—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 49074—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், கிள்ளியூர் ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதிய பகுதிநேர கால்நடை கிளை நிலையம் துவக்குவதற்கு மாநிலத் திட்டக் குழு தடை விதித்துள்ளதாலும், புதிய பதவிகளை ஏற்படுத்த அரசு தடை விதித்துள்ளதாலும், திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், கிள்ளியூர் ஊராட்சியில் பகுதி நேர கால்நடை கிளை நிலையம் துவக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**158—**

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 3232—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவதிகை கடலூர் பிரதான சாலையில் அமைந்துள்ள சக்கரபாணி நகருக்கு தார்ச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவதிகை கடலூர் பிரதான சாலையில் அமைந்துள்ள சக்கரபாணி நகர் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவாக உள்ளதால் நகராட்சியால் சாலை வசதி செய்து தர இயலவில்லை.

**159—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 3235—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி கீழக்குப்பம் தெருவிற்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழக்குப்பம் ஊராட்சியிலுள்ள கீழக்குப்பம் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் மூலமும், மேலும், கீழக்குப்பம் வடக்குப் பகுதி, கீழக்குப்பம் தெற்குப் பகுதி, கீழக்குப்பம் அய்யனார் கோயில் தெரு ஆகிய பகுதிகளுக்கு, தனித்தனியாக இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலமும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

[2004 ஜூலை 31

160—

### ஊரணியைத் தூர்வாரி சுற்றுச் சுவர் எழுப்புதல்

**வினா எண் 3979—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் பேரூராட்சி பள்ளூரணி என்ற ஊரணியைத் தூர்வாரி சுற்றுச் சுவர் எழுப்பி பாதுகாக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் பேரூராட்சி பள்ளூரணி என்ற ஊரணியைத் தூர்வாரி சுற்றுச் சுவர் எழுப்பி பாதுகாக்க அரசிடம் கருத்துரு இல்லை.

161—

### சாலை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 4349—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி-பணகுடி சாலையினை (கி.மீ.0/0-9/0 3.0) அகலப்படுத்தி மேம்படுத்த அரசிடம் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.



2004 ஜூலை 31]

(ஆ) போதிய நிதி ஒதுக்கீடு செய்தால் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

162—

### பள்ளியின் கட்டடங்களைப் புதுப்பித்தல்

**வினா எண் 5050—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகராட்சி, அர்பன் பாங்க் பள்ளி, கீழ்ப்பாலம்-ராஜாம்பாளையம்-நகராட்சிப் பள்ளி, வெஸ்டர்ன் தொடக்கப் பள்ளி, மாடல் நடுநிலைப் பள்ளிகளின் கட்டடங்கள் பராமரிப்பின்றி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) கட்டடங்களை புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி நகராட்சி அர்பன் பாங்க் பள்ளி, கீழ்ப்பாலம் ராஜாம்பாளையம் நகராட்சி பள்ளி மற்றும் மாடல் நடுநிலைப் பள்ளி கட்டடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வெஸ்டர்ன் தொடக்கப் பள்ளி தனியார் நிர்வாகப் பள்ளியாகும்.

163—

### குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல்

**வினா எண் 5056—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சி ஓரசோலை பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தீர்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சி ஓரசோலை பகுதியில் தற்போது குடிநீர்ப் பிரச்சினை ஏதுமில்லை.*

**164—**

**புதிய பேருந்து நிலையம்**

**வினா எண் 5108—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாமல்லபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் அமைக்கப்பட உள்ளது?*

*(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மாமல்லபுரத்தில் கருக்காத்தம்மன் கோவில் எதிரில் நில அளவை எண் 107/4, பி5, 6பி2, 6சி2, 8சி, 9ஏ, 9பி, 9சி, 10, 136/1 மற்றும் 136/2-ல் நில எடுப்பு மற்றும் நிலத்தை நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*(இ) நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் முடிவு பெற்ற பின்னரே அந்த ஆண்டிற்கான விலைப்புள்ளி விவரப்படி பேருந்து நிலையத் திட்டத்திற்கான மதிப்பீட்டினைக் கணக்கிட இயலும்.*



**165—**

**தொகுப்பு விடுகள்**

**வினா எண் 7023—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சியில் கருப்பமனை பகுதிக்கு தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சியில் கருப்பமனை பகுதிக்கு தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.*

**166—**

**உரக் கலவை தயாரித்தல்**

**வினா எண் 7083—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருத்தாச்சலம் நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளைப் பயன்படுத்தி தக்க உரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*அரசிடம் திட்டம் இல்லை. நகராட்சியின் நிதிப் பற்றாககுறை காரணமாக உரம் தயாரிக்கப்படவில்லை. நகராட்சியின் நிதி நிலைமை சீரடைந்தால் உரக் கலவை தயாரிக்கப்படும்.*

167—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 7100—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், சாரம் காலனி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், சாரம் ஊராட்சியிலுள்ள சாரம் காலனிக்கு தற்சமயம் 4 கைவிசைப்பான்கள் மற்றும் சாரம் குடியிருப்பிற்கான குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் விஸ்தரிப்பின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்கு உட்பட்டு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் இக்காலனிக்கு வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பரிசீலிக்கப்படும்.*

168—

## கடற்கரைச் சாலையில் மின் விளக்கு வசதி

**வினா எண் 7145—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவொற்றியூர் தொகுதி, சுங்கசாவடி பகுதியிலிருந்து எண்ணூர் அசோக் லேலண்டு பகுதி வரையிலான கடற்கரைச் சாலையில் மின் விளக்குகள் இல்லாதது அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், மின் விளக்குகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் நகராட்சிப் பகுதியில் 282 தெரு மின் விளக்குகள் உபயோகத்தில் உள்ளன.*

169—

## குடிநீர் வசதி

**வினா எண் 7531—திரு. கே.கே. உமாதேவன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பத்தூரில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை தீர புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு செயல்படுத்தவிருக்கும் திட்டத்தில் சிவகங்கை மாவட்டமும், திருப்பத்தூர் நகரமும் சேர்த்துக் கொள்ளப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*காவிரி நதியினை நீராதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டு வரும் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் பேரூராட்சியும் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை நகராட்சியும், நெய்குப்பை, இளையாங்குடி பேரூராட்சிகளும், கல்லல், காளையார்கோவில், இளையாங்குடி, தேவக்கோட்டை ஒன்றியங்களில் உள்ள 616 குடியிருப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன.*

170—

## குடிநீர் கிடைக்க புதிய மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 8384—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், தாமனூர் கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம் தாமனூர் ஊராட்சி, தாமனூர் குடியிருப்பிற்கு தற்சமயம் 2 கைபிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் இக்குடியிருப்புக்குப் புதிய மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப் பரிசீலிக்கப்படும்.

**171—**

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 8415—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் சின்ன இரும்பாடி, தாடகைநாட்சிபுரம், மன்னாடிமங்கலம், கச்சைகட்டி, கச்சிராயிருப்பு, அய்யூர், கோடாங்கிபட்டி, குட்டிமேய்க்கிபட்டி, பொம்மிநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு மேல் நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதியைச் சார்ந்த மன்னாடிமங்கலம், கச்சைகட்டி, கச்சிராயிருப்பு, சின்ன இரும்பாடி மற்றும் பொம்மிநாயக்கன்பட்டி ஆகிய ஐந்து குடியிருப்புகளில் மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீா வழங்கப்பட்டு வருகிறது. கோடாங்கிப்பட்டி குடியிருப்பிற்குப் புதிய மின்விசைத் திட்டம் நடப்பாண்டில் செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தாடகை நாச்சியார்புரம், அய்யூர் மற்றும் குட்டிமேய்க்கிபட்டி ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும் ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டு தகுதி, தேவை, நிதி ஆதார அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் புதிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.



2004 ஜூலை 31]

**172—**

## குடிநீர் வடிகால் வாரியம்

**வினா எண் 8851—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை நவல்பூர் மற்றும் ஜெயராம் நகர் பகுதிகளில் குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்க நிலுவையிலுள்ள இப்பணியை உடனே நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டை நவல்பூர் மற்றும் ஜெயராம் நகர் பகுதிகளில் குடிநீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது.

**173—**

## சாக்கடைகள் மூலம் ஏற்படும் நோய் அபாயம்

**வினா எண் 9174—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நகராட்சியில் மரப்பேட்டைபள்ளம் கண்ணப்ப நகரில் செல்லும் சாக்கடைகள் மூலம் பொதுமக்களுக்கு நோய் ஏற்படும் அபாயத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சி நகராட்சியில் மரப்பேட்டைபள்ளம் மற்றும் கண்ணப்ப நகரில் செல்லும் சாக்கடையின் அருகில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு நோய்கள் தாக்கா வண்ணம் கொசு ஒழிப்பு மருந்தான பேடக்ஸ் வாரம் இருமுறை அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிகளில் நடத்தப்படும் மருத்துவ முகாமில் மேற்படி பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளும் செய்யப்பட்டு வருகிறது.

**174—**

### சந்தையை நவீனப்படுத்துதல்

**வினா எண் 9175—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய பொள்ளாச்சி சந்தையை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சி நகராட்சி சந்தையை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

**175—**

### பூங்காவைப் புதுப்பித்தல்

**வினா எண் 10461—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

புதுக்கோட்டை நகராட்சி, அண்ணா சிலை அருகில் பாழடைந்துள்ள பூங்காவைப் புதுப்பிக்க அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சி, அண்ணா சிலை அருகில் உள்ள காந்தி பூங்கா, நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**176—**

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 10726—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குறிச்சி ஊராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குறிச்சி ஊராட்சியில், குறிச்சி என்ற ஒரு குடியிருப்பு மட்டுமே உள்ளது. இக்குடியிருப்பிற்கு 2001 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது பரிசீலனையில் இல்லை.

[2004 ஜூலை 3

177—

## புதிய பேருந்து நிலையம்

**வினா எண் 11440—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கொங்கணாபுரத்தில் பேருந்து நிலையம் இல்லாததால் மக்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அங்கு புதிதாக பேருந்து நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் பேரூராட்சிப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சிக்குச் சொந்தமான இடவசதி இல்லை. எனவே, கொங்கணாபுரம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

178—

## உவர்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

**வினா எண் 12456—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னையில் உவர்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் எங்கெங்கு அரசால் நிறுவப்படவுள்ளன?*

*(ஆ) அதேபோல் உவர்நீர் பகுதியிலுள்ள கிராமங்களிலும் இந்த திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?*

*(இ) அதன் விவரம் என்ன?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை மாநகரில் நொச்சி குப்பம், வேளச்சேரி, காசிமேடு, அயோத்தியா குப்பம் மற்றும் காசிமேடு குப்பம் ஆகிய இடங்களில் உவர்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், குடிசைப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு, சென்னை நகரில் உவர்நீர் கிடைக்கும் 21 இடங்களில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.*

*(ஆ) மற்றும் (இ) கடலோர மாவட்டமான உவர்நீராதாரங்களைக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் 403 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 21 கிராமங்களில் உவர்நீரை நன்னீராக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனை மற்ற மாவட்டங்களில் விரிவுபடுத்தும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.*

179—

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12557—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு கிராமத்திற்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்மாம்பட்டு ஊராட்சியிலுள்ள கீழ்மாம்பட்டு குடியிருப்பிற்கு மக்கள் பங்களிப்புடன்கூடிய இராஜீவ்காந்தி தேசிய குடிநீர்த்*

திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் 12/2002-ல் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

**180—**

## தள்ளுவண்டி வியாபாரிகளின் கிடைகள்

**வினா எண் 16423—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் இருக்கும் பேருந்து நிலையத்தின் உள்ளே போக்குவரத்திற்கு இடையூறாகவும், மக்களுக்கு நெருக்கடியாகவும் தள்ளுவண்டி வியாபாரிகள் கடைகள் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், பேருந்து நிலையத்திலுள்ள இடையூறுகளைக்களைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி நகராட்சி பேருந்து நிலையத்தின் உள்ளே போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ள தள்ளுவண்டி பழ வியாபாரிகள் மற்றும் பொது மக்களுக்கு போக வர நெருக்கடியாக உள்ள கடைகள் 9-4-2003 அன்று காவல் துறை உதவியுடன் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு அகற்றப்பட்டுள்ளன.

**181—**

## மாநகராட்சிக்கு மாற்றும் திட்டம்

**வினா எண் 17169—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களை அடுத்த மாநகராட்சிக்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பணி விதி 38-ன்படி ஒவ்வொரு மாநகராட்சியும் ஒரு தனி அலகாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சிப் பணியாளர்களை ஒரு மாநகராட்சியில் இருந்து வேறு ஒரு மாநகராட்சிக்கு மாறுதல் செய்ய இயலாது. இவ்விதிகளை மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**182—**

## பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம்

**வினா எண் 17514—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

[2004 ஜுலை 31

**183—**

### குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 20920—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், தொட்டப்ப நாயக்கனூர் அம்பேத்கர் நகர் பகுதியில் குடிநீர் மேல்நிலை தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், தொட்டப்ப நாயக்கனூர் ஊராட்சி, அம்பேத்கர் நகர், தொட்டப்ப நாயக்கனூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். தொட்டப்ப நாயக்கனூரில் உள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தொட்டி மூலம் அம்பேத்கர் நகருக்கு தற்போது அத்தியாவசியத் தேவைக்கேற்ற அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஸ்வஜல்தாரா திட்டத்தின்கீழ் குடிநீர்த்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**184—**

### குடிநீர் வசதி ஏற்படுத்துதல்

**வினா எண் 20953—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, குஞ்சாம்பட்டியில் குடிதண்ணீர் பற்றாக்குறையாக உள்ளதால், கூடுதல் தண்ணீர் கிடைக்க பெரிய மேல்நிலைத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், நக்கலப்பட்டி ஊராட்சியில் உள்ள குஞ்சாம்பட்டி குடியிருப்பிற்கு 1983 முதல் பயன்பாட்டில் இருந்து வரும் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்னிறைப்பான் திட்டத்தின்மூலம் தற்பொழுது அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போதைய மக்கள் தொகைக்கேற்ப கூடுதல் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய புதிய திட்டம் மக்கள் பங்களிப்புடன் "ஸ்வஜல்தாரா" திட்டத்தின்கீழ் நிறைவேற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**185—**

### புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 21111—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், செம்பட்டி பஞ்சாயத்து, செம்பட்டி இந்திரா நகர் காலனியில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது போதுமான அளவு தண்ணீர் வழங்கப்படுவதால் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

186—

## பேருந்து நிலையத்திற்கு சுற்றுச்சுவர்

**வினா எண் 23018—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் பேரூராட்சியிலுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் பேரூராட்சியிலுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்கும் கருத்துரு ஏதுமில்லை.

187—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 23108—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, அல்லாபுரம் பேரூராட்சியில் 10 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) நாள்தோறும் குடிநீர் வழங்க எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் தொகுதி, அல்லாபுரம் பேரூராட்சியில் 10 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுவது இல்லை.

(ஆ) தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



188—

## நடைபாதையை சீரமைத்தல்

**வினா எண் 23634—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகராட்சிப் பகுதியில் பிரதானச் சாலைகளின் இருபுறமும் ஆக்கிரமிப்பை அகற்றி நடைபாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

189—

## சிமெண்ட் கற்களால் நடைபாதை

**வினா எண் 25668—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் நகர கடை வீதியில் சாலையின் இருபுறமும் சிமெண்ட் கற்களால் ஆன நடைபாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் நகர கடை வீதியில் சாலையின் இருபுறமும் சிமெண்ட் கற்களால் ஆன நடைபாதை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

**190—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 28497—டாக்டர் ஆர். கோவிந்தசாமி :** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் அருகிலுள்ள மங்கலம்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) விருத்தாசலம் அருகிலுள்ள மங்கலம்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**191—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 29539—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் உள்ள முருகாளி எஸ்டேட் பஜார் கடை வீதியில் குடிநீர் வசதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*



*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு மூலம் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

**192—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 30123—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்பாறையில் பொதுப் பணித் துறை உபயோகப்படுத்தாமல் இருக்கும் இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*வால்பாறையில் பொதுப் பணித் துறை உபயோகப்படுத்தாமல் இருக்கும் இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க கருத்துரு ஏதுமில்லை.*

**193—**

## நகராட்சியாக மாற்றும் திட்டம்

**வினா எண் 30231—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி பேரூராட்சி எல்லையை ஒட்டியுள்ள எம்ஜிஆர் நகர், நரசிங்கராயர்பேட்டை அங்காராய நல்லூர், சிங்கவரம் ஊரணித்*

தாங்கல் பகுதிகளைச் சேர்த்து நகராட்சியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மண்டலம், விழுப்புரம் மாவட்டம் செஞ்சிப் பேரூராட்சி அருகிலுள்ள எம்.ஜி.ஆர். நகர், நரசிங்கராயர்பேட்டை, அங்காராய நல்லூர், சிங்கவரம் ஊரணித் தாங்கல் பகுதிகளை நகராட்சியாக அமைக்கும் திட்டம் இல்லை.

**194—**

### குடிநீர் வசதி

**வினா எண் 30856—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பேக்டரி டிவிசன் வாட்டர் பால் எஸ்டேட் பகுதிக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை பேக்டரி டிவிசன் வாட்டர் பால் எஸ்டேட் பகுதிக்கு குடிநீர் வசதி உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.





**195—**

### காய்கறி அங்காடிக்கு தனி இடம்

**வினா எண் 36526—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரில் இடநெருக்கடியில் இயங்கி வருகின்ற காய்கறி அங்காடிக்கு (Market) தனியாக இடம் ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**196—**

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 38491—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் 4 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விடுவதால் குடிநீர் தட்டுப்பாட்டைக் களைய நடவடிக்கை எடுக்கப் படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த இரு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போதுமான நீராதாரம் இல்லாத காரணத்தால் சிறுவாணி அணையின்

[2004 ஜூலை 31

குறைவான நீராதாரத்தை வைத்துதான் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனினும் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க குடிநீர் அல்லாத மற்ற தேவையினைக் கருத்தில் கொண்டு 450 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் தினமும் சுமார் 15 மில்லியன் லிட்டர் நீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**197—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 41900—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பழைய பேருந்து நிலையத்தில் விரைவுப் பேருந்துகள் நிற்குமிடத்தில் நவீன பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**198—**

### புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 43186—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரிலுள்ள செக்குமேட்டு தெரு 5, 6 மற்றும் 7-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 31]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகரில் உள்ள செக்குமேட்டு தெரு 5, 6 மற்றும் 7-வது வார்டில் வசிக்கும் மக்களுக்கு, ஏற்கெனவே பயனிலுள்ள ஒன்பது இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் காலை, மாலை இரு வேளைகளிலும் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு ஆழ்துளைக் கிணறு மூலமும் இப்பகுதி மக்களுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது. இப்பகுதிக்கு போதுமான அளவு குடிநீர் விநியோகிக்கப்படுவதால் புதிய மேல்நிலை தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**199—**

### குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கட்டடம்

**வினா எண் 46874—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

200—

### பேருந்து நிலையம்

**வினா எண் 47420—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உபயோகம் இல்லாத பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 4 ஏக்கர் இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உபயோகம் இல்லாத பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 4 ஏக்கர் இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க தற்போது அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*



## பட்டியல் 14

1—

### சாலை பழுதுபார்த்தல்

**வினா எண் 17—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி சாலை 0/0 — 2/0 மிகவும் பழுதடைந்து உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் பழுதுபார்த்து சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாவட்ட இதர சாலையான பள்ளிப்பட்டி சாலை கி.மீ. 0/0 — 2/0 கி.மீ., 0/0 — 1/6 பகுதி வரை, 2001—2002 ஆம் ஆண்டில், காலமுறை புதுப்பித்தல் ஒதுக்கீட்டில் ரூ. 4.40 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்தல் பணி 30.4.2002—ல் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ. 1/5 — 2/0 பகுதியைத் தார் நொடிகளைப் போட்டு, வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.*

2—

### பட்டா வழங்குதல்

**வினா எண் 127—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி நகராட்சியின் (1) ஆரணி பள்ளிக்கூடத் தெரு, (2) பெரியார் நகர், (3) சந்திரகுள தெரு (4) எம்.ஜி.ஆர். நகர் (பையூர் ஊராட்சி), ஆரணி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெகு நாட்களாக பட்டா வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?*

[2004 ஜூலை 31

(ஆ) ஆம் எனில், பட்டா எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விலை மதிப்புள்ள நிலங்கள். எனவே பட்டா வழங்க வழியில்லை.

**3—**

**புதிய வட்டம் உருவாக்குதல்**

**வினா எண் 173—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**4—**

**பட்டா**

**வினா எண் 213—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) ஏழை விவசாயிகள் வாழும், அரசுப் புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படும் என, கடந்த 1999-2000 ஆம் ஆண்டு, அரசு அறிவித்திருந்தும் இதுவரை முழுமையாக பட்டா வழங்கப்படாமல் இருப்பது, அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை பட்டா பெறாதவர்களுக்குப் பட்டா எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையிலுள்ள மக்களை முன்னேற்றுவதற்காக, அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவது அரசின் கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை, மக்களுக்கு உதவி செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 60,000 பட்டா வழங்க வேண்டும் என்கிற குறியீடு அரசு நிர்ணயித்துள்ளது. அதன்படி 1999-2000ஆம் ஆண்டிற்கு 1,98,052 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**5—**

**மீண்டும் பட்டா வழங்குதல்**

**வினா எண் 217—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், ஆறுகாணி பகுதியில் குடியிருந்தவர்களின் வீடுகளுக்கான பட்டா, கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு மீண்டும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) களியல் கிராமம், ஆறுகாணி பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, வீட்டுமனைப் பட்டா ரத்து செய்யப்பட்டது என்ற பேச்சுக்கு இடமில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

6—

**புதிய வட்டம் அமைத்தல்**

**வினா எண் 488—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை.

7—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 584—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் நகரம், ராமமூர்த்தி ரோட்டில் இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்பாலம் கட்ட அரசு முன்வருமா?



விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்பாலம் கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

8—

**ஆற்றில் அணை கட்டுதல்**

**வினா எண் 792—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, அமராவதி ஆற்றில் அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

9—

**தனி வட்டமாக்குதல்**

**வினா எண் 813—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூரரை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**10—**

**விவசாயிகளுக்குப் பட்டா**

**வினா எண் 974—திரு. எம். சக்திவேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் விவசாயிகளிடம், 'செட்டில்மென்ட் அதிகாரி' நடத்திவரும் விசாரணையை விரைவாக மேற்கொண்டு விவசாயிகளுக்குப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உதவி நிலவரித் திட்ட அலுவலர் நடத்தி வந்த விசாரணைக்கு, சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் உயர்நீதிமன்றத்தில் உள்ளமையால், நீதிமன்றத்தின் முடிவான ஆணை வழங்கப்பெற்ற பின்பே, இப்பொருள் பற்றி எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்க இயலும்.



**11—**

**கறம்பக்குடியை தனி வட்டமாக்குதல்**

**வினா எண் 992—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து கறம்பக்குடியை தனி வட்டமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**12—**

**புதிய பாலம் அமைத்தல்**

**வினா எண் 1443—திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, பட்டுக்கோட்டை சாலையில் கோபாலசமுத்திரத்திலுள்ள பாலம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) இப்பாலத்தை புதிய பாலமாக அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் கட்டும் பணியானது ரூ.99.00 இலட்சம் செலவில் தற்போது நடைபெற்று வருகிறது.

13—

## மாவட்டங்களுடன் இணைத்தல்

**வினா எண் 1556—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி பகுதிகளை காஞ்சிபுரம் அல்லது திருவள்ளூர் மாவட்டத்துடன் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

14—

## தனி மாவட்டம் அமைத்தல்

**வினா எண் 1762—திரு. வெ. கோவிந்தராஜ் மற்றும் திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

15—

## விவசாயக் கூலிகள்

**வினா எண் 1833—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலமற்ற ஏழை விவசாயக் கூலிகள் பலன் பெற அரசு மேற்கொண்ட திட்டம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2001-ல் அமைக்கப்பட்டுள்ளது.

16—

## பலன் தரும் மரங்கள் வளர்த்தல்

**வினா எண் 1835—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டு, 10 ஆண்டு என ஒப்பந்த அடிப்படையில் பலன் தரும் மரங்கள் வளர்க்க வேலையில்லா பட்டதாரிகளுக்கு அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**17—**

## அரசு அதிகாரிகள் கலந்துரையாடல்

**வினா எண் 1845—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சியர், காவல் துறை கண்காணிப்பாளர் கலந்துகொள்ளும் ஒன்றிய வாரியான பொதுமக்கள் அரசு அதிகாரிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(1) ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் குறை தீர்க்கும் நாள் பின்பற்றப்பட்டு வருகிறது.

(2) மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களும் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடத்தி மனுக்களைப் பெற்று அவற்றின் மீது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

(3) மனுநீதித் திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்காக செயல்பட்டு வருகிறது.

(4) சட்டம் ஒழுங்கு, சாலைப் பாதுகாப்பு, நுகர்வோர் பாதுகாப்புக் குழு, விவசாயிகள் குறை தீர்க்கும் நாட்கள் போன்ற தினங்களில் காவல் துறை மற்றும் பிற துறை அதிகாரிகள் வருகை புரிந்து மக்களின் குறைகள் பற்றி விவாதித்து குறைகளை நிவர்த்தி செய்து வருகின்றனர்.



2004 ஜூலை 31]

இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர் கலந்துகொள்ளும் ஒன்றிய வாரியான பொதுமக்கள், அரசு அதிகாரிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி தனியாக நடத்தத் தேவையில்லை.

**18—**

## திருப்பத்தூரை மாவட்டமாக்குதல்

**வினா எண் 1934—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூரை தலைநகராகக் கொண்டு 31-வது மாவட்டமாக அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**19—**

## தண்ணீரை நீரேற்றம் செய்தல்

**வினா எண் 2056—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பழையாற்றில் மழைக் காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரை நீரேற்றம் செய்து வறட்சிப் பகுதியான திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

**20—**

## பொய்கை அணைப் பாதை சரிசெய்தல்

**வினா எண் 2320—திரு. மு.அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பொய்கை அணைக்குத் தண்ணீர் வரும் பாதையை சீர் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம் பொய்கை அணைக்கு நீர்வரத்துப் பாதை ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

**21—**

## சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 2344—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஈரோடு மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் மொத்தம் 7 ஆகும். அவை

1. ஈரோடு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
2. அந்தியூர் சார்பதிவகம்
3. திங்களூர் சார்பதிவகம்
4. ஈரோடு சூரம்பட்டி சார்பதிவகம்
5. அவல்பூந்துறை சார்பதிவகம்
6. அம்மாபேட்டை சார்பதிவகம் மற்றும்
7. வெள்ளக்கோவில் சார்பதிவகம்

(ஆ) அரசின் நிதி நெருக்கடி நிலையின் காரணமாக ஈரோடு மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.

**22—**

## எழுத்தர் கூடம் கட்டுதல்

**வினா எண் 2359—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத் தயாரிப்பு எழுத்தர்களுக்கு எழுத்தர் கூடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது இந்த நிதியாண்டில் கட்டித்தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத் தயாரிப்பு எழுத்தர்களுக்கு எழுத்தர் கூடம் ஒன்று கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆகையால் எழுத்தர்கள் கூடம் கட்டித்தரும் நிலை தற்போது எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**23—**

## பத்திரப்பதிவு அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 2503—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் பகண்டை கூட்டுச் சாலையில் புதியதாக பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பகண்டை கூட்டுச் சாலையில் புதியதாக பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**24—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 2541—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நாகமரை கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**25—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 2542—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, கருங்கல்லி மேடு, வன்னியர் நகர் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

26—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 2543—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஒன்றியம், சூரப்பள்ளி ஊராட்சி, பெரங்கபாளி புறம்போக்கில் நீண்ட காலமாக வசிக்கின்ற மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இந்த நிலத்தில் வெள்ளைக்கல் கனிமம் உள்ளதால், விதி முறைகளின்படி இந்நிலத்திற்கு பட்டா வழங்க இயலாது.

27—

## கழுமங்களம் கிராமம் இணைத்தல்

**வினா எண் 2585—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியிலுள்ள கழுமங்களம் கிராமத்தை ஜெயங்கொண்டம் தொகுதியில் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.



28—

## அச்சு இயந்திரங்கள், கருவிகள் வழங்குதல்

**வினா எண் 2661—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு நவீன அச்சு இயந்திரங்களும், கருவிகளும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு நவீன அச்சு இயந்திரங்களும், கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) தற்போது எழவில்லை.

29—

## இயந்திரங்களை ஏலம் விடுதல்

**வினா எண் 2664—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் அச்சுத் துறையில் நீண்ட காலமாக பயன்படாத நிலையில் உள்ள இயந்திரங்களை ஏலம் விட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் செயல்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நீண்ட காலமாக பயன்படாத நிலையில் இயந்திரங்கள் ஏதுமில்லை. இயந்திரங்களை பொது ஏலத்தில் விடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

(ஆ) உரிய காலங்களில் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

## டெங்கு காய்ச்சல்

**வினா எண் 42830—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கேரளா மாநில எல்லையோரப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் யாரேனும் இறந்துள்ளனரா?

(இ) இதனைத் தடுக்க அரசு எடுத்த தடுப்பு நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சந்தேகத்திற்குரிய டெங்கு காய்ச்சலினால் விளவங்கோடு வட்டத்தில் குறிப்பிட்ட சில கிராமங்களில் ஆறு பேர் இறந்துள்ளனர்.

(இ) அரசு இந்நோய் பரவுவதைத் தடுக்க தீவிர சிறப்பு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தது. அதனால் தற்போது இந்நோய் கட்டுப்பாட்டில் உள்ளது.

**31—**

## மானியம்

**வினா எண் 47980—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகப்பேறுக்குப் பிந்தைய அறுவை சிகிச்சைத் திட்டத்திற்கு சுகாதாரத் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட மானியம் எவ்வளவு?



2004 ஜூலை 31]

(ஆ) அம்மானியம் எந்த அடிப்படையில் அளிக்கப்படுகின்றது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) அளிக்கப்பட்ட மொத்த மானியம் (2002-03) ஆண்டுக்கு ரூ. 4,76,07,573/-

(ஆ) மூன்று இனங்களில் மானியம் வழங்கப்படுகிறது. அவையாவன:

(i) நகர்ப்புற மையங்களுக்கான பராமரிப்பு மானியம்

(ii) படுக்கை பராமரிப்பு மானியம்

(iii) ரீகா (RICA) குடும்ப நல ஏற்பாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மீளப் பெறுதல்.

**32—**

## பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ நலத் திட்டம்

**வினா எண் 48729—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ நலத் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் பள்ளிக் குழந்தைகளுக்கான "பள்ளிச் குழந்தைகள் நலத் திட்டம்" ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2004 ஜூலை 31

**33—**

### உதவித் தொகை

**வினா எண் 3373—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தமிழக மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலகத்தின் மூலம் செவிலியர் படிப்பு மற்றும் பயிற்சிக்காக தேர்வு செய்யப்பட்டு, நெல்லை கெட்வெல் மருத்துவமனையில் பிப்ரவரி 2000 முதல் பிப்ரவரி 2001 வரை படித்த 25 மாணவியருக்கு இதுநாள் வரை சான்றிதழும், உதவித் தொகையும் வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நெல்லை கெட்வெல் பவுண்டேசன் மருத்துவமனையில் 16-2-2000 முதல் 15-2-2001 வரை செவிலியர் உதவியாளர் பயிற்சி பெற்ற 25 மாணவியருக்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ்களும், உதவித் தொகையாக ரூ.68,049/-ம் வழங்கப்பட்டுள்ளன.

**34—**

### சத்துணவு மையங்கள்

**வினா எண் 3436—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை சத்துணவு மையங்கள் உள்ளன?

(ஆ) சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மொத்தம் 71,757 குழந்தை நல மையங்கள் மற்றும் பள்ளிச் சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) தற்போது நேரடி நியமனங்களுக்கு அரசினால் பொதுவான தடையுத்தரவு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ள காரணத்தால் மையங்களில் ஏற்படும் காலி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்திடல் இயலாது. அரசு கடித (நிலை) எண் 159, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டம் (சமூக நல) துறை, நாள் 5-11-2002 வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உபரியாக உள்ள பணியிடங்களில் பணி நியமனம் செய்ய சத்துணவு மையத்தில் இருந்து அல்லது அங்கன்வாடி மையத்தில் இருந்து 3 கிலோ மீட்டருக்குள் நியமனம் செய்ய வேண்டும் என்ற விதியினை சத்துணவு மையம் அங்கன்வாடி மையத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள மையங்களில் நியமனம் செய்ய வேண்டும் என மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்தளர்வினைப் பயன்படுத்தி (Relaxation) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரியும் உபரிப் பணியாளர்கள் அனைவரையும் காலிப் பணியிடங்களில் பணியமர்த்த வேண்டும் என தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**35—**

### குறித்த நேரத்தில் பணி

**வினா எண் 6774—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியிலுள்ள, தாராபுரம், குடிமங்கலம் மற்றும் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் இயங்கும் பள்ளிகளிலுள்ள மதிய உணவு அமைப்பாளர்கள், சமையலர் மற்றும் ஆயா ஆகியோர் குறித்த நேரத்தில் பணிக்கு வராமலிருப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தாராபுரம் தொகுதியில் உள்ள தாராபுரம் மற்றும் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் சமையலர்கள் மற்றும் உதவியாளர்கள், அமைப்பாளர்கள் ஆகியோர் குறித்த நேரத்தில் பணிக்கு வராமலிருப்பதைத் தடுக்க மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சத்துணவு ஊழியர்கள் காலதாமதமாகவும் முன்னறிவிப்பின்றியும் பணிக்கு வராமல் இருந்தவர்களது ஒரு நாள் ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டு, கடுமையாக எச்சரிக்கப்பட்டு இனி வருங்காலங்களில் இதுபோன்ற குறைபாடுகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களாலும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**36—**

## சத்துணவுத் திட்டம்

**வினா எண் 8398—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்திற்கு எவ்வளவு செலவானது?

(ஆ) பயனடைந்த குழந்தைகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்திற்கு ரூ.581.18 கோடி செலவு ஆகியுள்ளது.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்தின்கீழ் 72,79,759 பயனாளிகள் பயன்பெற்றனர்.





**37—**

## பால்வாடி ஆரம்பிக்கும் திட்டம்

**வினா எண் 9153—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியத்துக்குட்பட்ட, செஞ்சி தெரு, ஏலந்தரிமேடு, காடுவெட்டி ஆகிய மூன்று ஊர்களுக்கும் சேர்த்து ஒரு பால்வாடி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**38—**

## சத்துணவு ஆயா பணியிடம் பூர்த்தி செய்தல்

**வினா எண் 9169—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக் கூடங்களில் சத்துணவு ஆயா காலி பணியிடங்களை பூர்த்தி செய்யும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நேரடி நியமனங்களுக்கு அரசினால் பொதுவான தடையுத்தரவு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ள காரணத்தால், சத்துணவு மையங்களில் ஏற்படும் காலி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்திடல் இயலாது. எனவே, சத்துணவு மையங்களில் உள்ள காலி பணியிடங்களை அந்தந்த

[2004 ஜூலை 31

மாவட்டத்தில் உபரியாக உள்ள பணியாளர்களை அவர்களின் முதுநிலைக்கேற்ப பட்டியலிட்டு அதிலுள்ளவர்களைக் கொண்டு காலியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. அவ்வாறு பூர்த்தி செய்யும்பட்சத்தில், பணி நியமனம் செய்யப்படும் மையம், பணியாளர்களின் இருப்பிடத்திலிருந்து 3 கி.மீ.-க்கு பதிலாக 10 கி.மீ. தூரத்திற்குள் இருக்க வேண்டும் என மாற்றி வரையறுக்கப்பட்டுள்ளது.

**39—**

## சத்துணவுக் கூடம் புதுப்பித்தல்

**வினா எண் 12278—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சத்துணவுக் கூடங்கள் பல பழுதடைந் துள்ளன என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த வருடம் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டங்களின்கீழ் மொத்தம் 9,180 குழந்தை நல மையங்கள் மற்றும் சத்துணவு மையங்கள் பழுதடைந்துள்ளன எனக் கண்டறியப்பட்டது.

அரசு ஆணை (நிலை) எண் 171, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, நாள்: 5-11-2001-ல் மேற்படி சத்துணவு மையங்களை பழுது நீக்கம் செய்ய ரூ.25.10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ரூ.90.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றன. நிதி நெருக்கடி காரணமாக 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.12.10 கோடி மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையில், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ரூ.4.06 கோடியும், நகராட்சி நிர்வாக ஆணையருக்கு ரூ.8.04 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று



2004 ஜூலை 31]

வருகின்றன. மேலும், மேற்குறித்த அரசாணையில், ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.25.10 கோடியில் மீதத் தொகை ரூ.12.10 கோடி 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**40—**

## மகளிர் பாதுகாப்பு இல்லம்

**வினா எண் 13961–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தற்போது அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம் புதிதாக துவங்கும் கோரிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**41—**

## உடல் ஊனமுற்றவர்களுக்கு இலவசப் பயணம்

**வினா எண் 14963—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்கள் அனைவரும் அனைத்து தமிழக அரசுப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய அரசு ஆணை வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு தமிழக அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.*

**42—**

**சத்துணவு மையங்கள் பொலிவூட்டுதல்**

**வினா எண் 16281—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சத்துணவு மையங்களை மேலும் பொலிவூட்ட நவீனமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை சீர்படுத்தி, அதன் தரத்தை மேம்படுத்தி செவ்வனே வடிவமைத்து திருத்தி அமைப்பது என்ற முடிவினையொட்டி, தமிழ்நாட்டில் இயங்கிவரும் சத்துணவு மையங்களில் மிகவும் சீர்கேடடைந்தது எனக் கண்டறியப்பட்ட 9,180 சத்துணவு மையங்களைச் சீரமைக்க 2001-2002 ஆம் நிதியாண்டில் ரூ.25.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழும் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*மேலும், 2002-2003 ஆம் நிதியாண்டிற்கு சத்துணவு மையங்களில் சமையல் செய்வதற்கு உபயோகிக்க முடியாத பழைய அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்கி வழங்க ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2003-2004 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*



2004 ஜூலை 31]

*சத்துணவுப் பயனாளிகளுக்கு, சுகாதார முறையில் சத்துணவு வழங்கும் பொருட்டு படிப்படியாக எவர்சில்வர் டம்ளர்கள் மற்றும் எவர்சில்வர் தட்டுகள் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டு 2002-2003 ஆம் நிதியாண்டிற்கு முதற்கட்டமாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு மேலும் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையும் வெளியிடப்பட்டு உள்ளது.*

**43—**

**காது கேட்கும் கருவி இலவசமாக வழங்குதல்**

**வினா எண் 16539—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதியில் காது கேட்காத மக்களுக்கு காது கேட்கும் கருவி இலவசமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில் காது கேட்கும் கருவி வேண்டி விண்ணப்பித்தவர்கள் மூன்று நபர்கள். 2001-2002 ஆம் ஆண்டில் மூன்று நபர்களுக்கும் காது கேட்கும் கருவி வழங்கப்பட்டுவிட்டது. சேரன்மகாதேவி தொகுதியில் தற்போது காத்திருப்போர் பட்டியலில் எவரும் இல்லை.*

**44—**

**மகளிர் சுய உதவிக் குழு**

**வினா எண் 16666—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன?*

(ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்களின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளனவா?

(இ) மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைக்கவும் பணிகள் முழுமையாகக் கிடைத்திட தனி வாரியம் ஒன்று அமைத்திடவும் அரசு உத்தேசித்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 31-3-2003 முடிய மொத்தம் 1,26,106 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன.

(ஆ) ஆம்.

(இ) தற்போது உள்ள தமிழ்நாடு "மகளிர் நல மேம்பாட்டுக் கழகம்" மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைக்கவும், பணிகள் முழுமையாகக் கிடைத்திடவும் செயல்பட்டு வருவதால், தனி வாரியம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**45—**

**சத்துணவுப் பணியாளர்கள் பணியிலமர்த்துதல்**

**வினா எண் 19549—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் குழந்தைகளின் எண்ணிக்கை குறையும் சத்துணவு மையங்களை மூடிவிட்டு, சத்துணவுப் பணியாளர்களை பணிநீக்கம் செய்வதை மறுபரிசீலனை செய்து, மீண்டும் அதே பணியாளர்கள் பணியில் அமர்த்தப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவுத் திட்டம் செயல்படும் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 25-க்கு கீழ் குறையுமானால்,



இப்பள்ளிகளில் இயங்கிவரும் சத்துணவு மையங்களை விலக்கிக் கொண்டு இப்பள்ளியினை துணை மையமாகக் கொண்டு இப்பள்ளி மாணவர்களுக்கு, இப்பள்ளிக்கு அருகில் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் இருந்து சமைத்த உணவு கொண்டு வந்து வழங்கப்படுகிறது. மூடப்படும் பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் அருகில் காலியாக உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் பணியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

**46—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 19823—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், இந்திரா நகரில் சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

கடம்பத்தூர் ஒன்றியத்தில் கீழ்க்கண்ட சத்துணவுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. கடம்பத்தூர் ஒன்றியம், ஏகாட்டூர் அருகில் உள்ள அன்னை இந்திரா நகரில் தனியே இயங்கி வரும் அங்கன்வாடி மையம்.

2. கடம்பத்தூர் காலனிக்கு அருகிலுள்ள இந்திரா நகர், வெண்மனம்புதூர் காலனி மையத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

3. அதிகத்தூர் அருகிலுள்ள இந்திரா நகர், அதிகத்தூர் அங்கன்வாடி மையத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

4. விடையூர் அருகிலுள்ள இந்திரா நகர், புதியதாகத் தொடங்கிய கிராமம். இக்கிராமத்தில் புதிய மையம் துவங்க போதிய மக்கட்தொகை இல்லாததால் தனியே சத்துணவு மையம் துவங்க வாய்ப்பு இல்லை.

**47—**

## மனுக்களை ஆய்வு செய்யக் குழு

**வினா எண் 20351—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்காகப் பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியாளர், சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழுவினை அரசு ஏற்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது நலிந்தோர் நலத்திட்ட வட்டாட்சியரால் முதியோர் ஓய்வூதியம் கோரி வரப்பெறும் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் கோரி வரப்பெறும் மனுக்களின் மீது 15 தினங்களுக்குள் முடிவெடுக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள பல்வேறு வேலைப் பளுவினைக் கருத்தில் கொண்டால் ஒவ்வொரு 15 தினங்களுக்கும் குழு கூடி மாவட்டம் முழுவதும் பெறப்படும் முதியோர் ஓய்வூதிய மனுக்கள் மீது முடிவெடுக்க இயலாது. எனவே, தற்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து அரசால் பின்பற்றப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**48—**

## மகளிர் விடுதி அமைக்கும் திட்டம்

**வினா எண் 20435—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரில் பணிபுரியும் மகளிர் தங்குவதற்கு விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?





**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே புதுக்கோட்டை நகரில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்றும், தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் நடத்தப்படும் ஒரு விடுதியும் செயல்பட்டு வருவதால், தற்போது, மேலும் ஒரு விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 20676—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் எத்தனை துவங்கப்பட்டுள்ளன?

(ஆ) அதில் எவ்வளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 31-1-2003 வரை 4,308 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(ஆ) மேற்படி சுய உதவிக் குழுக்களுக்கு பணமாக முதலீடு என்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் மூலமோ அல்லது வெளி நிறுவனத்தின் மூலமோ எதுவும் செய்யப்படுவதில்லை. ஆனால் 31-1-2003 வரை ரூ.640.76 இலட்சம் தொகை இக்குழு உறுப்பினர்களால் சேமிக்கப்பட்டு அத்தொகையை இக்குழு உறுப்பினர்கள் சுழற்சி முறையில் குடும்பச் செலவுக்காக கடன் பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.

**50—**

## மதிய உணவு வழங்குதல்

**வினா எண் 20703—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதியில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் சமீபத்தில் தொடங்கப்பட்ட 12 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு சத்துணவு அமைப்பாளர்களை நியமித்து குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருப்பூர் சட்டமன்றத் தொகுதியில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 12 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு 12 சத்துணவு மையுங்கள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேற்படி 12 மையங்களில் 6 மையங்களில் 25-க்கு மேல் பயன்பெறும் மாணவர்கள் உள்ள மையங்கள் முதன்மை மையங்களாகவும், மற்ற 6 மையங்கள் 25-க்குகீழ் பயன்பெறும் மாணவர்கள் உள்ளதால் துணை மையங்களாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முதன்மை மையங்களுக்கு அமைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு, துணை மையங்களுக்கு அருகிலுள்ள முதன்மை மையங்களிலிருந்து உணவு சமைத்து எடுத்து கொண்டுவந்து வழங்கப்பட்டு வருகின்றது.

**51—**

## திருமண உதவித் தொகை

**வினா எண் 20996—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரூ.10,000/- உதவித் தொகையை மேலும் உயர்த்தி திருமணம் நடக்கும் நாளின்போதே வழங்கிட அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவித் தொகை ஒரே சீராக மாற்றியமைக்கப்பட்டு 1-10-2001 முதல் ரூ.10,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் திருமண



நிதியுதவித் திட்டங்களுக்கு திட்ட தொடராணை மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னரே திருமண நிதியுதவி கோரிய விண்ணப்பங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படும். இந்நிலையில் திருமண நாளின்போதே நிதியுதவி வழங்க இயலாது.

(ஆ) வினா எழாது.

**52—**

## தொட்டில் குழந்தைத் திட்டம்

**வினா எண் 22379—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) பெண் சிசுக்களைக் காப்பாற்ற தமிழக அரசு கொண்டு வந்துள்ள தொட்டில் குழந்தைத் திட்ட மையங்களை ஒவ்வொரு வட்டத்திற்கும் விரிவுபடுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடியில் துவக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தொட்டில் குழந்தைத் திட்டம் 1992-ல் சேலம் மாவட்டத்திலும் பின்னர் அத்திட்டம் 2001-2002-ல் அரசாணை (நிலை) எண் 158, ச.ந. & ச.தி. துறை, நாள் 24-10-2001-ன்படி தமிழகத்தில் தருமபுரி, ஈரோடு, திண்டுக்கல், மதுரை, தேனி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் ஆறு மாவட்டங்களிலும் பெண் சிசுக் கொலைகள் அதிகம் நிகழ்வதால் அதனைத் தடுக்கும் வண்ணம் இத்திட்டம் அம்மாவட்டங்களில் முழு வேகத்தோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் கைவிடப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வை கவனத்தில் கொண்டும் சில மாவட்டங்களில் மருத்துவமனைகளில் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலகங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களில் பெண் சிசுக் கொலை நிகழாததாலும் தற்பொழுது பெண் சிசு இறப்பு விகிதம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாலும் தற்போது ஒவ்வொரு வட்டத்திற்கும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் 1992 முதல் மாவட்டம் முழுவதும் அமல்படுத்தப்படுவதால் எடப்பாடிக்கு என தனியாக ஒரு திட்டம் தேவையில்லை. ஏனெனில் எடப்பாடி சேலம் மாவட்ட எல்லைக்குள்தான் இருக்கிறது.

**53—**

## இட ஒதுக்கீடு

**வினா எண் 22391—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்புத் திருமணம் செய்து கொண்டோரின் வாரிசுகளுக்கு அரசு உத்தியோகத்தில் இட ஒதுக்கீடு செய்ய அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் திருமண உதவித் தொகை மட்டுமே கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதியருக்கு இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**54—**

## மகளிர் மேம்பாட்டு நிறுவனத் திட்டங்கள்

**வினா எண் 22753—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத் திட்டங்களை சேலம் மாநகராட்சிக்கு விரிவுபடுத்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்து மாநகராட்சிகளிலும் செயல்பட்டு





வருவதைப்போல் சேலம் மாநகராட்சியிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**55—**

## இலவசப் பயணச் சலுகை

**வினா எண் 22955—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உடல் ஊனமுற்றோர் அனைவரும் தமிழக அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

12 ஆம் வகுப்பு வரை சிறப்புப் பள்ளி மற்றும் இதர பள்ளிகளிலும் பயிலும் அனைத்து ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கும் அவர்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளிக்குச் சென்றுவர எவ்வித நிபந்தனைகளுமின்றி இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. பார்வையற்றோருக்கு நிபந்தனையில்லாமலும், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகைப்படாமல் உள்ள கை, கால் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் 100 கி.மீ. தொலைவிற்கு மிகைப்படாமல் மருத்துவமனை, கல்லூரி, பயிற்சிக் கூடம், பணிபுரியும் இடம் மற்றும் சுயதொழில் புரியும் இடம் ஆகியவற்றிற்குச் சென்றுவர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மன வளர்ச்சி குன்றியோர் தங்களுக்கு உதவியாக ஒருவரை அழைத்துச் செல்ல இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு இலவசப் பயணச் சலுகை வழங்க வருமான வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

**56—**

## உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை

**வினா எண் 23498—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இருபது வயதிற்கு கீழுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவச் சான்று இருந்தும் அரசின் உதவித்தொகை கொடுக்கப் படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது உதவித் தொகை வழங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊனமுற்றோர் அனைவருக்கும் அவர்களின் ஊனத்தின் தன்மையினை விளக்கி அடையாள அட்டை அனைத்து வயதினருக்கும் இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை வைத்திருக்கும் அனைத்து ஊனமுற்றவர்களுக்கும் அனைத்து அரசு உதவிகளும் வழங்கப் படுவதில்லை. அவர்கள் எவ்வகையான உதவியை அரசிடம் எதிர்பார்த்து விண்ணப்பிக்கிறார்களோ அவ்வுதவி பெற அரசு விதிமுறைகளின்படி அவர்களுக்குத் தகுதியிருப்பின் அரசின் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**57—**

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 23558—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், சொக்கலிங்கபுரத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், சொக்கலிங்கபுரத்தில் மொத்த மக்கள் தொகை 851 மட்டுமே. அரசு விதிகளின்படி, குழந்தைகள் நல மையம் புதியதாக ஆரம்பிக்க குறைந்தபட்சம் மக்கள் தொகை 1000 இருக்கவேண்டும். மேற்படி கிராமத்தில் மக்கள் தொகை குறைவாக இருப்பதால் குழந்தைகள் நல மையம் (பால்வாடி) அமைக்க இயலாத நிலை உள்ளது. என்றாலும் மேற்படி கிராமத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பள்ளி சத்துணவு மையம் ஏற்கெனவே 55 பயனாளிகளைக் கொண்டு இயங்கி வருகிறது.





**58—**

## சிறுதொழில் செய்ய கடனுதவி

**வினா எண் 25592—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோருக்கு சிறுதொழில் செய்ய கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊனமுற்றோருக்கு சிறுதொழில் செய்ய ரூ.2,000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.4.00 கோடி தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி மூலம் கடன் வாங்கி 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**59—**

## குழந்தைகள் நலத் திட்டங்கள்

**வினா எண் 25651—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் பிறந்தது முதல் ஆறு வருடங்கள் வரையிலான குழந்தைகளுக்கென தனியாக நலத் திட்டங்கள் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குழந்தைகள் பிறந்தது முதல் ஆறு வருடங்கள் வரையிலான குழந்தைகளுக்கென தனியாக நலத் திட்டங்கள் சமூக

[2004 ஜூலை 31

நலத் துறையின் சமூக நல இயக்ககம் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் தனித் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

குழந்தைகள் பிறந்தது முதல் ஆறு வருடங்கள் வரையிலான குழந்தைகளுக்கென பின்வரும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

2. தொட்டில் குழந்தைத் திட்டம்

3. குழந்தைகள் காப்பகம்

4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

5. இணை உணவு/ஊட்டச்சத்து திட்டம்

6. பிரதம மந்திரியின் கிராமோதய யோஜனா திட்டம்

7. உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) ஆகியவற்றின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும்;

8. ஊனமுற்றோருக்கான சிறப்புப் பயிற்சிகள் மற்றும் கல்வித் திட்டங்கள்.

**60—**

## முதியோர் ஆதரவற்றோர் இல்லம்

**வினா எண் 27096—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் முதியோர் ஆதரவற்றோர் இல்லம் துவக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரியில் அரசு முதியோர் ஆதரவற்றோர் இல்லம் துவக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) தொண்டு நிறுவனங்கள் ஏதேனும் முதியோர், பராமரிப்பு இல்லங்கள் நடத்த முன்வருமாயின், விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசு மானியம் வழங்க வழிவகை செய்யப்படும்.

**61—**

## பிச்சை எடுக்க குழந்தைகளை ஈடுபடுத்துதல்

**வினா எண் 27102—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சை எடுக்க குழந்தைகளைப் பயன்படுத்துவோர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 2000-வது ஆண்டின் இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000, பிரிவு 24 (1) மற்றும் (2)-ன்படி குழந்தைகளை பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுத்துதல் குற்றம் ஆகும். அவ்வாறு குற்றம் புரிபவர் சிறை தண்டனைக்குட்படுத்தப்படுவர்.

**62—**

## பிச்சை எடுக்கும் குழந்தைகளுக்குக் காப்பகம்

**வினா எண் 27115—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பிச்சை எடுக்கும் குழந்தைகளுக்காகக் காப்பகம் அமைத்து சீர்திருத்தப் பள்ளிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக அமல்படுத்தப்பட்டுள்ள 2000-வது ஆண்டின் இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் பிச்சை எடுத்தலுக்கு குழந்தைகளைப் பயன்படுத்துதல் குற்றமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரைப் பொறுத்தவரை பிச்சை எடுக்கும் குழந்தைகளைக் கண்டறிந்து பிச்சை எடுத்தலைத் தடுக்கும் திட்டம் ஒன்றினை இளைஞர், குழந்தைகள் நலச் சங்கத்தின் சென்னைப் பிரிவு (தன்னார்வத் தொண்டு நிறுவனம்) நடைமுறைப்படுத்தி வருகிறது.

**63—**

### சத்துணவுத் திட்டத்தில் நல்லவகைச் சாப்பாடு

**வினா எண் 27342—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தில் தவிடு நீக்காத அரிசியை ரவையாக்கி உப்புமா, பொங்கல், புட்டு, கதம்ப சாப்பாடு, வாரம் ஒரு வாழைப்பழம் தரும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தற்போது பரிசீலனையில் இல்லை.

**64—**

### சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 29092—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள கருமலையில் பாதுகாப்புடன் கூடிய சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கப்படுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பேரூராட்சி மூலம் 11-வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் 2-வது தவணைத் திட்டத்தில் கருமலையில் உள்ள உதவி பெறும் நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்ட ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8-7-2003 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

**65—**

### மகளிர் விடுதி கட்டுதல்

**வினா எண் 32149—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் பணிபுரியும் மகளிருக்காக விடுதி ஏற்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஊட்டியில் 1987-88 முதல் இந்தியன் கவுன்சில் ஃபார் சைல்ட் வெல்பேர் என்னும் தொண்டு நிறுவனம் மூலம் அரசு மானியம் பெற்று பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்று செயல்பட்டு வருவதால் புதிதாக அரசால் அங்கு பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**66—**

### மகளிர் சுய உதவிக் குழு

**வினா எண் 33767—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விதித்துள்ள நிபந்தனைகளால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஏப்ரல் 2002 முதல் தொடங்கப்பட்ட மகளிர் திட்டம் 2-ன்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விதித்துள்ள நிபந்தனைகளால் பாதிப்பு எதுவும் இல்லை.

**67—**

### சத்துணவு மையச் சாப்பாட்டு அளவை உயர்த்துதல்

**வினா எண் 34842—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களில் சாப்பிடும் குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களின் அளவை உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**68—**

### சத்துணவு மையங்கள் விரைவில் கட்டுதல்

**வினா எண் 36077—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கணக்கம்பாளையம் ஊராட்சி, ஜீவா நகர் மற்றும் மாவட்ட பகுதிகளில் உலக வங்கி நிதி உதவியுடன் கட்டப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட ஊட்டச் சத்துணவு வட்டார மையங்களை விரைவில் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில், உலக வங்கி நிதி உதவியுடன் 14 வட்டார ஊட்டச்சத்து மையங்கள், ஒரு மையத்திற்கான செலவினம்



ரூ.5 இலட்சம் வீதம் ரூ.70 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது. இதற்காக தொகை மூன்று தவணைகளில் விடுவிக்கப்படும். மேற்படி மையங்களின் கட்டடங்கள் கட்டுமானப் பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப இதுவரை ரூ.42 இலட்சம் கட்டுமான செலவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி 14 மையங்களின் கட்டுமானப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. மீதம் ரூ.28 இலட்சம் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் அரசினால் அனுமதி அளிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கென அரசு அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் மீதமுள்ள தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ள கட்டுமானப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

**69—**

### மகளிர் சுய நிதி ஒதுக்கீடு

**வினா எண் 36544—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் "மகளிர் சுய நிதி குழுக்கள்" அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையில் ஏப்ரல் 2002 முதல் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் 2003 முடிய 2005 சுய உதவிக் குழுக்கள் 34,467 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.97.53 இலட்சம் ஆகும்.

**70—**

### அன்னபூர்ணா திட்டம்

**வினா எண் 37421—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் ஆதரவற்ற/ மூத்த குடிமக்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்காடு தொகுதியில் அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) பயன் அடைந்தோர் எண்ணிக்கை 43 நபர்கள்.

**71—**

## மகளிர் விடுதி கட்டும் திட்டம்

**வினா எண் 37426—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கென விடுதிகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**72—**

## அனாதை இல்லத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 37598—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அவிநாசியிலுள்ள அனாதை பெண் குழந்தைகள் சமாதான இல்லத்திற்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நலத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் அவிநாசியில் அரசு இல்லங்கள் எதுவும் செயல்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**73—**

## உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகை

**வினா எண் 39324—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்கான உதவித் தொகையை கூடுதலாக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஆம். கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகை, நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150/-லிருந்து ரூ.200/-ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண்155, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 14-8-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**74—**

## குழந்தைகள் நலக் காப்பகம்

**வினா எண் 41488—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, அக்ராகரம் ஊராட்சியில் குழந்தைகள் நலக் காப்பகம் (பாலர் பள்ளி) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, அக்ராகரம் ஊராட்சியில் ஏற்கெனவே குழந்தைகள் நல மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

**75—**

## சத்துணவு மையம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 43930—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, வருகவிச்சூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, வருகவிச்சூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 1-4-2003 முதல் புதியதாக சத்துணவு மையம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**76—**

## ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்

**வினா எண் 576(அ)—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி வெள்ளரிவெள்ளியில் ஆதி திராவிடர் நல விடுதி எதுவும் இயங்கவில்லை. எனவே, அங்கு புதிய கட்டடம் கட்டுதல் தொடர்பான வினா எழவில்லை.

**77—**

## ஆதி திராவிடர் மேம்பாட்டிற்கு ஒதுக்கீடு

**வினா எண் 1608—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஐந்தாண்டு காலத்தில் மத்திய அரசு தமிழக ஆதி திராவிடர் மேம்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுமையாக செலவழிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 44,242.17 இலட்சம் ஆகும்.

**78—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 3342—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், ஆனாங்கூர் கிராமத்தில் பழங்குடியினருக்கும், ஆதி திராவிடர்களுக்கும் அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், ஆனாங்கூர் கிராமத்தில் பழங்குடியினருக்கும் ஆதி திராவிடர்களுக்கும், அரசு கையகப்படுத்தியுள்ள நிலங்களில் வீட்டு மனைப் பட்டா வழங்க நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவுற்று பயனாளிகளுக்கு 18-2-2002 அன்று வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

**79—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 3368—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், ஜெயங்கொண்டான் கிராமத்திலுள்ள பழங்குடி இனத்தைச் சார்ந்த ஆதியன் என்கிற பூம்பூம் மாட்டுக்காரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஜெயங்கொண்டான் கிராமம் புல எண் 31/6-ல் 1.02.5 ஹெக்டேர் தீர்வை



ஏற்படாத தரிசு நிலத்தினை, புன்செய் தரிசாக மாற்றி, மேற்படி கிராமத்தில் உள்ள ஆதியன் என்கிற பூம்பூம் மாட்டுக்காரர் இனத்தைச் சேர்ந்த 21 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் 10-7-2002 அன்று வழங்கப்பட்டுள்ளது.

**80—**

## தங்கும் விடுதிகள் அமைத்தல்

**வினா எண் 5049—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் மாணவ, மாணவிகளின் தேவை கருதி புதிதாக தங்கும் விடுதிகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டுத் திட்டத்தில் இணைத்து அறிவிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக விடுதிகளை ஏற்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**81—**

## சுடுகாட்டுக்கு நிலஎடுப்பு

**வினா எண் 5524—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அந்தியூர் அண்ணா நகர் ஆதி திராவிடர்களுக்கு சுடுகாட்டுக்கு இடம் ஆர்ஜிதம் செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், அந்தியூர் கிராமம் மற்றும் அண்ணா நகர் ஆதி திராவிடர் மக்களுக்கு மயான வசதிக்காக க.ச.122/பி—1 சாலையில் 0.25.5 எக்டேர் நிலம் பொள்ளாச்சி ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரின் தீர்ப்புரை எண். 9/2001-2002, நாள் 28-3-2002-ல் மயானத்திற்கென நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது.

**82—**

**காந்திபுரத்தில் இணைப்புச் சாலைகள்**

**வினா எண் 7181—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, காந்திபுரத்தில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக்குட்பட்ட காந்திபுரத்தில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**83—**

**பின்னலாடை தொழிற்பேட்டை**

**வினா எண் 13204—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) கோவை மாவட்டம், முதலிப்பாளையத்தில் அமைந்துள்ள பின்னலாடை தொழிற்பேட்டை ஆதி திராவிடர் நலத் துறையின் மூலம் எந்த ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது?

(ஆ) எந்த ஆண்டு பயன்பாட்டுக்கு வந்தது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், முதலிப்பாளையத்தில் 100 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டை வளாகம் கட்டும் பணி 20-5-1995 அன்று துவக்கப்பட்டு 29-2-1996 உடன் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன.

(ஆ) 1998 டிசம்பர் மாதம் முதல் பயன்பாட்டுக்கு வந்தது.

**84—**

**மாணவர் விடுதி கட்டுதல்**

**வினா எண் 16519—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆயங்குடி பள்ளத்தில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் மாணவர் விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆயங்குடி பள்ளம் என்ற இடத்தில்

[2004 ஜுலை 31

ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியோ அல்லது மாணவியர் விடுதியோ தற்போது இயங்கவில்லை. எனவே, அங்கு விடுதி கட்டும் வினா எழவில்லை.

**85—**

## பழங்குடியினராக மாற்றும் திட்டம்

**வினா எண் 20211—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை தொகுதியில் 18 செட்டில்மெண்ட் பகுதியிலுள்ள மலைவாழ் மக்கள் தற்போது ஆதி திராவிட வகுப்பினராக உள்ளனர். பழங்குடியினராக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**86—**

## கொடி நாள் மூலம் வசூல்

**வினா எண் 30479—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆண்டில் கொடி நாள் மூலம் எவ்வளவு தொகை வசூலானது?

(ஆ) இந்தத் தொகையினை மேலும் அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001 கொடி நாள் ஆண்டில் (7-12-2001 முதல் 6-12-2002 வரை) கொடி நாள் நிதிக்கு வசூல் மூலம் பெறப்பட்ட தொகை ரூ. 5.99 கோடி.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் 5% கூடுதலாக இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

**87—**

## மின் வசதி செய்து கொடுத்தல்

**வினா எண் 32081—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஆதிவாசி மக்களுக்கு பிரதமரின் கிராமப்புற திட்டத்தின்கீழ் மின்வசதி செய்து கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பிரதமரின் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்திற்கு ரூ.8.11 கோடிக்கு மாநில அரசால் நிதி அனுமதி அளிக்கப்பட்டு 31 பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின் இணைப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**88—**

## மாணவ, மாணவியர் தங்கும் விடுதி

**வினா எண் 33764—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, என்னை கிராமம், குறுக்கலையாட்டி ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க தங்கும் விடுதி கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**89—**

### மணிமண்டபத்தை நவீனப்படுத்துதல்

**வினா எண் 34412—செல்வி சி. கனகதாரா:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபத்தை மேலும் செம்மைப்படுத்தும் நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**90—**

### இலவச சைக்கிள் திட்டம்

**வினா எண் 48652—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேல்நிலைப் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவச சைக்கிள் திட்டத்தை ஆதி திராவிட மாணவர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*





*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.*

**91—**

### லாரிகளில் மணல் கடத்துதலைத் தடுத்தல்

**வினா எண் 140—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் ஓரம் மெதிப்பாளையம் பகுதியில் லாரிகளில் மணல் கடத்தப்படுகிறது என்று அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பழவேற்காடு ஏரியின் ஓரம் மெதிப்பாளையம் பகுதியில் லாரிகளில் மணல் கடத்தப்படுவது குறித்து கிடைக்கப்பெற்ற புகாரின் அடிப்படையில் கள்ளத்தனமாக மணல் ஏற்றி வந்த லாரிகள் பிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.*

**92—**

### அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பளம்

**வினா எண் 841—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்கள் அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பளம் கேட்டு கோரிக்கை வைப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்போது அந்த சம்பளம் வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஊதிய வாரியத்தின் (Wage Board) பரிந்துரைப்படி நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஊதியம் பெற்று வரும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு அரசு அலுவலர்களுக்கு இணையாக ஊதியம் வழங்குவது இயலாது.

**93—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 1863—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தற்காலிக பணியிலுள்ள 350 தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தினக்கூலி அடிப்படையில் சுமார் 350 நபர்கள் உள்ளனர். அவர்களை பணி நிரந்தரம் செய்யும் வாய்ப்பில்லை.



2004 ஜூலை 31]

**94—**

**சிப்காட் தொழிற்பேட்டை கட்டும் திட்டம்**

**வினா எண் 1926—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை மண்டலவாடியில், சிப்காட் தொழிற்பேட்டை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையில் எல்லா அடிப்படை வசதிகளுடன் சிப்காட் தொழில் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் அதே மாவட்டத்தில் திருப்பத்தூர் தொகுதியில் ஜோலார்பேட்டை, மண்டலவாடியில் ஒரு தொழில் வளாகம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

**95—**

**பணி நிரந்தரம் செய்தல்**

**வினா எண் 1948—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பணி நிரந்தரப் படுத்தப்படாமல் உள்ள தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டிய தற்காலிக தொழிலாளர்கள் எவரும் இல்லை.

96—

### மொலாசஸை உரமாக மாற்றுதல்

**வினா எண் 5166—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கூடுதலாக உள்ள மொலாசஸை உரமாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொலாசஸிலிருந்து உரம் தயாரிப்பது தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமில்லை. எனவே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கூடுதல் மொலாசஸை உரமாக மாற்ற அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

97—

### சர்க்கரை ஆலைக்குட்பட்ட பகுதியாக்குதல்

**வினா எண் 8019—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கரும்பு உற்பத்தி செய்யும் கீழ்கொடுங்காலூர் பகுதியை மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு மாற்றும் நடவடிக்கையால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவதைக் கருதி அப்பகுதியைத் தொடர்ந்து செய்யார் சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியாக இருக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டைய அரவைப் பருவம் முதல் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தற்காலிக வேலை நிறுத்தி வைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழ்க்கொடுங்காலூர் பகுதியை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு மாற்றம் செய்யும் உத்தேசம் ஏதும் இல்லை.



98—

### நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள்

**வினா எண் 10442—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில் துவக்க நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் யாவை?

(ஆ) இந்த நிறுவனங்கள் 1991 முதல் 2001 வரை அளித்துள்ள நிதியுதவி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தொழில் துவங்க நிதியுதவி வழங்கும் அரசு சார்ந்த நிதி நிறுவனங்கள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. (TIIC Limited)
2. தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் .. (SIPCOT)
3. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி .. (SIDBI)
4. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி .. (IDBI)
5. இந்திய தொழில் நிதி கழகம் .. (IFCI)
6. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி .. (TAICO Bank)

(ஆ) இந்த நிறுவனங்கள் 1991-2001 வரை அளித்துள்ள மொத்த நிதியுதவி ரூ. 59,439.77 கோடி ஆகும்.

99—

### விருப்ப ஓய்வுத் திட்டம்

**வினா எண் 11560—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) சேலம், தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் சுரங்கப் பணியாளர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் எத்தனைபேர் சென்றுள்ளனர்?

(ஆ) தற்போது புதிதாக பணிக்கு ஆட்கள் எடுக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மொத்தம் 773 பேர் சென்றுள்ளனர்.

(ஆ) தற்போது புதியதாக பணிக்கு ஆட்கள் எடுக்கும் திட்டம் ஏதுமில்லை.

**100—**

## தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்

**வினா எண் 11567—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் எந்த ஆண்டு இரசாயன தர மேம்படுத்தும் திட்டத்தை தொடங்கியது? அப்போதைய திட்டத்தின் மதிப்பு எவ்வளவு? அந்தத் திட்டத்தின் முழு விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

சேலம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், இரசாயன தரம் மேம்படுத்தும் திட்டத்தினை 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து எடுத்துக் கொண்டது. இத்திட்டம் உயர்தர மேக்னசைட் தயாரிப்பதற்கான திட்டம் ஆகும். தொடக்கத்தில் (1983-ல்) இத்திட்டத்திற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ.26.13 கோடி என்று மதிப்பிடப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீடு 1996 ஆம் ஆண்டு நிலவரப்படி ரூ.305.00 கோடி அளவில் மிகவும் அதிகமானதாலும், கூட்டு



2004 ஜூலை 31]

நிறுவனத்தின் மூலம் நிதி திரட்ட இயலாமை போன்ற காரணங்களாலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதைக் கைவிடுவது என அரசு முடிவு செய்து, 1998 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் செயலாக்கம் கைவிடப்பட்டது.

**101—**

## பணம் பட்டுவாடா

**வினா எண் 11611—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதி, சக்தி சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு கரும்புக்கான விலையினை பணம் பட்டுவாடா உடன் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

பவானி தொகுதியிலுள்ள சக்தி 1 சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு 2001-2002 ஆம் ஆண்டைய அரவைப் பருவ கரும்பு கிரயத் தொகை முழுவதையும் வழங்கி விட்டது.

**102—**

## விற்காமல் இருப்பிலுள்ள சர்க்கரை

**வினா எண் 11679—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் எவ்வளவு சர்க்கரை விற்க முடியாமல் இருப்பில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) 30-9-2003 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 42.5 இலட்சம் குவிண்டால் சர்க்கரை இருப்பில் உள்ளது.

[2004 ஜூலை 31

(ஆ) ஆலை வாரியான விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

30-9-2003 ஆம் தேதிய நிலவரப்படி கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் உள்ள சர்க்கரை இருப்பு விவரம்:

(அளவு குவிண்டால்களில்)

| வ. எண் (1) | ஆலையின் பெயர் (2) | லெவி (3) | வெளிச் சந்தை (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 1 | அமராவதி | 0 | 185050 | 185050 |
| 2 | மதுரா | 0 | 0 | 0 |
| 3 | நேஷனல் | 0 | 36989 | 36989 |
| 4 | சேலம் | 0 | 260969 | 260969 |
| 5 | தர்மபுரி | 36196 | 77445 | 113641 |
| 6 | சுப்பிரமணிய சிவா | 0 | 330526 | 330526 |
| 7 | பெரம்பலூர் | 24653 | 263519 | 288172 |
| 8 | அறிஞர் அண்ணா | 4514 | 292512 | 297026 |
| 9 | செய்யார் | 14180 | 202058 | 216238 |
| 10 | ந.பு.கே.ஆர்.ஆர். | 16033 | 229862 | 245895 |
| 11 | வேலூர் | 20614 | 325492 | 346106 |
| 12 | ஆம்பூர் | 5214 | 247864 | 253078 |
| 13 | திருப்பத்தூர் | 6333 | 176207 | 182540 |
| 14 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி | 0 | 297072 | 297072 |
| 15 | கள்ளக்குறிச்சி-1 | 10837 | 290686 | 301523 |
| 16 | கள்ளக்குறிச்சி-2 | 0 | 332426 | 332426 |
| 17 | செங்கல்ராயன் | 18290 | 332047 | 350337 |
| 18 | மதுராந்தகம் | 0 | 18099 | 18099 |
| 19 | திருத்தணி | 22814 | 172453 | 195267 |
| | மொத்தம் | 179678 | 4071276 | 4250954 |



2004 ஜூலை 31]

**103—**

## ஊழியர்களுக்கு உடனடி சம்பளம் வழங்குதல்

**வினா எண் 12930—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் தொழிற்சாலையில் ஊழியர்களுக்கு கடந்த 4 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை என்ற விவரம் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம் சதர்ன் ஸ்ட்ரக்சுரல் தொழிற்சாலையில் பெரும்பான்மையான ஊழியர்களுக்கு 30-6-2003 அன்று வரையிலான ஊதியம் வழங்கப்பட்டு, விருப்ப ஓய்வில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) வினா எழவில்லை.

**104—**

## ஒரே மாதிரியான அடிப்படைச் சம்பளம்

**வினா எண் 13095—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலை தற்காலிகப் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான அடிப்படைச் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலை தற்காலிகப் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான அடிப்படைச் சம்பளம் வழங்க இயலாது.

**105—**

## நீதிமன்ற தடையாணையை நீக்குதல்

**வினா எண் 18147—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் சர்க்கரை ஆலைகளில், 10 சதவீத திறன் கொண்ட கரும்புகளுக்கு ஒரு டன்னுக்கு ரூ.1000/— வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) தனியார் சர்க்கரை ஆலை அதிபர்கள் வாங்கிய நீதிமன்ற தடையாணையை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.





(ஆ) மற்றும் (இ) 1998-99 ஆம் ஆண்டு தனியார் ஆலைகளை மாநில அரசு பரிந்துரை விலை செலுத்த கட்டாயப்படுத்தக் கூடாது என உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையாணை பிறப்பித்தது. தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனம் உயர் நீதிமன்றத்தில் கொடுத்துள்ள நீதிப் பேராணைகளை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய மனுக் கொடுத்துள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் இதில் அரசு தலையிட முடியாத நிலை உள்ளது.

இவ்வழக்கு கேட்புரைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது வாதிடுமாறு தமிழக அரசின் உச்ச நீதிமன்ற வழக்குரைஞர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தமிழக அரசின் உச்ச நீதிமன்ற வழக்குரைஞர் இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதென்றும், எவ்வித இடைக்கால ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சர்க்கரைத் துறை ஆணையர் இவ்வழக்கின் நிலையைக் கவனித்து வருகிறார்.

**106—**

## தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 18511—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மிகவும் பின்தங்கிய பகுதியானதால் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

107—

## எரிசாராயத் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

**வினா எண் 18760—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வரும் மொலாசஸைப் பயன்படுத்தி உரத் தொழிற்சாலை, எரிசாராயத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் மொலாசஸை (கழிவுப்பாகு) பயன்படுத்தி உரத் தொழிற்சாலை அமைக்க இயலாது. ஆனால் ஆலையில் கிடைக்கும் மொலாசஸை மூலப் பொருளாகக் கொண்டு எரிசாராயத் தொழிற்சாலை ஏற்படுத்தலாம். ஆனால், எரிசாராயத் தொழிற்சாலை துவக்க இவ்வாலையில் போதுமான நிதி ஆதாரம் இல்லை. எனவே, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எரிசாராய ஆலை துவங்கும் சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

108—

## எடப்பாடி வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்

**வினா எண் 25053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதுகுறித்த தகவல்களை அரசு அளிக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு பகுதியை வட்ட அளவில் (Taluk Level) தொழிலில் பின்தங்கிய பகுதியாகவோ மிகவும் பின்தங்கிய பகுதியாகவோ அறிவிக்கும் முறை மாற்றப்பட்டு ஒரு பகுதியை வட்டார அளவில் (Block Level) தொழிலில் பின்தங்கிய பகுதியாகவோ மிகவும் பின்தங்கிய பகுதியாகவோ அரசு அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி எடப்பாடி வட்டாரம் தொழிலில் பின்தங்கிய வட்டாரமாக அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

109—

## கூட்டுறவு சர்க்கரை ஆலை பெயர் மாற்றம்

**வினா எண் 25443—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதி, மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நாமக்கல் கூட்டுறவு சர்க்கரை ஆலை என பெயர் மாற்றம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தற்போது நாமக்கல் மாவட்டத்தில் இருந்தாலும் இவ்வாலைக்குத் தேவையான கரும்பு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலிருந்து பெறப்படுகிறது. சேலம் மாவட்டம் பிரிக்கப்படாத காலத்திலிருந்தே சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரிலேயே அப்பகுதியில் பிரசித்தமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே இதன் பெயரை மாற்ற உத்தேசம் ஏதும் இல்லை.

110—

## ஸ்டாண்டர்ட் கார் தொழிற்சாலை திறத்தல்

**வினா எண் 27586—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடிக்கிடக்கும் ஸ்டாண்டர்ட் கார் தொழிற் சாலையினைத் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஸ்டாண்டர்ட் கார் தொழிற்சாலையைச் சீரமைக்கும் திட்டங்கள் தோல்வியுற்றதால் தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் கழகம் (BIFR) 7-11-1994 அன்று நடைபெற்ற விசாரணையின்போது இந்த நிறுவனத்தை இனி சீரமைக்க முடியாது என்று முடிவெடுத்து, தனது முடிவை சென்னை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது. சென்னை உயர் நீதிமன்றம் இந்நிறுவனத்தைக் கலைக்க 4-10-1996 அன்று உத்தரவிட்டு, நிறுவன கலைப்பு அதிகாரி (Official Liquidator)-யை நியமனம் செய்தது. நிறுவன கலைப்பு அதிகாரி 27/29-11-1996 அன்று இந்நிறுவனத்தின் சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளார். எனவே, இந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறந்து செயல்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளும் வாய்ப்பில்லை.

**111—**

## கிரானைட் தொழிற்சாலை அரசே நிறுவுதல்

**வினா எண் 29809—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் கிரானைட் அதிகமாகக் கிடைப்பதால் அரசே கிரானைட் தொழிற்சாலை நிறுவ முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

குளத்தூர் தொகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் இல்லை.

**112—**

## சிமெண்ட் நிறுவன லாபம்

**வினா எண் 30090—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளாக ஈட்டியுள்ள நிகர இலாபம் எவ்வளவு?

(ஆ) அரசுக்குச் செலுத்திய விற்பனை வரி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் கடந்த 1999-2000, 2000—2001 மற்றும் 2001-2002 ஆகிய மூன்று ஆண்டுகளில் நிகர இலாபம் ஏதும் ஈட்டவில்லை.

(ஆ) அக்டோபர் 1999 முடிய அரசுக்குச் செலுத்திய விற்பனை வரி ரூ.18,90,92,790/- ஆகும்.

**113—**

## சர்க்கரை ஆலை தொடங்கும் திட்டம்

**வினா எண் 30689—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் நாகுடி அருகே அரசு சர்க்கரை ஆலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் நாகுடி அருகே சர்க்கரை ஆலை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**114—**

## பங்கு மூலதனமாக மாற்றுதல்

**வினா எண் 31255—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுரை, மேட்டுப்பட்டியிலுள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்தில் இயங்கி வருவதால் அரசு வழங்கியுள்ள கடனான ரூ.28 கோடியையும் அதற்கான வட்டி ரூ.12 கோடியையும் பங்கு மூலதனமாக மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை, மேட்டுப்பட்டியிலுள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை நட்டத்தில் இயங்கி வந்தது. 2002-2003 ஆம் ஆண்டு கரும்பு அரவையை நிறுத்தம் செய்தும், பணியாளர்களைத் தற்காலிக வேலை நிறுத்தம் செய்தும் அரசு ஆணை 2டி எண் 15, தொழில் துறை, நாள் 26-5-2003-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் நலிவடைந்த நிலையிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து பங்குகளை விலக்கிக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள 28 கோடியையும் அதற்கான வட்டி ரூ.12 கோடியையும் பங்கு மூலதனமாக மாற்றும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.*

**115—**

## புதிய இயந்திரங்களை இலாபத்துடன் இயக்குதல்

**வினா எண் 31596—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குளம் சிமென்ட் ஆலையில் ஏற்படும் நட்டத்திற்கு நிவர்த்தி செய்ய பழைய இயந்திரங்களை மாற்றி புதிய இயந்திரங்களை அமைத்து இலாபத்துடன் இயங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு புதிய இயந்திரங்களை அமைக்கும் திட்டம் தற்பொழுது மேற்கொள்ளப் படவில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*



**116—**

## எத்தனால் தயாரிக்கும் திட்டம்

**வினா எண் 33870—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, அமராவதி சர்க்கரை ஆலையில் உள்ள எரிசாராய ஆலையில் "எத்தனால்" தயாரிக்கும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள எரிசாராய ஆலையில் "எத்தனால்" தயாரிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**117—**

## சிப்காட் தொழிற்பேட்டை துவங்குதல்

**வினா எண் 39810—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, திருமைலாடி ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை ஆரம்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமைலாடி ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

**118—**

## சர்க்கரை ஆலையில் புதிய இயந்திரங்கள்

**வினா எண் 40164—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் அடிக்கடி பழுது ஏற்பட்டு அரவைத் திறனைப் பாதிக்கும் இயந்திரங்களை மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 2001-2002 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் பழுதடைந்த நான்கு சென்ட்டிரிபியூகல் இயந்திரங்கள் அவ்வரவைப் பருவத்திலேயே மாற்றப்பட்டு புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டன.

**119—**

## தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குவதைத் தடுத்தல்

**வினா எண் 19796—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்குவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் அதன் செயலாக்க விவரங்கள்:

நீலகிரி மாவட்டத்தில் 16 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 15 தொழிற்சாலைகள் செயல்படும் நிலையிலும் ஒரு தொழிற்சாலை செயலிழந்த நிலையிலும் உள்ளன. செயல்பட்டுவரும் 15 தொழிற்சாலைகளில் இரண்டு தொடர்ந்து இலாபத்திலும் மீதம் உள்ள 13 தொழிற்சாலைகள் திரண்ட நட்டத்திலும் இயங்கி வருகின்றன. திரண்ட நட்டத்தில் இயங்கி வந்தாலும் அவற்றில் 7 தேயிலைத் தொழிற்சாலைகள் நடப்பு ஆண்டில் (2002-2003) இலாபத்தில் செயல்படுகின்றன. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | ஆலையின் பெயர் | நிகர இலாபம்/ நடப்பு ஆண்டு (2002-03) நட்டம்/இலாபம் (ரூ. இலட்சத்தில்) | திரண்ட நட்டம்/ இலாபம் |
|---|---|---|---|
| 1 | சாலிஸ்பரி தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 7.54 | (+) 7.54 |
| 2 | பந்தலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 1.97 | (+) 1.97 |
| 3 | குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 10.77 | (-) 29.78 |

| | | | |
|---|---|---|---|
| 4 | பிக்கட்டி தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 11.29 | (-) 8.91 |
| 5 | மேற்குநாடு தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 9.08 | (-) 79.43 |
| 6 | கைகாட்டி தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 1.73 | (-) 17.78 |
| 7 | கட்டப்பெட்டு தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (+) 3.02 | (-) 88.75 |
| 8 | மஞ்சூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 0.23 | (-) 33.10 |
| 9 | சின்னக்கோரை தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 13.68 | (-) 115.39 |
| 10 | மகாலிங்கா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 16.39 | (-) 55.82 |
| 11 | இத்தலார் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 3.79 | (-) 123.98 |
| 12 | கரும்பாலம் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 2.38 | (-) 145.48 |
| 13 | ஏபநாடு தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 22.59 | (-) 183.81 |
| 14 | பிராண்டியர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 5.29 | (-) 63.87 |
| 15 | பிதர்காடு தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை | (-) 7.17 | (-) 128.97 |

பொதுவாக தேயிலைத் தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குவதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு:—

1. உலக அளவில் தேயிலை உற்பத்தி அதன் தேவையை விட கடந்த ஐந்து ஆண்டுகளாக அதிகமாக உள்ளது. அதன காரணமாக கடந்த சில ஆண்டுகளில் அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:—





(மில்லியன் கிலோவில்)

| வருடம் | உலக அளவில் தேயிலை உற்பத்தி | விற்பனை | அதிக உற்பத்தி |
|---|---|---|---|
| 1997 | 2792.35 | 2745.80 | 46.55 |
| 1998 | 3048.30 | 2912.65 | 135.65 |
| 1999 | 2955.27 | 2902.67 | 52.60 |
| 2000 | 3013.81 | 2983.27 | 120.64 |
| 2001 | 3090.00 | 2974.00 | 116.00 |

2. தேயிலைத்தூள், தேயிலை விளைவிக்கப்படும் இதர நாடுகளிலிருந்து குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. உலகளவிலான வியாபார தாராளமயம் தொடர்பான அரசின் கொள்கையால் தேயிலை விற்பனை இதர நாடுகளிலும் அதிகரித்துள்ளது.

3. தேயிலைத்தூள் ஒரு அத்தியாவசிய உணவுப் பொருள் அல்ல. அதனால் இதனைக் கட்டாயப்படுத்தி விற்பனை செய்ய இயலாது.

4. தேயிலைத்தூளின் விலை நிர்ணயம் பொதுவாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்குக் கிடைக்கும் விலையையும் சார்ந்துள்ளது.

5. நீலகிரி மாவட்டத்தில் தனியார் அமைப்பில் தேயிலைத் தொழிற்சாலைகள் (Bought Leaf Tea Factories) பெருமளவில் துவங்கப்பட்டதால், இன்ட்கோ உறுப்பினர்கள்/சிறு விவசாயிகள் தங்களது பசுந்தேயிலையை அத்தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் விற்பனை செய்வதால், தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் அதன் முழு உற்பத்தித் திறனுக்கு ஏற்ற வகையில் இயங்க இயலவில்லை. இதனால் தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்திச் செலவு அதிகரித்து நட்டம் ஏற்படுகிறது.

நட்டத்தைக் குறைக்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள்:

1. தேயிலைத்தூளின் விலை பொதுவாக சந்தை விலையைப் பொறுத்தே நிர்ணயம் செய்யப்படுகிறது. தேயிலைத்தூளுக்கு சந்தை

விலையை அதிகரிக்க தேயிலை வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ.231.76 இலட்சம் மதிப்பில் தர மேம்பாட்டுத் திட்டம் II, தேயிலை தொழிற்கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் செயலாக்கத்தில் உள்ளது. இந்தத் தர மேம்பாட்டுத் திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. இதன்படி தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலைகள் சி.டி.சி. மற்றும் ஆர்தொடாக்ஸ் ரக தேயிலைத்தூளை உற்பத்தி செய்யும். இதன் அடிப்படையில் விற்பனையை அதிகரித்து தொழிற்சாலைகள் விரைவில் நஷ்டத்தைக் குறைக்கும்.

2. பணியாளர் செலவினத்தைக் குறைத்து அதன் மூலம் நிர்வாகச் செலவினத்தைக் குறைக்க 'தன் விருப்ப ஓய்வுத் திட்டம்' தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

3. தேயிலை விற்பனையை தமிழ்நாட்டில் அதிகரிக்க "ஊட்டி டீ" என்ற பெயரில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் தேயிலைத்தூள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 4813 மெட்ரிக் டன் "ஊட்டி டீ" ரூ.3,609.75 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

4. "ஊட்டி டீ" பொது விநியோகத் திட்டத்தில் பயன்பெறும் பொதுமக்களை மட்டும் சென்றடைவதால் இதர பொதுமக்களும் ஊட்டி தேயிலைத்தூளை வாங்க வழிவகை செய்யும் நோக்குடன் "ஊட்டி கோல்டு" என்ற பெயரில் தேயிலைத்தூள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனை விற்பனை செய்ய 16 மாவட்டங்களில் மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 6,359 கிலோ தேயிலைத்தூள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களிலும் விரைவில் முகவர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

5. தேயிலை, பெருமளவு ஏலத்தின்மூலம் விற்பனை செய்யப்படுவதால் தேயிலை ஏலத்தை வெளிப்படையாக நடத்தி அதன்மூலம் தேயிலைக்குக் கிடைக்கும் விற்பனை விலையை அதிகரிக்க "டீ சர்வ்" என்ற பெயரில் கூட்டுறவு அமைப்பில் தேயிலை ஏல மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏல மையம் விரைவில் தனது வியாபாரத்தைத் தொடங்கும். இதனால் தேயிலைக்குக் கிடைக்கும் விற்பனை விலை அதிகரிக்கவும் அதன்மூலம் தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் நட்டம் குறையவும் வாய்ப்புள்ளது.



6. தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தை மேம்படுத்தி அதன்மூலம் தரச் சான்றிதழ்கள் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் மேற்கண்ட நடவடிக்கைகளால் நட்டம் குறைந்து அவை விரைவில் இலாபகரமாகச் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**120—**

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 2849—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, இலையூர் ஊராட்சி, இலையூர் கட்டிணங்கொல்லையில் கால்நடை மருந்தகம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**121—**

## மகளிர், ஆடு வளர்த்தல்

**வினா எண் 6939—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

*(அ) தமிழ்நாட்டில் மகளிர் ஆடு வளர்ப்புத் திட்டத்தை அமல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?*

*(ஆ) முதல் கட்டமாக எங்கெங்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 2001-2002 பகுதி-2 திட்டத்தின்கீழ் 750 செம்மறியாடு அலகுகள் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் பயனடைவார்கள்.

மேற்கண்ட திட்டத்தில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் உள்ள 557 ஆண்களும், 156 பெண்களும் பயனடைந்துள்ளனர்:

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி | 7. விருதுநகர் |
| 2. விழுப்புரம் | 8. மதுரை |
| 3. சிவகங்கை | 9. அரியலூர் |
| 4. தூத்துக்குடி | 10. பெரம்பலூர் |
| 5. இராமநாதபுரம் | 11. கடலூர் |
| 6. புதுக்கோட்டை | 12. திண்டுக்கல் |

மேலும், 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் இசைவளிக்கப்படவில்லை.

**122—**

## கால்நடை மருத்துவக் கிளை நிலையம்

**வினா எண் 10431—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

*(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமத்திற்கு கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமத்தில் ஒரு மருத்துவக் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

**123—**

## கூடுதல் மருத்துவர்களை நியமித்தல்

**வினா எண் 14456—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி கால்நடை மருத்துவமனையிலுள்ள கால்நடை உதவி மருத்துவர் பதவி நிரப்பப்பட்டுள்ளது. எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் இருப்பாளி மற்றும் சிலுவம்பாளையம் ஆகிய கிராமங்களில் தலா ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கப்பட்டு அவற்றிற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளபடி தலா ஒரு கால்நடை உதவி மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும்,

[2004 ஜூலை 31

எடப்பாடி ஊராட்சியில், சித்தூர் மற்றும் பூலாம்பட்டி ஆகிய கிராமங்களில் தலா ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டு· கால்நடை ஆய்வாளர்களைக் கொண்டு அவை செயல்படுகின்றன. கால்நடை மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஒரு கால்நடை மருந்தகத்திற்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் என்பதைத் தவிர கூடுதலாக மருத்துவர் பதவி தோற்றுவிக்க வழிவகைகள் இல்லை.

**124—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 19113—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, மானூர் யூனியனிலுள்ள மேலபிள்ளையாளர் குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**125—**

## விவசாயிகள் வருவாயைப் பெருக்குதல்

**வினா எண் 20222—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை பகுதி விவ்சாயிகள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள ஏதுவாக கலப்பின செம்மறியாட்டுப் பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றைச் செயல்படுத்த அரசு முன்வருமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உடுமலை பகுதியில் விவசாயிகளின் வருவாயைப் பெருக்கிக்கொள்ள ஏதுவாக செம்மறியாட்டுப் பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றினைச் செயல்படுத்த தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**126—**

## கால்நடை கிளை நிலையம் தொடங்குதல்

**வினா எண் 20443—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசலில் கால்நடை கிளை நிலையம் (வெட்டினரி சப்—சென்டர்) தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**127—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 20451—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் ஒன்றியம், ஆவடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**128—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 20863—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 2,236 மட்டுமே உள்ளது. அதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் காடாம்புலியூர் கால்நடை நிலையம் உள்ளது. தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும், கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. எனவே பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் தற்போது செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.



**129—**

## கோழி முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

**வினா எண் 27189—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படும் வாத்து மற்றும் கோழி முட்டைகள் எண்ணிக்கை கடந்த ஆண்டு எவ்வளவு?

(ஆ) அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு கடந்த ஆண்டு அனுப்பப்பட்ட கோழி முட்டைகளின் எண்ணிக்கை 72 இலட்சம் ஆகும். வாத்து முட்டைகள் தினமும் சுமார் 5,000-லிருந்து 10,000 வரை மேற்கு வங்காளத்திற்கு வருடத்தில் சில குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு சுமார் 1454.56 இலட்சம் கோழி முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. வாத்து முட்டைகள் கடந்த ஆண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை.

**130—**

## கால்நடை மருந்தகம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 31633—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்திலுள்ள கால்நடை மருந்தகத்தை, மருத்துவமனையாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

*(ஆ) எழாது.*

**131–**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 35617—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, கல்லாபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

**132—**

### விடு கட்ட கடன்

**வினா எண் 2121—திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிராமப்புறத்தில் வசிக்கும் கூலித் தொழிலாளர்களுக்கு சுலபத் தவணையில் வீடு கட்ட கடன் அளிக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*





**133—**

### விட்டு வசதி வாரிய விடுகள்

**வினா எண் 6747—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு, மதுரை ஆனையூர் ஜெயலலிதா நகரில் செக்டார் 6-ல் விற்பனையாகாத வீடுகளுக்கு நிர்ணயித்த விலையை, ஏற்கெனவே ஒதுக்கீடு செய்த வீடுகளுக்கும் நிர்ணயிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**134—**

### குடிசை மாற்று வாரிய விடுகளைப் பராமரித்தல்

**வினா எண் 7663—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 5வது வட்டம், வ.உ.சி. நகர், குடிசை மாற்று வாரிய வீடுகளில் படிகள், மேற்கூரைகள், கழிவுநீர்க் குழாய்கள் ஆகியவற்றைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**135—**

## குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 7676—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 6வது வட்டம், பூண்டி தங்கம்மாள் தெரு, நாகூரான் தோட்டம் ஆகிய இடங்களில் குடிசைமாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்க்காமல் அபாயகரமான நிலையில் உள்ள படிகள், மேற்கூரைகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். 2001-2002 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.5.08 இலட்சம் செலவில் நாகூரான் தோட்டம் மற்றும் பூண்டி தங்கம்மாள் தெரு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் திட்டப் பகுதியில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மார்ச் 2002-ல் முடிவுற்றுள்ளன.

**136—**

## வாரியம் ஒதுக்கீடு

**வினா எண் 7978—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான திறந்தவெளி மனைகளை ஒதுக்கீடு பெற்றவர்கள் தங்கள் மனைகளை கிரயத்திற்கு வேறு நபர்களுக்குக் கொடுக்கும்போது வேறு நபர்கள் பெயரில் வாரியம்





ஒதுக்கீடு ஆணைகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை. அவசியம் எழவில்லை.

**137—**

## பேருந்து நிலையப் பணிகள்

**வினா எண் 9071—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்பேட்டில் கட்டப்பட்டுவரும் பேருந்து நிலையப் பணிகள் எப்போது முடிவடையும்?

(ஆ) எப்போது செயல்படத் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னைப் புறநகர் பேருந்து நிலையக் கட்டடப் பணிகள் முழுமையாக முடிவடைந்து பேருந்து நிலையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 18-11-2002 அன்று திறந்து வைக்கப்பட்டு முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

**138—**

## ஏழை மக்களுக்குக் குடியிருப்பு

**வினா எண் 9678—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், தண்டையார்பேட்டையில் பாரதி நகர் என்கிற நகரை உருவாக்கத்

[2004 ஜூலை 3

திட்டம் தீட்டப்பட்டிருக்கும் நிலையில் அக்குடியிருப்புகளை ஏழை மக்கள் வசிப்பதற்காகக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*ஆம். பாரதி நகர் என்ற நகரை உருவாக்கத் திட்டம் தீட்டப் பட்டிருக்கும் நிலையில் ஏழை மக்கள் வசிப்பதற்காகக் குடியிருப்புகள் கட்டித்தர ஆவன செய்யப்பட்டுள்ளது.*

**139—**

## அடுக்குமாடிக் குடியிருப்பு

**வினா எண் 12120—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் நகராட்சியிலுள்ள தாழங்குப்பம் உட்பட பல்வேறு கிராமங்களுக்கு 1996 ஆம் ஆண்டு 10.5 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு செயல்படுத்தாத அத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*ஆம்.*

**140—**

## ஒய்வு விடுதி கட்டுதல்

**வினா எண் 12213—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் வீட்டு வசதித் துறை மூலம் ஓய்வு விடுதி கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**141—**

## குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள்

**வினா எண் 13569—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் பஞ்சாயத்திலுள்ள அருந்ததியர் சமூகத்திற்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**142—**

## தவணை முறைத் திட்டத்தில் வீடுகள்

**வினா எண் 16259—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் வீட்டு வசதிப் பிரிவில் ஏற்காடு சுற்றுலாத் தலத்தில் தவணை முறைத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் எத்தனை?*

*(ஆ) இதில் எத்தனை வீடுகள் விற்கப்பட்டன?*

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) 67 வீடுகள் முதல் கட்டமாகக் கட்டப்பட்டுள்ளன.*

*(ஆ) எந்த வீடும் விற்கப்படவில்லை.*

**143—**

**காவல் நிலையம், சமுதாயக்கூடம், மருத்துவமனை மற்றும் பள்ளிக்கூடங்கள்**

**வினா எண் 16260—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் வீட்டு வசதிப் பிரிவில் சீலாவரி ஏரி மற்றும் தளவாய்ப்பட்டி ஏரியில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், சமுதாயக்கூடம், மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள் ஆகியவை இதுவரை பயன்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆமெனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீலாவரியில் காவல் நிலையம், சமுதாயக்கூடம் மற்றும் மருத்துவமனை கட்டப்படவில்லை. ஆரம்பப் பள்ளி மற்றும் மழலையர் பள்ளி கட்டப்பட்டுள்ளன. அதில் மழலையர் பள்ளி, கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, மதிய உணவுக்கூடம் இயங்கி வருகிறது. ஆரம்பப் பள்ளி இன்னமும் விற்கப்படவில்லை.*

*தளவாய்ப்பட்டியில் காவல் நிலையம் மற்றும் மருத்துவமனை கட்டப்படவில்லை. வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தை தளவாய்ப்பட்டி பஞ்சாயத்து வாரியத்திற்குப் பணம் செலுத்தி தன்வசம் ஏற்கவேண்டும். பஞ்சாயத்திடம் நிதியின்மையால் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. தளவாய்ப்பட்டியில் கட்டப்பட்டுள்ள மழலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆகியவை கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன.*





**144—**

**வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்**

**வினா எண் 16296—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் சீர்காழி வட்டம், கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலம் விவசாய கிராமப்புற மக்களுக்கு அதிகமாகக் கடன் கொடுத்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**145—**

**வீடு கட்ட கடன்**

**வினா எண் 16739—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

*எல்லா நிதி நிறுவனங்களும் வீடு கட்ட கடன் கொடுக்கும் நிலையில் கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மட்டுமே வீடு கட்ட கடன் கொடுக்க வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**146—**

## குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 19162—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டத்திலுள்ள வ.உ.சி. நகர் மற்றும் நாகூரார் தோட்டம் குடியிருப்புகளில் கைப்பிடிச் சுவர்கள், மாடிப் படிக்கட்டுகள் இடிந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*ஆம்.*

**147—**

## வீடுகளைச் சீர் செய்தல்

**வினா எண் 19487—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 12-வது வட்டம், பார்த்தசாரதி நகர், குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் உள்ள 5 பகுதிகளில் (பிளாக்குகளில்) உள்ள வீடுகளைச் சீர்செய்து குடிநீர், கழிவுநீர்க் குழாய்களை மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி 12-வது வட்டம், பார்த்தசாரதி நகர், அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் உள்ள 170 குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளான மாடிப் படிகள், மாடி முகப்புகள், கைப்பிடிச் சுவர்கள், கான்கிரீட் தளங்களைச் செப்பனிடுதல், கூரைத் தளங்களில் ஓடுகள் பதித்தல் போன்ற பணிகள் ரூ.4.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு, இத்திட்டப் பணிகள் மார்ச் 2003-க்குள் முடிவுற்றுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக மார்ச் 2003 முடிய ரூபாய் 4.35 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.*

**148—**

## வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 23529—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செய்யாறு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம் மக்களுக்குக் கடனுதவி வழங்க பத்திரத்தை அடமானமாகப் பெற்றுக்கொண்டு கடனுதவியும் அளிக்காமல் பத்திரமும் திரும்பக் கொடுக்காமல் இருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) செய்யாறு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் கடன் கோரிய 13 உறுப்பினர்களில் கடன் வழங்கப்பட்ட ஒரு நபர் தவிர்த்து, 12 நபர்களுக்குத் தற்போது கடன் வழங்க இயலாமையால் அவ்வுறுப்பினர்களிடம் கடன் பத்திரங்கள் அனைத்தும் திரும்ப வழங்கப்பட்டு, பத்திரங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.*

**149—**

**அரசுக் குடியிருப்புகள் கட்டுதல்**

**வினா எண் 26975—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டப் பகுதியில் உள்ள வாடகைக் குடியிருப்புகளை உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சி, நகராட்சி போன்ற அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.*

**150—**

**அரசு அலுவலர் குடியிருப்பு**

**வினா எண் 27324—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*குளத்தூர் தொகுதி, கீரனூரில் அரசு அலுவலர் குடியிருப்பு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*குளத்தூர் தொகுதி, கீரனூரில் ஒரு மாவட்டத் தலைமையிடமோ அல்லது வருவாய்க் கோட்டத் தலைமையிடமோ இல்லை என்பதால் அங்கு அரசு அலுவலர் குடியிருப்பு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**151—**

**வெள்ளத் தடுப்பு நடவடிக்கை**

**வினா எண் 27327—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடியிலுள்ள அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புப் பகுதி மழை வெள்ளத்தில் மூழ்கி குடியிருப்போர் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், வெள்ளத் தடுப்பு நடவடிக்கையை நிரந்தரமாக எடுக்க அரசு ஆவன செய்யுமா?.*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வெள்ளத் தடுப்பு நடவடிக்கை நிரந்தரமாக எடுக்கப்பட்டுள்ளது.*

[2004 ஜூலை 31

152—

## அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்பு

**வினா எண் 31044—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செஞ்சியில் வீட்டு வசதித் துறையின் மூலமாக அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

153—

## வீடு கட்ட கடன் வசதி

**வினா எண் 31045—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செஞ்சி வீடு கட்டும் சங்கத்தின் மூலமாக கிராமப்புறங்களில் வீடு கட்ட மானியத்துடன் கடன் வழங்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

154—

## தவணை முறையில் வீடு விற்கும் திட்டம்

**வினா எண் 35867—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*வீட்டு வசதி வாரியத்தால் வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளை அவ்வீடுகளில் குடியிருப்போருக்கு தவணை முறையில் விற்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

155—

## நீண்டகால தவணை முறையில் வீடுகள் விற்றல்

**வினா எண் 37766—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உடுமலைப்பேட்டை அருகே மலையாண்டிபட்டினத்தில் விற்கப்படாமல் உள்ள வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளை குறைந்த விலையில் நீண்டகாலத் தவணை முறையில் விற்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*உடுமலைப்பேட்டை அருகே மலையாண்டிபட்டினத்தில் வீட்டு வசதி வாரியத்தால் 316 வீடுகள் 1996 ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. இந்த வீடுகளை நீண்டகாலத் தவணை முறையில் (15 ஆண்டுகள்) விற்பதற்கு விற்பனை மேளா பலமுறை நடத்தப்பட்டது. தற்போது ஒவ்வொரு வகைக் குடியிருப்பு வீடுகளில் 10 சதவீத வீடுகளுக்கு 25 சதவீதம் விலை குறைத்து பரீட்சார்த்த அடிப்படையில் விற்பதற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தீர்மான எண் 605, நாள்: 27-12-2002-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துருவிற்கு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் விற்பனை ஆகாத வீடுகளை விற்பனை செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்வதற்கு*

[2004 ஜூலை 31

அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழுவின் ஒப்புதல் பெற்றபின் இந்த வீடுகளை விற்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்பொழுது தகுதியிருப்பின் குறைந்த வட்டிக்கும், நீண்டகாலத் தவணைக்கும் நிதி நிறுவனங்கள் மூலமாகக் கடன்பெற தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உதவிடும்.

**156—**

## உயர்வகை வீடுகள்

**வினா எண் 40155—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், கரூர்-சனப்பிரட்டி புறநகர் குடியிருப்புத் திட்டத்தில் விற்பனை செய்யப்படாமல் உள்ள உயர்வகை வீடுகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

கரூர்—சனப்பிரட்டி புறநகர் குடியிருப்புத் திட்டத்தில் உயர்வகைப் பிரிவில் மொத்தம் 51 வீடுகள் விற்பனை செய்யப்படாமல் உள்ளன.

**157—**

## 22 ரகம் திட்டம்

**வினா எண் 2271—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட 22 ரகம் திட்டம் அமல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தறிக்கென்று ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட 22 ரகங்கள் 11 ரகங்களாக மைய அரசால் மாற்றப்பட்டு, தமிழ்நாட்டில் ஏப்ரல் 1998 முதல் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**158—**

## சேலம் கூட்டுறவு நூற்பாலை

**வினா எண் 3398—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள சேலம் கூட்டுறவு நூற்பாலை மிகவும் நலிவுற்று சம்பளம்கூட வழங்க முடியாத நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சிறந்த ஆலையாகத் திகழ நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் ஒட்டுமொத்த நட்டம் ரூ.2877.82 இலட்சம். அதனுடைய கடன் மற்றும் இதர பொறுப்புகள், அதன் சொத்தைப்போல், ஏறக்குறைய ஐந்து மடங்கு ஆகும். தொடர்ந்து நட்டமடைந்து வரும் இந்த ஆலையின் எதிர்காலம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**159—**

## உடைகள் ஏற்றுமதி

**வினா எண் 22280—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியைப் பெருக்கி நவநாகரீக உடைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழுவை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி மூலம் நவநாகரீகப் பட்டு உடைகள் உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**160—**

**சிட்டா தாலுக்கு வரி இரத்து செய்தல்**

**வினா எண் 39167—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிட்டா தாலுக்கு விதிக்கப்பட்டுள்ள 11 சதம் வரியை அரசு இரத்து செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**161—**

**மீன் கொள்முதல் நிலையங்கள்**

**வினா எண் 14492—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

தமிழகத்தின் அனைத்து மீன்பிடித் துறைமுகங்கள் அருகிலும் மீன் கொள்முதல் நிலையங்களை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் அனைத்து மீன்பிடித் துறைமுகங்கள் அருகிலும் மீன் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**162—**

**மீன் கொள்முதல் நிலையங்கள்**

**வினா எண் 14960—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் அனைத்து மீன்பிடித் துறைமுகங்கள் அருகிலும் மீன் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் அனைத்து மீன்பிடித் துறைமுகங்கள் அருகிலும் மீன் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**163—**

**மீனவ மக்களுக்கு சமுதாயக் கூடம்**

**வினா எண் 20430—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஒன்றியம், பொன்னகரம் கிராமத்தில் மீனவ மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஒன்றியம், பொன்னகரம் கிராமத்தில் மீனவ மக்களுக்கு சமுதாயக்கூடம் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**164—**

## சில்லறை மீன் விற்பனை அங்காடி

**வினா எண் 26948—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் சில்லறை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் 50 கடைகள் கொண்ட மீனவர் அங்காடி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையிலேயே மீனவர் அங்காடிகளை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**165—**

## சாலை வசதி

**வினா எண் 27329—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, தருவைக்குளம் மீனவர் குடியிருப்பிற்கு சாலை வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) விளாத்திகுளம் தொகுதி, தருவைக்குளம் மீனவர் குடியிருப்பிற்கு சாலை வசதி செய்யும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**166—**

## இலவச தொகுப்பு விடுகள்

**வினா எண் 30530—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி, கூழையார் மீனவர் கிராமத்திலுள்ள மீனவர் குடும்பங்களுக்கு மீன்வளத் துறையின் மூலம் இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கூழையார் மீனவக் கிராமத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கு 25 வீடுகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

**167—**

## செயற்கை முத்துக்கள் வளர்த்தல்

**வினா எண் 31643—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் கடலில் செயற்கை முத்துக்கள் வளர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் கடலில் செயற்கை முத்துக்கள் வளர்க்கும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

168—

**மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம்**

**வினா எண் 33961—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மோர்தானா அணையில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மோர்தானா அணையில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

169—

**கண்ணாடி இழைப் படகுகள்**

**வினா எண் 34376—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னை மீனவர்களிடமிருந்து கண்ணாடி இழைப்படகுகள் கேட்டு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



விடை—

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம். வடசென்னை ஜீவரத்தினம் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களான திரு. கே.எம். லட்சுமணன் மற்றும் திரு. கே.எம். மூர்த்தி ஆகிய இருவரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

(ஆ) மீன் துறையினால் கண்ணாடி இழைப் படகுகள் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. மேலும் இவர்கள் தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்திருப்பதால், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு இணையமும் கடன் வழங்கவியலாது. இத்தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டன.

170—

**ஏழை மீனவர்களுக்கு இலவச வீடுகள்**

**வினா எண் 36661—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம், குப்பம், உய்யாலிக்குப்பம் ஏழை மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் இவ்வாண்டில் கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் மற்றும் உய்யாலிக்குப்பம் மீனவ கிராமங்களுக்கு முறையே 73 வீடுகளும் மற்றும் 348 வீடுகளும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இலவச வீடுகள் பெறாத மீனவ கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதால், இம்மீனவ கிராமங்களுக்கு தற்போது இலவச வீடுகள் கட்டி வழங்கும் கருத்துரு இல்லை.

[2004 ஜுலை 31

171—

### மீன் பிடிக்கும் உரிமம் ஏலம்

**வினா எண் 37062—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், அமராவதி அணையிலும் மற்றும் உடுமலைப்பேட்டை ஏழுகுளப் பகுதிகளிலும் (Seven Tank Area) மீன்பிடிக்கும் உரிமத்தை தனியாருக்கு ஏலம் விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், அமராவதி அணையின் மீன்பிடி உரிமத்தினை தனியாருக்கு வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ள ஏழுகுளங்கள், தற்போது உடுமலைப்பேட்டை வட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் 30–6–2005 முடிய குத்தகைக்கு விடப்பட்டு மீன் வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. அவற்றைத் தனியாருக்கு ஏலம் விட கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

172—

### எரிபொருள் நிலையம் செயல்படுத்துதல்

**வினா எண் 37154—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கட்டப்பட்டுள்ள எரிபொருள் நிலையம் (பெட்ரோல் பங்க்) செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அவற்றைச் செயல்படுத்த அரசு முன்வருமா?



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் திருமுல்லை வாசலில் இயக்கப்படும் டீசல் விற்பனை நிலையம், 25–10–2003 முதல் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) வினா எழ இடமில்லை.

173—

### மீனவ மக்களுக்கு வீடுகள்

**வினா எண் 38692—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியிலுள்ள, கோபாலபட்டினம், ஜெகதாப்பட்டினம், வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி மற்றும் செல்லனேந்தல் ஆகிய கிராமங்களிலுள்ள மீனவ மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

2001–2002 வரை கோபாலப்பட்டினம் மீனவ கிராமத்திற்கு 64 வீடுகளும், ஜெகதாப்பட்டினம் கிராமத்திற்கு 50 வீடுகளும், வடக்கு அம்மாபட்டினம் மீனவக் கிராமத்திற்கு 125 வீடுகளும், செல்லனேந்தல் கிராமத்திற்கு 75 வீடுகளும், கட்டுமாவடி கிராமத்திற்கு 30 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

174—

### கடல் எல்லை நிர்ணயம்

**வினா எண் 49103—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் தடையின்றி மீன்பிடிக்க இலங்கைக் கடற்படையினரால் பாதிக்கப்படாத வகையில் கடலில்

எல்லை வரையறை நிர்ணயம் செய்ய மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் தடையின்றி மீன்பிடிக்க இலங்கைக் கடற்படையினரால் பாதிக்கப்படாத வகையில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே உள்ள பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் சர்வதேச கடல் எல்லை ஏற்கெனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தத் தேவையில்லை.

(ஆ) எழாது.

**175—**

### நவீன கழிப்பிட வசதி

**வினா எண் 923—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்திற்கு நவீன கழிப்பிட வசதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்திற்கு நவீன கழிப்பிட வசதி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன.





**176—**

### புதிய சுற்றுலா கேளிக்கை மையம்

**வினா எண் 1601—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் பயணிகளைக் கவரும் புதிய சுற்றுலா கேளிக்கை மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் பயணிகளைக் கவரும் புதிய சுற்றுலா கேளிக்கை மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**177—**

### கடற்கரைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 4292—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தி சுற்றுலாத் தலமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தி சுற்றுலாத் தலமாக்க எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 ஜூலை 31

**178—**

### விராலிமலையை சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 4901—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா, விராலி மலையை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா, விராலி மலையை சுற்றுலாத் தலமாக்க எந்தவித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**179—**

### படகு சவாரியை நவீனப்படுத்தும் திட்டம்

**வினா எண் 5789—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அணை சுற்றுலாத் தலமாக உள்ளதால், அங்கு உள்ள பூங்காவை மேம்படுத்தவும், அணையில் படகு சவாரியை நவீனப்படுத்தவும் அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அணை சுற்றுலாத் தலமாக உள்ளதால் அங்கு உள்ள பூங்காவை மேம்படுத்த 2001-2002 ஆம் ஆண்டு ரூ.20.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த அணையில் படகு சவாரியை நவீனப்படுத்தும் திட்டம் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.*



2004 ஜூலை 31]

**180—**

### பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 19559—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வேலூரை மையமாக வைத்து சுற்றுலாத் துறை மூலம் திருப்பதி, திருத்தணி, திருவண்ணாமலை, ரத்னகிரி, பள்ளிக்கொண்டா, வெட்டுவானம், படவேடு, காஞ்சிபுரம், மேல்மருவத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள் வசதிக்காக பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*வேலூரை மையமாக வைத்து சுற்றுலாத் துறை மூலம் திருப்பதி, திருத்தணி, திருவண்ணாமலை, ரத்னகிரி, பள்ளிக்கொண்டா, வெட்டுவானம், படவேடு, காஞ்சிபுரம், மேல்மருவத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களுக்கு சுற்றுலா நடத்தினால் அதற்கு பயணிகளின் ஆதரவு போதுமானதாக இருக்காது என்பதாலும், அதன்காரணமாக அரசுக்கு நட்டம் ஏற்படும் என்பதாலும் அவ்வாறான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**181—**

### ஓட்டல் கட்டும் திட்டம்

**வினா எண் 22685—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஈரோடு வ.உ.சி. பூங்காவில் தமிழ்நாடு ஓட்டல் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*ஈரோடு வ.உ.சி. பூங்காவில் தமிழ்நாடு ஓட்டல் கட்டும் திட்டம் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.*

[2004 ஜூலை 31

182—

## குப்பை லாரிகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 1055—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் நகரில் குப்பைகள் அள்ளப்படாமல் குவிந்துள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* அக்குப்பை அள்ளும் ஆறு லாரிகள் பழுதடைந்து நிற்பதை அரசு எப்போது சரி செய்யும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் நகரில் தினசரி சேரும் குப்பைகள் நகராட்சியால் அகற்றப்பட்டு நகர் தூய்மையான முறையில் பராமரித்து வரப்படுகிறது. மேலும் பழுதடைந்த ஆறு லாரிகள் அனைத்தும் பழுதுபார்க்கப்பட்டு, குப்பைகள் அகற்றும் பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

183—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 1327—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, மாட்டையாம்பட்டி, காட்டுவளவு, வினைத்தான் வளவு பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், உடனடியாக குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, மாட்டையாம்பட்டி காட்டுவளவு, வினைத்தான் வளவு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

184—

## தமிழ்த் திரைப்பட பாதுகாப்பு

**வினா எண் 4007—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்த் திரைப்பட பாதுகாப்பு கருதி திருட்டு வி.சி.டி. தயாரிப்பாளர்களை குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருட்டு வி.சி.டி. தயாரிப்பாளர்களை, குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

185—

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 6757—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள மல்லாங்கிணறு, காரியாப்பட்டி பேரூராட்சிகளின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க புதிய நீர் ஆதாரம் தோற்றுவித்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மல்லாங்கிணறு பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி 15-12-2001 முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. காரியாப்பட்டி பேரூராட்சிக்கு போதிய நிதி வசதி இல்லாததால், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வழங்க இயலாது.

**186—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 7330—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தங்குளி கிராமத்தில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தங்குளி கிராமத்தில் கூத்தங்குளி குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு 24-6-2002 முதல் பராமரிப்புக்காக ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

**187—**

## குடிநீர் சீராகக் கிடைக்க வசதி

**வினா எண் 7521—திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தூத்துக்குடியில் குடிநீர் எப்போதும் சீரான முறையில் கிடைக்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி நகராட்சிக்குப் புதிய குடிநீர்த் திட்டம் செயற்படுத்தப்பட்டு 14-3-2003 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது.

**188—**

## பேருந்து நிலையம் விரிவுபடுத்துதல்

**வினா எண் 9173—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி பேருந்து நிலையத்தில் இடநெருக்கடி உள்ளதால் தென்புறம் காவல் துறைக்குச் சொந்தமான காலி இடத்தைப் பெற்று பேருந்து நிலையம் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சி நகராட்சிப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

**189—**

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 12551—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை மற்றும் மாடம்பாக்கம் பேரூராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் சரியாக நடைபெறாததால் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், பீர்க்கன்கரணை மற்றும் மாடம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 1-6-2002-ல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

**190—**

**சமுதாயக் கூடம் அமைத்தல்**

**வினா எண் 13953—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி – பண்ருட்டி நகரிலுள்ள சீரங்குப்பத்தில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட சீரங்குப்பத்தில் சமுதாயக் கூடம் ரூ.2,78,571/- செலவில் கட்டி முடிக்கப்பட்டு, சமுதாயக் கூடத்தை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சமுதாயக் குழு ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**191—**

**குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 17696—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி–சீரங்குப்பம் பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி–சீரங்குப்பம் குடியிருப்பிற்குத் தனியாக குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**192—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 18887—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 8வது வட்டம், பெருமாள் கோயில் தோட்டம், கே.ஜி. கார்டன், திருநாவுக்கரசு தோட்டம் ஆகிய பகுதிகளில் குழாய்களில் குடிநீர் வராததால் குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 8–வது வட்டம், பெருமாள் கோயில் தோட்டம், கே.ஜி. கார்டன், திருநாவுக்கரசு தோட்டம் ஆகிய பகுதிகளில் குடிநீர்க் குழாய்களில் போதுமான அழுத்தம் இல்லாததால் அத்தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள 9 குடிநீர்த் தொட்டிகள் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது.

**193—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 19846—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பொ. மல்லபுரம் பேரூராட்சியில் அடிக்கடி நிலவும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, பொ. மல்லபுரம் பேரூராட்சிக்கு மட்டும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்பொருட்டு ரூ.12.325 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**194—**

## ஓய்வூதியம் பணிக்கொடை

**வினா எண் 30144—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, நகராட்சி பணியாளர்களுக்கு நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத கோரிக்கைகளான தொழிலாளர்கள் ஓய்வூதியம், பணிக்கொடை (Gratuity) மற்றும் அரசு நலத் திட்டங்கள் நிறைவேறுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 12, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 5-1-1970-ன்படி நகராட்சியில் பணிபுரியும்





பணியாளர்களின் அடிப்படை ஊதிய விகிதம் 1-4-1970-ல் ரூ.90/-க்குக்கீழ் உள்ள பணியாளர்களுக்கு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களால் ஓய்வூதியப் பயன்களுக்குரிய அதிகார அளிப்புக் கடிதம் அளிக்கப்படுகிறது. ஓய்வூதியப் பயன்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட நகராட்சியால் ஓய்வூதியதாரர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. நகராட்சிப் பணியாளர்களுக்கு நீண்ட காலமாக நிலுவையிலுள்ள ஓய்வூதியப் பணிக்கொடை அரசு நிதி பெற்று வழங்கப்படுகிறது.

**195—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 30857—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் நகர், இடதுகரை பகுதிக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் நகர், இடதுகரை பகுதிக்குக் குடிநீர் வசதி உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**196—**

## குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா எண் 31271—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகர மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க பாலாற்றிலிருந்து ஆரணி நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நீண்ட காலமாக நிலுவையிலுள்ளதை அரசு அறியுமா?

[2004 ஜூலை 31

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலேயே இத்திட்டத்தைத் துவக்க அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டப் பணி முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

**197—**

**மணிமண்டபம் அமைத்தல்**

**வினா எண் 31788—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலை கவிராயருக்கு அவர் பிறந்த நெல்லை மாவட்டம், சென்னிகுளத்தில் மணிமண்டபம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அண்ணாமலை கவிராயருக்கு அவர் பிறந்த திருநெல்வேலி மாவட்டம், சென்னிகுளத்தில் மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**198—**

**நந்தனாருக்கு மணிமண்டபம்**

**வினா எண் 34278—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், மா. ஆதனூர் கிராமத்தில் பிறந்த நந்தனாருக்கு அவர் நினைவாக மணிமண்டபம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) காட்டுமன்னார்குடி வட்டம், மா. ஆதனூர் கிராமத்தில் நந்தனார் நினைவாக நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**199—**

**அமர்வு படிகள்**

**வினா எண் 35403—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சிமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு அமர்வு படிகள் (Allowances) வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு அமர்வு படிகள் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளன.

**200—**

## பேருந்து நிலையம் பெயர் மாற்றம்

**வினா எண் 40760—திருமதி வளர்மதி ஜெபராஜ்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை, ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு மாட்டுத்தாவணி என்ற பெயரை மாற்றி ஜெ.ஜெ. பேருந்து நிலையம் எனப் பெயர் மாற்றப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மதுரை மாநகராட்சியில் உள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு மாட்டுத்தாவணி என்ற பெயரை மாற்றி ஜெ.ஜெ. பேருந்து நிலையம் என பெயர் மாற்றம் செய்ய தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி வழிவகை கிடையாது.*



## பட்டியல் 15

**1—**

## கண்ணகி கோயில்

**வினா எண் 2728—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள கண்ணகி கோயில் யாருக்கு சொந்தம்?*

*(ஆ) கண்ணகி கோயிலில் தடையில்லாமல் வழிபாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) கண்ணகி கோயில் ஆவணங்களின் அடிப்படையிலும், தமிழக அரசின் நில அளவை 1893-இன்படியும் முழுமையாக தமிழ்நாட்டின் எல்லைக்குள்தான் அமைந்துள்ளது. 1934 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி மதுரை மாவட்ட வனத் துறை அலுவலர் அறிக்கையின்படி மங்களாதேவி அம்மன் கோயில் என்றழைக்கப்படும் கண்ணகி கோயிலும் அதைச் சுற்றியுள்ள இடமும் மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், வண்ணாத்திப்பாறை ஒதுக்கக் காட்டுப் (Reserved Forest) பகுதிக்குள் உள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.*

*(ஆ) கண்ணகி கோயில் சிறு ஆலயங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அக்கோயில் கடல் மட்டத்தில் இருந்து 5,000 அடி உயரத்தில் ஒரு குன்றின் மேல் அமைந்துள்ளது. அப்பகுதியில் வன விலங்குகள் நடமாட்டம் உள்ளதால் தனி வாகனத்தின் மூலம் சென்றால் பாதுகாப்பாக அமையும். வருடந்தோறும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று பொதுமக்கள் கண்ணகி கோயிலுக்குச் சென்று தடையின்றி வழிபாடு செய்வதற்கான பாதுகாப்பு வசதிகள் செய்யப்படுகின்றன.*

2—

## அரசு அச்சகங்கள்

**வினா எண் 2776—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சுத் துறையின்கீழ் இயங்கி வரும் அரசு அச்சகங்கள் எத்தனை?

(ஆ) அரசு அச்சகங்கள் இருந்தும் தனியாரிடம் கொடுத்து அரசுப் படிவங்கள் மற்றும் அறிக்கைகள் அச்சடிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், தேவைக்கேற்ப அரசு அச்சகங்களை அதிகப்படுத்த அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசு அச்சுத் துறையின்கீழ் இயங்கி வரும் அரசு அச்சகங்கள் 7 (ஏழு).

(ஆ) ஆம்.

(இ) (முன் வராது) தேவை இல்லை.

3—

## புறவழிச் சாலை

**வினா எண் 3275—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினத்திற்கு தேசிய நெடுஞ்சாலை 7-ல் புறவழிச் சாலை அமைத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4—

## கள்ளச்சாராய மொத்த வியாபாரிகள்மீது நடவடிக்கை

**வினா எண் 3307—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளத்தி காவல் நிலைய எல்லைக்குள் கள்ளச்சாராய மொத்த வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது வளத்தி காவல் நிலைய எல்லைக்குள் கள்ளச்சாராய மொத்த வியாபாரி எவரும் இல்லை. மதுவிலக்கு குற்றவாளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எரிசாராய மொத்த வியாபாரிகள் மீது 2001 ஆம் ஆண்டில் 1 வழக்கும் 2002 ஆம் ஆண்டில் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டன. 2001 ஆம் ஆண்டில் 436 வழக்குகள் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் பதிவு செய்யப்பட்டன. 345 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 3,120 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

2002 ஆம் ஆண்டில் இதுவரை 227 வழக்குகள் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் பதிவு செய்யப்பட்டன. 227 நபர்களும் கைது செய்யப்பட்டனர். 1,420 லிட்டர் கள்ளச் சாராயம் அழிக்கப்பட்டது. ஒருவர் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டார்.

[2004 ஜூலை 31

5—

### ஏரிகளை ஆழப்படுத்துதல்

**வினா எண் 3314—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதியிலுள்ள ஏரிகள் அனைத்தையும் ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) செஞ்சி தொகுதியில் ஏரிகள் ஆழப்படுத்தும் திட்டம் தற்போது ஏதுமில்லை.*

*(ஆ) துணை வினா எழ வாய்ப்பில்லை.*

6—

### வெடி விபத்தில் இறந்தவர் குடும்பங்களுக்கு நிவாரணம்

**வினா எண் 3521—திருமதி சி. எம். சூரியகலா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதியில் 14-5-2001-ல் கேஸ் சிலிண்டர் வெடித்து விபத்தில் 12 பேர் இறந்ததை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



2004 ஜூலை 31]

*(ஆ) இறந்த 12 நபர்களின் குடும்பங்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000 வீதம் மொத்தம் ரூ.3,00,000 (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுவிட்டது.*

7—

### தீ விபத்தினால் பொருள் சேதம்

**வினா எண் 3523—திருமதி சி. எம். சூரியகலா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதி, பரவடைத்தோப்பு, குமரன் தெருவில் நெசவுத் தொழிலாளர்களின் 22 வீடு எரிந்து பொருள் சேதமானதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அக்குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 17-6-2001-ல் ஏற்பட்ட தீ விபத்தினால் 19 கூரை வீடுகளும், ஒரு கோவிலின் கூரையும் எரிந்து சேதமடைந்தன. பொருட்சேதம் சுமார் ரூ. 2,00,000 பெறுமானதாகும். பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களுக்கும் தலா ரூ. 1,000 வீதம் நிவாரண தொகையும், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி மற்றும் ஒரு புடவை ஆகிய பொருட்கள் 18-6-2001 அன்று குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டது. மேற்படி தீ விபத்தினால் உயிர்ச் சேதமோ அல்லது காயமோ எவருக்கும் ஏற்படவில்லை.*

8—

### அணை கட்டுதல்

**வினா எண் 3593—திரு. ஏ.எஸ். கண்ணன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, லெட்சுமிபுரம் அணை உடைந்துவிட்ட நிலையில் புதிய அணை கட்டும் திட்டத்தை அரசு செயல்படுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் ஆரணியாற்றின் குறுக்கே உடைந்துவிட்ட லெட்சுமிபுரம் அணைக்கட்டுக்கு பதிலாக 50 மீ. மேற்புறத்தில் புதியதாக அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்கு ஆர்ஐடிஎப் VII-ன்கீழ் கடனுதவி வழங்க நபார்டு வங்கி இசைவளித்துள்ளது. இவ்வாண்டில் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**9—**

## இலவச பட்டா வழங்குதல்

**வினா எண் 3608—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், மதுரை மாநகராட்சிப் பகுதிகளிலும் வசித்து வரும் ஏழை மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பரங்குன்றம் தொகுதி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், மதுரை மாநகராட்சிப் பகுதிகளிலும் வசித்து வரும் ஏழை மக்களுக்கு ஒப்படை கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும் ஒப்படை கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் இலவச பட்டா மாவட்ட ஆட்சியாளரால் வழங்கப்பட்டு வருகிறது.





**10—**

## மாவட்ட நிர்வாக அலுவலகங்கள்

**வினா எண் 3944—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்ட நிர்வாக அலுவலகங்களை விரைந்து தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் உள்ள அரசு நிலங்களில் கட்டித்தர தேவையான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். இடம் தேர்வு செய்யும் பணி முடிவடைந்து கையகப்படுத்தும் பணி நடைபெற்றுள்ளது.

**11—**

## குளங்களைத் தூர் வாருதல்

**வினா எண் 3970—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதியில் தூர் வாரப்படாமல் இருக்கும் குளங்களை இவ்வாண்டில் தூர் வாரி ஆழப்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2004 ஜுலை 31

*(ஆ) நாகர்கோயில் தொகுதியில் தூர் வாரப்படாமல் உள்ள குளங்களை தூர் வாருவதற்கான திட்ட மதிப்பீடு நீர் ஆதாரங்கள் நிலைப்படுத்தும் திட்டம்-II-ல் மற்றும் இதர திட்டங்களில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்மீது ஒப்புதல் பெற்று நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பிறகு இதற்கான பணிகள் நடைபெறும்.*

**12—**

**மணல் அடைப்புகள் (சில்ட்)**

**வினா எண் 3972—திரு. ஆஸ்டின்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகர்கோவில் தொகுதி, அத்திக்கடை மற்றும் சம்பக்குளம் கால்வாய்களில் மணல் அடைப்புகள் எடுக்கப்படாமல் (சில்ட்) இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) அத்திக்கடை, சம்பக்குளம் கால்வாய்களில் இருந்த மணல் (வண்டல்) அடைப்புகள் (சில்ட்) தற்போது அகற்றப்பட்டுள்ளன.*

**13—**

**தனி வட்டமாக்குதல் (ரெவின்யூ தாலுகா)**

**வினா எண் 3974—திரு. க. பாரமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தை தனி வட்டமாக (ரெவின்யூ தாலுகா) ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**14—**

**மனுக்கள் பதிவு செய்தல்**

**வினா எண் 4013—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியரிடம் கொடுக்கப்படும் கோரிக்கை மனுக்களைப் பதிவு செய்து கொண்டு அதற்கான அத்தாட்சி ரசீதை மனுதாரரிடம் வழங்கும் முறையை அமல்படுத்த அரசு முன் வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*வருவாய்த் துறை வட்டாட்சியர்களிடம் கொடுக்கப்படும் மனுக்களைப் பதிவு செய்து மனுதாரர்களுக்கு அத்தாட்சி ரசீது உடனுக்குடன் கொடுக்கப்படும் முறை தற்போது அமலில் உள்ளது.*

**15—**

**மனைப் பட்டா**

**வினா எண் 4031—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் ஏழையெளிய மக்களுக்கு மனைப் பட்டா வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் ஏழையெளிய மக்களுக்கு தகுதியின் அடிப்படையிலும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் மனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

**16—**

## பாசன வாய்க்காலை தூர் எடுத்தல்

**வினா எண் 4046—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி. மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி மற்றும் ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சி, பாதரக்குடி கிராம நிலங்களுக்கு பாசன வசதி அளித்திட ராஜன் பாசன வாய்க்காலை தூர் எடுத்து சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மேற்கண்ட பணியை இவ்வாண்டு எடுத்துக்கொள்ள வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**17—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 4467—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் ஊராட்சி கிராம மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் ஊராட்சி கிராம மக்களுக்கு தகுதியின் அடிப்படையிலும், நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**18—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 4468—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சித்தாலிகுப்பம் கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

19—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 4470—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, கஞ்சநாதன்பேட்டை கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கஞ்சநாதன்பேட்டை கிராம மக்களுக்கு தகுதியின் அடிப்படையிலும், நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

20—

## மனைப் பட்டா

**வினா எண் 4471—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, திருவாமூர் கிராம மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



2004 ஜூலை 31]

*(ஆ) பண்ருட்டி வட்டம், திருவாமூர் கிராமத்தில் ஆட்சேபணையுள்ள புறம்போக்குகளில் வீடுகள் மூலம் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்திருந்த 24 நபர்களுக்கு ஜூலை 2000 மாதத்தில் ரி.ச. 146/2-ல் 0.02.0 எக்டேர் மற்றும் ரி.ச. 158/19-ல் 0.11.0 எக்டேர் மொத்தம் 0.13.0 எக்டேர் நிலவகை மாற்றம் செய்து மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.*

21—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 4472—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவழ்ந்தபுதூர் கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பண்ருட்டி வட்டம், மனம்தவழ்ந்தபுதூர் கிராமத்தில் ஆட்சேபணையுள்ள அரசு புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்திருந்த 38 நபர்களுக்கு நிலவகை மாற்றம் செய்து கீழ்க்கண்ட புல எண்களில் 31-12-2000-த்தில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன:—*

*(1) ரி.ச. 65/2 தோப்பு - 0.32.0 எக்டேர்*

*(2) ரி.ச. 10 தோப்பு - 0.16.5 எக்டேர்*

*(3) ரி.ச. 11 தோப்பு - 0.05.5 எக்டேர்*

--------------------

*0.81.0 எக்டேர்*

--------------------

[2004 ஜூலை 31

22—

மனைப் பட்டா

**வினா எண் 4474—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, வடகுத்து காலனி மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்கப்படும்.*

23—

பட்டா வழங்குதல்

**வினா எண் 4521—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மங்களம் கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



2004 ஜூலை 31]

*(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மங்களம் கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தகுதியின் அடிப்படையிலும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

24—

பழுதடைந்த பாலம் சீர்செய்தல்

**வினா எண் 4523—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, இரும்புலி கிராமத்திற்குச் செல்லும் கெங்காபுரம்-கள்ளப்புலியூர் சாலை 3/4 கி.மீ.-ல் உள்ள பாலம் பழுதடைந்துள்ளதை சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்டுள்ளது.*

*(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இப்பணிக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

25—

நிலப் பட்டா வழங்கும் திட்டம்

**வினா எண் 4524—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலம் நிலப் பட்டா வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் தொடர அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி வட்டத்தில் நிலப் பட்டா வழங்கும் திட்டம் ஒரு போதும் நிறுத்தப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**26—**

## மர வரி ரத்து செய்தல்

**வினா எண் 4530—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலத்தை கைவசம் வைத்து இரப்பர், தென்னை விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்கான மர வரியை ரத்து செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பலன்தரும் இரப்பர் மரம் ஒன்று ரூ.5/- மற்றும் பலனுக்கு வராத மரம் ஒன்றுக்கு ரூ.1/- என மர வரியைக் குறைத்து அரசாணை (நிலை) எண் 716 வருவாய்த் (நி.நி.32) துறை, நாள்: 30-7-1997-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென்னை மரங்களைப் பொறுத்தவரை அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் உயர்ந்துள்ளதாலும், மர வரியிலிருந்து கிடைக்கும் வருமானம் ஊராட்சிகளின் வருமானத்தைப் பெருக்கும் என்பதாலும், தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.50/- என மர வரி நிர்ணயம் செய்து அரசாணை (நிலை) எண் 542 வருவாய்த் (வி1) துறை, நாள்: 14-6-1995-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வித சூழ்நிலையில் தற்போது இரப்பர், தென்னை ஆகிய மரங்களில் மர வரியை குறைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



**27—**

## சாலைப் பராமரிப்பு

**வினா எண் 4572—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர், ஹரிகரகேசவநல்லூர் (0/0-1/8 கி.மீ. 1.8) சாலையைப் புதுப்பித்து பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைமைக்கேற்ப நடப்பு நிதி ஆண்டில் இச்சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

## சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 4573—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை ஆற்று (0/0-0/1) சாலையைப் புதுப்பித்து பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்சாலையை தனிப் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் ரூ.1.16 இலட்சம் செலவில் செப்பனிட தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**29—**

## மனு நீதி முகாம்

**வினா எண் 4809—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாமக்கல் மாவட்டத்திலுள்ள வனப் பகுதியில் நடைபெற்ற மனு நீதி முகாம்போல் மற்ற மாவட்டங்களிலுள்ள வனப் பகுதிகளிலும் முகாம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*வனப் பகுதிகளில் அடங்கிய மலைக் கிராமங்கள் மற்றும் மலைக் கிராமங்களில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் மனு நீதி திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.*

*2. தற்போது நடைமுறையிலுள்ள அரசு ஆணையின்படி, மூன்று ஆண்டு காலத்திற்குள் அனைத்து கிராமங்களிலும் சுழற்சி முறையில் மனு நீதி முகாம் ஒவ்வொரு இரண்டாவது புதன்கிழமை நடத்தப்பட்டு வருகிறது. புதன்கிழமை அரசு விடுமுறையாக வருமானால் அடுத்து வரும் வேலை நாட்களில் மனு நீதி முகாம் நடத்தப்படவேண்டும் என அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. எனவே, வனப் பகுதியில் அடங்கிய மலைக் கிராமங்கள் உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மனு நீதி முகாம் சுழற்சி முறையில் நடத்தப்பட்டு வருகிறது.*

**30—**

## குளம் மராமத்து செய்தல்

**வினா எண் 5176—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைகுளம் கிராமம், வீற்றிருந்தான் குளத்தினை மராமத்து செய்ய அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நிதி நிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*

**31—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 5227—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர், திப்பம்பட்டி செல்லப்பம்பாளையம் செல்லும் சாலை கி.மீ. 10/6-13/2 வரை மிகப் பழுதடைந்துள்ளதை உடனடியாகச் செப்பனிட அரசு முன் வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த சாலை தார் நொடிகள் போடப்பட்டு தற்காலிகமாகப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டுள்ளது.*

**32—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 5230—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) கோயம்புத்தூர் தளி குமரலிங்கம் சாலையிலிருந்து கிழுவன்காட்டூர் செல்லும் சாலை கிமீ. 4/8-6/8 வரை மிக பழுதடைந்துள்ளதை அரசு புதுப்பித்துத் தர ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பழுதடைந்துள்ள சாலைப் பகுதியைப் புதுப்பித்து தரும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 5279—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை இந்திரா நகரில் சுமார் 75 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், சின்னவீரன்பட்டி கிராமம், க.ச. 49 மற்றும் 56-ல் 93 ஆக்கிரமிப்பாளர்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 30 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு நில கிரயத்தின் பேரில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 26 நபர்கள் வாடகைக்கு விட்டுள்ளதால் வணிக நோக்கில் ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.



2004 ஜூலை 31]

34—

## வட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 5287—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து வல்லத்தில் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

35—

## மனைப் பட்டா

**வினா எண் 5288—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, சோர்வளாகம் மதுரா காந்தி நகரில் அரசு புறம்போக்கிலுள்ளவர்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2004 ஜூலை 31

36—

## மனைப் பட்டா

**வினா எண் 5290—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சிங்கவரம் ஊராட்சியில் குடியிருக்கும் ஏழை விவசாயிகளுக்கு மனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சிங்கவரம் ஊராட்சியில் குடியிருக்கும் விவசாயிகளுக்கு தகுதியின் அடிப்படையிலும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் மனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

37—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 5313—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கல்வராயன்மலை வாழ் மக்களுக்கு விவசாய நிலங்கள் மற்றும் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கு நில ஒப்படை வழங்க தடை விதித்து அரசு ஆணை (நிலை) எண் 1168, வருவாய்த் துறை, நாள்: 25-7-1989-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, கடலூர் மாவட்டம், கல்வராயன்மலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு விவசாய நிலப் பட்டா மற்றும் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

38—

## தார்ச் சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 5606—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முசிறி-புலிவலம் தார்ச் சாலையை இந்த நிதியாண்டிலேயே புதுப்பித்துத் தர அரசு முன் வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*உலக வங்கிக் கடன் பெறப்பட்டவுடன் பணி செயலாக்கத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

39—

## வரையறுக்கப்பட்ட ஜாதிகளின் பெயர்ப் பட்டியல்

**வினா எண் 5611—திரு. கா.பூ. முனுசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வரையறுக்கப்பட்ட ஜாதிகளின் பெயர்ப் பட்டியலை ஒவ்வொரு பள்ளிக்கும் வழங்கிட அரசு முன் வருமா?*

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*வரையறுக்கப்பட்ட ஜாதிகளின் பெயர் பட்டியல் அடங்கிய அரசாணையினை அரசு அனைத்து துறைகளுக்கும்/கல்வித் துறை உட்பட அனுப்பியுள்ளது. மேற்படி பட்டியலை தேவையான பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட வட்டாட்சியரை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.*

**40—**

### ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 5762—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி ஒன்றியம், திருவாலியில் உள்ள திருவாலி ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், திருவாலியில் உள்ள திருவாலி ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு 17-7-2002 முதல் 29-7-2002 வரை இயந்திரங்களைக் கொண்டு அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டன.*

**41—**

### வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 5763—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடியில் உள்ள காங்கேயம் வாலி ஓடை வாய்க்கால்களைத் தூர்வாரி சுத்தப்படுத்த அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இப்பணியை இவ்வாண்டு எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**42—**

### கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க நடவடிக்கை

**வினா எண் 5769—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், கடலம்பாக்கம் ஊராட்சியைச் சுற்றி கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பனை செய்வது அரசுக்குத் தெரிய வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், கடலம்பாக்கம் ஊராட்சியின் சுற்றுவட்டாரத்தில் 2001 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மதுவிலக்கு தீவிர சோதனையில் 70 ஆண்கள் மற்றும் 4 பெண்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2002 ஆம் ஆண்டில் 5 ஆண்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2001 ஆம் ஆண்டில் 625 லிட்டர்*

[2004 ஜூலை 31

*கள்ளச்சாராயமும், 15,750 லிட்டர் ஊறலும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. 2002 ஆம் ஆண்டு 50 லிட்டர் கள்ளச்சாராயமும், 1,200 லிட்டர் ஊறலும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.*

**43—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 5996—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை அருகே கணக்கம்பாளையம் ஊராட்சி வெஞ்சமடையில் சுடுகாட்டு ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே கணக்கம்பாளையம் ஊராட்சி, வெஞ்சமடையில் உள்ள சுடுகாட்டு ஆக்கிரமிப்பை அகற்ற வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.*

**44—**

## மணல் எடுக்க அனுமதி

**வினா எண் 6058—திரு. க. பாரமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் வைகை ஆற்றின் வடகரையில் பெத்தானேந்தல் மற்றும் கானூர் கிராமங்களுக்கு அருகில் தனியார் இடங்களில் மணல் எடுக்க அனுமதித்ததால் கால்வாய்களுக்கும், விவசாய நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*



2004 ஜூலை 31]

*(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மணல் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறிய குத்தகை உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.*

**45—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 6061—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் உள்ள தெருக்களில் ஆக்கிரமிப்பு அதிகம் உள்ளதை அகற்றிட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் உள்ள அனைத்து தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் 10-8-2001-இல் அகற்றப்பட்டு விட்டன.*

[2004 ஜூலை 31

46—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 6101—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சங்கமங்கலம் மேலத் தெருவில் 50 ஆண்டுகளாக குடியிருந்து வரும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

47—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 6102—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி வடக்குப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



2004 ஜூலை 31]

48—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 6103—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி, ஆர்.கே. நகர் பகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

49—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 6104—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சியில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

[2004 ஜூலை 31

50—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6105—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதியில் பேராவூரணி பேரூராட்சிக்கு உட்பட்ட ஆஸ்பத்திரி சாலையில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

51—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6106—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சி, அண்ணா நகர் பகுதிக்கு அரசின் புறம்போக்கு நிலத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

52—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6107—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியில் உள்ள மககளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

53—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6108—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சி, சிதம்பரம் தெரு ஆஸ்பத்திரி சாலையில் உள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

54—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6109—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தொத்துப்புளிக்காடு கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**55—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 6110—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, மருங்கப்பள்ளம் சிவன் கோவில் அருகில் சுமார் 40 வருடமாக புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் 50 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கிடைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**56—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 6111—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சித்தாதிக்காடு ஊராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.





**57—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 6422—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் ஊராட்சியில் மயானத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தர முடியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**58—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 6499—திரு. வெ. கோவிந்தராஜ்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, மோரமடுகு பஞ்சாயத்து, மோரமடுகு கிராமத்தில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்களின் சாகுபடி நிலத்திற்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) பட்டா வழங்க இயலாது.*

*(ஆ) கேள்வி எழாது.*

59—

## பாலம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 6523—திரு. கு. அண்ணாமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி கிராமத்தில் உள்ள ஊரணியில் காட்டுவாரி வெள்ளம் வந்து பெருகுவதற்கு வசதியாக ஊரணியில் மேல்புறம் உள்ள சாலையில் பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

60—

## வருவாய் வட்டமாக மாற்றும் திட்டம்

**வினா எண் 6542—செல்வி சி. கனகதாரா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பேரணாம்பட்டு பேரூராட்சியை மையமாகக் கொண்டு பேரணாம்பட்டு வட்டத்தை தனியாக வருவாய் வட்டமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*



61—

## கால்வாயை ஆழப்படுத்துதல்

**வினா எண் 6601—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், நாணல்குளம் கண்மாய்க்கு சாத்தியாறு அணையிலிருந்து தண்ணீர் வரும் கால்வாயை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*ஆம். நாணல்குளம் கண்மாய்க்கு தண்ணீர் வரும் கால்வாய் தற்போது தூர் வாரப்பட்டுள்ளது.*

62—

## நிலம், வீட்டுமனை வர்த்தகத்தை சீர்செய்தல்

**வினா எண் 6655—திரு. மு. கார்த்தி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வீடு, நில உடமைகள் எனப்படும் நிலம், வீட்டு மனை வர்த்தகம் தேக்க நிலையில் உள்ளதால் இத்தொழிலை சீர்செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*நிலம் மற்றும் வீட்டு மனை வர்த்தகம் தேக்க நிலையில் இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. பத்திரப் பதிவினை பொறுத்தவரையில், அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகள் பதிவினை, தக்க அங்கீகாரம் அல்லது தடையின்மைச் சான்று இன்றி பதிவு செய்வதைத் தடுக்க பதிவுச் சட்டம் 22-ஏ-ன் கீழ் அரசாணை (நிலை) எண் 150, வணிகவரித் துறை, நாள்: 22-9-2000-ன்படி அறிவிக்கை வெளியிடப்பட்டது.*

இதனைத் தொடர்ந்து தடையின்மை சான்று வழங்குதல் குறித்து நெறிமுறைகள் மற்றும் தடையின்மை சான்று வழங்கும் அதிகாரம் குறித்து சம்பந்தப்பட்ட துறையினரால் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, தற்போது இந்நடைமுறை சீராக்கப்பட்ட நிலையில் நடவடிக்கை ஏதும் தேவையில்லை.

**63—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 6779—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் நகரின் சென்டுவின் மெட்ரிகுலேசன் பள்ளியின் வடபாகத்திலுள்ள 2 ஏக்கர் நத்தம் புறம்போக்கிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தாராபுரம் வட்டம் மற்றும் நகரம், பிளாக் எண் 2, பழைய புல எண் 703/ஏ42 இல் 9906 சதுர அடி நிலத்தில், திரு. பழனிச்சாமி மற்றும் கே. மாரிமுத்து என்பவர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தாராபுரம் நகராட்சி ஆணையர் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும், இது குறித்து வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், வழக்கு முடிவுற்றதும் இவ்வினத்தில் 1905 ஆம் ஆண்டின் நில ஆக்கிரமிப்புச் சட்ட விதிப்படியும், உயர்நீதிமன்ற உத்தரவின்படியும் நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு தக்க அறிவுரைகள் ஈரோடு மாவட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது.

**64—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 7249—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள கண்மாய் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆற்றுப் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, குட்டை புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, கண்மாய் புறம்போக்கு மற்றும் ஓடைப் புறம்போக்கு போன்ற நீராதாரம் மற்றும் நீர்வழிப் புறம்போக்குகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்றுவதற்காக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு ஒன்று தற்போது அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவால் மேற்சொன்ன ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**65—**

## பாசன வசதி

**வினா எண் 7251—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை ஆற்றின் குறுக்கே சோழவந்தானில் படுகை அணை (Bed Dam) அமைக்கும் பணி முடிவடைந்து கிண்டி மடம் வரை தடுப்புச்சுவர் எழுப்பப்பட்டுள்ள நிலையில் நெடுங்குளம், திருவேடகம், தச்சம்பத்து, தேனூர், சமயநல்லூர் பரவை, விளாங்குடி ஆகிய கண்மாய்கள் வைகை மூலம் மீண்டும் பாசன வசதி பெறும் இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**66—**

**கண்மாயை தூர் வாருதல்**

**வினா எண் 7252—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், பெரியார் முதல் பிரிவு வாய்க்காலின் பாசனம் பெறும் தேனூர் சிறிய கண்மாயை உலக வங்கியின் உதவியால் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**67—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 7467—செல்வி க. பாலபாரதி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஜி.ஓ. எண் 376, நாள் 8-3-1988-ன்படி திண்டுக்கல்லில் 16 கி.மீ. உட்பட்ட பகுதிகளுக்கு பட்டா வழங்கக்கூடாது என்ற அரசாணையை தளர்த்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*மேற்குறிப்பிட்ட அரசாணை எண் 376, வருவாய், நாள்: 8-3-1988-ல் விதிக்கப்பட்ட தடையாணையை தளர்த்துவது குறித்து தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை.*





**68—**

**தனி வட்டமாக பிரித்தல்**

**வினா எண் 7491—திருமதி ஆர். சசிகலா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர், தரகம்பட்டி பகுதியினை தனி வட்டமாக பிரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**69—**

**ரன் வட்டி, மீட்டர் வட்டியை நீக்க நடவடிக்கை**

**வினா எண் 7623—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டத்தில் ரன் வட்டி, மீட்டர் வட்டி கொடுக்கும் ஏழைகளின் துயர் நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் அநியாய வட்டி பெறும் நபர்கள் பற்றிய தகவலை மாவட்ட நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினால் மாவட்ட நிர்வாகம் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும்.*

[2004 ஜூலை 31

இதுபோன்ற அநியாய வட்டி பெறுவோர் மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக பணம் கடன் கொடுப்போர்மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டாட்சியர்கள் மற்றும் அனைத்து மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் அவரின் கடித எண் வ.நி.6(3)/7300/02, நாள் 12-11-2002-இல் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்று, அரசின் உள் துறை கடித எண் 124305/2002-1, நாள் 31-12-2002-ல் காவல் துறை தலைமை இயக்குநருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற சட்ட மீறல் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த சட்டங்களை கடுமைப்படுத்திட செயலாக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**70—**

## மனைப் பட்டா

**வினா எண் 7919—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, சிங்கவரம் ஊராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு குடியிருக்கும் வீட்டிற்கு மனைப்பட்டா வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, சிங்கவரம் ஊராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு குடியிருக்கும் வீட்டிற்கு தகுதியின் அடிப்படையிலும் நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும் மனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



2004 ஜூலை 31]

**71—**

## தூர்வாருதல்

**வினா எண் 7922—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, வராகநதி திட்டத்தின்கீழ் தூர்வாரி விவசாயிகளுக்கு பாசன நீர் கிடைக்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி வராக நதி அணைக்கட்டு மற்றும் அதன் கால்வாய் சீரமைக்கும் செயற்குறிப்பு இத்துறையின் பரிசீலனையில் உள்ளது.*

**72—**

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 7925—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, சேர்விளாகம் ஊராட்சி, மதுரகாந்தி நகரிலுள்ளவர்களுக்கு குடியிருக்கும் வீட்டிற்கு பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, சேர்விளாகம் ஊராட்சி, மதுரகாந்தி நகரிலுள்ளவர்களுக்கு குடியிருக்கும் வீட்டுமனைக்கு தகுதியின் அடிப்படையிலும், நிலத்தின் தன்மையின் அடிப்படையிலும், பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**73—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 8034—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ஆவடி நகராட்சி கோயில்பதாகை கிராமப் பகுதிக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**74—**

## மண் சாலையை கிராம தார்ச் சாலையாக்குதல்

**வினா எண் 8083—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கோணகாபாடி ஊராட்சிக்கு தாரமங்கலம்-ஜங்ஷன் மெயின் ரோட்டிலிருந்து அத்திக்காட்டானூர் வழியாக போத்தனூர் வரை உள்ள மண் சாலையை கிராம தார்ச் சாலை ஆக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* இச்சாலைப் பணி ஆர்.ஐ.டி.எப் 7, நபார்டு திட்டம்-12-ல் சிறப்பு உறுப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய ரூ.32 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு சூரமங்கலம்—தாரமங்கலம் சாலையிலிருந்து அத்திக்காட்டானூர் அரிசன காலனி வழியாக போத்தனூர் செல்லும் சாலை கி.மீ.0/0-2/8 வரை மேம்பாடு செய்தல் பணிக்கு மேல் அடுக்கு ஜல்லி பரத்தல் வேலை முடிவடைந்துள்ளது.

**75—**

## வாய்க்கால் குறுக்கே பாலம்

**வினா எண் 8105—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, அம்மன்கோவில்பட்டி சாலை-எம் செட்டிப்பட்டி சாலையில் பெரிஏரி வாய்க்கால் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இப்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**76—**

## புயல் பாதுகாப்பு இல்லம்

**வினா எண் 8123—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி, பிள்ளையார்திடல் மீனவர்களுக்கு புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**77—**

## ஏர்வாடியை இராமநாதபுரம் வட்டத்திற்கு மாற்றுதல்

**வினா எண் 8126—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடியை கடலாடி வட்டத்திலிருந்து இராமநாதபுரம் வட்டத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**78—**

## நடை பாலம் செப்பனிடல்

**வினா எண் 8127—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்திற்குட்பட்ட துறையூர் உப்பனாற்று நடை பாலம் கீழ்க்குமிழி பழுதடைந்து உள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*மேற்கண்ட பணியை தற்போது எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை.*

**79—**

## சாலை சீரமைத்தல்

**வினா எண் 8206—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காவலக்குறிச்சி, வெண்ணிலிங்கபுரம் சாலை 1984-ல் போடப்பட்டு பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையினை சீரமைக்கும் பணி அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

**80—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 8302—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஈச்சங்காடு கிராமத்தில் ராம்கோ சிமெண்ட் ஆக்கிரமித்துள்ள இடங்களை மீட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செந்துறை வட்டம், ஓச்சங்காடு கிராமத்தில் புல எண்கள் 405, 408, 416 இனங்களில் (வண்டிப்பாதைப் புறம்போக்கு) ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தார் தார்ச் சாலை அமைத்துள்ளனர். இதில் அரசு பேருந்துகள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனர். புல எண் 402/9, 0.04.0 ஏர்சில் (புன்செய் தரிசு) உள்ள ஆக்கிரமிப்பினை விரைவில் அகற்றிட வட்டாட்சியருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**81—**

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 8485—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரத்தில் அண்ணா நகர் பகுதியில் உள்ள 200 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசின் நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரத்தில் உள்ள அண்ணா நகர் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

**82—**

## குழாய்கள் சீரமைத்தல்

**வினா எண் 8629—திருமதி எஸ். ராஜம்மாள்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி அருகேயுள்ள கோரம்பள்ளம் குளத்தை ஆழப்படுத்தி சேதம் அடைந்த குழாய்களை சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும (ஆ) தூத்துக்குடி அருகேயுள்ள கோரம்பள்ளம் குளத்தை ஆழப்படுத்தி சேதம் அடைந்த குழாய்கள் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

**83—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 8654—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி சார்லஸ்புரம் பீச் காலனியில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**84—**

## புதிய மாவட்டம் அமைத்தல்

**வினா எண் 9338—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பூர் நகரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**85—**

## இலவச பட்டா வழங்கும் திட்டம்

**வினா எண் 9357—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச பட்டா வழங்கும் திட்டம் 31-3-2001 தேதியோடு முடிந்த விவரம் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் மீண்டும் நீடிக்க செய்ய அரசு முன்வருமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நீட்டிக்க இயலாது.

**86—**

## குத்தாலத்தை தலைமையிடமாகக் கொண்டு வட்டம் தொடங்குதல்

**வினா எண் 9433—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தலைமையிடமாகக் கொண்டு வட்டம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**87—**

## சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 9459—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்தலியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்தலியில் இதுவரை சார்பதிவாளர் அலுவலகம் எதுவும் இயங்கவில்லை. நாட்ராம்பள்ளியில்தான் 10-8-1983 முதல் சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கந்தலியில் சார்பதிவாளர் அலுவலகமே இயங்காத நிலையில் அங்கு அரசு கட்டடம் கட்டுதல் பற்றிய செயற்குறிப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

**88—**

## 'சமாதான்' திட்டம்

**வினா எண் 9595—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சொத்தின் மதிப்பை குறைவாகக் காட்டி பத்திரம் பதிந்தவர்கள் "சமாதான்" திட்டத்தின்கீழ் மீதித் தொகையை தானே முன்வந்து செலுத்தும் திட்டம் மீண்டும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். பதிவுத் துறையில் மீண்டும் 1-10-2002 முதல் 29-11-2002 வரை அறுபது நாட்களுக்கு ஒரு புதிய 'சமாதான்' திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**89—**

## குடியிருப்பு பராமரிப்பு

**வினா எண் 9650—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 5வது வட்டம் அரசு அச்சகத் தொழிலாளர்கள் குடியிருப்பு பராமரிக்கப்படாதத்தால் ஏற்பட்டுள்ள குறைபாட்டை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**90—**

## பெரிய ஊத்து கண்மாய் திட்டம்

**வினா எண் 9815—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, சின்னமனூர் ஒன்றியம், சின்ன ஓவுலாபுரத்தின் தெற்கே பெரிய ஊத்து கண்மாய் திட்டம் நிறைவேற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இத்திட்டம் தற்போது அரசின் ஆய்வில் உள்ளது.

**91—**

## சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 9889—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், பொன்னையில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*ராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், பொன்னையில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**92—**

**விபத்துக்களை குறைக்க நடவடிக்கை**

**வினா எண் 9894—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்-கரூர் தேசிய நெடுஞ்சாலையில் என்.எச். 7 வேலூர் பால் குளிரூட்டும் நிலையம் அருகில் அடிக்கடி விபத்து ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் கரூர் தேசிய நெடுஞ்சாலை என்.எச். 7 வேலூர் பால் குளிரூட்டும் நிலையம் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் வேலூர் புறவழிச்சாலை பிரிகிறது. ஆதலால் சாலையில் ஒரு வலது பக்க திருப்பம் அமைந்துள்ளதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. இப்பகுதியில் சாலையில் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்க சாலையில் எச்சரிக்கை பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

**93—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 9922—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, இராமதாஸ் நகரில் வசிக்கும் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.*

**94—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 10110—திரு. ப. ஆண்டிவேல்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதியில் பாதை, ஓடை இல்லாத நிலத்தை அவற்றை புறம்போக்கு நிலமென்று கூறி வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள ஆதிதிராவிடர் குடியிருக்கும் அந்த இடத்திற்கு பட்டா தர மாவட்ட ஆட்சியர் மறுப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) இதை போக்கி பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஓடைபுறம்போக்கு நிலமானதால் பட்டா வழங்க இயலாது.*

**95—**

**அரசு அச்சகம் அமைத்தல்**

**வினா எண் 11475—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அச்சகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*அரசின் பரிசீலனையில் இல்லை.*

**96—**

## சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 11493—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பனமரத்துப்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) பனமரத்துப்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**97—**

## தீ விபத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு அத்தியாவசியப் பொருட்கள்

**வினா எண் 11593—திரு. துரை. கி. சரவணன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உட்பட்ட இடங்களில் குடிசையில் தீ விபத்து ஏற்பட்ட குடும்பங்களுக்கு ரூ.1000/- மட்டுமே வழங்கப்பட்டு, இதர அத்தியாவசியப் பொருட்கள் தரப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.*

**98—**

## சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

**வினா எண் 11599—திரு. ஆ.கு. முருகேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரிய மாவட்டமான சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், ஆத்தூரை தலைநகராக அறிவிக்கும் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**99—**

## சாலை குறுக்கே பாலம்

**வினா எண் 11644—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவாரங்குப்பம், திம்மாம்பேட்டை சாலை குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**100—**

## மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 11658—திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை-தொண்டி நெடுஞ்சாலையில் சருகணிக்கும் பொன்னலிக்கோட்டைக்கும் இடையேயுள்ள பழைய பாலத்தை மேம்பாலமாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



**101—**

## நீர்ப்பாசன அணை

**வினா எண் 12916—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் வைப்பாற்றின் குறுக்கே நீர்ப்பாசன அணை ஒன்று கட்டிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கீழ்நாட்டு குறிச்சி அருகே வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டி, நம்பிபுரம் கண்மாய்க்கு நீர் வசதி அளிக்க திட்டம் தயாரித்து "நபார்டு" வங்கி உதவி கோரப்பட்டது. "நபார்டு" வங்கியின் விதிமுறைக்கு ஏற்ப இத்திட்டம் வராததால் இதனை நிறைவேற்ற இயலவில்லை. தற்போது இதற்கான மாற்றுத் திட்டம் ஒன்று ஆய்வில் உள்ளது

**102—**

## சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 13010—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளியில் சார்பதிவாளர் அலுவலகம் விரைவில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளியில் சார்பதிவாளர் அலுவலகம் புதியதாக அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**103—**

## துணை சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 13011—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூரில் புதியதாக துணை சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூரில் புதியதாக துணை சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**104—**

## போலி முத்திரைத்தாள்கள் விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை

**வினா எண் 13018—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) போலி முத்திரைத்தாள்கள் மற்றும் கோர்ட் ஸ்டாம்புகள் விற்பனை செய்வதைத் தடுக்க கண்காணிப்பும் கடுமையான நடவடிக்கையும் எடுக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) போலி முத்திரைத்தாள்கள் மற்றும் கோர்ட் ஸ்டாம்புகள் விற்பனை செய்வதைத் தடுக்க பதிவுத் துறையின் சிறப்பு விழிப்புக் குழுவும், மாவட்டப் பதிவாளர் மற்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் போன்ற அலுவலர்களும் திடீர் ஆய்வு மேற்கொண்டு கண்காணித்து வருகின்றனர்.

"புற ஊதா" விளக்கை (Ultra Violet Lamp) அறிமுகப்படுத்தி அதன் மூலம் போலி முத்திரைத்தாள்களை இனம் காணச் செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விழிப்பு ஏற்படுத்தும் பொருட்டு பத்திரிகைகளின் மூலம் போலி மற்றும் அசல் முத்திரைத்தாள்கள் பற்றிய அறிவிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

**105—**

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 13302—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில், நாகமரை, கருங்காலிமேடு, வன்னியர் நகர் பகுதிகளில் நீண்ட நாட்களாக குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இவர்களுக்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**106—**

**சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிப்பொறி வசதி**

**வினா எண் 14086—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிப்பொறி வசதி செய்துத் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**107—**

**தனிப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 14087—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் கூட்டுப் பட்டாதாரர்களுக்கு தனிப் பட்டா வழங்குவதில் ஏற்படும் குறைகளைக் களைய அரசிடம் திட்டம் உள்ளதா?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். சங்ககிரி தொகுதியில் கூட்டுப் பட்டாதாரர்களுக்கு தனிப் பட்டா வழங்குவதில் ஏற்படும் குறைகளைக் களைய அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**108—**

**குடியிருப்பு கட்டுதல்**

**வினா எண் 14099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்புகளுடன் கூடிய அலுவலகங்கள் இன்னமும் 12446 கட்டப்பட வேண்டும். ஒன்று கட்ட சுமார் ரூ.5.60 இலட்சம் செலவாகிறது. அவ்வப்போது நிதிநிலைக்கேற்ப மேற்படி அலுவலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணியை எப்போது செய்து முடிக்க இயலும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

**109—**

**கிராம அலுவலர்கள்**

**வினா எண் 14101—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆய்த்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம அலுவலர்கள், பணிபுரியும் கிராமங்களிலேயே குடியிருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் அந்தப் பதவியில் இருக்கும் வரையில் சம்பந்தப்பட்ட பொறுப்பு கிராமங்களிலேயே குடியிருந்து பணியாற்ற வேண்டும் என கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பணி விதிகளிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

**110—**

**முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கமிஷனை உயர்த்துதல்**

**வினா எண் 14568— திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கமிஷனை உயர்த்த அரசிடம் திட்டக் குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் தரகுத் தொகையை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.*

**111—**

**முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்**

**வினா எண் 14569—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர்களை அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?*



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் தற்பொழுது உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்களை அதிகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**112—**

**பயணியர் விடுதி அமைத்தல்**

**வினா எண் 15132—திரு. அ. சிவபெருமாள்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் பயணியர் விடுதி, புதுப்பிக்கவும், கயத்தாரில் புதிய பயணியர் விடுதி அமைக்கவும் அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*ஒட்டப்பிடாரம் பகுதியில் குறுக்கு சாலையில் உள்ள பயணியர் விடுதி நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. கயத்தாரில் பயணியர் விடுதி கட்ட தற்போது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**113—**

**விளையாட்டு மைதானம் அமைத்தல்**

**வினா எண் 15415—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயில்பட்டி தொகுதி, குருவிக்குளம் ஒன்றியம், இளையரசனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு எதிரேயுள்ள அரசு புறம்போக்கு நிலத்தினை, விளையாட்டு மைதானம் அமைக்க ஒதுக்கி மைதானம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, குருவிக்குளம் ஒன்றியம், இளையரசனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு எதிரே உள்ள புல எண் 541/2 இல் உள்ள குவாரி புறம்போக்கு நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

**114—**

**நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம்**

**வினா எண் 15746—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாணை எண் 353, நாள் 30-6-2000 இல் வெளியிடப்பட்டதை இரத்து செய்து நகர்ப்புற நில உச்சவரம்பு நிலங்களை அரசு நிர்ணயிக்கும் மதிப்பின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களுக்கு நில ஒதுக்கீடு செய்யப்படாமலிருப்பதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) இதன்மீது அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் மற்றும் அறக்கட்டளை முதலியவற்றிற்கு நில மதிப்பு வசூலித்துக்கொண்டு ஒதுக்கீடு செய்யப்படுவதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படவில்லை.

(ஆ) அரசு ஆணை (நிலை) எண் 353, வருவாய்த் துறை, நாள் 30-6-2000 இன் அடிப்படையில் எல்லா அரசுத் துறைகள், அரசு



நிறுவனங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் நிலங்கள் குறித்த விண்ணப்பங்கள் அனுப்புமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளின் தேவைகள் வரப்பெற்று முடிவடைந்ததும் எஞ்சியுள்ள நிலங்கள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் மூலமாக விற்பனைக்குக் கொண்டுவரப்படும்.

**115—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 16114—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அனக்காவூர்-செய்யாமூர் பழுதடைந்துள்ள சாலையை புதிய தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை தற்போது வாகன போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல முறையில் உள்ளது.

**116—**

**சாலை சீர்செய்தல்**

**வினா எண் 16685—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதிக்குட்பட்ட வீராமூர்-தொகுனமிலி சாலை 0/0 - 2/0 மிகவும் மோசமாக உள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட சாலையை மேம்பாடு செய்யும் பணியினை நபார்டு வங்கி உதவியுடன் 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய பரிசிலனையில் உள்ளது.*

**117—**

**உயர்மட்டப் பாலம் கட்டுதல்**

**வினா எண் 16687—திரு. வெ. ஏழுமலை :** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதிக்குட்பட்ட மேல்களவாய்-போநதை சாலை கி.மீ. 8/4-இல் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேல்களவாய்-போந்தை சாலை கி.மீ. 8/4 இல் மூன்று கண்கள் கொண்ட உயர்மட்டப் பாலம் அமைக்க தோராயமாக ரூ.50 இலட்சம் தேவைப்படும். இப்பணியை நபார்டு வங்கியின் கீழ் கடனுதவியைப் பெற தயாரிக்கப்பட்டுள்ள 10 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழான பெரும் திட்டத்தில் (Master Plan) சேர்க்கப்பட்டுள்ளது. கடனுதவி பெற்றதும் இப்பாலத்தை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

**118—**

**மதகு வரத்து வாய்க்கால் கரை சீர்செய்தல்**

**வினா எண் 16691—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 13 ஏரிகளின் மதகு வரத்து வாய்க்கால் கரை மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 13 ஏரிகளில், ஏழு ஏரிகளின் மதகு வரத்து வாய்க்கால்களின் கரைகள் பழுதடைந்துள்ளன.*

*(ஆ) நபார்டு வங்கி உதவி மூலம் ரூ.24.60 இலட்சம் மதிப்பீட்டில் காரை பெரிய ஏரியை நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதர ஆறு ஏரிகளையும் நவீனப்படுத்த அடுத்த கட்ட திட்டத்தில் சேர்க்க பரிசீலிக்கப்படுகிறது.*

**119—**

**மனைப் பட்டா**

**வினா எண் 16717—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாத மீனவர்களுக்கு மனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) பட்டா வழங்க இயலாது.*

*(ஆ) இவ்வினா எழாது.*

120—

## சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 16754—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, வெங்கடாம்பேட்டை காலனிக்கு வரும் சாலையை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்து அகலப்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வெங்கடாம்பேட்டை காலனிக்கு வரும் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதையை அகலப்படுத்தித் தருமாறு, கடலூர் மாவட்ட ஆட்சியர், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்.*

121—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 16760—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், மல்லப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட புறம்போக்கு நிலத்தில் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

122—

## நிலப் பட்டா

**வினா எண் 16767—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாட்ராம்பள்ளி தொகுதி, மேல்பச்சூர் கிராமம், புறம்போக்கு நிலத்தில் பட்டா வாங்கியுள்ளதை இரத்து செய்து அரசு நிலத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*மேற்படி நிலத்தில் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை. எனவே இக்கேள்வி எழாது.*

123—

## ஏரி மராமத்து

**வினா எண் 17244—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கெங்காதரபுரம் ஊராட்சியில் உள்ள பட்டுக்கோட்டையான் ஏரி மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*மேற்கண்ட பணி இவ்வாண்டு எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை.*

**124—**

## நீர்த்தேக்கம் ஏற்படுத்துதல்

**வினா எண் 17266— திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம் கிராமத்திற்கு அருகில் உள்ள நரி ஆற்றில் நீர்த்தேக்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*ஆம்.*

**125—**

## ஒரு வழிப் பாதையாக்குதல்

**வினா எண் 17772—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம் 21 ஆவது தெரு வார்டில் உள்ள போக்குவரத்து சாலையை ஒரு வழிப் பாதையாக மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பண்ருட்டி நகரம் 21 ஆவது தெரு வார்டில் உள்ள போக்குவரத்து சாலை ஒரு வழிப் பாதையாக அறிவிக்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.*

**126—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 17875 —திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், மதுரை-தேனி சாலையிலிருந்து பிரிந்து கட்டக்கருப்பன்பட்டிக்கு செல்லும் சாலையை செப்பனிட அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் கி.மீ. 1/4-2/8 வரை ரூ.6.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுவிட்டது. மீதமுள்ள கி.மீ. 0/0-1/4 வரை மேம்பாடு செய்ய ரூ.8.80 இலட்சம் தேவைப்படும். இப்பணி எந்த திட்டத்திலும் தற்போது இடம் பெறவில்லை.*

**127—**

## கிராமக் காவலர்களுக்கு பதவி உயர்வு

**வினா எண் 18098—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உயர் கல்வித் தகுதி பெற்ற கிராமக் காவலர்களுக்கு (தலையாரி) பதவி உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) "தலையாரி" என்ற பதவி நடைமுறையில் இல்லை. எனவே, உயர் கல்வித் தகுதி பெற்ற கிராமக் காவலர்களுக்கு 'தலையாரி' பதவி உயர்வு வழங்க வாய்ப்பில்லை.

**128—**

### விவசாயக் கூலித் தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 18100—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயக் கூலித் தொழிலாளருக்கு அமைக்கப்பட்ட நல வாரியம் செயலிழந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், செயல்படுத்தப்பட, நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் முறையாகச் செயல்பட தேவையான நிதி மற்றும் நிர்வாக வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. வாரியத் திட்டங்களுடன் மேலும் சலுகைகளை அறிவிப்பது தொடர்பாக தற்போதைய திட்டங்களின் செயல்பாட்டின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



**129—**

### சாலைப் பணிகள்

**வினா எண் 18372—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நெடுஞ்சாலை உபகோட்டத்தில் அறந்தாங்கி-பேராவூரணி சாலையை நபார்டு திட்டத்தில் சேர்த்து, சாலைப் பணிகள் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**130—**

### தூர்வாருதல்

**வினா எண் 18825—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட கே.ஆர்.பி. அணைக்கட்டில் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இதற்கான திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

[2004 ஜூலை 31

**131—**

### ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 18841—திரு. வெ. கோவிந்தராஜ்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி தொகுதி, பெரியமுத்தூர் ஊராட்சி, அவதானப்பட்டி ஏரியைத் தூர்வார ஆவன செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது இத்திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**132—**

### புதிய பாலம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 18874—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் நகரில் கடை வீதியையும், பேருந்து நிலையம் மற்றும் பல பகுதிகளையும் இணைக்க, மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இந்தப் பகுதியில் ஒரு புதிய பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



2004 ஜூலை 31]

*(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலத்தில் பழுதடைந்துள்ள ஏப்ரான் மட்டும் சென்ற நிதியாண்டில் சீர் செய்யப்பட்டது. தற்போது இப்பாலம் நல்ல நிலையில் உள்ளதால், உடனடியாக திரும்பக் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**133—**

### ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 19208—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், குன்னத்தூரில் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆமெனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், அ. குன்னத்தூர் கிராமம், புல எண் 355/5-இல் அமைந்துள்ள மயானத்திற்கு பட்டா நிலத்தின் வழியாகப் பாதை செல்கிறது. இப்பாதையில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை. எனவே, ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டிய கேள்வி எழவில்லை.*

**134—**

### கள்ள மதுவைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 19644—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் கள்ள மதுவைக் கட்டுப்படுத்துவதில் மக்கள் பங்கு பெறுவதற்கான கமிட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?*

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கரும்புள்ளி கிராமங்களைக் கண்டறிந்து மதுவிலக்கு விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு கிராமத் தலைவர், தொகுதி உறுப்பினர், அரசு சாரா நிறுவனங்கள், மகளிர் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உதவியுடன் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கரும்புள்ளி கிராமங்கள் என்று கண்டறியப்படும் கிராமங்களில் மேற்குறிப்பிட்டுள்ள குழுக்களின் உதவியுடனும் மக்கள் ஒத்துழைப்புடனும் அவர்களது பங்களிப்புடனும் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**135—**

### சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 23210—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆமெனில், கட்டடம் கட்ட ஒதுக்கும் நிதி எவ்வளவு என அரசு அறிவிக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) செங்கற்பட்டு 2 ம் இணை சார்பதிவாளர் அலுவலகம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, புதிய அரசுக் கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.*

*(ஆ) எழவில்லை.*



2004 ஜூலை 31]

**136—**

### வாய்க்கால் தூர் எடுத்தல்

**வினா எண் 24094—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டூர் கிழக்குக் கரை, மேற்குக் கரை சுமார் 48,000 ஏக்கர் பாசனப் பகுதி வாய்க்கால் பழுதடைந்து, முட்செடிகள் நிறைந்துள்ளதால் சரிவர பாசனத்திற்கு நீர் வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆமெனில், பாசனக் காலத்தில் அந்த வாய்க்கால் பகுதியைத் தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில், பராமரிப்பு மதிப்பீட்டின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.50.83 இலட்சத்திற்கும், 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.23.59 இலட்சத்திற்கும், 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சத்திற்கும் பராமரிப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தண்ணீர் தங்குதடையின்றிச் செல்லவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**137—**

### குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குதல்

**வினா எண் 24233—திரு. ப. சிதம்பரம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் 2 ஆம் யூனிட் மின் உற்பத்தியின் மூலம் எல்.பி.பி. (L.B.P.) வாய்க்காலில் வெளியேறும் நீர் வாய்க்கால் மூலம் உக்கரம் பள்ளம் வழியாக சத்தியமங்கலம் ஆற்றிற்கு விடுவதால் சுற்றியுள்ள கிணறுகளும் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளிலும் நீர்வளம் பெருகி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பவானிசாகர் அணையில் 2 ஆம் யூனிட் மின் வாய்க்கால் மூலம் உக்கரம் பள்ளம் வழியாக சத்தியமங்கலம் ஆற்றிற்கு, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால், நீர் விட இயலாது:-

கீழ்பவானி பிரதானக் கால்வாயில் ஆகஸ்ட் 15 முதல்தான் பாசனத்திற்குத் தண்ணீர் எடுக்கப்படும். தற்போது பவானி ஆற்றில் விடப்படும் குறைந்த அளவு தண்ணீரை (1) இரண்டாவது மின் திட்டத்தின்மூலம் கீழ்பவானி பிரதானக் கால்வாயில் எடுக்கப் போதுமான நீர் மட்டம், நீர் கொள்ளளவு இல்லை. (2) இந்த வாய்க்காலில் பாசனம் இல்லாத காலத்தில் எடுக்கப்படும் தண்ணீர் குடிநீர்க் கிணறுகளுக்கு நேரிடையாகச் செல்வதில்லை. (3) திட்ட காலத்திலிருந்து இந்த வாய்க்காலில் தண்ணீரை எடுத்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஓடையில் விட்டு, பின்னர் பவானி ஆற்றில் விட்டதாக முன்னுதாரணம் இல்லை. (4) இதுபோன்ற கோரிக்கை பிற பகுதிகளிலிருந்து எழும் வாய்ப்புள்ளது. (5) தற்போது ஆற்றிலிருந்து குடிநீர் எடுத்து வருவது பாதிக்கப்படும்.

**138—**

## சிறைக் கைதிகளின் உணவினை ஆய்வு செய்தல்

**வினா எண் 24404—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு வழங்கும் உணவு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை அறிய சட்டமன்ற உறுப்பினர் குழு நியமிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சரக சிறைத் துறைத் துணைத் தலைவர் அவரது கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளுக்கு திடீர் விஜயம் செய்து சிறைவாசிகளுக்கு விதிகளின்படி உணவு வழங்கப்படுவதை உறுதி செய்கின்றார். தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் விதியின்கீழ் அரசு பார்வையாளர்கள் உட்பட பார்வையாளர்கள் குழு காலமுறையாக சிறைகளுக்கு விஜயம் செய்து சிறைவாசிகளின் நலன் மற்றும் வழக்கு தொடர்பான குறைகளைக் கேட்டறிந்து வருகின்றனர். மேற்கண்ட சூழ்நிலையில், சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவினை ஆய்வு செய்ய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குழு தனியாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**139—**

## மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறை ஒதுக்கீடு

**வினா எண் 24818—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி மக்களைச் சந்திக்க ஓர் அறை ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி மக்களைச் சந்திக்க அவர்கள் தொகுதியிலேயே சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டப்பட்டுள்ளதால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறை ஒதுக்கவேண்டிய அவசியமில்லை.

[2004 ஜூலை 31

140—

## சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கணினி

**வினா எண் 25066—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள வட்ட அளவிலான சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கணினி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சேலம் (மேற்கு) பதிவு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி சார்பதிவகம் 1-1-2002 முதல் கணினிமயமாக்கப்பட்டு இயங்கி வருகிறது.*

141—

## புயலின் சீற்றத்தைச் சமாளிக்க நிரந்தரக் கட்டமைப்பு

**வினா எண் 25349—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலோர மாவட்டங்களில் புயலின் சீற்றத்தைச் சமாளிக்க நிரந்தரக் கட்டமைப்பை அரசு ஏற்படுத்துமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே இத்தகைய கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*



2004 ஜூலை 31]

142—

## புகார் பெட்டிகள்

**வினா எண் 25392—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு நிருவாகங்களின் அனைத்துத் துறைகளிலும், வட்ட, மாவட்ட அளவிலான அலுவலகங்களில் மாவட்ட ஆட்சியாளரால் சீலிடப்பட்ட புகார் பெட்டிகள் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், வட்ட அளவில் வட்டாட்சியர் அலுவலகத்திலும், கோட்ட அளவில் கோட்டாட்சியர் அலுவலகத்திலும் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துத் துறை அலுவலகங்களிலும் சீலிட்ட புகார் பெட்டி என வைப்பது தேவையில்லை எனக் கருதப்படுகிறது.*

143—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 25439—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியம், வாழவந்திநாடு ஊராட்சிக்குட்பட்ட சக்கரப்பட்டி கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் பட்டா இல்லாமல் பல ஆண்டுகளாக வாழும் பழங்குடி சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியம், வாழவந்திநாடு ஊராட்சிக்குட்பட்ட சக்கரப்பட்டி கிராமத்தில் வசிக்கும் 80 பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

**144—**

## பணி நிரந்தரமாக்கத் திட்டம்

**வினா எண் 25458—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அச்சகங்களில் நீண்ட நாட்களாக தற்காலிக ஊழியர்களாகப் பணிபுரிபவர்களுக்குப் பணி நிரந்தரமாக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தற்காலிகமாகப் பணிபுரியும் நபர்கள் எவரும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**145—**

## அரசு சார்ந்த அச்சுப் பணிகள்

**வினா எண் 26559—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு சார்ந்த அச்சுப் பணிகள் எல்லாம் அரசு அச்சுத் துறை அச்சகத்திலேயே அச்சடிக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**146—**

## சாலைகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 27613—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் புதுப்பிக்கப்படாமல் உள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பிக்க அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதியில், 2002-2003 ஆம் ஆண்டில் மூன்று மாநிலச் சாலைகள் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டிலும், மூன்று மாவட்ட இதரச் சாலைகள் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டில் 2 மாநிலச் சாலைகள் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டிலும், ஏழு மாவட்ட இதரச் சாலைகள் ரூ.55.80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்தும் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**147—**

## நிலச் சீர்திருத்தச் சட்டம்

**வினா எண் 27734—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி, உபரி நிலங்களைக் கையகப்படுத்தி நிலமற்றோருக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி உபரி நிலங்களைக் கையகப்படுத்தி நிலமற்ற ஏழை மக்களுக்கு வழங்க 1961 ஆம் ஆண்டு முதல் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

*(ஆ) 1961 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் தமிழ்நாடு சட்டம் (58/61) இயற்றப்பட்டது முதல் வழங்கப்பட்டு வருகிறது.*

**148—**

## சான்றிதழ் வழங்குதல்

**வினா எண் 28110—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவ மாணவிகளின் நன்மையைக் கருதி ஜாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் வட்டாட்சியர், வருவாய் அதிகாரி, மணியக்காரர்கள் ஒரே இடத்தில் இருந்து சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும்பொருட்டு, பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறை அரசாணை (நிலை) எண் 165, வருவாய், நாள் 1-4-1999-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின்படி 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே இச்சான்றிதழ்கள் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தலைமை ஆசிரியர்*



*அத்தாட்சியுடன் வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். வருவாய்த் துறை அலுவலர்களின் விசாரணைக்குப்பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு, பள்ளிகளுக்கு அனுப்பப்படும். படிப்பு முடிந்தவுடன் அந்தச் சான்றிதழ்கள் மாறுதல் சான்றிதழ் (Transfer Certificate) உடன் மாணவர்களுக்கு ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாகத்தால் வழங்கப்படும். அரசாணை (நிலை) எண் 118, பள்ளிக் கல்வித் துறை, நாள் 3-5-1999-ன்படி மேற்கண்ட அரசின் ஆணை 1999-2000 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**149—**

## களிமண்-மண் கலந்த நீரைத் தடுக்க நடவடிக்கை

**வினா எண் 28118—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ஆழியார் டேம், தங்கும் அறைகளில் தண்ணீரில் களிமண்-மண் கலந்த நீராகத் தொடர்ந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மழைக் காலங்களில் அணைக்கு வரும் நீருடன் செம்மண்ணும் கலந்து வருவதால் அணை நீர் கலங்கலாகிவிடுகிறது. இதனால் மழை வெள்ளக் காலங்களில் மட்டும் நீரானது கலங்கலாக இருக்கும். மழைக் காலம் முடிந்தவுடன், அணைகளில் நீர் தெளிந்தவுடன், விருந்தினர் மாளிகைக்கு வரும் மின்னேற்ற நீரும் தெளிவாக இருக்கும். எனவே, இதற்கென தனி நடவடிக்கை தேவையில்லை.*

**150—**

## ஜாதிச் சான்றிதழ்

**வினா எண் 28802—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு சலுகை பெற ஜாதிச் சான்றிதழ் ஆதிவாசிகளுக்கு ஆர்.டி.ஓ. தருவதில் காலதாமதமும், கிடைக்காத நிலையும் உள்ளதால், இதைத் தவிர்க்க ஆண்டுதோறும் நடைபெறும் ஜமாபந்தியில் எஸ்.டி. ஜாதிச் சான்று 10 ஆண்டுகளுக்குத் தகுதிபெறும்படி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும் மற்றும் வேலைவாய்ப்புக்காகவும் பழங்குடி வகுப்பினருக்கான சாதிச் சான்றிதழ் விண்ணப்பம் அளித்து ஒரு மாதத்திற்குள் நிரந்தரச் சான்றிதழ் வருவாய்க் கோட்ட அலுவலரால் வழங்கப்படுகிறது. சாதிச் சான்றிதழ் பெறுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டால் மாவட்ட வருவாய் அலுவலருக்கு முறையீடு செய்துகொள்ளலாம். மேலும், தற்பொழுது சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் பள்ளிகள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**151—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 29769—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், பெரியபுத்தேரி, ஓட்டேரி, தென்னேரி ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வரும் 200 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பெரியபுத்தேரி மற்றும் ஓட்டேரி கிராமங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டப்பட்டுள்ள நிலம் மேய்க்கால் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தடை செய்யப்பட்ட



இனமாதலால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. தென்னேரி கிராமத்தில் உள்ள ஆக்கிரமிப்புப் பகுதி புஞ்சைத் தரிசு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால், ஆக்கிரமிப்பாளர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**152—**

## நில வரியை இரத்து செய்தல்

**வினா எண் 30016—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை, திருவாரூர், தஞ்சை, கடலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பருவம் தவறிப் பெய்த பெருமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரியை இரத்து செய்து அரசு அறிவிக்கும் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

**153—**

## புதிய தமிழ் வார்த்தைகள்

**வினா எண் 29772—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வருவாய்த் துறையில் பசலி போன்ற வார்த்தைகளுக்குப் புதிய தமிழ் வார்த்தைகள் பயன்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். பசலி என்ற பாரசீக மொழி வார்த்தையை வருவாய்த் துறை ஆண்டு என தமிழாக்கம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பாரசீக மொழி வார்த்தைகள் தமிழாக்கம் செய்யப்பட்டு, ஆட்சிச் சொல் அகராதி வெளியிடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**154—**

**செயற்கை மழை**

**வினா எண் 30270—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகமெங்கும் வறட்சி நிலை உள்ளதால், மழை பொய்த்துப்போன காலங்களில், செயற்கை மழை பொழிய வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டங்களில் நிலவி வரும் வறட்சி சூழ்நிலை மற்றும் குடிநீர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்க பல்வேறு நிவாரணத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதால், செயற்கை மழை பொழியவைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**155—**

**வட்டங்களை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கும் திட்டம்**

**வினா எண் 31445—திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டா வட்டங்களை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அரசு அறிவித்துள்ளது.

**156—**

**தென்னக நதிகளை இணைக்கும் திட்டம்**

**வினா எண் 33309—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னக நதிகளை இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தென்னக நதிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசும் மற்றும் அதன்கீழ் இயங்கிவரும் தேசிய நீர் மேம்பாட்டு முகமை ஆகியன மேற்கொண்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு இதற்கு தனது முழு ஆதரவைத் தருவதுடன், ஒத்துழைப்பையும் நல்கி வருகிறது.

**157—**

**அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடல்**

**வினா எண் 33662—திரு. மு.பெ. சாமிநாதன் மற்றும் திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

உடுமலைப்பேட்டை வட்டத்தில் அமராவதி அணையிலிருந்து ஈரோடு மாவட்டம் மற்றும் கரூர் பகுதிவரை உடனடியாகத் தண்ணீர் திறந்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*அமராவதி அணையில் தற்போதுள்ள குறைந்த நீரிருப்பைக் கொண்டு கரூர் வரை தண்ணீர் வழங்க இயலாது.*

**158—**

## ஆயுள் கைதிகள்

**வினா எண் 35228—டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தின் சிறைகளில் உள்ள ஆயுள் கைதிகள் எத்தனை பேர்?*

*(ஆ) அவர்களுக்கு அண்ணா பிறந்த நாளில் வழங்கப்பட்டு வந்த பொது மன்னிப்பு, இந்த ஆண்டில் அளிக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தமிழக சிறைகளில் 25-4-2003 அன்று வரை மொத்த ஆயுள் தண்டனைக் கைதிகள் 3903 பேர் உள்ளனர்.*

*(ஆ) இந்த ஆண்டில் அதாவது 2003-ல் அண்ணா பிறந்த நாளில் பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய்வதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**159—**

## புதிய கால்வாய் அமைக்கும் திட்டம்

**வினா எண் 35766—திரு. எஸ்.எம். சீனிவேல்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து கீழக்குயில்குடி கிராமத்திற்கு மேல்புறமுள்ள வடபழஞ்சி கிராமம் வரை புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) தலிக்கன்குளம் முதல் தென்பழஞ்சி வரை புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?*

*(இ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து கீழக்குயில்குடி கிராமத்திற்கு மேல்புறமுள்ள வடபழஞ்சி கிராமம் வரை புதிய கால்வாய் அமைத்து, 816.50 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க 2001-2002 ஆண்டு விலைப்பட்டியல்படி ரூ.113.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களின் ஒத்திசைவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.*

*(ஆ) தலிக்கன்குளம் முதல் தென்பழஞ்சி வரை புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(இ) எழவில்லை.*

**160—**

## பாலங்கள் கட்டுதல்

**வினா எண் 35827—திரு. எஸ்.எம். சீனிவேல்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பரங்குன்றம் தொகுதி, விளாச்சேரி மற்றும் வடிவேல்கரை ஊராட்சிகளுக்கு நடுவே நிலையூர் கால்வாயில் (வைகைக் கால்வாய்) உள்ள சிறிய இரண்டு பாலங்களை மாற்றி பெரிய கண் பாலங்களாகக் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள பாலம் போதுமானதாக உள்ளதால், பாலத்தை மாற்றியமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**161—**

## கண்மாய்களை ஆழப்படுத்துதல்

**வினா எண் 36017—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சிக்கு அருகில் உள்ள விளாச்சேரி கண்மாய், தென்கால் கண்மாய், மாடக்குளம் கண்மாய், துவரிமான் கண்மாய் ஆகிய கண்மாய்களை ஆழப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

விளாச்சேரி கண்மாயில் 2002-2003-ல் முழுமையாகத் தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. பிற கண்மாய்களில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப பணிகள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**162—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 36049—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி-பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையில் அகலம் குறைந்து, மிகவும் பழுதடைந்துள்ள மன்னார்குடி- பரவக்கோட்டை- மதுக்கூர் வரையுள்ள சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை மேம்படுத்தும் திட்டம் தற்போது ஏதுமில்லை. எனினும், இச்சாலையில் கி.மீ. 40/8 மற்றும் 46/4-ல் குறுக்கிடும் ஓடையில் உயர்மட்டப் பாலங்கள் தலா ரூ.45 இலட்சம் செலவில் திரும்பக் கட்ட மைய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 2002-2003-ல் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்ற பின் பணி செயல்படுத்தப்படும்.

**163—**

## நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 433—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2000-2001 முடிய நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாகக் கண்டறியப்பட்டவை எத்தனை?

(ஆ) அவற்றை மேம்பாடு செய்ய அரசு மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2000-2001 முடிய நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாகக் கண்டறியப்பட்டவை ஏதுமில்லை.

**164—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நிதி கையாடல்

**வினா எண் 640—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி நடந்துள்ள நிலையில் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்பணத்தைத் திருப்பித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களால் இட்டு வைக்கப்பட்ட வைப்புத் தொகையில் கடன் வழங்கியதாகப் பொய்க் கணக்கு எழுதி, ரூ.40.42 இலட்சம் நிதி கையாடல் செய்துள்ளனர். இது தொடர்பாக, வங்கித் தலைவர், செயலாளர் மற்றும் முதுநிலை எழுத்தர் ஆகியோர்மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது. மேற்கண்ட வங்கிப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் தலைவர் மீது தண்டத் தீர்வை நடவடிக்கையும், ஜப்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை ஏலம் விடுவதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளதால் சொத்துக்கள் ஏலம் விடப்படவில்லை. ஜப்தி செய்துள்ள சொத்துக்களை விற்கும்போதுதான் அனைத்து வைப்புதாரர்களின் வைப்புத் தொகைகளும் திரும்ப வழங்கப்படும்.

**165—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 2307—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பிள்ளையார் குடியிருப்பு கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மேலசிவசுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள செம்பிக்குளம் தாய்க் கடையில் 979 குடும்ப அட்டைகள் இருந்தன. இவற்றைப் பிரித்து பிள்ளையார் குடியிருப்புப் பகுதியில் 245 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேரக் கடையும், மதகனேரி பகுதியில் 348 குடும்ப அட்டைகளுடன் மற்றொரு பகுதி நேரக் கடையும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**166—**

## தனியார் தொலைக்காட்சிகளுக்கு வரி விதிப்பு

**வினா எண் 2385—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டப்படி, திரையரங்குகளில் கிடைக்கும் அரசு வருமானம் பாதிக்கப்படுவதால், தனியார் தொலைக்காட்சிகளுக்கு வரிவிதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் தொலைக்காட்சிகளுக்கு வரிவிதிக்க மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை. இருப்பினும், கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு தருபவர்களை அரசின் கண்காணிப்பின்கீழ் கொண்டு வரும் வகையில் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு தருபவர்கள் 1-6-2003 முதல் ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு இணக்க வரியினை அரசுக்குச் செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது:

(1) கிராம ஊராட்சிப் பகுதி ரூ.12,000

(2) பேரூராட்சிப் பகுதி ரூ.18,000

(3) நகராட்சிப் பகுதி ரூ.36,000

(4) மாநகராட்சிப் பகுதி ரூ.72,000

**167—**

## பணி மாற்றம்

**வினா எண் 2954—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் மத்திய வங்கி, சூப்பர் மார்க்கெட், கூட்டுறவு நாணய சங்கம் ஆகியவற்றில் பணி புரியும் செயலாளர்கள் மற்றும் பணியாளர்களை மேற்கண்ட சங்கங்களுக்குள் பணி மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**168—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 3045—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சிப் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகள், அரசு நிர்ணயம் செய்த கால நேரத்தில் திறப்பதில்லை. எடையளவும் குறைகிறது. இந்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி வட்டத்தில் 110 நியாய விலைக் கடைகள் உள்ளன. உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் விக்கிரமங்கலம் நியாய விலைக் கடை தவிர ஏனைய கடைகளில் அரிசி கிலோ ஒன்றுக்கு கூடுதலாக ரூ.0.50 பெறப்படுவது உண்மை என்று ஆய்வில் கண்டறியப்பட்டு தொடர்புடைய நியாய விலைக் கடை பொறுப்பாளர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேற்சொன்ன நியாய விலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதில் எடையளவு குறைவு ஏதும் இல்லை. குறித்த நேரத்தில் திறக்காத நியாய விலைக் கடை விற்பனையாளர்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**169—**

## டீசல் பங்க்

**வினா எண் 3051—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை வட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி, உசிலம்பட்டி பகுதிகளுக்கு கூட்டுறவு விவசாய வங்கிகளின் மூலமாக டீசல் பங்க் ஆரம்பிக்க அரசு துணை செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி மற்றும் உசிலம்பட்டி பகுதிகளுக்கு கூட்டுறவு விவசாய வங்கிகளின் மூலமாக டீசல் பங்க் ஆரம்பிக்கும் திட்டம் ஏதுமில்லை.

[2004 ஜூலை 31

**170—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 4898—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளத்தூர் தொகுதியில் நியாய விலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டத்தில் குளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அனைத்து வருவாய்க் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், பொதுமக்களால் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடங்களில் வேண்டப்படும் பகுதி நேர நியாய விலைக் கடைகளும் அவ்வப்போது திறக்கப்பட்டு, மொத்தத்தில் 160 முழு நேர நியாய விலைக் கடைகளும், 38 பகுதி நேரக் கடைகளும் குளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்பட்டு வருகின்றன. குளத்தூர் தொகுதியில் நியாய விலைக் கடை இல்லாத கிராமங்களில் நியாய விலைக் கடை அமைக்க கோரிக்கைகள் வரப்பெற்றால் தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**171—**

## நியாய விலைக் கடைகளிலுள்ள பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 5012—திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை தொகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளிலுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில் 100 நியாய விலைக் கடைகள் உள்ளன. இந்நியாய விலைக் கடைகளில் 7 விற்பனையாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் ஒப்புதலளிக்கப்பட்ட பணித் திறனை, சங்கத்தின் நிதி மற்றும் வணிக நிலைக்கேற்ப ஆய்வு செய்ய மாவட்ட அளவில் மண்டல இணைப் பதிவாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்காணும் பணிகள் முடியும் வரை கூட்டுறவுச் சங்கங்களில் புதியதாகப் பணியமர்த்துவதோ காலிப் பணியிடங்களில் பணியமர்த்துவதோ பதிவாளரின் ஒப்புதலின்றிச் செய்யக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் காலிப் பணியிடங்களில் தற்போது பணியமர்த்த வாய்ப்பு இல்லை.*

**172—**

## நலிந்த கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டம்

**வினா எண் 5112—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலிந்த கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) பிஏசிபி (PACB)-க்கள் மிகவும் நலிந்துள்ள வங்கிகளை வேறு வங்கியுடன் இணைத்ததை ஏற்கெனவே இருந்த வங்கியாக இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(இ) காஞ்சிபுரம் மாவ ட்டத்தில் எத்தனை வங்கிகள் இவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இல்லை.*

*(இ) ஏதுமில்லை.*

[2004 ஜூலை 31

**173—**

## கூட்டுறவுச் சங்க கடன் வட்டித் தள்ளுபடி

**வினா எண் 5849—திரு. ப. ஆரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அறிவித்துள்ள கூட்டுறவுச் சங்க கடன் வட்டித் தள்ளுபடி சலுகையால் பலன் அடையும் விவசாயிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் பெரிய, சிறிய மற்றும் குறு விவசாயிகள் முறையே எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அரசால் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டம் 2001-ன்கீழ் 6,11,193 விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர்.

(ஆ) அவர்களில்

| | |
|---|---|
| பெரிய விவசாயிகள் | 1,52,190 பேர்கள் |
| சிறிய விவசாயிகள் | 3,18,903 பேர்கள் |
| குறு விவசாயிகள் | 1,40,100 பேர்கள் |
| மொத்தம் | 6,11,193 பேர்கள் |

**174—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 5887—திரு. பீஎச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) சேரன் மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், லட்சுமியூர் கிராமத்திற்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், சேரன்மகாதேவி தொகுதி, லட்சுமியூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டு 15-2-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

**175—**

## நியாய விலை கிளைக் கடை

**வினா எண் 5952—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் ஊராட்சி, புதியம்புத்தூர் கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பணகுடி பொது கூட்டுறவு பண்டகசாலை மூலம் நடத்தப்படும் மாடநாடார் குடியிருப்பு நியாய விலைக் கடையில் 348 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசாணை வரையறைகளின்படி 800 குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடையை மட்டுமே பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க முடியும். பகுதி

[2004 ஜூலை 31

நேரக் கடை அமையும் இடம் தாய்க் கடையிலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் 200-க்கு குறையாத குடும்ப அட்டைகளும் கொண்டிருக்க வேண்டும். தாய்க் கடையிலிருந்து புதியம்புத்தூர் 1 கி.மீ. தொலைவிலும் 170 குடும்ப அட்டைகளுடனும் அமைந்துள்ளது. எனவே, புதியம்புத்தூர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**176—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 5982—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம், பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி சமையல் எரிவாயு பிரிவில் 15 ஆண்டுகளாக டெலிவரி பாய்களாக பணிபுரிந்து வரும் 23 நபர்களை அரசு பணி நிரந்தரம் செய்து தருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இது தொடர்பான நீதிப்பேராணை மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. நீதிப்பேராணை தொடர்பான தீர்ப்பு வரப்பெற்றதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**177—**

**நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 6399—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட கொக்குப்பாளையம் கிராமத்தில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்திலுள்ள அங்குசெட்டிப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வந்த கொக்குப்பாளையம் நியாய விலைக் கடை 2001-2002 ஆம் நிதியாண்டில் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசு கட்டடத்தில் 1-12-2002 முதல் செயல்பட்டு வருகிறது.*

**178—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 6402—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட மாளிகம்பட்டு கிராமத்தில் கட்டப்பட்ட நியாய விலைக் கடை திறக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வடகைலாசம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் மாளிகம்பட்டு நியாய விலைக் கடையிலுள்ள 762 குடும்ப அட்டைகளிலிருந்து 434 குடும்ப அட்டைகளைப் பிரித்து மாளிகம்பட்டு கிழக்குப் பகுதியில் கட்டப்பட்ட கட்டடத்தில் ஒரு பகுதிநேரக் கடை அமைத்து செயல்பட 31-3-2003 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு ஆணை (டி) எண் 99-ல் ஆணைகள் வழங்கப்பட்டு 6-6-2003 முதல் செயல்பட்டு வருகிறது.*

179—

## நியாய விலைக் கடை

**வினா எண் 6403—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு கிராமத்தில் தனியாக நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், பெரியகாட்டுப்பாளையம் தாய் நியாய விலைக் கடையில் 911 குடும்ப அட்டைகள் உள்ளன. இத்தாய்க் கடையிலிருந்து 237 குடும்ப அட்டைகளைப் பிரித்து நடுக்காட்டுப்பாளையம் கிராமத்தில் ஒரு பகுதிநேரக் கடை 26-4-2001 முதல் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 674 குடும்ப அட்டைகளிலிருந்து 292 குடும்ப அட்டைகளைப் பிரித்து கீழிருப்பு பகுதியில் மற்றொரு பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க் கடையில் 382 குடும்ப அட்டைகளே மிஞ்சும். பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று அரசு வகுத்த வரையறை பொருந்தாததால் கீழிருப்பு பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

180—

## நியாய விலைக் கடை

**வினா எண் 6430—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி போலிஸ் லைன் 4-வது தெருவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையை திறக்க அரசு முன்வருமா?*



*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் சரவணபவ நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை பண்ருட்டியில் நடத்தப்படும் நியாய விலைக் கடை எண் 2, பண்ருட்டி நகராட்சியினால் போலிஸ் லைன் 4-வது தெருவில் (லட்சுமிபதி நகரின்) புதியதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் 11-4-2003 முதல் செயல்பட்டு வருகிறது.*

181—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 6466—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன் மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பிள்ளை குளத்தில் வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு புதிய அரசு கட்டடம் ஒன்றைக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் திருவித்தான்புள்ளி நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு பிள்ளைகுளம் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டுள்ளது. பகுதிநேர நியாய விலைக் கடை அமைவதற்கு ஊர் மக்கள் இலவச கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற வரையறையின்படியே பிள்ளைகுளம் பகுதிநேர நியாய விலைக் கடை இலவச கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. மேலும் பகுதிநேரக் கடைகளுக்கு கட்டடம் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் வசம் இல்லை.*

[2004 ஜூலை 31

**182—**

## வங்கிகளில் எழுத்துப் பணிக்கு நியமனம்

**வினா எண் 6477—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, நகர வங்கி, தொடக்க வேளாண்மை வங்கி, சிக்கன நாணயச் சங்கம் போன்றவற்றில் எழுத்துப் பணிக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நியமனம் செய்யப்படாமல் இருப்பதும் அரசு பொதுவிதி 12(டி) கடைப்பிடிக்கப்படவில்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், இப்பிரச்சனை தீர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) விருதுநகர் மாவட்டத்தில் 1998-1999 முதல் 2001-2002 (டிசம்பர் 2001 வரை) கூட்டுறவு சங்கங்களில் 11 தாழ்த்தப்பட்ட பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கூட்டுறவு வங்கிகளில் முதுநிலை பதவிகளுக்கு ஏதேனும் ஒரு பட்டப் படிப்பு குறைந்தபட்ச கல்வித் தகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் விதி 12(டி)-யில் கூறப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பினைத் தளர்வு செய்யும் அறிவுரைகள் இப்பணி நிலைகளுக்குப் பொருந்தாது. எனவே, இப்பதவிகளுக்கு பணிநியமனம் செய்யும்போது 12(டி) விதிகள் பின்பற்றப்படுவதில்லை.*

*(ஆ) கூட்டுறவு வங்கிகளில் பணி நியமனம் தற்போதுள்ள தடையாணை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்தடையாணை விலக்கப்படும்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பணிநிலைத் திறனுக்கேற்ப தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பணி நியமனம் செய்யப்படுவர்.*



2004 ஜூலை 31]

**183—**

## எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

**வினா எண் 7713—திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவை-சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலையின் கீழ், ஒண்டிப்புதூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்பட்டு வந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைத் தொடர்ந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூர்-சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலையைச் சேர்ந்த ஒண்டிப்புதூர் ஆலையில் தயாரிக்கப்பட்ட எண்ணெய் தரமானதாக இருந்தபோதிலும் தனியாரின் கடுமையான போட்டிகளினால் போதிய விலை கிடைக்காமல் போனது. அறுவடை காலங்களில் ஆலைக்குத் தேவையான நிலக்கடலைப் பருப்பைப் பெரும் அளவில் கொள்முதல் செய்து வைக்க தேவையான நிதியில்லாததாலும், தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், அங்காடி விலை ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றால் உற்பத்தித் திறன் குறைந்ததாலும் இந்த ஆலையை தொடர்ந்து இயக்க வாய்ப்பின்றிப் போனது. இந்த ஆலை தொடர்ந்து இயங்கி வந்ததால், இதைத் தனியாருக்கு விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு யாரும் இதை வாங்க முன்வரவில்லை. குத்தகைக்கு விட மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் பயனளிக்கவில்லை. எனவே, அரசு இதில் மேலும் முதலீடு செய்து இந்த ஆலையை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பில்லை.*

**184—**

## வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம்

**வினா எண் 8264—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி வேளாண்மை கூட்டுறவு வங்கியில் லாக்கர் பிரிவு கட்டடம் இடிக்கப்பட்டு உள்ளதை புதியதாக கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அலுவலக கட்டடம் இடிக்கப்பட்டது. அதனை அடுத்து 1999 ஆம் ஆண்டில் லாக்கர் பிரிவு கட்டடம் கட்டப்பட்டது. இது தற்பொழுது இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்ட திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**185—**

## கூட்டுறவு அங்காடி

**வினா எண் 8285—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கடலூர் கிராமத்திற்கு கூட்டுறவு அங்காடி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சன்னாசி நல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் சிலுப்பனூர் முழுநேர நியாய விலைக் கடை 498 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. இக்கடையின் பகுதிநேர அங்காடியாக தளவாய் கடலூர் 222 குடும்ப அட்டைகளுடன் பொது மக்களால் கொடுக்கப்பட்டுள்ள கட்டடத்தில் செயல்படுகிறது. பகுதிநேரக் கடைக்கு அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.





**186—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 8326—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கொளஞ்சிக்குப்பம் கிராமத்தில் மக்கள் நலன் கருதி நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கொளஞ்சிக்குப்பம் ஊர் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை காடாம்புலியூர் கடை எண் 1 மற்றும் தச்சம்பாளையம் ஆகிய கடைகளில் பெற்று வருகின்றனர். கொளஞ்சிக்குப்பத்திலிருந்து காடாம்புலியூர் 3 கி.மீ. தொலைவிலும், தச்சம்பாளையம் 2½ கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன. காடாம்புலியூர் கடை எண் 1-ல் 98 குடும்ப அட்டைதாரர்களும், தச்சம்பாளையம் கடையில் 38 குடும்ப அட்டைதாரர்களும், அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். கொளஞ்சிக்குப்பத்தில் 136 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அங்கு பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**187—**

## கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி

**வினா எண் 8476—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டி ஊராட்சி, பெரியேரிப்பட்டி, வேடப்பட்டி, ரெட்டிப்பட்டி, துண்டுமானியம் ஆகிய நான்கு ரெவின்யூ கிராமங்களுக்கு புதிய கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டி, வேடப்பட்டி, ரெட்டிப்பட்டி, துண்டுமானியம் ஆகிய நான்கு ரெவின்யூ கிராமங்களுக்கு தனியே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க இயலாத நிலை உள்ளது.

**188—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 8477—திரு. மே.ப. காமராஜ்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாணாபுரம், குதிரைக்காரன்புதூருக்கு நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் பாணாபுரம் நியாய விலைக் கடைக்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டடம்*



2004 ஜூலை 31]

*கட்டப்பட்டு வருகிறது. இக்கடையின் கட்டுப்பாட்டில் குதிரைக்காரன் புதூர் என்ற நியாய விலைக் கடை ஏதும் இல்லை. ஆனால் குதிரைக்காரனூர் என்ற பகுதி நேரக் கடை செயல்பட்டு வருகிறது. பகுதி நேரக் கடைகளுக்கு ஊர்ப் பொதுமக்களே இலவசக் கட்டடம் அளிக்க வேண்டும். அரசு உதவித் திட்டங்களின் மூலம் கட்டடம் கட்ட வழிவகையில்லை.*

**189—**

## நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 8718—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கபிலர்மலை தொகுதி, கொளக்காட்டுபுதூர் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் கட்டப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதியில் வெங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் கொளக்காட்டுபுதூர் முழுநேர நியாய விலைக் கடை 631 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதி ஆண்டில், நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படாததால் அரசு நலத் திட்டங்களின்கீழ் கொளக்காட்டுபுதூர் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.*

**190—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 8966—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்தில் ஒரு நியாய விலைக் கடையை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், காடாம்புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் காடாம்புலியூர் கடை எண் 1-ல் இணைக்கப்பட்டுள்ள 711 குடும்ப அட்டைகளில் கொளஞ்சிக்குப்பம் மற்றும் பாவைக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 212 குடும்ப அட்டைகளைப் பிரித்து கொளஞ்சிக்குப்பம் பகுதியில் ஒரு பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 1-8-2002 முதல் செயல்பட்டு வருகிறது. 88 குடும்ப அட்டைகளை மட்டுமே கொண்டுள்ள பாவைக்குளம் பகுதியில் தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பில்லை.

**191—**

## நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்தல்

**வினா எண் 9206—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், வேடப்பட்டி நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து கடையை மாற்றித் தரஅரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சினம்பட்டி ஸ்ரீ பழனியாண்டவர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் வேடப்பட்டி நியாய விலைக்





கடையில் மொத்தம் 204 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. நடைமுறையிலுள்ள அரசாணை வரையறைகளின்படி ஒரு முழுநேர நியாய விலைக் கடையில் 800 குடும்ப அட்டைகள் இருந்தால் மட்டுமே பகுதி நேரக் கடை அமைக்க ஆய்வு செய்யப்பட வேண்டும். 204 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள வேடப்பட்டி நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து வேறொரு கடை அமைக்க வாய்ப்பில்லை.

**192—**

## அங்காடி கட்டடம்

**வினா எண் 10937—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கடலங்குடி ஊராட்சியில் அங்காடி கட்டடம் அமைத்துத் தர அரசு உதவுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கடலங்குடி ஊராட்சியில் கூந்தலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைந்த கடலங்குடி நியாய விலைக் கடை 323 குடும்ப அட்டைகளுடன் கடலங்குடியில் உள்ள பழைய பஞ்சாயத்துக் கட்டடத்தில் வாடகையின்றி இயங்கி வருகிறது. 2004-2005 ஆம் நிதியாண்டில் இந்த நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர திருவாரூர் மண்டல இணைப் பதிவாளரினால் திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**193—**

## அங்காடி அமைத்தல்

**வினா எண் 11020—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சி, பிரதாபராமபுரம் கிராமத்தில் அங்காடி அமைத்துத் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சி, பிரதாபராமபுரம் நியாய விலைக் கடைக்கான கட்டடம் 2002-2003 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டப்பட்டு தற்போது நியாய விலைக் கடை புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

**194—**

## நுகர் கடன்

**வினா எண் 11129—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில், நுகர் கடன் எவ்வளவு சதவீதம் வரை கொடுக்கலாமென்று விதி உள்ளது?

(ஆ) நுகர் கடன் வழங்கியதில் கூட்டுறவு வங்கிகள் தவணை தவறிய கடன்களை வசூல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள விதிமுறைகளின்படி கூட்டுறவு வங்கிகளில், நுகர்பொருள்களின் விலையில் 75% வரை நுகர்பொருள் கடனாக வழங்கலாம்.

(ஆ) நுகர் கடன் வழங்கியதில் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன்களை வசூல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் விதி 1988-ன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



**195—**

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 11217—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பேடற அள்ளி ஊராட்சி, மூக்கன அள்ளிக்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 490 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள பேடற அள்ளி நியாய விலைக் கடை ஒ.ஜி. அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே பேடற அள்ளி நியாய விலைக் கடைக்கு பூச்செட்டி அள்ளி என்ற இடத்தில் 390 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேரக் கடை செயல்பட்டு வருகிறது. மூக்கனஅள்ளி பகுதியில் உள்ள 143 குடும்ப அட்டைதாரர்களும் பூச்செட்டி அள்ளி பகுதி நேர நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். மேலும் பூச்செட்டி அள்ளி பகுதி நேர நியாய விலைக் கடைக்கும் பகுதி நேர கடை திறக்கக் கோரியுள்ள மூக்கன அள்ளி பகுதிக்கும் இடையே உள்ள தொலைவு 3/4 கி.மீ மட்டுமே. பகுதி நேரக் கடைக்கு வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் அமைந்துள்ள தொலைவு தொடர்பான அரசு வரையறைகள் பொருந்தாததால் மூக்கன அள்ளி பகுதிக்குப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**196—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 11271—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அப்பியம்பேட்டை கிராமத்தில் ஒரு நியாய விலைக் கடையை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், கட்டியங்குப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் இயங்கும் கோ. சத்திரம் தாய் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு கோ. அப்பியம்பேட்டையில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை தனியார் கட்டடத்தில் இயங்குகிறது. அரசு விதிமுறைகளின்படி ஊர் மக்களே பகுதி நேர நியாய விலைக் கடைக்கு இலவசக் கட்டட வசதி செய்துதர வேண்டும். முழு நேர நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே அரசு உதவி பெறும் திட்டங்களின்கீழ் கட்டட வசதி செய்து தரப்படும்.

**197—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 11289—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் ஊராட்சியில் ஆதிதிராவிட மக்கள் வாழும் காலனிப் பகுதியில் தனியாக ஒரு நியாய விலைக் கடை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, புலியூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பைச் சேர்ந்த 234 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு பகுதி நேரக் கடை ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் அமைக்க கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் 17-4-2003-ல் ஆணை பிறப்பித்துள்ளார். இக்கடை 1-6-2003 முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**198—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 11303—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சிக்கு உட்பட்ட கோயன்கொல்லை வட்டத்தில் ஒரு நியாய விலைக் கடை ஏற்படுத்தி தரும் செயற்குறிப்பு இவ்வரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சியில் ஒரு நியாய விலைக் கடை செயல்படுகிறது. இக்கடையைச் சேர்ந்த கோயன்கொல்லை பகுதியில் ஒரு பகுதி நேரக்

கடை 115 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. கோயன்கொல்லை பகுதி நேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் ஆய்வு செய்யப்படவில்லை. பகுதி நேரக் கடைக்கு அரசுத் திட்டங்களின்கீழ் கட்டட வசதி செய்து தரப்படுவதில்லை. அதனால்; இலவசக் கட்டட வசதி கிடைத்தால் மட்டுமே பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

**199—**

### நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 11304—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மாணவள்ளி ஊராட்சி, மாணவள்ளி கிராமத்திற்கு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கந்திலி ஒன்றியத்தில் ட்டி. பெரியகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் நரியனேரி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 529 குடும்ப அட்டைகளைப் பிரித்து மாணவள்ளி பகுதியில் ஒரு பகுதி நேரக் கடை திறப்பதற்கு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் 11-4-97 அன்று ஆணையிட்டப்பட்டுள்ளது. பகுதி நேரக் கடைக்கு ஊர் மக்களே இலவசக் கட்டட வசதி செய்து தர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால் அரசு உதவித் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித் தர வாய்ப்பில்லை.





**200—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 11306—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கொரட்டி ஊராட்சி, தண்டுகானூர் கிராமத்திற்கு கூடுதல் பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று ஏற்படுத்தித் தர இவ்வரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கொரட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையில் 536 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் 185 குடும்ப அட்டைகள் தண்டுகானூர் பகுதியைச் சேர்ந்தவை. நடைமுறையிலுள்ள வரையறைகளின்படி பகுதி நேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். பகுதி நேரக் கடை திறந்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். இவ்வரையறைகள் பொருந்தாததால் தண்டுகானூர் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2004 ஜூலை 31

## பட்டியல் 16

1—

### குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்

**வினா எண் 14090—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடியில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் கருத்துரு எதுவும் ஆய்வில் இல்லை.

2—

### தனி மகளிர் நீதிமன்றம்

**வினா எண் 19405—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலும், கோவையிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைத்ததுபோல் ஈரோட்டிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னையிலும், கோவையிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைத்ததுபோல ஈரோட்டிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 ஜூலை 31]

3—

### மின் மாற்றித் திறன் உயர்த்துதல்

**வினா எண் 19837—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் நகரத்திலுள்ள 5 கிலோவாட் கொண்ட மின் மாற்றியை 8 கி.வோ. கொண்டதாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். காவேரிப்பட்டினம் பகுதியில் மின்னழுத்தக் குறைபாட்டினைச் சரிசெய்திட காவேரிப்பட்டினம் 33 கே.வி. துணை மின் நிலையத்திலுள்ள மின் மாற்றியின் மின் திறனை 5 எம்.வி.ஏ.யிலிருந்து 8 எம்.வி.ஏ–க்கு உயர்த்தும் திட்டம் 10–வது பெருந்திட்டத்தின் 3–வது பகுதியில் பரிசீலனையில் உள்ளது.

4—

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 21064—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் பில்லுக்குறிச்சியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அரசு அமைத்துத் தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2004 ஜூலை 31

(ஆ) சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சியில் உள்ள பில்லுக்குறிச்சியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி தற்போது தமிழ்நாடு மின் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இப்பணி பத்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பகுதி 111-ன்கீழ் நிறைவேற்றுவதற்கு வாரியத்தின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வாரியத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் வாரியத்தின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 2003-2007-க்குள் மேற்படி துணை மின் நிலையம் அமைக்கப்படும் என மின் வாரியம் தெரிவித்துள்ளது.

**5—**

## அனல் மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 26729—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**6—**

## கழிவு நீரிலிருந்து எரிவாயு தயாரித்தல்

**வினா எண் 27514—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தொழிற்சாலைக் கழிவு நீரிலிருந்து எரிவாயு எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தொழிற்சாலைக் கழிவு நீர் மற்றும் திப்பியிலிருந்து உற்பத்தியாகின்ற எரிவாயு எடுக்கும் திட்டக் கருத்துரு இந்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் பரிசீலனையின்கீழ் உள்ள கருத்துருக்கள்மீது அனுமதி கிடைத்தபின் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**7—**

## புதிய மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 31143—திரு. ராதாரவி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கோட்டூர்புரம், பீலியம்மன் கோயில் தெரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மின் அழுத்தம் சீராகக் கிடைக்க புதிதாக மின் மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர்புரம், பீலியம்மன் கோயில் தெரு முனையில் ஒரு 500 கி.வோ. மின்மாற்றி உள்ளது. அதில் குறைவான மின் பளுவே இணைக்கப்பட்டுள்ளது. எனவே, மின்மாற்றி புதிதாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மேலும், மின் கம்பியில் உள்ள

இணைப்பு விடுபட்டு இருந்ததால் (Jumpar cut) அப்பகுதியில் சீரான மின்சாரம் கிடைக்கவில்லை. அது, தற்போது சரி செய்யப்பட்டு சீரான மின்சாரம் உள்ளது. மேலும், குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க தற்போது உள்ள 3.5 x 25 sq. mm புதைவடத்திற்குப் பதிலாக 3.5 x 120 sq. mm புதைவடம் புதைப்பதற்குத் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட உள்ளது. அனுமதி கிடைத்தவுடன் புதிய புதைவடம் பொருத்தப்படும். இதனால் நிலையான, சீரான மின்சாரம் அப்பகுதியில் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

**8—**

## மின்சார உற்பத்தி

**வினா எண் 31146 —திரு. ராதாரவி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்குக் கால்வாய் வழியாகப் பாசனத்திற்குப் பயன்படும் நீரைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ)* தலைவர், காவிரி தொழில்நுட்பப் பிரிவு மற்றும் தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, நீர்வள இயக்கம், திருச்சி அவர்களின் கருத்துரைப்படி மேட்டூர் அணையின் மேற்குக் கால்வாயின் கீழ்மட்ட மதகினைப் பயன்படுத்தி 0.35 மெகாவாட் திறனுடைய சிறிய மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது. இது மேற்குக் கால்வாயிலிருந்து பிரிந்து செல்லும் கிழக்குக் கால்வாயில் போதுமான படுகை வீழ்ச்சி மற்றும் நீரின் அளவு இல்லாததால் ஆய்வு செய்யப்படவில்லை.



**9—**

## மின் நிலையம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 32572—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலை தொகுதியிலுள்ள உரல்பட்டிக்கும் மற்றும் சாமராயப்பட்டிக்கும் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* உடுமலை தொகுதியிலுள்ள உரல்பட்டி மற்றும் சாமராயப்பட்டி ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தற்போது தொழில்நுட்ப ரீதியாகச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**10—**

## துணை மின் நிலையம் அமைக்கும் பணி

**வினா எண் 33094—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள கந்தர்வக்கோட்டையில் 5 கி.வோ. துணை மின் நிலைய்ம் அமைக்கும் பணி எப்போது துவங்கும்?*

*(ஆ) விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் புதிய 33/11 கிவோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி 2003-2004-ல் வா[illegible]ன் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு துவக்கப்படும்.*

*(ஆ) ஆம். ஆவன செய்யும்.*

**11—**

## மின் கட்டணம் செலுத்துதல்

**வினா எண் 34746—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வட சென்னையில் நீண்ட தூரம் சென்று மின் கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலையைப் போக்க கட்டணம் வசூலிக்கும் இடங்களைப் பரவலாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*வட சென்னையைச் சார்ந்த தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி கோட்டங்களுக்குட்பட்ட எல்லா மின் கட்டணம் வசூலிக்கும் மையங்களும் ஒன்று முதல் இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குட்பட்டே அமைந்திருக்கின்றன. எனவே, நீண்ட தூரம் சென்று மின் கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை எழவில்லை.*

**12—**

## மின் வாரிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 35885—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*அறந்தாங்கி நகரில் மின் வாரிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அறந்தாங்கி நகரில் மின் வாரிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.*

**13—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 36723—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் பகுதியில் புதிதாக 110 கி.வோ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் பகுதியில் புதிதாக ஒரு 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பெறப்பட்டு மின் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.*

*(ஆ) பத்தாவது திட்டக் காலம், பகுதி III-ல் (2003-2007-ல்) நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.*

**14—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 37035—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் புதிய 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பெறப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் (2003–2007-ல்) செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**15—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 37392—திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், சொர்ணாவூரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், சொர்ணாவூரில் (கொங்கம்பட்டு) 110/22 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவ அனுமதியளிக்கப்பட்டு, தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (2003–2004) பணிகள் ஆரம்பித்து, துணை மின் நிலையம் கொண்டுவர அனைத்து ஏற்பாடுகளும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் செய்யப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 31]

**16—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 37685—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வைகுந்தம் கிராமத்தில் துணை மின் நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், வைகுந்தம் பகுதியிலுள்ள ஐவேலி என்னும் இடத்தில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்றினை அமைத்திட கருத்துரு பெறப்பட்டு, 10-வது ஐந்தாண்டுத் திட்டப் பகுதி காலத்திற்குள் (2004–2007) நிறுவிட வாரிய ஒப்புதல் பெற பரிசீலனையில் உள்ளது என தமிழ்நாடு மின் வாரியம் தெரிவித்துள்ளது.

**17—**

**சட்டக் கல்லூரி துவக்குதல்**

**வினா எண் 38866—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

18—

## துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 38961—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, கொடிக்குளம் மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அறந்தாங்கி தொகுதி, கொடிக்குளத்தில் இயங்கி வரும் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தினை 110/11 கி.வோ.-ஆகத் தரம் உயர்த்தும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.*

19—

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 39025—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செஞ்சி தொகுதி, வல்லம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*செஞ்சி தொகுதி, வல்லம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்திட எவ்வித செயற்குறிப்பும் தமிழ்நாடு மின் வாரியத்திடம் இல்லை.*



20—

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 40536—திருமதி கு. கலாவதி:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், செம்மேடு பகுதியில் 110 மெகாவாட் திறனுள்ள துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

21—

## ஜுடிஷியல் நீதிமன்றம் ஏற்படுத்துதல்

**வினா எண் 46655—திருமதி எஸ். கனிதா சம்பத்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்போரூர் பேரூராட்சியை தலைமையிடமாகக் கொண்டு ஜுடிஷியல் (Judicial) நீதிமன்றம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*திருப்போரூர் பேரூராட்சியை தலைமையிடமாகக் கொண்டு ஜுடிஷியல் (Judicial) நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

[2004 ஜூலை 31

22—

**கணினிமயமாக்குதல்**

**வினா எண் 49111— திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கணினிமயமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ஒரு தன்னாட்சி நிறுவனம் ஆகும். ஆதலின், அதனை கணினிமயமாக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படுவது இல்லை. எனினும், அப்பல்கலைக்கழகம் கணினிமயமாக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக அப்பல்கலைக்கழகத்தின் தேர்வு கட்டுப்பாட்டுப் பிரிவு கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பல்கலைக்கழகத்தில் இணையதளம் (Web site) உருவாக்கப்பட்டு தொலை உரையாடல் திட்டம் (Tele-chatting programme) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அப்பல்கலைக்கழகத்துடன் தமிழ்நாடு அரசு சட்டத் துறை, சட்டக் கல்வி இயக்ககம் மற்றும் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளுடன் கணினி மூலம் இணைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பல்கலைக்கழகத்தில் தொலைச்சட்டம் (Tele-law) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) எழவில்லை.

23—

**கூட்டுறவு அங்காடி**

**வினா எண் 6255—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு ஊராட்சி பகுதிநேர கூட்டுறவு அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு என்ற ஊரில் உள்ள நியாயவிலை அங்காடியில் 700-க்கு மேல் குடும்ப அட்டைகள் இருந்தபோது முழுநேர அங்காடியாக வாரத்தில் 6 நாட்கள் செயல்பட்டு வந்தது. இக்கடையைச் சேர்ந்த வளப்பிரமன்காடு பகுதி 229 குடும்ப அட்டைதாரர்கள் 3 கி.மீ. தொலைவு சென்று அத்தியாவசியப் பொருட்கள் பெறுவது கடினமாக உள்ளது என மனு செய்ததால் அங்கு ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு வாரத்தில் 2 நாட்கள் செயல்படவும் சொர்ணக்காடு தாய்க்கடை 4 நாட்கள் செயல்படவும் ஆணையிடப்பட்டுள்ளது.

24—

**தொடக்க வேளாண்மை வங்கி**

**வினா எண் 11322—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சியில் உள்ள மூடப்பட்ட தொடக்க வேளாண்மை வங்கியை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கலைக்கப்பட்ட தொளசம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீளவும் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கடன்

**வினா எண் 11340—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பயிர்க்கடனாக வழங்கப்படும் அதிகபட்ச தொகை ரூ.35,000/-ஐ மேலும் உயர்த்த இவ்வரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பயிர்க்கடனாக வழங்கப்படும் அதிகபட்சத் தொகை தற்போது ரூ.50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.*

26—

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 11419—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, கரிச்சிபாளையம் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, கரிச்சிபாளையம் நியாய விலைக் கடை 829 குடும்ப அட்டைகளுடன் 1 கி.மீ. தொலைவிலுள்ள கரிச்சிபாளையம் எல்லையில் செயல்பட்டு*



*வருகிறது. கரிச்சிபாளையம் பகுதியில் 178 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகளும், தாய்க் கடைக்கும் பகுதி நேர கடைக்கும் இடையே குறைந்தது 2 கி.மீ. தொலைவும், இருக்க வேண்டுமென்ற வரையறைகள் பொருந்தாததால் கரிச்சிபாளையம் பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

27—

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 12795—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் சங்கம் விடுதிக்கு புதிய நியாயவிலைக் கடை ஏற்படுத்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், சொக்கம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள சங்கம் விடுதி நியாயவிலைக் கடை 482 குடும்ப அட்டைகளைக் கொண்டு சொக்கம்பட்டியில் செயல்பட்டு வருகிறது. 800-க்குக் குறையாத குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள நியாயவிலைக் கடைக்கு மட்டுமே, பகுதி நேரக் கடை அமைக்க ஆய்வு செய்யப்பட வேண்டும். சங்கம் விடுதியில் 125 குடும்ப அட்டைகளே உள்ளன. பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இவ்வரையறைகள் பொருந்தாததால் சங்கம் விடுதிக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

[2004 ஜூலை 31

28—

## தனி நியாய விலைக் கடை

**வினா எண் 12796 — டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி, கந்தர்வக்கோட்டை பேரூராட்சி, கொத்தகம் பகுதியில் தனி நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள கோவிலூர் நியாயவிலைக் கடை 740 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. கொத்தகம் பகுதியில் 165 குடும்ப அட்டைகள் மட்டும் உள்ளன. பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் தேவை என்ற வரையறை பொருந்தாததால், கொத்தகம் பகுதியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

29—

## கூட்டுறவு டீசல் பங்க் அமைத்தல்

**வினா எண் 13830—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் பெரும்பாலை மற்றும் மூங்கில்மடுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாயிகள் டீசல் வாங்க ஏதுவாக கூட்டுறவு டீசல் பங்க் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டீசல் பங்க் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

## நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 14135—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி, மேலச்செவல் நியாயவிலைக் கடைக்கு நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் மேலச்செவல் நியாயவிலைக் கடை, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. நியாய விலைக் கடைகளுக்கு, கூட்டுறவுத் துறை மூலம் நேரடியாக கட்டடங்கள் கட்டியளிக்கும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், ஊரக வளர்ச்சி முகமை மூலம் பல்வேறு திட்டங்களில் ஊராட்சிப் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடம் கட்டித்தரப்படுகின்றது. மேலச்செவல் நியாயவிலைக் கடை, பேரூராட்சிப் பகுதியில் இருப்பதால் மேற்சொல்லப்பட்ட அரசுத் திட்டத்தின்படி நியாய விலைக் கடை கட்டடங்கள் கட்டித்தர வாய்ப்பில்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்படி மேலச்செவல் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**31—**

## நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 14137—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, சொக்கலிங்கபுரம் (க) மேலச்செவல் நியாய விலைக் கடைக்கு நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*நியாய விலைக் கடைகளுக்கு அரசுத் திட்டங்களின்கீழ் கூட்டுறவுத் துறை மூலம் நேரடியாகக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் அமலில் இல்லை. தற்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ், ஊராட்சிப் பகுதியில் மட்டுமே நியாய விலைக் கடைகளுக்கான கட்டடம் கட்டப்படுகிறது. சொக்கலிங்கபுரம் நியாய விலைக் கடை, பேரூராட்சிப் பகுதியில் இருப்பதால் அங்கு அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.*

**32—**

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 14149—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு கிராமத்தில் பிள்ளையார்குப்பத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அரசு அமைத்திட முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், வடகைலாசம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கிவரும் மாளிகம்பட்டு நியாய விலைக் கடையைச் சேர்ந்த பிள்ளையார்குப்பம் பகுதியில் 175 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக் கடை அமைக்க 200-க்குக் குறையாத குடும்ப அட்டைகள் இருக்கவேண்டுமென்று அரசு வகுத்த வரையறை பொருந்தாததால் பிள்ளையார்குப்பம் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**33—**

## குளிர் சாதனக் கிடங்கு

**வினா எண் 14213—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்செங்கோடு விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ஒரு குளிர்சாதனக் கிடங்கு இந்நிதியாண்டில் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*உலர் ரக விவசாய விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகும் கொங்கணாபுரம் பகுதியில் குளிர்சாதனக் கிடங்கு அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**34—**

## பொது விநியோகக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 15419—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) வந்தவாசி தொகுதி, வெங்குன்றம் கிராமத்திற்கு பொது விநியோகக் கடைக்குக் கட்டடம் இல்லையென்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கிராமத்திற்கு பொது விநியோகக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், வந்தவாசி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்பட்டுவரும் வெங்குன்றம் நியாய விலைக் கடை ஜே.வி.வி.டி. கட்டடத்தில் 1-12-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

**35—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 15590—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், துலுக்கன்பட்டி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையின் மூலம் பொதுமக்களுக்கு உணவுப் பொருள்கள் சரிவர வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆணைகுளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் ஆணைகுளம் நியாய விலைக் கடையின் முதல் பகுதி நேரக் கடை துலுக்கன்பட்டியிலும், இரண்டாவது பகுதி நேரக் கடை சின்னம்மாள்புரத்திலும் செயல்பட்டு வருகின்றன. மேலேயுள்ள கடைகளுக்குரிய மாதாந்திர ஒதுக்கீடு முழுவதும் முழுமையாக நுகர்வு செய்யப்படுவதுடன் விநியோகம் முறையாக நடைபெற்று வருகிறது. துலுக்கன்பட்டி பகுதி நேரக் கடை சரியாக



2004 ஜூலை 31]

செயல்படவில்லையென்றோ, அத்தியாவசியப் பொருட்கள் சரியாக வழங்கப்படுவதில்லையென்றோ இதுநாள் வரை புகார்கள் எதுவும் பெறப்படவில்லை.

**36—**

## கொப்பரைக் கொள்முதல்

**வினா எண் 15734—திரு. டி. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, ஈரோடு மாவட்டங்கள் மற்றும் காங்கேயம் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து கொப்பரைக் கொள்முதல் செய்ததன் விளைவாக, அவ்விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பொருளாதார பாதிப்பு குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பாதிப்பு குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை, ஈரோடு மற்றும் காங்கேயம் பகுதிகளில் அரசு ஆதார விலைத் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.33/- வீதம் விவசாயிகளிடமிருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அச்சமயம் கொப்பரையின் சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.25/- லிருந்து ரூ.26/- வரையில் இருந்தது. எனவே, அரசு கொப்பரை கொள்முதலுக்கு அறிவித்த விலை சந்தை விலையைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. அரசு ஆதார விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரை கொள்முதல் செய்ததன் விளைவாக விவசாயிகளுக்குப் பொருளாதார பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

**37—**

## கூட்டுறவு அமைப்புகளைச் சீரமைத்தல்

**வினா எண் 16731—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

கூட்டுறவு அமைப்புகளைச் சீரமைத்து அவை நொடிந்து போகாமல் பாதுகாத்து வருவதற்கானச் சிறப்பு ஏற்பாடுகள் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளை அரசு உன்னிப்பாக கவனித்து அவை நொடிந்துபோகாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தேவைக்கு அதிகமாக பணியாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டிருப்பது அவை நொடிந்துபோக ஒரு முக்கிய காரணமாக இருந்து வருவதால், தற்போது அரசு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் அவற்றின் தேவைக்கேற்ப பணியாளர்களை நியமிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு விதிகளுக்கு ஒப்புதல் அளித்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் அலுவலகச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென அரசு அவ்வப்போது அறிவித்து வருவதுடன் அவற்றின் வியாபாரம் செழிப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. திறமையற்ற மற்றும் தவறான நிருவாகங்களினால் கூட்டுறவுச் சங்கங்கள் நொடிந்துபோகக் காரணமான நிருவாகம் மற்றும் அலுவலர்கள்மீது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தகுதியானவர்களுக்குக் கடன்கள் வழங்கவும், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கும், வங்கிகளின் மீதான கண்காணிப்பை மேம்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**38—**

## புகைப்பட அடையாள அட்டை

**வினா எண் 16736—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விரைவில் வரவிருக்கின்ற கூட்டுறவுத் தேர்தலில் ஆள் மாறாட்டத்தைத் தடுக்க உறுப்பினர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**39—**

## தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி

**வினா எண் 16904—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், மல்லப்பள்ளி ஊராட்சியில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், மல்லப்பள்ளி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**40—**

## கூட்டுறவுக் கடை

**வினா எண் 16910—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியம், மட்றப்பள்ளி பஞ்சாயத்துக்குட்பட்ட புதுப்பட்டு கிராமத்திற்கு புதியதாகக் கூட்டுறவுக்கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியம், பேரணாம்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் மேற்கத்தியனூர் நியாய விலைக் கடை 680 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. 1½ கி.மீ. தொலைவிலுள்ள புதுப்பட்டு பகுதியில் 70 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கத்தியனூர் தாய் நியாய விலைக் கடைக்கு ஏற்கெனவே மட்றப்பள்ளி பகுதியில் ஒரு பகுதி நேரக் கடை 440 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. 70 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள புதுப்பட்டு பகுதியில் இரண்டாவது பகுதி நேரக் கடை அமைத்தால் தாய் நியாய விலைக் கடையில் போதுமான குடும்ப அட்டைகள் இருக்காது. மேலும், பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். மேலும், இரு நியாய விலைக் கடைகளுக்குமிடையே 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டுமென்ற நிபந்தனைகள் நிறைவு பெறாததால் புதுப்பட்டு பகுதியில் இரண்டாவது பகுதி நேரக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**41—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 16911— திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, வெங்களாபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, மாடப்பள்ளி உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ், வெங்களாபுரம் ஊராட்சியில் ஒரு நியாய விலைக் கடை 583 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. வெங்களாபுரத்தில் முழுநேர நியாய விலைக் கடை செயல்படும்போது பகுதிநேரக் கடை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**42—**

## கூட்டுறவுச் சங்கப் பணியாளர் பணி நிரந்தரம் செய்தல்

**வினா எண் 17132— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி நிரந்தரம் செய்யப் படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களில் 8-7-1980-க்குப் பின், முறையற்ற வகையில் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக அரசு கவனமாக பரிசீலித்து அரசாணை (நிலை) எண் 86, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 12-3-2001-ல் உரிய ஆணைகள் வழங்கியுள்ளது. மேற்படி அரசாணையின்படி 8-7-1980-க்குப்பின் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் வேலைவாய்ப்பகம் மூலமின்றி முறையற்ற விதத்தில் பணி

[2004 ஜூலை 31

நியமனம் செய்யப்பட்டு 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவன (ஊழியர்களுக்கு நிரந்தர தகுதியளிக்கும்) சட்டத்தின்படி 11-3-2001 அன்று தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணி முடித்துள்ள பணியாளர்களின் பணிகளை 12-3-2001-லிருந்து வரன்முறைப்படுத்த பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**43—**

## கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் வழங்கல்

**வினா எண் 17135—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்குக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கக் கடன் வழங்கலாம் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நெறிமுறைகளின் அடிப்படையில் மண்ணின் தன்மை, நீர்வள ஆதாரம், நீரின் தன்மையைப் பொறுத்து கடன் வழங்கப்பட்டு வருகிறது.

**44—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 18017—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்கு உள்ளிட்ட சாலைப் பேட்டையில் நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்கு உள்ளிட்ட சாலைப்பேட்டையில் உள்ள 508 குடும்ப அட்டைகள் பேரணாம்பட்டு நகரத்தில் உள்ள கடைகளுடன் பின்வருமாறு இணைக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் நியாயவிலைக் கடை | 287 |
| 2. | வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் கற்பகம் கடை எண் 3 | 183 |
| 3. | வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் கற்பகம் கடை எண் 10 | 25 |
| 4. | பேரணாம்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் நகர கடை எண் 2 | 13 |
| | | 508 |

சாலைப்பேட்டை என்ற இடத்திற்கும், கற்பகம் கடை எண் 3, 10 மற்றும் பேரணாம்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் அத்தியாவசியப் பொருட்களைப்பெறும் கூட்டுறவு நியாயவிலைக் கடைக்குமிடையே உள்ள தொலைவு 1 கிலோ மீட்டருக்குக் குறைவாகவே உள்ளது. இரண்டு கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததால் சாலைப்பேட்டையில் பகுதி நேரக் கடை அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**45—**

## பகுதி நேர அங்காடி

**வினா எண் 18032—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செருபாலக்காடு ஊராட்சியில் பகுதி நேர அங்காடி தொடங்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், கெங்காதரபுரத்தில் 495 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடையைச் சேர்ந்த செருபாலக்காடு பகுதியில் 375 குடும்ப அட்டைகள் உள்ளன. செருபாலக்காடு பகுதி, கெங்காதரபுரம் நியாய விலைக் கடையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலையில் உள்ளது. செருபாலக்காடு பகுதிக்குக் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் கெங்காதரபுரம் தாய்க்கடையில் 120 குடும்ப அட்டைகள் மட்டுமே மிஞ்சும். பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மற்றும் தாய்க் கடைக்கும் பகுதி நேரக் கடைக்குமிடையே 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் பொருந்தாததால் செருபாலக்காடு பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**46—**

## தொடக்க வேளாண் வங்கிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 18175—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் ஊராட்சியிலும் ஒட்டங்காட்டிலும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும், ஒட்டங்காடு தொடக்க



வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும், குவிந்த நட்டத்தில் இயங்கி வருவதால் இவற்றிற்குக் கட்டடம் கட்டித்தரும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**47—**

## கிணறு ஆழப்படுத்த கடனுதவி

**வினா எண் 18925—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்தில் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டதால் அங்கு கிணறுகளை ஆழப்படுத்த அரசு அதிக அளவில் கடன் வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கியின் விதிமுறைகளின்படி 20 மீட்டர் ஆழத்திற்குள் உள்ள கிணறுகளுக்கு மட்டுமே கடன் வழங்கப்படுகிறது.

**48—**

## லேம்ப் சொசைட்டியில் கடுக்காய் விற்பனை

**வினா எண் 20378— திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை லேம்ப் சொசைட்டியில் கடுக்காய் விற்பனையில் ஏற்பட்டுள்ள முறைகேட்டினை அரசு விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை லேம்ப் சங்கத்தில் கடுக்காய் விற்பனையில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**49—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 21034—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், எருமைப்பட்டி, கமலநத்தம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு நியாயவிலைக் கடை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் சாமிசெட்டிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் போலனஹள்ளி நியாய விலைக் கடை 720 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையின் கட்டுப்பாட்டில் பங்குநத்தம் கொட்டாய் என்ற பகுதி நேரக் கடை 397 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. எருமைப்பட்டியில் 70 குடும்ப அட்டைகளும், கமலநத்தம் பகுதியில் 92 குடும்ப அட்டைகளும் உள்ளன. இப்பகுதிகளில் மொத்தம் 162 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக்கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற வரையறை பொருந்தாததால் எருமைப்பட்டி மற்றும் கமலநத்தம் பகுதிகளில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



**50—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 21499—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், துளசிப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், கந்தர்வக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பிசானத்தூர் நியாய விலைக் கடையிலுள்ள 371 குடும்ப அட்டைகளிலிருந்து 173 குடும்ப அட்டைகளைப் பிரித்து, துருசுப்பட்டியில் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க 21-3-2003–ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு ஆணை (டி) எண் 83–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. துருசுப்பட்டியில் பகுதிநேரக் கடை 2-6-2003 முதல் செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் துளசிப்பட்டி என்ற பகுதி ஏதும் இல்லை.

**51—**

**நியாய விலைக் கடைகள் விவரம்**

**வினா எண் 21506—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

*(அ) சேலம் மாவட்டத்தில் பெண்கள் குழுக்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் எத்தனை உள்ளன?*

*(ஆ) இந்தக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் 29-2-2004 வரை 10 நியாய விலைக் கடைகள் மகளிர் குழுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன.*

*(ஆ) சேலம் மாவட்டத்தில் உள்ள மகளிர் உதவி குழுக்களால் நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்த வாய்ப்புள்ள இடங்களை திட்ட அலுவலர், மகளிர் அமைப்புத் திட்டம் பரிந்துரையுடன் வரப்பெறும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**52—**

## நுகர்வோர் கூட்டுறவு இயக்கங்கள்

**வினா எண் 21645—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நுகர்வோர் கூட்டுறவு இயக்கங்களை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*நுகர்வோர் கூட்டுறவு இயக்கங்களை ஊக்கப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.*



2004 ஜூலை 31]

**53—**

## கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 22127—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல் மற்றும் ஊழல் செய்தவர்கள் மீண்டும் சங்கப் பதவிகளுக்கு வர வாய்ப்பில்லாத நிலையை உண்டாக்க சட்டம் கடுமையாக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*நடைமுறையிலுள்ள 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல் மற்றும் ஊழல் செய்தவர்கள், மீண்டும் சங்கப் பதவிகட்கு வருவது நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, இதற்காகப் புதிதாகக் கடுமையான சட்டம் எதுவும் இயற்றத் தேவையில்லை.*

**54—**

## பகுதிநேர கூட்டுறவுக் கடை

**வினா எண் 22156—திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், நீலோத்பாலாபுரம் கிராமத்தில் பகுதிநேரக் கூட்டுறவுக் கடை திறக்க செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், மீசரகாண்டபுரம் கூட்டுறவு நியாய விலைக் கடையிலிருந்து 263 குடும்ப அட்டைகளைப் பிரித்து நீலோத்பாலாபுரத்தில் பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு அது 22-2-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

**55—**

### தொடக்க வேளாண்மை வங்கி

**வினா எண் 22491—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, ஆதனூர் சரபோஜி ராஜபுரம் தொடக்க வேளாண்மை வங்கிக் கட்டடங்கள் கட்டி ஒரு ஆண்டாக திறக்காமலிருப்பதை உடனடியாகத் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஆதனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் சரபோஜி ராஜபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கட்டடங்கள் 5-10-2002 அன்று திறக்கப்பட்டுவிட்டன.

**56—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 22571—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி – காடாம்புலியூர் காந்தி நகர் காலனியில் நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள 711 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள காடாம்புலியூர் கடையிலிருந்து, கொஞ்சிக்குப்பம் மற்றும் பாவைக்குளம் சிற்றூர்களைச் சேர்ந்த 212 குடும்ப அட்டைகளைப் பிரித்து, கொஞ்சிக்குப்பம் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் 7-5-2002 அன்று ஆணையிட்டுள்ளார். காந்தி நகர் பகுதி, காடாம்புலியூர் தாய் நியாய விலைக் கடையிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பகுதிநேரக் கடை 2 கிலோ மீட்டர் தொலைவிலும், பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும் என்ற வரையறைகள் பொருந்தாததால் காந்தி நகர் குடியிருப்பில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**57—**

### மகளிர் தொழில் முனைவோர் கடன் பெறும் திட்டம்

**வினா எண் 22990—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தில் கடன் பெற என்னென்ன தகுதிகள் மற்றும் சான்றுகள் வழங்கப்பட வேண்டும்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு மகளிருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தில் கடன் பெற தகுதிகள் மற்றும் சான்றுகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

(ஆ) சேலம் மாவட்டத்தில் 11 மகளிர்க்கு தொழில் முனைவோர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### இணைப்பு

## 1. தகுதிகள்:

1. சிறு வணிகப் போக்குவரத்து தவிர்த்து சிறு தொழில் பிரிவில் அடங்கும் அனைத்து தொழில்கள் மற்றும் சேவைகள் துவங்கும் படித்த வேலையில்லாத மகளிர் கடன் பெற தகுதி பெற்றவர்கள்.

2. விண்ணப்பதாரர், தான் தெரிந்தெடுத்துள்ள தொழிலில் குறைந்தபட்ச பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர் அவரது தொழிலை அவருக்கு கடன் வழங்கும் வங்கியின் செயல் எல்லையில்தான் துவங்க/நடத்த வேண்டும்.

4. விண்ணப்பதாரர் கடன் வழங்கும் வங்கியில் ரூ.5/– செலுத்தி இணை உறுப்பினராக வேண்டும்.

5. விண்ணப்பதாரர் வங்கியில் நடப்பு கணக்கு துவக்கி அவரது வருமானத்தை இக்கணக்கில் இட்டு வைத்து வருவதுடன், அவரது கணக்கில் வங்கி நிர்ணயித்துள்ள அளவிற்கு நிலுவையை பராமரித்து வரவேண்டும்.

6. துவக்க உள்ள தொழிலுக்கு மாவட்ட தொழில்நுட்ப மையத்திடம் தொழில்நுட்ப–சான்று பெற வேண்டும்.

7. சிறு தொழில் முனைவோர் கடன் பெற்று வாங்கும் இயந்திரங்கள் மற்றும் உப பாகங்கள் ஆகியவற்றை வங்கிக்கு அடமானம் செய்து தர வேண்டும்.

8. விண்ணப்பதாரர் கடன் தொகைக்கு சமமான வில்லங்கம் இல்லாத அசையாச் சொத்தினை பிணையாகக் கொடுக்க வேண்டும். வங்கி ஒப்புக் கொள்ளக்கூடிய வருமானம் ஈட்டும் இருவர் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

9. விண்ணப்பதாரர் திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகிதம் அளவிற்கு விளிம்புத் தொகையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.



2004 ஜூலை 31]

## II. சான்றுகள்

1. திட்ட மதிப்பீடு

2. 5 ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் வருமானம்

3. சொத்து மதிப்பிற்கான கிராம நிர்வாக அலுவலர் சான்று

4. கட்டட வரைபடம் மற்றும் பொறியாளர் மதிப்பீட்டுப் பட்டியல் சான்று மற்றும் முழு விலாசத்துடன்

5. கட்டடத்திற்கும் சேர்த்து கடன் கோரினால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் கட்டட மதிப்பீட்டு பட்டியல்

6. மின்வசதி விவரம்

7. மாசுக் கட்டுப்பாடு வாரிய அனுமதி விவரம்

8. ஆதாரம் காட்டும் சொத்துக்குரிய நடப்பு ஆண்டிற்குரிய நிலவரி ரசீது/ வீட்டு வரி ரசீது

9. இயந்திர சாதனங்களுக்கான விலைப்பட்டியல்

10. ஈடுகட்டும் சொத்துக்கள் பேரில் 15 ஆண்டுகள் வில்லங்க சான்று பெற்றுக் கொடுக்க வேண்டும்.

11. சொத்து ஆதாரம் கொடுப்பவரின் சம்மதக் கடிதம்

12. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தவணை கடன் ஏதும் நிலுவையில்லையென சான்று பெற்றுக் கொடுக்க வேண்டும்.

13. வங்கியின் சட்ட ஆலோசகரிடமிருந்து கருத்துரு பெற வேண்டும்.

**58—**

### மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி அமைத்தல்

**வினா எண் 23015—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) பெரம்பலூர் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**59—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

**வினா எண் 23161—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலம் தொகுதியில் அ. வாசுதேவனூர் பஞ்சாயத்தில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**60—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

**வினா எண் 23165—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**61—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 23283—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, சிக்கானகுப்பம் கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, சிக்கானகுப்பம் கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் இருப்பதால் தற்போது புதிய கட்டடம் கட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

62—

## வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 23284—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் வட்டம், தோரணம்பதிகொரட்டி, வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தோரணம்பதிகொரட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

63—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 23310—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பாளைமூப்பன்பட்டி பஞ்சாயத்து, ரெட்டியப்பட்டி பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, பாணாமூப்பன்பட்டி ஊராட்சி, பாளைமூப்பன்பட்டி, தாய் நியாய விலைக் கடையில் 429 குடும்ப அட்டைகள் உள்ளன. 80 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள



ரெட்டியப்பட்டி குடும்ப அட்டைதாரர்கள் பாளைமூப்பன்பட்டி நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். ரெட்டியப்பட்டிக்கும், பாளைமூப்பன்பட்டிக்கும் இடையே 4 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. பாளைமூப்பன்பட்டி பஞ்சாயத்து என்று இப்பகுதியில் ஏதுமில்லை. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேரக் கடை திறந்தபின் தாய்க் கடையில் 500-க்குக் குறையாத குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் நிறைவு பெறாததால், ரெட்டியப்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

64—

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

**வினா எண் 23361— திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இந்தத் திட்டம் துவங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

65—

## கேளிக்கை வரி வசூல்

**வினா எண் 24842—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் நிதி நிலையில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், கேளிக்கை வரி சட்டப்படி வசூலிக்கப்படும் தொகையில் வழங்கப்படும் பங்கை இரண்டு மடங்காக உயர்த்தித்தர அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**66—**

## சுய வரி விதிப்பு முறை

**வினா எண் 24843—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரிகள் ஒரு கோடிக்கு மேல், விற்பனை ஒரு ஆண்டில் செய்தவர்கள் மட்டும் அலுவலர்களிடம் நேரில் கணக்குக் காட்டினால் போதும். அதற்குக் குறைவான விற்பனை செய்தவர்கள் அனுப்பும் பட்டியலை வைத்து வரி விதிக்க ஆணையிடப்பட்டதால் அரசு வருவாய் பாதித்து உள்ளதா என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், வருமானத்தைப் பெருக்க பழைய முறையை மீண்டும் கொண்டுவர அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சுய வரி விதிப்பு முறையினால் அரசுக்கு வரி வருவாய் இழப்பு ஏற்பட சாத்தியக்கூறு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**67—**

## மறு விற்பனை வரி விலக்கு

**வினா எண் 24950—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருந்துகளின் மேல் பல முனை வரி விதிக்கப்பட்டிருப்பதால் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதால் மருந்துகளின் மீது விதிக்கப்பட்ட பல முனை வரி நீக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

மருந்துப் பொருட்களுக்கு மறு விற்பனை வரியிலிருந்து அரசு ஆணை எண் 82, நாள் 1-7-2002-ன்படி முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**68—**

## கூட்டுறவுச் சங்க விதிகள்

**வினா எண் 26405—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரே வகையான கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகத்தால் துணை விதிகள் ஏற்படுத்துவதில் சங்கத்திற்குச் சங்கம் வேறுபாடுகள் உள்ளதைப் போக்கும் வகையில் ஒரே மாதிரியான துணை விதிகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் செயற் பதிவாளர்கள் அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் ஒரே மாதிரியான கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரே மாதிரியான மாதிரி துணை

விதிகள் வகுக்கப்பட்டு தொடர்புறுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சில வகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாதிரி துணை விதிகள் உருவாக்கும் பணி பரிசீலனையில் உள்ளது.

**69—**

**கூட்டுறவுச் சங்கக் கடன்**

**வினா எண் 26415—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவசாயிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க மானியத்துடன் கூடிய கடன் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அதிக அளவில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் விவசாயிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க நீண்ட காலக் கடன் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) நெறிமுறைகளுக்குட்பட்டு, நபார்டின் நிதியுதவியுடன் கடன் வழங்கப்படுகிறது. மேற்படி கடன்களுக்கு அரசு மானியம் அளிக்கும் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**70—**

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி**

**வினா எண் 26464—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கூட்டுறவு வேளாண்மை தொடக்க வங்கிகளிலும் காலிப் பணியிடமாகவுள்ள அனைத்து பணியிடங்களையும் நடப்பு ஆண்டில் நிரப்ப அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் காலிப் பணியிடம் ஏதுமில்லை. எனவே தற்போதைக்கு காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டிய அவசியம் எழவில்லை.

**71—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 26474—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிக்கிலி நியாய விலைக் கடையிலிருந்து கொல்லப்பட்டிக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி, பிக்கிலி நியாய விலைக் கடையிலிருந்து 118 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு மலையூர் பகுதியில் ஏற்கெனவே ஒரு பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது. கொல்லப்பட்டியில் பகுதிநேரக் கடை திறந்தால் பிக்கிலி தாய்க் கடையில் 343 குடும்ப அட்டைகளே மிஞ்சும். பிக்கிலி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 388 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள கொல்லப்பட்டி பகுதி 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய் நியாய

விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் இரண்டு நியாய விலைக் கடைகளுக்குமிடையே 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் ஆகிய வரையறைகள் நிறைவு பெறாததால் கொல்லப்பட்டியில் இரண்டாவது பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**72—**

## பொது விநியோகத் திட்டம்

**வினா எண் 26589—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம கூட்டுறவுக் கடைகளில் அனைத்து உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் விற்பனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவு மற்றும் விலைகளில் விநியோகிக்கப்படுகின்றன. தேவைப்படும்போது மக்களுக்குத் தேவையான வேறு சில பொருட்களும் கிராம நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**73—**

## வணிக வரி

**வினா எண் 28563—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படும் தங்கத்திற்கு பிற மாநிலங்களைவிட வணிக வரி கூடுதலாக இருப்பதால் தமிழ்நாட்டிற்கு வரும் தங்கத்தின் அளவு குறைந்து வருவது அரசு அறியுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தங்கத்திற்கு 31-1-2003 முதல் 1 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. இது சமச்சீர் தள வரி அளவில் விதிக்கப்படுகிறது. அனைத்து மாநிலங்களும் 1 விழுக்காடு விற்பனை வரி தங்கத்திற்கு விதிக்க வேண்டும் என மத்திய அரசு மாநிலங்களைக் கேட்டுள்ளது. அதன் அடிப்படையில் 0.5 விழுக்காடு என்றிருந்த விற்பனை வரியை 1 விழுக்காடாக உயர்த்தி 31-1-2003 முதல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டிற்கு வரும் தங்கத்தின் அளவு குறைய வாய்ப்பில்லை.

**74—**

## இணக்க வரி

**வினா எண் 29696—திரு. செ. வெங்கடாஜலம் :** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விற்பனை வரி ஏய்ப்பினைத் தடுக்க தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவுச் சான்று எண்கள் பெற்ற வணிகர்கள் அனைவரும் குறைந்தபட்ச இணக்க வரி (Compound tax) கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், பிரிவு 3(1)-ன்படி, ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் மூன்று இலட்சத்திற்கும் மேல் உள்ள வணிகர்கள் அனைவரும் பதிவு செய்யப்பட்டு வரி விதிப்புக்கு உட்படுகின்றனர். சிறு வணிகர்கள், ஆண்டு விற்பனைத் தொகை ரூ.3 இலட்சம் வரை இருக்குமானால் அவர்கள் விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய அவசியமில்லை. மேலும், இதே சட்டப் பிரிவு 7-E ன்படி ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் மூன்று லட்சத்திற்கும் குறையாத ஆனால் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கும் மேற்படாத வணிகர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில்

[2004 ஜூலை 31

(option) இணக்க வரி செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து வணிகர்களும் விற்பனை வரி/ இணக்க வரி செலுத்தி வருகின்றனர்.

(ஆ) கேள்வி எழாது.

**75—**

## கூட்டுறவு அச்சகப் பணியாளர் நலன்

**வினா எண் 30135—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வு மற்றும் பணப்பயன் உடனே கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகம் நட்டத்தில் இயங்கி வருவதால் அதில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வு அளிக்கவோ, பணப்பயன் அளிக்கவோ இயலாத நிலை உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**76—**

## பெட்ரோல் விற்பனை

**வினா எண் 30140—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் கூட்டுறவுத் துறையின் மூலம் பெட்ரோல் விற்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதியில் கூட்டுறவுத் துறையின் மூலம் பெட்ரோல் விற்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**77—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 30141—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பலவற்றில் செயலாளர்கள் முறைகேடு செய்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக 4 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 9 நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**78—**

## மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர் ஊதிய நிர்ணயம்

**வினா எண் 30291—டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1999-ல் மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு ஊதியம் (settlement) நிர்ணயம் செய்யப்படாதது ஏன்?

(ஆ) இதனால் எத்தனை பணியாளர்கள் பயன்பெறுவர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மாவட்ட மத்திய கூட்டுறவு பணியாளர்களின் ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்து அரசாணை எண் 220, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 24-6-2003-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டது.

(ஆ) இதனால் 16 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் சுமார் 4,346 பணியாளர்கள் பயன்பெறுவர்.

**79—**

## நியாய விலை கிளைக் கடை

**வினா எண் 30313—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தங்குழி மேலூருக்கு நியாய விலை கிளைக் கடை அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தங்குழி நியாய விலைக் கடை நாங்குநேரி-ராதாபுரம் வட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் 963 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. தாய்க் கடையிலிருந்து ½ கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கூத்தங்குழி மேலூர் பகுதியில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய்க் கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையே 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட வரையறைகள் பொருந்தாததால் கூத்தங்குழி மேலூர் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



**80—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 30727—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில், காடாம்புலியூர் தாய் நியாய விலைக் கடையிலுள்ள 88 குடும்ப அட்டைகளுடன் இருக்கும் பாவைக்குளம் மற்றும் கொஞ்சிக்குப்பம் பகுதியைச் சேர்ந்த 124 குடும்ப அட்டைகளைப் பிரித்து 212 குடும்ப அட்டைகளுடன் கொஞ்சிக்குப்பம் மெயின்ரோட்டில் பாவைக்குளம் சத்தியஞான சபைக்கு அருகில் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் 7-5-2002 அன்று ஆணையிடப்பட்டு 1-8-2002 முதல் பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது. பாவைக்குளம் பகுதியைச் சேர்ந்த 88 குடும்ப அட்டைகள் இணைத்து கொஞ்சிக்குப்பம் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டதால் பாவைக்குளம் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**81—**

## விற்பனை வரி வசூல்

**வினா எண் 30818—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனை வரியை வசூலித்து அரசு வருவாயைப் பெருக்க நிர்வாக இயந்திரத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரத்தை அரசு தெரிவிக்குமா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) 2002-2003 ஆம் ஆண்டில் வணிக வரிகள் வசூலில் 15% அதிகரித்துள்ளது. தற்போதைய நிர்வாக இயந்திரம் திறமையுடன் செயல்பட்டதன் விளைவுதான் இது.*

*(ஆ) தற்போதைய நிர்வாகமே நிறைவுடன் செயல்படும் நிலையிலும், புதிய பணியிடங்களுக்கு அரசின் தடையாணை உள்ளபடியாலும் வணிக வரித் துறை இயந்திரத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**82—**

## வரி விதிப்பு ரத்து செய்தல்

**வினா எண் 30819—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விவசாய விதை பொருள் மற்றும் இடுபொருள் மீதான வரி விதிப்பை ரத்துச் செய்ய அரசிடம் கருத்துரு உள்ளதா?*

*(ஆ) அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விவசாய விதை பொருள் மற்றும் இடுபொருள் அனைத்திற்கும் 1959 ஆம் ஆண்டின், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மூன்றாம் அட்டவணை 'ஆ' பிரிவு, வரிசை எண் 7-ன்படி முழு வரி விலக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது.*

**83—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 30862—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

*(அ) வால்பாறையிலுள்ள காஞ்சமலையில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், காஞ்சமலை தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் 400 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இப்பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகத்தினர், அந்தந்த இடங்களிலேயே அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்து வருவதால், காஞ்சமலைப் பகுதியில் தனியாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

**84—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 31541—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டம், கொண்டம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த பாம்பாறு அணையில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டம், கொண்டம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த பாம்பாறு அணை பகுதியில் 110 குடும்ப அட்டைகள் உள்ளன. பாம்பாறு அணை பகுதி கொண்டம்பட்டி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பகுதிநேரக் கடை அமைக்க*

[2004 ஜூலை 31

*குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் தாய்க் கடைக்கும், பகுதிநேரக் கடைக்கும் இடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் பாம்பாறு அணையில் பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**85—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 31563—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கல்பட்டு தொகுதி, நென்மேலி கிராமத்தில் இயங்கும் பகுதிநேர நியாய விலைக் கடையினை மாற்றி முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, நென்மேலி நியாய விலைக் கடை 368 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேரக் கடையாக செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் இணைக்கப்பட்டிருந்த மலாலிநத்தம் பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டு 276 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடையாக செயல்பட்டு வருகிறது. நென்மேலி பகுதியில் உள்ள நியாய விலைக் கடை முழுநேரக் கடையாகத்தான் செயல்பட்டு வருகிறது.*

**86—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 31994—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட கும்பிகுளம் ஊராட்சி, திருநாராயணபுரம் (எ) கன்னங்குளம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சீலத்திகுளம் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையில் 650 குடும்ப அட்டைகள் உள்ளன. ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருநாராயணபுரம் (என்னும்) கன்னங்குளம் பகுதியைச் சேர்ந்த 39 குடும்ப அட்டைதாரர்கள் சீலத்திகுளம் கிராமத்திலுள்ள தாய் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். பகுதிநேரக் கடை அமைக்க இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் தாய்க் கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இருக்க வேண்டிய தொலைவு குறித்த வரையறைகள் நிறைவு பெறாததால் திருநாராயணபுரம் என்கிற கன்னங்குளம் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

**87—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 31995—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், பழவூர் ஊராட்சி, கே.சி. பழவூர் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், கே.சி. பழவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பழவூர் நியாய விலைக் கடையில் 966 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தாய்க் கடையிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கே.சி. பழவூர் பகுதியில் 410 குடும்ப அட்டைகள் உள்ளன. 15-10-1998 ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 211-ல் வகுக்கப்பட்ட வரையறைகளில் தாய்க் கடைக்கும், பகுதிநேரக் கடைக்கும் இடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்ற வரையறை நிறைவு பெறாததால், கே.சி. பழவூர் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**88—**

## தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம்

**வினா எண் 32806—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மத்திய அரசின் கூட்டுறவு சட்டத்தை, தமிழகத்தில் கொண்டுவரும் திட்டம் அரசின் கொள்கை அளவில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கூட்டுறவுச் சங்கங்களுக்கான மத்திய அரசின் மாதிரி கூட்டுறவு சட்டத்திலுள்ள சிறப்பு அம்சங்களை பரிசீலித்து இப்பொழுது அமலில் இருக்கிற 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*



**89—**

## மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அமைத்தல்

**வினா எண் 32809—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், நெ.2 கரியமாணிக்கம் ஊராட்சி, சிறுகாம்பூரில் திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை வங்கி அமைத்துத் தர அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**90—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 32816—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கந்திலி ஊராட்சி, மேற்கத்தியனூர் கிராமத்தில் நியாய விலைக் கடை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கந்திலி ஊராட்சியில் மேற்கத்தியனூர் என்ற கிராமம் இல்லை. ஆனால்*

[2004 ஜூலை 31

நாட்ராம்பள்ளி சட்டமன்ற தொகுதி, திருப்பத்தூர் வட்டம், பேராம்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் மேற்கத்தியனூர் என்ற கிராமத்தில், 660 குடும்ப அட்டைகளைக் கொண்ட ஒரு முழுநேரக் கடை இயங்கி வருகிறது. எனவே மேற்கத்தியனூர் பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

**91—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 32817—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், லக்கி நாயக்கன்பட்டி ஊராட்சியில் ஜல்லியூர் கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி சட்டமன்ற தொகுதி, குனிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் லக்கி நாயக்கன்பட்டி நியாய விலைக் கடையில் ஜல்லியூர் கிராம மக்கள் பொருட்கள் பெற்று வருகின்றனர். 544 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்படும் லக்கி நாயக்கன்பட்டி தாய் நியாய விலைக் கடைக்கு கிழக்கு பதனவாடியில் 218 குடும்ப அட்டைகளுடனும் பல்லப்பள்ளி பகுதியில் 318 குடும்ப அட்டைகளுடனும் இரண்டு பகுதிநேரக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. தாய்க் கடையிலிருந்து 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஜல்லியூரில் 120 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும் ஒரு நியாய விலைக் கடைக்கு மூன்று பகுதிநேரக் கடைகள் திறக்க வழிவகை இல்லை.



2004 ஜூலை 31]

**92—**

**கூட்டுறவு பெட்ரோல் பங்க்**

**வினா எண் 33514—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் கூட்டுறவு பெட்ரோல் பங்க் தொடங்கப்படும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் பெட்ரோல் பங்க் தொடங்கப்படும் எண்ணம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**93—**

**தொடக்க வேளான்மைக் கூட்டுறவு வங்கி**

**வினா எண் 34039— திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலாபகரமாக இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை?

(ஆ) நட்டத்தில் இயங்கும் வங்கிகளை அருகிலுள்ள வங்கிகளோடு இணைக்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தணிக்கை முடிக்கப்பெற்ற இலாபகரமாக இயங்கும் வங்கிகளின் நிலை பின்வருமாறு உள்ளது:*

| வருடம் | தணிக்கை முடிக்கப் பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள். | இலாபத்தில் இயங்குபவை. | நட்டத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள். |
|---|---|---|---|
| 1999-2000 | 4012 | 409 | 3603 |
| 2000-2001 | 3799 | 405 | 3394 |
| 2001-2002 | 3526 | 396 | 3130 |
| 2002-2003 | 890 | 179 | 711 |

*(ஆ) இல்லை.*

**94—**

## கூட்டுறவுப் பண்டக சாலை

**வினா எண் 34455—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவுப் பண்டகசாலை நிறுவனத்தின் மூலம் தரமான பொருள்கள் விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*ஆம்.*

**95—**

## விற்பனை வரி விதிப்பு

**வினா எண் 35737—திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வெள்ளை மண்ணெண்ணெய், கொச்சி மற்றும் மங்களூர் துறைமுகங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு கொண்டுவரப்படும்போது 2.5 சதவிகிதம் விற்பனை வரி விதிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

*வெள்ளை மண்ணெண்ணெய்க்கு 21-3-2003 முதல் 2.5 விழுக்காடு விற்பனை வரி விதிக்கப்படுகின்றது.*

**96—**

## நியாய விலைக் கடை விற்பனை

**வினா எண் 35745—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் வேட்டிகளும், சேலைகளும் நிரந்தரமாக நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யலாம் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் வேட்டி, சேலைகள் நிரந்தரமாக கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

**97—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 36936—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, இரும்பு பாலம் கிராமத்திற்கு நியாய விலைக் கடை கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, இரும்பு பாலம் கிராமத்திற்கு தனியே நியாய விலைக் கடை இல்லை. இக்கிராமத்திலுள்ள நியாய விலைக் கடை குன்னமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் குன்னமலை கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைக்கும் இரும்பு பாலம் கிராமத்திற்கும் இடையே உள்ள தொலைவு 1 கி.மீ. மேற்படி அங்காடி 636 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வங்காடி 1998 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும் இரும்பு பாலம் பகுதியில் 82 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இரும்பு பாலம் கிராமத்திற்கு தனியாக நியாய விலைக் கடை இல்லை. எனவே, இரும்பு பாலம் கிராமத்திற்கு தனியாக கட்டடம் கட்டித் தரும் அவசியம் எழவில்லை.





**98—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 37060—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், ஏவூர் ஊராட்சி பகுதிகளுக்கு நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், ஏவூர் ஊராட்சி பகுதியில் ஏவூர், கோட்டூர் மற்றும் கொடுந்துறை ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.*

**99—**

## போலி சான்றிதழ் மூலம் பணி நியமனம்

**வினா எண் 37321—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் போலி சான்றிதழ் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**100—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 37858—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், ஊ. ரெட்டிப்பட்டி ஊராட்சி, பெரியார் நகர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் ஊத்தங்கரை நகரில் கடை எண் 1, 1,010 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த தாய்க் கடைக்கு 321 குடும்ப அட்டைகளுடன் சென்னப்பநாய்க்கனூரில் பகுதிநேரக் கடை புதன், சனி ஆகிய இரு நாட்களில் இயங்கி வருகிறது. ஊ. ரெட்டிப்பட்டி கிராமத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் ஊத்தங்கரை சி.எம்.எஸ் கடை எண் 1 மற்றும் ஊத்தங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள நியாய விலைக் கடை எண் 1, ஆகியவற்றில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். ஊ. ரெட்டிப்பட்டி கிராமத்தில் 160 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. ஊத்தங்கரையிலிருந்து ஊ. ரெட்டிப்பட்டி கிராமம் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கிராமத்திலிருந்து 1½ கி.மீ. தொலைவில் சென்னப்பநாய்க்கனூர் பகுதி உள்ளது. மேலும் ஒரு பகுதிநேரக் கடை ஏற்கெனவே சென்னப்பநாய்க்கனூர் கிராமத்தில் 1½ கி.மீ. தொலைவில் செயல்பட்டு வருவதாலும், அப்பகுதியில் 160 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், பகுதிநேரக் கடையுடன் இணைக்கப்பட வேண்டிய குடும்ப*





*அட்டைகள் மற்றும் இரு கடைகளுக்கும் இடையே இருக்க வேண்டிய தொலைவு குறித்த நிபந்தனைகள் நிறைவு பெறாததாலும், ஊ. ரெட்டிப்பட்டி கிராமத்தில் மேலும் ஒரு பகுதிநேரக் கடை துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

**101—**

## கூட்டுறவுச் சங்கக் கடன் தள்ளுபடி செய்யும் திட்டம்

**வினா எண் 38389—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களில் வசூலிக்க முடியாத கடன்களை கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

**102—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 40607—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் அனைத்து நியாய விலைக் கடைகளையும் மயிலாடுதுறை மொத்த கூட்டுறவுப் பண்டகசாலை (எம்.சி.டபுள்யூ. எஸ்.) கீழ் செயல்பட வைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி வட்டத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளையும் மயிலாடுதுறை மொத்த கூட்டுறவுப் பண்டகசாலை நிர்வாகமே ஏற்று நடத்த சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**103—**

**கூட்டுறவு நிறுவனங்கள் தேர்தல் பணி**

**வினா எண் 42554—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் தேர்தல் நடத்தும் பணி அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த நீதிமன்ற வழக்கு முடிந்தவுடன் விரைவில் நடத்தப்படும்.*

**104—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 42593—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், மஞ்சம்பட்டி ஊராட்சியில் சுமார் 500 குடும்ப அட்டைகள் உள்ள மஞ்சம்பட்டியில் கட்டப்பட்ட நியாய விலைக் கடை இயங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*மஞ்சம்பட்டியில் இயங்கிவரும் நியாய விலைக் கடையை சீகுப்பட்டி பகுதியில் புதியதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு மாற்றினால் மஞ்சம்பட்டி பகுதியைச் சேர்ந்த 392 குடும்ப அட்டைதாரர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதுடன் பொது மக்களிடம் பலத்த எதிர்ப்பு மற்றும் மறியல் போராட்டம் போன்றவை உருவாக வாய்ப்புள்ளதால் மஞ்சம்பட்டி நியாய விலைக் கடையை சீகுப்பட்டியில் புதியதாகக் கட்டப்பட்ட நியாய விலைக் கடை கட்டடத்திற்கு மாற்ற இயலாது.*

**105—**

**கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்**

**வினா எண் 42842—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வுபெறும்போது அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வங்கிகள் மற்றும் இதர வகை கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

106—

## கடன் ரத்து செய்யும் திட்டம்

**வினா எண் 42846—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 1970 ஆம் வருடம் கிணறு வெட்ட, ஆழப்படுத்த மற்றும் நிலச் சீர்திருத்தம் செய்ய வழங்கப்பட்ட கடன்களை ரத்து செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செயல்படுத்தப்படமாட்டாது.

107—

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

**வினா எண் 44369—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) கடந்த 2003 ஆம் ஆண்டு உறுப்பினர்களுக்கு எத்தனை சதவீத பங்கு ஈவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 30 ஆகும்.

(ஆ) 2003 ஆம் ஆண்டு உறுப்பினர்களுக்கு அதிகபட்சமான 14 விழுக்காடு பங்கு ஈவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.



108—

## நியாய விலைக் கடை

**வினா எண் 48278—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 5வது வார்டு அனிச்சம்பாளையத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர கடையாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்கீழ் செயல்படும் நியாயவிலைக் கடை எண் 4-ல் உள்ள 1070 குடும்ப அட்டைகளிலிருந்து 325 குடும்ப அட்டைகளை பிரித்து அனிச்சம்பாளையத்தில் ஒரு பகுதி நேரக் கடை திறக்க நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டு 10-7-2002 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது குடும்ப அட்டைகள் குறைந்து அனிச்சம்பாளையம் பகுதிநேரக் கடை 319 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. முழுநேரக் கடை அமைக்க குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால், அனிச்சம்பாளையம் பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்றுவதற்கு இயலாது.

109—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 48324—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், வெலக்கல்நத்தம் ஊராட்சியில் முகமதாபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*[illegible] ற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, [illegible] ப்பட்டை ஒன்றியத்தில் குரும்பர் முழுநேரக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து குன்னிச்சியூர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை 367 குடும்ப அட்டைகளுடன் திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. குன்னிச்சியூர் பகுதியிலிருந்து 2 கிலோ மீட்டருக்கும் குறைவான தொலைவில் உள்ள முகமதாபுரம் பகுதியில் 88 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. முகமதாபுரம் பகுதி மக்கள் குன்னிச்சியூர் பகுதிநேரக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். பகுதிநேரக் கடை அமைக்க 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் இரு நியாய விலைக் கடைகளுக்குமிடையே இருக்க வேண்டிய தொலைவு குறித்த நிபந்தனைகள் நிறைவு பெறாததாலும், குன்னிச்சியூர் பகுதிநேரக் கடையின் ஒரு பகுதியாக முகமதாபுரம் உள்ளதால் அங்கு பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**110—**

**பகுதிநேர அங்காடி**

**வினா எண் 51571—திரு. அ. நடராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அய்யம்பேட்டை ஊராட்சி, கோயில்பத்திற்கு பகுதிநேர அங்காடி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், கூத்தனூர் பகுதியில் 582 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை இயங்கி*





*வருகிறது. கூத்தனூர் நியாய விலைக் கடையிலிருந்து 1.5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள கோயில்பத்து பகுதியில் 30 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. கோயில்பத்து பகுதி மக்கள் கூத்தனூர் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் தாய்க் கடைக்கும், பகுதிநேரக் கடைக்கும் இடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும். ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் கோயில்பத்து பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**111—**

**சந்தனக் கிடங்கு**

**வினா எண் 1107—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சந்தனக் கிடங்கில் தீ விபத்து காரணமாக எரிந்துபோன சந்தனக் கட்டையின் மதிப்பு எவ்வளவு?*

*(ஆ) தவறு செய்தவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனக் கோட்டம் கட்டுப்பாட்டிலுள்ள கூடுதல் சந்தன மரக் கிடங்கில் 16-3-1997 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்து போன சந்தனக் கட்டைகளின் மதிப்பு அப்போதைய மாவட்ட வன அலுவலரின் அறிக்கையின்படி ரூ.68.45 கோடி ஆகும். மேலும், திரு. கே.எஸ்.எஸ்.வி.பி.ரெட்டி, இ.வ.ப. துணை வனப் பாதுகாவலரின் அறிக்கையின்படி தீ விபத்தால் ஏற்பட்ட இழப்பு ரூ.193.97 கோடி ஆகும். எனவே, எரிந்து போன சந்தனக் கட்டைகளின் உண்மையான மதிப்பு குறித்து மதிப்பீடு செய்ய வேலூர் வனப் பாதுகாவலர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையின்மீது திருப்பத்தூர் மாவட்ட தற்போதைய வன அலுவலர் அளித்துள்ள அறிக்கையின்படி திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கில் 82,201 சந்தன மரங்கள் வைக்கப்பட்டன என்றும்*

அவற்றில் 81,207 மரங்கள் எரிந்து போயிற்று என்றும், அதன் மதிப்பு ரூ.190.418 கோடியாகும் என முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

(ஆ) அப்போதைய மாவட்ட வன அலுவலருக்கு குற்றத்தாள் வழங்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும் சார்நிலைப் பணியாளர்கள் 13 பேர்மீது தமிழ்நாடு சிவில் பணியாளர்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி எண் 17 (ஆ)-ன்கீழ் குற்றத்தாள் வழங்கப்பட்டு நடவடிக்கை தொடரப்பட்டு வருகின்றது. இதைத் தவிர கிரிமினல் குற்றங்களுக்காக 6 பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். இவர்கள்மீது தமிழ்நாடு குற்றப் புலனாய்வுப் பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**112—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 2729—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பாலிதீன் பொருட்களை உற்பத்தி செய்வதை தடை செய்ய அரசு திட்டம் வைத்துள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அரசின் பரிசீலனையில் உள்ளது.

**113—**

## வன விலங்கு பாதுகாப்பு

**வினா எண் 3846—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூரில் வன விலங்குகளும், மயில்களும் அதிகமாக அழிவதைத் தடுத்துப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள வனப் பகுதிகளில் மயில்கள் வேட்டையாடப்படுதல் மற்றும் கொல்லப்படுதல் போன்ற நிகழ்வுகள் ஏதும் சமீபத்தில் நடைபெறவில்லை. வன உயிரின (பாதுகாப்புச்) சட்டம், 1972, ஷெட்யூல்–1 முதல் 4 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள மயில்கள் உட்பட அனைத்து வன விலங்குகளும் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூரில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**114—**

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு

**வினா எண் 3849—திரு. ஆஸ்டின், திரு. சி. ஞானசேகரன் மற்றும் செல்வி க. பாலபாரதி:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர், திண்டுக்கல் மாவட்டங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் விளைநிலங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று 2001 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற ஆணையின்படி அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

உச்ச நீதிமன்றம் 28-8-1996 அன்று டபிள்யூ.பி. (சிவில்) எண் 914/91-ன்கீழ் வழங்கிய உத்தரவின்படி சுற்றுச்சூழல் பாதிப்பு (குறைப்பு மற்றும் நஷ்டஈடு வழங்குதல்) ஆணையம் மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணையம் தனது அறிக்கையில், வேலூரில் 29,153 நபர்கள்/குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு நஷ்ட ஈட்டுத்

தொகை ரூ.26,82,02,293/- எனவும் இவற்றை 517 தோல் தொழிற்சாலைகளிடமிருந்து வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், மேற்கூறிய ஆணையமானது திண்டுக்கல் பகுதியில் பாதிக்கப்பட்ட சுற்றுச்சூழலை திரும்பப் பெறுவதற்கான திட்டத்தை வகுத்து, அந்த திட்டத்தைச் செயல்படுத்த தேவையான திட்ட மதிப்பீடு தொகையான ரூ.24.57 இலட்சமாக கணக்கிட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு (தடுப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை வழங்குதல்) ஆணையம் மேற்குறிப்பிட்டபடி கணக்கிட்ட மொத்த சுற்றுச்சூழல் இழப்பீட்டுத் தொகை வசூல் செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் வேலூர் மாவட்டம் அவர்களின் 12-12-2002 ஆம் தேதி நிலவரப்படி ஈட்டுத் தொகை வசூலித்த விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1. விவசாயிகளுக்கு, வழங்க நிர்ணயம் செய்யப்பட்ட ஈட்டுத் தொகை | – ரூ.26,82,02,293/– |
| 2. மாசு மீட்புத் தொகை | – ரூ. 3,65,99,976/– |
| 3. மொத்தம் வசூலிக்க வேண்டிய தொகை | – ரூ.30,48,02,269/– |
| 4. இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை | – ரூ.7,70,61,076/– |
| 5. வசூல் சதவீதம் | – 25% |

மேலே வசூலிக்கப்பட்ட 25% ஈட்டுத் தொகையில் முதல் கட்டமாக 29 விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 25-11-2002 அன்று விவசாயிகளுக்கு சேர வேண்டிய ஈட்டுத் தொகையில் 25% முதல் தவணையாக வழங்கப்பட்டது. இதர விவசாயிகளுக்கு ஈட்டுத் தொகை வழங்க மாவட்ட நிர்வாகம் தக்க ஏற்பாடு செய்துள்ளதாக வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் 6-2-2003 ஆம் தேதிய நிலவரப்படி ஈட்டுத் தொகை வசூலித்த விவரம் பின்வருமாறு:—



**திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் வசூலிக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை**

| வ. எண். | விபரம். | பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகை. | சுற்றுச்சூழல் நிவாரணம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1. | கேட்பு | ரூ.3,93,48,613/– | ரூ.24,56,997/– | ரூ.4,18,04,753/– |
| 2. | வசூல் | ரூ.59,68,500/– | ரூ.16,21,190/– | ரூ. 75,89,690/– |
| 3. | நிலுவை | ரூ.3,33,70,113/– | ரூ.8,35,807/– | ரூ.3,42,05,920/– |
| 4. | மொத்த தோல் தொழிற்சாலைகள் | | | 107 |
| 5. | இழப்பீட்டுத் தொகை செலுத்திட வேண்டிய தோல் தொழிற்சாலைகள் எண்ணிக்கை | | | 107 |
| 6. | இதுவரை இழப்பீட்டுத் தொகை செலுத்திடாத தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | | | 33 |
| 7. | இழப்பீட்டுத் தொகை செலுத்திட உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ள தொழிற்சாலை எண்ணிக்கை | | | இல்லை |
| 8. | பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு/ விளைநிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாததற்கு காரணம் | | | இல்லை |

மேலும், தனது அறிக்கையில் 25% நிலுவை வசூல் ஆன உடன் விவசாயிகளின் ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

[2004 ஜூலை 31

**115—**

### வன விலங்கு சரணாலயம்

**வினா எண் 6967—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 'வன விலங்கு சரணாலயம்' அமைப்பதற்கு அரசு தேவையான திட்டம் வைத்துள்ளதா?*

*(ஆ) கோதையாறு மேல்தங்கல் அருகிலுள்ள முத்துக் குளிவயலில் விலங்குகள் சரணாலயம் அமைக்க நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காப்புக்காடுகள்* (Reserve Forests) *அனைத்தும் உள்ளடக்கிய கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம் அமைக்க வன உயிரின (பாதுகாப்புச்) சட்டம், 1972, பிரிவு 18(1)-ன்படி அறிவிப்பு செய்து அரசு ஆணை (நிலை) எண் 152, சுற்றுச்சூழல் வனத் துறை, நாள் 16-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கோதையாறு மேல்தங்கல் அருகிலுள்ள முத்துகுளிவயல் பகுதியும் இதில் அடங்கும். இறுதி அறிவிக்கை செய்வதற்கான செயற்குறிப்பு முதன்மை தலைமை வனப் பாதுகாவலரிடம் கேட்கப்பட்டுள்ளது. அச்செயற்குறிப்பு கிடைக்கப்பெற்றதும் இறுதி அறிவிக்கை வன உயிரின (பாதுகாப்புச்) சட்டம், 1972 பிரிவு 26(ஏ)-ன்கீழ் வெளியிடப்படும்.*

**116—**

### வனப் பாதுகாப்பு

**வினா எண் 7377—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

*ராஜபாளையம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள தேக்கு மற்றும் சந்தன மரங்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள தேக்கு மற்றும் சந்தன மரங்களைப் பாதுகாக்க இவ்வரசால் வனப் பாதுகாப்புப் படை/ துப்பறியும் பறக்கும் படை/வனக் காவல் நிலையங்கள் /சுழல் தணிக்கைச் சாவடிகள் ஆகியவற்றில் எது எந்த இடத்திற்கு அவசியமோ, அதற்கு தகுந்தாற்போல் போதிய பணியாளர்களுடன் அமைக்கப்பட்டு பாதுகாப்புப் பணிகள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

**117—**

### புலிகள் காப்பகம்

**வினா எண் 9093—திரு. எம். சக்திவேல் முருகன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் மலைப் பகுதிகளிலுள்ள காரையார், சேர்வலார், லோயர் கேம்ப், காணிக்குடியிருப்பு, மயிலாறு சானல் பகுதிகளில் பல வருடங்களாக வசித்துவரும் மக்களுக்கு "புலிகள் காப்பகம்" வரும்முன் இருந்த அதே அடிப்படை உரிமைகள் பறிக்காமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*பாபநாசம் மலைப் பகுதிகளில் உள்ள காரையார், சேர்வலார், லோயர் கேம்ப், காணிக்குடியிருப்பு, மயிலாறு சானல் பகுதிகளில் பல வருடங்களாக வசித்துவரும் மக்களுக்கு "புலிகள் காப்பகம்" வரும்முன் இருந்த அடிப்படை உரிமைகள் ஏதும் தற்போது பறிக்கப்படவில்லை.*

[2004 ஜூலை 31

118—

## நட்சத்திர ஆமைகள்

**வினா எண் 10465—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் நட்சத்திர ஆமைகள் கடத்தலில் ஈடுபட்டவர்கள்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சென்னையில் நட்சத்திர ஆமைகள் கடத்தலில் ஈடுபட்டது தொடர்பாக 2001–2002 ஆம் ஆண்டில் நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் இரண்டு வழக்குகளுக்கு இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்ற இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. மேலும், தற்போது விமான நிலையம்/இரயில் நிலையங்களில் வனச் சரகர் தலைமையிலான குழுவினரால் திடீர் நடவடிக்கைகள் மேற்கொண்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

119—

## காடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 11990—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காடு வளர்ப்புத் திட்டத்திற்கென வெளிநாட்டின் உதவியை அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் செயற்படுத்தும்போது, சேரன்மகாதேவி தொகுதியிலும் செயற்படுத்தப்படுமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி அருகில் உள்ள புலிகள் சரணாலயத்தைச் சார்ந்ததாகும். வனப் பகுதியானது புலிகள் சரணாலயமாக உள்ளதால் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமம் ஏதும் தேர்வு செய்யப்படவில்லை. தரிசு நிலங்களை பசுமையாக்கும் இனத்தின்கீழ் ஆற்றுப்படுகை மற்றும் தரிசு நிலப்பகுதிகளில் மரம் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

120—

## சமூகக் காடுகள்

**வினா எண் 12155—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள சமூகக் காடுகளின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) அதை மேம்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் வளர்க்கப்பட்ட தோட்டங்களின் பரப்பளவு 2,21,306 எக்டேர்.

(ஆ) சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கான ஸ்வீடன் நாட்டு நிதியுதவி நிறுத்தப்பட்டதால் 1997–98 ஆம் ஆண்டு முதல் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரங்கள் நடும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

[2004 ஜூலை 31

**121—**

**பறவைகள் சரணாலயம்**

**வினா எண் 12255—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**122—**

**மாசுக் கட்டுப்பாடு**

**வினா எண் 12363—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பள்ளிப்பாளையம் சேஷசாயி காகித ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் காவிரித் தண்ணீரில் கலக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் இயங்கிவரும் திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் போர்டு லிமிடெட் காகிதத் தொழிற்சாலையின் கழிவுநீர் காவிரி ஆற்றில் வெளியேற்றப்படுவதில்லை. மேற்படி, தொழிற்சாலையின் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, ஓடப்பள்ளி பொதுப் பணித் துறை வாய்க்கால் மூலம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. பாசன வயல்களிலிருந்து கசிந்து வரும் நீரின் ஒரு பகுதி காவிரி ஆற்றைச் சென்றடைகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரமும், காவிரி ஆற்றைச் சென்றடையும் கசிவு நீரின் தரமும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுக்குட்பட்டுள்ளது. மழைக் காலத்திலும், கழிவுநீர் ஆற்றைச் சென்றடையாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும்; நிறுவனத்தைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.



2004 ஜூலை 31]

**123—**

**கால்நடை மேய்ப்புக் கட்டணம்**

**வினா எண் 12541—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனத் துறைக் காடுகளில் கால்நடைகள் மேய்ப்பதற்காக கட்டணம் வசூலிக்கப்படுவதை முழுமையாக அரசு ரத்து செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வனங்களில் கால்நடை மேய்ச்சலை வரன்முறைப்படுத்தி, காடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும், அரசுக்கு வருவாய் கிடைக்கவும் வனத் துறையால் மேய்ச்சல் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே, அதனை அரசு முழுமையாக ரத்து செய்ய வாய்ப்பில்லை.

**124—**

## தடுப்பு அணைகள்

**வினா எண் 13415—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் வனப் பகுதியில் காட்டு வளத்தைப் பெருக்க, மழைக் காலங்களில் தண்ணீர் வீணாகாமல் இருக்க, ஓடைகளில் தடுப்புகள் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சுழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:*

### அறிக்கை

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் வனப் பகுதியில் காட்டு வளத்தைப் பெருக்க மழைக் காலங்களில் தண்ணீர் வீணாகாமல் இருக்கவும், ஓடைகளில் தடுப்பு அணைகள் மற்றும் கழிவுநீர்க் குட்டைகள் கீழ்க்கண்டவாறு கட்டி முடிக்கப்பட்டுள்ளன:*

| தடுப்பு அணைகள் கட்டப்பட்ட ஆண்டு | தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டக் கிராமத்தின் பெயர் மற்றும் பயன்பெறும் கிராமம் | காப்புக்காட்டின் பெயர் தடுப்பு அணை எண்ணிக்கை | தொகை ரூ | பயன்பெறும் வன நிலம், விவசாய நிலம் (தோராயமாக) |
|---|---|---|---|---|
| 1997–98 | கோடி அள்ளி கோர அள்ளி | மசக்கல் காப்புக்காடு | 2,29,500 | வன நிலம் 50 எக்டேர், விவசாயநிலம் 20 எக்டேர் |
| | போரூர் போரூர் | பெண்ணாகரம் காப்புக்காடு | 1,21,000 | வன நிலம் 20 எக்டேர் |



| | | | | |
|---|---|---|---|---|
| 1998–99 | ஊட்டமலை பிலிகுண்டலு | பிலிகுண்டலு காப்புக்காடு | | வன நிலம் 20 எக்டேர் |
| | ஊட்டமலை | மஞ்சுகாபள்ளம் காப்புக்காடு கரடிக்குட்டை ஒட்டப்பட்டி காப்புக்காடு | 5,69,000 | விவசாய நிலம் 10 எக்டேர் |
| 2001–2002 | ஊட்டமலை கூத்தப்பாடி | பேலூர் காப்புக்காடு அம்மாபள்ளம் காப்புக்காடு ஊட்டமலை ஒட்டப்பட்டி காப்புக்காடு | 5,15,000 | வன நிலம் 50 எக்டேர் வன நிலம் 10 எக்டேர் |

*31–3–2002 வரையில் கட்டி முடிக்கப்பட்ட தடுப்பணைகள் எண்ணிக்கை மொத்தம் 12 ஆகும். 31–3–2002 வரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கசிவுநீர்க் குட்டைகள் விவரம் பின்வருமாறு:*

| | | | | |
|---|---|---|---|---|
| கசிவு நீர்க்குட்டை கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு 1997–98 | போரூர் | பெண்ணாகரம் காப்புக்காடு | 1,99,000 | வன நிலம் 40 எக்டேர், விவசாய நிலம் 20 எக்டேர் |
| 2001–2002 | அம்மாபள்ளம்/ கூத்தப்பாடி | பேவலூர், காப்புக்காடு | 3,90,000 | வன நிலம் 50 எக்டேர் விவசாய நிலம் 25 எக்டேர் |

*31–3–2003 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ள இரண்டு கசிவு நீர்க் குட்டைகளும் நல்லமுறையில் பராமரிக்கபபடுகின்றன.*

**125—**

## வன விலங்கு சரணாலயம்

**வினா எண் 13420—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் வனத் துறை மூலம் வன விலங்கு சரணாலயம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் வனத் துறை மூலம் வன விலங்கு சரணாலயம் அமைக்கும் பிரேரணை அரசிடம் ஏதுமில்லை.

**126—**

## வனத் துறை அதிகாரிகளுக்கு படைக்கலன்கள் வழங்கல்

**வினா எண் 13423—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக விரோதிகளிடமிருந்து வனப் பகுதியைக் காப்பாற்ற வனத் துறை அதிகாரிகளுக்கு அதி நவீன துப்பாக்கிகள் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சமூக விரோதிகளிடமிருந்து வனப் பகுதியைக் காப்பாற்ற வனத் துறை அதிகாரிகளுக்கு போதுமான அளவிற்கு படைக்கலன்கள் மற்றும் தளவாடங்கள் உள்ளன.

(ஆ) இவ்வினா எழாது.



2004 ஜூலை 31]

**127—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 13456—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் விஷத்தன்மையுள்ள கழிவுகளைத் தடுக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் விஷத்தன்மையுள்ள கழிவுகளைத் தடுக்க அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**128—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 13458—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருக்கும் திருவாங்கூர் கெமிக்கல் கம்பெனியின் கழிவால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க நடவடிக்கைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**129—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 13460—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தில் பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளால் பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் பெருமளவில் சேருகிறது. ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினைப் பெண்ணாகரம் ஊராட்சி தனது தீர்மானம் எண் 7 (75) நாள் 14-8-2002-ன்படி தடை செய்து தருமபுரி மாவட்ட அரசிதழில் 5-2-2003 அன்று வெளியிட்டுள்ளது.



**130—**

## தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 16292—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வனத் துறை மூலம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வனத் துறை மூலம் தரிசு நிலத்தை மேம்படுத்தும் திட்டம் தனியாக ஏதும் செயலாக்கத்தில் இல்லை.

**131—**

## சுகாதாரக் கேட்டினைத் தடுத்தல்

**வினா எண் 17248—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியிலுள்ள தேங்காய்நார்க் கயிறு ஆலைகளின் கழிவுகளால் ஏற்படும் சுகாதாரக் கேட்டினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியிலுள்ள கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் தென்னைநார்க் கழிவுகளைப் பயனுள்ள

[2004 ஜூலை 31

பொருட்களாக மாற்றத் தகுந்த வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. ஆகவே, தென்னைநார்க் கழிவுகளினால் சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்பில்லை.

**132—**

## கழிவுநீர் சுத்திகரிப்பு

**வினா எண் 18114—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகரில் இயங்கிவரும் நவீன அரிசி ஆலையில் வெளிவரும் கழிவுநீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகரில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலை ஒன்றும், திருப்பதி செட்டியார் நவீன அரிசி ஆலை என்னும் தனியார் அரிசி ஆலை ஒன்றும் இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலையின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் மேம்படுத்தப்படவேண்டுமென வாரியம் தக்க அறிவுரை வழங்கியதைச் செயல்படுத்தாததால் ஆலையை மூடுவதற்கும் மின் இணைப்பைத் துண்டிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என 29-8-2002 அன்று வாரியத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் திருப்பதி செட்டியார் நவீன அரிசி ஆலை என்ற தனியார் ஆலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏதும் அமைக்காமல் கழிவுநீரை அப்படியே வெளியேற்றியமையால் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974-ன்கீழ் முகாந்திரம் கோரி 5-2-2002 அன்று



2004 ஜூலை 31]

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இத்தனியார் அரிசி ஆலையால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 31-7-2002-ல் அமைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் நகராட்சி சாக்கடையில் விடப்படுகிறது.

**133—**

## ஆமை இனவிருத்திப் பாதுகாப்பு

**வினா எண் 19002— திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இரசாயனக் கழிவுநீர் வெளியேற்றப்படுவதால், உடைந்த பல்புகள் எறியப்படுவதால் ஆலிவர் ரிட்லிஸ் வகை அரிய ஆமையினம் இனவிருத்தி செய்ய முடியாமல் அழிந்து வருவது குறித்து அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆலிவர் ரெட் லே வகை ஆமையினத்தின் இனவிருத்தி இரசாயனக் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளினால் பாதிக்கப்படுவதாக அறிக்கை ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) மேற்படி ஆமையினம் கடற்கரை பகுதிகளில் ஆள் நடமாட்டமில்லாத மிருதுவான மணற்பரப்புள்ள இடங்களை இன விருத்திக்காக தேர்வு செய்யும் இயல்புடையவையாதலால் தொழிற்சாலை கழிவுகளினாலும், உடைந்த பல்புகள் எறியப்படுவதாலும் இனவிருத்தி செய்ய முடியாமல் அழிவதாகக் கூற இயலாது.

**134—**

## ஆமைப் பண்ணைக்கு நிதியுதவி

**வினா எண் 19003—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முட்டுக்காட்டிற்கருகில் உள்ள முதலைப் பண்ணையில் முதலைகளுக்கு உணவு அளிக்க முடியாமல் அதை நடத்துபவர்கள் சிரமப்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பண்ணைக்கு நிதியுதவி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) முட்டுக்காட்டிற்கருகில் உள்ள முதலைப் பண்ணையில் ஒரு நாளைக்கு குறைந்தது ரூ.10,000/–க்குமேல் வருமானம் வருகிறது. எனவே, அங்குள்ள முதலைகளுக்கு உணவு அளிக்க முடியாமல் சிரமப்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**135—**

## அரசு இரப்பர் கழகம்

**வினா எண் 19059—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நஷ்டத்தில் இயங்கும் அரசு இரப்பர் கழகத்தை வனத் துறையுடன் இணைத்து தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) அரசு இரப்பர் கழகத்தினை வனத் துறையுடன் இணைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. இரப்பர் கழகத்தில் பணியாளர்கள் பாதுகாப்புடன் இருக்கிறார்கள்.

(ஆ) இவ்வினா எழவில்லை.





**136—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 19387—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியிலுள்ள ஜவவாது மலையில் காவலூர் முதல் சிங்காரப்பேட்டை வரை தார்ச் சாலை அமைத்து அரசு வசதி செய்து தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**137—**

## சந்தன எண்ணெய் தொழிற்சாலை

**வினா எண் 20561—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, தெக்குப்பட்டிலுள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலை மூடியுள்ளதால் பணியில் உள்ள அனுபவமிக்க தொழிலாளர்களை நியமித்து மீண்டும் இலாபகரமாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தெக்குப்பட்டு சந்தன எண்ணெய் தொழிற்சாலை 1997 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டு இலாபகரமாக இயங்கி வருகிறது.

[2004 ஜூலை 31

**138—**

## வன விலங்கு பாதுகாப்பு

**வினா எண் 21485—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகக் காடுகளில் வன விலங்குகளைப் பாதுகாக்க ஆலோசனை வழங்க மேல்மட்டக் குழு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே, வன உயிரின ஆலோசனைக் குழு மற்றும் மாநில வன உயிரினப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருவதால் மீண்டும் தனியாக தமிழகக் காடுகளில் வன விலங்குகளைப் பாதுகாக்க, ஆலோசனை வழங்க, மேல்மட்டக் குழு அமைக்கத் தேவையில்லை.

**139—**

## மிருகக்காட்சிசாலை அமைத்தல்

**வினா எண் 21517—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலம் ஏற்காடு அடிவாரத்தில் மிருகக்காட்சிசாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

இல்லை.



2004 ஜூலை 31]

**140—**

## கழிவுநீர் சுத்திகரிப்பு

**வினா எண் 21585—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் சாயப் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்தம் செய்யும் ஆலை நிறுவப்படாத சாயப் பட்டறை உரிமையாளர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சாயப் பட்டறைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டுள்ளது என்பதை அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

ஈரோடு மாவட்டத்தில் 413 சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. இதில் 358 சாயத் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளன. சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத 55 சாயத் தொழிற்சாலைகள் மீது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து 48 சாயத் தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவும், மின்சார வாரிய இணைப்பைத் துண்டிப்பதற்கும் உத்தரவு பிறப்பித்து, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது. மேலும் வாரியத்தால் மூடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சாயத் தொழிற்சாலைகளை சீல் வைப்பதற்காக மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 7 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கடிதம் வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்ற சாயத் தொழிற்சாலைகளின் இயக்கத்தை தொடர்ந்து வாரியம் கண்காணித்து வருகிறது. சுத்திகரிப்பு நிலையத்தை திறம்பட இயக்காமல் சரிவர சுத்திகரிப்பு செய்யாத கழிவுநீரை வெளியேற்றியதற்காக 10 சாயத் தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

141—

## நதிகளைத் தூய்மைப்படுத்துதல்

**வினா எண் 22231—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நதிகளை தூய்மைப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பவானி நகர் அருகிலுள்ள பவானி ஆற்றுப் பகுதிகள் சுத்தப்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் உதவியுடன் பவானி நகரை ஒட்டி பாயும் காவிரி மாசுபடுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

142—

## இயற்கைச் சூழல் பாதுகாப்பு

**வினா எண் 23514—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தின் இயற்கைச் சூழல் பாதித்துள்ளதா?

(ஆ) இயற்கைச் சூழலைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.



2004 ஜூலை 31]

(ஆ) இயற்கைச் சூழலைப் பாதுகாக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. நுண்ணிய பிளாஸ்டிக் பைகள் மற்றும் டம்ளர்கள் உபயோகப்படுத்துதல் மற்றும் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வாகனங்களில் காற்று ஒலிப்பான்கள் உபயோகப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. நகராட்சி கழிவுநீரைச் சுத்திகரிக்க காந்தல் என்ற இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்திலுள்ள ஏரியைச் சுத்தப்படுத்தும் பணி நகராட்சி நிருவாகத்தால் தொடங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மைக்காக திட்டங்கள் வகுக்கப்பட உள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து கழிவுநீரைச் சுத்திகரிக்கின்றன. குன்னூர் அருகே காட்டேரி மற்றும் உதகமண்டலத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வாகனப் புகை சோதனை மையங்களை இயக்கி வருகின்றது.

143—

## இரசாயனப் பொருள் சேமிப்பு இடங்கள்

**வினா எண் 24185—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டத்தில் தீங்கு விளைவிக்கக்கூடிய தனிப்பட்ட இரசாயனப் பொருள்களுக்காக சேமிப்பு இடங்களைக் கண்டறிதல் மற்றும் கண்காணித்தல் திட்டத்தின்கீழ் கண்டறியப்பட்ட இடங்கள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

[2004 ஜூலை 31

**144—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 24645—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மோயாரிலிருந்து தெங்குமரஉறாடாவிற்கு ஏற்கெனவே உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றிப் பேருந்து போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

மோயாரிலிருந்து தெங்குமரஉறாடாவிற்கு எவ்விதச் சாலையும் தற்போது இல்லை.

**145—**

### வன ஊழியர்கள்

**வினா எண் 25563—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையில் பணிபுரிந்து வரும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

தமிழ்நாடு வனத் துறையில் சமூகக் காடுகள் திட்டம் ஸ்வீடன் அரசின் ஒத்துழைப்புடன் 1981 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும்



2004 ஜூலை 31]

பொருட்டு திட்டம் துவக்கப்பட்ட கிராமங்களில் உள்ள தோட்டங்கள் நாற்றங்கால்களைப் பராமரிக்கும் விதத்தில் தினக்கூலி அடிப்படையிலான சமூக வன ஊழியர்கள், தோட்டக் காவலர்கள் மாநிலம் முழுவதும் நியமிக்கப்பட்டனர்.

பணி நிரந்தரம் தொடர்பான இவர்களது பல்வேறு கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து இவர்களுக்கு வனத் துறையில் வனக் காவலர்/மாலி போன்ற நிரந்தரப் பணியிடங்களில் இவர்கள் துறையில் முதன்முதலில் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு முதுநிலை வழங்க முடிவு செய்யப்பட்டது. அரசின் முடிவுப்படி, அரசாணை (நிலை) எண் 64, சுற்றுப்புறம் மற்றும் வனத் (வனம் 2) துறை, நாள் 8-3-1999-ல் வெளியிடப்பட்டது. இதன்படி தமிழ்நாடு வனத் துறையில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் எல்லாவகையான தோட்டக் காவலர்களையும் உள்ளடங்கிய மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் 1999-ல் தயாரிக்கப்பட்டது. இப்பட்டியலில் மொத்தம் சுமார் 5,442 நபர்கள் இடம் பெற்றுள்ளனர். வனத் துறையில் காலியாக இருந்த சுமார் 401 வனக் காவலர் மற்றும் மாலி பணியிடங்களில் 1999-2000-ல் இவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு சாரார் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை தந்து நிரந்தரப் பணி வாய்ப்பு வழங்க வேண்டுமென்று கோரி தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர். வனத் துறையினால் முறையாக வழங்கப்பட்டு வந்த பணி வழங்கல் ஆணைக்கு நிருவாக தீர்ப்பாயம் தடை விதித்தது.

தினக்கூலி அடிப்படையில் சுமார் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வருகின்ற இப்பணியாளர்களில் எல்லாவகைப் பிரிவினரும் இருக்கின்றனர். கற்றவர், கல்லாதவர், நேரடி நியமனம் பெற்றவர், வேலைவாய்ப்பகம் மூலம் வந்தவர், வயது முதிர்ந்தவர் என்று தினக்கூலி, பகுதிநேரப் பணி என்று தெரிந்தும் துறைக்கு வேலைக்கு வந்து பணிபுரிந்துவரும் இவர்களில் படித்தவர்கள் என்ற காரணத்தினால் ஒரு சாராருக்கு மட்டும் முன்னுரிமை வழங்க இயலாது என்று அரசு சார்பில் எடுத்துக் கூறப்பட்டு, நீதிமன்றம் அதே கருத்தைத் தமது 22-11-2002 தீர்ப்பில் வெளியிட்டது.

நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு 24-2-2003-ல் முதற்கட்டமாக 445 நபர்கள் வனக் காவலர்களாகவும், 41 நபர்கள் மாலி பதவிக்கும் தேர்வு செய்யப்பட்டு மண்டல வனப் பாதுகாவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துறையில் காலிப் பணியிடங்கள் ஏற்படும்போதெல்லாம் முதுநிலை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படும்.

**146—**

### சாலை வசதி

**வினா எண் 26902—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை இயற்கை மிகுந்த புல்மலை தங்கும் விடுதிக்குச் செல்ல ரோடு வசதியை செய்து தர வனத் துறை முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை பகுதியில் இயற்கையெழில் மிகுந்த புல்மலைப் பகுதி தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இப்பகுதியில் வனமில்லாத இதரப் பணிகள் எதனையும் அனுமதிக்க இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**147—**

### மாசுபடுவதைத் தடுத்தல்

**வினா எண் 27169—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கூவம் நதி மாசுபட்டு துர்நாற்றம் வீசுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க நடவடிக்கை என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னையிலுள்ள கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாயில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்து சுத்திகரிப்பு செய்து மறு உபயோகம் செய்ய வேண்டி சென்னை நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் ரூ.491.52 கோடிகளில் புதுடில்லி மைய அரசு, தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்ட அமைச்சகத்தினால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணி, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி முடிவடைந்தவுடன் கூவம் நதியில் கலக்கும் கழிவுநீர் தடுத்து நிறுத்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு நதிநீர் மாசடைதல் தடுக்கப்படும்.

**148—**

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

**வினா எண் 27231—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், திருமணிமுத்தாற்றில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**அறிக்கை**

சேலத்திலுள்ள அனைத்து சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகளும் தனித்தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்றன. சேலம் குகை மற்றும் தாதகாபட்டியில் உள்ள சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் இணைந்து சேலம் எருமப்பாளையம் பகுதியில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் "நிறுவுதல் உரிமம்" பெற்று திட்டம் துவங்கும் நிலையில் உள்ளது. சேலம் மாநகராட்சி குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளிவரும் அன்றாடக் கழிவுநீர் திருமணிமுத்தாற்றில் நேரடியாக கலக்காமல் இருப்பதற்காக தற்சமயம் சேலம் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைக் கழிவுநீர் வெளியேற்றும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக திட்டப்பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

**149—**

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

**வினா எண் 27307—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கனககிரி ஊராட்சி காக்காபாளையம் ஏரியில் சாயப் பட்டறைக் கழிவுநீர் கலந்து சுற்றுச்சூழல் பாதிப்படைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதைத் தூய்மைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கனககிரி ஊராட்சி, வேம்படித்தாளம் பகுதியில் இயங்கி வந்த 12 சாயப் பட்டறைகளின் கழிவுநீருடன் அப்பகுதியிலுள்ள குடியிருப்புகளின் அன்றாட சாக்கடை கழிவுநீரும் சேர்ந்துவந்து காகாபாளையம் ஏரியில் கலந்து வந்தது. ஏரியின் நீர் பாதிப்படைந்திருப்பதாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும் மற்றும் ஊராட்சி நிருவாகத்தாலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது கழிவுநீர்ச் சாக்கடையோ மற்றும் சாயப் பட்டறை கழிவுநீரோ காகாபாளையம் ஏரியில் கலப்பதில்லை.



2004 ஜூலை 31]

**150—**

**டான் டீ தொழிற்சாலைகள்**

**வினா எண் 29765—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ள டான் டீ தொழிற் சாலைகள் இலாபத்தில் இயங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தேயிலை விலை வீழ்ச்சி காரணமாக பொதுவாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் உட்பட பல தேயிலைத் தொழில் நிறுவனங்கள் நட்டத்தில் இருக்கின்றன. நட்டத்தைக் குறைத்து, இலாபத்தில் இயங்க தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் சிக்கன நடவடிக்கை உட்பட பல நிருவாக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**151—**

**வன வள மேம்பாடு**

**வினா எண் 31058—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதியைச் சுற்றியுள்ள மலைகளில் வனத் துறை திட்டங்களை செயல்படுத்தி வன வளத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

செஞ்சி தொகுதியினைச் சுற்றியுள்ள மலைப் பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1997–98 முதல் 2001–2002 வரை மொத்தம் 20 திட்ட கிராமங்களில் சுமார் 6,000 எக்டேர் பரப்பளவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது நிலவிவரும் சுற்றுச்சூழல் தட்பவெட்ப சூழ்நிலைகளின்படியும் நிலத்தின் தன்மையைக் கருத்தில்கொண்டும், தோட்டங்களை உருவாக்கும் வகையிலான நடவுக்கு தகுதிவாய்ந்த வனப் பரப்புகள் செஞ்சி தொகுதியில் ஏதுமில்லை.

**152—**

## விளை நிலங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 34795—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கட்டிநாய்க்கன்பட்டி ஏரியில் சாயக் கழிவுநீர் கலந்து 1000 ஏக்கர் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஜலகண்டபுரம் பேரூராட்சி பகுதியில் இயங்கி வரும் 4 தொழிற்சாலைகளிலிருந்து நாளொன்றுக்கு வெளியேறும் 200 கி.லி. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் ஜலகண்டபுரம் பேரூராட்சியிலிருந்து நாளொன்றுக்கு உருவாகும் 800 கி.லி. அன்றாடக் கழிவுநீருடன் கலந்து கட்டிநாய்க்கன்பட்டி ஏரியை சென்றடைந்து



கொண்டிருந்தது. இதுகுறித்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையிலும், தொழிற்சாலையின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் மொத்தம் கரைந்துள்ள உப்புக்கள் மற்றும் குளோரைடுகளின் அளவு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுகளுக்கு உட்படாமல் இருந்த படியாலும், மேற்கூறப்பட்ட 4 சாயப் பட்டறைகளும் வாரியத்தின்மூலம் 27–2–2003–ல் முகாந்திரக் கடிதம் அனுப்பப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலை செயல்முறையிலேயே மறுசுழற்சி செய்யுமாறு தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகின்றது. தற்சமயம், ஜலகண்டபுரம் பேரூராட்சி நிருவாகம், தொழிற்சாலைக் கழிவுநீருடன் பேரூராட்சியின் அன்றாடக் கழிவுநீரும் செல்லும் வாய்க்காலின் வழியினை மாற்றியமைத்து ஏரியைச் சென்றடையாமல் இருக்க மாற்றுவழி ஏற்பாடு செய்துள்ளது. மேலும், ஏரியை மேம்படுத்தும்பொருட்டு கழிவுநீர் அனைத்தும் ஏரியிலிருந்து வெளியேற்றப்பட்டு பராமரிப்பு வேலை செய்யப்பட்டு மழைநீரைச் சேகரிக்க ஏதுவாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**153—**

## தேக்கு, சவுக்கு பயிரிடுதல்

**வினா எண் 35109—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினத்தில் 282.89 எக்டேரில் சோதியக்குடியில் 66.95 எக்டேரிலும் பாதுகாக்கப்பட்ட சமூகக் காடுகள் திட்ட (Reserved Forests) உள்ளதால் அவ்விடத்தில் தரிசு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேக்கு, சவுக்கு கன்றுகள் பயிரிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2004 ஜூலை 31

154—

## தேக்கு, சவுக்கு கன்றுகள் பயிரிடுதல்

**வினா எண் 35113—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற்கரை காப்பு காடுகளில் தேக்கு, சவுக்கு கன்றுகளைப் பயிரிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருமுல்லைவாசல் கடற்கரை காப்பு காடுகளில் தேக்கு மரங்கள் வளர்க்க இயலாது. சவுக்கு மரங்கள் மட்டும் வளர்க்கலாம். தற்போது, முதிர்ச்சியடைந்துள்ள சவுக்கு மரங்களை அறுவடை செய்தபின்பு சவுக்குத் தோட்டங்கள் உற்பத்தி செய்யலாம். வன வளர்ச்சி முகமை (Forest Development Agency) திட்டத்தின்கீழ் சவுக்குத் தோட்டம் எழுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

155—

## வனப் பகுதியைச் சுற்றுலாத்தலமாக்குதல்

**வினா எண் 35764—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி, லகூன் என்ற இடத்தில் அலையாத்தி காடுகள் (மாங்குரோவ்) உள்ள பகுதியைச் சுற்றுலாத்தலமாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தற்போது எந்தத் திட்டமும் இல்லை.



2004 ஜூலை 31]

156—

## மான்களுக்குத் தண்ணீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 36534—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர், ரிஷிவந்தியம், சங்கராபுரம் மற்றும் தியாகதுருகம் பகுதிகளிலுள்ள அரசு காடுகளில் மான்களுக்கு தண்ணீர்த் தொட்டி கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம், தியாகதுருகம், திருக்கோவிலூர் மற்றும் சங்கராபுரம் பகுதிகளிலுள்ள காப்புக் காடுகளில் பெரும்பகுதி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி வனத் தோட்டத்தின்கீழுள்ள சங்கராபுரம் வனப் பகுதிகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தோட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் மண்ணில் பள்ளம் தோண்டி மழைநீர் தேக்கம் செய்யப்பட்டு, மான்கள் தண்ணீர் குடிக்க வசதி செய்யப்படுள்ளது. இதுதவிர கடந்த மூன்று ஆண்டுகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 2000–2001 | – மணியார்பாளையம் | – 4 தடுப்பணைகள் |
| | – நொச்சிமேடு | – 8 தடுப்பணைகள் |
| 2001–2002 | – கீழாத்துக்குளி | – 7 தடுப்பணைகள் |
| | – குறத்திக்குன்றம் | – 8 தடுப்பணைகள் |
| 2002–2003 | – குண்டியாநத்தம் | – 5 தடுப்பணைகள் |
| | – தாழ்வாழப்பாடி | – 5 தடுப்பணைகள் |

**157—**

## இருவழிப் பாதை அமைத்தல்

**வினா எண் 36636—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறைக்கு வனத் துறை மூலம் இருவழிப் பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறைக்கு, வனத் துறை மூலம் இருவழிப் பாதை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**158—**

## இரப்பர் கன்றுகள்

**வினா எண் 36647—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசு தோட்டங்களில் வயதான இரப்பர் மரங்களை வெட்டிய பகுதிகளில் மீண்டும் புதிய இரப்பர் கன்றுகள் நடப்பட்டுள்ளனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத்தில் ஏற்கெனவே 171.70 எக்டேர் பரப்பிலுள்ள முதிர்ந்த இரப்பர் மரங்கள் வெட்டப்பட்டு, இவற்றில் 137.36 எக்டேர் பரப்பில் சென்ற நிதியாண்டிலும் இந்த நிதியாண்டிலும் இரப்பர் மறு உற்பத்தி தோட்டம் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.



**159—**

## காட்டு வளத்தைப் பெருக்குதல்

**வினா எண் 37562—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலை, வனப் பகுதியில் செயற்கை முறையில் விதை தூவி காட்டு வளத்தைப் பெருக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வன வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் செயற்கை முறையில் வான்வழி விதை தூவும் திட்டம் ஏற்கெனவே வனத் துறையால் மேற்கொள்ளப்பட்டதில், தரை நிலைமைகள் இத்திட்டத்தின் வெற்றிக்கு துணை புரியாததால் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப் பெறவில்லை. அதன்பின், மத்திய அரசின் இத்திட்டம் கைவிடப்பட்டது. இருப்பினும் காடுகள் யாவும் கடுமையான பாதுகாப்பு வழிமுறைகள் மூலம் பாதுகாக்கப்படுவதால், காடுகளில் உள்ள முதிர்ந்த மரங்கள் விதை தாங்கிகளாக மாறி (seed bearers) இயற்கையாகவே விதைகளை பகிர்ந்து அளிக்கின்றன. எனவே சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலை வனப் பகுதியில் செயற்கை முறையில் விதை தூவி காட்டு வளத்தைப் பெருக்குவதற்கான திட்டம் ஏதும் தற்போது வனத் துறையால் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

[2004 ஜூலை 31

160—

### உணவு விடுதி கட்டுதல்

**வினா எண் 38511—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப்பில் வரும் சுற்றுலாவினருக்கு நல்ல உணவு விடுதி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, டாப்சிலிப்பில் வந்து தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்காக துறை மூலம் நியமிக்கப்பட்ட சமையல்காரருடன் சமையல் விடுதி ஒன்று சகல வசதிகளுடன் இயங்கி வருகின்றது. மேலும் டாப்சிலிப் பகுதி சரணாலயப் பகுதிக்குள் இருப்பதால் தனியார் விடுதி அமைக்க அனுமதிக்க இயலாது. சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் 20.12.1996 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 311, மற்றும் உச்ச நீதிமன்ற ஆணை நாள் 13.11.2000-ன்படியும் சரணாலயப் பகுதிக்குள் வன உய்விடங்களுக்கு சம்பந்தம் இல்லாத பணிகள் மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

161—

### சிறப்பு நீதிமன்றம்

**வினா எண் 40537—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் சந்தன மரக் கடத்தல் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்தில் சந்தன மரக் கடத்தல் வழக்குகளை விசாரிக்க ஏற்கெனவே ஒரு சிறப்பு நீதிமன்றம் திருப்பத்தூரில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

162—

### கம்பியில்லாத் தந்தி கருவி வழங்குதல்

**வினா எண் 40541—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனவர் பணிபுரிவோரிடம் 50 கிலோ மீட்டர் சுற்றளவுத் திறன் கொண்ட கம்பியில்லாத் தந்தி கருவியை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

163—

### தடுப்பணை கட்டுதல்

**வினா எண் 41871—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், இந்திரா காந்தி வனக் காப்பகக் காடுகளில் தடுப்பணை கட்டினால் வன உயிரினங்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் குடிநீர் கிடைப்பதுடன் காட்டில் மண் அரிப்பையும் தடுக்க தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள இந்திரா காந்தி வன உயிரின சரணாலய வனப் பகுதிகளில் வன உயிரினங்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் குடிநீர் கிடைப்பதற்கும், மண் அரிப்பை தடுப்பதற்கும், 130 தடுப்பு அணைகளும், 11 கசிவுநீர்க் குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன.

**164—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 42068—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலாறு மாசுபடுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பாலாறு மாசுபடுவதைத் தடுக்க பாலாற்றுப் படுகையில் அமைந்துள்ள நகராட்சிப் பகுதிகளிலிருந்து வெளிவரும் அன்றாடக் கழிவுநீருடன் அவ்விடங்களில் அமைந்துள்ள தோல் தொழிற் சாலைகளின் கழிவுநீரையும் சேர்த்து சுத்திகரிக்க மத்திய அரசின் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இரு தனித்தனி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.



**165—**

## நிலத்தடி நீர் பாதிப்பை தடுத்தல்

**வினா எண் 43923—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, இருக்கூர் ஊராட்சியிலுள்ள கோவை மாருதி பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, அப்பகுதி மக்கள் குடிநீரின்றி அவதியுறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாருதி பேப்பர் அண்டு போர்டு நிறுவனம் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கி வருகிறது.

**166—**

## நிலத்தடி நீர் பாதிப்பை தடுத்தல்

**வினா எண் 43924—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலக்குறிச்சி ஊராட்சியிலுள்ள சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிட்டெட் நிறுவனத்தின் கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, அப்பகுதி மக்கள் குடிநீரின்றி அவதியுறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடுப்பதற்காக உடனடி நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவாளர்கள் சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிட்டெட் நிறுவனத்தின் கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதை தடுக்க அந்நிறுவனத்தின் மீது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி அந்நிறுவனம் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்த, அதற்கான உபகரணங்களான கார்பன் மற்றும் மணல் வடிகட்டும் கலன்களை நிறுவியுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் நிலத்தில் தேக்கி வைக்கப்படாமல் தொழிற்சாலைக்கு சொந்தமான நிலத்திலேயே பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரத்தினை தொடர்ந்து ஆய்வு செய்து அப்பகுதி குடிநீர் பாதிக்கப்படாதவாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**167—**

## சுகாதாரக் கேடு விளைவதைத் தடுத்தல்

**வினா எண் 43952—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் காவிரி ஆற்றில் சாயப்பட்டறை கழிவு மற்றும் சாக்கடை நீர் கலப்பதால், மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையம் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்படாத 61 (அறுபத்து ஒன்று) சாயப்பட்டறைகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின்



மூலமாக மூடுதல் உத்தரவு வழங்கப்பட்டு அப்பட்டறைகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் 7 (ஏழு) சாயப்பட்டறைகள்மீது வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து இயங்கும் தொழிற்சாலைகள், சுத்திகரிப்பு நிலையங்களை திறம்பட இயக்குகின்றனவா என்பதையும் வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையம் பகுதிகளில் பொதுமக்களின் அன்றாட வடிகால் கழிவுநீர் காவிரி ஆற்றில் கலப்பதற்குமுன் சுத்திகரிப்பு செய்வதற்கு தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**168—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 47867—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுகா, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் கிராமத்தில் இயங்கிவரும் நவீன அரிசி ஆலையிலிருந்து கரித்துகள்கள் சாலையில் செல்லும் இரு சக்கர வாகனம் ஓட்டுபவர் கண்களில் பட்டு கண் பாதிப்பு அடைவதால் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழித் தாலுகா, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் கிராமத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கரித்துகள் கழிவினால் காற்று மாசு ஏற்படாவண்ணம் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்கீழ் தகுந்த மாசு தடுப்பு சாதனங்களைப் பொருத்தி ஆலையினை இயக்க 4-9-2003 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆணை பிறப்பித்துள்ளது.

**169—**

## ஏரியை சுத்தப்படுத்துதல்

**வினா எண் 49378—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆவடத்தூர் கிராமம், கட்டிநாயக்கன்பட்டி ஏரி நீரில் சாயப்பட்டறை மற்றும் கழிவுநீர் கலப்பதால் நீர் மாசுபட்டு மக்கள் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக ஏரியை சுத்தப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கட்டியநாயக்கன்பட்டி ஏரி நீர் துணி துவைப்பதற்கும் குளிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. குடிநீருக்காக பயன்படுத்தப் படவில்லை.

(ஆ) காவிரி ஆற்று நீர் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமாக ஆவடத்தூர் கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், கட்டிநாயக்கன்பட்டி ஏரி நீரை குடிநீராக பயன்படுத்தவேண்டிய அவசியம் எழவில்லை.

**170—**

## மலைவாழ் மக்கள் நலன்

**வினா எண் 50771—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப்பிலுள்ள வனத் துறையின் உபயோகத்தில் இல்லாத இடத்தை மலைவாழ் மக்கள் விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வனத் துறை உபயோகத்தில் இல்லாத வன நிலம் ஏதும் டாப்சிலிப் பகுதியில் இல்லை. மேலும், வன நிலத்தை வனமற்ற பணிகளுக்கு ஒதுக்கவோ அல்லது பட்டா வழங்கவோ வனப் பாதுகாப்பு சட்டம் 1980-ன்படியும் உச்ச நீதிமன்ற வழக்கு எண் 202/1995 நெ.418-ல் 7-5-99-ம் தேதிய தீர்ப்பின்படியும் வழிவகை இல்லை. மேலும், உச்ச நீதிமன்ற வழக்கு எண் 337/1995-ல் 13-11-2000-ம் தேதிய தீர்ப்பின்படி வன உயிரின சரணாலயம் மற்றும் தேசியப் பூங்கா ஆகியவற்றில் எதையும் வனமற்ற நிலமாக மாற்றக் கூடாது.

(ஆ) வினா எழவில்லை.

**171—**

## கிளை பால் நிலையம் அமைத்தல்

**வினா எண் 3450—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால், கிளை பால் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

**172—**

## பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு கட்டடம் கட்டுதல்

**வினா எண் 13335—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 31

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) அடிமனை உள்ள இரு சங்கங்களின் முன்மொழிவு பெற்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்டித் தரவும், மற்ற சங்கங்களுக்கு அரசு புறம்போக்கு நிலங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்மூலம் பெற்று அவற்றில் அரசின் பல்வேறு திட்டங்கள்மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நிலம் கோரி மனுக்கள் பெறப்படும்பொழுது கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**173—**

## ஓய்வூதியத் திட்டம்

**வினா எண் 16251—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மின்சார வாரியத்தில் வழங்குவதுபோல் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**174—**

## பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் துவங்குதல்

**வினா எண் 16287—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அரசின் மூலம் புதியதாக பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**175—**

## பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 20479—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட இடத்தில் பால் பற்றாக்குறையாக உள்ள நிலையில் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர வாய்ப்பில்லை.

**176—**

## பால் கொள்முதல்

**வினா எண் 20734—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலின் விற்பனை விலையை உயர்த்திய அரசு கொள்முதல் விலையை குறைத்ததை அறியுமா?

(ஆ) ஆம் எனில், கொள்முதல் விலை உயர்த்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள பசும்பாலின் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.9.50-லிருந்து ரூ.10.50 என்று உயர்த்தியும், எருமைப் பாலின் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.11.44-லிருந்து ரூ.12.50 என்று அரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

177—

### கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் துவங்குதல்

**வினா எண் 21764—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் பண்ணைக்கு எடப்பாடி நகரில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் பண்ணைக்கு எடப்பாடி நகரில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

178—

### பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

**வினா எண் 31033—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) வேலூர் மாவட்டம், பேரண்ணாம்பட்டு ஒன்றியம், எம்.வி. குப்பம் மற்றும் மாதனூர் ஒன்றியத்தில் பச்சகுப்பம் ஆகிய இடங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(அ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், எம்.வி. குப்பம் மற்றும் மாதனூர் ஒன்றியத்தில் பச்சகுப்பம் ஆகிய இடங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.



2004 ஜூலை 31]

179—

### "ஆவின்" பால் விற்பனை நிலையம்

**வினா எண் 37672—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் "ஆவின்" பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் ஆவின் பாலகம் புதிதாக கட்டப்பட்டு 15-12-2003 முதல் சோதனை முறையில் விற்பனை துவங்கப் பெற்று, நடைபெற்று வருகிறது.

180—

### பால் கொள்முதல்

**வினா எண் 38488—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்கு தினந்தோறும் கொள்முதல் செய்யப்படும் பால் எத்தனை லிட்டர்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகரிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் நாளொன்றுக்கு 7,800 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

**181—**

**ஊராட்சி தரம் உயர்த்துதல்**

**வினா எண் 3847—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், விராலிமலையை பேரூராட்சியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்த திட்டம் ஏதும் இவ்வியக்ககத்தில் இல்லை. ஒரு ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்த வேண்டுமாயின் பேரூராட்சிகள் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது.*

**182—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 5474—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகரின் குடிநீர் பஞ்சத்தை நிரந்தரமாகத் தீர்க்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அத்திட்டங்கள் யாவை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரின் குடிநீர் பஞ்சத்தை நிரந்தரமாகத் தீர்க்கும் பொருட்டு சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-I-ன்கீழ் வீராணம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் சுத்திகரித்த நீர் குழாய்கள் மூலம் சென்னைக்கு கொண்டு வருதல், சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்–2-ன்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வயலூர் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது, மூன்றாம் சென்னைத் திட்டத்தின்கீழ் திருக்கண்டலம் அருகே கொசத்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், மீஞ்சூர் அருகே உள்ள வள்ளூர் அணைக்கட்டை புதுப்பித்தல், மாதவரம் ஏரி (இரட்டை ஏரி) கொரட்டூர் மற்றும் அம்பத்தூர் ஏரிகளை ஆழப்படுத்தி தூர் வாருதல் மற்றும் உவர்நீர் கிடைக்கும் பகுதிகளில் எதிர் சவ்வூடு பரவுதல் முறையில் உவர் நீரை நன்னீராக்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.*





**183—**

**காலனியை தனி வார்டாக அமைத்தல்**

**வினா எண் 6381—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காடாம்புலியூர், காந்தி நகர் காலனியை தனியாக ஒரே வார்டாக அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) காடாம்புலியூர், காந்தி நகர் காலனியை தனியாக ஒரே வார்டாக அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**184—**

**திரையரங்குகள் (ஒழுங்கு முறை) விதிகளின்கீழ் நடவடிக்கை**

**வினா எண் 7472—திரு. கே.கே. சிவசாமி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆபாசத் திரைப்படங்கள் திரையிடும் திரையரங்குகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஆபாசத் திரைப்படங்கள் திரையிடப்படும் திரையரங்குகள்மீது 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் மற்றும் திரையரங்கின் 'சி' படிவ உரிமம் நிபந்தனை எண் 2 (எ)-ன்கீழ் சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அலுவலரால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.*

**185—**

## குடிநீர் பாதுகாப்பு

**வினா எண் 7859—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன்நகர் தொகுதி, 10-வது வட்டம், ஜெ.ஜெ. நகரில் டிரைவர் காலனியில் உள்ள வீடுகளில் வரும் குடிநீரில் சாக்கடை கலந்து வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10-வது வட்டம், ஜெ.ஜெ. நகரில் டிரைவர் காலனிக்கு தற்போது சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறது.



**186—**

## கழிவுநீர்க் குழாய்கள் அமைத்தல்

**வினா எண் 7963—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12-வது வட்டம், நைனியப்பன் சந்தில் புதியதாக கழிவுநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12-வது வட்டம், நைனியப்பன் சந்தில் புதியதாக கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு 31-3-2003 முதல் அந்தக் குழாய்கள் உபயோகத்தில் உள்ளன.

**187—**

## கழிவுநீர்க் குழாய்களில் தூர் வாருதல்

**வினா எண் 9652—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், காக்கரின்பேசின் சாலை, கத்திவாக்கம் நெடுஞ்சாலைகளில் பக்கெட் இயந்திரம் மூலம் கழிவுநீர்க் குழாய்களில் தூர்வாரும் பணி மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், காக்கரின்பேசின் சாலை, கத்திவாக்கம் நெடுஞ்சாலைகளில் பக்கெட் இயந்திரம் மூலம் கழிவுநீர்க் குழாய்களில் தூர்வாரும் பணி மேற் கொள்ளப்பட்டு, அப்பணி முடிக்கப்பட்டு தற்சமயம் கழிவுநீர் தடையின்றி இயங்குகிறது.

188—

### நவீன நீச்சல் குளம் கட்டுதல்

**வினா எண் 23974—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகரில் அரசு சார்பில் நவீன நீச்சல் குளம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மாவட்ட தலைநகர் புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நீச்சல் குளம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளது.*

*(ஆ) வெகு விரைவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

189—

### விளையாட்டு பயிற்சி வகுப்புகள்

**வினா எண் 33034—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிராமப்புறங்களில் விளையாட்டை ஊக்குவிக்க பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) கிராமப்புறங்களில் விளையாட்டை ஊக்குவிக்க அந்தந்த கிராமத்தில் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உடற்கல்வி இயக்குநர்/ஆசிரியர்களால் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் மூலமும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.*

*(ஆ) நிலை எழவில்லை.*



190—

### உடற்பயிற்சி மையம் அமைத்தல்

**வினா எண் 36739—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு நகரையும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள விளையாட்டு வீரர்கள் முறையாக கற்க ஏதுவாக உடற்பயிற்சி மையம் ஒன்றினை தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) செங்கற்பட்டு நகரையும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள விளையாட்டு வீரர்கள் முறையாக கற்க ஏதுவாக உடற்பயிற்சி மையம் ஒன்றினை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

191—

### விளையாட்டு அகாடமி நிறுவுதல்

**வினா எண் 38286—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் சிறப்பு விளையாட்டு அகாடமி நிறுவிட அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சிறப்பு விளையாட்டு அகாடமி நிறுவிட தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**192—**

## கிரிக்கெட் போட்டி நடத்துதல்

**வினா எண் 38287—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் மாநில அளவில் கிரிக்கெட் போட்டி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் மாநில அளவில் கிரிக்கெட் போட்டி நடத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**193—**

## "டென்னிஸ் பயிற்சி" திட்டம்

**வினா எண் 38288—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாநகரில் டென்னிஸ் விளையாட்டை ஊக்குவிக்க, "டென்னிஸ் பயிற்சி" திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரில் டென்னிஸ் விளையாட்டை ஊக்குவிக்க, "டென்னிஸ் பயிற்சி" திட்டம் செயல்படுத்த அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**194—**

## உடற்பயிற்சி மையம் அமைத்தல்

**வினா எண் 41466—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, அக்ராகரம் ஊராட்சி, தென்றல் நகரில் உடற்பயிற்சி மையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, அக்ராகரம் ஊராட்சி, தென்றல் நகரில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2004 ஜூலை 31

**195—**

**விளையாட்டரங்கம் அமைத்தல்**

**வினா எண் 43648—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் விளையாட்டரங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**196—**

**விளையாட்டரங்கம் கட்டுதல்**

**வினா எண் 43649—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டான்டிக்குப்பம் கிராமத்தில் விளையாட்டு அரங்கம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டான்டிக்குப்பம் கிராமத்தில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2004 ஜூலை 31]

**197—**

**விளையாட்டரங்கம் கட்டுதல்**

**வினா எண் 43651—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஊராட்சியில் அரசினர் உயர்நிலைப் பள்ளி எதிரில் மிகப்பெரிய விளையாட்டுத் திடல் உள்ள இடத்தில் விளையாட்டரங்கம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஊராட்சியில் அரசினர் உயர்நிலைப் பள்ளி எதிரில் மிகப்பெரிய விளையாட்டுத் திடல் உள்ள இடத்தில் விளையாட்டரங்கம் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**198—**

**உடற்பயிற்சி மையம் அமைத்தல்**

**வினா எண் 44735—திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை தொகுதி, கண்ணங்குடியில் இளைஞர்களுக்காக உடற்பயிற்சி மையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், திருவாடனை தொகுதி, கண்ணங்குடியில் இளைஞர்களுக்காக உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**199—**

## விளையாட்டுப் பள்ளி துவங்குதல்

**வினா எண் 48871—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினத்தில் விளையாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளி துவங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) நாகப்பட்டினத்தில் விளையாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) நிகழ்வு எழவில்லை.*



2004 ஜூலை 31]

**200—**

## பெண்கள் விளையாட்டுப் பயிற்சி மையம்

**வினா எண் 48873—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினத்தில் பெண்களுக்கென விளையாட்டு பயிற்சி மையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) நாகப்பட்டினத்தில் பெண்களுக்கென விளையாட்டுப் பயிற்சி மையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

## பட்டியல் 17

1—

### நிதி மற்றும் நிர்வாக வசதி

**வினா எண் 233—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் முறையாகச் செயல்படத் தேவையான நிதி மற்றும் நிர்வாக வசதிகள் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) மேலும் சலுகைகளை அறிவித்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) விவசாயத் தொழிலாளர் நல வாரியம் முறையாகச் செயல்படத் தேவையான நிதி மற்றும் நிர்வாக வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) வாரிய திட்டங்களுடன் மேலும் சலுகைகளை அறிவிப்பது தொடர்பாக தற்போதைய திட்டங்களின் செயல்பாட்டின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

### செக்-டாம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 399—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தரைவழி பாலம் (சாப்பாத்து பாலம்) உடைந்ததன் விளைவாக குழித்துறை ஆற்றுக் குடிநீர் திட்டக் கிணறுகளில் போதுமான குடிநீர் இல்லாத சூழ்நிலையைத் தவிர்க்க இப்பாலத்தை செக்-டாம் போன்று புதிதாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆற்றில் சாப்பாத்து பாலம் அருகில் செக்-டாம் (Check-Dam) அமைக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

3—

### சாதிச் சான்றிதழ் வழங்குதல்

**வினா எண் 442—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழங்குடியினர், மலைவாழ் வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதில் வட்ட ஆட்சியாளர்கள் அலுவலகங்களில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பழங்குடியினர், மலைசாதி மக்களுக்கு சாதிச் சான்றுகள் வழங்கும் அதிகாரம் கோட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் சாதிச் சான்று கேட்டு விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் சாதிச் சான்றுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், விரிவான விசாரணை தேவைப்படும் நேர்வுகளில் அதிகபட்சமாக 30 நாட்களுக்குள் சாதிச் சான்றுகள் வழங்கப்படவேண்டும் என்றும் அரசு மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் நிலையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அவ்வப்போது அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பழங்குடியினர் சாதிச் சான்று வழங்கும் நேர்வுகளில் காலதாமதத்தைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும், துரிதமான ஆனால் கவனமான விசாரணைக்குப்பின் பழங்குடியினர் சாதிச் சான்று வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

4—

## பாதையில் ஆக்கிரமிப்புக்களை அகற்றுதல்

**வினா எண் 3280—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் கிராமத்திலுள்ள கூட்டுறவு அங்காடி செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டப்பேரவைத் தொகுதி, மருங்கூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு அங்காடிக்கு பொதுமக்கள் செல்லும் பாதையில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.*

5—

## பாலங்களைக் கட்டும் பணி

**வினா எண் 4428—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம் காளியம்மன் கோவில் சாலை-வெற்றிலைக்காரன்காடு இடையில் ஒரு பாலமும், மேல்காடு கிராமம்-எல்லக்குட்டூர் கிராமச் சாலை இடையே ஒரு பாலமும் அமைத்துக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*நிதி நிலைமைக்கேற்ப இப்பாலங்களைக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



6—

## நீர்த்தேக்கத் திட்டம்

**வினா எண் 4619—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதியில் மேல வெள்ளந்தாங்கி குளத்தையும், குட்டங்குழி குளத்தையும், களிங்கல் குளத்தையும், மேல அதியன் குளத்தையும் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

7—

## கள்ளச்சாராயத்தை ஒழித்தல்

**வினா எண் 5810—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக 2000 ஆம் ஆண்டில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?*

*(ஆ) கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது:

**அறிக்கை**

2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக 24,081 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது. இவரின்கீழ் இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் பணியாற்றுகிறார்கள். 86 மதுவிலக்கு பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல் மற்றும் கடத்துதல் ஆகியவை நடைபெறாவண்ணம் கண்காணித்து, தடுத்து வருகின்றன. மேலும், போலி மதுபானங்கள், எரிசாராயம் ஆகியவை தமிழ்நாட்டுக்குள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதையும், விற்பதையும் கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது கூடுதலாக இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் 8 கூடுதல் மதுவிலக்குப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர மத்திய புலனாய்வுப் பிரிவு 7 மண்டலங்களாக இரண்டு துணை காவல் கண்காணிப்பாளர்கள், 6 ஆய்வாளர்கள் மற்றும் 8 உதவி ஆய்வாளர்கள் ஆகியோரின்கீழ் இயங்கி வருகிறது. சி.ஐ.யு. அலுவலர்கள் மூலம் மதுவிலக்கு குற்றங்கள் சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அந்தந்த மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கு உடனடியாக நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டும், தலைமையகத்திற்கு செய்தி தெரிவிக்கப்பட்டும் வருகின்றது. மதுவிலக்கு குற்றவாளிகள் திருந்துவதற்காக வங்கிகள், அரசு சாராத நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள் மூலம் கடன் வழங்கி மறுவாழ்வு கொடுக்க நடவடிக்கை எடுத்தும், எடுக்கப்பட்டும் வருகிறது. இது தவிர இலவச தொலைபேசி



ஒன்றும் தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளது. இதன் வழியாகப் பெறப்படும் தகவல்களை அவ்வப்போது உரிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்/கூடுதல் ஆணையர்/மதுவிலக்கு கூடுதல் துணை ஆணையாளர் ஆகியவர்களுக்கு தெரிவிக்கும்பொருட்டு தலைமையகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல்/விற்பனை செய்தல்/ கடத்துதல் ஆகிய இரகசியத் தகவல்களைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட மதுவிலக்குப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**8—**

**சாதிச் சான்றிதழ் வழங்குதல்**

**வினா எண் 5830—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம் அலுவலகத்தில் சாதிச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் விரைவில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சான்றிதழ் கேட்டு வரும் விண்ணப்பங்கள் உடனுக்குடன் விசாரணை செய்து தகுதி உள்ள விண்ணப்பங்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குறைபாடுகள் மற்றும் விடுபாடுகள் உள்ள விண்ணப்பங்கள் மட்டுமே மேல் விபரம் கோரி திருப்பி அனுப்பப்படுகின்றன.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட பல்வேறு சான்றிதழ்களின் விவரம் கீழ்வருமாறு:

| சான்றுகள் விவரம் | 2001 | 2002 |
|---|---|---|
| I. சாதிச் சான்று | | |
| 1. பிற்பட்ட வகுப்பு | 1106 | 1238 |
| 2. மிகப் பிற்பட்ட வகுப்பு | 76 | 105 |
| 3. சீர்மரபினர் | - | - |
| 4. தாழ்த்தப்பட்டோர் | 1252 | 1542 |
| 5. பழங்குடியினர் | 58 | 29 |
| II. வருமானச் சான்றுகள் | 2216 | 2927 |
| III. இருப்பிடச் சான்றுகள் | 818 | 1889 |
| 8. வாரிசு சான்றுகள் | 360 | 338 |
| 9. பல்வகை சான்றுகள் | 1206 | 1235 |

சான்றிதழ் கோரி வரும் விண்ணப்பங்களுக்கு காலதாமதம் இன்றி சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**9—**

## புறவழிச் சாலை அமைக்கும் பணி

**வினா எண் 7500—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க புறவழிச்சாலை ஒன்றினை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜிதப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முழுமையாக முடிந்த பின்னர் புறவழிச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**10—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 8164—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டம், செல்லி அம்மன் நகரில் வசிக்கும் 300 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**11—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 8165—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி 4-வது வட்டம், வள்ளுவர் நகர், பாரதி நகர், எ.இ. கோயில் தெரு ஆகிய இடங்களில் வசித்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

[2004 ஜுலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**12—**

### தனி வட்டம் அமைத்தல்

**வினா எண் 8187—திரு. கே.கே. உமாதேவன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சிங்கணம்புரியை தலைமையிருப்பிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**13—**

### தார்ச் சாலையைப் பழுதுப் பார்க்கும் பணி

**வினா எண் 8554—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, எண்ணூர்-கருள்சானூர் சாலை 0/0 - 3/2 தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இச்சாலையைப் பழுது பார்க்கும் பணி தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு திட்டத்திலும் இடம்பெறவில்லை.*

**14—**

### விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 9365—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் பகுதி, 3-வது வட்டம், பரமேஸ்வரன் நகரில் 40 ஆண்டு காலமாக வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு பரிசீலிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**15—**

### சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 9382—திரு. கி. பாரிமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன?*

*(ஆ) அவற்றில் எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன?*

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தருமபுரி மாவட்டத்தில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்களின் எண்ணிக்கை - 12.*

*(ஆ) அவற்றில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களின் எண்ணிக்கை - 8.*

**16—**

**புயல் பாதுகாப்பு இல்லம்**

**வினா எண் 11742—திரு. பி.எஸ். அருள்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதி, முழுக்குதுறை, எம்.ஜி.ஆர். திட்டு கிராமத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**17—**

**பரப்பலாறு அணையைத் தூர்வாருதல்**

**வினா எண் 12921—திரு. ஆர். சக்ரபாணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையைத் தூர்வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள பரப்பலாறு அணையை தூர்வாரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.*

**18—**

**முத்திரைத்தாள்களின் விலை**

**வினா எண் 13013—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் முத்திரைத்தாள்கள் விற்கும் ஏஜெண்டுகள் முத்திரைத்தாள்களின் விலையில் அதிகமாக 5 விழுக்காடு கமிஷன் வசூலிப்பதை நிறுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**19—**

**வேலையில்லாத இளைஞர்களுக்கு முன்னுரிமை**

**வினா எண் 13045—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முத்திரைத்தாள்கள் விற்பனை செய்ய முகவர்கள் தேர்வு செய்யும்போது படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) முத்திரைத்தாள் விற்பனையாளர் நியமனத்தில் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு அவர்களின் இதர தகுதிகளும் கருத்தில் கொள்ளப்பட்டு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

(ஆ) கல்வித் தகுதியுடன் வசிப்பிடம், சால்வன்சி, முன் அனுபவம், உடல் ஆரோக்கியம், முன்நிகழ்வுகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**20—**

## நில, மனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 15844—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலம், மனை, பட்டாக்கள் கணவன்-மனைவி இருவர் பெயரிலும் கூட்டாக வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**21—**

## ஏழைகளுக்குப் பட்டா வழங்குதல்

**வினா எண் 15896—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், ஆண்டுகோடு வருவாய் கிராமம் மஞ்சாலுமூடு பகுதியிலுள்ள குளத்தின் அருகாமையில் குடியிருக்கும் ஏழைகளுக்குப் பட்டா வழங்க அரசு உத்தேசித்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**22—**

## பயணியர் மாளிகை கட்டும் திட்டம்

**வினா எண் 16227—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அதிக யாத்ரிகர்கள் வருவதால் பொதுப் பணித் துறையின் மூலம் பயணியர் மாளிகை ஒன்று கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி வைத்தீஸ்வரன் கோவிலில் பொதுப் பணித் துறை மூலம் பயணியர் மாளிகையோ அல்லது ஆய்வு மாளிகையோ அல்லது சுற்றுலா மாளிகையோ கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**23—**

## தனி வட்டமாக மாற்றும் திட்டம்

**வினா எண் 16648—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டிணம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தை தனி வட்டமாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழாது.

**24—**

## அணைகட்டி நீரைத் தேக்கும் திட்டம்

**வினா எண் 16735—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை பெரிய நாய்க்கன்பாளையம் ஒன்றியத்தில் நஞ்சுண்டாபுரம் ஊராட்சியில் வரப்பாளையம் சிற்றூருக்கு அருகிலுள்ள பொன்னூற்று எனும் சிற்றோடையின் குறுக்கே சிறிய அணை ஒன்று கட்டி நீரைத் தேக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**25—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 17749—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியில், வால்பாறையில் உள்ள காடுகளை அழித்து, சில தோட்ட அதிபர்கள் அரசுக்குச் சொந்தமான நிலங்களை



ஆக்கிரமித்து தேயிலை பயிர் செய்து தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள முயற்சி எடுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், நிலங்களை மீட்டு ஏழை எளியவர்களுக்கு இலவசப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* வால்பாறை வட்டத்தில், தோட்ட அதிபர்கள் காடுகளை அழித்து, அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்து தேயிலை பயிர் செய்து தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளும் முயற்சி ஏதும் அங்கு நடைபெறவில்லை. வால்பாறையிலுள்ள ஒதுக்கக் காடுகள் அனைத்தும் வனத் துறையின் கண்காணிப்பில் இருந்து வருவதால், ஆக்கிரமணத்திற்கு வாய்ப்பில்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**26—**

## ஆற்றுக் கால்வாய் தூர்வாரும் திட்டம்

**வினா எண் 17964—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வந்தவாசி தொகுதி, செய்யாற்றை வென்றான் ஆற்றுக்கால்வாய் தூர்வார அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இப்பணியை நடப்பாண்டில் மேற்கொள்ள அரசிடம் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இவ்வினா எழ வாய்ப்பில்லை.

[2004 ஜூலை 31

**27—**

### பிரதான கால்வாய் சாலையை செப்பனிடுதல்

**வினா எண் 18077—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, திருமங்கலம் பிரதான கால்வாய் இரு ஓரங்களில் உள்ள சாலையை செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசின் நிதிநிலைக்கேற்ப இது கருதப்படும்.

**28—**

### இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்

**வினா எண் 18113—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியில் மடத்துவாசல் சிவன்கோவில் குடியிருப்பில் உள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியில் மடத்துவாசல் சிவன்கோவில் குடியிருப்பில் உள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 ஜூலை 31]

**29—**

### தனி வட்டமாக மாற்றுதல்

**வினா எண் 18358—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, காட்டுமன்னார்குடி வட்டம், திருமுட்டம் பேரூராட்சியை மையமாகக் கொண்டு தனி வட்டமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**30—**

### வாய்க்கால் பாசனம்

**வினா எண் 18515—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியில் அமைந்துள்ள வைகை அணையின் தண்ணீர் ஜெயமங்கலம், நல்பட்டி, சிந்துவப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புறம் ஆகிய கிராமங்களுக்கு பயன் அளிக்கும் வகையில் அணைக்குப் பின்புறம் உள்ள சிறு வாய்க்காலில் அணை முழுவதுமாக நீர் நிரம்பி உள்ள காலங்களில் மாத்திரம் தண்ணீர் விட்டால் பல ஆயிரம் ஹெக்டேர் தரிசு நிலங்களில் விவசாயம் நடைபெறும் என்பதால் அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசு நிதி நிலைமைக்கு ஏற்ப இத்திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

31—

## தனி வட்டம் அமைத்தல்

**வினா எண் 18550—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், தனி வட்டமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

32—

## கண்மாய்களுக்கு தண்ணீர் விடுதல்

**வினா எண் 18657—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள விரகனூர் அணையிலிருந்து சமயநல்லூர் தொகுதியிலுள்ள சக்கிமங்கலம், குன்னத்தூர், அங்காடிமங்களம், களிமங்களம் கிராமங்களிலுள்ள 11 கண்மாய்களுக்கு தண்ணீர் விடும் பொறுப்பை சிவகங்கை செயற் பொறியாளரிடம் இருந்து மதுரை செயற் பொறியாளரிடம் மாற்றித்தர அரசு முன்வருமா?



2004 ஜூலை 31]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

33—

## பாம்பாறு அணை கட்டும் திட்டம்

**வினா எண் 18671—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதியில் அப்பர் பாம்பாறு அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரூர் தொகுதியில் அப்பர் பாம்பாறு அணை கட்டுவதற்காக திட்ட மதிப்பீடு ரூ. 1062 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு மேற்படி திட்டம் பொருளாதார ரீதியாக லாபகரமற்ற திட்டமாக இருந்ததால் கைவிடப்பட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

34—

## கால்வாயை தூர்வாரி செப்பனிடுதல்

**வினா எண் 18690—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விளாத்திகுளம் கண்மாயிலிருந்து தத்தனேரி கண்மாய், மேல்மந்தைக் கண்மாய், பள்ளாகுளம் வரை செல்லும் கால்வாயை தூர்வாரி செப்பனிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் கண்மாயிலிருந்து தத்தனேரி கண்மாய், மேல்மந்தைக் கண்மாய், பள்ளாகுளம் வரை செல்லும் நீர்வரத்து கால்வாய்களை தூர்வாரி செப்பனிட ரூ. 36.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப தூர்வாரப்படும்.*

**35—**

## பூதலூர் சாலையை சீரமைத்தல்

**வினா எண் 18694—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை முதல் செஞ்சிபட்டி வரை அண்டகளம் வழியாக பூதலூர் சாலை நபார்டு திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி சீரமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது புதுக்கோட்டை-பூதலூர் சாலை (கி.மீ. 2/6 மற்றும் 26/6) மற்றும் குன்னாண்டார் கோவில்-செங்கிபட்டி சாலை (கி.மீ. 0/0 - 18/2) ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்த சாலையாகும். புதுக்கோட்டை-பூதலூர் சாலை வேலையை நபார்டு RIDF - 8 திட்டம் 41 மூலம்*





*ரூ. 347.70 இலட்சம் செலவில் எடுத்துச் செய்ய 5-3-2003 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 2003-2004 ஆம் ஆண்டு துவக்கத்தில் பணி துவங்கப்படும்.*

*குன்னாண்டார் கோவில்-செங்கிபட்டி சாலைப் பணி நபார்டு கடனுதவி பெற தயாரிக்கப்பட்டுள்ள பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட பெருந்திட்டத்தில் (Master Plan) சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் கடனுதவியைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் இச்சாலையை அகலப்படுத்தி சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**36—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 18715—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 5-வது வட்டம், சிவசெட்டி தோட்டம், சேனியம்மன் கோயில் தெரு, பர்மா நகர், ஜீவா நகர் போன்ற பல பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சென்னை கோட்டை-தண்டையார்பேட்டை வட்டம், தண்டையார் பேட்டை கிராமம், புல எண் 3977/1 முதல் 3977/264 வரை உள்ள புல எண்களில் சிவசெட்டி தோட்டமும், புல எண் 3912/2, 3912/43 மற்றும் 3905/4-ல் சேனியம்மன் நகரும் அமைந்துள்ளது. இப்பகுதிகள் நில நிரந்தரப் பதிவேட்டில் "மாநகராட்சி தனி" என பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட புலங்கள் தற்போது குடிசைப் பகுதி மாற்று வாரியத் திட்டப் பகுதியாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், இவைகளை குடிசைப்பகுதி மாற்று வாரியம் தனது பெயருக்கு கைப்பற்றிய பின்னர் வாரியத்தினால் வழங்கப்படும் கிரயப் பத்திர அடிப்படையில்தான் இதில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படும்.*

[2004 ஜூலை 31

37—

## கல்குளம் வட்டம் அமைத்தல்

**வினா எண் 18728—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து இரணியலை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

38—

## சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம்

**வினா எண் 18814—திரு. இரா. இராம் பிரபு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி தொகுதியில் சத்திரக்குடியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் இந்நிதியாண்டில் கட்டப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இராமநாதபுரம் பதிவு மாவட்டம். சத்திரக்குடியில் இயங்கிவரும் போகலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இந்நிதியாண்டில் புதிதாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) எழவில்லை.*



2004 ஜூலை 31]

39—

## பழுதடைந்த பாலத்தை சீரமைத்தல்

**வினா எண் 18871—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் ஒன்றியம், விருத்தாசலம்-சிறுவம்பார் வழித் தடத்தில் எட்சித்தூர் கிராமத்திற்கு அருகில் உள்ள பாலம் இடிந்து உள்ளது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், பாலம் கட்ட அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் மூன்று வரிசைகள் கொண்ட குழாய் பாலமாகும். இப்பாலம் பேருந்து போக்குவரத்திற்கு தடை ஏற்படும் அளவுக்குப் பழுதடையவில்லை.*

40—

## பயணியர் விடுதி அமைக்கும் திட்டம்

**வினா எண் 18944—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரம் நகரத்தில் பயணியர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் நகரத்தில் பயணியர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

[2004 ஜுலை 31

41—

## கூவம் நதியின் நீரை தூர்வாருதல்

**வினா எண் 19004—திரு. எச். ராஜா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கூவம் நதியின் நீரை சுத்தப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) இப்பணிக்காக 2000-2001-ல் மத்திய அரசிடமிருந்து ஏதேனும் நிதி பெறப்பட்டதா?*

*(இ) ஆம் எனில், எவ்வளவு?*

*(ஈ) அந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) கூவம் நதியின் நீரை தூர்வாரி செம்மைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.*

*(ஆ) இப்பணிக்காக நிதி இதுவரை பெறப்படவில்லை.*

*(இ) மற்றும் (ஈ) கேள்விக்கு இடமில்லை.*

42—

## தனி வட்டம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 19408—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அந்தியூர், பவானி வட்டத்திற்கு உட்பட்டு வருவதை அந்தியூர் வட்டத்தை தனி வட்டமாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

43—

## விட்டுமனை ஒப்படை

**வினா எண் 19427—திரு. எம். ராம்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதியில் சூலமங்கலம் 2-ம் சேத்தி/பசுபதிகோவில் கிராமங்களிலுள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடியிருந்த காலி செய்யப்பட்ட நபர்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*பாபநாசம் தொகுதியில் சூலமங்கலம் 2-ம் சேத்தி/பசுபதிகோவில் கிராமங்களிலுள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடியிருந்து காலி செய்யப்பட்ட நபர்களுக்கு நில எடுப்பு மூலம் வீட்டுமனை ஒப்படை வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

44—

## கால்நடைகளுக்கு நிவாரண நிதி

**வினா எண் 19728—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மழை, வெள்ளம் ஏற்படும் காலங்களில் மின்சாரம் தாக்கி இறக்கும் கால்நடைகளுக்கும் இயற்கைச் சீற்ற நிவாரண நிதி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**45—**

**வாய்க்கால் சீரமைப்பு**

**வினா எண் 19764—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், ஆண்டிபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த குளத்துப்புதூர் குளத்திற்கு நொய்யல் ஆற்றிலிருந்து தண்ணீர் விடுகின்ற வாய்க்காலிலுள்ள முட்புதர்களை அகற்றி குளத்தில் தண்ணீர் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் வாய்க்கால் சீரமைக்கப்பட்டு, குளத்திற்கு நீர் பெருக்கம் ஏற்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**46—**

**அணைக்கட்டு கட்டுதல்**

**வினா எண் 19768—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கன்னிமார் ஆற்றின் குறுக்கே 1987-ல் அணைக்கட்டு கட்ட அரசு நடவடிக்கை மேற்கொண்டு இதுவரை பணி துவங்காமல் இருப்பது அரசு கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இப்பணி துவங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**47—**

**கோட்டத்தை இரண்டாகப் பிரித்தல்**

**வினா எண் 19795—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் கோட்டம், நான்கு வட்டங்களை உள்ளடக்கி பெரிதாக இருப்பதால், இக்கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

48—

## அணைக்கட்டு தூர்வாரும் பணி

**வினா எண் 19718—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி ஆற்றிலுள்ள திருவைகுண்டம் அணைக்கட்டு பகுதி தூர்வாரப்பட்டு கரைகள் பலப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

49—

## நிலப் பட்டா வழங்கும் திட்டம்

**வினா எண் 19896—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் நிலப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பட்டா வழங்க இயலாது.

(ஆ) வினா எழாது.



50—

## பத்திரப்பதிவு வழிகாட்டி மதிப்பு நிர்ணயம்

**வினா எண் 22074—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பத்திரப்பதிவுத் துறை வெளியிட்டுள்ள வழிகாட்டி மதிப்பு தற்கால சந்தை மதிப்பை விட அதிகமாக உள்ளது என்ற பரவலான கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேறுபாடுகளைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கிராமங்களில் நிலவும் சொத்துக்களின் மதிப்பு, பொது மக்களின் கருத்து, விற்கிரய புள்ளி விவரங்கள் மற்றும் விசாரணைகள் மூலம் அறியப்படும் விவரங்களின் அடிப்படையில் வழிகாட்டி மதிப்புகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. நகர்ப்புறப் பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்புகள் கடந்த 1-4-2002 அன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளன. கிராமப்புறப் பகுதிகளுக்கான மதிப்புகள் 1-4-2000 அன்று திருத்தியமைக்கப்பட்டன. அவற்றில் முறையீடுகள் பெறப்பட்டால் அவை ஆய்வு செய்யப்பட்டு முரண்பாடுகளைக் களைவதற்கு நடைமுறையில் தக்க வழிவகைகள் உள்ளன.

51—

## பதிவுத் துறை அலுவலகத்திற்கு கட்டடம்

**வினா எண் 22514— திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

ஈரோட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பதிவுத் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஈரோட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**52—**

## வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்

**வினா எண் 22527—திரு. ந. கணபதி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில், வானூர் வட்டாட்சியர் அலுவலகம் புதியதாக கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வானூர் வட்டாட்சியர் அலுவலகம் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருவதால் புதிதாக கட்டித்தர வாய்ப்பில்லை.

**53—**

## சோடியம் ஆவி விளக்குகள்

**வினா எண் 22626— திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

சென்னை அண்ணா சாலையிலிருந்து ராஜாஜி ஹால் வழியாக சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திற்குச் செல்லும் சாலையில் உடனடியாக சோடியம் ஆவி விளக்குகள் பொருத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அண்ணா சாலையிலிருந்து, இராஜாஜி ஹால் வழியாக சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திற்கு செல்ல இரண்டு சாலைகள் உள்ளன. அவற்றில் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் உள்ள முதன்மை நுழைவு வாயில் வழியாகச் செல்லும் சாலையில் 25 சோடியம் ஆவி விளக்குகள் ஏற்கெனவே பொருத்தப்பட்டு, நல்ல நிலையில் இயங்கிவருகின்றன. தந்தை பெரியார் சிலை அருகில் உள்ள ஜார்ஜ் நுழைவு வாயில் வழியாகச் செல்லும் சாலையில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்த தொடர்புடைய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**54—**

## தாழ்த்தப்பட்டவருக்கு வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 23082— திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியில் நத்தம் மற்றும் வாரிப் புறம்போக்கு நிலங்களில் 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு நிலப்பட்டா வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், கோவை (வடக்கு) வட்டம், டவுன் கிருஷ்ணராயபுரம் கிராமம், புல எண் 599/1 வாரி புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆணை எண் 168, வருவாய்த் துறை, நாள் 27-3-2000-ன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளூர் திட்டக் குழுமத்தில் அனுமதி பெற்று பட்டா வழங்க வட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டது. உள்ளூர் திட்டக் குழுமத்தில் அனுமதி கிடைக்கப்பெறாததாலும், மாநகராட்சிப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆணை எண் 1127, வருவாய்த் துறை, நாள் 11-5-1971-ல் தடை செய்து ஆணையிடப்பட்டுள்ளதாலும், இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**55—**

### சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 23238—திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்தில் அமைந்துள்ள ஓரத்துப்பாளையம் அணைப் பகுதியில் சாலைகள் மிகப் பழுதடைந்துள்ளதைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்திடும் திட்டத்தின் (கட்டம் 3) கீழ் மேம்பாடு செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**56—**

### தார்ச் சாலையை சீரமைக்கும் பணி

**வினா எண் 23255— திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீனியூர்-முத்துக்கல்லூர் சாலை மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் கிராம நெடுஞ்சாலைத் துறை மூலம் தார்ச் சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு இப்பணி மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**57—**

### ஏழைகளுக்கு விட்டுமனைப் பட்டா

**வினா எண் 23285—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், எல்லம்பட்டி ஊராட்சியில் ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆக்கிரமிப்பு நிலம் ஏரி நீர் பரப்பு பகுதி என்பதால் பட்டா வழங்க இயலாது.

**58—**

### விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 23394—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் சுமார் 25 வருடங்களுக்கும் மேலாக வசித்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வடக்கு வட்டம், வள்ளியூர் பகுதி-1 கிராமம், புல எண் 1762 மற்றும் 1763 ஓடைப் புறம்போக்கு நிலத்தி. 15 நபர்கள் அரசு அனுமதியின்றி ஆக்கிரமித்து வீடு கட்டி வசித்து வருகின்றனர். ஓடைப் புறம்போக்கை நத்தமாக வகைமாற்றம் செய்து ஆக்கிரமிப்பாளர்களின் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

59—

## காட்டாற்றில் பாலம் கட்டும் திட்டம்

**வினா எண் 23420—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தையும், தஞ்சாவூர் மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் அறந்தாங்கி ஒன்றியம், மாத்தூர்-இராமசாமிபுரம்-பாலகிருஷ்ணபுரம் ஆகிய கிராமங்களுக்கு இடையில் செல்லும் காட்டாற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். இப்பாலப் பணி நபார்டு வங்கியின் கடனுதவியைப் பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பத்தாவது ஐந்து ஆண்டுத் திட்ட பெருந்திட்டத்தில் (Master Plan) சேர்க்கப்பட்டுள்ளது.

60—

## ஏரியை சீரமைத்தல்

**வினா எண் 23424—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

அறந்தாங்கி வட்டம், மங்களநாடு பெரிய ஏரியை மராமத்து செய்யும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

61—

## சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடம்

**வினா எண் 23442—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல், மணமேல்குடி, சுப்பிரமணியபுரம் ஆகிய சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் உள்ள மீமிசல் மற்றும் சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. மணமேல்குடி சார்பதிவகம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

62—

## கால்வாய்க்கு மடை கட்டுதல்

**வினா எண் 23477—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், செம்பட்டி பஞ்சாயத்து, திருமங்கலம் பிரதான 5 ஆம் கால்வாயில் செம்பட்டி பகுதிக்கு என தனியாக தனி மடை கட்டித்தர அரசு முன்வருமா?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

செம்பட்டி கண்மாய்க்குப் பாசன நீர் வழங்குவதில் எவ்விதப் பிரச்சினையும் எழவில்லையாதலால் தனி மடை அமைக்கும் நிலை எழவில்லை.

**63—**

### அமராவதி அணையின் கொள்ளளவை அதிகரித்தல்

**வினா எண் 23676—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாசன முறைகளை நவீனப்படுத்துவதையும், நிலை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு நிதி உதவி வேண்டி உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் உள்ள அமராவதி அணை பி.ஏ.பி. அணைகளின் கொள்ளளவை அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பி.ஏ.பி. பாசனத் திட்டத்திலுள்ள வாய்க்கால்களை மேம்படுத்துவதற்காக நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுதவி பெறப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் பி.ஏ.பி. வாய்க்கால்களை மேம்பாடு செய்திடுவதற்கு மட்டும்தான் திட்டமிடப்பட்டுள்ளது. அணைக்கட்டுகளின் கொள்ளளவை அதிகரிக்க ஏதும் திட்டமிடப் படவில்லை. மேலும் அமராவதி அணை காவிரிப்பேசின் (Basin) கீழ் வருவதால் உலக வங்கி உதவி போன்றவை வாங்க இயலாது.



2004 ஜூலை 31]

**64—**

### சாலைகளை சீரமைத்தல்

**வினா எண் 23679—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலை வட்டத்தைச் சேர்ந்த உடுமலைப் பேட்டை கொமரலிங்கம் முதல் பாப்பான்குளம் செல்லும் சாலை கி.மீ. 1/0 முதல் கி.மீ.1/8 வரை பழுதடைந்து உள்ளதால் அதை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை "இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் (கட்டம் 3)" கீழ் மேம்பாடு செய்வதற்கான கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**65—**

### சாலையை சீரமைத்தல்

**வினா எண் 23732—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த தளி குமரலிங்கம் சாலை முதல் அமராவதி நகர் செல்லும் சாலை கி.மீ.0/0-கி.மீ.3/6 வரை மேம்பாடு செய்துதர அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

66—

## சாலையை சீரமைத்தல்

**வினா எண் 23734—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை, கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த பெரிய வாளவாடி சர்க்கார்புதூர் சாலை கி.மீ.1/0 முதல் 3/0 வரை மேம்பாடு செய்துதர அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் யாதொரு திட்டத்தின் கீழும் மேம்பாடு செய்ய வழிவகை இல்லை.

67—

## சாலை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 23735—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை, கிராமச் சாலைகள் கோட்டத்தில் உள்ள பள்ளிவலசு ஆண்டியகவுண்டனூர் சாலை, கி.மீ.0/0-1/6 வரை மேம்பாடு செய்துதர அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்சமயம் கிராமச் சாலைத் திட்டத்தில் இப்பணி இடம் பெறவில்லை.



68—

## சாலையை சீரமைக்கும் பணி

**வினா எண் 23736—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை, கிராமச் சாலைகள் கோட்டத்தில் உள்ள எரிசினம்பட்டி-பிளவ நாயக்கன்பட்டி சாலை கி.மீ.0/0-1/6 வரை மேம்பாடு செய்துதர அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்சமயம் கிராமச் சாலைத் திட்டத்தில் இப்பணி எடுத்துக் கொள்ள இடம் பெறவில்லை.

69—

## கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 23737—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறையின் கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் "கிழவன் காட்டூர் முதல் பாப்பான்குளம் வரை" செல்லும் சாலை கி.மீ.0/0 முதல் கி.மீ.4/0 வரை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் பயனடையும் கிராமங்கள் ஏதும் இல்லாததாலும் பேருந்து போக்குவரத்து இல்லாததாலும் இச்சாலையை கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

[2004 ஜூலை 31

**70—**

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 23800—திரு. எஸ். நடராசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், சந்திராபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பணந்தோப்பு கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் வசித்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): ஊராட்சி ஆட்சேபணை காரணமாக பட்டா வழங்க இயலாது.*

**71—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 23802—திரு. எஸ். நடராசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், மண்டலநாயனகுண்டா ஊராட்சியில் புறம்போக்கு நிலங்களில் வசித்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.*



2004 ஜூலை 31]

**72—**

### சாலையை சீரமைத்தல்

**வினா எண் 23864—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சண்முகாபுரம்-மருக்காளக்குளம் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதை சீரமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை மேம்பாடு செய்யும் பணி, நபார்டு திட்டத்தின் 10-வது ஐந்தாண்டுத் திட்டப் பணியில் (Master Plan) சேர்க்கப்பட்டுள்ளது.*

**73—**

### சாலையை சீரமைத்தல்

**வினா எண் 23866—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேலபிள்ளையார்குளம்-கீழப்பிள்ளையார்குளம் வரை உள்ள நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பணியானது, தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.*

**74—**

## புறவழிச் சாலை அமைக்கும் பணி

**வினா எண் 23880—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரின் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரின் புறவழிச் சாலை அமைக்கும் பணியானது நடப்பாண்டில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

**75—**

## சுற்றுப்பாதையை அகலப்படுத்துதல்

**வினா எண் 23945—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர்-அவிநாசி சாலையில் பழைய மேம்பாலத்திற்கும், மில் ரோட்டிற்கும் இடையே உள்ள சுற்றுப்பாதையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுப்பாதையை அகலப்படுத்துவதற்கான திட்டம் எதுவும் இல்லை.



**76—**

## மேல் பவானித் திட்டம்

**வினா எண் 23948—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், அவிநாசி, பல்லடம், மேட்டுப்பாளையம், திருப்பூர் ஆகிய தாலுக்காக்கள் பாசன வசதி பெற மேல்பவானித் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேல் பவானித் திட்டம் என்ற திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**77—**

## நீர்ப்பாசனத் திட்டம்

**வினா எண் 23949—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் வட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் முற்றுப்பெறாமல் இருக்கும் முண்டந்துறை நீர்ப்பாசனத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் வட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் முற்றுப்பெறாமல் இருக்கும் முண்டந்துறை நீர்ப்பாசனத் திட்டத்தை விரைவுபடுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

78—

## சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 23978—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நில ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

79—

## புதிய மதுவிலக்குப் பிரிவு அமைத்தல்

**வினா எண் 23992—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆய்வாளர் அலுவலகம் திருப்பத்தூர் நகரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இவ்வினா எழவில்லை.

(ஆ) ஏற்கெனவே, வேலூர் மாவட்டத்தில் (i) இராணிப்பேட்டை (ii) வேலூர் மற்றும் (iii) வாணியம்பாடியில் ஒவ்வொரு மதுவிலக்குப் பிரிவுகள் ஒவ்வொரு ஆய்வாளர் தலைமையில் இயங்கி வருகின்றன. இதில், வாணியம்பாடி மதுவிலக்குப் பிரிவு, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டது. எனவே, திருப்பத்தூர் நகரில் புதிதாக ஒரு மதுவிலக்குப் பிரிவு அமைக்கத் தேவையில்லை.

80—

## சாலையை சீரமைத்தல்

**வினா எண் 24068—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, குருவித்துறையில் இருந்து பேரணை வரை உள்ள சாலையைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இச்சாலையைப் பழுது பார்க்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

81—

## தடுப்புச் சுவரில் கல் கட்டுமானம்

**வினா எண் 24434—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் யூனியன்-கோல்வார்பட்டி அணையிலுள்ள தடுப்புச் சுவர் கற்கள் அகற்றப்பட்டு உள்ளதால் தடுப்புச் சுவரில் கற்களைப் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையில் கைப்பிடிச்சுவரின் சேதங்களைப் போக்கி கல் கட்டுமானம் செய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

**82—**

## பாலங்களை சீரமைத்தல்

**வினா எண் 24450—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை, மன்னார்குடி சாலையில் மதுக்கூரிலிருந்து மன்னார்குடி வரை செல்லும் சாலை அகலப்படுத்தவும், முக்கியமான பாலங்கள் பலப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**83—**

## விவசாயிகளுக்கு கருணைத் தொகை

**வினா எண் 24617—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய கூலித் தொழிலாளர்கள் அகால மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்திற்கு கருணைத் தொகையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போதைய தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நிதி நிலைமை அடிப்படையில் மேற்கண்ட உதவித் தொகையை உயர்த்தி வழங்கும் வாய்ப்பு இல்லை.

**84—**

## விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 24620—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து உறுப்பினர் பங்களிப்பாக ரூ.7.21 கோடி எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) இதுவரை எந்தெந்த காரியத்திற்கு யார் யாருக்கு எத்தனை ரூபாய் முறைப்படி செலவழிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து உறுப்பினர் கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.7.21 கோடி தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சிக் கழக நிதி நிறுவனத்தில் (Tamil Nadu Transport Development Finance Corporation Limited) காலவரை வைப்புத் தொகையாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) வரப்பெற்ற மனுக்களின் மீது உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

85—

## சாதிச் சான்றிதழ்களை வழங்குதல்

**வினா எண் 24621—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பழங்குடியின மாணவிகட்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு கோட்டாட்சியர்கள் 10 மாதங்களுக்கு கால அவகாசம் எடுத்துக் கொள்வதால் அதனை விரைந்து வழங்குமாறு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சாதிச் சான்றுகள் கோரும் நேர்வுகளில் மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவும், எந்தவித புகார்களுக்கும் இடம் கொடாவண்ணம் கவனமுடன் செயல்பட வேண்டும் என்றும், தங்களது கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றும் அனைத்து வருவாய்க் கோட்ட ஆட்சியர்களுக்கும், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

*2. தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி 10 ஆம் வகுப்பு மற்றும் +2 மாணவ மாணவியர்களுக்கு அவர்கள் படிப்பை முடித்து பள்ளியை விட்டு வெளியேறும் தருவாயில் அவர்களுக்கு அவர்கள் படிக்கும் பள்ளிகள் மூலம் சாதிச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*3. எனவே எந்த மாவட்டத்தில் எந்த மாணவிக்கு சாதிச் சான்று வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.*



86—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 24644—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவை-பெரியநாயக்கன் பாளையம் பாலமலை ரங்கநாதர் கோவிலுக்கு கோவனூர் மலை அடிவாரத்திலிருந்து செல்லுமளவிற்கு அகலமான தார்ச் சாலை ஒன்று பாலமலை மீது அமைக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*இல்லை.*

87—

## சிறிய அணை கட்டும் திட்டம்

**வினா எண் 24669—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கலி ஊராட்சி, கரிப்பள்ளம் என்கிற இடத்தில் சிறிய அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

[2004 ஜூலை 31

88—

## வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கட்டடம்

**வினா எண் 24681—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்ட காரணம் ஏதும் இல்லை.

89—

## நிலங்களில் நுழைய அனுமதி

**வினா எண் 24683—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வருவாய்த் துறைக்குத் தொடர்புள்ள நிலங்களை அரசின் திட்டங்களுக்கு எடுத்துக் கொண்டு வேகமாக வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கு ஏதுவாக அந்நிலங்களில் நுழையும் அனுமதியை (Enter upon permission) மாவட்ட ஆட்சித்தலைவரே வழங்கலாம் என்று அரசு உத்தரவிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தடையாணைக்குட்பட்ட நிலங்கள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகள் ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் கோரிவரும் நேர்வுகள் ஆகியவற்றைத் தவிர்த்து, இதர நேர்வுகளில், நிலமாற்ற ஆணையை அரசிடமிருந்து எதிர்நோக்கி கேட்புத் துறைக்கு முன்நுழைவு அனுமதி



2004 ஜூலை 31]

வழங்கவும், துறைகளுக்குள் நில மாற்றம் செய்யும்பொழுது இரு துறைகளும் ஒத்துப்போகும் நேர்வுகளில், கேட்புத் துறை விண்ணப்பித்த ஒரு வார காலத்திற்குள் முன்நுழைவு அனுமதி வழங்கவும், மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதால், அரசின் திட்டப் பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு, அரசு புறம்போக்கு நிலங்களில் கேட்புத் துறைகளுக்கு முன்நுழைவு அனுமதி மாவட்ட ஆட்சியர்களால் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன.

90—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 24712—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 159 நபர்கள் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பித்திருந்தார்கள். 159 நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டு விட்டது.

91—

## வட்டத் தலைமையிடம்

**வினா எண் 25064—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தை வட்டத் தலைமையிடமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**92—**

## மகுடஞ்சாவடியை வட்டமாக உருவாக்குதல்

**வினா எண் 25077—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தை இரண்டாகப் பிரித்து மகுடஞ்சாவடியை வட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**93—**

## பட்டதாரிகளுக்கு எழுத்தர் சான்றிதழ்

**வினா எண் 25329—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு பத்திரம் எழுத பயிற்சி கொடுத்து அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எழுத்தர் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

## மேம்பாலம் அமைத்தல்

**வினா எண் 25365—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-1 தொகுதி, ஆனந்தா தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பாலத்தை மேம்பாலமாக அமைக்க அரசிடம் கருத்துரு ஏதும் தற்சமயம் இல்லை.

**95—**

## நில ஆக்கிரமிப்பு

**வினா எண் 26646—திரு. க. பாரமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்பாச்சேத்தி கிராமத்தில் சர்வே எண் 86/3 மற்றும் 86/5ஏ ஆகியவற்றில் உள்ள 1 ஏக்கர் 62 சென்ட் மயானப் புறம்போக்கு நிலம் தனி ஒரு நபரால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மேற்காணும் மயானப் புறம்போக்கு நிலம் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட நிலமாதலால், ஊராட்சி மன்றத்திலிருந்து ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி தீர்மானம் செய்து கிடைக்கும்பட்சத்தில், உடனடியாக ஆக்கிரமிப்பு அகற்றப்படும்.*

**96—**

## சாலை ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 27470—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, அ. புதூர் ஊராட்சி, கூத்தம்பாளையம் பகுதி மக்களுக்கான மயானச் சாலையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை அகற்றி பாதையினை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ. புதூர் கிராமம், கூத்தம்பாளையத்தில் வசித்து வருபவர்கள் புல எண் 23, ஏரிப்புறம் போக்கின் ஒரு பகுதியை மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதற்குச் செல்லும் பாதைக்காக புல எண் 8, 9 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அவை பொதுமக்களால் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இதில் தற்போது ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.*



**97—**

## குளம், கால்வாயை சீரமைத்தல்

**வினா எண் 27569—திரு. என்.கே. பெருமாள்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதி, தத்தனேரி-பல்லார் குளம் கால்வாயை மராமத்து செய்துதர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, தத்தனேரி-பல்லார் குளம் கால்வாயை மராமத்து செய்யும் பணி நீர்வள ஆதார அமைப்பு ஒருங்கிணைப்புத் திட்டம் II-ன்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

**98—**

## கண்மாய் அமைக்கும் திட்டம்

**வினா எண் 27832—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எட்டயபுரம், கான்சாபுரம் அருகே பாசன கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**99—**

## பாசனக் கண்மாயை நவினப்படுத்துதல்

**வினா எண் 27840—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிந்தலக்கரை பாசனக் கண்மாய் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிந்தலக்கரை பாசனக் கண்மாய் பழுதுபார்த்து நவீனப்படுத்தும் திட்டத்தை நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

**100—**

## நீர்ப்பாசன வசதி

**வினா எண் 28091— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், விவசாய நிலங்கள் அதிகமாக இருந்தும் நீர்ப்பாசன வசதி குறைவாக உள்ளதால் காவிரிப் படுகை தண்ணீரைப் புதுக்கோட்டைக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், செயற்திட்டம் ஏதேனும் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*



**101—**

## வால்பாறையில் பஸ் நிறுத்த இடம்

**வினா எண் 28128—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை பொதுப் பணித் துறை தங்கும் அறைகள் உள்ள உபயோகம் இல்லாமல் இருக்கும் இடத்தை வால்பாறை பஸ் நிறுத்த இடமாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**102—**

## பணிகளின் விவரம் அளித்தல்

**வினா எண் 28133—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் பொதுப் பணித் துறை மூலமாகச் செய்யும் பணிகள் விவரத்தை முன்கூட்டியே அந்த அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

[2004 ஜூலை 31

**103—**

**தனி வருவாய் கிராமம் அமைத்தல்**

**வினா எண் 28141—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சீயாளம் ஊராட்சியை தனி வருவாய்க் கிராமமாகப் பிரித்து செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**104—**

**சிறைச்சாலைக்கு கட்டடம்**

**வினா எண் 28239—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் உள்ள கிளைச் சிறைச்சாலைக்கு புதிய கிளை சிறைச்சாலை கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2004 ஜூலை 31]

**105—**

**ஓடையை தூர்வாரும் திட்டம்**

**வினா எண் 28792—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுசத்திரம் ஒன்றியம், காரைகுறிச்சி, நாத்தையங்கார்பட்டி, தோட்டலூர்பட்டி, நவனி ஏரி, அகரம் ஏரி, ஏரூர் ஏரி வழியாக திருமணிமுத்தாறு சென்றடையும் ஓடையை தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**106—**

**விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 28825—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட அளவிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், செஞ்சியிலுள்ள நிருபர்களுக்கு பட்டா வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு சில விதி முறைகளை ஏற்படுத்தியுள்ளது. வட்ட அளவிலான பத்திரிகை

[2004 ஜூலை 31

நிருபர்களின் கோரிக்கை விதிமுறைகளின்படி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) செஞ்சியில் வாழும் பத்திரிகை நிருபர்களின் கோரிக்கை வட்டாட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

**107—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 29769—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், பெரியபுத்தேரி/ஓட்டேரி, சென்னேரி கிராமங்களில் வாழ்ந்துவரும் 200 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பெரியபுத்தேரி மற்றும் ஓட்டேரி கிராமங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டப்பட்டுள்ள நிலம் மேய்க்கால் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தடை செய்யப்பட்ட இனமாதலால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. சென்னேரி கிராமத்தில் உள்ள ஆக்கிரமிப்பு பகுதி, புஞ்சை தரிசு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**108—**

## மனுக்கள் பைசலில் காலதாமதம்

**வினா எண் 30051—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களின் மனுக்களைப் பைசல் செய்வதில் நடைமுறைக் காலதாமதம் உள்ளதா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களின் மனுக்களைப் பைசல் செய்வதில் நடைமுறைக் காலதாமதம் ஏதும் இல்லை.

**109—**

## குட்டையைத் தூர்வாருதல்

**வினா எண் 30264—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிலத்தடி நீரைச் சேமிக்க குளம் மற்றும் குட்டையைப் பொதுப் பணித் துறையின் மூலம் தூர்வாரி சேமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**110—**

## வாய்க்காலைச் சீரமைக்கும் பணி

**வினா எண் 30266—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம் ஆழியார் அணை காண்டூர் வாய்க்கால் பழுது பார்ப்புப் பணி சரிவர செய்யப்படாததால் தண்ணீர் கசிவு உள்ளதை சரி செய்ய அரசு நிதி ஒதுக்கீடு செய்து பழுதுபார்க்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

உலக வங்கி நிதியுதவியுடன் காண்டூர் கால்வாயில் செய்து முடிக்கப்பட்ட வேலைகளுள் சில இடங்களில் ஏற்பட்டுள்ள சிறிய அளவிலான நீர்கசிவு உள்ளிட்ட சேதங்களைப் பழுதுபார்க்கும் பணிகள் ஏற்கெனவே வேலை செய்த ஒப்பந்தக்காரர் மூலம் அவருடைய செலவில் சரி செய்யப்பட்டு வருகிறது.

**111—**

## நிலத்திற்கு பட்டா வழங்குதல்

**வினா எண் 30671—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் வாழும் மக்களுக்கு அவர்களின் கையிருப்பு நிலத்திற்கான பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்தில் பட்டா வழங்க தடையாணை உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

**112—**

## பாசனக் கண்மாய்க்கு தண்ணீர்

**வினா எண் 31001—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைப்பாற்றில் நல்லி உப்போடை கலக்கும் இடத்தில் அணைக்கட்டு கட்டி நம்பிபுரம் பாசனக் கண்மாய்க்கு தண்ணீர் திருப்பிவிடப்படும் திட்டம் செயல்படுத்தப்படுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நல்லி உப்போடையின் குறுக்கே அணை கட்டி நம்பிபுரம் கண்மாய்க்கு நீர்வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாத்தியக்கூறு இருப்பின் செயலாக்கப்படும்.

**113—**

## மூன்று அடுக்குத் திட்டம்

**வினா எண் 31418—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்துப் பாசன ஏரிகளையும் மூன்று அடுக்குத் திட்டம் (Three Phase) ஒன்று உருவாக்கி மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள அனைத்துப் பாசன ஏரிகளையும் மூன்று அடுக்குத் திட்டம் (Three Phase) ஒன்று உருவாக்கி மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**114—**

## அணைக்கட்டுகளைச் சீரமைத்தல்

**வினா எண் 31426—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி, வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள வீரமங்கலம் அணைக்கட்டு, ஆவுடையார் கோவில் அணைக்கட்டு, கருங்காடு அணைக்கட்டு, மணலூர் அணைக்கட்டு,

[2004 ஜூலை 31

கிரனூர் அணைக்கட்டு, தண்டலை அணைக்கட்டு ஆகியவற்றை பழுதுபார்க்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப பழுதுபார்க்கப்படும்.*

**115—**

## அணையைக் கட்டி நீரைத் தேக்குதல்

**வினா எண் 31429—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவில்பட்டி தொகுதி, திருவேங்கடத்தைச்சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் நிட்சேப நதியின் குறுக்கே அணையைக் கட்டி நீரைத் தேக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**116—**

## ஆற்றின் குறுக்கில் தடுப்பு அணை

**வினா எண் 31453—திருமதி வி. சிவகாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் அமராவதி ஆற்றின் குறுக்கே சிறிய தடுப்பு அணை கட்ட (செக்டேம்) நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் அமராவதி ஆற்றில் பாசனத்திற்காக ஏற்கெனவே 23 தடுப்பு அணைகள் உள்ளதால் தற்போது அணை கட்டும் திட்டம் ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.*

**117—**

## தனி தாலுக்கா ஏற்படுத்தும் திட்டம்

**வினா எண் 31646—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியை மையமாகக் கொண்டு தனி தாலுக்கா ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இலலை.*

*(ஆ) வினா எழாது.*

**118—**

## பூங்காவினை அழகுபடுத்துதல்

**வினா எண் 33234—திரு. வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொள்ளாச்சி பகுதியில் ஆழியார் அணையில் உள்ள பூங்காவினை மேலும் அழகுபடுத்தி சிறப்புறச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**1**

**விவசாயிகளுக்கு பாசனத் திட்டம்**

**வினா எண் 33303—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி பகுதியில் பரம்பிக்குளம்-ஆழியார் பாசனப் பகுதியில் விடுபட்டுப்போன விவசாய நிலங்கள் பாசன வசதி பெற பாசனத் திட்டத்தில் சேர்க்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பி.ஏ.பி. திட்டத்தில் புதியதாக ஆயக்கட்டு சேர்க்க இயலாது.

**120—**

**நீர்த்தடுப்பு அணைகள்**

**வினா எண் 33327—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திடவும், குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிடவும் வைப்பாற்றின் குறுக்கே நீர்த்தடுப்பு அணைகள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது. சாத்தியக்கூறு இருப்பின் மதிப்பீடு தயாரிக்கப்படும்.

**121—**

**மகளிருக்கு சிறைச்சாலை**

**வினா எண் 34529—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழியில் இயங்கி வந்த மகளிருக்கான தனி கிளைச் சிறைச்சாலை மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, சீர்காழியில் 28 சிறைவாசிகளுக்கான இடவசதியினைக் கொண்ட கிளைச் சிறை ஒன்று இயங்கி வருகின்றது. இதற்கு முன்னர் இக்கிளைச் சிறையில் பெண் சிறைவாசிகளும் அடைக்கப் பட்டு வந்தனர். ஆனால் திருவாரூர் கிளைச் சிறை முற்றிலுமாக பெண் சிறைவாசிகளுக்கான கிளைச் சிறையாக மாற்றம் செய்யப்பட்டுவிட்டதால் சீர்காழியினைச் சேர்ந்த மகளிர் சிறைவாசிகள் தற்பொழுது திருவாரூர் கிளைச் சிறையில் அடைக்கப்படுகின்றனர். சீர்காழி கிளைச் சிறை மகளிருக்கான தனிக் கிளைச் சிறையாக முன்னரும் செயல்பட்டு வரவில்லை. எனவே அதனை மீண்டும் மகளிர் தனிச் சிறையாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2004 ஜூலை 31

**122—**

### புயல் பாதுகாப்புக் கட்டடம்

**வினா எண் 34725—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, திருநகரி கீழ்ப்பகுதியில் வாழ்கின்ற கிராம மக்களுக்கு மழை, புயல் காலங்களில் தற்காப்புக்காக புயல் பாதுகாப்பு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**123—**

### மக்களுக்கு குடியிருப்பு பட்டா

**வினா எண் 36080—திரு. எஸ்.எம். சீனிவேல்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அவனியாபுரம் பேரூராட்சி, வார்டு எண் 15, வெள்ளக்கல் பகுதியிலுள்ள மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நீண்ட காலமாக குடியிருந்துவரும் மக்களுக்கு குடியிருப்பு பட்டா வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*அவனியாபுரம் பேரூராட்சி, வார்டு எண் 15, வெள்ளக்கல் உட்கடை, அயன்பாப்பாகுடி கிராமம், புல எண் 156-ல் உள்ளடங்கிய நிலங்களில் 200 குடியிருப்புகள் உள்ளன. மேற்படி இடம் கிராம கணக்குகளின்படி, புல எண் 156-ல் உள்ளடங்கிய நிலங்கள் மதுரை மாநகராட்சி பெயரில் பதிவாகி உள்ளது. இது வெள்ளக்கல் என்ற பெயரில் அயன்பாப்பாகுடி கிராமத்தில் உட்கடையாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு செய்வது குறித்து, மதுரை மாநகராட்சி நிர்வாகம் நில உரிமையினை விட்டுக்கொடுத்தால்தான் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க இயலும். இது தொடர்பாக மாநகராட்சி நிர்வாகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே தற்போது பட்டா வழங்க இயலாது.*



2004 ஜூலை 31]

**124—**

### மருத்துவமனை விரிவுபடுத்துதல்

**வினா எண் 11681—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மேலும் விரிவுபடுத்த அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நாளுக்கு நாள் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது இக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு மாணவர்கள் சேர்க்கை 75-இலிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் மாணவர் சேர்க்கைக்கு ஏற்பவும் இந்திய மருத்துவக் கழக விதிகளுக்கு ஏற்பவும் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு கருவிகள் வாங்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.*

**125—**

## மருத்துவமனை அமைக்கும் திட்டம்

**வினா எண் 13087—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**126—**

## தாய்—சேய் நல விடுதி

**வினா எண் 18068—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியில் உள்ள புறம்போக்கு நிலத்தில் டேனிடா திட்டத்தின்கீழ் தாய்—சேய் நல விடுதி கட்டிக் கொடுக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியில் உள்ள



புறம்போக்கு நிலத்தில் டேனிடா திட்டத்தின்கீழ் தாய்—சேய் நல விடுதி கட்டிக் கொடுக்க திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**127—**

## வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 18382—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

**128—**

## அறுவை சிகிச்சை

**வினா எண் 18782— [illegible] டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பட்டம் பெறாத மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் எம்.எஸ். பட்டம் பெற்ற மூன்று மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் இல்லாதபோது பயிற்சி பெற்ற மருத்துவர்களால் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

**129—**

**உணவு முறையில் மாற்றம்**

**வினா எண் 23846—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனையில் உள்ள உள்நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் உணவு முறையில் மாற்றம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எதன் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனையில் உள்ள உள்நோயாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் உணவு வகைகள் ஊட்டச்சத்து மிக்கதாகவும், நோயின் தன்மைக்கேற்ப உணவு வகைகள் வழங்கப்படுவதாலும், இந்த ஏற்பாட்டு முறையில் மாற்றம் செய்யும் உத்தேசம் ஏதும் இல்லை.

**130—**

**குருதி சேமிப்பு மையம்**

**வினா எண் 27466—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தற்போது இயங்கி வரும் இரத்த வங்கிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது 83 அரசு இரத்த வங்கிகளும் 106 தனியார் இரத்த வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன. இது தவிர 12 குருதி வங்கிகளுக்கு உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மருந்துக் கட்டுப்பாடு இயக்குநரால் உரிமம் வழங்கியவுடன் இந்த 12 குருதி வங்கிகள் செயல்படத் துவங்கும். 7 மருத்துவமனைகளில் குருதி மையங்கள் (Blood Storage Centre) அமைக்க அனுமதி பெறப்பட்டு அவை செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 6 குருதி சேமிப்பு மையங்கள் தொடங்கவும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் நிதி உதவியுடன் 11 இடங்களில் குருதி சேமிப்பு மையம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**131—**

**போதை மருந்து விற்பதைத் தடுத்தல்**

**வினா எண் 28571—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போதை மருந்துகள் விற்பதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

போதை மருந்துகள் விற்பதைத் தடுக்க மருந்து ஆய்வாளர்கள், மருந்து மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் (D&C) Actஇன்கீழ் மருந்து விற்பனை செய்யும் மொத்த மருந்து வியாபார நிறுவனங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களை அடிக்கடி திடீர் ஆய்வுகள் செய்து, சரியான உரிமம்

பெற்ற மருந்துகளைத்தான் நிறுவனங்கள் விற்பனை செய்துள்ளனரா என்று சரிபார்க்கின்றனர். தவறான பயனீடுள்ள மருந்துகள் விற்போர்மீது மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் (D&C)இன்கீழ் பதிவு செய்து வழக்கு தொடுக்கின்றனர்.

**132—**

### மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 31659—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.*

**133—**

### புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 31662—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பல்லவராயன்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பல்லவராயன்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**134—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 32123—ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம், தைலாம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், தைலாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**135—**

### மருத்துவர்களை நியமனம் செய்தல்

**வினா எண் 35261—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

**136—**

## புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 35942—திரு. எஸ். மகாலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அவிநாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், களியாம்பாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் நடப்பாண்டில் அமைத்துத் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியம், களியாம்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**137—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 37368—திரு. எஸ். மகாலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அவிநாசி ஒன்றியம், நரியம்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் நடப்பாண்டில் அமைத்துத் தரப்படுமா?*



*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், நரியம்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**138—**

## படுகா இன மக்கள்

**வினா எண் 1606—திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நீலகிரி மாவட்டத்திலுள்ள படுகா இன மக்களை ஆதி திராவிடர் இனத்தில் சேர்க்க மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*படுகா இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரி 5-9-2003 நாளிடப்பட்ட நேர்முகக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.*

**139—**

## மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 1607—திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?*

*(ஆ) இல்லை எனில், இம்மாவட்டத்தை இத்திட்டத்தில் சேர்க்க மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) மாநில அரசு பரிந்துரை செய்யும் நிலையில் இல்லை.

**140—**

## மணிமண்டபம்

**வினா எண் 7189—மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கருக்கு மணிமண்டபம் 5 கோடி ரூபாயில் கட்டுவதற்காக 14-4-1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அடிக்கல்லினை அகற்றிவிட்டு மணிமண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அடிக்கல்லினை மீண்டும் நிறுவ அரசு முன்வருமா?

(இ) மணிமண்டபத்தை சீரிய முறையில் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 14-4-1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால் நாட்டப்பட்ட அடிக்கல் தற்போது பிரதான கட்டட முகப்பில் பதிக்கப்பட்டுள்ளது.

(இ) இம்மணிமண்டபம் பொதுப் பணித் துறை மூலம் தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**141—**

## வங்கிக் கடன் வழங்கும் திட்டம்

**வினா எண் 8031—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிறு தொழில் செய்வதற்காக அரசு வங்கியில் கொடுத்த மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் அரசு வங்கிக் கடன் வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

வங்கிகளால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குத் துறை மூலம் கடன்கள் வழங்க இயலாது.

**142—**

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 20303—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு என தனியாக தொழிற்பயிற்சி நிலையம் (ஐ.ஐ.டி.) துவங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**143—**

## கல்வி காப்புறுதி மையம்

**வினா எண் 20767—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள படிக்க வசதியற்ற ஆதிவாசிகளின் குழந்தைகளை படிக்க வைக்க அரசு தனிக் கவனம் செலுத்துமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் கல்வி கற்கும் வயதுடைய பிள்ளைகளில் 341 பேர் பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயிலுகின்றனர். மீதி 149 பிள்ளைகள் கல்வி பயிலுவதற்கு கல்வி காப்புறுதி மையங்கள் அமைக்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர்.

**144—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 23229—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சாதிச் சான்றிதழ் கோரும் பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவிகளின் பெற்றோர்களை அச்சுறுத்தி வருவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சாதிச் சான்றிதழ் கோரும் பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவிகளின் பெற்றோர்களை அச்சுறுத்துவதாக தகவல் ஏதும் அரசுக்கு வரவில்லை.

**145—**

## ஆதி திராவிடர் பெண்களுக்கு விடுதி

**வினா எண் 37593—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சியில் ஆதி திராவிடர் பெண்களுக்கு விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக ஆதி திராவிடர் மாணவ மாணவியர் விடுதிகள் துவங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**146—**

## உயிரி தொழில்நுட்பப் பூங்கா

**வினா எண் 23578—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டிட்கோ நிறுவனத்தின் உதவியுடன் துவக்கப்பட்டுள்ள உயிரி தொழில்நுட்பப் பூங்கா தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ரூ.1,000/- கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க அரசு எடுத்துவரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-4-2003 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. இப்பூங்கா விரைவில் செயல்படத் தொடங்கும். இந்தியா மற்றும் அயல்நாட்டு நிறுவனங்கள் தங்களது ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கூடங்களை இப்பூங்காவில் நிறுவ உள்ளன. இந்நிறுவனங்கள் மேற்கொள்ளவிருக்கும் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்படும் உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதற்கு பெருமளவில் முதலீடுகள் கொண்ட தொழிற்சாலைகள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**147—**

## ஃபிரெய்ஸ் திட்ட செயலாக்கப் பணிகள்

**வினா எண் 23771—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

100 சதவீதம் ஏற்றுமதி நோக்கிலான ஃபுரோசன் ஃபிரெஞ்சு ஃபிரெய்ஸ் திட்ட செயலாக்கப் பணிகள் எப்போது நிறைவு பெறும்?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

இத்திட்டம், ரூபாய் 38.08 கோடி முதலீட்டில் கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டத்தில் நிறுவப்பட்டு 30-4-2003 முதல் வணிக ரீதியான உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

**148—**

## கூட்டுறவு இணையத்தில் முறைகேடுகள்

**வினா எண் 3328—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார் உள்ளதா?

(ஆ) இது குறித்து விசாரணைக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாக எந்தவித புகாரும் இல்லை.

**149—**

## கறவை மாடுகள் வாங்க கடன்

**வினா எண் 13328—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பால் உற்பத்தியைப் பெருக்க சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்க கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் இதுவரை சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**150—**

## பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 31038—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி அல்லது அருகில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

செஞ்சி அல்லது அருகில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசிடம் திட்டமேதும் இல்லை.

**151—**

## ஆவின் பாலில் தண்ணீர் கலப்பு

**வினா எண் 32038—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பாலில் சில தனியார் வியாபாரிகள் தண்ணீர் கலப்பதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அவர்கள்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவின் பாலில் தனியார் வியாபாரிகள் தண்ணீர் கலப்பதாக புகார்கள் வந்து அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார்

தரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்பொழுது இது சம்பந்தமாகப் புகார் எதுவும் இல்லை.

**152—**

### பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 37534—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அரசால் ஏற்படுத்தித்தர வாய்ப்புகள் இல்லை.

**153—**

### பால் சேமிப்பு குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 44716—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் பால் சேமிப்பு குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் பால் சேகரிப்பு குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.





**154—**

### தானியங்கி பால் நிலையம்

**வினா எண் 44717—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவில்பட்டி நகரில் தானியங்கி பால் நிலையம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி நகரில் தானியங்கி பால் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**155—**

### ஜரிகை தொழிற்சாலை

**வினா எண் 10443—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ராணிப்பேட்டை தொகுதியில் ஜரிகை தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர்:**

(அ) ராணிப்பேட்டை தொகுதியில் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏதும் செயல்படவில்லை. எனவே, பிரத்யேகமாக ராணிப்பேட்டையில் ஜரிகை ஆலை துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**156—**

## விசைத்தறித் தொழிலாளர்களுக்கு கடன்

**வினா எண் 47833—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் விசைத்தறித் தொழில் செய்பவர்களுக்கு நபார்டு வங்கி மூலம் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர்:**

*நபார்டு வங்கி மூலம் விசைத்தறி நெசவாளர்களுக்கு கடன் உதவி பெற்று அரசு வழங்குவதற்கு வாய்ப்பில்லை. எனினும், தனியார் விசைத்தறி நெசவாளர்கள் தாங்கள் மேற்கொள்ளும் விசைத்தறி தொழிலின் தன்மைக்கு ஏற்ப மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமும், கடனுதவி பெறலாம்.*

**157—**

## மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வு

**வினா எண் 15016—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் அடிக்கடி தாக்கப்படுவதைத் தடுக்க நிரந்தரத் தீர்வு காண அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும்போது இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து பாதுகாத்திட வேண்டியும் அம்மீனவர்களின் நலன் கருதியும் சர்வதேச எல்லைக்கோட்டை எக்காரணத்தைக் கொண்டும் கடந்து சென்று இலங்கைக் கடற்பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடக் கூடாது என்று அவ்வப்போது அறிவிப்புகள் செய்யப்பட்டும் வருகின்றன. மேலும் இந்திய கடலோர காவற்படை மற்றும் கப்பற்படை ஆகியனவும் சர்வதேச கடல் எல்லை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு அவ்வப்போது மீனவர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பும் செய்கின்றன. இதனால் தமிழக மீனவர்கள் தமிழக கடற்பகுதியில் மீன்பிடிக்கும்போது அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் இந்திய-இலங்கை அரசுகளின் அதிகாரிகளடங்கிய உயர் மட்டக் குழு ஒன்று இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக உருவாக்கப்படவுள்ளது. அதுபோன்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றும் இதுபோன்று எழும் பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக்கொள்ளும் பொருட்டு அமைக்கப்படவுள்ளது.*



**158—**

## மீன் பிடிக்க உரிமம்

**வினா எண் 20217—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கச்சத்தீவை மீட்டு தமிழக மீனவர்களுக்கு மீன்பிடி உரிமையைப் பெற்றுத்தர தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?*

*(ஆ) ஆம் எனில், இப்பிரச்சினையில் அரசின் ஆக்கப்பூர்வமான செயல் திட்டம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சென்ற 3-10-1991 அன்று கச்சத்தீவையும், அதற்கு அருகிலுள்ள கடற்கரைப் பகுதிகளையும், இலங்கை அரசிடமிருந்து திரும்பப் பெற வேண்டி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றி மத்திய அரசின் வெளி விவகாரத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து*

[2004 ஜூலை 31

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கச்சத்தீவை நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் மீன்பிடிக்க 3 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கியதைப் போன்று, இந்திய தமிழக மீனவர்களும் இலங்கை கடற்பகுதிக்குள் சுமார் 5 கடல் மைல் தூரம் சென்று மீன்பிடிக்க உரிமம் பெற்றுத்தர இலங்கை அரசை வலியுறுத்துமாறும் கேட்டுக்கொண்டார். இதுகுறித்து ஆய்வு செய்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**159—**

**மீனவ குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகை**

**வினா எண் 30221—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மரணம் அடைந்தால், அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகை அரசு வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், விதிமுறைகள்/நடைமுறைகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மீனவர் குழு காப்புறுதித் திட்டத்தில் பங்கு பெற்று சந்தாத் தொகையைச் செலுத்தி வரும் மீனவர், கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது மரணமடைந்தால் அவர்களது குடும்பத்தினர், ஆறு மாதங்களுக்குள் விண்ணப்பம் தக்க சான்றுகளுடன் சமர்ப்பித்தால் காப்புறுதி நிறுவனங்களிலிருந்து நிவாரணம் பெற்று வழங்கப்படும்.

**160—**

**மீன் விற்பனை அங்காடி**

**வினா எண் 31642—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் கூட்டுறவு விற்பனை அங்காடி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**161—**

**மீனவக் குப்பங்களில் இலவச வீடு**

**வினா எண் 36683—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சதுரங்கப்பட்டினம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களிலுள்ள மீனவக் குப்பங்களில் இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சதுரங்கப்பட்டினம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களிலுள்ள மீனவக் குப்பங்களில் இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

**162—**

**மீன்வளப் பெருக்கத் திட்டம்**

**வினா எண் 37156—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கடலில் மீன்வளத்தைப் பெருக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தமிழக கடலில் மீன்வளத்தைப் பெருக்கிடும் நோக்கத்தோடு ஒரு திட்டமாக இறால் குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டத்தினை (Sea Ranching) தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

**163—**

**மீன் அருங்காட்சியகம்**

**வினா எண் 37397—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், திருமூர்த்தி அணை அருகில் "திருமூர்த்தி வண்ண மீன் காட்சியகம்" அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

நடப்பு ஆண்டில் மேற்படி திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**164—**

**மீன் விற்பனை அங்காடி**

**வினா எண் 37523—திரு. ந. கணபதி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்தில் சில்லரை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்தில் சில்லரை மீன் விற்பனை அங்காடிகளை மீன் துறை மூலமாக அமைத்திட தற்போது திட்டம் எதுவும் இல்லை.



**165—**

**மீன் விற்பனை அங்காடி**

**வினா எண் 37547—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில், சங்கராபுரம், சின்னசேலம், வெள்ளிமலை ஆகிய இடங்களில் சில்லரை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் சங்கராபுரம், சின்னசேலம், வெள்ளிமலை ஆகிய இடங்களில் சில்லரை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

**166—**

**மீன் வகை வளர்ப்பு திட்டம்**

**வினா எண் 37684—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலேரியா கொசுவைத் தின்னும் மீன் வகைகளை வளர்த்து பொது மற்றும் தனியார் கிணறுகளில் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலேரியா கொசுவைத் தின்னும் மீன் வகைகளை வளர்த்து பொது மற்றும் தனியார் கிணறுகளில் விட அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

**167—**

**மீன் உலர்களம்**

**வினா எண் 41273—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதுமுள்ள கடலோர மீனவ கிராமங்களில் மீன் உலர்களம் அமைக்கும் செயல்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கடலோர மீனவ கிராமங்களில் மீன் உலர்களம் புதிதாக அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

**168—**

**கடலரிப்பு தடுத்தல்**

**வினா எண் 44643—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, ஒய்யாரி மற்றும் புதுப்பட்டினம் குப்பங்களில் கடலரிப்பை நிரந்தரமாகத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, ஒய்யாரி மற்றும் புதுப்பட்டினம் குப்பங்களில் கடலரிப்பை நிரந்தரமாகத் தடுக்க பொதுப் பணித் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





**169—**

**கடல்வாழ் உயிரினங்களின் பொருட்கள்**

**வினா எண் 44827—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்வாழ் உயிரினங்களான சங்கு, சிப்பி உட்பட 24 அரிய வகை பொருட்களின் விற்பனைக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்க மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிக்கை ஏதேனும் வைத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தடையை நீக்க/தளர்த்த மத்திய அரசுக்கு இவ்வரசு கடிதம் எழுதி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**170—**

**மீன்பிடித் துறைமுகம்**

**வினா எண் 45210—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், பொன்னகரம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னகரம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மீன்பிடித் துறைமுகத்திற்குப் பதிலாக நிலத்தை அடிப்படையாகக் கொண்ட கரையோர வசதிகள் மட்டும் கொண்ட மீன் இறங்கு தளத்தினை ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**171—**

## மீன் வளர்ப்புப் பண்ணை

**வினா எண் 48141—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப்பில் மீன் வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள டாப்சிலிப் பகுதி காப்புக்காடு* (Reserved Forests). *ஆகும் அங்கு நீர்த்தேக்கம்/நீர்நிலைகள் ஏதுமில்லை. எனவே அங்கு மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க வாய்ப்பில்லை.*

**172—**

## மீன் விற்பனை அங்காடி

**வினா எண் 46287—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள டாப்சிலிப் மற்றும் பரம்பிக்குளம் அணை அருகிலும் மீன் விற்பனை அங்காடி ஒன்றை அரசு ஏற்படுத்த முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப் மற்றும் பரம்பிக்குளம் அணை அருகிலும் மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போதைக்கு அரசிடம் இல்லை.*



**173—**

## மீன் பண்ணைகள்

**வினா எண் 45658—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சோலையார் அணை மற்றும் ஆழியாறு அணை அருகிலும் மீன் பண்ணைகள் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு அணைப் பகுதியில் ஏற்கெனவே முழு வசதிகளுடன் கூடிய மீன் பண்ணை அமைக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் செயல்பட்டு வருகிறது. சோலையார் அணையில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொன்மீன் பொறிப்பகம் மற்றும் மீன் பண்ணை ரூ.70.00 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

**174—**

## மீன் பதப்படுத்தும் கூடம்

**வினா எண் 47157—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, மடவாமேடு மீனவர் கிராமத்தில் மீன் பதப்படுத்தும் கூடம் மற்றும் மீன் உலர்த்தும் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக கடலோர மாவட்டங்களில் ஒன்பது இடங்களில் மீன் ஏலக் கூடம் மற்றும் உலர்களம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக மீன் பதப்படுத்தும் கூடம் மற்றும் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடமில்லை.

(ஆ) வினா எழாது.

**175—**

## கடற்கரையின் முகத்துவாரங்கள்

**வினா எண் 48602—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல், பழையார் ஆகிய ஊர்களில் உள்ள கடற்கரையின் முகத்துவாரங்கள் அடைபட்டுள்ளதை தூர்வார அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல், பழையார் ஆகிய ஊர்களில் உள்ள ஆற்று முகத்துவாரங்களில் தூர் எடுப்பது தொடர்பான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**176—**

## கடல்சார் அருங்காட்சியகம்

**வினா எண் 49999—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் கடல்சார் அருங்காட்சியகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**177—**

## மீனவர்களை கொள்ளையரிடமிருந்து காத்தல்

**வினா எண் 50069—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை, ஆந்திர கடல் கொள்ளையர்களிடமிருந்து காக்க செயல்திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**178—**

## புதிய விசைப்படகு

**வினா எண் 50119—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்வளத் துறையின் ஆய்வுக்காக மீன்வளத் துறையின் மூலம் புதிய விசைப்படகு வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு மீன் துறையின் கட்டுப்பாட்டில், கன்னியாகுமரி, சென்னை, மல்லிப்பட்டிணம் மற்றும் பழையார் ஆகிய

இடங்களில் கடலில் உள்ள மீன்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளைக் கண்டுபிடிக்க அண்மைக் கடல் மீன்பிடிப்பு அளவை ஆய்வு நிலையங்கள் அரசால் துவக்கப்பட்டன. மீன் துறை மறுசீரமைப்பின்போது அளவை ஆய்வு நிலையங்கள் தொடர்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட நான்கு இடங்களில் செயல்பட்டு வந்த அண்மைக் கடல் மீன்பிடிப்பு அளவை ஆய்வு நிலையங்கள் அளவாய்வை முடித்து விட்டமையால் பழையார் மற்றும் மல[illegible]ட்டிணத்தில் இருந்த அளவை ஆய்வு நிலையங்கள் மூடப்பட்டன. எனவே, பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்வளத் துறையின் ஆய்விற்காக புதிய விசைப்படகு வாங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**179—**

## மீன்பிடித் துறைமுகம்

**வினா எண் 53827—திரு. என்.கே. பெருமாள்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் சிறிய மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, வேம்பார் கிராமத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**180—**

## நீர்விழ்ச்சி சுற்றுலாத் தலம்

**வினா எண் 7687—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், குட்லாம்பட்டியில் நீர்வீழ்ச்சி உள்ளதால் இங்கு தங்கும் விடுதி ஒன்று அமைத்து இதை சுற்றுலாத்தலமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், குட்லாம்பட்டியில் நீர்வீழ்ச்சி உள்ளதால் இங்கு தங்கும் விடுதி ஒன்று அமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**181—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 7690—திரு. கா.பூ. முனுசாமி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி அணையை சுற்றுலாத் தலமாக்கிட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*கிருஷ்ணகிரி அணையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**182—**

## அய்யனார் கோவிலை சுற்றுலா மையமாக்குதல்

**வினா எண் 7866—திரு. மா. இராஜசேகர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராஜபாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள அய்யனார் கோவிலை சுற்றுலா மையமாக அமைக்க அரசு முன் வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*ராஜபாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள அய்யனார் கோவிலை சுற்றுலா மையமாக அறிவிக்க தற்பொழுது எவ்வித செயற்குறிப்பும் பரிசீலனையில் இல்லை.*

**183—**

**புதிய சுற்றுலாத்தலங்கள்**

**வினா எண் 10908—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மாநிலத்தில் புதிய சுற்றுலாத்தலங்களை ஏற்படுத்த எந்தெந்த மாவட்டங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*மாநிலத்தில் புதிய சுற்றுலாத்தலங்களை ஏற்படுத்துவது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**184—**

**பச்சைமலையை சுற்றுலாத்தலமாக்குதல்**

**வினா எண் 34573—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பச்சைமலையை சுற்றுலாத்தலமாக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*பச்சைமலையை சுற்றுலாத்தலமாக்குவது குறித்து எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**185—**

**வ.உ.சி. பூங்காவை சுற்றுலாத்தலமாக்குதல்**

**வினா எண் 48088—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு, வ.உ.சி. பூங்காவை சுற்றுலாத்தலமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*ஈரோடு, வ.உ.சி. பூங்காவை சுற்றுலாத்தலமாக்குவது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**186—**

**பிரதான குழாய்கள் மாற்றுதல்**

**வினா எண் 9654—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 8வது வட்டம், காரனேசன் நகர், அஜிஸ் நகர், காந்தி நகர், காமராஜர் நகர், மாரிமுத்து நகர் ஆகிய தெருக்களுக்கு தண்ணீர் வழங்கும் பிரதான குழாய்களை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*பிரதான குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டு தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

**187—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 9659—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், மீனாம்பாள் நகர், 6-வது தெருவில் குடிநீரில் கழிவுநீர் கலந்து ஏற்படும் சுகாதாரக்கேட்டை களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2004 ஜுலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவது தடுக்கப்பட்டு, தற்போது தரமான குடிநீர், குழாய் மூலம் விநியோகிக்கப்படுகிறது.*

**188—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 9663—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12-வது வட்டம், முத்தையா முதலி தெருவில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதால் ஏற்படும் சீர்கேடுகளைக் களைய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*12-வது வட்டம், முத்தையா முதலி தெருவில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவது சரி செய்யப்பட்டு, தற்போது தரமான குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.*

**189—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 9666—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டத்தில் அனைத்து இடங்களிலும் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து மக்கள் பயன்படுத்த தகுதியில்லாமல் இருக்கும் நீண்ட காலக் குறையைத் தீர்க்க அரசு முன்வருமா?*



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டத்தில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வருவது தடுக்கப்பட்டு சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறது.*

**190—**

## அருவியைச் சுற்றி பொழுதுபோக்கு கலைகள்

**வினா எண் 10917—திரு. எம். சக்திவேல் முருகன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பாபநாசம் அகத்தியர் அருவியைச் சுற்றி பொழுதுபோக்கு கலைகள், சறுக்குகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அதனைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பாபநாசம் அகத்தியர் அருவியைச் சுற்றி பொழுதுபோக்கு கலைகள், சறுக்குகள் அமைப்பது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**191—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12262—ஸ்ரீ [illegible] கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட மாரிமுத்தான்வளவில் மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட மாரிமுத்தான்வள்வில் மேல்நிலைத் தொட்டி கட்டி, அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**192—**

**காயிதே மில்லத் மணிமண்டபம்**

**வினா எண் 14767—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காயிதே மில்லத் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் கட்டி முடிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம், சென்னை காயிதேமில்லத் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**193—**

**திருமண மண்டபம் சீரமைத்தல்**

**வினா எண் 16443—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியில் 26-வது வார்டு, புலியகுளத்தில் 1995 ஆம் ஆண்டு ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்ட திருமண மண்டபம் எப்போது பழுதுபார்க்கப்பட்டு பொதுமக்கள் உபயோகத்திற்கு அளிக்கப்படும்?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாநகராட்சி, வார்டு எண் 26-க்குட்பட்ட புலியகுளத்தில் திருமண மண்டபம் தற்போது பொதுமக்கள் பயன்பெறும் நிலையில் உள்ளது.

**194—**

**திட்டப் பணிகள்**

**வினா எண் 16796—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக செய்யப்பட்டு வரும் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்களினால், 2001-2002 ஆம் ஆண்டில் 6,559 பணிகளும், 2002-2003 ஆம் ஆண்டில் 22,477 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**195—**

**ஊராட்சியினைப் பிரித்தல்**

**வினா எண் 23058—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, திருநாவலூர் ஒன்றியத்தில் சேந்தமங்கலம் ஊராட்சியினை மூன்றாகப் பிரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநாவலூர் தொகுதி, திருநாவலூர் ஒன்றியத்தில் சேந்தமங்கலம் ஊராட்சியினை மூன்றாகப் பிரிப்பது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**196—**

**குளத்தை தூர்வாரி சீரமைத்தல்**

**வினா எண் 24364—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் பேரூராட்சி அருகில் உள்ள குளத்தை தூர்வாரி சுத்தப்படுத்தி மழை நீரைத் தேக்கி சேமித்து குடிநீருக்குப் பயன்படுத்த வகை செய்து கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இப்பணி செய்வதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.

**197—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30854—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ஈட்டினார் டிவிசனில் கல்லாறு எஸ்டேட் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை தீர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை, பேக்டரி டிவிசனில் கல்லாறு எஸ்டேட் பகுதியில் குடிநீர் வசதி உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**198—**

**சாலை, குடிநீர், தெரு விளக்கு வசதி**

**வினா எண் 34377—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சியில் விஸ்தரிப்பு பகுதிகளில் சாலை, குடிநீர், தெரு விளக்கு வசதிகள் செய்திட அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சியில் அங்கீகாரம் பெறப்பட்ட விஸ்தரிப்பு பகுதிகளில் சாலை, குடிநீர், தெரு விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**199—**

**சமுதாய நலக் கூடம்**

**வினா எண் 35636—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, ஓடையாகுளம் பேரூராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, ஓடையாகுளம் பேரூராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் சமுதாய நலக் கூடம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**200—**

**மாத இதழ்களை வெளியிடுதல்**

**வினா எண் 39524—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழரசு என்ற பெயரில் தமிழிலும், ஆங்கிலத்திலும் அரசு மாத இதழ்களை மேம்படுத்துவதற்கான உத்தேசம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசின் அதிகாரபூர்வமான இதழாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமிழரசு இதழ் வெளிவருகிறது. தமிழரசு இதழை சிறப்பாக வெளியிடவும், இந்த இதழுக்கு அதிக அளவில் ஆண்டு மற்றும் ஆயுள் சந்தாக்கள் சேர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 31]

## பட்டியல் 18

**1—**

**வாய்க்கால் தூர் வாருதல்**

**வினா எண் 16228—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குடமுருட்டியிலிருந்து எளந்தோப்பு வரையுள்ள வாய்க்காலைத் தூர்வாரி சீர்செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இப்பணியினை இந்த நிதியாண்டில் எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**2—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 31913—திரு. ராதாரவி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் ஆற்றுப் படுகையில் வசிக்கும் மக்கள் நலன் கருதி வினாயகபுரம் வரை கட்டப்பட்டுள்ள தடுப்புச் சுவரை அடையாறுப் பகுதி வரை நீட்டித்துக் கட்டுவது குறித்த கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.*

**3—**

## அரசு சார்நிலைக் கருவூலம்

**வினா எண் 1683—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை தாலுகா தலைமையிடத்தில் அரசு சார்நிலைக் கருவூலம் அமைய ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 203 சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தாலுக்கா இல்லாத 20 இடங்களில் சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. வட்டத் தலைமை இடங்களாக இருந்தபோதிலும் சார்நிலைக் கருவூலம் இல்லாமல் இருக்கும் வட்டத் தலைமை இடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு I-ல் கருவூல விதி 5-ல் உள்ள விதி (1) சாதாரணமாக ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படலாம் என்று இருந்தாலும், ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம், அதற்கு ஏற்ற வேலைப்பளு மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கை, ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடத்தில், தற்போது இயங்கிவரும் சார்நிலைக் கருவூலங்களைப் பிரித்து புதியதாக சார்நிலைக் கருவூலங்கள் அமைக்கும்போது பழைய சார்நிலைக் கருவூலங்களின் வேலைப்பளு குறைவதோடு, புதிய சார்நிலைக் கருவூலங்களில் போதுமான வேலைப்பளு இருக்காது. இக்சூழலில், பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு விடை அளிக்கும் அவசியம் எழவில்லை.*



**4—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 2975—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, பழையூர் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, பழையூர் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்ட நடப்பு நிதி ஆண்டில், நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. வரும் நிதி ஆண்டில், முன்னுரிமை அளித்து இந்த நியாயவிலைக் கடை கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி அளிக்க முன்வந்தால், இந்த நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.*

**5—**

## மக்கள் விழிப்புணர்வுக் குழு

**வினா எண் 3700—திரு. கா.பூ. முனுசாமி:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொது விநியோகத் திட்டத்தைக் கண்காணிக்க மக்கள் விழிப்பு உணர்வுக் குழு மீண்டும் அமைக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*பொது விநியோகத் திட்டத்தினைக் கண்காணிக்க அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மற்றும் கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர்/நாடாளுமன்ற உறுப்பினர்/உள்ளாட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, தனியாக இதற்கென விழிப்புணர்வுக் குழு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**6—**

## நியாய விலை கிளைக் கடை

**வினா எண் 4082—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ரம்மதபுரம் (நடுவூர்) உறுமன்குளம் ஊராட்சி, ரம்மதபுரம் (தெற்கு) ஆகிய இரு கிராமங்களுக்கும் பொதுவாக நியாய விலை கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ரம்மதபுரம் (நடுவூர்), உறுமன்குளம் ஊராட்சி, ரம்மதபுரம் (தெற்கு) ஆகிய இரு கிராமங்களிலுமாக மொத்தம் 119 குடும்ப அட்டைகளே உள்ளதால் நியாய விலை கிளைக் கடை திறப்பதற்கு சாத்தியமில்லை.*

**7—**

## அரசு கொள்முதல் நிலையம்

**வினா எண் 4286—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*குளத்தூர் தொகுதியில் மானாவாரிப் பயிராக பயிர் செய்யப்படும் நெல், கடலை ஆகியவற்றிற்கு நியாயமாக விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய கீரனூரில் அரசு கொள்முதல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*அவ்விதச் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**8—**

## நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 4699—திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சி, கீழ்கண்டமங்கலம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு அரசிடத்தில் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**9—**

## நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 6262—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*அவ்வித செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**10—**

## கலப்பட பெட்ரோல், டீசல் விற்பனை

**வினா எண் 6367—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சித்தாமூர் ஊராட்சியில் கலப்பட பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் விற்பனை நடைபெறுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்த நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சித்தாமூர் ஊராட்சியில் கலப்பட பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் விற்பனை நடைபெறுவது அரசின் கவனத்திற்கு வரவில்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**11—**

## சார்நிலைக் கருவூலம்

**வினா எண் 6763—திரு. கே.கே. சிவசாமி:** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 203 சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தாலுக்கா இல்லாத 20 இடங்களில் சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. வட்டத் தலைமை இடங்களாக இருந்தபோதிலும் சார்நிலைக் கருவூலம் இல்லாமல் இருக்கும் வட்ட தலைமை இடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு 1-ல் கருவூல விதி 5-ல் உள்ள விதி (1) சாதாரணமாக ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படலாம் என்று இருந்தாலும் ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம், அதற்கு ஏற்ற வேலைப்பளு மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கை ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடத்தில் தற்போது இயங்கிவரும் சார்நிலைக் கருவூலங்களைப் பிரித்து புதியதாக சார்நிலைக் கருவூலங்கள் அமைக்கும்போது, பழைய சார்நிலைக் கருவூலங்களின் வேலைப்பளு குறைவதோடு புதிய சார்நிலைக் கருவூலங்களில் போதுமான வேலைப்பளு இருக்காது. இச்சூழலில் விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு விடை அளிக்கும் அவசியம் எழவில்லை.*

**12—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 7590—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதிக்குட்பட்ட சீர்காழி ஒன்றியத்திலுள்ள எடக்குடி வடபாதியில் நியாய விலைக் கடை திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், எடக்குடி வடபாதி FP071 நியாய விலை அங்காடி 65/2 எடக்குடி வடபாதி கிராமம் புல எண் 299/6A என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்றக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.*

**13—**

## சார்நிலைக் கருவூலம்

**வினா எண் 7602—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில மொத்தம் 203 சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தாலுகா இல்லாத 20 இடங்களில் சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. வட்டத் தலைமை இடங்களாக இருந்தபோதிலும் சார்நிலைக் கருவூலம் இல்லாமல் இருக்கும் வட்டத் தலைமை இடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு 1-ல் கருவூல விதி 5-ல் உள்ள விதி (1) சாதாரணமாக ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படலாம் என்று இருந்தாலும் ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம், அதற்கு ஏற்ற வேலைப்பளு மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கை ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடத்தில் தற்போது இயங்கிவரும் சார்நிலைக் கருவூலங்களைப் பிரித்து புதியதாக சார்நிலைக் கருவூலங்கள் அமைக்கும்போது, பழைய சார்நிலைக் கருவூலங்களின் வேலைப்பளு குறைவதோடு புதிய சார்நிலைக் கருவூலங்களில் போதுமான வேலைப்பளு இருக்காது. இச்சூழலில் தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*



*(ஆ) இக்கேள்விக்கு விடை அளிக்கும் அவசியம் எழவில்லை.*

**14—**

## நெல் கொள்முதல் நிலையங்கள்

**வினா எண் 7761—திரு. பி.எஸ். அருள்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் தாலுகாக்கள் மட்டுமே காவிரிப் பாசனப் பகுதியாகும். 1-1-2002 முதல் இணை கொள்முதல் அறிவிக்கப்பட்டு அங்கு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்படி நெல் வரத்தைப் பொறுத்து 75 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 15-3-2002 வரை 54,023 மெட்ரிக் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும், 16-3-2002 முதல், தாலுக்கா/வட்ட கிடங்குகளிலும் மற்றும் உபரி சேமிப்புக் கிடங்குகளிலும் தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 4-4-2002 வரையில் இந்தக் கிடங்குகளில் மட்டும் 693 மெ. டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இது தவிர மத்திய அரசு ஆணையின்படி பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் நடப்பு சம்பா பருவம் 2003-2004-ல் நெல் கொள்முதல் செய்ய 37 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் அதைத் தவிர மற்ற டெல்டா அல்லாத இடங்களில் 5 வட்டார செயல்முறை கிடங்குகளிலும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 30-4-2004 வரை 9916 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*

15—

## நேரடி கொள்முதல் நிலையம்

**வினா எண் 8692—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமயநல்லூர் தொகுதியில் சம்பா நெல் அறுவடை காலத்தில் நேரடி கொள்முதல் நிலையம் நிரந்தரமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அவ்வித செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

16—

## சார்நிலைக் கருவூலம்

**வினா எண் 9182—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வாழப்பாடியில் சார்நிலைக் கருவூலம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 203 சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தாலுகா இல்லாத 20 இடங்களில் சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. வட்டத் தலைமை இடங்களாக இருந்தபோதிலும் சார்நிலைக் கருவூலம் இல்லாமல் இருக்கும் வட்டத் தலைமை இடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு 1-ல் கருவூல விதி 5-ல் உள்ள விதி (1) சாதாரணமாக ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படலாம் என்று இருந்தாலும்,*



*ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அதற்கு ஏற்ற வேலைப்பளு மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கை, ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடத்தில் தற்போது இயங்கிவரும் சார்நிலைக் கருவூலங்களைப் பிரித்து புதியதாக சார்நிலைக் கருவூலங்கள் அமைக்கும்போது, பழைய சார்நிலைக் கருவூலங்களின் வேலைப் பளு குறைவதோடு புதிய சார்நிலைக் கருவூலங்களில் போதுமான வேலைப் பளு இருக்காது. இச்சூழலில் சேலம் மாவட்டம் வாழப்பாடியில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு விடை அளிக்கும் அவசியம் எழவில்லை.*

17—

## நியாய விலைக் கடை

**வினா எண் 13635—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, ஆலமரத்தூர் கிராமத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, ஆலமரத்தூர் கிராமத்தில் 70 குடும்ப அட்டைகளே உள்ளதால், அங்கு ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.*

18—

## நியாய விலைக் கடை

**வினா எண் 14186—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒவ்வொரு தொகுதியிலும் சர்வ கட்சியினர் அடங்கிய குழு ஒன்று அமைத்து நியாய விலைக் கடைகளில் ஏற்படும் குளறுபடிகளைக் கண்டறிந்து நீக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*மாவட்ட மற்றும் கோட்ட அளவில், சர்வ கட்சியினர் அடங்கிய பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருவதால், ஒவ்வொரு தொகுதிக்கும் சர்வகட்சியினர் அடங்கிய குழுவினைத் தனியாக அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.*

**19—**

### ஓய்வூதியம் பெறுபவர் குடும்பத்திற்கு நிதியுதவி

**வினா எண் 15177—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர்கள் இயற்கை எய்தினால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய ரூ.5000/- வழங்குவதுபோல ஓய்வூதியம் பெறுபவர் குடும்பத்திற்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கோரிக்கையைச் செயல்படுத்துவதில் பல்வேறு செயல்முறை இடர்பாடுகள் உள்ளதால் இதனைச் செயல்படுத்த இயலாது.

**20—**

### கிளைக் கருவூலம்

**வினா எண் 16348—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோவில்பட்டி வட்டம், கழுகுமலையில் கிளைக் கருவூலம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 203 சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தாலுகா இல்லாத 20 இடங்களில் சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. வட்டத் தலைமை இடங்களாக இருந்தபோதிலும் சார்நிலைக் கருவூலம் இல்லாமல் இருக்கும் வட்டத் தலைமை இடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு 1-ல் கருவூல விதி 5-ல் உள்ள விதி (1) சாதாரணமாக ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படலாம் என்று இருந்தாலும் ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அதற்கு ஏற்ற வேலைப் பளு மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கை ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடத்தில் தற்போது இயங்கிவரும் சார்நிலைக் கருவூலங்களைப் பிரித்து புதியதாக சார்நிலைக் கருவூலங்கள் அமைக்கும்போது பழைய சார்நிலைக் கருவூலங்களின் வேலைப் பளு குறைவதோடு புதிய சார்நிலைக் கருவூலங்களில் போதுமான வேலைப் பளு இருக்காது. இச்சூழலில் தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு விடை அளிக்கும் அவசியம் எழவில்லை.

**21—**

### நேரடி நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 17283—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

## நேரடி நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 17637—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழைய பாளையம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பழைய பாளையம் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

**23—**

## நெல் கொள்முதல் விலை

**வினா எண் 17994—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நெல் கொள்முதல் விலையை உயர்த்தித் தரலாம் என்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெல் கொள்முதல் விலையை மைய அரசுதான் நிர்ணயம் செய்கிறது. 1-10-2002 முதல் இம்மாநில அரசு மைய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் முறையை (Decentralised Procurement System) செயல்படுத்தி வருகின்றது.

**24—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 19205—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட அனுச்சம்பாளையம் பகுதியில் நியாய விலைக் கடை திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், வேலூர் என்.சி.எம்.எஸ். நியாய விலைக் கடை எண் 4-ல் இருந்து 325 குடும்ப அட்டைகளைப் பிரித்து அனுச்சம்பாளையத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 10-07-2002-ல் இருந்து அக்கடை செயல்பட்டு வருகிறது.

**25—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 19601—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், எர்ரப்பட்டியில் செயல்பட்டுவரும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், எர்ரப்பட்டியில் செயல்பட்டுவரும் நியாய விலைக் கடையில், 493 குடும்ப அட்டைகளும், தேங்காமரத்துப்பட்டி நியாய விலைக் கடையில் 359 குடும்ப அட்டைகளும் உள்ளன. ஒரே விற்பனையாளர் இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளைக் கவனித்து வருகிறார். கூடுதலாக விற்பனையாளர் பணி நியமனம் செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் தேங்காமரத்துப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையாகத் திறக்கப்பட்டது. தாய்க்கடையான, ஒட்டப்பட்டிக்கும், எர்ரப்பட்டிக்கும் இடையே 1½ கி.மீ. தூரம் உள்ளது. எனவே, எர்ரப்பட்டியில் செயல்பட்டுவரும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**26—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 20148—திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, தி. நகர் பகுதியில் 122–வது வட்டத்தில் 2000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை உள்ளதால் அதனை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

தி. நகர் பகுதி, 122-வது வட்டத்தில் உள்ள 5 நியாய விலைக் கடைகளிலிருந்து எந்த ஒரு நியாய விலைக் கடையிலும் 2000-க்கு மேல் குடும்ப அட்டைகள் இணைக்கப்படவில்லை. எனவே, இவ்வினா எழவில்லை.



**27—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 20163—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 13-வது வட்டம், போஜராஜ நகர், சீனிவாசபுரம் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்காக போஜராஜ நகர் பிரதான தெருவில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போஜராஜ நகர் பகுதியிலுள்ள 675 குடும்ப அட்டைகளும், சீனிவாசபுரம் பகுதியிலுள்ள 532 குடும்ப அட்டைகளும், நாம்கோ கல்லறை சாலை (2) கடையிலும், போஜராஜ நகர் பகுதி அட்டைகள் 915 நாம்கோ கிழக்கு முத்தையா சந்து கடையிலும் இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி கடைக்கும், போஜராஜ நகர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கிலோ மீட்டர் என்றும், போஜராஜ நகர் பகுதியில் ஒரு புதிய நியாய விலைக் கடை திறந்தால் நாம்கோ கல்லறை சாலை (2) கடையை மூட வேண்டிய சூழ்நிலை வரும். அரசாணை எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997-ன்படி இயங்கிவரும் எந்த ஒரு நியாய விலைக் கடையையும் மூடக்கூடாது என்பதனால் புதிய நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பில்லை. போஜராஜ நகர் பகுதியிலேயே மாற்றுக் கட்டடம் தெரிவு செய்து இடமாற்றம் செய்ய தகுதியான மாற்றுக் கட்டடம் கிடைக்கப் பெறாமையால் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் நியாயவிலைக் கடையை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2004 ஜூலை 31

28—

## நெல் கொள்முதல்

**வினா எண் 27712—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல் உற்பத்தியில் தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் அளவிற்கு விலை கொடுத்து நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் கொள்கையின்படி தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம் (Decentralised Procurement Scheme) அறிமுகப்படுத்தப்பட்டு நடப்பு (சம்பா 2004 பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன்படி மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதார விலையில்தான் நெல் கொள்முதல் செய்ய வேண்டும். அதன்படி 1-10-2003 முதல் கிரேடு 'ஏ' நெல்லுக்கு ரூ.580/- குவிண்டால் ஒன்றுக்கும், பொது ரகத்திற்கு ரூ.550/- குவிண்டால் ஒன்றுக்கும் மத்திய அரசு நிர்ணயம் செய்ததை அடிப்படையாகக் கொண்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் விதிமுறையின்படி மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைக்குக் கூடுதலாக கொடுக்க இயலாது.

29—

## நேரடி நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 28508—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், மேலப் பாலையூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூடப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?



2004 ஜூலை 31]

(ஆ) ஆம் எனில், மூடிய கொள்முதல் நிலையத்தைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999 முதல் 2002 வரையில் உள்ள ஆண்டுகளில் சம்பா பருவத்தில் மேற்படி கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு பரிந்துரை செய்யப்படாததால் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை.

30—

## நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 28686—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் முழுவதும் மலைப்பகுதி என்பதால் இங்குள்ள நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் கூடுதலாக கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம் முழுவதும் மலைப் பகுதியாகவும் குளிர்ப் பிரதேசமாகவும் மற்றும் விறகு வெட்டத் தடை விதிக்கப்பட்ட பகுதியாகவும் உள்ளதால், இம்மாவட்டத்தில் எரிவாயு இணைப்பு பெறாத குடும்ப அட்டைதாரர்களுக்கு மற்ற மாவட்டங்களில் உள்ள குடும்ப அட்டைதாரர்களைவிட அதிகமான அளவில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

31—

## நியாய விலைக் கடை

**வினா எண் 30655—திரு. ப. அரசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

பட்டதாரி இளைஞர்கள், கூட்டுறவு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கொள்முதல் செய்து குறிப்பிட்ட விலைக்கு விற்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் நியாய விலைக் கடைகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

பட்டதாரி இளைஞர்களிடம் நியாய விலைக் கடைகளை ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**32—**

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 31200—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் மண்ணெண்ணெய் விநியோக மையங்கள் எடுத்து நடத்திட முன்வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எவ்வளவு பேர் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தற்போது மண்ணெண்ணெய் விநியோக மையங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களினால் மட்டும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தனியார் எவரும் மண்ணெண்ணெய் விநியோக மையங்கள் அமைக்க அனுமதிக்கப்படுவதில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2004 ஜூலை 31]

**33—**

### நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 36144—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**34—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 36149—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சி, சந்திரநல்லூருக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்திடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகளில் 923 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. சந்திரநல்லூரிலுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 150 ஆகும். நியாயவிலைக் கடைக்கும் சந்திரநல்லூருக்கும் இடைப்பட்ட தூரம் 2 கிலோமீட்டர்

ஆகும். அரசு ஆணை எண் 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-1-1998-ன்படி பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். சந்திரநல்லூரில் 150 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், அங்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**35—**

## மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 37532—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சங்கராபுரம் தொகுதியில் (விழுப்புரம் மாவட்டம்) இத்திட்டம் செயல்படுத்தப் படவில்லை.

**36—**

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 38360—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், உலிக்கல் பேரூராட்சி பாரதி நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், உலிக்கல் பேரூராட்சிக்கு உட்பட்ட பாரதி நகர்ப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க நீலகிரி மக்களவை உறுப்பினர் நிதியிலிருந்து கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய இசைவு தெரிவித்துள்ளதால், அந்தப் பகுதியில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 38893—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, திருமல் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, திருமல் கிராமத்தில் ஏற்கெனவே புதிய நியாய விலைக் கடை 415 குடும்ப அட்டைகளுடன் கடந்த 1-11-1977 முதல் செயல்பட்டு வருகிறது.

[2004 ஜுலை 31

38—

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 38894—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பெரமாண்டம் பாளையத்தில் உள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து எல்லைக்காட்டூரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, பெரமாண்டம்பாளையத்தில் உள்ள நியாய விலைக் கடை 543 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. எல்லைக்காட்டூர் கிராமம் மனப்பள்ளி கிராமத்தில் குக்கிராமம் என்பதாலும், அங்கு 83 குடும்ப கார்டுகள் மட்டுமே உள்ளன என்பதாலும், பெரமாண்டம்பாளையம் நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து எல்லைக்காட்டூரில் தனிக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

39—

## மகளிர் நியாய விலைக் கடைகள்

**வினா எண் 40729—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும் மகளிர் நியாய விலைக் கடைகள் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டத்தில் 2 அங்காடிகள் மகளிர் சுய உதவிக் குழு மூலமாகவும், 3 அங்காடிகள் மகளிர் அங்காடியாகவும் இயங்கி வருகின்றது என்பதால் மேற்கொண்டு மகளிர் அங்காடிகள் தொடங்க இயலாது.

40—

## நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 42766—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் கூடுதலாக நெல் கொள்முதல் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

41—

## பொது விநியோகக் கட்டடங்களைப் பழுது நீக்குதல்

**வினா எண் 42845—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியில் உள்ள பொது விநியோகக் கட்டடங்களைப் பழுது நீக்கவும், புதிய கட்டடங்கள் கட்டவும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதியில் உள்ள பொது விநியோகக் கட்டடங்களை பழுதுநீக்கம் செய்ய தற்சமயம் திட்டங்கள் ஏதும் இல்லை. மேலும் புதிய கட்டடங்கள் தேவையின் அடிப்படையில் சம்பூர்ண கிராம ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் கட்டித் தரப்படும். 2003-2004 ஆம் ஆண்டு அத்திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள் கட்டடம் எதுவும் கட்டப்படவில்லை. கட்டடம் கட்ட அரசுக்கு கருத்துரு ஏதும் அனுப்பப்படவில்லை.*

**42—**

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 50078—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால் சேலம் மாவட்டம் ஏற்காடு மலைப் பகுதியில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கோரும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**43—**

## தெப்பக்குளத்தை சீரமைத்தல்

**வினா எண் 266—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) புகழ்பெற்ற மன்னார்குடி தெப்பக்குளத்தைத் தூர்வாரி சீரமைப்பு செய்திட இவ்வாண்டு நிதி ஒதுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், இப்பணி எப்பொழுது தொடங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புகழ்பெற்ற மன்னார்குடி தெப்பக்குளத்தைத் தூர்வாரி செப்பனிடுவதற்கு அரசால் முதற்கட்டமாக ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையினரால் முதற்கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.*

**44—**

## ஆலயத்திற்குச் சொந்தமான சொத்துக்கள்

**வினா எண் 18452—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் ஸ்ரீவிருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான சொத்துக்களை பலர் கையகப்படுத்த முயல்வது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இல்லையெனில் முயற்சி எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் 19-12-2001 அன்று அத்துமீறி நுழைந்து கையகப்படுத்த முயன்றவர்களும், 18-1-2002 அன்று இந்நிலங்களில் ஆக்கிரமித்து குடிசை போட*

முயன்றவர்களும், காவல் துறை மற்றும் வருவாய்த் துறை உதவியுடன் திருக்கோயில் நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இத்திருக்கோயில் நந்தவனத்தில் முன்னரே ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**45—**

## திருக்கோயில் குடமுழுக்கு

**வினா எண் 19519—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் புட்டிரெட்டிப்பட்டி சோமேஸ்வரஸ்வாமி மற்றும் லட்சுமி நாராயணஸ்வாமி திருக்கோயில்களை புனரமைத்து குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், புட்டிரெட்டிப்பட்டி கிராமம் அருள்மிகு சோமேஸ்வரர் மற்றும் லட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்காக, ரூ.23.15 இலட்சம் அளவில் உபயப்பணி/பொதுமக்கள் நன்கொடை மூலம் வசூலித்து செய்தல் என்ற வகையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுற்றதும் குடமுழுக்கு செய்யப்படும்.

**46—**

## பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள்

**வினா எண் 20591—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கூடுதலாக தங்கும் விடுதிகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்கோயிலுக்கு அருகாமையில் 44 அறைகள் கொண்ட தங்கும் விடுதி பக்தர்களின் வசதிக்காக ஏற்கெனவே உள்ளது. பக்தர்களின் தேவையைவிட தங்கும் அறைகள் அதிகம் உள்ளதால், அவை முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளன. எனவே, இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு மேலும் தங்கும் விடுதிகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**47—**

## பக்தர்களுக்கு தங்கும் விடுதி

**வினா எண் 20776—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஒன்றியம் அருள்மிகு சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோயிலுக்கு பக்தர்கள் தங்கும் விடுதி கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், சிறுவாசூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் இலவசமாகத் தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதி ஒன்று பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது நடைபெற்று வரும் "தங்கத் தேர் திருப்பணி" முடிவுபெற்றதும், ரூ.10,00,000/- மதிப்பீட்டில் உபயதாரர்கள்மூலம் புதிய தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**48—**

## தின்காரை சாலைகள்

**வினா எண் 24176—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி (சிமெண்ட்) தின்காரை சாலைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை, அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளும் மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்டவை. இதில் தெற்கு சித்திரை வீதி நான்கு ஆண்டுகளுக்கு முன் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு சித்திரை வீதிகளில் தார்சாலை சிறப்பு மராமத்து செய்ய மாநகராட்சியால் ரூ.12 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது. கோயிலைச் சுற்றி தின்காரை (சிமெண்ட்) சாலை அமைக்கும் திட்டம் இல்லை.

**49—**

## திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 33774—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகர் நாடியம்மன் கோயிலில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிதி ஒதுக்கீடு எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை நகர், நாடியம்மன் கோயிலில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**50—**

## கோயில்களில் அன்னதானத் திட்டம்

**வினா எண் 35275—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் குமரமலை முருகன் கோயில், திருவேங்கவாசல் சிவன் கோயில், நார்த்தாமலை, ஸ்ரீமுத்துமாரியம்மன், விராலிமலையில் உள்ள முருகன் கோயில், இசப்பூரில் உள்ள சிவன் கோயில் ஆகிய கோயில்களில் அன்னதானத் திட்டம் ஆரம்பிக்க அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மேற்குறித்த திருக்கோயில்களில், விராலிமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தவிர, ஏனைய திருக்கோயில்களில் தினசரி அதிக அளவில் பக்தர்கள் வருகை இல்லை என்பதாலும், நிதிப் பற்றாக்குறை உள்ளதாலும், இத்திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**51—**

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 37394—திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பூவரசன்குப்பம் கிராமத்திலுள்ள ஸ்ரீலட்சுமி நரசிம்மர் ஆலயத் திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பூவரசன்குப்பம் கிராமத்திலுள்ள ஸ்ரீலட்சுமிநரசிம்மர் ஆலயத் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, விரைவில் மதிப்பீடுகள் தயாரித்து, அங்கீகாரம் பெற்று, திருப்பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**52—**

## இலவச அன்னதானத் திட்டம்

**வினா எண் 37396—திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், சின்னபாபு சமுத்திரத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ மகான் படேசாயபு ஆலயத்தில் இலவச அன்னதானத் திட்டம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், சின்னபாபு சமுத்திரத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ மகான் படேசாயபு திருக்கோயிலின் வருவாய், நிர்வாகச் செலவிற்கே சரியாக உள்ளதால், மேற்படி திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2004 ஜூலை 31]

**53—**

## விருந்தினர் மாளிகை கட்டுதல்

**வினா எண் 37504—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, திருமணஞ்சேரி, உத்வாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு விருந்தினர் மாளிகை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் தொகுதி, திருமணஞ்சேரி, உத்வாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு விருந்தினர் மாளிகை கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**54—**

## திருக்கோயில்களைப் புதுப்பித்தல்

**வினா எண் 37556—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்தில் உள்ள எ. வாசுதேவனூர் அய்யனார் கோயிலையும், சிவன்கோயிலையும் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்தில் உள்ள எ. வாசுதேவனூர் கிராமம், அருள்மிகு அய்யனார் கோயிலையும், அருள்மிகு சிவன் கோயிலையும் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 ஜூலை 31

55—

## புதிய கடைகள் கட்டுதல்

**வினா எண் 38668—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ராஜ கணபதி கோயிலின் வருமானத்தை அதிகரிக்க புதிய கடைகளைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகர் அருள்மிகு இராஜ கணபதி திருக்கோயில், சேலம் நகர் கடைவீதியில் சாலையோரத்தில் அமைந்துள்ளது. அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலின் உபகோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்கு தனியாக நிலங்கள் இல்லை. அதனால் வருமானத்தை அதிகரிக்க புதிய கடைகள் கட்டுவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

56—

## திருக்கோயில் திருப்பணிகள்

**வினா எண் 40544—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் ஒன்றியம் உள்ளி கிராமத்திலுள்ள பழமையான பைரவர் கோயிலை சீர்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், உள்ளி கிராமத்திலுள்ள அருள்மிகு காலபைரவர் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்



2004 ஜூலை 31]

துறையின்கீழ் பட்டியலைச் சேராத திருக்கோயில் ஆகும். உபயதாரர்கள் மூலம் இத்திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

57—

## திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜை

**வினா எண் 43212—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரில் திருவதிகை பாலூர் சாலையில் அமைந்துள்ள வரதராஜ பெருமாள் கோயிலில் பொருளாதார நெருக்கடி உள்ளதால், ஒரு கால பூஜையை அரசு ஏற்று நடத்திட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரில், திருவதிகை பாலூர் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு அரங்கநாத பெருமாள் (வரதராஜப் பெருமாள் கோயில் அல்ல) திருக்கோயிலுக்குப் போதிய வருமானம் வருவதால் தினமும் இரண்டு கால பூஜையும் நடைபெற்று வருகிறது. எனவே இத்திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜை நடத்த நிதியுதவி வழங்கும் அவசியம் எழவில்லை.

58—

## திருக்கோயிலில் ஒரு கால பூஜை

**வினா எண் 43213—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஊராட்சியில் தச்சம்பாளையம் அம்மன் கோயிலில் ஒருகால பூஜை செய்திட அரசு நிதி ஒதுக்கீடு செய்து தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஊராட்சியில், தச்சம்பாளையத்தில் உள்ள அருள்மிகு அம்மன் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் என்பதால் ஒருகால பூஜைக்கான நிதியுதவி வழங்க வழிவகை இல்லை.*

**59—**

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 44416—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் வருவாய், திருக்கோயிலின் நிர்வாக செலவிற்கு மட்டுமே ஈடுசெய்யக்கூடிய நிலையில் உள்ளதால், இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

**60—**

## இழுவை ரயில்

**வினா எண் 49098—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோளிங்கரிலுள்ள அருள்மிகு ஸ்ரீலஷ்மி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு இழுவை ரயில் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*



*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோளிங்கரிலுள்ள அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு இழுவை ரயில் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.*

**61—**

## நிர்வாக ஆணையர் நியமித்தல்

**வினா எண் 50033—செல்வி க. பாலபாரதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பழனி முருகன் கோவில் நிர்வாகத்தையும், அக்கோவில் சொத்துக்கள் பராமரிப்புக்கும் நிர்வாக ஆணையாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிர்வாகத்தையும், அக்கோயில் சொத்துக்களைப் பராமரிக்கவும், நிர்வாக ஆணையாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்வது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**62—**

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 50473—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சுப்பிரமணியசுவாமி கோயிலை (மதிய உணவு) அன்னதானத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைமீது அமைந்துள்ள இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததாலும், வெள்ளிக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் மட்டும் தரிசனத்திற்குத் தோட்டத் தொழிலாளர்கள் வந்து செல்வதால் அன்னதானத் திட்டம் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**63—**

**விஷக்கடி மருத்துவமனை**

**வினா எண் 5314—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைவாழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பிற்கு விஷக்கடி மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விஷக்கடிக்கு என்று தனியாக மருத்துவமனை அமைக்கப்படுவதில்லை. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே விஷக்கடிக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியத்தில் கரியாலூர் சமுதாய நல நிலையத்தில் விஷக்கடி சிகிச்சை அளிக்க வசதி உள்ளது.



2004 ஜூலை 31]

**64—**

**மாமிச அறுவை சாலையை அகற்றுதல்**

**வினா எண் 6536—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் கண்ணனூர் ஊராட்சி மேக்காமண்டபம் சாலை ஓரத்தில் கன்றுகாலி அறுவை சாலை நடந்து வருவதால் அப்பகுதியில் குடியிருக்கும் பல குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கண்ணனூர் ஊராட்சிக்குட்பட்ட மேக்காமண்டபம் சாலை ஓரத்தில் சுகாதாரக் கேடு விளைவிக்கும் வகையில் உரிய அனுமதியின்றி இயங்கி வந்த இரு மாமிச அறுவை சாலைகளும் தற்போது அகற்றப்பட்டன.

**65—**

**அரசு ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 30822—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், காஞ்சிகோவில் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**66—**

## தாய் சேய் நல விடுதி

**வினா எண் 34506—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆமாஞ்சி ஊராட்சியில் ஒரு தாய் சேய் நல விடுதி திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**67—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 35101—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டம், வில்லிசேரி ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், வில்லிசேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.*

**68—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 35102—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டம், கீழஈரால் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கீழஈரால் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.*

**69—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 39588—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, அமரடக்கியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் ஊராட்சி ஒன்றியம், அமரடக்கி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**70—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 39591—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அம்பலவாணனேந்தலில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், அம்பலவாணனேந்தல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**71—**

## அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 40178—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கையறையுடன் கூடிய முழு நேர மருத்துவமனையும், மருத்துவமனை ஊழியருக்கு குடியிருப்புகள் கட்டித்தரவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் வட்ட மருத்துவமனை செயல்படுகிறது. ஜோலார்பேட்டை, நாட்ராம்பள்ளி மற்றும் கந்திலி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் தகுதியுடைய ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தேர்வு செய்யப்பட்டு இனி வருங்காலங்களில் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும். குடியிருப்பு வசதி இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடியிருப்பு கட்டிட வருங்காலங்களில் பரிசீலனை செய்யப்படும்.

**72—**

## அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 41697—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, அம்மனாங்கோயில் ஊராட்சி புதுப்பேட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை அறை கொண்ட முழு நேர மருத்துவமனையாக உயர்த்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, அம்மனாங்கோயில் ஊராட்சி புதுப்பேட்டையிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த இனி வருங்காலங்களில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

73—

## அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 46144—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புத்தூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

74—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 46145—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், சட்டநாதபுரம் ஊராட்சி, சட்டநாதபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம் சட்டநாதபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

75—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 46436—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, வேட்டனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வேட்டனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

76—

## மருந்து விற்பனை

**வினா எண் 49903—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மருந்துக் கடைகளில் காலாவதியான மருந்துகள் விற்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

77—

### சத்துணவுத் திட்டத்தில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 20801—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தில் காலியாக உள்ள சத்துணவு பொறுப்பாளர்கள், குழந்தைகள் அமைப்பாளர்கள், ஊட்டச்சத்து பணியாளர்கள் பணி இடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

தற்போது நேரடி நியமனங்களுக்கு அரசினால் பொதுவான தடையுத்தரவு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ள காரணத்தால் மையங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்திட இயலாது. எனவே, சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் உள்ள, உபரியாக உள்ள பணியாளர்களை அவர்களின் முதுநிலைக்கேற்ப பட்டியலிட்டு அதில் உள்ளவர்களைக் கொண்டு காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன. அவ்வாறு பூர்த்தி செய்யும் பட்சத்தில் பணி நியமனம் செய்யப்படும் மையம் பணியாளர்களின் இருப்பிடத்திலிருந்து 3 கி.மீ. என்பதற்குப் பதிலாக 10 கி.மீ. தூரத்திற்குள் இருக்க வேண்டும் என மாற்றி வரையறுக்கப்பட்டுள்ளது.

78—

### சமுதாய ஊட்டச்சத்து மையங்கள்

**வினா எண் 22796—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கிராமப் பகுதிகளில் சமுதாய ஊட்டச்சத்து மையங்களை அதிகப்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகம் முழுவதும் 30,125 மையங்கள் செயல்பாட்டில் இருந்தது. எனினும், கடந்த 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி தமிழகத்திற்கு 42,279 மையங்கள் பெற தகுதியுடையதாக கருதப்பட்டு மேற்படி குறியீட்டு இலக்கினை அடையும் பொருட்டு, 4,297 புதிய மையங்கள் தொடங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. ஆகவே, தற்போது 42,279 மையங்கள் இயங்கி வருகின்றன.

79—

### தொட்டில் குழந்தைத் திட்டம்

**வினா எண் 26856—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டில் குழந்தைத் திட்டத்தில் வளர்ந்து வரும் குழந்தைகளை குழந்தையற்றோர் வளர்க்க விரும்பினால் அவர்களுக்குத் தரலாம் என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

தொட்டில் குழந்தைத் திட்டத்தில் வரவேற்பு மையங்கள் மூலம் பெறப்படும் குழந்தைகள் அனைத்தும், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வு தொண்டு நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றிற்கு வழங்கப்பட்டு அவர்கள் மூலம் சட்டபூர்வமாக, குழந்தைகள் உச்ச நீதிமன்ற ஆணையின்படி குழந்தை இல்லாதவர்களுக்கு தத்து கொடுக்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. எனவே இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் உரிமம் பெற்ற நிறுவனங்களை அணுகி தங்களது பெயரினை பதிவு செய்து கொண்டு பயன் பெறலாம்.

[2004 ஜூலை 31

80—

## தையல் இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 37483—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தையல் பயிற்சி பெற்ற மகளிருக்கு தையல் இயந்திரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் நன்றாகத் தைக்கத் தெரிந்த மகளிரை தேர்வு செய்து சான்றிதழ் பெற்றுள்ள மகளிருக்கு தையல் இயந்திரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கப்பட்டு வரப்படுகின்றது. 2003-2004 ஆம் ஆண்டில் மேற்காணும் திட்டத்தின்கீழ் 16,500 தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்கிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை மாவட்டத்தில் 510 பயனாளிகள் தையல் இயந்திரங்கள் பெறுவர்.

(ஆ) மேற்படி திட்டத்தின்கீழ் விதவைகள்/கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சமூகத்தால் பாதிக்கப்பட்ட மகளிர் மற்றும் ஊனமுற்ற ஆண் பெண் இரு பாலருக்கும் இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றது. 20 முதல் 40 வயதுக்குட்பட்ட நபர்கள் தையல் பயிற்சி பெற்றிருப்பின் தகுதியுடையவர்களாக கருதப்படுவர். ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

81—

## முதியோர் இல்லம் தொடங்குதல்

**வினா எண் 35279—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) சங்கராபுரம் தொகுதியில் மூங்கில் துரைப்பட்டு நகர், வெள்ளிமலை, சங்கராபுரம் ஆகிய இடங்களில் முதியோர் இல்லம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதியில் மூங்கில் துரைப்பட்டு நகர், வெள்ளிமலை, சங்கராபுரம் ஆகிய எவ்விடத்தும் அரசு முதியோர் இல்லம் தொடங்கும் விதமான நடவடிக்கை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) அத்தொகுதியில் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஏதாகிலும் திறம்பட முதியோர் இல்லம் நடத்த முன்வருமாயின் விதிமுறைகளுக்குட்பட்டு, மானியம் பெறுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

82—

## தொழுநோயாளிகள் குடும்பங்களுக்கு சிறப்பு சலுகை

**வினா எண் 41952—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதியிலுள்ள திருமணி, பெத்தேலி நகர் தொழுநோயாளிகள் குடும்பங்களுக்கு சிறப்பு சலுகை அளித்து வாழ்க்கையில் முன்னேற அரசு உதவுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம், விழுப்புரம், தர்மபுரி, புதுக்கோட்டை, ஈரோடு, தஞ்சாவூர், மதுரை, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களில் அரசு மறுவாழ்வு இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் அரசு மறுவாழ்வு இல்லங்களில், கணவனோ அல்லது மனைவியோ எவரேனும் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் தங்க

[2004 ஜூலை 31

அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. செங்கற்பட்டு தொகுதியிலுள்ள திருமணி, பெத்தேலி ஆகிய இடங்களில் உள்ள தொழுநோயாளிகள் தமிழக அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வரவில்லை. செங்கற்பட்டு தொகுதியிலுள்ள திருமணி, பெத்தேலி ஆகிய இடங்களிலுள்ள தொழுநோயாளிகள் காஞ்சிபுரம் மாவட்டம், பரனூர் அரசால் நடத்தப்படும் மறுவாழ்வு இல்லங்களில் தங்கி வசதிகள் பெறலாம்.

**83—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 41964—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டம், ஆத்தூரிலுள்ள பிற்காப்பு நிறுவனத்தில் தொகுப்பூதியத்தில் மூன்றாண்டுகளுக்கு மேல் பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இப்பொருள் குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**84—**

**வங்கிக் கடன்**

**வினா எண் 44586—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்க அரசு முன்வருமா?



2004 ஜூலை 31]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மகளிர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் அரசால் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**85—**

**மாணவியர் நல விடுதி**

**வினா எண் 38684—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஒக்கூரில் ஆதி திராவிட மாணவியர் நல விடுதி தொடங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதிதாக ஆதி திராவிடர் மாணவ/மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**86—**

**சாலைகள் புதுப்பித்தல்**

**வினா எண் 41328—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர்-சித்தேரி செல்லும் பழுதடைந்த சாலைகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்து புதுப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர்-சித்தேரி செல்லும் பழுதடைந்த சாலைகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டமான பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் தக்க முன்மொழிவுகள் ஊரகச் சாலைகள் (நெடுஞ்சாலைத் துறை) தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று புதுப்பித்துத் தர நடவடிக்கை மேற்கொள்ள பழங்குடியினர் நலத் துறையின் ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**87—**

## நகரப் பேருந்து

**வினா எண் 2978—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து பழனி கொட்டாய் வரை செல்லும் நகரப் பேருந்தை சாம்பளிக்காடு வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து மஞ்சாரப்பட்டி செல்லும் தடம் எண் 4 நகரப் பேருந்தை சாம்பளிக்காடு வரை நீட்டித்து இயக்கப்படுகிறது.

**88—**

## போக்குவரத்துக் கழக பணிமனை

**வினா எண் 7725—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி தாலுகாவில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) காரியாபட்டியில் தற்போது தனியாக பணிமனை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**89—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 11285—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஈச்சங்காடு கிராமத்திற்கு திட்டக்குடியிலிருந்து சிலுப்பனூர் வரை பேருந்தை தளவாய் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஈச்சங்காடு கிராமத்திற்கு திட்டக்குடியிலிருந்து சிலுப்பனூர் வரையுள்ள வழித்தடம், பகுதி பகுதியாக திருச்சிராப்பள்ளி/விழுப்புரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

**90—**

## பேருந்து பயணிகளுக்கு உணவு வழங்கும் திட்டம்

**வினா எண் 11358—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) தமிழக அரசு விரைவுப் பேருந்தில் நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிகளுக்கு இரயில் போக்குவரத்தில் ஆர்டர் (order) சேகரித்து குறிப்பிட்ட இடத்தில் உணவு வழங்குவதுபோல் உணவு வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு விரைவுப் பேருந்தில் நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிகளுக்கு இரயில் போக்குவரத்தில் ஆர்டர் சேகரித்து குறிப்பிட்ட இடத்தில் உணவு வழங்குவதுபோல் உணவு வழங்கும் திட்டம் பேருந்துப் பயணிகளுக்கு சாத்தியமில்லை.

**91—**

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 14274—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரும் இரண்டு வழித் தடங்களில் அரசு பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகத்தின் 2001-2002 ஆம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க வழிவகை செய்யப்படவில்லை. எனவே, சட்டமன்ற தொகுதியில் உறுப்பினர்கள் கோரும் இரண்டு வழித்தடங்களில் அரசுப் பேருந்துகளை இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும் இது அரசின் கொள்கை முடிவாகும்.



2004 ஜூலை 31]

**92—**

## அரசுப் பேருந்துக் கழகங்களை இணைத்தல்

**வினா எண் 14296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பேருந்து கழகங்கள் நிர்வாகச் செலவினைக் குறைக்கும் பொருட்டு இரண்டு இரண்டு கழகங்களாக இணைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை இரண்டு இரண்டு கழகங்களாக இணைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**93—**

## கூடுதல் பேருந்து இயக்குதல்

**வினா எண் 14896—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் ஏரியூர், பூச்சூர், பழையூர் வழியாக மேச்சேரிக்கு கூடுதலாக பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிய தடம் புதிய வழித்தடமாகும். எனவே தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் ஏரியூர், பூச்சூர், பழையூர் வழியாக மேச்சேரிக்கு தற்போதுள்ள நிதிநிலைமையில் கூடுதலாக பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 ஜூலை 31

94—

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 14915—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் ஜக்கம்பட்டி, வத்தலாபுரம், அஜ்ஜனஅள்ளி, ஏரியூர், நெருப்பூர், ஒட்டனூர் வழியாக கோட்டையூர், பரிசல்துறை வரை புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஒட்டனூர் முதல் கோட்டையூர் பரிசல்துறை வரையில் உள்ள சாலை இந்நாள் வரை சரிசெய்யப்படாததால் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. அச்சாலை சரிசெய்யப்பட்ட பின்னர் ஏற்கெனவே இயங்கி வந்த பேருந்தினை, இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் புதிய நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

95—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 15737—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கோவை–வால்பாறை, வால்பாறை-கோவைக்கு 2 பேருந்துகள் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில் வால்பாறைத் தொகுதியில் கோவை-வால்பாறை, வால்பாறை–கோவைக்கு பேருந்துகள் விடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

## தானியங்கி சிக்னல்

**வினா எண் 16762— திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் நான்கு முனை சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்த்திடவும், சாலை விபத்துக்கள் நிகழ்வதை தடுக்கவும் அரசு தானியங்கி சிக்னலை ஏற்படுத்த ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் நான்கு முனை சாலையில் தானியங்கி சிக்னலை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) விரைவில் அமைக்கப்படும்.

[2004 ஜூலை 31

97—

## புதிய பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 18009—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பகுதியில் பழுதடைந்த நிலையில் ஓடும் அரசு பேருந்துகளை மாற்றி நல்ல நிலையில் உள்ள புதிய பேருந்துகளை இயக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பேரணாம்பட்டு பணிமனையிலிருந்து இயக்கப்படும் எந்தப் பேருந்தும் பழுதடைந்த நிலையிலோ, வயது முதிர்ந்த நிலையிலோ இல்லை. ஆறு மாதத்திற்கு ஒருமுறை அனைத்து பேருந்துகளும் புதுப்பிக்கப்பட்டு தகுதி மற்றும் சாலை தகுதி சான்று போக்குவரத்து ஆய்வாளரிடம் பெறப்பட்டு நல்ல நிலையில் தடத்தில் இயக்கப்படுகின்றன.

98—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 18126—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு பேருந்துகள் பழுதடைந்து ஆங்காங்கே நின்று விடுவதால், பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு பேருந்துகளின் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து நீலகிரி மாவட்டம் வாழ் பொதுமக்கள், பள்ளி செல்லும் மாணவ மாணவியர்கள் மற்றும் சுற்றுலாப் பயணியர்கள் எவரும் பாதிக்காத வகையில் பேருந்துகள் இயங்கி வருகின்றன.

99—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 18330—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூரிலிருந்து நடுக்காட்டுப் பாளையம், மேட்டுக்குப்பம், கீழக்குப்பம் வழியாக நெய்வேலியை சென்று அடைய பேருந்து வசதியை இரவு 8 மணி அளவில் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூரிலிருந்து நடுக்காட்டுப்பாளையம், மேட்டுக்குப்பம், கீழக்குப்பம் வழியாக நெய்வேலியை சென்று [illegible] பேருந்து வசதியை இரவு 8.00 மணியளவிற்கு நேரத்தை மாற்றி இயக்கினால், கால அட்டவணையை முற்றிலும் மாறும் சூழ்நிலை ஏற்படுவதால், குறிப்பிட்ட நேர நடையை அ[illegible]த்திடுவது சாத்தியமில்லை.

[2004 ஜூலை 31

**100—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 19204—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் பேருந்து நிலையத்திற்கு இரவு நேரங்களில் சேலம்–மதுரை பேருந்துகள் வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-மதுரை வழித்தடத்தில் இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளும் பரமத்தி வேலூர் பேருந்து நிலையத்திற்கு சென்று வருமாறு ஓட்டுனர், நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அவ்வழித்தடப் பேருந்துகள் அனைத்தும் இரவு, பகல் எல்லா நடைகளிலும் பரமத்தி வேலூர் பேருந்து நிலையத்திற்குச் சென்று வருகின்றன.

**101—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 21027—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி முதல் நல்லம்பள்ளி ஒன்றியம் பரிகம் வரை செல்லும் 2சி நகரப் பேருந்தை எல்லா நடைகளும் இவ்வழியிலே இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்-3, நகர் பேருந்துகள் மூலம் தருமபுரியிலிருந்து பரிகம் வரை நாளொன்றுக்கு 20 நடைகள் இயக்கப்பட்டு வருவதால், மேலும் கூடுதல் நடைகளை தடம் எண் 2சி-யின் மூலம் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**102—**

## பேருந்து வசதி

**வினா எண் 21029—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் மஞ்சநாயக்கன அள்ளி வழியாக அண்ணாநகர், வரவூரான் கொட்டாய், எட்டிக்குழி வரை நகரப் பேருந்து வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி முதல் மஞ்சநாயக்கன அள்ளி வழியாக அண்ணாநகர், வரவூரான் கொட்டாய், எட்டிக்குழி வரையுள்ள வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் மூலம் நேரடி நகர் பேருந்து ஒன்றை இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

## புறநகர் பேருந்து இயக்குதல்

**வினா எண் 21030—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி முதல் சாமிசெட்டிப்பட்டி, பங்குநத்தம்கொட்டாய் வழியாக சின்னப்பட்டி வரை புறநகர்ப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி முதல் சாமிசெட்டிப்பட்டி, பங்குநத்தம்கொட்டாய் வழியாக சின்னப்பட்டி தடம் முழுவதும் நகர்ப் பேருந்து மூலம் பகுதிவாரியாக போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால், அவ்வழித்தடத்தில் புறநகர்ப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

104—

## துறைமுகங்களை மேம்படுத்துதல்

**வினா எண் 22908—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கப்பல் போக்குவரத்தை மேம்படுத்தும்பொருட்டு சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல் போன்ற துறைமுகங்களை மேம்படுத்த அரசு எடுத்துவரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் யாவை?*



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*கடலூர் துறைமுகத்தினை தனியார் பங்கேற்பின் மூலம் மேம்படுத்த தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் தொடர்ந்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

*நாகப்பட்டினம் துறைமுகத்தில் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தின் கடல்சார் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று, தற்போது கச்சா எண்ணெய் இத்துறைமுகத்தில் கையாளப்படுகிறது. மேலும், நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்த ரூ.1 கோடி அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.*

*குளச்சல் துறைமுகம் சரக்குப் பெட்டகம் கையாளும் துறைமுகமாக மலேசிய அரசு ஆதரவுடன் மேம்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் நிதி முதலீடு தொடர்பாக மலேசிய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.*

*மேலும், சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் (மத்திய) துறைமுகப் பொறுப்புக் கழகத்தின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.*

105—

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தேர்ச்சித்தளம்

**வினா எண் 23186—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஓட்டுநர் தேர்வு நடத்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், ஐ.ஆர்.டி. கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ளதுபோல, தேர்ச்சித்தளம் அமைந்துள்ளதா?*

*(ஆ) ஒவ்வொரு அலுவலகத்திற்கும் இம்மாதிரி தேர்ச்சித்தளம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 8 வட்டாரப் போக்குவரத்து அலுவலங்களில் ஓட்டுநர் தேர்ச்சித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. 3 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தேர்ச்சித்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு தேர்ச்சித்தளம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு தேர்ச்சித்தளம் அமைக்க நிதி ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ளது. எஞ்சிய சொந்தக் கட்டடம் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைத்தல்பொருட்டு நிலம் தெரிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**106—**

## பேருந்து வசதி

**வினா எண் 29435— திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து அரிமளம், தாஞ்சூர், செங்கமாரி வழியாக அறந்தாங்கிக்குப் பேருந்து வசதி செய்து தரும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடத்தில் உள்ள அனைத்து ஊர்களும் பகுதி, பகுதியாகப் பேருந்து வசதி பெற்றிருப்பதாலும், மேலும் இது ஒரு சுற்று வழித்தடம் என்பதாலும், புதுக்கோட்டையிலிருந்து அரிமளம், தாஞ்சூர், செங்கமாரி வழியாக அறந்தாங்கிக்குப் பேருந்து வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 ஜூலை 31]

**107—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 29599—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, அரவட்லா மலைப் பாதை வழியாகப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதி. அரவட்லா மலைப் பாதை வழியாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**108—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 30137—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் வழியாக எடப்பாடி முதல் ஆட்டையாம்பட்டி செல்லும் 2சி நகரப் பேருந்தை அவ்வழியே மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம். கூடலூர் வழியாக எடப்பாடி முதல் ஆட்டையாம்பட்டி வரை உள்ள வழித்தடத்தின் சாலை மிகவும் பழுதுபட்டிருப்பதால் அவ்வழியே தடம் எண் 2சி நகரப் பேருந்தை இயக்க இயலவில்லை. சாலை செப்பனிடப்பட்டவுடன் பேருந்து அவ்வழியே இயக்கப்படும்.

**109—**

## புதிய பேருந்து வசதி

**வினா எண் 30839—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கந்தர்வக்கோட்டை-கொத்தகம் வரை புதிய பேருந்து வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கந்தர்வக்கோட்டை—கொத்தகம் வரை புதிய பேருந்து வசதி அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**110—**

## புதிய பேருந்து வசதி

**வினா எண் 30842—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை—வேளாடிப்பட்டிக்குப் புதிய பேருந்து வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடத்தில் ஏற்கெனவே பகுதி பகுதியாகப் பேருந்து வசதி உள்ளதால், புதுக்கோட்டை—வேளாடிப்பட்டிக்குப் புதிய பேருந்து வசதி அமைத்துத்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





**111—**

## போக்குவரத்து சிக்னல் முறையைச் சீரமைத்தல்

**வினா எண் 31910—திரு. ராதாரவி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள போக்குவரத்து சிக்னல் முறையைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஓட்டுநர் வசதி கருதி, வலது பக்கம் பகுதியில் சிக்னல் விளக்குகள் பொருத்துவது குறித்துப் பரிசீலிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் எல்லா சந்திப்புகளிலும் வலது புறம் சிக்னல் தேவைப்படாது. சாலையின் அமைப்பு மற்றும் வாகன நெரிசல் உள்ள சந்திப்புகளை ஆராய்ந்து வலது புறம் சிக்னல் வைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**112—**

## மாடிப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 32771—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் மாடிப் பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராஜபாளையம் தொகுதியில் மாடிப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பலிசீலனையில் இல்லை.

113—

## மாநகரப் போக்குவரத்துப் பேருந்து

**வினா எண் 34013—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கூடுவாஞ்சேரி வரை இயக்கப்படும் மாநகரப் போக்குவரத்துப் பேருந்துகள் சிங்கப்பெருமாள் கோயில் வரை இயக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூடுவாஞ்சேரி வரை இயக்கப்படும் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழக எல்லைக்கப்பாற்பட்ட பகுதியான சிங்கப்பெருமாள் கோயில் வரை இயக்கத் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

114—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 34280—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சிதம்பரத்திலிருந்து கொள்ளிடம், ஆச்சாள்புரம், நல்லூர், பழையபாளையம் வழியாக பழையாறு மீன்பிடித் துறைமுகம் செல்ல அரசுப் பேருந்து விட முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து கொள்ளிடம், ஆச்சாள்புரம், நல்லூர், பழையபாளையம் வழியாக பழையாறு வழித்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் போதுமான அளவிற்குப் பகுதி பகுதியாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன. மேலும், கோரிக்கை தடம் ஒரு புதிய வழித்தடமாதலால் அத்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*





115—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 34712—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழியிலிருந்து மங்கைமடம், திருவெண்காடு, மடத்துக்குப்பம் வழியாக நாயக்கர் குப்பம் மீனவர் காலனி வரை நகரப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழியிலிருந்து மங்கை மடம், திருவெண்காடு, மடத்துக்குப்பம் வழியாக நாயக்கர் குப்பம் மீனவர் காலனி போதுமான அளவு பேருந்து வசதி பெற்றிருப்பதால் கோரிக்கைத் தடத்தில் மேலும் பேருந்து இயக்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

116—

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 35458—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையிலிருந்து வேலாடிப்பட்டி வழியாக கறம்பக்குடிக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக் கோட்டையிலிருந்து வேலாடிப்பட்டி வழியாக கறம்பக்குடிக்குப் புதிய பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**117—**

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 35614—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சி, வேட்டங்குடி, கேவரொடை வழியாக கூழையார் மீனவர் கிராமம் வரை அரசுப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சி, வேட்டங்குடி, கேவரொடை வழியாக கூழையார் மீனவர் கிராமம் வரை அரசுப் பேருந்தை இயக்க இயலாத நிலை உள்ளது.

**118—**

## நகரப் பேருந்துகள் வழித்தடம்

**வினா எண் 37362—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகள் வழித்தட நீளம் 30 கிலோ மீட்டர் என இயக்கப்படுவதை 40 கிலோ மீட்டர் என இயக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இதற்கு இப்போது அவசியமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**119—**

## விமான நிலையம் செயல்படுதல்

**வினா எண் 38397—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள விமான நிலையம் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசை வலியுறுத்தி விமான நிலையம் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் விமான நிலையத்தை மேம்படுத்துவது குறித்து மத்திய சிவில் போக்குவரத்து அமைச்சக இணைச் செயலாளர் அவர்கள் பயணிகள் போக்குவரத்து இல்லாமையால் எந்த வான்வழி அமைப்பும் விமான சேவையை நடத்த விருப்பம் தெரிவிக்காததால் சேலம் விமான தளத்தைத் தரம் உயர்த்த இந்திய விமானக் கட்டுப்பாட்டுக் குழுமத்திடம் திட்டம் ஏதுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

[2004 ஜூலை 31

120—

## வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம்

**வினா எண் 38784—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம் அரக்கோணத்தில் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரக்கோணம் தொகுதிக்கு அரக்கோணத்தில் வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

121—

## பேருந்து வசதி

**வினா எண் 42592—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பெரியார் பேருந்து நிலையம் முதல் சமயநல்லூர் தொகுதி, கருவானூர், பூலாம்பட்டி வழியாக அலங்காநல்லூர் வரை பேருந்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையம் முதல் சமயநல்லூர் தொகுதி, கருவானூர், பூலாம்பட்டி வழியாக



2004 ஜூலை 31]

அலங்காநல்லூர் வரை உள்ள அனைத்துப் பகுதிகளும் வெவ்வேறு தடப் பேருந்துகள் மூலம் போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால் பெரியார் நிலையம்–அலங்காநல்லூர் (வழி) கருவானூர், பூலாம்பட்டி என தனிப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

122—

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 51277—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டிலிருந்து இரவு 9.45-க்குப் புறப்பட்டு சங்ககிரி, சுண்ணாம்புக்குட்டை வழியாக எடப்பாடி வரை சென்று வந்த சேலம் கோட்டம் அரசுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோட்டிலிருந்து சங்ககிரி, சுண்ணாம்புக்குட்டை வழியாக எடப்பாடி வரை இரவு 9.45 மணிக்குச் சென்று வந்த தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் புறநகர் பேருந்தில் பயணித்த பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருந்ததால் அந்நடை மட்டும் 21–9–2003 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய வழித்தடத்தில் அந்நடையை மீண்டும் இயக்கப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

123—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 51628—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-கோவில்பட்டி-பசுவந்தனை-ஒட்டப்பிடாரம் மார்க்கமாக தூத்துக்குடி வரை அரசு விரைவுப் பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை-கோவில்பட்டி-பசுவந்தனை-ஒட்டப்பிடாரம் மார்க்கமாக தூத்துக்குடி வரை அரசு விரைவுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

124—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 51641—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலிருந்து விளாத்திகுளம் வழியாக கோவை செல்ல அரசு விரைவுப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தூத்துக்குடியிலிருந்து கோயம்புத்தூருக்கு விளாத்திகுளம் வழியாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



125—

## புதிய தொழிற்சாலைகளை அமைத்தல்

**வினா எண் 4519—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, தொழில் துறையில் பின்தங்கிய தொகுதி என அறிவித்து புதிய தொழிற்சாலைகளை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில் செங்கல்பட்டு நகரப் பகுதி (Urban) மட்டும் 18-3-1996 முதல் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு தொகுதியில் இதரப் பகுதிகள் தற்போதைய தொழில் வள நிலவரப்படி பின்தங்கிய பகுதியாக அறிவிக்க இயலாது. செங்கல்பட்டு நகரப் பகுதியில் புதியதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கும், ஏற்கெனவே உள்ள நிறுவனங்களில் செய்யப்படும் விரிவாக்கத்திற்கும் சொந்த முதலீடோ அல்லது வங்கிக் கடனாகவோ இருப்பின் அரசு விதிகளுக்கு உட்பட்டு அந்த நிறுவனங்களுக்கு 15% முதலீட்டு மானியம் வழங்கப்படும். செங்கல்பட்டு தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

126—

## அட்டை தயாரித்தல்

**வினா எண் 11652— திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் மாவட்ட மக்கள் நலன் கருதி தரிசு நிலங்களில் வளரும் வேலிகாத்தான் மரங்களைப் பயன்படுத்தி காகிதம் அல்லது அட்டை தயாரிக்க ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*வேலிகாத்தான் மரத்தைப் பயன்படுத்தி காகிதம் அல்லது அட்டை தயாரிக்க இயலாது என்பதால், இதுகுறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளத் தேவையில்லை.*

**127—**

## புதிய தொழிற்சாலைகளை அமைத்தல்

**வினா எண் 12000—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையில் வளர்ந்துவரும் மக்கள் நெருக்கடியின் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்படாதவாறு தடுக்க புதிய தொழிற்சாலைகளை கிராமப்புறங்களில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னையில் வளர்ந்துவரும் மக்கள் நெருக்கடியினால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுக்க கிராமப்புறங்களில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கும்பொருட்டு அரசு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.*

**128—**

## எத்தனால் தொழிற்சாலை

**வினா எண் 22503—திரு. எஸ். தாமோதரன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெட்ரோலுடன் எத்தனால் சேர்த்து உபயோகிக்கும் தொழிற்திறன் வந்துள்ளதால் எத்தனால் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் உள்ளதா?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*தனியார் துறையில், திரு. ஆரூரான் சுகர்ஸ், சக்தி சுகர்ஸ், ராஜஸ்ரீ சுகர்ஸ், தரணி சுகர்ஸ் மற்றும் கோத்தாரி சர்க்கரை ஆலைகளின் வடிப்பகங்களில் எத்தனால் தயாரிக்கத் தேவைப்படும் இயந்திரங்களை நிறுவி எத்தனால் தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

**129—**

## சர்க்கரை ஆலையை நவீனப்படுத்துதல்

**வினா எண் 23366—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.*

**130—**

## மேக்னசைட் உற்பத்தி

**வினா எண் 23759—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 'தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்' நிறுவனம் இறக்குமதியாகும் குழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டுக்கு ஏற்றவாறு மேக்னசைட் உற்பத்தி செய்தாக வேண்டும் என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசின் நிலைப்பாடு என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இறக்குமதி செய்யப்படும் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் 92 சதவீதத்திற்கும் அதிகமாக மெக்னீசியம் ஆக்ஸைடு கொண்டுள்ளதால் இது மிகவும் தரம் உயர்ந்ததாகும். இந்தத் தரத்திற்கு ஈடாக முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை உற்பத்தி செய்வதற்கு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திடம் வசதிகள் இல்லை.*

**131—**

**திராட்சை ரச் தயாரிப்புத் தொழிற்சாலை**

**வினா எண் 23765—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*டிட்கோ மூலம் தேனியில் அமைய உள்ள திராட்சை ரச தயாரிப்புத் தொழிற்சாலை எப்போது துவக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*வடிப்பாலையுடன்கூடிய திராட்சை மதுபானத் தொழிற்சாலையைக் கூட்டு முயற்சியில் அமைப்பதற்குத் தகுந்த சகதொழில் முனைவரைத் தேர்ந்தெடுக்க டிட்கோ நிறுவனம் டெண்டர் கோரியுள்ளது. சகதொழில் முனைவர் தேர்வுக்குப்பின், விரிவான தொழில் திட்டம் தயாரிக்கப்பட்டு தொழிற்சாலை தொடங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.*

**132—**

**உயிரி தொழில்நுட்பத் தொழில் பூங்கா**

**வினா எண் 23784—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*டிட்கோ மூலம் உயிரி தொழில்நுட்பத் தொழில் பூங்கா ஒன்று கோயம்புத்தூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூரில் உயிரி தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் டிட்கோ நிறுவனத்தின் பரிசீலனையில் இல்லை.*

**133—**

**ரப்பர் தொழில் பூங்கா**

**வினா எண் 23788—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரளா மாநிலத்திலும் கிடைக்கும் இயற்கை ரப்பரைப் பயன்படுத்தி நாகர்கோவிலுக்கு அருகில் ரப்பர் தொழில் பூங்கா ஒன்றை டிட்கோ மூலம் அமைக்கும் பணியை விரைந்து தொடங்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் யாவை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*இத்திட்டத்தைக் கூட்டு முயற்சியில் செயல்படுத்த திருவாளர்கள் அக்ஸா டெக்னாலஜீஸ் என்ற நிறுவனம் டிட்கோ நிறுவனத்தின் சகதொழில் முனைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில்முனைவோர் ஒப்பந்தம் 8-9-2003 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் பார்க் (ரப்பர்) லிமிடெட் என்ற கூட்டு முயற்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நிலத்தைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், கட்டுமானப் பணிகளுக்கான ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, கட்டுமானப் பணிகள் போன்றவை 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 2 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

134—

## தனியார் சர்க்கரை ஆலை

**வினா எண் 27629—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வடபாதிமங்கலத்தில் தனியார் சர்க்கரை ஆலை இடமாற்றம் செய்ததால் இப்பகுதி விவசாயிகள், தொழிலாளர்கள் பாதித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) மீண்டும் இப்பகுதியில் சர்க்கரை ஆலையை நிறுவிட அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், வடபாதிமங்கலத்தில் இருந்த தனியார் சர்க்கரை ஆலை இடமாற்றம் செய்ததால் இப்பகுதி விவசாயிகள், தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை.

(ஆ) மீண்டும் இப்பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கக் கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.

135—

## கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மேம்படுத்துதல்

**வினா எண் 29763—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

நலிவடைந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தனியார்மயமாக்க அரசு உத்தேசித்துள்ளதால், அவ்வாலைகளை மேம்படுத்தும சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.



136—

## மலையில் கல் வெட்டி எடுத்தல்

**வினா எண் 30407—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலுள்ள பூதேரி மலையில் சட்டத்துக்குப் புறம்பாக கல் வெட்டி எடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தடுத்து, ஏலம் விடப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ் பூதேரி கிராமம், பூதேரி மலையில் ஒரு பகுதி ஏலத்தில் விடப்பட்டுள்ளது. அதில் கல்வெட்டி எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஏலத்திற்குக் கொண்டுவரப்படாத பகுதியில் கள்ளத்தனமாகக் கல் உடைக்கப்படுவது காவல் துறை உதவியுடன் தடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மலைப்புறம்போக்கில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. இப்பகுதியினை ஏலத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

137—

## தொழில் முனைவோருக்கு அரசு நிதியுதவி

**வினா எண் 33359—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட்டில், தொழில் முனைவோருக்கு அரசு நிதியுதவி அளித்து, தொழில் துவங்க, ஊக்குவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சிப்காட் நிறுவனம், தொழில் வளாகங்கள்/தொழில் பூங்கா மற்றும் வளர்ச்சி மையங்கள் அமைத்து தொழில் முனைவோர்க்கு நில ஒதுக்கீடு செய்யும் பணியைச் செய்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில் முனைவோர்க்கு தவணைக் கடன் மற்றும் அரசு நிதியுதவித் திட்டங்களை அளித்து தொழில் துவங்க ஊக்குவித்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக நிதியுதவி பெற்று தொழில்களைத் தொடங்கலாம்.*

**138—**

### சர்க்கரை ஆலை துறையில் பங்குத் தொகை

**வினா எண் 33390—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சர்க்கரை ஆலை துறையில் 141 கோடிக்கு மேல் உள்ள பங்குத் தொகைக்கு கடந்த 10 ஆண்டு காலமாக எந்த இலாபத்திலும் பங்கு அல்லது வட்டித் தொகை தரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஆலைகள் நட்டத்தில் இயங்கி வருவதால், பங்கு, வட்டி வழங்க இயலவில்லை.*

**139—**

### சுண்ணாம்புக் கற்களுக்கு அரசு ராயல்டி

**வினா எண் 43516—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 31]

*(அ) சேலம் மாவட்டத்தில் அரசு நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களில் வெட்டி எடுக்கப்படும் சுண்ணாம்புக் கற்களுக்கு அரசு "ராயல்டி"-ஐ அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உரியக் கட்டணம் (Royalty) மைய அரசின் கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957-ன்படி முடிவு செய்யப்படுகிறது. உரியத் தொகை உயர்த்துவது குறித்து மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**140—**

### தேயிலை நாற்று வழங்குதல்

**வினா எண் 24480—திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேயிலை விவசாயிகளுக்கு 65 பைசாவிற்கு தேயிலை நாற்று கொடுப்பதுபோல, தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை உறுப்பினர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேயிலை நாற்றுகள் நாற்று ஒன்றுக்கு ரூ.0.65 வீதம் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பயனடைந்த விவசாயிகளில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை உறுப்பினர்களும் அடங்குவார்கள். எனவே, மானிய விலையில் நாற்றுகள் தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் மூலமாக அதன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை.*

141—

## தொடக்க வேளாண்மை வங்கி அமைத்தல்

**வினா எண் 2973—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் தொடக்க வேளாண்மை வங்கி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கியின் அறிவுரைப்படி பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 2000 ஹெக்டேர் இருந்தால்தான் ஒரு தொடக்க வேளாண்மை வங்கி அமைக்க இயலும். தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு சுமார் 135 ஹெக்டேர் மட்டுமே இருப்பதால், அங்கு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க இயலாத நிலை உள்ளது.

142—

## நியாய விலைக் கடை துவங்குதல்

**வினா எண் 4668—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், தானமூர்த்தியூர் துவக்கப் பள்ளிக்கு அருகில் நியாய விலைக் கடை புதிதாகத் துவங்க அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து 495 குடும்ப அட்டைகளைப் பிரித்து தானமூர்த்தியூர் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சேலம் மாவட்ட ஆட்சியரால் 2-7-2002 அன்று உத்தரவிடப்பட்டு, அக்கடை 1-8-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

143—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

**வினா எண் 9775—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, காட்பாடி வட்டம், வி.எல்.எஸ்.பி.எல். 129. சைனாம்பட்டடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து தாதிரெட்டிப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தாதிரெட்டிப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

144—

## வாகன வசதி

**வினா எண் 11096—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வருவாய்க் கோட்ட அளவில் செயல்படும் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கு வாகன வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஆம்.

**145—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டட வசதி

**வினா எண் 11144—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பட்டகப்பட்டி கிராமத்திலிருக்கும் நியாய விலைக் கடைக்குக் கட்டட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி வட்டாரத்தில் செயல்படும் பட்டகப்பட்டி முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2003-2004 ஆம் ஆண்டில் எவ்வித நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்தும் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு தொடர்ந்து கண்காணிக்க தருமபுரி மண்டல இணைப் பதிவாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.





**146—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 14436—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, நயினார்குளம் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலச்செவல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் நயினார்குளம் நியாய விலைக் கடை, மேலச்செவல் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளுக்கு அரசுத் திட்டங்களின்கீழ் கட்டடங்கள் கட்டும் திட்டம் எதுவுமில்லை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பல்வேறு அரசு நிதி உதவித் திட்டங்களின்கீழ் ஊராட்சிப் பகுதிகளில் மட்டுமே நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டப்படுகின்றன. நயினார்குளம் நியாய விலைக் கடை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இருப்பதால் மேற்கண்ட அரசு நிதியுதவித் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித்தர வாய்ப்பு இல்லை.

**147—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 14138—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, தேசமாணிக்கம் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளுக்குக் கூட்டுறவுத் துறை மூலம் நேரடியாகக் கட்டடங்கள் கட்டியளிக்கும் திட்டம் ஏதும் இல்லை. தற்பொழுது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் வழியாக ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற அரசு நிதியுதவித் திட்டங்களின்கீழ், ஊராட்சிப் பகுதிகளில் மட்டுமே நியாய விலைக் கடைகளுக்கான கட்டடம் கட்டப்படுகின்றன. தேசமாணிக்கம் நியாய விலைக் கடை பேரூராட்சிப் பகுதியில் இருப்பதால் அக்கடைக்கு அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.*

**148—**

## நியாய விலைக் கடைகள் துவக்குதல்

**வினா எண் 17127—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், பாச்சாலியூர், முனியம்பட்டி ஆகிய ஊர்களில் நியாய விலைக் கடைகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் சின்னப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் ஆலமரத்தூர் நியாய விலைக் கடை 577 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. பாச்சாலியூருக்கும் ஆலமரத்தூருக்கும் இடையே 1/2 கி.மீ. தொலைவே உள்ளதால் பாச்சாலியூர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.*



*2. மேலும், சின்னப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் முனியம்பட்டியில் 640 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை 9-4-1985 முதல் செயல்பட்டு வருவதால், முனியம்பட்டியில் நியாய விலைக் கடை துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**149—**

## கூடுதல் வரி விதிப்பு

**வினா எண் 18143—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேகோசர்வ் நிறுவனத்திலுள்ளவர்கள் கூடுதல் வரி விதிப்பினால் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இவர்கள் நலத்திற்காக அரசு என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேகோசர்வ்* (Sagoserve) *என்ற கூட்டுறவு நிறுவனத்தின் தொழில் நலிவினைக் கருத்தில் கொண்டு கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து 1-1-2002 முதல் அரசு ஆணை (நிலை) எண் 39, வணிக வரி, நாள் 1-1-2002-ல் அந்நிறுவனத்திற்கு அரசு விலக்கு அளித்துள்ளது. மேலும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, துணைப் பிரிவு (1) பிரிவு 17-ன்கீழ் சவ்வரிசி மற்றும் சவ்வரிசி மாவு ஆகிய இவற்றிற்கு அரசு ஆணை 48, வணிக வரி, நாள் 29-5-2003-ல் வரிவீதம் 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. மத்திய விற்பனை வரியும் 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு ஆணை எண் 59, நாள் 12-6-2003-ல் 'சேகோசர்வ்' மூலம் விற்பனை செய்யும் வணிகருக்கு மட்டும் 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடு வரி குறைக்கப்பட்டுள்ளது. எனவே, சேகோசர்வ் நிறுவனத்தின் தொழில் பாதிக்கப்படவில்லை.*

[2004 ஜூலை 31

150—

## கேஸ் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 23301—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாகக் கடந்த காலங்களில் கேஸ் இணைப்பு வழங்குவதற்கு விண்ணப்பப் படிவத்திற்கு முன்பணம் பெற்று இதுவரை இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கேஸ் இணைப்பு வழங்குவதற்கு விண்ணப்பப் படிவத்திற்கு ரூ.10 பெறப்பட்டு 6362 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டது. முன்பணம் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

151—

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி

**வினா எண் 28738—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி போடப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விதிவிலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொது வரி விலக்கு கிடையாது. இருப்பினும், விவசாயக் கூட்டுறவுச் சங்கம், பால் விநியோகஸ்தர் சங்கம், மத்திய மாநில அரசு ஊழியர்களுக்காக நடத்தப்படும் சங்கம், செக்கு எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம், தொழில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கம் போன்ற பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோரிக்கையின்பேரில் பலிசீலித்து வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசு அறிவிக்கை எண் 11(1) வணிக வரித் துறை/20(a) நாள் 27-2-2004-ன்படி நுகர்வோர் கூட்டுறவு அங்காடிகளுக்கு நுகர்பொருட்களுக்கு மறு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

152—

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 29648—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், பெரமங்கலத்தில் (பெரமங்கலம் ஊராட்சி) வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் பெரமங்கலம் நியாய விலைக் கடைக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கடைக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, 30-6-2003 முதல் புதிய கட்டடத்தில் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

153—

## நுகர்பொருள் விலை

**வினா எண் 33419—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வெளி மார்க்கெட்டில் விற்கப்படும் விலையைவிட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்கப்படும் நுகர்பொருட்களின் விலை அதிகம் என அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெளி மார்க்கெட்டில் விற்கப்படும் விலையைவிட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்கப்படும் நுகர்பொருட்களின் விலை அதிகம் என இதுவரை புகார்கள் ஏதும் பெறப்படவில்லை.

154—

## பணி நியமனம்

**வினா எண் 36036—திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் பணியாளர்களை நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.



2004 ஜூலை 31]

155—

## புனரமைப்பு நிதி வழங்குதல்

**வினா எண் 39741—திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலிவுற்ற கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு நபார்டு வங்கியின் மூலம் புனரமைப்பு நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நபார்டு வங்கியின் மூலம் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்காக மட்டுமே கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு மாநில மற்றும் மத்திய வங்கிகள் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நலிவுற்ற கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு நபார்டு வங்கியின மூலம் புனரமைப்பு நிதி வழங்க வழிவகை ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

156—

## நியாய விலைக் கடை

**வினா எண் 40921—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், லக்கிநாயக்கன்பட்டி ஊராட்சியில் ஜல்லியூர் கிராமத்திற்கு பகுதிநேர கூட்டுறவு நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், குனிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் லக்கிநாயக்கன்பட்டி நியாய விலைக் கடை தற்போது 499 குடும்ப அட்டைகள் கொண்டு இயங்கி வருகிறது. ஏற்கெனவே லக்கிநாயக்கன்பட்டி நியாய விலைக் கடையினை இரண்டு பகுதி நேரக் கடையாகப் பிரித்து கிழக்கு பதனவாடி, 308 குடும்ப அட்டைகளைக் கொண்டும், பள்ளிப்பள்ளி, 338 குடும்ப அட்டைகளைக் கொண்டும் கடந்த மூன்று ஆண்டுகளாக இயங்கி வருகிறது. தாய்க் கடையிலிருந்து 1½ கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஜல்லியூர் பகுதி, 147 குடும்ப அட்டைகளை மட்டுமே கொண்டுள்ளது. பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்படவேண்டும் மற்றும் இரு நியாய நிலைக் கடைகளுக்குமிடையே உள்ள தொலைவு குறைந்தது 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் ஜல்லியூர் பகுதியில் 3-வது பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**157—**

## கால்நடை மருத்துவமனைக்ள் அமைத்தல்

**வினா எண் 20890—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, கீழ்கொவளைவேடு, திருப்பூண்டி ஊராட்சிகளுக்கு கால்நடை மருத்துவமனைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கீழ்கொவளைவேடு மற்றும் அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருப்பூண்டி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.*

*(ஆ) எழாது.*



**158—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 27383—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, இரும்பேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) வந்தவாசி தொகுதி, இரும்பேடு கிராமத்தில் 6221 கால்நடைகள் மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும், கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும் இரும்பேடு கிராமத்தில் தற்போது எந்த ஒரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரிடையாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.*

*(ஆ) எழாது.*

**159—**

### கால்நடை மருத்துவ நிலையம்

**வினா எண் 31027—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவ நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**160—**

### கால்நடை கிளை மருத்துவ நிலையம்

**வினா எண் 32032—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி ஒன்றியம், திருத்தலையூரில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) முசிறி ஒன்றியம், திருத்தலையூரில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.





**161—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 32034—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எஸ். அய்யம்பாளையத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எஸ். அய்யம்பாளையத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 6399 மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், தற்போது எஸ். அய்யம்பாளையம் கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**162—**

### கால்நடை மருந்தகம்

**வினா எண் 32695—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வீரடிப்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வீரடிப்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.*

*(ஆ) எழாது.*

**163—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 35622—திரு. சி. இராசேந்திரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**164—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 36536—திரு. சு. சிவராஜ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ரிஷிவந்தியம் தொகுதியில் லா. கூடலூர் மற்றும் பழைய சிறுவங்கூர், குன்னியூர், மையனூர் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதியில் லா. கூடலூர், பழைய சிறுவங்கூர், குன்னியூர், மையனூர் ஆகிய கிராமங்களில் 10,000-க்கும் குறைவாக கால்நடைகள் உள்ளன. 8 கி.மீ. சுற்றளவிற்குள், 3 கால்நடை கிளை நிலையங்களும், 2 கால்நடை மருந்தகமும், 1 கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு வழிவகையில்லை.*

*(ஆ) எழாது.*

**165—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 36684—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் ஒன்றியம், ஆலடியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) விருத்தாசலம் ஒன்றியம், ஆலடியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக, 3,157 மட்டுமே உள்ளன. இதன் அருகில் 6 கி.மீ. தூரத்தில் மாத்தூர் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையம் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும், மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது ஆலடி கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) எழாது.*

**166—**

**கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 37501—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்திலுள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**167—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 37540—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், எ. வாசுதேவனூர், இரங்கப்பனூர் ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், எ. வாசுதேவனூர் மற்றும் இரங்கப்பனூர் ஆகிய இரு கிராமங்களுக்கும் அருகில் எட்டு கிலோ மீட்டர் சுற்றளவில் முறையே சின்னசேலம், புதுப்பட்டு என்னும் கிராமங்களில் கால்நடை கிளை நிலையங்கள் உள்ளதாலும், இக்கிராமங்களில் 10,000 எண்ணிக்கைக்கும் குறைவாக கால்நடைகள் உள்ளதாலும், கால்நடை கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ தற்போது இவ்விடங்களில் இல்லாத நிலையில் நேரடியாக இங்கு புதிதாக மருத்துவமனைகளை அமைக்க வாய்ப்பில்லை.



(ஆ) எழாது.

**168—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 37543—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில் துரைப்பட்டு நகரில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில் துரைப்பட்டு நகரில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 4,540 மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், மூங்கில் துரைப்பட்டு கிராமத்தில் தற்போது எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவங்க வாய்ப்பில்லை.

[2004 ஜூலை 31

169—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 38349—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சிக்கு உட்பட்ட 'ஜெஜெ' நகரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட 'ஜெ.ஜெ.' நகரில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

170—

## கால்நடை கிராம கேந்திர நிலையம்

**வினா எண் 39128—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, செமப்புதூர் கால்நடை கிராம கேந்திர நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி தொகுதி, செமப்புதூரில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக 8,186 மட்டுமே உள்ளது. அதன் அருகில் 5 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வரும் கீழ ஈரால் கால்நடை கிளை நிலையம் மூலமாகவும், 8 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வரும் துறையூர் கால்நடை கிளை நிலையம் மூலமாகவும், மேற்படி கிராம கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது போதுமானதாக உள்ளதாலும், தற்போதைய அரசின் நிதி நெருக்கடி காரணமாகவும், செமப்புதூர் கால்நடை கிராம கேந்திர நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட தற்போது வாய்ப்பில்லை.



2004 ஜூலை 31]

(ஆ) எழாது.

171—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 39392—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, இடையக்குறிச்சி, மருதூர், பெரிய கிருஷ்ணாபுரம், வரதராஜன்பேட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, இடையக்குறிச்சி, மருதூர், பெரிய கிருஷ்ணாபுரம், வரதராஜன்பேட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

[2004 ஜூலை 31

172—

## கால்நடை பெருக்கத் திட்டம்

**வினா எண் 41838—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் செயல்படுத்தவுள்ள கால்நடை மற்றும் எருமையினப் பெருக்கத்திற்கான தேசிய திட்டத்தை கோவை மாவட்டம், உடுமலை, பொங்கலூர், பல்லடம், திருப்பூர் போன்ற பகுதிகளில் முன்னோடியாக செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தேசிய கால்நடை மற்றும் எருமையினப் பெருக்கத் திட்டத்தை, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையின்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாக செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளதால், கோவை மாவட்டம், உடுமலை, பல்லடம், பொங்கலூர் மற்றும் திருப்பூர் ஆகிய சில பகுதிகளில் மட்டும் முன்னோடியாக செயல்படுத்தும் அவசியம் எழவில்லை.

173—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 43036—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வீரப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வீரப்பட்டி கிராமத்தில் 6,822 கால்நடைகள் மட்டுமே உள்ளன. இதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் மட்டங்கால் கால்நடை மருந்தகமும், 6 கி.மீ. தூரத்தில் புதுநகர் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. தற்போது, துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், வீரப்பட்டி கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் தற்போது செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

174—

## ஆடுகளுக்கு தடுப்பூசிகள்

**வினா எண் 44713—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியில் ஆடுகள் நோயினால் இறப்பதைத் தடுக்க சம்பந்தப்பட்ட நோயைக் கண்டுபிடித்து அதற்கான தடுப்பூசி முன்னெச்சரிக்கையாக செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி தொகுதியில் ஆடுகள் நோயினால் இறக்கவில்லை. எனினும் முன்னெச்சரிக்கையாக ஆடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு இழப்புகள் தவிர்க்கப்படுகின்றன.

(ஆ) எழாது.

**175—**

## கால்நடை வளர்ப்பு

**வினா எண் 41840—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கால்நடை வளர்ப்பை வேளாண்மையுடன் ஒருங்கிணைத்து பண்ணை வீட்டுப் பயிர் வளர்ப்பு முறையை அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், உடுமலை, பொங்கலூர் போன்ற பகுதிகளில் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புன்செய் நில விவசாயத்துடன் ஒருங்கிணைந்த வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தை ரூ. 22.814 இலட்சம் செலவில் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) உடுமலை, பொங்கலூர் போன்ற பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த தற்சமயம் உத்தேசம் இல்லை.

**176—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 10315—திரு. எம். சக்திவேல் முருகன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம், மணிமுத்தாறு, மாஞ்சோலை மலைப் பகுதிகளில் 40, 50 ஆண்டுகளாக குடியிருந்து வரும் மக்களின் அடிப்படை உரிமைகளான வீடு, மின் இணைப்பு மற்றும் குடிநீர் பாதிக்காதவாறு வனத் துறை பொதுவான உத்தரவு பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பாபநாசம் அணைக்கட்டு பகுதியில் மக்கள் குடியிருக்கும் இடம் பாதுகாக்கப்பட்ட (Reserved Forest) வனப் பகுதியாகும். இவர்கள் வன நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வருகிறார்கள். அப்பகுதியில் வீடு, மின் இணைப்பு மற்றும் குடிநீர் வசதிகள் செய்து தர இயலாது. மணிமுத்தாறு, மாஞ்சோலை வனப் பகுதிகளில் குடியிருப்புகள் எதுவும் இல்லை.

**177—**

## நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டம்

**வினா எண் 10445—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொழிற்சாலைகள் மூலம் வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து ஆற்றின் ஓரமாக குழாய் மூலம் கடல் நீரில் கலந்து நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டம் நிறைவேற்றப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**178—**

## தொழிற்சாலை கழிவுப் பொருட்கள்

**வினா எண் 10589—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 31

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு ஆகிய இடங்களிலுள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் பாலாற்றில் கலப்பதால், விவசாயத்திற்குப் பெரிதும் பாதிப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர் மாவட்டத்தில் தனியாகவோ அல்லது கூட்டு சேர்ந்தோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காத தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மேலும் சுற்றுச்சூழல் (பாதிப்பு தடுப்பு மற்றும் இழப்பீடுத் தொகை வழங்குதல்) ஆணையம் வழங்கிய தீர்ப்புரையின்படி, கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**179—**

## சேகோ பாக்டரிகளின் கழிவுநீர்

**வினா எண் 26834—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சேகோ பாக்டரிகளின் கழிவுநீர் துர்நாற்றத்தால் சுற்றுச்சூழல் மாசுபடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கழிவுநீரைச் சுத்தப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 31]

**180—**

## மாசு கட்டுப்பாடு

**வினா எண் 31636—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி ஸ்டெரிலைட் ஆலையின் மாசு கட்டுப்பாடு குறித்து மக்கள் அறிந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவாளர்கள் ஸ்டெரிலைட் இண்டஸ்ட்ரிஸ் (இந்தியா) லிமிடெட் ஆலையின் மாசுக் கட்டுப்பாடு குறித்து அறிய விரும்பும் பொதுமக்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தூத்துக்குடி மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர் அவர்களை திங்கட்கிழமைகளில், அவரது அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அணுகினால் ஆலையின் மாசுக் கட்டுப்பாடு குறித்து அறிந்துகொள்ளலாம்.

**181—**

## வீடு கட்ட கடன்

**வினா எண் 2121—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறத்தில் வசிக்கும் கூலித் தொழிலாளர்களுக்கு சுலபத் தவணையில் வீடு கட்ட கடன் அளிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**182—**

**சமூக நலக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 7657—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் வாழும் ஆதி ஆந்திரா மக்களுக்கு கே.என்.எஸ். பஸ் டிப்போ அருகிலுள்ள காலி இடத்தில் சமூக நலக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

**183—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 9647—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10-வது வட்டம், ஜெ.ஜெ. நகரில் மறுக்கப்பட்ட அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) இடம் ஒதுக்கப்பட்டும் கட்டித் தரப்படாமல் இருக்கும் சமூக நலக் கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், ஆரம்ப கல்விக் கூடம், விளையாட்டுத் திடல் ஆகியவை கட்டித் தரப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10-வது வட்டம், ஜெ.ஜெ. நகர் பகுதியில் நடைபாதைவாசிகளுக்கான வீட்டு வசதித் திட்டம் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்டது. இப்பகுதியில் வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள வசதிகளை பராமரிக்கும்பொருட்டு சென்னை மாநகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டது. எனவே, இத்திட்டப் பகுதியில் கூடுதல் அடிப்படை வசதிகள் சென்னை மாநகராட்சியால் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

(ஆ) இத்திட்டப் பகுதியில் உள்ள பொது உபயோகத்திற்கான நிலங்களை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படை செய்ய கொடை ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இந்நிலங்களைப் பெற்றுக்கொண்டு, இத்திட்டப் பணிகள் சென்னை மாநகராட்சியால்தான் செய்யப்பட வேண்டும்.

**184—**

**அடுக்குமாடிக் கட்டடங்கள்**

**வினா எண் 17172—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் வசிக்கும் அரசு அலுவலர்களுக்கு குடியிருக்க வீட்டு வசதித் துறையின் மூலம் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[2004 ஜூலை 31

**185—**

## அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்பு வீடுகள்

**வினா எண் 19030—திரு. இரா. இராம் பிரபு :** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் பரமக்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்ட திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தாமல் நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் கட்டிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி நகரில் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற்குப் பொருத்தமான அரசு நிலம் கிடைக்கப்பெறாத நிலையில் மேற்கண்ட திட்டத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்த இயலவில்லை. எனவே இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

**186—**

## அடுக்குமாடி வீடுகள்

**வினா எண் 20760—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்ட அரசு அலுவலர்களுக்காக வாடகை அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது இந்தத் திட்டம் துவங்கப்பட உள்ளது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் அரசு அலுவலர்களுக்காக வாடகை அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**187—**

## வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு வட்டி விதம்

**வினா எண் 21599—திரு. ஐ. கணேசன் :** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம் அதிகமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், வட்டியைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களும் ஒவ்வொரு நிதி நிறுவனத்திடமிருந்து தொகை கடனாக பெறப்பட்டு அந்தந்த நிறுவனம் நிர்ணயிக்கும் வட்டி விகிதத்தினையும் திரும்பச் செலுத்தும் காலத்தினையும் பொறுத்தே அந்தந்த திட்டத்திற்கு நிர்ணயிக்கப்படுகிறது. ஆகையால் வட்டியைக் குறைக்க இயலாது.

[2004 ஜூலை 31

**188—**

## குடிநீர் மற்றும் வடிகால் இணைப்பு

**வினா எண் 30116—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விதிகளை மீறி கட்டப்பட்ட வீடுகளுக்கு மின்சாரம், குடிநீர் மற்றும் வடிகால் இணைப்பு வழங்கக் கூடாது என சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆணை பிறப்பித்திருக்கிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதனால் பாதிக்கப்படும் வீடுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினா எழாது.*

**189—**

## அரசு ஊழியர்களுக்கு வீடுகள்

**வினா எண் 32051—திரு. மா. இராஜசேகர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராஜபாளையம் தொகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*



2004 ஜூலை 31]

**190—**

## குடிசைவாசிகளுக்கு மாற்று இடம்

**வினா எண் 36078—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 6-வது வட்டத்திலுள்ள அண்ணா நகர் பகுதி ஏழை குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*தற்போதைக்கு இல்லை.*

**191—**

## வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டுதல்

**வினா எண் 37565—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

[2004 ஜூலை 31

192—

## தொழிலாளர் சேமநல நிதி

**வினா எண் 30083—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்களின் சேமநல நிதி (பி.எஃப்)-யில் செலுத்திய பணத்தை தமிழக அரசின் பத்திரங்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம் மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளதாகும்.

(ஆ) தமிழக அரசின் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ.165.27 கோடி. தமிழக அரசின் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ.1.00 இலட்சம்.

193—

## இலவச திருமணம்

**வினா எண் 36079—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வக்ஃப் போர்டு சார்பில் ஏழை முஸ்லீம்களுக்கு இலவச திருமணம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2004 ஜூலை 31]

194—

## தொழிற்பள்ளிகள் ஏற்படுத்துதல்

**வினா எண் 38532—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் குறுகிய கால தொழிற் பயிற்சி அளிக்கும் தொழிற்பள்ளிகள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

195—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 11837—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாரதி நகர், பனையன்குறிச்சி, அனந்தநாடார்பட்டி, கலிதீர்த்தம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட பாரதி நகர், பனையன்குறிச்சி, அனந்தநாடார்பட்டி, கலிதீர்த்தம்பட்டி ஆகிய அனைத்துக் குடியிருப்புகளுக்கும், பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீர் வழங்கும் பணிகள் முடிவுற்று திட்டம் தற்போது மக்கட் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**196—**

### குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா எண் 21132—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதியில் உள்ள கணக்குபிள்ளை வலசையில் உள்ள குடிநீர்த் தொட்டி பழுது அடைந்து விட்டதால் புதிய குடிநீர்த் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், கணக்குபிள்ளை வலசையிலுள்ள 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி 1958 ஆம் ஆண்டு ஊராட்சியின் மூலம் கட்டப்பட்டதாகும். இத்தொட்டி மிகவும் சேதமடைந்து பழுது நீக்கம் செய்ய முடியாத அளவிற்கு உள்ளது. கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பட்டு 1994 ஆம் ஆண்டு முதல் பயனில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்கிராமத்திற்கு போதுமானதாக உள்ளது. இக்குடியிருப்பில் புதிய குடிநீர்த் தொட்டி கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.



**197—**

### புதிய குடிநீர்க் குழாய்கள்

**வினா எண் 26969—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நாட்டாணி கிராமத்தில் பழுதடைந்துள்ள குடிநீர்க் குழாய்களை அகற்றி, புதிய குழாய்கள் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நாட்டாணி கிராமத்தில் குழாய்களில் ஏற்பட்ட கசிவுகள் சரி செய்யப்பட்டு திட்டம் நல்லமுறையில் இயங்கி வருகிறது.

**198—**

### வாகன பழுதுபார்ப்பு நிலையம்

**வினா எண் 28477—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் வாகன பழுதுபார்ப்பு நிலையங்களை பொதுமக்களுக்கு இடைஞ்சல் இன்றியும், சுற்றுச்சூழல் கருதியும் ரஜாகுனிபேட்டைக்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

199—

## குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 28479—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

200—

## நிரந்தர அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 47019—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் நிரந்தர அருங்காட்சியகத்தை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இதுபோன்ற திட்டக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



# இணைப்பு II

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## @உடுக்குறியிடாத வினாக்கள்

## பட்டியல் 19

1—

## சிறு பாலம் கட்டுதல்

**வினா எண் 12135—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சி, பிரான்சேரி அம்மன்கோவில் பக்கம் பிரதான சாலை வடிகால் கட்டி, கீழ்ப்புறம் உள்ள பிரதான சாலையில் சிறு பாலம் கட்ட நெடுஞ்சாலைத் துறை உரிய அனுமதியை வழங்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வடிகால் கட்டுவதற்கு தோராயமாக ரூ.5.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை. மேலும், இவ்விடத்தில் சிறு பாலம் அமைக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2—

## சிறு பாலம் கட்டுதல்

**வினா எண் 15833—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் விஜயாபதி சாலையில் கி.மீ. 21—ல் சிறு பாலம் கட்டிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் தற்போது மாநில சாலையாக உயர்த்தப்பெற்ற நாங்குநேரி—ஏர்வாடி—வள்ளியூர் விஜயாபதி சாலையில் கி.மீ. 30/8—ல் உள்ள பழுதடைந்த பாலமாகும். இப்பாலத்தின் மொத்த நீளம் 8.00 மீட்டராகும். பழுதடைந்த இப்பாலத்தைத் திரும்பக் கட்ட தோராயமாக ரூ.10.00 இலட்சம் தேவையாகும். இப்பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை.

3—

## நெடுஞ்சாலை சீரமைப்பு

**வினா எண் 15856—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் நரிக்கல்வரி தேங்காய்பாறை நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விபத்துக்கள் அடிக்கடி இங்கு ஏற்படவில்லை. இருப்பினும், அவ்வப்போது ஏற்படும் குண்டு குழிகளை நெடுஞ்சாலைத் துறையில் சாலைத் தொகுதியாட்களைக் கொண்டு இச்சாலைகளில் தார் நொடி போட்டு, போக்குவரத்து சீராக நடைபெற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

## நெடுஞ்சாலை மேம்பாடு

**வினா எண் 23689—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த சுல்தான்பேட்டை முதல் ஜல்லிப்பட்டி நந்தவனம்பாளையம் வழியாக கி.மீ. 15/2 முதல் கி.மீ. 16/6 வரை மிகப் பழுதடைந்துள்ளதால் அதை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது சுல்தான்பேட்டை-ஜல்லிப்பட்டி-நந்தவனம்பாளையம் கி.மீ. 15/2-16/6 வரையிலான இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையை மேம்பாடு செய்ய உத்தேச மதிப்பீடாக ரூ.10.00 இலட்சம் தேவைப்படும். மேற்படி சாலையில் உள்ள நொடிகளுக்கு சமீபத்தில் தார் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு தற்காலிகமாக சீர் செய்யப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலை சீரமைப்பு

**வினா எண் 23691—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த உடுமலைப்பேட்டை-தாராபுரம் சாலை முதல் சின்னவீரன்பட்டி கி.மீ. 2/6 முதல் கி.மீ. 3/6 வரை மிகப் பழுதடைந்துள்ளதால், அதை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள கி.மீ. 2/6-3/6 வரையுள்ள 1.00 கி.மீ. நீளத்திற்குப் பழுதடைந்துள்ள இச்சாலைப் பகுதியைச் சீரமைக்கத் தோராயமாக ரூ.5.00 இலட்சங்கள் நிதி தேவைப்படும் என்றும், தற்காலிக அடிப்படையில், இப்பகுதியில் ஏற்படும் நொடிகளுக்கு தார் நறுக்குகள் போடப்பட்டு, போக்குவரத்திற்கு உகந்த முறையில் சாலை பராமரிக்கப்பட்டு வருகின்றது.

6—

## சாலை சீரமைப்பு

**வினா எண் 23692—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த மைவாடி - பெரியகோட்டை சாலை கி.மீ. 4/0 முதல் 4/8 வரை மிகப் பழுதடைந்துள்ளதால் அதனைச் சீர் செய்ய அரசு ஆணையிடுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையான கி.மீ. 4/0-4/8 வரை மேம்பாடு செய்ய உத்தேச மதிப்பீடாக ரூ.4.00 இலட்சம் நிதி தேவைப்படும். எனவே, இப்பகுதியில் சிறப்புப் பழுதுபார்க்கும் பணி வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்படும்.

7—

## சாலை சீரமைப்பு

**வினா எண் 23693—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த மலைக்கோவில் முதல் லிங்கமநாய்க்கனூர் வரை செல்லும் சாலை கி.மீ. 0/0 --கி.மீ. 2/2 மற்றும் 2/6 முதல் கி.மீ. 3/0 வரை மிக பழுதடைந்துள்ளதால், அதை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் மலைக்கோவில் லிங்கமநாய்க்கனூர் சாலை கி.மீ. 0/0-3/0 என்பதாகும். அரசு மாவட்ட இதர சாலையான இதில் கி.மீ. 0/8-2/2 வரையுள்ள 1.40 கி.மீ நீளத்தைத் தார் தளமிட்டு மேம்படுத்த ரூ.5.00 இலட்சங்கள் நிதி தேவைப்படும். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதி உள்ள கி.மீ. 0/0-8 மற்றும் 2/2-3/0, ஆக மொத்தம் 1.60 கி.மீ. நீளத்தை மேம்படுத்த ரூ.6.00 இலட்சங்கள் தோராயமாக செலவாகும். இது வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக மேம்படுத்தப்படும். அதுவரை இப்பகுதியில் ஏற்படும் நொடிகளுக்கு தார் நறுக்குகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்து இடையூறின்றி பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 31

8—

## சாலை சீரமைப்பு

**வினா எண் 23694—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த துங்காவி முதல் பூளவாடி செல்லும் சாலை கி.மீ. 4/6 முதல் கி.மீ. 8/0 மற்றும் 9/0, 11/0, 13/8 ஆகிய பகுதிகளில் மொத்தம் 2.4 கி.மீ. தூரம் மிகப் பழுதடைந்து உள்ளதால், அதை உடனடியாக சரி செய்ய அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் கி.மீ. 0/0-4/0, 7/6-8/0, 9/0-10/0, 11/0-12/0, 12/0-13/8 ஆகிய பகுதிகளில் நல்ல நிலையில் உள்ளன. இதர பழுதடைந்த பகுதிகளான கி.மீ. 4/0-7/0, 8/0-9/0, 10/0-11/0 ஆகிய பகுதிகளை முழுமையாக புதுப்பிக்க ரூ. 20.00 இலட்சம் நிதி தேவைப்படும். இப்பணியினை வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

## சாலை சீரமைப்பு

**வினா எண் 23712—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை நெடுஞ்சாலைத் துறை உட்கோட்டத்தைச் சேர்ந்த எரிசனம்பட்டி தனி ரோடு முதல் வாளவாடி செல்லும் சாலை கி.மீ. 0/0-1/0 மற்றும் கி.மீ. 2/0-2/4 வரை செல்லும் சாலை மிகப் பழுதடைந்துள்ளதால், அதை சிறப்புப் பராமரிப்பு செய்ய அரசு முன்வருமா?



2004 ஜூலை 31]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது எரிசனம்பட்டி தனி சாலை முதல் வாளவாடி செல்லும் சாலை கி.மீ. 0/0-2/4 ஆகும். இந்த மாவட்ட இதர சாலையில் கி.மீ. 1/0-2/0 வரையிலான பகுதி நல்ல நிலையில் உள்ளது. இதர பகுதியான கி.மீ. 0/0-1/0 மற்றும் 2/0-2/4 வரையிலான பழுதடைந்துள்ள பகுதிகளை மேம்பாடு செய்ய ரூ. 7.00 இலட்சம் தேவைப்படும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், மேற்கண்ட பழுதடைந்துள்ள பகுதிகளுக்கு தற்சமயம் தார் நொடி/கப்பி நொடி போட்டு பேட்ச் வொர்க் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10—

## கிராம சாலை புதுப்பித்தல்

**வினா எண் 23716—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை நெடுஞ்சாலைத் துறை உட்கோட்டத்தைச் சேர்ந்த குப்பம்பாளையம் கிராமச் சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 0/6 வரை மிகப் பழுதடைந்துள்ளதால், அதைப் புதுப்பிக்க அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் குப்பம்பாளையம் கிராமச் சாலை கி.மீ. 0/0-0/6 என்பதாகும். அரசு இதர மாவட்ட சாலையான பழுதடைந்துள்ள இதன் தார் தளத்தைப் புதுப்பிக்க ரூ.4.00 இலட்சம் நிதி தேவைப்படும். இதனை மேம்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. அதுவரை தார் தளத்தில் ஏற்படும் நொடிகளுக்கு தார் நறுக்குகள் அவ்வப்போது போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**11—**

**சாலை சீரமைப்பு**

**வினா எண் 23720—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை நெடுஞ்சாலை உட்கோட்டத்தைச் சேர்ந்த பாப்பான்குளம்-சாலரப்பட்டி சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 3/2 வரை மிகப் பழுதடைந்து உள்ளதால் அதை மேம்பாடு செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாப்பான்குளம்-சாலரப்பட்டி சாலை கி.மீ. 0/0-3/4 வரை முழுவதையும் தார் தளம் போட்டுப் புதுப்பிக்க தோராயமாக ரூ.10.50 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது செயல்படுத்தப்படும். எந்தத் திட்டப் பணியிலும் இடம்பெறவில்லை. எனினும் தற்போது தார் நொடிகள் போட்டு பழுதடைந்துள்ள சாலையை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**12—**

**மின் மாற்றி அமைத்தல்**

**வினா எண் 24298—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி, கோட்டூர், மலைப் பகுதியில் போதுமான மின்சாரம் இல்லாததால் அப்பகுதியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சிக்குட்பட்ட கோட்டூர், மலைப் பகுதியில் ரூ.3,19,040/- செலவில் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு 9-4-2003 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

தற்போது கோட்டூர் மலைப் பகுதியில் ஓர் முனை மற்றும் நியூட்ரலுக்கு இடையில் 240 வோல்ட் மின்னழுத்தம் அளவிடப்பட்டு, நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**13—**

**சீரான மின்சாரம்**

**வினா எண் 37124—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சித்தாலிக்குப்பம் கிராமத்தில் போதுமான மின் அழுத்தம் இல்லாததால் சீரான மின் அழுத்தத்தைத் தந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சித்தாலிக்குப்பம் கிராமத்திற்கு ஆடூர்குப்பம் மின்மாற்றி எண் VIII-இல் இருந்து மின் விநியோகம் அளிக்கப்பட்டு வந்தது. அங்கிருந்து வந்த குறைந்த மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்காக கூடுதலாக 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி (ஆடூர்குப்பம் மின் மாற்றி எண் XVII) அமைக்கப்பட்டு 19-6-2003 அன்று மின்னூட்டம் அளிக்கப்பட்டு தற்பொழுது சித்தாலிக்குப்பம் கிராமத்திற்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

[2004 ஜூலை 31

**14—**

## புதிய மின் மாற்றி

**வினா எண் 39398—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை துணை மின் நிலையத்திலிருந்து வரும் மின்சாரம் அழுத்தம் குறைவாக உள்ளதால் பதிய மின் மாற்றி அமைத்து அதிக மின்னழுத்தத்துடன் மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தின் மின்சார விநியோகத்திலுள்ள மின் அழுத்தக் குறைபாடு நீங்கிட இப்பகுதியைச் சார்ந்த ஈச்சங்கோடு 230/11 கி.வோ. துணை மின் நிலைய வளாகத்தில் புதியதாக ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தை ரூ.275.889 இலட்சங்கள் செலவில் அமைக்க வாரியத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கான நிதி ஆதாரம் நடப்பு நிதியாண்டில் (2004-2005) வழங்கப்பட்டு, இத்திட்டம் நிறைவேற்றி வைக்கப்படும்.

இத்திட்டத்தினால் செந்துறை 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறும் ஆர்.எஸ். மாத்தூர், பெரியாக்குறிச்சி, ஆதனக்குறிச்சி மற்றும் இடையாக்குறிச்சி ஆகிய பகுதிகளில் உள்ள மின் அழுத்தக் குறைபாடு முற்றிலும் நீக்கப்படும்.

**15—**

## ஒரு விளக்குத் திட்டம்

**வினா எண் 42043—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 31]

(அ) 2001—2002 ஆம் ஆண்டு செங்கற்பட்டு தொகுதியில் எத்தனை வீடுகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் பெறப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை குடிசைகளுக்கு வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001—2002 ஆம் ஆண்டு செங்கற்பட்டு தொகுதியில் ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் 3 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 3 குடிசைகளுக்கும் ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.

**16—**

## மின்னழுத்தம் சீரமைத்தல்

**வினா எண் 42050—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, மோசிவாக்கம் ஊராட்சி, சீயாளங்கொல்லை கிராமத்தில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதால், சீராகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, மூசிவாக்கம் ஊராட்சி, சீயாளங்கொல்லை கிராமத்தில் நிலவி வந்த குறைந்த மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு ரூ.2,61,740/- செலவில் ஒரு 100 கே.வி.ஏ. மின் மாற்றி அமைக்க அனுமதியளிக்கப்பட்டு, மேற்படி மின் மாற்றி அமைக்கும் பணி முடிவடைந்து 20-11-2003 முதல் பயனுக்குக் கொண்டு வரப்பட்டது. அக்கிராமத்தில் வீடு, குடிநீர்த் தொட்டி மற்றும் விவசாய மின் இணைப்புகள் அனைத்தும் புதிதாக அமைக்கப்பட்ட மின் மாற்றியில் இணைக்கப்பட்டு தற்போது சரியான மின் அழுத்தத்தில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

17—

## மின் விநியோகம்

**வினா எண் 42992—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, அவுலியா தர்காவிற்குச் சொந்தமான விளைநிலங்களைக் குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளுக்கு மின் விநியோகம் வழங்குவதை வர்த்தக விநியோகத்திற்குப் பதிலாக வீட்டு உபயோகத்திற்கென மின் விநியோகம் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, அவுலியா தர்காவிற்குச் சொந்தமான விளை நிலங்களைக் குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளுக்கு வீட்டு உபயோகத்திற்கென வீதப்பட்டியலில் மின் விநியோகம் வழங்கிட இயலாது. தற்போதைய வாரிய விதிகளின்படி விவசாய வீதப்பட்டியலில் விவசாய மின் இணைப்பு வரிசை கிரமப்படி வழங்கப்படும்.

18—

## மின் கம்பிகள் சீரமைத்தல்

**வினா எண் 44732—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை—மணலிவிளை சாலையிலுள்ள பாலம் உயர்த்தப்பட்டுள்ளதால், மின் கம்பிகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை-மணலிவிளை சாலையில் கழிவுநீர் செல்லும் வழியில் ஒரு சிறிய பாலம் உள்ளது. அந்தப் பாலம் தற்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. சாலையின் அருகே உயர் அழுத்த மின் கம்பிகளும், தாழ்வழுத்த மின் கம்பிகளும் செல்கின்றன. பாலம் உயர்த்தப்பட்ட பிறகும், இந்த மின் பாதைகள் சாலையிலிருந்து தேவையான/பாதுகாப்பான உயரத்தில் இருப்பதால், மின் கம்பிப் பாதைகளை மேலும் உயர்த்தவோ, மாற்றவோ தேவையில்லை.

19—

## தெரு விளக்குகள்

**வினா எண் 46894—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் அருகில் உள்ள கோழிகமித்தி மற்றும் செட்டில்மெண்ட் பகுதியில் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் அருகில் உள்ள கோழிகமித்தி மற்றும் செட்டில்மெண்ட் பகுதிக்கு தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டாலும் மேற்கண்ட பகுதிகளின் அடர்ந்த காடுகள் வழியாக மின் பாதை அமைக்க வனத் துறையின் ஒப்புதல் பெற மிகவும் கால தாமதமாகும் என்பதாலும், பெரும்பாலும் வனத் துறையின் தடையில்லா சான்றிதழ் வழங்கப்படாததாலும், மேற்கண்ட கோழிகமித்தி மற்றும் செட்டில்மெண்ட் பகுதிகளுக்கு சூரிய சக்தி மூலம் மின் வசதி செய்துக் கொடுக்க ஏற்கெனவே தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**20—**

### வழக்கறிஞர்கள் நியமனம்

**வினா எண் 50324—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் வழக்குகளை விரைவில் முடிக்க ஒப்பந்த அடிப்படையில் கூடுதல் வழக்கறிஞர்களை நியமிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்குகளை நடத்த மூன்றாண்டு கால நியமன அடிப்படையில் போதிய வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனவே, புதிதாக் ஒப்பந்த அடிப்படையில் கூடுதல் வழக்கறிஞர்களை நியமனம் செய்வதற்கு அவசியம் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**21—**

### யாத்திரிகர்களுக்கு வசதி

**வினா எண் 36908—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் அமைந்துள்ள சட்டநாதர் ஆலயம் மற்றும் திருஞானசம்பந்தர் அவதரித்த இடங்களில் வருகை தரும் யாத்திரிகர்களுக்காக குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் மின்சார வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டம் மற்றும் நகரில் அமைந்துள்ள அருள்மிகு சட்டநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் யாத்திரிகர்களுக்குத் தேவையான இடங்களில் போதுமான அளவு சுகாதார முறையில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில், நகர மையத்தில் அமைந்துள்ளதால், நாற்புறமும் சீர்காழி நகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலை போடப்பட்டுள்ளது. திருக்கோயிலில் தேவையான அளவில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு, மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. திருவிழாக் காலங்களில் தேவையான அளவில் தற்காலிக மின் வசதிகளும் செய்யப்படுகிறது. திருஞானசம்பந்தர் அவதரித்த இல்லம், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லை. இது காஞ்சிபுரம் சங்கர மடத்தின் நிர்வாகத்தில் உள்ளது. இல்லம், சீர்காழி பிரதான சாலையின் அருகிலேயே உள்ளதால், எளிதாக இல்லத்திற்குச் செல்ல முடியும்.*

**22—**

### யாத்திரிகர்களுக்கு வசதி

**வினா எண் 36910—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ரெங்கநாதர் பெருமாள் கோயிலுக்கு சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள் அதிக அளவில் வருவதால் அங்கு குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் நான்கு சாலைகளிலும் தார்ச் சாலை வசதி ஆகியவை செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 ஜூலை 31

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ரெங்கநாதர் பெருமாள் கோயிலுக்கு சேவார்த்திகள் மிகக் குறைவாக வருகின்றனர். தற்போது உபயதாரரால் திருக்கோயிலின் முன் சிறிய மண்டபம் மற்றும் குடிநீர் வசதி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே கழிவறைகள் மற்றும் அனைத்து இடத்திலும் மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலுக்கு செல்லும் தார்ச் சாலை வசதி உள்ளாட்சி அமைப்பினால் செய்யப்பட வேண்டும். நான்கு புறமும் உள்ள தார்ச் சாலைகளைச் செப்பனிட ஊராட்சி மன்றம் நிர்வாகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**23—**

## கொடிக் கம்பம் வழங்குதல்

**வினா எண் 41296—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர், அருள்மிகு பக்தஜனேஸ்வரர் ஆலயத்திற்கு கொடிக் கம்பம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர், அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயிலின் கொடி மரத் திருப்பணிக்கு ரூ.1,80,000/-க்கு இலாகா மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உபயதாரர்கள் மூலம் விரைவில் கொடி மரத் திருப்பணி வேலையைத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.



2004 ஜூலை 31]

**24—**

## மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 20035—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவுக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவுக்கு தனிக் கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**25—**

## சித்த வைத்தியப் பிரிவு

**வினா எண் 24908—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில், சித்த வைத்தியப் பிரிவு இல்லாத இடங்களில் அந்தப் பிரிவு அரசு ஏற்படுத்துமா?

(ஆ) ஆமெனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் 280 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவும், ஒரு அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு யுனானி மருத்துவப் பிரிவும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. 2002–2003 ஆம் நிதியாண்டில் கூடுதலாக

[2004 ஜூலை 31

*50 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவப் பிரிவு தொடங்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்நிலையங்களில் இந்திய மருத்துவப் பிரிவு விரைவில் செயல்படும்.*

**26—**

## சித்த மருத்துவ அலுவலகம்

**வினா எண் 24916—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்ட சித்த மருத்துவ அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லையென்பது அரசு அறியுமா?*

*(ஆ) ஆமெனில், அதற்கு ஒரு அரசுக் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய இரு மாவட்டங்களுக்கும் நிர்வாகக் காரணங்களுக்காக சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட சித்த மருத்துவ அலுவலகத்திற்குத் தனிக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**27—**

## சித்த மருத்துவப் பிரிவு

**வினா எண் 24920—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவுக்கு 25 படுக்கை வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2004 ஜூலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சித்தா பிரிவிற்கென 25 படுக்கை வசதி ஏற்படுத்த உரிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**28—**

## சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம்

**வினா எண் 24948—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், மேட்டூரில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையத்திற்கு அரசு எவ்வளவு ஏக்கர் நிலம் கையகப்படுத்தியுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், மேட்டூரில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையத்திற்கு நிலம் ஏதும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையால் கையகப்படுத்தப்படவில்லை.*

**29—**

## சித்த மருத்துவர்கள் வேலைவாய்ப்பு

**வினா எண் 32102—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) இந்திய மருத்துவத்தில் B.S., M.S., படித்து தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் எவ்வளவு பேர்?*

*(ஆ) இவர்களுக்கு அரசு மற்றும் அரசு சார்ந்த பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) இந்திய மருத்துவத்தில் B.S., M.S., படித்து தேர்ச்சி பெற்ற 2360 மருத்துவர்கள் 28-02-2003 வரை தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றத்தில் பதிவு செய்துள்ளனர்.*

*(ஆ) அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக சித்தா பிரிவுகள் தோற்றுவிக்கும்பொழுது, தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் பி.எஸ்., எம்.எஸ்., மருத்துவர்களுக்கு பணி நியமனம் அளிக்கப்படுகிறது. அரசு சார்ந்த பொது நிறுவனங்களில் மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்படும்பொழுது, அந்தந்த நிறுவனங்களே பி.எஸ்., எம்.எஸ்., தேர்ச்சி பெற்றவர்கட்கு பணி நியமனம் அளித்து வருகிறது.*

**30—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 34394—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கபிலர்மலை தொகுதியில், கபிலர்மலை ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2002 ஆம் ஆண்டு பிறந்த குழந்தைகள் எத்தனை?*

*(ஆ) அங்கு பணியாற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) கபிலர்மலை, பரமத்தி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. பரமத்தி ஒன்றியத்தில் நல்லூர், பரமத்தி மற்றும் கூடசேரி ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில் நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 33 குழந்தைகளும், பரமத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 57 குழந்தைகளும், கூடசேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 11 குழந்தைகளும் பிறந்துள்ளன.*



*(ஆ) இந்த மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் களப் பணியாளர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

| ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயர் | மருத்துவர் | பேறுகால உதவியாளர் | ஆய்வக உதவியாளர் | கண் மருத்துவர் | மருந் தாளுநர் | செவிலியர் |
|---|---|---|---|---|---|---|
| நல்லூர் | 3 | 3 | 1 | 1 | 1 | 1 |
| பரமத்தி | 2 | 1 | 1 | .. | 1 | .. |
| கூடசேரி | 2 | 1 | 1 | .. | 1 | .. |

*களப் பணியாளர்கள் தவிர, ஓட்டுநர் மற்றும் எழுத்தர்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிகின்றனர்.*

**31—**

## மருத்துவமனை தரம் உயர்த்துதல்

**வினா எண் 37376—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, மணச்சநல்லூர் அரசு மருத்துவமனையை நபார்டு திட்டத்தின்கீழ் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கு 24 படுக்கைகள் ஒதுக்கி, தரம் உயர்த்திட கருத்துரு நபார்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, நபார்டு நிறுவனத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.*

[2004 ஜூலை 31

32—

துணை சுகாதார நிலையம்

**வினா எண் 43424—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் துணை சுகாதார நிலையத்தை புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2003–2004 ஆம் நிதியாண்டில் பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் துணை சுகாதார நிலையத்தைப் புதுப்பிப்பதற்காக ரூ.50,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் துணை சுகாதார நிலையக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.*

33—

ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 43466—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கற்பட்டு தொகுதியில் உள்ள சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடமும் கூடுதலாகப் படுக்கை வசதிகளும் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*1996–97 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவங்கள் அதிகம் நடைபெறும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பிரசவ அறை 6 படுக்கைகளுடன் கூடிய வார்டு மற்றும் இரு குடியிருப்புகள் (Twin Quarters) கட்ட முடிவு செய்யப்பட்டு, அதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடு போன்றவற்றை அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கோரப்பட்டுள்ளார். அன்னாரிடமிருந்து வரைபடம் மற்றும் மதிப்பீடு பெறப்பட்டவுடன், கூடுதல் கட்டடம் கட்ட பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கட்டடம் கட்ட பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.*



2004 ஜூலை 31]

34—

சித்த மருத்துவப் பிரிவுக்குக் கட்டடம்

**வினா எண் 49566—திரு. மு. கார்த்தி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு கட்டடம் கட்டிக் கொடுக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

35—

தொகுப்பு விடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 20917—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சி, பூவன்காடு காலனி, தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அவை பழுதுபார்க்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் மட்டுமே அரசின் நடைமுறையில் உள்ளது. இலவசத் தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் நடைமுறையில் இல்லை.

**36—**

**கலப்பினக் கன்றுகள் வளர்த்தல்**

**வினா எண் 24229—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த எட்டாம் வகுப்பு வரை பயின்ற பெண்களுக்கு கலப்பினக் கன்றுகள் வளர்க்க மானியம் கொடுக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பொதுவாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கென கால்நடைகள் வளர்ப்பதற்காக அரசு மானிய உதவியுடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு வரை பயின்ற பெண்களுக்கு கலப்பினக் கன்றுகள் வளர்க்க மானியம் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**37—**

**தீண்டாமை ஒழிப்பு**

**வினா எண் 34860—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தீண்டாமையை அனுசரிக்கும் விதமாக இரட்டை தம்ளர் முறை இன்னும் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதை நிறுத்துவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**38—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 39280—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் ஆதி திராவிட மாணவர்/மாணவியர் விடுதிகள் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதிதாக ஆதி திராவிடர் மாணவர்/மாணவியர் விடுதி அமைத்துத் தரும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 ஜுலை 31

39—

## படைவீரர்கள் நலன்

**வினா எண் 40901—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில், எல்லைப் பாதுகாப்பில் மரணமடைந்த படைவீரர்களின் குடும்பங்கள் எத்தனை உள்ளன?*

*(ஆ) அக்குடும்பங்களுக்கு மைய, மாநில அரசுகள் செய்துள்ள சலுகைகள் யாவை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எல்லைப் பாதுகாப்பில் மரணமடைந்த படைவீரர்கள் எவரும் இல்லை. 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா-சீனா போரில் பாலூரைச் சேர்ந்த திரு. சின்னச்சாமி என்ற படைவீரர் ஒருவர் வீர மரணமடைந்துள்ளார்.*

*(ஆ) அன்னாரின் குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக ரூ. 5,000/- வழங்கப்பட்டுள்ளது. தொகுப்பு நிதியிலிருந்து வீட்டு வசதி மானியமாக ரூ.2,500/- மற்றும் வருடாந்திர பராமரிப்பு மானியமாக ரூ.2,000/-ஆயுட்காலம் முழுவதும் வழங்கப்படுகிறது.*

40—

## வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 47208—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, பச்சபெருமாநல்லூர் ஊராட்சி, ஜீவா நகர் ஆதி திராவிடர் காலனியில் வீடுகளைப் பழுது நீக்கம் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜுலை 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

41—

## பள்ளியில் ஆய்வுக்கூடம் அமைத்தல்

**வினா எண் 47222—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசினர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு இருக்கையுடன்கூடிய சாய்வு மேசைகள் வழங்கவும், ஆய்வுக்கூடம் அமைக்கவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசினர் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே 65 நீள் இருக்கையுடன்கூடிய மேசைகள் உள்ளன. இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இருந்தபோது, ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது. எனவே இப்பள்ளிக்கு நீள் இருக்கையுடன்கூடிய மேசைகள் வழங்கவும், புதிய ஆய்வுக்கூடம் கட்டவும் தற்போது தேவை ஏற்படவில்லை.*

42—

## ஆதி திராவிடர் நலன்

**வினா எண் 47306—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதி மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் தொடங்க 2003–2004 ஆம் ஆண்டில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் தொடங்க, சேலம் மாவட்ட ஆட்சியரின் தாட்கோ விருப்புரிமை நிதியிலிருந்து 2003–2004 ஆம் ஆண்டில் 70 பயனாளிகளுக்கு தொழில் தொடங்க மொத்தம் ரூ.7.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.*

**43—**

## மாணவர் விடுதியை விரிவுபடுத்தல்

**வினா எண் 50358—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாவட்டம், டாக்டர் அம்பேத்கர் கல்லூரி மாணவர் தங்கும் விடுதியை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்குப் போதுமான விடுதிக் கட்டடம் உள்ளது என்பதால், மேற்படி கல்லூரி மாணவர் விடுதியினை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை.*





**44—**

## புதிய மாணவர் விடுதி கட்டுதல்

**வினா எண் 52423—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் புதிய மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் தோற்றுவிக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.*

**45—**

## இலவச சைக்கிள் வழங்குதல்

**வினா எண் 52427—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியிலுள்ள மாவட்ட அரசு இசைப் பள்ளியில் படிக்கும் ஆதி திராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

[2004 ஜூலை 31

46—

### மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 53141—திரு. அ. சிவபெருமாள்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, நாகம்பட்டி மனோ கல்லூரியில் அரசு ஆதி திராவிடர் நலத் துறை மாணவர்/மாணவியர் விடுதி அமைத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதிதாக ஆதி திராவிடர் மாணவர்/மாணவியர் விடுதி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

47—

### உப்பு தயாரிப்பாளர்களுக்கு நிதி உதவி

**வினா எண் 49467—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2002–2003 ஆம் ஆண்டில் உப்புத் தொழிற்சாலைகளின் மேம்பாட்டுப் பணி தொடர்பாக சிறிய உப்பு தயாரிப்பாளர்கள் எத்தனை பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இதுவரையில் உப்புத் தொழிற்சாலைகளின் மேம்பாட்டுப் பணி தொடர்பாக சிறிய உப்பு உற்பத்தியாளர்கள் எவருக்கும் நேரடியாக நிதியுதவி வழங்கப்படவில்லை. இதற்கான திட்டமோ செயற்குறிப்போ அரசிடம் தற்போது ஏதுமில்லை.*



2004 ஜூலை 31]

48—

### கிரானைட் கற்கள் ஏற்றுமதி

**வினா எண் 49604—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் உள்ள கிரானைட் கற்களை அரசே ஏற்றுமதி செய்யும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) தமிழகத்தில் உள்ள கிரானைட் கற்களை அரசே ஏற்றுமதி செய்யும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

49—

### கல் எடுக்க அனுமதி

**வினா எண் 49983—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியிலுள்ள லோயர்பறளை-பாறை மேட்டில் கல் உடைத்து எடுக்க அனுமதி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 49, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 24–3–2004–ன்படி வால்பாறை வட்டம், மலைப் பகுதி பாதுகாப்புக் குழுமத்தின் கட்டுப்பாட்டில் வருவதால், லோயர்பறளை-பாறை மேட்டில் கல் உடைத்து எடுக்க மேற்படி மலைப் பகுதி பாதுகாப்புக் குழுமத்தின் தடையின்மைச் சான்று கிடைக்கப்பெற்றால் மட்டுமே அனுமதி வழங்க இயலும்.*

**50—**

## மதுபானங்களின் விற்பனை

**வினா எண் 34456—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு பண்டகசாலை நிறுவனத்தின் மூலம் அங்காடிவாரியாக அயல்நாட்டு மதுபானக் கடைகளில் சென்ற 2001–2002–ல் விற்பனை செய்த மதுபானங்களின் மதிப்பு எவ்வளவு?*

*(ஆ) இதில் ஈட்டப்பட்ட இலாபம் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2001–2002 ஆம் ஆண்டில் காஞ்சி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையால் நடத்தப்பட்ட மதுபானக் கடைகளில் விற்பனை செய்த மதுபானங்களின் மதிப்பு மற்றும் ஈட்டப்பட்ட இலாப/நட்ட விவரங்கள் பின்வருமாறு:–*

*(ரூபாய் இலட்சத்தில்)*



| வ. எண் | கடையின் பெயர் | மொத்த விற்பனை | ஈட்டிய மொத்த இலாபம் | அரசுக்கு செலுத்திய சிறப்புக் கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | நிகர இலாபம் | நிகர நட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருக்கழுக்குன்றம் மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 15.96 | 2.66 | 1.97 | 0.99 | - |
| 2. | ஆலப்பாக்கம் மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 6.54 | 1.09 | 1.19 | - | 0.10 |
| 3. | சிங்கபெருமாள்கோயில் மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 12.80 | 2.13 | 1.94 | 0.19 | - |
| 4. | கொட்டமேடு மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 12.60 | 2.10 | 1.36 | 0.74 | - |
| 5. | பம்மல் மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 39.81 | 6.64 | 2.34 | 4.30 | - |
| 6. | கண்டிகை மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 34.83 | 5.77 | 1.38 | 4.39 | - |
| 7. | பெருங்களத்தூர் மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 42.01 | 7.00 | 1.94 | 5.06 | - |
| 8. | திருநீர்மலை மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 20.18 | 3.38 | 1.68 | 1.68 | - |
| 9. | செங்கல்பட்டு மதுபானக் கடை (1–4–2001 முதல் 31–7–2001 வரை) | 90.94 | 15.16 | 9.52 | 5.64 | - |
| | மொத்தம் | 275.47 | 45.91 | 23.32 | 22.69 | 0.10 |

[2004 ஜூலை 31

51—

## கரும்புக்கு பணம் வழங்குதல்

**வினா எண் 43373—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாச்சாரப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஏழை விவசாயிகளுக்குச் சேர வேண்டிய கரும்பு பணம் உடனுக்குடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுவாக சர்க்கரை ஆலைகள், விவசாயிகள் அனுப்பும் கரும்புக்கான கிரயத் தொகைகளை சம்பந்தப்பட்ட உறுப்பினர் கடன் பெற்ற வங்கிகளுக்கு 15 முதல் 25 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அதன்படி, பாச்சாரப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உறுப்பினர்கள் 24–3–2004 வரை அனுப்பியுள்ள கரும்புக்கான கிரயத் தொகையை ஈ.ஐ.டி. பாரி இந்தியா லிமிடெட் சர்க்கரை ஆலை 17–4–2004 தேதியன்று வங்கிக்கு அனுப்பியுள்ளது. சம்பந்தப்பட்ட வங்கிகள், உறுப்பினர் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கு ஈடு செய்து, பின்னர் மீதமுள்ள தொகையை உறுப்பினர் சேமிப்புக் கணக்குக்கு எடுத்துச் செல்லப்படும். எனினும், விவசாயிகள் குறைந்த அளவிலான கரும்பினை ஆலைக்கு அனுப்பும்பட்சத்தில், அனுப்பப்பட்ட கரும்புக்கு சர்க்கரை ஆலை அளிக்கும் கிரயத் தொகை ஒரு சில நேர்வுகளில் உறுப்பினர் செலுத்த வேண்டிய நிலுவைக்குக்கூட நேர் செய்ய இயலாத நிலை உள்ளது. அதன்படி பாச்சாரப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கு கரும்புப் பயிர்க் கடன் வழங்கி கரும்புக்கான கிரயத் தொகை ஆலையிலிருந்து பெறப்பட்ட பின்னரும், கடன் நிலுவை பின்வருமாறு இருந்துள்ளது:



2004 ஜூலை 31]

| ஆண்டு | கரும்புக்கு பெறப்பட்ட தொகை | நிலுவை |
|---|---|---|
| 2001–2002 | ரூ. 11,52,280 | ரூ.39,959 |
| 2002–2003 | ரூ. 12,88,708 | ரூ.49,371 |
| 2003–2004 | ரூ. 11,16,031 | ரூ.75,293 |
| மொத்தம் | ரூ. 35,57,019 | ரூ.1,64,623 |

எனவே, விவசாயிகள் சர்க்கரை ஆலைக்கு விற்றுள்ள சர்க்கரைக்கான கிரயத் தொகை பாச்சாரப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் உடனுக்குடன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

52—

## உரக் கிடங்கைப் புதுப்பித்தல்

**வினா எண் 46794—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஊராட்சியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் மற்றும் உரக் கிடங்கைப் புதுப்பித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வங்கிக்கான கட்டடம் மற்றும் உரக் கிடங்கு 1990 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வங்கிக் கட்டடத்தைப் புதுப்பிக்க கட்டட நிதியில் தொகை ஏதுமில்லை. வங்கியின் நிதி நிலைமையும் திருப்திகரமாக இல்லை. கடந்த மூன்றாண்டுகளில் வங்கியின் செயல்பாடு பின்வருமாறு இருந்துள்ளது:

| ஆண்டு | நட்டம் |
|---|---|
| 2000–01 | ரூ. 7.60 இலட்சம் |
| 2001–02 | ரூ. 7.39 இலட்சம் |
| 2002–03 | ரூ.14.20 இலட்சம் |

கடந்த மூன்றாண்டுகளில் வங்கியின் நடைமுறை மூலதனம் பின்வருமாறு இருந்துள்ளது:

| | |
|---|---|
| 1–4–2001 | ரூ.17.18 இலட்சம் |
| 1–4–2002 | ரூ.16.09 இலட்சம் |
| 1–4–2003 | ரூ.13.88 இலட்சம் |

மேலும் வங்கி தொடர்ந்து நட்டத்தில் இயங்குவதோடு மட்டுமின்றி, மத்தியக் கூட்டுறவு வங்கியில் பெற்ற காசுக் கடனுக்கு வங்கியின் ஆதாரக் குறைவு (31–3–2003) அன்றுள்ளபடி பின்வருமாறு இருந்துள்ளது:

| | |
|---|---|
| பொது விநியோகத் திட்டம் | ரூ.0.86 இலட்சம் |
| உரம் | ரூ.0.66 இலட்சம் |
| நகைக் கடன் | ரூ.0.46 இலட்சம் |

மேலும் மத்தியக் கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனுக்கான ஏற்றத்தாழ்வுகள் (imbalances) ரூ.22.73(–) இலட்சமாக இருந்துள்ளது. வங்கி தொடர்ந்து நட்டத்தில் இயங்குவதாலும், மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு நிலுவை செலுத்த வேண்டியுள்ளதாலும், ஏற்றத்தாழ்வுகள் (imbalances) கொண்டுள்ளதாலும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் கடன் வசதி பெறவும் வாய்ப்பில்லை.

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஊராட்சியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் மற்றும் உரக் கிடங்கை புதுப்பித்துக் கொடுக்க அரசின் திட்டம் தற்போது ஏதுமில்லை.



**53—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 48174—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைப்புத் தொகையின் கெடு முடிவடைந்த பின்பு வட்டியையும், வைப்புத் தொகையையும் உரியவருக்குத் திருப்பித் தராத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை?

(ஆ) அதில் முடங்கியிருக்கும் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 31–1–2004 அன்றுள்ளபடி, 396 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாகும். இதில் கலைக்கப்பட்ட வங்கிகள் 40 ஆகும்.

(ஆ) ரூ.3,159.94 இலட்சம் ஆகும். அசல் ரூ.2,417.27 இலட்சம், வட்டி ரூ.742.67 இலட்சம். (இதில் கலைக்கப்பட்ட வங்கிகளில் உள்ள தொகை அசல் ரூ.389.30 இலட்சம், வட்டி ரூ.170.12 இலட்சம் ஆகும்).

**54—**

## விதைகளுக்குக் கடன் வழங்கல்

**வினா எண் 48437—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விதைகளை நீண்டகால கடனாகக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

**55—**

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்**

**வினா எண் 51951—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், முதலைமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான இடத்தில் புதியக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) முதலைமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, 1972–ல் ரூ.28,000/- மதிப்பீட்டில் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கிக் கட்டடம் கட்டப்பட்டு 32 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இட வசதி போதுமானதாக இல்லாததாலும், புதியக் கட்டடம் தேவையாக உள்ளது. இதற்கு உத்தேசமாக ரூ.7.50 இலட்சம் செலவாகும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. புதியக் கட்டடம் கட்ட வங்கிக்கு 54 சென்ட் நிலம் சொந்தமாக இருந்தபோதிலும், வங்கி 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுகளில் நட்டத்தில் இயங்கி வருவதாலும், 2003–2004 ஆம் ஆண்டு முடிவில் ரூ.20.42 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்கி வருவதாலும், வங்கியின் நிதி ஆதாரங்களிலிருந்து புதியக் கட்டடம் கட்டுவதற்கு அரசு திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில், புதியக் கட்டடம் கட்ட வாய்ப்புகள் இல்லை.*



2004 ஜூலை 31]

**56—**

**மத்தியக் கூட்டுறவு வங்கிக் கடன்**

**வினா எண் 52869—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் பண்ணைசாராக் கடன் வழங்கப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், என்ன வகைக்கு வழங்கப்படுகிறது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சிறு தொழில் கடன், போக்குவரத்து வாகனக் கடன், நுகர்பொருள் கடன், வீடு கட்டும் கடன் மற்றும் வீடு அடமானக் கடன் ஆகியவை மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் பண்ணைசாராக் கடனாக வழங்கப்படுகின்றன.*

**57—**

**சுகாதாரக் கேட்டைத் தடுத்தல்**

**வினா எண் 7422—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் வேலூர் நகரக் கழிவுநீர் இராஜவாய்க்காலில் கலப்பதனால் சுகாதாரக் கேடு ஏற்படுவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும்?*

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாமக்கல் மாவட்டம், வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட இராஜவாய்க்காலில் நகரக் கழிவுநீர் கலப்பதினால் சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் பொது சுகாதாரக் கேடுகள் விளைவதைத் தடுக்கும் வகையில், வேலூர் பேரூராட்சிப் பகுதியில் 5 இடங்களில் கழிவுநீர்த் தொட்டிகள் (Filter Tanks) ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் கழிவுநீர் இராஜவாய்க்காலில் நேரடியாகக் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.

**58—**

## இரசாயன உற்பத்தித் தொழிற்சாலைகள்

**வினா எண் 33374—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உடலுக்குக் கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எவை, எவை, எங்கெங்கு உள்ளன?

(ஆ) தொழிற்சாலை அருகில் வாழும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இரசாயனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மணலி, கடலூர், இராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்தகைய தொழிற்சாலைகள் இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் கேடு/தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. 11 வகையான அதிக மாசுபடுத்தும் கீழ்க்கண்ட தொழிற்சாலைகள் பல்வேறு நகரங்களான சேலம், திருவள்ளூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், வேலூர், தருமபுரி, ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி, தேனி, கோயம்புத்தூர், நாமக்கல், திண்டுக்கல், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன:—



2004 ஜூலை 31]

1. எரிசோடா தொழிற்சாலை
2. அலுமினியத் தொழிற்சாலை
3. தாமிர உருக்காலை
4. எரிசாராயத் தொழிற்சாலை
5. சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை
6. மரக்கூழ் மற்றும் காகிதத் தொழிற்சாலை
7. உரத் தொழிற்சாலை
8. மருந்துத் தொழிற்சாலை
9. எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை
10. பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை
11. பூச்சிக்கொல்லி மருந்துத் தொழிற்சாலை

(ஆ) அனைத்துத் தொழிற்சாலைகளும் நீர் மற்றும் காற்று மாசு தடுப்புச் சாதனங்களை அமைத்து இயங்கி வருகின்றன. மேலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் தீங்கு விளைவிக்கக்கூடிய திடக் கழிவுகள் வாரியத்தின் அங்கீகாரத்துடன் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து ஆய்வு செய்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. இரசாயனப் பொருட்களை பாதுகாப்பான முறையில் கையாளுமாறு வாரியம் தொழிற்சாலைகளை அறிவுறுத்தி வருவதுடன், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறது. வாரியம் நிர்ணயித்துள்ள தரக்குறியீட்டை எட்டாத தொழிற்சாலைமீது நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 மற்றும்

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ஆகிய சட்டங்களின்கீழ் முகாந்திரம் கேட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தனது தொடர் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகள் மூலம் தொழிற்சாலை அருகில் உள்ள மக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் கண்காணித்து வருகிறது.

**59—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 41985—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்தில் விசைத்தறியால் ஏற்படும் பஞ்சுக் காற்றால் சுற்றுச்சூழல் பாதிப்புள்ள ஊர் எவை?

*(ஆ)* மக்கள் தங்களை எவ்விதம் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பது குறித்து அரசு ஆலோசனை வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டத்தில், சேலம், இடைப்பாடி, இளம்பிள்ளை, ஜலகண்டபுரம், வனவாசி போன்ற ஊர்களில் விசைத்தறித் தொழில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

*(ஆ)* விசைத்தறிகளிலிருந்து சிறிதளவு நூல் பிசிறுகள் (துகள்கள்) வெளியேற வாய்ப்புள்ளது. இவ்வாறு வெளியேறும் துகள்கள் காற்றில் பரவி சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, தொழிற்சாலைகள் முழுமையாக அடைப்புகள் உள்ள கட்டடத்தில் இயங்கினால், காற்று மாசுகளால் மக்கள் பாதிக்கப்பட வாய்ப்பில்லை. பொதுமக்களும் இவ்வாறான தொழிற்சாலைகளுக்கு அருகாமையில் செல்ல/இருக்க வேண்டிய தருணங்களில் சுவாசத்தில் தூசு தடுப்பதற்கான முகமூடியினை (Nose mask) அணிந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளலாம்.





**60—**

## புறவழிச் சாலை அமைத்தல்

**வினா எண் 47326—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் வனத் துறை மூலம் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* வால்பாறை பகுதி, இந்திரா காந்தி வன உயிரின உய்விட பகுதிக்குள் அமைந்துள்ளது. நீதிப் பேராணை மனு எண் 337/95, நாள் 13–11–2001 மற்றும் 202/95, நாள் 14–2–2000 ஆகியவற்றில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்களில் உள்ள வன நிலத்தை வனம் சாராத இதரப் பயன்பாட்டிற்காக, நில மாற்றம் செய்ய 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் எவ்வித கருத்துருவினையும் மாநில அரசுகள், உச்ச நீதிமன்றத்தின் முன்அனுமதியின்றி மைய அரசுக்கு அனுப்பக்கூடாது என மைய அரசு தனது 4–5–2001 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளது. எனவே, வால்பாறைப் பகுதியில் புறவழிச் சாலை அமைக்க உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

**61—**

## "கிரீன் கேட்டகிரி" தொழிற்சாலைகள் விவரம்

**வினா எண் 49398—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் "கிரீன் கேட்டகிரி"யில் இயங்கும் தனியார் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவை இயங்கும் இடங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 'கிரீன் கேட்டகிரியில்' இயங்கும் தனியார் தொழிற்சாலைகள் மொத்தம் 7.

(ஆ) அவை இயங்கும் இடங்கள்:

1. சம்மர் இந்தியா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், திருச்செங்கோடு
2. செல்லியம்மன் சா மில், நாமக்கல்
3. சூரிய பாலிசாக்ஸ், ராமதேவம்
4. கமலக்கண்ணன் பீஸ்மீல்ஸ் பிளாண்ட், முத்துக்காட்டுபட்டி
5. ஜி.பி. இராஜா டெக்ஸ், திருச்செங்கோடு
6. சம்மர் இந்தியா டெக்ஸ்டைல்ஸ், திருச்செங்கோடு
7. கோல்டுசிங் டெக்ஸ், திருச்செங்கோடு

**62—**

## மூலிகைக் கொள்முதல்

**வினா எண் 50769—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப் சிலிப்பில் கிடைக்கும் தேன், சீயக்காய், பூச்சிக்கொட்டை, இஞ்சி, கத்தரி, மஞ்சள், குங்கிலியம், மூலிகைகள் ஆகியவற்றைச் சேகரித்து, வனத் துறை கூட்டுறவு அமைப்பு மூலம் கொள்முதல் செய்து, நியாய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பாணையின்படி (எண் 202/95, நாள் 3-4-2000) வன உயிரின உய்விடங்கள் மற்றும் தேசியப் பூங்காக்களில் உயிரிழந்த நலிவுற்று, இயற்கை இடர்ப்பாடுகளினால் விழுந்த மரங்கள் மற்றும் புல் பூண்டுகள் ஆகியவற்றை அப்புறப்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டைய வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப் பிரிவு 29-ன்படி வன உயிரின உய்விடங்களிலுள்ள வனப் பொருட்களை உய்விடத்தின் ஊடேயும், எல்லையினை ஒட்டியப் பகுதிகளில் உள்ளவர்கள் சேகரம் செய்து சொந்த உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ளலாம் எனவும், விற்பனைச் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடாது எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், மலைவாழ் இனத்தவருக்கு வனங்களில் விளையும் சிறு வனப் பொருட்களின் மகசூல் சேகர உரிமையை இலவசமாக வழங்க அரசு ஆணை (நிலை) எண் 79, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 29-4-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆகையால் வன உயிரின உய்விடத்தில் சிறு வனப் பொருட்களை சேகரம் செய்து கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விற்பனை செய்திட நீதிமன்ற ஆணையும், திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டைய வன உயிரினப் பாதுகாப்புச் சட்டமும் இடமளிக்கவில்லை என்பதால் இப்பொருள் குறித்து எவ்வித நடவடிக்கையும் வனத் துறையால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட பதிலின் அடிப்படையில் இக்கேள்வி எழவில்லை.

**63—**

## தேசிய பசுமைப் படைத் திட்டம்

**வினா எண் 53420—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் "தேசிய பசுமைப் படைத் திட்டம்" ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 31

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், 2002 ஆம் ஆண்டிலிருந்து 100 பள்ளிகளில் தேசியப் பசுமைப் படைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில், தேசியப் பசுமைப் படைத் திட்டம் மேலும் 50 பள்ளிகளில் செயல்படுத்தப்பட உள்ளது. ஏற்கெனவே தேசிய பசுமைப் படைத் திட்டம் செயல்பட்டு வரும் 100 பள்ளிகளுக்கும், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள 50 பள்ளிகளுக்கும் சேர்த்து, பள்ளி ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் 150 பள்ளிகளுக்கு ரூ.1,50,000/– நிதியுதவி சேலம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

64—

## வீட்டு வசதித் திட்டம்

**வினா எண் 31725—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்பட உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நகரக் குடிசைப் பகுதிகளில் தனி வீடுகள் அமைக்கும் திட்டப் பணிகள் 2002–2003 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது.



2004 ஜூலை 31]

65—

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 32958—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய தமிழகத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு பாக்கித் தொகை எவ்வளவு பட்டுவாடா செய்தது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

ஏப்ரல் மாதம் 2002 அன்று சங்கங்களால் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பால் பணம் பாக்கித் தொகை ரூ.52.15 கோடியாக இருந்தது. உற்பத்தியாளர்களின் நிலுவைத் தொகையைக் கணிசமாகக் குறைக்கும் பொருட்டு 2002 ஆம் ஆண்டு மே மாதத்தில் வங்கியின் வாயிலாக கடனுதவிப் பெற்று ஒன்றியங்கள், சங்கங்களுக்கு ரூ.25 கோடி பணம் பாக்கித் தொகையை சரி செய்வதற்காக வழங்கப்பட்டது. இதனால், உறுப்பினர்களுக்குத் தர வேண்டிய பாக்கித் தொகை செப்டம்பர் 2002–ல் ரூ.29.67 கோடியாகக் குறைந்தது. அக்டோபர் 2002–ல் ரூ.23.82 கோடியாக மேலும் குறைக்கப்பட்டது. சரியான வழி நடத்தலாலும், சிக்கன நடவடிக்கைகளாலும், ஒன்றியங்களின் நிதிநிலை சீர்பெற்று 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி உறுப்பினர்களுக்கு நடப்புக் கால 10 நாள் பால் பண நிலுவை மட்டுமே பாக்கி உள்ளது.

66—

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 33159—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் பால் கூட்டுறவு சங்கத்தில் பால் வழங்குவோருக்கு தொகை சரியாக வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், முழுத் தொகையும் எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு நாளது தேதி வரை பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. பால் பணம் நிலுவை ஏதுமில்லை.

**67—**

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 41378—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், வீரணகுப்பம் ஊராட்சியைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குக் கட்டடம் கட்டும் கருத்துரு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், வீரணகுப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட த.பி.டி. 405, வீரணகுப்பம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 3 சென்ட் அடிமனை உள்ளது. ஆனால், சங்கத்தில் சொந்தக் கட்டடம் கட்டப் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்படி சங்கத்திற்குக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்தால், கட்டடம் கட்டித் தரப்படும்.

**68—**

## மாவட்டப் பால் பண்ணை அமைத்தல்

**வினா எண் 43942—திரு. அ.இரா. மலைப்பசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் மாவட்டப் பால் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதியில் உள்ள 71 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 16,994 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதில் சுமார் 1,018 லிட்டர் பால் உள்ளூர் விற்பனை செய்யப்படுகிறது. ஒன்றியத்திற்கு நாளொன்றுக்கு 15,976 லிட்டர் பால் அனுப்பப்படுகிறது. பரமத்திவேலூர் பால் குளிரூட்டும் நிலையம் கபிலர்மலையிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் மாவட்டப் பால் பண்ணை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**69—**

## பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடம்

**வினா எண் 53986—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், மடத்துக்குளம் பேரூராட்சி, போத்தநாயக்கனூர் கிராமம், பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடம் கட்ட அனுமதி கேட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் இதுவரை அனுமதி கொடுக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சங்கக் கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், மடத்துக்குளம் பேரூராட்சி, போத்தநாயக்கனூர் கிராமம், எம்.எஸ்.584, போத்தநாயக்கனூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.1,60,000/- திட்ட மதிப்பீட்டில், சங்க நிதியிலிருந்து சொந்தக் கட்டடம் கட்டிக்கொள்ள

185247 சென்னை-600 008

அனுமதி வேண்டிய செயற்குறிப்பிற்கு அனுமதி 18-02-2004-ல் பால் வளத் துறை ஆணையரால் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் துவங்கப்பட உள்ளது.

**70—**

## பால் பண்ணைகளை ஏற்படுத்துதல்

**வினா எண் 54679—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் மற்றும் சேத்துமடைப் பகுதிகளில் பால் உற்பத்தியைப் பெருக்க பால் பண்ணைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட 27 சங்கங்களில், 19 சங்கங்கள் செயல்படுகின்றன; எட்டு சங்கங்கள் செயல்படவில்லை. பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கேற்ப பால் உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பு இருப்பின், புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

**71—**

## நெசவாளர் நலன்

**வினா எண் 50477—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, உயர்ந்த ரக நூல்களை நீண்டகாலக் கடனுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, உயர்ந்த ரக நூல்களை நீண்ட காலக் கடனுக்கு வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.*

**72—**

## வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்

**வினா எண் 34471—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டத்தில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா?*

*(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?*

*(இ) அவர்களுக்கு என்ன வசதி செய்யப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1034 பேர்.*

*(இ) வாரியத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு, வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, அவர்களது பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்காக வாரிசுதாரர்களுக்கு நிவாரண உதவித் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன.*

73—

## தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 35524—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்?

(இ) அவர்களுக்கு என்ன பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 288 பேர்.

(இ) தொழிலாளர் நல வாரியத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு, வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, அவர்களது பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்காக வாரிசுதாரர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்படுதல் போன்ற பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

74—

## பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 10236—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயில் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆமெனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயில் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க ரூ.4.80 இலட்சம் செலவில் கல்வி நிதிமூலம் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி பணி 28-11-2003-ல் முடிக்கப்பட்டு விட்டது. மேலும் தற்போது நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது.

75—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 10441—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், பொன்குடிக்காடு கிராமத்திலுள்ள அய்யனார்குளத்திலுள்ள பழைய நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், பொன்பரப்பி ஊராட்சியைச் சார்ந்த அய்யனார்குளம், வேலங்குழிப்பட்டி ஆகிய இரு குடியிருப்புகளுக்கும் சேர்த்து ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, 4/1998-ல் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு, தற்சமயம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதன்மூலம் மக்களுக்கு முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

76—

### விசைப் பம்பு அமைத்தல்

**வினா எண் 11823—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், வடக்கு இடையன்குளம், ஆத்தியான்குளம் கிராமத்தில் புதிய விசைப் பம்பு அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், வடக்கு இடையன்குளம், ஆத்தியான்குளம் கிராமத்திற்கு 2001–2002 நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

77—

### பொதுக் குழாய் அமைத்தல்

**வினா எண் 11957—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மாவடி நடுத்தெருவில் பொதுக் குழாய் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மாவடி நடுத்தெருவில் பொதுக் குடிநீர்க் குழாய் அமைக்க பைப் லைன் பதித்து,



ஒரு பொது குடிநீர்க் குழாய் 30–6–2002–ல் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

78—

### மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி

**வினா எண் 12143—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் யாதவர் பகுதி பேருந்து நிறுத்தம் அருகில் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், மருதம்புத்தூர் ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு, மேற்கொண்டு பராமரிப்பிற்காக ஊராட்சியிடம் 6/2002–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

79—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12724—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாதபுரம் ஊராட்சி, ஒளிராமன்காடு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 31

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாதபுரம் ஊராட்சி, ஒளிராமன்காடு குடியிருப்பிற்கு 1998 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்குப் புதிய குடிநீர்த் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**80—**

## குடிநீர் வசதி

**வினா எண் 13205—திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூராட்சியிலுள்ள ஆலம்பாளையம், சென்னக்கல்வலசு, ஆண்டிப்பாளையம் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆமெனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் நகராட்சி, கொளத்துப்பாளையம் ஊரகப் பேரூராட்சி, சின்னக்காம்பாளையம் மற்றும் 75 வழியோரக் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.20.03 கோடியில் நிறைவேற்ற, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் குடிநீர்த் திட்டம் செயலுக்குக் கொண்டு வந்த பின், கொளத்துப்பாளையம் பேரூராட்சிக் கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப்பட உள்ளது.



2004 ஜூலை 31]

**81—**

## தெருக் குழாய்கள் அமைத்தல்

**வினா எண் 19151—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆர்.கே. நகர் தொகுதி, 7-வது வட்டம், ஏ.பி. கார்டன், இரட்டைக்குழித் தெரு, கணக்குப் பிள்ளை தெரு, சாமியார் தோட்டம் ஆகிய பகுதிகளில் புதியதாக தெருக் குழாய்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது நிலவிவரும் குடிநீர்ப் பற்றாக்குறையால் குடிநீர் விநியோகம் குழாயில் நிறுத்தப்பட்டு, குடிநீர் ஊர்திகள் மூலம் நீர் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு நீர் வழங்கும் செங்குன்றம், சோழவரம் மற்றும் பூண்டி ஏரிகளில் நீர்நிலை திருப்திகரமாக வந்தவுடன், தெருக் குழாய்கள் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**82—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 19478—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 3-வது வட்டம், நாவலர் குடியிருப்பு, நேரு நகரில் 6, 7, 8, 9 ஆகிய தொகுதிகள், நேதாஜி நகர் 3-வது தெரு ஆகிய இடங்களில் குழாய்களில் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குடிநீர்ப் பற்றாக்குறையால் குடிநீர் விநியோகம் குழாயில் நிறுத்தப்பட்டு, குடிநீர் ஊர்திகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு நீர் வழங்கும் செங்குன்றம், சோழவரம் மற்றும் பூண்டி ஏரிகளில் நீர்நிலை திருப்திகரமாக வந்தவுடன் குழாய்களிலும் குடிநீர் வழங்கப்படும்.*

83—

## ஆள் நுழைவாயில்கள் சீர் செய்தல்

**வினா எண் 19509—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 3–வது வட்டத்தில் 60 ஆள் நுழைவாயில்கள் சரி செய்து தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் பகுதி, 3–வது வட்டத்தில் 31–3–2004 முடிய 80 ஆள் நுழைவாயில்கள் சாலை மட்டத்திற்கு சரி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.*

84—

## அங்கீகரிக்கப்படாத மனைகள் உபயோகம்

**வினா எண் 22535—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில் ஒதுக்கப்பட்ட இடத்திற்கு (ரிசர்வ்டு சைட்) பதிலாக அதற்கிணையான தொகையைப் பெற்றுக்கொண்டால், மாநகராட்சிகள் அதே பரப்பளவுள்ள நிலத்தைப் பொது உபயோகத்துக்காக விலைக்கு வாங்கிக் கொடுக்குமா?*



விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள மனைகளை முறைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் முறைப்படுத்தும்போது; மனைப் பிரிவின் மொத்தப் பரப்பளவில் 10% நிலம் பொது ஒதுக்கீடு செய்யப்படாத மனைப் பிரிவுகளில் நிலத்தின் தற்போதைய வழிகாட்டி விலையில் 50% மட்டுமே பெறப்பட்டு முறைப்படுத்தப்பட்டு வருவதால், அதற்கு சமமான நிலத்தைக் கிரயம் செய்ய கூடுதல் நிதி தேவைப்படும் என்பதாலும், அம்மனைப் பிரிவில் விற்கப்படாத மனைகள் இருந்தால் மட்டுமே கிரயம் செய்து பொது ஒதுக்கீடு வசதி செய்ய இயலும் என்பதாலும், 10% நிலத்துக்கு இணையான மாற்று நிலம் வாங்கிக் கொடுக்க சாத்தியம் இல்லை.*

85—

## குடிநீர் வசதி

**வினா எண் 23338—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னை, மண்டலம்–1 மற்றும் 2 பகுதிகளுக்குட்பட்ட கொடுங்கையூர், எம்.ஆர். நகர், ஆர்.ஆர். நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொடுங்கையூர், எம்.ஆர். நகர், ஆர்.ஆர். நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீர் ஊர்திகள் மூலம் மக்களின் தேவைக்கேற்ப தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.*

**86—**

**சிறு மின்விசைத் திட்டம்**

**வினா எண் 27438—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம், துப்பாகுடி நாராயணசாமி கோயில் அருகில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் குடிநீர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஒன்றியம், துப்பாகுடி நாராயணசாமி கோயில் அருகில் 2002–2003 ஆம் நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**87—**

**குடிநீர் மற்றும் சாலை வசதி**

**வினா எண் 29423—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி பேரூராட்சியில், இராஜேந்திர நகருக்கு குடிநீர் மற்றும் சாலை வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செஞ்சி பேரூராட்சிக்குட்பட்ட, இராஜேந்திர நகர் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட விஸ்தரிப்புப் பகுதியாக இப்பகுதியில் உள்ள 11 தெருக்களுக்கு 310 குடியிருப்புகள் உள்ளன. மேற்படி குடியிருப்புகளில்





122 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் 7 பொதுக் குடிநீர்க் குழாய்களும், 3 மார்க் – 2 கைப்பம்புகள் வசதியுடன் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இவை போதுமானதாக உள்ளன. மண் சாலை மற்றும் ஜல்லி சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படிச் சாலைகளை மேம்படுத்தவும், வடிகால் வசதி செய்து கொடுக்கவும் பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**88—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 30022—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் செயல்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவற்றால் பயன்படும் கிராமங்கள் எத்தனை?

(இ) பயன்படும் மக்கள் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் 30 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் 521 கிராமங்களும், 3,44,110 மக்களும் பயனடைகின்றனர்.

**89—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 32030—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், நெ.2 கரியமாணிக்கம் ஊராட்சி, செந்தாமரைக்கண் மற்றும் சென்னக்கரை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், நெ.2 கரியமாணிக்கம் ஊராட்சியைச் சார்ந்த செந்தாமரைக்கண், சிறுகாம்பூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். சிறுகாம்பூர் குடியிருப்பும், சென்னக்கரை குடியிருப்பும் நெ.2 கரியமாணிக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் முழுமையான அளவு குடிநீர் வசதி பெறுபவை. மேலும், இவ்விரு குடியிருப்புகளிலும் முறையே 3 மற்றும் 5 கையிறைப்பான்கள் மக்கள் பயனில் உள்ளன. எனவே, இப்பகுதிகளுக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**90—**

## பேருந்து நிலைய நிழற்குடை

**வினா எண் 34755—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, கல்லக்குடி பேரூராட்சியில் பேருந்து நிலைய நிழற்குடை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதி, கல்லக்குடி பேரூராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் டால்மியா சிமெண்ட் நிறுவனத்தால் நிழற்குடை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

**91—**

## வகுப்பறைகள் கட்டுதல்

**வினா எண் 35718—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரம், ஊழியக்காரன்தோப்பு நகராட்சி துவக்கப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரம், ஊழியக்காரன்தோப்பில் உள்ள நகராட்சிப் பள்ளிக்கூடத்தில், அப்பகுதியிலுள்ள மாணவர்களுக்கு போதிய அளவுக்கு பள்ளிக் கட்டட வகுப்பறைகள் வசதி உள்ளது. கூடுதல் வகுப்பறைகள் தேவையில்லை. மேலும் அவ்விடத்தில் கூடுதல் வகுப்பறை கட்ட இட வசதி இல்லை என்பதால் வகுப்பறைக் கட்டடம் கட்டும் உத்தேசம் ஏதுமில்லை.

**92—**

## துவக்கப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 36653—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகராட்சி, 8-வது வார்டில் உள்ள நகராட்சி துவக்கப் பள்ளிக்குச் சொந்தமான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி நகராட்சி, 8-வது வார்டில் உள்ள நகராட்சித் துவக்கப் பள்ளிக்குச் சொந்தமான கட்டடத்தில் ஒரு பள்ளி இயங்கி வருகிறது.

அங்கு உள்ள காலி இடம் நகராட்சிக்குச் சொந்தமானதாக உள்ளதால், அங்கு 2 வகுப்பறைகள் கட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. புதிய பள்ளிக் கட்டடம் வரும் நிதியாண்டில் கட்டப்படவுள்ளது.

**93—**

## சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 43633—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் காந்தி சாலை மற்றும் அங்காடி அருகில் பொது சிறுநீர் கழிப்பிடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியில் காந்தி சாலை அங்காடி வளாகத்தினுள் கட்டணக் கழிவறை பராமரிக்கப்பட்டு வருகிறது. பொது மக்கள் அதனைப் பயன்படுத்தி வருவதாலும், தனியே இடம் இல்லாததாலும் கூடுதல் கழிப்பிடம் தேவையில்லை.

**94—**

## சாலை வசதி

**வினா எண் 46306—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மண்ணம் 13–வது வார்டில் சாலை வசதி, தெரு விளக்கு வசதி, கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மண்ணம் 13-வது வார்டு பகுதியில் 30 வீடுகள் மட்டுமே உள்ளது. இப்பகுதியில் தார்ச் சாலை வசதி ஏற்கெனவே உள்ளது. தற்போது தெரு விளக்கு வசதியும் உள்ளது. கூடுதலாகத் தேவையில்லை. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு கிடைக்கும்போது கழிப்பிட வசதி செய்து தரப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**95—**

## வீராணம் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 46512—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உலக வங்கிக் கடன் உதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உலக வங்கிக் கடன் உதவி கோரப்படவில்லை. உள்நாட்டிலுள்ள நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றும், அரசு நிதியுதவியுடனும் திட்டப் பணிகள் செயலாக்கப்படுகின்றன.

96—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 48516—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 14–வது வார்டில் பழனியப்ப கவுண்டர் காலனிக்குச் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 14–வது வார்டில் பழனியப்ப கவுண்டர் காலனிக்குச் செல்லும் சாலை தனியாருக்குச் சொந்தமானது என்பதால், இச்சாலையை பேரூராட்சிமூலம் தார்ச் சாலையாக மாற்றித்தர வழிவகை இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

97—

## காயிதே மில்லத் மணிமண்டபம்

**வினா எண் 51209—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காயிதே மில்லத் மணிமண்டபம் கட்டுவதற்கு அரசால் இதுவரையில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) முகப்பு மாற்றும் பணி எப்போது முடிவடையும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) காயிதே மில்லத் மணிமண்டபம் சென்னையில் காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் 24,000 சதுர அடி பரப்பளவில் ரூ.50.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) காயிதே மில்லத் மணிமண்டபத்தில் முகப்புத் தோற்றத்தினை மாற்ற ரூ.8.60 இலட்சம் கூடுதலாக ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. காயிதே மில்லத் மணிமண்டபம் 8–5–2003 அன்று அமைச்சர் பெருமக்களால் பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

98—

## அரசு விளம்பரங்கள் விவரம்

**வினா எண் 55322—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளியாகின்ற எந்தெந்த நாளிதழ்களில் அரசு விளம்பரங்கள் எந்த அடிப்படையில் வெளியாகின்றன?

(ஆ) உள்ளாட்சி அமைப்புகளில் சுற்று முறையில்தான் விளம்பரங்கள் பத்திரிகைகளுக்கு வழங்கப்படுகின்றனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசுத் துறைகள், கழகங்கள், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் அனைத்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை, நிலம் கையகப்படுத்துதல் ஆகிய விளம்பரங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, இத்துறையின்மூலம் அரசு அங்கீகாரம் பெற்ற விளம்பர முகவர்கள்மூலம் அரசு அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் அரசுத் துறை விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. சில துறைகள், குறிப்பாக

[2004 ஜூலை 31

அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெறாத நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடக் கோரும்பொழுது, நாளிதழ்களின் நடத்தை மற்றும் உள்ளடக்கம் (Tone and Contents) ஆகியவற்றின் அடிப்படையிலும், விளம்பரத்தின் தன்மை, விளம்பரம் சென்றடைய வேண்டிய மக்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

(ஆ) உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமின்றி, அனைத்து அரசுத் துறைகள், கழகங்கள், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் அனைத்து விளம்பரங்களும் இத்துறையின்மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, மேற்கூறிய அடிப்படையில் அரசு விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

**99—**

## மாவட்ட அளவில் விளையாட்டுகள்

**வினா எண் 46901—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவில் விளையாட்டுகள் நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவில் விளையாட்டுகள் நடத்திட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2004 ஜூலை 31]

**100—**

## விளையாட்டு மைதானத்திற்குத் தடுப்புச் சுவர்

**வினா எண் 49748—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள விளையாட்டு மைதானத்தைச் சுற்றி தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள விளையாட்டு மைதானம், அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமானது. இப்பள்ளியிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சுற்றி தடுப்புச் சுவர் அமைக்கும் பணி எம்.பி. நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டு, பகுதிப் பணி மட்டும் முடிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம், வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் 25.3 மீ நீளம் X 45 செ.மீ. அகலம் (ம) உயரம் 2.5 மீ அளவில் தடுப்புச் சுவர் எம்.பி. நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டு பகுதிப் பணியாக முடிக்கப்பட்டுள்ளது.

**101—**

## விளையாட்டு வீரர்களுக்கு சிற்றுண்டி விடுதி

**வினா எண் 50709—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலுள்ள நேரு விளையாட்டரங்கத்தில் கால்பந்து, கைப்பந்து விளையாட்டில் கலந்துகொள்ளும் வீரர்களுக்கு சிற்றுண்டி விடுதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூரிலுள்ள நேரு விளையாட்டரங்கத்தில் கால்பந்து, கைப்பந்து விளையாட்டில் கலந்துகொள்ளும் வீரர்களுக்கு சிற்றுண்டி விடுதி ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**102—**

## கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்துதல்

**வினா எண் 51388—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள விளையாட்டு மைதானத்தில் மாநில அளவிலுள்ள கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள விளையாட்டு மைதானத்தில் மாநில அளவிலுள்ள கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்திடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



**103—**

## இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மையம்

**வினா எண் 51908—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நிம்மேலி, வள்ளுவக்குடி, கொண்டல், சட்டநாதபுரம், திருநகரி, புதுப்பட்டினம், திருக்கோலிக்காநகர், மாதானம், ஆதமங்கலம், திருப்பங்கூர், மங்கைமடம் ஆகிய ஊராட்சிகளிலும், வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியிலும் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, நிம்மேலி, வள்ளுவக்குடி, கொண்டல், சட்டநாதபுரம், திருநகரி, புதுப்பட்டினம், திருக்கோலிக்காநகர், மாதானம், ஆதமங்கலம், திருப்பங்கூர், மங்கைமடம் ஆகிய ஊராட்சிகளிலும், வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியிலும் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**104—**

## உடற்பயிற்சிக்கூடம் அமைத்தல்

**வினா எண் 53288—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) பேரணாம்பட்டு தொகுதி, எம்.ஜி.ஆர். நகர் மற்றும் சாலைப்பேட்டையில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதி, எம்.ஜி.ஆர். நகர் மற்றும் சாலைப்பேட்டையில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**105—**

**உடற்பயிற்சிக்கூடம் அமைத்தல்**

**வினா எண் 53290—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மேட்டுப்பாளையத்தில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மேட்டுப்பாளையத்தில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2004 ஜூலை 31]

# இணைப்பு III

(79 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### அத்தியாயம் 1

**முன்னுரை**

1.1 தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். "அனைவருக்கும் ஆரோக்கியமான வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதே" இவ்வரசின் நோக்கமாகும்.

1.2 ஒவ்வொரு மனிதனின் அன்றாட வாழ்விலும் கூட்டுறவுகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. விவசாயிகளுக்கு பயிர் விளைச்சலை மேம்படுத்த பயிர்க் கடன் வழங்கியும், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற வேளாண்மை இடுபொருட்களை வழங்கியும் அவை உதவிபுரிகின்றன. விவசாயிகளின் விளைபொருட்களை இருப்பு வைத்து தக்க நேரத்தில் விற்பனை செய்யவும் அவை மேலும் உதவுகின்றன. பெரும்பான்மையான மாவட்டங்களில் கூட்டுறவுகள் நியாய விலைக் கடைகளை நடத்தி அவற்றின் வாயிலாக ஊரக மற்றும் நகர்ப்புற ஏழை மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை மிக மலிவான விலையில் விற்பனை செய்கின்றன.

1.3 பொருளாதார வளர்ச்சியின் அங்கங்களான உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் நுகர்வு ஆகியவற்றில் கூட்டுறவுகள் முக்கியப் பங்கு வகிப்பதால் இவைகள் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

[2004 ஜூலை 31

*1.4* அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு எப்பொழுதும் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. ஏழை எளிய மக்கள் வறுமை, பசிப்பிணி, சத்துக் குறைவு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய தேவை தொடர்ந்து காணப்படுகின்றது. இம்மாநிலத்தின் பொது விநியோக முறை மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளிப்பதில் பெரும்பங்காற்றுகின்றது.

*1.5* கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் நடவடிக்கைகள் பற்றி, குறிப்பாக, கூட்டுறவுகள் நம் மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக ஆற்றும் பங்கினைக் குறித்து பின்வரும் பக்கங்களில் விரிவாகக் காணலாம்.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 2

### கூட்டுறவுக் கடன்

*2.1* கூட்டுறவுக் கடன் கட்டமைப்பின் முக்கிய நோக்கமானது, சேமிப்பின் மூலம் நிதி பெருக்கி விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்காகவும், ஊரக மக்களுக்கு பண்ணைசாராத் தொழில்களுக்காகவும் நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்குதல் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு இரு வகையான நிறுவனங்களைக் கொண்டது. ஒரு வகையான நிறுவனம் குறுகிய காலக் கடன்களையும் மற்றொரு வகை நீண்டகாலக் கடன்களையும் வழங்கி வருகிறது.

*2.2* வெவ்வேறு நிலையில் உள்ள பல்வேறு கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து பின்வரும் பத்திகளில் ஆராயப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி

*2.3* தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி தனது நூறாவது ஆண்டினை 2005 ஆம் ஆண்டில் கொண்டாட உள்ளது. இவ்வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடந்த சுமார் நூறு ஆண்டுகளாக தமிழ்நாட்டின் விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றி நட்சத்திர அந்தஸ்தினைப் பெற்றுள்ளது.

*2.4* இம்மாநிலக் கூட்டுறவு வங்கி வேளாண்மை மற்றும் அதுசார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து கடன்களும் முன்பணமும் வழங்குகிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் முதன்மை கூட்டுறவு நிறுவனங்கள், நட்பமைப்பு நிறுவனங்கள் வாயிலாகவும் தலைமை அலுவலகம் மற்றும் அதன் கிளைகள் வாயிலாகவும் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கும் கடனுதவி அளிக்கின்றன.

*2.5* இவ்வங்கி கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதலோடு பாதுகாப்புப் பெட்டக வசதியினை வாடகைக்குக் கொடுத்தல், பாதுகாப்புக்காகப் பொருட்களை பத்திரப்படுத்துதல் நிதி மாற்றங்கள் போன்ற துணை வங்கி நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

2.6 இவ்வங்கி தன்னுடன் இணைந்துள்ள நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அ) மாநிலத்தில் உள்ள பல்வேறு சர்க்கரை ஆலைகளுக்கு நிதியுதவி அளிக்க மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆ) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சட்டம் மற்றும் சட்டமற்ற நோக்கங்களுக்கான வைப்பீடுகளை முறைபடுத்த உதவிபுரிகிறது. உறுதிப் பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் யோசனை வழங்கி உறுதிப் பத்திர வணிகத்தில் உதவி அளிக்கிறது.

இ) மாநிலத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு, பாதுகாப்பு அறை கட்டுதல், நகையைப் பாதுகாக்க அலமாரி வாங்குதல், பலம் வாய்ந்த கதவுகளை அமைத்தல், நவீன வங்கி முகப்பு அமைத்தல் போன்ற நோக்கங்களுக்காக நிதியுதவி அளிப்பதற்காக "தொடக்க கூட்டுறவு மேம்பாட்டு நிதி" என்ற அமைப்பை இவ்வங்கி ஏற்படுத்தியுள்ளது. இதுவரை பல்வேறு நோக்கங்களுக்காக 17.26 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஈ) இவ்வங்கி மாநிலத்தில் அமைந்துள்ள மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணிகளைக் கண்காணித்தல், அவற்றின் நடவடிக்கைகளை காலமுறையில் ஆய்வு செய்தல் மற்றும் வங்கிகளைத் திறம்பட செயல்படுத்த தேவையான அறிவுரை வழங்கல் ஆகிய பணிகளையும் செய்கிறது.

உ) மத்திய அரசு / மாநில் அரசு அறிவுரையின் பேரில் இவ்வங்கி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு சேமிப்பு பொறுப்புறுதி திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன் பயனாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெறப்படும் வைப்பீடுகள் காப்பீடு திட்டத்தில் அடங்கும்.

ஊ) மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் வளர்ச்சி செயல் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க இவ்வங்கியில் தனிப்பிரிவு (Cell) ஒன்று உள்ளது.





எ) தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியின் பண்ணைசாரா திட்டங்களுக்கு ஒப்புதல் வாங்குவதற்கு ஏதுவாக அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் திட்டத் திறனாய்வு ஆகியவற்றை வழங்குவதற்காக இவ்வங்கி தொழில்நுட்பப் பிரிவு ஒன்றினை உருவாக்கியுள்ளது.

ஏ) இவ்வங்கி மாநில அளவிலான தொழில்நுட்பப் பிரிவின் கூட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் கூட்டுகிறது. இக்கூட்டத்தில் பருவகால வேளாண் நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக மாநிலத்தில் உள்ள அனைத்து, மாவட்டங்களுக்கும், எல்லாப் பயிர்களுக்கும் சீரான நிதியுதவி குறித்து தீர்மானிக்கப்படுகிறது.

2.7. இவ்வங்கி 2005-2006 ஆம் ஆண்டில் நூறாவது ஆண்டை நோக்கி வெற்றிநடை போடுகிறது. வங்கித் தொழில் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் போன்ற நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை பொறுத்து ஏற்படும் அறைகூவல்களை சமாளிக்க அது தன்னை தயார்படுத்திக் கொண்டுள்ளது.

2.8. வங்கி நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி 20 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்களை நிறுவ உள்ளது.

2.9. 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிதிநிலைமை பின்வருமாறு:

| விவரங்கள் | தொகை (ரூபாய் கோடியில் |
|---|---|
| பங்கு மூலதனம் | 37.82 |
| ஒதுக்கீடுகள் | 374.29 |
| வைப்புத் தொகை | 3119.47 |
| கடன் வழங்கிய தொகை | 3595.77 |
| இலாபம் (31-3-2004 அன்றுள்ளவாறு) (தணிக்கை செய்யாமல்) | 39.35 |

**மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்**

2.10. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அவை அமைந்துள்ள பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மற்றைய கூட்டுறவுகளின் ஒரு கூட்டமைப்பு ஆகும். தற்போது இம்மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பங்கு மூலதனம், சேமநிதி மற்றும் வைப்பு நிதி ஆகிய சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மூலமாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் பெற்றும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கடன் வழங்குகின்றன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இவ்வங்கிகளால் நிதியுதவி பெறுகின்றன.

2.11. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நுகர்வோர்களுக்கு செய்யும் சேவையை மேம்படுத்துவதற்காக இவ்வங்கிகளின் கிளைகளை கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.12. மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்சாரா தொழில்களான லாரிகள், பேருந்துகள், இடித்து தகர்க்கும் இயந்திரம், மண்வாரும் இயந்திரங்கள் ஆகியன வாங்குதல், வீடு கட்டுதல், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைத்தல், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைத்தல் மற்றும் உறுப்பினர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பயிலுதல் போன்ற நோக்கங்களுக்காகவும் கடனுதவி அளித்து வருகின்றன.

2.13. 31-3-2004 அன்றுள்ளபடி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதிநிலைமை பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| i. | பங்கு மூலதனம் | 422.65 |
| ii. | ஒதுக்கீடுகள் | 527.83 |
| iii. | வைப்புத் தொகை | 7061.14 |
| iv. | நடை முதல் | 11259.04 |

2.14. நிதிநிலையில் நலிவுற்றுள்ள வங்கிகளை [11(1) வங்கிகள்] சீரமைப்பது குறித்து கருத்துரு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் கலந்தாலோசிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. நீலகிரி, சிவகங்கை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வங்கிகள் நெறிமுறைப்படுத்தும் சட்டப்பிரிவு 11(1)லிருந்து விலக்களிக்க தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



2.15. பொதுமக்களின் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், சென்னை, காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அதிக எண்ணிக்கையில் கிளைகளை திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

2.16. கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களது உறுப்பினர்களின் விவசாயத்திற்கான குறுகிய கால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. இக்கடனை 12 முதல் 15 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்வங்கியின் அங்கத்தினர்களுக்கு விவசாயம் சார்ந்த தொழில்களான பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவற்றிற்கு மத்திய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த கடன்களை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். தற்போது மாநிலத்தில் 4,555 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

2.17. இவ்வங்கிகள் சொந்த ஜாமீன் பேரில் பயிர்க் கடன்கள் வழங்குகின்றன. மாநில அளவிலான குழு கடன் வழங்கும் அளவுகளை நிர்ணயிக்கிறது. கரும்புப் பயிரைப் பொறுத்தவரை கடன் பெறுவதற்கு அதிக அளவாக 10 ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்திருத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மற்றைய பயிர்களை பொறுத்தவரை ரூ.1,00,000/- வரை கடன் பெறலாம். கடன் வாங்கும் அளவு மேற்படி உச்சவரம்பு அளவுகளை விட அதிகமாகும் நிலையில், சொத்து அடமானத்தின் பேரில் கடன்கள் அளிக்கப்படுகின்றன.

2.18. இத்தொடக்க வங்கிகள், விவசாயத் தொழில்களுக்கு மட்டுமல்லாது, வேளாண் நிலம் வாங்கவும், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்கவும் கடன் வசதி அளிக்கின்றன. மேலும் இவ்வங்கிகள், வீட்டு வசதிப் பொருட்கள், இருசக்கர வாகனங்கள், டெம்போக்கள், டிரக்குகள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள் வாங்கவும், வீடுகள் கட்டவும், பழுதுபார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்கு சேவை மையங்கள் துவக்கவும் தங்களது வைப்புத் தொகைகளைப் பயன்படுத்தி கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

2.19. சேலம், திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் எல்லைகளுக்குள் உட்பட்ட 115 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு மூலதன நிதியாக 2003-04 ஆம் ஆண்டில், அரசு ரூ.56.60 இலட்சம் அளித்துள்ளது. இதனால் இவ்வங்கிகள் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் தேசிய ஊரக (நீண்ட காலக் கடன்) நிதியிலிருந்து கடன் பெற வழி வகுக்கிறது.

2.20. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் அங்கத்தினர்களுக்கு அவர்கள் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க, கூடுதல் மூலதனம் செலுத்துவதற்காக வட்டியில்லா கடனாக ரூ.500/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 2000 பெண்கள் பயன் பெறுவர்.

2.21. 31-3-2004 அன்றுள்ளபடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 2783.79 கோடி ரூபாய் வைப்புத் தொகை கொண்டுள்ளன.

**கடன் வழங்கும் பணிகளில் முன்னேற்றம்**

2.22. கடந்த ஐந்தாண்டு காலத்தில் குறுகிய மற்றும் நடுத்தரக் கடன்கள் வழங்கும் பணியில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | குறுகியகால பயிர்/சாகுபடிக் கடன்கள் | | துணைத் தொழில்களுக்கான மத்திய வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய மற்றும் மத்திய) |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | குறியீடு | சாதனை | |
| 1999-2000 | 1050.00 | 879.04 | 100.00 | 111.73 | 990.77 |
| 2000-2001 | 1200.00 | 1049.26 | 110.00 | 69.06 | 1118.32 |
| 2001-2002 | 1200.00 | 1118.04 | 110.00 | 64.93 | 1182.97 |
| 2002-2003 | 1360.00 | 963.96 | 106.00 | 94.37 | 1058.33 |
| 2003-2004 | 1251.45 | 616.59 | 194.88 | 72.15 | 688.74 |



2004 ஜூலை 31]

2.23. பண்ணைசாராத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக கடந்த ஐந்தாண்டு காலத்தில் வழங்கப்பட்ட கடன் அளவு பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பண்ணைசாராக் கடன்கள் வழங்குதல் | |
|---|---|---|
| | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் |
| 1999-2000 | 48.17 | 67.88 |
| 2000-2001 | 84.74 | 57.02 |
| 2001-2002 | 41.19 | 68.75 |
| 2002-2003 | 43.39 | 75.50 |
| 2003-2004 | 59.22 | 57.06 |

**தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

2.24. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அனைத்து தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கூட்டமைப்பாகும். வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை வளர்க்கும் நோக்கத்துடன் இவ்வங்கி நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது. இவ்வங்கி 1929 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வங்கிக்கு 20 மண்டல அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டல அலுவலகமும் ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களைக் கொண்டுள்ளன. மாநிலத்தில் உள்ள தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்ட மற்றும் மண்டல அளவில் அமைந்துள்ளன. இவை அனைத்தும் மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நிதியுதவி அளிப்பதே இவ்வங்கியின் முக்கிய நோக்கமாகும். மேலே கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்காக இவ்வங்கி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

1. கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுதல்;
2. வைப்புத் தொகை பெறுதல்;

3. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஒப்புதல் அளித்துள்ள நோக்கங்களுக்காக தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு கடன் வசதி அளித்தல்;

4. கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு எந்த ஒரு கூட்டுறவு வங்கிக்கும் முகவராகச் செயல்படுதல்; மற்றும்

5. தன்னைச் சார்ந்த தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை மேம்படுத்துதல், உதவி செய்தல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

2.25. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, விவசாய மற்றும் அதனைச் சார்ந்த பணிகளான கிடங்குகள் கட்டுதல், கால்நடைகளுக்காக கொட்டில் கட்டுதல், பண்ணை வீடுகள் அமைத்தல், நிலம் வாங்குதல் போன்றவற்றிற்காகவும், புதிய கிணறுகள் தோண்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பாசன வேலைகளுக்கும் நீண்ட கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்குகிறது. இது தவிர கால்நடை பராமரிப்பு, மீன் வளர்ப்பு, தோட்டங்கள் அமைத்தல், பண்ணைகளை இயந்திரமயமாக்குதல், பண்ணைசாராப் பணிகள் மற்றும் பிற சிறு பாசன வேலைகளுக்கும் நீண்ட காலக் கடன் வழங்குகின்றது.

2.26. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கீழ்க்கண்டவாறு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு நிதியினை திரட்டுகிறது:

1. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மத்திய, மாநில அரசுகள் முதலீடு செய்யும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள்.

2. மாநில மற்றும் மத்திய அரசுகள் மற்றும் பிற நிறுவன முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள்.

2.27. 31-3-2004 வரை சாதாரண மற்றும் சிறப்பு காப்பீட்டு பத்திரங்களில் முறையே 34.49 கோடி ரூபாய் மற்றும் 1153.13 கோடி ரூபாய் திருப்பி வழங்கப்பட வேண்டும்.



2.28. 31-3-2004 அன்றைய நிலவரப்படி வங்கியின் சொந்த நிதி ஆதாரம் 381.86 கோடி ரூபாய் ஆகும். இதன் விவரம் பின்வருமாறு:

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | பங்கு மூலதனம் | 42.15 |
| 2. | சட்டரீதியான காப்பீடு | 37.59 |
| 3. | மற்ற காப்பீடுகள் (தவணை கடந்த கடனுக்கான காப்பீடு உட்பட) | 302.12 |
| | மொத்தம் | 381.86 |

**கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

2.29. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன்களை அளிக்கின்றன. இக்கடனை 5 முதல் 15 ஆண்டுகளுக்குள் திருப்பி அளிக்க வேண்டும். இவை விவசாயிகளுக்கு சிறு பாசனம், தோட்டப் பயிர்கள் வளர்த்தல் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்கும் மற்றும் கோழி வளர்த்தல், பால்பண்ணை அமைத்தல், பட்டுப்புழு வளர்த்தல் போன்ற பிற பணிகளுக்கும் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன. இதற்கான நிதி ஆதாரத்தை இவை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறுகின்றன. தற்போது இம்மாநிலத்தில் 181 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

2.30. கடந்த ஐந்தாண்டு காலத்தில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் அளித்துள்ள நீண்டகாலக் கடன்கள் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் அளவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1999-2000 | 202.17 |
| 2000-2001 | 202.17 |
| 2001-2002 | 183.52 |
| 2002-2003 | 218.15 |
| 2003-2004 | 126.88 |

*2.31.* நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதற்கு ஈடாக, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கடன் வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, இவ்வங்கிகள் கைவினைஞர், கைத்தொழில் வல்லுநர் மற்றும் சிறுதொழில் முனைவோருக்குக் கடன் வசதி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், கிராமப்புறங்களில் சரக்கு வாகனங்கள் மற்றும் ஆட்கள் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வாங்குவதற்கும் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்கும் கடன் வசதி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புறக் கடன்**

*2.32.* தற்போது தமிழகத்தில் 126 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளும் தங்களுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை பொது மக்கள் மற்றும் தங்களது உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்றும் திரட்டுகின்றன. இந்த நகரக் கூட்டுறவு வங்கிகள், இந்நிதியினை குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக கடன் வழங்குவதற்கு பயன்படுத்துகின்றன. இவை சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் குடும்பத்தினருக்கு வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடல் போன்றவற்றிற்கும் கடன் வழங்குகின்றன. இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கிட வேண்டும். 31–3–2004 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவு வங்கிகளிடமுள்ள மொத்த வைப்புத் தொகை ரூ.2,689.20 கோடியாகும். 1–4–2003 முதல் 31–3–2004 வரை இவ்வங்கிகள், 1868.54 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கியுள்ளன.

*2.33* நகரக் கூட்டுறவு வங்கிகள் பண்ணைசாரா தொழில்களான குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் 31–3–2004 வரை 145.02 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 73,469 நபர்கள் பயனடைந்துள்ளனர்.



**கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல்**

*2.34.* கூட்டுறவு நிறுவனங்களில் நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை பின்பற்றாமல் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் வழிமுறைகளைக் கூறியுள்ளது. துணை விதிகள் இல்லாத கூட்டுறவு நிறுவனங்கள் அவற்றை உடனே உருவாக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே துணை விதிகள் ஏற்படுத்தியுள்ள நிறுவனங்கள் அவற்றை மாற்றி அமைத்து அவற்றிற்கு ஒப்புதல் பெற வேண்டும் எனவும் சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. தற்போதுள்ள விதிகளின்படி அரசு மாத்திரமே இவற்றிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதன்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து கூட்டுறவுகளின் துணை விதிகள் பெறப்பட்டுள்ளன. விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை தவிர பிற மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் துணை விதிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு சிக்கன நாணய சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த மற்றும் சில்லறை விற்பனைக் கடைகள் ஆகியவற்றின் துணை விதிகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு உயர் நீதிமன்றத்தில் தடைகள் பெறப்பட்டுள்ளன. இத்தடையை நீக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்றைய கூட்டுறவு நிறுவனங்களின் துணை விதிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 3

### கூட்டுறவு வங்கிகளால் நடைமுறைப்படுத்தப்படும் சில சிறப்புத் திட்டங்கள்

3.1. மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதற்காக அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதற்காக கூட்டுறவு வங்கிகள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. அவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

### 1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களை உறுப்பினர்களாக சேர்த்தல்

3.2. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட இன மக்கள் அதிக அளவில் அங்கத்தினர்களாவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பங்கு மூலதனம் செலுத்துவதற்கு ரூ.200/— மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | வழங்கப்பட்ட தொகை | பயனாளிகள் |
|---|---|---|
| 2002-2003 | 8.88 | 4,444 |
| 2003-2004 | 20.00 | 10,000 |

3.3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு அவர்களது கடன் வாங்கும் திறனை அதிகரிப்பதற்காக பங்கு மூலதன உதவியாக 250 ரூபாய் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகையை ஐந்தாண்டுகளில் சரிசமமான தவணைகளில் திருப்பிச் செலுத்தவேண்டும். இத்திட்டத்தின்கீழ், 2002–2003 ஆம் ஆண்டு வரை, 96,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு 2.40 கோடி ரூபாய் உதவி வழங்கப்பட்டது. 2003–2004 ஆம் ஆண்டில் 8000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடி உறுப்பினர்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க அரசு ஒப்பளித்துள்ளது.



2004 ஜூலை 31]

### 2. நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குதல்

3.4. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நெறிமுறைகளின்படி, வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்கு சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/பயிரிடுபவர்களுக்கு, வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 60 விழுக்காடு அளவிற்கும், மத்திய காலக் கடனில் 75 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.5. கடந்த மூன்றாண்டுகளில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட குறுகிய கால, மத்திய மற்றும் நீண்ட காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:—

| வ. எண் | விவரங்கள் | ஆண்டு | சாதனை | |
|---|---|---|---|---|
| | | | நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன்தொகை | வழங்கப்பட்ட மொத்த கடனில் விழுக்காடு (ரூ. கோடியில்) |
| 1. | குறுகிய காலக் கடன் | 2001–2002<br>2002–2003<br>2003–2004 | 638.59<br>647.50<br>329.94 | 57.10<br>67.20<br>53.50 |
| 2. | மத்திய காலக் கடன் | 2001–2002<br>2002–2003<br>2003–2004 | 47.08<br>70.81<br>45.37 | 72.50<br>75.20<br>62.90 |
| 3. | நீண்ட காலக் கடன் | 2001–2002<br>2002–2003<br>2003–2004 | 40.03<br>51.53<br>31.51 | 22.00<br>23.60<br>24.50 |

### 3. நகைக் கடன்

3.6. பொதுமக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் நகையீட்டின் பேரில் கடன் வசதிகளை அளிப்பதில் கூட்டுறவு வங்கிகள் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன. கூட்டுறவு வங்கிகள் ஒருவருக்கு அதிக அளவாக ரூ.2.00 இலட்சம் வரை நகைக் கடன் வழங்குகின்றன.

கடந்த இரண்டாண்டுகளில் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட நகைக் கடன்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:—

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் தொகை |
|---|---|
| 2002-2003 | 4705.54 |
| 2003-2004 | 5053.37 |

### 4. தொழில் கடன்

3.7. இவ்வகைக் கடன்கள் மருத்துவர்களுக்கும், பொறியாளர்களுக்கும் தாங்கள் தேவையான மையங்களை நிறுவி தொழில் நடத்துவதற்காக வழங்கப்பட்டு வருகின்றன. கடன் பெறத் தேவையான அனைத்துத் தகுதிகளும் இருக்குமானால் அதிக அளவாக ரூ. 1 கோடி வரை கடன் வழங்கப்படும். இவ்வகைக் கடன்கள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் கடந்த 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.31.04 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 5. சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்

3.8. இத்திட்டத்தினை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்தல் மற்றும் பெட்டிக்கடை நடத்துதல் போன்ற தொழில்கள் செய்யும் மகளிர் அவர்களது வியாபாரத் தேவைக்குத் தகுந்தவாறு ரூ. 100, ரூ. 200, ரூ. 500, ரூ. 1500 என்ற அளவில் அதிக அளவாக ரூ.5000 வரை கடன் பெற்றுக்கொள்ளலாம். வட்டி வீதம் 11% ஆகும்.

3.9. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

- இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சேவைக் கட்டணம் கைவிடப்படுகிறது.
- பயனாளி திரும்பச் செலுத்தும் தொகையை சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதைத் தவிர்த்து, அவருடைய கடன் கணக்கில் வரவு வைக்கவேண்டும்.





- வட்டியைக் கணக்கிடுவதற்கு குறைந்து வரும் நிலுவை முறை (Reducing Balance) கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
- கடன் தொகையை தினந்தோறும் செலுத்துவதை விட அவர்கள் விரும்பினால் வாரத்தில் ஒரு முறை செலுத்தலாம்.
- வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் தற்போதுள்ள 118 நாட்களிலிருந்து 147 நாட்களாக நீட்டிக்கப்படுகிறது.
- இத்திட்டத்தின்படி 1000 ரூபாய் கடன் வாங்கியிருந்தால் பயனாளிக்கு ரூ.116.80 நிகர சேமிப்பாக இருக்கும்.

3.10. இத்திட்டத்தின்கீழ் 31-3-2004 அன்றுள்ள நிலவரப்படி 1,15,401 நபர்களுக்கு 40.91 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

3.11. இச்சிறுவணிகக் கடன் திட்டம், ஊரகப் பகுதிகளில், தேசிய ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி பெறப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் சுய உதவிக் குழுக்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வங்கிகளில் 60,926 சுய உதவிக் குழுக்கள் இதுவரை அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு மாதங்களுக்கு மேல் அங்கத்தினர்களாக உள்ள 41,500 சுய உதவிக் குழுக்களுக்கு 163.34 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 6. மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

3.12. இத்திட்டத்தின்கீழ் மகளிர் தொழில் முனைவோருக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் 10 இலட்சம் ரூபாய் வரையில் 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 11 சதவீதம் வட்டி வீதத்தில் சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் தொடங்க, கடன் வழங்கி வருகின்றன. இந்தப் புதிய கடன் திட்டம் 19-10-2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கடன் திட்டத்தின் கீழ் 1308 மகளிர் தொழில் முனைவோருக்கு 7.84 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 7. பணிபுரியும் மகளிருக்கான கடன் திட்டம்

3.13. இத்திட்டத்தின்கீழ் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும், ரூ. 1,00,000 வரை கடனாக அளித்து வருகின்றன. இக்கடன் 36 மாத தவணைகளில்

11 சதவீத வட்டி வீதத்தில் திருப்பி செலுத்தப்பட வேண்டும். இதுவரை 9098 மகளிருக்கு 20.81 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**8. பேறுகாலக் கடன் திட்டம்**

3.14. இத்திட்டத்தின்கீழ், பெண்களுக்கு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன ரூ. 2000 வரை 11 சதவீத வட்டி வீதத்தில் பேறுகாலக் கடன் வழங்குகின்றன. இதுவரை 15270 பெண்களுக்கு 3.03 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**9. ஊரக வீட்டு வசதித் திட்டம்**

3.15. ஊரக வீட்டு வசதித் திட்டம், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2315 நபர்களுக்கு 28.98 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**10. விவசாயக் கடன் அட்டை திட்டம்**

3.16. இவ்வரசு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட விவசாயக் கடன் அட்டை திட்டத்தினை கடைபிடித்து வருகிறது. விவசாயிகள் பயிர் சாகுபடி செலவினை மேற்கொள்வதற்காக வங்கிகள் மூலம் தேவையான கடன் உதவியை தக்க நேரத்தில் பெறவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3.17. 31-3-2004 அன்றுள்ள நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 12,48,538 கடன் அட்டைகள் வழங்கியுள்ளன. இவ்வட்டைகளுக்கு 2404.77 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**11. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்**

3.18. மத்திய அரசு, பயிர்க் காப்பீடு செய்வதற்காக, தேசிய வேளாண் காப்பீடு திட்டம் என்ற புதிய திட்டத்தை 1999 ஆம் ஆண்டு ராபி பருவத்திலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. மாநில அரசு மேற்படி திட்டத்தினை 2000 ஆம் ஆண்டு காரீப் பருவத்திலிருந்து



கடைப்பிடித்து வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் எவையேனும் இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சிகளாலோ, நோயினாலோ அழிந்துவிடும் நிலையில் அப்பயிர்களுக்கு காப்புறுதியும் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. மேலும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றவும், விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தவும் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. சாதாரணமாக காப்பீடு செய்யும் தொகை உத்தரவாத மகசூலுக்கு 100 சதவீதமும் கூடுதல் காப்பீடாக 150 சதவீதம் வரையும் காப்பீடு செய்யப்படுகிறது. கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் அடங்குவர்.

3.19. 2000–2001 ஆம் ஆண்டிற்கு, பயிர்களைக் காப்பீடு செய்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்கள் செலுத்திய பிரிமியம் தொகையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. அதற்கடுத்த ஆண்டுகளில் மானியத் தொகை படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. 2002–2003 ஆம் ஆண்டிற்கான மானியம் 30 சதவீதம் மற்றும் 2003–2004 ஆம் ஆண்டிற்கான மானியம் 20 சதவீதம் ஆகும். இம்மானியத் தொகையினை மத்திய அரசும், மாநில அரசும் சம அளவில் பகிர்ந்துகொள்கின்றன.

3.20. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டிய பயிர்களின் விவரங்கள் மற்றும் மண்டலங்கள் ஆகியன மாநில ஒருங்கிணைப்புக் குழுவால் நிர்ணயம் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், வறட்சிப் பகுதிகளில் உள்ள 1,36,817 விவசாயிகளுக்கு 51.66 கோடி ரூபாய் (மாநில அரசின் பங்கு ரூ.21.77 கோடி ரூபாய்) மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

3.21. மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள பண்ணைக் காப்பீடு திட்டத்தினை 2003-2004 ராபி பருவத்திலிருந்து தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் முன்னோடியாக செயல்படுத்த அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக வாடிப்பட்டி பகுதியில் 2003–2004 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் பயிரிடப்படும் நெல் III பயிர் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

3.22. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகள் அடங்குவர்:

**(அ) கட்டாய அடிப்படை**

அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியின் அறிவிக்கை செய்யப்பட்ட பயிருக்காக ஏதேனும் வங்கி / நிதி நிறுவனம் / அரசு நிறுவனம் ஆகியவற்றில் குறுகிய கால பயிர்க் கடன் வாங்கியுள்ள அனைத்து விவசாயிகள்.

**(ஆ) விருப்ப அடிப்படை**

இதில் சேர விருப்பம் தெரிவித்துள்ள மற்றைய (கடன் பெறாத) அனைத்து விவசாயிகள்

3.23. தற்போது கீழ்க்கண்ட பயிர்கள் இத்திட்டத்தின்கீழ் இடம்பெறுகின்றன:

(அ) நெல் (அரிசி)

(ஆ) கோதுமை

3.24. இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு:—

(i) தாங்கள் செலுத்திய தவணைக் கட்டணத் தொகையில் சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்தவரை 75% மானியம் மற்றும் மற்றைய விவசாயிகளைப் பொறுத்தவரை 50% மானியம் ஆகியவற்றை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

(ii) 100% தவணைக் கட்டணத் தொகைக்கு அதிகமான கேட்புகளை மத்திய அரசு வழங்கும்.

**12. கடன் வசூல் செய்தல்**

3.25 எந்தவொரு கடன் நிறுவனத்திற்கும் தாம் வழங்கிய கடன்களை தவணைத் தேதிக்குள் வசூல் செய்வதே தலையாய கடமையாகும். கூட்டுறவு கடன் நிறுவனங்களின் நிதிநிலைமை, கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதை பொறுத்துத்தான் அமையும். தவணை தவறிய கடன் அளவினை கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதிச்சுழற்சி செய்து வணிக விரிவாக்கம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு அதனால் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிவிடும் சூழ்நிலை உருவாகக் கூடும். தாம் பெற்ற கடனை தவணைத் தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான் அவர்களால் பருவ கால வேளாண்மைத் தேவைகளுக்குத் தொடர்ந்து மேலும் கடன் வசதி பெற இயலும். மேலும், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாபத்தில் இயங்கவும், நிலைத்து நிற்கவும் தவணை கடந்த கடன்களை அதிக அளவு வசூலிப்பது தேவையான ஒன்றாகும். வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி நேருவதும் கடனை அப்போதைக்கப்போது செலுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களுக்குத் தோன்றாததும் தவணை கடந்த கடன்கள் அதிகமாவதற்கு முக்கியக் காரணங்களாகும்.





3.26. கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| தேதி | கடன் நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில் தவணை தவறிய நிலுவையில் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-06-1999 | 3382.94 | 905.77 | 32.20 |
| 30-06-2000 | 3985.15 | 974.99 | 28.80 |
| 30-06-2001 | 4443.05 | 1157.70 | 31.40 |
| 30-06-2002 | 4861.49 | 1156.18 | 26.40 |
| 30-06-2003 | 5112.58 | 1855.88 | 40.85 |

3.27. கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் தவணை கடந்த நிலுவைத் தொகைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| தேதி | கடன் நிலுவைத் தொகை | தவணை கடந்த நிலுவைத் தொகை | நிலுவை கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-06-1999 | 907.31 | 233.46 | 53.0 |
| 30-06-2000 | 998.34 | 278.63 | 53.0 |
| 30-06-2001 | 1057.14 | 339.60 | 50.0 |
| 30-06-2002 | 1093.03 | 376.51 | 56.5 |
| 30-06-2003 | 1192.56 | 461.70 | 63.7 |

**13. ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம்**

3.28 நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், தவணை தவறிய

[2004 ஜூலை 31

கடன்கள் மற்றும் நீண்ட காலமாக உள்ள நிலுவைக் கடன்களை வசூலித்திட வழிவகுக்கவும் ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம் என்ற திட்டத்தை அரசு அறிவித்தது.

3.29 தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரை ரிசர்வ் வங்கி, மத்திய அரசுடன் கலந்தாலோசித்த பின் திருத்தியமைக்கப்பட்ட ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்படி 21-3-2000 அன்று மூன்றாண்டுகளுக்கு மேலாக தவணை தவறிய கடன்கள் மற்றும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்களை அடிப்படையாகக் கொண்டு கடன்கள் தீர்வு செய்யப்படுகின்றன. தனி நபர்களைப் பொறுத்தவரை மேற்கண்ட வங்கிகளில் பெறப்பட்ட கடன்கள் 10 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும், நிறுவனங்களைப் பொறுத்தவரை ரூ.10 கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரை, அவை அதிக அளவாக ரூபாய் 10 இலட்சம் வரை கடன் வழங்கலாம். இத்திட்டத்தின்கீழ் குறுகிய காலக் கடன் வழங்கப்பட்ட 13,499 நபர்களுக்கு ரூ.2564.47 இலட்சம் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரை இத்திட்டம் 31-7-2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்காக மத்திய அரசு / தேசிய கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி புதிய ஒரு "ஒரு முறை சரிகட்டுதல்" திட்டத்தை புகுத்தியுள்ளது. 31-3-2000 வரை செலுத்தப்படாத வாராக் கடன்கள் இத்திட்டத்தில் அடங்கும். 30-9-2004 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை 31-12-2004-க்கு முன் பரிசீலிக்கப்படும்.

### 14. விவசாயிகளுக்கு நிதியுதவி

3.30 கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட பருவ மாற்றங்களின் காரணமாக இம்மாநில விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்துவிட காலதாமதம் ஆன காரணத்தினால் குறுவைப் பயிர்கள் அனைத்தும் சேதமடைந்தன. போதுமான அளவு பருவ மழை பெய்யாததாலும், காவிரியில் போதுமான அளவு தண்ணீர் திறந்து விடப்படாததாலும், சம்பாப் பயிர்களும் சேதமடைந்தன. விவசாயிகளின் துயர் துடைத்து சீரமைப்பதற்காக இவ்வரசு பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி வகைக்காக அரசு 61.05 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு 244.77 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றுவதற்கு அனுமதி அளித்துள்ளது. அரசின் பங்காக ரூ.20 கோடி அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 4

### ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

4.1 ஒருங்கிணைந்த தேசிய கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் உள்ள அனைத்து கூட்டுறவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயம் மற்றும் அது சார்ந்த மீன் வளம், கோழி வளர்த்தல், பால் வளம், கைத்தறி, ஊரகத் தொழில் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த கூட்டுறவுகளின் உள் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும் அனைத்து நிலைகளிலும் கூட்டுறவுகள் கட்டுக்கோப்பாக இயங்கவும், கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவை ஏற்படுத்தி அவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்காக ஏற்கெனவே நிதியுதவி அளிக்கப்படும் இனங்கள் அல்லாது, உறுதியான உள்கட்டமைப்பினை வளர்ச்சியடையச் செய்தல், நடைமூலதனத்தை அதிகரித்தல் மற்றும் மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்காக விளிம்புத் தொகை உதவியும் அளிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கூட்டுறவுகளுக்கு மிகவும் பயனுள்ள ஒரு திட்டமாகும்.

4.2 புது தில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக நிதியுதவி (கடன்) வழங்குகிறது. இக்கழகம் பணியமைப்பு, பயிற்சி மற்றும் மனிதவள மேம்பாடு போன்றவற்றிற்காக ஆகும் செலவில் 50 சதவீதத்தை மானியமாக அளிக்கிறது.

4.3 தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது:

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | | காலம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | விருதுநகர் | | 1989–1995 | 862.51 |
| 2. | கடலூர் | ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டம் | 1992–1997 | 1506.97 |
| 3. | விழுப்புரம் | | | |
| 4. | கோயம்புத்தூர் | | 1995–2001 | 1080.99 |
| 5. | தருமபுரி | | 1995–2001 | 1160.25 |
| 6. | திருவண்ணாமலை | | 1996–2001 | 816.58 |
| 7. | காஞ்சிபுரம் | | 1998–2004 | 1123.88 |
| 8. | இராமநாதபுரம் | | 2000–2004 | 687.03 |

4.4 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், 2002 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

மொத்த ஒதுக்கீடு
(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | 1216.98 |
| 2. | தஞ்சாவூர் | 1101.09 |
| 3. | பெரம்பலூர் | 937.81 |
| 4. | திருவாரூர் | 1222.44 |

4.5 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களை அரசு தேர்வு செய்துள்ளது. இதற்கான திட்ட அறிக்கைகளுக்கு 30-01-2004 அன்று நடைபெற்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள், புது தில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

4.6 இந்நிலையில் இம்மாநிலத்தில் உள்ள 12 மாவட்டங்கள் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன. மேலும் தேனி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

4.7 அடுத்து வரும் மூன்றாண்டுகளில், சென்னையைத் தவிர மீதமுள்ள 14 மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை படிப்படியாக அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.





# அத்தியாயம் 5

## கூட்டுறவுகளின் வாயிலாக வேளாண் இடுபொருட்கள் விநியோகித்தல்

5.1 கூட்டுறவுகளின் முக்கியப் பணிகளில் விவசாயக் கடன்கள் வழங்குவது, உரம் மற்றும் பூச்சி மருந்து போன்ற வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்வது, வேளாண் பொருட்களை விற்பனை செய்வது, நுகர்வோர் பொருட்களை விநியோகம் செய்வது ஆகியன அடங்கும். தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரசாயன உரங்கள் விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியன மொத்த விற்பனை நிறுவனங்களாக செயல்படுகின்றன. இந்நிறுவனங்கள், இரசாயன உரங்கள் மற்றும் விதைகள், பூச்சி மருந்துகள் போன்ற விவசாய இடுபொருட்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் 4,355 தொடக்க வேளாண்மைச் கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்படும் 5,678 சில்லரை உர விற்பனைக் கடைகள் மூலமும், 82 வேளாண் உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமும் விநியோகம் செய்கின்றன. இப்பொருட்கள் சங்க அங்கத்தினர்களுக்கு அவர்கள் பயிர்க்கடன்களில் பொருட் பகுதியாகவும் மற்றும் அங்கத்தினர்கள் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு ரொக்க விற்பனை மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன. துடியலூர் கூட்டுறவு விற்பனை சேவைச் சங்கம் மேற்சொன்ன மூன்று நிறுவனங்களின் விற்பனை நடவடிக்கைகளுக்குத் துணைபுரிகிறது.

5.2. இந்நிறுவனங்கள் மூலமாக 2003-2004 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் பிற இடுபொருட்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | இரசாயன உரம் | விதை | பூச்சிக்கொல்லி மருந்துகள் | விவசாய உபகரணங்கள் |
|---|---|---|---|---|
| 2003-2004 | 57.81 | 1.86 | 1.10 | 0.22 |

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 6

### கூட்டுறவு, விற்பனை, பதனிடல் மற்றும் சேமிப்பு

*6.1.* தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் வேளாண் பொருட்கள் விற்பனை மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு விற்பனை இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்களது விவசாய அங்கத்தினர்களின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு, நியாயமான விலை கிடைப்பதற்கு ஏதுவாக அவற்றை பதனிட்டு சேமித்து வைத்து விற்பனை செய்வதில் உதவி புரிகின்றன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை நட்டத்தில் விற்காமல் இருப்பதை உறுதி செய்து வெளிச்சந்தையில் அவர்கள் தங்கள் பொருட்களை இலாபத்தில் விற்க வழிவகைகள் செய்வதே கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நோக்கமாகும்.

*6.2.* தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஒரு விற்பனை நிறுவனமாகும். இந்நிறுவனம் வேளாண் விளைபொருட்களான நெல், பருத்தி, மிளகாய், தனியா, பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்கிறது. இவற்றை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்ய இவ்விணையம் ஏற்பாடு செய்கிறது. விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலமும் கொள்முதல் நடைபெறுகிறது. உறுப்பினர் சங்கங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உதவிடும் வகையில் விவசாயிகளின் விளைபொருட்கள் கூட்டுக் கொள்முதல், முகவர் மூலம் கொள்முதல் மற்றும் தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணைய உதவியுடன் பிணை அடிப்படையில் கொள்முதல் ஆகிய முறைகள் மூலமாக் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுதவிர, மொத்த விற்பனையாளராகச் செயல்படும் இந்நிறுவனம் முன்னணி நிறுவனங்களிடமிருந்து இரசாயன உரங்களை வாங்கி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள ஏனைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக அதனை விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், திருவாரூர் மாவட்டம் பாமணி கிராமத்தில் உள்ள தனது சொந்த ஆலையில் உரம் உற்பத்தியையும் மேற்கொண்டு வருகிறது.



2004 ஜூலை 31]

*6.3* வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் பொருட்கள் ஆகியவற்றை சேமித்து வைப்பதற்காக, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன், இந்நிறுவனம் 36 கிடங்குகளை பல்வேறு இடங்களில் கட்டியுள்ளது. இவற்றின் மொத்தக் கொள்திறன் 27,640 மெட்ரிக் டன்கள் ஆகும். மேலும் வேளாண் இடுபொருட்களை எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவினை குறைக்கும் விதத்தில், தேவைப்படும் இடங்களில் 12,100 மெட்ரிக் டன் கொள்திறனுள்ள 21 கிடங்குகளை வாடகைக்கும் எடுத்துள்ளது. இவ்விணையத்திற்கு தமிழ்நாட்டில் 20 மண்டல அலுவலகங்கள் உள்ளன. மேலும் சென்னை பேசின் பாலம் என்னும் இடத்தில் 1,350 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஓர் குளிர்பதனக் கிடங்கினையும், கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தில் 2,500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட மற்றொரு குளிர்பதனக் கிடங்கினையும் நடத்தி வருகிறது.

### தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்

*6.4.* தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் திருவாரூரில் செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் தேவையை இவ்விணையம் பூர்த்தி செய்கிறது. இவ்விணையம் ஒரு அச்சுக்கூடத்தையும் நடத்திவருகிறது. மேலும் இவ்விணையம் இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை 14 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு விற்பனை செய்துவருகிறது. இவ்விணையம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட "ஆரூர் விதைகள்" என்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்று வருகிறது.

### நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*6.5.* நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டது. இக்கூட்டுறவுச் சங்கம் கலப்பு உரங்களைத் தயாரித்து அவற்றினை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது. மேலும், அதன் 29 விற்பனைக் கூடங்கள் மூலம் அது விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை விற்பனை செய்து வருகிறது.

[2004 ஜூலை 31

*6.6* 2003–2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்றைய விற்பனை இணையங்களும் விற்பனை செய்த விவசாய வேளாண் இடுபொருட்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | பொருள் | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் கையாண்டது | | இதர நிறுவனங்கள் கையாண்டது | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு (என்.பி.கே. டன்களில் | மதிப்பு (ரூ. இலட் சத்தில்) | அளவு (என்.பி.கே டன்களில் | மதிப்பு (ரூ. இலட் சத்தில்) | அளவு (என்.பி.கே டன்களில் | மதிப்பு (ரூ. இலட் சத்தில்) |
| 1. | இரசாயன உரங்கள் | 38332.00 | 4961.94 | 5996.248 | 818.80 | 44328.248 | 5780.74 |
| 2. | பாமணி உரக்கலவை உற்பத்தி (மெடன்னில்) | 1023.00 | 79.18 | – | – | 1023.00 | 79.18 |
| 3. | பாமணி உரக்கலவை 17:17:17 விற்பனை (மெடன்னில்) | 3321.250 | 274.71 | – | – | 3321.250 | 274.71 |
| 4. | பூச்சி மருந்து விநியோகம் | – | 11.38 | – | 98.25 | – | 109.62 |
| 5. | விதைகள் விற்பனை | – | 11.11 | – | 175.21 | – | 186.32 |
| 6. | விவசாய உபகரணங்கள் விற்பனை | – | 0.37 | – | 21.60 | – | 21.97 |

**வேளாண் விளைபொருட்கள் விற்பனை**

*6.7* இம்மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. தங்கள் எல்லைக்குட்பட்ட விவசாய அங்கத்தினர்களுக்கு வேளாண் இடுபொருட்களான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற்றை விநியோகம் செய்தல் மற்றும் விவசாய விளை பொருட்களின் போக்குவரத்து, பதனிடல், தரம் பிரித்தல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்வதுடன் அவற்றை அங்கத்தினர்கள் மிகுந்த ஆதாயம் பெறும் வகையில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் போன்றவை இவ்விற்பனைச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

*6.8* கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தமது செயல்பாடுகளை மேம்படுத்தி மேற்கண்ட நோக்கங்களை எய்துவதற்கு ஏதுவாக



2004 ஜூலை 31]

இச்சங்கங்களுக்கு விற்பனைக்கூடம், ஏலக்கூடம், உலர்கூடம், விவசாயிகளுக்கான ஓய்விடம், வண்டி நிறுத்துமிடம், லாரி நிறுத்துமிடம் போன்றவற்றை அமைப்பதற்கும், லாரி மற்றும் தரம் பிரிக்கும் கருவிகளை வாங்குவதற்கும் அரசு நிதி உதவி செய்கிறது. இவ்வாறு தமது விற்பனை நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் ரூ.4.30 இலட்சம் வீதம் ஐந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூ.21.50 இலட்சம் 2004–2005ஆம்ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

*6.9* இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் வேளாண் விளைபொருட்களை அவர்க்ள் அதிக லாபம் பெறும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலைக்கு பகிரங்க ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்வாறு பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்கு அவை செலுத்தி விடுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிற்கான குறியீடு ரூ.2.40 கோடி என நிர்ணயிக்கப்பட்டதில், 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வசூல் செய்த தொகை ரூ.2.23 கோடி ஆகும்.

**நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்பு**

*6.10* ஒருபுறம் உற்பத்தியாளர்களின் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளுக்கும் இடையே கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிற்கான விற்பனைக் குறியீடு ரூ.20.80 கோடி என நிர்ணயிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ரூ.19.64 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

[2004 ஜூலை 31

**விளைபொருட்களை ஈடாகப் பெற்று கடன் வழங்குதல்**

6.11 சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல இலாபம் பெற உதவும் வகையில், அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குத் தேவையான கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 24.00 கோடி ரூபாயில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 19.80 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பதப்படுத்தும் அலகுகள்**

6.12 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி அரைவை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மாவு ஆலைகள், பருப்பு ஆலைகள் போன்ற பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இவ்வலகுகள் பதனிடுதல் வசதிகளை விவசாயிகளுக்கு குறைந்த செலவில் செய்து தருகின்றன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மாநில அரசின் மூலம் இவ்வலகுகளுக்கு பங்கு மூலதனமாகவும், கடனாகவும், நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 23879.594 டன்கள் பொருட்கள் பதப்படுத்தப்பட்டுள்ளன.

**கிராமிய சேமிப்பு மற்றும் விற்பனைச் சங்கக் கிடங்குகள்**

6.13 தற்போதுள்ள கிடங்குகளின் எண்ணிக்கையும், அவற்றின் கொள்ளளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| எண்ணிக்கை | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு இலட்சம் மெ. டன்னில் |
|---|---|---|
| அ. ஊரகக் கிடங்குகள் | 4661 | 5.30 |
| ஆ. விற்பனைச் சங்கக் கிடங்குகள் | 456 | 2.03 |
| இ. நுகர்வோர் கிடங்குகள் | 161 | 0.92 |
| **மொத்தம்** | **5278** | **8.25** |



2004 ஜூலை 31]

# அத்தியாயம் 7

**நுகர்வோர் கூட்டுறவுகள்**

7.1 மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுகள் வெளிச்சந்தை விலையைக் கட்டுப்பாட்டில் வைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சில இன்றியமையாப் பொருட்களின் வெளிச்சந்தை விலைகள் உயரும்போது, நுகர்வோர்களுக்கு அப்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க, நுகர்வோர் கூட்டுறவுகள், இப்பொருட்களின் விற்பனையில் தலையிட்டு பொருட்களை வாங்கி இருப்பு வைக்கின்றன.

7.2 இம்மாநிலத்தின் நுகர்வோர் கூட்டுறவுகளின் கட்டமைப்பானது தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், தொடக்க நிலையில் மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகளை உள்ளிட்ட தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளையும் கொண்ட மூன்றடுக்கு அமைப்பாக இயங்கி வருகிறது.

**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

7.3 மாவட்ட மற்றும் தொடக்க அளவிலான நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலே தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் பணியாகும். ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும்போதோ அல்லது ஒரு பொருளின் சில்லறை விற்பனை விலை உயரும்போதோ, வணிக நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்காக, இவ்விணையம் அப்பொருளை இறக்குமதி செய்தோ அல்லது மொத்தமாக வாங்கியோ அவற்றை போதுமான அளவு இருப்பு வைக்கிறது. கூட்டுறவுகளின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதில், இவ்விணையம் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்கிறது. இவ்விணையம் பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிகளை வாங்கி விற்பதற்கு ஏற்பாடு செய்வதுடன், கூட்டுறவு அச்சகங்களுக்குத் தேவையான தாள்களையும் வாங்கி விற்பனை செய்கிறது.

[2004 ஜூலை 31

## நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

7.4 தற்போது மாநிலத்தில் 34 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும், 3550 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளும் இயங்கி வருகின்றன. நியாய விலைக் கடைகளை நடத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் இப்பண்டகசாலைகள், கட்டுப்பாடற்ற பொருட்களையும் பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றன. கடந்த ஆண்டுகளில் கட்டுப்பாடு பொருட்களை விற்பனை செய்ததற்கு குறைந்த அளவு விளிம்புத் தொகையே அனுமதிக்கப்பட்ட காரணத்தால், சில கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மிகவும் நலிவுற்ற நிலையில் உள்ளன. இவற்றை புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு நுகர்வோர் பொருட்களை நியாயமான விலைகளில் விற்பனை செய்து வருவது இக்கூட்டுறவு பண்டகசாலைகளின் மற்றொரு முக்கிய நடவடிக்கை ஆகும். 2003-2004 ஆம் ஆண்டில், இப்பண்டகசாலைகள் சில்லறை விற்பனை செய்த நுகர்பொருட்களின் அளவு ரூ.2172 கோடி ஆகும்.

7.5 நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளை புனரமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதிலும் குறிப்பாக திருச்சி சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையை சீரமைப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பண்டகசாலையின் பணியாளர்களை விருப்ப ஓய்வூதியத் திட்டத்தில் செல்ல அனுமதித்த நடவடிக்கை இப்புனரமைப்பின் ஓர் அங்கமாகும். 300 பணியாளர்களுக்கும் மேலாக விருப்ப ஓய்வூதியத் திட்டத்தில் வெளியேறியுள்ளனர். இதே போல் கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் மேலும் சில பணியாளர்களும் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையப் பணியாளர்களும் விருப்ப ஓய்வூதியத் திட்டத்தில் செல்ல அனுமதிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.6 பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரியும், 'கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு' என்னும் கொள்கையை நிலைநாட்டுவதற்காக கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:



2004 ஜூலை 31]

1. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிர் உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகள் துயர் துடைக்கவும், நீலகிரி தேயிலைக்கு தேவை மேம்படுத்தி நல்ல விலை கிடைப்பதை உறுதி செய்யவும் இண்டுகோசர்வ் (INDCOSERVE) மூலம் பதப்படுத்தப்பட்ட தேயிலை கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. இதுவரை 6924 டன்கள் தேயிலை 26412 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. பெருமளவில் விளம்பரம் செய்யாமலேயே குறிப்பிடத்தக்க அளவில் ஊட்டி தேயிலை விற்பனை செய்த கூட்டுறவுகளின் செயல்பாடு பாராட்டத்தக்கதாகும்.

2. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் குளியல் சோப்பு, சலவை சோப்பு போன்ற பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இப்பொருட்கள் கூட்டுறவுகளால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. இதுவரை கூட்டுறவு கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ள காதி பொருட்களின் மதிப்பு ரூ.278.87 இலட்சமாகும்.

3. சேலை மற்றும் வேட்டி உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க கைத்தறி சேலை மற்றும் வேட்டி ஆகியவற்றை கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. சேலை ஒன்றின் விலை ரூ. 40, வேட்டி ஒன்றின் விலை ரூ.30. 6-8-2002 முதல் 30-11-2003 வரை கூட்டுறவு கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை சேலை மற்றும் வேட்டி ஆகியவற்றின் மதிப்பு ரூ.21.82 கோடி ஆகும்.

4. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஆவின் நுகர்வோர்கள் பால் அட்டைகளை தங்கள் வசதிக்கேற்ப பெற்றுக்கொள்ள ஏதுவாக கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் சுயசேவை மையங்கள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் வாயிலாக இவ்வட்டைகளை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 53,854 பால் அட்டைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 8

## தனிவகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

*8.1 கூட்டுறவுத் துறையின்கீழ் சில தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் செயல்பாடுகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-*

## கூட்டுறவு அச்சகங்கள்

*8.2. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் மொத்தம் 26 அச்சகங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப் பணிகளையும், அரசு அலுவலகங்கள், அரசு சார் நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான அச்சுப் பணிகளையும் மேற்கொள்கின்றன.*

*8.3. 31-3-2004 அன்றுள்ளபடி, கூட்டுறவு அச்சகங்களில் மொத்தம் 11,611 உறுப்பினர்கள் இருந்தனர். இவற்றின் செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ.1.89 கோடி ஆகும். 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.21.76 கோடிக்கு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

## உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்

*8.4 ஏழை உப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கி வரும் 10 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், 5 சங்கங்கள் தனியாக ஆதிதிராவிட மக்களுக்காக மட்டுமே செயல்பட்டு வருகின்றன.*

*8.5 இச்சங்கங்களால் செயல்படுத்தப்படும், அயோடின் உப்பு தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு 'தாட்கோ' திட்டத்தின் கீழ் அரசால் நிதி உதவி அளிக்கப்படுகிறது.*

## தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

*8.6 தற்போது தமிழ்நாட்டில் 181 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரும்பாலான தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தருமபுரி, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய மண்டலங்களில் உள்ளன. அதிக அளவிலான தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், ஒப்பந்த வேலைகளை உருவாக்கி, வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்குத் தேவையான பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை மானியம் முதலான பல்வேறு இனங்களுக்கு மைய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.*



## இதர தனிவகைச் சங்கங்கள்

*8.7 முடிதிருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் போன்ற நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடிதிருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.*

## பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

*8.8 பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 16 சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளிலும் மீதமுள்ள 3 சங்கங்கள் மற்றைய பகுதிகளிலும் அமைந்துள்ளன. இச்சங்கங்கள் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் தவிர வீட்டுவசதிப் பொருட்கள் வாங்குவதற்கான கடனையும் வட்டியின்றி அளிக்கின்றன. இச்சங்கங்களில் 78,602 பழங்குடியினரும், 7181 பழங்குடியினரல்லாத மற்றவர்களும் அங்கத்தினர்களாக சேர்ந்துள்ளனர். பழங்குடியினருக்கு கடன் அளிப்பது தவிர, பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகள் வாயிலாக இன்றியமையாப் பொருட்களையும் வழங்கி வருகின்றன. இவை 101 கிராமக் கடைகளின் மூலம் இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. வனங்களில் உற்பத்தியாகும் சிறு பொருட்களைக் கொள்முதல் செய்து சேகரித்து விற்பனை செய்வதன் மூலம், உறுப்பினர்களுக்கு நியாயமான இலாபம் கிடைப்பதை இவை உறுதி செய்கின்றன.*

*8.9 இப்பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் (அரசால் அளிக்கப்படும்) எல்லாக் கடன்களுக்குமான வட்டி மானியம், கடன் வாங்கும் திறனை அதிகரிக்க பங்கு மூலதன உதவி மற்றும் கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள்*

ஆகியவற்றை விநியோகம் செய்வதனால் கிடைக்கும் போக்குவரத்து மானியம் ஆகியவற்றினால் பயன் பெறுகிறார்கள்.

8.10 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த மூன்றாண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | கடன் வழங்கிய தொகை | வேளாண் விளை பொருள் கொள்முதல் | வேளாண் விளை பொருள் விநியோகம் | சிறு வனப் பொருள் சேகரம் | நுகர் பொருள் விநி யோகம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 2001-2002 | 506.99 | 100.19 | 120.51 | 63.21 | 774.90 |
| 2002-2003 | 662.83 | 116.39 | 138.15 | 62.37 | 901.92 |
| 2003-2004 | 753.55 | 115.23 | 131.16 | 28.54 | 833.55 |

8.11 ஒவ்வோர் ஆண்டும், பழங்குடியினர் நலத் திட்டம் வாயிலாக பங்கு மூலதன மானியம், வட்டி மானியம் மற்றும் ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகனப் பராமரிப்பு போக்குவரத்து மானியம் ஆகியவற்றிற்காக அரசு நிதியுதவி செய்கிறது. கடந்த மூன்றாண்டுகளில் அரசால் வழங்கப்பட்ட மானியம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு | அரசால் வழங்கப்பட்ட மானியம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 90.00 |
| 2002-2003 | 60.00 |
| 2003-2004 | 75.00 |





# அத்தியாயம் 9

## கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

9.1 கூட்டுறவு இயக்கம் செம்மையாக வளர்வதற்கு, அதன் செயல்பாடுகள் செய்தி மற்றும் விளம்பரங்கள் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் இந்நடவடிக்கையை மேற்கொள்கின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தினர்களுக்கு இவற்றால் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

9.2 இவ்வொன்றியம் பத்திரிகைகள் வெளியிடுதல், அனைத்திந்திய கூட்டுறவு வார விழாக்களை மாநிலம் முழுதும் கொண்டாடுதல், அங்கத்தினர்களுக்கான கல்வி நிகழ்ச்சி, கருத்தரங்குகள் நடத்துதல், அரசு பொருட்காட்சிகளில் பங்கேற்பு செய்தல், சிறு படங்கள் மற்றும் படக்காட்சிகள் போன்றவற்றின் மூலமாக கூட்டுறவின் கொள்கைகளை விளம்பரப்படுத்துகிறது.

## கூட்டுறவு பயிற்சி

9.3 தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு பயிற்சி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் 11 நிறுவனங்கள் தன்னாட்சி பெற்றவை. மீதமுள்ள 9 நிறுவனங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மாணவர்களுக்கு கூட்டுறவு படிப்பில் பட்டயம் வழங்குவதற்காக 36 வாரங்களுக்கு கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சிகளை அளிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர, அனைத்து வகையான கூட்டுறவுகளின் பணியாளர்களுக்கும் பயன்படும் வகையில் அஞ்சல் வழிக் கல்வியும் நடத்தப்படுகிறது. இவற்றின் மூலம் ஆண்டுதோறும் சுமார் ஆயிரம் பணியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிறுவனங்கள் மற்றைய செயற்பதிவாளர்களின் (Functional Registrars) கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுகளின் பணியாளர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகளை அளித்து வருகின்றன.

## கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி

9.4 தமிழ்நாட்டில் தேசிய கூட்டுறவு பயிற்சிக் கழகத்தால் இரு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் சென்னையிலும்,

[2004 ஜூலை 31

மதுரையிலும் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனங்கள் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு, 36 வாரங்களுக்கு கூட்டுறவு மேலாண்மை பாடத் திட்டத்தில் உயர் பட்டயப் படிப்பு பயிற்சிகளை அளிக்கின்றன. ஆண்டுதோறும் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பயிற்சியினைப் பெற்று வருகின்றனர்.

**தொழிற் கல்வி**

9.5 தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று கூட்டுறவு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள், படித்து வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கின்றன. இக்கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலமாக ஆண்டுதோறும் சராசரியாக 300 மாணவர்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**கூட்டுறவு ஆராய்ச்சி**

9.6 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை, மதுரை, காமராஜர், பாரதியார் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சம் வைப்பீடு செய்து தனியே நிதியம் ஒன்று ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் கூட்டுறவு பாடத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்றன.

**நிதி ஆதாரம்**

9.7 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கீழ்க்கண்ட இரு நிதிகளை நிர்வகித்து வருகிறது:

1. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி
2. கூட்டுறவுக் கல்வி நிதி

அங்கத்தினர் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆண்டுச் சந்தா, பத்திரிகைகள் விற்பனை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்படும் இலாபப் பங்கு ஆகியவற்றின் வாயிலாக இவ்வொன்றியம் தனது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்கிறது.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 10

### 2004-05 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

10.1 ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு, அதிலும் குறிப்பாக பெண்களுக்கு, விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கு கடன் வழங்குவது கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகளின் நோக்கங்களில் ஒன்றாகும். கூட்டுறவு வங்கிகளிலிருந்து அதிக அளவு கடன் பெறுவதற்கு மக்களில் நலிந்த பிரிவினரை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களைத் தவிர, பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் விற்பனைச் சங்கங்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படுத்தவும், துறை அலுவலகங்களில் அதிக வசதியினை ஏற்படுத்தவும் 2004-05 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:

**(i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

10.2 கிராமப்புறங்களில் உள்ள நலிந்த பிரிவினரிடையே உள்ள பெண்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் கடன் வசதியைப் பெறுவதற்குத் தேவையான பங்கு மூலதனத்தை செலுத்துவதற்குக்கூட சிரமப்படுகின்றனர். எனவே, அவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கலாம் என கருதப்படுகிறது. இதனால், இவர்கள் வங்கிகளுக்கு செலுத்தும் மூலதனம் அதிகமாவதால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அதிகத் தொகைகள் கடன் பெற வழிவகுக்கும். சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் 2000 பெண் உறுப்பினர்களுக்கு, உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ.500/- வீதம் நிதி உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2004-05 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவும்.

**(ii) நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு அவர்கள் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

10.3 நகர்ப்புறம் மற்றும் புறநகரைச் (Semi-Urban) சார்ந்த பல்வேறு தரப்பட்ட மக்களுக்கு வீட்டினைப் பழுதுபார்த்தல் அல்லது

[2004 ஜூலை 31

விரிவுபடுத்துதல், சிறிய அளவிலான வியாபாரங்கள், பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துதல், குழந்தைகளின் கல்வி, சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் அமைத்தல் போன்றவைகளுக்கு நகரக் கூட்டுறவு வங்கிகள் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. இவ்வாறு கடன்கள் வழங்குவது உறுப்பினர்கள் செலுத்தும் பங்கு மூலதனத்துடன் தொடர்புடையதாக உள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்கள் தேவையான அளவிற்கு கடன் பெறுவதற்கு உரிய பங்கு மூலதனத்தை செலுத்த மிகவும் சிரமப்படுவதைக் கருத்திற்கொண்டு, இவ்வங்கிகளில் கூடுதலாக பங்குகள் செலுத்தி தங்கள் கடன் வாங்கும் சக்தியினை அதிகரிக்க ஏதுவாக நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா மூலதனக் கடன் வாயிலாக நிதியுதவி அளிக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1000 பெண் உறுப்பினர்கள் பயனடையும் வகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.500 வீதம் கடன் வழங்க ஏதுவாக 2004–05 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை மேம்படுத்த ஏதுவாக அவர்களுக்கு பங்கு மூலதனத்தை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்

10.4 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளைப் பொறுத்தவரை, அவ்வங்கிகளில் கடன் பெறுபவர்கள் அவர்கள் பெறும் கடன் தொகையில் 5 விழுக்காட்டினை பங்கு மூலதனமாக செலுத்தவேண்டும். வட்டம் / வட்டார அளவில் செயல்பட்டு வரும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் நீண்ட காலக் கடன் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்கள் பெரும்பாலும் வேலை இல்லாதவர்களாகவும், பொருளாதார நிலையில் நலிவடைந்தவர்களாகவும், ஏழைகளாகவும் இருக்கிறார்கள். எனவே, இவர்கள் மேற்படி வங்கிகளிலிருந்து கடன் வசதியைப் பயன்படுத்துவதற்கு பங்கு மூலதனத்தை செலுத்த மிகவும் சிரமப்படுகிறார்கள். கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுவதால் அதனை அவர்கள் அவ்வங்கிகளில் பங்கு மூலதனமாகச் செலுத்தி அவர்களது கடன் வாங்கும் சக்தியை அதிகரித்துக் கொள்ளலாம். எனவே, கூட்டுறவு தொடக்க வேளாண்மை



2004 ஜூலை 31]

மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 500 பெண் உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1000 வீதம் கடன் அளிக்க ரூ.5 இலட்சம் 2004-2005 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iv) கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு ஏதுவாக ஊனமுற்ற பெண்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குதல்

10.5 மத்திய அரசு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வணிக வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட அனைத்து வங்கிகள் வாயிலாக உடல் ஊனமுற்றோருக்கு பொருளதார ரீதியான மறுவாழ்வினை ஊக்குவிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. உடல் ஊனமுற்றோருக்காக பல மறுவாழ்வு நிலையங்கள் இருந்த போதிலும், அவைகள் அவர்களுக்கு பயிற்சி மட்டுமே அளித்து வருகின்றன. பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் தொழில் / வியாபாரத்தில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தினால் அப்பயிற்சி பயனுள்ளதாகும். உடல் ஊனமுற்ற பெண்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்வதால், அவர்களின் பொருளாதார நிலை திருப்திகரமாக இல்லை.

10.6 இந்நிலையில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள உடல் ஊனமுற்ற பெண்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடனுதவி வழங்குதல் மிகவும் அவசியமான ஒன்று. இவர்களுக்கு வட்டியில்லாக் கடனாக 500 ரூபாய் வழங்கப்படும். இதனை இவர்கள் 5 ஆண்டுகளுக்கு ரூ 100 வீதம் திரும்ப செலுத்த வேண்டும். கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடனுதவி பெற இத்தொகையினை அவர்கள் வங்கிகளில் மூலதனமாகச் செலுத்த வேண்டும். 1000 உடல் ஊனமுற்ற பெண்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.500/- வீதம் நிதியுதவி அளிக்க 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (v) புதியதாகத் தொடங்கப்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க மானிய உதவி

10.7 நியாய விலைக் கடைகள், தேவைப்படும் நேரங்களில் அவ்வப்போது புதிதாகத் திறக்கப்பட்டு வருகின்றன. இக்கடைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ஏதுவாக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 1–6–99 முதல் 31–7–2003 வரை சுமார் 350 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. எனவே 2004–2005 ஆம் ஆண்டு இந்த 350 கடைகளுக்கும் தளவாடச் சாமான்கள்

வாங்குவதற்காக ரூ. 15 இலட்சம் மானியத் தொகையாக அளிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(vi) நியாய விலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்குவதற்கு மானியம் அளித்தல்**

10.8 தற்போது, வட்ட அளவில் செயல்படும் முதன்மைச் சங்கங்கள் (Lead societies) அரிசி மற்றும் சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து, இணைப்புச் சங்கங்களால் (Link societies) நடத்தப்பட்டு வரும் தொலைதூரத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு விநியோகித்து வருகின்றன. ஆனால் இந்நடைமுறை மண்ணெண்ணெய் விநியோகத்தில் பின்பற்றப்படுவதில்லை. இதற்குப் பதிலாக நியாய விலைக் கடைகளை நடத்தும் சங்கங்களே மண்ணெண்ணெயை எடுத்து, அவற்றை கடைகளுக்கு விநியோகித்து வருகின்றன.

10.9 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் 15,966 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கடைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இவை வட்டத் தலைமையகத்திலிருந்து நெடுந்தொலைவில் உள்ளன. எனவே மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகளிடம் அதனை எடுத்து கடைகளுக்குக்கொண்டு செல்ல இச்சங்கங்கள் பெரிதும் சிரமப்படுகின்றன. மேலும், மண்ணெண்ணெயை போதுமான அளவு எடுத்து, இருப்பு வைக்க ஏதுவாக அதிக எண்ணிக்கையில் மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்க இச்சங்கங்களின் நிதி நிலைமை இடம் கொடுப்பதில்லை. போதுமான அளவு இருப்பு இல்லாதிருந்தால் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதில் பாதிப்பு ஏற்படும்.

10.10 இச்சிரமங்களை நிவர்த்தி செய்து மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்குவதற்காக நியாய விலைக் கடைகளுக்கு மானியம் அளிக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2004–05 ஆம் ஆண்டிற்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(vii) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான நிதியுதவி**

10.11 மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாய இடுபொருட்களான விதைகள், உரங்கள், பூச்சி



மருந்துகள் போன்றவற்றை சங்க எல்லைக்குட்பட்ட விவசாய அங்கத்தினர்களுக்கு வழங்குவது; மற்றும் அங்கத்தினர்களுக்குப் பயன்படும் வகையில் அவர்களுடைய விவசாய விளைபொருட்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல், பதப்படுத்தல், தரப்படுத்துதல், விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு உதவுதல் ஆகியன இவ்விற்பனைச் சங்கங்களின் நோக்கங்கள் ஆகும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக விற்பனைக்கூடம், ஏலக்கூடம், உலர்கூடம், விவசாயிகள் ஓய்வு இடம், வண்டிகள் நிறுத்தும் இடம், லாரிகள் நிறுத்தும் இடம் ஆகியவை அமைப்பதற்கும், லாரி மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் அரசு நிதி உதவி அளிக்கிறது.

10.12 தற்போது 2004–05 ஆம் ஆண்டிற்கு 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் கடனாக தலா ரூ.2.10 இலட்சமும், மானியமாக தலா ரூ.2.20 இலட்சமும், மொத்தம் ரூ.21.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(viii) கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர்களின் அலுவலகங்களுக்கு நிகரி வசதி ஏற்படுத்துதல்**

10.13 கூட்டுறவுகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்க ஏதுவாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மாவட்ட அளவிலான சார்நிலை அலுவலகங்களை அடிக்கடித் தொடர்புகொண்டு தேவையான விவரங்களை உடனடியாக சேகரிக்க வேண்டியுள்ளது. இவ்விவரங்களை காலதாமதமின்றி அனுப்புவதற்கு மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கு நிகரி (FAX) வசதி ஏற்படுத்துவது முற்றிலும் அவசியமாகும். தற்போது இன்னும் 11 மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கு மட்டுமே நிகரி வசதி இணைப்பு அளிக்கப்படவில்லை. எனவே 11 மண்டல இணைப் பதிவாளர்களுக்கும் நிகரி வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இந்நோக்கத்திற்காக ரூ.3.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ix) சென்னையிலுள்ள இணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு அமைத்தல்**

10.14 சென்னை நகரத்தின் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்க ஏதுவாக இரண்டு இணைப் பதிவாளர்

[2004 ஜூலை 31

அலுவலகங்கள் உள்ளன. இதில், இணைப் பதிவாளர் 2 (பொது விநியோகத் திட்டம்) அலுவலக கட்டுப்பாட்டின்கீழ் 4 துணைப் பதிவாளர்கள் (பொது விநியோகத் திட்டம்) அலுவலகங்கள், 2 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 18 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் ஆகியன இயங்கி வருகின்றன. ஒவ்வொரு நாளும் பொது விநியோகத் திட்டம் சம்பந்தமான பல்வேறு புள்ளிவிவரங்கள் இவ்வலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு தொலைபேசி மூலம் அனுப்பப்படுகின்றன. ஊட்டி தேயிலை விற்பனை, ஆவின் அட்டை விற்பனை ஆகியவற்றின் விவரங்களை வங்கிகளின் பல்வேறு கிளைகளிலிருந்தும், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் சுயசேவைப் பிரிவு கிளைகளிலிருந்தும் தொலைபேசி மூலம் சேகரிக்க வேண்டியுள்ளது. தற்போது இவ்விவரங்கள் இணைப் பதிவாளர் 1 (பொது விநியோகத் திட்டம்) அலுவலகத்திலுள்ள தொலைபேசி மூலமாகவே சேகரிக்கப்பட்டு வருகின்றன. இது காலதாமதத்தை ஏற்படுத்துகிறது. மேலும் அவசர நேரங்களில் சிரமங்களையும் உண்டுபண்ணுகிறது. இந்நிலையில் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் இணைப் பதிவாளர் 2 (பொது விநியோகத் திட்டம்) அலுவலகம் செம்மையாக செயல்படவும் இணைப் பதிவாளர் 2 (பொது விநியோகத் திட்டம்) அலுவலகத்திற்கு ஒரு தொலைபேசி இணைப்பு மிகவும் அவசியமாகும்.

10.15 இந்நிலையில் இத்திட்டத்திற்காக 2004–05 ஆம் ஆண்டில் 0.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(x) தலைமைச் செயலக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உபயோகத்திற்காக கணினி மற்றும் இதர பாகங்கள் வாங்குதல்**

10.16 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தலைமைச் செயலகத் துறைகளில் முக்கியமான ஒரு துறையாகும். இத்துறை பொதுமக்கள் நலன் காக்கும் பல முக்கியக் கோப்புகளைப் பரிசீலிக்கும் ஒரு துறையாகும். இத்துறையின் கணினி அறையில் நான்கு கணினிகள் உள்ளன. இவை துறைத் தலைவர்களிடமிருந்து கடனாகப் பெற்றவையாகும். இத்துறைக்குச் சொந்தமாக கணினி ஏதுமில்லை. தகவல் தொழில்நுட்பம் முன்னணியில் இருக்கும் இந்நேரத்தில், கணினிகளின் உபயோகத்தினை அதிகப்படுத்துவது அவசியமான ஒன்றாகும். எனவே கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உபயோகத்திற்காக கணினி மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 11

### உணவு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கல்

11.1 நம் நாடு விடுதலையடைந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்தக் காலக்கட்டத்தில் பல துறைகளில் கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. திட்டமிடுதல் மற்றும் பல்வேறு வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக மக்களின் பொருளாதார நிலை பொதுவாக மேம்பாடு பெற்றுள்ளபோதிலும், வெவ்வேறு தரப்பு மக்களிடையே பெருமளவு பொருளாதார ஏற்றத்தாழ்வு இன்னமும் உள்ளது. வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களிடையே பசிப்பிணியும், சத்துக்குறைவும் தொடர்ந்து இருந்து வருகின்றன. வறுமைக்கோட்டிற்கு மேல் வாழ்கின்றவர்களில் குறைந்த வருவாய் உள்ள மற்றொரு பிரிவினர் தங்களுக்குத் தேவையானவற்றில் ஒரு பகுதியை மட்டுமே வெளிச்சந்தையில் எளிதில் வாங்கக்கூடிய தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வெளிச்சந்தையில் விலை உயர்வுகளால் பாதிப்படைகின்றார்கள். சமுதாயத்திலுள்ள இத்தகைய ஏழை எளிய நலிவுற்ற மக்களின் நலனை எப்பொழுதும் மனதில் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அத்தகைய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்த பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளார்கள். எனவே அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பதையும் நலிந்த பிரிவினருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக தேவையான அளவு தரமான உணவு கிடைக்கச் செய்வதையும் இந்த அரசு உணவுக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

11.2 உணவுக் கொள்கை என்பது பொதுவாக உணவு தானியங்களின் உற்பத்தி, கிடைக்கின்ற நிலை, வெளிச்சந்தையில் நிலவும் விலை ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்துள்ளது. நம் நாட்டில் வேளாண்மைத் துறையில் மிகப்பெரிய சாதனை எய்தப்பட்டுள்ளது. தேசிய அளவில் பார்த்தோமானால் உணவு உற்பத்திப் பற்றாக்குறை என்ற நிலையிலிருந்து தன்னிறைவு நிலை அல்லது சிறிதளவு உபரி உற்பத்தி என்ற நிலையை எட்டியுள்ளது.

11.3 ஆனால் இது ஏழை மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பதாகச் சொல்ல முடியாது. எனவே கொள்கைக் குறிக்கோளை அடைவதற்கான அரசின் செயல்பாடுகள் பின்வரும் திட்ட அணுகுமுறைகளை உள்ளடக்கியதாகும்:—

1) பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்தில் இன்றியமையாப் பொருட்கள் போதிய அளவுக்கு எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்;

2) எளிதில் அணுகத்தக்க இடங்களில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இன்றியமையாப் பொருட்களை தேவைக்கு ஏற்ற அளவில் வழங்குவதை உறுதி செய்தல்;

3) சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் இன்றியமையாப் பொருட்களை வாங்கக் கூடிய வகையில் விலையை உறுதி செய்தல்.

11.4 வெளிச்சந்தையில் இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் கண்காணித்தல், அளவுக்கதிகமாக விலை ஏற்றம் காணப்பட்டால் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கொள்முதல், முடை இருப்பு வைத்தல், ஏழை எளிய மக்களுக்கு எப்பொழுதும் எல்லா இடங்களிலும் போதிய அளவில் இன்றியமையாப் பண்டங்கள் கிடைப்பதற்காக பொது விநியோக ஏற்பாட்டின் வாயிலாக இன்றியமையாப் பொருட்களை வழங்குதல் போன்ற பணிகள் எல்லாம் மேற்சொன்ன திட்ட அணுகுமுறைகளில் அடங்குகின்ற அரசின் பணிகளாகும்.

11.5 உணவுப் பாதுகாப்பு தொடர்புடைய பணிகளை மாநில அரசும், மத்திய அரசும் இணைந்தும் தனித்தனியாகவும் மேற்கொண்டு வருகின்றன.

11.6 தேசிய அளவில் கொள்முதல் மற்றும் முடை இருப்பு வைத்தல் ஏற்றுக்கொள்ளத்தக்க தரமான இன்றியமையாப் பண்டங்களை போதிய அளவில் வெளிச்சந்தையிலும் பொதுவிநியோகத் திட்டத்திற்காக மாநிலங்களுக்கும் கிடைக்கச் செய்தல் ஆகியவை மைய அரசின் கடமைகள் ஆகும். மாநில அரசு பொது விநியோக ஏற்பாட்டைச் செயல்படுத்தி வருகிறது. வெளிச்சந்தை விலையை முறைப்படுத்துதல், விலைக் கட்டுப்பாடு முதலிய பணிகள் இந்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயற்படுத்தும் பணிகளாகும்.

11.7 அனைத்து குடும்பங்களுக்கும் இன்றியமையாப் பண்டங்களை குறைந்த விலையில் வழங்கி வருவது நமது மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் பொது விநியோகத் திட்டத்தின் தனிச்சிறப்பாகும். இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 3-வது



பிரிவின் அட்டவணையில் இன்றியமையாப் பொருட்களாக பல பொருட்கள் பட்டியலிடப்பட்டுள்ளபோதிலும், அவற்றில் பெரும்பாலான பொருட்கள் நியாயமான விலைகளில் வெளிச்சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றன. எனவே, அரிசி (நமது மாநில மக்களின் முக்கிய உணவு), கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் (தட்டுப்பாடு உள்ள எரிபொருள்) ஆகிய இன்றியமையாப் பொருட்கள் நமது பொது விநியோகத் திட்டத்தின்படி அவ்வப்பொழுது அரசு நிர்ணயிக்கின்ற விலைகளில் குறிப்பிட்ட அளவுகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஊட்டி தேயிலை, அயோடின் சத்து நிறைந்த உப்பு ஆகிய இதரப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

11.8 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்திய அரசு பொது விநியோக ஏற்பாட்டின் வாயிலாக வழங்குவதற்காக அவ்வப்போது வரையறை செய்யப்பட்ட ஒரே சீரான விலைகளில் உணவு தானியங்களான அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்களை ஒதுக்கீடு செய்து வந்தது. அதன் பின்னர் மைய அரசின் இன்றியமையாப் பொருட்கள் வழங்கும் திட்ட அணுகுமுறை நலிந்த பிரிவினருக்கு கூடுதல் பயன் வழங்குவதென்ற குறிக்கோளைக் கொண்டதாக அமைந்தது. மலைவாழ் பகுதிகளிலும், வறட்சி பாதிப்பு உள்ள பகுதிகளிலும் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்களுக்கு மற்றவர்களைவிட மிகவும் குறைந்த விலையில் இன்றியமையாப் பண்டங்களை வழங்குவதற்காக பொது விநியோகத் திட்டம் 1991 ஆம் ஆண்டில் இந்திய அரசால் திருத்தியமைக்கப்பட்டது. இத்திட்டம் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் 1-6-1997 ஆம் தேதி முதல் சீரமைத்து வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தை (Targeted Public Distribution System) மைய அரசு கொண்டுவந்தது. இத்திட்டத்தின்கீழ் வருமானம் மற்றும் பிற அளவுகோல்களை அடிப்படையாக வைத்து அனைத்து குடும்பங்களிலும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள், வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் என வகைப்படுத்தி அதன்படி மைய அரசு, குடும்பம் ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு 3.5 கிலோ என்ற ஒரே சீரான அளவில் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் 48.63 இலட்சம் குடும்பங்களுக்கு கிலோ ரூ.5.65 என்ற விலையிலும், வறுமைக்கோட்டிற்கு மேலே வாழும் 87 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.8.30 என்ற விலையிலும் அரிசி ஒதுக்கீடு செய்து வருகிறது. வறியோர் நலன்காக்கும் பொதுவிநியோக ஏற்பாடு பின்னர் மேலும் சீரமைக்கப்பட்டு அந்தியோதயா அன்னயோஜனா என்கின்ற

திட்டத்தின் மூலம் கிலோ ரூ.3 என்கிற மிகக் குறைந்த விலையில் மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு (7.45 இலட்சம்) ஏனைய குடும்பங்களுக்கு வழங்கப்படுவதைப்போன்று மாதம் ஒன்றுக்கு 35 கிலோ என்ற அடிப்படையில் மைய அரசு அரிசி ஒதுக்கீடு செய்து வருகிறது. முந்தைய மாநில அரசு தேசிய அளவிலான வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்திற்கு ஏற்ப மாநில பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கும் வாய்ப்பை நழுவவிட்டது. ஏழை எளிய குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நம்முடைய மாநிலத்தில் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டார். இத்திட்டம் தற்பொழுது மேலும் விரிவுபடுத்தப்பட்டு 3.73 இலட்சம் பயனீட்டாளர்கள் கூடுதலாக இம்மாநிலத்தில் பயன்பெறுகின்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயனீட்டாளர்கள் கண்டறியும் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டு இக்கூடுதல் குடும்பங்களுக்கான அரிசி ஒதுக்கீடு மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

11.9 இவ்வாறாக தற்பொழுது நமது மாநிலத்தில் ஏற்கெனவே உள்ள பொது விநியோகத் திட்டத்துடன் அந்தியோதயா அன்னயோஜனா, விரிவுபடுத்தப்பட்ட அந்தியோதயா அன்னயோஜனா ஆகிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றோம். நமது மாநில பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வருமான அடிப்படையில் வறுமைக்கோட்டிற்கு மேலே வாழும் குடும்பங்கள், வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்கள் என்கின்ற பாகுபாடுகள் எதுவும் இல்லை. மாநிலத்தில் குடியிருக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் அவற்றின் வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் 1998 ஆம் ஆண்டில் விருப்ப அடிப்படையிலான குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரிசி மற்றும் ஏனைய இன்றியமையாப் பொருட்களை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளவர்களுக்கு தனி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரிசி நீங்கலாக ஏனைய பொருட்கள் பெற விருப்பம் தெரிவித்துள்ளவர்களுக்கு வேறு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரிசி, சர்க்கரை வழங்கும் அளவு ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள உறுப்பினரின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். உருளை எரிவாயு (cylinder) எண்ணிக்கையின் அடிப்படையிலும் மற்றும் ஊரகப்பகுதி, நகர்ப்பகுதி, மலைப்பகுதி ஆகியவற்றின்



அடிப்படையிலும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதைத்தவிர மண்ணெண்ணெய் மட்டும் பெறுகின்ற காவல் துறை பணியாளர்களுக்கு காக்கி நிற அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றியமையாப் பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு உள்ள காலங்களில் அனைத்துக் குடும்பங்களுக்கும், ஏழை, எளிய மக்களுக்கு எப்பொழுதும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பொது விநியோகத் திட்டம் முக்கியப் பங்காற்றி வருகின்றது. இன்றியமையாப் பொருட்களை எளிதில் வாங்கக்கூடிய வகையில் கிடைக்கச் செய்வதை உறுதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கை விவரங்கள் மற்றும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**இன்றியமையாப் பொருட்கள் கிடைக்கும் அளவு (Availability)**

11.10 தொண்ணூறுகளில் வர்த்தகக் கட்டுபாடுகள் தளர்த்தப்பட்டு தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகம் என்கின்ற நிலைக்கு நம் நாடு சென்றுகொண்டிருந்தது. அதனால் நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக மாறியது. இம்மாநிலத்தில் விவசாயிகளுக்கு தாராளமயமாக்கலின் நன்மைகள் கிடைக்கும்பொருட்டு அரசு, நெல் மற்றும் அரிசி வர்த்தக லெவி முறை மற்றும் நெல் ஏகபோகக் கொள்முதல் ஆகிய உள்நாட்டு வர்த்தகக் கட்டுப்பாடுகளை முறையே 25-1-1992 மற்றும் 1-5-1993 முதல் நீக்கியது. 2001 ஆம் ஆண்டில் உணவு நிலைமையை முழுமையாக ஆய்வு செய்த பின்னர் பின்வரும் நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொண்டது:—

(1) மாநிலத்திற்கு வெளியே TKM–9 ரக நெல்லைக் கொண்டு செல்ல 100 விழுக்காடு லெவி வழங்கும் கட்டுப்பாடு 31-7-2001 முதல் நீக்கப்பட்டது.

(2) மாநிலத்திற்கு வெளியே அனைத்து ரக நெல் மற்றும் அரிசி எடுத்துச் செல்வதற்கு இருந்த லெவி முறை 11-9-2001 முதல் நீக்கப்பட்டது.

(3) அரைவை ஆலை நெல்/அரிசி உரிமையாளர்கள், மொத்த விற்பனை/சில்லறை விற்பனை வர்த்தகர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இருப்பு வரையறை முதலில் இரட்டிக்கப்பட்டது. அதன் பின்னர் 17-4-2003 ஆம் நாள் முதல் முழுமையாக நீக்கப்பட்டது.

4) அரிசி, நெல், சர்க்கரை, கோதுமை போன்றவற்றின் வர்த்தகத்திற்கு உரிமம் பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு 17-4-2003 ஆம் நாள் முதல் கைவிடப்பட்டது.

11.11 விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை எவர் ஒருவருக்கும் தங்களுக்குச் சாதகமான விலையில் விற்பனை செய்ய இத்தகைய நடவடிக்கைகள் ஒருபுறம் பெரிதும் உதவின. மற்றொருபுறம் பிற மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு உணவு தானியங்கள் தங்குதடையின்றி வருவதற்கு உதவி புரிந்தது. இதன் விளைவாக, கடந்த இரண்டொரு ஆண்டுகளில் சந்தித்த கடுமையான வறட்சி அதைத் தொடர்ந்து உணவு உற்பத்திச் சரிவு ஆகியவை இருந்தபோதிலும், நமது மாநிலத்தில் வெளிச்சந்தையில் அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவை தட்டுப்பாடின்றி கிடைக்கின்றது. மண்ணெண்ணெய் தேசிய அளவில் தட்டுப்பாடுள்ள எரிபொருள் என்பதால் மண்ணெண்ணெய் மீதான வர்த்தகக் கட்டுப்பாடுகள் இன்னமும் உள்ளன. இந்திய அரசு, இணையான விற்பனை திட்டத்தின் மூலம் (Parallel Marketing) வெளிச்சந்தையில் வெள்ளை நிற மண்ணெண்ணெய் கிடைக்க வழிவகை செய்துள்ளது.

11.12 இம்மாநிலத்தில் இயங்கிவரும் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஒவ்வொரு மாதமும், அவர்கள் பெறத் தகுதியான அளவின்படியும், பொருட்களை அவர்கள் வாங்குகின்ற அளவின்படியும், கீழ்க்கண்ட அளவில் இன்றியமையாப் பொருட்கள் தேவைப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| அரிசி | 2,00,000 | மெட்ரிக் டன் |
| கோதுமை (விற்பனையாகும் அளவு அடிப்படையில் | 5,000 | மெட்ரிக் டன் |
| சர்க்கரை | 25,500 | மெட்ரிக் டன் |
| மண்ணெண்ணெய் | 73,000 | கிலோ லிட்டர் |

இவை தவிர, நலத் திட்டப் பணிகளுக்கு மேலும் 25,000 மெட்ரிக் டன் அரிசி ஒவ்வொரு மாதமும் தேவைப்படுகிறது.

11.13 அக்டோபர், 2002 வரையில் இம்மாநிலம், பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் பெரும்பங்கு அரிசியை, மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் செய்து பின்னர் அரிசியாக மாற்றுவதன் மூலம் பெற்றுவந்தது. மீதம் தேவைப்பட்ட அரிசி மட்டும் மைய அரசின் ஒதுக்கீட்டின் மூலம் ஈடுசெய்யப்பட்டது. 1998 ஆம் ஆண்டு வரையில் மைய அரசிடமிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு மிகக் குறைவே ஆகும்.



அதன் பின்னர் மைய அரசின் ஒதுக்கீடு (central pool) கணிசமாக உயர்ந்துள்ளது. தற்பொழுது மைய அரசு கீழ்க்கண்ட அளவில் மாதாமாதம் அரிசி ஒதுக்கீடு செய்துவருகின்றது:—

(மெட்ரிக் டன்னில்)

| | |
|---|---|
| வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள் | 3,05,665 |
| வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் | 1,45,196 |
| அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் | 25,002 |
| இதர நலத் திட்டப் பணிகள் | 19,116 |
| மொத்தம் | 4,94,979 |

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி முழுவதும் மைய அரசின் ஒதுக்கீட்டின் மூலம் பெற முடியும். இருப்பினும் நமது மாநில விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ் நாடு முழுவதற்கும் ஒரேபோன்று மைய அரசு நிர்ணயித்துள்ள தர விதிகள் 1-10-2002 முதல் பின்பற்றப்படுகிறது. இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக இவ்வாறு கொள்முதல் செய்து அரிசியாக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்கு மைய அரசு செய்துவரும் ஒதுக்கீட்டின் ஒரு பகுதி நமது மாநிலத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக கொள்முதல் செய்யப்படும் இம்முறையின் மூலம் மைய அரசின் அரிசி வழங்கல் விலைக்கும் மாநிலத்துக்குள் கொள்முதல் செய்யப்படும் அரிசிக்காக மைய அரசு நிர்ணயித்துள்ள பொருளாதார விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை மைய அரசு மாநில அரசுக்கு அளிக்கின்றது. இத்திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்து 2003 டிசம்பர் வரை பொது விநியோகத் திட்டத்திற்குப் பயன்படுத்திய அரிசியின் வித்தியாச விலையில் 95 விழுக்காடு ரூ.15.82 கோடி மைய அரசிடமிருந்து பெறப்பட்டது. சம்பா 2004 பருவத்தில் தீவிர தண்ணீர்த் தட்டுப்பாடும் விளைச்சல் குறைவும் ஏற்பட்டபோதிலும் 3.09 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தற்காலிகமாக தரத் தளர்வுக்கு மைய அரசின் இசைவு பெறப்பட்டதாலேயே இவ்வளவு நெல் கொள்முதல் செய்ய முடிந்தது.

11.15 நமது மாநில அரசு ஏற்கெனவே வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்காக மைய அரசு ஒதுக்கும் உணவு தானியங்கள் முழுவதையும் அரிசியாகப் பெற விருப்பம் தெரிவித்தது. எனவே, மைய

[2004 ஜூலை 31

அரசு மாதமொன்றுக்கு 10,000 மெட்ரிக் டன் கோதுமை வறுமைக்கோட்டிற்கு மேலுள்ளவர்களுக்கான விலை வீதத்தில் ஒதுக்கீடு செய்கிறது. கோதுமை தேவை குறைவாக இருப்பதனால், பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படுவதைவிட இந்த ஒதுக்கீடு கூடுதலாகவே உள்ளது. மைய அரசு மதிப்பீடு செய்தபடி இம்மாநிலத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மைய அரசு ஒதுக்கீடு செய்கிற சர்க்கரையின் அளவு மாதம் ஒன்றுக்கு சராசரியாக 10,820 மெட்ரிக் டன்கள் ஆகும். இதற்கு முன்பு வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை கூடுதலாக இருந்ததால், குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளிலிருந்து சர்க்கரை வாங்கும் அளவு கூடுதலாக இருந்தது. எனவே லெவி அல்லாத சர்க்கரையை வாங்கி கூடுதல் தேவை நிறைவு செய்யப்பட்டது. பின்னர் வெளிச்சந்தையில் விலைச் சரிவு ஏற்பட்டபோது பொதுவிநியோகத் திட்ட சர்க்கரை நுகர்வு அளவும் குறைந்தது. தற்பொழுது வெளிச்சந்தையில் சர்க்கரை விலை சற்று ஏறியுள்ளதால் பொது விநியோகத் திட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களின் சர்க்கரை நுகர்வு அளவு மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டைவிட சிறிது கூடுதலாக உள்ளது.

11.16 மண்ணெண்ணெய் தேசிய அளவில் பற்றாக்குறை உள்ளதால் மண்ணெண்ணெய் வர்த்தகத்தை மைய அரசு முறைப்படுத்துகின்றது. இம்மாநிலத்திற்கு மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் 58,392 கிலோ லிட்டர் ஆகும். இம்மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் உருளை எரிவாயு இணைப்பைக் கணக்கில் கொண்டு மைய அரசு கீழே குறித்துள்ள அட்டவணைப்படி ஒதுக்கீட்டை குறைத்துக்கொண்டே வருகிறது:—

| ஆண்டு | ஒதுக்கீடு கிலோ லிட்டரில் |
|---|---|
| 1-4-2000 முதல் | 77,108 |
| 1-4-2001 முதல் | 67,876 |
| 1-4-2002 முதல் | 62,400 |
| 1-4-2003 முதல் | 60,144 |
| 1-4-2004 முதல் | 58,392 |



2004 ஜூலை 31]

11.17 எனவே, மைய அரசு ஒதுக்கீடு செய்யும் மண்ணெண்ணெயை குடும்ப அட்டைதாரர்களுக்குப் பகிர்ந்தளிப்பது மட்டுமே மாநில அரசின் பணி ஆகும்.

11.18 ஊட்டி தேயிலையும், அயோடின் கலந்த உப்பும் அதிகப்படியாகக் கிடைக்கிறது. நீலகிரி மாவட்ட சிறுதேயிலை விவசாயிகளின் துயர்துடைக்க ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்படுகிறது. அயோடின் கலந்த உப்பு முன்கழுத்து கழலை நோய் தடுப்புக்காக விற்கப்படுகிறது.

11.19 இன்றியமையாப் பொருட்கள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் கண்காணிப்பும், விற்பனை முறைப்படுத்தலும் ஒன்றாகும். 1955 ஆம் ஆண்டு இன்றியமையா பண்டங்கள் சட்டத்தின்கீழ் சில இன்றியமையாப் பண்டங்களின் வணிகத்தைக் கட்டுப்படுத்த / முறைப்படுத்த கீழ்க்கண்ட ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன:—

1. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
2. 1977 ஆம் ஆண்டு பயிறுவகைகள்(சேமிப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணை.
3. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக் காட்டி வைத்தல் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல்) ஆணை.
4. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தரம் நிர்ணயம்) ஆணை.
5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
6. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
7. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

[2004 ஜூலை 31

8. 2000 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

9. 1993 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்சவிலை நிர்ணயம்) ஆணை.

10. 1998 ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை.

11. 1998 ஆம் ஆண்டு சமையல் எண்ணெய்களை உறையிடுதல் (ஒழுங்குமுறை) ஆணை. (நல்லெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றிற்கு 31-12-2003 வரை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

12. 2000 ஆம் ஆண்டு நாப்தா (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

13. 2000 ஆம் ஆண்டு சால்வென்ட், ரேபினேட் மற்றும் சிலாப் (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

11.20 சமூக விரோத சக்திகளால் இன்றியமையாப் பண்டங்களை, பதுக்கல் மற்றும் கடத்தல் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, நெல், அரிசி, கோதுமை, சன்ன ரக தானியங்கள், சர்க்கரை, சமையல் எண்ணெய்கள், சமையல் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றைக் கொண்டு செல்வதில் உள்ள கட்டுப்பாடு, உரிமம் பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு, இருப்பு வரையறை ஆகிய மைய அரசால் நீக்கம் செய்யப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தொடர்பான விதிகள் தவிர மேற்சொல்லப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகளை மாநில அரசு அமல்படுத்தி வருகின்றது.

11.21 பொதுமக்கள் நலன் கருதி மீண்டும் தேவை ஏற்பட்டால் நீக்கம் செய்யப்பட்ட கட்டுப்பாடு ஆணைகள் ஒரு சில அல்லது அனைத்தும் மைய அரசின் ஒப்புதலுடன் திரும்பவும் அமல்படுத்துவதில் இவ்வரசுக்கு எந்தவித தயக்கமும் இருக்காது. ஆனால் அதுபோன்ற நிலை எதுவும் ஏற்படாது என இந்த அரசு நம்புகின்றது.



2004 ஜூலை 31]

**இன்றியமையாப் பண்டங்கள் குடியிருப்புகளுக்கு அருகில் (Accessibility) கிடைக்கச் செய்தல்**

11.22 இன்றியமையாப் பொருட்கள் போதிய அளவு இருக்கின்றது என்பதால் மட்டும் அடித்தளத்தில் உள்ள அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் என்பதை உறுதி செய்துவிட முடியாது. நமது மக்கள் தொகையில் பெரும்பாலோர் கிராமங்களில் வாழ்கின்றனர். மலைப் பகுதிகளில் பல குக்கிராமங்கள் உள்ளன. சமூகத்தில் வளமாக வாழும் ஒரு சில பிரிவினரைத் தவிர ஏழை எளிய மக்கள் வெளிச்சந்தையில் பொருட்களை எளிதில் வாங்கிவிட முடியாது. எனவே, இன்றியமையாப் பொருட்கள் குக்கிராமங்களுக்கு அருகில் உள்ள இடங்களில் எல்லா நேரங்களிலும் போதிய அளவு கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

11.23 இந்த இலக்கை எய்தும்பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆகியன நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அரசு வகுத்துள்ள வரையறைகளுக்கு இணங்க நியாயவிலைக் கடைகளைத் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மலைவாழ் மக்கள் குடியிருக்குமிடங்களிலும், இனக் கலவரங்கள் ஏற்படும் பகுதிகளிலும் இந்த வரையறைகள் நிறைவு செய்ய இயலாவிட்டாலும் பொது விநியோகக் கடைகள் திறக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குடியிருக்கும் இடத்திற்கும், நியாய விலைக் கடைக்கும் இடையிலான தூரம் 2 கி.மீக்கு மேல் இருந்தால், அந்தக் குடியிருப்பில் முழுநேர நியாய விலைக் கடை திறக்க போதிய குடும்ப அட்டைகள் இல்லாவிட்டால், கூடுதல் செலவின்றி பகுதிநேரக் கடை நடத்தலாம். பொதுவாக, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் ஒவ்வொரு நியாய விலைக் கடைகளிலும், 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், 1000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். பிற பகுதிகளில் ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

11.24 இம்மாநிலத்தில் (30–4–2004 நிலவரப்படி) மலைப் பகுதிகளில் உள்ள நடமாடும் நியாய விலைக் கடைகள் உட்பட 28,142 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

| வ. எண் | நடத்தும் நிறுவனம்/அமைப்பு | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1091 | 58 | 1149 |
| 2. | கூட்டுறவுச் சங்கப் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுகள் | 21677 | 4593 | 26270 |
| 3. | மற்ற கூட்டுறவுள்ள (மீன் வளம்/தோட்டத் தொழிலாளர் போன்றவை) | 151 | 7 | 158 |
| 4. | பெண்கள் குழுக்கள் | 373 | 156 | 529 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிற நடமாடும் நியாய விலைக் கடைகள் | 36 | – | 36 |
| | மொத்தம் | 23328 | 4814 | 28142 |

11.25 இன்றியமையாப் பண்டங்கள் அடித்தளத்தில் அனைத்துப் பகுதிகளிலும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், குறைந்த அளவு குடும்ப அட்டைகள் கொண்ட பல நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட நியாய விலைக் கடைகளை நடத்துவதால் ஏற்படும் இழப்பினை அரசு மானியமாக அளித்து வருகின்றது. வாராந்திர விடுமுறை நாளான வெள்ளிக்கிழமை தவிர மற்ற எல்லா நாட்களிலும் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. தாய்க்கடைக் கட்டுபாட்டின்கீழ் இயங்கும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தாய்க்கடை பணியாளர்கள் மூலம் செயல்படுகின்றன. பொது விநியோகப் பொருட்கள் கடத்தப்படுவதைக் குறைக்கவும், பொது விநியோகக் கடை நடத்துபவர்களுக்கு பொறுப்பு இருக்க வேண்டும் என்பதற்காகவும் நமது மாநிலத்தில் நியாய விலைக் கடைகளை தனியார் வசம் ஒப்படைப்பதில்லை.

11.26 பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் அளவு குறைவின்றி வழங்கவும், அதை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தையும், அதே நேரத்தில் நியாய விலைக் கடைகளில் சேமித்து வைப்பதில் உள்ள சிரமத்தையும் தவிர்க்கும் வகையிலும், நியாய விலைக் கடைகள் தவிர மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள், (பெட்ரோல் வழங்கும்



2004 ஜூலை 31]

நிலையங்களைப் போல) கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மாநிலம் முழுவதும் 306 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியாக இயங்கும் நியாய விலைக் கடைகளின் விவரங்கள் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ளன.

11.27 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகப் பொருட்களை முன்னரே கொள்முதல் செய்து மாநிலம் முழுவதும் வட்ட அளவில் தமக்குச் சொந்தமாக உள்ள அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்ட கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. நியாய விலைக் கடைப் பணியாளர்கள், வட்டங்களில் இயங்கும் கிடங்கிலிருந்து இருப்பை நியாய விலைக் கடைகளுக்கு மாவட்ட அதிகாரிகளால் மாதந்தோறும் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின்படி மாதத்தின் தொடக்கத்திலேயே எடுத்துச் செல்கிறார்கள்.

11.28 இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் குடும்ப அட்டைகள் திட்டம் மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது (31-5-2004 நிலவரப்படி) நமது மாநிலத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு 1.52 கோடி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன:-

| | |
|---|---|
| அரிசி + சர்க்கரை + மண்ணெண்ணெய் அட்டைகள் | 12920801 |
| மண்ணெண்ணெய் அட்டைகள் | 1247015 |
| சர்க்கரை அட்டைகள் | 1063430 |
| காவல் துறையினருக்கான மண்ணெண்ணெய் அட்டைகள் | 24077 |
| மொத்தம் | 15255323 |

(புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் மாவட்டவாரி விவரங்கள் இணைப்பு 2—ல் தரப்பட்டுள்ளன.)

11.29 மாதம் ஒன்று அல்லது இரண்டு தடவைகளில் பொது விநியோகப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றது:

[2004 ஜூலை 31

**அரிசி**

| குடும்ப அட்டைகளில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்படும் அரிசியின் அளவு |
|---|---|
| வயது வந்த ஒருவருக்கு (ஒரு யூனிட்) | 12 கிலோ |
| வயது வந்த ஒருவர் + ஒரு குழந்தை (1+½) | 14 கிலோ |
| வயது வந்த இருவர் அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் இரு குழந்தைகள் (இரண்டு யூனிட்) | 16 கிலோ |
| வயது வந்த இருவர் மற்றும் ஒரு குழந்தை அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் மூன்று குழந்தைகள் (2 +½ யூனிட்) | 18 கிலோ |
| வயது வந்த மூவர் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு (மூன்று யூனிட் மற்றும் அதற்கு அதிகமாக) | 20 கிலோ |

11.30 நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட வழங்கல் அளவுப்படி பெறத் தகுதியுடைய அளவைவிட கூடுதலாக 4 கிலோ அரிசி ஒவ்வொரு குடும்ப அட்டைத்தாரரும் மாதா மாதம் பெறத் தகுதியுண்டு.

**கோதுமை**

11.31 குடும்ப உறுப்பினர்களைக் கணக்கில் கொள்ளாமல் நகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் உள்ளவர்களுக்கு 10 கிலோ, பிற பகுதிகளில் உள்ளவர்களுக்கு 5 கிலோ கோதுமை வழங்கப்படுகிறது.

**சர்க்கரை**

11.32 நபர் ஒருவருக்கு 500 கிராம் வீதம் ஒரு குடும்ப அட்டைக்கு அதிகபட்சம் 2 கிலோ கிராம் சர்க்கரை வழங்கப்படும். சர்க்கரை விருப்ப குடும்ப அட்டை வைத்துள்ளவர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மூன்று கிலோ சர்க்கரை வழங்கப்படும்.

ஊட்டி தேயிலை : வரம்பு இல்லை

அயோடின் உப்பு : வரம்பு இல்லை



2004 ஜூலை 31]

**மண்ணெண்ணெய்**

| இடங்கள் | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் | இரண்டு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|
| | | விட்டரில் | |
| சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள், மாவட்டத் தலைநகரங்கள் | 10 | 3 | – |
| ஏனைய நகராட்சிகள் | 6 | 3 | – |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 5 | 3 | – |
| ஊரகப் பகுதிகள் | 3 | 3 | – |
| | நீலகிரி மாவட்டம் | | |
| மாவட்டத் தலைநகரம் | 15 | 3 | – |
| ஏனைய நகராட்சிகள் | 15 | 3 | – |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 10 | 3 | – |
| கிராமப் பகுதிகள் | 5+5** | 3 | – |

**(1998 முதல் தற்காலிக ஒதுக்கீடாக வழங்கப்படுகின்றது.)

11.33 மண்ணெண்ணெய் விருப்ப குடும்ப அட்டைகள் வைத்துள்ளவர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக 5 லிட்டர் மண்ணெண்ணெய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

11.34 மேலும், அரசு உறைவிட நிறுவனங்கள், அரசு கல்வி நிறுவனங்கள், அரசு மருத்துவமனைகள் போன்றவற்றிற்கும், சமையலுக்காகவும், விளக்கு எரிப்பதற்காகவும், மருத்துவமனைகளில் ஊசி மற்றும் சிரிஞ்சுகளைத் தூய்மைப்படுத்த, சுத்திகரிக்கப் பயன்படுத்தப்படும் மின் இணைப்பு பெற்ற தண்ணீர்ப் பெட்டி ஆகியவற்றிற்காகவும், மொத்த அனுமதி அட்டைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி, இம்மாநிலத்தில் செயல்படுகிற ஏழு கடற்படைப் பிரிவுகளுக்கும் சமையலுக்காகவும், பிற தேவைகளுக்காகவும் ஒவ்வொரு மாதமும்

200 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் என்ற ஊரில் உள்ள கடற்கரை பாதுகாப்புப் பிரிவிற்கு ஒவ்வொரு மாதமும் 300 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

11.35 இதற்கு முன்பு 1.61 கோடி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருந்தன. அவ்வெண்ணிக்கை இம்மாநிலத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாகும். இது போலிக் குடும்ப அட்டைகள் பெருமளவு இருந்ததைக் காட்டுகிறது. போலிக் குடும்ப அட்டைகள் மற்றும் பொது விநியோகத் திட்ட இன்றியமையாப் பொருட்களை நம்பியிராத குடும்பங்கள் வைத்துள்ள தடும்ப அட்டைகள் பொதுவிநியோகப் பொருட்களில் குறிப்பாக அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவை சட்டத்துக்கு மாறாக கடத்தப்படுவதற்கு வாய்ப்பு அளிக்கும். 2000 ஆண்டுக்கு முன்னர் வெளிச்சந்தையில் அரிசியின் விலை பொது விநியோகத் திட்ட அரிசியின் விலை ஆகிய இரண்டையும் ஒப்பிடுகையில், வெளிச்சந்தையில் அரிசியின் விலைக்கும் பொது விநியோகத் திட்ட அரிசியின் விலைக்குமுள்ள வித்தியாசம் கூடுதலாக இருக்கின்றபோது பொது விநியோகத் திட்ட அரிசி நுகர்வு மிகவும் கூடுதலாக உள்ளது. பொதுவிநியோகத் திட்ட அரிசி தவறாகப் பயன்படுத்தப்படுவதை காட்டுகிறது என்றும் கண்டறியப்பட்டது. (வெளிச்சந்தையில் அரிசியின் சராசரி விலை மற்றும் பொது விநியோகத் திட்ட அரிசியின் விலை ஆகிய ஆண்டு வாரியான விவரங்கள் இணைப்பு 3-ல் காண்க.) ஆனால், அப்பொழுது தீர்வு காணும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், இதுபோன்ற போலி குடும்ப அட்டைகளை ஒழிக்கும் வண்ணம், நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் கூப்பன் முறையில் அரிசி பெறும் திட்டம் 1-7-2002-ல் ஓராண்டு காலத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் 30-6-2004 வரை நீட்டிக்கப்பட்டது. நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் வாங்க விருப்பமில்லாமல் அதே நேரத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறையின் பதிவேட்டில் தங்களது குடும்ப விவரங்கள் இருக்க வேண்டும் என விரும்பும் குடும்ப அட்டைத்தாரர்களுக்கு, தங்களது குடும்ப அட்டைகளை கௌரவ குடும்ப அட்டைகளாக மாற்றிக் கொள்ள அக்டோபர் 2003-ல் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் ரூ.5000/-ம் அதற்கு மேலும் குடும்ப மாத வருமானம் உள்ள குடும்பங்கள் கௌரவ குடும்ப அட்டைகளுக்கு மட்டுமே தகுதியுள்ளவர்கள் என ஆணையிடப்பட்டது. இந்த ஏற்பாடுகள் நல்ல நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும் பொது





மக்களுக்கு இடர்ப்பாடும், துன்பமும் ஏற்படுத்தியது. குடும்ப அட்டைகள் பெறாத ஏழை மக்கள் பலர் மானிய விலையில் உணவுப் பொருட்களைப் பெறுவதிலிருந்து ஒதுக்கப்பட்டதுஅரசின் கவனத்திற்குத் தெரிய வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்பொழுதும், ஏழை, எளிய மக்களின் துயர் துடைப்பதில் ஆர்வம் கொண்டு அயராது உழைப்பவர் என்பதால் 18-5-2004 அன்று உடனடியாக வருமான வரம்பு நீக்கவும், கூப்பன் முறையைக் கைவிடவும், 'எச்' முத்திரை இடப்பட்ட குடும்ப அட்டைகளை பழைய நிலைக்கு மாற்றிக் கொள்ளவும் ஆணையிட்டார்கள். அதன்படி யாரெல்லாம் 30-6-2004 வரை கூப்பன் மூலம் அரிசி பெற்று வந்தார்களோ, அவர்கள் கூப்பன் இல்லாமலேயே தொடர்ந்து 1-7-2004 முதல் அரிசி பெற்றுக்கொள்ளவும், "எச்" முத்திரை பதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குடும்ப அட்டைகளை "எச்" முத்திரையை நீக்கிக்கொண்டு "எச்" முத்திரைத் திட்டம் வருவதற்கு முன்னர் என்ன பொருட்கள் பெற்று வந்தார்களோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளவும் தகுதியுடையவர்கள் ஆவர்.

11.36 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரை குடும்ப அட்டை பெறாமல் விடுபட்டுப் போன குடும்பங்கள் 30-6-2004-க்குள் மனு செய்யலாம் என்றும், அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்றும் ஆணையிட்டுள்ளார்கள். இப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

11.37 இவ்வாறாக இம்மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இன்றியமையாப் பொருட்கள் எளிதில் கிடைப்பது இந்த அரசால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### இன்றியமையாப் பொருட்களை மக்களின் வாங்கும் சக்திக்குட்பட்ட விலைகளில் கிடைக்கச் செய்தல் (Affordability)

11.38 வெளி அங்காடியில் உள்ள இன்றியமையாப் பொருட்களின் விலைகள் எப்பொழுதும் நியாயமான அளவில் உள்ளன என்பதை உறுதி செய்வதற்காக இந்த அரசு சாத்தியமாகக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ளது. காய்கறிகள் மற்றும் ஓட்டல்களில் உணவுப் பொருட்களின் விலைகள் உட்பட இன்றியமையாப் பொருட்களின் வெளி அங்காடி விலைகள் நாள்தோறும் கண்காணிக்கப்பட்டு, தேவை ஏற்படும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் உள்ள விலைக்

கண்காணிப்புப் பிரிவு இன்றியமையாப் பொருட்களின் விலைகள் குறித்த தகவலை சேகரித்து நாள்தோறும் ஆய்வு செய்து வருகிறது. பிரச்சினை எவையேனும் ஏற்பட்டால் அவற்றிற்குத் தீர்வு காண வணிகச் சங்கங்களுடன் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அரசு, ஒவ்வொரு வாரமும் விலை நிலவரத்தை ஆய்வு செய்கிறது. கடந்த இரு ஆண்டுகளில் நமது மாநிலம் கடுமையான வறட்சி நிலையை சந்தித்து வந்த போதிலும் இந்த அரசு நெல்/அரிசி வணிகத் தடைகளை நீக்கி நமது மாநிலத்திற்கு பிற மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் வருவதற்கு வகை செய்ததன் விளைவாகவும், விலை நிலவரங்களை விழிப்புடன் கண்காணித்ததன் பயனாகவும் வெளி அங்காடிகளில் இன்றியமையாப் பொருட்களின் விலை கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது.

11.39 பொது விநியோக முறையின்கீழ் ஏழை மக்களுக்கும், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கும் இன்றியமையாப் பொருட்களை அவர்கள் வாங்க இயலும் வகையில் மிகக் குறைந்த விலையில் வழங்கிட அரசு மானியம் அளித்து வருகின்றது. மத்திய அரசு, பொது விநியோக முறையின்கீழ் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5.65 என்ற விலையிலும் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என்ற விலையிலும் மாநிலங்களுக்கு அரிசி ஒதுக்கீடு செய்கிறது. நமது மாநில மக்களின் முக்கிய உணவுப் பொருளாக அரிசி இருப்பதால், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிற அரிசியின் விலை வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் என்ற எவ்வித வேறுபாடுமின்றி அனைவரது வாங்கும் சக்திக்கும் உட்பட்ட விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலை வீதம் 1-1-2000 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே விலை தற்போது தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்ததால் குடும்ப அட்டைதாரர்கள் பெறுவதற்கு உரிமையுள்ள முதல் பத்து கிலோவிற்கு ரூ.3.50 என்றும் எஞ்சியுள்ள அளவிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.6.00 என்றும் 1-10-2002 முதல் விலை விகிதம் திருத்தியமைக்கப்பட்டது. ஏழை மக்களுக்கும், மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கும் உதவுகிற நோக்கத்துடன், கடுமையான நிதி நெருக்கடி நீங்கும் முன்னரே, குடும்ப அட்டைதாரர்கள் பெறுவதற்குத் தகுதியான முழு அளவு அரிசியின் விலை 1-9-2003 ஆம் நாளிலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். நமது நாட்டில் மிகக் குறைந்த விலையில் அரிசி வழங்கும் ஓரிரு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. அந்தியோதயா





அன்னயோஜனா திட்ட பயனீட்டாளர்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.00 என்ற அதே விலையில் அரிசி வழங்கப்படுகிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரை கோதுமை ஒரு துணை உணவு மட்டுமே ஆகும். நமது மாநிலத்திற்கு வழங்கப்படுகிற கோதுமையின் மத்திய வழங்கல் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.6.10 ஆகும். இதனை மாநில அரசு, 1-10-2002 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ.7.50 என்ற விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகிறது. அதில் வாகனங்களில் கொண்டுவருதல் மற்றும் நிர்வாகச் செலவுகளும் அடங்கும். மத்திய அரசு லெவி சர்க்கரையின் சில்லறை வழங்கல் விலை 9-3-2002-லிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 ஆக நிர்ணயித்தது. மாநில அரசு இந்த விலையை பின்பற்ற வேண்டியிருந்தது.

11.40 மத்திய அரசு 1-3-2002 ஆம் நாளிலிருந்து மண்ணெண்ணெய் விலையை அதிகரித்ததன் விளைவாக பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படுகிற மண்ணெண்ணெயின் வழங்கல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.00லிருந்து ரூ.9.60ஆக உயர்த்த வேண்டியிருந்தது. ஏழை மற்றும் நலிவுற்ற பிரிவினரின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மண்ணெண்ணெய் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40-லிருந்து ரூ.9.00 வரை என நிர்ணயித்து ஆணையிட்டார்கள்.

11.41 ஊட்டி தேயிலை 100 கிராம் கொண்ட பொட்டலம் ரூ.9 என்ற விலையிலும் அயோடின் கலந்த உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 என்ற விலையிலும் நியாய விலைக் கடைகளில் விற்கப்படுகிறது.

11.42 தற்பொழுது அரசு வழங்கிவரும் உணவு மானியம் கீழ்க்கண்ட இனங்களை உள்ளடக்கியது ஆகும்:—

1. பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ் மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் செய்வதன் மூலம் கிடைக்கும் அரிசியின் அடக்க விலை (கிலோ ஒன்றுக்கு ரூ.12.30)-க்கும் அதற்கு மைய அரசு நிர்ணயித்துள்ள பொருளாதார விலை (புழுங்கல் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.9.75, பச்சரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.9.98)-க்கும் உள்ள வித்தியாசம்.

2. அரிசியின் மைய அரசு வழங்கல் விலைக்கும் (வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு கிலோ ரூ.5.65, வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு கிலோ ரூ.8.30) மாநில அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்குவதால் கிடைக்கும் விலை (விற்பனை விளிம்புத் தொகை நீங்கலாக கிலோ ரூ.3)-க்கும் உள்ள வித்தியாசம்.

[2004 ஜூலை 31

3. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் ஒவ்வொரு லிட்டருக்கும் ரூ. 0.60.

4. பொருட்களைக் கொண்டுவர வாகனக் கட்டணங்கள், கிடங்குகள் வாடகை, நிர்வாகச் செலவுகள், ரிசர்வ் வங்கியிலிருந்து முன்பணம் பெறுவதால் அதற்கான வட்டி ஆகியவை.

5. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் லெவி அல்லாத சர்க்கரையின் அடக்க விலைக்கும், வழங்கல் விலைக்கும் உள்ள வித்தியாசம்.

11.43 நமது மாநில அரசு மிகப் பெரிய தொகையை உணவு மானியமாக வழங்கி வருகிறது. ஆண்டு வாரியாக வழங்கிய உணவு மானியம் குறித்த விவரங்கள் இணைப்பு 4–ல் அளிக்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்காகவே நிதி நெருக்கடியிலும்கூட இந்தச் செலவை அரசு மேற்கொண்டு வருகிறது. உணவு மானியத்திற்காக 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 775 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**உணவு நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு**

11.44 மாநில அளவில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் உணவு நிர்வாகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பாவார். இவருக்கு உதவியாக கூடுதல் ஆணையரும், ஒரு இணை ஆணையாளரும், மூன்று துணை ஆணையாளர்களும், ஒவ்வொரு மாவட்டத்தில் ஒரு மாவட்ட வழங்கல் அலுவலரும், ஒரு வட்டத்திற்கு ஒரு வட்ட வழங்கல் அலுவலர் என்ற விதத்திலும் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள 14 மண்டலங்களுக்கு 14 உதவி ஆணையாளர்களும், இதர பணியாளர்களும் உள்ளனர். உணவு நிர்வாகத்தைப் பொறுத்தவரை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகம் கீழ்க்கண்ட முக்கியப் பணிகளைச் செயல்படுத்துகின்றது.

1. மாதந்தோறும் மாவட்டங்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட்கள் வழங்க அரிசி மற்றும் இதர இன்றியமையாப் பொருட்கள் ஒதுக்கீடு செய்தல்.

2. நியாய விலைக் கடைகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் நியாய விலைக் கடைகளில் பொருட்களின் இருப்பு நிலை ஆகியவற்றைக் கண்காணித்தல்.



2004 ஜூலை 31]

3. நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்தல், பல்வேறு அலுவலர்களுக்கும் ஆய்வு செய்ய இலக்கு குறித்தல், பொது விநியோகத் திட்டச் செயல்பாடு குறித்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், நுகர்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநர் ஆகியோருடன் ஆய்வு செய்தல்.

4. குடும்ப அட்டைகளை அச்சிடுதல் மற்றும் போலி குடும்ப அட்டைகளை அடையாளம் கண்டு நீக்குதல்.

5. பொருள் இருப்பு மற்றும் குடும்ப அட்டை புள்ளிவிவரங்களை மேலாண்மை செய்தல்.

6. நியாய விலைக் கடைகள் இயங்கும் விதத்தையும் உணவு நிலையையும் அரசுக்கு தெரிவித்தல், மையத் தொகுப்பிலிருந்து பெற்ற இன்றியமையாப் பொருட்களின் விவரங்களை மைய அரசுக்குத் தெரிவித்தல்.

7. இன்றியமையாப் பண்டங்களின் வெளிச்சந்தை விலையைக் கண்காணித்தல்.

8. உணவுக்காக வழங்கப்படும் மானியத்தை நிர்வகித்தல்.

9. நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் செயல்படும் விதத்தை கண்காணித்தல்.

11.45 நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையரகத்தில் காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் தலைமையில் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு இயங்கி வருகிறது. மாவட்டங்களில் உள்ள களப்பிரிவுகள் இப்பிரிவிற்கு உதவுகின்றன. பொது விநியோக முறை தாராளமயமாக்கப்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படும்:—

[2004 ஜூலை 31

1. கள்ளக்கடத்தல் செய்வோர், பதுக்கி வைப்போர், போலி குடும்ப அட்டைகளைப் பயன்படுத்துவோர், கலப்படம் செய்வோர், பொது விநியோக முறையில் வழங்கப்படுகிற அரிசி, மண்ணெண்ணெய், இதர பெட்ரோலிய எரிவாயு முதலியவற்றைத் தவறுதலாகப் பயன்படுத்துதல் குறித்த தகவலைத் திரட்டி அதன்பேரில் நடவடிக்கை எடுத்தல்.

2. பொது விநியோக முறையில் வழங்கப்படுகிற அரிசி மற்றும் மண்ணெண்ணெயைப் பதுக்கி வைப்போர், கள்ளத்தனமாகக் கடத்துவோர் ஆகியோரைக் கண்காணித்து, 1980 ஆம் ஆண்டு கள்ளச்சந்தை ஒழிப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கலைப் பராமரிக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 7/1980)கீழ் குற்றமிழைப்போர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

3. பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்பட வேண்டிய பொருட்களை வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்துவதைத் தடுத்தல், களப்பிரிவுகளைப் பயன்படுத்தி சிறப்பு நடவடிக்கை மேற்கொள்வது மூலம் போலியான குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்தல்.

4. உணவுப் பொருட்களையும், மண்ணெண்ணெய், பெட்ரோல் எரிவாயு, பெட்ரோல், டீசல் முதலிய எரிபொருட்களையும் அனைத்து வகையிலும் கலப்படம் செய்வதை ஒழித்தல்.

5. வெள்ளை மண்ணெண்ணெய் பயன்படுத்துவோரை நுட்பமாகக் கண்காணித்து மோட்டார் வண்டிகளில் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்.

6. அமலில் உள்ள கட்டுப்பாடு / முறைப்படுத்தும் ஆணைகளின் விதித் துறைகளை செயல்படுத்துதல், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

7. பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துதல், வேறு நோக்கத்திற்கு பயன்படுத்துதல், கலப்படம் தடை செய்யப்படுகிற ஆணைகள் மற்றும் தண்டனைகள் முதலியன தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.



2004 ஜூலை 31]

11.46 மாவட்ட வழங்கல் அதிகாரிகள் நியாய விலைக் கடைகளுக்குப் பொருட்களை ஒதுக்கீடு செய்கின்றனர். மாவட்ட வழங்கல் அதிகாரிகளும், வட்ட வழங்கல் அதிகாரிகளும் நியாய விலைக் கடைகளுக்கு சரக்குகளை எடுத்துச் செல்வதையும், சரக்குகளின் இருப்பு நிலவரத்தையும் கண்காணிக்கின்றனர். மேலும் வட்ட வழங்கல் அதிகாரிகள் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணியையும் தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கும் பணியையும் கவனித்து வருகின்றனர்.

11.47 பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினர் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பொருட்களை எவ்விதத்திலும் குறையாமல் பெறுவதை உறுதி செய்வதற்காக மாநில அளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டை அவ்வப்போது ஆய்வு செய்கின்றார்கள். நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரிடமிருந்து வரப்பெறுகின்ற ஆய்வறிக்கைகள், கடத்தப்படும் இன்றியமையாப் பண்டங்கள் கைப்பற்றுகை மற்றும் பறிமுதல் முதலியன குறித்த அறிக்கைகள், நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவிடமிருந்து வரப்பெறுகிற அறிக்கைகள் ஆகியவற்றை மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள் மாதந்தோறும் ஆய்வு செய்கிறார்கள். வெளி அங்காடியில் விலைகள் நிலவரம் மற்றும் பொது விநியோக நடவடிக்கைகளை அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் வாரந்தோறும் ஆய்வு செய்கிறார்கள்.

11.48 பொது விநியோக முறையைத் திறம்பட செயல்படுத்தும் நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் கிராம ஊராட்சி, வருவாய்க் கோட்டங்கள் மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் குறைகள் குறித்து விரைவான பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொதுமக்கள் நன்மைக்காக பொது விநியோக முறை குறித்த பல்வேறு அம்சங்கள், பொதுமக்கள் குறைகளைத் தெரிவிப்பதற்காக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட தகுதிவாய்ந்த மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகள் பற்றிய தகவல் 2003-2004 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திருத்திய மக்கள் சாசனத்தில் அளிக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

*11.49* 2003–2004 ஆம் ஆண்டில் பார்வையிடப்பட்ட நியாய விலைக் கடைகள் எண்ணிக்கை, கண்டுபிடிக்கப்பட்ட போலியான தொகைப்பட்டி தயாரித்தல், குறைவாக எடை போடுதல், இருப்புப் பற்றாக்குறை அல்லது இருப்பு மிகையாக இருத்தல் ஆகிய நேர்வுகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 5-ல் அளிக்கப்பட்டுள்ளன.

*11.50* நுகர்பொருள் வழங்கல் துறையும், குற்றப் புலனாய்வுப் பிரிவும் 2003–2004 ஆம் ஆண்டில் கைப்பற்றுதல் மற்றும் பறிமுதல் செய்த பொது விநியோக முறையின்கீழ் வருகிற வெவ்வேறு பொருட்களின் விவரங்களும், கைது செய்து வழக்கு தொடரப்பட்ட, தண்டனைகள் அளிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களும் இணைப்பு 6–ல் அளிக்கப்பட்டுள்ளன.



2004 ஜூலை 31]

# அத்தியாயம் 12

## நுகர்வோர் நல நடவடிக்கைகள்

*12.1* தொழில், வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்புகளின் வளர்ச்சிக்கு நிகராக நம் சமுதாயத்தில் நுகர்வோர் நலன் வேகமாக மாறி வருகிறது. தற்போது பின்பற்றப்படும் தாராளமயமான வர்த்தகக் கொள்கைகளினால் அங்காடிகளில் பல்வேறு வகையான நுகர்பொருள்கள் பெருகியுள்ள நிலை பாராட்டுக்குரியது. பல்வேறு அரசுத் துறைகளும் அரசின்கீழ் இயங்கும் நிறுவனங்களும் மக்களுக்கு பெரும் பணியாற்றி வருகின்றன. இத்தகைய முயற்சியால் நம்பிக்கைக்குரிய பணிகள், குறைபாடுகள் நிகழாதவண்ணம் நுகர்வோருக்குத் தேவையற்ற துன்பங்களும் நஷ்டமும் ஏற்படாவண்ணம் பாதுகாக்கப்படுகிறது.

*12.2* நுகர்வோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் துரித மற்றும் பணச்செலவற்ற, நடைமுறை விதிகளை ஏதும் பயன்படுத்தாமல் நுகர்வோரின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மைய அரசு நுகர்வோரின் உரிமைக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அவர்களின் தேவை அறிந்து குறைகளைக் களைய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ல் உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

## நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்

*12.3* நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்படி, தேசிய அளவில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட அளவில் மாவட்ட குறைதீர் மன்றங்கள், மாநில அளவில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆகிய மூன்றடுக்கு முறை கொண்ட நீதிமுறைச் சார்புடைய அரசு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்ட மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை மாநில அரசு சென்னையில் அமைத்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் மாவட்ட குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ன. சென்னை மாவட்டத்தில் (1) தென்சென்னைப் பகுதி மக்களுக்கும் (2) வடசென்னைப் பகுதி மக்களுக்கும் பயன்படும் வகையில் இரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக, தமிழ்நாட்டில் தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில், 18 மன்றங்கள்

[2004 ஜூலை 31

தனித்தியங்கக்கூடியவை. (Independent Forum) 6 மன்றங்கள் சேர்ந்து இயங்கக்கூடியவை. தனித்தியங்கும் குறைதீர் மன்றத்தில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் தலைவராகவும், வேறு இருவர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இவ்விரு உறுப்பினர்களில் ஒருவர் பெண் உறுப்பினர் ஆவார். அருகருகே அமைந்துள்ள இரு மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு நுகர்வோர் குறைதீர் மன்றம் என்ற வீதத்தில் 6 நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சேர்ந்தியங்கும் இரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு ஒருவர் தலைவராக இருப்பார்.

12.4 தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள் மற்றும் சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள் பற்றிய விவரம் வருமாறு:—

| | **தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள்** | | |
|---|---|---|---|
| 01 | சென்னை—தெற்கு | 10 | கடலூர் |
| 02 | சென்னை—வடக்கு | 11 | தஞ்சாவூர் |
| 03 | திருச்சிராப்பள்ளி | 12 | நாகப்பட்டினம் |
| 04 | ஈரோடு | 13 | தேனி |
| 05 | மதுரை | 14 | திருவள்ளூர் |
| 06 | விருதுநகர் (இருப்பிடம்) ஸ்ரீவில்லிப்புத்தூர் | 15 | பெரம்பலூர் |
| 07 | கன்னியாகுமரி (இருப்பிடம்) நாகர்கோவில் | 16 | கரூர் |
| 08 | கோயம்புத்தூர் | 17 | திருவாரூர் |
| 09 | நீலகிரி | 18 | நாமக்கல் |

**சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01 | வேலூர் மற்றும் திருவண்ணாமலை | 04 | திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை |
| 02 | சேலம் மற்றும் தருமபுரி | 05 | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| 03 | காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் | 06 | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |



2004 ஜூலை 31]

இந்த நீதிமுறைச் சார்புடைய அமைப்புகளுக்கு இயற்கை நீதிமுறைகளைக் கடைப்பிடிப்பதோடு நுகர்வோருக்கு எந்தெந்த வகையில் உதவவேண்டுமோ அவ்வகையில் உதவி புரிய நஷ்டஈடு வழங்கும் அதிகாரம் உண்டு. இச்சட்டத்தில் நீதிமுறைச் சார்புடைய குறைதீர் மையங்களால் ஆணையிடப்பட்டதை நிறைவேற்றாத பட்சத்தில் தண்டனை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

12.5 இந்திய அரசு, நுகர்வோரின் நலன் கருதி நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986-ல் திருத்தம் (திருத்தச் சட்டம் எண் 62/2002) செய்துள்ளது. இதன்மூலம் நுகர்வோர், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் ரூபாய் இருபது இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகளும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ரூபாய் இருபது இலட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகளும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகளும் தொடரலாம். மேலும் அதிகப்படியான வழிவகைகளும் இச்சட்ட திருத்தத்தில செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தச் சட்டம் 15-3-2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

12.6 5-3-2004 வரை இம்மன்றங்களில் வழக்குகளைத் தொடுக்க நுகர்வோர் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. ஆனால் 5-3-2004 முதல் திருத்தம் செய்யப்பட்ட இந்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 1987-ன்படி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் வழக்குத் தொடர கீழ்க்கண்ட கட்டணம் செலுத்த வேண்டும்:

| | | |
|---|---|---|
| 1. | ரூ. 1 இலட்சம் வரை | ரூ. 100/- |
| 2. | ரூ. 1 இலட்சம் முதல் ரூ. 5 இலட்சம் வரை | ரூ. 200/- |
| 3. | ரூ. 5 இலட்சம் முதல் ரூ. 10 இலட்சம் வரை | ரூ. 400/- |
| 4. | ரூ. 10 இலட்சத்திற்கு மேல் ரூ. 20 இலட்சத்திற்கு மிகாமல் | ரூ. 500/- |

12.7 தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களிலும், சில மாவட்ட நீதிமன்ற வளாகங்களிலும், சில மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கென தனியாக சொந்தக் கட்டடம் கட்டும் பணியில் மாநில அரசும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையமும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. முதற்கட்டமாக,

செங்கற்பட்டில் இயங்கிவரும் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.18.70 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணி நடந்துவருகிறது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட உரிய இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுகர்வோர் தொடர்பான வழக்குகள் அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ள ஏழு மாவட்ட நுகர்வோர் மன்றங்களுக்கு கணினிகள் வாங்குவதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம், ஃபேக்ஸ் (FAX) இயந்திரம் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

12.8 2003–2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் மார்ச் 2004 வரை மாநில குறைதீர் ஆணையத்திலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களிலும் பதியப்பெற்ற மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்பு–7 மற்றும் இணைப்பு–8-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**நுகர்வோர் கல்வி**

12.9 நுகர்வோர் தமக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் குறைதீர்த்துக் கொள்ளுதல் பற்றிய கல்வி கற்க வேண்டியது அவசியம். இதற்காக மைய அரசு மற்றும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கு பணிக்கூடம், கருத்தரங்கம் மற்றும் திட்டப் பயிற்சி பெரிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட நுகர்வோர் தகவல் மையம் அமைப்பது போன்றவற்றிற்காக மைய அரசு நிதிஉதவி வழங்கி வருகிறது. மாநில அரசு இப்பணிகளுக்காக 2003–2004–ல் ரூ.15 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிராமப் புறங்களிலும் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கல்லூரி மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய பயிற்சி தேசிய பணித் திட்டத்தின் மூலமாக தரப்படுகிறது.

12.10 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் கூட்டம் நடத்தப்படுகிறது. பொதுத் துறை நிறுவனங்களிலும், வேறு பல துறைகளிலும் நுகர்வோருக்கு ஏற்படும் இன்னல்கள், குறைகள் கண்டறியப்பட்டு,





அவை களையப்படுவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் இக்கூட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன்கீழ் மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் தன்னார்வ நுகர்வோர் அமைப்புக்கள் மற்றும் பல்வேறு துறைகள் சேர்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் பிரச்சினைகள் குறித்து இக்குழு விவாதித்து தீர்வு காண்கிறது. நுகர்வோர் பாதுகாப்பு குறித்த செய்திகள், விளக்கங்கள் அடங்கிய சிறு கையேடுகள், புத்தகங்கள் அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 ஆம் நாளில் "உலக நுகர்வோர் உரிமைகள் தினம்" சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக் குறித்த கருத்தரங்குகள், பொருட்காட்சி ஆகியவை அரசு சார்பில் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு 15–3–2004 அன்று விருதுநகர் மாவட்டத்தில் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாட மாநில அரசு ரூ.1.50 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும் விழுப்புரம், வேலூர், தருமபுரி, சேலம், திருவண்ணாமலை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் "ஜாக்ரிதி சிவிர் யோஜன" திட்டத்தின்கீழ் பொதுமக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கும் திட்டத்தை ஏற்று நடத்துவதற்காக ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களிடையே நுகர்வோர் உரிமைகள் பற்றிய கல்வி கற்பிக்கவும், மாணவர்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் மற்றும் நிலை நிறுத்திக்கொள்ளும் வகையில் நுகர்வோர் கிளப்புகள் ஏற்படுத்தும்படி மைய அரசு கருத்து தெரிவித்துள்ளது. மாநில அரசு நுகர்வோர் நலப் பணிகளை மைய அரசின் உதவியோடு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மாநில வரவு செலவுத் திட்டத்தில் நுகர்வோர் கல்விப் பணிக்காக ரூ.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 13

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

13.1 முற்றிலும் அரசுக்குச் சொந்தமானதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

13.2 இதன் நோக்கங்களாவன: கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவு தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலன் பயக்கும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அதற்குத் தேவையான மூலதனம், நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை சேவைகள், அறிவுரை உதவி போன்ற பணிகளைச் செய்தல் ஆகியவை.

13.3 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒரு மண்டலம் வீதம் 30 மண்டல அலுவலகங்களும், சென்னை நகரத்தில் (சென்னை-தெற்கு மற்றும் சென்னை-வடக்கு) என்ற இரு மண்டல அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இந்த மண்டல அலுவலகங்கள் முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 30-4-2004-உடன் இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்கள் சுமார் 8,992 ஆகும்.

13.4 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியமான பணிகள் பின்வருமாறு:

(அ) விவசாயிகள் குறைந்த விலையில் நெல்லை விற்பதைத் தடுக்க பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தேவைப்படின் அவ்வப்போது நியமிக்கப்படும் சுமார் 300 தனியார் அரைவை முகவர்கள் மூலம் நெல்லை அரைத்தல்.

(இ) மைய அரசால் மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகியவற்றை பொது விநியோக முறையின்கீழ் விநியோகம் செய்வதற்காக எடுத்தல்.





(ஈ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை விடுதிகள், காவல், தீயணைப்பு மற்றும் சிறைத் துறை அலுவலர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் பொருட்கள் வழங்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் சென்னை மற்றும் சில பகுதிகளில் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளில் விற்பது போன்ற பல்வேறு திட்டங்களுக்கான, பொது விநியோகத் திட்டத்தில் சேராத, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்களை வாங்குதல்.

(உ) பெட்ரோல் / டீசல் பங்குகள் மற்றும் 6 எரிவாயு யூனிட்டுகளை நடத்துதல்

(ஊ) 1,147 நியாய விலைக் கடைகளை நடத்துதல்.

(எ) பொது விநியோகப் பொருட்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுகள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகித்தல் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களை அரசு நலத் திட்டங்களுக்கும் கழகத்தால் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளுக்கும் விநியோகித்தல்.

(ஏ) மத்திய அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களான சம்பூர்ண கிராமீன் ரோஜ்கார் யோஜனா, அன்னபூர்ணா திட்டம், அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துதல்.

(ஐ) சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோரின் துயர் துடைக்க "இன்ட்கோசர்வ்" நிறுவனத்திடமிருந்து தேயிலையை வாங்கி பொது விநியோக முறையின் கீழ் இக்கழகம் விநியோகிக்கிறது.

(ஒ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொதுச் சந்தையில் கேழ்வரகு, மக்காச்சோளம், கடலைப்பருப்பு, வெல்லம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் ஊட்டச்சத்து உருண்டை தயாரிக்கும் கூட்டுறவு இணையங்களுக்கு வழங்குகிறது.

[2004 ஜூலை 31

**கொள்முதல்**

13.5 காவிரி பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒவ்வோர் ஆண்டும் சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சம்பா 2004 பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 571 நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறந்து பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ் 3,08,084 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் 29—5—2004-உடன் செய்யப்பட்டது.

**பதப்படுத்துதல்**

13.6 கொள்முதல் செய்யப்படும் நெல் பல மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தேவைப்பட்டால் சில விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு நியமிக்கப்படும் தனியார் அரைவை முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைத்து அரிசியாக்கப்படுகிறது.

**அமுதம் பல்பொருள் அங்காடிகள்.**

13.7 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 30 அமுதம் பல்பொருள் அங்காடிகளை சென்னை மற்றும் கடலூர் பகுதிகளில் நடத்தி வருகிறது. அரிசி, மளிகை, எண்ணெய், அழகு சாதனங்கள் போன்றவை இந்த பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படுகின்றன. 2003—2004 ஆம் ஆண்டில் இவ்வங்காடிகளின் விற்பனை மொத்தம் ரூ.15.79 கோடியாகும்.

**கட்டுமானப் பிரிவு**

13.8 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கட்டுமானப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இப்பிரிவு செயற்பொறியாளர் தலைமையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ்நிலை அலுவலர்களின் உதவியுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 136 வட்டங்களில் 166 விஞ்ஞான முறை சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது.



2004 ஜூலை 31]

13.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்த கிடங்குகள் மற்றும் அவற்றின் கொள்ளளவு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

**சேமிப்புக் கிடங்குகளின்:**

| | |
|---|---|
| எண்ணிக்கை | 166 |
| கொள்ளளவு | 633845 மெட்ரிக் டன் |

13.10 காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 100 டன்கள் கொள்ளளவுள்ள கிடங்கு, உலர்களம், சரக்கு வைக்குமிடம் மற்றும் அலுவலக அறை ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய 203 நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டியுள்ளது. 2003—2004 ஆம் ஆண்டில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள 2 விஞ்ஞான முறை செயல்முறைக் கிடங்குகள் ரூ.66 இலட்சம் செலவில் ஆண்டிப்பட்டி (ம) கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு அரசால் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**உருளை வடிவ அடுப்பு — நிர்மாணித்தல்**

13.11 தற்பொழுது நவீன அரிசி ஆலையில், இயக்கத்தில் இருந்து வரும் படி வடிவ அடுப்பில் இருந்து வெளியாகும் தூசுகளினால், ஆலை வளாகம் மாசுகள் சூழ்ந்து நிலவுவதால், மாசு கட்டுப்பாட்டு வாரிய மாசு நிர்ணய அளவை எட்ட முடியாமலும், பொது மக்களின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

13.12 இக்குறைப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், உயர்ந்த மற்றும் சீரான வெப்ப நிலையை உலர்த்திகளுக்கு அளிக்கும் வகையில், பராமரிப்புச் செலவினம் குறைவாய் ஏற்படக்கூடிய வகையிலான உருளை வடிவ அடுப்புகள் 2002-2003 ஆம் ஆண்டில் கழக நவீன அரிசி ஆலைகளான திருக்கோயிலூர், அடவத்தூர், பட்டுக்கோட்டை, கடச்சனேந்தல், சுந்தரக்கோட்டை மற்றும் அம்மன்பேட்டையில் நிர்மாணித்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

2004 ஜூலை 31]

முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாதத் தகுதிப்பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை 1-1-1996 முதல் ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

### 5. குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போதோ, ஓய்வுபெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

குறைந்தளவு குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1,275 ஆக உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. உயரளவு குடும்ப ஓய்வூதியம் உயரளவு சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 14

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

14.1 அரசால் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கும் மற்றும் உணவு தானியங்களுக்கும் விஞ்ஞான முறைப்படி இடவசதி அளித்தல், இடைத் தரகர்களை நீக்கியும், சேதாரங்களைத் தவிர்த்தும் ஒழுங்கு முறையான விற்பனைக்கு ஏற்பாடு செய்தல் போன்ற நோக்கங்களைச் செயற்படுத்த தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 1957 ஆம் ஆண்டில் வேளாண் உற்பத்தி (வளர்ச்சி மற்றும் சேமிப்பு) நிறுவனம் சட்டம், 1956–ன்படி தோற்றுவிக்கப்பட்டது. ஆயினும், மேற்படி சட்டமானது சேமிப்புக் கிடங்கு நிறுவன சட்டம், 1962 என மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது கடந்த 1958 ஆம் ஆண்டு முதல் தனது சேமிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறது.

### நிர்வாகக் கட்டமைப்பு

14.2 தற்போது இந்நிறுவனமானது தலைவர் தலைமையில் கிண்டியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. மேலும், இந்நிறுவனமானது கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 7 மண்டல அலுவலகங்களை ஏற்படுத்தி அந்தந்த மண்டல மேலாளர்கள் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

### 14.3 நடவடிக்கைகள்

அ. இந்நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் 65 சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆ. சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து இருப்பிட வசதி தேவைப்படும் இடங்களை உறுதி செய்து அதற்கேற்ப நிலங்களை வாங்கி, கிடங்கு வசதியினை ஏற்படுத்தி சேமிப்பு இழப்பினைக் குறைத்திடுதல்.

இ. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்கு பற்றுச்சீட்டுகள் மூலம் வங்கிகளில் கடன் வசதியினைப் பெற ஏற்பாடு செய்தல்.

[2004 ஜூலை 31

ஈ. சரக்குகளை ஏற்றி இறக்கும் பணியின் ஒப்பந்ததாரர்களை நியமித்து சரக்கு வைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்தல்.

உ. இந்நிறுவனமானது பூச்சித் தடுப்புப் பணியும் மேற்கொண்டு வருகிறது.

ஊ. சேமிப்புக் கிடங்கினைக் கையாளவும், நிர்வகிக்கவும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

**இருப்புவைப்புக் கொள்ளளவு, அதன் பயன்பாடு**

14.4 தமிழ்நாட்டின் 65 இடங்களில் செயல்பட்டு வரும் இந்நிறுவன கிடங்குகளின் இட வசதியினை விவசாயிகள், உர உற்பத்தியாளர்கள், இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு மாநில பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு மருந்துவக் கழகம், தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய எண்ணெய் வித்து நிறுவனம், தொலை தொடர்புத் துறை, உர உற்பத்தி நிறுவனங்கள், சிமெண்ட் பயன்படுத்தும் அரசுத் துறைகள் மற்றும் தனியார் சரக்கு வைப்பாளர்கள் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு சேமிப்பு நிறுவனத்தின் கொள்ளளவுத் திறன் மற்றும் அதன் பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:—

**சேமிப்புக் கிடங்குகளின்:**

| | |
|---|---|
| எண்ணிக்கை | 65 |
| கொள்ளளவு | 6,23,000 மெட்ரிக் டன் |

**புதிய வியாபாரம்**

14.5 நடப்பு ஆண்டில் இந்நிறுவனமானது சென்னை பெட்ரோலிய நிறுவனத்தின் சரக்குகளைக் கையாளவும், நிர்வகிக்கவும் கத்திப்பாரா சந்திப்புக்கு அருகில் ஒரு புதிய சேமிப்புக் கிடங்கு துவக்கியுள்ளது. அக்கிடங்கு மூலம் பல்வகை பாரபின் மெழுகுப் பொருட்கள் சென்னை பெட்ரோலிய நிறுவன முகவர்களுக்கு விநியோகிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.



2004 ஜூலை 31]

**இதர விரிவாக்கப் பணிகள்**

14.6 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது சேமிப்புப் பணியைத் தவிர ராஷ்டிரிய உர நிறுவன சரக்குகளை லாரிகள் மூலம் அவர்கள் விரும்பும் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று ஒப்படைக்கும் ஒப்பந்தப் பணியினையும் மேற்கொண்டுள்ளது.

14.7 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது சேமிப்புப் பணியைத் தவிர இதர பணியான பூச்சித் தடுப்பு பணியிலும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பொது மக்கள் அதிகம் உபயோகித்திடும் இடங்களான சிற்றுண்டிச் சாலைகள், தனியார் கிடங்குகள், மருத்துவமனைகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு பூச்சித் தடுப்புப் பிரிவு மூலம் கரையான், எலித் தொல்லையினைக் கட்டுப்படுத்தி வருகிறது. மேலும், கட்டுமானப் பணிக்கு முன்னரும், பின்னரும் கட்டடங்களில் ஏற்படும் கரையான் தொல்லையினை அறவே நீக்கிடவும், பூச்சிகள், கொசுத் தொல்லைகளிலிருந்து விடுபட பொதுவான பூச்சித் தடுப்புப் பணியும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்நிறுவன மற்றும் இதர நிறுவன ஊழியர்களுக்கும் விஞ்ஞான முறைப்படி சேமிப்பினை மேற்கொள்ளும் பயிற்சிகளை அளிக்கிறது.

14.8 பூச்சித் தடுப்புத் திட்டத்திற்காக 2003–04 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானம் ரூ.10.85 இலட்சமாகும். 2003–04 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்படி மதுரையில் அமையவுள்ள உயர் நீதிமன்றக் கட்டடத்தில் கட்டுமானப் பணிக்கு முன்னர் கரையான் தடுப்புப் பணி முடிவுற்றுள்ளது. தலைமைச் செயலகத்தில் எலித் தொல்லை போக்கும் பணியினைச் சிறப்பாக செயல்படுத்தி முடிக்கப்பட்டு எலித்தொல்லை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**நிதி**

14.9 இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆதார மூலதனம் ரூ.800 இலட்சமாகும். தற்போது செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.761 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு 50:50 பங்குதாரர்களாக உள்ளனர்.

**ஈவுத் தொகை**

14.10 கடந்த 2002-2003 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட்ட ரூ.761 இலட்சம் பங்கு மூலதனத் தொகையில் ஈவுத் தொகையாக ரூ.60.88 இலட்சம் இயக்குநர் குழுவால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது

செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 8 சதவீதமாகும். இந்நிறுவனமானது கடந்த 2002–2003 ஆம் நிதியாண்டில் ரூ.331.28 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. நிகழும் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.120 இலட்சம் இலாபம் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல்வேறு சரக்கு வைப்பாளர்கள் பெருமளவு இட வசதியினை ரத்துச் செய்து விட்ட நிலையிலும், இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியன முன் வைப்பு வசதிகளை முழுவதுமாக விலக்கிவிட்டதாலும், மேலும் தமிழ்நாட்டில் தொடர்ந்து வரும் வறட்சியின் காரணமாகவும் இட வசதி உபயோகம் குறைந்து 2003–04 ஆம் ஆண்டில் இலாபம் குறைவுற்றது.

**கட்டுமானப் பணிகள்**

14.11 2002–2003 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டையில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 (நான்கு) சிறிய கிடங்குகள் கட்டப்பட்டு, கடந்த 1-1-2003 முதல் சொந்தக் கிடங்கில் செயல்பட்டு வருகின்றன. கிடங்குகளை பழுதுபார்க்கும் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், கிடங்கு வளாகத்தில் தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல், தரைகளைச் சீர்படுத்துதல், கிடங்குக் கூரையினைப் புதுப்பித்தல், சுற்றுச்சுவர் எழுப்புதல் போன்ற பணிகளையும் கிடங்குப் பணியாளர்களுக்கும் / சுமைதூக்கும் தொழிலாளிகளுக்கும் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், தங்கும் அறை கட்டுதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டுள்ளது. நடப்பு ஆண்டில் கள்ளக்குறிச்சி மற்றும் தருமபுரியில் ஒவ்வொன்றும் 5000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளைப் புதியதாக கட்டிட முடிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**எதிர்காலத் திட்டம் (2004–2005)**

14.11 (அ) கள்ளக்குறிச்சி சேமிப்புக் கிடங்கானது தற்சமயம் வாடகைக் கிடங்கில் செயல்பட்டு வருகிறது. பெரும்பாலான சரக்கு வைப்பாளர்களின் இடவசதித் தேவையைப் பூர்த்தி செய்யவும் கிடங்கு வாடகைச் செலவினத்தைக் குறைக்கவும் கள்ளக்குறிச்சியில் 4800 மெட்ரிக் டன் கொள்ளளவில் சொந்த கிடங்கு கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் கூடுதல் இடவசதியைப் பூர்த்தி செய்ய தருமபுரியில் 6520 மெட்ரிக் டன் அளவில் கூடுதல் கிடங்கு கட்ட முடிவு





எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இரு (2) இடங்களுக்கும் கட்டுமானப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**கணினிமயமாக்கல்**

14.12 இந்நிறுவனமானது அனைத்து மட்டத்திலும் கணினி மூலம் செயல்படும் நிலையை மேற்கொண்டு வருகிறது. தலைமை அலுவலகம் மற்றும் ஏழு மண்டல அலுவலகங்களுக்கும் கணிப்பொறி வசதி ஏற்படுத்தப்படும். இணைய தள வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை அலுவலகத்தில் ஐந்து கணினியில் தமிழ் மென்பொருள் வசதி வடிவமைக்கப்பட்டு உள்ளது. தலைமை அலுவலகத்தினை காகிதம் இல்லாத அலுவலகமாக செயல்படும் பொருட்டு தன்பதிவேடுகளைக் கணினி மூலம் பராமரித்திடும் மென்பொருள் வசதி ஏற்படுத்தப்பட்டு சீரிய முறையில் செயல்பட தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் பல்வேறு பதிவேடுகள் உபயோகத்தினை நீக்கி கணினி மூலம் விவரங்கள் பராமரிக்கப்படுகிறது. மேலும், சம்பளப் பட்டியல், ஊழியர் சேம நல நிதி ஆகிய பிரிவுகள் முழுவதும் கணினி மயமாக்கப்பட்டு செயல்படுகிறது.

14.13 மேலும் இதர பிரிவுகளான வியாபாரம், கணக்கு, தொழில் நுட்பம் ஆகியவற்றிலும் கணினி மூலம் செயல்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதுதவிர கிடங்குகளிலிருந்து தேவையான விவரங்கள் உடனுக்குடன் பெற அனைத்துக் கிடங்குகளிலும் இணைய தள வசதி ஏற்படுத்தப்படும் செயல் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

**பயிற்சிப் பிரிவு**

14.14 நடப்பு ஆண்டில் மேலாண்மை மற்றும் கப்பல் சரக்கு கையாளுகை குறித்து இருபத்து ஐந்து ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும்; அண்ணா மேலாண்மை நிலையம், தேசிய கடல்சார் மேலாண்மைப் பயிற்சி நிலையம், தேசிய துறைமுக மேலாண்மை நிறுவனம் மூலம் சேமிப்பு குறித்த பயிற்சி தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும், மாநிலத்திற்கு வெளியில் உள்ள நிறுவனங்களின் மூலம் கப்பல் சரக்கு கையாளுகை, சரக்கு மண்டி, அபாயகரமான சரக்குகள் கையாளுதல் குறித்த பயிற்சியானது இந்நிறுவன ஊழியர்களுக்கும், மற்ற மாநில சேமிப்புக் கிடங்கு, மத்திய சேமிப்புக் கிடங்கு ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டது.

## அத்தியாயம் 15

### நிறைவுரை

15.1 உலகெங்கிலும் உள்ள கூட்டுறவுகள் பொருளாதார வளர்ச்சியின் சக்தி வாய்ந்த மற்றும் உள்ளாற்றல் மிக்க சாதனங்களாகும். அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் கணிசமாக வளர்ந்துள்ளதைக் காண முடிகிறது. மக்களின் பொருளாதார வளர்ச்சியினை உறுதி செய்வதற்காக கூட்டுறவு வங்கிகளும்/நிறுவனங்களும் பல்வேறு நடவடிக்கைகளில் பெரிதும் துணைபுரிகின்றன. பொதுமக்களின் நலன் காப்பதில் கூட்டுறவுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

15.2 கடந்த மூன்றாண்டுகளாக கடுமையான வறட்சி, அதன் காரணமாக விவசாய உற்பத்தி வீழ்ச்சி மற்றும் கடுமையான நிதி நெருக்கடி போன்ற நிலைமைகளைச் சந்திக்க வேண்டியிருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக உணவுத் தட்டுப்பாடு நிலை ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

15.3 மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆக்கபூர்வமான தலைமையின்கீழ் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடன் இத்துறை பொதுமக்கள் நலன் காக்க தான் ஆற்றும் பணிகளில் இன்னும் கூடுதலான ஆர்வத்தோடு தொடர்ந்து பாடுபடும்.



### இணைப்பு –1

31-03-2004 அன்றைய நிலவரப்படி மாவட்டவாரியாக நியாய விலைக் கடைகளின் விவரம்

| வ எண் | மாவட்டம் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | | கூட்டுறவு | | ஏனைய கூட்டுறவு | | மகளிர் நியாய விலைக் கடைகள் | | நடமாடும் நியாய விலைக் கடைகள் | மொத்தம் | | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முழு | பகுதி | முழு | பகுதி | முழு | பகுதி | முழு | பகுதி | | முழு | பகுதி | |
| 1 | சென்னை—வடக்கு | 215 | 0 | 436 | 3 | 10 | 0 | 0 | 0 | | 661 | 3 | 664 |
| 2 | சென்னை—தெற்கு | 125 | 0 | 462 | 2 | 3 | 0 | 0 | 0 | | 590 | 2 | 592 |
| 3 | காஞ்சிபுரம் | 30 | 0 | 804 | 418 | 2 | 0 | 29 | 19 | | 865 | 437 | 1302 |
| 4 | திருவள்ளூர் | 7 | 0 | 711 | 179 | 1 | 0 | 0 | 6 | | 719 | 185 | 904 |
| 5 | வேலூர் | 41 | 0 | 1141 | 413 | 0 | 0 | 15 | 0 | 3 | 1200 | 413 | 1613 |
| 6 | திருவண்ணாமலை | 3 | 0 | 1054 | 232 | 0 | 0 | 3 | 8 | 1 | 1061 | 240 | 1301 |
| 7 | விழுப்புரம் | 0 | 0 | 1555 | 260 | 0 | 0 | 28 | 0 | 3 | 1586 | 260 | 1846 |
| 8 | கடலூர் | 0 | 0 | 1112 | 134 | 3 | 1 | 8 | 0 | | 1123 | 135 | 1258 |
| 9 | தருமபுரி | 29 | 1 | 415 | 210 | 0 | 0 | 0 | 10 | 1 | 445 | 221 | 666 |
| 10 | சேலம் | 0 | 0 | 1038 | 185 | 0 | 0 | 10 | 0 | 5 | 1053 | 185 | 1238 |
| 11 | நாமக்கல் | 36 | 0 | 547 | 133 | 0 | 0 | 6 | 0 | | 589 | 133 | 722 |
| 12 | ஈரோடு | 14 | 0 | 900 | 217 | 0 | 0 | 41 | 0 | 2 | 957 | 217 | 1174 |
| 13 | கோயம்புத்தூர் | 62 | 0 | 1212 | 256 | 30 | 0 | 0 | 76 | 5 | 1309 | 332 | 1641 |
| 14 | நீலகிரி | 23 | 0 | 243 | 24 | 34 | 0 | 29 | 0 | 8 | 337 | 24 | 361 |
| 15 | கரூர் | 2 | 0 | 336 | 125 | 0 | 0 | 14 | 0 | | 352 | 125 | 477 |
| 16 | பெரம்பலூர் | 3 | 0 | 433 | 159 | 0 | 0 | 1 | 7 | | 437 | 166 | 603 |
| 17 | திருச்சி | 19 | 0 | 797 | 158 | 0 | 0 | 1 | 6 | 1 | 818 | 164 | 982 |

[2004 ஜூலை 31

இணைப்பு-1 தொடர்ச்சி

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | தஞ்சாவூர் | 0 | 0 | 853 | 170 | 1 | 0 | 14 | 0 | | 868 | 170 | 1038 |
| 19 | திருவாரூர் | 0 | 0 | 566 | 63 | 0 | 0 | 5 | 0 | | 571 | 63 | 634 |
| 20 | நாகப்பட்டினம் | 0 | 0 | 565 | 33 | 17 | 0 | 22 | 0 | | 604 | 33 | 637 |
| 21 | புதுக்கோட்டை | 17 | 0 | 667 | 182 | 0 | 0 | 9 | 1 | | 693 | 183 | 876 |
| 22 | திண்டுக்கல் | 16 | 0 | 633 | 125 | 0 | 0 | 10 | 1 | 2 | 661 | 126 | 787 |
| 23 | தேனி | 0 | 0 | 372 | 34 | 1 | 0 | 13 | 0 | | 386 | 34 | 420 |
| 24 | மதுரை | 28 | 0 | 930 | 95 | 3 | 0 | 16 | 1 | | 977 | 96 | 1073 |
| 25 | சிவகங்கை | 19 | 0 | 583 | 24 | 5 | 0 | 1 | 0 | | 608 | 24 | 632 |
| 26 | விருதுநகர் | 25 | 0 | 626 | 118 | 0 | 0 | 12 | 0 | | 663 | 118 | 781 |
| 27 | இராமநாதபுரம் | 19 | 0 | 477 | 31 | 0 | 0 | 17 | 0 | 2 | 515 | 31 | 546 |
| 28 | தூத்துக்குடி | 76 | 6 | 607 | 116 | 0 | 0 | 0 | 3 | | 683 | 125 | 808 |
| 29 | திருநெல்வேலி | 156 | 44 | 752 | 197 | 5 | 2 | 22 | 0 | 3 | 938 | 243 | 1181 |
| 30 | கன்னியாகுமரி | 98 | 7 | 426 | 48 | 36 | 4 | 27 | 0 | | 587 | 59 | 646 |
| 31 | கிருஷ்ணகிரி | 28 | 0 | 454 | 228 | 0 | 0 | 0 | 19 | | 482 | 247 | 729 |
| | மொத்தம் | 1091 | 58 | 21707 | 4572 | 151 | 7 | 353 | 157 | 36 | 23338 | 4794 | 28132 |



2004 ஜூலை 31]

## இணைப்பு-2

### புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் விவரம்

| வ எண் | மாவட்டம் | 01.04.1999ல் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் | 01.04.2001ல் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் | 2001—2003ல் கண்டறியப்பட்ட போலி அட்டைகள் | 2001—2003ல் வழங்கப்பட்ட புதிய குடும்ப அட்டைகள் | 01.04.2004ல் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை—வடக்கு | 821589 | 824139 | 36885 | 12821 | 772150 |
| 2 | சென்னை—தெற்கு | 768863 | 792564 | 27798 | 10712 | 733453 |
| 3 | காஞ்சிபுரம் | 467868 | 487195 | 4999 | 2414 | 453692 |
| 4 | திருவள்ளூர் | 315423 | 387948 | 6312 | 734 | 360790 |
| 5 | வேலூர் | 685047 | 780600 | 15135 | 4251 | 761290 |
| 6 | திருவண்ணாமலை | 476904 | 528889 | 14306 | 3819 | 513911 |
| 7 | விழுப்புரம் | 635633 | 742893 | 6707 | 855 | 711176 |
| 8 | கடலூர் | 492041 | 558860 | 10334 | 544 | 526414 |
| 9 | தருமபுரி | 559368 | 615061 | 8832 | 1263 | 289873 |
| 10 | சேலம் | 742715 | 786353 | 23994 | 2404 | 746123 |
| 11 | நாமக்கல் | 406488 | 432205 | 32874 | 4362 | 407841 |
| 12 | ஈரோடு | 727434 | 807131 | 12444 | 2537 | 750866 |
| 13 | கோயம்புத்தூர் | 993078 | 1205309 | 15232 | 8271 | 1137481 |
| 14 | நீலகிரி | 195103 | 216092 | 8767 | 1682 | 209171 |
| 15 | கரூர் | 243466 | 267639 | 2705 | 1499 | 261766 |
| 16 | பெரம்பலூர் | 263371 | 318248 | 9569 | 749 | 304068 |
| 17 | திருச்சி | 630614 | 642224 | 35142 | 3417 | 600849 |
| 18 | தஞ்சாவூர் | 520317 | 542610 | 7673 | 1104 | 527465 |
| 19 | திருவாரூர் | 276596 | 288294 | 3836 | 1376 | 273955 |
| 20 | நாகப்பட்டினம் | 342734 | 349762 | 12570 | 5243 | 331829 |
| 21 | புதுக்கோட்டை | 315893 | 324040 | 4883 | 2814 | 316095 |
| 22 | திண்டுக்கல் | 401226 | 473458 | 6150 | 117 | 454865 |
| 23 | தேனி | 251384 | 294934 | 3077 | 4152 | 286650 |
| 24 | மதுரை | 621639 | 718735 | 15423 | 6123 | 709156 |
| 25 | சிவகங்கை | 259948 | 298553 | 2825 | 256 | 291875 |
| 26 | விருதுநகர் | 395673 | 464664 | 11614 | 1454 | 441861 |
| 27 | இராமநாதபுரம் | 273191 | 295973 | 2930 | 425 | 292830 |
| 28 | தூத்துக்குடி | 359781 | 414768 | 15788 | 556 | 378325 |
| 29 | திருநெல்வேலி | 607749 | 690324 | 17408 | 12205 | 662980 |
| 30 | கன்னியாகுமரி | 386847 | 426155 | 10422 | 4809 | 425264 |
| 31 | கிருஷ்ணகிரி | | | | | 320858 |
| | **மொத்தம்** | **14437983** | **15975620** | **386634** | **102968** | **15254922** |

## இணைப்பு–3

| 1980-1981 முதல் 2003-2004 ஆம் ஆண்டு வரையிலான மொத்த உணவு மானிய விவரம் | | |
|---|---|---|
| வ.எண் | ஆண்டு | ரூபாய் கோடியில் |
| 1 | 1980 - 1981 | 1.81 |
| 2 | 1981 - 1982 | 23.99 |
| 3 | 1982 - 1983 | 51.68 |
| 4 | 1983 - 1984 | 79.00 |
| 5 | 1984 - 1985 | 83.90 |
| 6 | 1985 - 1986 | 79.00 |
| 7 | 1986 - 1987 | 65.00 |
| 8 | 1987 - 1988 | 117.61 |
| 9 | 1988 - 1989 | 184.53 |
| 10 | 1989 - 1990 | 208.79 |
| 11 | 1990 - 1991 | 219.31 |
| 12 | 1991 - 1992 | 316.00 |
| 13 | 1992 - 1993 | 361.00 |
| 14 | 1993 - 1994 | 335.00 |
| 15 | 1994 - 1995 | 317.00 |
| 16 | 1995 - 1996 | 615.00 |
| 17 | 1996 - 1997 | 874.00 |
| 18 | 1997 - 1998 | 905.00 |
| 19 | 1998 - 1999 | 907.00 |
| 20 | 1999 - 2000 | 1145.00 |
| 21 | 2000 - 2001 | 1540.00 |
| 22 | 2001 - 2002 | 1240.00 |
| 23 | 2002 - 2003 | 1240.00 |
| 24 | 2003 - 2004 | 800.00 |





## இணைப்பு–4

| ஆண்டுவாரியாக நுகர்வு மற்றும் வெளிச்சந்தை விலை விவரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | ஆண்டு | மாநிலத்திற்கான சராசரி வெளிச்சந்தை அரிசி விலை | | பொது விநியோகத் திட்ட அரிசி விற்பனை விலை | | வருடாந்திர அரிசி நுகர்வு விவரம் (மெட்ரிக் டன்) |
| | | சாதா ரகம் | சன்னம் மற்றும் மிகச் சன்னம் | சாதா ரகம் | சன்னம் மற்றும் மிகச் சன்னம் | |
| 1 | 1996 | 8.44 | 9.93 | 2.00 | 3.75 | 2413006 |
| 2 | 1997 | 8.53 | 9.50 | 2.00 | 3.75 | 2218618 |
| 3 | 1998 | 9.09 | 10.44 | 2.00 | 3.75 | 2147784 |
| 4 | 1999 | 10.10 | 11.45 | 2.00 | 3.75 | 2208013 |
| 5 | 2000 | 10.55 | 11.60 | 3.50 | 3.50 | 2116477 |
| 6 | 2001 | 10.36 | 11.38 | 3.50 | 3.50 | 2153428 |
| 7 | 2002 | 10.69 | 12.02 | 3.50 | 3.50 | 2220515 |
| 8 | 2003 | 11.79 | 12.41 | 3.50 | 3.50 | 2005978 |

** *01-10-2002 முதல் 31-08-2003 வரை பொது விநியோகத் திட்ட அரிசி விற்பனையில் முதல் 10 கிலோ அரிசி கிலோ ரூபாய் 3.50 என்ற விலையிலும் மீதமுள்ள தகுதி அளவு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 6 என்ற விலையில் விற்கப்பட்டது.*

## இணைப்பு-5

**2003-2004 ஆம் ஆண்டில் நியாய விலைக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டது குறித்த விவரம்**

| வ. எண் | மாதம் | ஆய்வு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை | (எண்ணிக்கையில்) அளவு குறைவு | போலிப் பட்டியல் | கூடுதல் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஏப்ரல் '03 | 28462 | 818 | 7278 | 1190 | 8510 |
| 2 | மே '03 | 22618 | 430 | 4600 | 486 | 6535 |
| 3 | ஜூன் '03 | 22615 | 416 | 3479 | 432 | 5694 |
| 4 | ஜூலை '03 | 15178 | 518 | 1298 | 222 | 3193 |
| 5 | ஆகஸ்ட் '03 | 26649 | 1318 | 7484 | 931 | 7474 |
| 6 | செப்டம்பர் '03 | 22504 | 2152 | 4718 | 381 | 5980 |
| 7 | அக்டோபர் '03 | 26182 | 1679 | 3816 | 514 | 5589 |
| 8 | நவம்பர் '03 | 25194 | 1836 | 3171 | 373 | 6626 |
| 9 | டிசம்பர் '03 | 24855 | 2139 | 4275 | 794 | 6499 |
| 10 | ஜனவரி '04 | 26649 | 1318 | 7484 | 931 | 7474 |
| 11 | பிப்ரவரி '04 | 27029 | 2393 | 4444 | 452 | 9154 |
| 12 | மார்ச் '04 | 29279 | 2290 | 5706 | 529 | 9624 |
| | **மொத்தம்** | **297214** | **17307** | **57753** | **7235** | **82352** |



## இணைப்பு-6

2003-2004 ஆம் ஆண்டில் உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட மற்றும் உணவு பொருள் வழங்கல் துறையால் பறிமுதல் செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் அளவு மற்றும் மதிப்பின் விவரம்.

| வ. எண் | பொருட்கள் | கைப்பற்றப்பட்டது: உணவுப் பொருள் வழங்கல் துறை அளவு | கைப்பற்றப்பட்டது: உணவுப் பொருள் வழங்கல் துறை மதிப்பு ரூபாயில் | கைப்பற்றப்பட்டது: குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அளவு | கைப்பற்றப்பட்டது: குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை மதிப்பு ரூபாயில் | பறிமுதல் செய்யப்பட்டது: உணவுப் பொருள் வழங்கல் துறை அளவு | பறிமுதல் செய்யப்பட்டது: உணவுப் பொருள் வழங்கல் துறை மதிப்பு ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொது விநியோகத் திட்ட அரிசி (குவி) | 8386 | 6174492 | 4991 | 5864586 | 8605 | 7534072 |
| 2 | வெளிச்சந்தை அரிசி (குவி) | | | | | | |
| 3 | நெல் (குவி) | | | | | 73 | 47450 |
| 4 | மண்ணெண்ணெய் (லிட்டரில்) | 92054 | 833495 | 158530 | 2289301 | 196061 | 2277686 |
| 5 | பெட்ரோல் (லிட்டரில்) | 17646 | 449373 | 40108 | 872299 | 15825 | 517891 |
| 6 | டீசல் (லிட்டரில்) | 2458 | 49920 | 58134 | 1236918 | 11562 | 219525 |
| 7 | சமையல் எரிவாயு உருளைகள் | 619 | 423626 | 9235 | 27944680 | 4520 | 9369466 |
| 8 | ஏனையவை | | 459612 | | 9650368 | | 2963600 |
| | **மொத்தம்** | **121163** | **8390518** | **270998** | **47858152** | **236646** | **22929690** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சோதனைகளின் எண்ணிக்கை | 3186 | | 7205 | | | |
| கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | 0 | | 204 | | | |

## இணைப்பு-7

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ஜனவரி 2003 முதல் மார்ச் 2004 வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

| வ. எண் | மாதம் 2003 | மேல் முறையீட்டு மனு | | | | அசல் மனு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடுக்கப்பட்டவை | தீர்ப்பு வழங்கப்பட்டவை (முந்தைய நிலுவையும் சேர்த்து) | நுகர்வோருக்கு சாதகமாக | நுகர்வோருக்கு பாதகமாக | தொடுக்கப்பட்டவை | தீர்ப்பு வழங்கப்பட்டவை (முந்தைய நிலுவையும் சேர்த்து) | நுகர்வோருக்கு சாதகமாக | நுகர்வோருக்கு பாதகமாக |
| 1 | ஜனவரி | 52 | 135 | 40 | 95 | 9 | 16 | 5 | 11 |
| 2 | பிப்ரவரி | 114 | 30 | 10 | 20 | 16 | 13 | 5 | 8 |
| 3 | மார்ச் | 118 | 60 | 35 | 25 | 18 | 0 | 0 | 0 |
| 4 | ஏப்ரல் | 92 | 4 | 0 | 4 | 1 | 34 | 4 | 30 |
| 5 | மே | 131 | 54 | 0 | 54 | 4 | 1 | 1 | 0 |
| 6 | ஜூன் | 16 | 0 | 0 | 0 | 11 | 0 | 0 | 0 |
| 7 | ஜூலை | 41 | 0 | 0 | 0 | 7 | 0 | 0 | 0 |
| 8 | ஆகஸ்ட் | 29 | 0 | 0 | 0 | 5 | 0 | 0 | 0 |
| 9 | செப்டம்பர் | 46 | 0 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 10 | அக்டோபர் | 26 | 0 | 0 | 0 | 6 | 0 | 0 | 0 |
| 11 | நவம்பர் | 46 | 1 | 1 | 0 | 2 | 1 | 1 | 0 |
| 12 | டிசம்பர் | 137 | 97 | 17 | 80 | 1 | 20 | 5 | 15 |
| | 2004 | | | | | | | | |
| 13 | ஜனவரி | 31 | 94 | 18 | 76 | 1 | 5 | 4 | 1 |
| 14 | பிப்ரவரி | 31 | 76 | 37 | 39 | 3 | 28 | 13 | 15 |
| 15 | மார்ச் | 151 | 81 | 36 | 45 | 2 | 33 | 21 | 12 |
| | மொத்தம் | 1061 | 632 | 194 | 438 | 88 | 151 | 59 | 92 |





## இணைப்பு-8

மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் 2003 ஜனவரி முதல் மார்ச் 2004 வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

| வரிசை எண் | மாதம் | தொடக்கத்தில் நிலுவையில் உள்ளவை | தொடுக்கப்பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப்பட்டவை | நுகர்வோருக்கு சாதகமாக | நுகர்வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|
| | **2003** | | | | | | |
| 1 | ஜனவரி | 6242 | 372 | 6614 | 415 | 211 | 204 |
| 2 | பிப்ரவரி | 6199 | 352 | 6551 | 463 | 234 | 229 |
| 3 | மார்ச் | 6088 | 356 | 6444 | 454 | 234 | 220 |
| 4 | ஏப்ரல் | 5990 | 386 | 6376 | 430 | 203 | 227 |
| 5 | மே | 5946 | 339 | 6285 | 358 | 139 | 219 |
| 6 | ஜூன் | 5927 | 408 | 6335 | 358 | 172 | 186 |
| 7 | ஜூலை | 5977 | 344 | 6321 | 360 | 98 | 262 |
| 8 | ஆகஸ்ட் | 5961 | 455 | 6416 | 343 | 187 | 156 |
| 9 | செப்டம்பர் | 6073 | 534 | 6607 | 410 | 234 | 176 |
| 10 | அக்டோபர் | 6197 | 344 | 6541 | 322 | 160 | 162 |
| 11 | நவம்பர் | 6219 | 314 | 6533 | 297 | 168 | 129 |
| 12 | டிசம்பர் | 6236 | 363 | 6599 | 270 | 156 | 114 |
| | **2004** | | | | | | |
| 13 | ஜனவரி | 6329 | 285 | 6614 | 374 | 244 | 130 |
| 14 | பிப்ரவரி | 6240 | 311 | 6551 | 247 | 128 | 119 |
| 15 | மார்ச் | 6304 | 392 | 6696 | 310 | 160 | 150 |
| | **மொத்தம்** | **91928** | **5555** | **97483** | **5411** | **2728** | **2683** |

[2004 ஜூலை 31

## இணைப்பு IV

*(79 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 15 – நிதித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

தமிழக அரசின் பொது நிதி நிருவாகப் பொறுப்பு நிதித் துறையைச் சார்ந்தது. ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்யும் பணியும் இதில் அடங்கும். ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு சட்டப் பேரவை அனுமதி அளித்ததும், நிதித் துறை, மாநில அரசின் திட்ட வளர்ச்சி இலக்குகளை எய்தும் பணியில் ஏனைய செயலக நிருவாகத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுகிறது. வரவுக்கேற்றபடி செலவினங்களைச் சீர்செய்து ஒட்டுமொத்த வளர்ச்சியையும், அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டும், தேவை, செலவுக்கேற்ற பயன், வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், நிதி நடைமுறை முதலியவற்றின் அடிப்படையில் செலவு செயற்குறிப்புகளை ஆராய்வதில் நிதித் துறைக்கு முக்கியப் பங்கு உள்ளது. 2003 ஆம் ஆண்டு நிதிப் பொறுப்புச் சட்டத்தின்கீழ், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் எய்தப்படுவதை உறுதி செய்யவேண்டிய பொறுப்பும் நிதித் துறைக்கு உள்ளது.

2. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், பின்வரும் ஏழு துறைத் தலைவர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன:

1. கருவூல்க் கணக்குத் துறை
2. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை
3. சிறு சேமிப்புத் துறை
4. அரசு தகவல் தொகுப்பு விவர மையம்
5. கூட்டுறவு தணிக்கைத் துறை
6. அரசுத் துறை நிறுவன - தணிக்கைத் துறை
7. ஓய்வூதிய இயக்ககம்



2004 ஜூலை 31]

3. நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் வருமாறு:

**கருவூலக் கணக்குத் துறை**

4. கருவூலக் கணக்குத் துறை 01-04-1962 அன்று ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின்கீழ், 8 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 30 மாவட்டக் கருவூலங்கள், 203 சார் கருவூலங்கள், 3 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், முத்திரைத்தாள் உதவிக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் சென்னையிலுள்ள கருவூலக் கணக்குத் துறை ஆணையாளரின் தலைமையிட அலுவலகம் ஆகியவை உள்ளன. அரசுப் பணியாளர்களுக்குச் சம்பளங்களும், ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியமும் வழங்குவதும், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ஒப்புதலளித்த தொகைகளை அரசுத் துறைகளுக்கு வழங்குவதும் இத்துறையின் முதன்மையான பணியாகும். அரசுக்குச் சேரவேண்டிய தொகைகளைப் பெற்று, அவற்றுக்கான விரிவான கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அளிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். பத்திரப் பதிவுக்கு வேண்டிய முத்திரைத் தாள்கள் உரியவாறு வழங்கப்படுவதையும் கருவூலக் கணக்குத் துறை கவனிக்கிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நல நிதியைக் கருவூலக் கணக்குத் துறை பராமரிக்கிறது. அரசுத் துறைகள் வைப்பீடு செய்யும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்களைக் கருவூலங்கள் பத்திரமாகப் பாதுகாக்கின்றன.

5. நிதித் தகவல்களை அளித்தல், பொறுப்பேற்ற சேவைப் பணிகளை வழங்குதல் ஆகியவற்றை மேம்படுத்தும்நோக்கில், கருவூலக் கணக்குத் துறை நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரில், ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு இசைவு முறையில் (ECS) ஓய்வூதியம் அளிக்கப்படுகின்றது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து, முன்னோடி அடிப்படையில், சென்னை மற்றும் மதுரையிலுள்ள அரசுப் பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்க மின்னணு இசைவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

6. இத்துறையை நவீனப்படுத்துவதற்கு ஏதுவாக வங்கிசாரா சார் கருவூலங்கள், வங்கிசார்ந்த சார் கருவூலங்களாக மாற்றப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

7. கருவூலங்கள், சம்பளக் கணக்கு அலுவலகங்களில் கணினிமூலம் பட்டிகளுக்குத் தொகை அனுமதிக்கும் முறையை (On Line Bill passing System) படிப்படியாக அறிமுகப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. கருவூலங்கள், சார் கருவூலங்கள் ஆகியவற்றைத் தலைமையிடத்துடன் இணைப்பதும் கருதப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் கருவூல நடைமுறைகளில் சிறப்பு மின் ஆளுகையை அறிமுகப்படுத்துவதற்காக 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டக் கருவூலத்திற்காக ரூ.71.04 இலட்சம் மூலதனச் செலவில் புதிய கட்டடங்கள் கட்டும் பணி 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை**

8. மாநிலத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் இதர பல்வகை நிறுவனங்களின் கணக்குகளை அவ்வவற்றுக்குத் தொடர்புடைய சட்ட விதிகளின்கீழ், சட்டபூர்வத் தணிக்கை செய்யும் பொறுப்பு, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

9. கீழ்க்காணும் நிறுவனங்கள் இத்துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:

| தொடர் எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 6 |
| 2 | நகராட்சிகள் | 102 |
| 3 | பேரூராட்சிகள் | 611 |
| 4 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 5 | மாவட்ட ஊராட்சிகள் | 29 |
| 6 | பல்கலைக்கழகங்கள் | 16 |
| 7 | மாவட்ட நூலக ஆணைக் குழு | 29 |
| 8 | மாவட்ட விற்பனைக் குழு | 20 |
| 9 | பல்வகை நிறுவனங்கள் | 09 |
| 10 | தேசிய சமூக நலத் திட்டம் | 29 |
| 11 | உள்ளாட்சி திட்டமிடல் அதிகார மன்றங்கள் | 20 |
| 12 | கிராம ஊராட்சிகள் (சோதனைத் தணிக்கை மட்டும்) | 1198 |



2004 ஜூலை 31]

10. மேற்சொன்ன நிறுவனங்கள் தொடர்பாக சென்ற ஆண்டில், இத்துறை மொத்தம் ரூ. 8,240 கோடி மதிப்பிலான நிதிப் பற்று வரவுகளைத் தணிக்கை செய்தது.

**ஊராட்சி ஒன்றியங்களில் உடனிகழ் தணிக்கை**

11. அரசு 2000-2001 ஆம் ஆண்டு முதல் 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடனிகழ் தணிக்கை முறையை அறிமுகம் செய்துள்ளது. இத்தணிக்கை 15-9-2000 ஆம் நாள் முதல் காலாண்டிற்கொரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிணங்க, 119 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர்/ ஒரு உதவி ஆய்வாளர் ஆகியோர் அடங்கிய ஒரு தணிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

12. உடன் தணிக்கை முறையில், தணிக்கையில் கண்டறியப்பட்ட தணிக்கை மறுப்புகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக, உடனுக்குடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அனுப்பப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் சரிசெய்யப்பட்ட பின்னர், அனுப்பப்படும் பதில்கள், சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு, அவை தொடர்பான தணிக்கை மறுப்புகளுக்குத் தீர்வு காணப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து ஆண்டுக் கணக்குகள் வரப்பெற்றவுடன், அதைச் சரிபார்த்து ஊராட்சி ஒன்றியத்தால் தீர்வு செய்யப்படாமல் நிலுவையிலுள்ள தணிக்கைச் சீட்டு பத்திகளையும் சேர்த்து தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியக் கணக்குகளின் தணிக்கை, ஏறக்குறைய நாளது வரையிலாக ஆக்கப்பட்டுவிட்டது. 29-02-2004 ஆம் நாள் நிலவரப்படி, 2002-2003 ஆம் ஆண்டு வரையிலான 385 ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகள் தணிக்கை செய்து முடிக்கப்பட்டுவிட்டன. 333 ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை, 2003-2004 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுத் தணிக்கையும் முடிக்கப்பட்டுவிட்டது.

**நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையைச் செயற்படுத்தல்**

13. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் தற்போது பின்பற்றப்பட்டு வருகின்ற ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையைச் சீரமைக்கும் ஒரு நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு, 1999-2000,

[2004 ஜூலை 31

2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையை இரு கட்டங்களாகச் செயற்படுத்தியுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை செயல்படுத்தப்பட்டது. ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் உண்மையான நிதிநிலையில் அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் தயாரிக்க, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறைக் கோட்பாட்டைப் பின்பற்றுவதே இந்தக் கணக்கு வைப்பு முறையின் நோக்கமாகும். இந்த நடைமுறையின் உதவியால், நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள், கைவசமுள்ள சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடு அறிந்துகொள்ள முடியும். மேலும், இந்த நடைமுறை, புதிதாக உருவாக்கப்பட்ட சொத்துக்களின் உண்மையான மதிப்பையும் ஏற்கெனவே உள்ள சொத்துக்களைப் பொறுத்தவரை, தேய்மானம் போக அவற்றின் சரியான மதிப்பினையும் கணக்கில் கொண்டுவரவும் உதவுகிறது. இது ரொக்க அடிப்படை கணக்கு வைப்பு முறையில் சாத்தியமில்லை. இதனால் உள்ளாட்சி நிறுவனங்கள் அரசின் நிதி உதவியை எதிர்பாராது நிதி நிறுவனங்களிடமிருந்து எளிதில் நிதி உதவி பெற்று மூலதனத் திட்டப் பணிகளைச் செயல்படுத்தவும் முடிகிறது.

14. நாடு முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையின் செயலாக்கத்தை இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் மறு ஆய்வு செய்தார். அதன் சிறப்பு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக பணிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. விரிவான ஆய்விற்குப் பின்னர், அக்குழு இந்தக் கணக்கு வைப்பு முறையை இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலுமுள்ள நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் செயல்படுத்தப் பரிந்துரைத்துள்ளது. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் இந்த முறையை ஏற்றுக்கொண்டு, ஏனைய மாநிலங்களிலும் இனிவரும் நிதியாண்டிலிருந்து இந்தக் கணக்கு வைப்பு முறையைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார். இந்தியாவில் இந்த முறையை முதன்முதலில் வெற்றிகரமாகச் செயல்படுத்திய மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.



2004 ஜூலை 31]

**தணிக்கை மறுப்புரைகளுக்கான தீர்வு**

15. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். தணிக்கையில் கண்டறியப்படும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய இனங்கள் மாதாந்திர அறிக்கைமூலம் அரசுக்கும் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையின் தலைவருக்கும், தெரியப்படுத்தப்படுகின்றது.

16. சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, கூட்டமர்வின் மூலம் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அதிகாரிகள் மூலமாக தணிக்கை மறுப்புரைகளுக்கான தீர்வு உடனடியாகக் காணப்படுகிறது.

**தணிக்கை நிலை**

17. 29-2-2004 அன்றைய நிலவரப்படி பல்வேறு நிறுவனங்களின் தணிக்கைநிலை விவரம் கீழ்வருமாறு: அனைத்து நிறுவனங்களிலும் நாளதுவரை தணிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன என்று கூறலாம்.

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை கணக்குகள் முடிவுற்ற ஆண்டு | தணிக்கை கணக்குகள் நடைபெற்று வரும் ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 6 | 2001-2002 | 2002-2003 |
| 2. | நகராட்சிகள் | 102 | 2001-2002 | 2002-2003 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 | 2002-2003 | 2003-2004 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 29 | 2002-2003 | ---- |
| 5. | பேரூராட்சிகள் | 611 | 2001-2002 | 2002-2003 |
| 6. | பல்கலைக் கழகங்கள் | 16 | 2001-2002 | 2002-2003 |
| 7. | மாவட்ட நூலக ஆணைக் குழு | 29 | 2000-2001 | 2001-2002 |
| 8. | விற்பனைக் குழுக்கள் | 20 | 2000-2001 | 2001-2002 |

[2004 ஜூலை 31

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 | 2001-2002 | 2002-2003 |
| 10. | உள்ளாட்சி நகரமைப்பு அதிகார மன்றம் | 20 | 2001-2002 | 2002-2003 |
| 11. | பல்வகை நிறுவனங்கள் | 9 | 2001-2002 | 2002-2003 |

**பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்**

18. இத்துறையின் தணிக்கை வரம்பிற்குள் வரும் பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு மாநில/மத்திய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் வழங்கப்படும் மானியங்களைப் பயன்படுத்தியதற்கு, இத்துறையில் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

**சிறப்புப் பணிகள்**

19. வழக்கமான தணிக்கைப் பணியுடன், கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1. நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேருராட்சிப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதியை நிருவகித்தல்.

2. உள்ளாட்சி நிறுவனங்களின் கருவூல வைப்பு நிதிக்கு வட்டி அளித்தல்.

3. அரசு அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்.

**உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதியை நிருவகித்தல்**

20. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்களுக்குச் சான்றளித்தல் மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகளை ஒருங்கிணைத்து நிருவகிக்கிறது. கீழே குறிப்பிட்டுள்ளவாறு, 27,377 ஓய்வூதியதாரர்கள் நான்கு



2004 ஜூலை 31]

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளான பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றின்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். 2004-05 நிதி ஆண்டிற்கு உள்ளாட்சி மன்றங்களிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வுகாலப் பயன்கள் வழங்க தேவைப்படும் நிதி ரூ.130.35 கோடியாகும். ஓய்வூதியப் பயன்களும் உடனுக்குடன் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | உள்ளாட்சி மன்றங்களின் பெயர் | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | 2004-2005 ஆம் ஆண்டிற்கான தேவை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகள் | 90க்குக்கீழ் 1500<br>90க்குமேல் 310 | 2563<br>4406 |
| 2. | பேரூராட்சிகள் | 4938 | 2403 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 7839 | 3663 |
| | மொத்தம் | 27377 | 13035 |

21. உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கத்தக்க மானியப் பகிர்வுத் தொகையிலிருந்து மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பயன்கள் வழங்கத் தேவைப்படும் தொகையை, அரசு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்கிறது. இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசு, அரசாணை நிலை எண் 6, நாள் 27-1-2003-ல், இதுகாறும் அந்தந்த நகராட்சி நிதியிலிருந்து ஓய்வூதியம் பெற்றுவந்த 90-க்கும்கீழ் வகையினருக்கு, இந்த இயக்ககத்தினால் பராமரித்து வரப்படுகின்ற நிதியிலிருந்து ஓய்வூதியமும், ஓய்வுக் காலப் பயன்களும் வழங்கும் பொறுப்பை, இந்த இயக்ககத்திடம் ஒப்படைத்துள்ளது.

22. மாநகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் பெறுவதற்கான தணிக்கைச் சான்றிதழ்கள் இத்துறையின் உள்ளுறைத் தணிக்கைக் குழுக்களால் வழங்கப்படுகின்றன. அதன் அடிப்படையில், இவர்களது ஓய்வூதியப் பயன்களை, அந்தந்த நிறுவனங்கள் தமது நிதியிலிருந்து வழங்குகின்றன.

[2004 ஜூலை 31

**உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

23. அரசாணை நிலை எண் 533, நிதித் துறை, நாள் 17-6-1967-ன்படி உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும், அவற்றின் முதலீடுகளும் அரசால் ஏற்கப்பட்டன. உள்ளாட்சி மன்றங்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து வட்டிக்கான கேட்பு பெறப்பட்டு இந்தத் தலைப்பின்கீழ் அரசால் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வட்டித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 8 கோடி வட்டித் தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து கேட்பு பெறப்பட்டதன்பேரில் தொகை வழங்கப்பட்டது.

**அறக்கட்டளை நிதிக் கணக்குகளின் பொருளாளர்**

24. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், அறக்கட்டளை நிதிப் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளை நிதிக்கான பொருளாளர், கல்விக்காக உருவாக்கப்பட்ட அறக்கட்டளைக்கு நன்கொடைகள் பெறுகிறார். அந்த அறக்கட்டளையை, அரசு ஏற்று ஆணை பிறப்பித்து நிருவகிக்கப்படும் திட்டங்கள் அரசிதழில் வெளியிடப்பட்ட பின்னரே அறக்கட்டளை செயல்பாட்டுக்கு வரும். இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது, அறக்கட்டளை நிதிப் பொருளாளரின் கட்டுப்பாட்டில், ரூபாய் 4 இலட்சம் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.7.87 கோடி மதிப்புள்ள 454 மாநிலஅரசு அறக்கட்டளைகளும் உள்ளன.

**சிறுசேமிப்புகள்**

25. சிறுசேமிப்பு, மாநிலத் திட்டங்களுக்கும், அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடுகளுக்கும் தேவைப்படும் நிதியுதவியை வழங்குவதற்கு உதவும் முக்கியமான மிகப் பெரிய கடன் ஆதாரமாக விளங்குகிறது. மத்திய அரசு, 1-4-2002-லிருந்து மாதந்தோறும் வசூலாகும் நிகர சிறுசேமிப்பு வசூலுக்குச் சமமான தொகையை, மாநில அரசுக்கு கடனாக வழங்கி வருகிறது. இக்கடன் தொகைக்கு மத்திய அரசு 9.5% வட்டி விதிக்கிறது. 2004-05 ஆம் ஆண்டுக்கான நிகர இலக்கு ரூ.4,500 கோடியாக அரசு நிர்ணயித்துள்ளது.



2004 ஜூலை 31]

26. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்ற பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் உள்ளன. அவை வருமாறு:—

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

(அ) வருவாய்த் திட்டம்

- (i) கிசான் விகாஸ் பத்திரம்

(ஆ) வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம்

- (i) தேசிய சேமிப்புப் பத்திரம் VIII -ஆவது வெளியீடு
- (ii) 15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதி

(இ) நிரந்தர வருவாய் அளிக்கும் திட்டம்

- (i) அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம்
- (ii) அரசு/பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கான முதலீட்டுத் திட்டம்

(ஈ) நிரந்தர சேமிப்புத் திட்டம்

- (i) அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்

(உ) குறித்த கால வைப்புத் திட்டங்கள்

- (i) 1 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
- (ii) 2 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
- (iii) 3 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
- (iv) 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்

27. பல்வேறு திட்டங்களுக்கு அளிக்கப்படும் வட்டி வீதங்கள் மத்திய அரசால் திருத்தப்படுவதற்கு உட்பட்டவையாகும். 1-3-2003 ஆம் நாள் முதல் சிறு சேமிப்புத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் வட்டி வீதங்கள் வருமாறு:—

| தொடர் எண் | திட்டம் | 1-3-2003 முதல் வட்டி வீதங்கள் |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் | 8.00% |
| 2. | ஓராண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.25% |
| | ஈராண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.50% |
| | மூன்றாண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.25% |
| | ஐந்தாண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.50% |
| 3. | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | மாதம் ரூபாய் 10 வீதம் 5 வருடம் செலுத்தினால் முடிவில் ரூபாய் 728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும் |
| 4. | தேசிய சேமிப்புப் பத்திரம் 8—வது வெளியீடு | 8.16% |
| 5. | பி.பி.எப். | 8.00% |
| 6. | கிசான் விகாஸ் பத்திரம் | 8 ஆண்டுகள் 7 மாதங்களில் முதலீடு இரட்டிப்பாகும் |
| 7. | அஞ்சலக சேமிப்புக் கணக்கு | 3.5% |
| 8. | ஓய்வு பெறும் அரசு/பொதுத் துறை பணியாளர்களுக்கான வைப்புத் திட்டம் | 7.00% |

## 2003–04 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை

28. மாநில அரசு, ஒவ்வொரு ஆண்டும், மாநிலம் முழுமைக்கும் சிறுசேமிப்பு வசூல் இலக்கினை நிர்ணயித்து, அதில் ஒவ்வொரு





மாவட்டமும் வசூலிக்க வேண்டிய தொகையின் அளவையும் வரையறுக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட நிகர வசூல் இலக்கு ரூபாய் 3,500 கோடியாகும். திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும், அரசு நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்கு அந்தந்த மாவட்டாட்சியர்களும், சென்னை மாநகராட்சி ஆணையாளரும் பொறுப்பாவர். 2003–2004 ஆம் ஆண்டின் நிகர வசூல் தொகை ரூபாய் 3,968.63 கோடியாகும்.

## சிறுசேமிப்புக்குரிய முகவர் அமைப்பு

29. சிறுசேமிப்பு வசூலில், சிறுசேமிப்பு முகவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். வெவ்வேறு வகை சேமிப்புத் திட்டங்களுக்காக 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | முகவரமைப்பு வகை | முகவர் நியமிக்கப்பட்ட திட்டங்கள் | 31-3-2004 ஆம் நாள் நிலவரப்படி மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகமைத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் | 14,288 |
| 2 | மகளிர் முகவர்கள் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 23,954 |
| 3. | (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) அதிகாரப்பூர்வ முகவர்கள் | பி.பி.எப். | 1,460 |
| | மொத்தம் | | 39,702 |

[2004 ஜூலை 31

*30.* இத்திட்டத்தின்கீழ் வராத வட்டாரங்கள், கிராமங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில், அதிக எண்ணிக்கையில் முகவர்களை நியமிப்பதன்மூலம், 400 வீடுகளுக்கு ஒரு முகவர் என்ற அரசின் வரைமுறை நிறைவு செய்யப்படும்.

**முகவர்களுக்கான ஊக்கத் தொகை**

*31.* முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்கு, கீழ்க்காணும் வீதத்தில் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:—

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டங்களின் பெயர்கள் | மத்திய அரசு வழங்கும் தரகுத் தொகை | மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகமைத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், கிசான் விகாஸ்பத்திரம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, 1, 2, 3, 5 ஆண்டுகளுக்கான குறித்த கால முதலீடு, ஓய்வு பெறும் அரசு/ பொதுத் துறை பணியாளர்களுக்கான வைப்புத் திட்டம் | 0.5 முதல் 1 சதவீதம் வரை | 0.5 முதல் 1 சதவீதம் வரை | 1% முதல் 2% வரை |
| 2 | மகளிர் முகவர் | தொடர் வைப்புத் திட்டம் | 4% | 2% | 6% |
| 3 | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் | பொது வருங்கால வைப்பு நிதி | 1% | 1% | 2% |



2004 ஜூலை 31]

*32.* முகவர்களின் ஊக்கத் தொகையை அவர்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் அஞ்சலகங்களிலேயே, அவரவர் கணக்குகளில் வரவு வைக்க, அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்காக, அரசு, ரூபாய் 45 கோடி அனுமதித்துள்ளது.

**அரசு சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள்**

*33.* தொய்வற்ற விளம்பரம், முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ஊக்கத் தொகைகள் ஆகியவை மூலம், தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் திட்டத்தை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

**உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத் தொகை திட்டம்**

*34.* சிறுசேமிப்பு வசூலில், உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, முந்தைய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் அதிகமாக ஈட்டும் மாவட்டங்களுக்கு அவை ஈட்டிய வசூல் தொகை அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் அரசு ஊக்க மானியம் வழங்குகிறது. மாவட்டங்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கு அரசு, ரூபாய் 15 கோடி அனுமதித்தது. இவ்வூக்கத் தொகை பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சுகாதார நிலையங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்தல் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**அரசு தகவல் தொகுப்பு விவர மையம்**

*35.* மின்னணுத் தொகுப்பாய்வு சாதனத்தின்மூலம் அரசுத் துறைகள் தொடர்பான நிதிசார் விவரங்களைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்தல், நல்ல முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரித்தல், வருங்காலத்தில் மேலாண்மைத் தகவல் அமைப்பில் மின்னணுத் தொகுப்பாய்வு முறை முக்கியப் பங்கு வகிக்கின்ற வகையில், அதன் பயன்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது.

[2004 ஜூலை 31

அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில், தற்போது பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

1. சிறப்புத் துணைத் தேர்வு முடிவுகள் உள்ளிட்ட பத்தாம் வகுப்பு/ மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்.

2. செயல் திறன் அறிதல், தேர்வு முடிவைத் தொகுத்தல்.

3. சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்.

4. சீருடைப் பணிக்கான ஆட்தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்.

5. தகவல் களஞ்சியம்.

**தேர்வு முறை**

36. பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள், 1974 செப்டம்பரில் கணினிமயமாக்கப்பட்டன. மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகளைத் தொகுக்கும் பணி, 1980 மார்ச் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்போதிலிருந்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு முடிவுகள் உட்பட அனைத்துப் பள்ளி இறுதித் தேர்வு முடிவுகளும் முறையாகத் தொகுக்கப்பட்டு வருகின்றன. மேலும் மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறும் தேர்வுகளின் முடிவுகளும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் துல்லியமாக வெளியிடப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில் 14,33,609 மாணவர்களின் தேர்வு முடிவுகள் தொகுக்கப்பட்டன.

37. மார்ச்/ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் பொதுத் தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தவறிய மாணவர்களுக்கு "உடனடித் துணைத் தேர்வு" நடத்தப்படுமென அரசு அறிவித்துள்ளது. அவர்கள், மேற்படிப்பைத் தொடர்வதற்கு ஓராண்டு காலம் காத்திருக்கத் தேவையில்லை. இந்த ஏற்பாட்டினால், 2003 ஆம் ஆண்டில் 1,06,352 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். உடனடித் தேர்வு அவர்கள் மேற்படிப்பைத் தொடர உதவியது. கடந்த ஆண்டு இந்த முறையின்கீழ், 1,06,352 மாணவர்களின் தேர்வு முடிவுகள் தொகுக்கப்பட்டன.



2004 ஜூலை 31]

**தேர்வர்களின் எண்ணிக்கை**

| தேர்வுகள் | மார்ச் | சிறப்புத் துணைத் தேர்வு | அக்டோபர் |
|---|---|---|---|
| மேல்நிலை | 5,03,558 | 87,965 | 42,643 |
| எஸ்.எஸ்.எல்.சி | 7,36,331 | 10,768 | 57,720 |
| மெட்ரிகுலேஷன் | 84,694 | 7,432 | 3,647 |
| ஆங்கிலோ—இந்தியன் | 4,921 | 187 | 95 |
| மொத்தம் | 13,29,504 | 1,06,352 | 1,04,105 |

**சட்டக் கல்வி நுழைவுத் தேர்வு**

38. 2003 ஆம் ஆண்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வுகளை நடத்தியது. பி.ஏ., பி.எல்., (ஆனர்ஸ்) பட்டப் படிப்பிற்கான 496 தேர்வர்கள், பி.எல்., (3 வருடங்கள்) பட்டப் படிப்பிற்கான 7404 தேர்வர்கள் மற்றும் பி.எல்., (5 ஆண்டுகள்) பட்டப் படிப்பிற்கான 4964 தேர்வர்களின் தேர்வு முடிவுகள் இந்த மையத்தில் தொகுக்கப்பட்டன.

**தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம்**

39. 2002-2003 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பெண் காவலர்கள் தேர்வு முடிவுகள் இங்கு தொகுக்கப்பட்டன. 2003 ஆம் ஆண்டில் ஆண் காவலர்களின் (நிலை-II) தேர்வு முடிவுகளும் இத்துறையால் தொகுத்தளிக்கப்பட்டன.

**தகவல் களஞ்சியம்**

40. கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றுக்காக மாநிலத் திட்டக் குழுவால் ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் குழுவில் திரட்டப்பட வேண்டிய தகவல்களை நிலைப்படுத்தவும், படிவங்களை வடிவமைக்கவும், காலந்தவறாது விவரங்களைத் திரட்டவும் முடிவு செய்யப்பட்டது. அரசுத் தகவல் தொகுப்பு மையத்தில் உள்ள தகவல் களஞ்சியம், இந்த ஆண்டு இந்தத் தொகுப்புப் பணியை மேற்கொள்ளும்.

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

41. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக, 14 செயல் பதிவாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 80 ஆம் பிரிவிற்கிணங்க தணிக்கை மேற்கொள்வது, கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முக்கியப் பணியாகும்.

கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| தொடர் எண் | பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 11158 |
| 2 | கைத்தறி மற்றும் துணி ஆணையர் | 1630 |
| 3 | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 358 |
| 4 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1794 |
| 5 | தலைமைச் செயல் அலுவலர் பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | |
| 6 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 1031 |
| 7 | மீன்வளத் துறை இயக்குநர் | 1080 |
| 8 | கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 957 |
| 9 | சர்க்கரைத் துறை ஆணையர் | 18 |
| 10 | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 374 |



| | | |
|---|---|---|
| 11 | வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | 220 |
| 12 | பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 45 |
| 13 | சமூக நலத் துறை இயக்குநர் | 139 |
| 14 | ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் | 38 |
| | மொத்தம் | 18842 |

## கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் செயல் பரப்பு

42. கணக்குகளை சரிபார்க்கவும், ஐந்தொகைக் கணக்கும், வரவு-செலவுக் கணக்கும் முறையாகவும், சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யவும் கூட்டுறவுத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

43. கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை இரு வகைப்படும். அவைகளாவன:-

1. உடனிகழ் தணிக்கை
2. அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை

### (i) உடனிகழ் தணிக்கை

44. 45 நாட்களில் தணிக்கைகளை முடிக்கக்கூடிய அளவில் உள்ள சிறிய கூட்டுறவுச் சங்கங்களில் உடனிகழ் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 2003-2004 ஆம் நிதியாண்டில், தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 1.87 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

### (ii) அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை

45. அதிக அளவிலான நிதிப் பற்று வரவுகளைக் கொண்டிருக்கும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதன்படி தணிக்கையாளர்கள் பலவகைப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு, தணிக்கைப் பணியை மேற்கொள்கின்றனர். அந்தந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலைக்கு உட்பட்டு, தணிக்கைக்கான முழுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 7.90 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### தணிக்கைப் பணியில் முன்னேற்றம்

46. கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை மேற்கொண்ட தணிக்கைகளின் விவரம் வருமாறு:-

| வ.எண் | ஆண்டு | முடிக்கப்பெற்ற தணிக்கை அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 1999-2000 | 15871 |
| 2 | 2000-2001 | 19820 |
| 3 | 2001-2002 | 19753 |
| 4 | 2002-2003 | 21654 |
| 5 | 2003-2004 | 21842 |

### சிறப்பு அறிக்கைகள்

47. கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை அளித்த சிறப்பு அறிக்கைகள் மற்றும் அவற்றில் சம்பந்தப்பட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—



2004 ஜூலை 31]

| வ.எண் | ஆண்டு | சிறப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1999-2000 | 1160 | 6591.10 |
| 2 | 2000-2001 | 1121 | 9607.07 |
| 3 | 2001-2002 | 1261 | 6902.90 |
| 4 | 2002-2003 | 1445 | 7450.56 |
| 5 | 2003-2004 | 1146 | 14518.22 |

### அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

48. அரசுத் துறை நிறுவனத் தலைமைத் தணிக்கையாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் அதன் பிரிவுகள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் போன்ற அரசு சார்புடைய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றனர்.

49. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மதிய சத்துணவுத் திட்டம், அரசுத் துறைகளின் உள்துறை அளவிலான தணிக்கை, வேளாண் விரிவாக்க மையங்கள், மாநில அரசிடமிருந்து உதவி மானியங்கள் பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணியும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

50. 1-1-1996 ஆம் நாள் முதல் அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் திருத்தப்பட்ட விகிதத்தில் சம்பள நிர்ணயம் செய்யப்பட்டது சம்பந்தமாக தணிக்கை செய்யும் சிறப்புப் பணியையும் அரசு இத்துறையிடம் ஒபபடைத்துள்ளது. அப்பணி நடைபெற்று வருகிறது. பெரிய நிறுவனங்கள் தொடர்பாக ரூபாய் 2,224.04 கோடி அளவிலான பற்று-வரவுகளை இத்துறை தணிக்கை செய்துள்ளது.

[2004 ஜூலை 31

**ஓய்வூதிய இயக்ககம்**

51. ஓய்வூதிய இயக்ககம், 1-9-1994 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்ககம் பின்வரும் பணிகளை ஆற்றி வருகிறது:—

i. ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்த்து வைத்தல்.

ii. துறைத் தலைவர்களும், அலுவலகத் தலைவர்களும் ஓய்வூதிய செயற்குறிப்புகளை உரிய காலத்தில் மாநில கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்தல் மற்றும் அது தொடர்பாக கால முறைப்படி மறு ஆய்வு மேற்கொள்ளுதல்.

iii. அலுவலர்களும், பணியாளர்களும் ஓய்வூதியப் பயன்களைக் காலதாமதமின்றிப் பெறுவதற்கு இயலும் வகையில், அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்கள், அவர்கள் ஓய்வு பெறும் நாளில் அல்லது அதற்கு முன்னர் முடிவு செய்யப்படுவதை உறுதி செய்ய, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுத்தல்.

iv. ஓய்வூதியதாரர்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்துதல்.

v. சிறப்பு வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் குறித்த பணியை கருவூலங்கள்—கணக்குத் துறையிடமிருந்து எடுத்துக் கொள்ளுதல்.

vi. தமிழ்நாடு அரசு தொழிலகப் பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைக் கவனித்தல்.

vii. தமிழ்நாடு 1995 ஆம் ஆண்டு அரசு ஓய்வூதியதாரர்கள் நல வாழ்வு நிதித் திட்டம்

viii. தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் மற்றும்

ix. தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்



2004 ஜூலை 31]

52. 31-12-2003 ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியதாரர்களின்/ குடும்ப ஓய்வூதியதாரர்களின் மொத்த எண்ணிக்கை வருமாறு:—

| வகை | ஓய்வூதியதாரர்கள் | குடும்ப ஓய்வூதியதாரர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சிவில் ஓய்வூதியதாரர்கள் | 2,39,298 | 1,13,789 | 3,53,087 |
| ஆசிரியர்கள் | 57,277 | 26,763 | 84,040 |
| மொத்தம் | 2,96,575 | 1,40,552 | 4,37,127 |

53. மாவட்ட ஆட்சியர்கள், தங்களுடைய மாவட்டங்களில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஓய்வூதியதாரர்கள் குறைதீர் நாள் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். ஓய்வூதிய இயக்ககத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர், இக்கூட்டங்களில் கலந்துகொண்டு, மாவட்டங்களில் உள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதில் மாவட்ட ஆட்சியர்களுக்கு உதவி செய்கிறார். மாநில கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்தில் முடிவுறாமல் உள்ள இனங்கள் குறித்தும் இவ்வியக்ககம் தொடர் நடவடிக்கை எடுக்கிறது. ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக நேரடியாக அல்லது முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாக ஓய்வூதிய இயக்ககத்திற்கு வரப்பெறும் மனுக்கள் அனைத்தும் கருணையுடன் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து தீர்வு காணப்படுகின்றன.

54. சென்னை-104, உயர் நீதிமன்ற வளாகத்தில், தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தால் ஓய்வூதிய நீதிமன்றம் (அதாலத்) ஒன்று அமைக்கப்பட்டு, அந்நீதிமன்றம், 22-2-2002 முதல் இயங்கி வருகிறது. ஓய்வூதிய நீதிமன்றம் அளிக்கும் உத்தரவுமீது தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக, ஓய்வூதிய இயக்குநர், தலைமைச் செயலகத்தில் உள்ள நிருவாகத் துறைகள் மற்றும் துறைத் தலைவர் அலுவலகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை, அரசு ஏற்படுத்தியுள்ளது. ஓய்வூதிய இயக்குநர், இந்த நீதிமன்றத்தின் தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நீதிமன்றம் (அதாலத்) இதற்கு முன்னர் மாதம் ஒரு முறை நடைபெற்றது. மேலும் அதிக ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவதற்காக, நீதிமன்றம் 2003 டிசம்பர் திங்களிலிருந்து மாதம் இரு முறை நடைபெற்று வருகிறது.

55. ஓய்வுகாலப் பயன்கள் குறித்து ஓய்வூதியதாரர்கள் அறிந்து கொள்வதற்கான வழிகாட்டுக் குறிப்பேடு ஒன்று தயாரிக்கப்பட்டு **www.tn.gov.in/dop** என்ற இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. உடனடியாகப் பயன்பெறுவதற்காக, ஓய்வூதியப் படிவங்களை மேற்சொன்ன இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஓய்வூதிய இயக்ககத்தின் மின் அஞ்சல் முகவரி, **dop@tn.nic.in** ஆகும்.

### தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் நலவாழ்வு நிதித் திட்டம்

56. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள், ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள், தமிழ்நாட்டில் பணியமர்த்தப்பட்டு ஓய்வுபெற்ற அனைத்திந்தியப் பணி அதிகாரிகள் ஆகியோர் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிறப்பு வகை மருத்துவ சிகிச்சை/அறுவை சிகிச்சை பெற நிதியுதவி அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் நலவாழ்வு நிதித் திட்டம் 1-7-1995 ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டு இந்நிதியில் வரவு வைக்கப்படுகிறது. ஓய்வூதியதாரர்கள் அவர்களின் வாழ்நாளில் மேற்கொள்ளக்கூடிய மருத்துவ சிகிச்சை/ அறுவை சிகிச்சைக்கான செலவுத் தொகையில் 75 சதவீதம் அல்லது ரூபாய் 50,000/-, இதில் எது குறைவோ அத்தொகை இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 31-03-2004 வரையில் இந்த நலவாழ்வு நிதித் திட்டத்தின்கீழ், 15,600 ஓய்வூதியதாரர்கள் பயனடைந்துள்ளனர். ரூபாய் 16.53 கோடி ஈடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு நிதித் திட்டம்

57. இறந்துவிடும் ஓய்வூதியதாரர்களின் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கென, 1-1-1998 முதல் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிக்கு ஓராண்டு காலம் செலுத்திய சந்தாத் தொகை பின்னர் ஓய்வூதியதாரர் ஒருவர் இறந்துவிட நேர்ந்தால், அவரது மனைவி / நியமனதாரர்/ சட்டப்படியான வாரிசுதாரருக்கு இந்நிதியிலிருந்து ரூபாய் 25,000/- வழங்கப்படும். இது ஒரு விருப்பத் திட்டமாகும். இந்நிதிக்கு சந்தாத் தொகை செலுத்தி வந்த ஓய்வூதியதாரர்கள் பின் ஒரு தேதியில்,



இத்திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். அதுவரை அவர் செலுத்தி வந்த தொகை அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். தற்போது, ஓய்வூதியதாரர்கள் இந்நிதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 70/- செலுத்தி வருகின்றனர். 31-3-2004 வரையில் மொத்தம் 39,388 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

### 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொழிலகத் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டம்

58. அரசுத் துறைகளில் பணியாற்றும் தினக்கூலிப் பணியாளர்களின் நலனுக்கான இத்திட்டம் 1969 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1-4-1989-க்கு முன்னர், ஊதியத்தில் 8.33 சதவீதம் பணியாளர்களின் பங்களிப்புத் தொகையாகவும், அதற்கு சமமான தொகை தொழிலதிபரின் பங்களிப்புத் தொகையாகவும் இத்திட்டத்திற்கு அளிக்கப்பட்டு வந்தது.

1-4-1989-க்குப் பின்னர் பணியாளர்களின் ஊதியத்தில் 10 சதவீதத் தொகை தொழிலாளரின் பங்களிப்புத் தொகையாக வழங்கப்படுகிறது. அதற்குச் சமமானதொரு தொகையை அரசு தன் பங்களிப்பாக அளிக்கிறது.

59. தற்போது, வேளாண்மை, வனம், பொதுப் பணித் துறை, கால்நடை வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு போன்ற அரசுத் துறைகளைச் சார்ந்த 453 பிரிவுகள் இத்திட்டத்தின் வரம்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மொத்தம் 19,965 உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் வரும் கணக்கு வைப்பு நடைமுறைகள் யாவும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

### 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

60. இத்திட்டம், 01-04-1984 ஆம் நாள் முதற்கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20/- வீதம் 148 மாதங்களுக்குப் பிடித்தம் செய்யப்பட்டு, பின்னர் அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, அவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை, அதற்குரிய வட்டி ஆகியவற்றோடு அரசின் பங்களிப்புத் தொகையாக ரூபாய் 10,000/- சேர்த்து வழங்கப்படும்.

[2004 ஜூலை 31

**2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்**

*61. இத்திட்டம் 1-10-2000 ஆம் நாள் முதற்கொண்டு அறிமுகம் செய்யப்பட்டது.*

*(அ) அனைத்து நிரந்தர அரசு ஊழியர்களும் இத்திட்டத்தில் சேர விருப்பம் தெரிவிக்கலாம். இத்திட்டத்தில் சேர்பவர்கள் ஓய்வுபெறுகின்ற மாதத்திற்கு முன் மாதம் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50/- வீதம் செலுத்தலாம். அவர்கள் ஓய்வுபெறும்போது அத்தொகை, அதன்மீது சேர்ந்து வரும் வட்டியுடன் வழங்கப்படும்.*

*(ஆ) இத்திட்டம், 1-10-2000 அன்று, அல்லது அந்நாளுக்குப் பின்னர் பணி நியமனம் செய்யப்பட்ட புதிய பணியாளர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவர்கள் சந்தாத் தொகையாக ரூபாய் 70/- செலுத்த வேண்டும். இச்சந்தாத் தொகையுடன் வட்டித் தொகையும், அரசின் பங்குத் தொகையான ரூபாய் 10,000/- சேர்த்து, ஓய்வுபெறும் நாளன்று வழங்கப்படும்.*



2004 ஜூலை 31]

# இணைப்பு V

*(79 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண்—35

## திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**1.1 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பணிகளாவன:**

i. *மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல்.*

ii. *திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தல்.*

iii. *திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுபபேற்கும் திட்டப் பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலம் மதிப்பீடு செய்தல்.*

iv. *பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மூலமாக புள்ளிவிவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவைகளுடன் மாநிலப் பொருளாதார மாதாந்திர கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.*

v. *இருபது அம்சத் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் கிராமோதயத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.*

[2004 ஜூலை 31

vi. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் மாவட்டத் திட்டக் குழுவின் பணிகளை மாநிலத் திட்டக் குழுவின் உதவியுடன் மேற்பார்வையிடுதல்.

vii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுதல்.

viii. உலக வர்த்தக மையப் பிரிவின் ஒருங்கிணைப்பாளரின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

ix. பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

x. சிறப்பு முயற்சிகளின்கீழ் வரும் திட்டங்களை ஒருங்கிணைத்து செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

xi. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான கட்டமைப்பு முதலீட்டுத் திட்டப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

xii. ஆண்டுத் திட்டங்களுக்கான திட்டம் மற்றும் வரவு-செலவுத் திட்ட இணைப்பினைத் தயாரித்தல்.

xiii. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்கள் குறித்த பணிகளைச் செய்தல்.

xiv. 15 அம்சத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

xv. மாநிலத் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றுக்கான மத்திய உதவியைப் பெறுவதைக் கண்காணித்தல்.

xvi. தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.



2004 ஜூலை 31]

xvii. இராஷ்ட்ரிய சம் விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

xviii. மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள் மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்.

**1.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியப் பணிகள் பற்றிய குறிப்பு பின்வருமாறு:**

**1.2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதல் திட்ட ஒதுக்கீடுகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| திட்டக் காலம் | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| முதல் திட்டம் (1951-56) | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் (1956-61) | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (1961-69) | 608 | 613 |
| நான்காவது திட்டம் (1969-74) | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் (1974-79) | 1122 | 1165 |
| ஆறாவது திட்டம் (1980-85) | 3150 | 3645 |
| ஏழாவது திட்டம் (1985-90) | 5750 | 6317 |
| ஆண்டுத் திட்டம் (1990-91) | 1450 | 1591 |
| ஆண்டுத் திட்டம் (1991-92) | 1600 | 1726 |
| எட்டாவது திட்டம் (1992-97) | 10200 | 14024 |
| ஒன்பதாவது திட்டம் (1997-2002) | 25000 | 25036 |

[2004 ஜூலை 31

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.29/- ஆக இருந்தது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.248/- ஆக உயர்ந்தது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு உயர்ந்த அளவான ரூ. 6440/- ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.2.2 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002–2007)

தேசிய அளவில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கண்ணோட்டம் 2001 ஆம் ஆண்டு, செப்டம்பர் முதல் நாள் கூட்டப்பட்ட தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் பத்தாவது திட்டக் காலத்தில், அதாவது 2002 முதல் 2007 வரையிலான காலத்தில், தேசிய மொத்த உற்பத்தி வீதத்தில் ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சி இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநிலத் திட்டக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.40000 கோடி என உயர்ந்த அளவிலான ஒதுக்கீட்டிற்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 8 சதவீத வளர்ச்சியை அடைவதைத் தவிர, மனிதவளம் குறித்த முக்கிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் ஆக்கபூர்வமான வாழ்க்கை அமைவதற்கான அனைத்து வசதிகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டை நாட்டிலேயே சிறந்த மாநிலமாக ஆக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

### 1.2.3 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுத் திட்டம்

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| 2002-2003 | 5750.00 | 5841.05 | 101.58 |
| 2003-2004 | 7000.00 | 7088.30 | 101.25 |



2004 ஜூலை 31]

### 1.2.4 2004–2005 ஆம் ஆண்டுத் திட்டம்

2004-2005 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு ரூ. 8001 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு உத்தேசித்துள்ளது. இவ்வொதுக்கீடு புது டில்லியில் சமீபத்தில் நடைபெறவுள்ள மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அளவிலான கலந்துரையாடலுக்குப் பின் உறுதி செய்யப்படும்.

### 1.2.5 இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா

இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா அல்லது வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத்திற்கான உதவி என்ற புதிய முயற்சியை மத்தியத் திட்டக் குழு கொண்டு வந்துள்ளது. மூன்றாண்டுகளுக்கான இத்திட்டத்தின்கீழ் அதிக வறுமை மற்றும் குறைந்த உற்பத்தியுடன் கூடிய பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு வளர்ச்சிக்கான தடைகளைக் களையவும் மற்றும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படும் மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுதோறும் சிறப்பு நிதியாக ரூ.15.00 கோடியென மூன்றாண்டுகளுக்கு மத்தியத் திட்டக் குழு வழங்குகிறது. 2003-2004 ஆண்டில் திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2004-2005 ஆம் ஆண்டில் மேலும் 3 மாவட்டங்கள், அதாவது கடலூர், சிவகங்கை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அம்மாவட்டங்களுக்கான விரிவான வரைவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

### 1.2.6 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

[2004 ஜூலை 31

திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றை ஒப்பளிப்பு செய்யும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்களில் செயலாக்கத்தின் முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் மாதாந்திர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது.

### 1.2.7 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்:

சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களைக் கண்காணிக்க ஏதுவாகவும், வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளுடனும், இதர சார்புத் துறைகளுடனும், கலந்தாலோசித்து செயல்படுத்தும் நோக்குடனும், "திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை" என்பது "திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்று, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29-04-2003 நாளிட்ட 31 ஆம் அரசாணைப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து சிறப்பு முயற்சிகள் தொடர்பாக பின்வரும் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்பட்டன:

(அ) உயிரி எரிசக்தி உற்பத்தித் திட்டம்: உயிரி பொருள்கள் வழங்குதல்.

(ஆ) சர்க்கரை ஆலைகளிலிருந்து எத்னால் தயாரித்தல்: கருப்பஞ்சாற்றுக் கசண்டு அல்லாத ஏனைய ஆதாரங்களான சர்க்கரைக் கிழங்கு (Sugar beet) இனிப்புச் சோளம், மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஏனைய மாச்சத்துத் தாவரங்களிலிருந்து எத்னால் தயாரித்தல்.

(இ) காட்டு ஆமணக்கு மற்றும் சைமருபா கிளாக்கா மரம் ஆகியவற்றிலிருந்து உயிரி எரிவாயு தயாரித்தல்.

(ஈ) உயர் தொழில்நுட்பப் பண்ணை அமைத்தல், முதலியன.

### 1.2.8 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் (90% மானியம் மற்றும் 10% கடன்) அரசின் திட்டங்களுக்கு உதவியாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு மற்றும் மாநில அரசிற்குத் துணைபுரியும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள், மாவட்டத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலைக் காத்தல், பேணுதல் ஆகியவையாகும். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒருங்கிணைந்த நீர்நிலை ஆதார அடிப்படையில் பல்வேறு துறைகளையும் ஒரேமாதிரியாக மேம்படுத்தும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நீர்நிலை ஆதாரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் திட்டக் குழுவின் மூலம் நிதி ஆதாரங்கள் பெறப்படுகின்றன. நீலகிரி மாவட்டம் 75 நீர் முகட்டு பகுதிகளாக (Watershed) பிரிக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் நீலகிரி மாவட்டம் முழுவதிலும் உள்ள 6 வட்டங்களிலும், 4 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 31]

நீலகிரி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக 2549 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டு கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் சராசரியாக கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அதிக உயரமான பகுதி தொட்டபெட்டா ஆகும். (கடல் மட்டத்திலிருந்து 2640 மீட்டர் உயரம்) மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவில் 143351 ஹெக்டேர் பரப்பை காடுகள் சூழ்ந்துள்ளன. இது 56.3 சதவிகிதம் ஆகும். மொத்த சாகுபடிப் பரப்பளவு 76,000 ஹெக்டேர் ஆகும். இதில் 82 சதவிகிதப் பரப்பில் தேயிலை பயிரிடப்படுகிறது. மீதமுள்ள பரப்பில் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. நடப்பு திட்டக் காலத்தில் பகுதி வளர்ச்சிக்கும் மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது. திட்டமிடாமல் நிறுவப்பட்டுள்ள வடிகால் அமைப்பினால் ஏற்படும் மண் அரிப்பினைத் தடுப்பதற்கும் பழமையான விவசாயம் செய்யும் முறையை மாற்றுவதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

1. நீலகிரியின் பசுமைக் காடுகளையும், புல்வெளிகளையும் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.

2. சரிவு மட்டங்கள் மற்றும் இதர தட்பவெப்ப, சுற்றுச்சூழல் தன்மைகளைப் பொறுத்து, காடுகள் மற்றும் விளை நிலங்களின் பயன்பாட்டுத் திட்டமிடுதலை மேம்படுத்துதல்.

[2004 ஜூலை 31

3. பெருவாரியாக செடி பயிரிடும் முறையைப் பயன்படுத்தியும், பயிரிடும் விதங்களை மாற்றியமைத்தும், நிலத்தின் விளைச்சல் திறனை உயர்த்த மண் வளத்தையும், நீரையும் பேணிக் காத்தல்.

4. ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் நிலம் சாரா பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. ஒதுங்கிய வசிப்பிடங்களில் வாழும் பழங்குடியினரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

6. மனிதர்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினைச் சமாளிக்க ஒருங்கிணைந்த மனிதக் குடியேற்றக் கொள்கையை வகுத்தல் மற்றும் குடிப்பெயர்ச்சியைத் தடுத்தல்.

7. "பகுதி சார்ந்த அணுகுமுறைக்கு" முன்னுரிமை அளிக்கப்படும். எல்லா நீர்நிலை ஆதாரங்களுக்கும் ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்து, அதிக முன்னுரிமை உள்ள நீர்நிலை ஆதாரங்களைத் தேர்ந்தெடுத்து சுத்திகரித்தல்.

8. தொலையுணர்வு போன்ற அறிவியல் நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்கமளித்தல்.

9. சூரிய ஒளி, நீர் மற்றும் சாண எரிவாயு போன்ற மரபு சாரா எரிசக்திகளைப் பயன்படுத்துவதை அதிகரித்தல்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு கடந்த ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 10744 இலட்சங்களை மத்திய அரசின் திட்டக் குழு நிதியுதவியாக தமிழகத்திற்கு அளித்துள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2210 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டம் சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பிற்கும் இயற்கை வளங்களைப் பேணிக் காப்பதற்கும் மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கான 2004-2005 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு ரூ. 2210 இலட்சமாகும். இதற்கான



2004 ஜூலை 31]

கருத்துருக்கள் மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலுக்காகவும், நிதி ஒதுக்கீட்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு வரவு-செலவுத் திட்டம் 2004-2005-ல் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1.2.9 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் 1975-76-ல் தொடங்கப்பட்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் (90% மானியம் மற்றும் 10% கடன்) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்கு மலைத் தொடர்ப் பகுதியானது தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இது, தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவில் 20 சதவீதமாகும். இத்திட்டம் தற்பொழுது தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முழுவதுமாகச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

i) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்

ii) இப்பகுதியில் அபரிமிதமாகக் காணப்படும் உயரிய மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்

iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரி செய்தல்

iv) அங்குள்ள மக்களுக்கு இயற்கைச் சூழலுக்கு ஏற்படும் சீரழிவின் பாதிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களைத் தீவிரமாகப் பங்கு கொள்ள செய்தல்

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கியப் பணிகள் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், ஊரகச் சாலைகள், கால்நடை பராமரிப்பு, மீனளம், பட்டு வளர்ச்சி, தொலையுணர்வு, மனைப்பொருள் வளர்ச்சி ஆகியவையாகும். இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 80 விழுக்காடு தொகை மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு என்ற மூன்று முக்கியப் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

[2004 ஜூலை 31

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் ரூ.51.50 கோடி மத்திய அரசின் திட்டக் குழுவிடமிருந்து சிறப்பு நிதி உதவியாகப் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு பத்தாவது ஐந்தாண்டுத் (2002-2007) திட்டத்தின் முதல் (2002-2003) மற்றும் இரண்டாம் ஆண்டிற்கு (2003-2004) மத்தியத் திட்டக் குழுவால், ஒவ்வொரு ஆண்டும், அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1099.00 இலட்சமாகும். இத்திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவரின் கண்காணிப்பின்கீழ், சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை மற்றும் இயற்கை வளங்களைப் பேணிக் காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக 2004-2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.1099.00 இலட்சங்களை மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் முதல் தவணையாக ரூ.549.50 இலட்சங்களை மாநில அரசுக்கு ஏற்கெனவே வழங்கிவிட்டது. மேலும், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, 2004-2005 வரவு-செலவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் செய்யப்பட்டுள்ளது.

### 1.2.10 இருபது அம்சத் திட்டம்

இத்திட்டம் நாட்டின் வறுமையினைக் குறைப்பதற்கென 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிற திட்டம் ஆகும். இத்திட்டத்தில் கிராமப்புற வீட்டு வசதி, குடிசை மாற்று வசதி, குழந்தைகள் நல மேம்பாடு, கிராமப்புறக் குடிநீர் வசதி மற்றும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மேம்பாடு ஆகியவை முக்கிய அம்சங்களாகும். இத்திட்டச் செயல்பாடுகளின் முன்னேற்றம் மாநில அளவிலும், தேசிய அளவிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகின்றது.

### 1.2.11 பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்

அரசுத் திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கியப் பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், திட்டங்கள் முடிவுற்ற பின்னரும்



2004 ஜூலை 31]

மதிப்பீடுகளைச் செய்து வருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுந்தாய்வு செய்யப்பட்டு, தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

### 1.2.12 உலக வர்த்தக நிறுவனப் (WTO) பிரிவு

உலக வர்த்தக நிறுவனம் சம்பந்தமான பொருள் குறித்து ஒருங்கிணைப்பதற்காக அரசு ஆணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19-11-2001-ன்படி ஏற்படுத்தப்பட்ட ஓர் ஒருங்கிணைப்புப் பிரிவு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் செயல்பட்டு வருகிறது.

'உலக வர்த்தக மையம் மாநில விவசாயத் துறைப் பிரிவுகளுக்கு ஓர் அறைகூவல்' என்ற தலைப்பில் டிசம்பர் 2002-ல் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. ஜவுளித் துறைத் தொழிற்சாலைகள், முக்கியமாக அப்பேரல் தொழிற்சாலைகள் உலக வர்த்தக மையத்தின் உலகமயமாக்குதல் கொள்கை காரணமாக எதிர்கொள்ளும் விளைவுகள் குறித்து திருப்பூர் விசைத்தறி உரிமையாளர்களுடன் பிப்ரவரி 2003-ல் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதுபோன்று உலக வர்த்தக மையத்தின் செல்வாக்கு மிகுந்த மற்ற துறைப் பிரிவுகள் சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளும் நடத்தப்படும்.

## 1.3 துறைத் தலைமையிடங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு

(ii) பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மாநிலத் திட்டக் குழு

**2.1** தமிழ்நாட்டில் மாநிலத் திட்டக் குழு 25-05-1971 அன்று அமைக்கப்பட்டது. மாநிலத் திட்டக் குழு 17-09-2001 அன்று மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், முனைவர் மா.சா. சுவாமிநாதன் அவர்களைத் துணைத் தலைவராகவும், ஒரு முழு நேர உறுப்பினர், பகுதிநேர உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்-செயலருடன் திருத்தியமைக்கப்பட்டது. நிதித் துறைச் செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலாளர் மற்றும் வேளாண்மைத் துறைச் செயலாளர் ஆகியோர் அலுவல் வழி உறுப்பினர்கள் ஆவர்.

**2.2** மாநிலத் திட்டக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியப் பொறுப்புகளாவன:

(அ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்களை அரசின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பது.

(ஆ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பரந்த அளவிலான இலக்குகளில் முக்கியப் பங்காற்றக்கூடிய திட்ட எல்லைகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்.

(இ) மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறையின் மூலம் அரசு நிகழ்வுகளில் சமூகப் பொருளாதார வெளிப்பாடு குறித்து மதிப்பீடு செய்தல்.

(ஈ) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல் மற்றும் அது சம்பந்தமான அறிக்கைகளை அரசுக்கு அளித்தல்.

(உ) மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டக் குழுவுடன் இணைந்து செயலாற்றுதல் மற்றும் கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மேற்பார்வையிடுதல்.

(ஊ) அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை அடங்கிய ஐந்தாண்டுத் திட்டங்களது இலக்கினை அடையவும், பெரு முதலீடுகள் பெறுவதற்கான எளிய, முற்போக்கான நடைமுறைகள் குறித்தும் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.



### 2.3 தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல்

மாநிலத் திட்டக் குழு மாநிலத்தின் பொருளாதார நிலைமையினைத் தொடர்ந்து ஆய்வு செய்து அதன்பேரில் அரசு மேல் நடவடிக்கைகளை எடுக்க செயல்படுகிறது.

### 2.4 மாவட்டப் பரவலாக்கத் திட்டம்

மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் மாவட்டத் திட்டக் குழுவிற்கு உதவும் பொருட்டு எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மாநிலத் திட்டக் குழு விரிவான வழிகாட்டி நெறிமுறைகளைத் தயாரித்துள்ளது.

### 2.5 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம்

மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் மா.சா. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் ஒரு சிறிய குழு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் பணிகளைக் கவனித்து வருகிறது.

01-04-2000 முதல், மத்திய அரசானது மாநிலங்களுக்கு பெருமேலாண்மை முறையிலான வேளாண் வளர்ச்சிக்காக நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வகைச் செயல் திட்டங்களின் முதலீட்டுத் தொகையானது 90 சதவீதம் மத்திய அரசும், 10 சதவீதம் மாநில அரசும் நிதிப் பொறுப்பேற்கும் விகிதத்தில் அமைந்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவியானது 80 சதவீதம் மானியமாகவும், 20 சதவீதம் கடனாகவும் மாநில அரசிற்கு வழங்கப்படுகிறது. 2003-04 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து ரூ.50 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.5.555 இலட்சம் ஆகும்.

### 2.6 தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டு அறிக்கை

மாநிலத் திட்டக் குழு தமிழ்நாட்டின் முதலாவது மனித வள மேம்பாட்டு அறிக்கையினைத் தயாரித்துள்ளது. இதில் மாவட்ட அளவில் காணப்படும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வறிக்கையை 14 ஜூலை, 2003 அன்று வெளியிட்டார்கள்.

[2004 ஜூலை 31

**2.7 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (2004–2005) தயாரித்தல்**

மாநிலப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக் குழுக்களை அமைத்து அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மாநிலத் திட்டக் குழு ஏற்கெனவே தயாரித்துவிட்டது. பத்தாவது திட்டத்தின் மூன்றாவது ஆண்டாகிய 2004-2005 ஆம் ஆண்டுக்கான திட்டத்தை, பத்தாவது திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள இலக்குகளின் அடிப்படையில், மாநிலத் திட்டக் குழு தற்போது தயாரித்து வருகின்றது.

**2.8 2004–2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்**

ரூ.4.27 இலட்சத்தில் மாநிலத் திட்டக் குழுவின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

**பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை**

**3.1** பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மாநிலத்தின் தலைமை புள்ளியியல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும், வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசிக் குறியீடுகள் ஆகிய பிரிவின்கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளிவிவரங்கள் குறித்த செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவதும் இத்துறையின் முக்கியப் பணியாகும்.

**3.2 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன:**

**(அ) மாநிலத் திட்டங்கள்**

1. **தேசிய மாதிரி ஆய்வுப் பிரிவினை வலுப்படுத்தும் திட்டம்:**

தேசிய மாதிரி ஆய்வு, தேசிய அளவில், முக்கியமாக அமைப்புசாராப் பிரிவுகளின் பல்வேறு பொருட்களை உள்ளடக்கி அடுத்தடுத்த சுற்றுக்களில் தொடர்ந்து நடத்தப்படும் ஒரு ஒருங்கிணைந்த ஆய்வாகும். இது மக்களுடைய சமூகப் பொருளாதார இனங்களின் மீதான அடிப்படை விவரங்களை அளிக்கிறது.



2004 ஜூலை 31]

2. **வேளாண்மைப் புள்ளியியலை மேம்படுத்துதல்:**

வேளாண்மை மற்றும் வேளாண்மையைச் சார்ந்த விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, ஆராய்ந்து அறிக்கை வெளியிடப்படுகிறது.

3. **மேலாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்:**

இத்திட்டத்தின்கீழ், கணினி முறைகள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி ஆகியவை மேம்படுத்தப்படுகின்றன.

**(ஆ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்**

1. **வேளாண்மைக் கணக்கெடுப்பு:**

வேளாண்மையைத் திட்டமிட நுண்ணிய அளவில், உரிய நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமம் பற்றிய விவரங்கள் கணக்கிடப்படுகின்றன.

2. **பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்:**

பழம் மற்றும் காய்கறிப் பயிர்களுக்கான ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விவரத்தை பயிர் அறுவடைப் பரிசோதனைகள் நடத்தி பயிர்ப் பரப்பு, உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாகக் கண்டறியப்படுகிறது.

**(இ) மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்:**

1. **பயிர்ப் பரப்பு மற்றும் உற்பத்தி உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்:**

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளிவிவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும், பயிர் வாரியாக நீர் பாய்ச்சப்பட்ட மற்றும் நீர் பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

கண்காணிப்புப் பிரிவு இன்றியமையாப் பொருட்களின் விலைகள் குறித்த தகவலை சேகரித்து நாள்தோறும் ஆய்வு செய்து வருகிறது. பிரச்சினை எவையேனும் ஏற்பட்டால் அவற்றிற்குத் தீர்வு காண வணிகச் சங்கங்களுடன் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அரசு, ஒவ்வொரு வாரமும் விலை நிலவரத்தை ஆய்வு செய்கிறது. கடந்த இரு ஆண்டுகளில் நமது மாநிலம் கடுமையான வறட்சி நிலையை சந்தித்து வந்த போதிலும் இந்த அரசு நெல்/அரிசி வணிகத் தடைகளை நீக்கி நமது மாநிலத்திற்கு பிற மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் வருவதற்கு வகை செய்ததன் விளைவாகவும், விலை நிலவரங்களை விழிப்புடன் கண்காணித்ததன் பயனாகவும் வெளி அங்காடிகளில் இன்றியமையாப் பொருட்களின் விலை கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது.

11.39 பொது விநியோக முறையின்கீழ் ஏழை மக்களுக்கும், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கும் இன்றியமையாப் பொருட்களை அவர்கள் வாங்க இயலும் வகையில் மிகக் குறைந்த விலையில் வழங்கிட அரசு மானியம் அளித்து வருகின்றது. மத்திய அரசு, பொது விநியோக முறையின்கீழ் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5.65 என்ற விலையிலும் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என்ற விலையிலும் மாநிலங்களுக்கு அரிசி ஒதுக்கீடு செய்கிறது. நமது மாநில மக்களின் முக்கிய உணவுப் பொருளாக அரிசி இருப்பதால், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிற அரிசியின் விலை வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் என்ற எவ்வித வேறுபாடுமின்றி அனைவரது வாங்கும் சக்திக்கும் உட்பட்ட விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலை வீதம் 1-1-2000 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே விலை தற்போது தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்ததால் குடும்ப அட்டைதாரர்கள் பெறுவதற்கு உரிமையுள்ள முதல் பத்து கிலோவிற்கு ரூ.3.50 என்றும் எஞ்சியுள்ள அளவிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.6.00 என்றும் 1-10-2002 முதல் விலை விகிதம் திருத்தியமைக்கப்பட்டது. ஏழை மக்களுக்கும், மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கும் உதவுகிற நோக்கத்துடன், கடுமையான நிதி நெருக்கடி நீங்கும் முன்னரே, குடும்ப அட்டைதாரர்கள் பெறுவதற்குத் தகுதியான முழு அளவு அரிசியின் விலை 1-9-2003 ஆம் நாளிலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். நமது நாட்டில் மிகக் குறைந்த விலையில் அரிசி வழங்கும் ஒரிரு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. அந்தியோதயா



**3.5 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்**

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் உள்ள கணினி அமைப்பினை ரூ.12 இலட்சம் செலவில் நவீனமயமாக்குதல்.

## மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

**4.1** பேரளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு அரசு நிதியளித்து நிறைவேற்றி வருகிறது. அவ்வாறான திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை முன்மதியுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தொடங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதற்கொண்டு கொள்கைகளை வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பேற்று அரசுக்கு உதவி வருகிறது.

**4.2 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

1. மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;
2. குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;
3. மாநில நிதி நிலவரம் மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய சிறப்புப் பகுத்தாய்வுகள் மேற்கொள்ளல்;
4. வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு-ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளல்.

**4.3** தமிழ்நாட்டில் மாநில, மைய அரசுகள் மற்றும் வெளிநாட்டு உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களான டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும், அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர,

[2004 ஜுலை 31

அரசு வருவாய் எதிர்பார்ப்பு மற்றும் செலவினங்கள் மத்திய அரசின் நிதிக் குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**4.4** இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, பல்வேறு துறைகளைச் சார்ந்த 496 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.5** எந்தெந்தத் திட்டங்களை மதிப்பீடு செய்ய எடுத்துக்கொள்ளலாம் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கவும் மாநில மதிப்பீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது திருத்தியமைக்கப்பட்ட இக்குழு, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டும், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரை உறுப்பினர்-கூட்டுநராகக் கொண்டும் இயங்கி வருகிறது.

***4.6 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்***

ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.



2004 ஜுலை 31]

## இணைப்பு VI

*(79 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 48 – ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

1. இந்த மானியத்தின்கீழ் இடம் பெறும் முதலாவது முக்கியமான செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில், 31-12-2003 ஆம் நாள் நிலவரப்படி சற்றொப்ப 4,97,781 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,39,298 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 57,277 |
| 3. | அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,13,789 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 26,763 |
| 5. | ஓய்வூதியம் பெறும் ஏனைய வகையினர் | 60,654 |
| | **மொத்தம்** | **4,97,781** |

[2004 ஜூலை 31

2. இம்மானியக் கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:—

| | (ரூபாய்) |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் காலப் பயன்களும் | 45,98,00,00,000 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் | 12,02,22,000 |
| மொத்தம் | 46,10,02,22,000 |

**3. ஓய்வூதியம்:**

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார். அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாதப் பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாநில அரசு 1-1-1996 முதல் மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு இணையாக ஓய்வூதியத்தை/குடும்ப ஓய்வூதியத்தைத் திருத்தியமைத்து ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை 1-1-1996 முதல் மாதமொன்றிற்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1275 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**4. பணிக்கொடைகள்:**

**(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:**

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறு மாதப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற



2004 ஜூலை 31]

ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது, ஆற்றிய பணிக்காக ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டுமொத்தத் தொகையாகும். இத்தொகை அனுமதிக்கத்தக்க ஓய்வுக்காலப் பணிக்கொடையுடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்படுகிறது.

**(ii) இறப்புப் பணிக்கொடை:**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| பணிக்காலம் | பணிக்கொடையின் அளவு |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | இரு மடங்கு மாத ஊதியம் |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | ஆறு மடங்கு மாத ஊதியம் |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | பன்னிரண்டு மடங்கு மாத ஊதியம் |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியம் என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரை மாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக்கூடாது. |

**(iii) ஓய்வுக்காலப் பணிக்கொடை:**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வுபெறும்போது உயரளவாக 16-1/2 மடங்கு மாத ஊதியம் என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி

முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாதத் தகுதிப்பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை 1-1-1996 முதல் ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

## 5. குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போதோ, ஓய்வுபெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

குறைந்தளவு குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1,275 ஆக உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. உயரளவு குடும்ப ஓய்வூதியம் உயரளவு சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.





குடும்ப ஓய்வூதியம், விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில், இதில் எது முந்தியதோ, அதுவரையில் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, இந்தக் குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையில் அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

## 6. கருணைத் தொகை வழங்குதல்:

குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லாத, 1-1-1986க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட, உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை 1-11-1997 முதல் ரூபாய் 150-லிருந்து ரூபாய் 605 ஆக உயர்த்தவும் அகவிலைப்படியாக ரூபாய் 31 வழங்கியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள்; 1-1-1998 அன்றும். மற்றும் அதன் பிறகும் வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

## 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல்:

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் 33-1/3 விழுக்காடு வரை ஒரு பகுதியை ஒட்டுமொத்தமாகப் பெறத் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு

ஓய்வுபெற்றவர் அவர் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வுபெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

**8. ஏனைய ஓய்வுகாலப் பயன்கள்:**

(i) ஓய்வுபெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில் உயரளவாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வுபெறும் ஊழியருக்கு அவரது கணக்கிலுள்ள, அரைச் சம்பளத்துடன்கூடிய ஈட்டா விடுப்பில் (Half Pay Leave on Private Affairs) 60 நாட்களுக்கு மிகாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் பெறவும் அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் அரைச் சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் அகவிலைப்படியும், சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வுபெறும் பணியாளருக்கு ஓய்வுபெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

**9. ஓய்வூதியம் பெறுவோருக்கான இதர பயன்கள்:**

**(அ) அகவிலைப்படி**

(i) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப் படுவதுபோலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.





(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மீதான அகவிலைப்படியுடன் மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப்படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி**

ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**10. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, சிறப்பு மருத்துவ சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**11. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை அரசு 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர் தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ.70/- வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.25,000/- வழங்கப்படும்.

**12. உள்ளாட்சிமன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சிமன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுகாலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**13. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவினங்கள் வருமாறு:—**

| வருடம் | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவினம் | மொத்த வருவாய் வரவில் சதவீதம் |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1995-96 | 787.03 | 7.42 |
| 1996-97 | 1070.15 | 8.95 |
| 1997-98 | 1286.77 | 9.47 |
| 1998-99 | 1691.42 | 11.45 |
| 1999-2000 | 2668.41 | 16.46 |
| 2000-2001 | 2927.24 | 15.48 |
| 2001-2002 | 3050.48 | 16.07 |
| 2002-2003 | 3488.20 | 16.86 |
| 2003-2004 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு | 3808.00 | 16.66 |
| 2004-2005 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு | 4598.00 | 18.54 |





ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்கள் குறித்த செலவினம் கணிசமாக உயர்ந்துள்ளதை மேலே உள்ள அட்டவணையில் காணலாம்.

**14. பங்குத் தொகை பெறும் ஓய்வூதியத் திட்டம்:—**

இந்த ஓய்வூதியத் திட்டம், 1-1-2003-க்குப் பிறகு பணியில் புதியதாக சேர்ந்தவர்களுக்குப் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ், அரசு, மாதந்தோறும் ஒரு நிலையான தொகை வழங்கும். இத்திட்டத்திற்கு அரசு அளிக்கும் குறிப்பிட்ட பங்குத் தொகையுடன் பணியாளர் பங்குத் தொகையும் சேர்த்து, புதிய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியங்களும், ஏனைய சலுகைகளும்**

15. நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த தியாகிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்கள் பயனடையும் வகையிலும் மற்றும் அவர்களது நலனுக்காகவும், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வாரிசுகளுக்கு கல்வி நிலையங்களில் சிறப்பு இட ஒதுக்கீடு, வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

16. 01-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டத்தின்படி தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும், காவல் கைதியாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும், கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். மேலும், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என பின்னால் அறிவிக்கப்பட்டது. மேலும்,

சுதந்திரப் போராட்டத்தின்போது கைது வாரன்ட் பிறப்பிக்கப்பட்டு, தலைமறைவாக இருந்து, சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத சிறைவாசம் என்பது, 01-04-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பும் 11-03-1983 முதல் நீக்கப்பட்டது.

17. சிறைத் துன்பம் அனுபவித்ததை நிரூபிக்கும் பொருட்டு அதற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணை அல்லது சிறைத் துறை ஆவணத்தின் உரிய பகுதியின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். மேற்படி ஆவணங்கள் கிடைக்காத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் சககைதிச் சான்றிதழ்கள், மனுதாரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்தமைக்கு ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால், இந்த முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படும் சககைதிச் சான்றினை ஏற்கும் முறை 1988 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு ஆணையின்படி, மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து சககைதிச் சான்று பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. பின்பு, இந்த முறையிலும் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், 7-2-1996 ஆம் நாளிட்ட பொதுத் துறையின் அரசு ஆணையின்படி, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியைத் துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளைச் சான்றளிப்பவர்களாகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ள தியாகிகள் மூல அரசு ஆவணங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் வேண்டும். விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் கோருபவர், தாம் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட



படிவத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

18. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கும் மாநில அரசு ஓய்வூதியம் ரூ.500/- மாதந்தோறும் வழங்கப்படுகின்றது.

19. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது, அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த ஓய்வூதியத் தொகை அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு-II -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

20. நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியமும் ஓய்வூதியமும் அவ்வப்போது அரசால் வழங்கப்படுகின்றன. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 161 பேரும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வாரிசுதாரர்கள் 7 பேரும் மாதம் ரூ.500/- தற்போது ஓய்வூதியமாகப் பெற்று வருகின்றனர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வாரிசுதாரர்களுக்கு அரசியல் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வந்தது. இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து அதன் மீது அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வு செய்து முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுதாரர்களின் பட்டியலை அரசுக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அனுப்பினார். இதை, அரசு தீவிரமாகப் பரிசீலித்து,

[2004 ஜூலை 31

முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுகளாக 87 நபர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500/- வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்குவதற்கு 8-1-2003 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

21. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/ உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) கல்விச் சலுகைகள்:**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும், படிப்பு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்தியருக்கு தொழில் கல்லூரிகள், பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் இதர சிறப்புக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) வீட்டுவசதி:**

தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/ மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவீதத்திலிருந்தும் மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவீதத்திலிருந்தும் தலா ஒரு சதவீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

**(ஈ) போக்குவரத்து வசதி:**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கும் அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(உ) ஈமச்சடங்குச் செலவு:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போக நேரிடும்போது, அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகை ரூ.2000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையில், வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவர், மறைந்தவரின் உடல்மீது அரசு சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

**(ஊ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை:**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 4-5-1999 நாளிட்ட அரசாணையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகள்/ மொழிக் காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

**22. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்:**

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-08-1972 முதல் செயலில் உள்ளது. இதன்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(அ) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்குகொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத் துன்பம் அனுபவித்தவர்கள், மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத்

[2004 ஜூலை 31

தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத் துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச்சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச்சான்று இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் இல்லை என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த அதே காலத்தில் தன்னுடன் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத் துன்பம் அனுபவித்தவரும், மைய அரசு ஓய்வூதியம் பெறுபவருமாகிய இருவரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சககைதிச் சான்றிதழ் படிவத்தில் பெறப்பட்ட இரு சககைதிச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றாளரின் சிறைத் துன்ப காலத்தையும், மனுதாரரின் சிறைத் துன்ப காலத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு சககைதிச் சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் பெற வேண்டும்.

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்கு சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

(இ) ஓய்வூதியம் பெறுவதற்கான ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5,000/- என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஈ) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட படிவத்தில் சககைதிச் சான்றிதழ் பெற்று தக்க ஆதாரமாகச் சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.



2004 ஜூலை 31]

(உ) விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு 10 சவுக்கடிகள்/கசையடி அல்லது பிரம்படியைத் தண்டனையாகப் பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாத காலத்திற்கு சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத் துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

(எ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம், அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம், இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர், இறக்க நேரிடும்பொழுது, அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூபாய் 3000/-த்துடன் மாநில அரசின் பங்கான ஓய்வூதியமான ரூபாய் 500/-ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்குத் தொடர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஐ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியதாரர்களுக்கு (SWATANTRATA SAINIK SAMMAN Pensioners) 1-08-2003 முதல் ஓய்வூதியத்துடன் 39 சதவீதம் அகவிலைப் படியும் வழங்கப்பட்டு வருகிறது.

23. மே திங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் 31-3-2004 வரையிலான காலத்தில் 329 பேருக்கு மாநில அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வாரிசுதாரர்கள் 87 பேருக்கு அரசியல் ஓய்வூதியம் வழங்க 8-1-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

24. மாநில/மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை 31-3-2004 அன்றைய நிலவரப்படி வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/-+15 மருத்துவப்படி) | 1523 |
| 2. | மாநில அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500/-+15/- மருத்துவப்படி) | 2087 |
| 3. | மைய அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/-+1170/- அகவிலைப்படி + 15/- மருத்துவப்படி) | 1732 |
| 4. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/- +1170/- அகவிலைப்படி + 15/- மருத்துவப்படி) | 1422 |
| 5. | மைய அரசு ஓய்வூதியத்துடன் மாநில அரசின் ஓய்வூதியமான ரூ.500/-ஐப் பெறும் ஓய்வூதியதாரரின் எண்ணிக்கை | 2887 |
| 6. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ.500/- மாதம் ஒன்றுக்கு) | 7 |
| 7. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ.500/- வீதம்) | 161 |
| 8. | முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (ரூ.500/- வீதம்) | 87 |

25. இத்திட்டங்களுக்காக 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.11,69,45,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

## இணைப்பு - I

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்:

| வரிசை எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1,000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1,500/- |
| 10. | 15-08-1997 முதல் | 3,000/- |

[2004 ஜூலை 31

## இணைப்பு - II

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்.

| வரிசை எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 500/- |
| 9. | 01-09-1995 முதல் | 750/- |
| 10. | 15-08-1997 முதல் | 1,500/- |



2004 ஜூலை 31]

## இணைப்பு - III

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்.

| வரிசை எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 200/- |
| 2. | 01-08-1980 முதல் | 300/- |
| 3. | 01-06-1985 முதல் | 500/- |
| 4. | 14-11-1988 முதல் | 750/- |
| 5. | 12-08-1992 முதல் | 1,000/- |
| 6. | 02-10-1994 முதல் | 1,500/- |
| 7. | 15-08-1997 முதல் | 3,000/- |

## இணைப்பு VII

*(80 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 10 – வணிக வரித் துறை – வணிக வரிகள்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

நிலையான பொருளாதார வளர்ச்சி என்பது நிதி ஆதாரத்தை ஒருங்கிணைப்பதைப் பொறுத்தது என்பதை அறிந்த தமிழக அரசு விரிவான நிதிச் சீர்திருத்த முன்முயற்சிகளை ஏற்கெனவே துவங்கியுள்ளது. சமயோசித வரிச் சீர்திருத்த நடவடிக்கைகள், வரி விகித சீரமைப்பு மற்றும் வரி வசூல் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் மாநில அரசின் நிதிநிலை சீர்குலைவு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அரசின் வருவாயில் சுமார் 70 சதவிகிதம் வணிக வரி மூலம் ஈட்டப்படுகிறது.

2003-2004 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பருவ மழை பொய்த்து கடும் வறட்சி நிலவியதால் பல்வேறு துறைகளில் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், குறிப்பிடத்தக்க அளவில் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படாமலேயே, வணிக வரித் துறையின் சீரிய முயற்சியால், வரி வசூலில் முந்தைய ஆண்டைவிட 15.27 சதவிகிதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அனைத்திந்திய சராசரி வளர்ச்சி விகிதமாகிய 8.4 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில் வணிக வரித் துறையின் செயல்பாடு பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 8,905 கோடியாக இருந்த வரி வருவாய் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 10,200 கோடியாகப் பெருகி, 14.55 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எட்டியது. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.11,757 கோடி வரி வசூல் செய்யப்பட்டது.

### 2. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

வணிக வரி ஆணையர் துறையின் தலைவராக செயல்பட்டு வருகின்றார். ஆணையருக்கு தலைமையகத்தில் இணை



ஆணையர்களும், துணை ஆணையர்களும், மற்ற அலுவலர்களும் உதவியாகப் பணிபுரிகின்றனர். வணிக வரித் துறையின் பிரிவுகள் விவரம் வருமாறு:

#### 2.1 வரி விதிப்புப் பிரிவு

வரி விதிப்புப் பிரிவில், வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் ஆகியோர் வரி விதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரி விதிப்பு அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு வணிக வரி அலுவலர்கள் தலைமை அலுவலர்களாகவும், 81 வட்டங்களுக்கு துணை வணிக வரி அலுவலர்கள் தலைமை அலுவலர்களாகவும் உள்ளனர். இவை தவிர, சென்னையில் நான்கு, கோவையில் இரண்டு விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்களைத் தலைமை அலுவலராகக் கொண்டு செயல்படுகின்றன. வரி விதிப்பு அலுவ்வலர்கள் உதவி ஆணையர்களின் நேரடிக் கண்காணிப்பில் பணிபுரிகின்றனர். இவர்களது பணியினை துணை ஆணையர்கள் மேற்பார்வையிடுகிறார்கள்.

#### 2.2 தணிக்கைப் பிரிவு

ஒவ்வொரு வணிக வரித் துறை மாவட்டத்திலும் ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் துணை வணிக வரி அலுவலர் ஆகியோரைக் கொண்ட உள்ளீட்டுத் தணிக்கைக் குழு, வரி விதிப்பு உதவி ஆணையரின் மேற்பார்வையில் செயல்படுகிறது. தணிக்கைக் குழு ஒவ்வொரு காலாண்டிற்கும், வரி விதிப்புகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை, வரி விதிப்பு வட்ட வாரியாக, சம்பந்தப்பட்ட வரி விதிப்பு துணை ஆணையர்கள் வகுக்கின்ற தணிக்கை நிகழ்ச்சி நிரல் வரிசையில் தணிக்கைக் குறிப்பாகத் தயாரித்து அனுப்புகின்றன. அவற்றின் மீதான குறை நிவர்த்தி அறிக்கையினை சம்பந்தப்பட்ட வரி விதிப்பு உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியோர் கண்காணிக்கின்றனர்.

இதுதவிர, மாநிலக் கணக்காயர் அலுவலக தணிக்கைக் குழு வரி விதிப்புக் கோப்புகள் மற்றும் திருப்பி அளித்த வரித் தொகை ஆகியவற்றைத் தணிக்கை செய்கிறது. ஆணையர் அலுவலகத்தில் இம்முக்கியப் பணி மாநில அளவில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

## 2.3 மேல்முறையீட்டுப் பிரிவு

மேல்முறையீட்டு உதவி ஆணையர் முதல் மேல்முறையீட்டு அலுவலராவார். மாநிலத்தில் மொத்தம் 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக எடுத்துரைக்க வணிக வரி அலுவலர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டாவது மேல்முறையீடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மைத் தீர்ப்பாயமும், சென்னை, கோவை, மதுரையில் கூடுதல் ஆயங்களும் உள்ளன.

## 2.4 செயலாக்கப் பிரிவு

செயலாக்கப் பிரிவு ஏழு துணை ஆணையர்கள் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. இதுதவிர, இடை மாநில ஆய்வுப் பிரிவில் ஒரு துணை ஆணையரும் உள்ளார்.

அ. செயலாக்கப் பிரிவில், 10 உதவி ஆணையர்களும், 15 வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். உதவி ஆணையர் மற்றும் வணிக வரி அலுவலர்களின் கீழ் துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர சுற்றும் படை, புகை வண்டி நிலையங்கள் மற்றும் சரக்குப் பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

ஆ. வரி ஏய்ப்பினை கண்டுபிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கை மற்றும் வீடு சோதனை பணியில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் நேரடி மற்றும் மறைமுக வரி ஏய்ப்புகள் தடுக்கப்படுகின்றன. இடை மாநில ஆய்வுக் குழு அலுவலர்கள், பிற மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட வடிப்பு நகல்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து வருகின்றனர்.

இ. கடந்த 2003-2004 ஆம் ஆண்டில், மொத்தம் 6,466 வணிகத் தலங்கள் சோதனையிடப்பட்டு, அதில் 5,094 தலங்களில் வரி ஏய்ப்புகள் கண்டறியப்பட்டன. அதன் மூலம் ரூ.35.18 கோடி வரி மற்றும் தண்டத் தொகையாக வசூலிக்கப்பட்டது.



2004 ஜூலை 31]

## 2.5 சோதனைச் சாவடிகள்

மாநில எல்லையில், 26 சோதனைச் சாவடிகளும், மூன்று உள் சோதனைச் சாவடிகளும் உள்ளன. வணிக வரி அலுவலர்கள் பெரிய சோதனைச் சாவடிகளின் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிக வரி அலுவலர்கள், தக்க உதவியாளர்களுடன் சோதனைச் சாவடிகளை நிர்வகிக்கின்றனர்.

கடந்த 2003-04 ஆம் ஆண்டில் சோதனைச் சாவடிகள் மூலம் மொத்தம் ரூ. 70 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

## 2.6 புள்ளிவிவரம் மற்றும் ஆய்வுப் பிரிவு

புள்ளியியல் மற்றும் ஆய்வுப் பிரிவின் தலைவராக புள்ளியியல் இணை இயக்குநர் செயல்படுகிறார். ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் ஒவ்வொரு கோட்டத்திலும் இளநிலை ஆய்வு அலுவலரும் உள்ளனர். புள்ளியியல் மற்றும் ஆய்வுக் குழு, "வணிக வரித் துறை—ஒரு கண்ணோட்டம்", "வணிக வரித் துறை தேர்வுநிலை அறிக்கை" ஆகிய இரு வருடாந்திர அறிக்கைகளை ஆண்டுதோறும் வெளியிடுகின்றது. இவை தவிர, சிறப்புக் கால முறை அறிக்கைகளையும் வெளியிடுகின்றது. மேலும், இக்குழு ஒவ்வொரு மாதத்திலும், 100 முக்கிய வணிகர்களிடம் ஏற்படும் வருவாய் இழப்பின் காரணத்தினை ஆய்வு செய்யும் பணியினையும் மேற்கொண்டுள்ளது.

## 3. வணிக வரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வணிக வரித் துறையில் அமலில் உள்ளன:-

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
3. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
4. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுககுள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
5. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001

[2004 ஜூலை 31

6. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939

7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981

8. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935

9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

**4. வரி வருவாய் நிலவரம்**

கடந்த மூன்று ஆண்டுகளில் அனைத்து வரிச் சட்டங்களின் மூலம் ஈட்டிய வரி வருவாய் விவரம் வருமாறு:

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் (%) |
|---|---|---|
| 2001-2002 | 8905 | 2.78 |
| 2002-2003 | 10200 | 14.55 |
| 2003-2004 | 11757 | 15.27 |

**5. சட்டவாரியாக கடந்த மூன்று ஆண்டு வருவாய்**

சட்டவாரியாக கடந்த மூன்று ஆண்டு வரி வருவாய் விவரம் வருமாறு:

| சட்டம் | (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|
| | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 7541 | 8507 | 9790 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 904 | 982 | 1186 |
| 3. கேளிக்கை வரிச் சட்டம் | 68 | 71 | 75 |
| 4. பந்தய வரிச் சட்டம் | 6 | 5 | 5 |
| 5. ஆடம்பர வரிச் சட்டம் | 89 | 82 | 63 |
| 6. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 297 | 553 | 638 |
| மொத்தம் | 8905 | 10200 | 11757 |



2004 ஜூலை 31]

**6. வணிக வரித் துறையின் வருவாயும், செலவும்**

வணிக வரித் துறையின் வருவாயும், செலவும் பின்வருமாறு:

| | (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|
| தலைப்பு | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
| 1. வரிவருவாய் | 8905 | 10200 | 11757 |
| 2. செலவுகள் | 94.23 | 93.27 | 93.70 |
| 3. செலவின் சதவிகிதம் | 1.06% | 0.91% | 0.80% |

**7. 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள்**

1. ஈரபேரீச்சம்பழத்தின் மீதான வரி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

2. சிறுநீரகம் பழுதடைந்த நோயாளிகளின் சிகிச்சைக்குப் பயன்படும் சி.ஏ.பி.டி (Continuous Ambulatory Peritoneal Dialysis) என்ற திரவ மருந்திற்கும், AIDS எனப்படும் உயிர்க்கொல்லி நோய்க்கு வழங்கப்படும் உயிர் காக்கும் மிக முக்கிய பத்து மருந்துகளுக்கும் முழு வரி விலக்கு வழங்கப்பட்டது.

3. சுற்றுச்சூழல் பாதிப்பினைக் குறைக்கும் பொருட்டும், மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்களை நிறுவுவதற்கு ஊக்கமளிக்கும் வகையிலும் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் கருவிகளில் 25 இனங்களுக்கு வரி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

4. கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைவினைப் பொருட்கள் மீதான வரி விகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

5. இசைக் கலைஞர்களின் நலனைக் கருதி இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

6. கோழி வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க கோழித் தீவனத் தயாரிப்பில் பயன்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

7. தமிழக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மறு விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரிக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

8. மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC), கேஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் (GAIL) மூலமாக தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்கும் இயற்கை எரிவாயுவின் மீதான விற்பனை வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கேஸ் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் (GAIL) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கும் இயற்கை வாயுவின் இரண்டாம் விற்பனை மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரிக்கு விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

9. பின்னலாடை தயாரிக்கும் தொழில் நிறுவனங்களின் இன்னல்களைக் குறைத்திடும் பொருட்டு, வெளி மாநிலத்தில் உள்ள பதிவு செய்யாத வணிகர்களுக்கு இடை மாநில விற்பனை செய்யும் பின்னலாடைக்கு 10 சதவிகித வரியினை செலுத்திவிட்டு 9 சதவிகிதத் தொகையினை ஊக்குவிப்பு மானியமாக திருப்பி அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. கிளை மற்றும் பிற மாநிலங்களுக்கு ஒப்படைப்பு விற்பனை செய்யும் வணிகர்களுக்கு இது பொருந்தாது.

10. தமிழ்நாட்டை கணினி வன்பொருள் மையமாக நிலைநிறுத்த கணினி உபரி மற்றும் உதிரிப் பொருட்களின் இடை மாநில விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

11. விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால், ஒரு மாதத்திற்கு 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 சதவிகிதம் வட்டி விதிக்கப்படுகிறது. இவற்றைக் குறைக்கும் பொருட்டும், வரி வருவாயைப் பெருக்கும் பொருட்டும், முதல் 90 நாட்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு வட்டி மாதத்திற்கு 1.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.





**8. வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம்**

வணிக வரித் துறையில், அலுவலர் மற்றும் பணியாளருக்குப் பயிற்சி அளிக்க வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம் 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்துறையில் பணிபுரியும் ஊழியர் மற்றும் அலுவலர்களுக்கு வரி விதிப்பு தொடர்பான துல்லியமான நடப்பு விவரங்களையும், வரி விதிப்பு முறைகளையும் குறித்த பயிற்சி அளிப்பதே இந்தப் பயிற்சி மையத்தின் நோக்கமாகும். மேலும் இத்துறை கணினி மயமாக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பான பயிற்சிகளும் மதிப்புக் கூட்டு வரி விதிப்பு தொடர்பான பயிற்சிகளும் இந்தப் பயிற்சி மையம் மூலம் அனைத்து வணிக வரித் துறைப் பணியாளர்களுக்கும், வணிகர்களுக்கும் அளிக்கப்படுகிறது.

அ) மேலும், இந்தப் பயிற்சி மையம் "சுருக்க அடிப்படைப் பயிற்சி" மற்றும் "சுருக்க கணினி மென்பொருள் பயிற்சி", பவானிசாகரில் அரசு ஊழியர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படுவதுபோல், 35 பணி நாட்களுக்கு இத்துறையின் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

(ஆ) பயிற்சி மையத்தில் மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும், உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்களாலும், ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) ஆகியோராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையத்தின் இயக்குநராக துணை ஆணையர் பணி நிலையில் ஒரு அலுவலர் பொறுப்பில் உள்ளார்.

(இ) 2003-2004 ஆம் ஆண்டு, பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர் விவரம் பின் வருமாறு:—

| | அடிப்படைப் பயிற்சி | பணியிடைப் பயிற்சி | கணினிப் பயிற்சி | மதிப்புக் கூட்டு வரி பயிற்சி |
|---|---|---|---|---|
| வணிக வரி அலுவலர் | 14 | 168 | 584 | 1277 |
| துணை வணிக வரி அலுவலர் | - | 288 | | |
| உதவி வணிக வரி அலுவலர் | 245 | - | 1215 | |
| பணியாளர் | — | — | | |

## 9. கணினி மையம்

ஆரம்பக் கட்டத்தில் சென்னையில் உள்ள அரசு புள்ளி விவர மையத்தில் உள்ள முதன்மைக் கணினியைப் பயன்படுத்தி ஆண்டு வரி விதிப்பு புள்ளிவிவரம் தயாரிக்கப்பட்டது. பின்னர், 1988-ல் சென்னை கிரீம்ஸ் சாலையில் இத்துறைக்குத் தனியாக கணினி மையம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் துணை மையங்கள் 1994-ல் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நான்கு மையங்களிலும், தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக உள்ள சுமார் ஒரு இலட்சம் வணிகர்களின் மாதாந்திர நமூனா மற்றும் 323 வரி விதிப்பு வட்டங்களில் பெறப்படும் தகவல்கள் கணினி மூலம் பதிவு செய்யப்படுகின்றன. மாதாந்திர நமூனாக்களில் உள்ள பொருட்களின் விற்பனைத் தொகை வாரியாகவும், வரி விகிதம் மற்றும் வரி வருவாய் வாரியாகவும் 1000 முன்னணி வணிகர்களின் வணிக விவரங்கள் கணினி மயமாக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 323 வரி விதிப்பு வட்டங்களிலும் அடிப்படைப் பணியான வணிகர் விவரப் பட்டியலைக் கணினியில் பதிவு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டமாக, மைய தொடர்பு நிலையத்துடன் 29 சோதனைச் சாவடிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் VSAT மூலம் இணைப்பு வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 29 சோதனைச் சாவடிகளின் தேவைகளைக் கவனிக்க ஏதுவாக சென்னை மைய தொடர்பு நிலையத்தை வலுப்படுத்த 2 Mbps தொடர்பு வழிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது வரி





விதிப்பு அலுவலகம், செயலாக்கப் பிரிவு மற்றும் மேல்முறையீடு அலுவலகங்களில் உள்ள கணினி மேற்கண்ட இணைப்புக்குப் போதுமானதாக இல்லையாதலால் சமச்சம (Peer to Peer) இணைப்பின் மூலம் ஒவ்வொரு வரி விதிப்பு வட்டத் தகவல் உபயோகிப்பாளர்களுக்கும், செயலாக்க மற்றும் மேல்முறையீடு அலுவலர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூடுதல் கணினி மற்றும் அச்சுப்பொறி இல்லாத வேலூர் மற்றும் திருச்சி கோட்டங்கள் உள்பட சென்னை, கோவை மற்றும் மதுரையில் உள்ள கணினி மையங்களுக்கு 150 கூடுதல் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், கணினி மயமாக்கப்படும் பணியை மேலும் விரிவுப்படுத்த மூன்றாம் கட்டமாக ரூபாய் 5 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டம் முடிந்த பிறகு சோதனைச் சாவடிகள் தொலைபேசியின் துணை இன்றி கணினிவழியாக புள்ளிவிவரங்கள் அனுப்ப முடியும்.

வணிக வரித் துறை தொடர்பாக பொதுமக்கள் தகவல்கள் பெற www.tnsalestax.com என்ற தனி இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

## 10. வணிகர் நல வாரியம்

வணிக வரித் துறையின் பெரும்பான்மையான வருவாய், பொதுமக்களிடமிருந்து வணிகர் சமுதாயத்தின் மூலமாகப் பெறப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு வணிகர் சமுதாயத்தின் நலத்துக்காகப் பல திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. வணிகர் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு அரசாணை எண் 74, வணிக வரித் துறை, நாள் 27–6–2003–ன்படி இவ்வாரியம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் உறுப்பினர்களாக, அலுவலர்-உறுப்பினரன்றி வணிகர்கள் சார்பாக 16 அலுவல்சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜூன் 2003–ல் அரசு இவ்வாரியத்திற்கு ரூ.24.27 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

இந்த வாரியத்தின் உறுப்பினராகும் தகுதி எல்லா வணிகர்களுக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.250/- கட்டணமாகச் செலுத்தவேண்டும். இப்போது வாரியத்தில் 40,312 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் மூலம் ரூ.72,39,300/- பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது.

**31–3–2004 வரை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம்**

| வ. எண் | உதவி விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | குடும்ப நல உதவி ரூ.20,000/– வீதம் இறந்து போன உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு | 252 | 65.15 |
| 2. | மருத்துவ உதவி ரூ.25,000/– வரை உறுப்பினர்களுக்கு | 29 | 6.46 |
| 3. | கல்வி உதவி ரூ.3,000/– வீதம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு | 73 | 1.86 |
| 4. | விளையாட்டு உதவி விளையாட்டுக்கு ரூ.3,000/–லிருந்து ரூ.25,000/– வரை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு | 2 | 0.15 |
| 5. | தீ விபத்து உதவி ரூ.5,000/– வீதம் உறுப்பினர்களின் கடைகள் மற்றும் கிடங்குகளுக்கு | 29 | 1.45 |
| 6. | ஊனமுற்றோருக்கான உதவி ரூ.20,000/– வரை உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு | 02 | 0.15 |
| 7. | உயர் மதிப்பெண் பெற்றவர்களுக்கான உதவி ரூ.5,000/– வரை உயர் மதிப்பெண் பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு | 6 | 0.20 |
| மொத்தம் | | **393** | **75.42** |





**11. மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழு**

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அக்குழுவின் தலைவராகவும், அம்மாவட்ட வணிக வரி உதவி ஆணையர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். குழுவின் உறுப்பினர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கிறார். அந்தந்த மாவட்டத்தில் வணிகர்களின் இடர்கள் குறித்து விவாதிக்க, இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடுகிறது. கொள்கை தொடர்பானவை அரசின் முடிவுக்கு அனுப்பப்படும்.

**11.1 மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு**

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், வணிக வரித் துறை அமைச்சரைக் கூடுதல் தலைவராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வணிக வரித் துறைச் செயலாளர் இக்குழுவின் செயலாளராகவும், வணிக வரி ஆணையர் அமைப்பாளராகவும் உள்ளனர். வணிகர்கள், வணிகக் கழகப் பிரதிநிதிகள் மற்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் ஆகியோரைக் குழு உறுப்பினர்களாக அரசு நியமித்துள்ளது. சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் கூடுதல் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

**12. உள்ளாட்சி அமைப்புகளுக்கான உதவி**

உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை உயர்த்த, கேளிக்கை வரி வருவாயில் இடத்திற்குத் தகுந்தவாறு 60 முதல் 70 விழுக்காடு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு 31–3–1997 வரை வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு 90 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (31–12–2003 வரை) கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ.50.85 கோடியாகும்.

**13. குறைதீர்க்கும் பிரிவு**

வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் பிரிவு ஒன்று 1999 முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும்

[2004 ஜூலை 31

புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

## 14. நிர்வாகத்தை மேம்படுத்த எடுக்கப்பட்ட சில சிறப்பு நடவடிக்கைகள்

### 14.1 ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

தமிழகத்தில், வரி ஏய்ப்பினைத் தடுக்கவும், சோதனைச் சாவடிகளின் வழியாக எடுத்துச் செல்லப்படும் பொருட்களைக் கண்காணிக்கவும், தொடர்புடைய ஏனைய அரசுத் துறைகள் ஆய்வு நடத்த வசதியாகவும் முதற்கட்டமாக, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள், ஒன்று அல்லது இரண்டு இடங்களில் அமைக்கப்படலாம் என அரசாணை எண் 60 வணிக வரித் துறை, 17–6–2002–ல்அறிவித்ததைத் தொடர்ந்து, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

### 14.2 ‘செல் ஃபோன்’ (நடமாடும் தொலைபேசி) வழங்குதல்

வணிக வரித் துறையிலுள்ள செயலாக்கப் பிரிவின் பணித்தரம் மிகவும் சிறந்த முறையில் அமையும்பொருட்டும் துரிதப்படுத்தும் வகையிலும் 68 நடமாடும் தொலைபேசிகள் வாங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 14.3 தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொதுமக்களின் ஆலோசனைகள், குறைகள் மற்றும் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் சேகரிக்க, ‘தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி’ ரூ.2,00,000/- செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கருவி வணிக வரி ஆணையர் அவர்களின் அறையில் பொருத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த 20–02–2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வசதிக்கென தனியாக 044-28520535 என்ற எண் கொண்ட நேரடித் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

### 14.4 ரொக்கப் பரிசு

வணிக வரித் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் திறமையை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், செயலாக்கப் பிரிவில் மூன்று அலுவலர்களுக்கும், வரி விதிப்புப் பிரிவில் மூன்று அலுவலர்களுக்கும் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம் நவம்பர், 2003-ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி, துறையில் பாராட்டத்தகும் வகையில் பணிபுரிந்த நான்கு அலுவலர்களுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் ரொக்கப் பரிசும் தகுதிச் சான்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20–2–2004 அன்று வழங்கப்பட்டது.

### 14.5 மோட்டார் வாகனங்கள் வழங்குதல்

வணிக வரித் துறையில் பழுதுபட்ட பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிதாக 36 மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கு அரசாணை (2டி) எண் 79, வணிக வரித் துறை, நாள் 29–09–2003-ல் ரூ.115.98 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அதன்படி, 36 மோட்டார் வாகனங்கள் வாங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 20–02–2004 அன்று துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

## 15. மதிப்புக் கூட்டு வரி

மதிப்புக் கூட்டு வரி முறையை நடைமுறைப்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட குழுவினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைக் கூடுதல் தலைவராகவும் கொண்டு அரசு அமைத்துள்ளது. மதிப்புக் கூட்டு வரியின்கீழ் வணிகர் கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியை விற்பனை செய்யும்போது கழித்துக்கொள்ளும் வசதி உள்ளது. தற்போது முதல் விற்பனைமீது மட்டுமே வரி செலுத்தப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி முறையில் வரி விதிப்பு மற்றும் வரி வசூல் எல்லா விற்பனை நிலைகளிலும் இருக்கும். அதாவது செலுத்திய வரியை கழித்துக் கொள்ளும் வசதியுடன் இரண்டாம் மற்றும் அதற்கடுத்த ஒவ்வொரு விற்பனையும் வரி விதிப்புக்கு உள்ளாகும்.

**15.1 பயிற்சி**

மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறை புதியது என்பதால், இந்தத் துறையின் மூத்த அலுவலர்கள் மூலம் பிற அலுவலர்களுக்கும், வணிகர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வணிகர் சங்கங்கள் மற்றும் வணிகர் கழகங்கள் ஏற்பாடு செய்யும் கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் மூத்த அலுவலர்களைக் கலந்துகொள்ளச் செய்து, மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறை தொடர்பான விவரங்கள் அவ்வப்போது வணிகர்கள் அறிந்துகொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





## இணைப்பு VIII

(80 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 19 – உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**முன்னுரை**

உயர் கல்வித் துறையில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அவாவிற்கேற்ப உயர் கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

1.2 கோரிக்கை எண் 19—உயர் கல்வியின்கீழ் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.649.81 கோடியாகும். பொறியியற் கல்லூரிகளிலும், தொழில்நுட்பப் பயிலகங்களிலும் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வசதி கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 79,302 ஆகும். தொழில்நுட்பப் பயிலகங்களில் மாணவர் சேர்க்கை 56,009 ஆகும்.

1.3 புதிய கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை வெறுமனே உயர்த்துவதைவிட, இருக்கின்ற நிறுவனங்களில் உள்ள வசதிகளை ஒன்று திரட்டி அவற்றின் தரத்தை உயர்த்துவதே இவ்வரசின் கொள்கையாக உள்ளது. இக்கொள்கையையொட்டி ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தை ஓர் இணைப்பு வகைப் பல்கலைக்கழகமாக அரசு மாற்றியமைத்துள்ளது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும், சந்தைகளின் தேவைக்கேற்பவும் பொறியியற் கல்வி பாடத் திட்டத்தை மேம்படுத்த இப்பல்கலைக்கழகம் முனைந்து வருகிறது. தொழில் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று பயன்பெறும் வகையில் கலந்து செயலாற்ற பெரிதும் ஊக்கம் அளிக்கப்படும்.

1.4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், வேலை வாய்ப்புள்ள பாடப் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

1.5 தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் தர மதிப்பீடு பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. பல்கலைக்கழகங்கள் மற்றும் கலை, அறிவியல்

கல்லூரிகள் தேசிய மதிப்பீடு மற்றும் ஏற்பளிப்புக் குழுவின் (NAAC) தர மதிப்பீட்டைப் பெறவும், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் தேசிய ஏற்பளிப்புக் குழுவின் (NBA) தர மதிப்பீட்டைப் பெறவும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிப்பதை அரசு தன் கொள்கையாகக் கொண்டுள்ளது. பாடத் திட்டங்களை மேம்படுத்தவும், கல்வி பயிற்றுவித்தல், பயிலுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தவும் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

*1.6* அனைத்துத் தரப்பு மக்களும், உயர் கல்வி பெறத்தக்க வகையில், சென்னையில் "தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்", *2002-2003* ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, பல்வேறு பாடப் பிரிவுகளில் *10,000* மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

**நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை *19*—உயர் கல்வித் துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.*649.81* கோடி ஆகும். இதில் ரூ.*14.51* கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ.*635.30* கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

**நிதி ஒதுக்கீடு 2004-2005**

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | --- | 770.00 | 770.00 |
| 2202 03 | பொதுக் கல்வி பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 224.88 | 50783.21 | 51028.09 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 156.13 | 11444.11 | 11600.24 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 545.61 | -- | 545.61 |
| 2205 104 | கலையும் பண்பாடும் ஆவணக்காப்பகங்கள் | 3.46 | 312.58 | 316.54 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | -- | 40.55 | 40.55 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூக நலப் பணிகள் | -- | 153.87 | 153.87 |
| 2551 | மலைப் பகுதிகள் | 33.00 | -- | 33.00 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 195.52 | -- | 195.52 |
| 3454 | மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளிவிவரம் | | | |
| 110 | விவரச் சுவடியும், புள்ளிவிவரக் குறிப்பேடுகளும் | -- | 25.52 | 25.52 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு கலை பண்பாடு குறித்த மூலதன செலவு | 272.78 | 0.01 | 272.79 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | -- | 0.01 | 0.01 |
| | மொத்தம் | **1451.38** | **63529.86** | **64981.24** |

[2004 ஜூலை 31

**2004—2005 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டப் பணிகள்**

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலை செலவு | 2003-04-ல் செலவு |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| | **கல்லூரிக் கல்வி இயக்ககம்** | | |
| 1. | கல்லூரிக் கல்வி இயக்கக அலுவலகத்திலும் வட்டார அலுவலகங்களிலும் கட்டமைப்பு தானியங்கி பணி மற்றும் அடிப்படை வசதிகளை வலுப்படுத்துதல். | 30.00 | 30.00 |
| 2. | அரசு தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் மூன்றில் கணினி முறையில் இயங்கும் நூலகங்களை அமைத்தல். | 20.85 | 20.85 |
| 3. | கண் பார்வையற்றோர் பயிலும் வசதிக்காக நான்கு கருவிகளை அமைத்தல். | 8.80 | 8.80 |
| 4. | கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்துதல். | 20.00 | 20.00 |
| 5. | இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரியின் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | 25.00 | 10.00 |
| | **தொழில்நுட்பக் கல்வி** | | |
| 6. | பர்கூர், அரசினர் பொறியியற் கல்லூரியில் இயந்திர பொறியியல் கட்டடம் கட்டுதல் | 100.00 | 40.00 |
| 7. | பர்கூர் அரசு பொறியியற் கல்லூரிகள் மின்னணுவியல் கருவிகளை கையாளும் பொறியியல் கட்டடம் மற்றும் கணினி பொறியியல் கட்டடம் கட்டுதல். | 100.00 | 40.00 |



2004 ஜூலை 31]

| | | | |
|---|---|---|---|
| 8. | பர்கூர், அரசினர் பொறியியற் கல்லூரியில் மாணவர் இல்லம் கட்டுதல். | 50.00 | 20.00 |
| 9. | வேலூர், தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப நிறுவனத்தில் எந்திர பொறியியல் கட்டடம் மற்றும் திரவ பரிசோதனை எந்திர ஆய்வுக்கூடம் கட்டுதல். | 100.00 | 40.00 |
| 10. | வேலூர், தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப நிறுவனத்தில் மின்னணுவியல் கருவிகளை கையாளும் பொறியியல் கட்டடம் மற்றும் நூலக கட்டடம் கட்டுதல். | 100.00 | 40.00 |
| 11. | வேலூர், தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணவியர் இல்லம் கட்டுதல். | 50.00 | 20.00 |
| 12. | நிலை II பணிகளின்மீழ் புரசைவாக்கம் அரசு பல்தொழில் பயிற்சிக் கல்லூரியில் நிருவாகக் கட்டடம், வகுப்பறைகள், உணவகம் மற்றும் பணிக் களரிகள் உட்பட கட்டடம் கட்டுதல் | 100.00 | 20.00 |
| | **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்** | | |
| 13. | அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை மேற்கொள்ள தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்றத்திற்கு மானியங்கள். | 25.00 | 25.00 |

**தமிழ்நாடு ஆவணக் காப்பகம்**

| | | | |
|---|---|---|---|
| 14 | EPABX போர்டு நிறுவுதல் | 1.15 | 1.15 |
| 15 | நவீன ஆவணக் காக்கும் முறையை அமைத்தல் | 10.00 | 10.00 |

**தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்**

| | | | |
|---|---|---|---|
| 16. | பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் தற்போதுள்ள காட்சிக் கூடங்களை நவீனமாக்கல். | 10.00 | 10.00 |

**அறிவியல் நகரம்**

| | | | |
|---|---|---|---|
| 17. | அறிவியல் நகரில் கட்டப்பட்ட புதிய அரங்கில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 9.35 | 9.35 |
| | மொத்தம் | 760.15 | 365.15 |

## 2. கல்லூரிக் கல்வி

கல்லூரிக் கல்வியைத் தனியாக நிர்வகிக்கும் பொருட்டு முன்னர் இருந்த பொதுக் கல்வி இயக்ககத்திலிருந்து 1965 ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. உயர் கல்வித் துறையில் மிகவும் முன்னேற்றமடைந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது.

2.2 தமிழகத்தில் 27 பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 12 பல்கலைக்கழகங்களுக்கான ஒட்டுமொத்த மானியம் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

2.3 தற்போது 478 கல்லூரிகள், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:—



| வ எண் | கல்லூரிகள் வகை | அரசு உறுப்புக் கல்லூரிகள் | தனியார் கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | உதவி பெறும் கல்லூரிகள் | சுயநிதிக் கல்லூரிகள் (உதவி பெறாதவை) | |
| 1 | கலை மற்றும் அறிவியல் | 60 | 133 | 247 | 440 |
| 2 | உடற்பயிற்சிக் கல்வி | | 3 | 1 | 4 |
| 3 | கீழ்த்திசை | | 10 | - | 10 |
| 4 | சமூகப் பணி பள்ளி | | 2 | - | 2 |
| 5 | கல்வியியல் | 7 | 14 | 1 | 22 |
| | மொத்தம் | **67** | **162** | **249** | **478** |

**புதிய பாட வகுப்புகள் தொடங்குதல்:**

2.4 புதிய வேலைவாய்ப்புள்ள இளங்கலை மற்றும் முதுகலை பாடப் பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து உறுப்புக் கல்லூரிகளில் துவக்கப்பட்டன. தற்பொழுது உறுப்புக் கல்லூரிகளில் 41 புதிய இளங்கலை/அறிவியல் பாடப் பிரிவுகள் மற்றும் 68 முதுகலை/ அறிவியல் பாடப் பிரிவுகள், சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளன. புதிய வேலைவாய்ப்புள்ள பாடப் பிரிவுகள் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு, கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் உடனடியாக வேலைவாய்ப்பினை அதிகரிக்கும். சில பெண்கள் கல்லூரிகளில், படிப்பை முடித்தவுடன் பெண்கள் அதிக அளவில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய பாடப் பிரிவுகளான பட்டயப் படிப்பு மற்றும் குறுகிய காலச் சான்றிதழ் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

**பல்கலைக்கழக புதிய உறுப்புக் கல்லூரிகள் தொடங்குதல்**

2.5 அரசின் கொள்கை முடிவின்படி 2003-04 ஆம் கல்வியாண்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட புதிய மகளிர் கல்லூரி சாத்தான்குளத்திலும், பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட புதிய கல்லூரி நீலகிரி

மாவட்டம் கூடலூரிலும் தொடங்கப்பட்டு, அக்கல்லூரிகளில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பாடப் பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன:—

I. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மகளிர் கல்லூரி, சாத்தான்குளம்

i. இளமறிவியல், கணிதம்

ii. இளம் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடு

iii. இளங்கலை வணிக மேலாண்மை

II. பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரி (இருபாலர்), கூடலூர்.

i. இளமறிவியல், கணிதம்

ii. இளங்கலை புவியமைப்பியல்

iii. இளங்கலை வணிக மேலாண்மை

iv. இளம் வணிகவியல்

**தமிழ்நாட்டில் கல்லூரிகளின் தர நிர்ணயம் (NAAC)**

2.6 தமிழ்நாட்டில், அதிக எண்ணிக்கையில் கல்வி நிலையங்கள் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இன்றைய தேதியில், தமிழ்நாட்டில் 109 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

2.7. ஒரு மாநில அளவிலான தர உறுதிப்பாடு ஒருங்கிணைப்புக் குழுவையும், கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் ஒரு தர உறுதிப் பிரிவையும் அரசு அமைத்துள்ளது.

**மாநிலத்தில் தன்னாட்சிக் கல்லூரிகளின் பங்கு**

2.8 தமிழ்நாட்டில் 1978-79 முதல் கல்லூரிகளுக்கு தன்னாட்சி தகுதி வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் தமிழ்நாட்டில் 8 கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரிகளுக்கும், 34 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி தகுதி வழங்கப்பட்டுள்ளது. கல்வித் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் கல்வித்





திட்டத்தில் புதுமையையும், ஆக்கபூர்வமான புதிய முயற்சிகளையும் மேற்கொள்ள தன்னாட்சி தகுதி இக்கல்வி நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கிறது. கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குதல் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்களுக்கு தன்னாட்சி வழங்குதல் மூலம் அடைந்த சாதனைகளாகக் கீழ்க்கண்டவற்றை குறிப்பிடலாம்:—

i) தமிழ்நாட்டில் பெரும்பாலான தன்னாட்சி கல்லூரிகள் இன்றைய தேவைக்கேற்ப அவர்களுடைய பாடத் திட்டத்தை மாற்றிக் கொண்டுள்ளன.

ii) தமிழ்நாட்டில் சில தன்னாட்சிக் கல்லூரிகளில் மாணவர் தாங்கள் விரும்பும் பாடப் பிரிவுகளைத் தேர்வு செய்யும் வகையில் (Choice Based Credit System) கற்ற கல்விக்கேற்ப மதிப்பீடு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

iii) பெரும்பாலான தன்னாட்சிக் கல்லூரிகள், அவர்களுடைய மாணவர்களை மதிப்பாய்வு செய்ய தொடர் உள் மதிப்பீடு முறையை (Continuous Internal Assessment) அறிமுகப்படுத்தியுள்ளன.

iv) தொடர் உள் மதிப்பீட்டு முறையின்கீழ் காலமுறையான தேர்வுகள் பலவித கருத்தரங்கங்கள், குழு விவாதங்கள் போன்றவை ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன.

**ஆசிரியர் பயிற்சிக் கல்வியை (பி.எட்.) ஊக்குவித்தல்:**

2.9 தமிழ்நாட்டில் தற்பொழுது 22 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் 7 கல்லூரிகள் உறுப்புக் கல்லூரிகளாகும். இவற்றுடன் 14 அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், ஒரு சுய நிதி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. 7 உறுப்புக் கல்வியியல் கல்லூரிகளில், இரண்டு கல்லூரிகள் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன.

ஆசிரியர் கல்வியை மேம்படுத்துவதற்காக பத்தாவது ஐந்தாண்டு தொலைநோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திட்ட ஒப்புதல் பெறப்பட்டு இவ்வாண்டிலிருந்து செயல்படுத்தப்படவுள்ளது.

## சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள்

2.10 பராமரிப்புப் பணிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 67 உறுப்புக் கல்லூரிகளுக்கும் மொத்தம் ரூ.4,37,39,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு, குடிநீர், கழிப்பிட வசதி போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

## நாட்டு நலப் பணித் திட்டம்

2.11 பல்கலைக்கழகங்களிலும் மற்றும் அனைத்துக் கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாணவர்களுக்கு ஆளுமைத்திறன், தன்னம்பிக்கை, தலைமைப் பண்புகளை உருவாக்குகிறது. இதற்கான மானியம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 2,05,700 ஆக இருந்த மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2003-2004 ஆம் கல்வியாண்டு முதல் 2,30,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையாகும். நாட்டு நலப் பணித் திட்டத்தில் மாணவத் தொண்டர்களை சேர்ப்பதைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா மாநிலத்தை முந்திவிட்டது. சிறப்பு முகாம்களில் பங்கு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1,15,000 ஆகும். தற்பொழுது பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 1625 அலகுகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 1350 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. நாட்டு நலப் பணித் திட்டம் கல்லூரிக் கல்வி இயக்குநரை மாநில ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு அவர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

2.12 2003-04 ஆம் ஆண்டில் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு மைய அரசின் பங்கு ரூ.366.06 இலட்சங்களும், மாநில அரசின் பங்கு ரூ.261.47 இலட்சங்களும், ஆக மொத்தம் ரூ.627.53 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



## மகளிர் திறனேற்றம்

### இந்திய ஆட்சிப் பணி/இந்திய காவல் பணித் தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான இலவசப் பயிற்சி

2.13 அகில இந்திய அளவில் நடைபெறும் ஐ.ஏ.எஸ்/ஐ.ப்பி.எஸ் தேர்வுகளில் பெண்கள் சிறப்பாகப் பங்குபெறும் பொருட்டு பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்க சென்னை, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ஆகிய கல்லூரிகளில், இரு பயிற்சி மையங்கள் அரசால் துவக்கப்பட்டன. ஒவ்வொரு மையத்திலும், 60 மகளிருக்கு ஐ.ஏ.எஸ்/ஐ.ப்பி.எஸ் தேர்வுகள் எழுத இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்ட செயல்பாட்டிற்கென அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## தமிழ்வழி பயிலும் மாணவ/மாணவியர்க்கு ஊக்கத் தொகை

2.14 தமிழ்வழியில் பயிலும் மாணவ மாணவிகளை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் தமிழ்வழி பயிலும் பட்ட வகுப்பு மாணவ, மாணவிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.400/- உதவித் தொகை ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படுகிறது.

2.15 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்வழி வகுப்புகளில் பயின்ற 31,812 மாணவ மாணவிகள் பயன்பெற்றுள்ளனர். 2004-2005 ஆம் ஆண்டுக்கு இதற்காக ரூ.1,35,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## படிப்புதவித் தொகைத் திட்டங்கள்

2.16 கல்லூரிக் கல்வி இயக்ககத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன:—

(i) தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (மத்திய அரசு திட்டம்)

(ii) பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநில படிப்புதவித் தொகை

(iii) மாநில தகுதி படிப்புதவித் தொகை

[2004 ஜூலை 31

(iv) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான தனித் தகுதி மானியம்

(v) மாநில கல்லூரிக் கல்விப் படிப்புதவித் தொகை

vi) புது டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கல்வி பயிலும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை

(vii) டேராடுன் இராஷ்டிரிய இந்திய மிலிடரி அகாடமியில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை

(viii) புனே கடக்வாசலாவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவ மாணவிகளுக்கு படிப்புதவித் தொகை

(ix) இராணுவத்தில் பணிபுரிவோர் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள்

(x) முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள்.

(xi) சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கான படிப்பு உதவித் தொகை

(xii) அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் முழுநேர ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு பயிற்சிக்கால உதவித் தொகை வழங்கும் திட்டம்

**ஏழை மாணவிகளுக்கு இலவசப் படிப்பு**

**பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவசப் படிப்புத் திட்டம்**

2.17 இந்நலத் திட்டத்தின்கீழ் சாதி, இனம் முதலியன பாராமல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்டப் படிப்பு பயிலும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஏழை மாணவிகள் இலவசக் கல்வி பெறுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.



2004 ஜூலை 31]

2.18 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 65.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 8463 மாணவிகள் பயன்பெற்றனர். 2004-2005 ஆம் ஆண்டுக்கும் இத்திட்டத்திற்காக ரூ. 65.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாநில ஆங்கில நிறுவனம்**

2.19 இளநிலை பட்ட வகுப்புகள் நிலையில் ஆங்கிலத்தைக் கற்பித்தல் மற்றும் கற்றலின் திறத்தை அதிகரிக்க, மாநில ஆங்கில நிறுவனம் புத்தாக்கப் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை (Orientation Programmes) செயல்படுத்தி வருகிறது.

2.20 2004-2005 ஆம் ஆண்டில், ஆங்கிலத்தில் திறமை குறைந்த இளநிலை பட்ட வகுப்புகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு மாற்றுப் பாட வகுப்புகள் (Remedial Courses) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 67 உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலுள்ள பட்ட வகுப்பு மாணவர்களுக்கு தொடர்பு ஆங்கில வல்லமைக்கு சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகளை நடத்தக் கருதப்பட்டுள்ளது.

**தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

2.21 அரசு உறுப்புக் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில், குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக வகுப்பு முடிந்த பிறகும், விடுமுறை நாட்களிலும் சிறப்பு பயிற்சி மூலம் புத்தாக்கப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி முடிந்ததும் இவர்கள் அறிவாற்றல் மிக்க ஏனைய மாணவர்களுடன் போட்டிபோடவும், பல்கலைக்கழகத் தேர்வுகளில் சம்பந்தப்பட்ட பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெறவும் இயலும். 2003-2004 கல்வி ஆண்டில் 20 கல்லூரிகளுக்கு ஒரு கல்லூரிக்கு ரூ.10,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டுக்கு அதே அளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கணினி மற்றும் இணைய பயிற்சித் திட்டம்**

2.22 உயர் கல்வித் துறையின் 19-3-2003 தேதியிட்ட ஆணையின்படி, அரசு உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணினியியல் பயிலாத மாணவர்கள் கணினி மற்றும் இணையதள பயிற்சி பெறுவது 2003-04 ஆம் ஆண்டு முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 60 அரசு உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பு பெறும் வரையில் இதற்குரிய பாடத் திட்டம் மாற்றியமைக்கப்படும்.

**கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம்**

2.23 அரசு உறுப்புக் கல்லூரிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களில், மாணவர் நலன் கருதி கௌரவ விரிவுரையாளர்கள் ஆண்டுதோறும் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். 2003-2004 ஆம் கல்வியாண்டில் 750 கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதேபோல் 2004-2005 ஆம் ஆண்டில் 1250 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**ஆராய்ச்சி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை**

2.24 2003-2004 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 105 ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2004-2005 ஆம் நிதியாண்டில் ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு ரூ. 24.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 3. பல்கலைக்கழகக் கல்வி

உயர் கல்வித் துறையின் ஆளுகையில் கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்கள் செயல்படுகின்றன:—

1. அண்ணா பல்கலைக்கழகம்
2. சென்னைப் பல்கலைக்கழகம்
3. அண்ணாமலை பல்கலைக்கழகம்
4. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்



5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
13. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்

## சென்னைப் பல்கலைக்கழகம்

3.1 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் உயர் கல்வித் துறையில் மிகப் பெரிய பணியை ஆற்றியுள்ளது. சமுதாயத் தேவைகளுக்கேற்றபடி புதிய பாடப் பிரிவுகளைப் புகுத்துவதில் அது ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லை சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் என்ற மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

3.2 சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்வித்தரத்தை உயர் கல்வியில் உலகளாவிய உயர் திறன்சேர் பல்கலைக்கழக நிலைக்கு மேம்படுத்த சென்னைப் பல்கலைக்கழக முனைப்புத் திட்டம் - 150 என்ற தலைப்பிலான 12 அம்சங்கள் கொண்ட செயல் திட்டம் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவ்வம்சங்கள் பின்வருமாறு:—

1 உயர் திறன்சேர் பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசியத் திட்டங்கள்

2 கல்வித்தர தணிக்கைத் திட்டம் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு உலக அளவிலான தர மதிப்பீடு பெறுதல்.

3 நிர்வாகத் தணிக்கை மற்றும் தாள்களற்ற நிர்வாகம், மின் ஆளுகை நிர்வாகம்

4 நடைமுறைப்படுத்தப்படும் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் செயல் திட்டம்

5 தன்னாட்சி உரிமைபெற்ற மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளின் கல்வித்தர கண்காணிப்புத் திட்டம்.

6 நிதி ஆதாரங்களைக் கண்டறிதல் மற்றும் பல்கலைக்கழக நிதியைப் பெருக்குதல்

7 செனட் கட்டடத்தின் சீரமைப்புப் பணி

8 கல்விக்கூடங்களையும், ஆய்வுக்கூடங்களையும் நவீனமயமாக்குதல் மற்றும் பல்கலைக்கழக வளாகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

9 கணினி உதவியோடுகூடிய கற்பிக்கப்படும் சோதனைக்கூடங்கள், மின்னணு நூலகங்கள் மற்றும் கல்வியில் செம்மை உருவாக்கும் திட்டங்கள்

10 உலகமயமாக்கப்பட்ட உயர் கல்வியை உருவாக்கி அமல்படுத்துதல்

11 தொலைதூரக் கல்வி மற்றும் தேர்வுகளை நவீனப்படுத்துதல்

12 பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு நலத் திட்டங்கள் மற்றும் மாணவர்களுக்கு சுயஉதவித் திட்டங்கள்.

*3.3* தேசிய மற்றும் பன்னாட்டு நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலமாக பல்கலைக்கழகத்திற்கு நிதி ஆதாரங்களைத் திரட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் உயர் திறன்சேர் பல்கலைக்கழகம் என்ற தகுதிக்காகப் பல்கலைக்கழக மானியக் குழு ரூ.30.00 கோடி ஒதுக்கீடு செய்து முதல் தவணையாக ரூ.10.00 கோடி வழங்கியது. தற்போது முறையான மதிப்பாய்விற்குப் பிறகு அக்குழுவால் அளிக்கப்பட்ட இரண்டாம் தவணை மானியமான ரூ.10.00 கோடி தொகையுடன் இரண்டாம் ஆண்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



*3.4* தொடங்கப்பட்ட திட்டங்களின் சிறப்பியல்புகள்/ முன்னேற்றங்கள் வருமாறு:—

(அ) 16-10-2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பல்கலைக்கழக முதுகலைப் பட்டப் படிப்பு மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் தாங்கள் படித்துக் கொண்டிருக்கும்பொழுதே பணம் ஈட்டும் வகையில் பகுதிநேர வேலை வாய்ப்புகள் வழங்க படிக்கும்பொழுதே ஊதியம் ஈட்டுதல் என்ற புதுமையான திட்டம் தொடங்கப்பட்டது. ரூபாய் பத்து இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஆண்டொன்றிற்கு 138 மாணவர்களுக்கு பகுதிநேர வேலை வாய்ப்பினை இத்திட்டம் அளிக்கிறது.

(ஆ) சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி மற்றும் சேத்துப்பட்டு ஆகிய சென்னைப் பல்கலைக்கழக வளாகங்களில் உள்ள உள்கட்டமைப்புகளை ஒட்டுமொத்தமாக வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பணி விவரங்கள் வருமாறு:—

i) கிண்டி மற்றும் தரமணியில் ஒருமுகப்படுத்தப்பட்ட கருவி வசதிகள்

ii) அனைத்து வளாகங்களிலும் கலை மற்றும் கணினிக்கூடங்கள், மாணவர் வசதி மையங்கள் மற்றும் மின் ஆக்கி வசதிகள்

iii) விருந்தினர் இல்லம் மற்றும் மாணவர் விடுதி விரிவாக்கங்கள்

iv) அனைத்து வளாகங்களிலும் நூலகங்களை நவீனப்படுத்துதல் மற்றும் வளாகங்களுக்கிடையே மின்வலைத் தொடரமைத்தல்.

(இ) பல்கலைக்கழக மானியக் குழு அளிக்கும் நிதியைப் பயன்படுத்தி UGC INFONET எனும் திட்டத்தின்கீழ் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் பல்கலைக்கழகங்களிடையே ஒரு மின்வலைத் தொடரமைப்பை ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*3.5* சனவரி 2004-ல் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) கீழ்க்கண்ட ஆறு துறைகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.2.87 கோடி மொத்த மானியமாக வழங்கியுள்ளது.

1. கரிம வேதியியல்

2. உயிர் வேதியியல் மற்றும் மூலக்கூறு உயிரியல்

[2004 ஜூலை 31

3. அணு மற்றும் கோட்பாட்டு இயற்பியல்.

4. புள்ளியியல்

5. செயல் வேதியியல்

6. ராமானுஜன் உயர் கணித இயல் நிறுவனம்

3.6 (1) அயல்நாடுகளில் இந்திய உயர் கல்வியைக் கற்க ஊக்குவித்தல் (PIHEAD) என்ற திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழு இப்பல்கலைக்கழகத்தையும் தேர்வு செய்து மேற்கத்திய மற்றும் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளிலிருந்து மாணவர்களை ஈர்க்க வேண்டி 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளில் அயல்நாட்டு மாணவர்களைச் சேர்க்க ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் நோக்குடன் சென்னைப் பல்கலைக்கழக உலகக் கல்வி மையம் நிறுவப்பட்டுள்ளது. இதற்காக 25 வேறுபட்ட முற்றிலும் புதிய முதுகலைப் பட்டயச் சான்றிதழ் படிப்புப் பிரிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(2) உலகத் தரத்திற்கு இணையான தரமான கல்வியை அளிக்கவும், தரத்தைத் தொடர்ந்து உறுதி செய்யும் வகையில் இப்பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைக்கப்பெற்ற கல்லூரிகளுக்கு கல்வித்தர தணிக்கைத் திட்டம் என்ற முறையைப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கூறிய கல்வி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கல்வி தொடர்பான தணிக்கைக் குழுக்கள் மற்றும் உலகத்தர உறுதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(3) பல்கலைக்கழகக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வலுப்படுத்த வல்லுநர்களைக் கொண்டுவர வசதியாக பல்துறை வல்லுநர்களை கௌரவப் பேராசிரியர்களாக அழைக்கும் முறை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(4) சிறந்த மாணவர்களைக் கண்டறியவும், அவர்களை ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட ஊக்குவிக்கவும், பல்கலைக்கழகப் பொதுத் திட்டமாக கோடைக்கால ஆராய்ச்சித் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டில் புது முயற்சியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. பட்டப் படிப்பு மாணவர்கள் 100 பேருக்கு பல்கலைக்கழகத் துறைகளில் ஆய்வுக்கொடை வழங்கப்படவுள்ளது.



2004 ஜூலை 31]

(5) விரிவுரையாளர் மற்றும் ஆய்வாளர் பணிக்கு உரிய தகுதியை தமிழ்நாடு மாணவர்கள் அதிக விழுக்காடு அடைய வசதியாக முதுகலைப் பட்டதாரி மாணவர்கள் தேசிய அளவில் நடத்தப்படும் உயர் கல்வி நுழைவுத் தேர்வு மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வு எழுத அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் பல்கலைக்கழக ஒருமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கையாக 2004-2005-ல் புத்தாக்கப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.7 சென்னைப் பல்கலைக்கழகம் தனது 150-வது ஆண்டை நோக்கி அடியெடுத்து வைக்கிறது. எனவே பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டுப் பொன் விழாக் கொண்டாட்டத்தை அங்கு தொடங்குவதற்கு ஏதுவாக பேரவைக் கட்டடத்தைச் சீரமைப்பு செய்து அதை முழுப் பயன்பாட்டில் வைக்க வேண்டுமென்று பல்கலைக்கழக ஆட்சிக் குழு தீர்மானம் நிறைவேறியுள்ளது. இதற்காகப் பல்கலைக்கழகம் ரூபாய் 6 கோடி அளவில் திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. இதற்காகப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள், தொழில் அதிபர்கள், கொடையாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் மூலமாக தீவிரமாக நிதி திரட்டி சீரமைப்புப் பணி நடந்து வருகிறது.

## அண்ணாமலை பல்கலைக்கழகம்

3.8 அண்ணாமலை பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 48 துறைகளுடன் இயங்கி வருகின்றது. ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பட்டப் படிப்புகளை 2002-2003 ஆம் கல்வியாண்டில் 27 பாடத் திட்டங்களில் தொடங்கியுள்ளது. இவற்றில் சேர மாணவ மாணவியர் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

3.9 மேலும் பல புதிய பட்ட மற்றும் பட்டய வகுப்புகளான எம்.இ., கணினியியல் மற்றும் தொழில்நுட்பம், எம்.எஸ்ஸி. தாதியியல், யோகா மற்றும் தியான பட்டயப் படிப்பு, பல் மருத்துவத்தில் சான்றிதழ் படிப்பு ஆகியன தொடங்கப்பட்டுள்ளன.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

3.10 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 72 துறைகளை உள்ளடக்கிய 18 புலங்கள் (schools) உள்ளன. பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றுள்ள 82 கல்லூரிகளுள் 9 தன்னாட்சிக் கல்லூரிகளும், 7 மாலை நேரக் கல்லூரிகளும் அடங்கும். உயிரியல் புலம், உயிரி தொழில்நுட்பப் புலம்

[2004 ஜூலை 31

ஆகிய இரண்டு புலங்களும் இணைந்து மரபணுக்கூறுத் தொகுவியல் (Genomics) அறிவியலில் சிறப்பு மையங்கள் (Centre for Excellence) என்று பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

3.11 இப்பல்கலைக்கழகத்தில் தொ.பொ.மீ. நூலகம் தனது நூல் ஆதாரங்களை ஓ.பி.ஏ.சி. (On line Public Access Catalogue) முறையில் கணினிமயமாக்கியுள்ளது. VSAT தொடர்புத் தளத்தை உருவாக்க பல்கலைக்கழக மானியக் குழு 26.43 இலட்ச ரூபாய்களை தகவல் வலைப்பின்னல் திட்டத்தின்கீழ் அனுமதித்துள்ளது.

3.12 புதிய பாடத் திட்டங்கள் இந்த ஆண்டு முதல் முதுகலைப் பிரிவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற கல்லூரிகளில் 44 புதிய பாடப் பிரிவுகளும், தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் 12 புதிய பாடப் பிரிவுகளும் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளன. இயற்பியல், வேதியியல் பாடங்களில் முதுநிலை பாடப் பிரிவும், கணினி அறிவியலில் எம்.பில்., பாடப் பிரிவும் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் வழி இந்த ஆண்டு முதல் கற்பிக்கப்பட உள்ளன.

## பாரதியார் பல்கலைக்கழகம்

3.13 பாரதியார் பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் கோயம்புத்தூரில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பில் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்கள் உள்ளன. பாரதியார் பல்கலைக்கழகம் 85 இணைப்புக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது. அதில் இரண்டு கல்வியியல் கல்லூரிகளையும், எழுபத்து மூன்று கலை அறிவியல் கல்லூரிகளையும், எட்டு மேலாண்மைக் கல்லூரிகளையும் ஒரு விமானப் படை நிர்வாகக் கல்லூரி மற்றும் ஒரு உடற்கல்விக் கல்லூரியையும் கொண்டுள்ளது. மேலும் பத்தொன்பது அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

### 3.14 பல்கலைக்கழகச் சாதனைகள்

- பல்கலைக்கழகத் துறைகளில் பத்து புதிய பாடப் பிரிவுகள் துவக்கப்பட்டன.
- நாற்பத்திரண்டு புதிய பாடப் பிரிவுகளை இணைப்புக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தி உள்ளது.



2004 ஜூலை 31]

- மாணவர் விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண் முறை (Choice Based Credit System) தகுதிநிறைக் கல்வித் திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

3.15 பல்கலைக்கழகத் துறைகளில் 2002-2003 ஆம் ஆண்டு எம்.எஸ்சி. உயிர் நுட்பவியல், எம்.எஸ்சி. மருத்துவ இயற்பியல், எம்.எஸ்.சி., மின்னணுத் தொடர்பு ஊடகவியல் போன்ற புதிய பாடங்கள் துவங்கப்பட்டுள்ளன.

## பாரதிதாசன் பல்கலைக்கழகம்

3.16 இப்பல்கலைக்கழகம் 99 இணைப்புக் கல்லூரிகளை (Constituent Colleges) கொண்டுள்ளது. இவற்றில் 75 கலை அறிவியல் கல்லூரிகளும், இரண்டு கல்வியியல் கல்லூரிகளும், மூன்று நுண்கலைக் கல்லூரிகளும், 18 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் மற்றும் ஒரு துறைக் கல்லூரி ஒன்றும் அடங்கும். இவற்றில் 42 சுயநிதிக் கல்லூரிகளும், 19 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் மற்றும் 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் அடங்கும். இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த எரிசக்தித் துறை, எரிசக்தி சேமிப்பு மற்றும் மேலாண்மையியல் முதுநிலை பட்டப் படிப்பு வழங்கி வருகிறது. தொலையுணர்வு மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறைகள் அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. மேலும் சிறப்புத் தகுதி மையம் என்ற நிலைக்கு அவை உயர்ந்து வருகின்றன. தொலைதூரக் கல்வி மையம் வாயிலாக 21 பாடப் பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றுள் எட்டு இளநிலை பாடப் பிரிவுகளும், ஆறு முதுநிலை பாடப் பிரிவுகளும், ஒரு பட்டயப் பாடப் பிரிவு மற்றும் ஆறு தொழில்சார்ந்த பாடப் பிரிவுகளும் அடங்கும்.

## அழகப்பா பல்கலைக்கழகம்

3.17 அழகப்பா பல்கலைக்கழகம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அமையப்பெற்றுள்ளது. வள்ளல் (காலஞ்சென்ற) டாக்டர் ஆர்.எம். அழகப்ப செட்டியார் அவர்களால் காரைக்குடியில் உருவாக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டது. இப்பல்கலைக்கழகம் 1985 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

3.18 2002 ஆம் ஆண்டில் இருந்து அழகப்பா பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகள் கொண்ட பல்கலைக்கழகமாகியுள்ளது. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 14 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அழகப்பா பல்கலைக்கழகத்தின்

[2004 ஜூலை 31

கட்டுப்பாட்டில் அதன் இணைப்புக் கல்லூரிகளாகின்றன. மேலும் ஏழு அரசுக் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாகின்றன.

3.19 இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த உறுப்புக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் 5014 பேர் 2003-2004 ஆம் கல்வி ஆண்டில் அழகப்பா பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

3.20 பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட விரிவாக்க உதவியாக ரூ. 2.03 கோடி இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

**தொலைதூரக் கல்விப் படிப்பு**

3.21 தொலைதூரக் கல்வி முறையில் இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும், இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இதனால், மாணவர் சேர்க்கை 2003-2004-ல் 17000-லிருந்து 24000 ஆக உயர்ந்துள்ளது. கல்வியியல் மேலாண்மையில் பட்டப் படிப்பும் (M.S.), வரலாற்றுப் பாடத்தில் எம்.பில். படிப்பும் 2003-2004 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளன.

### அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

3.22 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1984 ஆம் ஆண்டு கொடைக்கானலில் நிறுவப்பட்டது. இளநிலை ஆய்வு, முதுநிலை ஆய்வு என்ற இரு நிலைகளில் (முழுநேரம்/பகுதி நேரம்) ஆராய்ச்சிப் பட்டப் படிப்பு மேற்கொள்ளப்படுகிறது. பெண் கருக்கலைப்பு, சுமை தூக்குவோர், கல் உடைப்போர், பாடப் புத்தகங்களில் இனப் பாகுபாடு, குழந்தை இலக்கியங்களில் ஆண், பெண் பாகுபாடு, பெண்களும் பொருளாதாரமும் போன்ற தலைப்புகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

3.23 முதுநிலை ஆராய்ச்சிக் கல்வி, தொலைதூரக் கல்வியின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா முழுவதிலும் 98 கல்வி மையங்களோடு 50 தொலைதூரப் பாடத் திட்டங்களும் 48 புறவெளிக் கல்வி மையங்களையும் இப்பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

3.24 பல்வேறு துறைகளில் வெற்றிபெற்ற பெண்கள், மாணவிகளுக்கு அனுபவமிக்க ஆலோசகராக பங்கேற்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இறுதியாண்டு பயிலும் முதுநிலைப் பட்டப் படிப்பு



2004 ஜூலை 31]

மாணவிகள் வெற்றிப் பெண்மணிகளுடன் பழகி அவர்கள் வெற்றிபெற்ற விதத்தைக் கூர்ந்து கவனித்து அறிந்து கொள்ளுமாறு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இத்திட்டம் அவர்களிடையே வெற்றிபெறும் உணர்வைப் பெற்றுக்கொள்ளவும் பின் நாட்களில் தாங்களே தலைமைப் பண்புகள் உடையவர்களாக மாற்றம் பெறவும் உதவுகிறது.

3.25 அட்டுவம்பட்டி மற்றும் வில்லுப்பட்டி (ரைபிள் ரேஞ்ச்) யில் 44.50 ஹெக்டேர் (111 ஏக்கர்) அதாவது 21.07 ஹெக்டேர் மற்றும் 23.44 ஹெக்டேர், இப்பல்கலைக்கழகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு பல்கலைக்கழகக் கட்டடங்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

3.26 மத்திய மருத்துவ மற்றும் மூலிகைத் தாவர ஆராய்ச்சி நிறுவனம், தொழில் முனைவோர் வளர்ச்சி மையம், இந்திய வான் இயற்பியல் ஆராய்ச்சி மையம் முதலிய பல்வேறு அமைப்புகளோடு பல்கலைக்கழகம் தொடர்பினை ஏற்படுத்தி உள்ளது. தற்பொழுது பெண்கள் முன்னேற்றத்திற்கான பல்வேறு நிகழ்ச்சிகளில் இணைந்து பணியாற்றும்படியாக சென்னையிலுள்ள பெண்கள் முன்னேற்றக் கழகத்தோடு இணைந்து ஒப்பந்தம் செய்து (Memorandum of Understanding) கொண்டுள்ளது.

### மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

3.27 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தமிழக அரசால், 1990-ல் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்திற்குத் தத்துவப் பேராசிரியரும், மனோன்மணியம் நாடக ஆசிரியருமான பெ. சுந்தரம் பிள்ளை (1855-1897) அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

3.28 இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி மாவட்டத்தில் அபிசேகப்பட்டி என்னும் ஊரில் அமையப்பெற்றுள்ளது. ஆழ்வார்குறிச்சி, பாளையங்கோட்டை, ராஜாக்கமங்கலம் (குமரி மாவட்டம்) ஆகிய இடங்களில் இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையங்கள் உள்ளன. மேலும் இப்பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி முறை மூலமாக கல்விப் பணியாற்றி வருகிறது.

3.29 இப்பல்கலைக்கழகத்தில் 17 துறைகள் உள்ளன. இதன்கீழ் 38 உதவி பெறும் கல்லூரிகளும், 21 சுயநிதிக் கல்லூரிகளும் ஆக மொத்தம் 59 ஏற்புக் கல்லூரிகளும் (2 தன்னாட்சிக் கல்லூரிகள், 2 இணைப்புக் கல்லூரிகள் உட்பட) 2 உயர் ஆய்வு மையங்களும், 4 மனோ கல்லூரிகளும், 31 சமுதாயக் கல்லூரிகளும் உள்ளன.

[2004 ஜுலை 31

3.30 2003-2004-ல் சாத்தான்குளத்தில் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியும், நாகம்பட்டியில் மனோ கல்லூரியும் புதிதாகத் தொடங்கப்பெற்றன.

3.31 பல்கலைக்கழக மானியக் குழுவின் நெறிமுறைகளின்படி, 2003-2004 கல்வியாண்டில் முதுநிலைப் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பெற்றுள்ளன.

3.32 இப்பல்கலைக்கழகத்திலுள்ள முதுநிலைப் பட்ட வகுப்புகளில் மாணவர்கள் விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண் முறையும், விடைத்தாள் திருத்தும் முறையில் 100% அகமதிப்பீட்டு முறையும் 2003-2004-ல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

3.33 ஆராய்ச்சி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், பல்கலைக்கழகம் பல்கலைக்கழக ஆய்வு உதவித் தொகையினை வழங்கி வருகிறது. ஒவ்வொரு துறையிலிருந்தும் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் மாணாக்கருக்கு மாதந்தோறும் ரூ. 1500/- வழங்குவதோடு, ஆண்டு ஒன்றுக்கு இதர வகைச் செலவினங்களுக்காக ரூ.3000/-ம் வழங்கப்படுகிறது. 17 மாணவர்களுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது.

3.34 பள்ளிக் கல்வி நிறைவுசெய்த 25 வயதிற்குட்பட்ட கிராமப்புற இளையோர்களுக்கு வேலைவாய்ப்புத் தகுதியை மிகுதிப்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் சமுதாயக் கல்லூரிகள் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 31 சமுதாயக் கல்லூரிகள் ஏற்பு அங்கீகாரம் பெற்றுள்ளன. இக்கல்லூரிகளின் மூலம் 19 வேலைவாய்ப்பு மற்றும் திறன் அடிப்படையிலான வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

3.35 பல்கலைக்கழகத்தின் சமூக அக்கறையுள்ள கல்வித் திட்டங்களுள் சிறை வாழுநர்க்கான சிறப்புக் கல்வித் திட்டம் குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் 2000 சனவரி 2-ல் அறிமுகம் செய்யப்பட்டது. தொலைக் கல்வித் திட்டத்தின் வழியாக தமிழகச் சிறைகளில் வாழும் சிறை வாழுநர்களுக்கு பி.லிட்., எம்.ஏ., எம்.காம்., ஆகிய பாடங்களில் பட்ட வகுப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. சென்ற கல்வி ஆண்டில் இத்திட்டத்தில் 328 மாணவர்கள் சேர்ந்தனர். அவர்களுள் 28 மாணவர்கள் எம்.ஏ. தேர்ச்சி பெற்றுள்ளனர்.

3.36 பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி இயக்கத்தின் வழியாக கிராமப்புற இளைஞர்களுக்குத் தொழில் சார்ந்த, வேலைவாய்ப்பு



2004 ஜுலை 31]

சார்ந்த கல்வியும், பயிற்சியும் வழங்குகிறது. இத்திட்டம் தமிழகத்தில் உள்ள 16 மையங்கள் வழியாக செயல்படுத்தப்படுகிறது இம்மையங்கள் வழியாக ஓராண்டு பட்டயப் படிப்புகள் ஐந்தும், ஆறு மாதச் சான்றிதழ் படிப்புகள் மூன்றும் வழங்கப்படுகின்றன.

வழங்கப்பெறும் படிப்புகள்:—

1) யோகா அறிவியல் மற்றும் கல்வியியல் பட்டயம்

2) பெண் செவிலி துணைமையியல் பட்டயம்

3) மருத்துவச் சோதனைக்கூட தொழில்நுட்பத்தில் பட்டயம்

4) கணினி பட்டயம்

5) மென்பொருள் பொறியியல் பட்டயம்

6) அலுவலக மேலாண்மையின் கணினி பயன்பாட்டில் சான்றிதழ்

7) கணினி வன்பொருள் தொழில்நுட்பத்தில் சான்றிதழ்

8) அழகுப் பராமரிப்பு மற்றும் அழகு சாதனங்களில் சான்றிதழ்.

## பெரியார் பல்கலைக்கழகம்

3.37 பெரியார் பல்கலைக்கழகம் 1997-ல் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2 கல்வியியல் கல்லூரிகளும் மற்றும் ஒரு உடற்கல்வி கல்லூரியும் உள்ளன. இக்கல்லூரிகள் சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அமைந்து உள்ளன. தற்பொழுது இப்பல்கலைக்கழகம் 109 பாடப் பிரிவுகளை இணைவு பெற்ற கல்லூரிகளில் நடத்தி வருகின்றது. பல்கலைக்கழகத்தில் கணிதம், வணிகவியல், கணினியியல், உயிரியல் தகவலறிவியல், நுண் தாவரவியல், செயல்முறை தாவரவியல் (மருத்துவ தாவரம்) மற்றும் சூழ்நிலை அறிவியல் ஆகிய ஏழு துறைகளில் பாடம் கற்பிக்கப்படுகிறது. இப்பாடப் பிரிவுகள் அனைத்தும் விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண் முறையின்கீழ் (Choice Based Credit System) நடத்தப்பட்டு வருகின்றன.

3.38 பெரியார் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி நிறுவனம் (PRIDE) 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் தற்பொழுது 33 கல்வி மையங்களில் நடைபெறுகிறது. முறையான கல்வித் திட்டத்தில் உள்ள வினாத்தாள்களையே கொண்ட

எம்.பி.ஏ. (முதுநிலை வணிக நிர்வாகம்) பட்டப் படிப்பும் இதில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2003-2004-லிருந்து ஒன்பது பாடங்களில் எம்.பில். பாடப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

3.39 வேலூரில் 2002 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என்ற ஒரு புதிய பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

3.40 சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் செயல்பட்டு வந்த வேலூர் கோட்டை வளாகத்தில், தற்பொழுது இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. நிரந்தர வளாகம் கட்டுவதற்கான நிலம் கண்டறியப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தால் நிலத்தை வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்திய பின்னர் கட்டடங்கள் கட்டப்படும்.

3.41 சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றிருந்த 50 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தற்பொழுது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன.

3.42 ரூ. 1.20 கோடி செலவில் மாதிரி சோதனைக் கூடம் மற்றும் தரக் கட்டுப்பாடு ஆய்வகத்துடன் உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஏற்படுத்துவதற்கான திட்டக் கருத்துரு மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. முதுநிலை உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை பாடத் திட்டத்துக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு உதவி மானியத் தொகையான ரூ.33 இலட்சத்திலிருந்து முதல் தவணையாக ரூ. 16.50 இலட்சம் வழங்கியுள்ளது. முதுநிலை உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் என்ற பாடத்தின் பெயரை முதுநிலைத் தொழில்நுட்பம் (M.Tech.) என்று பெயர் மாற்றம் செய்யவும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் ஒப்புதல் பெறவும், இப்பல்கலைக்கழகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வேலைவாய்ப்பு உள்ள துறைகளான உயிரியல் தொழில்நுட்பம் (Bio Technology) மருந்தியல் அறிவியல் (Pharmaceutical Science), சுற்றுப்புறச் சூழலியல் (Environmental Science) மற்றும் உணவு அறிவியல் (Food Science) ஆகிய நான்கு புதிய துறைகள் இப்பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட உள்ளன.



## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

3.43 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பெரும்பாலான மக்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் வசிக்கின்ற உழைக்கும் மக்கள், மகளிர் ஆகியோர் பல்வேறு துறைகளில் உயர் கல்வியறிவு பெறவும், அறிவினை மேம்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும். மேலும் மாநிலத்தில் தற்போதுள்ள தொலை நிலைக் கல்வி, திறந்தநிலைக் கல்வி ஆகியவற்றை ஒருங்கிணைப்பதும் மற்றும் தர நிர்ணயம் செய்வதும் இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாகும். மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற ஏதுவான கல்வியை அளிப்பது, இப்பல்கலைக்கழகத்தின் தலையாய குறிக்கோளாகும். இப்பல்கலைக்கழகம் தற்போது தொழில்நுட்பக் கல்வி இயக்கக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

3.44 இந்நோக்கத்திற்கேற்ப இத்திறந்த நிலை பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சேர்ந்து பயில்வதற்கு வசதியாகவும் மற்றும் வார இறுதி நாட்களில் கலந்தாய்வு செய்வதற்கும், இப்பல்கலைக்கழகம் பெரிய மாவட்ட தலைநகரங்களில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி மையங்களையும் மற்றும் 32 வட்ட அளவிலான தகவல் மற்றும் பயிற்சி மையங்களையும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் முழுவதும் நிறுவியுள்ளது.

3.45 கிராம மக்கள், குறிப்பாக மகளிரது பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்கத்துடன் சுயஉதவிக் குழுக்கள் வழியாக மகளிர் மேம்பாடு அடைதல், உணவு மற்றும் ஊட்டச்சத்து, கணினியியல், சுற்றுச்சூழல், ஊரக வளர்ச்சி, ஆங்கிலம் கற்பிப்பது மற்றும் தொடக்கக் கல்வி கணிதம் ஆகிய புதிய சான்றிதழ் படிப்புகளை தொடங்கியுள்ளதோடு மட்டுமல்லாமல், மரபு சார்ந்த படிப்பான இளங்கலை, முதுகலை மற்றும் மேலாண்மையில் பட்டய நிலைப் படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. துவங்கப்பட்ட முதல் வருடத்திலேயே இப்பல்கலைக்கழகம் 10,000 மாணவர்களை ஈர்த்துள்ளது.

3.46 சான்றிதழ், பட்டயம், இளங்கலை மற்றும் முதுகலை பாடப் பிரிவுகளான MLIS, BLIS, BBA, BA (Political Science, Public Administration, Psychology), B.Sc., (Maths), BCA, MCA, M.A. (English, Tamil, Journalism & Mass Communication, Tourism), Diploma in Journalism and Mass Communication, PGDCA மற்றும் நூலக அறிவியல் சான்றிதழ், வேலை சார்ந்த பாடப் பிரிவுகள், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான சான்றிதழ் பாடப் பிரிவுகள், நான்கு சக்கர வாகன மோட்டார் வல்லுநர், DTP இயக்குபவர், குளிரூட்டல் மற்றும்

குளிர்பதனம், குழாய் பொருத்துதல் மற்றும் மின்னியலாளர் போன்ற மிகவும் தேவையான, பலரும் படிக்க விரும்புகின்ற, வேலை வாய்ப்பு சார்ந்த பாடப் பிரிவுகளை 2004-2005 ஆம் கல்வியாண்டு முதல் இப்பல்கலைக்கழகம் தொடங்கவுள்ளது.

### அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர்கல்வி நிறுவனம்

3.47 கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம் 1988 ஆம் ஆண்டில் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிலையைப் பெற்றது.

3.48 1989-90 முதல் இரு பாடத்திட்டத்தில் இரண்டு முதன்மைப் பாடப் பிரிவும், இரண்டு துணைப் பாடப் பிரிவுகளும், உள்ளடக்கியதாக இளநிலைப் பட்டப் படிப்பு அமைக்கப்பட்டு உள்ளது.

3.49 இளநிலைப் பட்டயப் படிப்பில் மூன்று மற்றும் நான்காவது பருவத்தில் மாணவியர் அனைவரும் கணிப்பொறிப் பாடத்தை செயல்முறைத் திட்டத்துடன் துணைப் பாடமாகப் பயிலுகின்றனர்.

3.50 தொழிற்கல்வி படிக்கும் இளநிலைப் பட்டப் படிப்பு மாணவிகள் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி, முதல் மற்றும் இரண்டாமாண்டு இறுதியில் ஒருமாதம் தொழில் பயிற்சியை, பெரிய புகழ்பெற்ற தொழிற்சாலைகள், ஆராய்ச்சி ஆய்வுக்கூடங்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களில் பயிற்சியை மேற்கொள்கின்றனர். இத்தொழிற்பயிற்சி, முதுநிலைப் பட்டப்படிப்பில் உயிர் வேதியியல், வேதியியல் மற்றும் உயிர் நுட்பவியல் போன்ற பாடப் பிரிவுகளிலும், இளநிலையில் உயிர் நுட்பவியல், உயிர் வேதியியல் பாடப் பிரிவுகளிலும் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

3.51 இளங்கலைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவிகள், பட்டப் படிப்பு படிக்கும்பொழுதே பட்டயப் படிப்பும் படித்து முடிக்க கீழ்க்கண்ட இரண்டு பட்டயப் படிப்புகள் 2003-2004 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. பயோ இன்பர்மேட்டிக்ஸ் ( உயிர் தகவலியல்)
2. ஆடை வரைகலை.

### உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம்

3.52 உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் நோக்குடன், தமிழக அரசு தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும், விளையாட்டுக்களையும் வளர்ப்பதற்கென்றே புதிய பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதியதன் அடிப்படையில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் என்ற பெயரில் தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுக்கென புதிய பல்கலைக்கழகம் 2004-2005 ஆம் கல்வியாண்டு முதல் தோற்றுவிப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இதற்குரிய சட்டம் இயற்றப்பட்டதும், இப்பல்கலைக்கழகம் செயல்படத் துவங்கும். இப்பல்கலைக்கழகத்தின் முதற்கட்டச் செலவுக்காக ரூ.50 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.





## 4. தொழில்நுட்பக் கல்வி

### தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சி

4.1 சென்னையில் 1794-ல் கிழக்கிந்தியக் குழுமம் நிறுவிய நில அளவியல் பள்ளி, நமது நாட்டிலேயே முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட பொறியியல் கல்வி நிறுவனம் என்பது தமிழ்நாட்டுக்குப் பெருமையளிப்பதாகும்.

4.2 தொழில்நுட்பக் கல்வித் துறையில் பீடுநடைபோட்டு, தமிழகம் இன்று முன்னிலை வகிக்கிறது. 252 பொறியியற் கல்லூரிகளில் பொறியியல் பட்டப் படிப்பில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 79,302. 207 பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 56,009. பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு பரவலாக்கப்பட்ட ஒற்றைச் சாளர முறை தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

4.3 சுயநிதி அடிப்படையில் குறுகிய காலப் படிப்புகள் 54 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் வழியாகக் கிடைக்கும் நிதி, அந்நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

4.4 தொழிற்கல்வி பெற வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பள்ளிப் படிப்பினைக் கைவிட்ட மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பயிற்சி மற்றும் உற்பத்தி மையம் என்ற புதிய திட்டத்தின்கீழ் சுயநிதி அடிப்படையில், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

4.5 சுயநிதி குறுகிய காலப் படிப்புகள் நடத்தும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் பின்வருமாறு:—

[2004 ஜூலை 31

1. அரசு பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, கிருஷ்ணகிரி.
2. ஏழுமலை பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, விழுப்புரம்.
3. என்.பி.ஏ. நூற்றாண்டு பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, கோத்தகிரி.
4. அரசு பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, உதகமண்டலம்.
5. சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, திருச்சிராப்பள்ளி.
6. சங்கர் பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, தாழையூத்து.
7. முகமது சதக் பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, கீழக்கரை.
8. மைய பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, சென்னை.
9. மாடரேட்டர் ஞானதாசன் பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, நாகர்கோவில்.

இத்திட்டத்தின்கீழ் 500 மாணவர்கள் ஆண்டுதோறும் பயனடைந்து வருகின்றனர்.

## தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் (TEQIP)

4.6 இந்திய அரசு, மனிதவள மேம்பாட்டுத் துறை திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக ரூ.300 கோடி அளவில் உலகவங்கி உதவியுடன் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கூடங்களையும், பணிமனைகளையும் நவீனமயமாக்கல், ஆசிரியர் மற்றும் அலுவல் திறன் மேம்பாடு, பாடத்திட்ட மேம்பாடு, தேவைக்கேற்ற வகையில் படிப்பினை மாற்றி அமைத்தல், தொழில் நிறுவனங்களுடன் கலந்து செயல்படுத்துதல், ஆராய்ச்சி, மேலாண்மைத் திறனை மேம்படுத்துதல், உயர்தனிச் சிறப்பு மையங்கள் உருவாக்குதல், தற்போது உள்ள நிறுவனங்களின் தரத்தினை உயர்த்துதல் ஆகிய செயல்பாடுகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

4.7 இத்திட்டத்தில், இரண்டாவது பகுதியில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலம் ஒன்றாகும். தேர்வு செய்யப்பட்ட பயிலகங்களின் கருத்துருக்களை பரிசீலனை செய்ய மாநில அரசு "மாநில திட்ட வழிகாட்டும் மையம்" என்ற குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி மையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ரூ.347.65 கோடி மதிப்புடைய கருத்துருக்கள் தேசிய தேர்வுக்குழுவின் ஒப்புதலுக்காக உத்தரப்பிரதேசம், நொய்டாவில் உள்ள தேசிய திட்ட செயலாக்கப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டுக்கான ரூ. 73.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு மைய அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் (TEQIP) கீழ்க்கண்ட அரசு பொறியியற் கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் செயலாக்கப்படும்:—



2004 ஜூலை 31]

| வ. எண் | பொறியியற் கல்லூரிகள் | வ. எண் | பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|
| 1. | அரசு தொழில்நுட்பக் கல்லூரி, கோவை | 1 | மைய பல்தொழில்நுட்பக் கல்லூரி, தரமணி, சென்னை |
| 2. | அழகப்பச் செட்டியார் தொழில் நுட்ப மற்றும் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. | 2 | தமிழ்நாடு பல்தொழில்நுட்பக் கல்லூரி, மதுரை |
| 3. | பொறியியற் கல்லூரி, கிண்டி. அண்ணா பல்கலைக்கழகம் சென்னை 25 | 3 | டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, தரமணி, சென்னை |
| 4. | அரசு பொறியியற் கல்லூரி, சேலம் | | |
| 5. | தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பக் கல்லூரி, வேலூர் | | |
| 6. | அரசு பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி | | |
| 7. | எம்.ஐ.டி. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை 44 | | |
| 8. | அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, அண்ணா பல்கலைக் கழகம், சென்னை 25 | | |

## எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. பட்டமேற்படிப்பில் சேர்க்கை:

4.8 கர்நாடக அரசுக்கு எதிராக டி.எம்.ஏ.பாய் நிறுவனம் மற்றும் இஸ்லாமிய கல்வி நிறுவனம் தொடர்ந்த வழக்குகளில் இந்திய உச்ச

[2004 ஜூலை 31

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளையொட்டி, 2004-2005 ஆம் ஆண்டில் பொது நுழைவுத் தேர்வு வழியே எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. படிப்புகளில் சேர்வதற்கான வழிமுறைகளை அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் வகுத்துள்ளது. இதையொட்டி, அரசு பொறியியற் கல்லூரிகள், அரசு உதவிபெறுகின்ற மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள், அரசு கலை அறிவியல் கல்லூரிகள் மற்றும் தனி கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ. சேர்க்கைக்கு பொது நுழைவுத் தேர்வு நடத்தும்படி அண்ணா பல்கலைக்கழகத்தை அரசு பணித்துள்ளது.

**பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின் தகுதி குறித்து:**

4.9 பி.ஈ./பி.டெக்./பி.ஆர்க். பட்டப் படிப்புகளில் சேருவதற்கு, எஸ்.சி/எஸ்.டி மாணவர்களுக்கு வயது வரம்பு இல்லை எனவும் மற்றவர்களுக்கு 21 வயது எனவும், நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதுபோல் தகுதித் தேர்வில் எஸ்.சி/எஸ்.டி மாணவர்கள் அதிகபட்சம் 3 முயற்சிகளிலும், மற்றவர்கள் 2 முயற்சிகளிலும் வெற்றிபெற வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2004-2005 முதல், வயது வரம்பு மற்றும் தகுதித் தேர்வில் தேர்ச்சியடைவதற்கான முயற்சி வரம்பு ஆகியவற்றை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

4.10 தற்போது முதலாமாண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்கான சேர்க்கை, மாணவர்கள் தமிழ்நாடு தொழில் கல்வி நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண் மற்றும் +2 தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையிலும் அவர்களின் தர வரிசைப்படியும் மற்றும் இட ஒதுக்கீடு முறையிலும் ஒற்றைச் சாளரக் கலந்தாய்வு மூலமாகவும் செய்யப்படுகிறது.

**நிர்வாக ஒதுக்கீட்டில் மாணவர்களின் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு குறித்து:**

4.11 உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் மாணவர்களின் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு நேர்மையாக நடப்பதை உறுதி செய்யும்பொருட்டு ஓய்வுபெற்ற நீதிபதி நீதியரசர் திரு. எஸ்.எஸ். சுப்ரமணி அவர்கள் தலைமையில் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

**சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் கட்டணங்கள் நிர்ணயிப்பது குறித்து:**

4.12 உச்ச நீதிமன்ற ஆணைப்படி சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் கல்வி கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயிக்க



2004 ஜூலை 31]

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. ஏ. ராமன் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**அரசு தட்டச்சுத் தேர்வுகள் எழுத கல்வித் தகுதி:**

4.13 எட்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் தமிழ்/ஆங்கிலம் இளநிலைத் தட்டச்சு தேர்வு எழுத தகுதியுடையவர்கள் என 2003-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

4.14 மேலும் இளநிலைத் தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற அனைவரும் உயர்நிலைத் தட்டச்சுத் தேர்விற்குத் தகுதி பெற்றவர்கள் ஆவர் என 2004-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

## 5. அண்ணா பல்கலைக்கழகம்

5.1 தலைசிறந்த நான்கு கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து 1978-ல் ஒருமை வகைப் பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகம் படிப்படியாக வளர்ந்து இன்று ஒரு முன்னணி தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து வருகிறது. சென்ற 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள 6 அரசு பொறியியற் கல்லூரிகளையும், 3 அரசு உதவிபெறும் பொறியியற் கல்லூரிகளையும், 229 சுயநிதி பொறியியற் கல்லூரிகளையும் தன்னகத்தே கொணர்ந்து, மாபெரும் இணைப்புப் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் உருவெடுத்துள்ளது.

5.2 இப்பல்கலைக்கழகச் செயல்பாடுகளின் முழுப் பரிமாணத்தையும் கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் நமக்கு உணர்த்தும்:—

| | | | |
|---|---|---|---|
| (i) | இணைக்கப்பட்ட பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை | : | 229 |
| (ii) | மொத்த துறைகளின் எண்ணிக்கை | : | 30 |
| (iii) | தன்னாட்சி மையங்களின் எண்ணிக்கை | : | 38 |
| (iv) | இளநிலை/முதுநிலை படிப்புத் துறைகளின் எண்ணிக்கை | | |
| | அ) இளநிலை (முழுநேரம்) | : | 23 |
| | ஆ) இளநிலை (சுயநிதி) | : | 17 |
| | இ) முதுநிலை (முழுநேரம்) | : | 53 |
| | ஈ) முதுநிலை (சுயநிதி) | : | 30 |

[2004 ஜூலை 31

(v) மாணவர்களின் எண்ணிக்கை : 12,342

(vi) தமிழக அரசின் மொத்த நிதியுதவி விவரங்கள்
- அ) மொத்த நல்கை நிதி : ரூபாய் 1166.13 இலட்சங்கள்
- ஆ) மாநிலத் திட்டங்கள் : ரூபாய் 169.25 இலட்சங்கள்
- இ) சம்பளக் குழு மற்றும் இதர மானியங்கள் : ரூபாய் 64.61 இலட்சங்கள்
- ஈ) பல்கலைக்கழக நிதி ஆதாரம் : ரூபாய் 1465.40 இலட்சங்கள்

(vii) இதர நிதி ஆதாரங்கள்
- அ) இந்தியஅரசிடமிருந்து : ரூபாய் 72.55 இலட்சங்கள்
- ஆ) பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து : ரூபாய் 62.85 இலட்சங்கள்

(viii) ஆண்டிற்கான மொத்தச் செலவினம்
- அ) பொது நிதிக் கணக்கின்கீழ் செலவினம் : ரூபாய் 4451.80 இலட்சங்கள்
- ஆ) இந்திய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு கணக்கின்கீழ் செலவினம் : ரூபாய் 822.33 இலட்சங்கள்

(ix) பல்கலைக்கழகத்தின் பட்டம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை
- அ) இளநிலை : 1062
- ஆ) முதுநிலை : 953

அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் 50,000-க்கும் மேற்பட்டோர் 2005 முதல் ஆண்டுதோறும் இளநிலைப் பட்டம் பெறுவர்.

(x) ஆராய்ச்சி மற்றும் எம்ஃபில் பட்டம் பெறுபவர்களின் எண்ணிக்கை



2004 ஜூலை 31]

- அ) ஆராய்ச்சி பட்டம் : 101
- ஆ) எம்ஃபில் பட்டம் : 18

5.3. அரசினால் நியமிக்கப்பட்ட முகமையாகச் செயல்பட்டு அண்ணா பல்கலைக்கழகம் குறிப்பிட்ட சில கூடுதல் பணிகளைச் செய்து வருகிறது:—

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு | : | தமிழகமெங்கிலும் உள்ள 284 மையங்களில் 1.50 இலட்சம் மாணவர்கள் இத்தேர்வினை எழுதுகின்றனர். |
| | | பொறியியற் கல்லூரிகளில் சேர்க்கைக்கான பரவலாக்கப்பட்ட கலந்தாய்வினை கணினி வழியே நடத்துதல். |

## தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், நகர மற்றும் கிராமப்புற ட்களிடையே, குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடையே அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் ட்டு அறிவியல் காட்சிக்கூடங்களும், அறிவியல் பூங்காவும், பி.எம்.பிர்லா கோளரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் கையாண்டு புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட 00 காட்சிப் பொருட்கள் இக்காட்சிக்கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்கத்திலிருந்தே, மாணவர்களிடையில் பிரபலமாகி, நாளடைவில் ஏராளமான பார்வையாளர்களைத் தன்னகத்தே இம்மையம் ஈர்த்துக்கொண்டுள்ளது. இம்மையத்தின் தொடரும் மற்றும் தொடராச் செலவினங்களுக்கென 2003-2004-ல் ரூ.145.41 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. மேலும் அவ்வாண்டில் மையத்திற்கு வருகைபுரிந்த 3,37,701 பார்வையாளர்களிடம் வசூலித்த நுழைவுக் கட்டணம் வாயிலாக ரூ.48 இலட்சம் வருவாயினை இம்மையம் ஈட்டியது. 2004-2005 ஆம் ஆண்டில் இம்மையத்தின் மொத்தச் செலவு ரூ.14 01 இலட்சங்கள் என்று நிர்ணயித்து, நுழைவுக் கட்டணமாக ரூ.60.00 இலட்சம் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6.2. நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய காட்சிப் பொருட்கள் கொண்ட நகர்ப்புற வளர்ச்சிக்கூடம் ஒன்று ரூ.25 இலட்சம் செலவிலும் தகவல் தொழில்நுட்பக்கூடம் ரூ.30 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அவை திறந்து வைக்கப்படும்.

6.3. திருச்சிராப்பள்ளி மண்டல அறிவியல் மையத்தில் (அண்ணா அறிவியல் மையம்) நவீன தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்ட காட்சிப் பொருட்களுடன், இந்திய எண்ணெய் நிறுவனம் வழங்கிய நிதி உதவியினால் சுற்றுப்புறச்சூழல் காட்சிக்கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. இக்காட்சிக்கூடம் இந்த நிதியாண்டில் பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட உள்ளது.

6.4. மாண்புமிகு தமிழக முதல்வரின் 15 அம்சத் திட்டத்தில் கூறியுள்ளபடி பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பயனளிக்கும் பல்வேறு அறிவியல் நிகழ்ச்சிகளை இம்மையம் ஆண்டு முழுவதும் நடத்தி வருகிறது. ஆசிரியர்களுக்கான அறிவியல் பயிற்சி வகுப்புகளும், மாணவர்களுக்கான அறிவியல் முகாம்களும், பொது மக்களுக்கான வானியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும், பொது வானியல் தொகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மேலும் குறுகிய காலப் பயிற்சிகள், மருத்துவருடன் நேர்முகம், அறிவியல் அறிஞருடன் நேர்முகம், நேரடி அறிவியல் செயல்முறை விளக்கம், அறிவியல் கண்காட்சிகள், இரவு வான் நோக்குதல், திறன் தேர்வுப் போட்டிகள், வானியல் போட்டிகள், குறைந்த செலவில் அறிவியல் பயிற்சிக் கருவிகள் செய்தல், மாநில அளவிலான வினாடி வினா போட்டி, எட்டு வார வானியல் பயிற்சி மற்றும் மாதம் இரு முறை 15 நாள் கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தேசிய அறிவியல் தினம், தேசிய தொழில்நுட்ப தினம், அறிவியல் தினம் ஆகியவை தொடர்ந்து கொண்டாடுதல் ஆகியவை இம்மையத்தின் முக்கியச் செயல்பாடுகள் ஆகும். இம்மைய வல்லுநர்களின் திறமையைப் பயன்படுத்தி மேசொன்ன பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுடன் வெளிநாட்டு வல்லுநர்களின் திறனும் பயன்படுத்தப்படுகிறது. இதற்கென ஆஸ்திரேலியா, ரஷ்யா, பிரான்ஸ் நாட்டு வல்லுநர்கள் வரவழைக்கப்படுகின்றனர்.

6.5. இம்மையத்திற்கு வரும் பார்வையாளர்கள் மற்றும் மாணவர்களின் தேவைகளை இன்னும் நிறைவு செய்யும் நோக்குடன், ரூ.10 இலட்சம் செலவில், காட்சிக்கூடங்கள் நவீனப்படுத்தப்பட உள்ளன. டைனோசர் வடிவமைத்தல் போக்குவரத்துத் துறையின் பரிணாம வளர்ச்சி, கண்ணின் அமைப்பு, அன்றாட வாழ்வில் தகவல் தொடர்பின் பயன்பாடு ஆகியவை பற்றிய காட்சிப் பொருள்களைப் பார்வைக்கு வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



6.6. இவ்வாண்டில், ஐ.பி.எம். இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ரூ.14 இலட்சம் மதிப்புள்ள "ட்ரை சயின்ஸ் கியாஸ்க்" (Try Science Kiosk) எனும் கணிப்பொறி அமைப்பினை இலவசமாக இம்மையம் பெற்றுள்ளது. இதன் மூலம் உலகத்திலுள்ள பல்வேறு அறிவியல் தொழில்நுட்ப மையங்களைப் பற்றி அறிந்து கொள்ள இயலும். மேலும், பல்வேறு இந்திய அரசு மற்றும் தமிழக அரசு நிறுவனங்கள் ரூ.20 இலட்சம் மதிப்புள்ள காட்சிப் பொருட்களை இலவசமாக இம்மையத்திற்குக் கொடுத்துள்ளன. மேலும், ரூ.30 இலட்சம் மதிப்பில் பி.எஸ்.என்.எல் நிறுவனத்தின் உதவியுடன் C-DOT தானியங்கி தொலைபேசி இணைப்பகமும், தூர்தர்ஷன் உதவியுடன் மாதிரி தொலைக்காட்சி நிலையமும் இந்நிதியாண்டில் அமைக்க இம்மையம் கருதியுள்ளது. ரூ.5 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு மின் நிலைய மாதிரிகளையும் உயர் சக்தி வெப்ப மின் நிலைய மாதிரிகளையும் பாரத மிகுமின் நிலையத்திடமிருந்து இலவசமாகப் பெற்று அமைக்கவும் இம்மையம் கருதியுள்ளது.

6.7. தேசிய கடல் தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து ரூ.40 இலட்சம் செலவில் கடல் தொழில்நுட்பக் காட்சிக் கூடம் அமைக்கப்படஉள்ளது. இச்செலவினத்தில் 75 விழுக்காட்டினை தேசிய கடல் தொழில்நுட்பக் கழகம் ஏற்றுக்கொள்ளும்.

6.8. இந்திய அரசு அறிவித்துள்ள அறிவியல் விழிப்புணர்வு ஆண்டு 2004-ல் சீரிய முறையில் பங்குபெற பல்வேறு திட்டங்களை இம்மையம் வகுத்துள்ளது. பேரழிவு துயர் துடைப்புக்கென தன்னார்வலர்களை உருவாக்குதல், பொம்மலாட்டம் மூலம் அறிவியல் பயிற்றுவித்தல், விண்கலன் பயிற்சிப் பட்டறை, வெள்ளிக்கோள் சூரியனைக் கடந்து செல்லுவதை உற்று நோக்குதல், வால் நட்சத்திரம் நோக்குதல் முதலியவற்றை நடத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் வானியல் நிகழ்வுகளைக் காணவும், அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களைப் பரப்பவும் இம்மையம் கருதியுள்ளது.

## 7. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**நோக்கம்:**

தமிழகத்திலுள்ள ஆய்வு நிறுவனங்கள் மற்றும் வெவ்வேறு அமைப்புகளின் செயல்களை ஒருங்கிணைப்பதும், அறிவியல் தொழில்நுட்பச் செயல்களை மத்திய அரசுடன் சேர்ந்து செயல்படுத்துவதும், அரசின் அறிவியல் கொள்கைகளை உருவாக்குவதும், அறிவியல் தொழில்நுட்பத்தை மக்களிடையே பரப்புவதும், அறிவியல் உணர்வை இளைஞர்களிடையே ஊக்குவிப்பதும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் நோக்கங்களாகும்.

**வரவு–செலவுத் திட்டப் பங்கீடு:**

7.2 2004-2005 ஆம் ஆண்டில் மாநில மன்றம் வெவ்வேறு அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ.67.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.3 அ) அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

ஆ) பள்ளிகளில் அறிவியல் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு அறிவியல் பாட ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளித்தல்

இ) தொழில்முனைவோர் முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல்

என்கிற புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மாநில மன்றத்திற்கு தமிழக அரசு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் நிதி உதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

7.4. இதைத் தவிர தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ள செயல்களைச் செய்து வருகிறது:

i) ரூ.10.00 இலட்சம் செலவில் மாணவர் ஆய்வுத் திட்டம்

ii) ரூ.2.50 இலட்சம் முதலீட்டில் கருத்தரங்கு, அறிவியல் மாநாடுகள் நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்.

iii) ரூ.2.50 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் இளம் அறிவியலறிஞர்களுக்குப் பகுதி பயண நிதியுதவி அளித்தல்.





iv) ரூ.2.00 இலட்சம் செலவில் தமிழக அறிவியலறிஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

v) ரூ.0.30 இலட்சம் நிதியில் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்.

vi) ரூ.14.00 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்.

vii) ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இளம் மாணவ அறிவியலறிஞர்கள் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

viii) ரூ.4.00 இலட்சம் செலவில் அறிவியல் சொத்துரிமை ஆலோசனை மையம் அமைத்தல்.

ix) ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அறிவியல் புதுக் கண்டுபிடிப்புகளைப் பரப்புதல்.

## 8. அறிவியல் நகரம்

சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), அறிவியல் மையம் போன்ற 60-க்கும் மேற்பட்ட மைய, மாநில அரசு நிறுவனங்கள் அமைந்துள்ளதால் அறிவியல் தொழில்நுட்பத்தை வளர்க்கும் நோக்குடன் இப்பகுதி அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவியல் நகரத்தில் அமைந்துள்ள நிறுவனங்களில் 1500-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டம் பெற்றவர்களும், 3500 ஆராய்ச்சி மாணவர்களும் உள்ளனர். அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் 1500 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் நகரத்தில் உள்ள நிறுவனங்களில் ரூ.500.00 கோடிக்கு மேல் மதிப்புள்ள அறிவியல் தொழில்நுட்பப் பரிசோதனை உபகரணங்களும், கருவிகளும் உள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்காக அறிவியல் நகரம் பல அறிவியல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது.

**அறிவியல் நகர அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்:**

8.2. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கொள்கை முடிவிற்கேற்ப அறிவியல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தை முன்னோடியாக உருவாக்கும்பொருட்டு அறிவியல் நகரம் மற்றும் தமிழ்நாடு தொழில்நுட்ப மாநில மையம ஆகியவற்றின் கட்டட

[2004 ஜூலை 31

வளாகம் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் 1.06 கோடி ரூபாயில் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

**விவரதளம் உருவாக்குதல்:**

8.3 அறிவியல் அறிஞர்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்து விவரதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அறிவியல் துறை தொடர்பான பொருளில் அவர்களிடம் தெளிவுரை பெற அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு இத்தளம் உதவும். அறிவியல் அறிஞர்களுக்கும் இத்தளம் மிகவும் பயன்படும்.

**செய்தி மடல் மற்றும் புகைப்படம்:**

8.4 அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் இச்செய்தி மடலில் தொகுத்து வழங்கப்படுகின்றன. மேலும் தலைசிறந்த அறிவியல் நிபுணர்களின் செய்தியும், அண்மைக்கால அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பற்றிய கட்டுரைகளும் இடம் பெறும்.

**அறிவியலை பிரபலப்படுத்துதல்:**

8.5 விரிவுரைகள், அறிவியலறிஞர்களைச் சந்தித்தல், அறிவியல் நகர உறுப்பு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து மாநாடுகள்/கருத்தரங்குகள்/பட்டறை நடத்துதல், கண்காட்சிகள் மற்றும் அறிவியல் முகாம்கள் நடத்துதல், அறிவியல் விருதுகள் வழங்குதல் ஆகியவை முக்கியச் செயல்பாடுகள் ஆகும். சென்ற ஆண்டில், 48 கிராமப்புற மாணவர்களுக்கு அறிவியல் விருதுகள் வழங்கப்பட்டன.

**மகளிர் மேம்பாடு (Gender Cell):**

8.6 மகளிர் மேம்பாடு தமிழக அரசின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று ஆகும். தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்கள், நிகழ்ச்சிகள் வழியாக பெண்களிடமிருக்கும் திறமையினை வெளிக்கொணர்ந்து அவர்கள், தம் சொந்தக் காலில் நிற்க வழிவகை செய்யப்படுகின்றது. பெண் அறிவியல் நிபுணர்களின் நிலையைக் கண்டறிய அறிவியல் நகரம் நாடு முழுவதும் உள்ள பெண் நிபுணர்கள் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்கிறது. இப்புள்ளிவிவரங்கள் இணையதளத்தின் மூலம் எல்லோருக்கும் கிடைக்க வழி வகுக்கப்பட்டு வருகிறது. பெண் அறிவியல் நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக



2004 ஜூலை 31]

அறிவியல் நகரம், இளம் பெண் விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் சாதனை விருது ஆகிய விருதுகளை வழங்குகிறது. கடந்த 2003 ஆம் ஆண்டு 5 பெண் விஞ்ஞானிகளுக்கு பெண் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

**தகவல் மையம் ஏற்படுத்துதல்:**

8.7 பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி போன்ற உயர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் அறிவியல் நகரத்தின் இணையதளமான www.tamilnaduscientists.com-இல் சேகரிக்கப்பட்டுள்ளன. காப்புரிமை பற்றிய தகவல்களும், சேவைகளும் இவ்விணையதளத்தில் காணலாம். scicity.vsnl.net.in என்ற மின்னஞ்சல் மூலமும் இத்தகவல்களைப் பெறலாம். உலகிலுள்ள அறிவியல் சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் முகமைகள், உலகிலுள்ள ஆய்வு நிறுவனங்கள், அறிவியல் மன்றங்கள் மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் ஆகியவற்றை இவ்விணையதளத்தில் காணலாம். இத்தகவல்களால் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பயன் பெறுவர்.

8.8. மேற்கூறிய செயல்பாடுகள் தவிர இந்திய மற்றும் பன்னாட்டு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்களும், நூலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

## 9. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அறிவியல் முறையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்நூற்றாண்டிலும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சிறப்பான முறையில் முன்னேறி வருகிறது.

**பழமையான ஆவணங்களின் பொருள் விவர அட்டவணைகளைக் கணினிமயமாக்குதல்**

9.1 ஆவணக் காப்பகத்தில் சிப்பாய்க் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த ஆவணங்கள் மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றிற்கு பொருள் விவர அட்டவணை முழுமையாக இல்லை. பழைய முறையிலான அட்டவணைகளைக் கொண்டு ஆவணங்களை ஆய்வு செய்வதில் சிரமமும், காலதாமதமும் ஏற்படுகின்றன. எனவே, ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவும் பொருட்டு,

முதற்கட்டமாக பொருள் விவர அட்டவணைகளைக் கணினிப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கென அரசு 1996-97-ல் ரூ.15.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. கணினிப்படுத்தும் பணி சென்னை பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டு செர்வர்களும், ஒன்பது கணினிகளும், மற்ற உபகரணங்களும் இப்பணிக்கு வாங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அட்டவணை மற்றும் குறியீடுகளை இணையதளத்தில் தருவிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதன் முதற்கட்டமாக தற்போதுள்ள அட்டவணைகளை ஸ்கேன் செய்து பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**ஆவணக் காப்பகத்தையும், இடைநிலை ஆவணக் காப்பகத்தையும் கணினிப்படுத்துதல்**

9.2 தலைமைச் செயலக அரசாணைகள் இடைநிலை ஆவணக் காப்பகத்தில் பெறப்பட்டு, பாதுகாக்கப்பட்டு தலைமைச் செயலக நிர்வாகத் தேவைக்கேற்ப அவ்வப்போது வழங்கப்படுகின்றன. இக்காப்பகத்தில் உள்ள ஏழு இலட்சம் ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டால் விரைவில் ஆவணங்களைத் தேடி எடுத்து வழங்கவும் அரசு நிர்வாகம் சீராகச் செயல்படவும் வழிவகுக்கும். இப்பணி மூன்றாண்டு காலத்தில் முடிக்கப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**நூலக அட்டவணைகளைக் கணினிப்படுத்துதல்**

9.3 ஆவணக் காப்பக நூலகத்தில் புத்தக அட்டவணைகள் Card Catalogue முறையில் பராமரிக்கப்படுகின்றன. இதனை சர்வதேசத் தரத்திற்கு மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக அரிய புத்தகங்கள் கணினிப்படுத்தப்பட உள்ளன.

**கணினி நிழல்படம் (Scanner) வாங்குதல்**

9.4 மத்திய நிதி உதவியின்கீழ் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களை கணினி மூலம் நிழல் படம் எடுத்து பாதுகாக்க புதிய நிழல்படக் கருவி வாங்கப்பட உள்ளது. அவ்வாறே மத்திய நிதி உதவியின்கீழ் முக்கிய ஆவணங்களை நுண்படமெடுக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.



## 10. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1992 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்ட வாயிலாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநிலக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. அரசாங்கத்திலிருந்து பெறப்படும் நிதியுதவிகளைக் கொண்டு இம்மன்றம் தன் செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

**மன்றத்தின் முக்கியப் பணிகளில் கீழ்க்கண்ட பணிகள் அடங்கும்:-**

10.2 உயர் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அணுகும்போது அவற்றுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குதல்; உயர் கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல்; பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும், அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல்; மாநில அளவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களை மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு அனுப்புதல்; மற்றும் திட்டப் பணிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்தல்; உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை உயர்த்துதல்; ஒருங்கிணைத்தலை மேம்படுத்துதல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைக் கண்டறிதல், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மற்றும் அரசு விதிமுறைகளுக்கிணங்க, புதிய உயர் கல்வி நிறுவனங்களை தோற்றுவிப்பதற்கான நெறிமுறைகளை வடிவமைத்தல்; மாநிலத்தில் உயர் கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல்; உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டத்தை செழுமைப்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் தரத்தை சீரமைக்கவும் உதவுதல்; கல்வித் தரத்தை நிர்ணயித்து அதன் தொடர்ச்சியான நிதிநல்கைக் குழுவிற்குத் தேவையான உதவி புரிதல்;

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல், கண்காணிப்புத் திட்டம் ஏற்படுத்துதல்.

10.3 வரும் ஆண்டில் இம்மன்றம் கீழ்க்காணும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவிருக்கிறது:—

- கல்வி நிறுவனங்கள் அதிக அளவில் தேசீய மதிப்பீடு மற்றும் தகுதியுரை மன்றம் அல்லது தேசீய மதிப்பீடு வாரியம் ஆகியவற்றால் மதிப்பீடு செய்வதனை ஊக்குவித்தல்,
- தன்னாட்சி கோரி விண்ணப்பிக்க கல்லூரிகளை ஊக்குவித்தல்,
- பல்கலைக்கழகங்களில் சிறப்பு மையங்கள் வளர ஊக்குவித்தல்,
- முதற் பட்டப் படிப்பில் அனைத்துப் பாடங்களிலும் சிறந்த வினாத்தாட்களுக்கான பயிலரங்குகள் நடத்துதல்,
- முதற் பட்டப் படிப்பில் கலை மற்றும் அறிவியல் பாடங்களில் மாதிரி பாடத் திட்டங்கள் தயாரித்தல்,
- ஆராய்ச்சிப் பணிகளுக்கு நிதி உதவி கோரி விண்ணப்பிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.



## தொழில்நுட்பக் கல்வி

### அட்டவணை—1

**மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை (2004—2005)**

| ஆண்டு | அரசு | அரசு மானியம் | சுய நிதி | இணைப்புப் பயிலகங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1997–1998 | 21 | 35 | 112 | 5 | 173 |
| 1998–1999 | 21 | 35 | 143 | 5 | 204 |
| 1999–2000 | 22 | 35 | 145 | 5 | 207 |
| 2000–2001 | 22 | 35 | 148 | 5 | 210 |
| 2001–2002 | 22 | 35 | 146 | 5 | 208 |
| 2002–2003 | 22 | 35 | 146 | 5 | 208 |
| 2003–2004 | 22 | 34 | 146 | 5 | 207 |
| 2004–2005 | 22 | 34 | 146 | 5 | 207 |

## அட்டவணை–2

### மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை (2004–2005)

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுய நிதி | நிகர் நிலைப் பல்கலைக் கழகங்கள் | அண்ணா பல்கலைக் கழகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1997-1998 | 7 | 3 | 76 | - | 4 | 90 |
| 1998-1999 | 7 | 3 | 106 | - | 4 | 120 |
| 1999-2000 | 7 | 3 | 113 | - | 4 | 127 |
| 2000-2001 | 7 | 3 | 143 | - | 4 | 157 |
| 2001-2002 | 7 | 3 | 207 | 5 | 4 | 226 |
| 2002-2003 | 7 | 3 | 224 | 5 | 4 | 243 |
| 2003-2004 | 6 | 3 | 226 | 10 | 4 | 249 |
| 2004-2005 | 6 | 3 | 229 | 10 | 4 | 252 |



## அட்டவணை–3

### மாவட்டவாரியாக பொறியியற் கல்லூரிகள் (2004–2005)

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுய நிதி | அண்ணா பல்கலைக் கழகம் | நிகர் நிலைப் பல்கலைக் கழகங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | - | - | 2 | 4 | - | 6 |
| 2 | திருவள்ளூர் | - | - | 27 | - | - | 27 |
| 3 | காஞ்சிபுரம் | - | - | 58 | - | 5 | 63 |
| 4 | கடலூர் | - | - | 4 | - | - | 4 |
| 5 | விழுப்புரம் | - | - | 6 | - | - | 6 |
| 6 | வேலூர் | 1 | - | 10 | - | 1 | 12 |
| 7 | திருவண்ணாமலை | - | - | 6 | - | - | 6 |
| 8 | தருமபுரி | - | - | 2 | - | - | 2 |
| 9 | கிருஷ்ணகிரி | 1 | - | 2 | - | - | 3 |
| 10 | சேலம் | 1 | - | 2 | - | - | 3 |
| 11 | நாமக்கல் | - | - | 10 | - | - | 10 |
| 12 | ஈரோடு | - | - | 9 | - | - | 9 |
| 13 | கோயம்புத்தூர் | 1 | 2 | 16 | | 2 | 21 |
| 14 | நீலகிரி | - | - | 1 | | - | 1 |
| 15 | திருச்சிராப்பள்ளி | - | - | 9 | | 1 | 10 |
| 16 | கரூர் | - | - | 1 | - | - | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 பெரம்பலூர் | - | - | 2 | - | - | 2 |
| 18 தஞ்சாவூர் | - | - | 3 | - | 1 | 4 |
| 19 நாகப்பட்டினம் | - | - | 2 | - | - | 2 |
| 20 திருவாரூர் | - | - | 2 | - | - | 2 |
| 21 புதுக்கோட்டை | - | - | 8 | - | - | 8 |
| 22 திண்டுக்கல் | - | - | 5 | - | - | 5 |
| 23 மதுரை | - | 1 | 4 | - | - | 5 |
| 24 தேனி | - | - | 2 | - | - | 2 |
| 25 சிவகங்கை | 1 | - | 5 | - | - | 6 |
| 26 இராமநாதபுரம் | - | - | 2 | - | - | 2 |
| 27 விருதுநகர் | - | - | 5 | - | - | 5 |
| 28 திருநெல்வேலி | 1 | - | 10 | - | - | 11 |
| 29 தூத்துக்குடி | - | - | 4 | - | - | 4 |
| 30 கன்னியாகுமரி | - | - | 10 | - | - | 10 |
| மொத்தம் | 6 | 3 | 229 | 4 | 10 | 252 |





## அட்டவணை–4

### மாவட்டவாரியாக பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் (2004–2005)

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 8 | 2 | 1 | 11 |
| 2 | திருவள்ளூர் | - | 2 | 14 | 16 |
| 3 | காஞ்சிபுரம் | - | 1 | 15 | 16 |
| 4 | கடலூர் | - | 1 | 6 | 7 |
| 5 | விழுப்புரம் | - | - | 5 | 5 |
| 6 | வேலூர் | 1 | 1 | 8 | 10 |
| 7 | திருவண்ணாமலை | - | - | 8 | 8 |
| 8 | தருமபுரி | - | - | 4 | 4 |
| 9 | கிருஷ்ணகிரி | 1 | - | 3 | 4 |
| 10 | சேலம் | - | 1 | 7 | 8 |
| 11 | நாமக்கல் | - | 1 | 8 | 9 |
| 12 | ஈரோடு | - | 2 | 7 | 9 |
| 13 | கோயம்புத்தூர் | 2 | 6 | 10 | 18 |
| 14 | நீலகிரி | 1 | 1 | - | 2 |
| 15 | திருச்சிராப்பள்ளி | 1 | 2 | 4 | 7 |
| 16 | கரூர் | - | - | 1 | 1 |
| 17 | பெரம்பலூர் | - | - | 3 | 3 |
| 18 | தஞ்சாவூர் | - | 2 | 2 | 4 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 2 | 2 | 5 |
| 20 | திருவாரூர் | - | - | - | - |
| 21 | புதுக்கோட்டை | 1 | - | 3 | 4 |
| 22 | திண்டுக்கல் | - | 1 | 4 | 5 |
| 23 | மதுரை | 2 | 1 | 5 | 8 |
| 24 | தேனி | - | - | 1 | 1 |
| 25 | சிவகங்கை | 1 | 1 | 2 | 4 |
| 26 | இராமநாதபுரம் | - | 1 | 1 | 2 |
| 27 | விருதுநகர் | | 4 | 4 | 8 |
| 28 | திருநெல்வேலி | - | 1 | 8 | 9 |
| 29 | தூத்துக்குடி | 2 | - | 4 | 6 |
| 30 | கன்னியாகுமரி | 1 | 1 | 6 | 8 |
| | மொத்தம் | **22** | **34** | **146** | **202** |

இணைப்பு பல்தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை: 5

## அட்டவணை–5

### கல்லூரிக் கல்வித் துறை

### கல்லூரிகளின் எண்ணிக்கை விவரம் 2003–2004 (இனவாரியாக)

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 |
| உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 133 |
| சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 247 |
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் | 1 |
| உதவிபெறும் கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள் | 10 |
| உதவிபெறும் உடற்கல்வியியல் கல்லூரிகள் | 3 |
| சுயநிதி உடற்கல்வியியல் கல்லூரிகள் | 1 |
| உதவிபெறும் சமூகப் பணிப் பள்ளிகள் | 2 |
| மொத்தம் | 478 |



## அட்டவணை - 6

*2003—2004 ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை விவரம்*

| பாடங்களின் பெயர் | அரசுக் கல்லூரிகள் | | உதவிபெறும் கல்லூரிகள் | | உதவிபெறும் கல்லூரி (சுயநிதி பாடங்கள்) | | சுயநிதிக் கல்லூரிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் |
| **இளநிலை பட்ட வகுப்புகள்** | | | | | | | | | | |
| பிஏ. | 15893 | 19954 | 26861 | 29302 | 1947 | 2257 | 2577 | 5710 | 47278 | 57223 |
| பிஎஸ்சி. | 18959 | 24673 | 35221 | 37845 | 9960 | 10010 | 19430 | 25518 | 83570 | 98046 |
| பிசி. ஏ. | 0 | 0 | 0 | 0 | 1848 | 1880 | 4886 | 4422 | 6734 | 6302 |
| பிகாம். | 5208 | 5391 | 15955 | 12080 | 9381 | 7564 | 10748 | 14143 | 41292 | 39178 |
| பிபிஏ. | 224 | 423 | 1222 | 180 | 2006 | 1793 | 4379 | 3986 | 7831 | 6382 |
| பிபிஎம். | 0 | 0 | 302 | 427 | 656 | 1205 | 1975 | 1414 | 2933 | 3046 |
| பிலிட் | 0 | 0 | 355 | 1453 | 42 | 113 | 0 | 0 | 397 | 1566 |
| **முதுநிலை பட்ட வகுப்புகள்** | | | | | | | | | | |
| எம்ஏ. | 886 | 1658 | 3722 | 4683 | 569 | 747 | 80 | 296 | 5257 | 7384 |
| எம்எஸ்சி. | 777 | 1534 | 4134 | 5755 | 3324 | 3390 | 3637 | 4613 | 11872 | 15292 |
| எம்.காம். | 265 | 241 | 1828 | 1585 | 320 | 723 | 531 | 951 | 2944 | 3500 |
| எம்சிஏ. | 144 | 212 | 587 | 173 | 2395 | 1657 | 2028 | 1917 | 5154 | 3959 |
| எம்பிஏ. | 0 | 0 | 0 | 0 | 685 | 448 | 1434 | 961 | 2119 | 1409 |
| பி.ஜி.டி.சி.ஏ. | 10 | 41 | 0 | 0 | 306 | 329 | 24 | 91 | 340 | 461 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆராய்ச்சிப் பட்ட வகுப்புகள்** | | | | | | | | | | |
| எம்.பில். | 186 | 277 | 751 | 963 | 194 | 356 | 85 | 227 | 1216 | 1823 |
| பி.எச்டி. | 33 | 40 | 239 | 149 | 114 | 143 | 0 | 0 | 386 | 332 |
| டிப்ளமா படிப்புகள் | 0 | 0 | 0 | 0 | 236 | 896 | 0 | 0 | 236 | 896 |
| சான்றிதழ் படிப்புகள் | 0 | 0 | 0 | 0 | 50 | 506 | 0 | 0 | 50 | 506 |
| **கல்வியியல் படிப்புகள்** | | | | | | | | | | |
| பி.எட். | 492 | 485 | 403 | 1307 | 0 | 26 | 23 | 74 | 918 | 1892 |
| எம்.எட். | 0 | 0 | 44 | 72 | 0 | 0 | 0 | 0 | 44 | 72 |
| பி.பி.எட். | 0 | 0 | 192 | 86 | 0 | 0 | 0 | 0 | 192 | 86 |
| எம்.பி.எட். | 0 | 0 | 79 | 65 | 0 | 0 | 0 | 0 | 79 | 65 |
| இதர வகுப்புகள் | 34 | 97 | 350 | 258 | 414 | 358 | 529 | 296 | 1327 | 1009 |
| மொத்தம் | 43111 | 55026 | 92245 | 96383 | 34447 | 34401 | 52366 | 64619 | 222169 | 250429 |
| | 98137 | | 188628 | | 68848 | | 116985 | | 472598 | |



## அட்டவணை-7

### 2003 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்கள், தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் விவரம் (பாடவாரியாக)

| பாடங்களின் பெயர் | தேர்வு எழுதியவர்கள் | | | தேர்ச்சி பெற்றவர்கள் (பட்டம் பெறுவோர்) விவரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | மொத்தம் | ஆடவர் | மகளிர் | மொத்தம் |
| பி.ஏ. | 14282 | 16569 | 30851 | 5197 | 9509 | 14706 |
| பி.எஸ்சி. | 23923 | 24939 | 48862 | 11777 | 17431 | 29208 |
| பி.காம். | 14982 | 12838 | 27820 | 8251 | 9720 | 17971 |
| பி.பி. ஏ. | 4139 | 2650 | 6789 | 2322 | 1811 | 4133 |
| பி.பி.எம். | 1140 | 1043 | 2183 | 699 | 909 | 1608 |
| பி.லிட் | 85 | 383 | 468 | 68 | 318 | 386 |
| பி.எஸ்சி. மனையியல் | 0 | 216 | 216 | 0 | 152 | 152 |
| பி.எஸ்சி. கணினி இயல் | 5744 | 4626 | 10370 | 4176 | 4223 | 8399 |
| எம்.ஏ. | 4950 | 4238 | 9188 | 2715 | 2933 | 5648 |
| எம்.எஸ்சி. | 7068 | 6967 | 14035 | 4088 | 4224 | 8312 |
| எம்.காம். | 1811 | 1397 | 3208 | 669 | 782 | 1451 |
| எம்.எஸ்சி. மனையியல் | 0 | 9 | 9 | 0 | 9 | 9 |
| எம்.எஸ்சி. கணினி இயல் | 1115 | 633 | 1748 | 949 | 644 | 1593 |
| பி.எட். | 908 | 1538 | 2446 | 850 | 1483 | 2333 |
| எம்.எட். | 1011 | 628 | 1639 | 486 | 503 | 989 |
| எம்.பி.ஏ. | 5906 | 2016 | 7922 | 3245 | 1172 | 4417 |
| எம்.சி.ஏ. | 7092 | 3697 | 10789 | 5814 | 3091 | 8905 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எம்.பில் | -- | -- | -- | -- | -- | -- |
| பிஎச்டி. | -- | -- | -- | -- | -- | -- |
| பி.எல்.ஐ.எஸ். | 450 | 500 | 950 | 250 | 400 | 650 |
| எம்.எல்.ஐ.எஸ். | 110 | 165 | 275 | 110 | 65 | 175 |
| பி.சி.ஏ. | 1105 | 819 | 1924 | 801 | 753 | 1554 |
| டிப்ளமா வகுப்புகள் | 1465 | 1209 | 2674 | 779 | 835 | 1614 |
| சான்றிதழ் வகுப்புகள் | 2671 | 2984 | 5655 | 1837 | 2508 | 4345 |
| எம்.எஸ். டபிள்யு. | 27 | 62 | 89 | 25 | 62 | 87 |
| எம்.எஃப்.ஏ. | 6 | 12 | 18 | 5 | 12 | 17 |
| எம்.பி.எம். | 26 | 57 | 83 | 38 | 31 | 69 |
| பி.இ.எஸ். | 292 | 320 | 612 | 191 | 157 | 348 |
| பி.பி.எட். | 57 | 52 | 109 | 51 | 52 | 103 |
| எம்.பி.எட். | 82 | 51 | 133 | 40 | 34 | 74 |
| இதர வகுப்புகள் | | | | | | |
| எம்.சி.எம். | 0 | 20 | 20 | 0 | 20 | 20 |
| எம்.எஸ்ப்.எம். | 39 | 81 | 120 | 25 | 58 | 83 |
| பி.ஆர்.எஸ்.சி | 0 | 43 | 43 | 0 | 43 | 43 |
| எம்.ஆர்.எஸ்.சி. | 0 | 16 | 16 | 0 | 16 | 16 |
| பி.எஃப்.ஏ. | 51 | 35 | 86 | 40 | 32 | 72 |
| **மொத்தம்** | **100527** | **90813** | **191350** | **55478** | **64012** | **119490** |



# இணைப்பு IX

(80 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 41 – பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்பது திருவள்ளுவர் வாக்கு. கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதன் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது. பொருளாதார முன்னேற்றம் அடையாத, ஆனால் கல்வித்தரம் முன்னேறிய நாடுகளில்கூட இதைக் கண்கூடாகக் காண்கிறோம். வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சியடைவது மட்டுமன்றி வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகத் துய்க்க, கல்வி கற்றவனால் இயலும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்தி சாதகமாக்கிக் கொள்ளவும், சந்திக்கும் நிகழ்வுகளின் நன்மை தீமைகளைப் பகுத்தறியவும். கல்வி வழி செய்கிறது. மக்களிடையே கல்வியறிவு பெருகிய நாடுகளில் மக்கள் உடல்நலன்களைப் பேணிக் காப்பதில் முன்னேறி, நோய்களைத் தடுப்பதில் முன்னெச்சரிக்கையாக இருத்தல் போன்றவற்றால் குழந்தைகள், மகளிர், வறியர் ஆகியோரிடையேயும், நோயற்ற வாழ்க்கை அமைந்திருப்பது கூறிடும் உண்மையாகும். இத்தகைய பயன்மிக்க கல்வியைப் பரவலாக அனைவருக்கும் அளிப்பதே பள்ளிக் கல்வித் துறையின் நோக்கமாகும்.

கல்வி வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனைக்கேற்ப பள்ளிக் கல்வித் துறை நீழ்க்காணும் கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

[2004 ஜூலை 31

- மக்கள் தொகை 300-க்கு அதிகமாக உள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் பள்ளி வசதியை ஏற்படுத்துதல்
- அனைத்துக் குடியிருப்புகளிலும் 3 கி.மீ. தூரத்திற்குள் 8 ஆம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளி வசதியை ஏற்படுத்துதல்
- பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்
- 2007-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஐந்து ஆண்டு கல்வியை அளிக்கச் செய்தல்
- 2010-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டு ஆண்டு கல்வியை அளிக்கச் செய்தல்
- 2010-க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல்
- பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
- பள்ளிகளில் பாலர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை தரம் உயர்த்துதல்
- குறைந்தபட்சக் கல்வி கற்றலை உறுதி செய்தல்
- ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்
- கல்லாமையை இல்லாமை ஆக்குதல்
- எழுத்துத் தேர்வு மூலம் தரமான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல்
- கிராமங்களில் நூல் நிலையங்களை ஏற்படுத்துதல்
- பள்ளிகளில் உடல்நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்
- பள்ளிகளின் நிருவாகத்தில் பெற்றோர்களை ஈடுபடச் செய்தல்



2004 ஜூலை 31]

- பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி அளித்து தமிழகத்தின் வருங்கால சமுதாயத்தை கணினி அறிவு மிக்க சமுதாயமாக மாற்றுதல்

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், அனைவர்க்கும் கல்விக்கான மாநில திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும், அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகம், அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் தத்தம் பணியில் சிறப்பாக ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படும்.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 41-பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2004-2005 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4202.77 கோடி ஆகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.312.47 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2004-2005 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 பொதுப் பணிகள் — அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | -- | 1163.81 | 1163.81 |
| 2202 பொதுக் கல்வி | | | |
| 01 தொடக்கக் கல்வி | 15396.37 | 201566.78 | 216963.15 |
| 02 இடைநிலைக் கல்வி | 6727.89 | 183828.94 | 190556.83 |
| 04 முதியோர் கல்வி | 10.01 | 66.93 | 76.94 |
| 05 மொழி வளர்ச்சி | 2.98 | 306.08 | 309.06 |
| 80 பொதுவானவை — ஏனைய செலவு | -- | -- | -- |
| மொத்தம் | 22137.25 | 385768.73 | 407905.98 |
| 2204. போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 211.94 | 102.21 | 314.15 |
| 2205 கலையும் பண்பாடும் — பொது நூலகங்கள் | -- | 1549.32 | 1549.32 |
| 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் | 1795.91 | 24.83 | 1820.74 |
| 2235 சமூகப் பாதுகாப்பும், நலனும் | -- | 185.51 | 185.51 |
| 2251. தலைமைச் செயலகம் — சமூகப் பணிகள் | -- | 231.17 | 231.17 |
| 2505. ஊரக வேலைவாய்ப்பு | 1102.36 | -- | 1102.36 |
| 4202. கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 6000.00 | -- | 6000.00 |
| 7610. அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்கள் | -- | -- | -- |
| 7615. பல்வகை கடன்கள் | -- | 3.50 | 3.50 |
| சேர்க்க — திருப்பி வசூலிக்கப்பட்டவை | -- | -- | -- |
| பெருமொத்தம் | 31247.48 | 389029.08 | 420276.54 |



## 2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி-II-புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் வகை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது |
| 1 | 77 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடங்களுக்கு பராமரிப்புப் பணி | 77.00 | |
| 2 | 75 உயர்நிலை மற்றும் 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் அளித்தல் | 78.75 | |
| 3 | 100 உயர்நிலை மற்றும் 50 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்பிப்பு சாதனங்கள் அளித்தல் | 23.63 | |

| | | | |
|---|---|---|---|
| 4 | 130 உயர்நிலை மற்றும் 96 மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி மேம்படுத்துதல் | 25.00 | |
| 5 | 100 உயர்நிலை மற்றும் 200 மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் மொழி பயிற்றுவிக்கும் ஆய்வகம் அமைத்தல் | 208.35 | |
| 6 | 30 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | | 145.89 |
| 7 | 30 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | | 334.98 |
| 8 | 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி பாடம் அறிமுகப்படுத்துதல் | 450.00 | |
| 9 | ஆசிரியர்கள்/தலைமையாசிரியர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம் | 50.00 | |
| 10 | 83 மேல்நிலைப் பள்ளிகளுக்கு புதிய பாடங்கள் போதிப்பதற்கான கற்பிப்பு சாதனங்கள் | 99.60 | |
| 11 | 500 உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி பாடம் அளித்தல் | 530.00 | |
| 12 | மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநரகத்துக்கு 5 கணினி வழங்குதல் | | 5.10 |
| 13 | மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வு அலுவலர் அலுவலகங்களுக்கு 10 கணினி வாங்குதல் | | 10.20 |
| 14 | அரசுத் தேர்வுகள் துறை வட்டார அலுவலகங்களுக்கு கணினி வாங்குதல் | 30.00 | |
| 15 | 6 பிற்பட்ட மாவட்டங்களில் சமுதாய ஒத்துழைப்புடன் பெண்களுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் | 10.00 | |
| | மொத்தம் | 1582.33 | 496.17 |
| | | 2078.50 | |



## 2001-2004-ல் முக்கிய சாதனைகள்

- தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவர்க்கும் அடிப்படைக் கல்வி வழங்கிட ஒரு பெரும் இயக்கமாக "அனைவர்க்கும் கல்வித் திட்டம்" 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2010 வரை செயல்படுத்தப்படும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ.1,649 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 31-3-2004 முடிய ரூ.347 கோடி செலவிடப்பட்டு புதிய பள்ளிகள் தொடங்குதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், வட்டார, கள ஆய்வு மையங்கள் கட்டுதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல், பள்ளிகளுக்குக் குடிநீர், கழிப்பிட மற்றும் பள்ளிக் கட்டடப் பராமரிப்புப் பணிகள் போன்ற பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 2001-2004-ல், 1112 தொடக்கப் பள்ளிகள், 1075 நடுநிலைப் பள்ளிகள், 260 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 300 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், தொடக்கப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு 100 விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது, தமிழ்நாட்டில் 1 கி.மீ. தொலைவிற்குள் மக்கள் தொகை குறைந்தபட்சம் 300 உள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும் தொடக்கப் பள்ளி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2004-2005-ல், 1031 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இதன் மூலம் உயர் தொடக்கப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு 100 விழுக்காடு எய்தப்பட்டுவிடும். மேலும் 2004-2005-ல், 30 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்படும்.

- முதல் முறையாக கல்வித் துறைக்காக 'நபார்டு' வங்கியிடம் கடன் பெற்று இரண்டு கட்டங்களாக 346 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக்

கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.99.00 கோடி செலவில் பணிகள் துவக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளன. மேலும் 7 மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த 83 கோடி கடனுதவி பெறப்பட்டுள்ளது.

- ❖ ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட சுமார் 20,000 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது 15,670 மாணவர்கள் இரண்டாண்டுப் பயிற்சி முடித்து பிப்ரவரி 2004–ல் ஆசிரியர் பயிற்சித் தேர்வு எழுதியுள்ளார்கள். மீதமுள்ள 4000 மாணவர்களுக்கு விரைவில் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.
- ❖ பள்ளி ஆண்டுத் தேர்வில் 6–12 வகுப்புகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்கள் வரை தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறு தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.
- ❖ பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த 6,7,8 வகுப்புகளில் பி.எட். தகுதி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- ❖ பள்ளிகளில் 2001–2003–ல், 10,178 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், 12,000 ஆசிரியர் பணியிடங்கள் அண்மையில் நிரப்பப்பட்டுள்ளன.
- ❖ பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பகம் மூலம் நியமிக்கப்படும் இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.



- ❖ மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டு அப்பள்ளிகள் வரையறுக்கப்பட்டுள்ள வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ❖ 867 கிராமப்புற நூலகங்கள் துவக்கப்பட்டுள்ளன. மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சி நடத்த ஆணையிடப் பட்டுள்ளது. அதேபோன்று சென்னையில் கன்னிமாரா நூலகததில் நிரந்தர புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ இசை, கலை, பேச்சுத்திறன் போன்றவற்றில் மாணவர்கள் தத்தம் திறமைகளை வெளிக்கொணர இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ 1,197 மேல்நிலைப் பள்ளிகளில் +1, +2 மாணவர்களுக்கு கணினிக் கல்வி கற்றுத் தரப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களும் கணினிக் கல்வியின் பயனைப் பெற்று வருகின்றனர். மீதமுள்ள 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கணினிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து அனைவர்க்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் 6 ஆம் வகுப்பிலிருந்து கணினிக் கல்வி கற்றுத் தரப்படுகிறது. இது தவிர, 2004–2005–ல் 500 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி ரூ.530 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.
- ❖ தமிழ்நாட்டில் பயிலும் எந்தவொரு மாணவரும் தமிழ் அறியாமல் பள்ளியிலிருந்து விட்டுச் செல்லக்கூடாது. அதற்கேற்ப அறிவியல் தமிழ் என்ற பாடத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்து வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த முடிவெடுக்கப்பட்டது. அதற்கென 1.32 கோடி பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்க ரூ.5.42 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ உலக அளவில் பெருமளவில் பயன்படுத்தப்படும் மொழியாக ஆங்கிலம் உள்ளது. கணினியைப் பயன்படுத்தி வேலை

வாய்ப்பு அதிக அளவில் பெறுவதற்கும் ஆங்கிலம் இன்றியமையாததாக உள்ளது. இதனை உணர்ந்து அனைத்து மாநில வாரியப் பள்ளிகளிலும் 1 ஆம் வகுப்பிலிருந்தே ஆங்கில மொழியைக் கற்பிக்க ஆணையிடப் பட்டுள்ளது. 2004-2005 ஆம் கல்வி ஆண்டிலிருந்து முதலாம் வகுப்பில் ஆங்கிலம் கற்றுத் தரப்படுகிறது.

❖ பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

❖ பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் தோல்வியுறுவதை அறிந்து அதனைக் களைய 2003-2004 முதல் புதியதொரு திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதாவது உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக்கூடங்கள் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. 600 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இவ்வாய்வுக்கூட வசதி செயல்படுத்தப்படவுள்ளது.

❖ குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது அவர்களின் பெயருக்கு முன்பாக அவர்களுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்து மட்டுமே தலைப்பெழுத்தாகக் குறிப்பிட்டு வந்த நடைமுறையினை மாற்றி, அக்குழந்தையின் பெற்றோர்களின் விருப்பப்படி அக்குழந்தையின் பெயருக்கு முன்பாக, தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ, அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ தலைப்பெழுத்தாகப் பயன்படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

❖ "தேக்கமின்றி தேர்ச்சி" என்ற கொள்கைக்கு அரசு ஏற்பளித்து 2004-2005 முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப் பதிவு இருக்கும்பட்சத்தில் தேக்கமின்றி தேர்ச்சி அளிக்கப்படும். அதே நேரத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்படும்.



## 1. தொடக்கக் கல்வி

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 21-அ-ன்படி, ஆறிலிருந்து பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவர்க்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி மாநில அரசு அளிக்கவேண்டும். அரசியலமைப்புக்குட்பட்ட இக்குறிக்கோளை எய்தும்பொருட்டு, 1994-95 ஆம் ஆண்டில் கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தீவிரமான செயல் ஊக்கத்துடன், தரமான தொடக்கக் கல்வியை அனைவர்க்கும் அளிப்பதற்கு அரசு சில கொள்கைகளை வகுத்து செயலாற்றி வருகிறது. அனைவர்க்கும் கல்வி அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகக் கருதப்படுகிறது.

### 1.1. குறிக்கோள்

- பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்
- பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் அனைவரையும் இடையில் நின்று விடாமல் 8-வது வகுப்பு வரையாவது தொடர்ந்து தக்க வைத்து நிறைவுறச் செய்தல்
- பள்ளிகளில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் குறைந்த பட்சக் கற்றல் திறன்கள் அடையும் வகையில் தரமான கல்வியை வழங்குதல்
- குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்தல்
- நுண்ணிய அளவில் பரவலான திட்டங்களைத் (Micro level decentralised planning) திட்டமிடுதலிலும், செயல்படுத்துவதிலும் சமுதாயத்தைப் பங்கேற்கச் செய்தல்

### 1.2. புதிய பள்ளிகள் தொடங்குதல்

வீட்டுக்கு அருகில் பள்ளி அமைந்திருத்தல் நூறு விழுக்காடு சேர்க்கையை உறுதிப்படுத்துகிறது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் பள்ளிகள் இல்லாமலும், மக்கள் தொகை 300 அல்லது அதற்கு அதிகமாக உள்ள குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்பதும், தேவையுள்ள இடங்களில் இரண்டு ஆரம்பப்

[2004 ஜூலை 31

பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி அமைய வேண்டுமென்பதும் அரசின் கொள்கையாகும். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் 1,112 தொடக்கப் பள்ளிகளும், 1,075 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி தகுதிவாய்ந்த அனைத்துக் குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டு தொடக்கக் கல்வி வசதி 100 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது. **2004–2005–ல் எட்டு ஆண்டு நடுநிலைப் பள்ளி வசதி அனைத்துப் பகுதிகளிலும் முழுமையாக அளிக்கப்படும். இதன்பொருட்டு 1,031 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.**

### 1.3. தனியார் பள்ளிகள்

மிகுந்த தரம்வாய்ந்த பள்ளிகளை ஆரம்பித்து சிறப்பாகக் கல்வி அளிப்பதில் தனியார் பங்கு மிகவும் போற்றுதற்குரியது. அரசின் நிதி உதவி எப்போதும் கோரமாட்டோம் என்ற உறுதிமொழிக்குட்பட்டு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடங்க 1–6–1991 முதல் அனுமதி வழங்கப்படுகிறது.

### 1.4. ஆசிரியர்கள் நியமனம்

6,7,8 வகுப்புகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும்பொருட்டு அவ்வகுப்புகளுக்கு பி.எட் தகுதி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி இடைநிலை ஆசிரியர்கள் 1–5 வகுப்புகளுக்கு மட்டுமே நியமனம் செய்யப்படுவர். நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டு காலியான ஆசிரியர் பணியிடங்களை ஐந்து ஆண்டு காலத்திற்கு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இடைநிலை உடற்கல்வி மற்றும் சிறப்பாசிரியர் நியமனங்களுக்கு வரையறுக்கப்பட்ட உயர்ந்தபட்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.

### 1.5. தேக்கமின்றி தேர்ச்சி திட்டம்

தேர்வில் தோல்வி என்பது, இளம் உள்ளங்களின் தன்னம்பிக்கையைத் தகர்ப்பதுடன் அவர்களைப் படிப்பிலிருந்து இடைநிற்றலுக்கு வழிவகுக்கவும் குழந்தைத் தொழிலாளர்களாக மாறவும் வழிவகுக்கிறது. இதனால் அனைவர்க்கும் கல்வி என்ற இலக்கினை எய்தவியலாத நிலை உருவாகிறது. எனவே, தேக்கமின்றி தேர்ச்சி என்ற கொள்கைக்கு அரசு ஏற்பளித்து 2004–2005 முதல்



2004 ஜூலை 31]

அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப் பதிவு இருக்கும்பட்சத்தில் தேக்கமின்றி தேர்ச்சி அளிக்கப்படும். அதே நேரத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்படும்.

### 1.6. 1 ஆம் வகுப்பிலிருந்து ஆங்கில மொழிப் பாடம்

உலக அளவில் பொதுவான ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு மாநில வாரியப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலப் பாட மொழியினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

### 1.7. மழலையர் பள்ளிகள்

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் “Code of Regulations for Approved Nursery and Primary Schools 1991” என்ற விதிமுறைகளின் அடிப்படையில் இயங்கி வருகின்றன. இந்த விதிமுறைகளின்கீழ் மாநிலத்தில் சுமார் 3,880 பள்ளிகள் அனுமதி பெற்று செயல்பட்டு வருகின்றன.

### 1.8. “அறிவியல் தமிழ்”அறிமுகம்

தமிழ்நாட்டில் பயிலும் எந்தவொரு மாணவரும் தமிழ் அறியாமல் பள்ளியினை விட்டுச் செல்லக்கூடாது என்பது அரசின் நோக்கமாகும். எனவே தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மழலையர் வகுப்பிலிருந்து மேல் நிலை வகுப்பு வரையில் “அறிவியல் தமிழ்” என்ற பாடத்தை ஒரு பாடமாக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்கான பாடப் புத்தகங்கள் ரூ.5.42 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

### 1.9. நலத் திட்டங்கள்

பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதினால் பெரும்பாலான பள்ளி வயதுக் குழந்தைகள் சேர்க்கப்பட்டு இடைநிற்றலும் குறைக்கப்பட்டுள்ளன. 1982 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மதிய உணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கு 1985–86 முதல் 1–8 வகுப்புகளில் மதிய உணவு உண்ணும் குழந்தைகளுக்கு

[2004 ஜூலை 31

இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1986–லிருந்து 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும், 6 முதல் 8 வகுப்பு வரை சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**1.10. மழை நீர் சேகரிப்பு "நீர் வளமே எதிர்காலம்"**

நிலத்தடி நீரை வளப்படுத்த வேண்டுமென்க் கருதி "மழை நீர் சேமிப்போம்" என்ற அறைகூவலுக்கிணங்க அனைத்துப் பள்ளிகளிலும் மழை நீர் சேகரிப்பு குறித்து பள்ளி மாணவர்களுக்கு நன்முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் மழை நீர் சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1.11. அனைவர்க்கும் கல்வி இயக்கம்**

அனைவர்க்கும் ஆரம்பக் கல்வியைக் கட்டாயம் அளிக்க வேண்டுமென இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்துப் பள்ளிகளிலும் 1–8 வகுப்புகளில் 2001 முதல் 2010 வரை 10 ஆண்டு காலத்திற்கு "அனைவர்க்கும் கல்வி இயக்கம்" (சர்வ சிக்ஷா அபியான்) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002 முதல் 2007 வரையிலான காலம்) ரூ.1649 கோடி அளவுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இச்செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும்.

**1.12. அனைவர்க்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்கள்**

- அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்
- 2007–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஐந்தாண்டு பள்ளிக் கல்வியை அளிக்கச் செய்தல்
- 2010–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டு பள்ளிக் கல்வியை அளிக்கச் செய்தல்
- தரமான ஆரம்பக் கல்வியை வழங்குதல்



2004 ஜூலை 31]

- ஆண் பெண் பேதம் / சமூக ஏற்றத்தாழ்வு பாகுபாடின்றி சமச்சீரான தொடக்கக் கல்வியை 2007–க்குள் அடைதல்; 2010–க்குள் நடுநிலைக் கல்வியை அடைதல்
- 2010–க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல்

**1.13. அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் மத்திய அரசும் மாநில அரசும் ரூ.359.30 கோடியினை விடுவித்துள்ளன. 31-3-2004 முடிய ரூ.347 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:**

- 1112 புதிய தொடக்கப் பள்ளிகள்; 2224 ஆசிரியர் பணியிடங்கள்; தொடக்கப் பள்ளி வசதியில் 100 விழுக்காடு சாதனை.
- 1075 தொடக்கப் பள்ளிகள் 1948 ஆசிரியர் பணியிடங்களுடன் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.
- 10000 அங்கன்வாடிகள் மழலையர் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டன. இதனால் 4.66 இலட்சம் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.
- பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளில் 249 கல்வி உறுதியளிப்பு மையங்கள் நடத்தப்பட்டன. இதனால் 7525 குழந்தைகள் பயன்பெற்றனர்.
- 5366 இணைப்புப் பள்ளிகள் மற்றும் 22 உறைவிட முகாம்கள் 1.38 இலட்சம் குழந்தைகள் பயனடைந்தனர்.
- அங்கன்வாடி இல்லாத குடியிருப்புகளில் 573 குழந்தைகள் நலம் மற்றும் கல்வி மையங்கள்.
- 385 வட்டாரவள மையங்கள்; 2695 வட்டாரவள மைய ஆசிரியர்கள்

  3930 தொகுப்புவள மையங்கள்
- 42828 பள்ளி அளவிலான கிராம கல்விக் குழுக்கள்

[2004 ஜூலை 31

- 32608 பள்ளிகளுக்கு ரூ.5000/– வீதம் பள்ளிக் கட்டடம் பராமரிப்பிற்கென உதவித்தொகை.
- 37251 பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ரூ.2000/– வீதம் பள்ளி உதவித்தொகை.
- 161080 ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் சாதனங்கள் வாங்கிட ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.500/– உதவித்தொகை.
- 107818 மாணவிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.150/– வீதம் கற்றல் சாதனங்கள் வாங்கிட உதவித்தொகை.
- 1112 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ.10000/– வீதமும், 1075 புதிய நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ.50000/– வீதம் கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்கிட உதவித்தொகை.
- 52 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக 56939 இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்
- 39795 கிராமக் கல்வி உறுப்பினர்களுக்குப் பயிற்சி
- 7860 தொகுப்பு வளமைய ஒருங்கிணைப்பாளர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம்
- 150241 ஆசிரியர்களுக்குப் பயிற்சி
- 211 தனியார் கணினி நிறுவனங்கள் வாயிலாக, 8173 அரசுப் பள்ளிகளிலுள்ள 15.29 இலட்சம் குழந்தைகளுக்கு கணினிக் கல்வித் திட்டம்
- 11520 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுனர்களுக்கு கணினிக் கல்வியில் பயிற்சி
- உயர் தொடக்க வகுப்புகளில் 9.12 இலட்சம் மாணவிகளுக்குத் தொழிற்பயிற்சி
- 12657 ஆசிரியர்களுக்கு பல்வகை தொழில்களுக்கான பயிற்சி
- 6.45 இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினக் குழந்தைகளுக்கு தனிப்பயிற்சி வகுப்புகள்



2004 ஜூலை 31]

- 5573 ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப் பணியாளர்களுக்குப் பயிற்சி
- 5573 ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்ட மையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்
- 144 மாதிரி தொகுப்புப் பள்ளிகள்; 13 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள்; 13 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ 30000/– வீதம் கற்றல் கற்பித்தல் துணைக் கருவிகளுக்கான உதவித்தொகை.
- 168 வட்டாரவள மையக் கட்டடங்கள்; 482 தொகுப்புவள மையக் கட்டடங்கள்
- 1990 இரு வகுப்பறைக் கட்டடங்கள்; 1521 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள்
- 4910 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி மற்றும் 5981 பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி
- 8 மாவட்டங்களிலுள்ள 13 வட்டாரங்களில் தேசிய பெண்கள் கல்வித் திட்டம் செயல்படுத்துதல்

**1.14. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.433.01 கோடி செலவில் செயல்படுத்தப் படவுள்ள நடைமுறையில் உள்ள செயல்பாடுகள் உள்ளிட்ட முக்கியமான செயல்பாடுகளின் விவரம் வருமாறு:–**

- 1031 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்; 1031 பட்டதாரி தர ஆசிரியர்கள்; 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நடுநிலைப் பள்ளி வசதி 100 விழுக்காடு அடைதல்
- 10000 அங்கன்வாடி மையங்களை மழலையர் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்
- பள்ளி வசதி இல்லாத சிற்றூர்களில் 363 கல்வி உறுதி மையங்கள்
- பள்ளியில் சேராத 2.79 இலட்சம் குழந்தைகளுக்கான 6534 இணைப்பு மையங்கள் மற்றும் 170 உறைவிடப் பள்ளி முகாம்கள்

- 49347 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 6,7,8 வகுப்புகள் கொண்ட பள்ளிகளுக்கு பள்ளி உதவித் தொகை.
- 1.85 இலட்சம் ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.500/- வீதம் கற்றல் கற்பித்தல் சாதனங்களுக்கான உதவித்தொகை
- 122220 மாணவிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.150/- வீதம் கற்றல் சாதனங்கள் வாங்கிட உதவித்தொகை
- 1225 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்க உதவித்தொகை
- 71204 இயலாக் குழந்தைகளுக்கான திட்டம்
- 1.40 இலட்சம் கிராம கல்விக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி
- 9.12 இலட்சம் மாணவிகளுக்கு தொழில்திறன் பயிற்சி
- 12657 ஆசிரியர்களுக்கு பல்வேறு வகையான தொழில் பயிற்சி
- 9 மாவட்டங்களிலுள்ள 14 வட்டங்களில் தேசிய பெண்கள் கல்வித் திட்டம்
- 77 வட்டாரவள மையக் கட்டடங்கள்; 407 தொகுப்புவள மையக் கட்டடங்கள்
- 1031 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள்
- 3984 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்
- 1758 பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி
- 1675 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி
- 39915 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 6,7,8 வகுப்புகள் கொண்ட பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.5000/- வீதம் பராமரிப்பு உதவித் தொகை
- 1.86 இலட்சம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி
- 6, 7, 8 வகுப்பிலுள்ள 15.29 இலட்சம் குழந்தைகளுக்கு கணினிக் கல்வித் திட்டம்
- 67 வகுப்பறைக் கட்டடங்கள்; 67 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ.30000/- வீதம் கற்றல் கற்பித்தல் சாதனங்கள்



## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

**குறிக்கோள்**

- ஆரம்பக் கல்விபெற்ற அனைவரும் இடைநிலைக் கல்வி பெறச் செய்தல்
- தரமான கல்வியை வழங்குதல்
- பெற்றோர் மற்றும் சமுதாயத்தினை முழு அளவு பங்கேற்கச் செய்தல்

### 2.1. புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

ஐந்து கி.மீ. தொலைவில் உயர்நிலைப் பள்ளிகள் எதுவுமே இல்லாமல் இருந்து, அந்த எல்லைக்குள் செயல்படும் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் 50 மாணவர்கள் கல்வி பயின்று வந்தால், அத்தகைய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும், எட்டு கி.மீ. தொலைவில் எந்த ஒரு மேல்நிலைப் பள்ளியும் இல்லாமல் இருந்து, அந்த எல்லைக்குள் செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் 100 மாணவர்கள் கல்வி பயின்றால் அத்தகைய உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதுமே அரசின் கொள்கையாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் 200 உயர்நிலைப் பள்ளிகளும் 300 மேல்நிலைப் பள்ளிகளும் துவக்கப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 30 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் துவக்கப்படும்.

### 2.2. தனியார் நிர்வாகத்தின்கீழ் சுயநிதி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

அரசிடமிருந்து நிதியுதவி கோரமாட்டோம் என்ற அடிப்படையில் 1–6–1991–லிருந்து தனியார் நிர்வாகத்தின்கீழ் சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. 2003–2004–ல் 52 உயர்நிலைப் பள்ளிகளும், 38 மேல்நிலைப் பள்ளிகளும் துவக்கப்பட்டுள்ளன. மத்திய அரசால் நடத்தப்பெறும் 6 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாநில பாடத் திட்டத்தின்படி மேல்நிலைப் பள்ளி பிரிவுகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 2.3. மாணவர்கள் சேர்க்கைக்கு சிறப்புத் திட்டங்கள்

பள்ளிகளில் மாணவர்களை அதிகப்படியாக சேர்ப்பதற்கும், அதிக அளவு இடைநிற்றலைத் தடுப்பதற்கும் "அனைவர்க்கும் கல்வி இயக்கம்" முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இலவச சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசக் குறிப்பேடுகள், மதிய உணவு, இலவசப் பேருந்து பயணச் சலுகை, கல்விச் சலுகைகள் +1 வகுப்பில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச இரு சக்கர மிதிவண்டி அளிப்பது போன்ற நன்மை பயக்கும் திட்டங்கள் மாணவர்கள் தொடர்ந்து பள்ளிகளில் முழு அளவில் படிக்க செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டிலிருந்து (2004–2005) பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் இலவச இரு சக்கர மிதிவண்டி வழங்கப்படும். மேலும் 6–9 மற்றும் +1 வகுப்புகளில் மாவட்ட அளவிலான ஆண்டுத் தேர்வில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடித் தேர்வும் நடத்தப்படுகிறது.

## 2.4. ஆசிரியர்கள் நியமனம்

நிதிச்சுமையைக் கருத்தில் கொண்டு காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை ஐந்து ஆண்டுகளுக்கு தொகுப்பூதிய முறையில் நியமனம் செய்ய அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. 5 ஆண்டு திருப்திகரமான பணி நிறைவுக்குப் பின்னர் அவர்கள் முறையான ஊதிய விகிதத்தில் பணி முறைப்படுத்தப்படுவார்கள். பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களுக்கான உச்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.

## 2.5. புதிய பாடத் திட்டம்

மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்ட கல்வியாளர்கள் அடங்கிய குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், திருத்திய பாடத் திட்டம் 2003–2004 ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



| ஆண்டு | வகுப்புகள் |
|---|---|
| 2003–2004 | 6, 9 அனைத்துப் பாடங்கள்;<br>10 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடம் மட்டும் |
| 2004–2005 | 7, 11 வகுப்புகள் அனைத்துப் பாடங்கள்;<br>10 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடம் தவிர<br>மற்ற பாடங்கள் அனைத்தும் |
| 2005–2006 | 8, 12 வகுப்புகள் அனைத்துப் பாடங்களும் |

2004–2005 ஆம் ஆண்டு முதல் மேல்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில், உயிர் வேதியியல், நுண்ணுயிரியல், செவிலியல், ஊட்டச்சத்து மற்றும் உணவு முறை, தகவல் தொடர்புக்கான ஆங்கிலம் போன்ற ஐந்து புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.6. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

தமிழ்நாட்டை அறிவுத்திறனும் கணினி அறிவும் மிக்க சமுதாயமாக மாற்ற வேண்டுமென்று இவ்வரசு கருதுகிறது. 1197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் கற்றுத் தரப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் மீதமுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்படும். மேலும் 2004–2005–ல் 500 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்படும்.

## 2.7. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப கட்டமைப்பு வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து தர இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. இதற்கென திட்டங்கள் தீட்டப்பட்டு முதன் முறையாக "நபார்ட் வங்கி" மூலம் கடன் பெறப்பட்டு முதல் கட்டமாக ரூ.18.36 கோடி செலவில் 9 மாவட்டங்களில் உள்ள 96 பள்ளிகளில் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது கட்டமாக ரூ.80.64 கோடி செலவில் 19 மாவட்டங்களில் 250 பள்ளிகளில் இப்பணிகள் முடியும் தறுவாயில் உள்ளது. மூன்றாம் கட்டமாக தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் போன்ற வட மாவட்டங்களில் உள்ள 259 பள்ளிகளில் அடிப்படை வசதிகளுக்கென ரூ.83 கோடி அளவுக்கு தனித் திட்டம் வகுக்கப்பட்டு நபார்ட் வங்கியிடமிருந்து கடனுதவி பெறப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**2.8. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்**

ஆய்வுக்கூட வசதிகள் இல்லாத பள்ளிகளில் அத்தகைய வசதிகளை ஏற்படுத்த மாநில திட்டம் மற்றும் நபார்டு வங்கி கடனுதவி மூலமாக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2004–2005–ல் மாநிலத் திட்டத்தின்கீழ் ரூ.78.75 இலட்சம் செலவில் 75 அரசு உயர்நிலை மற்றும் 75 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்கள் வழங்கப்படும். இது தவிர 100 அரசு உயர்நிலை மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கற்பிப்பு சாதனங்கள் ரூ.23.63 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

**2.9. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்துதல்**

கல்வி கற்றல் என்பது ஒரு தொடர் நிகழ்வாகும். வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு அவசியமுள்ளது. வகுப்பறைகளில் பாட நூல்கள் மூலம் கற்பதோடு, நூலகப் படிப்பு மாணவர்களின் அறிவாற்றலை மேலும் வளர்த்துக்கொள்ள உறுதுணையாக விளங்குகிறது. அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலும் தரமுள்ள நூல்களை உள்ளடக்கிய பள்ளி நூலகம் அமைத்திட அரசு இணை மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் நூலகத்திற்கு வாங்கும் புத்தகச் செலவில் 50 சதவிகிதத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. மீதி 50 சதவிகிதத்தை பெற்றோர் ஆசிரியர் கழகம் அல்லது நன்கொடையாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இதுவரை 400 பள்ளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் 226 பள்ளிகள் பயனடையும். மேலும், அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நூலகங்களையும் பள்ளிகளுடன் இணைத்து மாணவர்களுக்குத் தரமான நூல்கள் வழங்கப்படுகிறது.

**2.10. பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்**

புதியதாக உதயமாகும் துறைகளில் (sunrise sectors) தக்க வேலைவாய்ப்புகளைப் பெற ஆங்கிலம் மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதால் ஆங்கில மொழியில் பேசும் திறன் மற்றும் தகவல் தொடர்புத் திறன் நோக்குடன் 2004–2005–ல், 100 அரசு உயர்நிலை மற்றும் 200 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.208.35 இலட்சம் செலவில் ஆங்கில மொழி கற்பிப்பு ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படும். இத்தொகையில் அரசு 75 விழுக்காடும், பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் 25 விழுக்காடும் ஏற்கும்.



2004 ஜூலை 31]

**2.11. விளையாட்டுகளும் விளையாட்டுப் போட்டிகளும்**

பள்ளிகளில் உடற்கல்வி ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. விளையாட்டிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வத்தை உண்டாக்கவும், அவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை உரிய நேரத்தில் தெரிந்து கொள்ளவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உதவியுடன் திறமை கண்டுபிடிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.12. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி**

8 ஆம் வகுப்பு முதல் +2 வகுப்பு வரை படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் போன்ற குறிப்பிட்ட பாடங்களிலும் மேல்நிலைப் பள்ளி பாடங்களான இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வணிகவியல் மற்றும் கணக்குப் பதிவியல் போன்ற பாடங்களிலும் சிறப்புப் பயிற்சி நடத்தப்படுகிறது. சுமார் 1000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதம் முதல் பிப்ரவரி மாதம் முடிய இத்தகைய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களை பள்ளிகளில் அதிகப்படியாகச் சேர்த்து அவர்களைத் தொடர்ந்து படிக்கச் செய்யும் தலைமையாசிரியர்களில் மாவட்டத்தில் மூன்று தலைமையாசிரியர்களுக்கு பரிசுத் தொகை (முதல் நிலை ரூ.500/–, இரண்டாம் நிலை ரூ.300/–, மூன்றாம் நிலை ரூ.200/–) வழங்கப்படுகிறது.

**2.13 மாணவர்களுக்கு கல்விச் சலுகைகள்**

திறமையுள்ள மாணவர்கள் தங்களது மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும்பொருட்டு கல்விச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் 10 ஆம் வகுப்பு (SSLC) பொதுத் தேர்வில் முதல் 3 நிலை பெறுபவர்களுக்கும், மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் முதல் நிலை பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் தலா ரூ.1500/–ஊக்கத்தொகையாக அளிக்கப்படுகிறது. அதேபோன்று +2 வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று நிலையைப் பெறுவோர்களும், மாவட்ட அளவில், அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகளில் படித்து மேல்நிலைத் தேர்வில் முதல் நிலையைப்

பெறும். ஒவ்வொரு மாணவருக்கும் உயர் கல்வியைத் தொடர அரசு நிதியுதவி அளிக்கிறது.

### 2.14. தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம், சாரணர் – சாரணியர் இயக்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்

- பள்ளி அளவில் தேசிய மாணவர் படையில் விமான, கப்பல் மற்றும் தரைப்படைப் பிரிவுகள் அடங்கிய 732 இளநிலைப் பிரிவுகள் செயல்படுகின்றன. பெண்களுக்கென ஒரு தனிப்பிரிவு உள்ளது.
- தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, தானாக நாட்டு நலனில் அக்கறை கொள்ளுதல், சமூக சேவை செய்யும் மனப்பான்மை போன்ற அரிய பண்புகளை மாணவர்கள் அடைய துணை செய்வதே நாட்டு நலப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்தில் தற்சமயம் 1,300 பிரிவுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- கோயில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி போன்ற சமூக நலச் செயல்பாடுகளை சாரணர் இயக்கம் செய்து வருகிறது. மாநிலத்தில் 4,553 பள்ளிகளில் சாரணர் இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த சாரணர்/சாரணியருக்கு ஒப்பற்ற ராஜ்ய புரஸ்கார் என்ற விருது வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பள்ளிகளில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அந்தந்த மாவட்டத்தின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார்.

### 2.15. ஆசிரியர்களுக்கான மாநில விருது

1960–லிருந்து நல்லாசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' எனும் நல்லாசிரியர் விருதுகள் செப்டம்பர் 5 ஆம் தேதியன்று ஆசிரியர் தின விழாவில் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த 3 ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலை மற்றும்



மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 2 ஆசிரியர்கள் (189+126), மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலிருந்து 6 ஆசிரியர்கள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலிருந்து 2 ஆசிரியர்கள் ஆக மொத்தம் 323 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்படுகிறது. இது தவிர, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரியும் 21 ஆசிரியர்களுக்கும் நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது.

### 2.16. ஆசிரியர்களுக்கான தேசிய விருது

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை, நாடு முழுவதுமுள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களில் 15 ஆசிரியர்களும், சிறப்பு வகை தொடக்கப் பள்ளி (ஊனமுற்றோருக்கான பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் ஊனமுற்ற ஆசிரியர்கள்) ஆசிரியர்களில் 2 ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களில் 7 ஆசிரியர்களும், அவர்களில் சிறப்பு வகையைச் சார்ந்த ஒரு ஆசிரியர் ஆக 25 ஆசிரியர்களுக்கு விருது வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 2.17. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

ஆசிரியர் நலனுக்காக தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

- ❖ கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவச் செலவினை ஈடுகட்டும் தொகையாக அதிகபட்சம் ரூ.50,000/–அல்லது செலவு செய்த தொகையில் 75 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை.
- ❖ பணியில் இருக்கும்போது இயற்கை எய்திடும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு அவர்கள் படிப்பினை முடிக்க உதவியாக ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.6,000/–
- ❖ ஆசிரியர்களின் உடல் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவித் தொகையாக ஒரு நபருக்கு மட்டும் ரூ.10,000/–

[2004 ஜூலை 31

- ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்க ரூ.50,000 கடன்; கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்கு ரூ.10000/- கடன்.
- தொழிற்பட்டப் படிப்பிற்கு ஆண்டுக்கு ரூ.5,000/- மற்றும் பட்டயப் படிப்பிற்கு ரூ.2500/- படிப்பு உதவித் தொகை

### 2.18. பெற்றோர் ஆசிரியர் கழகங்கள்

பெற்றோர்-ஆசிரியரிடையே தொடர்பு மற்றும் கூட்டுறவு, பள்ளியின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், மாணவர் இடைநிற்றலைத் தவிர்த்தல் போன்ற பணிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆசிரியர்களுடன் இணைந்து செயல்படுகிறது. பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு பொது மக்களிடமிருந்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை நன்கொடையாக பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பெறலாம்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி புரவலர் திட்டத்தின்கீழ் பொதுமக்களிடம் குறைந்தது ரூ.1,000/- நன்கொடை பெற்று அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து பள்ளிக்குத் தேவையான வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

## 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

தனியார் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றிருந்தன. இவை யாவும் ஆங்கிலப் பயிற்று மொழி சுயநிதிப் பள்ளிகள் ஆகும். இப்பள்ளிகளின் செயல்பாடுகளை நன்கு கவனிக்கும் பொருட்டு மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கெனத் தனி இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டு, 4-12-2001 முதல் செயல்பட்டு வருகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பாடத் திட்டம், தேர்வு முறை வகுத்தல், செயல்பாடுகள் குறித்து ஆலோசனை நல்குவதற்கென மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின்கீழ் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பாடத் திட்டங்களை மாற்றியமைக்க பாண்டிச்சேரி மைய பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் எ. ஞானம் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மாற்றியமைக்கப்படவுள்ள பாடத் திட்டங்களின் விவரம் வருமாறு:-



2004 ஜூலை 31]

| ஆண்டு | வகுப்புகள் |
|---|---|
| *2005-2006* | L.K.G., U.K.G.,1,2,6 மற்றும் 9ஆம் வகுப்புகள் |
| *2006-2007* | 3,4,7 மற்றும் 10 ஆம் வகுப்புகள் |
| *2007-2008* | 5 மற்றும் 8 ஆம் வகுப்புகள் |

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

நல்ல தரமான ஆசிரியர்களை உருவாக்குவதும், அவர்கள் பணியில் சேர்ந்தபின் நவீன கற்பித்தல் முறைக்கேற்ப பணியிடைப் பயிற்சி அளிப்பதும், பாடம் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி-ஒளி நாடாக்கள் தயாரிப்பதுமே இந்த இயக்ககத்தின் நோக்கமாகும்.

### 4.1. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

இவ்வியக்ககத்தின்கீழ் செயல்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் | 29 |
| அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 9 |
| அரசு நிதியுதவிபெறும் சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 7 |
| அரசு நிதியுதவிபெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 35 |
| அரசு உதவிபெறாத சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 43 |
| அரசு நிதியுதவிபெறாத சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 2 |
| ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 1 |
| மொத்தம் .. | 126 |

[2004 ஜூலை 31

இந்நிறுவனங்களில் ஆண்டொன்றுக்கு மாணவர் சேர்க்கை சுமார் 8,500 ஆகும். இதில் 5,758 இடங்களுக்கான சேர்க்கை ஒற்றைச் சாளர முறைப்படி நிரப்பப்படும். மீதமுள்ள இடங்கள் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும்.

ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையானது ஒற்றைச் சாளர முறையில் நிரப்பப்பட்டு வருகிறது.

அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் நிகழ்வில் மனிதாபிமானத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதலுடன் 15670 மாணவர்களுக்கு கூடுதல் சேர்க்கை இடமளிக்கப்பட்டு இரண்டாண்டுப் பயிற்சி நிறைவடைந்துள்ளது. மீதியுள்ள தகுதியுள்ள மாணவர்களுக்கு 2004–2006–ல் பயிற்சி அளிக்கப்படும்.

### 4.2. அனைவர்க்கும் கல்வி இயக்கம்

தமிழகத்தில் தற்போது அனைவர்க்கும் கல்வி இயக்கமானது அனைத்து மாவட்டங்களிலும் 2001–2002 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நோக்கத்தினை அடைய ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கான பொறுப்பு ஆசிரியர் கல்வி இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒன்றியம்தோறும் வட்டார வள மைய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மூலம் 1–8 வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமந்தோறும் கிராம கல்விக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அக்குழுவின் உறுப்பினர்களுக்கு அனைவர்க்கும் கல்வி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 4.3. கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்

பாடங்கள் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி–ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும். தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், பள்ளி மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒளி நாடாக்கள் தயாரிக்கப்பட்டு சென்னைத்



2004 ஜூலை 31]

தொலைக் காட்சியின் 'காண்போம் – கற்போம்' கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளிகளுக்கு 40 ஒளிநாடா நிகழ்ச்சிகளும் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 10 ஒளிநாடா நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டன. மேலும் இதன் ஒளிநாடாக்கள் 29 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் வட்டார வள ஆதார மையங்கள் மூலமாகவும் ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சியின்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

### 5. பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

வயதுவந்தோரிடையே (15–35) எழுத்தறிவின்மையைப் போக்கி எழுத்தறிவு பெற்றவர்களாக்குவதே வயதுவந்தோர் கல்வி இயக்ககத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கென மாநில அளவில் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ் மாவட்ட எழுத்தறிவுக் குழுமமானது செயல்பட்டு வருகிறது.

**நோக்கங்கள்**

- முழு எழுத்தறிவை எய்துதல்
- வயதுவந்தோர் பள்ளிப் படிப்பில் இடைநின்றோர் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடங்காதவர் அனைவருக்கும் அவர்கள் வாழ்நாள் முடிய கற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துதல்.

### 5.1. எழுத்தறிவு விகிதம்

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, எழுத்தறிவு விகிதத்தை அகில இந்திய அளவுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தின் நிலை வருமாறு:–

| | ஆண் | பெண் | சராசரி விகிதம் |
|---|---|---|---|
| இந்திய அளவில் | 75.85 | 54.16 | 65.38 |
| தமிழகம் | 82.33 | 64.55 | 73.47 |

[2004 ஜூலை 31

### 5.2. வளர் கல்வித் திட்டம்

தமிழகத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் 1991–ல் தொடங்கப்பட்டு, 1999 வரை செயல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொடர் கல்வி இயக்கம் தொடங்கப்பட்டு 2001–ல் முடிவடைந்துள்ளது. முழு எழுத்தறிவு மற்றும் தொடர்கல்வி பெற்றவர்கள் கற்றலினை நிலைநிறுத்துவதற்கென மைய அரசின் உதவியுடன் வளர்கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாசிப்பதற்கென உள்ளூர் செய்தித்தாள்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 23 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 9227 வளர்கல்வி மையங்களும், 1112 வளர்கல்வி ஒருங்கிணைப்பு மையங்களும் செயல்படுகின்றன. மீதியுள்ள 6 மாவட்டங்களுக்கு (கோயம்புத்தூர், திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், நீலகிரி) ரூ.22.31 கோடி அளவில் மைய அரசின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

முழு எழுத்தறிவு இயக்கம், தொடர்கல்வித் திட்டம் மற்றும் வளர்கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட பின்னரும் தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், ஈரோடு, சேலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஆறு மாவட்டங்களில் பெண்கள் எழுத்தறிவு விகிதம் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. எனவே இம்மாவட்டப் பெண்களுக்கென 2004–2005 ஆம் ஆண்டில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 6. அரசுத் தேர்வுகள்

பள்ளிக் கல்விசார்ந்த அரசுத் தேர்வுகள் நடத்துவதற்கென தனி இயக்ககம் 1975–ல் ஏற்படுத்தப்பட்டது. உரிய நேரத்தில் தேர்வுகளை நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிட்டு சான்றிதழ்களை வழங்குவதே அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் நோக்கமாகும். அரசுத் தேர்வு இயக்ககத்தால் 39 வகையான அரசுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இடைநிலைப் பள்ளி பொதுத் தேர்வானது 1911 ஆம் ஆண்டிலிருந்தும், மேல்நிலைப் பள்ளி பொதுத் தேர்வானது 1980 ஆம் ஆண்டிலிருந்தும் நடத்தப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 31]

இவ்வியக்ககத்தால் ஆங்கிலோ–இந்தியன், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பொதுத் தேர்வு, ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் ஓவியம், இசை, தையல் ஆகிய தொழில் தொடர்பான தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. பள்ளி பொதுத் தேர்வில் (10, +2) ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடித் தேர்வும் நடத்தப்படுகிறது. இத்தேர்வின் மூலம் 83005 மாணவர்கள் ஒரு முழு கல்வி ஆண்டு வீணாகாமல், அந்தக் கல்வியாண்டிலேயே மேல் படிப்பினைத் தொடர பயன் அடைந்துள்ளார்கள்.

### 6.1 மார்ச்/ஏப்ரல் 2004 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்வுகளின் ஆய்வு

| தேர்வின் விவரம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| +2 வகுப்பு | 506754 | 386653 | 76.30 |
| எஸ்.எஸ்.எல்.சி | 664900 | 514391 | 77.40 |
| மெட்ரிகுலேஷன் | 85998 | 77360 | 90.00 |
| ஆங்கிலோ—இந்தியன் | 4787 | 4528 | 94.60 |

### ஜூன்/ஜூலை 2003-ல் உடனடி பொதுத் தேர்வு

| தேர்வின் விவரம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| +2 வகுப்பு | 87965 | 44607 | 50.71 |
| எஸ்.எஸ்.எல்.சி. | 100768 | 34799 | 34.53 |
| மெட்ரிகுலேஷன் | 7432 | 3465 | 46.62 |
| ஆங்கிலோ—இந்தியன் | 187 | 134 | 71.66 |

### 6.2. பள்ளிப் பொதுத் தேர்வுகளில் மறைத் தன்மையைக் காக்கவும், ஒளிவு மறைவு ஏதுமின்றி திருத்தும் பணிகள் நடைபெறவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

- மைய மதிப்பீடு முறை செயலாக்குதல்.
- மேல்நிலைப் பள்ளி பொதுத் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணிதம் , வணிகவியல், கணக்குப் பதிவியல் பாடங்களுக்கும் தொழிற் பாடங்களில் பொறியியல் தொடர்புடைய பாடங்களுக்கும் மாற்று எண் (Dummy Numbers) வழங்கப்படுதல். மெட்ரிகுலேஷன் பொதுத் தேர்வில் அனைத்துப் பாடங்களுக்குமான விடைத்தாள்களுக்கு மாற்று எண் வழங்கப்படுதல்.
- மாணவர்கள், தங்களது விடைத்தாள்களின் மதிப்பீடு குறித்து மறு கூட்டலுக்கு விண்ணப்பித்தல் மற்றும் இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய பாடங்களில் மாணவர்கள் எழுதிய விடைத்தாட்களுக்கான நகல்கள் பெறுதல். ஐயப்பாடு ஏற்படும்போது, அவர்கள் விரும்பினால் உரிய கட்டணத்தைச் செலுத்தி மறு மதிப்பீடு கோருதல்.

### 6.3. போலிச் சான்றிதழ் தடுத்தல்

தேர்வர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்களில் போலிச் சான்றிதழ்களைத் தயாரிப்பதைத் தடுக்க நவீன லேசர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அச்சழுத்தம் செய்யப்பட்ட இரகசியக் குறியீடுகள் சான்றிதழ்களில் புகுத்தும் முறை 2003-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் இம்மதிப்பெண் சான்றிதழ்களின் பின்புறம் "இம்மதிப்பெண் சான்றிதழ இப்பள்ளியின் வாயிலாக விநியோகிக்கப்பட்டது" என்று சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியரின் மேலொப்பத்துடன் வழங்கப்படுகிறது.

### 6.4. இயக்கக இணையதளம்

அரசுத் தேர்வு இயக்ககம் நடத்தும் பள்ளித் தேர்வுகளின் விவரங்கள் 2003 முதல் அரசுத் தேர்வுகள் இணையத்தளத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்விணையதளமானது தேர்வு முடிவுகள், மதிப்பெண்கள், தேர்வுகால அறிக்கைகள், அட்டவணைகள் ஆகியற்றை



அளிக்கிறது. மேலும் மாதிரி விண்ணப்பங்கள், கட்டண விகிதங்கள், இரண்டாம்படி சான்றிதழ் மற்றும் சான்றிட்ட மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விதிமுறைகள், முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் போன்றவற்றையும் அளிக்கிறது.

### 6.5. திறனாய்வுத் தேர்வு நடத்துதல்

9 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களிடையே அகில இந்திய அளவிலான தேசியத் திறனாய்வு முதலாம் கட்டத் தேர்வை அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் இரண்டாம் நிலைத் தேர்வு எழுத மாணவர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது. 2003 ஆம் ஆண்டு 290 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளது. தமிழக அரசின் ஊரகப் பகுதிகளில் மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிதல் என்னும் திட்டத்தின்கீழ், 8 ஆம் வகுப்பு மாணவர்களிடையே திறனாய்வுத் தேர்வினை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகளைத் தேர்ந்தெடுத்தும் வருகிறது. தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.1,000/- +2 படிக்கும் வரை அளிக்கப்படுகிறது.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர்/விரிவுரையாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்ய 1988 ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. தகுதியும், திறமையும், பணியில் ஆர்வமும் மிக்க ஆசிரியர்களை வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் பணியே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பொறுப்பாகும்.

### 7.1. எழுத்துத் தேர்வு

அரசுப் பள்ளிகளில் பி.டி. மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் வேலைவாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்று ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் முறை கைவிடப்பட்டு, வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் பொதுவான போட்டி எழுத்துத் தேர்வு மூலமாக, திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் முறை செப்டம்பர் 2001 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 7.2. 2001–2002, 2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய மூன்று ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு ஆசிரியர்களின் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|
| பள்ளி உதவி ஆசிரியர், மொழி ஆசிரியர் (மற்றும் இளநிலை ஆசிரியர் உட்பட) | 773 | 809 | 5391 |
| சத்துணவு அமைப்பாளர்களிலிருந்து பள்ளி உதவி ஆசிரியர்கள் சிறப்பு நியமனம் | | | 218 |
| வட்டாரவள ஆசிரியர்கள் | | 3480 | - |
| முதுகலை ஆசிரியர்கள் (இளநிலை ஆசிரியர்கள் உட்பட) | 611 | 488 | 1387 |
| தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் (வேளாண்மை) | 100 | | - |
| ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்: | | | |
| இளநிலை விரிவுரையாளர்/ உடற்கல்வி ஆசிரியர் | | 444 | 208 |
| மொத்தம் | 1484 | 5221 | 7204 |

### 7.3. தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதுமைகள்

தற்போதைய கணினி யுகத்தின் வளர்ச்சிக்கேற்ப தேர்வின் அனைத்து நிலைகளிலும் ஆசிரியர் தேர்வு வாரியம் கணினியினைப் பயன்படுத்தி வருகிறது. குறியீடுகளைப் பகுத்துணரும் தன்மையுள்ள (Intelligent Character Recognition System) விண்ணப்பப் படிவங்கள் பயன்படுத்துவதன் மூலமாக விவரங்கள் பகுத்துணரவும் சரி பார்க்கப்படுவதன் மூலம் வெளிப்படையாகவும், விரைவாகவும் விவரங்கள் சரிபார்க்கப்படுவதற்கும், தொகுப்பதற்கும் ஏதுவாகிறது. தேர்வுகளைச் சரியாகவும், துல்லியமாகவும், மதிப்பீடு செய்ய ஏதுவாக ஆசிரியர் தேர்வு வாரியம் குறியீட்டு முறையில் விடையளிக்கத் தக்க வினாக்களையும், விடைகளைக் குறிப்பதற்கு ஒளி பகுத்துணரும் (O.M.R.) தன்மையுள்ள விடைத்தாட்களையும் பயன்படுத்தி வருகிறது.





தேர்வு முடிவு பெற்றவுடன் மனுதாரர்கள் தாங்கள் விடையளித்த (O.M.R.) விடைத்தாளின் நகல்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மனுதாரர்கள் தாங்கள் அளித்த விடைகளை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தின் மூலம் வெளியிடப்படும் விடைக் குறிப்புகளிலிருந்து சரிபார்க்க இயலும். இத்தகைய நடவடிக்கைகள், தேர்வு முறைகள் வெளிப்படையாகவும், துல்லியமாகவும், நம்பிக்கைக்கு உகந்த வகையிலும் அமைய வழிவகுத்துள்ளன. மனுதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், சான்றிதழ் சரிபார்த்தலுக்குப் பின் வெளியிடப்படும் இறுதித் தேர்வர் பட்டியல் ஆகியவை இணையதளத்தின் மூலம் வெளியிடப்படுவதன் மூலம் தேர்வினுடைய ஒவ்வொரு நிலையையும் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு ஏதுவாகிறது.

## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

### 8.1. பாடநூல்கள் அச்சடிப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் கீழ்க்குறிப்பிட்ட பாடநூல்கள் மற்றும் கையேடுகளை அச்சடித்து வழங்கி வருகிறது:

- மாநில கல்வி வாரியப் பள்ளிகளில் 1-12 வகுப்புகளுக்கான பாடநூல்கள்
- மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ–இந்திய பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள்
- சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடநூல்கள்; +1,+2 மாணவர்களுக்கு மொழி நூல்கள்
- எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான அறிவியல் தமிழ் பாட நூல்கள்

[2004 ஜூலை 31

- ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைகள் மூலம் நடத்தப்பெறும் பள்ளிகளில் 10 மற்றும் +2 வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் .
- தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்கு வினா வங்கி, மாதிரி வினா ஏடு, கையேடு

2 ஆண்டுகளுக்கு ஒரு முறை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் அச்சகத்தார் தேர்வு செய்யப்படுவதால் புதிய அச்சகத்தார் சேர்க்கப்படுகின்றனர். புத்தக அச்சடித்தலில் தரத்தினை மேம்படுத்த தனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**8.2. பாடநூல்களின் விநியோகம்**

விற்பனைப் பிரதிகளைப் பொறுத்தமட்டில், தமிழ்நாட்டிலுள்ள 42 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பாட நூல்களை 21 வட்டார அலுவலகங்களிலிருந்து பெற்று 1,828 தனியார் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்கின்றன. தமிழ்நாட்டுப் பாட நூல் கழக நிர்வாக அலுவலகத்தில் விற்பனை மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

**8.3. இலவசப் பாடநூல்கள்**

அரசுப் பள்ளிகள், அரசு நிதியுதவிபெறும் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், 6, 7, 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கும் தேவையான இலவசப் பாடநூல்களை பாட நூல் கழகம் அச்சிட்டு வழங்கி வருகிறது. இதற்குண்டான செலவினை, கழகத்திற்கு மாநில அரசு ஈடு செய்கிறது.



2004 ஜூலை 31]

2004-2005 ஆம் கல்வியாண்டிற்கு 406.12 இலட்சம் பிரதிகள் ரூ.4,432.37 இலட்சம் மதிப்பில் கீழ்க்கண்ட விவரப்படி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.—

| துறைகள் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக (1 முதல் 8 வரை) | 317.40 | 2805.42 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாக (1 முதல் 10 வரை) | 38.19 | 688.31 |
| பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை நலம் (6 முதல் 10 வரை) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சமூக நலத் துறை மற்றும் மறுவாழ்வுத் துறை மூலமாக | 50.53 | 938.64 |
| மொத்தம் | 406.12 | 4432.37 |

**8.4. குறிப்பேடுகள்**

பாட நூல்களைப் போலவே குறிப்பேடுகளும் கல்விக்கு உற்ற துணைக் கருவியாகக் கருதப்படுகின்றன. வெளிச்சந்தையில் விற்பதற்கென வழக்கமான குறிப்பேடுகளை தயாரிப்பதுடன் மலிவு விலையில் விற்பதற்கென நல்ல தரமான தாள்களுடன் லேமினேஷன் செய்யப்பட்ட வண்ணமுகப்பு அட்டைகளுடன் கூடிய குறிப்பேடுகளையும் தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம் தயாரிக்கிறது.

[2004 ஜூலை 31

## 9. பொது நூலகங்கள்

### 9.1. புதிய நூலகங்கள் திறத்தல்

மக்கள் தொகை 1000-க்கும் குறைவாக உள்ள கிராமங்களில் அப்பகுதி மக்களின் உதவியோடு பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படுகின்றன. மக்கள் தொகை 1000–5000 உள்ள கிராமங்களில் கிராமப்புற நூலகங்கள் திறக்கப்படுகின்றன. மக்கள் தொகை 5000-க்கும் அதிகமாக உள்ள கிராமங்களில் கிளை நூலகங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மைய நூலகம் உள்ளது.

### 9.2. நடமாடும் நூலகங்கள்

நூலக வசதி இல்லாத பகுதிகளில் நூலகப் பணியினை செயல்படுத்த கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் வசதி செய்து தரப்பட்டுள்ளன.

### தமிழகத்தில் நூலகங்கள்

| | எண்ணிக்கை |
|---|---|
| மாநில மைய நூலகம் | 1 |
| மாவட்ட மைய நூலகங்கள் | 29 |
| கிளை நூலகங்கள் | 1568 |
| நடமாடும் நூலகங்கள் | 12 |
| கிராமப்புற நூலகங்கள் | 1492 |
| பகுதிநேர நூலகங்கள் | 649 |
| மொத்தம் | 3751 |

| | |
|---|---|
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 34,92,326 |
| புத்தகங்கள் எண்ணிக்கை | 5,12,93,763 |
| வாசகர்கள் எண்ணிக்கை | 4,55,94,704 |



2004 ஜூலை 31]

இது தவிர அரசு உதவிபெறும் நூலகங்களும் (உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை, சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் மற்றும் மறைமலையடிகள் நூலகம், சென்னை) செயல்படுகின்றன.

### 9.3. கன்னிமாரா நூலகம்

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ ஏடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியை இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் இந்நூலகமும் ஒன்றாகும். 1956 முதல் இது "யுனஸ்கோ" மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி வெளியீடுகளின் தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது.

### 9.4. மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்

நூலக வரி செலுத்தும் பொதுமக்களுக்கு நூலகப் பணியினை செம்மையுடன் செயல்படுத்த மாவட்டந்தோறும் நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து நூலக வரியினை வசூலிக்கும் பொறுப்பு இவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கும் சொத்து வரியிலிருந்து நூலக வரி வசூல் செய்யப்படுகிறது.

**கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட நூலக வரி வசூல் விவரம் வருமாறு:**

| ஆண்டு | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1999–2000 | : | 1140.14 |
| 2000–2001 | : | 2001.12 |
| 2001–2002 | : | 1630.61 |
| 2002–2003 | : | 2248.00 |
| 2003–2004 | : | 3019.62 |

[2004 ஜுலை 31

### 9.5. நூல்கள் வாங்குதல்

நல்ல பயனுள்ள வாசிப்பிற்கான நூல்களை வழங்கவும், வாசகர்களின் தேவையை நிறைவு செய்யவும் சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் ஆண்டுதோறும் வாங்கப்பட்டு நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நூலக வரியில் சுமார் 25 விழுக்காடு தொகையானது நூல்கள் வாங்க செலவு செய்யப்படுகிறது. இது தவிர மைய அரசின் 11–வது நிதிக் குழுவின் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட ரூ.6.80 கோடி வைப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூலக வரி வசூல் குறைவாக உள்ள மாவட்டங்களில் நூலக வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருக்க பொது நிதியம், 2002–2003–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் வாங்கப்பட்ட தமிழ்/ஆங்கில நூல்களின் எண்ணிக்கை மற்றும் படிகள் பற்றிய விவரம் வருமாறு:

| ஆண்டு | வாங்கப்பட்ட தமிழ் நூல்களின் எண்ணிக்கை | படிகள் | செலவினம் இலட்சத்தில் | வாங்கப்பட்ட ஆங்கில நூல்களின் எண்ணிக்கை | படிகள் | செலவினம் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1999-00 | 1873 | 850 | 320 | 823 | 29 | 92 |
| 2000-01 | 2818 | 850 | 420 | 1868 | 29 | 170 |
| 2001-02 | 3224 | 850 | 475 | 1169 | 29 | 100 |
| 2002-03 | 4138 | 600 | 679 | 1991 | 29 | 220 |
| 2003-04 | 3033 | 600 | 658 | 1579 | 29 | 135 |

### 9.6. நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைத்தல்

மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை அதிகரிக்க நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் (Linkage With Schools) செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் நூலகப் பணியாளர் ஒருவர் 15 நாட்களுக்கு ஒரு முறை இணைக்கப்பட்டுள்ள பள்ளிக்குச் சென்று புத்தகங்கள் வழங்குவார். இத்திட்டத்தின்கீழ் 2,618 பள்ளிகள் பயன்பெறுகின்றன.



2004 ஜுலை 31]

### 9.7. குடிமைப் பணி கல்வி மையங்கள்

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, வங்கிகள், இரயில்வே தேர்வாணையம், மத்திய தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சார்ந்த இளைஞர்கள் பங்கு கொள்ளும் வகையில் "குடிமைப் பணி கல்வி மையங்கள்" கன்னிமாரா பொது நூலகத்திலும், மாவட்ட மைய நூலகங்களிலும் மற்றும் நகராட்சிப் பகுதி நூலகங்களிலும் செயல்பட்டுவருகின்றன.

### 9.8. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்

நூலகங்களுக்குப் படிக்க வரும் வாசகர்கள் காற்றோட்டமான, பரந்த இடவசதியுடன்கூடிய கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1,185 நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 60 இடங்களில் ரூ.2.23 கோடி செலவில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 9.9. செய்தி மடல்

பொது நூலகத் துறை சார்பாக "பொது நூலகச் செய்திமடல்" என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளும் பொது நூலக இயக்ககம் சம்பந்தப்பட்ட பல்வேறு சிறந்த செய்திகளும் இடம் பெற்று வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 9.10. வாசகர் வட்டம்

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள் உள்ளூர் மக்கள் மற்றும் சிந்தனையாளர் ஆகியோரைக் கொண்டு "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், கவியரங்கம், இலக்கியக் கூட்டம் முதலிய பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**9.11. கணிப்பொறி வசதிகள்**

கன்னிமாரா பொது நூலகத்தில் கணினி வசதி மற்றும் இன்டர்நெட் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 17 மாவட்ட மைய நூலகங்களிலும் கணினி வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர வாசகர்களின் பயன்பாட்டிற்காக ஒளிப்பட வசதி மற்றும் தொலைக்காட்சி வசதி மாவட்ட மைய நூலகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 12 மாவட்ட மைய நூலகங்களுக்கு 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கணினி வசதி செய்து தரப்படும்.

**9.12. இராசா இராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்**

கொல்கத்தாவில் உள்ள இராசா இராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு இணை மானியம் அளித்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட இணை மானிய விவரம் வருமாறு:–

| ஆண்டு | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 100.00 |
| 2002-2003 | 150.00 |
| 2003-2004 | 150.00 |

**9.13. நிரந்தர புத்தகக் கண்காட்சி**

சென்னை நகரில் நிரந்தர புத்தகக் கண்காட்சியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20–2–2004 அன்று தொடங்கி வைத்துள்ளார்கள். இக்கண்காட்சியில் பல்வேறு வகைப்பட்ட பதிப்பாளர்களின் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.





**புள்ளி விவரம்**


1 பள்ளி வயதுச் சிறார்கள் மற்றும் சேர்க்கை விவரம் — 2003–2004

2 பல்வகைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை — 2003–2004

3 பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை — 2003–2004 (நிர்வாக வகைப்படி)

4 பள்ளிகளின் எண்ணிக்கை

5 உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1991-1992 முதல் 2003-2004)

6 மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1991-1992 முதல் 2003-2004)

7 உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை விவரம் (நிர்வாக வகைப்படி) (1991–92 முதல் 2003–2004)

8 மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை விவரம் (நிர்வாக வகைப்படி) (1991–92 முதல் 2003–2004)

9 எழுத்தறிவு விகிதம் 1901 முதல் 2001

10 எழுத்தறிவு விகிதம் — 2001— மாவட்டங்களின் நிலை

| 1. பள்ளி வயதுச் சிறார்களின் எண்ணிக்கை மற்றும் சேர்க்கை விவரம் — 2003-2004 | | | | |
|---|---|---|---|---|
| வயது தொகுதி | இனம் | மொத்த எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | மாணவர் சேர்க்கை |
| | | (இலட்சத்தில்) | | (விழுக்காட்டில்) |
| 6 - 11 | ஆண் | 34.45 | 34.10 | 98.98 |
| | பெண் | 32.15 | 31.81 | 98.94 |
| | மொத்தம் | **66.60** | **65.91** | **98.96** |
| 11 - 14 | ஆண் | 19.18 | 18.71 | 97.55 |
| | பெண் | 18.98 | 17.30 | 91.15 |
| | மொத்தம் | **38.16** | **36.01** | **94.37** |
| 14 - 16 | ஆண் | 12.95 | 9.20 | 71.04 |
| | பெண் | 11.98 | 8.40 | 70.12 |
| | மொத்தம் | **24.93** | **17.60** | **70.60** |
| 16 - 18 | ஆண் | 12.63 | 5.08 | 40.22 |
| | பெண் | 12.98 | 5.07 | 39.10 |
| | மொத்தம் | **25.61** | **10.15** | **39.63** |
| 6 - 18 | ஆண் | 79.21 | 67.09 | 84.70 |
| | பெண் | 76.09 | 62.58 | 82.24 |
| | மொத்தம் | **155.30** | **129.67** | **83.49** |



**2. பல்வகைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை 2003-2004 (இலட்சத்தில்)**

| வகுப்பு | இனம் | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **1 - 5** | ஆண் | 21.99 | 6.83 | 2.15 | 3.13 | 34.10 |
| | பெண் | 20.93 | 6.53 | 1.71 | 2.64 | 31.81 |
| | மொத்தம் | **42.92** | **13.36** | **3.86** | **5.77** | **65.91** |
| **6 - 8** | ஆண் | 0.00 | 4.59 | 4.93 | 9.19 | 18.71 |
| | பெண் | 0.00 | 4.42 | 5.14 | 7.74 | 17.30 |
| | மொத்தம் | **0.00** | **9.01** | **10.07** | **16.93** | **36.01** |
| **9 - 10** | ஆண் | 0.00 | 0.00 | 2.44 | 6.76 | 9.20 |
| | பெண் | 0.00 | 0.00 | 2.67 | 5.73 | 8.40 |
| | மொத்தம் | **0.00** | **0.00** | **5.11** | **12.49** | **17.60** |
| **11 - 12** | ஆண் | 0.00 | 0.00 | 0.00 | 5.08 | 5.08 |
| | பெண் | 0.00 | 0.00 | 0.00 | 5.07 | 5.07 |
| | மொத்தம் | **0.00** | **0.00** | **0.00** | **10.15** | **10.15** |
| **1 முதல் 12** | ஆண் | 21.99 | 11.42 | 9.52 | 24.16 | 67.09 |
| | பெண் | 20.93 | 10.95 | 9.52 | 21.18 | 62.58 |
| | மொத்தம் | **42.92** | **22.37** | **19.04** | **45.34** | **129.67** |

**3. பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை 2003-2004 (நிர்வாக வகைப்படி)**

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்தம் | ஆண் | பெண் |
| தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1598 | 1.97 | 6820 | 44493 | 76743 |
| | நகராட்சி/மாநகராட்சி | 1015 | 1.67 | 6831 | | |
| | ஊராட்சி ஒன்றியம் | 24199 | 23.45 | 78660 | | |
| | தனியார் | 5430 | 15.83 | 28925 | | |
| | மொத்தம் | **32242** | **42.92** | **121236** | | |
| நடுநிலைப் பள்ளிகள் | அரசு | 317 | 1.03 | 2683 | 25935 | 34144 |
| | நகராட்சி/மாநகராட்சி | 398 | 1.51 | 5203 | | |
| | ஊராட்சி ஒன்றியம் | 4232 | 10.79 | 29551 | | |
| | தனியார் | 1878 | 9.04 | 22642 | | |
| | மொத்தம் | **6825** | **22.37** | **60079** | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | 1962 | 9.15 | 23297 | 24321 | 43891 |
| | நகராட்சி/மாநகராட்சி | 111 | 0.44 | 1543 | | |
| | உதவிபெறுபவை(தனியார்) | 646 | 3.50 | 7822 | | |
| | தனியார் | 215 | 0.55 | 817 | | |
| | ஆங்கிலோ இந்தியன் | 12 | 0.11 | 253 | | |
| | மெட்ரிகுலேஷன் | 1861 | 4.97 | 33348 | | |
| | மைய அரசு | 52 | 0.32 | 1132 | | |
| | மொத்தம் | **4859** | **19.04** | **68212** | | |
| மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | 1547 | 17.72 | 42796 | 57996 | 81793 |
| | நகராட்சி/மாநகராட்சி | 92 | 1.31 | 4128 | | |
| | உதவிபெறுபவை(தனியார்) | 909 | 13.80 | 33630 | | |
| | உதவி பெறாதவை(தனியார்) | 132 | 0.61 | 1440 | | |
| | ஆங்கிலோ இந்தியன் | 29 | 0.43 | 1157 | | |
| | மெட்ரிகுலேஷன் | 1340 | 10.61 | 53065 | | |
| | மைய அரசு | 87 | 0.86 | 3573 | | |
| | மொத்தம் | **4136** | **45.34** | **139789** | | |
| மொத்தப் பள்ளிகள் | அரசு | 5424 | 29.87 | 75596 | **152745** | **236571** |
| | நகராட்சி/மாநகராட்சி | 1616 | 4.93 | 17705 | | |
| | ஊராட்சி ஒன்றியம் | 28431 | 34.24 | 108211 | | |
| | தனியார் | 9210 | 43.33 | 95276 | | |
| | ஆங்கிலோ இந்தியன் | 41 | 0.54 | 1410 | | |
| | மெட்ரிகுலேஷன் | 3201 | 15.58 | 86413 | | |
| | மைய அரசு | 139 | 1.18 | 4705 | | |
| | பெரு மொத்தம் | **48062** | **129.67** | **389316** | | |

| | |
|---|---|
| மாணவர்கள் | 6722681 |
| மாணவிகள் | 6244641 |
| மொத்தம் | **12967322** |

## 4. பள்ளிகளின் எண்ணிக்கை – 1998–99 – 2003–2004

| பள்ளிகளின் வகை | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 30844 | 31052 | 31142 | 31488 | 31678 | 32242 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5538 | 5640 | 5703 | 5809 | 6383 | 6825 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 4208 | 4551 | 4500 | 4836 | 5028 | 4859 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 3149 | 3292 | 3439 | 3473 | 4109 | 4136 |
| **மொத்தம்** | **43739** | **44535** | **44784** | **45606** | **47198** | **48062** |

## 5. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1991–92 முதல் 2003–2004)

| ஆண்டு | மாநிலப் பள்ளிகள் | | | | | மெட்ரி- குலேஷன் | ஆங்கிலோ – இந்தியன் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் உதவி பெறுபவை | தனியார் உதவி பெறாதவை | மொத்தம் | | | | | |
| 1991-92 | 1872 | 83 | 352 | 66 | 2373 | 684 | 13 | 93 | 790 | 3163 |
| 1992-93 | 1883 | 83 | 346 | 84 | 2396 | 709 | 13 | 85 | 807 | 3203 |
| 1993-94 | 1889 | 83 | 346 | 94 | 2412 | 759 | 13 | 86 | 858 | 3270 |
| 1994-95 | 1902 | 83 | 332 | 121 | 2438 | 806 | 13 | 83 | 902 | 3340 |
| 1995-96 | 1915 | 87 | 304 | 139 | 2445 | 885 | 12 | 75 | 972 | 3417 |
| 1996-97 | 1932 | 88 | 304 | 140 | 2464 | 1032 | 12 | 66 | 1110 | 3574 |
| 1997-98 | 1917 | 94 | 294 | 144 | 2449 | 1245 | 12 | 59 | 1316 | 3765 |
| 1998-99 | 1986 | 94 | 626 | 96 | 2802 | 1335 | 12 | 59 | 1406 | 4208 |
| 1999-2000 | 2006 | 103 | 626 | 104 | 2839 | 1641 | 12 | 59 | 1712 | 4551 |
| 2000-2001 | 2002 | 112 | 610 | 135 | 2859 | 1564 | 12 | 65 | 1641 | 4500 |
| 2001-2002 | 1981 | 108 | 646 | 179 | 2914 | 1910 | 12 | 67 | 1989 | 4903 |
| 2002-2003 | 1964 | 109 | 646 | 186 | 2905 | 2059 | 12 | 52 | 2123 | 5028 |
| 2003-2004 | 1962 | 111 | 646 | 215 | 2934 | 1861 | 12 | 52 | 1925 | 4859 |

## 6. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) 1991–92 முதல் 2003–2004

| ஆண்டு | மாநிலப் பள்ளிகள் | | | | | மெட்ரி-குலேஷன் | ஆங்கிலோ-இந்தியன் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் | | மொத்தம் | | | | | |
| | | | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | | | | | | |
| 1991-92 | 869 | 68 | 674 | 88 | 1699 | 276 | 28 | 81 | 385 | 2084 |
| 1992-93 | 879 | 68 | 674 | 94 | 1715 | 338 | 28 | 84 | 450 | 2165 |
| 1993-94 | 891 | 68 | 674 | 98 | 1731 | 373 | 28 | 89 | 490 | 2221 |
| 1994-95 | 903 | 68 | 674 | 112 | 1757 | 440 | 28 | 93 | 561 | 2318 |
| 1995-96 | 932 | 69 | 674 | 140 | 1815 | 540 | 29 | 106 | 675 | 2490 |
| 1996-97 | 1012 | 70 | 674 | 155 | 1911 | 668 | 29 | 126 | 823 | 2734 |
| 1997-98 | 1087 | 75 | 674 | 183 | 2019 | 792 | 29 | 135 | 956 | 2975 |
| 1998-99 | 1157 | 78 | 869 | 29 | 2133 | 852 | 29 | 135 | 1016 | 3149 |
| 1999-2000 | 1206 | 80 | 884 | 46 | 2216 | 912 | 29 | 135 | 1076 | 3292 |
| 2000-2001 | 1258 | 81 | 909 | 68 | 2316 | 959 | 29 | 135 | 1123 | 3439 |
| 2001-2002 | 1374 | 90 | 909 | 74 | 2447 | 997 | 29 | 135 | 1161 | 3608 |
| 2002-2003 | 1507 | 92 | 909 | 94 | 2602 | 1391 | 29 | 87 | 1507 | 4109 |
| 2003-2004 | 1547 | 92 | 909 | 132 | 2680 | 1340 | 29 | 87 | 1456 | 4136 |



## 7. உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை விவரம் (1991–92 முதல் 2003–2004)

| ஆண்டு | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் பள்ளிகள் | | மெட்ரி குலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | | | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1991-92 | 973280 | 64844 | 326122 | 43193 | 179240 | 11907 | 49981 | 917226 | 731341 | 1648567 |
| 1992-93 | 1040346 | 68492 | 320942 | 52697 | 196001 | 12948 | 46061 | 961884 | 775603 | 1737487 |
| 1993-94 | 991113 | 72654 | 350297 | 57168 | 257796 | 13464 | 45664 | 999350 | 788806 | 1788156 |
| 1994-95 | 1074851 | 77106 | 345784 | 78964 | 271205 | 14033 | 46163 | 1043600 | 864506 | 1908106 |
| 1995-96 | 1113752 | 78993 | 331828 | 89367 | 337050 | 13309 | 48138 | 1094272 | 918165 | 2012437 |
| 1996-97 | 1141026 | 80972 | 340934 | 91555 | 351841 | 13374 | 48136 | 1121458 | 946380 | 2067838 |
| 1997-98 | 1128451 | 80097 | 337279 | 90559 | 226108 | 13910 | 49015 | 1126388 | 799031 | 1925419 |
| 1998-99 | 879479 | 64204 | 314213 | 234441 | 478527 | 11189 | 49804 | 1011712 | 1020145 | 2031857 |
| 1999-2000 | 923868 | 42813 | 319797 | 71063 | 436869 | 10235 | 51020 | 933317 | 922348 | 1855665 |
| 2000-2001 | 963629 | 49583 | 336548 | 30632 | 455849 | 10271 | 39975 | 974529 | 911958 | 1886487 |
| 2001-2002 | 978461 | 46605 | 339244 | 32059 | 149894 | 10414 | 30759 | 755119 | 832317 | 1587436 |
| 2002-2003 | 913858 | 50572 | 365904 | 49689 | 473471 | 10503 | 32039 | 939151 | 956885 | 1896036 |
| 2003-2004 | 915051 | 44153 | 350486 | 54922 | 496842 | 10568 | 32476 | 965030 | 939468 | 1904498 |

**8. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை விவரம் (1991–92 முதல் 2003–2004) நிர்வாக வகைப்படி (1 முதல் 12 வரை).**

| ஆண்டு | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் பள்ளிகள் | | மெட்ரி-குலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | | | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1991-92 | 1069193 | 170013 | 956608 | 48200 | 145411 | 38634 | 88231 | 1537916 | 1077685 | 2615601 |
| 1992-93 | 1144217 | 171422 | 967155 | 60531 | 169619 | 43429 | 91128 | 1576720 | 1086102 | 2662822 |
| 1993-94 | 1106472 | 185283 | 1000736 | 66155 | 137686 | 43539 | 96678 | 1682882 | 1091028 | 2773910 |
| 1994-95 | 1191341 | 193536 | 1028350 | 82780 | 247277 | 43849 | 97768 | 1732582 | 1223554 | 2956136 |
| 1995-96 | 1233872 | 193932 | 1037863 | 101575 | 330685 | 44212 | 110164 | 1830498 | 1311248 | 3141746 |
| 1996-97 | 1276876 | 200686 | 1074010 | 105113 | 345836 | 46040 | 115192 | 1891016 | 1372244 | 3263260 |
| 1997-98 | 1324146 | 208259 | 1114704 | 109083 | 397936 | 46970 | 118712 | 1758817 | 1449448 | 3208265 |
| 1998-99 | 1272105 | 83038 | 1197539 | 91965 | 528778 | 46719 | 143356 | 1831556 | 1568766 | 3400322 |
| 1999-2000 | 1416047 | 130522 | 1110242 | 24658 | 423308 | 45005 | 171847 | 1837179 | 1566259 | 3403438 |
| 2000-2001 | 1422532 | 88264 | 1212171 | 40311 | 466477 | 42432 | 106480 | 1913664 | 1674749 | 3588413 |
| 2001-2002 | 1509743 | 119407 | 1298688 | 45186 | 330562 | 43562 | 101846 | 2029706 | 1708482 | 3738188 |
| 2002-2003 | 1711340 | 130551 | 1365786 | 54541 | 978051 | 42763 | 84423 | 2319412 | 2048043 | 4367455 |
| 2003-2004 | 1772481 | 130852 | 1380338 | 60840 | 1060612 | 42800 | 85691 | 2416586 | 2117028 | 4533614 |

**9. எழுத்தறிவு விகிதம் 1901 முதல் 2001**

| ஆண்டு | அகில இந்திய விகிதம் (சதவீதத்தில்) | | | தமிழ்நாடு விகிதம் (சதவீதத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | நபர் | ஆண் | பெண் | நபர் |
| **1901** | 9.80 | 0.60 | 5.30 | 14.10 | 1.00 | 7.60 |
| **1911** | 10.60 | 1.10 | 5.90 | 17.10 | 1.50 | 9.20 |
| **1921** | 12.20 | 1.80 | 7.20 | 18.60 | 2.40 | 10.40 |
| **1931** | 15.60 | 2.90 | 9.50 | 20.00 | 2.90 | 11.30 |
| **1941** | 24.90 | 7.30 | 16.10 | 25.60 | 6.90 | 16.20 |
| **1951** | 27.16 | 8.86 | 18.33 | 31.70 | 10.10 | 20.80 |
| **1961** | 40.40 | 15.34 | 28.31 | 51.59 | 21.06 | 36.39 |
| **1971** | 45.95 | 21.97 | 34.45 | 59.54 | 30.92 | 45.40 |
| **1981** | 56.37 | 29.75 | 43.56 | 68.05 | 40.43 | 54.39 |
| **1991** | 64.13 | 39.29 | 52.21 | 73.05 | 51.33 | 62.66 |
| **2001** | 79.56 | 54.28 | 65.38 | 82.33 | 64.55 | 73.47 |

*குறிப்பு:– 1961 மற்றும் 1971 விகிதமானது 5 வயது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகைக் கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும். 1981–லிருந்து 2001 வரையிலான விகிதமானது, 7 வயது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகைக் கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும்.*

*ஆதாரம்:– அகில இந்திய மக்கட்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை 2001*

**10. எழுத்தறிவு விகிதம்-2001**
**(மாவட்டங்களின் நிலை)**

| மாவட்டம் | | எழுத்தறிவு விகிதம் | | |
|---|---|---|---|---|
| மாநில எழுத்தறிவு விகிதம் | | நபர் | ஆண் | பெண் |
| | | **73.47** | **82.33** | **64.55** |
| 1 | கன்னியாகுமரி | 88.11 | 90.88 | 85.38 |
| 2 | தூத்துக்குடி | 81.96 | 88.66 | 75.64 |
| 3 | சென்னை | 80.14 | 84.71 | 75.32 |
| 4 | நீலகிரி | 81.44 | 89.63 | 73.39 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 79.16 | 87.16 | 71.19 |
| 6 | காஞ்சிபுரம் | 77.61 | 84.82 | 70.21 |
| 7 | மதுரை | 78.65 | 87.24 | 69.93 |
| 8 | கோயம்புத்தூர் | 76.95 | 83.82 | 69.80 |
| 9 | திருநெல்வேலி | 76.97 | 85.89 | 68.50 |
| 10 | திருவாரூர் | 76.90 | 85.59 | 68.36 |
| 11 | நாகப்பட்டினம் | 76.89 | 85.61 | 68.35 |
| 12 | திருவள்ளூர் | 76.54 | 84.62 | 68.23 |
| 13 | தஞ்சாவூர் | 76.07 | 85.45 | 66.95 |
| 14 | விருதுநகர் | 74.23 | 84.56 | 64.09 |
| 15 | இராமநாதபுரம் | 73.05 | 82.96 | 63.55 |
| 16 | வேலூர் | 73.07 | 82.67 | 63.53 |
| 17 | சிவகங்கை | 72.66 | 83.70 | 62.12 |
| 18 | தேனி | 72.01 | 82.50 | 61.41 |
| 19 | புதுக்கோட்டை | 71.96 | 83.22 | 60.94 |
| 20 | கடலூர் | 71.85 | 82.76 | 60.85 |
| 21 | திண்டுக்கல் | 69.83 | 80.29 | 59.30 |
| 22 | கரூர் | 68.74 | 80.42 | 57.30 |
| 23 | நாமக்கல் | 67.66 | 78.02 | 57.04 |
| 24 | திருவண்ணாமலை | 68.22 | 80.14 | 56.31 |
| 25 | சேலம் | 65.72 | 75.25 | 55.61 |
| 26 | ஈரோடு | 65.51 | 75.49 | 55.26 |
| 27 | பெரம்பலூர் | 65.88 | 77.68 | 54.26 |
| 28 | விழுப்புரம் | 64.68 | 76.02 | 53.16 |
| 29 | தருமபுரி | 59.23 | 68.82 | 49.10 |



# இணைப்பு X

*(81 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 33 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**முகவுரை**

மாநிலத்தில் பெருகி வரும் நகர்ப்புற மக்கட்தொகையால் குடிமைப் பணிகளை உயர்ந்த அளவில் நிறைவேற்றிக் கொடுப்பதும், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதும், அரசுக்குப் பொறுப்பாய் அமைகிறது. நகரங்களின் வளர்ச்சிகளைத் தவிர, பெருகிவரும் மக்கட்தொகையால் சுற்றுப்புறத் தூய்மை கெடாமல் பாதுகாக்கவும், குடிசைப் பகுதிகள் மேலும் வளராவண்ணம் தடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புறத்தில் வாழும் மக்களின் அதிக எதிர்பார்ப்பும் இச்சவாலுக்கு ஒரு காரணமாகத் திகழ்கிறது. நகர்ப்புறங்களில் நல்ல சுற்றுப்புறச் சூழலை ஏற்படுத்துவதும், பொதுச் சுகாதாரத்தை பராமரிப்பதும் முக்கிய குடிமைப் பணிகளை அளிப்பதில் ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவைப்படுகிறது. இந்நோக்கத்தின்படி, இந்த அரசு நகர்ப்புறப் பகுதிகளுக்கு அதிக அளவில் நிதி முதலீடு செய்து, பல்வேறு திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதன் மூலம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நகர்ப்புறங்களில் மேம்பட்ட உள்கட்டமைப்பினையும், சேவையையும் அளிப்பதற்குத் திட்டமிடுதல், நிறைவேற்றுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொறுப்பாகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை மதிப்புடன் உயர்த்த இத்துறையின் குறிக்கோள் பின்வருமாறு:-

***நகர்ப்புறங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்***
***(மற்றும்)***
***நகர்ப்புற வறுமையைக் குறைத்தல்.***

## I. நகராட்சி நிர்வாகம்

*1. 2001 ஆம் ஆண்டில் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கட்தொகை 621.08 இலட்சமாகும். இது நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 6-வது இடத்தினையும், மொத்தத்தில் 6.1 சதவீதம் மக்கட்தொகையைக் கொண்டதாகவும் உள்ளது. நகர்ப்புற மக்கட்தொகையில் 272.41 இலட்சம் என்பது மாநில அளவில் 43.9 சதவீதமாகும். இது இந்தியாவில் அதிகபட்ச நகர்ப்புற மக்கட்தொகை கொண்ட மாநிலங்களில் ஒன்றாகும். 1981-1991 வரையுள்ள 10 ஆண்டுகளில் 19.5 சதவீதமாக இருந்த நகர்ப்புற மக்கட்தொகை 1991-2001 வரையுள்ள அடுத்த 10 ஆண்டுகளில் 42.8 சதவீதமாக வளர்ச்சி அடைந்துள்ளது.*

*2. 14-06-2004 வரையிலான காலத்தில், 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகள் இயங்கி வந்தன. 611 பேரூராட்சிகளும் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கட்தொகைக்கு அடிப்படை வசதிகள் செய்து வந்தன. பெரும்பாலான பேரூராட்சிகள் நலிவடைந்த நிலையிலும் ஊராட்சியின் தரத்திலும் இருந்தன. பேரூராட்சிகளின் நிதி நிலையினை மேம்படுத்தவும், மத்திய அரசு மற்றும் இதர நிதி ஆதார அமைப்புகளிடமிருந்து கிராமப்புற மேம்பாட்டிற்கு பங்குத் தொகையினைப் பெறும்பொருட்டு 30,000 மக்கட்தொகைக்குக் குறைவாக உள்ள பேரூராட்சிகளை கிராமப் பஞ்சாயத்துக்களாக வகைப்படுத்தி ஆணையிட்டுள்ளது. இதன்படி 611 பேரூராட்சிகளில், 566 பேரூராட்சிகளை கிராமப் பஞ்சாயத்துக்களாக ஆக்க அரசு முடிவெடுத்து, 14-06-2004 அன்று அவ்வாறே ஆணைகள் வெளியிட்டது. மேலும் 14-06-2004 முதல் இதர 45 பேரூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920-ல் தகுந்த சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.*

*3. இதன் பின்னர், 2001 ஆம் ஆண்டு இறுதி மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி 30,000-க்கு மேல் மக்கட்தொகை கொண்ட 4 கிராமப் பஞ்சாயத்துக்கள் கண்டறியப்பட்டு அவை மூன்றாம் நிலை நகராட்சிகளாக 05-07-2004 முதல் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி 49 மூன்றாம் நிலை நகராட்சிகள் (முன்பு பேரூராட்சிகள்) தற்போது மாநிலத்தில் உள்ளன. இந்நகராட்சிகளில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக்குரிய கட்டமைப்புகளையும் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்த அரசு உறுதி பூண்டுள்ளது.*





**மாநிலத்தின் நிலைவாரியான நகராட்சிகள் வருமாறு.**

| வரிசை எண். | நிலை | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 13 |
| 2 | தேர்வு நிலை | 28 |
| 3 | முதல் நிலை | 36 |
| 4 | இரண்டாம் நிலை | 25 |
| 5 | மூன்றாம் நிலை | 49 |
| | மொத்தம் | 151 |

| | |
|---|---|
| அரசுக் கட்டடங்கள் | 7,647 |
| தனியார் குடியிருப்புகள், கல்வி நிலையங்கள் மற்றும் வணிக வளாகக் கட்டடங்கள் | 23,15,520 |
| நீர் நிலை ஆதாரங்கள் | 36,977 |
| சாலையோரங்கள் | 2,546 |
| நடை பாதைகள் | 99 |

### பார்வைத் திட்டம்

உள்ளாட்சி அமைப்புகள் செய்து வரும் சேவைகளை நல்ல தரமான சேவையாக அளித்திடவும், நல்லாட்சி செய்திடவும் வேண்டி, கடந்த 10 வருடங்களாக அரசு பல சீர்திருத்தங்களை செயல்படுத்தியுள்ளது.

இரண்டாவது மாநில நிதி ஆணையம் (2001) முக்கியமான துறைகளின் தேவைகளை ஆய்வு செய்து 2002-2007 ஆம் ஆண்டிற்குள் சேவைப் பணிகளில் செய்யத் தேவைப்படும் நிதி விவரங்கள் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளன:—

(ரூபாய் கோடியில்)

| சேவை | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 506.20 | 673.38 | 1409.41 | 2588.99 |
| கழிவு நீர்/ சுகாதாரம் | 409.34 | 391.28 | 41.67 | 842.29 |
| சாலைகள் | 310.81 | 204.37 | 406.51 | 921.69 |
| மழை நீர் வடிகால் | 747.94 | 1101.63 | 684.47 | 2534.04 |
| தெரு விளக்குகள் | 43.19 | 43.58 | 125.50 | 212.27 |
| திடக்கழிவு மேலாண்மை | 115.95 | 33.75 | 20.48 | 170.18 |
| மற்றவை | 341.68 | 231.03 | 282.91 | 855.62 |
| **மொத்தம்** | **2475.11** | **2679.02** | **2970.95** | **8125.08** |

இதே போன்ற இரண்டாவது மாநில நிதி ஆணையத்தால் அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவில் உள்ள முக்கியத் துறைகளில் 2002-2007 ஆம் ஆண்டு வரை தேவைப்படும் நிதி கணிக்கப்பட்டு அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

| சேவை | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொது நிர்வாகம் | 366.27 | 374.28 | 206.88 | 947.43 |
| சாலைப் பணிகள் | 761.47 | 329.75 | 123.01 | 1214.23 |
| பொதுச் சுகாதாரம்/ துப்புரவு | 264.02 | 202.80 | 133.50 | 600.32 |
| சுகாதாரம்/ வடிகால் | 179.96 | 51.81 | -- | 231.77 |
| தெரு விளக்குகள் | 271.90 | 221.70 | 210.89 | 704.49 |
| குடிநீர் | 218.40 | 289.27 | 239.96 | 747.63 |
| பல்வகை | 97.36 | 82.34 | 153.41 | 333.11 |
| புதிய திட்டங் களுக்கான அமைப்பு மற்றும் செயல்முறை | 122.73 | 107.55 | 144.94 | 375.22 |
| நகரமைப்பு | 4.64 | 3.65 | -- | 8.29 |
| கல்வி | 61.91 | 14.64 | -- | 76.55 |
| மொத்தம் | **2348.66** | **1677.79** | **1212.59** | **5239.04** |

5. மேற்கண்ட அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு அடுத்த 5 ஆண்டுகளில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மேற்கொள்ளுவதற்கான பார்வைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பார்வையானது நகர அமைப்புகளில் வாழும் மக்களின் தரத்தினை கீழ்க்கண்டவற்றின் மூலம் மேம்படுத்த உதவுகிறது:

1. பொருளாதார நிலைநாட்டல்

2. நிரந்தர மற்றும் நம்பிக்கையான சேவைகள்

3. குடிமக்களின் திருப்தி



கீழ்க்கண்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்:

1. திடக்கழிவில் திறமையான மேலாண்மை

2. ஏற்றுக்கொள்ளக்கூடிய செலவில் நல்ல கல்வி

3. குறைந்த செலவில் சுகாதாரப் பராமரிப்பு

4. பாதுகாக்கப்பட்ட மற்றும் தேவையான நீர்

5. நல்ல முறையில் சேவைகள்

6. மாசுபடாத சுற்றுச்சூழல் ஏற்படுத்துதல் - நகரங்களில் பசுமை

7. நல்ல சாலைகள் மற்றும் பாதுகாப்பு.

6. உள்ளாட்சி அமைப்புக்களில் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட மற்றும் அது தொடர்பான இதர சேவைகள் பார்வைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும், அதிக நிதி தேவைப்படும் எனக் கருத்திற்கொண்டு இது இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. உடனடியாக கவனிப்பு தேவைப்படும் முக்கிய பகுதி I- ல் துறைகள் பின்வருமாறு:-

1. திடக்கழிவு மேலாண்மை

2. குடிநீர் வழங்கல்

3. தெருவிளக்குகள்

4. கல்வி மற்றும் கணினி உதவியுடன்கூடிய கல்வி

5. சிறந்த சுகாதாரப் பராமரிப்பு சேவைகள்

6. பேருந்து நிலையங்கள் மற்றும் நிழற்குடைகளை மேம்படுத்துதல்

7. அங்காடிகள் இடங்கள் போன்றவை.

7. பகுதி 1 குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டியதாகும். இப்பணிகள் மார்ச் 2006-க்குள் முடிக்கப்படும். நீண்ட காலத் திட்டங்கள் மற்றும் நீண்ட காலத் தேவைக்கான திட்டங்கள் பகுதி 2-ல் அடங்கும். இப்பணிகள் இக்காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நடைபெறும். இப்பார்வைத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.4,554.65 கோடி. அதில் பகுதி 1-க்கான மதிப்பீடு ரூ.2351.14 கோடியாகும். இத்திட்ட

[2004 ஜூலை 31

அமலாக்கமானது, பொதுமக்கள் மற்றும் தனியார் பங்கேற்கும் ஒரு வெளிப்படையானதும், சமூகத் தணிக்கைக்கு உட்பட்ட திட்டமுமாகும்.

இப்பார்வைத் திட்டம் கீழ்க்கண்ட நிதி ஆதாரங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்:

1. சொந்த நிதி

2. அரசு மானியம்

3. நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்குதல்

4. பொதுமக்கள் பங்குத் தொகை மற்றும் பொறுப்பேற்றல்

5. மாநில நிதிப் பகிர்வு

8. விரிவான திட்ட அறிக்கைகள் மற்றும் திட்டச் செலவு அறிக்கைகள் தயாரிக்கும் பணி ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் துவக்கப்பட்டவுடன், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நடைமுறையிலுள்ள திட்டங்களுடன் இணைக்கப்பட்டு எவ்வித இடையூறும் இல்லாமல் செயல்படுத்தப்படும்.

மேலும், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் கீழ்க்கண்ட முறைகளைத் துவக்கி நிர்வாகத் திறனை முடுக்கிவிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது—

1. மேம்படுத்தப்பட்ட மக்கள் சாதனம்

2. ஒளிவுமறைவற்ற நிர்வாகம்

3. இணையதளம் அமைத்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் குறைதீர்க்கும் அமைப்பு ஏற்படுத்துதல் மற்றும்

4. சுகாதாரம் மற்றும் துப்புரவு பற்றிய தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.

**திடக்கழிவு மேலாண்மை:**

9. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையின் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகராட்சித் திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி 2000



2004 ஜூலை 31]

என்ற விதியை உருவாக்கியுள்ளது. பிறவற்றிற்கிடையில், இவ்விதிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் நடைமுறைப்படுத்த நகராட்சி அதிகாரிகள் பொறுப்பாவர்.

10. மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம் சுற்றுச்சூழல் மேம்படுத்தலைத் தெளிவாக வற்புறுத்துகிறது. நகர்ப்புறங்களில் சராசரியாக ஒருவருக்கு 300 கிராம் முதல் 700 கிராம் வரையிலும், நகராட்சிகளில் சராசரியாக ஒரு நாளைக்கு 9000 முதல் 10000 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. நகராட்சிகளிலுள்ள மொத்தம் 3392 வார்டுகளில், 2314 வார்டுகளில் சேகரிக்கும் நிலையிலேயே குப்பை தரம் பிரிக்கப்படுகிறது. மேலும் 2900 வார்டுகளில் வீடு வீடாகச் சென்று குப்பை சேகரிக்கப்படுகிறது. 100 சதவீதம் குப்பைக் கழிவுகளை சேகரிக்கும் இடங்களிலேயே தரம் பிரித்தல், சேகரிக்கப்படும் குப்பைக் கழிவுகளை விஞ்ஞான முறையில் அழித்தல், இதன் மூலம் நகரைக் குப்பையில்லா நகரமாக மாற்றுதல் ஆகிய இலக்காகும். பேருந்து நிலையங்கள், அங்காடிகள் மற்றும் முக்கியமான இடங்களில் சேரும் குப்பைகள் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11. உள்ளாட்சி நிறுவனங்கள் திடக்கழிவு மேலாண்மையைக் கையாளுவதில் போதிய பணியாளர் இன்மை, குப்பை அகற்றும் வாகனங்களின் பற்றாக்குறை, நவீனமயமாக்கமின்மை, போதுமான உரக் கிடங்குகள் இல்லாமை, தொழிலாளர் பிரச்சினைகள் ஆகியவற்றினை எதிர்கொள்வதால் குப்பைகளை சேகரிக்கும் பணி 60 சதவீதம் முதல் 70 சதவீதம் அளவிலேயே உள்ளது. இக்குறைகளை நீக்க இப்பணியினைத் தனியார்மயமாக்க அரசு கவனம் செலுத்துகிறது. திடக்கழிவு மேலாண்மையைத் தனியார்மயமாக்குவது ஓரளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

12. நகராட்சிகளில் உரக்கிடங்கு அமைப்பதற்கு முக்கியமாக நிலம் தேவை என்பதாலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை பற்றாக்குறையாக உள்ள நிலையில் உள்ளதாலும், 49 நகராட்சிகளில் உரக்கிடங்கிற்கான நிலம் வாங்குவதற்கு ரூ. 3.25 கோடியை அரசு வழங்கியுள்ளது. இதுவரை 12 நகராட்சிகள் நிலம் வாங்கியுள்ளன. மற்ற நகராட்சிகளில் இப்பணியினைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*13. 40 நகராட்சிகளில் நிலம் வாங்க ரூ.150 இலட்சம் 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டம் மூலம் வழங்கப்படும். இதில் 25 விழுக்காடுகள் மானியமாகும்.*

*14. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே உள்ள உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக அரசு மாநில நிதிக் குழு மானியத்தின் ஒரு பகுதியான சமன்பாடு நிதியின் மூலம் ரூ.448 இலட்சம் 62 நகராட்சிகளுக்கும், ரூ.408 இலட்சம் 5 மாநகராட்சிகளுக்கும் கடந்த 2004 ஆம் ஆண்டு வழங்கியது. இத்தொகை நடப்பு ஆண்டில் பயன்படுத்தப்பட உள்ளது.*

*15. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் உள்ள உள் கட்டமைப்புகளை மேம்படுத்த சென்னைப் பெருநகரைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளுக்கு ரூ. 600 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.*

*16. இம்மாநிலத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் சேகரம் செய்யும் கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே பிரித்தல் மற்றும் குப்பை இல்லா நிலை ஆகியவற்றுக்காக பெரிய அளவில் விழிப்புணர்வு மூலம் சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலாக உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2-ன்கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பிரிவில் பணிபுரியும் சுகாதார அலுவலர்/சுகாதார ஆய்வாளர்/நகர் நல அலுவலர் ஆகிய களப் பணியாளர்களுக்கு திடக்கழிவு சம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*

*2004-2005 ஆம் ஆண்டில், சுயஉதவிக் குழுக்கள் மூலம், உரக்கிடங்குகளில் தரம் பிரிக்க முடியாத கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**அடிப்படை வசதிகள் திட்டம்:**

*17. குறைந்த வருவாய் உள்ள நகராட்சிகளின் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்ய அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது. இதன் மூலம் குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் அமைத்தல், புதிய சாலை அமைத்தல் மற்றும் சாலைப் பராமரிப்புப் பணி ஆகிய அடிப்படை வசதிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும். நலிவடைந்த நகராட்சிகள் இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் நடப்பாண்டில் பயனடையும்.*

**மின்னணு ஆளுகை:**

*18. பொதுமக்களுக்கு சேவைப் பணிகளை விரைவாகவும், திறமையுடனும் செயல்படுத்த அனைத்து மாநகராட்சி/நகராட்சிகளில்*



*தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-2-ன்கீழ் கணினிகள் வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. கணிப்பொறி சேவைகள் மற்றும் இயக்குதலுக்காகவும், நுகர்வோர் பயன்பாட்டிற்காகவும், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் கணினிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*19. நகராட்சியின் அன்றாட செயற்பாடுகளைக் கணினி மூலம் செயல்படுத்த 18 வகையான கணினி மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை பிறப்பு மற்றும் இறப்புச் சான்று வழங்குதல், சொத்து வரி வசூலித்தல், குடிநீர்க் கட்டணம் வசூலித்தல், நிதிக் கணக்கீட்டு முறை, வரியில்லாத இனங்கள் வசூல், தொழில் உரிமங்கள் வழங்குதல், கட்டட வரைபட ஒப்புதல் மற்றும் இதர பணிகளாகும். 18 வகையான மென்பொருள்களில், 14 வகையான பிரதான மென்பொருள்கள் அனைத்து நகராட்சிகளிலும்/ மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சிய மென்பொருள்கள் நடப்பாண்டில் உபயோகத்திற்குக் கொண்டு வரப்படும். இது நிர்வாகத்தினை மேம்படுத்தவும், நிர்வாகத்தில் ஒளிவு மறைவற்ற நடைமுறையைக் கொண்டு வர உதவும்.*

*20. நவம்பர் 2003-ல் அனைத்து மாநகராட்சிகள்/நகராட்சிகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகியவற்றிற்குக் கூடுதலாகக் கணினிகள், மென்பொருள்கள் மற்றும் கணினி உதிரிப் பாகங்கள் ரூ.17.00 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இவற்றினை நிறுவி செயலாக்கும் பணி மார்ச் 2004-ல் முடிக்கப்பட்டுள்ளது.*

*21. சேவை மையங்கள் மற்றும் வங்கிகள் மூலம் குடிமக்களுக்கான சேவைகள் தற்போது 3 மாநகராட்சிகளிலும், 87 நகராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ளன. இது 2 மாநகராட்சிகள் மற்றும் 15 நகராட்சிகளில் அமல்படுத்தும் தறுவாயில் உள்ளது. இப்பணி 2004-2005-ல் முழுமையாக நிறைவேற்றப்படும். அடுத்த கட்டமாக 2004-2005 ஆம் ஆண்டில் அனைத்து நகராட்சிகளிலும் இணையதளம் மூலம் உள்ளாட்சி அமைப்புகள், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக ஆணையரகத்துடன் உள்வலை மூலம் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி 2004- 2005-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**குடிநீர் வழங்கல்:**

22. கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து பருவமழை பொய்த்த காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு சில நகராட்சிகள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாயின. அரசு பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளை ரூ.16.16 கோடியில் மேற்கொண்டு 2384 பணிகளைச் செய்ய தேர்வு செய்து, அவற்றில் 2077 பணிகள் இதுகாறும் முடிக்கப்பட்டுள்ளன. இந்த இடர்ப்பாடுகளைப் போக்க நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் தூர்வாரும் பணிகளுடன், புதிய கைப்பம்புகள் மற்றும் சிறிய மின் இறைப்பானுடன்கூடிய ஆழ்துளைக் கிணறுகள் தேவைப்படும் இடங்களில் அமைக்கப்பட்டன. இவ்வாண்டில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நீர் சேகரிப்பு, நீர் வீணாவதைத் தடுத்தல், மறு சுழற்சி மற்றும் மறு உபயோகம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

23. 2003-04 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட 21 புதிய குடிநீர்த் திட்டப் பணிகளில் 9 நகராட்சிகளிலும் மற்றும் 1 மாநகராட்சியிலும் புதிய குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 10 பணிகள் நகராட்சிகளிலும், ஒரு பணி மாநகராட்சியிலும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் யாவும் இவ்வாண்டில் முடிக்கப்பட உள்ளன.

24. மேற்காணும் பணிகளுடன் விருதுநகர், அருப்புக்கோட்டை, செங்கல்பட்டு, பொள்ளாச்சி, கோபிசெட்டிப்பாளையம், துறையூர், சிவகங்கை, போடிநாயக்கனூர், கம்பம் மற்றும் ஈரோடு ஆகிய 10 நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் நடப்பு ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

**மழை நீர் சேகரிப்பு:**

25. மழை நீர் சேகரிப்பு தொழில்நுட்பத்தைக் கொண்டு, நிலத்தடி நீரின் அளவினை உயர்த்துவதற்கு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்துக் கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் 2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன:





**சாதனைகள்:**

| | |
|---|---|
| அரசுக் கட்டடங்கள் | 7,647 |
| தனியார் குடியிருப்புகள், கல்வி நிலையங்கள் மற்றும் வணிக வளாகக் கட்டடங்கள் | 23,15,520 |
| நீர்நிலை ஆதாரங்கள் | 36,977 |
| சாலையோரங்கள் | 2,546 |
| நடைபாதைகள் | 99 |
| தெருக்கள் | 2,335 |
| மாநகராட்சி மற்றும் நகராட்சி குளங்கள் | 409 |
| பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் | 365 |
| மொத்தம் | 23,65,898 |

26. எதிர்வரும் பருவமழையின் முழுமையான பலனைப் பெறுவதற்கு, மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு இயக்கம் இந்த ஆண்டும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

27. நீர்நிலை அமைப்புகளைப் புனரமைத்தல், சீரமைத்தல், புதுப்பித்தல் போன்ற சிறப்புத் திட்டப் பணியின்கீழ் 594 கோயில் குளங்கள், ஏரிகள், குட்டைகள் ஆகியவற்றில் 376 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் இவ்வாண்டு மாநில நிதி ஆணைய நிதிப்பகிர்விலிருந்து மேற்கொள்ளப்பட உள்ளன.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

28. பாதாளச் சாக்கடைத் திட்டம், 4 மாநகராட்சிகள் மற்றும் 11 நகராட்சிகளிலும் சேர்த்து மொத்தம் 15 உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் யாவும் அந்தந்த நகரில் சில பகுதிகளில் மட்டுமே செயல்பட்டு வருகிறது.

29. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நதிகள் மாசுபடுவதைத் தவிர்க்கும்பொருட்டு, காவிரி நதியில் கலந்திடும் சாக்கடை நீரைத் தடுத்து நிறுத்தி சுத்திகரிப்பு செய்ய ஈரோடு, பவானி, கொமாரப்பாளையம் ஆகிய நகராட்சிகளிலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் ஈரோடு நகராட்சியில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. பவானி மற்றும் கொமாரப்பாளையம் நகராட்சிகளில் பணிகள் நடப்பு ஆண்டில் முடிவுறும்.

*30.* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கரூர், கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.575.30 கோடி மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

*31.* தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி நிறுவன உதவியுடன் ஆலந்தூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, பொதுமக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், சில நகராட்சிகளில் நடைபெற்று வருகின்றன. அவை நடப்பாண்டில் முடிவுறும்.

*32.* அம்பத்தூர், திருவொற்றியூர், காஞ்சிபுரம், ஆம்பூர், இராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை, திருப்பூர், தாம்பரம், பல்லாவரம், ஆவடி மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகராட்சிகளில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, நடப்பாண்டில் இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு சுமார் ரூ.1,800 கோடி ஆகும். புதிய பாதாளச் சாக்கடைத் திட்ட ஆய்வுப் பணிகள், 30 நகராட்சிகளில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**தெருவிளக்குகள்:**

*33.* தெருவிளக்கு உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் வாங்குவதில் தரக்கட்டுப்பாடு விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதனால் மின்சக்தி சேமிப்பு செய்யப்படுவதுடன், தரமற்ற பொருள்கள்/குறைவான மின் வெளிச்சம் போன்ற குறைபாடுகள் தவிர்க்கப்படும்.

*34.* ஒவ்வொரு 30 மீட்டருக்கும் ஒரு மின்கம்பத்துடன் கூடிய விளக்கு என்ற திட்டக் குறிக்கோளை அடைய அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் கூடுதல் தெருவிளக்குகள் நடப்பாண்டில் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும். தெருவிளக்குகளைப் பராமரிக்க மண்டல அளவில் தனியார் மூலம் ஒருங்கிணைக்க சோதனை அடிப்படையில் நடப்பாண்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக திருப்பூர் மண்டலம் முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்வாண்டு செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம்





வெற்றி பெறுமேயானால், இதர மண்டலங்களுக்கும் இது விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சுயஉதவிக் குழுக்கள் தெரு விளக்குகளை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் ஈடுபடுத்தப்படுவர்.

**வெள்ள நீர்த் தேக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கைகள்:**

*35.* கடந்த 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த தொடர் மழையினால் சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள நகராட்சிக்குட்பட்ட சுற்றுப்புறப் பகுதிகளில் வெள்ளத் தேக்கம் ஏற்பட்டு, சாலைகள் மற்றும் இதர கட்டமைப்புகளுக்கு அதிகப்படியான சேதங்கள் ஏற்பட்டன.

வெள்ளத் தேக்கத்தினால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கும் பொருட்டு உடனடி நடவடிக்கையாக, சென்னையைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளில் புதியதாக மழை நீர் வடிகால் அமைத்தல், ஏற்கெனவே பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிடுதல் ஆகிய 175 பணிகளை ரூ.31.12 கோடி செலவில் செயல்படுத்த அடிப்படை வசதி கட்டமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் ரூ. 91.74 கோடி செலவில் கீழ்க்கண்டவாறு இரண்டாம் கட்டமாக பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

| வ. எண். | பணியின் விவரம் | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் | 46.55 |
| 2. | திடக்கழிவு மேலாண்மை | 11.19 |
| 3. | குடிநீர் விநியோகம் | 10.40 |
| 4. | மழைநீர் வடிகால் | 15.00 |
| 5. | சாலைகள் | 8.60 |
| | மொத்தம் | **91.74** |

**ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்:**

*36.* நகர்ப்புறங்களில் சுகாதார வசதிகளின் மேம்பாட்டுத் தேவைகளை உணர்ந்து ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

[2004 ஜூலை 31

மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம், தமிழ்நாடு அரசு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2-ன் நிதி உதவியுடன், குளியல் அறை வசதிகளுடன்கூடிய கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதி வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் வசிக்கும் இடங்களிலும் (குடிசைப்பகுதி) திறந்தவெளிக் கழிப்பிடங்கள் மற்றும் சுகாதாரக் குறைபாடு ஏற்படுத்தும் இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

37. இத்திட்டம் சென்னை நீங்கலாக அனைத்து மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகளால் அமல்படுத்தப்படுகிறது. தற்போது உள்ள சமூக அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகளின் உதவியும் இத்திட்டத்திற்குத் தேவைப்படுகிறது. இத்திட்டத்தின் சிறப்பம்சம் பயன்படுத்துவோரின் பங்கீடாகும். சுகாதார வளாகம் கட்ட இடம் தேர்வு செய்வது முதல் அவ்வளாகம் கட்டி முடிக்கப்பட்டு பயனீட்டாளர்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் வரை இவர்கள் பங்காற்றுகின்றனர்.

38. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் 525 சுகாதார வளாகங்கள் ரூ. 52.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டன.

**நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள் (2001–2002)**

| மொத்த அலகுகள் | மொத்த மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | உள்ளாட்சியின் பங்கு |
|---|---|---|---|---|
| | ரூ. கோடியில் | | | |
| 525 | 52.50 | 16.80 | 29.00 | 6.70 |

39. மேற்கண்ட அனைத்து சுகாதார வளாகங்களும் (செங்கற்பட்டு நகராட்சியிலுள்ள ஒரு வளாகம் தவிர்த்து) கட்டி முடிக்கப்பட்டு மேற்கொண்டு பராமரிப்பதற்கு பயனீட்டாளர்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு மக்களுக்கு நல்ல முறையில் பயனளித்து வருகிறது.

40. மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் 10 கழிப்பறைகள் கொண்ட சிறிய சுகாதார வளாகங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி 2003-2004 ஆம் ஆண்டில்



2004 ஜூலை 31]

ரூ.36.20 கோடி மதிப்பீட்டில் 905 சிறிய சுகாதாரக் கழிப்பறைகள் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டது. உத்தேசமாக ஒவ்வொரு சுகாதாரக் கழிப்பறைகளும் ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் அமையும்.

| மொத்த அலகுகள் | மொத்த மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் பங்கு |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| 905 | 36.20 | 18.10 | 18.10 |

மேற்கண்ட 905 அலகுகளில் இந்நாள் வரை 426 அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அலகுகள் பணி முன்னேற்றத்தில் உள்ளன. அவையும் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

**பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்:**

41. பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு பாகமான நகர்ப்புற சுயதொழில் திட்டத்தில் 2003-2004 ஆம் ஆண்டில் மைய அரசு அனுமதித்துள்ள ரூ.648.580 இலட்சத்தில் 5,700 நபர்களுக்கு, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டது. மாநில அரசின் மானியமான ரூ.217.11 இலட்சத்தில் 1,700 நபர்களுக்கும் சுய தொழில் செய்வதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. மேலும் நகர்ப்புறக் கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசு ரூ.174.946 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் மாநில அரசு 86,430 மனித வேலை நாட்களை உருவாக்கியுள்ளது. மாவட்ட நகர்ப்புற மேம்பாட்டு முகமைகள் இத்திட்டத்தினைச் செயல்படுத்த முடுக்கிவிடப்பட்டுள்ளன. அதேபோன்று மாவட்ட ஆட்சியாளர்களும் இத்திட்டத்தில் மிகுந்த அக்கறை காட்டுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நகர்ப்புற வறுமை ஒழிப்பு**

42. 2004-2005 ஆம் ஆண்டில் மைய அரசு ரூ.15.00 கோடியும், மாநில அரசின் பங்கான ரூ.5.00 கோடியும் ஒதுக்கீடு செய்வதன் மூலம் 17,000 நகர்ப்புற ஏழைகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய உள்ளனர். SJSRY திட்டத்தை சுயவேலைவாய்ப்புக் குழு மற்றும் அண்டை வீட்டுக் குழுக்கள் மூலமாக அதிக அளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் அடுத்த ஐந்தாண்டுகளில் சுயவேலை வாய்ப்புக் குழுக்களின்

எண்ணிக்கையை 40,000-லிருந்து 1,00,000-ஆக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுயவேலைவாய்ப்புக் குழுக்கள் நகராட்சிப் பணிகளான சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, வாகன நிறுத்துமிடம் பராமரித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் ஏழைகளுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கவும், பணிகளின் திறனை மேம்படுத்தவும் வழிவகை செய்யப்படும். மேலும் இக்குழுக்கள் தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழுள்ள பணிகளான சிறு பாலம் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் குடியிருப்பு மேம்பாடு போன்ற பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவார்கள். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம் நகர்ப்புற ஏழைப் பெண்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் முழுப் பயன் பெறுவது உறுதிச் செய்யப்படும். இதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டமான மகளிர்க்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த இயலும். மேலும் பெண்கள் சிறு தொழில் முனைவதை மேம்படுத்துவதற்கு வாய்ப்பினை அதிகரிக்கும். பொன் விழா நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுயஉதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு விற்பனை வசதி ஏற்படுத்தித்தர முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக சுய உதவிக் குழுக்களுக்கு கடைகள் மற்றும் நடமாடும் ஊர்திகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

43. இத்திட்டம் மத்திய அரசின் மானியத்துடன் 1996-1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடிசைப்பகுதிகளில் மிகவும் அத்தியாவசியமான மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், சிறு பாலம் கட்டுதல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு அமைத்தல், சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டுதல், ஒருங்கிணைக்கப்பட்ட துப்புரவுப் பணி செய்தல் மற்றும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும். இத்திட்டம் அனைத்து நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படும். குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், குடிசைப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கு ஏற்ற குடியிருப்புப் பகுதிகளாக மாற்றும் நோக்கத்துடனும் மேற்கண்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பணிகளை



நிறைவேற்றுவதில் சுயஉதவிக் குழுக்களை ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

44. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.2520 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு, அதில் ரூ.2267.91 இலட்சம் அடிப்படை வசதிப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 10 விழுக்காடு தொகையான ரூ.251.99 இலட்சம் குடியிருப்பு மேம்பாட்டுப் பணியின்கீழ் பழைய குடியிருப்புகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டன. இதனால் 1,510 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

45. 2004-2005 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படும் ரூ.27.11 கோடியில், ரூ.24.40 கோடி அடிப்படை வசதிப் பணிகளுக்கும் ரூ.2.71 கோடி குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழைய குடியிருப்புகளை மேம்படுத்துவதற்கும் செலவிடப்படவுள்ளது. இதனால் 1,510 குடும்பங்கள் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பதினோராவது நிதிக் குழு பரிந்துரை மானியங்கள்:**

46. 2004-2005 ஆம் ஆண்டிற்காக பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ரூ.3867 இலட்சம் மானியமாக வழங்கப்பட உள்ளது. இந்நிதி நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளான தொடக்கக் கல்வி வசதி, அடிப்படை சுகாதார வசதி, பாதுகாப்பான குடிநீர் வசதி, தெருவிளக்குகள் அமைத்தல், துப்புரவுப் பணிகளான வடிகால் மற்றும் சாக்கடை வசதி, இடுகாடு, சுடுகாடு பராமரித்தல், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் இதர பொதுச் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்பட உள்ளது.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டம்**

47. நகரங்களில் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 2004-2005 ஆம் நிதியாண்டில் மைய அரசு மற்றும் தமிழக அரசின் மூலம் ரூ. 46 கோடி இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று 20 நகராட்சிகளில் 80 திட்டங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மகாநகரத் திட்டம்:**

48. 2004-2005 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட 8 நகராட்சிகள் மற்றும் 9 முன்னாள் பேரூராட்சிகளுக்கு வருவாய் தரத்தக்க திட்டம் மற்றும் சேவைப் பணிகளுக்கு மத்திய அரசு மற்றும் தமிழக அரசு மூலம் ரூ.144 கோடி நிதியுதவி பெறப்படும்.

[2004 ஜூலை 31

**இரண்டாவது மாநில நிதிக் குழு பரிந்துரையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியம்**

49. இரண்டாவது மாநில நிதிக் குழு பரிந்துரையின்படி நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கு மாநில வரவு செலவுத் திட்டத்தில் ரூ.418.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2003- 2004 ஆம் ஆண்டிற்கு அரசு 6 மாநகராட்சிகள் மற்றும் 102 நகராட்சிகளுக்கு ரூ.390.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாதாந்திர அடிப்படையில் மானியம் வழங்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. 2-வது மாநில நிதிக் குழு பரிந்துரையின் அடிப்படையில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு பின்வரும் விழுக்காட்டில் மானியம் பகிர்ந்தளிக்கப்படுகிறது:

87 சதவிகிதம் - பகிர்வு நிதி

2 சதவிகிதம் - சேம நிதி

5 சதவிகிதம் - ஊக்க நிதி

6 சதவிகிதம் - சமன்பாட்டு நிதி

50. 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், மாநில நிதிக் குழு பரிந்துரை மானியத்தை மின்னணு பணப் பட்டுவாடா (மி.ப.ப) முறை மூலம் மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 2003 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து 102 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளுக்கு அனைத்து நிதிகளும் மின்னணு பணப் பட்டுவாடா முறை மூலம் அனுப்பப்படுகிறது. இதன் மூலம் நேரமும், அஞ்சல் செலவும் மிச்சப்படுகிறது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

51. 2003-2004 ஆம் ஆண்டிற்கு சத்துணவு மையங்களைப் பழுதுபார்க்கும் பணிகளுக்கு அரசிடமிருந்து ரூ.803.93 இலட்சம் ஒதுக்கீடு பெற்று இத்தொகையை மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.



2004 ஜூலை 31]

2004-2005 ஆம் ஆண்டில் சத்துணவு மையங்களில் போதிய பாதுகாப்பு வசதிகளை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் ஏற்படுத்த சிறப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரைமறைவற்ற தன்மை**

52. பொதுமக்களின் பங்கெடுப்பு மற்றும் நகராட்சிகளில் திரைமறைவற்ற ஆளுகையை உறுதிசெய்யும் நோக்குடன், அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களிலும் பொதுமக்களை தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்ளும் திட்டத்தினை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு மாதமும் தலைவர் மற்றும் ஆணையரால் நடத்தப்படும். இங்கு உள்ளூர் மக்கள் தங்கள் குறைகளை வெளிக்கொணரவும், தங்கள் குறைகளுக்குத் தீர்வும் தேடலாம். மக்கள் குறை தீர்க்கும் நாள் அனைத்து உள்ளாட்சிகளிலும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைதோறும் நடைபெறும்.

**நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் வருவாயைப் பெருக்குதல்**

53. தேவையான அளவில் அடிப்படை சேவைகளைச் செய்ய, நிதி அதிகம் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் வருவாய்த் தொகையைப் பெருக்க முடுக்கி விடப்படும். இதுவரை வரி விதிக்கப்படாத சொத்துக்களை வரி விதிப்பிற்குட்பட்ட வலைக்குள் கொண்டு வந்து சொத்து வரியை உயர்த்த சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இத்தகைய வரி விதிக்கப்படாத சொத்துக்களைக் கண்டறிய சிறந்த வழிமுறைகள் உபயோகப்படுத்தப்படும்.

**மனிதவள மேம்பாடு வழிமுறைகள்**

54. உள்ளாட்சிகளில் மனிதவள மேம்பாட்டினை உயர்த்துவதில் அரசு கவனம் கொண்டுள்ளது. உள்ளாட்சி ஆளுகை, பொதுமக்களின் ஏற்பு, குழுக்கள் ஏற்படுத்துதல் மற்றும் தேவையை அடிப்படையாகக் கொண்ட திட்டம் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் மூலமாக நடைபெறும்.

**நகர்ப்புற சீரமைப்பு ஊக்க நிதி**

55. வீட்டு வசதிக்கான நிலம், வாடகை வீட்டு வசதி ஆகியவற்றை அதிகரிக்கவும், சொத்து உரிமை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை எளிமையாக்கவும், மேலும் அந்நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்தவும், நகர்ப்புற சேவைகளின் ஆதார

[2004 ஜூலை 31

அடிப்படைகளை மேம்படுத்தும் வகையில் நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களுக்கான வசதிகள் (Civic amenities) ஆகியவற்றை மேம்படுத்தவும் மைய அரசின் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புத் துறை வருடத்திற்கு ரூ.500 கோடி அளவிலான ஒதுக்கீட்டில் நகர்ப்புற சீரமைப்பு ஊக்க நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்நிதி பத்தாவது திட்டக் காலத்தில், அதாவது, 2002- 2003 முதல் 2006-2007 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும்.

56. இந்நிதியின்கீழ், மாநிலங்களுக்கு அவற்றின் நகர்ப்புற மக்கட்தொகைக்குத் தகுந்தவாறு நிதி ஒதுக்கப்படும். இம்மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடு வருடத்திற்கு ரூ.47.75 கோடி ரூபாயாகும். இந்நிதியினைப் பெறுவதற்கு கீழ்க்கண்ட இனங்களில் சீரமைப்பினை மேற்கொள்ளுவதற்கு உறுதி தெரிவித்து இவ்வரசு மைய அரசுடன் 1-8-2003 அன்று ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது:—

i) நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டத்தைத் திரும்பப் பெறுதல்

ii) வாடகைக் கட்டுப்பாடு சட்டங்களை நீக்கம் செய்து வாடகைக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்துதல், தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல்

iii) பத்திரம் பதிவு முறையினைக் கணினிமயமாக்குதல்

iv) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய வருவாய் இனமாக சொத்து வரி அமையும் வகையில் சொத்து வரி சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்

v) பயனீட்டாளர் கட்டணங்களை நியாயமான வீதத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூல் செய்தல் மற்றும் பத்தாவது திட்டக் கால முடிவிற்குள் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவினை முழுமையாக சரிகட்டும் வகையில் அக்கட்டணங்களை விதித்தல்

vi) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கீட்டு முறையில் (Accounting) இரட்டைப் பதிவு முறையினை அறிமுகப்படுத்துதல்



2004 ஜூலை 31]

மேற்கண்ட இனங்களில் ஒவ்வோராண்டும் அடைய வேண்டிய இலக்குகள் குறித்தான விவரங்கள் மைய அரசுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளன. இவ்வினங்கள் வருவாய், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, வணிக வரி மற்றும் இத்துறை ஆகியவை தொடர்புடையவையாகும்.

இந்நிதியின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டிற்கு இம்மாநிலத்திற்கு ரூ.26.2625 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது.

## II. சென்னை மாநகராட்சி

1. சென்னை மாநகராட்சி, 1919 ஆம் ஆண்டைய சென்னை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது. இம்மாநகராட்சியின் எல்லை 174 சதுர கிலோ மீட்டர் அளவில் உள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாநகராட்சி மக்கட் தொகை 42.16 இலட்சமாகும். சென்னை மாநகரை தூய்மை மற்றும் பசுமை நகரமாக்குதல், நல்ல வாகன உபயோகச் சாலைகள், நல்ல சுகாதாரம், கல்வியில் சம வாய்ப்பினைப் பெற இயலாத மக்களுக்குத் தரமான கல்வி வழங்குதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்ற, மக்கள் நண்பராகவும் ஏற்புத் தன்மையுடன் செயல்பட சென்னை மாநகராட்சி நிர்வாகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. இக்குறிக்கோள்களை நிறைவேற்றும்பொருட்டு, 2003-2004 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி ரூ.168.20 கோடி செலவில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனப் பணிகளை மேற்கொண்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.258.31 கோடி செலவில் மேம்பாட்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சாலைகள்**

2. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.127.90 கோடி செலவில் 647 கி.மீ. நீளமுள்ள உட்புறச் சாலைகள் மற்றும் 104 கி.மீ. நீளமுள்ள பேருந்துச் சாலைகள் மேம்படுத்தப்பட்டன. மேலும் 328 கி.மீ. நீளத்தில் நடைபாதைகளும் மேம்படுத்தப்பட்டன.

2004-2005 ஆம் ஆண்டில் ரூ.141 கோடி செலவில் உட்புறச் சாலைகள் மற்றும் பேருந்துச் சாலைகளைப் புதுப்பிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**பாலங்கள்**

3. சென்னை மாநகரில், போக்குவரத்து தடங்கலின்றிச் செல்ல வேண்டுமென்பது சென்னை மாநகராட்சியின் நோக்கமாகும். இதனை நிறைவேற்றுவதற்காக, ரூ.34 கோடி மதிப்பீட்டில் ஏழு மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**மழை நீர் வடிகால்**

4. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.16 கோடி செலவில் மழை நீர் வடிகால்களைப் புதுப்பிக்கவும் மற்றும் புதிதாகக் கட்டவும் செலவிடப்பட்டது. சென்னை மாநகராட்சி பராமரித்து வரும் 16 கால்வாய்களில் 15 கால்வாய்களில் தூர் வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் புதிய இடங்களில் மழை நீர் வடிகால்கள் கட்டுவதற்கும், விடுபட்ட இடங்களில் மழை நீர் வடிகால்கள் கட்டுவதற்கும் மற்றும் மழை நீர் வடிகால்களில் தூர் வாரும் பணிக்காகவும் ரூ.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

5. சென்னை மாநகரத்தை குப்பைத் தொட்டி மற்றும் குப்பையில்லா தூய்மையான நகரமாக மாற்றும் நோக்கில், பெரிய அளவில் சமுதாய மக்கள் பங்கேற்கச் செய்து வீட்டுக்கு வீடு குப்பை சேகரிக்கும் பணியுடன் மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரிக்கும் புதிய முயற்சி மக்களிடையே மிகப் பெரிய வெற்றியை கண்டதுடன் நகரில் இப்பணி முழுவதுமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டு குப்பை மாற்றும் நிலையங்களை மேம்படுத்தவும் மற்றும் இரண்டு குப்பை கொட்டும் வளாகங்கள் "நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதி 2000"-ல் குறித்த தரத்தின்படி நவீனப்படுத்தப்படுவதுடன் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சென்னை மாநகராட்சி மேற்கொள்ள ஏதுவாக, அரசு ரூ.10 கோடியை ஒரு தனி நிதியாக விடுவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி பெரிய அளவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை 2004-2005-ல் தொடங்கவுள்ளது.



2004 ஜூலை 31]

**பூங்காக்கள்**

6. சென்னை மாநகரைப் பசுமை நகரமாக உருவாக்குவதற்கு, 74 பூங்காக்கள் மற்றும் 45 சாலைத் தீவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பல முக்கியச் சாலைகளில், சாலைப் பக்கங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இவற்றிற்கு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.1.54 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 4 கோடி செலவில், 76 பூங்காக்கள் மேம்படுத்தப்படவுள்ளன. மேலும் முதற்கட்டமாக, உலகத் தரத்திற்கு ஏற்ற வகையில் அடையாறு பகுதியில், எத்கோ பார்க் ஒன்று அமைக்கும் பணிக்கு ரூ.6 கோடி இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் சாலையோர மரங்கள் நடவும், சாலைத் தீவுகள், சாலை மையப் பகுதிகளை மேம்படுத்தவும், பாலங்களுக்குக் கீழாக உள்ள காலியிடங்கள் மற்றும் சாலையோர உபயோகப்படுத்தாத இடங்களில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் தளங்கள் அமைப்பதற்கு ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கல்வி**

7. தரமான கல்வியை எல்லா மக்களுக்கும் சமவாய்ப்பாகச் சென்றடைய சென்னை மாநகராட்சி திட்டமிட்டு மாநகராட்சி பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை உள்ளமைப்பு வசதிகளைப் பல கட்டங்களில் நிறைவேற்றவும் தொடக்கக் கல்வியில் நூறு விழுக்காடு மாணவர்கள் சேர்க்கை எய்தவும், தக்க வைத்தலில் நூறு விழுக்காடு அடையவும், கற்றல் திறனில் நூறு விழுக்காடு பெறுவதற்கு கல்வி கற்பித்தல் செயல்பாடுகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் கற்றல் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு, செயல்பாட்டு முறைக் கல்வியில் பயிற்சி கொடுக்கப்பட்டு, முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு கல்வி பயிலும் மாணவர்களுக்கு செயல்பாட்டு முறைக் கல்வி 2003-2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 40 இலட்சம் செலவில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 65 அறிவியல் கூடங்கள் அமைக்கப்படும். எல்லாப் பள்ளிகளிலும் மும்முனை மின் இணைப்பு ரூ.1.50 கோடி செலவில் வழங்கப்படும். மேலும், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான இருக்கை வசதிகள் ரூ.1.30 கோடி செலவிலும், ரூ.10 கோடி செலவில் 190 வகுப்பறைகளும் கட்டப்படவுள்ளன.

[2004 ஜூலை 31

முதன்முறையாக, 90 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களின் கட்டமைப்புகளில், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி, சுகாதாரமான சமையல் அறையுடன்கூடிய கான்கிரீட் தள அமைப்புகள் உருவாக்க ரூ.2.50 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சுகாதாரம்**

8. கொசுத் தொல்லையை எதிர்த்துப் போராட சென்னை மாநகராட்சி குறுகிய காலத் திட்டம் மற்றும் தொலைநோக்குப் பார்வையில் நீண்டகாலத் திட்டமும் தீட்டியுள்ளது.

சென்னை மாநகரில் கால்நடைகளின் தொல்லைகளைச் சமாளிக்க, தீவிர நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் 2,238 கால்நடைகள் சென்னையிலிருந்து அகற்றப்பட்டு "புளூ க்ராஸ்" என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும் இப்பணி 2004-2005 ஆம் ஆண்டும் தொடர்ந்து முனைப்புடன் மேற்கொள்ளப்படும்.

சென்னை நகரின் மக்கட்தொகையில் 16 விழுக்காடு எண்ணிக்கை புது மலர்ச்சிப் பருவத்தினர்கள் உள்ளனர். புது மலர்ச்சிப் பருவத்தினரின் சுகாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, சமுதாய எழுச்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தியும், பள்ளி மாணவர்கள் நிலையிலும் செயல்முறைத் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டில், பொது இடங்களில் அசுத்தம் செய்யும் பழக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு, சமுதாய விழிப்புணர்ச்சியைத் தூண்டும் நோக்கத்தோடு 284 பொதுக் கழிப்பிடங்கள் ரூ.3.63 கோடி செலவில் புதிய பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டன. 2003-2004 ஆம் ஆண்டில், 18 மயான பூமிகளின் தரத்தை உயர்த்த ரூ.1.63 கோடி செலவில் பசுமையாக்கப்பட்டு புல்வெளிகள் அமைக்கப்பட்டன. இப்பணி 2004- 2005 ஆம் ஆண்டும் தொடர்ந்து மற்ற மயான பூமிகளுக்கும் விரிவாக்கப்படும்.

2004-2005 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியில் உள்ள தாய் சேய் நல மையங்கள் அதன் உள்கட்டமைப்புகளின் தரத்தை, குறிப்பாக குடிசைவாழ் மக்களுக்காக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முனைப்பான ஈடுபாடு மற்றும் செயல்பாட்டினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 4.50 இலட்சத்தைவிட 4.84 இலட்சம் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.



2004 ஜூலை 31]

குழந்தைபெறும் தாய்மார்களின் இறப்பு எண்ணிக்கை 0.2 விகிதம் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வகைத் தாய்மார்களில் இறப்பே இல்லை என்ற நிலையை உருவாக்கும் இலக்குடன் மாநகராட்சி செயல்பட்டு வருகிறது.

தற்போதுள்ள 14.1 என்ற குழந்தைகள் இறப்பு விகிதத்தை கணிசமாகக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகளை மாநகராட்சி எடுத்து வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் 147 ஆக இருந்த லாப்ராஸ்கோப்பிக் அறுவை சிகிச்சை எண்ணிக்கை, 2003-2004 ஆம் ஆண்டில் நான்கு மடங்கிற்கும் மேல் 645 ஆக உயர்ந்துள்ளது.

**நிதிநிலை**

9. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.164 கோடியாக வசூலான சொத்து வரி ரூ.209 கோடியாக 2003-2004 ஆம் ஆண்டில் உயர்ந்துள்ளது. இது 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.260 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகர்வாழ் மக்கள் சொத்து வரியினை ஆன்லைன் மூலமாகச் செலுத்தலாம்.

வருவாய் இனங்களில் செலவினத்தைக் கட்டுப்படுத்தி மூலதனப் பணிகளைப் பெருக்கப் பல வழிகள் மேற்கொள்ளப்பட்டன. 2003- 2004 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் ரூ. 230 கோடியாக இருந்த கடன், தற்போது ரூ. 127 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2003- 2004 ஆம் ஆண்டில், குறைந்த வட்டிக்குக் கடன் பெற்றதன் மூலமும் மற்றும் கடன்களை முன்கூட்டியே திருப்பிச் செலுத்தியதன் மூலமும் ரூ.10.20 கோடி வட்டி செலுத்துவது சேமிக்கப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

10. 2003- 2004 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் மின்னணு ஆளுகை கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. பிறப்பு, இறப்புச் சான்றிதழ் மற்றும் சொத்து வரி வெப்சைட்டில் நிறுவப்பட்டுள்ளன. இதனால் சென்னை நகர மக்கள் செலுத்த வேண்டிய வரிகளை ஆன்லைன் மூலம் செலுத்தலாம். 10 மண்டலங்களும் லீஸ் லைன் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உரிமம் புதுப்பித்தல் மற்றும் கட்டணம் வசூல் ஆகியவை நல்ல முறையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. லீஸ்லைன் பகுதி மற்ற கோட்டங்களுக்கு விரிவாக்கப்படும். பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்

[2004 ஜூலை 31

ஆன்லைன் மூலம் வழங்கும் பணி, மண்டலம் 3-ல் சோதனை அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ஆன்லைன் மூலம் சொத்து வரி வசூல் மற்றும் இதர வசூல் மண்டலங்கள் வாரியாக நிறைவேற்றப்படும். பிறப்பு, இறப்புச் சான்றிதழும் நவீன முறையில் கணினி வழியாக வழங்கப்படும். மக்கள் சமுதாயக் கூடங்கள், மயான பூமிப் பயன்பாடும், கட்டட உரிமமும் ஆன்லைன் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

**நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்**

11. சென்னை மாநகராட்சி, சென்னை மாநகரத்தில் பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தைச் (SJSRY) செயல்படுத்தி வருகிறது. அறிவொளி இயக்கப் பணியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனத்தைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஒரு சிறந்த நிர்வாக அமைப்பை உருவாக்கி, வங்கிகளை அடிக்கடித் தொடர்பு கொண்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. டிசம்பர் 2003-ல் புதியதாக வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 3,80,649 குடிசைவாழ் மக்களிடையே கணக்கெடுப்பு நடத்தி, அதில் 2,61,742 குடிசைவாழ் மக்கள் மிகவும் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளதாக அறியப்பட்டது.

2004-2005 ஆம் ஆண்டில் குறைந்தது 15 விழுக்காடு கடன் விகிதத்தில் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ரூ.7,500 என்ற விகிதத்தில் மொத்தம் ரூ.45,65,492 ஊக்கத்தொகை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் தொகையில் சரிபாதித் தொகை அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் ஊக்கத் தொகையாக ரூ.14,94,127 வழங்கப்படும். சுயஉதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,000 வீதம் சுழற்சி முறையில் கடனாக வழங்க ரூ.2,10,567 ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் சுயஉதவிக் குழுக்களின் தயாரிப்புகளை விற்க நடமாடும் வேன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோல் சென்னை மாநகராட்சி வணிக வளாகங்களில் கடைகளை சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் சுயஉதவிக் குழுக்களின் மூலம் சிற்றுண்டிச் சாலைகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

சமுதாய அமைப்புகளை அமைக்கத் திட்டமிடப்பட்டு இது வரை 1,509 அருகாமைக் குழுக்கள், 100 அருகாமைக் குழுமங்கள் மற்றும் 10 சமுதாய வளர்ச்சி நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் 4,500 அருகாமைக் குழுக்கள், 200 அருகாமைக் குழுமங்கள் மற்றும் 20 சமுதாய வளர்ச்சி நிறுவனங்களும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

## III. மதுரை மாநகராட்சி

**சாலைகள்**

1. 2004- 2005 ஆம் ஆண்டில் 50 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலை மற்றும் 30 கி.மீ. நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் ரூ.2160 இலட்சம் செலவில் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**குடிநீர் வேலைகள்**

2. நடப்பாண்டில், குடிநீரில் சாக்கடை நீர் கலப்பதைத் தவிர்க்கவும், புதிய குடிநீர் விநியோகப் பிரதானக் குழாய் அமைக்கவும், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், குடிநீர் விநியோகம் செய்யப்படாத பகுதிகளில் குடிநீர் வசதிகள் செய்யவும் ரூ.30 இலட்சத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

**மதுரைக்கு இரண்டாவது பிரதான குடிநீர்க் குழாய் அமைத்தல்**

3. 600 மி.க. அடி. தண்ணீரை மதுரை வைகை அணையிலிருந்து மதுரை வடக்குப் பகுதிக்குக் குழாய்கள் மூலம் கொண்டு வர, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் கழகத்தினால் நிபுணர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கான செலவினம் ஏறத்தாழ ரூ.50.00 கோடியாகும். இது தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பெறப்படும்.

**சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்**

4. மத்திய, மாநில சுற்றுலா நிதியில், மதுரை தெற்குப் பகுதி பேருந்து நிலைய வளாகத்தில் 'யாத்திரி நிவாஸ்' கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருவாயினைப் பெருக்க யாத்திரி நிவாஸ் வளாகத்தில், நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கடன் உதவியுடன், ஒரு வணிக வளாகம் ரூ.143.00 இலட்சத்தில் கட்டப்படும்.

[2004 ஜூலை 31

**ஒருங்கிணைந்த சுகாதார வளாகத் திட்டம்**

5. திறந்தவெளிக் கழிப்பிடங்கள் உள்ள பகுதிகளில் ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் கழிப்பறைகளில் தண்ணீர் மற்றும் துணி துவைக்கும் வசதிகளுடன்கூடிய கழிப்பிடம் மற்றும் குளியலறைகள், 60 இடங்களில் அமைக்க ரூ.240 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

6. தற்போது தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க சுமார் ரூபாய் 165 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் 6 பகுதிகளாகக் கொண்ட இப்பணியில், முதல் பகுதியின்கீழ் ரூ.43.03 கோடி மதிப்பீட்டில் வேலைகள் நிறைவடைந்தும், இரண்டாவது கட்டப் பணியில் ரூ.70.25 கோடியில் பணிகள் நடைபெற்றும் வருகிறது. இப்பணி 2005-ல் நிறைவடையும்.

**தேசிய குடிசைப் பகுதிகள் அபிவிருத்தித் திட்டம்**

7. 2004-2005 ஆம் ஆண்டில் தேசிய குடிசைப் பகுதியில் அடிப்படை வசதிகளை அளிக்க ரூ.48 இலட்சம் செலவில் திட்ட வேலைகள் செய்யப்படும்.

**சென்ட்ரல் மார்க்கெட் மாற்றம்**

8. மாநகரின் மையப் பகுதியில் உள்ள சென்ட்ரல் மார்க்கெட் மாட்டுத்தாவணியில் மாற்றி அமைக்கப்படும்

**சரக்கு உந்துவண்டி நிலையம் (டிரக் டெர்மினல்)**

9. மாநகரின் போக்குவரத்து நெரிசலை நீக்கும்பொருட்டு, ரூ.3.31 கோடி செலவில் டிரக் டெர்மினல் ஒன்றினை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான இடம் தேர்வு செய்யப்பட உள்ளது.

**தெருவிளக்குகள்**

10. 2004- 2005 ஆம் ஆண்டில் மாநகராட்சியின் பேருந்து செல்லும் சாலைகள், நான்கு வீதிகள் மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் 1,500



2004 ஜூலை 31]

சோடியம் ஆவி விளக்குகள் ரூ.200 இலட்சம் செலவில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

11. மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மையை நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டு, இதற்காகப் புதிய மூன்று சக்கர சைக்கிள்களும், ஆட்டோக்களும் ரூ.2.72 கோடி செலவில் இவ்வாண்டு வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## IV. கோயம்புத்தூர் மாநகராட்சி

**சாலைகள்**

1. 2004- 2005 ஆம் ஆண்டில் தார்ச் சாலைகளைப் பராமரிப்பதற்காக, ரூ.10 கோடி செலவிடப்படும். சாலைகளைப் பராமரிக்கும் செலவினத்தைக் குறைப்பதற்காக, கோவை மாநகராட்சி, மறு சுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை இயந்திரம் மூலம் நுண்துகள்களாக்கி தாருடன் கலந்து பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

2. பழுதடைந்த சிறுவாணி பிரதான மற்றும் பகிர்மானக் குழாய்களை மாற்றியமைக்க ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் உள்ளடக்கிய வறட்சி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக, ரூ. 3 கோடி அளவில் மேற்கொள்ளப்படும்.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

3. கோவை நகரில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க, ரூ.177 கோடி அளவிலான திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. முதல் கட்டமாக, ரூ.53 கோடி 2004-2005 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தொகையில் ஒரு பகுதி, நகர்ப்புற மேம்பாட்டு நிதியத்தின் மூலம் கடனாக வழங்கப்பட உள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்**

4. ரூ.150 இலட்சம் செலவில் காந்திபுரம் சந்திப்பில் சுரங்கப் பாதை அமைத்தல், ரூ.120 இலட்சம் செலவில் ஜி.வி. ரெசிடென்சி பகுதியில் உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல், ரூ. 480 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் மேட்டுப்பாளையம் சாலையில் அமைத்தல், ரூ.275 இலட்சம் செலவில் புதிய வணிக வளாகம் காந்திபுரம் கிராஸ்கட் சாலையில் அமைத்தல், ரூ.100 இலட்சம் செலவில் நவீன அடுக்கு மாடிக் கட்டடம் அமைத்தல், ரூ. 43 இலட்சம் செலவில் புதிய மலர் அங்காடி மற்றும் ஏல மையம் மேட்டுப்பாளையம் சாலையில் அமைத்தல், ரூ.116.60 இலட்சம் செலவில் காய்கறி மற்றும் பழ அங்காடி உக்கடம் சந்திப்பில் அமைத்தல், ரூ. 129.18 இலட்சம் செலவில் புதிய மீன் மற்றும் இறைச்சி அங்காடி உக்கடம் பகுதியில் அமைத்தல் ஆகியவற்றிற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இப்பணிகளுடைய மொத்த மதிப்பீடு ரூ.1413.78 இலட்சமாகும். மேற்கண்ட பணிகளுக்கு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென் மண்டல அலுவலகம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் கழிப்பிட வசதிகளுக்காக, 2004-2005-ல் ரூ.3.20 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளிக்கூடங்களில் அடிப்படை வசதிகளைச் செய்ய ரூ. 1 கோடி 2004-2005-ல் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரூ. 80 இலட்சம் செலவில், தயிர்இட்டேரி பாலம், சங்கனூர் குளம் குறுக்கே சிவானந்த காலனி பைபாஸ் சாலையையும், ரத்தினபுரி சாலையையும் இணைக்கும் வகையில் கட்டப்பட உள்ளது மற்றும் பிற பாலங்களுக்கான பணிகள் 2004- 2005-ல், ரூ.70.00 இலட்சம் செலவில் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மத்திய உயிரியல் பூங்கா ஆணைக் குழுவிடமிருந்து ரூ. 97 இலட்சம் மானியம் பெற்று கோவை உயிரியல் பூங்காவினை மேம்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.





**மின்னணு ஆளுகை**

5. கணினிமயமாக்கலுக்காக, தற்போது உள்ள 6 சேவை மையங்களுடன் புதியதாக 2 சேவை மையங்கள் ரூ.30 இலட்சம் செலவில் துவங்கப்பட உள்ளன.

## V. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**குடிநீர் விநியோகம்**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட, பழைய ஸ்ரீரங்க நகராட்சிப் பகுதிக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளை மேற்கொள்ள 2004-2005 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் முதற்கட்டமாக ரூ.200 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர்க் குழாய் நீட்டிப்பதற்காக ரூ.40 இலட்சமும் குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்க ரூ.25 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

2. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.11667 இலட்சம் மதிப்பீட்டில் விடுபட்டுப் போன முன்னாள் திருச்சி நகராட்சிப் பகுதி, பொன்மலை மற்றும் ஸ்ரீரங்கம் பகுதிகளில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.4000 இலட்சம் செலவில் இதனைச் செய்ய 2004-2005 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய, மாநில அரசு நிதியாக ரூ.3002 இலட்சமும், மாநகராட்சி மற்றும் பொதுமக்கள் பங்குத் தொகையாக ரூ.998 இலட்சமும், ஆக ரூ.4000 இலட்சமும் இதில் அடங்கும்.

**ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்**

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் வால்மீகி அம்பேத்கர் அவாஜ் யோஜனா திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டில் 10 தேவையான இடங்களில், அரசு மானியமாக ரூ.20 இலட்சமும், மாநகராட்சி நிதியிலிருந்து ரூ.20 இலட்சமும், ஆக ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

4. இத்திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு, ஏற்கெனவே பழுதடைந்துள்ள பழைய துப்புரவு வாகனங்களுக்குப் பதிலாக, புதிய வாகனங்கள் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கெனவே உள்ள மக்கு உரக்கிடங்கினை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சாலைப் பணி**

5. 2004-2005 நிதியாண்டில் ரூ.500 இலட்சம் மதிப்பீட்டில், மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டக் கடன் ரூ.360 இலட்சம் மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து ரூ.140 இலட்சமும் அடங்கும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஏற்கெனவே உள்ள முக்கியப் பேருந்து வழித்தடங்களிலுள்ள சாலைகளை ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தெருவிளக்குகள்**

6. ஆண்டுப் பராமரிப்புக்கான தெருவிளக்கு சாதனங்கள் வாங்க ரூ.60.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

7. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில், 2004-2005 ஆம் நிதியாண்டில், ரூ.48 இலட்சம் செலவில் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசு மானியம் ரூ.16 இலட்சமும், மீதமுள்ள நிதி மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்படும்.

**சத்துணவு மையங்கள் பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்**

8. 2004-2005 ஆம் நிதியாண்டில் ரூ.90 இலட்சம் செலவில் சத்துணவு மையங்களைப் பழுதுபார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ.65 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது.

**கணினிமயமாதல்**

9. பொதுமக்களுக்குத் தேவைப்படும் அனைத்தும் 'சேவா மையம்' என்ற ஓர் குடையின்கீழ் கொண்டு வரப்படும். இம்மாநகராட்சியில் மின் ஆளுகை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.20 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**கல்வி**

10. மாநகராட்சிப் பராமரிப்பில் வரும் பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்க்கவும் மற்றும் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டவும் ரூ.100 இலட்சம் கல்வி நிதியிலிருந்து, 2004-2005 ஆம் ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தன்னிறைவுத் திட்டம்**

11. இத்திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டு அரசு நிதியிலிருந்து ரூ.45 இலட்சம் மானியமாகவும், பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.15 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில், அடிப்படை வசதிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**யானைக்குளம் வணிக வளாகம்**

12. இத்திட்டத்தின்கீழ், யானைக்குளம் பகுதியில் (சிங்காரத்தோப்பு) ரூ.768.23 இலட்சம் மதிப்பீட்டில் 2004-2005 ஆம் நிதியாண்டில் வணிக வளாகம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.330 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென மாநகராட்சி ரூ.300 இலட்சம் கடனாகப் பெறும்.

**புதிய பேருந்து நிலையம் அமைத்தல்**

13. தேவதானத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு ரூ. 630.92 இலட்சம் மதிப்பீட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கெனவே உள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள ரயில்வேக்குச் சொந்தமான நிலத்தினைப் பெறுவதற்கு ஆகும் செலவினத்திற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இணைப்புச் சாலைகள்**

14. மகாத்மா காந்தி பள்ளி, தென்னூரிலிருந்து பாரதிதாசன் சாலை வரை உள்ள இணைப்புச் சாலையை ரூ.320 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் திட்டக் குழுமத்திலிருந்து ரூ.220 இலட்சமும், மீதமுள்ள தொகை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்படும்.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

15. வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு 2004- 2005 ஆம் ஆண்டில் ரூ.150 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பெண்கள் தங்கும் விடுதி**

16. மத்திய அரசின் நிதியுதவியின்கீழ், ரூ.67.50 இலட்சம் மானியத்துடன், மொத்தம் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் பெண்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## VI. சேலம் மாநகராட்சி

**சாலை வசதிகள்**

1. சேலம் மாநகராட்சி 644.54 கி.மீ. நீளமுள்ள சாலையைப் பராமரித்து வருகிறது. ரூ. 2.15 கோடி மதிப்பீட்டில், பாதைகளைச் செப்பனிடவும் மற்றும் 55 புதிய சாலைகள் அமைக்கவும் மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

**குடிநீர் விநியோகம்**

2. 16 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு ரூ. 18.34 கோடிக்கான திட்ட மதிப்பீட்டை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது. இதற்கான நிதியுதவியை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம் அளிக்க முன்வந்துள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

3. நகரில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை அகற்றுவதற்காக நவீன வாகனங்களாகிய டம்பர் பிளேசர், கம்பேக்டர்ஸ், டிப்பர்கள் எக்ஸ்லெக்டர் மற்றும் ஸ்டீல் கன்டெய்னர்கள் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் 2004- 2005 ஆம் ஆண்டில் வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஸ்வர்ண ஜெயந்தி திட்டம்**

4. இத்திட்டத்தின்கீழ் இம்மாநகராட்சியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு உதவி அளித்து, சுயதொழில் புரிவதற்கு உதவி செய்து வருகிறது. இதனடிப்படையில் இந்த ஆண்டு





இம்மாநகராட்சியில் 300 நகர்ப்புற ஏழைகளுக்கு உதவி அளித்து சுயதொழில் தொடங்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளன. இதில் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 150 பெண்கள் கொண்ட 15 குழுக்கள், கூட்டுத் தொழில் தொடங்க மானியத்துடன்கூடிய கடனுதவி அளிக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 400 நகர்ப்புற ஏழைகளுக்குத் தனியாகப் பயிற்சியளிக்கவும், ஒரு பயிற்சியாளருக்கு ரூ. 2000/- வீதம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 60% பெண்கள் உறுப்பினர்களாவர்.

**தேசிய குடிசைமாற்று அபிவிருத்தித் திட்டம்**

5. இம்மாநகராட்சியில் வளர்ச்சிப் பணிகளான சாலைகள், சாக்கடை மற்றும் தெருவிளக்குகள் அமைக்க ரூ. 48.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

**வாம்பே கழிப்பிடங்கள்**

6. இத்திட்டத்தின்கீழ் இம்மாநகராட்சியின் குடிசைப் பகுதிகளில் 30 நவீனக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு 30 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுகாதார வளாகத்தின் மதிப்பீடு ரூ4.00 இலட்சமாகும். இதன் மொத்தச் செலவு ரூ. 1.20 கோடியாகும்.

## VII. திருநெல்வேலி மாநகராட்சி

**குடிநீர் வழங்கல்**

1. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் பகுதியில் குடிநீர் வழங்குதல் சம்பந்தமாக விரிவான ஆய்வினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

2. திருநெல்வேலி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை ரூ.125 இலட்சத்தில் செயல்படுத்துவதற்கான திட்டம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஊர்திகளை நவீனமயமாக்குதல், உரக்கிடங்கு மேலாண்மை, ஒருங்கிணைந்து செயல்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும். மேலும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினைத் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

3. பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்ட சாலைகளைச் சரிசெய்வதற்கான திட்டம் ரூ.300 இலட்சத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

**பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

4. நடப்பு நிதியாண்டில் ரூ.26.84 இலட்சத்தில் வறுமைக் கோட்டிற்கும்கீழே உள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்காக பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

5. 2004-2005 ஆம் ஆண்டில் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.48 இலட்சம் பயன்படுத்தப்பட உள்ளது.

**மின்னணு ஆளுகை**

6. 2004-2005 ஆம் ஆண்டில் நகரில் மின்னணு ஆளுகை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக கணினி மென்பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் வாங்க ரூ.45 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

**VIII. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II**

1. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II, உலக வங்கி நிதியுதவியுடன் 105 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூபாய் 441 கோடி) செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 80 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.336 கோடி) கடனுதவி திட்டங்களுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்திற்கும், 25 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.105 கோடி) நிறுவன மேம்பாட்டிற்காகவும் மற்றும் நகர்ப்புற முதலீட்டின்கீழ் ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டத்திற்காகவும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிர்வாக அலகிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவன மேம்பாட்டுக் கூறு**

2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II-ன் நிறுவன மேம்பாட்டுக் கூறின்கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறனை உயர்த்தும் வகையில் கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன:



**(i) நகரக் கூட்டாண்மைத் திட்டங்கள் (City Corporate Plan) தயாரித்தல் மற்றும் 5 ஆண்டு மூலதன முதலீட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்:**

முதற்கட்டமாக மற்றும் முன்னோடித் திட்டமாக 11 நகரங்களுக்கு நகரக் கூட்டாண்மைத் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் மேலும் 20 நகரங்களுக்கு இடைக்கால நிலவர அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் இந்த 20 நகரங்களுக்கும் நகரக் கூட்டாண்மைத் திட்டம் தயாரித்து முடிக்கப்படும்.

**(ii) செயல்பாட்டுக்கான குறியீடுகள் (Performance Indicators) தயாரித்தல்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் குடிநீர் விநியோகம், நிதி மற்றும் நகர்ப்புற ஆளுமை போன்ற பணிகள் அனைத்திற்கும் அதற்கான மென்பொருளுடன் (software) செயல்பாட்டிற்கான குறியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2004- 2005 ஆம் ஆண்டில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் புள்ளிவிவரம் சேகரித்து இந்தக் குறியீடுகள் சென்னை தேசிய தகவல் மையத்தின் (NIC) சொர்வரில் (Server) கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**(iii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மேலாண்மை, நிதிநிலை, தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல் மற்றும் திறனை மேம்படுத்துதல்**

திட்ட அமலாக்கக் குறிப்பில் உள்ளது போல் 29 பயிற்சித் திட்டங்கள், 414 தொகுதிகளாக (batches) நடத்தப்பட்டு 8,380 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 32 பயிற்சிகள் அளிக்க பயிற்சி செயலாக்கத் திட்டத்தில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (நவம்பர் 2004 வரை)

**(iv) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான கல்விப் பயணங்கள்**

நம் நாட்டில், நகர மேலாண்மை மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் சிறப்பாக நடைபெறும் நகரங்களைப் பார்வையிடவும், கருத்தாய்வுகள் மேற்கொள்வதற்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

மற்றும் அலுவலர்களுக்கு 5 பயிற்சிப் பயணங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (v) ஆய்வுகள்

(அ) 74-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகளையும், செயல்பாடுகளையும் பட்டியலிடும் நிலப் பயன்பாடுத் திட்டத்தின் ஆய்வு முடிவு பெற்றுள்ளது. இது 2004- 2005 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

(ஆ) நகராட்சி நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடு பற்றி ஆய்வு செய்யவும் நகராட்சி நிர்வாக அமைப்பு மேம்படுத்த வழிமுறைகளை அளிக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2004-2005 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

### (vi) நடைமுறைக் கையேடுகள்

(அ) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II, திட்ட மேலாண்மை அலகினால் கீழ்க்கண்ட கையேடுகள் தயாரிக்கப்பட்டு, 5 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 முன்னாள் பேரூராட்சிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, அவை நடைமுறையில் இருந்து வருகின்றன:

(i) கணக்கியல் கையேடு

(ii) கணினிக் கையேடு

(iii) பொறியியல் கையேடு

(ஆ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பொறியாளர்களுக்கான தர உறுதிக் கையேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பொறியாளர்களுக்கும் இத்தர உறுதிக் கையேடு வழங்கப்பட்டு 2004-2005-ல் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

(இ) நகராட்சிக் கையேடு திருத்தப்பட்டு வருகிறது. இது 2004-க்கு முன்னர் முடிக்கப்படும்.

### (vii) கணினி ஆதரவு

நகர்ப்புற பொது சேவையின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் பரிமாற்றங்களில் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தவும் பெருமளவிலான கணினிமயமாக்கம் செயல்படுத்தப்படுகின்றது. 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), 102 நகராட்சிகள், 7 மண்டல





நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள், 611 முன்னாள் பேரூராட்சிகள், 16 உதவி பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகங்கள், பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகம், திட்ட மேலாண்மை அலகு, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிலும் 2003-2004 ஆம் ஆண்டில் கணினி, மென்பொருள், வன்பொருள் மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் சரிவர நிர்மாணிக்கப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாநகராட்சிகள், இராஜபாளையம் நகராட்சி மற்றும் சென்னைப் பெருநகரப் பகுதிகளில் 2004-2005 ஆம் ஆண்டில் பூகோளத் தகவல் திட்டம் செயல்முறைக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் 2,027 அலுவலர்களுக்கு அடிப்படைக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய 18 பணிகளுக்கான மென்பொருள் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு 2003-2004 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது 2004-2005 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

### (viii) இயல்புநிலை கணக்கு முறை

இயல்புநிலை கணக்குகள் 102 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக), அமல்படுத்தப்பட்டுள்ளதால், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் இந்த முறையில் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டு வருகிறது. இவ்வகையான கணக்குகள் அனைத்து 611 முன்னாள் பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு திறம்பட அமலாக்கத்தில் உள்ளது.

### (ix) ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உலக வங்கியின் உதவியுடன் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வசிக்கும் மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), 102 நகராட்சிகள் மற்றும் 611 முன்னாள் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தேவையான சமுதாயக் கழிப்பறை கட்டுவதுடன்,

[2004 ஜூலை 31

குளிப்பதற்கு மற்றும் துணி துவைப்பதற்கான வசதிகள் செய்து கொடுப்பதோடு, மின் விளக்கு, தண்ணீர், குப்பை சேகரித்தல், கழிவு நீர் வெளியேற்றுதல் மற்றும் சாலை வசதி போன்றவை செய்து தரப்படுகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான 5 மாநகராட்சிகளிலும் (சென்னை நீங்கலாக), 102 நகராட்சிகளிலும் இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.52.50 கோடி மதிப்பீட்டில், 525 சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

முன்னாள் பேரூராட்சிகளில், ரூ.18.72 கோடி மதிப்பீட்டில் பெண்களுக்கான கழிப்பிடங்கள் 720 கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பயனாளிகளை ஒரு குழுவாக ஏற்படுத்தி அவர்களைத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே ஈடுபடுத்தி, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் கொடுத்து, அவர்கள் மூலமாக இந்த சுகாதார வளாகங்களைப் பராமரிக்கச் செய்வதே இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான அம்சமாகும்.

இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டக் காலத்திற்கு பின்பும் இந்த சுகாதார வளாகங்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, பயனாளிகளுக்குத் தேவையான பயிற்சிகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆதாரவளங்களைத் தொடர்ந்து கிடைக்கச் செய்யும் எண்ணத்துடன் மூன்றாம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ரூ.750 கோடி உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின், சாதனைகளைத் தொகுத்து, தொடர்ந்து தமிழ்நாட்டு உள்ளமைப்பு வசதிகளை மேம்படுத்துவதென உத்தேசிக்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். நிறுவன மேம்பாட்டுக் கூறு மற்றும் நகர்ப்புற அடிப்படை வசதித் திட்டங்களுக்குக் கடன் வழங்கும் கூறு ஆகியவற்றின் மூலமாக இக்குறிக்கோளை அடைய முடியும்.

### தகுதி வளர்த்தல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் நிதி மற்றும் தொழில் நுட்பத் தகுதிகளை நிறுவன மேம்பாட்டுக்கூறின்கீழ் நகர்ப்புற சீர்திருத்தத்தின்கீழ் பலப்படுத்துதல்.



2004 ஜூலை 31]

### நிதி அளித்தல்

நகர்ப்புற அடிப்படை வசதித் திட்ட (குடிநீர் வழங்கல், கழிவு நீர் மற்றும் துப்புரவு, திடக்கழிவு மேலாண்மை, சாலைகள், போக்குவரத்து இணைப்புகள், மழை நீர் வடிகால் மற்றும் தெருவிளக்குகள் முதலியன) முதலீடுகளுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்கி, மூலதன மானியத்தின் மூலமாக குறைந்த வருவாயிலான அருகிருப்போர் முதலீட்டுக்கு ஊக்கமளித்தல் மற்றும் நகர்ப்புற முதலீட்டிற்குத் தேவையான நிதி ஆதாரங்களை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் மற்றும் நகராட்சிப் பத்திரங்கள் வெளியீடுகள் மூலமாகப் பெறுதல்.

## IX. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி

1. தமிழ்நாட்டின் அதிவேக நகரமயமாக்கல் தரமான உள்கட்டமைப்பு வசதிகளின் தேவையை மிகவும் அதிகரிக்கச் செய்துள்ளது. மேலும், நகர உள்கட்டமைப்புப் பணிகள் அதிநவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்படுவதால் அவற்றிற்குக் குறைந்த கட்டணத்துடன்கூடிய நீண்ட கால நிதி தேவைப்படுகிறது. நகர்ப்புற உள்கட்டமைப்பிற்கான நிதித் தேவைகள் மிக அதிகமாக இருப்பதால் தனியார் முதலீட்டின் பங்களிப்பு இன்றியமையாததாகிறது. உள்கட்டமைப்பு முதலீட்டிற்குத் தேவைப்படும் நிதிக்கும் தற்போதுள்ள நிதி வசதிக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கும், நகர்ப்புற உள்கட்டமைப்புகள் தமிழ்நாடு அரசு ஒரு முன்னோடி நடவடிக்கையாக பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக **ICICI, HDFC** மற்றும் **IL & FS** பங்களிப்புடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தை உருவாக்கி, இது நகர உள்கட்டமைப்புக்கு காப்புறுதி இல்லாமல் நீண்ட கால நாள் கடன் வழங்கவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மூலதனச் சந்தையின் நிலவரத்தினை உணர்ந்து செயலாற்றவும் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நிதி மேலாளராகும்.

2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள் இரண்டு வகைப்பட்டதாகும். அவை, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான மூதலீட்டினைப் பெற உதவுவது மற்றும் நகர்ப்புற மக்கட் தொகை இடையே உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு தரமான வசதிகளுக்கு நிதியுதவி வழங்குதல்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் கீழ்க்கண்டவற்றை நிறைவேற்ற குறிக்கோள்களாகக் கொண்டுள்ளது:

(அ) நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல்

(ஆ) பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி (Joint venture) மூலமாக, உள்கட்டமைப்புப் பணிகளில் தனியார் பங்கேற்க உதவுதல்

(இ) நகர்ப்புற ஏழை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில் மானிய நிதி (Grant fund) எனும் துணைத் திட்டத்தைச் செயல்படுத்துல்

(ஈ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்

3. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், திட்டக் காலத்திற்குள் நகராட்சிகளுக்கு நிரந்தர சொத்துக்களை உருவாக்குவதற்கு 75 சதவீத நிதி வழங்கி உள்ளதால் இந்நிதியம் ஒரு வெற்றிகரமான திட்டமாகும். இந்நிதியம் இதுவரை ரூபாய் 1,070 கோடி மதிப்பிலான 192 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ரூபாய் 604.84 கோடியை கடனுதவியாக வழங்கியுள்ளது. இந்த நிதியம், வணிகத் திட்டங்களான, வணிக வளாகம் மற்றும் சந்தை வளாகங்களுக்கும் மற்றும் சமுதாய நோக்குடைய திட்டங்களான குடிநீர்த் திட்டங்கள், மழை நீர் வடிகால், திடக்கழிவு நிர்வாகம் மற்றும் பாதாளச் சாக்கடைகளுக்கு ஒப்புதலும், கடனுதவியும் அளித்துள்ளது. 2004- 2005 ஆம் ஆண்டில் ரூ. 193 கோடி மதிப்பீட்டிலான 10 நகர்ப்புறத் திட்டங்களை ரூ. 50 கோடி ஒப்புதல் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் துறை வாரியான முதலீடுகளின் பட்டியல் (ஒப்புதல்)

| துறை | ரூ. கோடியில் | சதவீதத்தில் |
|---|---|---|
| பாலம் மற்றும் சாலைகள் | 292.97 | 48 |
| பேருந்து நிலையம் மற்றும் சந்தைகள் | 21.57 | 4 |
| கழிவு நீர் மற்றும் துப்புரவு | 228.51 | 38 |
| குடிநீர் விநியோகம் | 50.67 | 8 |
| மழை நீர் வடிகால் | 5.63 | 1 |
| மற்றவை | 5.49 | 1 |
| மொத்தம் | 604.84 | 100 |

**4. மூலதனச் சந்தைகளை அணுகல்**

(அ) நகர்ப்புற உள்கட்டமைப்பிற்கான நிதியைத் திரட்ட இரண்டு விதமான புதிய வழிமுறைகளை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. முதலாவதாக மதுரை மாநகராட்சியின் உள்கட்ட சாலைக்கான கடன் பத்திரங்கள் வெளியிட்டது ஆகும்.



வெளியிடப்பட்ட கடன் பத்திரத்தின் மதிப்பு ரூ.29.20 கோடியாகும். மூலதனச் சொத்தினை (Assets) உருவாக்கப் பெறப்பட்ட கடனை அடைக்க மாநகராட்சியின் பொது நிதியைப் பயன்படுத்தாது. அந்தச் சொத்தின் மூலம் கிடைக்கும் வருவாயினைப் பயன்படுத்தும் வகையில் மதுரை மாநகராட்சியில் வெளியிடப்பட்ட கடன் பத்திரம் வெளியிடுவது இதுவே முதன்முறையாகும்.

(ஆ) இரண்டாவதாக, குடிநீர் மற்றும் சுகாதார பொது நிதி (WSPF) யை உருவாக்கியதன் மூலம் நகர்ப்புற அடிப்படைத் தேவைகளை ஒன்று திரட்டி வெளிச்சந்தையில் உடன் பெற உதவியது. சிறிய மற்றும் நடுத்தர நகராட்சிகள் தங்களின் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் கூட்டாக மூலதனச் சந்தையை அணுக, குடிநீர் மற்றும் சுகாதார பொது நிதியை தமிழ்நாடு அரசு அமைத்தது. முதலில் ரூபாய் 30.41 கோடிக்கான கடன் பத்திரங்களை வெளியிட்டதன் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் கடன்களை அடைப்பதற்கு வேண்டிய நிதியில் பெருமளவு சேமித்து, அதனைப் பிற மேம்பாட்டிற்குச் செலவழிக்க வழிவகை செய்தது. அமெரிக்க பன்னாட்டு வளர்ச்சி முகமை கடன் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்ட அசல் தொகையில் 50 சதவீதம் வரைக்கும் காப்புறுதி அளித்துள்ளது. இப்பொது நிதி இந்தியாவிலேயே முதலாவதாக உருவாக்கப்பட்டதாகும்.

(இ) சென்னைக் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மூலதனச் சந்தையில் ரூபாய் 42 கோடிக்கான கடன் பத்திரங்களை வெளியிட தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம் உதவி செய்துள்ளது. மூலதனச் சந்தையில் வரியில்லாக் கடன் பத்திரங்களை இந்நிதியம் வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.

## X. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

1. தமிழகத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பல்வேறு அரசு அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு தமிழக அரசால் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புத் திட்டங்கள், சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், சிறிய மேம்பாலங்கள் அமைத்தல், வணிக வளாகம் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

மேலும் இந்நிறுவனம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களான மகாநகரத் திட்டம் மற்றும் சிறிய, நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு முகமை நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது.

**சென்னை மகாநகரத் திட்டம் (MEGA CITY PROGRAMME)**

2. நகர்ப்புறங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு மத்திய அரசானது மகாநகரத் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. மும்பை, கொல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய பெருநகரங்கள் இத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இத்திட்டம் சென்னைப் பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி, 8 நகராட்சிகள் மற்றும் 28 முன்னாள் பேரூராட்சிகள் ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின் மொத்தச் செலவில் 50 சதவீதம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மானிய அளவு முறையே மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து சமபங்காகப் பெறப்படுகிறது. எஞ்சியுள்ள 50 சதவிகிதத்திற்கான நிதி, நிதி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தோ செயல்படுத்துவதாக அமையும். இத்திட்டம் தொடங்கிய காலகட்டத்திலிருந்து இதுநாள் வரை மத்திய அரசானது, ரூ.189.71 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

**சாதனைகள்**

கடந்த 2003-2004 ஆம் நிதி ஆண்டில் இந்நிறுவனமானது ரூ.128.36 கோடி மதிப்புள்ள திட்டங்களைச் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் செம்மஞ்சேரி மற்றும் தள்ளான்குப்பம் குடிசை மேம்பாட்டுத் திட்டம், சென்னை மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளில் வெள்ளத் தடுப்புத் திட்டம், தாம்பரம் மற்றும் பல்லாவரம் நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை அடங்கும். நடப்பு நிதியாண்டில் ரூ.275.00 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அவற்றில் ரூ.138.00 கோடி மகாநகரத் திட்டத்தின் பங்காகும்.

**சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (IDSMT SCHEME)**

3. நல்ல வாழ்க்கைச் சூழலைப் பெறும் நோக்கத்தோடு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலிருந்து மக்கள் பெரு நகரங்களுக்கு இடம்





பெயர்கின்றனர். மத்திய அரசானது சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவற்கும், அங்கு வாழும் சூழலை அதிகரிப்பதற்கும் இத்திட்டத்தை உருவாக்கியது. இத்திட்டமானது 1979-80-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை தமிழகத்திலுள்ள 144 நகரங்களில் மொத்தம் ரூ.216.01 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**சாதனைகள்**

கடந்த 2003-2004 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசானது 18 நகரங்களுக்கு ரூ.31.29 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. 2004-2005-ல் ரூ.46.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (TUFIDCO INFRASTRUCTURE SCHEME)**

4. மகாநகரத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் ஒரு பகுதியாக இந்நிறுவனம் ஒரு நிதித் திட்டத்தை வகுத்துள்ளது. உள்ளாட்சி மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் உள்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான 50 விழுக்காடு செலவினைப் பெறுவதற்கு வங்கிகள் மற்றும் மற்ற நிதி நிறுவனங்களை அணுக வேண்டியுள்ளது. இதனால் ஏற்படும் அதிக வட்டிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு இந்நிறுவனமானது தனது சுயநிதியிலிருந்து மிகவும் குறைந்த வட்டிக்கு நிதி வழங்குகிறது. இந்நிதியுதவி அளிக்கும் முன் இந்நிறுவனம் ஒவ்வொரு திட்டங்களையும் திட்டவாரியாக மதிப்பீடு செய்து நிதி வழங்குகிறது. பல தடவைகளில் அத்தகைய பணத்திற்கு அளவு கடந்த வட்டி இல்லையென்றாலும், உயர்ந்த வட்டி விகிதத்தை அளிக்க வேண்டியுள்ளது.

**சாதனைகள்**

கடந்த ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.477.73 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு இந்நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டு (2004-2005-ல்) ரூ.500.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

## XI. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம்

1. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகமானது, மாநில அரசு கட்டமைப்பு குத்தகை நிதியாளர்கள் நிறுவனம் (IL & FS) மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) முதலிய அமைப்புகளின் முயற்சியால் நோக்கு நிறுவனமாக 1995 ஆம் வருடம் பிப்ரவரி மாதம், இந்திய கம்பெனிச் சட்டம், 1956-ன்கீழ் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டத்தினைச் (TAD) செயல்படுத்துவதாகும். இந்திய நாட்டிலேயே அரசு மற்றும் தனியார் இணைந்து குடிநீர் வழங்குவதற்காக நிறுவப்பட்ட முதல் திட்டம் இதுவே ஆகும்.

### திட்டத்தின் நோக்கம்

2. இத்திட்டத்தின் மூலம், திருப்பூரில் உள்ள சாயப்பட்டறை மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் உள்ளூர் திட்டக் குழு பகுதியிலுள்ள திருப்பூர் நகராட்சி, 15 கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் 3 முன்னாள் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ளவர்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காகவும், மேலும் வழிப்பாதையில் அமைந்துள்ள 5 ஒன்றியங்களுக்கும் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அடிக்கல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002-ல் ஜூன் மாதம் 20 ஆம் நாள் நிறுவப்பட்டது.

இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணியானது நவம்பர் 2002-ல் தொடங்கப்பட்டு மார்ச் 31, 2004 வரை 50 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான பணிகள் அனைத்தும் திட்டமிட்டபடி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான முதல் நிலைப் பணிகள் ஏப்ரல் மாதம் 2005-ல் முடிக்கப்பட்டு தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்கப்படும். இரண்டாவது மற்றும் இறுதி நிலைப் பணிகள் அக்டோபர் 2005-ல் முடிக்கப்பட்டு திருப்பூர் நகராட்சி மற்றும் இதர கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும்.

### நிதி பற்றிய குறிப்பு

3. இத்திட்டத்திற்குத் தேவையான மொத்தச் செலவான ரூ.1023 கோடியானது கீழ்க்காணும் வகையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:



2004 ஜூலை 31]

| | |
|---|---|
| சம பங்கு | ரூ.322.70 கோடி |
| சாதாரணக் கடன் | ரூ. 86.50 கோடி |
| கடன் | ரூ.613.80 கோடி |
| மொத்தம் .. | ரூ.1023.00 கோடி |

பிணைப் பத்திரமானது கடன் உதவி செய்தவர்கள் பெயரில் 2003 பிப்ரவரி 20-ல் இயற்றப்பட்டது. இத்திட்டத்திற்காக மார்ச் 31, 2004 வரை ரூ.497 கோடி செலவிடப்பட்டுள்ளது. தமிழக அரசிடமிருந்து பெறப்பட்ட சம பங்குத் தொகையான ரூ.50 கோடியை முழுவதும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## XII. குடிநீர் வழங்கல்

மனித நலம் மற்றும் அபிவிருத்தி ஆகியவை பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைச் சார்ந்துள்ளது. அடுத்தடுத்த திட்டக் காலங்களில், குடிநீர் வழங்குதலுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது, சிறப்பான குடிநீர் வசதியைப் பெறுவதில் பிரதிபலித்தது. குடிநீர்த் தேவைக்கும், குடிநீர் வழங்குதலுக்கும் இடையே உள்ள வேறுபாடு, நீராதாரங்களின் தட்டுப்பாடு மற்றும் நிலைத் தன்மை போன்ற சவால்களை தற்போது எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

2. மாநிலத்தில் பெரும் பகுதி பாறைப் பகுதியாக இருப்பதால், நிலத்தடி நீர் இருப்பை உறுதி செய்ய முடியாத நிலை உள்ளது. கடந்த 5 வருடங்களாக தொடர்ந்து பருவமழை பொய்த்து விட்டதாலும், நிலத்தடி நீரை அதிக அளவில் பயன்படுத்தியதாலும், சில குறிப்பிட்ட பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட வழி வகுத்தது. எனவே, நிலைத்த நீராதாரம் நீடிக்கும் வகையில் மழை நீர் சேமிப்பு மூலம் நீராதாரங்களை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள அரசு அதிக முன்னுரிமை கொடுத்து வருகிறது. பெருகி வரும் மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இருப்பில் உள்ள நீராதாரங்களை சிறப்பான முறையில் மேலாண்மை செய்ய அரசு உறுதி கொண்டுள்ளது.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் நீங்கலாக தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனமாகும். இவ்வாரியம், மாவட்ட நிர்வாகம், மாநில அரசு மற்றும்

மத்திய அரசின்கீழ் உள்ள பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றுவதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

***2003-2004 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல் சாதனைகள்:***

**4. ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்:**

2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் ரூபாய் 471.28 கோடி செலவில் செயலாக்கப்பட்டன.

- ➢ இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கும் மேலாக 6,510 ஊரகக் குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டம் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி அளிக்கப்பட்டது. இவற்றில் 1,577 ஊரகக் குடியிருப்புகளுக்கு துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் மூலம் 2003-2004 ஆம் ஆண்டில் அரசு ஒதுக்கிய ரூபாய் 48.69 கோடி நிதியின் மூலம் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.
- ➢ 2003-2004 ஆம் ஆண்டு தொடக்கத்தில் குடிநீர் வசதி பெறாமல் இருந்த 5,000 அரசுப் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.
- ➢ ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்கள் படும் சிரமங்களை நீக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் 2003-2004 ஆம் ஆண்டில், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 10,000 இடங்களுக்கும் மேலாக 10,135 இடங்களில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் 4,000 சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குயினர் குடியிருப்புகளில் அமைக்கப்பட்டன.
- ➢ சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் குடிநீர் வசதி அளிக்க 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 73.31 கோடி செலவிடப்பட்டது.



**பகுதி சீரமைப்புத் திட்டம்:**

மத்திய அரசின் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (SRP), 6 முன்னோடி மாவட்டங்களில் (கோயம்புத்தூர், வேலூர், கடலூர், பெரம்பலூர், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர்) 9,630 குடிநீர்த் திட்டங்கள் ரூ.190.48 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பகுதி சீரமைப்புத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. நாட்டின் ஒட்டுமொத்த செயல் மற்றும் நிதிச் சாதனையில் தமிழகத்தின் செயல்பாடு மட்டும் 26 விழுக்காடாகும். பகுதி சீரமைப்புத் திட்டம் 31-3-2004-ல் நிறைவுபெற்றது.

பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் பணி முன்னேற்ற விவரங்கள் கீழ்க்கண்டவாறு:—

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரங்கள் | முன்னோடி மாவட்டங்கள் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கோயம்புத்தூர் | வேலூர் | கடலூர் | பெரம்பலூர் | காஞ்சிபுரம் | விருதுநகர் | |
| 1 | செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களின் மதிப்பீட்டுத் தொகை | 3988.24 | 4783.57 | 4284.38 | 3472.61 | 3162.93 | 3062.52 | 22754.25 |
| 2 | மக்களின் பங்களிப்பு வசூல் செய்யப்பட்ட தொகை | 457.43 | 395.66 | 425.78 | 373.30 | 306.99 | 280.25 | 2239.41 |
| 3 | செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 1650 | 3411 | 2344 | 1184 | 536 | 505 | 9630 |
| 4 | நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 1650 | 3411 | 2344 | 1184 | 536 | 505 | 9630 |
| 5 | மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்ட மொத்த நிதி | 3366.00 | 3701.20 | 3366.00 | 2934.30 | 2856.00 | 1619.00 | 17842.50 |
| 6 | மொத்தச் செலவினம் | 3844.00 | 4104.17 | 3823.69 | 3372.00 | 2015.50 | 1888.86 | 19048.22 |

**சுவஜல்தாரா திட்டம்**

2003-2004 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதியுதவியுடன்கூடிய "சுவஜல்தாரா" திட்டத்தின்கீழ் 1,200 குடியிருப்புகளுக்கு ரூ. 50 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. 830 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.20.72 கோடி மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை செலவிடும் வகையில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மீதமுள்ள குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்சத் தேவைத் திட்டம் (MNP) மற்றும் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் (ARWSP) செயலாக்கப்பட்டுவரும் குடிநீர்த் திட்டங்கள் விரைவில் முடிக்கப்படும்.

பிரதம மந்திரியின் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை நீடிக்கும் வகையில் ரூ.9.00 கோடி நிதி ஒதுக்கீட்டில், தடுப்பணைகள், நீர் செறிவூட்டும் குழிகள், கசிவு நீர்க் குட்டைகள் முதலிய 391 கட்டமைப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதேபோல், தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியோடு 180 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ.4.64 கோடி செலவில் திருவள்ளூர், தருமபுரி, தேனி, கோயம்புத்தூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**5. நகரக குடிநீர்த் திட்டங்கள்**

- கடந்த ஆண்டு கொள்கை விளக்க அறிக்கையில் கண்டபடி, 60 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ. 165.06 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட 6 நகரங்களும் அடங்கும்.
- 2003-2004 ஆம் ஆண்டில் அறிவித்தபடி, கயத்தார், கழுகுமலை, எட்டயபுரம், ஒரத்தநாடு மற்றும் நத்தம் ஆகிய நகரங்களுக்கு குடிநீர்த் திட்டப் பணிகள் துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



- சட்டமன்றத்தில் அறிவித்தபடி, 2003-2004 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு மானூர் மற்றும் 400 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 79.70 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டப் பணிகள் அனைத்தையும் ஜுன் 2005-ல் நிறைவேற்றி பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.
- 2003-2004 ஆம் ஆண்டில் திண்டிவனம் நகராட்சி குடிநீர்த் திட்டம் ரூ. 11.59 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதலளிக்கப்பட்டு திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. திட்டப் பணிகள் அனைத்தையும் செப்டம்பர் 2005-ல் நிறைவேற்றி பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இராஜபாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம் ரூ.22.50 கோடி மதிப்பீட்டில் மே 2003-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகளை டிசம்பர் 2005-க்குள் நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது.
- விருத்தாசலம், சங்கரன்கோவில் மற்றும் சிவகாசி நகராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திட்ட உருவாக்கம்**

2003-2004 ஆம் ஆண்டில், திருச்சி மாநகராட்சி, 10 நகராட்சிகள், 41 முந்தைய நகரப் பேரூராட்சிகள், 27 முந்தைய ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 5,306 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 95 குடிநீர்த் திட்டங்கள் ரூ.598.06 கோடி மதிப்பீட்டில் 47.37 இலட்சம் மக்கள் பயனபெறும் வகையில் திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களில் 5 நகராட்சிகள், 23 முந்தைய நகரப் பேரூராட்சிகள், 12 முந்தைய ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 1,299 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 35 குடிநீர்த் திட்டங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மீதமுள்ள குடிநீர்த் திட்டப் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

[2004 ஜூலை 31

## 6. 2003–2004 ஆம் ஆண்டின் சட்டமன்ற அறிவிப்புகளின் செயல் சாதனைகள்

2003-2004 ஆம் ஆண்டில், ரூ.22.00 கோடி மதிப்பீட்டில், நகரப் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் 17 முந்தைய நகரப் பேரூராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, 6 முந்தைய நகரப் பேரூராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 11 முந்தைய நகரப் பேரூராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பணிகள் டிசம்பர் 2004-க்குள் நிறைவேற்றப்படும்.

2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 65 கோடி மதிப்பீட்டில் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, இவற்றில் 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் வேர்கிளம்பி, பொன்மணி, குலசேகரம், குமாரபுரம், விளாவூர், கோதைநல்லூர், நெய்யூர் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதி ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 44 குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 2.27 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, பயனுக்குக் கொண்டு வரப்பட்டது. மீதமுள்ள 6 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

2003-2004 ஆம் ஆண்டில் அறிவித்தபடி, 58 குடிநீர்த் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆய்வு முடிக்கப்பட்ட இந்தக் குடிநீர்த் திட்டங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு:—

i) ஒரு மாநகராட்சி (திருச்சி-ஸ்ரீரங்கம்), 2 நகராட்சிகள் (அருப்புக்கோட்டை, செங்கல்பட்டு), 25 முந்தைய பேரூராட்சிகள் மற்றும் 534 ஊரகக் குடியிருப்புகளில் 10,97,806 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.74.70 கோடி மதிப்பீட்டில் 33 குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ii) மீதமுள்ள குடிநீர்த் திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 31]

## 7. இடர்நிவாரணப் பணிகள்

கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ந்து பருவ மழை பொய்த்ததன் காரணத்தினால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து குடிநீரின் தரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சில பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டது. மாநில அரசு, இடர்நிவாரண நிதியின்கீழ் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 99.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இடர்நிவாரண நிதியின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு நீராதாரங்களை மேம்படுத்துதல், கூடுதலாக நீராதாரம் தோற்றுவித்தல், குழாய் நீட்டிப்பு, மின்னிறைப்பான்களைப் பழுதுபார்த்தல், உதிரிப் பாகங்கள் வாங்குதல், ஜெனரேட்டரை வாடகைக்கு எடுத்தல், தனியார் நீரர்தாரங்களைக் குத்தகைக்கு எடுத்தல், சிறு மின்னிறைப்பான் திட்டங்கள், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல் ஆகிய பல்வேறு இடர்நிவாரணப் பணிகள் செயலாக்கப்பட்டன.

## 8. ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வழங்கு நிலை

1992 ஆம் ஆண்டு ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி நிலை அறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, மாநிலத்தில் மொத்தம் 66,631 ஊரகக் குடியிருப்புகள் இருந்தன. இவற்றில் 20,375 குடியிருப்புகள் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதிபெற்று 'முழுமையான குடிநீர்' வசதிபெற்றவையாகவும், 44,829 குடியிருப்புகள் 'பகுதியளவு குடிநீர்' வசதிபெற்றவையாகவும், 1,427 குடியிருப்புகள் 'குடிநீர் வசதியற்ற' குடியிருப்புகளாகவும் இருந்தன. பின்னர் செயலாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களினால் 2002 ஆம் ஆண்டில் பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளும், குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளும் முழு அளவு குடிநீர் வசதி பெற்றன. ஆயினும், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதிபெற்ற குடியிருப்புகள், நிலத்தடி நீராதாரங்களிலிருந்து அதிகப்படியான நீரை எடுத்தல், நீரின் தரம் பாதித்தல், பருவமழை பொய்த்தல் ஆகிய காரணங்களினால் குடிநீர் வசதி நிலை மீண்டும் குறைந்து, முழுவதும் குடிநீர் வசதி பெற்ற நிலையிலிருந்து, பகுதி அளவு அல்லது நிலைத்த நீராதாரமற்ற நிலைக்கு மாறின. எனவே, மார்ச் 2003 ஆம் ஆண்டு, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி நிலை பற்றி அறிவதற்கான புதிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்படி, மாநிலத்தில் 81,787 குடியிருப்புகள் தற்போது உள்ளன எனவும், அவற்றில் 1-4-2004 நிலவரப்படி, 35,727 குடியிருப்புகள் போதுமான அளவு குடிநீர் வசதி பெற்றவையாகவும் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் மற்றும் அதற்கு மேலும்), 36,777

[2004 ஜுலை 31

குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவையாகவும் (10 லிட்டரிலிருந்து 39 லிட்டர் வரை) 9,283 குடியிருப்புகள் நம்பகத்தன்மையற்ற அல்லது பல்வேறு வகையில் நீரின் தரம் பாதிக்கப்பட்டவையாகவும் உள்ளன. பகுதியளவு குடிநீர் வசதிபெற்ற மற்றும் நம்பகமான குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

### 9. குடிநீர் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

மக்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பான, குடிப்பதற்கு உகந்த குடிநீர் வழங்குவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் மாநிலம் முழுவதும் 28 மாவட்ட அளவிலான குடிநீர்ப் பரிசோதனை நிலையங்களும் ஒரு மாநில அளவிலான பரிசோதனைக்கூடமும் இயங்கி வருகின்றன. இந்த நீர்ப் பரிசோதனை நிலையங்களில் குடிநீரின் தரம் தொடர்ந்து குறிப்பிட்ட கால அளவில் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 422 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் வழங்கப்படும் குடிநீரும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பரிசோதனை செய்யப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் 'டானிடா' நிதி உதவியோடு கீரப்பாளையம் ஒன்றியத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராம அளவிலேயே குடிநீரின் தரத்தைக் கண்காணிக்கும் ஒரு திட்டமான "குடிநீர் தரக் கட்டுப்பாடு திட்ட"த்தைச் செயல்படுத்தியுள்ளது. பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், ஊராட்சி அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு, அந்தந்தக் கிராமத்திலேயே கள ஆய்வு உபகரணங்களை உபயோகித்து குடிநீர்த் தரம் பரிசோதனை செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 18-2-2004 அன்று முதல் குடிநீர் சோதனைத் திட்டம் தொடங்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், 'குடிநீர்ப் பரிசோதனை தினம்' என்று அறிவிக்கப்பட்டது. கிராம அளவில் குடிநீர்ப் பரிசோதனை செய்வதில் மேற்கொண்ட இந்த முயற்சி நல்ல பலனளித்ததால், குடிநீர்த் திட்ட நீராதாரங்களின் தரத்தை சிறப்பாகக் கண்காணிக்கும் வகையில் இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும்.

### இந்திய தரக் கட்டுப்பாடு சான்றிதழ் 9001 : 2000

சென்னையில் இயங்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மாநில அளவிலான நீர்ப் பரிசோதனைக்கூடத்திற்கு மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின்கீழ் இயங்கும் தர நிர்ணயம், பரிசோதனை மற்றும் தரச் சான்றிதழ் இயக்குநகரத்தால் (STQC) இந்திய



2004 ஜுலை 31]

தரக் கட்டுப்பாடு சான்றிதழ் 9001 : 2000 வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே அரசினால் நிர்வகிக்கப்படும் நீர்ப் பரிசோதனைக் கூடங்களில் இந்திய தரக் கட்டுப்பாடு சான்றிதழ் பெற்ற முதல் பரிசோதனைக்கூடமாக இது திகழ்கின்றது. மேலும், இந்தப் பரிசோதனைக் கூடத்தை தமிழ்நாட்டின் வழிகாட்டிப் பரிசோதனைக்கூடமாக அங்கீகரிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### 10. மழை நீர் சேகரிப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2003-2004 ஆம் ஆண்டில் துவக்கி வைக்கப்பட்ட மழை நீர் சேகரிப்புத் திட்டம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகி, இந்தியாவிலேயே அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களின் மேற்பரப்பில் இருந்து சேகரிக்கப்படும் மழை நீர்க் கட்டமைப்புகள் மற்றும் நிலத்தில் வழிந்தோடும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் 100 விழுக்காடு நிறைவேற்றியுள்ள ஒரே மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. இந்த மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளால் வடகிழக்குப் பருவமழை காலத்தில் நிலத்தடி நீர்மட்டம் 0.5 மீட்டர் முதல் 6.00 மீட்டர் வரை உயர்ந்துள்ளது தெரிய வந்துள்ளது.

### 11. குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மை

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்குத் தேவைப்படும் குடிநீரின் அளவை அடிப்படையாகக் கொண்டு குடிநீர்த் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டாலும், ஒரு சில வருடங்களுக்குப் பிறகு நீராதாரங்களின் கொடு திறன் குறைவதினால் வடிவமைக்கப்பட்ட அளவைவிடக் குறைவான அளவு குடிநீர் வழங்கும் நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை நீடிக்கும் வகையில் தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள், நிலத்தடி தடுப்பணைகள், மழை நீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் முதலிய நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மையை நீர்செறிவூட்டும் முறையில் உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு தொழில்நுட்ப மையத்துடன் இணைந்து தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள், நீர்செறிவூட்டும் குழிகள் முதலிய மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்க 13,357 இடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதுவரை 7,980 இடங்களில் இத்தகைய நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5,377 இடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட உள்ளன.

[2004 ஜுலை 31

**12. 2004–2005 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்:**

**ஊரகக் குடிநீர்த் திட்டம்:**

நடப்பு நிதியாண்டில் 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படும். மத்திய அரசின் சுவஜல்தாரா திட்டத்தின்கீழ் மேலும் 2,783 குடியிருப்புகளுக்கான திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்கள் படும் சிரமங்களை நீக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 10,000 சிறு மின்னிறைப்பான் திட்டங்களை நடப்பாண்டில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் (RIDF-IX) நிதி உதவியோடு நடப்பாண்டில் 499 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ. 29.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் கிராமக் குடிநீர்த் திட்டங்களின் நிலைத்தன்மையை நீட்டிக்கும் வகையில் 400 மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ரூ. 11.00 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

பிரதம மந்திரியின் அறிவிப்பு திட்டத்தின்கீழ் 7,784 குடியிருப்புகளில் கையிறைப்பான் திட்டங்கள் ரூ.27.05 கோடி மதிப்பீட்டில் 10 விழுக்காடு பயனாளிகள்/ஊராட்சி பங்களிப்புடன் நிறைவேற்றப்படவுள்ளன.

பிரதம மந்திரியின் அறிவிப்பு திட்டத்தின்கீழ் 9,772 புராதன குடிநீராதாரங்களை சீரமைக்கும் பணிகள் ரூ. 14.90 கோடி மதிப்பீட்டில் 10 விழுக்காடு பயனாளிகள்/ஊராட்சி பங்களிப்புடன் செயலாக்கப்படும்.

ரூ. 1,024.98 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் இருந்து வரும் 47 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடப்பாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2004 ஜுலை 31]

2003-2004 ஆம் ஆண்டில் திட்ட ஒப்புதல் அளிக்கப்பட்ட 23 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ. 80.88 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2004-05 ஆம் ஆண்டில் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளை ரூ.662.36 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**13. ஊரகப் பகுதிகளில் நகர்ப்புற வசதிகளை அமைக்கும் திட்டம்**

சமமான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அடையவும், செயலாக்கம் மற்றும் சமுதாய உள்கட்டமைப்புகளில் நிலவும் வேறுபாடுகளை சரிப்படுத்தவும், ஊரகப் பகுதிகளில் நகரப் பகுதிகளுக்கு உள்ள கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. மக்கள் குடிமாற்றம் செய்யா வகையில் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மேலும், இத்திட்டமானது கிராமங்களில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு உந்துகோலாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 25 நகரங்களைச் சுற்றி அமைந்துள்ள 302 கிராமங்களை இத்திட்டப் பணிகளைச் செயலாக்குவதற்காக மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு அருகில் அமைந்துள்ள நகரங்களின் குடிநீர் வசதி நிலையை இந்த கிராமங்கள் பெறும் வகையில் பயனில் உள்ள குடிநீர்த் திட்ட வசதிகள் மேம்படுத்தப்படும்.

**14. நகரக் குடிநீர்த் திட்டங்கள்**

2004-2005 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்தில் இருந்து வரும் 101 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டப் பணிகள் தொடர்ந்து செயலாக்கப்படுவதுடன், மேலும் 50 நகரங்களுக்கான புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் ரூ. 101.17 கோடி மொத்த மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் 50 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ. 184.30 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**15. தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்**

10-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளை அடையும் வகையில் மக்களின் தேவை மற்றும் திட்டச் செலவினத்தில் பங்கேற்பு அடிப்படையில், ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பகுதியில்

ஒரு புதிய திட்டமான "தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்ட"த்தினைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை ரூ.3,500 கோடி மொத்த மதிப்பீட்டில், 2004-2005 ஆம் ஆண்டில் இருந்து 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்த உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

## 16. நீர்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

2004-2005 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வளர்ச்சி வங்கி **(NABARD)** நிதியுதவியோடு ரூ.38.00 கோடி மதிப்பீட்டில் 1,206 கட்டமைப்புகள் அமைப்பதற்கான கருத்துரு ஒப்புதல் அளிக்க பரிசீலனையில் உள்ளது.

நாகப்பட்டினம், இராமநாதபுரம் முதலிய கடலோர மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், கடல் நீர் உட்புகும் வாய்ப்புகள் தவிர்க்க முடியாததாக உள்ளது. தேவையான நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் கட்டுவதன் மூலம், கடலோர மாவட்டங்களில் கடல் நீர் உட்புகும் பிரச்சினையைத் தீர்க்கலாம். நில நீர் பற்றிய நிலையினைத் தெரிவு செய்து திட்டத்தினை உடனடியாக செயலாக்கும் வகையில் திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது.

'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியோடு மாநிலத்தில் ஒன்றியவாரியான குடிநீர் ஆதாரங்களின் ஒருங்கிணைந்த வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் தரம், திறன் மற்றும் எதிர்காலப் பயன்பாடு முதலிய குடிநீர் ஆதாரங்களின் அடிப்படைகள், குடியிருப்புகள் வரையிலான விரிவான விவரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளன. நீராதாரத்தைத் தோற்றுவிக்கவும், நீர் வளத்தைப் பாதுகாக்கவும், செயல் திட்டம், அதனை மேம்படுத்தும் பொருட்டும் நிலத்தடி நீர் வளம் உள்ள பகுதிகளையும், நீர்செறிவூட்டுவதற்கான பகுதிகளையும் தெரிவு செய்யும்பொருட்டும் விவரங்கள் மென்பொருளாகவும், கடினப் பொருளாகவும் களப் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 17. கழிவு நீரை மறுசுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்துதல்

கழிவு நீரின் பெரும்பகுதி உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. நீரைக் கடைசியாக வெளியேற்றுவதற்கு முன் முடிந்த வரையில் பல முறை திரும்பப் பயன்படுத்துதல் அவசியமாகிறது. கழிவு நீரை மீண்டும் உபயோகப்படுத்துவதற்கு மறுசுழற்சி செய்வது ஒரு சிறந்த வழியாகும். இது மேலும் பயன்படுத்திய நீரை சேமிப்பதற்கும் ஒரு வழியாகும்.





இந்த முறையை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் விரிவாக அமல்படுத்தும் வகையில் ஊக்குவிக்க அரசு தேவையான தகவல், கல்வி மற்றும் தொடர்பு முகாம்களைத் துவக்கத் திட்டமிட்டுள்ளது.

## 18. செயல்படுத்தப்படவுள்ள பெரிய அளவிலான புதிய குடிநீர்த் திட்டங்கள்

(i) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ. 30.38 கோடி மதிப்பீட்டில் 71,684 மக்கள் பயன்பெறும் வகையில் கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(ii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ. 49.93 கோடி மதிப்பீட்டில் 1,41,849 மக்கள் பயன்பெறும் வகையில் குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(iii) தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ. 69.21 கோடி மதிப்பீட்டில் 3,91,881 மக்கள் பயன்பெறும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 239 கடலோர/ஊரகக் குடியிருப்புகள், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த அருப்புக்கோட்டை, விருதுநகர், மல்லாங்கிணறு, காரியாப்பட்டி ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(iv) திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ. 32.00 கோடி மதிப்பீட்டில் 1,61,616 மக்கள் பயன்பெறும் வகையில் அச்சம்புதூர், ஆயக்குடி, பொன்பொழி, வடகரை, கீழ்பிடாகை மற்றும் செங்கோட்டை, தென்காசி, கீழப்பாவூர் மற்றும் கடையம் ஒன்றியங்களைச் சார்ந்த 126 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(v) திருவண்ணாமலை மாவட்டத்தில் சுமார் ரூ.8.41 கோடி மதிப்பீட்டில் 56,164 மக்கள் பயன்பெறும் வகையில் லாடவரம், வானபுரம் மற்றும் 89 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(vi) தருமபுரி மாவட்டத்தில் சுமார் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் 29,391 மக்கள் பயன்பெறும் வகையில் பி. மல்லபுரம் மற்றும் 28 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

[2004 ஜூலை 31

(vii) கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுமார் ரூ. 16.94 கோடி மதிப்பீட்டில் 1,52,308 மக்கள் பயன்பெறும் வகையில் திருப்பூர் மாஸ்டர் பிளான் குடிநீர்த் திட்டத்தின் கீழ் எடுப்புமுனை 1,2,3,4,4-அ மற்றும் 5-ன் மூலம் ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலை, பெருந்துறை, ஊத்துக்குளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பூர் ஒன்றியத்தைச் சார்ந்த 613 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## 19. ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ள பெரிய குடிநீர்த் திட்டங்கள்

(i) புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் 1,94,343 மக்கள் பயன்பெறும் வகையில் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், அரிமளம் மற்றும் மணல்மேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 685 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(ii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுமார் ரூ.105.00 கோடி மதிப்பீட்டில் 9,23,085 மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்டு கோயம்புத்தூர் குடிநீர்த் திட்டம் (நிலை 1).

(iii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுமார் ரூ.110.00 கோடி மதிப்பீட்டில் 8,70,582 மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்டு 24 முந்தைய பேரூராட்சிகள் மற்றும் 924 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (நிலை 2).

(iv) திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் 1,17,362 மக்கள் பயன்பெறும் வகையில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், மற்றும் வாசுதேவநல்லூர் ஒன்றியத்திலுள்ள 67 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(v) தேனி மாவட்டத்தில் சுமார் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் 1,48,606 மக்கள் பயன்பெறும் வகையில் கம்பம், கூடலூர், காமய்யகவுண்டன்பட்டி, புதுப்பட்டி, உத்தமபாளையம் மற்றும் அனுமந்தன்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் (கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டம்)



2004 ஜூலை 31]

(vi) திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் ரூ.16.60 கோடி மதிப்பீட்டில் 78,272 மக்கள் பயன்பெறும் வகையில் பாளையங்கோட்டை, நாங்குநேரி மற்றும் களக்காடு ஒன்றியங்களைச் சார்ந்த 185 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

## 20. தேசிய நதிநீர் மாசுபடுதலைத் தடுக்கும் திட்டம்

தேசிய நதிநீர் மாசுபடுதலைத் தடுக்கும் திட்டத்தின்கீழ் காவிரி ஆறு மாசுபடுதலைத் தடுக்கும் வகையில் திருச்சி, ஈரோடு, பவானி, குமாரபாளையம் மற்றும் பள்ளிப்பாளையம் நகரில் ரூ29.68 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் திருச்சி மற்றும் ஈரோடு நகரில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பள்ளிப்பாளையம் தவிர்த்து ஏனைய நகரங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்துப் பணிகளும் 12/2005-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 31-3-2004 வரை செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.15.74 கோடி ஆகும். இத்திட்டப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து 31-3-2004 வரை ரூ.15.41 கோடி பெறப்பட்டுள்ளது.

## 21. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் (5 புதிய நகரங்கள்)

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்சி, கரூர் மற்றும் இனாம் கரூர் ஆகிய நகரங்களில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டங்கள் ரூ.267.72 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்கள் மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்பு மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 22. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்–கொடைக்கானல் ஏரி பாதுகாக்கும் திட்டம்

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் ஏரி மாசுபடுதலைத் தடுக்கும் பணி மற்றும் ஏரியினை சீரமைக்கும் பணிகளுக்கான திட்டம் ரூ.9.13 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏரியில் கலக்கும் கழிவு நீரினைத் தடுத்து திருப்புதல் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"நுண் உயிரியல் முறையில்" ஏரியினை சீரமைக்கும் பணிகள் பொதுப் பணித் துறையினரால் ரூ.4.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதர பணிகளான பொது சுகாதாரக் கழிப்பிடம் மற்றும் குறைந்த செலவின கழிப்பிட வசதிகள் அமைக்கும் பணிகள் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் உள்ளாட்சி அமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகளுக்கு மத்திய அரசிடமிருந்து 31-3-2004 வரை ரூ.1.00 கோடி (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பங்கு மட்டும்) பெறப்பட்டுள்ளது. இந்நாள் வரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ.0.28 கோடியாகும். இத்திட்டத்தை 03/2005-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 23. மாவட்டத் தலைநகரங்களுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

2003-2004 ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளான 5 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள், 367 முந்தைய நகரப் பேரூராட்சிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைப்பதற்கான பெருந்திட்ட வரைவு ரூ.4,500 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டது. அதன்படி திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், வேலூர், திருவாரூர், ஈரோடு, திண்டுக்கல் ஆகிய 8 மாவட்டத் தலைநகரங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், நாமக்கல், உதகமண்டலம், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம், விருதுநகர், தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, மற்றும் தேனி ஆகிய 14 மாவட்டத் தலைநகரங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைப்பதற்கான, விரிவான திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனத்தால் (TNUIFSL) தயாரிக்கப்பட்டுள்ளது. சேலம் மற்றும் நாகர்கோவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.





நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 24. கணிப்பொறி மேலாண்மைத் திட்டம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போதைய கணினி மயமாக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்தும்பொருட்டு மத்திய அரசு ரூ.334.873 இலட்சங்களை பத்தாவது திட்டக் காலத்திற்கு நிதி ஒப்புதல் அளித்து முதல் தவணையாக மார்ச் 2004-ல் ரூ.100.46 இலட்சங்களை நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பெரும் பரப்பு வலையமைப்பை (WAN) பயன்படுத்தி மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களின் முக்கியச் செயல்பாடுகளை தனித்தியங்கு அமைப்பிலிருந்து (Standalone system) ஒருங்கிணைக்கப்பட்ட உடன் நிகழ் அமைப்பின் (Online System) மூலமாக இணைக்கப்படும்.

# XIII. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம்

## 1. சென்னை மாநகரின் தற்போதைய குடிநீர் வழங்கும் நிலை

கடந்த வருடம் தென்மேற்குப் பருவமழை சராசரிக்கும் குறைவாகவே இருந்துவிட்ட நிலையில் சென்னை மாநகர் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் பிடிப்புப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் வடகிழக்குப் பருவமழையும் முழுவதுமாகப் பொய்த்துவிட்டது. ஜனவரி 1, 2004 நாள்படி நீர்த்தேக்கங்களில் மொத்தக் கொள்ளளவில் 3.7 சதவிகிதத்திற்கு இணையான 272 மில்லியன் கன அடி நீர் இருப்பு மட்டும் இருந்தது. மேலும் 01-04-2004-ல் நீர் இருப்பு 198 மில்லியன் கன அடியாகவும் 01-06-2004-ல் 134.5 மில்லியன் கன அடியாகவும் இருந்தது. ஒரு நாள் விட்டு ஒரு நாள் வழங்கும் முறை துவங்கப்பட்டு, மிகுந்த இடர்பாடுகள் இல்லாமல் நீர் வழங்கலை செயல்படுத்த முன்னேற்பாட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ் சென்னை நகருக்கு ஒவ்வொரு வருடமும் 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்பட வேண்டும். ஆந்திரப் பிரதேசத்தின் நீர்த்தேக்கங்களிலும் குறைந்த அளவே நீர் இருந்ததால் சென்னை நகருக்கு நீர் வழங்க இயலவில்லை. எனினும் மாண்புமிகு

[2004 ஜூலை 31

முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கண்டலேறுவில் இருந்து குறைந்த அளவிலான குடிநீர் அனுப்பப்பட்டு, 08-03-2004 முதல் 20-04-2004 வரையிலும் "சீரோ" பாயிண்டில் 207.10 மில்லியன் கன அடி நீர் பெறப்பட்டது. அதன் பின்னர், கண்டலேறுவிலிருந்து வழங்கப்படும் குடிநீரின் அளவு இரண்டு நிலைகளில் அழுத்தம் கொடுத்தும் போதுமான அளவு இல்லாததால் உந்து விசை இயக்கங்கள் தொடர்ந்து செயல்படுத்த முடியவில்லை.

தற்போது சென்னை நகருக்கு கிணற்றுத் தளங்களிலிருந்தும் மற்றும் சென்னைக்கு 100 கி.மீ. வரையிலான பாலூர், மாமண்டூர், பூந்தமல்லி, திருமழிசை, பஞ்சட்டி, மீஞ்சூர், கன்னிகைப்பேர், கும்மிடிப்பூண்டி மற்றும் சுற்று எல்லைப் பகுதிகளிலிருந்தும் குடிநீர் ஊர்திகள் மூலம் 90 எம்.எல்.டி. குடிநீர் எடுத்து விநியோகிக்கப்படுகிறது. தற்போது சென்னைக் குடிநீர் வாரியம் நீர் கொண்டு வருவதை படிப்படியாக அதிகப்படுத்தி, 85 எம்.எல்.டி. அளவிற்கு வாடகை லாரிகள் மூலம் நீர் வழங்குகிறது. ஜூன் 2004-ன் இறுதியில் 2,663 எண்ணிக்கையிலான 10 கி.லிட்டர் மற்றும் 20 கி.லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரிகள் பணியில் அமர்த்தப்பட்டன. 11-06-2004-லிருந்து நெய்வேலி பகுதியில் இருந்து புதிய வீராணம் குழாய் மூலமாக கிணற்று நீர் சென்னை நகருக்கு வருவதால் இந்த அளவு படிப்படியாகக் குறைக்கப்படவுள்ளது.

இவை தவிர உள்ளூர் பகிர்மானத்திற்காக, 9 கி.லிட்டர் மற்றும் 6 கி.லிட்டர் கொள்ளளவு உள்ள 1,219 எண்ணிக்கையிலான குடிநீர் லாரிகள் மூலம் தற்போது நாள் ஒன்றிற்கு 11,400 நடைகளில் வழங்கப்பட்டு வருகிறது. நகரின் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ள நான்கு உவர் நீர் மறு சவ்வூடு நிலையங்கள் மூலமாக நாள் ஒன்றிற்கு 0.50 மில்லியன் லிட்டர் நீர் பெறப்படுகிறது.

**2. குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க அவசரத் திட்டம்**

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள 6 மில்லியன் நகர்ப்புற மக்களுக்கும் குறைந்தபட்சக் குடிநீர் வழங்குவதைக் கருத்தில்கொண்டு தோராயமாக ரூ.700 கோடி செலவில் அவசரத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அடுத்த வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக பல இடங்களில் இருந்து குடிநீர் ஊர்திகள் மூலம் கூடுதலான நிலத்தடி நீர் எடுத்து குறைந்தபட்ச உள்ளமைப்பு வசதிகளைச் செய்வதன் மூலம் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும், சரிசமமாகக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு



2004 ஜூலை 31]

செயல்பாட்டில் உள்ளது. இந்திய அரசு இதற்காக ரூபாய் 50 கோடிகள் ஏற்கெனவே முதல் உதவியாக அறிவித்துள்ளது. இதன் பல்வேறு உறுப்புகள் கீழ் வருமாறு:—

**(அ) கிணற்றுத் தளங்களில் பிரதானக் குழாய்களை மாற்றி அமைத்து பலப்படுத்துதல்**

ரூ.16.32 கோடி தோராய மதிப்பீட்டில் செங்குன்றம் அருகில் சுமார் 4.2 கி.மீட்டர் நீளத்திற்கு 700/700/900 மி.மீட்டர் விட்டமுள்ள குழாய்களைப் பதிப்பதன் மூலம் தற்போதுள்ள கிணற்றுத் தளங்களிலிருந்து வரும் 3 அனுப்பும் குழாய்களில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைதல், பணிகள் முடிவடைந்து விட்டன.

**(ஆ) தெற்குக் கரையோர நீரூற்று**

ரூ.0.09 கோடி தோராய மதிப்பீட்டில், கூடுதல் நீர் பெருக்குவதற்காக தெற்குக் கரையோர நீரூற்றை மறுசீரமைத்தல் பணிகள் முடிவுற்றன.

**(இ) நீரேற்று நிலையங்களை மறுசீரமைத்தல்**

ரூ. 0.50 கோடி தோராய மதிப்பீட்டில், புதிய மற்றும் பழைய மாகரல், மாதவரம் ஆகிய இடங்களில் உள்ள நீரேற்று நிலையங்களை (மின்னியல் பணிகள்) மறுசீரமைத்தல் பணிகள் முடிவுற்றன.

**(ஈ) பூண்டி கிணற்றுத் தளம்/ஏரியில் இருந்து குழாய் மூலம் சுத்திகரிக்கப்பட்ட/சுத்திகரிக்கப்படாத நீரை அனுப்புதல்**

3,423 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள பூண்டி நீர்த்தேக்கத்திற்கு அதன் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்தும், கிருஷ்ணா ஆதாரங்களில் இருந்தும் நீர் பெறப்படுகிறது. தற்போது பூண்டியில் இருந்து செங்குன்றம் ஏரிக்கு நீர் பேபி கால்வாய் மூலம் அனுப்பப்படும்போது ஆவியாகுதல், கசிதல் ஆகியவற்றினால் ஏற்படும் இழப்புகள் அதிகமாக உள்ளன. பூண்டியில் அனுப்பப்படுகின்ற நீர் செங்குன்றத்தில் 40 விழுக்காடு மட்டுமே கிடைக்கின்றது என மதிப்பிடப்படுகிறது. இந்த வறட்சியான சூழலில், நீரைச் சேமிப்பதற்காக இணைப்புக் கால்வாய் வழியாக பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து செங்குன்றம் ஏரி (300 எம்.எல்.டி நீர் சுத்திகரிப்பு நிலையம்) வரை 1000 மி.மீ. டி.ஐ. அனுப்பும் குழாய் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால் செங்குன்றத்தில் உள்ள 300 எம்.எல்.டி நீர் சுத்திகரிப்பு நிலையம் வரை

கிணற்றில் இருந்து நிலத்தடி நீரை அனுப்புவது மட்டுமின்றி பூண்டியில் மிகக் குறைவான நீர்க் கொள்ளளவு உள்ளபோது, அதாவது 100 எம்.எல்.டி. என்ற அளவில் பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து மேற்பரப்பு நீரை அனுப்பவும் உபயோகப்படும். மிகக் கடினமான நேரத்தில் பயன்தரக்கூடிய இத்திட்டத்தின் தோராயமான மதிப்பீடு ரூ.11650 இலட்சமாகும். இத்திட்டப் பணிகள் முடிக்கப்படும் தறுவாயில் உள்ளன.

**(உ) பூண்டி கிணற்றுத் தளத்தில் இருந்து கூடுதல் நிலத்தடி நீர் எடுத்தல் மற்றும் இணைப்புக் கால்வாய் வழியாக அனுப்புதல்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் நிலத்தடி நீர்ப் பிரிவு ஆய்வின்படி பூண்டி கிணற்றுத் தளம், அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் பூண்டி ஏரியிலிருந்து 300 எம்.எல்.டி. நீர் சுத்திகரிப்பு நிலையம் வரை அமைக்கப் போகும் குழாய்ப் பாதை வழியில் அமைந்துள்ள கிராமங்களான (1) புல்லரம்பாக்கம், (2) சிறுவானூர் மற்றும் (3) கன்னிகை ஆகிய இடங்களில் சுமார் 90 கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆகவே, தனியார் கிணறுகளில் இருந்து 30 எம்.எல்.டி. நீர் எடுக்கப்பட உள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட தனியார் விவசாயக் கிணறுகளை பிவிசி குழாய் மூலம் ஆறு வெவ்வேறு இடங்களில் உள்ள பொது கீழ்நிலைத் தொட்டிகளுடன் இணைக்கப்படும். 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பொது கீழ்நிலைத் தொட்டி ஆர்.சி.சி. கொண்டு உருவாக்கப்பட்டதும், 2 தகுந்த கொள்ளளவு கொண்ட சென்ட்ரிப்யூகல் விசைப்பம்புகள் (Boosters), மின்சார சாதனங்கள், ஹெட்டர் மேனிபோல்ட் (Header Manifold), வெளியேற்றும் குழாய் போன்றவையும் அமைக்கப்படவுள்ளது. மேற்கூறிய கீழ்நிலைத் தொட்டிகளிலிருந்து வெளியேறும் குழாயை ஏற்கெனவே அமைக்கப்பட்டு வரும் 1000 மி.மீ. விட்டமுள்ள பிரதானக் குழாயுடன் இணைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 600 இலட்சங்களாகும். தனியார் கிணறுகளை இணைக்கும் பி.வி.சி. இணைப்புகளுடன் மூன்று கீழ்நிலைத் தொட்டிகளின் பணி முடிவுற்று, முதல் வாரம் மே 2004-லிருந்து பயனுள்ள உபயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மற்ற மூன்று கீழ்நிலைத் தொட்டிகளின் பணி முடிவுற்று 1000 மி.மீட்டர் விட்டமுள்ள குழாய் பதிக்கும் பணி முடிவுறுவதற்காக நிலுவையிலுள்ளது.





**(ஊ) நெய்வேலி ஆற்றுப் படுகையில் இருந்து நிலத்தடி நீர் எடுத்து புதிய வீராணம் குழாய் வழியாக அனுப்புதல்**

கோடைக் காலத்தில் ஏற்படக்கூடிய கூடுதல் குடிநீர்த் தேவையை சந்திப்பதற்காக, அதாவது ஜூலை மாதம் வரை 60 எம்.எல்.டி. நீரை அனுப்புவதற்காக சென்னைக் குடிநீர்ப் பெருக்கத் திட்டம் 1-ன் பாதை வழியாக நெய்வேலி ஆற்றுப்படுகையில் இருந்து நிலத்தடி நீர் எடுக்க ஆழ் துளைக் கிணறுகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 30 கி.மீட்டர் தூரத்திற்கு சேத்தியாப்தோப்பு அருகே உள்ள பரவனார் ஆற்றிற்கும், பண்ருட்டி அருகே கடிலம் ஆற்றிற்கும் நடுவே 45 ஆழ்துளைக் கிணறுகள் கட்டுவதற்குப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் மொத்தச் செலவினம் ரூ.4,200 இலட்சங்களாகும். புதிய வீராணம் திட்டத்தின்கீழ் 11-06-2004-லிருந்து சென்னைக்கு இந்த ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து ஆரம்பமாக 10 எம்.எல்.டி. குடிநீர் வழங்கல் எனத் துவங்கப்பட்டு படிப்படியாக 60 எம்.எல்.டி. என உயர்த்தப்பட்டுள்ளது.

**(எ) ஆழ்துளைப் பம்புகள் (ஐ.எம்.II பம்புகள்):**

ரூ..6.00 கோடி தோராய மதிப்பீட்டில் சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் 1,250 ஆழ்துளைப் பம்புகள் வாங்கி அமைக்கும் பணிகள் முடிவுற்றன.

**(ஏ) தொலைவில் உள்ள ஆதாரங்களில் இருந்து நீர்வரத்து**

ரூ..297.00 கோடி தோராய மதிப்பீட்டில் தொலைவில் உள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களில் இருந்து 10 மாதங்களுக்குத் தண்ணீர் கொண்டு வருதல், நீரேற்று நிலையங்களில் இருந்து பகிர்மான அமைப்புகளுக்குப் பகிர்ந்தளித்தல் மற்றும் விவசாயக் கிணறுகளை வாடகைக்கு அமர்த்துதல் போன்ற செலவினங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

**(ஐ) எச்.டி.பி.இ. தொட்டிகள்**

ரூ..3 கோடி தோராய மதிப்பீட்டில் சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் 2,000 எண்ணிக்கை எச்.டி.பி.இ. தொட்டிகள் வாங்கப்பட்டு, அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட அனைத்துப் பணிகளும் ஒன்று சேர்ந்து நடைமுறைப்படுத்துவதாலும் மற்றும் நீராதாரங்கள், நீர் கொண்டு வருதல் மற்றும் நீர் பகிர்மானம் ஆகியவற்றைத் தொடர்ந்து கவனமாகக் கண்காணிப்பதாலும் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் சரிசமமான குறைந்தபட்ச அளவு வழங்கல் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**3. நிறைவேற்றப்படும் திட்டங்கள்**

**3.1 சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–1**

கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து சுத்திகரித்து இதன் மூலம் நாளொன்றுக்குக் கிடைக்கும் 180 மில்லியன் லிட்டர் குடிநீரை சென்னைக்கு 230 கி.மீ. தூரம் கொண்டு வந்து விநியோகம் செய்வதற்காக சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் ரூ.720 கோடி மதிப்பீட்டில் 5 சிப்பங்களில் நடைபெற்று வருகிறது.

போரூர் பகிர்மான நிலையத்திலிருந்து வடக்குத்து சுத்திகரிப்பு நிலையம் வரை 208 கி.மீட்டர் நீளத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் உந்துக் குழாய் அமைக்கும் பணி முடிவுற்றது. வறட்சி அவசரத் திட்டத்தின் கீழ் நெய்வேலி படுகையிலுள்ள ஆழ் துளைக் கிணறுகளிலிருந்து நீரை உந்தும் பணி துவங்கப்பட்டுள்ளது. சேத்தியாத்தோப்பிலிருந்து வடக்குத்து வரை சுத்திகரிக்கப்படாத நீர் உந்துக் குழாய் 20 கி.மீட்டரில் 17 கி.மீட்டர் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் ஜூலை 2004 இறுதியில் முடிவுறத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.2 530 எம்.எல்.டி. கொள்ளளவுள்ள குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் செம்பரம்பாக்கத்தில் அமைத்தல் திட்டம்.**

தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் கூடுதலாகப் பெறப்படவுள்ள நீரை சுத்திகரிக்க 530 எம்.எல்.டி. கொள்ளளவுள்ள நீர் சுத்திகரிக்கும் நிலையம் செம்பரம்பாக்கத்தில் பிரெஞ்சு அரசு உதவியுடன் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. இதுவரை 30% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் மே 2005-ல் முடிவுறும். இதுவரை ஆன செலவினம் ரூ. 5240.00 இலட்சங்கள். 2004/2005-க்கான ஒதுக்கீடு ரூபாய் 7730.00 இலட்சங்கள்.

**3.3 இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டம்**

1996 ஆம் ஆண்டு ரூபாய் 778 கோடியே 79 இலட்சம் செலவில் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் மார்ச் 2004-ல் முடிக்கப்பட்டது. சென்னை மாநகருக்கு ஒரே சீரான அளவில் குடிநீர் விநியோகம் வழங்கும் பொருட்டு, 7 புதிய நீர் பகிர்மான நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. குடிநீர் கொண்டு செல்லும் 7 பிரதானக் குழாய்கள் அமைக்கும் பணி



2004 ஜூலை 31]

முடிவடைந்து உள்ளது. 16 பகிர்மான மண்டலங்களில், 11 மண்டலங்களான பட்டேல் நகர், ஈக்காட்டுத்தாங்கல், பள்ளிப்பட்டு, நந்தனம், கொளத்தூர், வியாசர்பாடி, சூளைமேடு, கண்ணப்பர்திடல், வள்ளுவர் கோட்டம், மைலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகியவற்றில் பகிர்மான அமைப்பை பலப்படுத்தும் பணிகள் முடிவுபெற்றுள்ளன. கசிவு கண்டறிதல் மற்றும் சரி செய்தல் பணியில் 1.95 இலட்சம் வீட்டுக் குழாய் இணைப்புகள் மற்றும் 5.85 கி.மீட்டர் இரும்புக் குழாய் மாற்றி அமைக்கும் பணி முடிவுற்றது. இதுவரை 99 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள பணிகளான குழாய் அமைக்கும் பணி மற்றும் இருக்கின்ற குழாயுடன் இணைக்கும் பணிகள் குடிநீர் வழங்கும் நிலை மேம்பட்டவுடன் முடிவுறும். இதுவரை ரூ.721.34 கோடிகள் செலவழிக்கப்பட்டது.

**3.4 இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவிருக்கும் கூடுதல் பணிகள்**

**(அ) தானியங்கி குளோரினேட்டர்கள் அமைத்தல்**

கடைக்கோடியில் உள்ள நுகர்வோருக்கு குளோரின் அளவு குறைந்தபட்சம் 0.2 பி.பி.எம். ஆகக் கிடைக்கும்பொருட்டு 15 குடிநீர் பகிர்மான நிலையங்களில் தானியங்கி குளோரினேட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**(ஆ) கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்படுத்துதல்**

1996 ஆம் வருடம் வரையிலும் கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மட்டும் குடிநீரை சுத்தப்படுத்தி சென்னை நகரவாசிகளுக்குக் குடிநீர் விநியோகம் செய்து கொண்டிருந்தது. கூடுதலாக 300 எம்.எல்.டி. குடிநீரை சுத்தம் செய்வதற்காக 1996-ல் செங்குன்றத்தில் ஒரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உலக வங்கி உதவியுடன் கட்டப்பட்டது.

இதுவரையிலும், சுத்திகரிப்பு கொள்ளளவு பாதிக்கப்படும் என்பதால் கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தில் எந்த ஒரு மேம்பாட்டுப் பணிகளும் செய்ய முடியவில்லை. தற்போது கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை 270 எம்.எல்.டி. கொள்ளளவிற்கு மேம்படுத்த மெதுவாக மணலால் வடிகட்டுதல் பணியைத் தவிர்த்து ரூபாய் 35 கோடிகள் செலவில் திட்டமிடப்பட்டு பெரும்பான்மையான பணிகள் முடிவுற்றன. புதிய மூன்று கீழ்நிலைத் தொட்டிகள் கட்டும் பணி விரைவில் துவங்கப்படும்.

[2004 ஜூலை 31

**(இ) அதிக நீர் கண்டறியும் அளவு மானி பொருத்துதல்**

அனைத்து நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும், குடிநீர் பகிர்மான நிலையங்களிலும் மற்றும் கிணற்றுத் தளங்களிலும் எடுக்கப்படும் மற்றும் வெளியேறும் நீரின் அளவை அளப்பதற்காகவும், நீர் பகிர்மானத்தை சரி செய்வதற்காகவும் மற்றும் வெவ்வேறு இடங்களில் அனுப்பப்பட்ட நீரை கொள்ளளவில் திட்டமிடவும் 100 மில்லி மீட்டரிலிருந்து 1200 மில்லி மீட்டர் அளவு வரையிலான 56 மின்னணு காந்த அளவு மானிகள் பொருத்தப்படும்.

**(ஈ) பரிசோதனை உபகரணங்கள் வாங்குதல்**

குடிநீர் மற்றும் கழிவு நீர் தரத்தைப் பரிசோதனை செய்வதற்காக தற்போதுள்ள பரிசோதனைக் கூடங்களின் வசதிகளை நவீன கருவிகள் மூலம் பலப்படுத்தப்பட்டுள்ளது..

**(உ) கருவிகள் மற்றும் மாற்றுக் கருவிகள் வாங்குதல்**

தற்போதுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் பகிர்மான நிலையங்களைத் திட்டமிட்டு பராமரிக்கும் பொருட்டு அவற்றிற்குத் தேவையான கருவிகள், சோதனைச் சாதனங்கள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**(ஊ) புவியியல் தகவல் அமைப்பு**

கண்ணுக்குப் புலப்படும் சொத்து மற்றும் பூமிக்கு அடியில் உள்ள சொத்துக்கள் (குழாய் அமைப்பு, குழாய் இணைப்புகள்) ஆகியவற்றின் நிலப்படத்தை சேகரிப்பதே புவியியல் தகவல் அமைப்பின் நோக்கமாகும். ரூபாய் 35 மில்லியன் மதிப்பீட்டில் 30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு இந்த அமைப்பு எடுத்துக் கொள்ளப்படும். இப்பணியில் (1) டிஜிட்டல் நிலப்படம் தயாரித்தல் (2) புவியியல் தகவல் அமைப்பு (மென்பொருள்) வாங்குதல் (3) சொத்து ஆய்வு மற்றும் நிலப்படத்திற்கு ஒப்பந்தம் தெரிவு செய்தல் ஆகியவை அடங்கும். நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் இவற்றை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(எ) தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்பத் திட்டமிடல்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலும், பகுதி அலுவலகங்களில் ஒன்றான பகுதி 5 மற்றும் அதன் 19 டிப்போ அலுவலகங்களிலும், கணக்கிடல், வசூலித்தல், நிதி கணக்கிடல் மற்றும் பண்டகசாலை கணக்கிடல் ஆகியவற்றை ஒரு முன்மாதிரித் திட்டமாக இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்பத் திட்டமிடல் செயல்படுத்தப்படுகிறது.



2004 ஜூலை 31]

தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்பத் திட்டமிடலானது, சன்சர்வர், மெல்லிய க்லெயண்ட் டர்மினல், கணினி, இடர்வராத மின் அளிப்பு, பிரின்டர், தகவல் சாதனங்கள் மற்றும் என்டர்ப்ரைசஸ் ரிசோர்ஸஸ் திட்டமிடல் மென்பொருள், பொது உபயோக மென்பொருள்களான (சோலாரிஸ்) செயல்படுத்துதல், விண்டோஸ் செயல்படுத்தும் அமைப்பு, மைக்ரோசாப்ட் ஆபீஸ், எம்.எஸ். எக்ஸ்சேஞ் மற்றும் நெட்ஓர்க் மென்பொருள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**3.5 சென்னை நகர நதிகள் பாதுகாப்புத் திட்டம்**

சென்னை நகரில் 1891 ஆம் ஆண்டு கழிவு நீர் அமைப்பு நிறுவப்பட்டு சென்னையில் தற்போது 98 சதவீதம் மக்கள் தொகைக்கு கழிவு நீர் அமைப்பு செயல்பட்டு வருகிறது. பல நீர்ப் பெருக்கத் திட்டங்களால், கூடுதலாக வந்து சேரும் கழிவு நீருக்கும் மற்றும் நதி வழிப் பாதையில் கழிவு நீர்க் கலப்பதைத் தடுக்கவும் சென்னை நகர நதிகள் பாதுகாப்புத் திட்டம் ரூபாய் 720.15 கோடி செலவில் கூடுதல் குறுக்குக் கழிவு நீர்க் குழாய்கள் அமைத்தல், கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் உந்துக் குழாய் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடைபெறும் இடைமறித்தல் குழாய்கள், உந்துக் குழாய்கள் பதித்தல் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுமானப் பணிகள், ஆகஸ்ட் 2004-ல் முடிவுறும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒப்பந்த நிபந்தனைகளின்படி, 4 கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் மார்ச் 2005-ல் முடிவுறும். 2004-ன் இறுதியில் அனைத்துப் பணிகளையும் முடிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை இடைமறித்தல் குழாய்கள், உந்துக் குழாய்கள் மற்றும் புவியீர்ப்பு விசையினால் இயங்கும் குழாய்கள் ஆகிய பணிகளைப் பொறுத்தமட்டில் 81.76 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை ஆன செலவினம் ரூபாய் 38,993 இலட்சங்கள். 2004-2005-க்கான ஒதுக்கீடு ரூபாய் 15,542.00 இலட்சங்கள்.

[2004 ஜுலை 31

**4. வருங்காலத் திட்டங்கள்**

**4.1 மூன்றாவது சென்னைத் திட்டம்**

மேலும், ரூபாய் 750 கோடி (150 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பீட்டில் மூன்றாவது சென்னைத் திட்டத்திற்கு உலக வங்கியிடம் கீழ்க்கண்ட பணிகளுக்காக நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

**(அ) குடிநீர் விநியோக அமைப்பை 5 மண்டலங்களில் பலப்படுத்துதல்**

இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் 16 மண்டலங்களில், 11 மண்டலங்களில் செம்மைப்படுத்தும் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. தற்போது மீதமுள்ள 5 மண்டலங்களான அண்ணா பூங்கா, கீழ்ப்பாக்கம், திருவல்லிக்கேணி, தெற்கு நீரேற்று நிலையம் மற்றும் கே.கே. நகர் ஆகியவற்றிலும் குடிநீர் விநியோக அமைப்பைப் பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரூ.150 கோடி செலவில், 305 கி.மீட்டர் நீளத்திற்குக் குழாய்கள் அமைக்கப்படவுள்ளன. பகிர்மானத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக இந்த மண்டலங்களைத் தனிமைப்படுத்த 16 மண்டலங்களிலும் வால்வுகள் அமைக்க ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளன.

**(ஆ) ஆரணியாறு கொசத்தலையாறு படுகையிலிருந்து கூடுதலான நிலத்தடி நீர் பெறுவதற்கு அடிப்படை வசதிகள் செய்தல்**

இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் நிலத்தடி நீர் உள்ளாற்றல் பற்றிய மறு மதிப்பீடு செய்வதற்காக திருவாளர்கள் ஸ்காட் வில்சன் லிமிடெட் அவர்களால் கலந்தாய்வு செய்யும் பணி தொடங்கப்பட்டது. இப்பணி பின்னர் மூன்றாம் சென்னைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**(இ) தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம்**

தற்போது நடந்து கொண்டிருக்கும் இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்திலும் மற்றும் பகுதி அலுவலகம் 5 மற்றும் அதன் 19 பணிமனை அலுவலகங்களிலும் முன்னோடித் திட்டமாக தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2004 ஜுலை 31]

இதுபோன்ற வசதிகள் சென்னை மாநகரிலுள்ள, மீதமுள்ள 9 பகுதி அலுவலகங்கள், 140 பணிமனை அலுவலகங்கள், 2 மண்டல அலுவலகங்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் தரக் கட்டுப்பாடு, மற்றும் ஆதார நிலையம் ஆகிய இடங்களில் இத்தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதன் மூலம் வசூலித்தல், நிதி கணக்கிடுதல், புகார்கள் கண்காணித்தல், பழுது ஏற்படாதவாறு முன்கூட்டியே பராமரித்தல் மற்றும் சொத்துடைமைகள் மேலாண்மை செய்தல் ஆகிய நிகழ்ச்சிகள் கணினி மூலமாகச் செயல்படுத்தப்படவுள்ளன. திட்டம் முடிவடைந்தவுடன் சென்னை மாநகரிலுள்ள அனைத்து நுகர்வோர்களும் தங்களுடைய வரிகளையும், கட்டணங்களையும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் ஏதாவது ஒரு பணிமனை அலுவலகத்தில் செலுத்த முடியும்.

**(ஈ) புவியியல் தகவல் அமைப்பு**

இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் பகுதி 5-ல் புவியியல் தகவல் அமைப்பின் முன்னோடித் திட்டம் நடைபெற்று வருகிறது. புவியியல் தகவல் அமைப்புப் பணியில் (1) டிஜிட்டல் நிலப்படம் தயாரித்தல் (2) புவியியல் தகவல் அமைப்பு (மென்பொருள்) வாங்குதல் (3) சொத்து ஆய்வு மற்றும் நிலப்படத்திற்கு ஒப்பந்தம் தெரிவு செய்தல் ஆகியவை அடங்கும்.

புவியியல் தகவல் அமைப்புத் திட்டத்தை செயல்படுத்தி முடிப்பதன் மூலம் சென்னைக் குடிநீர் வாரியம், சொத்துக்களின் விபரங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் முறைகளை முடிவு செய்தலுக்கும் உபயோகப்படுத்தப்படும்.

**(உ) விடுபட்ட பகுதிகளில் கணக்கிடப்படாத குடிநீர்**

பிரதானக் குழாய்களிலும், வீட்டு இணைப்புகளிலும் குடிநீர் இழப்பு ஏற்படுவது முன்னர் செய்த ஆய்வு மூலமாகக் கண்டறியப்பட்டது. ஆகையால் இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுடன் கணக்கிடப்படாத குடிநீரைக் குறைப்பதற்கு குடிநீர்க் கசிவு கண்டறிதல் மற்றும் நிவர்த்தி செய்யும் பணி பல கட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1,95,000 வீட்டுக் குடிநீர் இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. பழுதடைந்துள்ள 585 கிலோ மீட்டர் பிரதானக் குழாய்கள் சரிசெய்யப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

விடுபட்ட தெருக்களில் ஏசி/பிவிசி/சிஐ பழுதடைந்த பிரதானக் குழாய்களை ஏறத்தாழ 300 கி.மீ. நீளம் மாற்றுவதற்கும் மற்றும் மீதமுள்ள வீட்டுக் குடிநீர் இணைப்புகளை (ஏறத்தாழ 80,000) மாற்றுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

**(ஊ) அருகாமையிலுள்ள நகரப் பகுதிகளுக்கும், தொலைவிலுள்ள நகரப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அடிப்படை வசதிகளை அமைத்தல்**

குடிநீர் வழங்கல் பெருந்திட்டத்தை எதிர்நோக்கி, 12 உள்ளாட்சி அமைப்புகளில் பிரதான அனுப்பும் குழாய்களையும், தேக்கி வைக்கப்படும் கொள்ளளவைப் பலப்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

அருகாமையில் உள்ள நகர்மயமாக்கப்பட்ட பகுதிகளுக்கும், தொலைவிலுள்ள நகர்மயமாக்கப்பட்ட பகுதிகளுக்கும் நீரை வழங்க சுமார் 898 கி.மீ. நீளத்திற்கான குடிநீர் பகிர்மான அமைப்புகளையும் மற்றும் குடிநீர் வழங்கும் நிலையங்களையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(எ) ஆதாரங்களை மேம்படுத்துதல்**

அம்பத்தூர் ஏரி, கொரட்டூர் ஏரி மற்றும் மாதவரம் ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி தூர்வாருவதன் மூலமும், போரூர் ஏரியைப் புதுப்பிப்பதன் மூலமும், நீர் ஆதாரங்களை மேம்படுத்தவும், இத்திட்டம் தீட்டப்பட்டது. தேவையான வருமானம் கிடைப்பதற்காக அனைத்து நுகர்வோர்களுக்கும், கொள்ளளவு அடிப்படையில் நீர் அளவுமானி பொருத்தப்படவுள்ளது.

**4.2 சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் –II**

திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூபாய் 124 கோடிகள் செலவில் வழங்கப்பட்டது. பல்வேறு ஆதாரங்களில் இருந்து 60 எம்.எல்.டி. நீர் பெறுவதற்கு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(அ) மங்கலத்தில் திட்டமிடப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொளவாய் ஏரியில் இருந்து சுத்திகரிக்கப்படாத நீர் அனுப்புதல் மற்றும் அந்த நீரைச் சென்னைக் குடிநீர்ப் பெருக்கத் திட்டம்- I-ன் குழாய்களில் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் செலுத்துதல் (20 எம்.எல்.டி.)



2004 ஜூலை 31]

(ஆ) பாலாற்றின் குறுக்கே வயலூரில் தடுப்பணை கட்டுதல் மற்றும் அங்கிருந்து மங்கலத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரை அனுப்பி அதன்பின் சென்னைக் குடிநீர்ப் பெருக்கத் திட்டம்-I-ன் குழாய்களில் செலுத்துதல் (20 எம்.எல்.டி.)

(இ) அடையாற்றின் குறுக்கே மணப்பாக்கம், நந்தம்பாக்கம், அனகாபுத்தூர் மற்றும் கவுல் பஜார் ஆகிய இடங்களில் 4 தடுப்பணைகள் கட்டுதல் (15 எம்.எல்.டி.)

(ஈ) கூவம் ஆற்றின் குறுக்கே பருத்திப்பட்டு மற்றும் கண்ணாபாளயம் ஆகிய இடங்களில் உள்ள 2 தடுப்பணைகளை மறுசீரமைத்தல் (5 எம்.எல்.டி.)

**5. நிதி சார்ந்த செயல்கள்**

**(அ) வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரம் அளித்தல்**

வாரியம் முதலீட்டு நிதிச் சந்தையில் இணைந்து ரூ. 42 கோடிகள் செலவில் வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரங்கள் வழங்கியுள்ளது. குடிநீர் வாரியம் முன்னிலையில் உள்ள மதிப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான கிரெடிட் ரேட்டிங் மற்றும் இன்வெஸ்ட்மென்ட் சர்வீஸஸ் இந்தியா லிமிடெட் (சிஆர்ஐஎஸ்ஐஎல்)-ல் இருந்து ஏஏ(எஸ்.ஓ) மதிப்பீடு வாங்கியது. இந்த மதிப்பீடு, பணம் செலுத்துபவர்க்கு பலமான தரம் மற்றும் பாதுகாப்பு அளிக்கின்றது. இந்தியப் பங்குகள் மற்றும் மாற்று வாரியத்தின் அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடித்து, இணைப்புப் பத்திரங்கள் 31-03-2004 அன்று திறக்கப்பட்டன. இந்தப் பத்திர வெளியீடு சந்தையில் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால் சென்னைக் குடிநீர் வாரியத்தின் இம்முயற்சி வெற்றிபெற்றது. வட்டி விகிதம் 5.20% ஆகும். இதன் வெற்றியால், சென்னைக் குடிநீர் வாரியம் தொடர்ச்சியாக வரி இல்லாத இணைப்புப் பத்திரங்களை வழங்க உள்ளது.

**(ஆ) இ.நிர்வாகம்**

இ.கவர்னன்ஸ் எனப்படும் இ.நிர்வாகத்தின் பலன்களைச் சென்னை மக்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதே சென்னைக் குடிநீர் வாரியத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தில் தமிழக அரசின் ஆலோசனையின்படி சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து, சென்னை மாநகரில் பல்வேறு நிறுவன இயக்க வரிகளைச் செலுத்துமிடங்களில்

பங்குபெற்றுள்ளது. 10 செலுத்துமிடங்கள் மாநகரில் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் நுகர்வோர்கள், சென்னைக் குடிநீர் வாரியம், மின் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் வரிகளை அவர்கள் வசிக்குமிடங்கள் எந்த இடமாக இருந்தாலும் இந்தச் செலுத்துமிடங்களில் செலுத்தலாம். சேகரித்த தொகை, சென்னைக் குடிநீர் வாரியம் அல்லது தமிழ்நாடு மின்சார வாரியம் அல்லது சென்னை மாநகராட்சி ஆகிவற்றிற்கு மின் அணுவியல் மூலம் மாற்றப்படுகிறது.

இணையதளம் மூலமும் சென்னைக் குடிநீர் வாரியம், நுகர்வோர்கள் வரி செலுத்த ஆவன செய்துள்ளது. எந்த இணையதள மையத்திலும், நுகர்வோர் சென்னைக் குடிநீர் வாரியத்தின் கட்டணங்களைச் செலுத்தலாம்.

**6. கடல் நீரை நன்னீராக்கும் நிலையம்**

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், அடிக்கடி பருவமழை பொய்த்து வருவதால் ஏற்படும் குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு, இப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் அமைக்க அரசு முடிவு செய்தது. முழுவதும் அரசால் சொந்தமாகக் கொண்டு, சென்னை டீசால் கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனியானது, இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை நகருக்கு கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை இக்கம்பெனி செயல்படுத்தும்.





# இணைப்பு XI

*(81 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**1. முன்னுரை**

தமிழ்நாடு கடந்த மூன்று ஆண்டுகளாகப் புரட்சிகரமான மற்றும் தொலைநோக்குடன்கூடிய பல்வேறு மாற்றங்களைக் கண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்வாய்ந்த மற்றும் ஊக்கமூட்டுகின்ற தலைமையின்கீழ் கிராமப் பகுதிகளில், வளர்ச்சி நடவடிக்கைகள் முன்னெப்போதும் இல்லாத வேகத்தை அடைந்துள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடப்பு ஆண்டில் "நமது கிராமம்" என்ற ஒரு சிறந்த திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இத்திட்டமானது, அடித்தள அளவிலான மக்களாட்சி அமைப்புகளை பலப்படுத்த, இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளை ஒருங்கிணைத்து, நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்பை வலுவூட்ட உதவும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முழுமையான மேம்பாட்டிற்கு ஊரக வளர்ச்சியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய கட்டமைப்பு மற்றும் சிறப்புக் கூறுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த இத்திட்டம் வழிவகுக்கும்.

**நமது கிராமத் திட்டத்தின் நோக்கங்கள்**

- கிராம வளர்ச்சிக்கான சமுதாய ஒருங்கிணைப்பு மற்றும் வள ஆதாரங்களைக் கண்டறிதல்.
- கிராமத்தின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்திய திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடுதல்.

- கிராம அளவில், இத்திட்டத்திற்கான நிதி மற்றும் நிர்வாக அமைப்புகளை ஒருங்கிணைத்தல்.
- சமுதாய முயற்சிகள் மூலம் முழுமையான வாழ்க்கைத்தர மேம்பாட்டை அடைதல்.

கிராமச் சபையின் மூலம் கிராம மக்கள் முன்னுரிமைப்படுத்துகின்ற வளர்ச்சித் திட்ட இலக்குகளை எய்துவதற்கு ஒவ்வொரு கிராம ஊராட்சியும் இத்திட்டத்தின்கீழ் முனைப்போடு செயல்படும்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஏழைகளில் மிகுந்த ஏழ்மை நிலையில் உள்ள பரம ஏழைகளைக் கண்டறிந்து, அவர்களது வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைவதற்கு வழிவகை செய்யும் புரட்சிகரமான ஒரு புதிய திட்டம் 2004-2005 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

## 2. 2003–2004 ஆம் ஆண்டின் சாதனைகள்

2003-2004 ஆம் ஆண்டில் இத்துறை எடுத்துக் கொண்ட முயற்சியாலும் மற்றும் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதன் காரணமாகவும் ரூ.2107.28 கோடி இத்துறையால் செலவழிக்கப்பட்டது. இது, 2002-2003 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் 24 விழுக்காடு கூடுதலாகும். 2003-2004 ஆம் ஆண்டில், 7,46,787 வளர்ச்சிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட 3,96,199 வளர்ச்சிப் பணிகளுடன் ஒப்பிடும்பொழுது, இது 88 விழுக்காடு கூடுதலாகும். 2003-2004 ஆம் ஆண்டிற்கான அரசின் முக்கிய சாதனைகள் பின்வருமாறு:—

### 2.1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகளிலும் சுற்றுச்சூழல் மேம்பாட்டினைக் கருத்தில்கொள்ள வேண்டுமென்ற அக்கறை உணர்வுடன் சாலைகள் அமைப்பதில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்த வேண்டுமென்றும், பிளாஸ்டிக் கலந்த தார்க்கலவை மூலம் 1,000 கி.மீ. தார்ச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்றும், 16-7-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த உத்தரவிற்கிணங்க இந்த ஆண்டில், நிர்ணயித்த இலக்கிற்கு அதிகமாக 1,200 கி.மீ. தூரத்திற்கு பிளாஸ்டிக் கலந்த தார்ச் சாலைகள் அமைத்து



இத்துறை சாதனை படைத்துள்ளது. இந்தப் புதிய முயற்சியானது செலவினத்தைக் குறைத்துள்ளது. சாலைகளின் தரத்தை மேம்படுத்தியுள்ளது. மேலும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்த வழி வகுத்துள்ளது. இம்முயற்சியின் ஒரு அங்கமாக பொன் விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 3,700 சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் அவற்றை சாலை அமைக்கும் பணிக்குத் தக்கவாறு துகள்களாக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டு வேலை வாய்ப்பும், வருமானமும் பெற்றுள்ளனர். பன்முகத் தன்மையுடைய இந்தப் புதிய முயற்சியானது இந்திய அரசின் பாராட்டினைப் பெற்றுள்ளது.

சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் தனிநபர் நலன் ஆகிய இரண்டு அம்சங்களையும் பாதுகாக்க, கழிப்பறைகளை கரிமவாயு அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்வடிவம் பெற்றுள்ளது. இத்தகைய 1,000 அமைப்புகள் அமைக்க வேண்டும் என்பது அரசின் இலக்கு. இவ்விலக்கிற்கு மேலாக 1,254 அமைப்புகள் தனிநபர் வீட்டுக் கழிப்பறைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகளின் மூலம் கிடைக்கும் கரிமவாயு வீடுகளில் செலவில்லாத எரிபொருளாக சமையலுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், சுற்றுச்சூழல் சுகாதாரமும் பாதுகாக்கப்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட 1,200 தனிநபர் இல்லக் கழிப்பறைகளில் அமைக்கப்பட்டுள்ள கரிமவாயு கலன்களைத் தவிர மேலும் 26 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களிலும் இத்தகைய கரிமவாயு கலன்கள் அமைக்கப்பட்டு, அவை மேற்படி வளாகங்களின் எரிசக்தித் தேவையை நிறைவு செய்ய உதவுகின்றன.

கிராம ஊராட்சிகளின் மின் நுகர்வுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதுமையான முயற்சியாக 2003-2004 ஆம் ஆண்டில் சூரிய ஒளியில் இயங்கும் 1,000 தெருவிளக்குகளை அமைத்திட உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, மொத்தம் 3,072 சூரிய ஒளி தெருவிளக்குகள் இந்த ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. இது, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 300 விழுக்காடு சாதனையாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தூய்மையான கிராம இயக்கமானது கிராம ஊராட்சிகளுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்து, இந்த இயக்கத்தில் கிராம ஊராட்சிகளின் பங்கேற்பை உறுதி செய்துள்ளது. இதன்படி, சுற்றுச்சூழல் தூய்மையை மேம்படுத்தும் வகையில் 10,00,227 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 5,965 பள்ளிக் கழிப்பறைகள் மற்றும் 8,709 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ள ஊக்க நிதியைப் பெறுவதற்கு 35 கிராம ஊராட்சிகள் தகுதி பெற்றுள்ளன.

## 2.2 வேலைவாய்ப்பு உருவாக்குதல்

தொடர்ச்சியான வறட்சி மற்றும் பருவ மாறுதல் ஆகியவற்றின் காரணமாக கிராமப்புற ஏழை மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைத்திடும் வகையில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாற்று வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கு அரசு பெருமளவிலான நடவடிக்கைகளை எடுத்தது.

- தமிழக அரசு இத்திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதின் அடிப்படையில் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.220.86 கோடியாக இருந்த மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.256.20 கோடியாக இந்திய அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இது, முந்தைய ஆண்டைவிட 16 விழுக்காடு கூடுதல் நிதி ஒதுக்கீடு ஆகும்.

- இத்திட்டத்தின்கீழ், ரூ.54.90 கோடி நிதி கூடுதலாகப் பெறப்பட்டது. இது, மத்திய அரசின் ஆண்டு ஒதுக்கீடான ரூ.256.20 கோடியைவிட 21 விழுக்காடு கூடுதலாகும். மேலும், 37,338 மெட்ரிக் டன் அரிசியை மத்திய அரசு கூடுதலாக வழங்கியது. இது, ஆண்டு ஒதுக்கீடான 2,07,288 மெடன் அரிசி அளவைவிட 18 விழுக்காடு கூடுதலாகும்.

- இந்த ஆண்டில், வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் 1,00,000 பணிகளை எடுத்து முடிக்கத் திட்டமிடப்பட்டது. இருப்பினும், திட்ட இலக்கிற்கு மேலாக 11,896 ஊரணிகள், 6,651 கதிரடிக்கும் களங்கள் மற்றும் 6,801 சுயஉதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் உள்ளிட்ட 1,26,000 வேலைவாய்ப்பு உருவாக்கும் பணிகள் எடுத்து முடிக்கப்பட்டுள்ளன.



- இதற்கு முன் இருந்திராத அளவிற்குக் கடுமையான வறட்சியை அரசு இந்த ஆண்டு எதிர்கொண்டது. வறட்சியின் காரணமாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பிற்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் இதர அரசுத் துறைகளின் கூட்டு முயற்சியின்கீழ் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.85.48 கோடி நிதி மற்றும் 4,50,000 மெட்ரிக் டன் உணவு தானியத்தைப் பயன்படுத்தி 49,200 பணிகள் தமிழகத்திலுள்ள 12,618 ஊராட்சிகளிலும் எடுத்துச் செய்யப்பட்டன. இதன்மூலம் 6.30 கோடி மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டன.

## 2.3 வறுமை ஒழிப்பு

வறுமையினை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்த தொடர் முயற்சிகள் பொன் விழா கிராமச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டன.

- நமது மாநிலம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டதன் காரணமாக இந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.49.90 கோடி ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இது, 2002-2003 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டை விட 32 விழுக்காடு கூடுதலாகும்.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14-7-2003 அன்று துவக்கி வைக்கப்பட்ட ஊரக சந்தை இணைய வலைதளம், ஊரகப் பொருட்களின் விற்பனை உத்திக்கான ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

- ஊரகப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

- வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சுயஉதவிக் குழுக்களும் இணைந்து செயல்பட ஊரக வளர்ச்சித் துறையானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டது.

♦ தேசிய நவீன வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NIFT) பருத்தி, தோல் மற்றும் துணிவகைகளில் நவீன மற்றும் ஏற்றுமதி செய்யத்தக்க வகையில் ஆயத்த ஆடை தயாரிக்க சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

♦ மரபுவழி சார்ந்த மருத்துவ நடைமுறைகளை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரத்தக்க வகையில் இருளர் பழங்குடி மக்களின் மூலிகைப் பொருட்கள் தயாரிப்பு முறைகளுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. இந்த மூலிகைப் பொருட்கள் அடங்கிய பாக்கெட்டுகளின் வடிவமைப்பு குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

♦ 24,000 வறிய நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறத்தக்க வகையில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 13 மாவட்டங்களில் கைத்தறி நெசவுத் தொழில் மேம்பாட்டுச் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. வடிவமைப்பு, திறன், தொழில்நுட்பம், பொருள் மதிப்பு மேம்பாடு மற்றும் விற்பனை வாய்ப்பை அதிகரித்தல் ஆகியவை இந்தத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ளன. இவை அனைத்தும், பாரம்பரிய ஆடைகள் மற்றும் துணிவகைகள், வீட்டு உபயோகத் துணிவகைகள், திரைச்சீலைகள், கண்ணைக் கவரும் சேலை வகைகள் ஆகியவற்றை வடிவமைப்பதற்கும், தயாரிப்பதற்கும் நெசவாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

♦ கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உடல் ஊனமுற்றோருக்கு உதவக்கூடிய சிறப்புத் திட்டங்கள் ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

♦ 2002-2003 ஆம் ஆண்டில், 10 மாவட்டங்களில் 166 கணினி வலைத்தள மையங்கள் அமைக்கப்பட்டு தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆண்டில், 23 மாவட்டங்களில் மொத்தம் 626 சுயஉதவிக் குழுக்களால் நிர்வகிக்கப்படும் ராசி (ஊரகப் பகுதிகளுக்கு கணினி தகவல் சேவை வலைத்தளம் மூலம் வழங்குதல்) மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



♦ தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ், இவ்வாண்டில் 32,336 ஊரக மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 2.4 ஊரகச் சுகாதாரம்

முழுச் சுகாதார இயக்கத் திட்டம், 22 மாவட்டங்களில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு கூடுதலாக திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நீலகிரி, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டத்தை ரூ.79.12 கோடியில் செயல்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம், முழுச் சுகாதார இயக்கத் தேசியத் திட்டம் தமிழகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தும் ஒரு அரிய சாதனையை நமது மாநிலம் செய்துள்ளது.

♦ ஊரகச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு தமிழக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை மத்திய அரசு பாராட்டியுள்ளது.

♦ முழுச் சுகாதாரத் திட்டத்தினை செயல்படுத்துவதில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் முன்னோடியாக உள்ளது என யுனிசெப் நிறுவனம் பாராட்டியுள்ளது.

♦ 2001 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருந்த ஊரகச் சுகாதாரச் செயலாக்கம் (தனிநபர் கழிப்பறை) 2004 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

♦ பல்வேறு துறைகள் மற்றும் முகமைகளை ஒருங்கிணைத்து இத்திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த மாநில ஊரக சுகாதாரச் சங்கம் என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

♦ மலிவு விலையிலான, குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தத்தக்க கழிப்பறைக்கான சுகாதாரச் சாதனங்களைத் தயாரிப்பதற்கான பயிற்சி 1,020 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்களில் சிலர் வெளிமாநிலங்களில் இதற்கான நேரடிப் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

- முழு சுகாதார இயக்கத்தின் நோக்கம் மற்றும் அம்சங்களை வெளிப்படுத்தும் "சின்னம்" (LOGO) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களைப் பராமரிக்க வருடத்திற்கு, வளாகம் ஒன்றிற்கு ரூ.12,000 வீதம் 8,709 வளாகங்களுக்கு சிறப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 2.5 ஊரகச் சாலைகள்

### 2.5.1. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

- இத்திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தியதால் ஆண்டு ஒதுக்கீடான ரூ80 கோடியைக் காட்டிலும் கூடுதலாக ரூ84.78 கோடி நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. இது 106 விழுக்காடு கூடுதலாகும். இக்கூடுதல் நிதி ஒதுக்கீட்டையும் சேர்த்து, 907 குடியிருப்புகளில் வசிக்கும் 6,80,232 மக்கள் பயன்பெறும் வகையில் 2,198 வடிகால் வசதிகளுடன்கூடிய 1,114 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் தேசிய தரக் கண்காணிப்பாளர்கள் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சாலைகளுக்கு உயர்ந்தபட்ச தரமதிப்பீடான "மிக நன்று" என்ற தரச் சான்றினை வழங்கியுள்ளார்கள்.

### 2.5.2. மாநிலத் திட்டம்

- மாநிலத்தில் முதன்முறையாக கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான வகைப்படுத்தப்படாத சாலைகள் மற்றும் பழுதுபட்ட தார்ச்சாலைகள் 5,850 கி.மீ. நீளத்திற்கு ரூ.300 கோடி மதிப்பீட்டில் இரண்டு கட்டங்களாகப் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிக்குத் தேவைப்படும் 300 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்குகிறது.

- இந்தச் சிறப்பு ஏற்பாட்டினால் 581 சாலைகள் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பேருந்துப் போக்குவரத்திற்குப் பயன்படும் சாலைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.



- மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சாலைகளின் தரத்தைக் கண்காணிக்க பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தில் உள்ளவாறு மாநில தர நிர்ணயக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 2.5.3. புதிய முயற்சிகள்

1,204 கி.மீ நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவு கலந்த பிளாஸ்டிக் தார்ச் சாலை, 25.8 கி.மீ. நீளத்திற்கு ரப்பர் கலந்த தார்ச் சாலை மற்றும் 17.40 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கலவையுடன் கல்துகள் கலந்து அமைக்கப்பட்ட சாலை ஆகியவை புதிய முயற்சிகள் அடிப்படையிலும், சாலை அமைப்பில் நவீன உத்திகளைப் பின்பற்றும் வகையிலும் அமைக்கப்பட்டவை ஆகும்.

### 2.6. ஊரகக் குடியிருப்பு

- ஊரகக் குடியிருப்புத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தியதற்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.10.71 கோடி கூடுதலாக மத்திய அரசால் வழங்கப்பட்டது. இது முந்தைய ஆண்டு ஒதுக்கீட்டைவிட 13.25 விழுக்காடு கூடுதலாகும்.

- 1.83 இலட்சம் நபர்கள் பயனடையத்தக்க வகையில் கான்கிரீட் கூரையுடன்கூடிய 36,633 இந்திரா நினைவு குடியிருப்புகள் இவ்வாண்டு கட்டப்பட்டன. கான்கிரீட் கூரை அமைப்பதற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.12,000-ஐ மாநில அரசு வழங்கியது.

- 1,00,000 நபர்கள் பயனடையத்தக்க வகையில் கூரை வீடு மற்றும் பழுதுபட்ட கச்சா வீடுகளில் வசித்து வந்த 19,345 ஏழை, நலிந்த குடும்பங்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டன.

- வீடுகள் கட்டுவதற்கு வழக்கமாகப் பின்பற்றப்படும் தொழில்நுட்பம் மற்றும் சிமெண்ட், செங்கல், கலவை போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக ஊரகப் பகுதிகளில் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய மாற்றுப் பொருட்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கூடுதல் வசிக்கும் இடம் கிடைக்கும் வகையில் 2,000 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

- மாற்றுத் தொழில்நுட்பங்களின் வெற்றி மக்கள் பிரதிநிதிகளின் ஈடுபாட்டைச் சார்ந்துள்ளது. எனவே, மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்படும் குறைந்த செலவிலான மாற்றுத் தொழில்நுட்பங்கள் குறித்து ஊக்கம் மற்றும் செயல்திறன் மிக்க ஊராட்சி மன்றத் தலைவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு இந்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- செயல்திறன் மிக்க சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களில் 100 பேருக்கு குறைந்த செலவிலான கட்டுமானத் தொழில்நுட்பம் குறித்த கொத்தனார் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகளின் கழிவறைகளில் கரிமவாயு கலன் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழகம் முழுவதும் 2003-2004 ஆம் ஆண்டில் 1,254 வீட்டுக் கழிப்பறைகள் கரிமவாயுக் கலன்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இது ஒரு தேசிய அளவிலான சாதனையாகும். மேலும், இந்தத் திட்டம் பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

**2.7 மழை நீர் சேகரிப்பு**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தண்ணீரை ஒரு செல்வமாகக் கருதி சேமிக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள், மழை நீர் சேகரிப்பு என்ற கருத்திற்கு மிகுந்த உத்வேகத்தை அளித்து, மழை நீர் சேகரிப்புத் திட்டம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது.

- தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிமுறைகளில் திருத்தம் செய்யப்பட்டு கட்டட வரைபட அனுமதிக்கு, மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- 66,91,965 மேற்கூரை மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, 100 விழுக்காடு இலக்கு எய்தப்பட்டுள்ளது.
- 1,36,026 தரைமட்ட/மேற்பரப்பு மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, 100 விழுக்காடு இலக்கு எய்தப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் மழை நீர் சேகரிப்புத் திட்டம் குறித்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரில், மழை நீர் சேகரிப்பு மூலம் ஊரக வறுமை ஒழிப்பை உறுதி செய்யும் முறைகள் பற்றி நடைபெற்ற கருத்தரங்கிற்கு இராமநாதபுரம் மாவட்டம் மைக்கேல்பட்டினம் ஊராட்சி மன்றத் தலைவி அவர்கள் உலக வங்கியால் அழைக்கப்பட்டார். இக்கருத்தரங்கில் உலக வங்கியால் உலகம் முழுவதிலுமிருந்து பெறப்பட்ட 2,300 கருத்துருக்களில் இறுதித் தேர்வில் இடம்பெற்ற கருத்துருக்களில் மைக்கேல்பட்டினம் கருத்துரு ஒன்றாகும். கிராம அளவிலான உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த நிகழ்வு உண்மையிலேயே பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் ஒரு மகத்தான சாதனையாகும்.

**2.8 ஊரக உள்ளாட்சி நிர்வாகம்**

- மேம்பட்ட அடிப்படைத் தேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு 18,672 மக்கள் பிரதிநிதிகள், 12,304 துறை அலுவலர்கள், 2,835 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் 321 தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரின் திறன் மேம்பாட்டிற்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- 12,618 கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளர்களுக்குக் கிராம அளவிலான குடிநீர்ச் சுகாதார நிர்வாகம் குறித்த பயிற்சி டேனிடா திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது.
- அரசினுடைய தொடர் கண்காணிப்பும், வருவாயைப் பெருக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாலும் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.67.73 கோடியாக இருந்த ஊரக உள்ளாட்சிகளின் வரி வருவாயை 2003-2004 ஆம் ஆண்டில் ரூ84.09 கோடியாக உயர்த்தியுள்ளது.
- கிராமச் சபைக் கூட்டங்கள் பயனுள்ளதாகவும், அதன் நோக்கங்கள் நிறைவேறும் வகையிலும் நடத்த வகை செய்யப்பட்டது. இதனால் 2002 ஆம் ஆண்டில் 27.90 இலட்சமாக இருந்த பொதுமக்களின் வருகை 2003 ஆம் ஆண்டில் 28.23 இலட்சமாக உயர்ந்துள்ளது.

[2004 ஜூலை 31

- ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நிர்வாக அமைப்புகளுக்கிடையேயான தொடர்பினை மேம்படுத்தவும், மக்கள் பிரதிநிதிகள் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளவும் மாநில ஊரக பயிற்சி நிறுவனத்தில் கணினி இணையதளம் மூலமான தொலைக்காட்சித் தொடர்பு வசதி, மாதிரித் திட்டமாக செயல்படுத்தப்பட்டது.

**2.9 நிர்வாக உள்கட்டமைப்பு மேம்பாடு**

ஊரக வளர்ச்சித் துறையின் திறமையான செயற்பாடு மற்றும் பணிச்சூழலை மேம்படுத்தும் வகையில் தேவையான நிர்வாக உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அரசு ரூ.248.77 இலட்சங்களை வழங்கியது. இப்பணிகள் பின்வருமாறு:—

- இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியங்களிலும், வேலூர் மாவட்டத்தில் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலும் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

- மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி மற்றும் உசிலம்பட்டியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூரிலும், தேனி மாவட்டத்தில் பெரியகுளத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியிலும், ஊராட்சி ஒன்றியக் கட்டடங்கள் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

- ஊரக வளர்ச்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளின் மனிதவள மேம்பாடு திறனாக்கப். பயிற்சி ரூ.50 இலட்சம் செலவில் 29,000 மக்கள் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் பிரிவுகளுக்கு இடையேயான தகவல் தொடர்புகளை மேம்படுத்தவும் மற்றும் அலுவலகப் பணிகளை விரைவாகச் செயல்படுத்தவும் ரூ.3.77 இலட்சம் செலவில் உட்பகுதி கணினி வலை அமைப்பு (LAN) ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

- காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் திட்ட அலுவலர்கள் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)களுக்கான குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகக் கட்டடங்கள் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3. வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு, 2004–2005**

*(ரூபாய் இலட்சத்தில்)*

| வ எண் | கணக்குத் தலைப்பு | | திட்டம் அல்லாதவை | திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 2202 | பொதுக் கல்வி | 27.84 | 0.00 | 27.84 |
| 2 | 2210 | மருத்துவம் மற்றும் பொது நலன் | 185.00 | 0.00 | 185.00 |
| 3 | 2215 | குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரம் | 217.75 | 1825.87 | 2043.62 |
| 4 | 2216 | வீட்டு வசதி | 0.00 | 5242.25 | 5242.25 |
| 5 | 2225 | ஆதி /பகு மற்றும் பிற்பட்டோர் வகுப்பினர் நலன் | 481.43 | 0.00 | 481.43 |
| 6 | 2235 | சமுதாய பாதுகாப்பு மற்றும் நலம் | 0.00 | 500.00 | 500.00 |
| 7 | 2236 | ஊட்டச் சத்து | 1071.33 | 18649.47 | 19720.80 |
| 8 | 2501 | ஊரக வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம் | 0.00 | 2704.82 | 2704.82 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 9 | 2505 | ஊரக வேலை வாய்ப்பு | 0.00 | 14504.83 | 14504.83 |
| 10 | 2515 | இதர ஊரக வளர்ச்சி திட்டங்கள் | 12504.12 | 21173.44 | 33677.56 |
| 11 | 2810 | மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் | 0.00 | 202.16 | 202.16 |
| 12 | 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரம் | 18.27 | 0.00 | 18.27 |
| 13 | 3604 | உ.அ / ஊராட்சி நிறுவனங்களுக்கான இழப்பீடு மற்றும் ஒதுக்கீடு | 72100.01 | 9322.26 | 81422.27 |
| 14 | 4216 | வீட்டு வசதி மூலதன ஒதுக்கீடு | 0.00 | 2480.16 | 2480.16 |
| 15 | 4515 | இதர ஊரக வசதிகளுக்கான மூலதன திட்டம் ஒதுக்கீடு | 0.00 | 30663.78 | 30663.78 |
| 16 | 4702 | சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு | 0.00 | 1000.00 | 1000.00 |
| | | பெருமொத்தம் | 86605.75 | 108269.04 | 194874.79 |



## 4. புதியமுயற்சிகள், 2004–2005

### 4.1 நிதிநிலை அறிக்கைஅறிவிப்புகள்

#### (அ) நமது கிராமம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி அறிவித்துள்ள "நமது கிராமம்" என்ற புதிய திட்டத்தை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தினை அடைந்திட அரசு செயல்படுத்த உள்ளது. மக்கள் பங்கேற்பு அணுகுமுறை மூலம் கிராம வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் திறனாக்கக் கூறுகளை இத்திட்டம் ஒருங்கிணைக்கும். மிகவும் பிற்பட்ட மற்றும் குறைவான வளர்ச்சியுடைய கிராம ஊராட்சிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் சிறப்புக் கவனம் அளிக்கப்படும். ஊராட்சி அளவில் நல்ல நிர்வாகத்தை வழங்க முக்கியத்துவம் அளிக்கப்படும். இது சுகாதாரம், உடல்நலம், கல்வி, ஊட்டச்சத்து, குடி நீர் விநியோகம், சுற்றுச்சூழல், மகளிர்க்கு அதிகாரம் அளித்தல் மற்றும் ஊராட்சி வளங்களை நிர்வகித்தல் ஆகிய இனங்களில் ஊராட்சி அளவில் அடையப்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில் அளவிடப்படும். கிராமச் செயல் திட்டம் தயாரித்தல் மற்றும் திட்டச் செயலாக்கம் ஆகியவற்றில் கிராமச் சபை முக்கியப் பங்கு வகிக்கும்.

நமது கிராமம் திட்டத்திற்காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.52.21 கோடி மாநில அரசால் மானியமாக விடுவிக்கப்படும். எஞ்சியுள்ள ரூ.141.79 கோடி நபார்டு அல்லது இதர நிதி நிறுவனங்களிடமிருந்து இத்திட்டச் செயலாக்கத்திற்காகத் திரட்டப்படும். மேலும், இந்நிதியானது பொதுமக்கள் பங்களிப்பு மற்றும் சார்புத் துறைகளின் சேவை ஒருங்கிணைப்பு ஆகியவற்றையும் கொண்டிருக்கும். திட்டச் செயலாக்கம் கிராம ஊராட்சி, மாவட்டம் மற்றும் மாநில அளவில் கண்காணிக்கப்படும். திட்டச் செயலாக்கத்தில் இடையிடையே தேவையான மாற்றங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

#### (ஆ) அதிகாரமளித்தல் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு குறித்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு முனைப்பான திட்டத்தை வகுத்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஆறு ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டும் ஏழைகளில்

[2004 ஜூலை 31

மிக ஏழையாக உள்ள 25 பரம ஏழைக் குடும்பங்கள் வீதம் பயன்பெறத் தேர்வு செய்யப்படும். இக்குடும்பங்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து பாதுகாப்பு, இருப்பிடப் பாதுகாப்பு மற்றும் உடல்நலப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும். இத்தகைய பரம ஏழையான குடும்பங்களை சமூக பொருளாதாரக் கணக்கெடுப்பு அறிக்கையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, கிராம சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இந்தக் குடும்பங்களைத் தேர்வு செய்வதில் ஆதரவற்றவர்கள், அநாதைகள், தீராத நோயாளிகள், வீடற்றோர் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை குறைந்தபட்ச அளவிற்கு உயர்த்துவதற்கு ஏதுவாக நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின்கீழ் தேவையான உதவிகள் செய்யப்படும். இந்தப் பரம ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வழிவகைகளை செய்வதற்கு ஏற்றவாறு நலத் திட்டங்கள், வெளி நிதியுதவி பெறும் திட்டங்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதிகள் ஆகியவற்றின் மூலம் வாழ்வாதார நிதி கிராம ஊராட்சி அளவில் ஏற்படுத்தப்படும்.

2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.11.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட விரிவான செயலாக்கம்

சுயஉதவிக் குழுக்களின் மூலம் ஊரகப் பகுதி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்த அரசு புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த உள்ளது. சுயஉதவிக் குழு நடவடிக்கைகள் ஏழை மக்களுடைய தன்னம்பிக்கையை மேம்படுத்தி ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கு வழிவகுக்கிறது. இந்த செயல்முறை ஊரக மகளிரின் பொருளாதார சுயதேவ்வயை உறுதி செய்கிறது. இவ்வாறு செயல்படுத்தப்படவுள்ள நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:—

#### (அ) கிராம ஊராட்சிகளின் அடிப்படை சேவைப் பராமரிப்பில் சுயஉதவிக் குழுக்கள்

கிராம ஊராட்சிகள் தங்கள் பொறுப்பில் கவனித்து வரும் கைப்பம்புகள், மின்விசைப்பம்புகள், சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்குகள், கரிமவாயுக் கலன்கள், தெருவிளக்குகள், திடக்கழிவு



2004 ஜூலை 31]

மேலாண்மை மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றின் பராமரிப்பை ஒப்பந்த அடிப்படையில் சுயஉதவிக் குழுக்களை நியமித்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் கட்டமைப்புத் தேவைகளுக்கான செலவினம் எஸ்ஜிஎஸ்ஒய்/கிராம ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டமானது அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஊராட்சி என்ற வீதத்தில் தேர்வு செய்யப்பட்டு மாதிரித் திட்டமாக செயல்படுத்தப்படும்.

#### (ஆ) சுயஉதவிக் குழுக்கள் சந்தை

மாநிலத்தில் உள்ள 1.5 இலட்சத்துக்கு மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களில் 23 இலட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் ஊரகப் பொருட்களின் விற்பனைக்கு ஏற்ற நுகர்வோர் ஆவர். எனவே, சுய உதவிக் குழுக்களுக்கிடையே வணிகம் நடைபெற சுய உதவிக் குழு சந்தைகள் நடத்த ஆதரவளிக்கப்படும். இதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் எஸ்ஜிஎஸ்ஒய் திட்டத்தின்கீழ் செய்து தரப்படும். இந்தத் திட்டம் மாதிரி அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும்.

#### (இ) சுயஉதவிக் குழுக்களுக்கு அடிப்படை சுகாதாரம் குறித்த பயிற்சி

ஊரகப் பகுதிகளில் பிரசவ உதவி, முதலுதவி மற்றும் சாதாரண மருத்துவ உதவி போன்ற அடிப்படை மருத்துவத் தேவைகளை வழங்கிடத் தக்க பயிற்சிகள் சுயஉதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படும். ஊரகப் பகுதி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடப்புத் திட்டங்களுக்கு இது கூடுதலான உதவியாகவும், வலிமை சேர்ப்பதாகவும் அமையும். இப்பயிற்சிக்குத் தேவையான செலவினம் எஸ்ஜிஎஸ்ஒய். திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டமானது அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஊராட்சி என்ற வீதத்தில் தேர்வு செய்யப்பட்டு மாதிரித் திட்டமாக செயல்படுத்தப்படும்.

#### (ஈ) வீடு பராமரிப்பு மற்றும் அதைச் சார்ந்த சேவைகள்

சுயஉதவிக் குழுக்களின் வருவாயைப் பெருக்கத்தக்க நீடித்த பயன் தரும் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதில் அரசு முழுமையான ஆதரவு அளிக்கிறது. வீடு பராமரிப்பு, உணவு தயாரித்தல் மற்றும் இவற்றைச் சார்ந்த இதர சேவைகளை வழங்குபவர்களுக்குத்

தொடர்ந்து தேவை அதிகரித்து வருகிறது. இத்தகைய தேவைகளை எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் சுயஉதவிக் குழுக்கள் நிறைவு செய்வதற்கு அரசு உதவி செய்யும். 2004-2005-ல் சமையல், வீடு பராமரிப்பு, அதைச் சார்ந்த சேவை, சுகாதாரப் பணிகள் மற்றும் கணக்கீட்டுப் பணிகள் ஆகியவற்றில் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த 4,000 உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இப்பயிற்சிகள், மத்திய அரசின் உணவக மேலாண்மை மற்றும் ஊட்டச்சத்து நிறுவனம் போன்ற உயர் பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும். பயிற்சி பெற்ற சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் சேவை வழங்குவோர் என்ற வகையில் தொழில் நிறுவனங்கள், வணிகக் கழகங்கள் ஆகியவற்றுடன் வியாபார ரீதியான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### (உ) ஊரகத் தொழில்நுட்பங்கள் மேற்கொள்ளுதல்

தொழில்நுட்ப மேம்பாடு என்பது சந்தை வளர்ச்சி, மாற்று நுட்பங்கள், மதிப்பீட்டைக் கூட்டுதல் ஆகியவற்றிற்கு இன்றியமையாத தேவையாகும். சுயஉதவிக் குழுக்களின் நீடித்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிக வருவாய் ஆகியவற்றிற்குத் தேவையான ஊரகத் தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து, அத்தகைய நுட்பங்கள் இக்குழுக்களின் செயல்பாட்டுக்குக் கிடைத்திட உரிய தொடர்பு ஏற்பாடுகள் அரசால் வழங்கப்படும்.

சிறந்த தொழில்நுட்ப நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப நிறுவனம், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம், காந்தி கிராம ஊரகப் பல்கலைக்கழகம், மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை புதிய ஊரகத் தொழில்நுட்பங்களை உருவாக்கும் நிறுவனங்களாகும். இந்த நுட்பங்கள் வர்த்தக ரீதியாகப் பயன்படத் தக்கவையாகும். இவை சுயஉதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் உரிய இடம் பெற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் உணவு பதப்படுத்துதல், பால் உற்பத்தி, காய்கறி பதப்படுத்துதல், மலர்ச் செடிகள் வளர்த்தல், கயிறு அடிப்படையிலான பொருட்கள், குளிர்பதன அமைப்பு, கரிம உரம், உயிர் பூச்சிக்கொல்லி, கடலைத் தோல் உபபொருள், மூலிகை மருந்துகள், செல்லின சாகுபடி, மீன் வளர்ப்பு, செறிவூட்டப்பட்ட கரி, விதைகள் பதனிடல் போன்ற சிறு மற்றும் நடுத்தர வகை பொருளாதார நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப தொடர்புகள் வழங்கப்படும்.





## 4.3. ஊரக சுகாதாரம்

### (அ) கழிப்பறை சாதனங்கள் உற்பத்தி

முழு சுகாதார இயக்கத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்ட நிறைவின்போது (2007) தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 21,20,136 தனிநபர் இல்ல கழிப்பறைகள், 1,701 மகளிர் சுகாதார வளாகங்கள், 26,504 பள்ளி கழிப்பறைகள் மற்றும் 24,966 அங்கன்வாடி கழிப்பறைகள் ஆகியவை கட்டி முடிக்கப்படும். இத்தகைய பெரும் எண்ணிக்கையிலான கழிப்பறைகளுக்குத் தேவைப்படும் குறைந்த விலையிலான சுகாதாரம் மற்றும் கழிவறை சாதனங்கள், பரவலாக்கப்பட்ட உற்பத்தியின் மூலமே தயாரிக்க இயலும். ஒரு கழிப்பறை சாதனம் தயாரிப்பு மையம் ரூ.2.5 இலட்சம் செலவில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 29 கழிப்பறை சாதனம் உற்பத்தி மையங்கள் ரூ.72.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இந்த நடவடிக்கையை உறுதிப்படுத்திட, குறைந்த விலையிலான, குறைந்த அளவு நீரை உபயோகப்படுத்தக்கூடிய கழிப்பறை சாதனங்களைத் தயாரிக்கும் பயிற்சி, 100-க்கும் அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கட்டட மையங்கள், ஊரக கழிப்பறை சாதனங்கள் தயாரிப்பதற்கான பயிற்சியை அளிக்கும்.

### (ஆ) சுகாதார உறிஞ்சு பட்டி தயாரிப்பு

2004-2005 ஆம் ஆண்டில், மகளிர், குறிப்பாக இளம் பெண்களின் சுகாதார சுயதேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அறிவியல் ரீதியான வடிவமைப்பு மற்றும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட உறிஞ்சு பட்டிகள் மகளிரின் சுயசுகாதாரத்தை மேம்படுத்தும். இத்தகைய உறிஞ்சு பட்டிகளுக்கு அதிக அளவிலான வணிக வாய்ப்புகள் உள்ளதால், அதிகமான சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொடர்ந்து நிலையான வேலைவாய்ப்பினை அளிக்கும். நமது மாநிலத்தில் பெண்கள் சுயஉதவிக் குழு திறமையாகச் செயல்படுவதால் இக்குழு உறுப்பினர்களை உறிஞ்சு பட்டிகள் தயாரிப்பில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோவை மற்றும் வேலூர் மாவட்டங்களில் பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்பட்ட இம்முயற்சி ஊக்கமூட்டும் வகையில் பயனளித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சுகாதார உறிஞ்சு பட்டி தயாரிக்கும் ஒரு மையம் தலா ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

[2004 ஜூலை 31

**(இ) மாதிரி கழிப்பறை மையம்**

ஊரகப் பகுதியில் வாழும் மக்களின் உடல் நலம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு சுகாதாரம் முக்கியமானது என்பதை அரசு தீவிரமாக வலியுறுத்தி வருகிறது. முழு சுகாதார இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படுவதால், கழிப்பறைக்குத் தேவையான பொருட்களின் தேவை அதிகரித்துள்ளது. மேலும், கழிப்பறைப் பொருட்கள் நிலத்தின் தன்மை மற்றும் நீர் வசதிக்கேற்ற வகையில் தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. முழு சுகாதார இயக்கம் வெற்றியடைய மலிவான விலை, குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் கழிப்பறைகளை அமைக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மாதிரி கழிப்பறை மையம் அமைக்கப்படும். இம்மையங்கள் ஊரக சுகாதாரத்தை முழுமையாக செயல்படுத்தத் தேவையான நீடித்த தொழில்நுட்பங்கள் மற்றும் தகவல்களை மக்களுக்கு வழங்கும். மேலும் குறைந்த செலவினை உடைய தொழில்நுட்பம், சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவைகளுக்கு இம்மையங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இவை தவிர கழிப்பறையுடன் இணைந்த கரிமவாயு அமைப்பும் இம்மையங்களில் ஏற்படுத்தப்படும். வீணாகும் கழிவு நீரை பயன்படுத்தி காய்கறித் தோட்டம் ஏற்படுத்தும் முறையும் இம்மையத்தில் மாதிரி அமைப்பாக ஏற்படுத்தப்படும்.

**4.4 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள்**

தெருவிளக்கு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பராமரிக்கும் பணிகள் கிராம ஊராட்சியினைச் சார்ந்ததாகும். மின் நுகர்வுக் கட்டணமும், மின்சார உபரிப் பொருட்களுக்கான செலவினமும் ஏற்கெனவே நலிவடைந்த நிலையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு மிகுந்த நிதிச்சுமையை ஏற்படுத்துகின்றன.

கிராம ஊராட்சிகளால் செலவைத் தாங்கக்கூடிய வகையில் தத்தம் பகுதிகளில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு மாற்று எரிசக்தியை உற்பத்தி செய்து வழங்கக்கூடிய முறைசாரா எரிசக்தி வளங்களை அளித்திட தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும். மனிதக் கழிவு அடிப்படையிலான கரிமவாயுக் கலன், தாவர கழிவு எரிசக்தித் கலன், சூரிய ஒளி விளக்குகள், காற்றாலைகள் போன்றவை இத்தகைய மாற்று எரிசக்தி ஆதாரங்கள் ஆகும். இவற்றை



2004 ஜூலை 31]

அமைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் மானியத்தை தமிழ்நாடு எரிசக்திக் கழகம் வழங்கும். இத்தகைய அமைப்புகளை இயக்கவும், பராமரிக்கவும் சுயஉதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும். இது கிராம ஊராட்சிகளின் மின் நுகர்வு செலவினத்தைக் குறைக்கும். மேலும் சுற்றுச்சூழலினை மேம்படுத்துவதோடு, சுயஉதவிக் குழுக்களின் வருவாயையும் மேம்படுத்தும்.

**4.5 மீனவர்களுக்கான பல்நோக்கு மையம்**

மீனவர்களுடைய பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை அரசு அமைத்துத் தரும். சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மீன்களை சேகரித்து வைத்தல், உலர்த்தல் போன்ற வசதிகளைக் கொண்ட மீனவர்களுக்கான பலநோக்கு மையம் அமைக்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் தலா ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 152 கடற்கரையோர ஊராட்சிகளில் 152 பல்நோக்கு மையங்கள் மீனவர்களுக்குக் கட்டித் தரப்படும். இதற்கு மொத்தம் ரூ.3.04 கோடி செலவாகும்.

**4.6 மக்கிய உரம் – உரக்குழி அமைத்தல்**

சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் துப்புரவிற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தூய்மையான கிராம இயக்கத்தைத் துவக்கினார்கள். இந்த இயக்கம் திடக்கழிவை அப்புறப்படுத்துவது குறித்து பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மக்கும் தன்மையுடைய கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான கட்டமைப்பு வசதிகளின் தேவை குறித்து கிராம மக்களிடையே இவ்வியக்கம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. எனவே, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு மக்கும் உரக்குழி வீதம் அனைத்து ஊராட்சியிலும் மொத்தம் ரூ.37.85 கோடி செலவில் 12,618 மக்கும் உரக்குழிகள் கட்டித் தர அரசு உத்தேசித்துள்ளது. இந்த உரக்குழிகளில் கழிவுகள் தரவாரியாகப் பிரிக்கப்படும். இவ்வாறு தரவாரியாகப் பிரிக்கப்படும் கழிவுகள் மண்புழுக்கள் மூலம் மக்கிய உரமாக மாற்றப்பட்டு, மலிவான விலையில் விவசாயிகளுக்கு விற்கப்படும். கழிவுகளைச் சேகரித்தல், மக்கிய உரமாக்குதல் ஆகியவை கிராமத்திலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களால் ஒரு பொருளாதார நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும்.

[2004 ஜூலை 31

### 4.7 மதிய உணவு மையங்கள் / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கான கட்டடங்கள்

தற்போது, ஊரகப் பகுதிகளில் 39,137 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 5,876 மையங்களுக்கு சொந்தக் கட்டடம் இல்லை. 2004-2005 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடம் இல்லாத சத்துணவு மையங்களுக்கு ரூ.58.76 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும். நடப்பு ஆண்டில் பழுதடைந்த மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடங்கள் முன்னுரிமை அடிப்படையில் சீர்படுத்தப்படும்.

### 4.8 சிறிய சேமிப்புக் கிடங்குகள்

கிராம ஊராட்சிகள் பல்வேறு கட்டுமானம் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுவதால், இப்பணிகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்து, இருப்பில் வைத்துப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இது தவிர, வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சிகள் உணவு தானியங்களையும் இருப்பில் வைக்க வேண்டியுள்ளது. கட்டுமானப் பொருட்கள், உணவு தானியங்கள் மற்றும் இருப்பு செய்யத்தக்க பொருட்களை இருப்பில் வைக்கத்தக்க வசதியை ஏற்படுத்தித் தர 2004-2005 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.23.10 கோடி மதிப்பீட்டில் 770 சிறிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்ட அரசு உத்தேசித்துள்ளது.

### 4.9 கிராம ஊராட்சி கணக்குகளைக் கணினி மயமாக்குதல்

கிராம ஊராட்சிகளில் கணக்குகளைப் பராமரிப்பதற்குத் தேவையான கணினிகளை வழங்குவதற்கு அரசு மாநில அளவில் முதன்முறையாக நடவடிக்கை எடுத்துள்ளது.

1113 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 29 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்குக் கணினி வழங்கப்படும். இதற்கான மொத்தச் செலவு ரூ.1037.32 இலட்சமாகும். 11-வது நிதிக் குழு மானியமான ரூ.829.75 இலட்சமும், உள்ளாட்சிகளின் பங்குத் தொகையான ரூ.207.57 இலட்சமும் இதில் அடங்கும்.



2004 ஜூலை 31]

- இந்த ஆண்டிலிருந்து, மைய அரசு கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவர் அலுவலகம் வகுத்து அளித்துள்ள உரிய கணக்குப் படிவங்கள், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பயன்படுத்தப்படும். தேசிய தகவல் மையமானது இதற்குத் தேவையான மென்பொருளைத் தயாரித்து வழங்கும். எல்காட் நிறுவனம் கணினிகள் மற்றும் இவற்றுக்கான உபரிப் பொருட்களைக் கொள்முதல் செய்யும். ஊரக உள்ளாட்சி அமைப்பு நிர்வாகிகள் மற்றும் துறை அலுவலர்களுக்குத் தேவையான கணினிப் பயிற்சி வழங்கப்படும்.

இந்த நடவடிக்கையானது, கிராம ஊராட்சிகள் அறிவியல் ரீதியான கணக்கீட்டு முறையினை வைத்திருப்பதற்கு உதவுவது மட்டுமல்லாமல், திறமையான திட்டமிடல், நிதி ஆதார நிர்வாகம் மற்றும் வெளிப்படையான நிர்வாகம் ஆகியவற்றையும் உறுதி செய்யும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இத்தகைய ஊராட்சி கணக்கு முறை அமைப்பானது, கணினி மூலம் ஊராட்சி கணக்குகளைக் கண்காணிப்பதற்கு உதவியாக இருக்கும்.

இதற்குத் தேவையான தகவல் உள்ளீடானது, இதற்கென பயிற்சி பெற்ற சுயஉதவிக் குழுவின் மூலம் ஒப்பந்த அல்லது பரஸ்பர உதவி அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பரஸ்பர உதவி அடிப்படை என்பது சுயஉதவிக் குழுக்கள் தகவல் உள்ளீடு செய்வதை ஊராட்சிகளுக்கு இலவசமாகச் செய்து தருவதும், ஊராட்சிகள் உபரியாக உள்ள கணினிப் பயன்பாட்டு நேரத்தை ராசி மையங்களை நடத்தும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் சுயஉதவிக் குழுக்களுக்கு இலவசமாக வழங்கும்.

இந்த நடவடிக்கைகள் கிராம ஊராட்சி மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு இடையேயான நல்லுறவின் அடையாளச் சின்னமாக விளங்கும்.

### 4.10. தமிழ்நாடு ஊரகக் குடியிருப்பு மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்குப் புதிய பொறுப்புகள்

தமிழ்நாடு ஊரகக் குடியிருப்பு மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் ஒரு அரசு நிறுவனம்

ஆகும். வணிக நிறுவனங்களிடமிருந்து வர்த்தக ரீதியான கடன்களைப் பெறத்தக்க வகையில் இந்த நிறுவனத்தின் மூலதன ஆதாரம் பெருக்கப்படும். இதன் மூலம், நிதிநிலை வலுவாக உள்ள ஊராட்சிகள் தத்தம் ஊராட்சிப் பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த நிறுவனம் கடன் வழங்கும். இந்நிறுவனம் வெளிநிதி உதவிபெறும் திட்டங்களுக்கான நிதியைப் பெற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் முகமையாகச் செயல்படும்.

## 4.11. குடிநீர் ஊரணிகளை சீரமைத்தல்

பொதுமக்களின் உபயோகத்திற்குத் தேவையான குடிநீரின் அளவு மற்றும் தரமானது, நிலத்தடி நீரை தொடர்ச்சியாக அளவுக்கதிமாகப் பயன்படுத்துதல், மழை அளவு குறைவு, வீணாகும் மழை நீரை சேகரித்திட போதுமான கட்டுமான அமைப்புகள் இல்லாமை ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கைப்பம்புகள், மின்விசைப்பம்புகள் ஆகியவற்றின் மூலம் தண்ணீர் கிடைப்பதால், பாரம்பரிய நீராதாரங்களான ஊரணிகள் போன்றவை தூர்ந்து போன நிலையில் அசுத்தமடைந்து பயன்பாட்டுக்குத் தகுதியற்ற நிலையில் உள்ளன.

- முன்னோடி அடிப்படையில், இராமநாதபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பாரம்பரிய குடிநீர் ஊரணிகளைப் புனரமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது.
- அண்ணா பல்கலைக்கழக நீராதார மையம் மற்றும் சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவை இதற்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கியுள்ளன.
- பயனாளிகள் குழு இப்பணிகளைச் செய்ய ஊக்குவிக்கப்பட்டுள்ளது.
- கூடுதல் கொள்ளளவு, சுற்று வேலி அமைத்தல், நீர்ப்பிடிப்புப் பகுதி / வரத்துக் கால்வாய் / ஊரணிகள் ஆகிய பகுதிகளை அசுத்தமடையாமல் பாதுகாத்தல், வடிகட்டும் அமைப்பு, நீர் சேகரிப்புக் கிணறு அமைத்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.





- மேற்கண்ட இரண்டு மாவட்டங்களிலும் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே, இத்திட்டத்தை 2004-2005 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளின் குடிநீர் ஆதாரங்களை அதிகரிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 10 ஊரணிகள் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும். வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் வழங்கத்தக்க வகையில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் கிராமங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 4.12 கட்டட மையங்களைச் சீரமைத்தல்

குறைந்த செலவில் அதிக மதிப்பிலான பயன்களை அளிக்கத்தக்க வகையில், நவீன செயல்நுட்பம் மற்றும் தக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாக, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமான செயற்பாடுகள் மாற்றி அமைக்கப்படும். மத்திய அரசிடமிருந்து தேவையான நிதி உதவி பெற்று, செயலற்ற நிலையில் மற்றும் குறைந்த அளவு பயன்பாட்டில் உள்ள அனைத்து கட்டட மையங்களும் மறுசீரமைக்கப்படும். இக்கட்டட மையங்களின் செயற்பாடுகள், குறைந்த செலவிலான தொழில்நுட்பங்களைப் பின்பற்றி வரும் காந்தி கிராமம் தொழில்நுட்ப மையம், ஆரோவில் தொழில்நுட்ப மையம் மற்றும் விவேகானந்தா கேந்திர ஊரகத் தொழில்நுட்ப மையம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும். இத்தகைய சிறந்த தொழில்நுட்ப மையங்களின் வழிகாட்டுதலின்கீழ் கட்டட மையங்கள், மாதிரி கிராம பயிற்சி மையங்களுக்கான வள ஆதார மையங்களாகச் செயல்படும். பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்த மாதிரி செயல்பாட்டு மையங்களாக இவை செயல்படும். புதிய முன்முயற்சிகள் மற்றும் தொழில்நுட்பங்களை மேற்கொள்ள விரும்புகின்ற ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் குறைந்த செலவிலான சிறந்த ஊரகத் தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்களை இம்மையங்களிலிருந்து பெறலாம்.

## 4.13 கிராம ஊராட்சி அளவிலான குழுக்களை மறு சீரமைத்தல்

ஊராட்சிகள் தங்களது பல்வேறு கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக ஆலோசனைக் குழுக்களை அமைத்துக்கொள்வதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ல்

[2004 ஜூலை 31

வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, கிராம ஊராட்சிகளில் ஏழு ஆலோசனைக் குழுக்கள் அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர ஊராட்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளித்தோ அல்லது அளிக்காமலோ பல்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு குழுக்கள் ஊராட்சிகளில் அரசின் பிற துறைகளால் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு குழுக்கள் கிராம ஊராட்சி அளவில் அமைக்கப்பட்டிருப்பது ஒரேவிதமான பணிகளில் வெவ்வேறு முகமைகள் ஈடுபடுவது போன்ற சூழ்நிலைக்கு வழிவகுத்துள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட துறைகளுக்கோ அல்லது கிராம ஊராட்சிகளுக்கோ எவ்விதப் பயனும் முழுமையாகக் கிடைப்பதில்லை.

எனவே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் அடிப்படையில் கிராம ஊராட்சி அளவில் ஏற்படுத்தப்படக்கூடிய குழுக்களின் எண்ணிக்கை மற்றும் செயற்பாடுகளை முறைப்படுத்த அரசு கருதியுள்ளது. இதன்படி (1) நியமனக் குழு (2) வளர்ச்சிக் குழு (3) விவசாயம் மற்றும் நீர் நிர்வாகக் குழு (4) பணிகள் குழு மற்றும் (5) கல்விக் குழு ஆகிய ஐந்து குழுக்களை மட்டும் அமைத்திட அரசு கருதியுள்ளது. இக்குழுக்களில் பல்வேறு சார்புத் துறைகளின் பிரதிநிதிகளும் இடம்பெற்று, தங்கள் துறை மற்றும் கிராம ஊராட்சிகளின் தேவைகளைப் பொறுத்த பணிகளை நிறைவேற்றுவர். இதனால், குழுக்களின் செயல்திறனை மேம்படுத்துவதோடு, கிராம ஊராட்சிகளின் திறனையும் பங்கேற்பு அதிகாரப் பரவலாக்க செயல்பாட்டையும் வலுப்படுத்துவதாக அமையும்.

### 4.14 மாதிரி – கிராம பயிற்சி மையங்கள்

ஒரு சிறந்த செயல்திறன் மிக்கவரிடம் கற்றுக்கொள்வதற்கு நிறைய விவரங்கள் இருக்கும். ஊராட்சி நிர்வாகம் என்பது அனைத்து ஊராட்சிகளுக்கும் பொதுவானதே என்றாலும், தமது சொந்த செயல்பாட்டின் காரணமாக சிறப்பான ஊராட்சி நிர்வாகம் என்ற இலக்கை சில கிராம ஊராட்சிகள் அடைந்துள்ளன. இத்தகைய கிராமங்கள் தங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் இதர செயல்பாடுகள், ஊராட்சி மற்றும் பொதுமக்களின் ஈடுபாடு, வளர்ச்சியில் இவர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பொறுத்து இதர கிராமங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய ஒரு கிராம ஊராட்சி கண்டறியப்பட்டு, அது முன்மாதிரி கிராம பயிற்சி மையமாக மேம்படுத்தப்படும். இம்மாவட்டத்தில் உள்ள இதர ஊராட்சிகளுக்குத் தனது செயல்முறைகளைப் பின்பற்றிட ஊக்கமும், ஆர்வமும் அளிக்கும். இந்த



2004 ஜூலை 31]

மாதிரி கிராம பயிற்சி மையங்கள் கண்டறியும் இனங்களில் அவற்றிற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும். பல்வேறு ஊரகப் பகுதி மேம்பாட்டு இனங்களைப் பொறுத்த வளர்ச்சியை வெளிக்காட்டும் வண்ணம் இவை செயல்பட, கட்டட மையங்களுடன் உரிய தொடர்புகள் ஏற்படுத்தப்படும்.

இதர ஊராட்சிகளுக்கு, தங்குமிட வசதியுடன் கூடிய பயிற்சியை அளித்திட உதவியாக இவ்வூராட்சிகளுக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தத் தேவையான உதவிகள் வழங்கப்படும். முதற்கட்டமாக, மின் விசிறி, நாற்காலிகள், மேசைகள், பாய்கள், எழுது பலகைகள் போன்ற அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திட ரூ.17.11 இலட்சம் இம்மையங்களுக்கு வழங்கப்படும். இந்த முன்மாதிரி கிராம பயிற்சி மையங்களுக்கு அவற்றின் நோக்கத்தை எய்திடத் தேவையெனக் கண்டறியப்படும் இனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்கு ரூ.29 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.120 இலட்சம் செலவில் 2320 ஊராட்சிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும்.

### 4.15. நிர்வாக உள்கட்டமைப்பு மேம்பாடு

ஊரக வளர்ச்சித் துறையின் நிர்வாக உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு தேவையான ஆதரவை அரசு தொடர்ந்து வழங்கும். நடப்பு ஆண்டில், கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு ரூ.93.25 இலட்சம் வழங்கப்படும்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் போகலூர், பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பூர் மற்றும் வேப்பந்தட்டை, தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம், திருவள்ளூர் மாவட்டத்தில் மீஞ்சூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் சேத்துப்பட்டு, திருச்சி மாவட்டத்தில் துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மொத்தம் ரூ.30 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்படும்.
- மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி ஊரக விரிவாக்கப் பயிற்சி மையத்தில் ரூ.2.5 இலட்சம் செலவில் "எரிசக்திப் பூங்கா" ஒன்று அமைக்கப்படும்.

- ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ரூ.10 இலட்சம் செலவில் நகல்படி பெருக்கி, தொலை நகலி, ஈ.பி.பி.எக்ஸ். போர்டை மாற்றி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.
- பெரம்பலூர், கரூர், சேலம், நீலகிரி, நாகப்பட்டினம், கடலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிப் பிரிவிற்கு மொத்தம் ரூ.2.75 இலட்சம் செலவில் தொலை நகலிகள் வழங்கப்படும்.
- தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்கு முகாம் அலுவலகம் ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 5. மாநில அரசுத் திட்டங்கள்

### 5.1. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் நிலவும் முக்கியமான இடைவெளியை நிரப்புவதென்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் பணிகளை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் எடுத்து நிறைவேற்றிட தலா ரூ.82 இலட்சம் வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம், ஆதி திராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான விடுதிகள், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடிநீர் விநியோகப் பணிகள் ஆகிய இனங்களில் மொத்தம் 8121 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2004-05 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.192.70 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2 தன்னிறைவுத் திட்டம்

சமுதாய சொத்துக்கள் பராமரிப்பு, வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றுதல், திட்டமிடலில் சமுதாயப் பங்கேற்பு ஆகியவற்றை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு பணிக்கான செலவினம்



பொதுமக்களாலும், அரசாலும் 25:75 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 1223 பணிகள் இத்திட்டத்தின்கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. மத்திய அரசுத் திட்டங்கள்

### 6.1 ஒருங்கிணைந்த ஊரகக் குடியிருப்புத் திட்டம்

#### 6.1.1. புதிய வீடுகள் கட்டுதல்

அனைவருக்கும் வீடு என்பது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். வீடற்ற ஏழை மக்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் புதிய வீடுகள் கட்டுவதற்கு 80 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்திற்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. சாதாரண வகை மண்ணில் கட்டப்படும் வீடுகளுக்கான மதிப்பீடு தலா ரூ.25,000 என்றும், கடின வகை மண்ணில் கட்டப்படும் வீடுகளுக்கு தலா ரூ.27,500 என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்/பழங்குடி வகுப்பினர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 60 விழுக்காடு ஒதுக்கீடும், இப்பிரிவினர் அல்லாதவர்களுக்கு 40 விழுக்காடு ஒதுக்கீடும் செய்ய வேண்டுமென மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் பணிகளைத் தாங்களே நிறைவேற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் சம்பந்தப்பட்ட குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரிலோ அல்லது கூட்டாகவோ பத்திரப்பதிவு செய்யப்படுகிறது.

பொதுமக்களின் விருப்பத்தின் அடிப்படையில் இத்தகைய வீடுகளுக்கு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கென மாநில அரசு தலா ரூ.7,000/- வழங்குகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் 38,527 புதிய வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ரூ.24.75 கோடி மாநில அரசு பங்குத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கென மேலும் ரூ.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.1.2 குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்துதல்

குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்தும் திட்டம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் துணைத் திட்டமாகும். ஊரகப் பகுதிகளில் குடியிருக்க இயலாத கச்சா வீடுகளில் வாழ்ந்து வரும் ஏழை மக்கள், தங்கள் வீடுகளை குடியிருக்கத் தகுந்த வீடுகளாக மேம்படுத்த ரூ.12,500/-ஐ இத்திட்டத்தின்கீழ் பெறுகிறார்கள். இச்செலவினம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டில், 19,265 குடியிருக்க இயலாத கச்சா வீடுகள், குடியிருக்கத் தகுந்த வீடுகளாக மேம்படுத்த ரூ.7.19 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.2 நூதன ஊரக வீட்டு வசதி மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

செலவினம் குறைந்த தொழில்நுட்பம் மற்றும் உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு, ஊரக ஏழை மக்களுக்கு, தேவையின் அடிப்படையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்தகைய ஒவ்வொரு திட்டமும் இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கும்.

(1) மத்திய அரசால் முழு மானியமாக வழங்கப்படும் வீடு கட்டுமானத்திற்கான பகுதி.

(2) நடப்புத் திட்டங்களின்கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைத்து வழங்குதல்.

2004-2005 ஆம் ஆண்டில் வேலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் ரூ.2.82 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்படும்.

### 6.3 பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டம் (ஊரகக் குடியிருப்பு)

கிராமத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு, குடியிருப்பு மேம்பாடு குறித்த பகுதியானது ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. இதன்படி 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 5803 வீடுகள் கட்டப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் வீடுகள் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் வீடுகளைப் போன்றவையே ஆகும். 2004-2005 ஆம் ஆண்டில்





இத்திட்டத்திற்காக ரூ.19.71 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4 சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (எஸ்.ஜி.ஆர்.ஒய்.)

ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம், ஏழை மக்களுக்கு ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்பு அளிப்பதும், உணவுப் பாதுகாப்பு அளிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மத்திய, மாநில அரசுகள் இத்திட்டத்திற்கு 75:25 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. இத்திட்டப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு தினசரி ரூ.54/- தினக்கூலியாக வழங்கப்படுகிறது. இதில், ரூ.28.25 மதிப்பிற்கு 5 கிலோ அரிசியும், எஞ்சிய பகுதி ரொக்கமாகவும் வழங்கப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நீர்நிலைகளைப் புதுப்பிக்கும் பணிகளில் இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பொதுமக்களின் ஆதரவு, மாநிலத்தில் தொடர்ந்து நிலவி வரும் வறட்சி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, 2004-2005 ஆம் ஆண்டில் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 20 நீர் நிலைகளைப் புதுப்பித்தல் என்ற வீதத்தில் ரூ.77 கோடி மதிப்பீட்டில் 7700 நீர்நிலைகள் புதுப்பிக்கப்பட உள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக சுயஉதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டித் தரப்பட்டு வரும் நடவடிக்கை 2004-05 ஆம் ஆண்டிலும் தொடரும். 10-க்கு மேற்பட்ட சுயஉதவிக் குழுக்கள் செயல்படும் ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டித் தரப்படும். நடப்பாண்டில், 770 சுயஉதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் ரூ.8.47 கோடி செலவில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 2 கட்டடங்கள் என்ற விகிதத்தில் கட்டப்படும்.

2004-2005 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.85.01 கோடி மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.5 பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் (எஸ்.ஜி.எஸ்.ஒய்.)

ஊரகப் பகுதி ஏழை மக்களுக்குத் தேவையான வருவாயை தொடர்ந்து அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் சமூக ஒருங்கிணைப்பு, சுயஉதவிக் குழுக்களை அமைத்தல்,

[2004 ஜூலை 31

பயிற்சி, கடனுதவி வழங்கல், கட்டமைப்பு வசதிகளை அளித்து சிறு பொருளாதார முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகியவை இத்திட்டத்தின் அம்சங்களாகும். இத்திட்டத்திற்கு மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. 2004-2005 ஆம் ஆண்டில், மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து இம்மாநிலத்தில், இதுவரை அரசின் உதவி பெறாமல் உள்ள அனைத்துக் குழுக்களுக்கும் உதவி அளித்திட அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். 2004-2005 ஆம் ஆண்டில் கடனுதவி அளவு ரூ.112.54 கோடிக்கு உயர்த்தப்படும். இது 2003-2004 ஆம் ஆண்டின் கடனுதவி அளவைவிட 12.54 சதவீதம் கூடுதலாகும். 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.17.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.6 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறையின்படி வளர்ச்சிப் பணிகளைத் தேர்வு செய்து செயல்படுத்த, ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் தலா ரூ.2 கோடி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 39 பாராளுமன்ற உறுப்பினர்களும், 18 ராஜ்யசபா உறுப்பினர்களும் உள்ளனர். இத்திட்டம், 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 6.7 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 1000 மக்கள் தொகைக்குமேல் உள்ள சாலை வசதியற்ற குடியிருப்புகளுக்கு 2003 ஆம் ஆண்டிற்குள் அனைத்து பருவ கால நிலைக்கும் ஏற்ற சாலைகளை அமைப்பதும், 2007 ஆம் ஆண்டிற்குள் 500 முதல் 999-க்கு மேற்படாத மக்கள் தொகையுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு இத்தகைய சாலை வசதியை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் இலக்காக உள்ளது. இது முழுவதும் மத்திய அரசின் நிதி உதவியின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டமாகும். 2000-2001-ல் இத்திட்டம் துவங்கப்பட்டபோது, 1000 மக்கள் தொகைக்குமேல் உள்ள சாலை வசதி அற்ற ஊரகக் குடியிருப்புகளின் எண்ணிக்கை 577 என்றும், 500-க்கு மேல் மக்கள் தொகையுள்ள இத்தகைய குடியிருப்புகளின் எண்ணிக்கை 1,825 என்றும் கணக்கிடப்பட்டது. இவற்றில் 1000-க்கு மேல் மக்கள் தொகையுள்ள குடியிருப்புகளில் 427-க்கும்; 500-க்கு மேல் மக்கள் தொகையுள்ள குடியிருப்புகளில் 637-க்கும் இதுவரை சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் 1991 கி.மீ. நீளத்திற்கு ரூ.289.53 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



2004 ஜூலை 31]

### 6.8 முழு சுகாதார இயக்கம்

இத்திட்டம், திட்டப் பணிகளின் அடிப்படையில் ஆனதாகும். இத்திட்டத்திற்கான செலவினம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ரூ.327.32 கோடி மதிப்பீட்டில் செயற்படுத்தப்படுகிறது. 2007 ஆம் ஆண்டிற்குள் 21,20,136 தனிநபர் இல்ல கழிப்பறைகள், 1,701 மகளிர் சுகாதார வளாகங்கள், 26,504 பள்ளி கழிப்பறைகள், 24,966 அங்கன்வாடி கழிப்பறைகள் மற்றும் 222 ஊரக சுகாதார சாதனங்கள் விற்பனை மையங்கள் கட்டப்படும்.

2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.17.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.9 தேசிய கரிமவாயு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் பல வகைகளில் பயனளிக்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த மரபுசாரா எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்தும் நோக்கமுடையதாகும். இது முழுமையாக மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், சமவெளிப் பகுதிகளில் ஆதி திராவிடர்/பழங்குடி வகுப்பினர்களுக்கு மானியமாக ரூ.2,300/-ம் இதர பயனாளிகளுக்கு ரூ.1,800/-ம் மானியமாக வழங்கப்படும். மலைப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பயனாளிகளுக்கும் தலா ரூ.3,500/-ம் கரிமவாயு கலன் அமைக்க மானியமாக வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 2,000 கரிமவாயு கலன்கள் கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

2004-2005 ஆம் ஆண்டில், கரிமவாயு மேம்பாட்டுத் திட்டத்தை, ஒருங்கிணைந்த குடியிருப்புத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கம் ஆகியவற்றுடன் இணைத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். கரிமவாயுவின்மூலம் விசைப்பம்புகள் மற்றும் தெருவிளக்குகளை இயக்குவதற்குத் தேவையான சிறப்புக் கவனம் அளிக்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.0.92 கோடி இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. மனிதவள மேம்பாடு

தரமான மற்றும் பொருத்தமான பயிற்சிகளைக் கொடுக்கும் வகையில் ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள் சீரமைக்கப்பட்டு

வருகின்றன. முதன்முறையாக மாநில ஊரக பயிற்சி நிறுவனமும், ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்களான டி.கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, பவானிசாகர், எஸ்.வி.நகரம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவை இணைந்து ஊரக வளர்ச்சி குறித்த பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி பெறுபவர்களிடமும் உரிய தாக்கத்தை ஏற்படுத்தத் தக்க வகையில், செயல்முறை கலைநுட்பங்கள் அடங்கிய பயிற்சி முறைகள், பயிற்சிகள் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமையுமாறு விளங்கிட ஊரக விரிவாக்கப் பயிற்சி மையப் பயிற்றுநர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பயிற்சிப் பாடப் பொருள்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் பயிற்சி பெற்றவர்களை சிறப்புப் பயிற்றுநர்களாக அழைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம அளவிலான சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய இனங்களில், இவற்றின் செயலாக்கத்திற்கு அலுவலக நிர்வாகம், உள்ளாட்சி நிர்வாகம் ஆகியவற்றைச் சார்ந்திருக்கும் நிலையை மாற்றி, சமுதாயத்தை இப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்ற அடிப்படையான மாற்று அணுகுமுறையை சுயஉதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய அணுகுமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளில் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

சிறந்த செயல்பாடுகள் குறித்து அனுபவப் பகிர்வுக்காகவும், திறன் மேம்பாட்டிற்காகவும், ஊராட்சிமன்ற நிர்வாகிகளுக்குக் கருந்தரங்கங்களும், பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்படும். மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், குஜராத் ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளை, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் மற்றும் இவைபோன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து செயல்படத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளும். திட்டங்களுடைய செயல்பாடு, மதிப்பீடு, பயிற்சி மேலாண்மை மற்றும் திட்டத் தகவல்களை வெளியிடுதல் ஆகிய பணிகளும் இணைந்து செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில், 25,489 துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளித்திட அரசு திட்டமிட்டுள்ளது.

**8. ஊரக உள்ளாட்சி அமைப்புகள்**

மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது பொதுத் தேர்தலின்போது, வெவ்வேறு நிலையிலான ஊராட்சி நிர்வாக அமைப்புகளில் மொத்தம் 1.17 இலட்சம் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் உள்ளாட்சி நிர்வாகத்திற்குப்





புதியவர்கள் என்பதோடு சமூகத்தில் பலவீனமான பிரிவைச் சார்ந்தவர்களும் ஆவர். சமூக நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றவேண்டிய மிகப் பெரும் பொறுப்பு உள்ளாட்சிகளுக்கு உள்ளது. சேவைகளை ஒருங்கிணைப்பதன்மூலம் மேம்பட்ட நிர்வாகத்தை வழங்கத்தக்க வகையில் இவ்வமைப்புகளின் செயல்பாடுகள், பொறுப்புகள் மற்றும் நிதியாதாரங்களை வலுப்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**8.1. மாநில நிதிக் குழு மானியம்**

மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியமானது தொகுப்பு "அ" மற்றும் தொகுப்பு "ஆ" என்று இரு பிரிவுகளின்கீழ் வழங்கப்படுகிறது. முதலாவது பிரிவில், முத்திரைத்தாள் கட்டணத்தின்மீதான மிகு வரி, தல வரி, தலமேல் வரி, சிறு கனிமங்கள் மீதான உரிமை வரி, கேளிக்கை வரியில் 90 சதவீதம் ஆகியவை உள்ளடங்கும். இவை முழுமையாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிற்கு வழங்கப்படும். பிரிவு "ஆ"-ல் உள்ள வருவாய் இனங்கள், கேளிக்கை வரி தவிர்த்த இதர மாநில வரி வருவாய் இனங்களிலிருந்து 8 சதவீத நிதி உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும். இதில் 87 சதவீதம் நேரடியாகவும், எஞ்சியுள்ள 13 சதவீதம் ஊக்க நிதி மற்றும் சமன்பாடு நிதியாகவும் வழங்கப்படும். உள்ளாட்சிகளுக்கான மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்து 58:42 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படும். அதேபோல், ஊக்க மற்றும் சமன்பாட்டு நிதியும் இதே விகிதத்தில் பிரித்து வழங்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்படும் நிதி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 47:45:8 என்ற விகிதத்தில் வழங்கப்படும். இந்த மானியம் மாதாந்திர அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றது. இந்த மானியம் கீழ்க்கண்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது:—

- உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் ஊதியம் மற்றும் சம்பளம்.
- மின்விசைப்பம்புகள், கைப்பம்புகள் உள்ளிட்ட குடிநீர் விநியோக அமைப்புகளின் பராமரிப்பு.
- தெருவிளக்குகள் பராமரிப்பு மற்றும் மின் நுகர்வுக் கட்டணம்.
- சட்டபூர்வமான கடமைகள், பொது நலன், துப்புரவு, சுகாதாரம் மற்றும் வடிகால் வசதி.

[2004 ஜூலை 31

- அலுவலகப் பராமரிப்பு மற்றும் எழுதுபொருள்கள்.
- உள்ளாட்சி நிர்வாக அலுவலர்களுக்கான ஓய்வூதியப் பங்குத் தொகை.
- ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு.
- சிறுபாசனக் குளங்கள் பராமரிப்பு.

*2003-2004* ஆம் ஆண்டில் இம்மானியமாக ரூ.*671.52* கோடி வழங்கப்பட்டது.

*2004-2005* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.*721.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2 பதினோராவது நிதி ஆணைய மானியம்

இந்த மானியமானது ஊரகப் பகுதிகளில், துவக்கக் கல்வி, அடிப்படை உடல்நலப் பாதுகாப்பு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, துப்புரவு மற்றும் வடிகால் வசதிகளுடன்கூடிய சுகாதாரம், இடுகாடு மற்றும் சுடுகாடு பராமரிப்பு, பொதுக் கழிப்பிடம் மற்றும் இதர பொதுச் சொத்துக்கள் போன்ற அத்தியாவசியப் பணிகளைப் பராமரித்திட வழங்கப்படுகிறது. *2003-2004* ஆம் ஆண்டில் இம்மானியமாக ரூ.*93.22* கோடி வழங்கப்பட்டது.

*2004-2005* ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இதற்கென ரூ.*93.22* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9. நிறைவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாட்டின் உயிர்நாடியாக உள்ள கிராமப்புற மேம்பாட்டில் இத்துறை கடந்த *3* ஆண்டுகளில் செய்துள்ள சாதனை மக்கள் பாராட்டும்வண்ணம் உள்ளது. இது, இத்துறை எவ்வாறு ஊக்கத்துடனும், முனைப்புடனும் செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இத்துறை, *2004-2005* ஆம் ஆண்டிலும், ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு சிறந்த முறையில் தொடர்ந்து பாடுபடும்.



)04 ஜூலை 31]




தமிழகத்தில் முழு சுகாதார திட்டத்தில் சாதனை
40%
27%
19%
15%
2004-05
2002-03
2001-02
2000-01
ஆண்டு




626
166
2003-04
2002-03
ஆண்டு


கிராம சாலைகள் மேம்பாட்டிற்கு ஆண்டுவாரியாக நிதி ஒதுக்கீடு
557.44
314.78
115.81
ரூபாய் கோடியில்
2001-03
2003-04
2004-05
ஆண்டு
நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)




ஆண்டுவாரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமச் சாலைகளின் நீளம்
5691.55
4850.73
803.68
2001-03
2003-04
2004-05
ஆண்டு
சாலைகளின் நீளம் (கிலோமீட்டரில்)

[2004 ஜூலை 31

# இணைப்பு – XII

(130 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 14 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### முன்னுரை

**1.1.** ஒரு நாட்டின் வாழ்வும் வளமும் அதனுடைய நிலையான வளர்ச்சியினைச் சார்ந்ததாகும். இது எதிர்காலத் தேவைகளுக்கு இடையூறின்றி அனைத்துப் பிரிவினரின் தேவைகளையும் முக்கியத்துவத்தையும் பூர்த்தி செய்யும் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுச் செயலாகும். இந்த முடிவிற்கு நமது சுற்றுச்சூழல் வாழ்வாதாரத் தேவைகளுக்கு மிகாமல் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரும் வாழ்வாதாரங்களைப் பெறுமாறு உறுதி செய்தல் வேண்டும். இந்தப் பாதுகாப்பானது நிலையான வளர்ச்சிக்கு முதல் தேவையாகும்.

**1.2.** சுற்றுச்சூழலைப் பாதுகாத்து வருவது நமது தொன்று தொட்டு வரும் நடைமுறையாகும். இது இயற்கையினை நாம் மதிப்பதற்குக் கற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மனித வாழ்க்கை, உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியன ஒன்றுக்கொன்று பிணைந்த தொடர்புடையது; மற்றும் ஒன்றின் தொந்தரவு மற்றொன்றின் சமமின்மைக்கு வழிவகுக்கும் என்ற உண்மையை அறிந்துகொள்ள வழிவகை செய்துள்ளது. நவீன காலத்திலும் நமது அரசியல் சட்ட வழிவகைகள், சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் திட்டக் குறிக்கோள்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மேம்பாட்டு முன்னேற்றங்களுடன்கூடிய உணர்வுபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது தெளிவாகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாட்டின்கீழ் பிரிவுகள் 48-A மற்றும் 51 A(g)-ல், சுற்றுப்புறச் சூழ்நிலை, வனம், வன உயிரினம் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துதல் என்றும், வனங்கள், ஏரிகள், ஆறுகள், வன விலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்துவதும் தவிர, உயிரினங்களிடம் பரிவு காட்டிடல் வேண்டும் என்பது அரசின் கடமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

**1.3.** வனவளத்தைப் பாதுகாப்பது மற்றும் சுற்றுச்சூழல் குறித்து மிக்க அக்கறை செலுத்துவது தமிழ்நாட்டின் மாபெரும் ஒழுகலாறாகும். இது இயற்கையை மதிக்கச் செய்வதுடன் உயிருள்ளவை மற்றும் உயிரில்லாதவற்றிற்கிடையே உள்ள சிக்கலான உள்தொடர்பினைப் புரிந்துகொள்ளவும் நமக்குக் கற்பித்துள்ளது. மனித இனத்திற்கு உயரினச்சூழல் பாதுகாப்பு நல்குவதில் அடர்ந்த காடுகள், சுத்தமான நீர் மற்றும் வளமான மண் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பண்டைய தமிழ்ப் புலவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## 2. வனத் துறை

**2.1.** புதுப்பித்துக்கொள்ளக்கூடிய வளங்களைக் கொண்ட வனங்கள், இயற்கை அன்னை, மனித இனத்திற்கு அளித்த நன்கொடையாகும். நமது மாநிலத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்தலிலும், ஊரக வளர்ச்சியிலும் வனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வரசு செயல்படுத்தி வருகின்ற 15 அம்சத் திட்டங்களில், மாநில மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஒரு முக்கியமான அம்சமாகும்.

### 2.2. வனங்களின் பரப்பளவு

வனத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 22,870 சதுர கிலோ மீட்டர் வன நிலங்கள் உள்ளன. இது தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பளவில் 17.584 விழுக்காடாகும். இது 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உகந்த அளவான 33.33 விழுக்காட்டிற்கு மிகவும் குறைவானதாகும். மனிதர்கள் மற்றும் உயிரினத் தலையீடுகளால் ஏறத்தாழ பாதி வனப் பகுதி தரமிழந்து காணப்படுகிறது. பல்வேறு திட்டங்கள்மூலம் தரமிழந்த காடுகளை மீண்டும் வளப்படுத்தவும், வனப் பகுதிகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.3. வனக் கொள்கை

தமிழகத்தின் வனங்கள், தேசிய வனக் கொள்கை 1988-ன்படி மேலாண்மை செய்யப்படுகிறது. இருப்பினும், மொத்தத்தில் வன மேலாண்மை, மாநில அரசின் பொறுப்பிலுள்ளது. தமிழ்நாடு மாநில வனச் சட்டம், 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அவற்றின் கீழ்

ஏற்படுத்தப்பட்ட விதிகள் வனத் துறையால் செயல்படுத்தப்படுகின்றது. வனங்கள் பாதுகாக்கப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட பல்வேறு முக்கியத் தீர்ப்புகள் வனக் கொள்கையினை சீரிய முறையில் செயல்படுத்துவதில் மக்களுடைய எதிர்பார்ப்புகளை அதிகப்படுத்தியிருக்கிறது. வனங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் வனப் பரப்பை அதிகரித்தல் ஆகியவற்றின்மூலம் உயிரின வாழ்க்கைச்சூழல் மேம்பாடு, சுற்றுச்சூழலை நிலைப்படுத்துதல் ஆகியவற்றை அடைவதே 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கை மற்றும் மாநில வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோளாகும்.

### 2.4. குறிக்கோள்கள்

தமிழகத்தின் வனங்கள், பின்வரும் முக்கிய குறிக்கோள்களுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன:-

- மாநிலத்தின் வனப் பகுதியையும், மரங்களின் அடர்த்தியையும் அதிகப்படுத்துதல்;
- சுற்றுச்சூழலை மீட்டு சுற்றுப்புறத்தின் சமநிலைத் தன்மையினைப் பாதுகாத்தல்;
- தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினர் பயனடையும்வகையில் பல்வேறு வகையான உயிரினங்களைப் பாதுகாத்தல்;
- வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதையும் கட்டுப்படுத்தி ஆறு, ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் மண் அரிமானத்தைத் தடுத்தல்;
- கூட்டு வன நிர்வாக முறையில் மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளான விறகு, கால்நடைத் தீவனம், மரங்களல்லாத வனப் பொருட்கள் மற்றும் சிறு மர-அவசியத் தேவைகளைக் கூடிய அளவு பூர்த்தி செய்தல்;
- காப்புக் காடுகளுக்கு வெளிப்பகுதியில், வனப் பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களை உண்டாக்க மேம்படுத்தப்பட்ட வனத் தொழில் நுட்பத்தினை விவசாயிகளுக்குக் கிடைக்க வழி செய்தல்;





- நுண்ணுயிர்கள், பூச்சிகள், பறவைகள் மற்றும் விலங்குகள் வசிக்க உயிரினச் சூழலை மேம்படுத்துதல்;
- வனங்களுக்குள் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தொன்று தொட்டு பெறப்படும் வனப்பொருட்கள் கிடைக்க வழி செய்யவும், அதனை உரிமையாக உபயோகிக்கவும் ஏற்பாடு செய்தல்.

### 2.5. செயல்முறை

கீழே விவரிக்கப்பட்டுள்ள உத்திகளின் அடிப்படையில் முக்கியக் குறிக்கோள்களை அடைய திட்டமிடப்பட்டுள்ளது:–

#### 2.5.1. பசுமைப் பரப்பினை அதிகப்படுத்துதல்

மத்திய திட்டக் குழுவானது, 2007-ல் நாட்டின் வனங்களின் பரப்பினை புவியியல் பரப்பில் 25 விழுக்காடுகளாகவும், 2012-ல் அதன் அளவு 33.33 விழுக்காடுகளாகவும் அதிகப்படுத்தப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. தமிழகத்தில் வனம்/மரங்கள் சூழ்ந்த பகுதியின் பரப்பளவு 17.584 விழுக்காடாக உள்ளது. இதனை அதிகப்படுத்த காப்புக் காடுகளிலும், அவற்றின் வெளிப்பகுதிகளிலும் மரங்களை நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்திய வன அளவைத் துறையின் 2001 ஆம் ஆண்டின் அறிக்கையினை 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அறிக்கையோடு ஒப்பிடும்போது, நமது மாநிலத்தின் வனப் பரப்பு 4,404 ச.கி.மீ. உயர்ந்துள்ளது. அடர் காடுகளின் பரப்பளவு 17,078 ச.கி.மீட்டரிலிருந்து 21,482 ச.கி.மீட்டர் அதிகரித்துள்ளதே இதற்கு முக்கிய காரணமாகும். வனங்களிலிருந்து நேரடியான பொருளாதார பலன்களை அடைவது என்பது, இந்த முதன்மையான குறிக்கோளுக்குச் சார்புடையதாக அமைந்துள்ளது. வனம்/மரப் பரப்பின் மொத்த விழுக்காடு மொத்த பரப்பளவில் 21.17 விழுக்காடு எனக் கூறப்படுகிறது.

#### 2.5.2. கூட்டு வன நிர்வாகத்தின்மூலம் உயிரின மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலை மீட்டு நிலைப்படுத்துதல்

வனங்களை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளிலுள்ள கால்நடைகள் மற்றும் மனிதர்களின் அபரிமிதமான பயன்பாடே வனங்கள் தரமிழந்ததற்கு முக்கிய காரணமாகும். மக்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும் பொருட்டு, கூட்டு வன நிர்வாக முறையில் தரங்குன்றிய

வனப் பகுதிகளில் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கையான உயிரினச்சூழல் மேம்படுத்தப்படும். நமது மாநிலத்தில் பெருமளவில் தரமிழந்த வனங்களை மேம்படுத்தி சுற்றுச்சூழலைப் புனரமைக்க வேண்டியுள்ளது.

**2.5.3. சிறப்புப் பகுதி நிர்வாகம்**

தனித்தன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த மேற்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி, கடலோர சதுப்புக் காடுகள் மற்றும் கடல் பகுதிகள் ஆகியவற்றின் சுற்றுச்சூழல் சிறப்புத் திட்டங்களின்மூலம் ஒவ்வொரு பகுதியிலும் அவற்றின் தனித்தன்மை மாறாமல் பாதுகாக்கப்படும்.

**2.5.4. சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்கள் மேலாண்மை**

சிறந்த உயிரினப் பரவல்கள் செறிந்துள்ள பகுதியாக தமிழ்நாடு விளங்குகிறது. இம்மாநிலத்தின் மொத்த வனப் பரப்பில் 3134.70 சதுர கிலோ மீட்டர் அல்லது 13.7 விழுக்காடு பகுதியில் ஐந்து தேசியப் பூங்காக்கள், எட்டு வன உயிரினச் சரணாலயங்கள் மற்றும் பன்னிரண்டு பறவைகள் சரணாலயங்கள் வன உயிரினப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தாவர மற்றும் வன உயிரினப் பாதுகாப்பினை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், உயிரினக் காப்பகங்கள் போன்றவை தொடர்ந்து பராமரிக்கப்படும். தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உயிரினப் பரவல்களும், இயற்கை வளங்களும், இவைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வருங்கால சந்ததியினருக்குக் கல்வி மற்றும் பொழுதுபோக்கு மூலம் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக மேலாண்மை செய்யப்படுகிறது. சத்தியமங்கலம் வன உயிரினச் சரணாலயம், மேகமலை வன உயிரினச் சரணாலயம், கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம் மற்றும் நெல்லை வன உயிரினச் சரணாலயங்களைப் பாதுகாக்கப்பட்ட வன உயிரினச் சரணார்லயங்களாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள பாதுகாக்கப்பட்ட சரணாலயங்களை விரிவுபடுத்துவதன்மூலம், மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் வன உயிரின நிர்வாகத்தின்கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியினை 25 விழுக்காடளவிற்கு அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதிகளில் பலவகையான மருத்துவச் செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் பாதுகாக்கப்படும்.



**2.5.5. நீர்ப்பிடிப்புப் பகுதி நிர்வாகம்**

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 ஏரி, குளங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வன நிலங்களில் அமைந்துள்ளன. வனங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் வன வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளை செயல்படுத்துவதால், ஆறுகள் மற்றும் ஓடைகளில் நீரோட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு, நிலத்தடி நீர் உயர்த்தப்பட்டு, அதனையடுத்த நிலங்கள் வளம் பெற வகை செய்யப்படுகிறது. இவ்வகையான பணிகளினால் நீர்வளம் பெருகுவதுடன், விவசாயிகள் பொருளாதார ரீதியாகவும் பயனுறுவர்.

**2.5.6. வனப் பாதுகாப்பு**

மாநிலத்தின் வன வளங்கள், திருட்டு மர வெட்டுகள், கஞ்சா பயிரிடுதல், தீ விபத்துகள், ஆக்கிரமிப்பு மற்றும் வன உயிரின வேட்டைக்காரர்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியதாக இருக்கிறது. மாநிலத்தில் சந்தன மரம் மற்றும் இதர அட்டவணைப்படுத்தப்பட்ட தடிமரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப் பொருட்கள் அழிவதிலிருந்து தடுக்க, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு நவீன ரக துப்பாக்கிகள், வாகனங்கள், கம்பியில்லா தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்குவதன் மூலமாகவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனங்களுக்கு அருகிலுள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் செய்யப்படும் வன நில ஆக்கிரமிப்பு, வன நிர்வாகத்திற்கு மிகுந்த பிரச்சினையாக உள்ளது. வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன், இவ்வகை ஆக்கிரமிப்புகளை அகற்ற வனத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.5.7. உற்பத்தி வனவியல்

தொழிற்சாலைகள் மற்றும் மக்களின் வீட்டுத் தேவைக்கு 'தடிமரம்' ஓர் முக்கிய வனப் பொருளாக உள்ளது. முந்தைய ஆண்டுகளில் தடிமரங்கள் அதிக அளவு பயன்பாட்டினாலும், மக்கள் தொகை பெருக்கத்தினாலும், வனங்களில் தடிமரங்களின் இருப்பு குறைந்துள்ளது. வன நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், குளக்கரைகள் மற்றும் தனியார் நிலங்களில் உள்ளூர் மக்களின் தடிமரத் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, முதல் தரம் மற்றும் இரண்டாம் தர தடிமரங்களை மக்களின் உதவியுடன் நடுவதை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.5.8. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான வனவியல்

பழங்குடியினர், வனச்சூழல் அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாவர். இவர்களின் பொருளாதார நிலை வன வளங்களைச் சார்ந்துள்ளது. பழங்குடியினர், தொடர்ந்து நிலையான பயன்களைப் பெறும்வகையில், அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் அவர்கள் சார்ந்துள்ள வனப்பகுதிகளிலும் மர/தாவர வகைகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பினை உருவாக்குதல், கிராமப் பகுதிகளிலுள்ள பழங்குடியினருக்கு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கல்வி ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

### 2.5.9. வன விரிவாக்கம்

வன விரிவாக்கப் பணிகள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வன விரிவாக்க மையங்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இந்த வன விரிவாக்க மையங்கள், காடுகளிலிருந்து விளைநிலங்கள் எனும் அடிப்படையில் மரம் வளர்ப்பு குறித்த தகவல்களை உழவர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

எப்பொழுதும் அதிகரித்துவரும் வனப் பொருள்களின் தேவைகளை எதிர்கொள்ள, இயற்கைக் காடுகளுக்கு வெளியே உள்ள இயற்கை வன ஆதாரங்கள்மூலம் வன வளங்களை விரிவுபடுத்துவது இன்றியமையாததாகும். இந்தக் குறிக்கோளினை எய்த, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் வன விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட மரம் வளர்க்கும் தொழில்நுட்பத்தினை விளைநிலங்களுக்கு மாற்றுதல், பொது மக்களை மரம் வளர்க்கும் பணிக்கு ஊக்குவித்தல் மற்றும் வனவியல் சூழல் கல்விக்கு மேடை அமைத்தல், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களிடம் விவாதங்களை ஊக்குவித்தல் போன்றவை இந்த வன விரிவாக்க மையங்களின் கடமையாகும். 15 வன விரிவாக்க மையங்கள் மற்றும் 4 வன விஞ்ஞான கேந்திரங்கள் தமிழகம் முழுவதும் பரவலாக அமைந்துள்ளன.





நன்கு அமைக்கப்பட்ட பயிற்சிக் கூடங்கள், விவாத மையங்கள் மற்றும் நுண்உயிர் உரங்கள், நுண்உயிர் சத்து தயாரிப்பது தொடர்பாக செயல்முறை விளக்கப் பகுதிகள் போன்ற வசதிகள் இந்த மையங்களில் உள்ளன. வேளாண் காடுகள் மாதிரிப் பண்ணைகளிலும், பெருமரச் செடிகள் பண்ணை, மூலிகைச் செடிகள் போன்றவை இந்த மையங்களில் அமையப்பெற்றுள்ளன.

### 2.5.10. சமூக வனவியல்

இத்திட்டத்தின்கீழ் மாநிலத்தின் பசுமைப் பகுதியினை அதிகரிக்க தனியார் மற்றும் சமுதாய நிலங்களில் மர வகைகள் நடும் பணி மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டம் மரம் வளர்க்கும் ஆர்வமுள்ள தனிநபர்/நிறுவன நில உரிமையாளர்கள் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். வன வளர்ப்புப் பணிகளை மிகவும் பாதிக்கும் உபயோகமற்ற கால்நடைகளை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களை விட்டு வெளியேற்ற விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்படும்.

## 2.6. முக்கியப் பகுதிகள்

### 2.6.1. வன ஆராய்ச்சி

உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வனஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பல்வேறு வகையான உயிரினப் பரவல்களை பாதுகாத்தல் மற்றும் பல்வேறு வன உயிரினங்களின் இயக்க ஆற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன மரபியல் ஆராய்ச்சிப் பிரிவின்மூலம் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய மர வகைகளைக் கண்டறிந்து, அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பழங்கள், தண்டுகள், மரஇழை தரவல்ல மரங்கள், இழைமரம், விறகு மரங்கள், கட்டடப் பணிக்காக பயன்படுத்தப்படும் தடிமரங்கள் போன்ற வீரிய மரங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வன ஆராய்ச்சித் துறையின்மூலம் வீரிய விதைப் பண்ணைகளில் அதிகமாக பயன்தரும் விதைகள்

சேகரிக்கப்பட்டுள்ளன. சந்தனம், சவுக்கு, யூகலிப்டஸ், புளி, மூங்கில், தடிமரம், இழைமரம், மரஇழை தரவல்ல உற்பத்தித் திறனுள்ள மர இனங்கள் மற்றும் எண்ணெய் தரும் மர இனங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்த ஆராய்ச்சிமூலம் சிறப்பான பங்களிக்கப்பட்டுள்ளது

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு மரபணுத் தோட்டம் உள்ளது. இத்தோட்டத்தில் அரிதான 4000 தாவர வகைகள் உள்ளன. அவற்றில் 1000 தாவர வகைகளைச் சேகரித்து தோட்டமாக அமைத்து பாதுகாக்க தமிழக வனத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு இவ்வாண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் மரச் சாமான்களின் உற்பத்திக்கு இதுவரை பயன்படுத்தப்படாத மர வகைகளைப் பதப்படுத்தி வீட்டிற்குத் தேவையான மரச்சாமான்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தும்வகையில் அறுவடைக்குப்பின் பின்னேர்த்தி செய்யும் தொழில்நுட்பத்தினை தமிழக வனத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

### 2.6.2. மனித வள மேம்பாடு

வனத் துறை மாநிலத்தின் பழமையான துறைகளுள் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் திறமை மற்றும் தொழில்நுட்பம் வாய்ந்த மனித வளத்தின் மூலம், மாநிலத்தின் வனப் பாதுகாப்பு, வன வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குத் தனது முக்கிய பங்களிப்பினை அளித்துள்ளது. தகுந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தியின்மூலம் இத்திறன் மேலும் மேம்படுத்தப்படும். 2003-2004 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் தென்னக வனச் சரகர் கல்லூரியில் 23 வனச் சரகர்களுக்கும், வைகை அணை தமிழ்நாடு வனவியல் கல்லூரியில் 154 வனவர்கள் மற்றும் 120 வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

### 2.6.3. மகளிர் பங்கேற்பு

இலட்சக்கணக்கான கிராமப் பெண்கள் குடும்பப் பாதுகாப்பைத் தங்களது முக்கியப் பணியாக மேற்கொண்டுள்ளதால் குடும்பத் தேவைக்காக விறகு சேகரித்தல், கால்நடைத் தீவனம், நீர் எடுத்தல் போன்ற கடமைகளைச் சுமக்க வேண்டியுள்ளது. இவ்வன வளங்கள் நலிவடைவது அவர்களின் பணிகளை மேலும் கடினமாக்குகிறது. ஆதலால், வன வளங்களையே பெரிதும் நம்பியுள்ள ஏழ்மை நிலையிலுள்ள பெண்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப் பற்றி முடிவெடுப்பதில் பங்கேற்று அவற்றை மேலாண்மை செய்யவும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.



### 2.6.4. வேலைவாய்ப்பு உருவாக்குதல்

வன நிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 75 விழுக்காடு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கென செலவிடப்படுகிறது. வனங்களை அடுத்து வாழும் கிராம மக்களின் வேலைத்திறனை அறிந்து, உள்ளூர் மக்கள் பயன்பெறும்வண்ணம் அவர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டுடன் கிராமங்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற நிலைகள் வலுப்படுத்தப்படும்.

## 2.7. 2003–2004 ஆம் ஆண்டு சாதனைகள்

1. 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் ரூ.85.78 கோடி செலவில் 47,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் தோட்டங்கள் வளர்த்தும், 150 கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்தும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 150 கிராம வனக் குழுக்கள் மற்றும் 489 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, 52.14 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த சுயஉதவிக் குழுக்கள் யாவும் மாநில மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து திறம்பட செயல்பட்டு வருகின்றன.

2. 1997-98 முதல் 2003-2004 வரை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் சுமார் ரூ.623.57 கோடி செலவில் 4,57,454 ஹெக்டேர் பரப்பில், 1257 கிராம வனக் குழுக்கள்மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மழை மிகவும் குறைந்த நிலையிலும், இத்திட்டத்தின் நீர்சேமிப்புப் பணிகள் மூலம் தண்ணீர் இருப்பு இக்கிராமங்களில் 5 முதல் 10 விழுக்காடு உயர்ந்துள்ளது.

3. செயல் இலக்கான 22 இலட்சம் தரம் வாய்ந்த மரக்கன்றுகளை 3,100 ஹெக்டேர் பரப்பில் நடுவதற்கு ரூ. 305.72 இலட்சம் செலவில் கருவேல் தவிர வேம்பு, சிசு, புளி, புங்கன், யூகலிப்டஸ், சுபாபுல், சவுக்கு போன்ற தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்பட்ட தரம் வாய்ந்த மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு எதிராக 3,508 ஹெக்டேர் பரப்பில் குளக்கரைகளில் 27 இலட்சம் கன்றுகள் நடப்பட்டன.

4. முதுமலை வன உயிரினச் சரணாலயத்தில் 16-1-2003 முதல் 30 நாட்களுக்கு யானைகளுக்கென புத்துணர்வு முகாம் (சிறப்பு மருத்துவ முகாம்) நடத்தப்பட்டது. வனத் துறை, பல்வேறு கோயில்கள், மடங்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான சுமார்

100 யானைகள் இப்புத்துணர்வு முகாம்களில் கலந்து கொண்டன. உணவு மற்றும் ஆயுர்வேத மருந்துகளுக்கென ரூ. 3.14 இலட்சம் வனத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்டது. புத்துணர்வு முகாம் முடிவுற்றபின், அனைத்து யானைகளும் பாதுகாப்பாக அவற்றின் சொந்த இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

5. மாண்புமிகு முதலமைச்சரின் பேரிடர் மற்றும் வறட்சி நிவாரண நிதியிலிருந்து 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.76.10 இலட்சம் செலவில் யானைகள் பயன்பெற நீராதாரங்களைப் பெருக்கும் திட்டம் ஒன்று ஓசூர், தருமபுரி, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, ஈரோடு மற்றும் சத்தியமங்கலம் ஆகிய ஆறு கோட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

6. 276.00 மெட்ரிக் டன் சந்தன மர விற்பனைமூலம் ரூ.3864.17 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

7. 13 மாவட்டங்களில் மரக்கன்றுகளை வேளாண்மைத் துறையினர் நடுவதற்கு 8 இலட்சம் தரம் வாய்ந்த மரக்கன்றுகள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வனத் துறையால் உற்பத்தி செய்யப்பட்டது. (விவரம் பத்தி 2.9.11-ல் காண்க.)

8. 31-03-2004 வரை 47.0747 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த ரூ.119.34 இலட்சம் மதிப்புள்ள 38,902 கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டன.

9. 31-03-2004 வரை தஞ்சாவூர் கோட்டத்தில் தேக்கு மர விற்பனையின் மூலம் ரூ.8.50 கோடி ஈட்டப்பட்டுள்ளது.

## 2.8. வன வருவாய் மற்றும் செலவுகள்

### 2.8.1. வருவாய்

2003-2004 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் (திருத்திய மதிப்பீடு), மற்றும் 2004-2005 ஆம் ஆண்டின் உத்தேச நிதி ஒதுக்கீடு விவரம் கீழ்வருமாறு:—



| வ. எண் | வருவாய் – இனங்கள் | 2003–2004 திருத்திய மதிப்பீடு | 2004–2005 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| அ. | சந்தன மரம் | 3000.00 | 5000.00 |
| ஆ. | தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 194.00 | 205.00 |
| இ. | மரங்களல்லாத வனப் பொருட்கள் (சிறுவனப் பொருட்கள்) | 37.33 | 37.13 |
| ஈ. | தடிமரம், விறகு, மூங்கில், முந்திரி, சவுக்கு, மென்மரம், வனப் பண்ணைத் தோட்டங்கள் மற்றவை மூலமாக | 4765.77 | 4767.96 |
| | **மொத்தம்** | **7,997.10** | **10,010.09** |

### 2.8.2. செலவினங்கள் மற்றும் மூலதனம்

2003-2004 ஆம் ஆண்டில் வனப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.113.45 கோடிகளாகும். 2002-2003, 2003-2004 ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் செலவுத் தொகை பின்வருமாறு:

| திட்டத்தின் பெயர் | 2002–2003 ஆம் ஆண்டின் செலவினம் (இறுதி செய்யப்பட்டது) | 2003–2004 ஆம் ஆண்டின் செலவினம் (திருத்திய மதிப்பீடு) | 2004–2005 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | | |
| மாநில வனத் திட்டங்கள் | 8539.60 | 8832.87 | 7202.97 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 465.86 | 763.08 | 910.06 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 149.84 | 65.61 | 125.61 |
| **மொத்தம்** | **9155.30** | **9661.56** | **8238.64** |

## 2.9. 2004–2005 ஆம் ஆண்டிற்கான முக்கிய திட்டப் பணிகள் — தொடரும் திட்டப் பணிகள்

### 2.9.1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

1997-98 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும் வகையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் எனும் தனித்தன்மை வாய்ந்த திட்டத்தினை 1994-1995 ஆம் ஆண்டு நமது அரசு தயார் செய்தது. இத்திட்ட நடவடிக்கைகள் அனைத்தும் 31-03-2002-ல் முடிவு பெறும்வகையில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.499.20 கோடி செலவில் உருவாக்கப்பட்டது. இதில் 31-03-2002 வரை ரூ.441.00 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் செயல்படுத்தியதைத் தொடர்ந்து ஜப்பான் செலாவணி 'யென்' மதிப்பு, அப்போதைய ரூபாயின் மதிப்பை விட உயர்ந்ததால், கிடைத்த மீதித் தொகையிலிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அதாவது 2002-2003, 2003-2004 ஆம் ஆண்டுகளில், இத்திட்டமானது ரூ.172 கோடி செலவில் தொடரப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் பெற்ற ஊக்கத்தினால், மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் 110 கிராமங்களில் 28,653 ஹெக்டேர் பரப்பளவில் நிறைவேற்ற கருதப்பட்டுள்ளது.

### 2.9.2. வன உயிரினத் திட்டங்கள்

தமிழகத்தின் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலுள்ள தாவர மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு வன உயிரினத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் உயிர்வாழ் காப்பிடங்களில் உயிரினச்சூழலை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, வன உயிரினக் கணக்கெடுப்பு, கல்வி விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், சுற்றுலா, வேட்டைத் தடுப்பு முகாம்கள் நடத்துதல், தீத்தடுப்பு நடவடிக்கைகள், உள்ளூர் கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருதல், மருத்துவ முகாம்கள், விளம்பரப் பலகைகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இந்தியாவிலேயே மிகப் பெரியதும் மற்றும் அறிவியல் பூர்வமாக மேலாண்மை செய்யப்படும் ஓர் உயிரியல் பூங்காவாகும். இப்பூங்காவில் அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், உயிரினச்சூழலை மேம்படுத்துதல்



மற்றும் இப்பூங்காவைப் பார்வையிட வரும் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டங்கள் யாவும் ரூ.361.38 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.611.06 இலட்சங்கள் ஆகும்.

### 2.9.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரியிலுள்ள சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிரந்தர பசுமைப் பரப்பினை விரிவாக்கவும், இயற்கை மீதான உயிரினத் தலையீடுகளை முறைப்படுத்தவும், காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் இதர பணிகளின்மூலம் காடுகளைப் பாதுகாத்து, சுற்றுச்சூழலின் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தரங்குன்றிய காடுகளில் மரங்களை நடுதல், சோலை வனங்களைச் சுற்றி கம்பிவேலி நிறுவுதல், நீர்ப் பாதுகாப்புப் பணிகள், வனத் தீயினைத் தடுக்க தீத்தடுப்புப் பள்ளங்கள் வெட்டுதல், பராமரித்தல், மண்வளப் பாதுகாப்புமூலம் தரமிழந்த சோலைக் காடுகளை வளமாக்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

2003-2004 ஆம் ஆண்டில், இத்திட்டமானது ரூ.327.59 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.300.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 2.9.4. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தின் மொத்த வனப்பரப்பான 22,870 சதுர கிலோ மீட்டரில், 5,596 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பினை மேற்குத் தொடர்ச்சி மலை உள்ளடக்கியுள்ளது. வனச் சுற்றுச்சூழல் தரமிழந்து வரும் நிலையைத் தடுக்கவும், தற்போதுள்ள வனங்களையும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள விலங்கினம் மற்றும் தாவர இனத்தை அதிகமாக்கவும், ஆங்காங்கே இடைவெளிகளில் மரங்கள் நடுதல், சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, சிறு வனப் பொருட்கள் தோட்ட உற்பத்தி மற்றும் உயிரினங்களுக்காக இயற்கைச்சூழலை நிலை மாறாமல் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் அனைத்துப் பணிகளும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்படுத்துதல் முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

[2004 ஜூலை 31

2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.399.33 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.300.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் முன்னுரிமை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மூலிகைச் செடிகளை வளர்த்து, அதனைப் பாதுகாப்பதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.35.00 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டிலும் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு, ரூ.28.60 இலட்சம் செலவில் இத்திட்டத்தினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.9.5. ஒருங்கிணைந்த காட்டுத் தீத்தடுப்பு**

தமிழகத்தில் வனங்களில் ஏற்படும் தீயினைக் கட்டுப்படுத்தி வனப் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், கூட்டு வன நிர்வாகக் குழுக்களுக்கு உதவி செய்தல், நீர்ப்பிடிப்புக் குழிகள் ஏற்படுத்துதல், வாகனங்கள் மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்கள் வாங்குதல், தீத்தடுப்புக் கருவிகள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.146.66 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.400.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**2.9.6. வன ஆராய்ச்சி**

தமிழகத்தின் வன ஆராய்ச்சிப் பிரிவு, உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் உயிரியல் உற்பத்தியினைப் பெருக்குதல் ஆகியவற்றினை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.18.5 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டும் ரூ.203.00 இலட்சத்தில் இத்திட்டம் தொடரப்படவுள்ளது.

**2.9.7. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், பழங்குடியினர் பகுதிகளில் தோட்டங்கள் வளர்த்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், சந்தனப் பண்ணைகளில் துறை நடவடிக்கைகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

**2.9.8. தேசிய வன வளர்ப்புத் திட்டம்**

கிராம அபிவிருத்தி, கிராமங்களில் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்தல் மற்றும் வனங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஒரே குடையின்கீழ் இணைக்கும் நோக்கங்களுடன் வன வளர்ச்சி முகமை எனும் அமைப்பினை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் நிதியுதவி பெறும் காடு வளர்ப்புத் திட்டங்கள் யாவும், கூட்டு வன நிர்வாக அடிப்படையில் வன அபிவிருத்தி முகமையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென திட்டம் செயல்படுத்தப்படும் கோட்டங்களில் வன அபிவிருத்தி முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வனங்கள் ஆட்சி மற்றும் வன உயிரினக் கோட்டங்களில் 31 வன வளர்ச்சி முகமைகளை ஏற்படுத்த, மைய அரசுக்கு தமிழ்நாடு வனத் துறையால் கருத்துரு அனுப்பப்பட்டதில், மத்திய அரசு இதுவரை 25 வன வளர்ச்சி முகமைகளுக்கு 2006-2007 வரை ரூ.7323.93 இலட்சங்களில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த 25 வன வளர்ச்சி முகமைகளுக்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.1778.65 இலட்சத்திற்கும், 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.1812.01 இலட்சத்திற்கும் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**2.9.9. குளக்கரைத் தோட்டங்கள்**

ஸ்வீடன் நாட்டு நிதியுதவியுடன் 1981 ஆம் ஆண்டு முதல் சமூகக் காடுகள் திட்டம், தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்தது. தாங்குன்றிய மலைகள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் தோட்டங்கள் வளர்ப்பது மட்டுமின்றி, ஏரிகள் மற்றும் குளக்கரைகளில் கருவேல மரங்கள் நடவு செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஸ்வீடன் நாட்டு நிதியுதவி 01-04-1996 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. அதன் பிறகு ஏரி மற்றும் குளக்கரைகளில் கருவேல நடவுப் பணி மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. தற்போது இத்தடை நீக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.350.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டும் ரூ.350.00 இலட்சம் செலவில் இத்திட்டத்தினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.9.10. மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு**

மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக சுற்றுச்சூழல் நிறுவனம் (Global Environmental Facility) நிதி ஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. கடலோர

உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல், கடலோரப் பகுதி மேலாண்மையினை நிலைநிறுத்தல் மற்றும் மிகுதியான பயன்படுத்தலால் கடல் சார்ந்த வளங்களுக்கு ஏற்படும் தாக்கத்தினைக் குறைத்து, அதனை நில அடிப்படை நடவடிக்கைகளுக்கு மாற்றுவதன்மூலம் வேலைவாய்ப்பினைப் பெருக்குதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். அரசால் தோற்றுவிக்கப்பட்ட அறக்கட்டளைமூலம் இத்திட்டம் ரூ.123.94 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்துறையின்மூலம் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18-07-2002-ல் தொடங்கப்பட்டது.

2003-2004 ஆம் ஆண்டில் தொடக்க உதவியாக ரூ.50 இலட்சம் உலகச் சுற்றுச்சூழல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது. 31-03-2004 வரை ரூ.47.60 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் சுமார் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 2.9.11. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்திலுள்ள பயன்படாத தரிசு நிலங்களைப் பயன்படும் நிலங்களாக மாற்றும் குறிக்கோளுடன், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, மதுரை, கோவை, ஈரோடு, கரூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 13 மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களில் நடுவதற்கு 8 இலட்சம் தரமான மரச்செடிகளை வனத் துறை உருவாக்கியுள்ளது. இந்நாற்றுகளை வேளாண் துறை 2004-2005 ஆம் ஆண்டில் நடவு செய்யவுள்ளது. இத்திட்டத்திற்கென 2003-2004 ஆம் ஆண்டு ரூ. 33.63 இலட்சம் செலவிடப்பட்டது.

### 2.10. புதிய திட்டங்கள்

### 2.10.1. தமிழ்நாடு இயற்கை வள மேலாண்மைத் திட்டம் [தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (நிலை–II)]

தமிழகத்திலுள்ள காடுகள் பெரும்பாலும், மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் தக்காண பீடபூமி ஆகியவைகளில் அடங்கும். அதிகமான மேய்ச்சல், காட்டுத்தீ மற்றும் இவ்வனங்களிலிருந்து தலைச்சுமையால் எடுத்துச் செல்லப்படும் அதிக பாதிப்பினாலும் தொடர்ந்து பெருவாரியான காடுகள் தரங்குன்றிப் போனது. கிராம மக்களின் வறுமையின் காரணமாகவும்,



தேவைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. 2,50,000 ஹெக்டேர் தரங்குன்றிய காடுகளைச் சார்ந்த 1000 கிராமங்களைப் பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II ரூ.779 கோடி நிதி இலக்குடன் "தமிழ்நாடு இயற்கை வள மேலாண்மைத் திட்டம்" என்ற பெயரில் ஐந்தாண்டுகளில் 1000 கிராமங்களில் நடைமுறைப்படுத்த கருத்துரு தீட்டப்பட்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிறுவனத்தின் நிதி உதவிக்காக இந்திய அரசின் ஒப்புதலுக்கு தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### 2.10.2. பகுதி – II திட்டங்கள்

17 பகுதி-II திட்டங்களின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.287.12 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கட்டடங்கள், சாலைகள், வனக் குடியிருப்பு, கடலோரத் தொடர் தடுப்புக் காடுகள் வளர்த்தல் மற்றும் உயிரியல் பூங்கா மேம்பாடு போன்ற பின்வரும் 36 பகுதி-II திட்டங்களைச் செயல்படுத்த ரூ.1279.17 இலட்சங்கள் மதிப்பீட்டிற்கு நிதி நிலைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 12 மூலிகைச் செடி பாதுகாப்புப் பகுதிகளையும் 8 மூலிகைச் செடி மேம்பாட்டுப் பகுதிகளையும் மேம்படுத்தி புதுப்பித்தல் | 10.00 |
| 2. | பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே உள்ள காப்பு வனங்களில் வன விலங்குகள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளுதல் | 5.00 |
| 3. | வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை மேம்படுத்துதல் | 5.00 |
| 4. | வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிலுள்ள மீன் காட்சியகத்தை மேம்படுத்துதல் | 10.00 |

| | | |
|---|---|---|
| 5. | வன விலங்குகளை வேட்டையாடுவதைத் தடுப்பதற்கான ஓரளவு நிரந்தரமான 5 கொட்டகைகளைக் கட்டுதல் | 5.00 |
| 6. | பறவைகள் உய்விடங்கள் ஐந்தில் பறவைகள் சரணாலயங்களில் மேம்பாடு | 10.00 |
| 7. | 275 ஹெக்டேர் பரப்பளவில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் | 15.00 |
| 8. | மரக்காணத்திற்கருகில் கழுவேலி சதுப்பு நிலத்தில் 500 ஹெக்டேர் பரப்பளவில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் | 10.00 |
| 9. | முக்கியமான 5 சோதனைச் சாவடிகளுக்காக நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டுவதன் மூலம் வனச்சோதனைச் சாவடிகளை வலுப்படுத்தல் | 12.00 |
| 10. | களப்பணியாளர்கள் அனைவருக்கும் ஜிபிஎஸ் கருவிகளை வழங்குதல் | 5.00 |
| 11. | வனப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்–பயன்படுத்த இயலாதவை என்று ஒதுக்கப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்குதல் | 40.00 |
| 12. | வன நிர்ணய அளவை–எல்லைக்கல் நிறுவுதல்/கற்குவியல்/தடுப்புகளைக் கட்டுதல் | 15.00 |
| 13. | மதுரையில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களில் காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 17.50 |
| 14. | தருமபுரி மாவட்ட வனப் பகுதி சாலை மேம்பாடு | 850.00 |



| | | |
|---|---|---|
| 15. | திருப்பத்தூர் கோட்டத்திலுள்ள புதூர்நாடு வனத் துறை மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்குக் குடிநீர் வசதி, ஆய்வுக்கூட சாதன வசதி செய்து கொடுத்தல் மற்றும் மாணவியர்களுக்கான தனியான கழிப்பிட வசதி செய்து கொடுத்தல் | 2.00 |
| 16. | அமிர்தி சரக பாலம்பட்டு துவக்கப் பள்ளியில் கூடுதலாக 2 வகுப்பறைகள் கட்டுதல் | 5.00 |
| 17. | திருப்பத்தூர் கோட்டத்தில் வசந்தபுரம் மற்றும் நெல்லிவாசல் ஆகிய இடங்களில் உள்ள வனத் துறைப் பள்ளிகளை மேம்படுத்துதல் | 1.00 |
| 18. | திருப்பத்தூர் கோட்டத்தில் புதுமடவு, நெல்லிவாசல் மற்றும் வசந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர் குடியிருப்புகளை மேம்படுத்துதல் | 1.50 |
| 19. | ஜமுனாமருதூரில் தற்போதுள்ள 2 ஆசிரியர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் | 3.00 |
| 20. | திருப்பத்தூர் கோட்டம், கோவிலூர் வனத் துறை நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் குடியிருப்பு கட்டுதல் | 5.00 |
| 21. | வேலூர் வட்டம் கல்யாணமந்தையில் ஆசிரியர் குடியிருப்புகளைக் கட்டுதல் | 4.00 |
| 22. | 18 பழங்குடியினர் பள்ளிகளில் விளையாட்டு வசதிகள், வகுப்பறை கலன்கள், கல்வி பயிற்றுவிப்புச் சாதனங்கள், பள்ளிப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்குதல் | 5.00 |

| | | |
|---|---|---|
| 23. | மூங்கில் மரத்தோட்டங்கள் வளர்த்தல் | 18.60 |
| 24. | 100 ஹெக்டேர் பரப்பில் மூலிகைச் செடிகளைப் பயிரிடுதல் | 17.10 |
| 25. | பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக மரக்கன்றுகளை வளர்த்தல் | 6.00 |
| 26. | 2004–2005 ஆம் ஆண்டில் 10 வட்டங்களில் உள்ள சுகாதாரம் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மாசு கட்டுப்படுத்துவதற்காக இலவசமாக வழங்குவதற்காக ஒவ்வொரு வட்டத்திற்கும் 10,000 மரக் கன்றுகள் வீதம் 30 X 45 செ.மீ. கொள் கலனில் ஒரு இலட்சம் உயரமான மரக் கன்றுகளை வளர்த்தல் | 30.00 |
| 27. | வனத் துறையில் மனித வள மேம்பாட்டுப் (Human Resources Development) பயிற்சி அளித்தல் | 5.00 |
| 28. | கோயம்புத்தூர் தென்னக வனச்சரகர் கல்லூரியில் பயிற்சி அளித்தல் மற்றும் மேம்பாடுகள் செய்தல் | 20.00 |
| 29. | வைகை அணை, தமிழ்நாடு வனத் துறை பயிற்சிக் கல்லூரியை மேம்படுத்துதல் | 15.00 |
| 30. | தமிழ்நாட்டிலுள்ள 15 வன விரிவாக்க மையங்களுக்கு தொலைபேசி வசதி | 2.97 |
| 31. | மதிகெட்டான்சோலா–கொடைக்கானல் கோட்டத்திற்குச் செல்லும் 4 கி.மீ. பேரிஜம் சாலையை மேம்படுத்துதல் | 18.00 |
| 32. | தஞ்சாவூர் கோட்டத்திலுள்ள வெட்டுமரக் கிடங்கை மேம்படுத்துதல் | 10.00 |
| 33. | திண்டுக்கல்லில் வனப் பாதுகாவலர் அலுவலகக் கட்டடத்தைக் கட்டுதல் | 6.00 |
| 34. | மாக்காம்பாளையம் ஓய்வு இல்லங்களைப் புதுப்பித்தல் மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல் | 3.50 |
| 35. | விருதுநகர், திருச்சி வட்டத்திலுள்ள கடற்கரையோர பாதுகாப்புப் பகுதியில் மலைத் தோட்டப் பயிர்களை வளர்த்தல் | 58.00 |
| 36. | தேனி மாவட்டத்திலுள்ள சாலைகளுக்குத் தார் போடும் பணியினை மேம்படுத்தல் | 33.00 |
| | மொத்தம் | **1279.17** |

## 2.11. கழகங்கள்

### 2.11.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

தொழிற்சாலைகளின் தேவைக்காக கூழ்மரங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்தல், பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் ஆகியன இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும். இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுகையின்கீழ் 71,013 ஹெக்டேர் காப்புக் காடுகள் வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 கோடியாகும்; மற்றும் இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.3 கோடியாகும்.

[2004 ஜூலை 31

### 2.11.2. சாதனைகள்

2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ஹெக்டரில்)

| | 2003-2003 | 2003-2004 |
|---|---|---|
| யூக்கலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 1162 | 2307 |
| முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி | 907 | 1128 |
| சவுக்குத் தோட்டங்களின் உற்பத்தி | 57 | 48 |
| நெல்லித் தோட்டங்களின் உற்பத்தி | 75 | 64 |

2004-2005 ஆம் ஆண்டில் இக்கழகம் 3000 ஹெக்டேரில் வீரிய முறையில் பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களையும் மற்றும் 1000 ஹெக்டேரில் முந்திரித் தோட்டங்களையும் உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ளது. மேலும், நுட்பவியல் ஒட்டுமுறை மூலம் 50 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்குத் தோட்டங்களும், 10 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு, மூங்கில் மரத் தோட்டங்களும் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 50 ஹெக்டேர் பரப்பில் நுட்பவியல் ஒட்டுமுறை மூலம் யூக்கலிப்டஸ் மரத் தோட்டங்களை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.11.3. கூழ்மர விநியோகம்

2003-2004 ஆம் ஆண்டில் இக்கழகம் 1,52,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை மரத் தொழிற்சாலைகளுக்கு வழங்கியதன் மூலம் ரூ.16.00 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் 1,70,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை தொழிற்சாலைகளுக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.11.4. சந்தன எண்ணெய் தொழிற்சாலை

2003-2004 ஆம் ஆண்டில் இக்கழகத்தினால், 1701.100 கிலோ கிராம் சந்தன எண்ணெய் மற்றும் இதர பொருட்களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இக்கழகம் 2362.392 கிலோ கிராம் சந்தன எண்ணெயும் மற்றும் இதர பொருட்களையும்



2004 ஜூலை 31]

விற்றுள்ளது. சந்தனமரப் பொருட்களின் தர முத்திரையினை உள்ளூர் மற்றும் உலகச் சந்தைகளில் நிலை நிறுத்தும் தீவிர முயற்சியில் வனத் தோட்டக் கழகம் ஈடுபட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு 80.00 கிலோ அளவு சந்தன எண்ணெயினை இக்கழகம் ஏற்றுமதி செய்து அதன் மூலம் ரூ.23.55 இலட்சம் அன்னியச் செலாவணியை ஈட்டியது.

### 2.11.5. வருவாய் மற்றும் செலவின விவரம்

இக்கழகத்தின் நிதி ஒதுக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | வருவாய் | செலவு | இலாபம் (+) நட்டம் (−) |
|---|---|---|---|
| 2002-2003 (உள்ளபடி) | 3233.45 | 3123.79 | (+) 109.66 |
| 2003-2004 (மதிப்பீடு) | 3358.28 | 2650.87 | (+) 707.41 |
| 2004−2005 (திட்ட மதிப்பீடு) | 2634.17 | 2334.38 | (+) 299.79 |

### 2.12. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்

1968 ஆம் ஆண்டின் சாஸ்திரி-ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி, இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் புனர்வாழ்விற்காக சமூகப் பொருளாதார நோக்கத்துடன் தேயிலைத் தோட்டங்களை உருவாக்க தமிழக அரசால், அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, வனத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இக்கழகம் 1956 ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 01-01-1976-லிருந்து ஒரு கழகமாக செயல்படத் துவங்கியது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ.10 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும்.

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. இக்கழகம் 4431.92 ஹெக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை உற்பத்தி செய்து, 2445 இலங்கை அகதிகளின் குடும்பங்களுக்கு மறுவாழ்வளித்து வருகிறது. தற்போது 6329 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் 1300 தொழிலாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படை வசதிகளான இலவசக் குடிநீர், இலவச மருத்துவ சிகிச்சை, குழந்தைகள் காப்பகம், தொடக்கக் கல்வி, மகப்பேறு பயன்கள், நோய்நிலைப் பயன்கள், விடுப்பு ஊதியம், தேசிய மற்றும் விழாக்கால ஊதியம், வெப்ப உடைகள், மிகைச் சம்பளம், பணிக்கொடை, சேமநல நிதி போன்ற பலன்களை வழங்கி வருகின்றது. தற்போதைய தின ஊதிய வீதம் ரூ.74.62 ஆகும்.

இக்கழகத்தின் வரவு-செலவு விவரம் மற்றும் பசுந்தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தியின் செயல் சாதனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

**2.12.1. பசுந்தேயிலை உற்பத்தி**

(இலட்சம் கிலோவில்)

| 2002-2003 | 2003-2004 | 2004-2005 (மதிப்பீடு) |
|---|---|---|
| 447.57 | 429.76 | 525.00 |

**2.12.2. பதப்படுத்தப்பட்ட தேயிலை**

(இலட்சம் கிலோவில்)

| 2002-2003 | 2003-2004 | 2004-2005 (மதிப்பீடு) |
|---|---|---|
| 107.87 | 105.55 | 126.00 |





**2.12.3. வருவாய் மற்றும் செலவின விவரங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர லாபம் (+) நட்டம் (−) |
|---|---|---|---|
| 2002-2003 (இறுதி செய்யப்பட்டது) | 4549.59 | 5148.00 | (-) 598.41 |
| 2003-2004 (தற்காலிகமானது) | 4104.00 | 4534.00 | (-) 430.00 |
| 2004–2005 (மதிப்பீடு) | 5234.00 | 5387.00 | (-) 153.00 |

திறம்பட்ட மேலாண்மையினாலும், பல்வேறு செலவு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலமும் 2000-2001 ஆம் ஆண்டில் ஒரு கிலோவிற்கு ரூ.54.16 என இருந்த தேயிலை உற்பத்திச் செலவினை, 2003-2004 ஆம் ஆண்டில் (தற்காலிகமாக) ஒரு கிலோவிற்கு ரூ.43.00 ஆக இக்கழகம் குறைத்துள்ளது. ஆனால், 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.47.59 என இருந்த தேயிலையின் விலை, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.38.23 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளாக ஏற்பட்ட விலை வீழ்ச்சி மற்றும் எதிர்மறையான வானிலைச் சூழ்நிலைகளிலும், கழகமானது நட்டத்தினை வெகுவாகக் குறைத்துள்ளது.

**2.13. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்**

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4279.78 ஹெக்டேர் வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண்வளம், தட்ப வெப்பநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 20-08-1984 அன்று,

[2004 ஜூலை 31

அரசு ரப்பர் கழகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.2 கோடியாகும்.

1997-98 ஆம் ஆண்டு முதல் இக்கழகம் நட்டத்தில் இயங்கி வருகிறது. மேலும், அரசு ரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட ரப்பர் மரங்கள் 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நடப்பட்ட மரங்கள் ஆகும். ரப்பர் வாரிய வழிமுறைகளின்படி 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் மரங்கள் குறைந்த அளவு விளைச்சலை வழங்குவதால் இவற்றைப் பராமரிப்பது பயனற்றதாகும். உற்பத்தியில் ஏற்படும் சரிவையும் கழகத்தை நிலைத்திருக்கச் செய்யவும், ஏற்கெனவே உள்ள (சுமார் 1800) தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பளிக்கவும், ரப்பர் வாரியத்தின் அறிவுரையின்படி இப்பகுதிகளில் உயர்நுட்பவியல் ஒட்டு மரங்களை மறுநடவு செய்ய முடிவெடுக்கப்பட்டது. இதன்படி 2002-2003 ஆம் ஆண்டில் 32 ஹெக்டேர் பரப்பில் மறுநடவு செய்யப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் 100 ஹெக்டேர் பரப்பிற்கும் மேலாக மறுநடவு செய்யப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டில், மேலும் 100 ஹெக்டேர் பரப்பில் மறுநடவு செய்யப்படவுள்ளது. அதேபோல் இனி வருங்காலங்களில் படிப்படியாக முதிர்ந்த ரப்பர் மரங்களை வெட்டி, அதிக விளைச்சலைத் தரும் உயர்நுட்பவியல் ஒட்டு மரங்களைப் பிற பகுதிகளில் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.13.1. உற்பத்தி மற்றும் விற்பனை (வருவாய் மற்றும் செலவுகள்)**

(ரூபாய் இலட்சங்களில்)

| வருடம் | ரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | ரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | விற்பனை (மெட்ரிக் டன்னில்) | நிகர லாபம் (+) நட்டம் (−) |
|---|---|---|---|---|
| 2002–2003 | 2834 | 1378.64 | 1319.38 | (+) 59.26 |
| 2003–2004 | 2700 | 1668.25 | 1388.99 | (+) 279.26 |
| 2004–2005 (திட்ட மதிப்பீடு) | 2700 | 1681.42 | 1387.74 | (+) 293.68 |



2004 ஜூலை 31]

## 3. சுற்றுச்சூழல் துறை

3.1.1. மக்கள் தொகை பெருக்கமும், நகர்மயமாக்கமும், பெருகிவரும் தொழிற்சாலைக் கழிவுகளும், நீர், நிலம் மற்றும் காற்று, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன. நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியே நமக்கும், வருங்கால சந்ததியினருக்கும் குந்தகம் ஏற்படுத்தாமல் நமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் வளர்ச்சிப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்வதற்கு அடிகோலும். இந்தவகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் "சூழல் பாதுகாப்பு" முக்கியமான ஒரு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீர், நிலம், காடுகள், உயிர்ப் பன்மயம் போன்ற வாழ்க்கை ஆதாரங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவது, தமிழகத்தின் சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாதது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசு, நதிநீர் மாசினைக் களையவும், ஏரிகளைத் தூய்மைப்படுத்தவும், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்தவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**3.1.2.** தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தும் பொருட்டு சுற்றுச்சூழல் துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை, பெரிய திட்டங்களான காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆறுகள், தமிழ்நாட்டின் நகர்ப்புற ஏரிகள் மற்றும் சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.

**3.1.3.** திட மற்றும் திரவக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், இயற்கை உரம் தயாரித்தல், மழைநீர் சேகரம் செய்தல், மரம் நடுதல் ஆகியன சூழல் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் முக்கிய செயல்களாகும். மக்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுத்தி அதன் வாயிலாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பது சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும். சூழல் மேம்பாடு அடைவதற்கு இம்மாதிரியான சிந்தனைகளைப் பள்ளி மாணாக்கர்களின் இளம் மனங்களில் பதியும் வண்ணம் புகட்டப்படுதல் வேண்டும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கருத்துரு மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள 15 அம்சத் திட்டத்தின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு,

[2004 ஜூலை 31

2004-2005 ஆம் ஆண்டுக்கான திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பெருமளவு தோற்றுவிக்கவும், சூழல் மறுசீரமைப்பினை ஓரளவுக்கு ஏற்படுத்தவும் வழிகோலும்.

### 3.2. சுற்றுச்சூழல் துறையின் குறிக்கோள்கள்

◊ சுற்றுச்சூழல் துறை தேசிய நதிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி ஆறு, வைகை ஆறு மற்றும் தாமிரபரணி ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் திட்டம்

◊ சென்னை நகரின் நீர் வழிகளில் மாசினைக் களையும் திட்டத்தினைச் செயல்படுத்துவது

◊ தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டின் நகர்ப்புற ஏரிகள் தூய்மைப்படுத்தும் திட்டம்

◊ தேசியப் பசுமைப்படை சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலம் விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்வது

◊ கடலோரக் கட்டுப்பாட்டு அறிவிக்கையின் வரைமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

◊ சுற்றுச்சூழல் தகவல் மையம் மூலம் தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் நிலை குறித்த தகவல்களைச் சேகரித்து, இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு வழங்குதல்

◊ மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் பணிகளையும் செய்து வருகிறது.

### 3.3. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் – ஐந்து நகரங்கள்

1996-1997 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள திருச்சி, ஈரோடு, பவானி, குமாரப்பாளையம் மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய ஐந்து நகரங்களில் ஏற்படும் மாசினால் காவிரி நதி மாசுபடுவதைத் தடுக்கும் பொருட்டு ரூ.3627.75 இலட்சங்கள் மத்திய அரசின் நிதி உதவியுடன் பத்தாண்டுத் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இதில் 31-3-2004 வரை ரூ.1780.51 இலட்சங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும்



2004 ஜூலை 31]

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை திருச்சியிலும், ஈரோட்டிலும் 100% பணிகளும், குமாரபாளையத்தில் 70.72% பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. பவானி, பள்ளிப்பாளையம் ஆகிய நகரங்களில் சேரும் கழிவுநீரைத் தடுத்து குழாய் மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகளின் திட்டக் கருத்துரு மற்றும் பள்ளிப்பாளையத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் குமாரப்பாளையத்தில் இரண்டாவது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துரு, மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.122.40 இலட்சம் மேற்கண்ட திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.1780.51 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

### 3.4. சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

சென்னை நகரின் நீர்வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்த, நகரின் முக்கிய ஆறு நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் குக் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் சேரும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி குழாய் மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு மொத்த மதிப்பீடு ரூ.49152.00 இலட்சங்கள் ஆகும். 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 31-3-2004 வரை ரூ.19658.16 இலட்சங்கள் செலவிடப்பட்டு, குழாய் பதிக்கும் பணியில் 82 சதவீதம் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 12 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.7070.60 இலட்சம் மேற்கண்ட திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

### 3.5. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் – 7 புதிய நகரங்கள்

காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நதிநீரைத் தூய்மைப்படுத்த, மத்திய அரசால் ரூ.57530.00 இலட்சம் அளவிலான

திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு சுமார் 50 சதவீதம் மானியமாக வழங்குகிறது. மீதியுள்ள 50 சதவீதம், மாநில அரசும், உள்ளாட்சி அமைப்புகளும், பொதுப் பங்களிப்புகளின் மூலமும் திரட்டப்படுகிறது.

இத்திட்டத்தில் மதுரையில் 43%, மயிலாடுதுறையில் 40%, கும்பகோணத்தில் 35%, கரூர்-இனாம் கரூரில் 31%, திருநெல்வேலியில் 30%, தஞ்சாவூரில் 26%, திருச்சியில் 13%மும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

கடந்த மூன்று ஆண்டு காலத்தில் இத்திட்டத்தின்கீழ் ரூ.11323.59 இலட்சங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவிடப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.7791.66 இலட்சம், மேற்கண்ட திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

### 3.6. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

உதகை மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் மாசினைக் களைந்து தூய்மைப்படுத்துவதற்காக ரூ.688.00 இலட்சம் செலவில் திட்ட மதிப்பீடுகள் மைய அரசால் அங்கீகரிக்கப்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. உதகை ஏரியின் பணிகளுக்காக மார்ச் 2004 வரை மத்திய அரசிடம் பெற்ற ரூ.150.00 இலட்சத்தில் ரூ.141.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர் தொழில்நுட்பத்தின் மூலம் உதகை ஏரி தற்போது தூய்மையாகியுள்ளது. கொடைக்கானல் ஏரியின் பணிகளுக்காகப் பெறப்பட்ட ரூ.200.00 இலட்சத்தில் ரூ.31.80 இலட்சத்திற்குரிய பணிகள் கொடைக்கானல் ஏரியில் தற்போது முடிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றத் தடையாணை காரணமாக கொடைக்கானல் ஏரியில் மேற்கொண்டு பணிகள் செய்வது தற்போது தடைபட்டுள்ளது. இத்தடையாணையை விலக்குவதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.66.61 இலட்சம் உதகை ஏரி பணிகளுக்காகவும், ரூ.14.31 இலட்சம் கொடைக்கானல் ஏரி பணிகளுக்காவும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.





### 3.7. கடற்கரைப் பகுதி மேலாண்மை

கடற்கரைப் பகுதிகளில் வளர்ச்சியினை ஒழுங்குபடுத்துவதற்காக "கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 1991" வெளியிட்டுள்ளது. மத்திய அரசு இதனைச் செயல்படுத்துவதற்காக சுற்றுப்புறம் மற்றும் வனத் துறைச் செயலரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர்- செயலராகவும் கொண்ட மாநிலக் கடற்கரை மேலாண்மைக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கைகளின்கீழ், பல்வேறு கருத்துருக்கள் இந்தக் குழுமத்தால் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல, அனல் மின் திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, வல்லுநர் குழு ஒன்றையும் அரசு நியமித்துள்ளது. இக்குழுவும் இத்துறையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

### 3.8. சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறந்த பணி செய்த வல்லுநர்கள், தனி நபர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியோரைப் பாராட்டி ஊக்குவிக்கும் வண்ணமாக, தமிழ்நாடு அரசால் சுற்றுச்சூழல் தினத்தில் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 3.9. 2003–2004 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

#### 3.9.1. கோவில் குன்றுகளில் சூழல்–மறு சீரமைப்பு முன்னோடித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவிலின் குன்றுப் பகுதிகளை ரூ.9.00 இலட்சம் திட்டச் செலவில் பசுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தரிசாகவும், தரங்குன்றியும் உள்ள மலைப் பகுதியில் மரக் கன்றுகள் நடும் பணி வனத் துறை மூலம் ரூ.6.00 இலட்சம் செலவில் நிறைவு பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை மூலமாக நீர்ப்பாசன அடிப்படை கட்டுமானப் பணிகளுக்காக ரூ.3.00 இலட்சம் செலவிடப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.9.2. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு

2003-2004 ஆம் ஆண்டில் நிதி உதவியாக ஒவ்வொரு சுற்றுச்சூழல் மன்றத்திற்கும் ரூ.5,000/- வீதம் 60 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் முன்மாதிரியாக மழைநீர் சேகரிப்பு, மண்புழு உரம் தயாரித்தல், மரம் வளர்த்தல், பள்ளித் தோட்டம் அமைப்பதற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

### 3.9.3. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

மாநிலத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்களின் வல்லுநர்களிடமிருந்து சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டு, வல்லுநர் குழு மூலம் நிதி உதவி பெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டன. சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை, சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவற்றிற்கு ரூ.9.78 இலட்சம் ஆராய்ச்சித் திட்டப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 3.9.4. சுயஉதவிக் குழுக்கள் மூலமாக சுற்றுச்சூழல் மேம்பாடு

சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாநகராட்சிகளில் உள்ள சுயஉதவிக் குழு மற்றும் அரசு சாரா அமைப்புகளின் மூலம் கழிவுக் காகிதங்களிலிருந்து பயனுள்ள காகிதம் தயாரித்து, காகிதப் பை போன்ற பொருட்கள் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.12.00 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் மூலம் கழிவுக் காகிதங்களிலிருந்து பயனுள்ள காகிதப் பொருட்கள் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

### 3.10. தேசிய பசுமைப் படை

தேசிய பசுமைப் படைத் திட்டத்தின்கீழ் மாவட்டத்திற்கு 100 பள்ளிகள் வீதம் 2,900 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை துவங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 40 முதல் 50 மாணவர்கள் ஒரு பள்ளி ஆசிரியர் தலைமையில் அத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள். நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கூடுதலாக 1,450 பள்ளிகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் 50 வீதம் தேசிய பசுமைப் படை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் சூழல் மன்றங்கள் மாநிலத்தில் இன்று 5,500-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் பயிலும் சுமார் 2.50 இலட்சம்



மாணவ மாணவியர்களை உள்ளடக்கிய பெரும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கமாக மிளிர்கிறது. சுற்றுச்சூழல் இயக்குநர் தேசிய பசுமைப் படையின் மாநில ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார். இதுவரை மத்திய அரசு ரூ.76.19 இலட்சம் தேசிய பசுமைப் படையின் செயலாக்கத்திற்குச் செலவு செய்துள்ளது.

### 3.11. சூழல் தகவல் மையம்

உலக வங்கியின் உதவியுடன் மத்திய அரசு செயல்படுத்தி வரும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திறனை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின்கீழ் "சுற்றுச்சூழல் தகவல் மையம்" ஒன்று தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் துறையில் அமைக்கப்பட்டுள்ளது. கணினி வலையின் வாயிலாக தமிழகச் சுற்றுச்சூழல் பற்றிய பொதுவான தகவல்களை அளிப்பது மட்டுமன்றி, சுற்றுச்சூழலின் தற்போதைய நிலை, மாநிலத்தின் வளமான உயிர்ப் பன்மயம் மற்றும் ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் பணிகள் போன்றவை குறித்த விபரங்களையும் சூழல் தகவல் மையம் வழங்குகிறது. சூழல் தகவல் மையத்தினால் 5-12-2002 அன்று உயிர்ப் பன்மயம் குறித்து ஒரு கருத்துப் பட்டறையும், 27-8-2003 அன்று நதிநீர்ப் பாதுகாப்பு குறித்த கருத்துப் பட்டறையும் நடத்தப்பட்டன. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ.12.44 இலட்சம் மத்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2004 வரை ரூ.7.34 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 3.12. தமிழகச் சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரித்தல்

மத்திய அரசு நிதியுதவியுடன் மாநில சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி இத்துறையால் துவங்கப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசு ரூ.12.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதுவரை மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.5.00 இலட்சத்தில் ரூ.1.77 இலட்சம் மார்ச் 2004 வரையில் செலவிடப்பட்டுள்ளது.

### 3.13. சூழலுக்கு உகந்த முன்னோடி சூழல் நகரம் உருவாக்குதல்

சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக சூழலுக்கு உகந்த முன்னோடி நகரங்களை உருவாக்கும் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் மூலமாக ரூ.2.50 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த வரைவு அறிக்கை காஞ்சிபுரத்தில் 8-1-2004 அன்று நடத்தப்பட்ட கருத்துப் பட்டறையில் விளக்கமாக

எடுத்துக் கூறப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டது. அதன் இறுதி அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.14. தூத்துக்குடி நகரில் தாங்கும் திறனுக்கேற்ற வளர்ச்சி குறித்த மதிப்பீடு

தூத்துக்குடி பகுதிக்கு வளர்ச்சிப் பணிகளின் தாக்கத்தைத் தாங்கும் அளவினை அறிவியல்பூர்வமாக மதிப்பீடு செய்யும் பணி ரூ.5.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், புதுதில்லி நீர் மற்றும் எரிசக்தி ஆலோசனை சேவை மையம் என்ற நிறுவனத்தின் மூலம் நிறைவடைந்துள்ளது. இறுதி அறிக்கை தூத்துக்குடி கருத்தரங்கில் விவாதிக்கப்பட உள்ளது.

### 3.15. சுற்றுச்சூழல் கல்வி – சூழலுக்குகந்த தெருக்கள் – முன்னோடித் திட்டம்

மனிதனின் செயல்பாடுகளால், ஏற்கெனவே புவியின் உயிர்ச் சூழல் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் மேலும் சீரழிவினை ஏற்படுத்த தினமும் உருவாகும் கழிவுகளும் காரணமாக அமைகின்றன. நகர்ப்புற வளர்ச்சியினை முன்னிட்டு மனித இனத்தின் செயல்பாடுகள் நாளும் துரிதகதியில் இயங்குவதால் உருவாகும் கழிவுகளின் அளவும் பன்மடங்காகி உள்ளது. உருவாகும் திடக் கழிவுகளில் மக்கிப் போகும் தன்மையுடையவை மற்றும் மக்கிப் போகாத தன்மையுடையவை என இரு வகைகள் உண்டு. திடக் கழிவுகள் மேலாண்மையில் அவை உருவாகும் இடத்திலேயே அவற்றைத் தரம் பிரிப்பதும் அவற்றில் மக்கிப் போகும் கழிவுகளைச் சரியான முறையில் பயன்படுத்துவதும் மிக முக்கியமான அடிப்படைச் செயல்களாகும்.

தமிழக அரசின் உதவியுடன் 1,260 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்களும், மைய அரசின் தேசிய பசுமைப் படைத் திட்டத்தின்கீழ் மாவட்டம் தோறும் 100 பள்ளிகள் வீதம் 2,900 பள்ளிகளிலும் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மைய அரசின் தேசிய பசுமைப் படைத் திட்டத்தின்கீழ் மேலும் 1,450 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மக்கிப்போகும் கழிவுகளை முறையாகப் பயன்படுத்துவதற்கும் தாங்கள் இருக்கின்ற இடத்தைச் சுற்றி மரக் கன்றுகளை நடுவதன் மூலம், சுற்றுச்சூழல் மேம்பாடடைய ஏதுவாகும். இக்கருத்தினை மாணவர்களின் மனங்களிலே தோற்றுவித்து, பள்ளிக்கூடங்களைச் சூழலுக்கு மிகவும் உகந்த இடங்களாக மாற்றுவது மட்டுமன்றி, பொறுப்பான சமுதாயத்தை உருவாக்கும் ஒரு முன்னுதாரண நிறுவனங்களாக மாற்றி அமைக்க இத்திட்டம் வழிகோலும்.





இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு முன்னோடியாக சென்னை மாநகராட்சியில் சுமார் 40 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களது பள்ளிக்கூடங்களுக்கு அருகிலுள்ள ஒரு தெருவினைத் தத்து எடுத்து, சுத்தம் செய்வதற்கென இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. தத்து எடுக்கப்பட்ட தெருக்களின் திடக்கழிவுகள் ஆரம்ப நிலையிலேயே தரம் பிரிக்கப்படும். மக்கிப்போகும் கழிவுகளைக் கொண்டு உரக்குழிகள், பள்ளிக்கூட வளாகத்திற்குள்ளேயே அமைக்கப்பட்டு இயற்கை உரம் தயாரிக்கப்படும். இவ்வாறு கிடைக்கும் இயற்கை உரம் தத்து எடுக்கப்பட்ட தெருக்களின் ஓரங்களில் நடப்படும் மரக்கன்றுகளுக்கு உரமாகப் பயன்படுத்தப்படும். இம்முறையினால் தத்து எடுக்கப்பட்ட தெருக்கள் சுத்தமாவது மட்டுமன்றி, ஒரு பசுமைப் போர்வையினையும் பெற ஏதுவாகும். சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய செய்தியினை மற்றவர்களுக்கு எடுத்துச்செல்லும் கருவியாகச் செயல்படுவர். தெருக்களை அழகுபடுத்த பள்ளிகள்தோறும் ஒரு ஆசிரியர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு, அவர் மூலமாக தெருவில் உள்ள வீடுகள்தோறும் குப்பைகளைச் சேகரிக்கவும், தரம் பிரிக்கவும், சாலையோர மரக்கன்றுகளுக்குக் கோடைக் காலத்தில் தண்ணீர் ஊற்றிப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.18,750/- உதவித் தொகையாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் இப்பணியை 40 பள்ளிகளில் 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் செயல்படுத்துவதற்கு ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. காகிதம் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்ற இதரப் பொருட்களால் மறுசுழற்சி மூலம் உருவாக்கப்பட்ட பொருட்களை விற்பதன் மூலமாகவும், இயற்கை உரம் தயாரித்து விற்பதன் மூலமாகவும் கிடைக்கும் வருமானத்தின் மூலம் இத்திட்டம் நீண்ட காலம் செயல்படும். இம்மாதிரித் திட்டத்தின் செயல்பாட்டைப் பொறுத்து இதர நகரங்களுக்கும் இதனை வரும் ஆண்டுகளில் விரிவுபடுத்தலாம்.

### 3.16. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

திடக்கழிவு மேலாண்மை, ஏரிகள் பாதுகாப்பு, மருத்துவக் கழிவுகள் மேலாண்மை ஆகியவற்றில் புதுமையான சுற்றுச்சூழல் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில், அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப்

பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சி வசதிகள் பயன்படுத்திக் கொள்ளப்படும். பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் வழிமுறைகளின்படி மேற்காண் பணிகளுக்கு ஆராய்ச்சி உதவியாளர், முதுநிலை ஆராய்ச்சியாளர், இளநிலை ஆராய்ச்சியாளர் ஆகியவர்கள் நியமிக்கப்படுவர். மேற்காண் திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

### 3.17. ஆற்று நீரின் தரத்தைக் கண்காணித்தல்

தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளைத் தூய்மைப்படுத்த தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஏரிகளினைத் தூய்மைப்படுத்த தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் சுற்றுச்சூழல் துறை பணிகளை மேற்கொண்டு வருகிறது. முன்னோடித் திட்டமாக தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஈரோடு, பவானி, குமாரபாளையம், திருச்சி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய ஐந்து நகரங்களிலும் தற்போது மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கரூர்-இனாம் கரூர் மற்றும் திருச்சி-ஸ்ரீரங்கம், ஆகிய ஏழு நகரங்களிலும் மற்றும் சென்னையிலும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகள் தூய்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. அடிப்படை விவரங்கள் சேகரிப்பதும், நீரின் தரத்தைக் கண்காணிப்பதும், அடுத்து வருகின்ற மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியப் பணிகளாகும். காவிரி, வைகை, தாமிரபரணி, சென்னை நகர நீர்வழித் தடங்கள், உதகை மற்றும் கொடைக்கானல் ஏரிகள் ஆகியவற்றின் நீரின் தரத்தைச் செவ்வனே கண்டறிய தனிப்பட்ட ஒரு சிறு ஆய்வுக் கூடத்தை இத்துறையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் துறைக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிகளில் ஆறுகள் மற்றும் ஏரிகளின் தூய்மையினைப் பாதுகாத்தல் முக்கியப் பணி என்பதால், தொடர்ந்து நீரின் தரம் அறிய ஒரு ஆய்வுக்கூடம் நிறுவுதல் இத்துறைக்கு மிகவும் அவசியம். மேலும், இம்மாதிரியான ஆய்வு, மாநில அளவில் மேற்கொள்ளப்படும் நதிநீர் தூய்மைப்படுத்தும் திட்டங்களினைக் கண்காணிக்க பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

இவ்வாய்வுக் கூடம், சுற்றுச்சூழல் துறையில் தற்போது பணிபுரியும் துணை இயக்குநர் (சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு) அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். ஆய்வுக்கூடப் பணியாளர்கள் ஒப்பந்த



அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். நீரின் தர ஆய்விற்கு இப்பணியாளர்கள் துணை இயக்குநருக்கு உதவிகரமாக இருப்பார்கள். இத்திட்டத்திற்கு 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

### 3.18. கடற்கரை சூழல் பாதுகாப்பு

அபிவிருத்தித் திட்டங்களின் தாக்கத்தினால் கடலோரப் பகுதிகளின் சூழல் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகிறது. நகரங்கள், துறைமுகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பிற அபிவிருத்திகளால் கடற்கரை சூழல் தற்போது முற்றிலும் மாற்றமடைந்துள்ளது. தன்னிலை இழந்தும் காணப்படுகிறது. இதனால் பொருளாதாரம் மற்றும் பொழுதுபோக்கு அளவில் ஏற்படுகின்ற இழப்பு மட்டுமன்றி கடற்கரைகளின் சூழல் தன்மையும் பாதிக்கப்பட்டுள்ளது. கடலோர அபிவிருத்தி திட்டங்களால் எந்த அளவிற்கு சூழலியல் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து கடலோரப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைத் திட்டங்களை வடிவமைத்தால், கடற்கரைகளைப் பாதுகாக்கலாம். சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாக்கவும், மறு உற்பத்தி செய்யவும் வனத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. சூழலுக்கு உகந்த சுற்றுலா நடவடிக்கைகளைச் சுற்றுலாத் துறை மேற்கொள்கிறது.

◊ (i) ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைக்கான திட்டத்தினை பயனாளிகள் மற்றும் இதர முகமைகள் மூலமாக வடிவமைத்து பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றுவதற்கு ரூ.10.00 இலட்சம் 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

◊ (ii) சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்கீழ் கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை 1991-னை இத்துறை கடலோரப் பாதுகாப்பிற்காகச் செயல்படுத்தி வருகிறது. கடலோரங்களில் நிகழ்கின்ற அறிவிக்கை மீறல் நடவடிக்கைகளை அவ்வப்போது ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. எனவே, கடலோரப் பாதுகாப்புக் குழுவாக பசுமைப்படை ஒன்றினை அமைத்து கடலோர அத்துமீறலை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

## 4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

4.1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1982-ல் அமைக்கப்பட்டு, மாசு தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977, திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆகியவற்றையும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-ன் உரிய அம்சங்கள் மற்றும் விதிகளையும் செயல்படுத்தி வருகிறது. மாசு கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதிகள் பின்வருமாறு:

◊ 1978 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1974 ஆம் ஆண்டு நீர்(மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.

◊ 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்(மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.

◊ 1991 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1977 ஆம் ஆண்டு நீர்(மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச் சட்டம்.

◊ 1992 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1978 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி விதிகள்.

◊ 1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்

◊ 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.

◊ 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.

◊ 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள்.

◊ 2000 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.





◊ 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.

◊ 2000 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

◊ 2003 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1999 ஆம் ஆண்டு மறுசுழற்சி பிளாஸ்டிக் தயாரிப்பு மற்றும் பயன்பாடு விதிகள்.

◊ 2000 ஆம் ஆண்டு ஒலி மாசு (சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.

◊ 2001 ஆம் ஆண்டு மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

வாரியம், சென்னையில் தலைமை அலுவலகத்துடன் இயங்குகிறது. சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், தாம்பரம், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, உதகமண்டலம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன.

சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர். வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், ஒசூர் மற்றும் மணலி ஆகிய 10 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் மற்றும் தூத்துக்குடியில் ஒரு நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

### 4.2. மற்ற நிறுவனங்களுடனான தொடர்பு

வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த செயலினை மேற்கொள்வதற்காக, தொடர்புடைய பிற துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்கிறது. வாரியம், நகர திடக்கழிவு மேலாண்மைக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவியினை அளித்து உதவி வருகிறது.

### 4.3. தொழிற்சாலை மாசு கண்காணிப்பு

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழிற்சாலைமயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வரும் மாசினை தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெருகிறது. அனைத்து தொழிற்சாலைகளும், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்குத் தேவையான மாசு தடுப்புச் சாதனங்களை அமைக்க வேண்டும். வாரியத்தின் கள அலுவலர்கள் அவர்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து செய்முறைக் கழிவு நீர் மற்றும் வாயுக் கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைக் கண்காணித்து வருகின்றனர். வாரியம், தொழிற்சாலைகளைச் சீரியமுறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மாசு தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது.

### 4.4. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை

வாரியம், கழிவுநீருக்கான தரத்தினையும் சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் வெளியேற்றப்படும் புகையின் தர அளவினையும் நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் துவக்குவதற்குமுன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தில் வரையறுக்கப் பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலை உற்பத்தியை துவங்குமுன், தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது. வாரியம், இசைவாணை வழங்கும்போது தொழிற்சாலைகள் பூர்த்தி செய்ய வேண்டிய தரத்தினைக் குறிப்பிடுகிறது. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் இசைவாணை, வாயுக் கழிவுகள் மற்றும் கழிவுகளுக்கான அடிப்படை நிபந்தனைகளுடன், ஐ.எஸ்.ஓ.14001 சான்றிதழ் (சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு), பசுமைப்பகுதி வளர்ச்சி, மழை நீர் சேமிப்பு வசதிகள், அரசு சுகாதார அமைப்புகளைப் பராமரித்தல், வாகனப் பராமரிப்பு மற்றும் பொறுப்பான வாகன ஒப்பந்தம், வீசியெறியும் பிளாஸ்டிக்கின் உபயோகம் இல்லாத சிறந்த நிறுவன பராமரிப்பு ஆகியவற்றிற்கான நிபந்தனைகளையும் கொண்டுள்ளது.



1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை, இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 30 வகை தொழிற்சாலைகள் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெறவேண்டும். 10-04-1997-ல் வெளியிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கைக்கான திருத்தத்தின்படி, அவ்வகையான திட்டங்களுக்குப் பொதுமக்கள் கருத்தினைப் பெற பொதுமக்கள் கேட்புக் குழுவினை அமைக்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற்சாலைகள்/திட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பொதுமக்களின் கருத்துகளைக் கேட்பதற்கான கூட்டங்கள் 1998 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. 31-03-2004 வரை 242 பொதுமக்களின் கருத்துகளைக் கேட்பதற்கான கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. பொதுமக்கள் கேட்புக் குழுக்களிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் வாரியம், அதனை ஆராய்ந்த பின்னர் அந்தத் தொழிற்சாலைகள்/திட்டங்களுக்குத் தடையில்லாச் சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். வாரியத்தின் தடையில்லாச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையுடன் தொழில் முனைவோர், சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெற இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தினை அணுகவேண்டும். இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி சமர்ப்பிக்கப்பட்டவுடன், தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை வாரியத்தால் வழங்கப்படுகிறது.

வாரியம், 1995-1996 ஆம் ஆண்டு முதல் 31-03-2004 வரை 4,132 இசைவாணைகளைத் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நீர்ச் சட்டத்தின்கீழும், 4,068 இசைவாணைகளைத் தொழிற்சாலைகள் அமைப்பதற்குக் காற்றுச் சட்டத்தின்கீழும் வழங்கியுள்ளது. வாரியம், 1982-1983 ஆம் ஆண்டு முதல் 31-03-2004 வரை 21,659 இசைவாணைகளைத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு நீர்ச் சட்டத்தின்கீழும், 18,829 இசைவாணைகளைத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு காற்றுச் சட்டத்தின்கீழும் வழங்கியுள்ளது.

### 4.5. புகார் மற்றும் சட்ட நடவடிக்கை

31-03-2004 வரை, வாரியம் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத தொழிற்சாலைகளுக்கு 28,793 முகாந்திர விளக்கம் கோரும் கடிதங்களையும் 4,279 முடுதல் ஆணைகளையும் வாரியம் வழங்கியுள்ளது. மாசு தடுப்புச் சட்டத்தினை மீறிய தொழிற்சாலைகளுக்கு எதிராக திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974-ன்கீழ் 321 வழக்குகளையும், திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981-ன்கீழ் 134 வழக்குகளையும் வாரியம் பதிவு செய்துள்ளது.

### 4.6. 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு ஒரு சிறப்பு கண்காணிப்புப் பிரிவினை, சென்னை, தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ், 190 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

### 4.7. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகள் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது. இதுவரை 50 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 33 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. மேலும் 17 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்கள் அமைக்கும் பணிகள், பல்வேறு நிலைகளில் உள்ளன. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:





| வ. எண் | வகை | உருவாக்கப்பட்ட திட்டங்கள் | செயலில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 24 திட்டங்கள் | 14 திட்டங்கள் |
| 2 | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 25 திட்டங்கள் | 18 திட்டங்கள் |
| 3 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் | 1 திட்டம் |
| | **மொத்தம்** | **50 திட்டங்கள்** | **33 திட்டங்கள்** |

மேற்கண்ட திட்டங்களில், பம்மல், சிட்கோ-ராணிப்பேட்டை, சிப்காட் பகுதி-2-ராணிப்பேட்டை, வாணியம்பாடி (வளையம்பட்டு), வாணியம்பாடி (உதயேந்திரம்), ராணிப்பேட்டை (வி.சி.மோட்டூர்), ராணிப்பேட்டை (மேல்புதுப்பேட்டை), ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகைதோப்பு), பேரணாம்பட்டு (பகாளப்பள்ளி), மேல்விசாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜிநகர்) ஆகிய 14 இடங்களில் 624 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிப்பாளையம், குன்னங்கல் பாளையம், ஆண்டிப்பாளையம், மன்னரை, அங்கேரிபாளையம் மற்றும் மாணிக்கபுரம்புதூர், கரூர் பகுதியில் கருப்பம்பாளையம், அமராவதி நகர், திருமாநிலையூர், சுக்காலியூர், இராமகிருஷ்ணாபுரம், கலங்கரை விளக்கு பகுதி, செல்லாண்டிப்பாளையம் மற்றும் ஆண்டான்கோயில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அய்யம்பேட்டை-முத்தையால்பேட்டை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை ஆகிய 18 இடங்களில் 817 சலவை மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. கொடைக்கானலில் 90 உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக ஒரு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும் துவக்கப்பட்டுள்ளது.

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக தமிழக அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை மாநில அரசு மானியமாக வழங்குகிறது. இந்திய அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை மைய அரசு மானியமாக வழங்குகிறது. ஒவ்வொரு பொது கழிவு நீர்

[2004 ஜூலை 31

சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்படுவதன் முன்னேற்றத்தின் அடிப்படையில், அரசிடமிருந்து பெறும் மானியத் தொகையினை ஒவ்வொரு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் வாரியம் வழங்குகிறது.

வாரியம், இதுவரை 48 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக தமிழக அரசிடமிருந்து ரூபாய் 25.90 கோடி, மானியத் தொகையினைப் பெற்று, அதில் 31-03-2003 வரை ரூபாய் 22.66 கோடி மானியத் தொகையினை வழங்கியுள்ளது. 2003-2004-ல் மாநில அரசின் மானியத் தொகையாக ரூபாய் 28.83 இலட்சம் வழங்கப்பட்டது. தமிழக அரசு, தமிழ்நாடு தோல் மேம்பாட்டுக் கழகம் மூலமாக மேலும் 9 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 6.77 கோடி மானியத் தொகையினை தமிழக அரசு மானியமாக, திட்ட மதிப்பில் 25 சதவீதம் வரை வழங்கியுள்ளது.

இந்திய அரசு, இதுவரை ரூபாய் 20.60 கோடியினை மைய அரசு மானியமாக தமிழகத்திலுள்ள 48 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. இந்திய அரசு, இம்மானியத் தொகையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு தோல் மேம்பாட்டுக் கழகம் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாக வழங்கியுள்ளது. வாரியம், இதுவரை ரூபாய் 12.84 கோடியினை மைய அரசு மானியத் தொகையாகப் பெற்று அதில் ரூபாய் 11.65 கோடியினைப் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு, இதுவரை ரூபாய் 4.29 கோடியினை தமிழ்நாடு தோல் மேம்பாட்டுக் கழகம் மூலமாகவும், ரூபாய் 3.47 கோடியினை, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாகவும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ள ரூபாய் 20.60 கோடி மானியத் தொகையில் இதுவரை ரூபாய் 19.40 கோடி மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**4.8. தூய்மையான தொழில்நுட்பங்கள்**

வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், காஸ்டிக் சோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், 'இருமுறை மாற்றும் மற்றும் இருமுறை உட்கிரகிக்கும்' தொழில்நுட்பத்தை, கந்தக அமிலம் தயாரிக்கும்



2004 ஜூலை 31]

நிறுவனங்கள் செயல்படுத்துதல், சயனைடு உப்புக்குப் பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்ப கடினபடுத்துதலுக்குப் பின்பற்றுதல் மற்றும் சயனைடு அற்ற முலாம் பூசுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. காகிதத் தொழிற் சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ-குளோரைட்ஸ் உருவாவதைக் குறைக்கும்வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினைப் பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனை சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு மாறி வருகின்றன.

சாயப் பட்டறை தொழிற்சாலைகளுக்காக பெருந்துறையில் அமைக்கப்பட்டுள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், மொத்த கரைந்துள்ள திடப்பொருள்கள் அதிகமுள்ள (2,100 மி.கி./லிட்டர்-க்கு அதிகமுள்ள) கழிவு நீரை, தானாகவே மாற்றியனுப்பி, பிரித்தெடுக்கப்பட்ட சாயத்தொட்டி கழிவுநீருடன் சேர்த்து ஆவியாக்கும்வகையில், மொத்த கரைந்துள்ள திடப்பொருள்களைக் கண்காணிக்கும் கருவியினை கழிவு நீரோட்டத்திலேயே பொருத்தியுள்ளது.

தொழிற்சாலைகளில் சிறந்த சுற்றுச்சூழல் மேலாண்மை முறைகளைப் பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழினைப் பெற, பெரிய தொழிற்சாலைகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் 102 தொழிற்சாலைகள் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழினைப் பெற்றுள்ளன. 83 தொழிற்சாலைகள் இச்சான்றிதழ்களைப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

**4.9. கழிவுகள் குறைப்பு**

தூய்மையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனால், கழிவுகளிலிருந்து பொருட்களை மீட்பதிலும், கழிவுகளைக் குறைப்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரிலிருந்து குரோமியமும், உரத் தொழிற்சாலைகளிலிருந்து அமோனியாவும் மீட்பு செய்யப்படுகின்றன. செய்முறை கழிவுநீர் வெளியேற்றாத நிலையினை அடைவதற்காக, 15 எரிசாராயத் தொழிற்சாலைகளில், 13 எரிசாராயத் தொழிற்சாலைகள், அவற்றின் கழிவுநீரைச் சர்க்கரை ஆலை கழிவு மண்ணுடன் சேர்த்து உயிர் உரமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன. இரண்டு எரிசாராயத் தொழிற்சாலைகள் தற்போது இயக்கத்தில் இல்லை.

[2004 ஜூலை 31

திருப்பூரில் 12 சாயப் பட்டறை தொழிற்சாலைகள், செய்முறையில் கழிவு நீரை மறு உபயோகம் செய்வதற்காகவும், அதில் மீட்கப்பட்டுள்ள உப்பினை மறு உபயோகம் செய்யவும் எதிர்மறை சவ்வூடு மற்றும் உப்பு மீட்பு அமைப்புகளை நிறுவியுள்ளது.

**4.10. நீர்ப் பாதுகாப்பு**

நீர்ப் பாதுகாப்பு முறையாக, மணலி மற்றும் பேசின்பிரிட்ஜ் பகுதியில் உள்ள மூன்று பெரிய தொழிற்சாலைகள், நாளொன்றுக்கு சுமார் 25 மில்லியன் லிட்டர் நகரக் கழிவு நீரை மூன்றாம் கட்ட சுத்திகரிப்பிற்குப் பிறகு, குளிரூட்டும் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றன. மணலியில் உள்ள பெரிய பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையம், திருப்பூரில் 12 சாயப் பட்டறை தொழிற்சாலைகள் மற்றும் ஆம்பூரில் 2 தோல் தொழிற்சாலைகள் கழிவுநீரிலிருந்து செய்முறைக்குத் தேவையான நீரை மீட்சி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு நிலையங்களை அமைத்துள்ளன. மீட்சி செய்யப்பட்ட நீர், செய்முறைக்கு மறு உபயோகம் செய்யப்படுகிறது. சர்க்கரை தொழிற்சாலைகளில், ஆவியாக்கும் நிலையத்திலிருந்து திரவமாக்கப்பட்ட நீர், மறு உபயோகம் செய்யப்படுகிறது.

**4.11. எரிசக்தி சேமிப்பு**

எரிபொருள் பாதுகாப்பு மற்றும் மீட்சி செய்வதற்கான வழிமுறையாக, அனைத்து எரிசாராயத் தொழிற்சாலைகளும் தமது இறுதி கழிவிலிருந்து காற்றிலி தொட்டியின் மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன. பெரிய சர்க்கரை தொழிற்சாலைகள் உற்பத்தியுடனான மின் நிலையங்களை அமைத்துள்ளன. சவ்வரிசி தொழிற்சாலைகள், தமது செய்முறைக் கழிவு நீரிலிருந்து, காற்றிலி தொட்டியின் மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன. மேல்விஷாரத்தில் உள்ள ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை, தோல் பதனிடுவதிலிருந்து வரும் திடக்கழிவுகளைக் காற்றிலி தொட்டியின் மூலம் சுத்திகரிக்கப்படுவதிலிருந்து பெறப்படும் மீத்தேனைக் கொண்டு மின் உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது. பிற தொழிற்சாலைகள், குறைந்த எரிசக்தியினை உபயோகிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றன. இது, அத்தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் அறிக்கையின் வாயிலாக தணிக்கை செய்யப்படுகின்றது.



2004 ஜூலை 31]

**4.12. காற்றுத் தன்மை கண்காணிப்பு**

பெரு நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் மற்றும் பெருகிவரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை பாதிப்படைகிறது. காற்றுச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**4.13. சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிப்பு**

தேசிய சுற்றுப்புற காற்றுத்தரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், சென்னை (3 இடங்கள்), கோயம்புத்தூர் (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை வாரியம் கண்காணித்து வருகின்றது. மாநில சுற்றுப்புறக் காற்றுத்தரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் வாரியம், சென்னை மாநகரத்தில் 5 சுற்றுப்புறக் காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டங்கள் சுற்றுப்புறக் காற்றின் தன்மையினை நகரங்களின் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப் பகுதிகளில் கண்காணிக்கின்றன. இந்தக் கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத் தர அளவுகள், ஒவ்வொரு வாரமும் முன்னோடி நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

முக்கிய தொழிற்சாலை வளாகங்கள், குறிப்பாக இரசாயன தொழிற்சாலைப் பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், 6 தொடர் காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையங்களை தலா ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கடலூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை, மணலி-திருவள்ளூர், இராயபுரம்-சென்னை மற்றும் கத்திவாக்கம்-திருவள்ளூர் ஆகிய இடங்களில் சுற்றுப்புறக் காற்றில் உள்ள மாசு பொருட்களான மிதக்கும் துகள்கள், கரியமில வாயு, நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, அமோனியா, குளோரின், ப்ளூரின் முதலியனவற்றை மதிப்பிடவும், தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்காகவும் அமைத்துள்ளது. மேலும், நிர்ணயித்த தரத்தினைவிட மாசு அதிகமாகும்போது காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்த, வாரியம் தொழிற்சாலையினை அறிவுறுத்தி வருகின்றது.

காற்றுத்தரக் கண்காணிப்பினைப் பலப்படுத்துவதற்காக நடப்பாண்டில் சென்னை மாநகர், கோயம்பேட்டில் தானியங்கி தொடர் காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையம் நிறுவுதல், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் புதிய காற்று மாதிரி சேகரிக்கும் கருவிகளை மொத்தம் ரூபாய் 72 இலட்சத்தில் அமைத்தல் மற்றும் வாரியத்தின் ஆய்வகங்களுக்கு ரூபாய் 39 இலட்சம் மொத்த மதிப்பில் புகைப்போக்கி வாயுவை அளவிடும் கருவிகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அவற்றிற்கான தொடர் காற்றுத்தரக் கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆதாரத்திலேயே வாயுக் கழிவுகளைக் கண்காணிக்கும்வகையில் கணினி பதிவு வசதி கொண்ட தொடர் புகைபோக்கி கண்காணிப்பு நிலையங்களை அமைக்கவும் இத்தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்தகைய காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்புகளை 42 தொழிற்சாலைகள் நிறுவியுள்ளன. இத்தகைய அமைப்புகள் மூலமாக தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பு, ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

**4.14. வாகனப் புகை கண்காணிப்பு**

நகரின் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் கழிவுகளும் அபாயகரமான வாயுக் கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாகனப் புகை சோதனை செய்யும் மையங்கள், சென்னை மாநகரில் ஆலந்தூர், அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய மூன்று இடங்களில் வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு, 1992 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. இதனைத் தவிர, 120 தனியார் நிலையங்கள், சென்னையில் வாகனப் புகையினைச் சோதனை செய்ய, போக்குவரத்துத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் வாரியம், திண்டுக்கல், பழனி, உதகமண்டலம் (2 இடங்கள்) மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. வாரியம், டீசல் வாகனங்களைச் சோதனை செய்ய, தனது வாகனப் புகை கண்காணிப்பு மையங்களை மேம்படுத்தி கணினிமயமாக்கியுள்ளது. பெட்ரோல் வாகனங்களைச் சோதனை செய்ய, கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது.





2003-2004 ஆம் ஆண்டில் 51,398 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 13,206 வாகனங்கள், அவற்றின் முதல் ஆய்வில், நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குட்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. அவற்றில் 1,666 வாகனங்கள் குறைகள் சீரமைப்பு செய்யப்பட்ட பிறகும் தரத்திற்குட்படவில்லை. சென்னைப் பெருநகரப் போக்குவரத்துக் கழகத்தின் வாகனங்களின் புகை அளவிற்கான சோதனையினை மேற்கொள்ள வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. கணினி மயமாக்கப்பட்ட புகை அளவீடு செய்யும் சோதனை மையங்கள் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் ஆலந்தூர், அடையாறு, அயனாவரம், அண்ணாநகர், வடபழனி மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய பணிமனைகளில் வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன. பிற போக்குவரத்துக் கழகங்களும் அவற்றின் பேருந்துகளின் புகை அளவினைக் கூர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் துறைகளும் பிறர்க்கு உதாரணமாக விளங்கும்வகையில், அவற்றின் வாகனங்கள், நிர்ணயிக்கப்பட்ட புகை அளவுக் கட்டுப்பாட்டினை மீறவில்லை என்பதனை உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

வாகனப் புகையினைக் கட்டுப்படுத்த, காரீயம் இல்லாத மற்றும் 3 சதவீத பென்சின் அளவு உள்ள பெட்ரோல் மற்றும் குறைந்த சல்பர் (0.05 சதவீதம்) உள்ள எரிபொருள் போன்ற தூய்மையான எரிபொருளினை சென்னைப் பெருநகர் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாரத் நிலை-II தரத்தினைப் பூர்த்தி செய்யும் பயணிகள் கார்கள் மட்டுமே ஜூலை 2001-லிருந்து சென்னையில் பதிவு செய்யப்படுகின்றன. தூய எரிபொருளான திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவினை சென்னையில் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயம்பேடு, கிண்டி, ஆவடி, முகப்பேர், கீழ்ப்பாக்கம் மற்றும் அம்பத்தூர் ஆகிய 7 இடங்களில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. பொது போக்குவரத்தினை ஊக்கப்படுத்துதல் மற்றும் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவினைத் தனியார் வாகனங்கள் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றிற்கான அரசின் கொள்கை, காற்றுத் தரத்தினை மேம்படுத்த உதவும்.

சென்னை நகரில், காற்றுத் தரத்தை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ள செயல்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் வாரியம் உதவி வருகிறது. செயல்திட்டத்தினைச் செயல்படுத்துவது குறித்து முறையான அறிக்கைகள், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின்

மூலம், மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**4.15. ஒலி மாசு அளவு கண்காணிப்பு**

நகர்ப் பகுதிகளில் ஒலி மாசினைக் கட்டுப்படுத்தும்வகையில், மாநிலமெங்கும் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களிலிருந்து சுமார் 44,500-க்கும் மேற்பட்ட காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன. 29 மாவட்டங்கள் காற்று ஒலிப்பானற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம், காற்று ஒலிப்பான்கள் அற்ற போக்குவரத்துக் கழகமாக அறிவிக்கப்பட்டதில் முதன்மையானதாகும். பிற போக்குவரத்துக் கழகங்கள் இதனைப் பின்பற்றியுள்ளன. மாவட்ட அளவில் ஒலி மாசினைக் கண்காணிக்க, ஒலி அளவீடுமானிகள் ரூபாய் 88 இலட்சம் மதிப்பில், வாரியத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**4.16. நீரின் தன்மை கண்காணிப்பு**

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவு நீராலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீராலும் ஆறுகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோர் சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும் பொருட்டு நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாக சேகரித்து ஆறுகளின் தரத்தினைக் கண்காணித்து வருகிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில் வெளியேற்றப்படும் கழிவு நீர், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும்வகையில் சுத்திகரிப்பு நிலையங்களைத் தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரி ஆற்றில் திருச்சிராப்பள்ளி, பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம் மற்றும் குமாரப்பாளையம் ஆகிய இடங்களில் மற்றும் வைகை ஆற்றில் மதுரையில் மாசு தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிற நதிகள் மற்றும் நீர் ஆதாரங்களுக்கும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாசு தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.



**4.17. நீரின் தரக் கண்காணிப்பு**

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம் மற்றும் முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றிலும் மற்றும் ஆற்றுப் படுகையிலும், முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கண்காணித்து வருகிறது. இதுபோல் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் காவிரி (16 இடங்கள்), தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய 3 முக்கிய ஏரிகள் ஆகியன வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் செய்முறைக் கழிவு நீர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் நகரக் கழிவு நீர் ஆகியவற்றால் ஏற்படும் மாசினைத் தடுக்கும்வகையில் சென்னை நகர நீர்வழிகளை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. சென்னை நகர நீர்வழிகளின் ஆற்று நீர் மற்றும் கழிவு நீர் கலக்கும் இடங்கள் ஆகியவற்றிலிருந்து மாதிரிகளை வாரியம், 1991 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சேகரித்து பகுப்பாய்வு செய்து வருகிறது.

குறிப்பிட்ட ஆதாரம் இல்லாத மாசு உருவாக்கம் குறித்த விழிப்புணர்வினை வாரியம் உருவாக்கி வருகிறது. இதில் இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட, விவசாயத்தினால் ஏற்படும் மாசு ஒரு பெரிய காரணமாகும். இரசாயனப் பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்கள் ஆகியவற்றின் குறைந்த பயன்பாட்டின் மூலம் அதிக அளவு சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரக விவசாயத்திற்கு மாறுவது அவசியம் என வாரியத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு எடுத்துக்காட்டுகிறது.

**4.18. கழிவுகள் மேலாண்மை**

**4.18.1. அபாயகரமான பொருட்கள் மேலாண்மை**

அபாயகரமான இரசாயனப் பொருட்களைக் கையாளுதல் மற்றும் நிர்வகித்தல், அபாயகரமான கழிவுகளைச் சுத்திகரித்து, சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் ஆகியவற்றில் வாரியம் சிறந்த வழிவகைகளைக் கையாண்டு வருகிறது. வாரியம், 2000 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின்கீழ், 2,318 அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும்

தொழிற்சாலைகள்/அமைப்புகளைக் கண்டறிந்து செயலில் உள்ள அமைப்புகளில் அபாயகரமான கழிவுகளின் வகைப்பாட்டினையும் கண்டறிந்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், பொது அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றத்திற்கான அமைப்பினைத் தனியார் நிறுவனத்தின் மூலமாக ஏற்படுத்துவதற்காக, தொழிற்சாலை கழிவு மேலாண்மை கூட்டமைப்பினை உருவாக்கி உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, மேலக்கோட்டையூர் கிராமத்திலுள்ள ஓர் இடம் இத்தகைய அமைப்பினை ஏற்படுத்த கண்டறியப்பட்டுள்ளது.

வாரியத்தின் அறிவுரையின்படி, பொது அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதியினை ஏற்படுத்துவதற்காக திருப்பூரில் உள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தாலுகா, நெல்லூர் கிராமம், கருப்பகவுண்டர்பாளையத்தில் ஓர் இடத்தைக் கண்டறிந்துள்ளது. கரூர் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, சாயப்பட்டறை கழிவு நீர் சுத்திகரிப்பிலிருந்து வெளியேறும் கழிவுச் சேற்றினைப் பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதியின் மூலமாக வெளியேற்ற, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, மாதகிரி கிராமத்தில் ஓர் இடத்தினைக் கண்டறிந்துள்ளது.

உகந்த இடங்களில் ஒரு சில பாதுகாப்பான திடக் கழிவுகளை நிலத்தடியில் நிரப்பும் வசதிகள், அந்நிலையங்கள் உரியமுறையில் கண்காணிக்கப்படுவதனையும் அதன் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் சீரிய முறையில் மேலாண்மை செய்யப்படுவதனையும் உறுதி செய்யும்வகையில் உருவாக்குவதில் வாரியம் முனைந்துள்ளது.

செய்முறை சுழற்சி அல்லது கச்சாப்பொருளாக மறு பயன்பாடு மற்றும் மறு உபயோகமாகும் பொருட்களை மீட்பு செய்தபின் கசடுகளை வெளியேற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கி அபாயகரமான கழிவுகளைச் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேலாண்மை செய்ய, 2000 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) திருத்தப்பட்ட விதிகள், வழிவகை செய்கின்றன. தமிழ்நாட்டில், கழிவு எண்ணெய் மற்றும் உபயோகிக்கப்பட்ட மின்கலன்களிலிருந்து பெறப்பட்ட காரீயம் ஆகியன, சுற்றுச்சூழலுக்கு



உகந்த வகையில் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்களில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் மற்றும் ஏலதாரர்களிடமும் கட்டுப்பாட்டினை வாரியம் ஏற்படுத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் வைத்திருப்பவர் மட்டுமே இத்தகைய கழிவுகளைக் கையாள அனுமதிக்கப்படுகின்றனர்.

வாரியம், 25 அபாயகரமான இராசாயனப் பொருட்களைச் சேமிக்கும் தனிப்பட்ட சேமிப்புக் கிடங்குகளையும் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் தொடர் கண்காணிப்பினால், 1991 ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதிச் சட்டத்தின்கீழ், 73 தொழிற்சாலைகள் அபாய நேர்வு காப்பீடுகளை எடுத்துள்ளன. 1997-1998 ஆம் ஆண்டில், அபாயகரமான பொருட்கள் மேலாண்மை பிரிவிற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாரிய நிதியின் மூலம் ரூபாய் 12.60 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், அபாயகரமான பொருட்கள் மேலாண்மை திட்டத்திற்காக ரூபாய் 41.95 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

**4.18.2. நகர திடக் கழிவுகள் மேலாண்மை**

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக் கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும் நகரப்பகுதிகளில் விஞ்ஞான பூர்வமாக திடக் கழிவுகளைப் பிரித்து கையாண்டு வெளியேற்றுவது அவசரத் தேவையாகிறது. இதுகுறித்து தமிழகத்தில் சுற்றுலா மற்றும் யாத்திரிகத் தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மாமல்லபுரம் மற்றும் குற்றாலம் ஆகிய பகுதிகளுக்கான நகர திடக் கழிவுகள் மேலாண்மைக்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்தளிக்கும் திட்டத்தினை வாரியம் தனது நிதியிலிருந்து ரூபாய் 23.60 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது. திருப்பூர் நகராட்சி, கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுக்க துவங்கியுள்ளது. பிரித்தெடுக்கப்பட்ட உயிரகக் கழிவுகளை தனியார் நிறுவனமொன்று கடந்த இரண்டு வருடங்களாக உரமாக்கி வருகிறது. இதுவரை 92 நகராட்சிகளில் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுத்து உரமாக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. நகர திடக் கழிவுகளை உரமாக்குவதற்காக 32 மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு வாரியம் தடையில்லாச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

ஆகஸ்ட் 2001-ல் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கும், டிசம்பர் 2001-ல் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும், மீண்டும் ஆகஸ்ட் 2002-ல் நகராட்சி ஆணையர்களுக்கும் நகர திடக் கழிவு மேலாண்மைக்கான செயல்முறை கருத்தரங்கம் நடத்தப்பட்டது. நவம்பர், 2002-ல் நகராட்சி ஆணையர்களுக்கு, 'ஒரே மையத்தில் இல்லாத நகரக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நகர திடக் கழிவுகள் மேலாண்மைக்கு நுண்ணுயிர் மீத்தேனாக்கம் ஒரு தொழிற்நுட்ப வழிமுறை' என்ற கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மாவட்டங்களில் குப்பையே இல்லாத நிலை ஏற்பட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் நகர திடக் கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தனித்தனியாகப் பிரித்தல் பற்றிய 26 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 6,160 பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்டன.

**4.18.3. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை**

பிளாஸ்டிக் பொருட்களின் வரைமுறையற்ற உபயோகம் மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உணர்ந்து, தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினைக் குறைக்கும்வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கிற்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஒரு நடமாடும் கண்காட்சி, சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 03-08-2001 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மாவட்ட அளவிலான, 'பிளாஸ்டிக்கிற்கு எதிராக குழந்தைகள்'-எனும் திட்டம் செப்டம்பர் 2001-ல் துவக்கி வைக்கப்பட்டது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சிகளை தத்தமது மாவட்டங்களில் நடத்த ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர்களுக்கும் தலா ரூபாய். 1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக்குகளின் பயன்பாடு மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும், விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள், சென்னை மாநகரப் பேருந்துகளில் பொருத்தப்பட்டன. நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் பிற சுற்றுலா நகரங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. திருவண்ணாமலை கோயிலின் கிரிவலப் பாதையை உபயோகிக்கும் பக்தர்களுக்காக தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்





நடத்தப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டம், ஒகேனக்கல், கன்னியாகுமரி, கொடைக்கானல், ஊட்டி, இராமேஸ்வரம், வால்பாறை, ஏலகிரி, ஏற்காடு, திருமூர்த்தி நீர்வீழ்ச்சி முதலிய பகுதிகள் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் அற்ற மாவட்டம்/ நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பனை ஓலைகளில் பொருட்கள் தயாரிப்பதில் சுய உதவி தொழில் முனைவோர்கட்கு, கிராமத் தொழில் ஆணையத்தின் பனை மற்றும் பனைப் பொருட்கள் நிறுவனம் மூலம் சேலம், வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேசிய/மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் பிற மாவட்டச் சாலைகளை பிளாஸ்டிக் கழிவுகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் பிற மாசுபடுத்தும் செயல்கள் இல்லாதவையாக உருவாக்கும்வகையில் தூய்மைப்படுத்தும் பணி, அரசு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டில் ஒரு தூய பயணம் மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

**4.18.4. மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மை**

2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை வாரியம் செயல்படுத்துகிறது. அதன்படி வாரியம் 317 அரசு மருத்துவமனைகளையும் 1,835 தனியார் மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. இந்திய மருத்துவச் சங்கத்துடன் இணைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அனைத்தும், இடம் கண்டறியவும் மருத்துவக் கழிவுகளைக் கையாள, பொது அமைப்புகளை ஏற்படுத்தவும் உரிய கால நடவடிக்கையினை மேற்கொள்ள, கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கான பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகளை ஏற்படுத்த 10 இடங்கள் இந்திய மருத்துவச் சங்கத்தினரால் கண்டறியப்பட்டுள்ளன. பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பில், ஆட்டோகிளேவ், துண்டுகளாக்கும் கருவி, அழுத்தும் கருவி, உடல் கழிவுகளுக்கான எரிப்பான், பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதி, ஆய்வகம் மற்றும் கழிவுகள் போக்குவரத்திற்கான வாகனங்கள் ஆகியன அடங்கியுள்ளன. அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகளுக்காக, தனியான வசதிகள் 6 மாநகராட்சிகளிலும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. சிறிய நகரங்களில் உள்ள மருத்துவ மனைகள் அவ்விடத்திலேயே, ஆட்டோகிளேவ் மற்றும் நிலத்தில் புதைத்தல்

ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். வாரியம், மருத்துவ கழிவுகளைக் கையாளுவது தொடர்பான பயிற்சியினை வாரிய அலுவலர்கள், இந்திய மருத்துவச் சங்க உறுப்பினர்கள், மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு அளித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், தென்மேல்பாக்கம் கிராமம் மற்றும் சென்னாக்குப்பம் கிராமத்தில் பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. வேலூர் மாவட்டம், கண்டிப்பெடு கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி கிராமத்தில் பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகளின் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

### 4.19. வாரியத்தின் பிற பணிகள்

#### 4.19.1. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, வாரியம், சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் மாசு தடுப்பு மற்றும் தூய்மையான தொழில்நுட்ப மேம்பாடு பணிகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு வாரியம், தனது நீர் மேல்வரி நிதியிலிருந்து ஆராய்ச்சி நிதியை உருவாக்கி உதவி வருகின்றது. நிதி உதவிக்கு உகந்த கருத்துருக்களை ஆராயவும் தெரிவு செய்யவும் ஒரு குழுவினை வாரியம் அமைத்துள்ளது. இதுவரை ரூபாய் 45.38 இலட்சம் மதிப்பில் 9 திட்டங்களுக்கு வாரியம் அனுமதியளித்துள்ளது.

#### 4.19.2. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

தொழிற்சாலை பணியாளர்கள், வாரிய ஊழியர்கள், உள்ளாட்சித்துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள், மாசு தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து தொழிற்சாலைகளுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுபடுத்துவதில் திறமை அடைவது ஆகிய நோக்கத்திற்காக டென்மார்க் நாட்டிலிருந்து ரூபாய் 4 கோடி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை, தனது தலைமை அலுவலகத்தில் வாரியம் அமைத்துள்ளது. டிசம்பர் 1995 ஆம் மாதத்திலிருந்து



31-03-2004 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 185 பயிற்சிகளையும், 7,946 நபர்களுக்குப் பயிற்சியினையும் அளித்துள்ளது.

நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் அம்சங்களின்படி, நீர் மற்றும் காற்று மாசினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது களைதல் ஆகியவற்றிற்கான பயிற்சியினை வழங்குவது, மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பணிகளில் ஒன்றாகும். சுற்றுச்சூழல் பயிற்சி மையம், பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளுக்கான செலவினங்களுக்கு மட்டும் பங்கேற்பாளர்களிடமிருந்து பயிற்சிக் கட்டணத்தைப் பெறுகிறது. ஏப்ரல் 1997-லிருந்து மார்ச் 2004 வரை பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட இத்தகைய வருமானம் ரூபாய் 51.27 இலட்சம் ஆகும்.

#### 4.19.3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சென்னையில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப திடலில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கம், சுற்றுச்சூழல் சம்பந்தமான ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்துகின்றது. சுற்றுச்சூழல் தொடர்பான ஒளிக் காட்சிகள் மற்றும் சிறு படங்களும் திரையிடப்படுகின்றன. மேலும், வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது. வாரியம், வாகனப் புகை மாசு தடுப்பு, ஒலி மாசு தடுப்பு, அபாயகரமான கழிவு மேலாண்மை, திடக் கழிவு மேலாண்மை, மருத்துவ நுண்ணுயிர்க் கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, ஓசோன் மண்டலப் பாதுகாப்பு, மழைநீர் சேமிப்பு முதலியவை தொடர்பான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக் காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வுப் பிரசாரங்கள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் பெருமளவு வெற்றியடைந்துள்ளன. குடியிருப்புப் பகுதிகள் மாசு அற்றதாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் குடியிருப்புப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழல் குறித்த விஷயங்களில் பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த ஒவ்வோர் மாவட்ட ஆட்சியாளருக்கும் தலா ரூபாய் 1 இலட்சம் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

## 4.20. திட்டப் பணிகள்

### 4.20.1. சுற்றுச்சூழல் வரைபடம் தயாரித்தல்

வாரியம், சென்னை நகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரித்து, இறுதி செய்வதற்காக மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பியுள்ளது. திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாற்றியமைக்கப்பட்ட வரையரையின்படி, மாவட்ட சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிப்பதற்காக வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உதவியுடன் நில அளவீடு மூலம் சுற்றுச்சூழலுக்காகத் திட்டமிடும் பணியினைச் செயல்படுத்தி வருகிறது.

### 4.20.2. அயல்நாட்டு உதவித் திட்டங்கள்

வேலூர் பகுதியில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீரை மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறினை ஆராய அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் வாரியம், 24-11-2000 அன்று ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு 1,80,100 அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வு முடிக்கப்பட்டு, அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள அமைப்பிடமிருந்து இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.20.3. பசுமை விருதுகள்

சீரிய பணியின் மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினைத் தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பசுமை விருதுகளை வழங்க அரசு உத்தேசித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் அவர்களது தனி முயற்சியாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசு தடுப்புப் பணிகளுக்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகள் நீலகிரி,





சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் மற்றும் 2002-2003 ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகள் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் வழங்கப்பட்டன. இவ்விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05-06-2002 மற்றும் 05-06-2003 அன்று வழங்கப்பட்டன. மாவட்டங்களில் சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகள்மீது மாவட்ட ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த இவ்விருதுகள் தூண்டுகோலாக இருந்தன.

**"புதுமை படைப்போருக்கான பசுமை விருது"** அரசால் 2003 ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. துணி சாயத் தொழிற்சாலையில் ஏற்படும் முக்கிய தொழில் மாசு பிரச்சினைகளைக் களைவதில் புதுமை படைத்த ஒரு தொழிற்சாலைக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

## இணைப்பு XIII

*(131 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 25 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### 1. முன்னுரை

1.1 மக்களின் அவசியத் தேவைகளில் உறைவிடம் என்பது பல்லாண்டு காலமாக மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய தமிழக அரசு தேவையான அனைத்துத் திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டு வசதி வளர்ச்சியினை ஏற்படுத்தி சாதனை புரிந்து வருகின்றது. தமிழக அரசு "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளைக் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகிறது. தமிழக அரசின் இக்குறிக்கோளை நிறைவு செய்யும் வண்ணம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு, அவர்களுக்குத் தகுந்த குடியிடங்களை உருவாக்கித் தரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

1.2 அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காகக், குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டி செயல்படுத்தி வருகிறது. மேலும், இடவசதிக் கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் குறைந்த வாடகையில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்வதும் நடைமுறையில் உள்ளது.

1.3 நாட்டின் மிகவும் நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். 1931 முதல் 2001 ஆம் ஆண்டு வரைக்கான காலத்தில் இம்மாநிலத்தின் நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் தொகை, மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 18 விழுக்காடாக இருந்து 43.86 விழுக்காடாக உயர்ந்து வந்துள்ளது. 1991 முதல் 2001 முடிய உள்ள



2004 ஜூலை 31]

பத்தாண்டு காலத்தில் நகர்ப்புற மக்கள் தொகையின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 0.36-லிருந்து 2.84 ஆக உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 6.21 கோடியில் 2.72 கோடி மக்கள் 832 நகர மையங்களில் வசித்து வருகின்றனர்.

1.4 தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ஐச் செயல்படுத்துதல் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது. சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான, சுகாதாரமான, சுற்றுச் சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர் ஊரமைப்பு இயக்ககம் உதவி புரிந்து வருகிறது. நகர் ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்துவது, நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் பொறுப்பாக இருந்து வருவதுடன், தொழில், குடியிருப்பு மற்றும் இதர நோக்கங்களுக்கான தனியார் நில மற்றும் கட்டட மேம்பாட்டுப் பணிகளையும் நகர் ஊரமைப்பு இயக்ககம் ஒழுங்குபடுத்துகிறது. மாநில அரசின் நிதியுதவியின் வாயிலாக நகர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கும் மைய நிறுவனமாகவும் நகர் ஊரமைப்பு இயக்ககம் செயல்படுகிறது. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புது நகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள் தயாரித்தல் நகர் ஊரமைப்புச சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

1.5 2001 ஆம் ஆண்டில் 45 இலட்சம் மக்கள் தொகையைக் கடந்த சென்னை மாநகரம் இந்தியாவில் உள்ள பெருநகரங்களில் ஒன்றாகும். இது 2011–ல் 18 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அபரிமிதமான மக்கள் தொகை வளர்ச்சி, சென்னைப் பெருநகர்ப் பகுதியின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகர்ப்புற வசதிகள் செய்வதற்கு மிகக் கடினமான சவாலாக உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள சென்னைப் பெருநகர் பகுதி 1.177 சதுர கி.மீ. கொண்டதாகும். இதில் சென்னை மாநகரம், 8 நகராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கும். சென்னைப் பெருநகரின் வளர்ச்சிக் கொள்கையானது இந்தச் சவால்களைக் கருத்திற் கொண்டு இவற்றுக்குத் தீர்வு காணும் விதத்தில் அமைய வேண்டும். அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் அமைய வேண்டும். அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் சென்னைப் பெருநகர்

வளர்ச்சிக் குழுமம் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும், உள்கட்டுமான வசதிகளை உருவாக்கவும், ஏற்கெனவே உருவாக்கிய நகர வசதிகளை அதிகப்படுத்தவும் பல திட்டங்களை மேலும் வடிவமைத்துச் செயல்படுத்தி வருகின்றது.

## 2004-2005 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

### சுருக்கம்

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| | | | துறைத் தலைமை அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 25 | 01. | தலைமைச் செயலகம் | 2,62,73 | — | 102,00,00 | 104,62,73 |
| 2. | 25 | 02. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | 9,27,68 | — | — | 9,27,68 |
| 3. | 25 | 03. | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 4,13,70 | — | 6,50,00 | 10,63,70 |
| 4. | 25 | 04. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 22,23,46 | 43,74,45 | — | 65,97,91 |
| 5. | 25 | 05. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 11,36,60 | 13,00,42 | — | 24,37,02 |
| 6. | 25 | 06. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 13,11,22 | 42,77,28 | — | 55,88,50 |
| 7. | 25 | 07. | குடியிருப்புக் கட்டுப்பாட்டாளர் | 1,42 | — | — | 1,42 |
| மொத்தம் | | | | 62,76,81 | 92,52,15 | 108,50,00 | 270,78,96 |



## 2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2004-2005 ஆம் ஆண்டுக்கான திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | நகர்-ஊரமைப்பு இயக்ககம் | |
| 1. | மின்னாளுகை—கட்டட வரைப்படங்களுக்கும் இணையதளத்தை ஏற்படுத்துவதற்கும் ஒப்புதல் அளிப்பதற்கான திட்ட அனுமதி குறித்த விண்ணப்பங்களின் நிலையைக் கூர்ந்து ஆய்வு செய்வதற்கான தகவல் வசதி ஏற்பாடு. | 10.00 |
| | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | |
| 2. | சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்காக, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குத் தொடக்க நிதியுதவி | 30.00 |
| 3. | குடிசைப்பகுதிவாழ் மக்களுக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டம் | 25.00 |
| | மொத்தம் | 65.00 |

[2004 ஜூலை 31

## 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டு வசதித் தேவைகளையும் நிறைவு செய்வது வீட்டு வசதி வாரியத்தின் நோக்கமாகும். கடந்த 43 ஆண்டுகளாகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குவதிலும், வீடுகள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என அனைத்து வருவாய்ப் பிரிவினருக்கும் வேண்டிய மேம்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மனைகளையும், வீடுகளையும் வாங்கத்தக்க நிலையில் அளிக்கிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழக அரசு அலுவலர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டத்தைச் செயற்படுத்தியும் பராமரித்தும் வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மாநிலம் முழுவதும் 20,060 குடிசைமாற்றுக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. அவற்றுள் சென்னை அல்லாத பிற மாவட்டத் தலைநகரங்களில் உள்ள 9,637 குடிசைமாற்றுக் குடியிருப்புகள் இதுவரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாலேயே பராமரிக்கப்பட்டு வந்தன. அவை தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட உள்ளன.

### 2.1 புதிய வீட்டு வசதித் திட்டங்கள்

தற்போதுள்ள மந்தமான சந்தை நிலவரம் மற்றும் வீட்டு வசதி வாரியத்தில் விற்கப்பட வேண்டிய வீடுகள்/குடியிருப்புகள்/மனைகள் அதிக அளவில் உள்ளதாலும், பல்வேறு விற்பனை உத்திகளைப் பயன்படுத்தி விற்பனையைப் பெருக்க முனைப்புடன் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, விற்பனையாகாமல் உள்ள அலகுகளை விற்பனை செய்யும் வரையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் புதிய திட்டங்கள் எதையும் மேற்கொள்ளப் போவதில்லை எனவும் முடிவு செய்துள்ளது. இருப்பினும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசம் உள்ள காலி நிலங்களில் தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சித் திட்டத்தின் மூலம் (Joint Venture) திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 31]

### 2.2 புதிய உத்திகள்

30-7-03 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் செயலாற்றினை ஆய்வு செய்து, வழங்கப்பட்ட அறிவுரைகளின்பேரில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் குத்தகைக்கு விடப்பட்ட வணிக வளாகங்கள் மற்றும் அரசு அலுவலகங்களை மீட்டு விற்கவும், வாரியத்தின் நிலங்களைப் பயனுள்ள முறையில் உபயோகப்படுத்தவும், உபயோகத்தில் இல்லாத மற்றும் உபயோகத்திற்கு இயலாத நிலை ஏற்படும் நிலங்களை மீட்டு தகுந்த முறையில் உபயோகப்படுத்துவதற்கும், உரிய நெறிமுறைகள் மற்றும் நிர்வாக அமைப்புத் திட்டங்களை அமைக்க அரசு, அக்டோபர் 2003-ல் குழு ஒன்றை அமைக்க ஆணையிட்டது. மேற்கண்ட அரசு ஆணையினைச் செயல்படுத்த வழிமுறைகள் வரைவு செய்யப்பட்டு, வாரியத்தின் ஒப்புதல் பெற்று, பின்பு அரசிடமிருந்து ஆணை பெறுவதற்காக அனுப்பப்படவுள்ளது.

விற்கப்படாமல் நிலுவையிலுள்ள வணிக மனைகள், பள்ளி மனைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான மனைகளுக்குக் கூடுதல் விலை நிர்ணயிப்பதைத் தவிர்த்து, நடப்புச் சந்தை விலையின்படி, அதனதன் அமைவிடத்திற்கேற்ப, நிலப் பயன்பாட்டை மாற்றியமைத்து, ஏல முறையில் விற்பனை செய்ய அரசு அக்டோபர் 2003-ல் ஆணை வெளியிட்டது. மேற்கூறிய அரசு ஆணையினைச் செயல்படுத்தி, காலியாக உள்ள நிலங்களை விற்பனை செய்ய உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பாதுகாப்பற்ற மற்றும் மிகவும் பழுதடைந்த அரசு/வாரியக் குடியிருப்புகளைத் தேர்வு செய்து பொதுப் பணித் துறை பொறியாளர்கள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் வல்லுநர்களுடன் கூட்டாக ஆய்வு செய்து, அவற்றில் குடியிருக்கும் ஒதுக்கீடுதாரர்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் விற்கப்படாமல் நிலுவையிலுள்ள வீடுகளில் குடியமர்த்துவதன் மூலம், அந்த நிலங்களை மீட்டு நல்ல முறையில் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களது ஆய்வு அறிக்கையின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மனை/வீடு/அடுக்குமாடி ஒதுக்கீடுதாரர்களுக்கு முத்திரை வரியைக் குறைத்து விற்பனைப்

பத்திரம் வழங்குவது சம்மந்தமாக அரசு, டிசம்பர் 2003–ல் ஆணை பிறப்பித்தது. 1–2–2001 தேதிக்குப் பிறகு விற்கப்பட்ட/விற்கப்படவுள்ள வீடுகள்/ குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரம் பெறும்போது, வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப் பங்கீட்டிற்கு மட்டும் முத்திரை வரி செலுத்தி விற்பனைப் பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு மேற்குறிப்பிட்ட ஆணையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களின் தொடர் பராமரிப்புப் பணிகளை சட்ட விதிப்படி மேற்கொள்ள, உள்ளாட்சி மன்றங்களுக்கு முறையான அறிவுரைகளை வழங்க, அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதுவரை வாரியத்தின் 11 திட்டங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள திட்டங்களை மாற்றும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இது குறித்துத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு, செப்டம்பர் 2003–ல் மனைகளில் வீடுகள் கட்டி முடித்தால் மட்டுமே பத்திரம் வழங்கும் வரையறையினைத் தளர்த்தி, மனைகளுக்கு முழுப் பணம் செலுத்தியிருந்தால், மனைகளுக்குக் கிரையப் பத்திரம் வழங்கிட ஆணை வெளியிட்டுள்ளது. மனைகளில் வீடு கட்டாவிடினும் மனைகளுக்கு விரைவில் கிரையப் பத்திரம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் செயல்முறைத் திட்டங்கள் அனைத்தையும் முழுமையாகக் கணினிமயமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை கலந்தாய்வு செய்ய அரசு அக்டோபர் 2003-ல் ஒரு குழுவை நியமித்துள்ளது. இப்பணிகளுக்கான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைமை அலுவலகம் மற்றும் கோட்ட அலுவலகங்களிலும் அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.3 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் திட்டங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளித்தல்

வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களிலும் (சுய நிதித் திட்டம் நீங்கலாக) மனை/வீடு/குடியிருப்பு ஒதுக்கீட்டில், ஆதி திராவிடருக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும் தனியாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இச்சலுகை இனிவரும் திட்டங்களிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.





### 2.4. நிதி ஒதுக்கீடு, 2004–05

அரசு 2004–05 ஆம் ஆண்டின் வரவு– செலவுத் திட்ட வெளியீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ்க்கண்ட பணிகளுக்கென மொத்தம் ரூ.2,437.02 இலட்சங்களை ஒதுக்கீடு செய்துள்ளது:

(ரூபாய் இலட்சங்களில்)

| | | |
|---|---|---|
| 1. | அரசுக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணி | 675.55 |
| 2. | சென்னையிலுள்ள குறிப்பிட்ட சில இடங்களிலுள்ள அரசுத் திட்டங்களின் பராமரிப்புப் பணி | 27.50 |
| 3. | மாநில அரசு அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான வாடகைக் குடியிருப்புகளுக்கான வாடகைப் பங்குத் தொகை | 5.50 |
| 4. | வீட்டு வசதித் திட்டங்களின் பராமரிப்பு | 7.50 |
| 5. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்திற்கான சொத்து வரி | 396.05 |
| 6. | குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளுக்கான வாடகை வித்தியாசப் பங்குத் தொகை | 25.00 |
| 7. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கென கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தொகை | 933.77 |
| 8. | சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி வளாகம் கட்டும் திட்டத்திற்கென கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தொகை | 267.70 |
| 9. | திட்டத்திற்கென கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தொகை | 98.95 |
| | மொத்தம் | 2,437.02 |

[2004 ஜூலை 31

## 3. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு, நாட்டின் மிகவும் நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகும். நகரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் ஒருமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, நகரங்களுக்கு வேலைவாய்ப்பின் காரணமாகக் கிராமங்களிலிருந்து மக்கள் ஈர்க்கப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் பணி புரியும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள அரசு மற்றும் தனியார் வெற்று மனைகளை ஆக்கிரமித்துக் குடிசைகள் அமைத்துக் கொள்கின்றனர். இதுபோன்ற குடியமைப்புகள் கழிவு நீர் வெளியேற்றும் வசதியின்மை காரணமாகப் பின்னர் சுகாதாரமற்ற சூழ்நிலையில் குடிசைப்பகுதிகளாக மாறுகின்றன. இயற்கையான மக்கட் தொகைப் பெருக்கம் மற்றும் தொடர்ந்து நடைபெறும் குடிபெயருதல் காரணமாக இக்குடியமைப்புகள் பின்னர் பெருகிவிடுகின்றன. நகரங்களில் குடிசைப் பகுதிகள் அமைந்திருத்தல் ஒரு குறிப்பிட்ட சதவிகித மக்கள் ஏழ்மையான நிலையில் வாழ்வதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

குடிசைப் பகுதிகளை மாற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கவும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியத்தின் பணிகள் முதலில் சென்னை நகரில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. பின்னர் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் 1984 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 9 இயக்குநர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

### 3.1 குடிசைப் பகுதியைப் பற்றிய கொள்கைகள்

(1) நகரப் பகுதிகளில் நிலத்தினைச் சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் மிகவும் நெரிசலான இடங்களில் சுகாதாரமற்ற சூழ்நிலையில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.

(2) கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ள குடிசைப்பகுதிகளில், இக்குடிசைப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு கள மேம்பாட்டுப் பணிகள் உள்ளது உள்ளபடி அமைத்து அப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல்.



2004 ஜூலை 31]

(3) அடுக்குமாடிக் குடியிருபபுகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில், மறு குடியமர்வுத் திட்டத்தின்கீழ் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அமைக்கும் முறை பின்பற்றுதல்.

3.2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பல்வேறு வீட்டு வசதி, குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் மறு குடியமர்வுத் திட்டப் பணிகளை நகர, குடிசைப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு கீழே கூறப்பட்டுள்ளவாறு செயல்படுத்தி வருகிறது:

### 3.2.1. குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

நகரக் குடிசைப் பகுதிகளில் நிலத்தினைச் சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல், மிகவும் நெரிசலான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவு நீர் அகற்றும் வசதி, சாலை, தெரு மின்விளக்கு போன்றவற்றுடன் தன்னிறைவான சுகாதார வசதியுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதே பகுதியில் அமைத்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது முதல் இத்திட்டப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 69,126 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.264.09 கோடி செலவில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, தஞ்சாவூர், கரூர், கும்பகோணம், நாகப்பட்டினம், திருப்பூர் மற்றும் சங்கரன்கோவில் போன்ற நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நகரத்தின் பெயர் | அமைக்கப்பட்ட குடியிருப்புகள் |
|---|---|---|
| 1 | சென்னை | 61,396 |
| 2 | ஈரோடு | 1,880 |
| 3 | சேலம் | 1,472 |
| 4 | திருச்சி | 927 |
| 5 | கோவை | 822 |
| 6 | திருநெல்வேலி | 704 |

| | | |
|---|---|---|
| 7 | மதுரை | 604 |
| 8 | தஞ்சாவூர் | 294 |
| 9 | கரூர் | 256 |
| 10 | திருப்பூர் | 240 |
| 11 | கும்பகோணம் | 206 |
| 12 | தூத்துக்குடி | 160 |
| 13 | நாகப்பட்டினம் | 117 |
| 14 | சங்கரன்கோவில் | 48 |
| | மொத்தம் | 69,126 |

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை, தாழாங்குப்பம் பகுதியில் 468 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 2004–05 ஆம் ஆண்டில் ரூ.6.07 கோடி செலவில் இத்திட்டத்தின்கீழ் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டப்பணிகள், மைய அரசின் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பெறப்படும் மானியம் மற்றும் பெருநகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானியம் மற்றும் டுபிட்கோ நிறுவனத்திடம் இருந்து திருப்பிச் செலுத்தப்படும் வகையில் பெறப்படும் கடனுதவி ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

### 3.2.2. சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்

#### (அ) மைய அரசின் 10–வது நிதிக் குழுவின் சிறப்பு மானியம்

சென்னை நகரில் உள்ள குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காக மைய அரசின் 10–வது நிதிக் குழுவிடம் சிறப்பு மானியமாக ரூ.54.00 கோடி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பெற்றுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6,500 குடியிருப்புகள் ரூ.54.00 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. துரிதப் போக்குவரத்து பகுதி 2–ன் தடம் மற்றும் இதர ஆட்சேபகரமான பகுதிகளில் வாழ்ந்த குடிசைப் பகுதிவாழ் குடும்பங்கள் இக்குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டப் பகுதியினை ஒரு முன்னோடி





நகரமாக உருவாக்கும்பொருட்டு, மேலும் சில அடிப்படை வசதிகளான நல்ல சாலைகள், தெரு மின்விளக்குகள், சமுதாயக் கூடங்கள், நியாய விலைக் கடைகள் மற்றும் பயிற்சிக் கூடங்கள் போன்ற பணிகளை அமைக்க உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது.

#### (ஆ) பதினொன்றாவது நிதிக் குழு–சிறப்பு மானியம்–பெருநகரங்களில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்

தமிழகத்தின் மூன்று பெருநகரங்களான சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும்பொருட்டு மைய அரசின் பதினொன்றாவது நிதிக் குழுவிடம் 2001–05 ஆம் ஆண்டுகளுக்காகச் சிறப்பு மானியமாக ரூ.49.00 கோடி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பெற்றுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு, 5,084 அடுக்குமாடிக் குடியிருப்புகள்/தனி வீடுகள் கீழே கூறப்பட்டுள்ளவாறு (சென்னை நகரில் 3,252 மூன்றடுக்கு மாடி குடியிருப்புகளும் மதுரை மற்றும் கோவை நகரங்களில் மொத்தம் 1,832 தனி வீடுகளும்) அமைக்கும் திட்டப் பணிகள் துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

| வ. எண் | நகரத்தின் பெயர் | அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீடுகள் | | | திட்ட மொத்தச் செலவினம் | செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | முடிவுற்றவை | முன்னேற்றம் | | |
| 1. | சென்னை | 3,252 | 3,054 | 198 | 35.250 | 34,200 |
| 2. | மதுரை (வீடுகள்) | 916 | 254 | 662 | 6.875 | 4.200 |
| 3. | கோவை (வீடுகள்) | 916 | 83 | 833 | 6.875 | 3.100 |
| | மொத்தம் | 5,084 | 3,391 | 1,693 | 49.000 | 41.500 |

இதுகாறும் சென்னை நகரில் 3,084 அடுக்குமாடி குடியிருப்புகளும், மதுரை மாநகரில் 254 தனி வீடுகளும், கோவை நகரில் 83 தனி வீடுகளும் முடிவுற்றுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.41.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. சென்னை நகரில் மீதமுள்ள 198 அடுக்குமாடிக்

குடியிருப்புகளும், மதுரை நகரில் 662 தனி வீடுகளும், கோவை நகரில் 833 தனி வீடுகளும் அமைப்பதற்கான பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இத்திட்டப் பணிகள் 31-7-2004-க்குள் முடிவுறும்.

சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் அமைக்கப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் இந்நகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**(இ) வெள்ளக் குறைப்புப் பணிகள் — தூர் வாரும் பணிகளுக்கு இடையூறாக நதிக் கரைகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்தல்**

சென்னை மாநகரின் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்கவும், நகரிலுள்ள முக்கிய நதிகளில் தூர் வாருதல் மற்றும் மழை நீர் வடிகால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காக ரூ.300.00 கோடி செலவில் வெள்ளக் குறைப்புப் பணிகள் திட்டத்திற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, நதிக் கரைகளில் தூர் வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் பொதுப் பணித் துறையினர் சேர்ந்து நடத்திய கணக்கெடுப்பில் சென்னை நகரின் நதிக் கரைகளில் மொத்தம் 33,313 குடும்பங்கள் குடிசைப்பகுதிகளில் வாழ்வதாகவும், அவர்களில் பொதுப் பணித் துறையினரால் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வதற்கு இடையூறாக வாழும் 8,164 குடிசைவாழ் குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட வேண்டுமென்று கண்டறியப்பட்டுள்ளது. இக்குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை, பொதுப் பணித் துறையினரின் தூர் வாரும் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அருகில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து, மறுகுடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட மறுகுடியமர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 3,000 குடியிருப்புகளை ரூ.27.50 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 2,688 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 312 குடியிருப்புகள் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும்.



**(ஈ) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்**

**(i) செம்மஞ்சேரி பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்**

சென்னை நகரில் செல்லும் முக்கிய நதிகளின் கரைகளில் பொதுப் பணித் துறையினால் மேற்கொள்ளப்படும் நதிகளின் தூர் வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் மீதமுள்ள 5,164 குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 5,164 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு ரூ.67.13 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | மைய அரசின் கூடுதல் மானியம் | ரூ.18.00 கோடி |
| 2. | மைய அரசின் வாம்பே திட்ட மானியம் | ரூ.15.49 கோடி |
| 3. | பெருநகரங்களுக்கான திட்டக் கடன் | ரூ.25.82 கோடி |
| 4. | தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டக் கடன் | ரூ. 5.82 கோடி |
| 5. | அரசு மானியம் | ரூ. 2.00 கோடி |
| | மொத்தம் .. | ரூ.67.13 கோடி |

இக்குடியிருப்புகள் 31-3-2005-க்கு முன்னர் அமைத்து முடிக்கப்படும். இக்குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்ட பின்னர் நதிக் கரைகளில் சுகாதாரமற்ற நிலையில் வாழும் குடும்பங்கள் செம்மஞ்சேரி பகுதியில் அமைக்கப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுவர்.

**(ii) நதிக் கரைகளில் வாழும் மீதமுள்ள குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்–சென்னை, பெரும்பாக்கம் பகுதியில் 9,300 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்**

சென்னை நகரில் நதிக் கரைகளில் வாழும் மீதமுள்ள 25,149 குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மறுகுடியமர்வு செய்ய தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. மைய அரசு மற்றும் இதர துறைகளுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் சென்னை நகரில் நதிக் கரைகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை

மறுகுடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை, பெரும்பாக்கம் பகுதியில் 9,300 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு அமைக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது:

| வ. எண் | விவரம் | மானியம் ரூ. கோடி | கடன் ரூ. கோடி | மொத்தச் செலவினம் ரூ. கோடி |
|---|---|---|---|---|
| 1 | சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான அரசின் 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு | 30.00 | -- | 30.00 |
| 2 | மைய அரசின் வாம்பே திட்டத்தின்கீழ் மானியம் - ஒரு குடியிருப்பிற்கு ரூ.30,000/- வீதம் | 27.95 | -- | 27.95 |
| 3 | பெருநகரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4 சதவீத வட்டி விகிதத்தில் அரசால் திருப்பிச் செலுத்தப்படும் பெருநகரத் திட்டத்திற்கான டுபிட்கோ கடனுதவி | -- | 65.00 | 65.00 |
| 4 | டுபிட்கோ கடன் | -- | 7.05 | 7.05 |
| | மொத்தம் | 57.95 | 72.05 | 130.00 |





சென்னை, பெரும்பாக்கம் பகுதியில் 9,300 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டப் பணிகள் 2004–05 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 2005–06 ஆம் ஆண்டில் முடிவுறும். இக்குடியிருப்புகள் சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதியில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டப் பணிகளுக்காக மாநில அரசால் 2004–05 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.30.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக டுபிட்கோ நிறுவனத்திடம் பெறப்படும் கடன் தொகை ரூ.72.05 கோடி அரசால் திருப்பிச் செலுத்தப்படும்.

### 3.3. வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டம்

#### 3.3.1. தனி வீடுகள் அமைத்தல்

மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நகரக் குடிசைப் பகுதிகளில் 150 சதுர அடி கட்டடப் பரப்புக் கொண்ட கான்கிரீட் தளம் மற்றும் சுற்றுச் சுவர்களுடன் கூடிய தனி வீடுகள் அமைக்கப்படும். இத்திட்டப் பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரத்தின்கீழ் செயல்படுத்தப்படும்:

| வ. எண் | நிதி ஆதாரம் | சதவீதம் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | மைய அரசின் மானியம் | 50 | 20,000 |
| 2 | நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் கடன் | 40 | 16,000 |
| 3 | பயன்பெறும் குடும்பங்களின் பங்கு | 10 | 4,000 |
| | மொத்தம் | | 40,000 |

இத்திட்டத்தின்கீழ் 31–3–2004 வரை 7,250 வீடுகள் ரூ.29.00 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

### 3.3.2. வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டம் – பகுதி–III

இத்திட்டத்தின்கீழ் 150 சதுர அடி கட்டடப் பரப்பு கொண்ட கான்கிரீட் தளத்துடன் செங்கல் சுற்றுச் சுவர்கள் கொண்ட 5,000 தனி வீடுகள் அமைப்பதற்கான பணிகள் 2003–04 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் 2004-05ஆம் ஆண்டில் முழுமை பெறும்.

### 3.3.3. வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டம் – பகுதி–IV

மேலே கூறப்பட்ட நிதி ஆதாரத்தினைக் கொண்டு, 2004–05 ஆம் ஆண்டில் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மேலும் தமிழகத்தின் நகரக் குடிசைப்பகுதிகளில் கூடுதலாக 5,000 தனி வீடுகள் ரூ.20.00 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2004-05 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு 2005-06 ஆம் ஆண்டில் முடிவுறும்.

### 3.4. வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் குடியிருப்புகளை மேம்படுத்துதல்

சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களால் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் மிகவும் மோசமான நிலையில், உடனடியாகப் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதுபோன்ற குடியிருப்புகளில் தளங்களை மாற்றி அமைத்தல், கூடுதலாக ஓர் அறை கட்டுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகளை அமைக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஒரு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டப் பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரத்தினைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

| | | |
|---|---|---|
| 1. மைய அரசின் மானியம் | — | ரூ.10,000/- |
| 2. பயன்பெறும் குடும்பங்களின் பங்கு | — | ரூ.10,000/- |
| மொத்தம் | .. | ரூ.20,000/- |



தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 2004–05 ஆம் ஆண்டில் 1,050 குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் வீடுகளுக்கு ரூ.2.10 கோடி செலவில் குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் மைய அரசின் மானியம் ரூ.1.05 கோடி. மற்றும் பயன்பெறும் குடும்பங்களின் பங்கு ரூ.1.05 கோடி செலவில் நிதி ஆதாரம் பெற்றுச் செயல்படுத்தப்படும்.

### 3.5.1. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல் – வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகள்

சென்னை மற்றும் இதர நகரங்களில் வாரியம் துவங்கப்பட்டது முதல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்ட குடியிருப்புகள், மாறுபட்ட இயற்கைச் சூழ்நிலை, கடலுக்கு அருகில் அமைத்துள்ளதால் உப்பங்காற்று வீசுதல் காரணமாக கூரைத் தளம், மாடிப் படிகள், மாடி முகப்புகள், மாடிப் படிகளுக்கான முகப்புகள் பழுதடைந்துள்ளன. இக்குடியிருப்புகளுக்கு நிதிப் பற்றாக்குறை காரணமாக இதுபோன்ற பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 02–12–1995 அன்று நடைபெற்ற குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழாவின்போது, ஒரு முன்னோடி நடவடிக்கையாக அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் உயிர் மற்றும் உடமைகளுக்குப் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கத்துடன் குடியிருப்புகளுக்கு அவசர பழுதுபார்ப்புப் பணிகளை நிறைவேற்றிட ரூ.5.00 கோடி நிதியுதவி மானியமாக அரசு வழங்கும் என அறிவித்தார்கள். பின்னர் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேலும் தொடர ரூ.9.50 கோடி அரசால் வழங்கப்பட்டது. இந்நிதியுதவியினைக் கொண்டு சென்னை மாநகரில் உள்ள 45,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.14.50 கோடி மொத்தச் செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், சென்னை, மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுள்ள 30,514 குடியிருப்புகளுக்குக் கட்டமைப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் புதுப்பித்தல் பணிகளை ரூ.8.93 கோடி மொத்தச் செலவில் செயல்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டப்

[2004 ஜூலை 31

பணிகள், 'வால்மீகி அம்பேத்கர்' திட்டத்திற்கான மைய அரசின் மானிய உதவி மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவி 50:50 அடிப்படையில் பெற்று செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் இதுகாறும் 30,514 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முடிவுற்று ரூ.8.93 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை, ஈரோடு மற்றும் இதர நகரங்களிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு சிறப்பு கட்டமைப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.6.00 கோடி செலவில் 2004-05 ஆம் ஆண்டில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மைய அரசின் வாம்பே திட்டம் | ரூ.3.00 கோடி |
| தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் திருப்பிச் செலுத்தப்படும் ஹட்கோவின் கடனுதவி | ரூ.3.00 கோடி |
| மொத்தம் | ரூ.6.00 கோடி |

### 3.5.2. சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை சட்டமன்றத் தொகுதிகளுக்கான மேம்பாட்டு நிதியுதவியின்கீழ் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டமைப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள மானியம் பெற்று கீழே கூறப்பட்டுள்ளவாறு பணிகளை நிறைவேற்றியுள்ளது:

| வ.எண் | ஆண்டு | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | 2000-2001 | 1.74 |
| 2 | 2001-2002 | 0.48 |
| 3 | 2002-2003 | 2.00 |
| 4 | 2003-2004 | 1.40 |
| | மொத்தம் | 5.62 |

சென்னை நகர சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1.00 கோடி மானிய உதவி



2004 ஜூலை 31]

2004-05 ஆம் ஆண்டில் பெற்று சென்னை நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6.1. குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைத்தல்

நகரக் குடிசைப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துக்களைத் தடுக்கவும் அதன் காரணமாக ஏற்படக்கூடிய உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்களைத் தடுக்கவும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் 6 மாநகராட்சிப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகும் குடிசைப்பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் 48,037 குடும்பங்களுக்கு ரூ.60.89 கோடி செலவில் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நகரத்தின் பெயர் | பயன்பெற்ற குடும்பங்கள் | செலவினம் (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | 41,186 | 5,210.79 |
| 2. | மதுரை | 2,368 | 308.79 |
| 3. | திருச்சி | 1,465 | 165.23 |
| 4. | சேலம் | 1,920 | 260.15 |
| 5. | கோவை | 698 | 91.00 |
| 6. | திருநெல்வேலி | 400 | 53.09 |
| | மொத்தம் | 48,037 | 6,089.05 |

சென்னை நகரில் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் 2,724 குடும்பங்களுக்கு ரூ.4.24 கோடி செலவில் அமைக்கும் திட்டப் பணிகள் துவங்கப்பட்டு 2003-04 ஆம் ஆண்டில் முடிவுற்றுள்ளன.

[2004 ஜூலை 31

### 3.6.2. தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேலும், திருச்சி நகரில் 2,000 குடும்பங்களுக்கு கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் பிப்ரவரி மாதம் 2003 வரையில் ரூ.2.711 கோடி செலவில் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

### 3.7. நகரக் குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்

நகரங்களில் அமைந்துள்ள குடிசைப்பகுதிகள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி உள்ளதால் இப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கேற்ப மேம்படுத்தவும், சுற்றுப்புறம் மாசற்று இருக்கவும் அடிப்படை வசதிகள் அமைப்பது அவசியமாகின்றது.

சுகாதாரமற்ற நகரக் குடிசைப்பகுதிகளில், உள்ளது உள்ளபடி நிலையில் குடும்பம் ஒன்றிற்கு ரூ.2000/-க்கு மிகாமல் குடிநீர் வசதி, சாலைகள், தெரு மின்விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் உடனடியாக அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டப் பணிகள் அரசு வரவு-செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் பெற்று நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் இதுகாறும் 3,26,092 குடும்பங்களுக்கு ரூ.48.79 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 2004–05 ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளான சாலைகள், மின்விளக்கு, பொதுக் கழிப்பிடம் மற்றும் மழை நீர் வடிகால் போன்ற பணிகள் 30,000 குடும்பங்களுக்கு ரூ.6.00 கோடி செலவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கு ஆகும் செலவினம் அரசால் மானியமாக வழங்கப்படும்.

### 3.8. குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஆட்சேபகரமற்ற மற்றும் நெரிசல் குறைவான நகரக் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள், உள்ளது உள்ளபடி நிலையிலான மேம்பாட்டிற்கு உகந்த குடிசைப்பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டது போன்ற குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படுவதை விரும்புகின்றனர்.



2004 ஜூலை 31]

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முன்னர் செயல்படுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைப் போன்று ஆட்சேபகரமற்ற இடங்களில் அரசு நிலங்களில் அமைந்துள்ள குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் அமைத்து மனைப் பட்டா வழங்கும் ஒரு புதிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வகுத்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதியுதவி வாரியத்தின் குடிசைப்பகுதி மேம்பாட்டு சுழற்சி நிதியிலிருந்து பெற்று செயல்படுத்தப்படும். முதலில் இத்திட்டப் பணிகள் சென்னை நகரில் ரூ.25.00 இலட்சம் செலவில் 500 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும். இத்திட்டப் பணிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும். இத்திட்டப் பணிகளுக்கான செலவினம் பயன்பெறும் குடும்பங்களிடமிருந்து ஒப்புதல் அளிக்கப்பட்ட விலைப் பட்டியலின்படி வசூலிக்கப்படும்.

### 3.9. நகர குடிசைப்பகுதிகளைப் பற்றிய கணக்கெடுப்பு

தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் ஒரு ஒருங்கிணைந்த ஆய்வு செய்து அக்குடிசைப்பகுதிகளைப் பற்றிய தற்போதைய நிலை, அவற்றை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி ஆதாரம், பல்வேறு மேம்பாட்டிற்கான வழிவகைகள் போன்றவற்றினை ஆராய்ந்து அக்குடிசைப்பகுதிகளை மேம்படுத்த கையாளவேண்டிய உத்திகள் முடிவு செய்யப்படும். முதலில் இதுபோன்ற கணக்கெடுப்பு சென்னைப் பெருநகர் பகுதியில் ரூ.16.84 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். பின்னர் படிப்படியாக இதர நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

இத்திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரம் தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதியும் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும்.

### 3.10. நகர சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்யப்படுவதால், அவர்களிடமிருந்து பெறப்படும் தொகை அக்குடியிருப்புகளைப் பராமரிக்கப் போதுமானதாக இல்லை. அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பராமரிப்புச் செலவினங்களுக்குப் போதிய நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த, சென்னை மற்றும் தமிழகத்தின் இதர பெருநகரங்களில் வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில்

வணிக வளாகங்கள் மற்றும் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்ககங்கள் அரசாணை நிலை எண் 129, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-02-1993-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்படுகின்றன. இதுபோன்ற வணிக வளாகங்கள் குடிசைப்பகுதிவாழ் மக்களுக்கு அவ்விடங்களிலேயே அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தது போக மீதமுள்ள நிலங்களில் மட்டுமே கட்டப்படுகின்றன. இதன் மூலம் கிடைக்கப்பெறும் உபரி வருவாய், அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இதுகாறும் சென்னை, மதுரை மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் ரூ.5.07 கோடி செலவில் 8 வணிக வளாகங்களும், ரூ.11.92 கோடி செலவில் 12 இடங்களில் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான 722 அடுக்ககங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் ஹட்கோ மற்றும் தேசிய வீட்டு வசதி வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று நிறைவேற்றப்பட்டன. இக்கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை வாரியம் மேற்கொண்டுள்ளது. சென்னை, திருவான்மியூர், சிங்காரவேலர் பகுதியில் 112 மத்திய தர வருவாய்ப் பிரிவு அடுக்ககங்களுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.4.72 கோடி செலவில் முடிவுற்றுள்ளன. சென்னை, விஜயராகவா சாலை பகுதியில் 32 மத்திய தர வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்ககங்கள் அமைக்கும் பணிகள் 2003-04 ஆம் ஆண்டில் ரூ.2.80 கோடி செலவில் முடிவுறும்.

சென்னை, நந்தனம் பகுதியில் ஒரு அலுவலகம் மற்றும் வணிக வளாகம் ரூ.2.00 கோடி செலவில் அமைக்கும் பணிகள் 2004-05 ஆம் ஆண்டில் முடிவுறும். புதுக்கோட்டை நகரில் 136 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் ரூ.2.74 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் 2004-05 ஆம் ஆண்டில் முடிவுறும். மேலும் திருநெல்வேலி நகரில் மனையுடன் கூடிய 33 தனி வீடுகள் ரூ.1.05 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2004-05 ஆம் ஆண்டில் முடிவுறும்.

### 3.11. மழை நீர் சேகரிக்கும் முறைகள்

சென்னை நகரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் நிலத்தடி நீர் வளத்தினை மேம்படுத்த குறிப்பிட்ட அடுக்குமாடி திட்டப் பகுதிகளிலும், கோட்ட அலுவலகம், வாரிய அலுவலகம் மற்றும் சமுதாயக்



கூடங்கள் போன்ற இடங்களிலும் மழை நீர் சேகரிக்கும் முறைகள் ஒரு முன்னோடித் திட்டமாக நிறுவப்பட்டுள்ளன. தற்போது நடைபெறும் அனைத்துத் திட்டங்களிலும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மழை நீர் சேகரிக்கும் முறைகளை நிறுவி வருகின்றது. மேலும், 2004-05 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படவுள்ள திட்டப் பகுதிகளில் மழை நீர் சேகரிக்கும் முறைகளை ரூ.20.00 இலட்சம் செலவில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.12. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (2004–05)

### நகரக் குடிசைப்பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடையும்பொருட்டு நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்

நகரக் குடிசைப்பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் குடும்பங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் நகரக் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த பல்வேறு வீட்டு வசதித் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதுபோன்று 2003-04 ஆம் ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வீட்டு வசதிப் பணிகளின் மூலம் குடிசைப்பகுதிகளில் வாழும் 60 சதவிகித ஆதி திராவிடர் இன மக்கள் பயன்பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

### 2004–05–க்கான சிறப்பு உள்ளடக்கத் திட்ட செயலாக்கம்–வீடுகள்/ குடும்பங்கள்

செலவினம் ரூ. கோடியில்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்தம் | | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | செயலாக்கம் | செலவினம் | செயலாக்கம் | செலவினம் |
| 1 | சென்னை நகரில் நதிக்கரைகளில் வாழும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல் | 5164 | 62.13 | 3078 | 37.28 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தமிழகத்தின் நகர குடிசைப் பகுதிகளில் தனி வீடுகள் அமைத்தல் | 5000 | 20.00 | 3000 | 12.00 |
| 3 | சென்னை தாழாங்குப்பம் பகுதியில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைத்தல் | 468 | 6.07 | 281 | 3.64 |
| 4 | அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் பணிகள் | 8000 | 3.00 | 4800 | 1.80 |
| 5 | குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 500 | 0.25 | 300 | 0.15 |
| 6 | பகுதி—2 திட்டம் | 860 | 0.55 | 516 | 0.33 |
| 7 | குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் குடியிருப்புகளை மேம்படுத்துதல் | 1050 | 2.10 | 630 | 1.26 |
| 8 | சென்னைப் பெருநகரப் பகுதியில் குடிசைப்பகுதிகளைப் பற்றிய கணக்கெடுப்பு | - | 0.20 | - | 0.12 |
| | மொத்தம் | 21042 | 94.30 | 12605 | 56.58 |





## 3.13. 2004–05 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டம்

### 3.13.1. திட்டப்பகுதிகளில் கடைகள் அமைத்தல்

*தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அவர்களது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 200 கடைகள் (8' X 8') ரூ.60.00 இலட்சம் செலவில் 2004–05 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக அரசால் ரூ.30.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும். மீதமுள்ள தொகையான ரூ.30.00 இலட்சம் பயன்பெறும் குடும்பங்களிடமிருந்து பெறப்படும்.*

### 3.13.2. வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

*குடிசைப்பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத இளைஞர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்து அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சியின் காலம் ஒரு மாதம் முதல் ஓராண்டு வரையாகும். வேலைவாய்ப்பிற்கான இப்பயிற்சிகள் பதிவு செய்யப்பட்ட அரசுசாரா நிறுவனங்கள், முறையான அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றது. 1981 முதல் மார்ச் 2004 வரை 9,536 குடிசைப்பகுதிவாழ் இளைஞர்கள் அரசு மானியம் ரூ.137.34 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 2004–05ஆம் ஆண்டில் 660 குடிசைப்பகுதிவாழ் மகளிர் மற்றும் இளைஞர்கள், அவர்கள் தங்கள் வாழ்க்கையினை நடத்த வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏதுவாக ரூ.25.00 இலட்சம் செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

## 4. கூட்டுறவு வீட்டு வசதி

### கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்

*தமிழக மக்களின் அவசியத் தேவைகளில் உறைவிடம் என்பது பல்லாண்டு காலமாக மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்தேவையைப் பூர்த்தி செய்ய தமிழக அரசின் வீட்டு வசதிக்*

கொள்கைக்கு ஏற்ப வீட்டு வசதியினை மேம்படுத்துவதில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் குறிப்பிடத்தக்க சாதனைகள் படைத்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1,033 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில், நகர்ப்புற மக்களின் சேவைக்கென 837 தொடக்க நிலைக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய வட்ட அளவில் 196 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும் மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளன. குறிப்பாக, தமிழக அரசின் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் வீட்டு வசதித் திட்டத்தினை கிராமப்புற ஏழை எளிய மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வட்டக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேற்கண்ட 1,033 சங்கங்களில் 784 வீட்டு வசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள சார்பு சங்கங்களாகும். அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டுமனைகள் உறுப்பினர்களுக்கு வழங்குதல், மனைப் பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்குதல் போன்றவை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் நோக்கமாகும்.

**4.1. மேலாண்மை**

கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் பாரபட்சமற்ற மேலாண்மையினை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்து தொடக்க நிலைக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் 25-5-2001 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களாட்சிக் கோட்பாடுகளின்படி விரைவில் இச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

**4.2. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கும் ஒருங்கிணைப்பு நிறுவனமாக இருப்பதால், சார்புச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டத் தேவைப்படும் நிதியுதவியை திரட்டித்தரும் பணியினைச் செய்கிறது. வீட்டு வசதிக் கடன் வழங்க மாநில வீட்டு வசதி இணையத்திற்குத் தேவைப்படும் நிதியாதாரங்கள் தமிழ்நாடு அரசு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு



வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து அரசு பொறுப்புறுதியின் பேரில் பெறப்படுகின்றன. தொடக்கக் காலத்திலிருந்து இணைக்கப்பட்ட சார்புச் சங்கங்களுக்கு 31-3-2001 வரை 11,31,037 வீடுகள் கட்ட ரூ.4202.48 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், மிகச் சிறந்த கூட்டுறவு நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டு பரிசும் பெற்றுள்ளது.

**4.3. கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

**4.3.1. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டம்.**

ஊரகப் பகுதிகளில் வீட்டுவசதியினைப் பெருக்குவதில் தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வீட்டுவசதித் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு மொத்தம் ரூ.413.08 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 6,27,108 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**4.3.2. கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்.**

இத்திட்ட துவக்கத்திலிருந்து இதுவரை 87,802 வீடுகள் கட்டி முடிக்க ரூ.519.08 கோடி தொடக்க நிலை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் நிதி ஆண்டில் மட்டும் குறைந்த வருவாய்ப் பிரிவில் 2,677 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவில் 88 வீடுகளும் கட்ட முறையே ரூ.30.26 கோடி மற்றும் ரூ.2.16 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.3.3. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்**

2003-2004 ஆம் நிதி ஆண்டில் 8,144 நகர்ப்புற பயனீட்டாளர்களுக்கு புதிய வீடுகள் கட்ட ரூ.162.21 கோடி கடன் வழங்கப்பட்டது. இத்திட்ட துவக்கத்திலிருந்து இதுவரை நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் 3,06,426 வீடுகள் கட்ட ரூ.2956.61 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.3.4. நகர்ப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்கான திட்டம்.**

இத்திட்டத்தின்படி இதுவரை நகர்ப்புறம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும், பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோர் 28,080 பேர் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.68.31 கோடி கடன் வழங்கப்பட்டது. இதில் 2003-2004 ஆம் ஆண்டில் 97 வீடுகள் கட்ட ரூ.0.56 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.3.5. வீடுகள் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம்**

பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கம் செய்யவும், ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.1,00,000 வீதம் கடனுதவி 1998-99 முதல் வழங்கப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் 2003-2004 ஆம் நிதியாண்டில் 105 வீடுகளைப் புதுப்பித்து விரிவாக்கம் செய்ய ரூ.1.33 கோடி கடன் வழங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தில் 59,146 வீடுகளைப் புதுப்பிக்கவும், விரிவாக்கம் செய்யவும் மொத்தம் ரூ.51.99 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.3.6. அடமானக் கடன்**

2003-2004 நிதியாண்டில் 176 வீடுகளின்பேரில் ரூ.4.82 கோடியில் அடமானக் கடனாக பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நகரக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலம் மொத்தம் 6,919 வீடுகளுக்கு ரூ.165.32 கோடி அடமானக் கடனாக வாங்கப்பட்டுள்ளது.

**4.4. "வாம்பே" திட்டம் (வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா)**

இத்திட்டத்தின்கீழ் 2003-2004 நிதியாண்டில் 31-3-2004 வரை 4,957 வீடுகளுக்கு ரூ.14.50 கோடி பயனீட்டாளர்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 7,299 வீடுகளைக் கட்டிக் கொள்ள ரூ.20.33 கோடி கடனாக வழங்கப்பட்டது.

**4.5. 2004-05 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் 2004-05ஆம் ஆண்டில் புதிய வீடுகள் கட்டும் திட்டப் பணிகளுக்காக கடன் வழங்கும்பொருட்டு முதலீட்டுத் தொகை ரூ.160.00 கோடியாக கீழே குறிப்பிட்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:





| | அலகுகள் | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அ. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் | 7,000 | 150.00 |
| ஆ. வால்மீகி அம்பேத்கர் யோஜனா திட்டம் (வாம்பே) | 2,500 | 10.00 |
| மொத்தம் | 9,500 | 160.00 |

1. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டில் 7,000 வீடுகள் கட்ட ரூ.150 கோடி கடனுதவி வழங்கப்படும்.
2. நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதியில் வசிக்கின்ற பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் நோக்கத்தில் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (வாம்பே) திட்டத்தின்கீழ் ரூ.10.00 கோடி செலவில் வீடுகள் கட்டுவதற்கு கடனுதவி செய்யப்படும். இத்திட்டத்தின்படி சென்னை பெருநகரத்திற்கு ஒரு வீட்டிற்கு ரூ.60,000 எனவும், ஏனைய இடங்களில் ரூ.10,000 எனவும் கடன் மற்றும் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.1000 இலட்சம் வழங்கப்படவுள்ளது. இதில் மத்திய அரசு மானியமாக ரூ.500 இலட்சமும், தமிழக அரசுக் கடன் ஹட்கோ மூலமாக ரூ.400 இலட்சமும், உறுப்பினர்களின் பங்களிப்பாக ரூ.100 இலட்சமும் இத்திட்டத்தில் பயன்படுத்தி 2,500 வீடுகள் கட்டப்படவுள்ளன.

**4.6. ஆய்வு**

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் செயல்பாடுகள் துறை அலுவலரால் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 1,033 சங்கங்களையும் கண்காணிக்கும்பொருட்டு, ஒவ்வொரு மேற்பார்வை அலுவலர்களாலும் ஆண்டுதோறும் 24 சங்கங்களில் ஆய்வுகளும், 60 திடீர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகளின்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கடுமையான முறைகேடுகளின் பேரில் சட்டபூர்வ விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

### 4.7. விசாரணை

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் நடைபெற்ற கடுமையான நிதி முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81–ன்கீழ் 31–3–2004 வரை சட்டபூர்வ விசாரணைக்கு 25 சங்கங்கள் உட்படுத்தப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

### 4.8. குற்ற வழக்கு

31–3–2004 வரை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன்கீழ் சட்டபூர்வ விசாரணை முடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட 37 சங்கங்களில் குற்றமுறு செயல்கள் புரிந்த 151 நபர்கள்மீது குற்ற வழக்கு தொடர அனுமதி அளிக்கப்பட்டு, வணிகவியல் குற்றப் புலனாய்வுப் பிரிவில் வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 4.9. லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை வழக்குகள்

முறைகேடுகள் நடைபெற்ற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட 13 சங்கங்களில் தற்போது 4 சங்கங்களின் விசாரணை முடிக்கப்பட்டு வணிகவியல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை பிரிவின் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31–3–2004 அன்றைய தேதியில் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் 7 சங்கங்களில் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 4.10. தண்டத் தீர்வை

65 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் ஏற்பட்ட நிதி இழப்பை வசூல் செய்வதற்கு 31–3–2004 அன்றைய தேதி வரை தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சுமார் ரூ. 810.93 இலட்சம் வசூல் செய்வதற்கு 310 நபர்கள் மீது பிரிவு 87–ன்கீழ் தண்டத் தீர்வை நடவடிக்கை தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.



2004 ஜூலை 31]

### 4.11. மழை நீர் சேகரிப்புத் திட்டம்

கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் கடன் பெற்று கட்டப்படும் வீடுகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளை கண்டிப்பாக நிறுவ உரிய அறிவுரைகள் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின்கீழ் இயங்கும் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு இத்தகைய மழை நீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 5. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்

5.1. அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிட்டுள்ள வீட்டு வசதி அமைப்பு இனங்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது:—

(1) வீட்டுமனை வாங்கி அதில் வீடு கட்டுதல்

(2) புதிதாக வீடு கட்டுதல்

(3) தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு/வீடு வாங்குதல்

(4) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு/வீடு வாங்குதல்

(5) தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்

(6) தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்

5.2. இத்திட்டத்தின்கீழ் வீடுகட்ட முன்பணம் மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.6.00 இலட்சமும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.7.50 இலட்சமும் வழங்கப்படுகிறது. அதேபோன்று, தற்போது வீட்டை விரிவாக்க/மேம்படுத்த முன்பணத் தொகை ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

5.3. 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இடவசதிக் கட்டுப்பாடு

தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் 1960–திருத்தப்பட்ட சட்டம் 23, 1973 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | இடவசதிக் கட்டுப்பாடு | : | வீடுகள் வாடகைக்கு விடுவதை சீர் செய்வது முறைப்படுத்துவது. |
| 2. | வாடகைக் கட்டுப்பாடு | : | வாடகைகள் கட்டுப்படுத்துவது. |
| 3. | வெளியேற்றுகை கட்டுப்பாடு | : | முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது. |

6.1. இடவசதி கட்டுப்பாடு அதிகாரி, (சென்னையைப் பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியாளர்) இடவசதி கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவார். வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளை கவனிப்பதற்கு இடவசதி கட்டுப்பாடு அதிகாரி அவர்கள் மேற்படி சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராவார். மற்ற மாவட்டங்களில் கோட்ட வருவாய் அலுவலர் இப்பணியை கவனிக்கிறார். மேலும், மேற்படி தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960, ஓர் ஒருங்கியல் சட்டம் என்பதால் எந்தவித திருத்தங்களும் மத்திய அரசாலும் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்/கோட்ட வருவாய் அலுவலர் சட்டபூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துவது, பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும்.

பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால், கடந்த 7 வருடங்களாக சென்னை மாநகரில் எந்த க்கட்டடங்களும் அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படவில்லை. தற்போதைய நில மதிப்பீடு, பழைய மற்றும் அடிப்படை வசதிகளற்ற கட்டடங்களுக்கும் வாடகை மதிப்பீட்டை உயர்த்திக் காட்டுகிறது. ஆதலால் நிதிநிலை அடிப்படையில் எந்த ஒரு கட்டடத்தையும் அரசுக் கட்டுப்பாட்டில் சட்டப்பிரிவு 3 (3)–ன்கீழ் கொண்டுவருவது நன்மை பயக்கக்கூடியதல்ல. ஏனென்றால், யாரும் அந்தக் கட்டடத்திற்கும் குடிவர விரும்பாத





நிலையில், அரசு அதற்கான வாடகையைச் செலுத்த வேண்டியுள்ளது. சட்டபூர்வமான வாடகைதாரர் என்ற முறையில் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடத்தைப் பராமரிக்கும் பொறுப்பு அரசையே சார்ந்ததாகும்.

கட்டடங்கள் பிரிவு 3–ன்கீழ் அரசுக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு நோக்கத்திற்கும், அரசு அலுவலகங்களுக்கு குடியிருப்பு அல்லாத நோக்கத்திற்கும், ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்படுவது சட்டபூர்வமான அதிகாரத்தின்கீழும், வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவது அரசு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைக் கட்டளைகள் படியும் செயலாக்கப்படுகிறது.

முதன்முதலில் 1949–ல் இந்தச் சட்டம் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யும் ஒரு வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அரசு ஊழியர்களின் இடவசதிக்கான தேவைகளை கவனிக்க வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் மற்றும் வீடு கட்ட முன்பணம் வழங்குதல் போன்ற வசதிகள் உள்ளன. தற்போது "வெளியேற்றப்பட்டோர்" "மாற்றலுக்குரியவர்" "புதிதாக திருமணம் ஆனவர்" மற்றும் "அரசு விருப்புரிமை" ஆகிய பிரிவின்கீழ் வரும் நபர்கள் தங்கள் பெயர்களை இந்த அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

தற்போது சென்னையில் மட்டும் அரசுக் கட்டுப்பாட்டில் 58 கட்டிடங்கள் உள்ளன. கோயம்புத்தூரில் 17 வீடுகளும் உள்ளன. மற்ற மாவட்டங்களில் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வீடுகள் இல்லை. இந்த வீடுகள் விடுவிக்கப்பட்டு உரிமையாளர்கள்வசம் ஒப்படைக்கப்படும் வரை, அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர்கள் ஆவார்கள். அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள வீடுகள் சம்பந்தப்பட்ட 42 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன.

6.2. குடியிருப்பவர்களும், வீட்டின் உரிமையாளர்களும் எதிர்நோக்கும் சில நடைமுறை இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏற்கெனவே அரசின் ஆய்வில் உள்ளது. தற்போது சட்டத் துறையில் இருந்து பெறப்பட்ட தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் வாடகைக் கட்டுப்பாடு சட்டம், டிசம்பர் 2001 அறிக்கையில் உள்ள மேலும் சில பரிந்துரைகளின் அடிப்படையிலும் தொடர்ந்து ஆய்வு செய்து தக்க சட்டத் திருத்தம் விரைவில் வெளியிடப்படும் வகையில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7. நகர் ஊரமைப்பு இயக்ககம்

1931 முதல் 2001 ஆம் ஆண்டு வரைக்கான காலத்தில் இம்மாநிலத்தின் நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் தொகை மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 18 விழுக்காடாக இருந்து 43.86 விழுக்காடாக நிலையாக உயர்ந்து வந்துள்ளது. 1991 முதல் 2001 முடிய உள்ள பத்தாண்டு காலத்தில் நகர்ப்புற மக்கள் தொகையின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 0.36–ல் இருந்து 2.84 ஆக உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 6.21 கோடியில், 2.72 கோடி மக்கள் 832 நகர மையங்களில் வசித்து வருகின்றனர். இது மாநில மொத்த மக்கள் தொகையில் 43.86 விழுக்காடாகும். நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 27.78 விழுக்காடு மக்கள் மட்டுமே நகர்ப்புறத்தில் வசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ள நிலையில், தேசிய விகிதத்தைவிட அதிகமாக நமது மாநிலத்தில் 43.86 விழுக்காடு மக்கள் நகர்ப்புறத்தில் வசிப்பதாக அறியப்பட்டுள்ளது. நகர்ப்புற மக்கள் தொகை விகிதத்தைப் பொறுத்தமட்டில், மாநிலங்களில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு நகர்ப்புற மக்கள் தொகை வெகுவாக அதிகரித்ததால் 2001 ஆம் ஆண்டில் மூன்றாம் இடத்தில் உள்ளது. அனைத்து நகர் மையங்களிலும் மக்கள் தொகை அதிகரித்து வருவதால், அதற்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி நல்ல நகர்ப்புற வாழ்க்கைச் சூழலைத் தொடர்ந்து கிடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. நகரங்களின் உற்பத்தி அதிகரித்து, பொருளாதார நிலை உயர்ந்தால் மட்டுமே நகர்மயமாதல் சிறப்பானதாக அமையும். பெருவாரியான நிலப் பயன்பாடு கட்டுப்பாடுகளை விதிப்பது மட்டுமல்லாது போக்குவரத்து, கல்வி நிலையங்கள், கேளிக்கைகளுக்கான நிறுவனங்கள் அமைப்பதற்கான இடங்களை ஒதுக்குதல் போன்றவற்றில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றிற்கேற்பவும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ற உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டங்களில் தக்கவாறு உத்தேசிக்க வேண்டியுள்ளது.

### 7.1. நகர்ப்புற அபிவிருத்திக்கான உத்தி

சரியான முதலீடு செய்வதன் வாயிலாக, குறைவான வளத்தினால் ஏற்படும் தடைகளை நீக்கி நகர்ப்புறக் குடியிருப்புகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தும் சூழலை உருவாக்குவதே நகர்ப்புற அபிவிருத்திக்கான உத்தியின் நோக்கமாகும். நமது வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருப்பதால், கிடைத்துள்ள வளத்தை சமமாகப்



பங்கிட்டு, அனைத்து பெருநகரங்கள் மற்றும் நகரங்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக திறன், மண்டலத்தின் சமச்சீரான வளர்ச்சி மற்றும் அதனால் ஏற்படும் மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி போன்ற நோக்கங்களைக் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மையங்களில் முதலீடு செய்வது உகந்ததாகும்.

மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்து வருவது, குடியிருப்பு, கேளிக்கை, போக்குவரத்து, தொழிற்சாலை மற்றும் இதர வசதிகள் குறித்த தர நிர்ணயத்தை மறு ஆய்வு செய்வது உள்ளிட்ட தகுந்த நகர்ப்புற அபிவிருத்தி உத்திகளை வகுப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளச் செய்துள்ளது. இதர நகர் மையங்களின் அபிவிருத்திக்கு அதிகமான சலுகைகள் வழங்குவதன் வாயிலாக, ஏற்கெனவே அபிவிருத்தி அடைந்துள்ள நகர் மையங்களின் அபிவிருத்தியின் வேகத்தை தாமதப்படுத்தும் வகையிலான முறையான நெடுங்காலத் திட்டமிடல் தேவைப்படுகிறது. மாநிலத்தில் குறைந்த அளவே நகர்ப்புற அபிவிருத்தி அடைந்துள்ள வட்டங்களில் அமைந்துள்ள சிறிய நகரங்களைக் கண்டறிந்து அவற்றை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நகர் மையங்களின் அபிவிருத்தி மண்டல அளவிலான ஒட்டுமொத்த அபிவிருத்தியின் அடிப்படையில் அமைய வேண்டும். மாநிலத்தின் வெவ்வேறு மண்டலங்களின் நகர்ப்புற மக்கள் தொகையை மண்டலங்களுக்கிடையே பகிர்ந்தளித்து சமச்சீராக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இரு பெருநகரங்கள்/நகரங்களுக்கிடையே அமைந்துள்ள பிரதான சாலைகளை ஒட்டி ஏற்படும் அபிவிருத்திகளை தக்க உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வது நகரத்தின் மையப் பகுதியில் ஏற்படும் நெரிசலை நெடுங்காலத்திற்குக் குறைக்க உதவும். விரைவாக நகர்மயமாதலின் விளைவுகளை எதிர்கொள்ளும் வகையில் சமாளிப்பதற்கு கீழ்க்காண்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்த வேண்டியுள்ளது:

1. நகர எல்லைக்குட்பட்ட பகுதி மற்றும் அதை மையமாகக் கொண்டு ஒட்டி அமைந்துள்ள சில பகுதிகளுக்கு மட்டுமின்றி, இரண்டு பெரு நகரங்கள்/நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள பிரதான சாலையை ஒட்டி நீள்வாக்கிலாக அபிவிருத்தியடையும் பகுதிகளுக்கும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தக்கவாறு முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு

அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துதல். பலவகையான நில உபயோகத்திற்கு சரியானபடி நிலங்களை ஒதுக்கீடு செய்தல், சாலைகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவை சட்டப்படியிலான திட்டங்களின் நோக்கமாகும்.

2. போக்குவரத்து மேலாண்மை, பாரம்பரிய பகுதி பாதுகாப்பு, மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சியடைந்த வட்டங்களின் அபிவிருத்தி மற்றும் இதர அபிவிருத்திகளுக்கு தக்க சிறப்புத் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துதல்.

3. விரைவான நகர்ப்புற வளர்ச்சியினால் ஏற்படும் சவால்களை முன்பே கணித்து, வரும்முன் காக்கும் வண்ணம் அதற்கேற்றவாறு தக்க திட்டங்களைத் தயாரிப்பதற்கு வான்வழி புகைப்படம், தொலையுணர்வு, புவியமைப்பு தகவல் முறை போன்ற மிக நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இதர தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்.

4. சட்டப்படியான திட்டங்களில் குறிப்பிட்டுள்ள உத்தேசங்களை செயல்படுத்துவதற்கு உள்ளாட்சிகள்/உள்ளூர் திட்டக் குழுமங்கள் ஆகியவற்றிற்கு உதவுவதற்கெனத் தனியே நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியைப் பயன்படுத்திக்கொள்ளுதல்.

5. ஒவ்வொரு முன்னுரிமை வாய்ந்த நகரமும் தனது முதலீடு மற்றும் ஊக்கப் பங்கைப் பெறும் வகையில் நிதி உதவி வழங்கும் முறையை சீர்படுத்துதல்.

## 7.2. பெரும்படியான கொள்கை நோக்கங்கள்

பெருநகரங்கள் விரிவடைவதால், நகர எல்லையில் மற்றும் அதைத் தாண்டியும் குறைந்த அடர்த்தியான குடியிருப்புகள் விரைவாக உருவாகின்றன. நகரம் மற்றும் அதன் சார்பு பகுதிகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சி/நகராட்சி/நகரங்கள் மற்றும் அதனை அடுத்து அமைந்துள்ள சார்பு நகர்ப் பகுதிகளை உள்ளடக்கியதாக கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகள் அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. அப்பகுதிகளுக்கு கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏறத்தாழ அனைத்து நகராட்சி,



நகரங்கள் மற்றும் சில பேரூராட்சிகளுக்கு அதனதன் எல்லைக்குட்பட்ட பகுதியை மட்டுமே உள்ளடக்கியதாக தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகளும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளன. இரண்டு பெரு நகரங்கள்/நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள பிரதான சாலையை ஒட்டி ஏற்படும் நீள்வாக்கிலாக வளர்ச்சியடையும் பகுதிகளின்பால் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சில பகுதிகளை திட்டப் பகுதிகளாக அறிவிப்பு செய்து, அவற்றிற்கு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்த வேண்டியுள்ளது. திட்டப் பகுதிகளுக்கென மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ல் வழிவகை உள்ளது. பலவகையான நில உபயோகத்திற்கு சரியானபடி நிலங்களை ஒதுக்கீடு செய்தல், சாலைகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவை அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கமாக உள்ளன. தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ல் தொலைநோக்குப் பார்வையுடன் வரையறுக்கப்பட்டுள்ள சட்டப்படியிலான மற்றும் சிறப்புத் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்துவதே இவ்வியக்ககத்தின் முக்கிய நோக்கங்களாக அமைந்துள்ளன.

## 7.3. முழுமைத் திட்டங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

இதுகாறும் 108 முழுமைத் திட்டங்கள் மற்றும் 6 புதுநகர் வளர்ச்சித் திட்டங்களை இத்துறை தயாரித்துள்ளது. ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்ட முழுமைத் திட்டங்களை சமீபத்திய அபிவிருத்திகளுக்கேற்பவும் மற்றும் அரசு கொள்கைகளுக்கு ஏற்பவும் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. திருவள்ளூர், குடியாத்தம், கரூர், திருச்சிராப்பள்ளி, திருப்புவனம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கான முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்வதற்கும் மற்றும் பெருந்துறை, சேலம் இரும்பாலை நகர் மற்றும் குறிச்சி ஆகிய மூன்று புதுநகர் வளர்ச்சிப் பகுதிகளுக்கு புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்கும் 2003-04 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவற்றுள் குடியாத்தத்திற்கான முழுமைத் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டது. மீதமுள்ள முழுமைத் திட்டங்கள்/புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பு 2004-05 ஆம் ஆண்டில் தொடர்ந்து செய்யப்பட

உத்தேசிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ள மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்த மூன்று வட்டங்களையும் சேர்த்து பத்து உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கும்/புதுநகர் வளர்ச்சித் திட்டப் பகுதிகளுக்கும் 2004–05 ஆம் ஆண்டில் முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கவும், மறு ஆய்வு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.4. விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

உள்ளூர் திட்டப் பகுதிக்குள் அமையும் மிக விரைவாக வளர்ச்சியடைய வாய்ப்புள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்கு நுண்ணிய அளவிலான விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுகாறும் 1625 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 650 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டும், 282 திட்டங்களுக்கு இணக்கம் வழங்கப்பட்டும் மற்றும் 693 திட்டங்கள் வரைவு நிலையிலும் உள்ளன. அபிவிருத்தியின் போக்கிற்கு ஏற்ப விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் குறிப்பிட்ட கால முறையில் மறு ஆய்வு செய்யப்படுகின்றன. 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்/மறு ஆய்வு செய்யும் பணி 2003–04 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. 2004–05 ஆம் ஆண்டில் மேலும் 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்/மறுஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.5. சிறப்புத் திட்டங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்கள்

#### 7.5.1. பாரம்பரிய நகர வளர்ச்சித் திட்டங்கள்

பாரம்பரியத் தலங்களைப் பாதுகாப்பதும், அதன் சுற்றுப்புறத்தை அனைத்து வகையான மாசுபாட்டிலிருந்து பாதுகாப்பதும் மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கத்தை நிறைவேற்ற 38 அறிவிப்பு செய்யப்பட்ட பாரம்பரிய நகரங்களுக்கு 'வளர்ச்சித் திட்டங்களை இவ்வியக்ககம் தயாரித்துள்ளது. பாரம்பரியத் தலங்களின் சுற்றுச்சூழல் பாதுகாக்கும் திட்டங்களுக்கென நிதி உதவி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 2002–03 ஆம் ஆண்டில் பதினொன்று பாரம்பரிய நகரங்களும் மற்றும் 2003–04 ஆம் ஆண்டில் மேலும் ஐந்து பாரம்பரிய நகரங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு, நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ.50.00 இலட்சம் வீதம் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. திட்டச் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.



*2002–2003 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட நகரங்கள்*

1. சிதம்பரம்
2. காரைக்குடி.
3. பேரூர்
4. வேளாங்கண்ணி
5. பூம்புகார்
6. செஞ்சி
7. கொள்சசல்
8. கங்கை கொண்ட சோழபுரம்
9. பழனி
10. இராமேஸ்வரம்
11. நாகூர்

*2003–2004 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட நகரங்கள்*

1. திருச்செந்தூர்
2. திருத்தணி
3. திருச்செங்கோடு
4. ஸ்ரீபெரும்புதூர்
5. சித்தன்னவாசல்

இதுபோன்று ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், பிச்சாவரம், பவானி ஆகிய ஒவ்வொரு பாரம்பரிய நகரத்திற்கும் ரூ.50.00 இலட்சம் வீதம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கி 2004–2005 ஆம் ஆண்டில் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆவுடையார் கோவில் நகரத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம் வரை மானியமாக நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் மற்றும் இதர வைணவ கோவில்கள் அடங்கிய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள நவதிருப்பதி நகரங்களுக்கும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக நிதியுதவி வழங்கி திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் மற்றும் இதர வைணவ கோவில்கள் அடங்கிய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள நவதிருப்பதி ஆகிய இந்த ஒன்பது வைணவ கோவில்களில் நான்கிற்கு ஏற்கெனவே பிற துறைகளால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நிலையில் ரூ.50.00 இலட்சத்தை மற்ற ஐந்து கோவில்கள் உள்ள பகுதிகளின் வளர்ச்சிக்கு பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலத்திற்கு அருகிலுள்ள ஸ்ரீமுஷ்ணம், பரிக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் ஆகிய நகரங்களில் கூட்டாக திட்டங்களைச் செயல்படுத்த ரூ.50.00 இலட்சம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை அருகிலுள்ள இடைக்காட்டூரில் (மதுரையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் மற்றும் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையின் அருகில்) மிகப் பாரம்பரிய மதிப்பு மிக்க பழமை வாய்ந்த கிறிஸ்துவ தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் விதத்தில் திட்டங்கள் செயல்படுத்த ரூ.25.00 இலட்சம் வரை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேதுக்கரையில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.25.00 இலட்சம் வரை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய நகரங்களில் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கும் மற்றும் அதனைப் பராமரிப்பதற்கும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாகவும் அதற்கு இணையான 50 சதவிகிதம் உள்ளாட்சி/இதர அரசு நிறுவனம் தனது பங்காக வழங்கி உரிய திட்டங்கள் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.5.2 போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள்

மாநிலத்தின் மாநகரங்கள் மற்றும் நகரங்களில் தற்போதுள்ள போக்குவரத்து நடைமுறைகளை ஆராய்ந்து, நீண்டகால தேவைகளைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்து நெரிசலை நீக்கி சீரான முறையில் போக்குவரத்தை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இத்துறையால் போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் வரை கீழ்க்காணும் ஒவ்வொரு மாநகராட்சிக்கும் நிதியுதவி வழங்குவதற்கான புதிய திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:

1. கோயம்புத்தூர்
2. சேலம்
3. மதுரை
4. திருச்சிராப்பள்ளி
5. திருநெல்வேலி





கீழ்க்காணும் 10 நகராட்சிகளில், ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.25.00 இலட்சம் வரை நிதியுதவி வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1. காஞ்சிபுரம்
2. திருப்பூர்
3. விழுப்புரம்
4. வேலூர்
5. ஈரோடு
6. கடலூர்
7. தருமபுரி
8. திண்டுக்கல்
9. தஞ்சாவூர்
10. தூத்துக்குடி

திட்ட மதிப்பீட்டில் 75 சதவிகிதம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும், உள்ளாட்சியின் பங்காக 25 சதவிகிதமும் அமையும் வகையில் இத்திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2004–2005 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.5.3. துவக்க முதலீடு திட்டத்தின்கீழ் சட்டரீதியான திட்டங்களைச் செயல்படுத்துதல்

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உள்ளாட்சி, உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றிற்கு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் மானியம் வழங்கும் துவக்க முதலீட்டுத் திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். மீதமுள்ள 50 சதவிகிதம் உள்ளாட்சி/உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் தனது சொந்த ஆதாரங்களிலிருந்து பங்களிக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி அளவிற்கு மானியம் வழங்கி 5 நகரங்களில் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.5.4. பூங்கா மற்றும் விளையாடுமிடங்களை மேம்படுத்துதல்

தரம் 1 மற்றும் தரம் 2 நகரங்களில் உள்ள பூங்கா மற்றும் விளையாடுமிடங்களை மேம்படுத்த மானியமாக நிதியுதவி வழங்கும்

திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தனது பங்காக சமமான தொகையைப் பங்களிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பூங்கா மேம்பாட்டிற்கும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. தரம் 1 மற்றும் தரம் 2 நகரங்களுக்கு மட்டும் என்ற கட்டுப்பாடின்றி, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் நிதியுதவி வழங்கும் வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 10 நகர்ப்புற உள்ளாட்சிகளில் பூங்காக்களை மேம்படுத்துவதற்காக 2004-2005 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.12.50 இலட்சம் அளவிற்கு நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.6. திட்டப் பகுதிகளை அறிவிப்பு செய்தல்

எதிர்காலத்தில் சட்டப்படியிலான திட்டங்கள் தயாரிப்பதற்கு ஏதுவாக திருவள்ளூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதி, ஆரோவில்-மைலம் உள்ளூர் திட்டப் பகுதி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் புதுநகர் வளர்ச்சிப் பகுதிகளை 2004-2005 ஆம் ஆண்டில் திட்டப் பகுதிகளாக அறிவிப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கங்கைகொண்டசோழபுரம் ஒரு அறிவிக்கப்பட்ட பாரம்பரிய நகரமாகும். ஏற்கெனவே உலக பாரம்பரிய நினைவுச் சின்னமாக தஞ்சாவூர் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் கங்கைகொண்ட சோழபுரத்தையும் உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளப்பட இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை யுனெஸ்கோவை (UNESCO) அணுகியுள்ளது. பிரதான கோவிலை ஒட்டிய பகுதியில் ஏற்படும் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும்முகத்தான், கோவிலை ஒட்டிய ஒரு கிலோ மீட்டர் சுற்றுப் பகுதியை கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியாக அறிவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.7. மேலும் பல பாரம்பரிய நகரங்களைக் கண்டறிதல் மற்றும் அறிவிப்பு செய்தல்

ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்ட 38 பாரம்பரிய நகரங்களைத் தவிர, இன்னும் பல பாரம்பரிய நகரங்கள் நமது மாநிலத்தில் உள்ளன. பாரம்பரிய தலங்களின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களை வருங்காலத்தில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளும் வகையில் 2004-2005 ஆம் ஆண்டில் மேலும் பல பாரம்பரிய மிக்க நகரங்களைக் கண்டறியவும் மற்றும் அறிவிப்பு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.





### 7.8. சிறப்புத் திட்டங்கள்

#### 7.8.1 தாளில் உள்ள வரைபடங்களை கணினிமயமாக்கல்

பதிவு செய்து வைக்கும் நோக்குடனும் மற்றும் எதிர்காலத்தில் புவியமைப்பு தகவல் முறையை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் வகையிலும், சட்டரீதியான திட்டங்களுக்கென தயாரிக்கப்பட்ட தாளில் அமைந்துள்ள வரைபடங்களைப் பாதுகாத்து வைப்பதற்காக ரூ.28.00 இலட்சம் செலவில் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் தனியார் மூலம் வரைபடங்களை கணினிமயமாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 7.8.2 தொழிற்சாலை அபிவிருத்திக்கு உதவும் வகையிலான கொள்கை

தொழிற்சாலைகள் செழுமையாக வளர்வதற்கும் மற்றும் தொழில்முனைவோரை இம்மாநிலத்தில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு உற்சாகப்படுத்தும் வகையிலும், சிப்காட் (SIPCOT) மற்றும் சிட்கோ (SIDCO) உருவாக்க விரும்பும் தொழிற்பேட்டைகள், தொழிற்சாலை கட்டடங்களுக்கு நில உபயோக மாற்றம் மற்றும் திட்ட ஒப்புதல் வழங்கும் நடைமுறையை எளிதாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிப்காட் மற்றும் சிட்கோ உருவாக்கும் தொழிற்பேட்டைகள், தொழிற்சாலை கட்டடங்களுக்கு உள்ளூர் திட்டக் குழுமங்களால் வசூலிக்கப்படும் அபிவிருத்திக் கட்டணம் மாநிலம் முழுவதும் ஒரே சீராக அமையும் வகையில் திருத்தி அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 7.8.3 அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான புவியமைப்புத் தகவல் முறை

சிறப்பாக மற்றும் விரைவாக திட்டங்கள் தயாரிப்பதற்காக நகர்ப்புறங்களுக்கான வரைபடம் தயாரிப்பதிலும் மற்றும் இதர திட்டமிடல் பணிகளிலும் வான்வழி புகைப்படம், செயற்கைக்கோள் படங்களை பயன்படுத்தும் கணினி அடிப்படையில் அமைந்த புவியமைப்பு தகவல் முறை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன. திண்டிவனம், இராஜபாளையம் மற்றும் நாகப்பட்டினம் நகரங்கள் சம்பந்தமான புவியமைப்புத் தகவல் முறையிலான புள்ளிவிவரங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று நகரங்களுக்கும் கூடுதல் புள்ளிவிவரங்களைச் சேர்த்தல், மேலும் கூடுதலாக சாத்தூர், திருவண்ணாமலை மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மூன்று நகரங்களுக்கு புவியமைப்புத் தகவல்

முறையிலான புள்ளிவிவரங்களைத் தயாரிப்பது ஆகியவை 2003–2004 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியை 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நகர்ப்புறங்கள் சம்பந்தமான ஒருங்கிணைந்த புள்ளிவிவரங்களை உருவாக்கும் பொருட்டு, தேசிய நகர்ப்புற தகவல் முறையை ஏற்படுத்த இந்திய அரசு உத்தேசித்துள்ளது. மேலும் தமிழ்நாட்டின் குறிப்பிட்ட நகரங்களுக்கான வரைபடங்களை கணினிமயமாக்குவதற்கும் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரித்து வைப்பதற்குமான திட்டத்திற்கு திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதத் தொகையை இந்திய அரசு பங்களிக்கவும் உத்தேசித்துள்ளது. மாநிலத்தின் பங்களிப்பாக 30 சதவிகிதப் பங்குத் தொகையான ரூ.1.56 கோடி, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசின் முறையான இசைவு எதிர்நோக்கப்படுகிறது. இசைவு பெறப்பட்டவுடன் திட்டச் செயலாக்கம் துவக்கப்படும்.

இரண்டு பெருநகரங்கள்/நகரங்களுக்கிடையே அமைந்துள்ள பிரதான சாலையை ஒட்டி ஏற்படும் நீள்வாக்கிலான விரைவான அபிவிருத்தி நிகழும் பகுதிக்கு தக்க உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையில் செயற்கைக்கோள் படங்களை உபயோகப்படுத்தி புவியமைப்பு தகவல் முறை மூலம் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கு ஆய்வு செய்யப்படவுள்ளது. இப்பணியை தனியாரின் உதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.9. பகுதி–II திட்டம் 2004–2005

இத்துறையின் அனைத்து பொதுச் சேவை சார்ந்த பணிகளில் மின்னனு ஆளுகை முறையை ரூ.10.00 இலட்சம் செலவில் புகுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்துரு, கீழ்க்காணும் அம்சங்களை உள்ளடக்கியதாகும்:

(அ) இத்துறையின் தலைமை அலுவலகம், 8 மண்டல அலுவலகங்கள், 15 உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் 5 புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் ஆகிய அனைத்து அலுவலகங்களுக்கென்று இணைய வலைதளங்களை உருவாக்குதல்.

(ஆ) கட்டடம் கட்டுவதற்கும், திட்ட அனுமதி பெறுவதற்கும் சமர்ப்பிக்கப்படும் கட்டட விண்ணப்பங்களின் மீது அலுவலகங்களில் தொடரப்படும் நடவடிக்கையின் விவரத்தைத் தொடர்ந்து இணைய



வலைதளம் மூலம் பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏற்பாடு செய்தல். இதற்கென பிரத்யேகமாக மென்பொருள் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) இத்துறையின் பல்வேறு நடவடிக்கைகளில் மின்னணு ஆளுகை முறையைப் புகுத்துவதற்கு உரிய வாய்ப்பைக் கணக்கிடுவதற்கு ஆய்வு செய்தல்.

(ஈ) இத்துறையின் பல்வேறு நடவடிக்கைளில் மின்னணு ஆளுகை முறையைப் புகுத்துவதற்கு பிரத்யேகமான மென்பொருளை உருவாக்குதல்.

## 8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

2001 ஆம் ஆண்டில் 42 இலட்சம் மக்கள் தொகையைக் கடந்துவிட்ட சென்னை மாநகரம் இந்தியாவில் உள்ள பெருநகரங்களில் ஒன்றாகும். 1991 ஆம் ஆண்டில் 38 இலட்சமாக இருந்த சென்னைப் பெருநகரின் மக்கள் தொகை இந்த அளவுக்கு உயர்ந்துள்ளது; இது 2011–ல் 48 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகரை உள்ளடக்கிய சென்னைப் பெருநகர் பகுதி (நகரைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளையும் சேர்த்து) 2011–ல் 95 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அபரிமிதமான மக்கள் தொகை வளர்ச்சி, சென்னைப் பெருநகர்ப் பகுதியின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகர்ப்புற வசதிகள் செய்வதற்கு, மிகக் கடினமான சவாலாக உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள சென்னைப் பெருநகர்ப் பகுதி 1177 சதுர கி.மீ. கொண்டதாகும். இதில் சென்னை மாநகரம், 8 நகராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கும். சென்னைப் பெருநகரின் வளர்ச்சிக் கொள்கையானது இந்தச் சவால்களைக் கருத்திற்கொண்டு இவற்றிற்குத் தீர்வுகாணும் விதத்தில் அமையவேண்டும். அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும் உள்கட்டுமான வசதிகளை உருவாக்கவும் ஏற்கெனவே உருவாக்கிய நகர வசதிகளை அதிகப்படுத்தவும் பல திட்டங்களை முன்வைத்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பின்வருமாறு:

### 8.1. சென்னைப் பெருநகர் பகுதிக்கான முதலீட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகளை விரைவாக மேம்படுத்தும் நோக்கில் கட்டமைப்பு முதலீட்டுத் திட்டம் துவங்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை எடுத்துள்ளது. பொது மற்றும் தனியார் துறைகளின் பங்கீட்டுடன் செயல்படுத்த உள்ள இந்தத் திட்டத்தில், போக்குவரத்து, வீட்டு வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றல் வசதி மற்றும் மழை நீர் வடிகால் மேம்படுத்துதல் ஆகியன அடங்கும். இத்திட்டத்தின் 2003-2004 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீடு ரூ.110.94 கோடியாகும். இதன் பணிகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, சென்னை மாநகராட்சி, நகராட்சிகளுக்கான ஆணையம், பேரூராட்சிகளுக்கான இயக்ககம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்ககம் ஆகியன செயல்படுத்த உள்ளன. 2004-2007 ஆம் ஆண்டுகளுக்கான நடுத்தர காலத் திட்டத்தில் ரூ.8233.73 கோடி உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் நிதியாண்டில் ரூ.2007.12 கோடி முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 8.2. மெரினா கடற்கரை அபிவிருத்தித் திட்டம்

மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இயந்திரம் மூலமாக சுத்தம் செய்வது என முடிவெடுக்கப்பட்டது. முதற்கட்டமாக அண்ணா சதுக்கம் முதல் கலங்கரை விளக்கம் வரையிலான 3.2 கி.மீ. தூரம் உள்ள பகுதியை ஆண்டிற்கு ரூ.36 இலட்சம் செலவில் அழகுபடுத்தும் திட்டம் 22-09-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டது. மெரினாவில் தற்போதுள்ள வசதிகளை, பெருகி வரும் பார்வையாளர்கள், சுற்றுலாவினர் மற்றும் நடைப்பயிற்சி செய்வோர் போன்றவர்களின் தேவைகளுக்கேற்ப அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சீர்படுத்திய நடைபாதைகள், நடைபாதைக் கடைகள், கூடுதல் வாகன நிறுத்துமிடங்கள், குழந்தைகள் விளையாடும் இடங்கள், உயர் மின்விளக்குகள், புல் தரைகள், சுற்றுக்காவல் போன்ற வசதிகளை ரூ.4.84 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை பொதுமக்கள் மற்றும் தனியார் கூட்டமைப்பின் மூலம் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



### 8.3. திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II- இல் உள்ள இரயில் நிலையங்களின் மேற்பகுதியில் வணிகப் பகுதி அமைத்தல்

தமிழ்நாடு அரசு, பறக்கும் இரயில் நிலையங்களின் கூரைப் பகுதியின் மேலே அடுக்குமாடி வணிகப் பகுதியாக அபிவிருத்தி செய்ய முழு உரிமை பெற்றுள்ளது. இதன்மூலம் நகர கட்டடப் பகுதிகளின் பரப்பை அதிகரிக்கவும், திரளான துரித இரயில் போக்குவரத்தில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இயலும். 9 நிலையங்களின் வடிவமைப்பு மற்றும் அதன் கூரைப் பகுதியின் மேல் வணிகப் பகுதி அபிவிருத்தி செய்வதற்கான வரைபடங்கள் தயாரிப்பதற்காக 4 கலந்தாிதற்குரிய நிறுவனங்கள் அமர்த்தப்பட்டுள்ளன. இந்த கலந்தரிதற்குரிய நிறுவனங்கள் 9 நிலையங்களின் அபிவிருத்திக்கான விரிவான வரைபடங்களைச் சமர்ப்பித்துள்ளன. இந்த வரைபடங்களின்படி இரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலையங்களின் கூரைப் பகுதிக்கு மேலே கட்டப்படவுள்ள அடுக்குமாடி கட்டடங்களின் விரிவான வடிவுகள் மற்றும் செய்முறை வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அலுவலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இடங்களுக்கான தேவைகளை அறிய, ஒரு கலந்தரிதற்குறிய நிறுவனம் மூலம் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### 8.4. வெளிவட்டச் சாலை

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன், வெளிவட்டச் சாலையை சென்னைப் பெருநகரின் எல்லைப்பகுதியில் அமைத்திட திட்டமிட்டுள்ளது.

சென்னை - திருச்சி சாலை (தெற்கு நீளப் பெருஞ்சாலை)
சென்னை - பெங்களூர் சாலை (மேற்கு நீள நெடுஞ்சாலை)
சென்னை - திருவள்ளூர் நெடுஞ்சாலை (செ.தி.நெ. சாலை)
சென்னை - நெல்லூர் நெடுஞ்சாலை (வடக்கு நீள நெடுஞ்சாலை)

திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலை(தி.பொ.ப.சாலை) ஆகிய சாலைகளை இணைக்கும் வகையில் வெளிவட்டச் சாலை ஒன்றினை அமைத்திட தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

வெளிவட்டச் சாலையின் மொத்த நீளம் 62 கி.மீ. ஆகும். இது தெற்கில் வண்டலூரையும், வடக்கில் மீஞ்சூரையும் இணைக்கும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.150 கோடியாகும். வெளிவட்டச் சாலையின்

முதல் கட்டத்தில் ஜி.எஸ்.டி. சாலை வண்டலூரிலிருந்து திருவள்ளூர் நெடுஞ்சாலை வரையிலுள்ள 29.2 கி.மீ. நீளத்திற்கான நிலங்கள் கையகப்படுத்தும் பணி முடியும் தறுவாயில் உள்ளது. இச்சாலையின் இரண்டாவது கட்டத்தில் 46 வட்டாரங்களில் 37 வட்டாரங்களுக்குரிய 4(1) செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டு, பிரிவு 5(ஏ)–வின்கீழ் 27 வட்டாரங்களுக்கு விசாரணை முடிவு பெற்றுள்ளது. இத்திட்டத்தினை தனியார் பங்கேற்புடன் செயல்படுத்துவதற்கான சாத்தியகூறு அறிக்கையினைத் தயாரிக்கும்படி தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 8.5. விரிவான போக்குவரத்து ஆய்வு

1992–95 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விரிவான போக்குவரத்து ஆய்வினை மேற்கொண்டு அதில் சில போக்குவரத்து வளர்ச்சித் திட்டங்கள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டன. அத்திட்டங்களை தற்பொழுது உள்ள போக்குவரத்து நிலைமைகளை உள்ளடக்கி உலக வங்கியின் உதவியுடன் மூன்று மாத காலத்திற்குள் முடிப்பதற்காக ரூ.15 இலட்சம் செலவில் ஓர் ஆய்வினை 2004 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–இன் கீழ் உலக வங்கியின் நிதிக்காக, குறுகிய கால மற்றும் நடுத்தர கால திட்டங்களைத் தோற்றுவிக்க முடியும். உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–ஐ செயல்படுத்தும் தருணத்தில் சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள அனைத்துப் போக்குவரத்துப் பிரச்சினைகள் பற்றிய தீர்வைக் காண 18 மாத கால விரிவான போக்குவரத்து ஆய்வினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. அதன்மூலம், அடுத்த 20 ஆண்டுகளுக்கான நடுத்தர மற்றும் நீண்டகாலத் திட்டங்களைச் சமாளிக்கவும் உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.6. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் உணவு தானிய அங்காடி அமைத்தல்

சென்னை நகரின் மொத்த வியாபாரப் பகுதியான ஜார்ஜ் டவுன் நெரிசலைக் குறைக்கும் வகையில் கோயம்பேடு மொத்த விற்பனை வணிக வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் உணவு தானிய அங்காடி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.





2004–2005 ஆம் நிதியாண்டில் 500 கடைகள் ஹட்கோ, டுபிட்கோ மற்றும் வணிகர்களின் சுயநிதி உதவியோடு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.7. சென்னை நகர ஒப்பந்த ஊர்திக்கான பேருந்து முனையம்

கோயம்பேடு மொத்த வணிக அங்காடி வளாகத்தினுள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் 4.80 ஏக்கர் நிலப்பரப்பில் ஒப்பந்த ஊர்திக்கான பேருந்து முனையம் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இந்த பேருந்து முனையம் 25–08–2003 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## 8.8. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாகன நிறுத்துமிடங்களுக்கான தேவைகள் குறித்து ஆய்வு

சென்னைப் பெருநகரப் பகுதியில் பெருமளவில் பெருகி வரும் வாகனங்கள் மற்றும் இதனால் ஏற்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்களுக்கான தேவைகள் ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு, வாகன நிறுத்துமிடங்களை அதிகரிப்பதற்கான ஆய்வு ஒன்றினை கலந்தாிநற்குரியவர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை ஜூன் 2004–ல் தயாரிக்கப்பட்ட உள்ளது.

## 8.9. பூகோளத் தகவல் தொகுப்பு பிரிவு

சென்னைப் பெருநகர் பகுதிக்கான பூகோளத் தகவல் தொகுப்பு ஏறபடுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினை ஒருங்கிணைப்பாளராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்திற்கான கணினி மற்றும் மென்பொருள்கள் வாங்குவதற்காக உலக வங்கி ரூ.55 இலட்சம் உதவி செய்ய முன்வந்துள்ளது. அடையார், சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் ஆகிய பகுதிகளுக்கான பூகோளத் தகவல் தொகுப்பினை இதர நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சென்னைப் பெருநகர வளர்சசிக் குழுமம் தயாரித்து வருகிறது. இதன்மூலம், நில உபயோகம், அடிப்படை வசதி, சொத்து வரி மற்றும் நில உரிமையாளர் விவரம் போன்ற அடிப்படைத் தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படும். தமிழக அரசு இத்திட்டத்திற்காக ரூ.16.50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

## 8.10. உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி செய்தல் மற்றும் சமுதாய சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மயான மேம்பாடு, சாலை அகலப்படுத்துதல், புதிய இணைப்புச் சாலை அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்றல் ஆகிய பணிகளுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. ஆண்டுதோறும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இப்பணிகளுக்கு ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்கிறது. இதுதவிர சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சுற்றுச்சூழல் மேம்பாட்டுடன் இணைந்த சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.1 கோடி ஆண்டுதோறும் மானியமாக அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் மரம் நடுதல், மயான மேம்பாடு, குளம் மற்றும் குட்டைகள் தூர்வாருதல், பூங்கா சீரமைப்பு ஆகிய பணிகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு 75 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகள் 10 விழுக்காடும், சமுதாய நிறுவனங்கள் 15 விழுக்காடும் கொண்ட பங்கேற்புடன் பணிகள் செய்யப்படுகின்றன.

## 8.11. விரிவான வளர்ச்சித் திட்டம்

விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. விரிவான வளர்ச்சித் திட்டமானது ஒவ்வொரு நிலத்திற்கும் பகுதி வாரியான உத்தேசப் பயன்பாடு, அப்பகுதியின் மேம்பாட்டுத் திட்டங்கள் முதலியன கொண்டதாகும். விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்காக சென்னை மாநகரப் பகுதி 99 திட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 51 பிரிவுகளுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏற்கெனவே அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் 6 திட்டப் பிரிவுகளுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.





# இணைப்பு XIV

(131 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை–மீன் வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### முன்னுரை

மீன் வளம் மிகுந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மனித வாழ்வில் மீன் பிடி தொழில் பழமைவாய்ந்த தொழில்களில் ஒன்றாகும். இத்தொழில் எளிதில் கிடைக்கக்கூடிய உயர்தர புரதச் சத்தினை அளிப்பதுடன் தரமான உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும் முக்கிய பங்காற்றுகிறது. கடலோர மாநிலங்களில் வளமிக்க கடல்வளம் மற்றும் உள்நாட்டு மீன் வளம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ்நாட்டின் கடற்கரை நீளம் 1076 கி.மீ. (நாட்டின் மொத்த கடல் நீளத்தில் இது 15 விழுக்காடு ஆகும்). தனியுரிமை பொருளாதார மண்டலம் (EEZ) 0.19 மில்லியன் ச.கி.மீ. (இந்தியாவின் மொத்த அளவில் 9.7 விழுக்காடு ஆகும்) மற்றும் கடற்படு நிலத்தொடர் 41,412 ச.கி.மீ. ஆகியவற்றுடன் உள்ள நமது மாநிலம் மீன் உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது.

இம்மாநிலத்தில் சுமார் 7.37 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். இவர்களில் 591 மீனவர் கிராமங்களில் வசிக்கும் 2.80 இலட்சம் மீனவ மக்கள், முழுநேர மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தற்சமயம், 12,000 மீன்பிடி விசைப்படகுகளும் மற்றும் பதிவு செய்யப்பட்ட 50,700 பாரம்பரிய மீன்பிடி கலன்களில் 20,000 கலன்கள் வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்டு, கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு மீன் வள ஆதாரத்தில் 3.7 இலட்சம் ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ளது. இதனில் நீர்த்தேக்கங்கள், பெரிய பாசனக் குளங்கள் மற்றும் நீண்ட மற்றும் குறுகிய பருவகால குளங்கள், குட்டைகள், கழிமுகம், உப்பங்கழிகள் ஆகியவை அடங்கும். இவை அனைத்தும்

மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பிற்கு ஏற்றதாக உள்ளது. தற்போது மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டத்தின்கீழ் 5,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பில் நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இறால் வளர்ப்பு சுமார் 3,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடைமுறையில் உள்ளது.

மீன் வள ஆதாரத்தை அதிகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மீன்பிடி தொழிலை தங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள மாநில மீனவ மக்களின் சமூகப் பொருளாதார நலத்தை உயர்த்துதல் ஆகிய முக்கிய கோட்பாடுகளைக் கொண்டு, மீன் வளத் துறை, 1907 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

### மீன் வளத் துறையின் கொள்கை – நோக்கங்கள்

மாநில மீன் வளத் துறையின் கொள்கை, பின்வரும் நோக்கங்களைக் கொண்டு, மீன் வளத்தைப் பெருக்குதல் மற்றும் மீனவ சமுதாய நலம் பேணுதல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டுள்ளது:

(1) சுற்றுச்சூழலுக்குகந்த, வளங்குன்றா தொழில்நுட்பங்களின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அண்மைக் கடல் பகுதியில் அதிக மீன்பிடிப்பினை குறைக்க ஏதுவாக இதுவரை பிடிபடாமல் இருக்கும் மீன் வளத்தினை மீனவர்கள் பிடிக்க ஊக்குவித்தல்.

(2) கடற்கரை பகுதிகளில் மீன் வள ஆதாரத்தினைப் பாதுகாத்தல், மீன் இருப்பு அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் மற்றும் மீன்கள், இறால் வகைகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல் போன்றவை மூலமாக அண்மைக்கடல் பகுதிகளில் மீன் வள ஆதாரங்களைப் பெருக்குதல்.

(3) மீனவர் மற்றும் கிராமப்புற மக்களுக்கு நேரிடை மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்குதல்.

(4) மீனவர்கள் குறிப்பாக மீனவ மகளிரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.

(5) சர்வதேச தரத்திற்கேற்ப, சுகாதாரமான முறையில் மீன்களை விற்பனை செய்தல் மூலமாக அந்நியச் செலாவணியை அதிகரித்தல்.





### 1. மீனள மேம்பாட்டு இயக்கம்

தமிழகத்தில் கடல் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளில் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்பட) மீன் வளம் முழுமையான அளவில் பயன்படுத்த வேண்டியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002-2003 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 15 அம்சத் திட்டத்தில், மீன் உற்பத்தியை அதிகரிப்பதும், உள்நாட்டு மற்றும் கடல் நீர்ப்பரப்பில் பல்வகை மீன் வளர்ப்பை மேம்படுத்துவதும், அதன் மூலம், மீன் வளர்ப்போர் மற்றும் எளிய மீனவர்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துவதும் அடங்கும்.

18-7-2002 அன்று இராமநாதபுரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மீனள மேம்பாட்டு இயக்கத்தினை துவக்கி வைத்து மீனள மேம்பாட்டு இயக்க அறிக்கையையும் வெளியிட்டார்கள். சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறும், வளம் குன்றாதவாறும் கடல் மற்றும் உள்நாட்டு மீன் வளத்தை அதிகரித்து உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதும் ஏற்றுமதியை அதிகரிப்பதும் மீனள மேம்பாட்டு இயக்கத்தின் குறிக்கோள் ஆகும். பாரம்பரிய மீனவர்களின் சமூக பொருளாதார நலன்களை மேம்படுத்துவதோடு ஆறு, குளம், குட்டை போன்ற உள்நாட்டு நீர் ஆதாரங்களில் நவீன உத்திகள் மூலம் மீன் வளத்தைப் பெருக்கி மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் இவ்வியக்கம் முனையும்.

மீனள ஆதாரம் வளங்குன்றா வகையில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதே மீனள மேம்பாட்டு இயக்கத்தின் நோக்கமாகும். இவ்வியக்கத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன:—

(1) ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன் வள வளர்ச்சி

(2) குளம் குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பை பிரபலமாக்குதல்

(3) கடலோரப் பகுதிகளை நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்காக மேம்படுத்துதல்

(4) கடலோர மீன் வளத்தை மேம்படுத்துதல்
(அ) மீன் வள இருப்பை அதிகப்படுத்துதல்
(ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்

[2004 ஜூலை 31

(5) மீன்பிடிப்பிற்குப் பின் உதவியும் விற்பனையும்
(அ) மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்துதல்
(ஆ) மீன் சில்லறை விற்பனை கட்டமைப்பு வசதிகள் அமைத்தல்

(6) கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள்
(அ) உயிர்காக்கும் மிதவைகள்/ உயிர்பாதுகாக்கும் கவச உடைகள்
(ஆ) புவிநிலை அறிவிக்கும் கருவிகள்

(7) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி வசதிகளை வலுவாக்குதல்

இவ்வியக்கத்தின் மேற்குறித்த திட்டங்கள், படிப்படியாக, ரூ.6107.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

### 2. கடல் மீன் வளம்

### 2.1 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்

இத்திட்டத்தின்கீழ், பாரம்பரிய மீன்பிடி கலன்களான வள்ளம் மற்றும் கட்டுமரம் ஆகியவற்றை இயந்திரமயமாக்குவதற்கு, முறையே, உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை வழங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

மாநில அரசு 2003-2004 ஆம் ஆண்டில் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குவதற்காக ரூ.76.12 இலட்சம் வழங்கியது. இதற்காக மத்திய அரசு மானியமாக ரூ.38.06 இலட்சத்தை விடுவித்தது. இத்திட்டத்தின்கீழ் வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்க வருங்காலங்களில் அதிகபட்சமாக ரூ.20,000/- மானியம் வழங்கப்படும். இத்தொகையை மத்திய, மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

### 2.2 உயர்வேக டீசல் எண்ணெய் மீதான ஆயத்தீர்வையை திரும்ப அளித்தல்

விசைப்படகுதாரர்களின் விசைப்படகு இயக்கச் செலவைக் குறைத்து அவர்களின் துயரங்களைக் களைவதற்காக உயர்வேக டீசல் எண்ணெய்க்கான மத்திய ஆயத்தீர்வையை அரசு மானியமாக வழங்கி



2004 ஜூலை 31]

வருகிறது. தற்போதைய நடைமுறையின்படி டீசல் ஆயத்தீர்வை மானியமாக மீனவர்கட்கு ஒரு லிட்டருக்கு மாநில அரசு 30 பைசாவும், மத்திய அரசு ரூ.1.20-ம் ஆக மொத்தம் ரூ.1.50 வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, ரூ.5.48 கோடிக்கான நிதி ஒப்புதல், மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அண்மையில், மத்திய அரசு இத்திட்டத்திற்காக ரூ.146.76 இலட்சம் வழங்கியுள்ளது.

### 2.3. கடல் மீன் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை

### 2.3.1. 1983 ஆம் வருட தமிழ்நாடு மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்திற்கு திருத்தம்

நாட்டுப்படகு மற்றும் விசைப்படகு மீனவர்களின் இடையே மீன்பிடிப்பதில் ஏற்படும் தகராறுகளைத் தவிர்ப்பதற்கு 1983 ஆம் வருட தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் சில காப்புரைகளுக்கு திருத்தம் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### 2.3.2 வழிகாட்டும் விளக்குடன் கூடிய ஒளிரும் மிதவைகள் நிறுவுதல்

பாக் விரிகுடா பகுதியில் கண்ணுக்குத் தெரியாத சர்வதேச கடல் எல்லைக்கோட்டினை தெரியாமல் கடக்க நேரிடும் மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகின்றனர். நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 240 கடல் மைல் தூரத்திற்கு சர்வதேச கடல் எல்லையில் ஒளிரும் மிதவைகள் அமைக்க கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி உதவி பெறப்பட்டவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

### 2.4. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### 2.4.1 மீன்பிடி துறைமுகங்கள் கட்டுதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மத்திய அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை மீனவர்கள் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். விசைப்படகுகளின் எண்ணிக்கை அதிகரித்ததனால் ஏற்கெனவே உள்ள இறங்கு தள வசதிகள்

போதுமானவையாக இல்லை. எனவே இரண்டாம் கட்ட விரிவாக்க பணிக்காக ரூ.19.10 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்காக, ரூ.48.64 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பழையார் மீன்பிடி துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக ரூ.10.60 கோடி மதிப்பிட்டிற்கான திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தேவையான நிலத்தை வனத் துறையிடமிருந்து பெறவும், சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்று பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்டமாக மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தவும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பணியை மேற்கொள்ள ஏதுவாக நிலமாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட திட்ட மதிப்பீடு ரூ.40 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மண் பரிசோதனை ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. பெங்களூரிலுள்ள மத்திய கடல் மீன் வள தொழில்நுட்ப நிலையம் தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க தொழில்நுட்ப பொருளாதார அறிக்கையை தயாரித்து வருகிறது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் முழுமையான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பப்படும்.

சர்வதேச தரத்திற்கு ஏற்ப, சென்னை மற்றும் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகங்களில், ஏற்கெனவே உள்ள வசதிகளை மேம்படுத்திட, ரூ.12.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளும் திட்டம் 'அசைடு'



(ஏற்றுமதி தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அதனைச் சார்ந்த உதவிகளை ஏற்படுத்த மாநிலங்களுக்கு நிதி உதவி அளித்தல்) அமைப்பின் பரிசீலனையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் முட்டத்தில் 'நிர்மாணித்தல், சொந்தமாக்குதல், இயக்குதல், உரிமை மாற்றுதல் எனப்படும் BOOT (Build, Own, Operate and Transfer) முறையில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 2.4.2 மீன் இறங்குதளங்கள் கட்டுதல்

தமிழ்நாட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 10 மீன் இறங்குதளங்களை ரூ.13.23 கோடி மதிப்பீட்டில் கட்ட மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 10 இடங்களில் 5 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இதர இடங்களில் பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளன.

நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தில், போதுமான மீன் இறங்குதள வசதிகள் இல்லாததால், சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டபின், மேலும் 10 இடங்களில் மீன் இறங்குதளங்களை ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்காக, இதுவரை 16 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் பின்வரும் ஏழு இடங்களை புதியதாக மீன் இறங்குதளங்கள்/கரையோர வசதிகள் கட்டுவதற்கு பெங்களூரிலுள்ள மத்திய மீன்வள தொழில்நுட்ப நிலையம் தேர்வு செய்துள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 1. | தருவைக்குளம் | மீன் இறங்குதளம் | தூத்துக்குடி மாவட்டம் |
| 2. | கீழவைப்பார் | | |
| 3. | சின்ன ஏர்வாடி | கரையோர வசதிகள் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 4. | கீழக்கரை | மீன் இறங்குதளம் | |
| 5. | நாகூர் | மீன் இறங்குதளம் | நாகப்பட்டினம் மாவட்டம் |
| 6. | ஆர். புதுப் பட்டினம் | கரையோர வசதிகள் | புதுக்கோட்டை மாவட்டம் |
| 7. | பொன்னகரம் | | |

மேற்கூறிய 7 மீன்பிடி இறங்குதளங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 3 மீன்பிடி இறங்குதளங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. பத்து இடங்களில் மீன் இறங்குதளங்கள் கட்டுவதற்கான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காகவும் நிதியுதவிக்காகவும் அனுப்பப்படவுள்ளது.

**2.4.3. பயன்பாட்டிலுள்ள மீன்பிடி துறைமுகம் மற்றும் இறங்கு தளங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்**

கீழ்க்கண்ட இடங்களில் பயன்பாட்டிலுள்ள மீன்பிடி துறைமுகம் மற்றும் இறங்குதளங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் மொத்தத் தொகையான ரூ. 99.30 இலட்சத்தை 50:50 விகிதத்தில் மேற்கொள்ள மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது:—

| வ. எண் | இடம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி (மீன்பிடி துறைமுகம்) | 40.00 |
| 2. | இராமேஸ்வரம் (மீன் இறங்குதளம்) | 20.00 |
| 3. | சின்ன ஏர்வாடி (மீன் இறங்குதளம்) | 19.90 |
| 4. | கோட்டைப்பட்டினம் (மீன் இறங்குதளம்) | 19.40 |
| | மொத்தம் | 99.30 |

மத்திய அரசு தனது 50 விழுக்காடு பங்குத் தொகையான ரூ.49.65 இலட்சத்தில் முதல் தவணையாக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சத்தை வழங்கியுள்ளது.

**2.5. மீனவர்கள் கடல் பாதுகாப்புத் திட்டங்கள்**

**2.5.1 கடல் மீனவர்களுக்கு நிவாரணம்**

புயல், வெள்ளம், கடலின் நீரோட்டம் மற்றும் படகின் இயந்திரக் கோளாறுகள் போன்ற காரணங்களினால், மீன்பிடி விசைப்படகுகள், கடலில் திசைமாறி, சர்வதேச கடல் எல்லைக்கோட்டைக் கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குச் சென்றுவிட நேரிடுகின்றன. இவ்வாறு சர்வதேச கடல் எல்லையைக் கடந்து செல்லும்போது மீனவர்கள் இலங்கை அரசாங்க அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். பொருள் ஈட்டும் நபர் இல்லாத நிலையில்



மீனவர் குடும்பங்கள் வாழ்க்கை நடத்த இன்னலுறுகின்றன. அத்தகைய குடும்பங்களின் துயர் களைவதற்காக, அம்மீனவர் வீடு திரும்பும்வரை அக்குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ரூ.50/- வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. இவ்வாறு அயல்நாட்டினரால் பிடித்துச் செல்லப்படும் மீனவர்களின் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்கிட ஏதுவாக நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. தமிழக மீனவர்களுக்கான இத்திட்டம் நடப்பு நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.5.2. இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு இறக்கும் மீனவர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி அளித்தல்**

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் மீன்பிடித்து வருகின்றனர். விசைப்படகின் இயந்திரக் கோளாறு மற்றும் மோசமான வானிலை போன்ற சில காரணங்களினால், தவறுதலாக மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பகுதிக்குள் சென்று விடுகின்றனர். இவ்வாறு சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இம்மீனவர்களின் உடனடி விடுதலைக்காக இத்தகைய நிகழ்வுகள் அனைத்தையும் இலங்கை அரசிடம் எடுத்துரைப்பதற்காக மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இலங்கை கடற்படையால் சுடப்பட்டு, இறக்க நேரிடும் தமிழக மீனவர்களின் குடும்பங்கட்கு ரூ.1.00 இலட்சம் நிதியுதவியினை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள ரூ.5.00 இலட்சம் தொகையிலிருந்து உடனடியாக வழங்க வேண்டுமென நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**2.5.3. உயிர்காப்பு கவச உடைகள் வழங்குதல்**

கடல் மீன்பிடிப்பின்போது நிகழும் விபத்துக்களினால் மீனவர்களின் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, கடல்

மீனவர்களைப் பாதுகாக்க, உயிர்காப்பு கவச உடைகள்/உயிர்காப்பு மிதவைகள் வழங்குவது அத்தியாவசியமாகிறது. பாரம்பரிய மீனவர்கட்கு 2003-04 ஆம் ஆண்டில் ரூ.90.00 இலட்சம் செலவில் 10,000 உயிர்காப்பு கவச உடைகள் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த உயிர்காப்பு கவச உடைகள் பாரம்பரிய மீனவர்கட்கு கொள்முதல் செய்யப்பட்டவுடன் வழங்கப்படும்.

### 3. உள்நாட்டு மீன் வளம்

தமிழகத்தில் அமைந்துள்ள பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்கள், கிராமிய குளங்கள் மற்றும் குட்டைகள் ஆகியவற்றில், அறிவியல் முறையில் தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து, சீரிய மேலாண்மை மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் உள்நாட்டு மீன் வள கொள்கையின் முக்கிய நோக்கமாகும். மீன் வளத் துறை மூலம் 44 நீர்த்தேக்கங்களிலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் 8 நீர்த்தேக்கங்களிலும் நீர்த்தேக்க மீன் வள மேலாண்மை நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், 32,000 ஹெக்டேர் நீர்ப் பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசன குளங்களில் மீன் துறை மூலம் பெருரக கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் சுமார் 5000 ஹெக்டேர் பரப்பில் ஊரக குளங்கள், குட்டைகளில் கூட்டு இன மீன் வளர்ப்பு தொழில்நுட்ப முறை மூலம் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்சமயம் மத்திய அரசு உதவியுடன் 12 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இம்முகமைகள் மூலம் 6000 மீன் வளர்ப்போர் பயனடைந்துள்ளனர். 2003-2004 ஆம் ஆண்டில் சென்னை சேத்துப்பட்டில் மாநில அளவிலான ஓர் ஆய்வுக்கூடம் நிறுவிடவும், ஆய்வுக்கூடத்திற்கான உபகரணங்கள் வாங்கிடவும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளில் மீன் வளர்ப்போர் அறிவியல் முறையில் மீன் வளர்ப்பை மேற்கொள்ள மண் மற்றும் நீர் பரிசோதனை உபகரணங்கள் வாங்கிடவும் மத்திய அரசின் உதவியோடு ரூ.33.90 இலட்சத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

### 3.1. மீன் குஞ்சுகள் உற்பத்தி

உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கான தரமான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை மீன் குஞ்சுகளை துறையின்





கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சு உற்பத்தி மையங்கள் உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தங்களுடைய தேவைகளுக்கான மீன் குஞ்சுகளை மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்கின்றது. துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மூலம் மீன் குஞ்சுகள் நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கு தேவையான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வளர்த்தெடுக்கப் படுகின்றன. மேலும், தனியார் மீன் பண்ணைகளுக்குத் தேவைப்படும் விரலிகள் இம்மாநிலத்திலுள்ள 84 தனியார் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தென்மேற்கு பருவமழை காலங்களில் மீன் குஞ்சு உற்பத்தி துவக்கப்படுகிறது. ஆனால் நீர்நிலைகளில் வடகிழக்கு பருவமழை காலங்களில் நீர்வரத்து பெறப்படுகின்றது. எனவே, இப்பிரச்சினையை சரி செய்திடவும் மீன் குஞ்சுகளை வடகிழக்கு பருவ காலம் வரை வளர்த்திட துறைக்கு கூண்டுகள் (cages) வழங்கப்படும். இத்திட்டம் தனியார் மீன் குஞ்சு உற்பத்தி செய்வோர் வருவாய் ஈட்டும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

### 3.2. மீனள மேம்பாட்டு இயக்கத்தில் உள்நாட்டு மீனள அபிவிருத்தி

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஆண்டொன்றுக்கு 10 விழுக்காடு அளவுக்கு உள்நாட்டு மீன் உற்பத்தி கூடுதலாக்கப்பட வேண்டும். இந்த இலக்கினை எய்திட, அரசு, மீனள மேம்பாட்டு இயக்கத்தை துவக்கியுள்ளது. இவ்வியக்கம் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன் வளர்ச்சி அணுகுமுறை, குளங்கள், குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பை பிரபலமாக்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த உத்திகளை வகுத்துள்ளது.

ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கிட, ஆண்டொன்றுக்கு ரூ.1.29 கோடி கடனுதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தில், தரமான மீன் குஞ்சுகளை விநியோகித்தல், மீன் குஞ்சுகளை வளர்த்திட கூண்டுகள் வழங்குதல், மீன்பிடிப்பிற்குத் தேவையான உபகரணங்கள் விநியோகித்தல், மீன் விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை முக்கிய அம்சங்களாகும். இத்திட்டம் ஆரம்ப உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களால் தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

### 3.3. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில், 56,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளில் இறால் பண்ணைகளை அமைக்க வாய்ப்பு உள்ளது. இம்மாநிலத்தில் இறால் வளர்ப்பிற்காக மாண்புமிகு உச்ச நீதிமன்ற ஆணையின்படி, இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்த நீர்வாழ் உயிரின ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்திற்கு உதவிட மாநில அளவிலான குழுவும், மாவட்ட அளவிலான குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இறால் பண்ணைகளுக்கு உரிமம் வழங்க, மாநில அளவிலான குழு, மாவட்ட அளவிலான குழுக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலித்து, நீர்வாழ் உயிரின ஆணையத்திற்கு அனுப்பும். சென்னை தவிர, தமிழ்நாட்டின் 12 கடலோர மாவட்டங்களில் 1,935 இறால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 778 இறால் பண்ணைகள் நீர்வாழ் உயிரின ஆணையத்தின் அனுமதி பெற்றுள்ளன. மேலும், 721 பண்ணைகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. மீன் வள மேம்பாட்டு இயக்கத்தில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய கடல் பொருள் ஏற்றுமதிக் கழகம் போன்ற நிறுவனங்களின் உதவி கொண்டு ஒவ்வொரு ஆண்டும் குறைந்த அளவில் இருப்பு செய்து பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய இறால் வளர்ப்பு முறைகளைக் கையாண்டு ஆயிரம் ஹெக்டேர் கடலோர உவர்நிலங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (ஜூலை 2002 முதல்) சுமார் 2067 ஹெக்டேர் நிலப்பரப்பில் சென்னையில் உள்ள நீர்வாழ் உயிரின ஆணைய அனுமதியுடன் இறால் வளர்ப்பு தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4. ஆராய்ச்சி

### 4.1. துறையின் நடவடிக்கைகள்

மீன் வளத்தினை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, இத்துறை, சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு இடங்களில் ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துள்ளது. மாநில மீனள ஆராய்ச்சிக் குழு, ஜூன் 1998-ல், இறுதி செய்த 15 திட்டங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின்



ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் மீன் துறை ஒருங்கிணைந்து செயல்படும். மீன் துறையில் மேற்கொள்ளப்படும் சில முக்கிய ஆராய்ச்சிப் பணிகள் வருமாறு:—

(1) பெருரக கெண்டை மீன்களின் இனப்பெருக்கத்தை நீட்டித்தல்/பன்முறைப்படுத்துதல்.

(2) தனி வளர்ப்பு மற்றும் பல்வகை வளர்ப்பு மூலம் நன்னீர் இறால் வளர்ப்பு.

(3) சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீடு.

(4) கடல் மீன் வளர்ப்பு செயல்முறை விளக்கப் பண்ணை.

(5) நன்னீர் மீன்/அலங்கார மீன் மற்றும் நன்னீர் இறால் ஆகிய வர்த்தக ரீதியில் முக்கியத்துவமான மீன்களுக்கு உரிய உணவு அளவை மதிப்பீடு செய்தல்.

அரசு, மாநில மீனள ஆராய்ச்சிக் குழுமத்தை, மூன்றாண்டு காலத்திற்கு நவம்பர் 2001-ல் திருத்தி அமைத்துள்ளது. 27-வது ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆராய்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அடுத்த 2 ஆண்டுகளுக்கான புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

### 4.2. இதர ஆராய்ச்சித் திட்டங்கள்

சுயஉதவிக் குழுக்களின் கோட்பாடு, மீன் வளம் உள்ளிட்ட அனைத்து வகையான தொழில்களிலும் புதிய உத்வேகம் பெற்று வருகிறது. மீன் வளம் சார்ந்த தொழில்களைப் பிரபலப்படுத்த தேவையான பயிற்சிகளை இத்துறை சுயஉதவிக் குழுக்களுக்கு அளித்து வருகின்றன.

(1) தற்போது இம்மாநிலத்திலுள்ள ஏழு மாவட்டங்களில் 6,000 உறுப்பினர்களை உள்ளடக்கிய 314 மீனவ மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களுள் 864 மீனவ மகளிருக்கு பல்வேறு தொழில்களில் இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(2) தூத்துக்குடி மாவட்டம் கருங்குளத்தில் 0.25 ஹெக்டேர் பரப்பில் சுயஉதவிக் குழு மூலம் நன்னீர் இறால் வளர்ப்பு மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 50 விழுக்காடு மானியமாகப் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென மொத்தச் செலவினம் ரூ.1.35 இலட்சமாகும். மீன் வளர்ப்பிற்குத் தேவையான

பயிற்சிகள் அளிக்கப்பட்டபின் இந்த சுயஉதவிக் குழுவால் 11-2-2004 அன்று 7,500 குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

(3) தூத்துக்குடி மாவட்டத்தில் குறுங்காட்டூரில் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து 50 விழுக்காடு மானியமாகப் பெற்று, 0.25 ஹெக்டேர் பரப்பில், ரூ.1.67 இலட்சம் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, சுயஉதவிக் குழு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 27-2-2004 அன்று 4,000 மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, உயர்ரக கலப்பின கால்நடைகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(4) தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழையில் சுயஉதவிக் குழுக்கள் மூலம் நண்டுகளைக் கொழுக்க வைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நண்டுகளைக் கொழுக்க வைப்பதற்கான 10 குளங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.3.35 இலட்சம் செலவிலான பணி நடைபெற்று வருகிறது. நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2-3-2004 அன்று நண்டுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

## 5. விரிவாக்கம் மற்றும் பயிற்சி

**5.1** மத்திய அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ், (80:20) 2001-2002 ஆம் ஆண்டில், ரூ. 70.55 இலட்சம் மதிப்பீட்டில், விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டத்திற்கு, மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்படி, காஞ்சிபுரம் மாவட்டம், நீலாங்கரையில், ஒரு விழிப்புணர்வு மையமும், காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடி, கடலூர் மாவட்டம் (கிள்ளை) சிதம்பரம், திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு ஆகிய 3 இடங்களில் பயிற்சி நிலையங்களும் நிறுவப்படும். இந்நிலையங்களில் மீன் வளர்ப்போருக்கு உவர் நீர் மற்றும் நன்னீரில் மீன் வளர்க்கப் பயிற்சி அளிக்கப்படும். கட்டுமானப் பணிகள் மேற்கண்ட இடங்களில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 880 மீன் வளர்ப்போருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**5.2.** நவீன மீன்பிடிக் கலன்களை இயக்குவதற்கும், மீன்பிடி விசைப்படகுகளைப் பராமரிப்பதற்கும், போதிய பயிற்சி அளிக்கப்பட்ட மீனவ இளைஞர்களை உருவாக்குவதற்கும், தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் மீனவ இளைஞர்களுக்கு 10 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி





நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 50 முதல் 60 மீனவ இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர, இப்பயிற்சி நிலையங்களில், இளநிலை கம்மியர் சான்றிதழ் படிப்பும் நடத்தப்படுகிறது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.200/- மாதாந்திர உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

**5.3.** மீன் வளத் துறையில் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்காக, ரூ.68.19 இலட்சம் செலவில், நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தும் திட்ட கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, மத்திய அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.5.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 6. மீன் வளத்தில் கூட்டுறவு

31-3-2003 நிலவரப்படி, 3,78,157 உறுப்பினர்கள் கொண்ட 758 கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 66,409 உறுப்பினர்களைக் கொண்ட 313 உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 3,559 உறுப்பினர்கள் கொண்ட 19 இதர வகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 11 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும், ஒரு மாநில மீனவ கூட்டுறவு இணையமும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இம்மாநிலத்தில் வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிரின் முன்னேற்றத்திற்கான முகமைகளாகச் செயல்படுகின்றன.

## 7. மீனவர் நலன்

இம்மாநிலத்தில் உள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திட, அரசு, கீழ்க்காணும் நலத் திட்டங்களை முக்கியமானதாகக் கருதுகிறது:—

1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்
2. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்
4. சமைச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி

### 7.1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

இம்மாநிலத்தில் உள்ள மீனவர்களின் துயர் துடைப்பதற்கு அரசு, மீனவர்களுக்கு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருகிறது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1975-76 ஆம் ஆண்டு முதல் 2000-2001 ஆம் ஆண்டு வரை, 45,558 வீடுகள் கட்டி வழங்கியுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ், 2,000 வீடுகள், 90 ஆழ்குழாய்க கிணறுகள், 5 சமுதாய நலக் கூடங்கள் கட்டிட மொத்தம் ரூ.834.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்தது. ஒப்பளிக்கப்பட்ட 2,000 வீடுகளில் 1,589 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 411 வீடுகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மாநில அரசுத் திட்டத்தின்கீழ் 2001-02 ஆம் ஆண்டில் 2000 வீடுகள் கட்டிட அரசு ரூ.740.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட வீடுகளில் 829 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1,171 வீடுகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

2003-2004 ஆம் ஆண்டில் 2,000 வீடுகள் கட்டிட அரசு ரூ.740.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வீடுகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்படும்.

மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள் கட்டுவதற்கு உரிய கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்கும் நிதியுதவிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், அரசு நடப்பு நிதியாண்டில், 2,000 வீடுகள் மாநில அரசின் திட்டத்தின்கீழ் கட்டவும், மத்திய அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள் கட்டவும் முடிவு செய்யப்பட்டு கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

### 7.2 தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்ல இயலாத காலங்களில் அவர்களின் துயர் துடைப்பதற்கு தமிழக அரசு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி, ஒவ்வொரு பயனாளி மீனவரிடமிருந்தும் மாதத்திற்கு ரூ.75/- வீதம்





ஆண்டிற்கு 8 மாதங்களுக்கு வசூலிக்கப்படும். இவ்வாறு வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.600/-க்கு இணையாக மத்திய, மாநில அரசுகள் 50 விழுக்காடு பங்களிப்பாக தலா ரூ.300/- வீதம் மானியமாக வழங்குகிறது. இந்தக் கூட்டுத் தொகையான ரூ.1200/- கடலில் மீன்பிடிக்கச் செல்ல இயலாத காலங்களில், மீனவ பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2003-04 ஆம் ஆண்டில் 2,24,220 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ மகளிரின் துயரங்களைக் களைந்திட இத்திட்டத்தினை மீனவ மகளிருக்கும் விரிவுபடுத்திட தமிழக அரசு தீர்மானித்து தமிழகத்திலேயே முதன்முறையாக 2003-04 ஆம் ஆண்டு இத்திட்டத்தை நிறைவேற்றிட ஆணை பிறப்பித்துள்ளது.

2003-2004 ஆம் ஆண்டு 42,992 மீனவ மகளிருக்கு நிவாரணம் வழங்கிட அரசு ரூ.3.10 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

### 7.3. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுச் சந்தாத் தொகையான ரூ.14/-ஐ மாநில மற்றும் மத்திய அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. எவ்வித சந்தாத் தொகையும் மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின்கீழ் விபத்தினால் இறக்க நேரிடும்/ நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 50,000/-மும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ. 25,000/-மும் வழங்கப்படுகிறது. 2003-04 ஆம் ஆண்டில் 3,01,773 கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் இத்திட்டத்தின்கீழ் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர்.

### 7.4. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதியுதவி

மீனவர் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு காரியத்திற்காக அரசு ரூ.5.00 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இறந்த மீனவரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்குகளை மேற்கொள்ள தலா ரூ.500/- வழங்கப்படும்.

### 8. புதிய திட்டங்கள்

ரூ.126.73 இலட்சம் மதிப்பீட்டில், 2004-05 பகுதி 2 திட்டத்தின்கீழ் அரசு அனுமதி வழங்கியுள்ள கீழ்க்கண்ட 10 திட்டங்களின் விவரங்கள் மற்றும் நிதிச்செலவினம் வருமாறு:—

[2004 ஜூலை 31

(i) உள்நாட்டு மீனளப் பகுதியில் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் சமீபத்திய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் போன்ற தற்போதைய நிலைமைகளினால் உள்நாட்டு மீனவர்களின் மக்கள் தொகை, அவர்கள் பயன்படுத்தும் கலன்கள் மற்றும் அவர்களின் கல்வி, வருமானம், குடும்பங்களின் வேலைவாய்ப்பு போன்ற சரியான புள்ளி விவரம் நமக்குத் தேவைப்படுகிறது. எனவே உள்நாட்டு மீனவர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) மீன் காட்சியகங்களில் நன்னீர்வாழ் மீன்கள் மட்டுமே முக்கியத்துவம் பெற்றுள்ளன. போதிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும் கடல்வண்ண மீன்கள் உற்பத்தி பற்றிய தொழில்நுட்பக் குறைபாடு காரணமாக கடல் மீன் காட்சியகம் அமைத்தல் இன்னும் துவக்க நிலையிலும், பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்த இயலாத நிலையிலும் உள்ளது. தமிழகத்தில் உள்ள மன்னார் வளைகுடா பகுதி தேசிய கடல் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள மீனவர்கள் தங்களின் தொழிலுக்கு மாற்று வழி காண வேண்டியது அவசியமாகிறது. கடல் வண்ண மீன்கள் இனவிருத்தி மற்றும் வளர்ப்பினை ஆராய்ச்சி மூலமாக செம்மைப்படுத்துதல் அவசியமாகிறது. இத்திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, மன்னார் வளைகுடா பகுதியில், கடல் வண்ண மீன் காட்சியகம் ஒன்று ரூ.10.00 இலட்சம் செலவில் மண்டபத்தில் அமைக்கப்பட உள்ளது.

(iii) சுகாதாரமான முறையில் மீன் விற்பனை செய்வதற்கு 200 குளிர்காப்புப் பெட்டிகள் மற்றும் 200 மிதிவண்டிகள் 50 விழுக்காடு மானிய அடிப்படையில் வழங்கிட ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iv) திருச்சி மாவட்டத்தில் உள்ள திருகாம்புலியூர் மீன் பண்ணையில் கூடுதல் மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள் மற்றும் தேவையான நீர்வசதி ஏற்படுத்திட ரூ.22.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(v) திருச்சி மாவட்டத்தில் அரூர் மீன் பண்ணையில் கூடுதல் மீன் குஞ்சு தொட்டிகளும், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும் மற்றும் குளித்தலை மீன் பண்ணையில் கூடுதலாக மீன் குஞ்சு



2004 ஜூலை 31]

தொட்டிகளைக் கட்டிடவும் ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(vi) ஆந்திரப் பிரதேசம் - தமிழ்நாடு எல்லைப் பகுதியில், கிழக்கு கடற்கரையோரத்தில் உள்ள கழிமுகத்தில், இரண்டாவது பெரிய உவர் நீர் ஏரியாக பழவேற்காடு ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியில் ஆண்டிற்கு 500 மெட்ரிக் டன் வெள்ளை இறால் மற்றும் 200 மெட்ரிக் டன் தரமான மீன்கள் கிடைக்கிறது. இந்த ஏரியில் உள்ள மீன் வளத்தைச் சார்ந்து, சுமார் 24,000 மீனவர்கள் மீன்பிடி தொழில் நடத்தி வருகிறார்கள். இப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் மூலம் 5 அலகு சிவப்பு கடல்பாசி வளர்ப்பு 5 ஹெக்டேர் பரப்பளவில் பழவேற்காடு ஏரியில் மேற்கொள்ள ரூ.5.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பழவேற்காடு பகுதியில் பிடிக்கப்படும் இறால்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு அனுப்புமுன், இறால் தலைகள் நீக்கப்பட்டு கரைப் பகுதியில் உபயோகமின்றி கழித்தொதுக்கப்படுகிறது. இறால் தலையில் சைடின், கைட்டோசான் எனப்படும் உபயோகம் உள்ள பொருட்கள் அதிக அளவில் உள்ளதால் இறால் தலைகளைத் தூளாக்கி கோழிகளுக்கு உணவாகவும், தோட்டப் பயிர்களுக்கு உரமாகவும் அளிக்கலாம். இத்திட்டம் இரண்டு இடங்களில் ரூ.8.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

(vii) உள்நாட்டு மீன் வளர்ச்சி தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வளர்த்தெடுத்து, பின்னர் உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்தலாகும். மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் தேவை ஒருங்கே அமைவதில்லை. ஏனெனில் மீன் குஞ்சு உற்பத்தி செய்யப்படும் காலங்களில் நீர்நிலைகளில் தேவையான தண்ணீர் இருப்பதில்லை. இதனால் உள்நாட்டு மீன் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. லால்பேட்டை மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் இந்நிலையைச் சீர்செய்திட இந்தியப் பெருங்கெண்டை மீன் குஞ்சுகளை நர்சரி தொட்டிகளில் வளர்ச்சி குன்றச் செய்து வளர்த்தெடுத்தல் எனும் புதிய முறை மூலம் சரி செய்திடலாம். இத்திட்டத்தினை லால்பேட்டை மீன் பண்ணையில் இந்திய பெருரக கெண்டை விரலளவு மீன் குஞ்சுகள் வளர்த்தெடுக்க ரூ.2.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(viii) இத்துறையில் உள்ள 13 ஹெக்டேர் மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் பண்ணைகளில், பழுதடைந்துள்ள 2000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நாற்றங்கால்களை (நர்சரி) பழுது பார்க்கும் பணி ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ix) ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கடலோரப் பகுதி முகத்துவார தூர் வாருதல் /முகத்துவார அடைப்பை நீக்கும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(x) 10 இடங்களில் மீன் இறங்குதளங்கள்/தூண்டில் வளைவு (Groyne) அமைத்திட, மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள, ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமாகும். இன்றுவரை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

(i) தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து வர்த்தக அடிப்படையில் மீன்பிடித்து நீர்த்தேக்கங்களை நிர்வகித்தல்

(ii) நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யவும், மீன் வளர்ப்போருக்கு விற்பனை செய்யவும் தரமான மீன் குஞ்சுகளைத் தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் உற்பத்தி செய்தல்

(iii) மண்டபம், தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களை நிர்வகித்தல்

(iv) மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் துறைமுக அணைக்கரைகளில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கு நிலையங்கள் மூலம் மீனவர்களுக்கு டீசல் வழங்குதல்





(v) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொதுமக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்தல்

(vi) மீனவர்களுக்கு தரமான மீன் வலைகளைத் தயாரித்து விற்பனை செய்யும்பொருட்டு இராயபுரத்தில் மீன் வலை தயாரிப்பு நிலையம் நிர்வகித்தல்

(vii) சென்னை அருகே நீலாங்கரையில் உள்ள இறால் குஞ்சு பொரிப்பகத்தின் கட்டமைப்பு வசதிகளை நிர்வகித்தல் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துக்கு 'கடல் வாழ் உயிரின ஆதார மேம்பாட்டுத் திட்டத்தினை' நிறைவேற்றிட வசதி அளித்தல்

(viii) முத்து வளர்ப்புத் திட்டம் மற்றும் முத்துச்சிப்பி பொரிப்பகத்தினை நிர்வகித்தல்

(ix) காரங்காடு மாதிரி இறால் பண்ணை நிர்வகித்தல்

(x) வண்ண மீன் உற்பத்தி, விற்பனை செய்தல் மற்றும் வண்ண மீன் காட்சியகம் நிர்வகித்தல்

(xi) மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் விற்பனை செய்தல்

(xii) பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு மீனவர்களுக்கு உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்குதல்

**9.1. உள்நாட்டு மீன் வளம்**

**நீர்த்தேக்கங்கள்**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில், முறையாக, மீன் குஞ்சு இருப்பு செய்யப்பட்டு, மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களை பணியமர்த்தி, மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது:–

1. சாத்தனூர் அணை
2. பவானிசாகர்

[2004 ஜூலை 31

3. ஆழியார்
4. அமராவதி
5. திருமூர்த்தி
6. உப்பாறு
7. பாலாறு-பொறந்தலாறு
8. பெரும்பள்ளம்

கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து 2003-2004 ஆம் ஆண்டு 427.15 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ.130.42 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. (குத்தகை வருவாய் உள்பட)

**9.2 மீன் குஞ்சு உற்பத்தி**

இக்கழகம் சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் அணையிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு மையங்களையும், அமராவதி, திருமூர்த்தி, உப்பாறு, பாலாறு-பொறந்தலாறு ஆகிய இடங்களில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பு மையங்களையும் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் மீன் துறை, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும் தனிநபர்களுக்கும் விற்பனை செய்யப்படுவதோடு, கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டு 100.60 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**9.3. மீன் பதனீட்டு நிலையங்கள்**

தமிழ்நாட்டில் இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி/மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபத்தில் உள்ள பனிக்கட்டி/மீன் பதப்படுத்தும் நிலையம் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**9.4. டீசல் வழங்கும் நிலையங்கள்**

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் பழையாறு போன்ற மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் துறைமுக அணைக்கரைகளில் 23 டீசல் வழங்கு நிலையங்களை மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி இயக்கி வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டு மொத்தம் 20,695.21 கிலோ லிட்டர்



2004 ஜூலை 31]

டீசல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூ.81.81 இலட்சம் தரகுத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

**9.5. மீன் விற்பனை**

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் திருவண்ணாமலை போன்ற நகரங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன்களையும், பொறித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டு 620.17 டன் மீன்கள் ரூ.281.50 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**9.6. மீன் வலை பின்னும் நிலையம்**

இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2003-2004 ஆம் ஆண்டு 55.50 டன் நைலான் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.125.46 இலட்சத்திற்கு மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**9.7. நீலாங்கரை இறால் குஞ்சு பொறிப்பகம்**

நீலாங்கரை இறால் குஞ்சு பொறிப்பகம் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பொறிப்பகத்தின் ஒரு பகுதி கட்டமைப்பு வசதிகள், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துக்கு 'கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டத்திற்காக' வழங்கப்பட்டுள்ளது. இப்பொறிப்பகம் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்துக்கு 21-1-2004 முதல் குத்தகைக்கு விடப்பட்டு உள்ளது.

**9.8. முத்துச்சிப்பி மற்றும் வளர்ப்பு முத்து உற்பத்தி செய்தல்**

மண்டபத்தில் உள்ள முத்து வளர்ப்புத் திட்டம் மற்றும் முத்துச்சிப்பி பொறிப்பகம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

**9.9 இராமநாதபுரம் மாவட்டம், காரங்காடு மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை**

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணை 13-8-2003 முதல் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

### 9.10 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. ஆழியார் நகரில் அலங்கார மீன் விற்பனையுடன்கூடிய மீன் காட்சியகம் செயல்பட்டு வருகிறது. சென்னையில், 2 வண்ண மீன் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்த வகையில், ரூ. 10.93 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு திருமூர்த்தி நகரில் மேலும் ஒரு வண்ண மீன் பூங்கா துவக்கப்பட்டுள்ளது.

### 9.11. மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் விற்பனை

மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் குறைந்த மதிப்புள்ள மீன்களை மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் ஆக மாற்றி விற்பனை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 9.12 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு உள்/வெளிப்பொருத்தும் இயந்திரம் மானிய விலையில் வழங்குதல்

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்களுக்கு மானிய விலையில், வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2003-2004 ஆம் ஆண்டு 297 உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டன.

### 10. தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்)

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ் 6-11-1991-ல் பதிவு செய்யப்பட்டு, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்விணையத்தில், தற்பொழுது, 580 தொடக்க மீனவ கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட கூட்டுறவு இணையங்களும் உறுப்பினராகி, ரூ.89.095 இலட்சம் பங்குத் தொகை செலுத்தி உள்ளன. பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்குடன் ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டுத் திட்டத்தை, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் செயல்படுத்தி வருகிறது.



### 10.1. ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டுத் திட்டம்: பகுதி–1

முதல்கட்டமாக பகுதி ஒன்று திட்டம் ரூ.1699.047 இலட்சத்தில் காஞ்சிபுரம்/திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து கடலோர மாவட்டங்களில் 78 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1361.35 இலட்சம் மதிப்புள்ள 2108 மீன்பிடி இடுபொருட்கள் 4234 மீனவர்களுக்கு 25% மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனைக்காக இத்திட்டத்தின் மூலம் 19 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் 118 உறுப்பினர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் 25% மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட 5 மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு கூட்டுறவு மேலாண்மை மற்றும் உள்/வெளி பொருத்தும் இயந்திரங்கள் பராமரிப்பு ஆகியவற்றில் பயிற்சி இணையத்தால் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் மீனவர்களுக்கு இணையத்தின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இத்திட்டத்தில் வழங்கப்படும் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் மீனவ கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

மேலும் மீன், இயந்திர உதிரி பாகங்கள் மற்றும் டீசல் விற்பனைக்காக பகுதி-1 திட்டத்தின்கீழ் 24 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இணையம் ரூ.19.50 இலட்சம் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக வழங்கியுள்ளது.

### 10.2. பகுதி இரண்டு திட்டம்

பகுதி-2 திட்டத்தின் செயல்பாடு 1-4-1998 முதல் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 100 மீனவர் கிராமங்களில் ரூ.1506.250 இலட்சம் மதிப்பில் 3565 மீன்பிடி அலகுகள் வழங்கிட திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டிற்காக ரூ.800.620 இலட்சம் அரசு அனுமதித்ததின் பேரில் 57 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த மீனவர்களுக்கு ரூ.571.90 இலட்சம் மதிப்பில் 512 மீன்பிடி இடு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது ஆண்டில் 4 தொடக்க மீனவர் கூட்டுறவுச சங்கங்களைச் சார்ந்த 81 மீனவர்களுக்கு ரூ.41.24 இலட்சம் மதிப்பில் 16 மீன்பிடி இடுபொருட்கள் 25% மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தற்போது

வட்டி விகிதத்தினை 10 விழுக்காடாகக் குறைத்துள்ளதால், நடப்பு ஆண்டில் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10% வட்டி விகிதத்தில் ரூ. 431.48 இலட்சத்தில் மீன்பிடி சாதனங்கள் 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**10.3. பணிமனை**

இவ்விணையத்தின் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தருவைக்குளம் மற்றும் கொம்புத்துறையிலும் இயந்திர உதிரிபாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான மசகு எண்ணெய் விற்பனைக்காக, ரூ.3.20 இலட்சம் முதலீட்டில் தொழிற்பட்டறைகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**10.4. டீசல் விற்பனை மையம்**

மீனவர்கள் இணையத்தின் சேவை மூலம் 'தரம் மற்றும் விலையில்' பயனடைவதை உறுதி செய்யும்பொருட்டும், இணையத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடவும் கடலோர மாவட்டங்களில் டீசல் விற்பனை நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டது. இணையத்தின் முதல் டீசல் விற்பனை நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரத்தில் 19-03-2004-ல் தொடங்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு, தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் ஆகிய இரண்டு இடங்களில் டீசல் விற்பனை நிலையம் விரைவில் துவக்கப்படவுள்ளது. கடலோர மாவட்டங்களில் மேலும் சில இடங்களில் டீசல் விற்பனை நிலையத்தினை துவக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**10.5. உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை**

தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையத்தின் மூலம் தகுதிவாய்ந்த மீனவர்களுக்கு உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் அரசு மானிய திட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில், 1,487 உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



**10.6. மீன்பிடி வலைகள் விற்பனை**

இணையத்தின் மூலம் தகுதிவாய்ந்த மீனவர்களுக்கு அரசு மானிய திட்டத்தில் 7,374 கிலோ மீன்பிடி வலைகள் 2003-2004 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**10.7. குளிர்காப்புப் பெட்டிகள் வழங்குதல்**

ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ், 2003-2004 ஆம் ஆண்டில், 297 நூறு லிட்டர் கொள்ளளவுள்ள குளிர்காப்புப் பெட்டிகள் 75% மானியத்தில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

# இணைப்பு XV

*(132 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை 21 – உள் துறை – காவல்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004 – 2005

### முன்னுரை

நேர்மையும், மக்கள் நேயமும் கொண்ட, முற்றிலும் நவீனமான, திறமை மிகுந்த படையாக மாநிலக் காவல் துறை செயல்படுவதை உறுதிப்படுத்துவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். இத்தகைய காவல் துறை மட்டுமே குற்ற நிகழ்வுகளே இல்லாத, அமைதி தவழும் மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்குகின்ற அரசின் தலையாய நோக்கத்தினை அடைவதற்கு உறுதுணையாக அமையும்.

தமிழ்நாடு காவல் துறை, இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த மற்றும் மிகத் திறமை வாய்ந்த காவல் படைகளில் ஒன்று எனப் பாராட்டப்படும் பெருமை பெற்றுள்ளது. சட்டம் ஒழுங்கினைப் பராமரிப்பதில் மட்டுமல்லாமல், தேவை எழுகின்ற போதெல்லாம் சமுதாயத்திற்கு உதவுவதிலும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு காவல் துறை மக்கள் நண்பனாக விளங்குவதுடன், சமூக விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதிலும் திறம்படச் செயலாற்றி வருகிறது. சமுதாய நல்லிணக்கத்திற்குக் குந்தகம் விளைவிக்க அல்லது தீவிரவாத நடவடிக்கைகளைத் தூண்டிவிட, முற்படும் சக்திகளை எதிர்த்துப் போராடி அவற்றை அடக்கி ஒரு கட்டுக்குள் வைத்துள்ளது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், உடல் ஊனமுற்றோர், மகளிர் ஆகியோர் உள்ளிட்ட சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவிடும் வகையில் மாநிலக் காவல் துறைக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்து உணர்வூட்டப்பட்டுள்ளது. குற்றங்களை எதிர்த்துப் போராடுவதிலும், குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கையை பெருவாரியாகக் குறைப்பதிலும் காவல் துறை தொடர்ந்து பெற்றுள்ள வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். சமுதாயக் காவலில், தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகளின் சிறப்பு வாய்ந்த பங்களிப்பு, வளர்ந்து வரும் நாடுகளுக்கு முன் மாதிரியாகத் திகழ்வதுடன், உலக அளவிலான



அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்துள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் உறுதியான வழிகாட்டுதலும், ஆதரவுமே தமிழகக் காவல் படையின் இந்தப் பெருமைமிகு சாதனைக்கு முக்கிய காரணங்களாகும். காவல் துறையினர் என்றால் அவர்கள் குற்ற வழக்குகளில் நீதி வழங்கும் முறைக்கு உதவுபவர்கள், அவர்கள் காவல் காப்பதின் அடையாளம் என்று மட்டுமே கருதப்பட்ட கருத்துகள் மாறிவிட்டன. மக்களை முன்னிலைப்படுத்தும் முக்கிய சமுதாயப் பணியாக காவல் பணி தற்போது மாறியுள்ளது.

குற்றங்களைத் தடுத்தல் மற்றும் குறைத்தல், சட்டம்–ஒழுங்கைப் பராமரித்தல், பொது அமைதியைப் பேணிக் காத்தல் ஆகியவை, மாநிலக் காவல் துறையின் முக்கிய கடமைகளாகத் தொடர்கின்ற அதே நேரத்தில் பெருகி வரும் புதிய சவால்களை எதிர்நோக்கும் வகையிலும் தமிழ்நாடு காவல் துறை வளர்ந்து வருகிறது. தகவல் தொடர்புத் துறையில் கண்டுள்ள புரட்சி, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, சிக்கல் வாய்ந்த நகர்ப்புற காவல் பணிப் பிரச்சினைகள் ஆகியவற்றால், காவல் படை சந்திக்க வேண்டிய சவால்கள் கடுமையானதாக அமைந்துள்ளன. சர்வதேச அளவில் களங்கொண்டுள்ள தீவிரவாதத்தை ஒடுக்குதல், திட்டமிட்ட கடுங்குற்றங்களைக் கட்டுப்படுத்துதல், இணையதளக் குற்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து உரியவாறு தடுத்தல், காப்புரிமை திருட்டுக் குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவை காவல் துறையின் கவனத்தை ஈர்க்கின்ற புதிய பிரச்சினைகளாகும்.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், இணையதள குற்றங்கள், வீடியோ திருட்டுக் குற்றங்கள், திட்டமிட்ட கடும் குற்றங்கள் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றைத் தடுப்பதற்கான செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளித்து, கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து காவல் துறையைத் திட்டமிட்டு நவீனமயமாக்குகின்ற முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த நோக்கங்களை எய்துவதற்குத் தேவையான உயர் தொழில்நுட்பச் சாதனங்களை வாங்குவதுடன், காவல் துறையினருக்குப் பயிற்சி அளித்திடவும், இன்றைய தேவைக்கேற்ப மாறி வரும் காவல் பணியின் தன்மையை அவர்களுக்கு உணர்த்திட புத்தாக்கப் பயிற்சி வழங்கிடவும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

குற்றங்களைத் தடுப்பதிலும், அவற்றைக் குறைப்பதிலும், அந்தந்த பகுதிகளில் வாழுகின்ற மக்களின் செயல் ஆற்றலை வளர்த்து முனைப்புடன் அவர்களைப் பங்கேற்கச் செய்யும் வகையில் புதிய

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்தும் நோக்கோடு, காவலர்-மக்கள் இடையேயான தொடர்பு நடவடிக்கைகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. பெண்கள் எவ்விதத் தயக்கமுமின்றி காவல் நிலையத்தை அணுகிடவும், அவர்களது பிரச்சினைகளை பெண் காவலர்களே விசாரித்திடவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் இலவச கலந்தாலோசனை வசதியும் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல் துறையை, மக்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்றும் வகையில், நன்கு பயிற்சி பெற்ற, திறமையான, நவீனப்படுத்தப்பட்ட அமைப்பாக உருவாக்கிட அரசு உறுதி பூண்டுள்ளது.

மன ரீதியான, உடல் ரீதியான அச்சுறுத்தல்களோ, மற்றும் இணையதள வழியான அச்சுறுத்தல்களோ ஏதும் இன்றி பாதுகாப்பாக வாழ்கின்ற உரிமையினை குடிமக்கள் அனைவரும் பெற்றுள்ளனர். தண்ணீர், உணவு, உறைவிடம் போன்ற அடிப்படை மனித தேவைகளுக்கு இணையாக தனி மனிதப் பாதுகாப்பும் முக்கிய இடத்தினைப் பெறுகிறது. தமிழக மக்களுடைய பாதுகாப்பின் அதிமுக்கியத்துவத்தை உணர்ந்து, மக்கள் சேவைக்குரியதாகவும், மக்கள் நலனில் அக்கறையும் முன்னுரிமையும் கொண்டதாகவும், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் இயல்புடையதாகவும், மனித பண்புகளுக்கு மதிப்பளித்து முனைப்புடன் அவற்றைப் பேணி பாதுகாக்கும் திறனுள்ளதாகவும் தமிழகக் காவல் துறையை தமிழ்நாடு அரசு உருவாக்கி வருகிறது.





## அத்தியாயம் 1

### காவல் துறையின் நிர்வாக/ பணி அமைப்பு

தமிழகக் காவல் துறையின் தலைமையகத்தில், காவல் துறை தலைமை இயக்குநரும், அவருக்கு நிர்வாகப் பணிகளில் உதவிட, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (நிர்வாகம்), கூடுதல் தலைமை இயக்குநர் (தலைமையிடம்) ஆகிய இரண்டு முதன்மை அலுவலர்களும், பிற அலுவலர்களும் பணி புரிகின்றனர்.

தமிழகக் காவல் துறையின் நிர்வாகப் பணியமைப்பு (சென்னை காவல் துறை ஆணையரகம் நீங்கலாக) நான்கு காவல் துறை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களை தலைமை இடங்களாகக் கொண்டு, நான்கு மண்டலங்களும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் காவல் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் செயல்பட்டு வருகின்றது. சட்டம் ஒழுங்கு கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் இந்த நான்கு மண்டலங்களும் உள்ளன.

மாநிலக் காவல் துறை நிர்வாகத்தின் பணி அமைப்பு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மண்டலங்கள் | – | 4 |
| ஆணையரகங்கள் | – | 6 |
| சரகங்கள் | – | 12 (ஒரு ரயில்வே சரகம் உட்பட) |
| மாவட்டங்கள் | – | 32 (2 ரயில்வே மாவட்டங்கள் உட்பட) |
| உட்கோட்டங்கள் | – | 201 (5 ரயில்வே உட்கோட்டங்கள் உட்பட) |
| வட்டங்கள் | – | 287 |
| காவல் நிலையங்கள் | – | 1405 (188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், 31 ரயில்வே காவல் நிலையங்களும் உட்பட) |
| புறக் காவல் நிலையங்கள் | – | 117 (26 ரயில்வே புறக் காவல் நிலையங்கள் உட்பட) |

கீழ்க்கண்ட சிறப்பு/தனிப் பிரிவுகள் ஒவ்வொன்றும் காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்படுகின்றன:

1. நுண்ணறிவுப் பிரிவு
2. கடலோர பாதுகாப்புப் படை பிரிவு
3. குடிமைப் பொருள் வழங்கல், குற்றப் புலனாய்வுப் பிரிவு
4. பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு
5. மதுவிலக்கு அமல் பிரிவு
6. ஊர்க் காவல் – மக்கள் பாதுகாப்புப் படை
7. குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு
8. சிறப்பு அதிரடிப் படை

கீழ்க்கண்ட சிறப்பு/தனிப் பிரிவுகள் ஒவ்வொன்றும் காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையில் செயல்படுகின்றன:

1. சிறப்பு செயல்பாடுகள் பிரிவு
2. தொழில்நுட்பப் பிரிவு
3. ரயில்வே காவல் படை
4. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

12 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளும், ஆவடியில் உள்ள ஒரு படைக்கள மையமும் காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. இதில் முழுவதும் பெண்களே அடங்கிய படையும்; ஒரு சிறப்புக் காவல் படையும் அடங்கும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 8-வது அணி, புது தில்லி திஹார் சிறைச்சாலையில் அயல் பணியில் உள்ளது.

மாநிலக் காவல் துறைத் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவல் துறையின் கட்டடங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளைக் கவனித்து வருகிறது.



காவலர் முதல் உதவி ஆய்வாளர் வரை உள்ள காவல் துறைப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியமானது, காவல் துறைத் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக ஒரு காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரும், ஒரு காவல் துறைத் தலைவரும் பணியாற்றி வருகின்றனர்.

காவல் துறைத் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவு, தாழ்த்தப்பட்ட/மலைவாழ் மக்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுத்து வருகிறது.

காவலர் முதல் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் வரையிலும், மற்றும் இந்திய காவல் பணி (IPS) தகுதிகாண் பருவத்தில் உள்ள அதிகாரிகளுக்கும், பயிற்சி அளிக்கும் பொறுப்பை, காவல் துறைத் தலைமை இயக்குநர் (பயிற்சி) அவர்களின் தலைமையில் இயங்கும் பயிற்சிப் பிரிவு கவனித்து வருகிறது. புதிதாக பணியில் சேர்பவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி, ஏற்கெனவே பணியில் உள்ளவர்களுக்கு பணியிடைப் பயிற்சி ஆகியவை இந்தப் பிரிவினால் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இந்திய காவல் பணி அதிகாரிகளின் எண்ணிக்கை 214 ஆகும். 1–4–2004 அன்றைய நிலவரப்படி உள்ள மொத்த அதிகாரிகளின் எண்ணிக்கை, 2003ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட 5 இந்திய காவல் பணி அதிகாரிகள் உட்பட, 195 ஆகும். 2003–2004ஆம் ஆண்டில் (1–4–2004 வரை) இந்திய காவல் பணி அதிகாரிகள் நான்கு பேர் பணி ஓய்வு பெற்றனர்.

1–4–2004 அன்றைய நிலவரப்படி, மொத்த காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 95,427, அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை 5,152 ஆகும்.

[2004 ஜூலை 31

# அத்தியாயம் 2

## சட்டம் - ஒழுங்கு

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை தொடர்ந்து அமைதியாக உள்ளது-கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. ஜாதி, மத மோதல்கள், தொழிலாளர் மற்றும் மாணவர்கள் பிரச்சினைகள் போன்ற பெரிய பிரச்சினைகள் எதுவும் எழவில்லை. காவிரி நீர் தாவா, விவசாயிகள் மற்றும் நெசவாளர்கள் பிரச்சினைகள், பொருளாதாரக் கொள்கைகள், பொடா சட்டத்தினை திரும்பப் பெறுதல் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக, அரசியல் கட்சிகள் நடத்திய பல்வேறு போராட்டங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காதவாறு அமைதியாக நடந்தன.

**மத வேறுபாடுகள் குறித்த நிலவரம்**

அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகள் மத நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கவும், பல்வேறு பிரிவினரிடையே அமைதியை நிலைநாட்டவும் உதவின. 2003 ஆம் ஆண்டில் அங்கொன்றும், இங்கொன்றும் என நடைபெற்ற மூன்று மதம் சார்ந்த மோதல்களில் இருவர் கொல்லப்பட்டனர். 2004 ஆம் ஆண்டில் மார்ச் திங்கள் வரை மதம் சார்ந்த மோதல்கள் எதுவும் நடைபெறவில்லை.

தமிழகத்தில் மத நல்லிணக்கம் 2003ஆம் ஆண்டு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டது. பழனிபாபா கொலை செய்யப்பட்ட நினைவு நாள், கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவ நினைவு நாள், பாபர் மசூதி இடிப்பு நினைவு நாள் மற்றும் மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் ஆகியவை அமைதியான முறையில் நடந்தேறின.

கடந்த 7 ஆண்டுகளில் மதக் கலவரங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை:

| ஆண்டு | உயிரிழந்தோரின் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 45 |
| 1998 | 2 |
| 1999 | 2 |
| 2000 | 1 |
| 2001 | 1 |
| 2002 | 2 |
| 2003 | 2 |
| 2004 (31.3.2004 வரை) | ஏதுமில்லை |



2004 ஜூலை 31]

**சாதி வேறுபாடுகள் குறித்த நிலவரம்**

சாதி வேறுபாடுகள் குறித்த நிலவரத்திலும் பொதுவாக அமைதி நிலவுகிறது. சாதிக் கலவர நிகழ்வுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. 2003ஆம் ஆண்டு ஏற்பட்ட 17 சாதி சம்பந்தமான மோதல்களில் 11 பேர் கொல்லப்பட்டனர். இவ்வாண்டு, 31-3-2004 வரை சாதி மோதல்கள் ஏதும் ஏற்படவில்லை. நிலத் தகராறு, சமய விழாக்களை நடத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள், சாதித் தலைவர்களின் சிலைகளைச் சேதப்படுத்துவது மற்றும் அந்தந்த பகுதிக்குட்பட்ட உள்ளூர் காரணங்கள் ஆகியவை சாதி மோதல்கள் ஏற்படக் காரணமாக அமைந்து விடுகின்றன.

2003 ஆம் ஆண்டில், பல்வேறு வகுப்பினரிடையே பதட்டத்தினை ஏற்படுத்தக்கூடிய மேலவளவு (மதுரை) திரு. முருகேசன் இறந்த நினைவு நாள், தாமிரபரணி சோகச் சம்பவ நினைவு நாள், பசும்பொன் (இராமநாதபுரம்) தேவர் ஜெயந்தி விழா ஆகியவை சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்களால் எடுக்கப்பட்ட தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளினால் அமைதியாக நடந்தேறின.

கடந்த 7 ஆண்டுகளில் சாதிக் கலவரங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை:

| ஆண்டு | உயிரிழந்தோரின் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 93 |
| 1998 | 30 |
| 1999 | 22 |
| 2000 | 18 |
| 2001 | 21 |
| 2002 | 6 |
| 2003 | 11 |
| 2004 (31-3-2004 வரை) | ஏதுமில்லை |

[2004 ஜூலை 31

சாதி மதக் கலவரங்களைத் தவிர்க்கும் பொருட்டு, மாவட்டங்களிலுள்ள பதட்டம் நிறைந்த இடங்கள்/பகுதிகள் மற்றும் பதட்டமான நிகழ்ச்சிகள் நடைபெறும் வருடம்/மாதத்தில் அத்தகைய நிகழ்வுகள் ஏற்படக்கூடிய காலம் போன்ற விவரங்களைப் பட்டியலிட்டு அதன் அடிப்படையில், முன்கூட்டியே உன்னிப்பாகக் கண்காணித்து, பதட்டத்தைத் தவிர்க்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களை அரசு அறிவுறுத்தியுள்ளது. பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு அமைதிப் பேச்சு வார்த்தைகள் மூலம் சுமூகமாகத் தீர்வு காண ஏதுவாக, மாவட்டங்களிலுள்ள அமைதிக் குழுக்களை முடுக்கி விடுமாறு மாவட்ட் ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், மத நல்லிணக்கத்தைப் பேணிக் காத்திட சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த மூத்த மதத் தலைவர்களையும் இளைஞர்களையும் கொண்ட மத நல்லிணக்கக் குழுக்களை அமைக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அரசின் முன்னனுமதியின்றி திடீரென சிலைகள் அமைப்பது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. எனவே, புதிய சிலைகள் அமைக்கப்படுவதை தீவிரமாகக் கண்காணிக்குமாறும், இது சம்பந்தப்பட்ட அரசின் அறிவுரைகளைத் தவறாது பின்பற்றுமாறும் மாவட்ட நிர்வாகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

**தொழிலாளர் மற்றும் பணிகள்**

பொதுத் துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு தொழிற்சங்கத்தினர் 21-5-2003 அன்று நடத்திய நாடு தழுவிய வேலைநிறுத்தம், அகில இந்திய மோட்டார் டிரான்ஸ்போர்ட் காங்கிரஸ் நடத்திய நாடு தழுவிய வேலைநிறுத்தத்தின் அங்கமாக தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் கூட்டமைப்பு ஏப்ரல் 2003-ல் 10 நாட்கள் நடத்திய மாநில அளவிலான வேலைநிறுத்தம், எரிவாயு டேங்கர் லாரிகளின் இந்திய தேசிய ஓட்டுநர் மற்றும் வாகனம் சுத்தம் செய்வோர் ஜூன் 2003-ல் நடத்திய இரு வார கால வேலை நிறுத்தம் மற்றும் பெட்ரோலிய டாங்கர் லாரி உரிமையாளர் சங்கம் ஜனவரி 2004-ல் நடத்திய காலவரையற்ற வேலைநிறுத்தம் ஆகிய வேலைநிறுத்தங்கள் இயல்பு வாழ்க்கையை பாதிக்காத வண்ணம் அமைதியான முறையில் நடந்தேறின.



2004 ஜூலை 31]

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு பிரிவினர், தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 2-7-2003 முதல் 12-7-2003 வரை நடத்திய மாநில அளவிலான காலவரையற்ற வேலைநிறுத்தத்தினை, தமிழ்நாடு அரசு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டப் பிரிவுகளை பயன்படுத்தி திறம்படக் கையாண்டது. எனினும், இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின்மீது விதிக்கப்பட்டிருந்த அனைத்து தண்டனைகளையும் அரசாணை நிலை எண் 135, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 19-5-2004-ல், பெருந்தன்மையுடன் ரத்து செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

**இதர நிகழ்வுகள்**

கும்பகோணத்தில் 25-2-2004 முதல் 7-3-2004 வரை 24 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு எவ்வித பிரச்சினையுமின்றி மகாமகக் குளத்தில் புனித நீராடி கொண்டாடிய மகாமகத் திருவிழாவினை மிகவும் சிறப்பான முறையில் நடத்தியமைக்காக அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டினையும் நிர்வாகம் பெற்றது.

யாருக்கும் எந்தவித இடர்ப்பாடுமின்றி சீரிய முறையில் நெறிப்படுத்தி பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மகாமகத் திருக்குளத்தில் புனித நீராடும் வகையில், காவல் துறையினர் செய்திருந்த செம்மையான ஏற்பாடுகள் சிறப்பான பாராட்டுகளைப் பெற்றன.

**தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மற்றும் இதர பயங்கரவாத/தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள்**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை 14-5-2004 முதல் மேலும் இரு ஆண்டுகளுக்கு நீட்டித்து மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இவ்வியக்கம் பயங்கரவாத இயக்கங்களில் ஒன்று எனப் பொடா சட்டத்தின்கீழும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திற்கு வந்துள்ளதைக் கண்டுபிடித்தவுடன் அவர்கள் சிறப்பு முகாமில் வைக்கப்படுகின்றனர். 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் (1-4-2004 வரை) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினைவிட்டு வெளியேறிய நால்வர் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொடா சட்டத்தின்கீழ் 5-12-2001 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (PW) தடை செய்யப்பட்ட பின்னர், தமிழ்நாட்டில் மக்கள் யுத்தக் குழுவின் (PWG) குறிப்பிடத்தக்க வெளிப்படையான செயல்பாடுகள் ஏதுமில்லை. 'கியூ' பிரிவு காவல் துறையால் எடுக்கப்பட்ட அயராத நடவடிக்கைகள் காரணமாக, தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரையில் காவல் துறையினருடனான நேரடி மோதலில் குற்றம் சாட்டப்பட்டு தலைமறைவாக இருந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர மாநிலத்தில் அப்போதிருந்த சந்திரபாபு நாயுடு அரசைக் கண்டித்தும், வடக்கு தெலுங்கானா பகுதியில் ஆந்திர காவல் துறையினர் நடத்தியதாகக் கூறப்படும் அத்துமீறல் நடவடிக்கைகளைக் கண்டித்தும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (PW) இயக்கம் வெளியிட்ட சுவரொட்டிகளை சென்னை நகரில் ஒட்டிய மக்கள் யுத்தக் குழுவுடன் தொடர்புடைய மூவர் 21-11-2003 அன்று கைது செய்யப்பட்டனர்.

**மத அடிப்படைவாதம் மற்றும் அடிப்படைவாத இயக்கங்கள்**

முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களின் பெரிய அளவிலான சதியோ அல்லது அழிவுச் செயல்களோ ஏதும் மாநிலத்தில் நிகழவில்லை. எனினும், அடிப்படைவாத இயக்கங்களின் நடவடிக்கைகள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**நீதியரசர் திரு. ஏ. இராமன் விசாரணை ஆணையம்**

26-9-2003 அன்று சென்னையில் காவல் துறையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் தூத்துக்குடியைச் சேர்ந்த வெங்கடேசன் பண்ணையார் இறந்ததற்கான காரணங்களையும், சூழ்நிலைகளையும் கண்டறிய, 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையங்கள் சட்டம் (மத்திய சட்டம் 60/1952)-ன்கீழ் விசாரணை ஆணையம் அரசால் ஏற்படுத்தப்பட்டு, விசாரணை ஆணையமாக செயல்பட சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. ஏ. இராமன் அவர்களை அரசு 20-10-2003 அன்று நியமித்தது. இவ்வாணையத்தின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.





**காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்**

2003 ஆம் ஆண்டில், காவல் துறையினரின் பாதுகாவலில் இருந்தபோது 6 பேர் மரணமடைந்துள்ளனர். இம்மரணங்கள் குறித்து காவல் நிலை ஆணை எண் 151-ன்கீழ் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை இருவர் காவல் துறையினரின் பாதுகாவலின்போது மரணமடைந்துள்ளனர். இவ்வாறு ஏற்படும் மரணங்கள் குறித்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை அரசால் ஆய்வு செய்யப்பட்டு இதுபோன்ற நிகழ்வுகளைத் தவிர்க்க காவல் துறையினருக்கு அவ்வப்போது அரசால் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற சம்பவங்கள் நேரா வண்ணம் தவிர்க்க காவல் துறையினருக்கு தக்க உணர்வூட்டுவது போன்ற ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு காவல் துறைத் தலைமை இயக்குநர் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**காவல் துறைத் துப்பாக்கிச் சூடு**

2003 ஆம் ஆண்டில் 13 நிகழ்வுகளில் காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த நேர்ந்தது. அதில் 2 முறை கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், 11 முறை குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராகவும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் மார்ச் திங்கள் வரை இரு முறை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. உயிருக்கு ஆபத்தில்லாத ஆயுதங்களைப் பயன்படுத்துமாறு அரசு மிகவும் வலியுறுத்தியுள்ளதன்பேரில் கடந்த இரு ஆண்டுகளில் காவல் துறையினரின் துப்பாக்கிப் பிரயோக நிகழ்வுகள் படிப்படியாகக் குறைந்துள்ளன.

*1996 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-*

**1996 முதல் 2004 வரை (31-3-2004 வரை) காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள்**

| வ. எண். | விவரங்கள் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 (31-3-04 வரை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை | 24 | 63 | 48 | 35 | 24 | 32 | 20 | 13 | 2 |
| | 1. கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் | 17 | 50 | 22 | 24 | 10 | 18 | 7 | 2 | 1 |
| | 2. கொள்ளை யைத் தடுக்கும் நடவடிக்கையில் | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. | .. |
| | 3. பிற குற்றவாளி களுக்கு எதிரான நடவடிக்கையில் | 7 | 13 | 24 | 11 | 14 | 14 | 13 | 11 | 1 |
| 2. | இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை: | 15 | 28 | 10 | 19 | 9 | 13 | 9 | 4 | 1 |
| | 1. காவல் துறையினர் (சம்பவங்களில்) | .. | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. |
| | 2. பொது மக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 15 | 28 | 10 | 17 | 9 | 13 | 9 | 4 | 1 |
| | காயமடைந்தவர் களின் மொத்த எண்ணிக்கை: | 116 | 307 | 116 | 165 | 66 | 207 | 42 | 22 | 2 |
| 3. | 1. காவல் துறையினர் (சம்பவங்களில்) | 97 | 245 | 68 | 154 | 58 | 178 | 37 | 20 | 2 |
| | 2. பொது மக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 19 | 62 | 48 | 11 | 8 | 29 | 5 | 2 | .. |





# அத்தியாயம் 3

## பெண் காவலர்

மகளிர் காவலர் பிரிவு, 1973 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பெண்களின் பிரச்சினைகளைக் கையாள, காவலருக்கு உதவுவதே இப்பிரிவு அமைக்கப்பட்டதன் முதன்மையான நோக்கமாகும்.

### அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக, 1992 ஆம் ஆண்டில், சென்னை நகரில் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் துவக்கி வைத்தேன். இது படிப்படியாக உயர்த்தப்பட்டு 1996-ல் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 57 ஆக ஆனது. கடந்த மூன்று ஆண்டுகளில், கூடுதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைக்க நான் ஆணையிட்டதன் பயனாக, தற்போது தமிழகத்தில் 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

### நடமாடும் ஆலோசனை மையங்கள்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பாதிக்கப்பட்டப் பெண்களின் இருப்பிடத்துக்கே சென்று அவர்களுடைய குறைகளைத் தீர்க்கவும் ஒவ்வொரு மாவட்டத்திலும்/ பெரு நகரங்களிலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைக்க நான் ஆணையிட்டேன். ஒவ்வொரு மையத்திற்கும், ஒலிபெருக்கி, வண்ணத் தொலைக்காட்சி, காணொலிப் பதிவுக் கருவி (VCR), கல்வி காணொலிப் பேழைகள், மிக உயர் அலை சாதனம் (VHF), ஏ.சி மின் உற்பத்திக் கருவி ஆகியவை பொருத்தப்பட்ட வேன் ஒன்று வழங்கப்படும். இத்தகைய 17 வாகனங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. நடமாடும் ஆலோசனைக் குழுக்கள் கிராமப்புறப் பகுதிகளுக்குச் சென்று மக்களிடமிருந்து புகார்களைப் பெற்று அந்த இடத்திலேயே அவர்களது குறைகளைத் தீர்ப்பதுடன், பிற துறைகள் சம்பந்தப்பட்ட குறைகள் குறித்தும் புகார்களைப் பெற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகின்றன.

### மகளிர் அதிரடிப் படை

இந்தியாவிலேயே 'அனைத்து மகளிர் அதிரடிப் படை அணியை' முதன்முதலாக உருவாக்கிய பெருமை தமிழ்நாட்டையே சாரும். நான்

*அதனை 2-6-2003 அன்று துவக்கி வைத்தேன். அதிரடிப் படையினர் அனைவருக்கும் வழங்கப்படும் அனைத்துப் பயிற்சிகளும் மகளிர் அதிரடிப் படையினருக்கும் வழங்கப்பட்டன. ஆண் அதிரடிப் படையினருக்கு சரிசமமாக மகளிர் அதிரடிப் படையினருக்கும், குதிரைச் சவாரி, படகு ஓட்டுதல், மணலில் ஓடுதல், பாரா மிதத்தல்* (Para sailing), *தொலைதூர ஓட்டப் பயிற்சி, கயிற்றில் சரிந்து இறங்கும் பயிற்சி, நீச்சல் பயிற்சி, வாகனம் ஓட்டும் பயிற்சி, ஆயுதங்களைக் கையாளுவது மற்றும் அனைத்து தானியங்கி ஆயுதங்களைப் பயன்படுத்திக் குறி தவறாமல் சுடுவது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டதோடு, யோகாசனம், தியானம் மற்றும் ஆயுதமில்லாப் போர் புரியும் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.*

**அனைத்து மகளிர் காவல் படை**

*மகளிர் அதிரடிப் படை அணிகள் இரண்டு உட்பட, பல்வேறு பதவி நிலைகளில் உள்ள 1,078 மகளிர் காவல் பணியாளர்கள் கொண்ட, மகளிர் மட்டுமே கொண்டு அமைக்கப்பட்ட "மகளிர் காவல் படையினை" நான் துவக்கி வைத்தேன். இந்தியாவிலேயே முதன்முதலில் 'அனைத்து மகளிர் காவல் படை' தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது, தமிழகக் காவல் துறையின் பெருமைக்குக் கூடுதல் சிறப்பு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.*

**காவல் நிலையங்களில் மகளிர் காவல் பணியாளர்களை நியமிப்பது**

*பெண்கள் எவ்விதப் பயமுமின்றி, நம்பிக்கையுடன் காவல் நிலையங்களுக்குச் செல்வதற்கு வகைசெய்யும் விதத்தில், மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும், தலா ஒரு மகளிர் உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு மகளிர் காவலர்கள் நியமனம் செய்ய நான் உத்தரவிட்டேன். மகளிர் காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் இரண்டாம் நிலை மகளிர் காவலர்கள் நியமனங்களை விரைவில் செய்து முடிக்க வேண்டும் என நான் ஆணையிட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அதற்கான பெரும் பணிகளை மேற்கொண்டுள்ளது. 961 மகளிர் காவல் உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யும் பணி முடிவுற்றுள்ளது. 2,306 இரண்டாம் நிலை மகளிர் காவலர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட உள்ளது.*





## அத்தியாயம் 4

### குற்ற நிகழ்வு நிலவரம்

**2003 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சொத்து சம்பந்தமான குற்றங்கள்**

*கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், 2003 ஆம் ஆண்டில் சொத்து குறித்த குற்ற நிகழ்வுகள் 5.1 விழுக்காடு அதாவது 1,274 குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன. நெடுஞ்சாலை சுற்றுக் காவல் பணி அதிகரிப்பு மற்றும் திறம்பட்ட குற்ற தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 2003 ஆம் ஆண்டில் வன்முறைக் குற்றங்களும், கன்னக்களவுகளும் கணிசமாகக் குறைந்துள்ளன. 2003 ஆம் ஆண்டில், சொத்து சம்பந்தமான குற்ற நிகழ்வுகளின் கண்டுபிடிப்பு வீதம் 78.22 விழுக்காடு ஆகும். 2002-ல் இது 76 விழுக்காடாக இருந்தது. அதேபோன்று 2002 ஆம் ஆண்டில் 68.12 விழுக்காடாக இருந்த களவு போன சொத்தின் மீட்பு வீதம் இவ்வாண்டில் 72.13 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுக்கான சொத்து குறித்த குற்றங்களின் ஒப்பீட்டுப் பட்டியல் பின்வருமாறு:-*

*2002 மற்றும் 2003-ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற சொத்து சம்பந்தமான குற்றங்கள்*

| வ. எண் | குற்றத்தின் தன்மை | 2002 | | 2003 | |
|---|---|---|---|---|---|
| | | பதிவு | கண்டுபிடிப்பு | பதிவு | கண்டுபிடிப்பு |
| 1. | ஆதாயக் கொலை | 75 | 57 | 104 | 77 |
| 2. | கூட்டுக் கொள்ளை | 178 | 144 | 95 | 85 |
| 3. | வழிப்பறி | 650 | 478 | 514 | 406 |
| 4. | கன்னக்களவு | 5532 | 2932 | 4849 | 2877 |
| 5. | திருட்டு | 18614 | 15386 | 18213 | 15153 |
| | மொத்தம் | 25049 | 18997 | 23775 | 18598 |

[2004 ஜூலை 31

| | 2002 | 2003 |
|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | 76 % | 78.22 % |
| களவுபோன சொத்துக்கள் (ரூபாய் கோடிகளில்) | 44.14 | 49.56 |
| மீட்கப்பட்ட சொத்துக்கள் (ரூபாய் கோடிகளில்) | 30.07 | 35.75 |
| மீட்கப்பட்ட சதவீதம் | 68.12 % | 72.13 % |

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள்**

பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குற்ற நிகழ்வுகளைக் குறைக்கவும், தடுக்கவும், தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், பெண்கள்/குழந்தைகளுக்கு ஆபத்து காலத்தில் உதவி வழங்கும் சிறப்புத் தொலைபேசி வசதி, நடமாடும் ஆலோசனை மையம் ஆகிய சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புகார் கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே குறிப்பாக பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதால், 2002 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2001 ஆம் ஆண்டில் பதிவான 4,939 வழக்குகளின் எண்ணிக்கை, துணிவாகப் பெண்கள் புகார் கொடுக்கும் சூழ்நிலையை அரசு உருவாக்கியதால் 2002 ஆம் ஆண்டில் பதிவு எண்ணிக்கை 6,077 ஆக அதிகரித்தது. 2003 ஆம் ஆண்டில், 5,876 பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகள் பதிவாகி உள்ளன. 2002 ஆம் ஆண்டில் பதிவான 6,077 வழக்குகளுடன் ஒப்பிடுகையில், இது 3.3 விழுக்காடு குறைவாகும்.

கடந்த இரண்டாண்டுகளில் பதிவான மகளிருக்கெதிரான குற்றங்கள் தொடர்பான ஒப்பீட்டுப் புள்ளிவிவரப் பட்டியல் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது:—



2004 ஜூலை 31]

2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள் ஒப்பீட்டுப் பட்டியல்

| வ. எண் | தலைப்பு | 2002 | 2003 | 2002 ஆம் ஆண்டுக்கும் 2003 ஆம் ஆண்டுக்கும் இடையிலான வேறுபாடு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | கற்பழிப்பு (முயற்சிகளையும் சேர்த்து) | 512 | 547 | 6.84 |
| 2. | ஆட்கடத்தல் | 720 | 641 | (-)10.97 |
| 3. | வரதட்சணை மரணங்கள் | 247 | 222 | (-)10.12 |
| 4. | கணவன் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 966 | 1494 | 54.66 |
| 5. | மானபங்கம் | 1866 | 2048 | 9.75 |
| 6. | பாலியல் பலாத்காரம் | 1766 | 924 | (-)47.67 |
| | மொத்தம் | 6077 | 5876 | (-)3.30 |

[2004 ஜூலை 31

# அத்தியாயம் 5

## காவல் துறையின் சிறப்புப் பிரிவுகள்

### குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு

மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களது ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின்கீழ், 7 தனிப் பிரிவுகள், மற்றும் 34 படைப் பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுக்கு, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் பதவி நிலையிலான அதிகாரி ஒருவர் பொறுப்பு வகித்து வருகிறார். 1-4-2004 அன்றைய நிலவரப்படி, இப்பிரிவு விசாரணை செய்யும் 519 வழக்குகளில், 422 வழக்குகள் நீதிமன்ற விசாரணையிலும், 97 வழக்குகள் புலன் விசாரணையிலும் இருந்து வருகின்றன. இவற்றுள் 60 வழக்குகள், 2003 ஆம் ஆண்டில், இதர அமைப்புகளிடமிருந்து விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டவையாகும்.

மதுரை, கோவை, திருச்சி, சென்னை, சேலம், திருநெல்வேலி ஆணையரகங்களிலும், செங்கை கிழக்கு மாவட்டத்திலும், திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்ற (Organised Crimes) தடுப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகின்றது.

இணையதள குற்றங்களைக் கண்காணிக்க இணையதள குற்ற தடுப்புப் பிரிவு சென்னை மாநில குற்றப் புலனாய்வுத் துறையின் தலைமையகத்திலும், சென்னை மாநகரக் காவல் பிரிவிலும் அமைக்கப்பட்டுள்ளது.

கள்ள நோட்டுகள் மற்றும் போலி முத்திரைத் தாள்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென கள்ள நோட்டு தடுப்புப் பிரிவு மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ளது.

மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்கிடையேயும் அமைப்பு ரீதியில் செயல்பட்டு பெண்களையும், சிறாரையும் விபச்சாரத்தில் ஈடுபடச் செய்வதைத் தடுக்கவும், விபச்சாரத்தில் அவர்களை ஈடுபடுத்துவோரைக் கண்டறிந்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும், 2002 ஆம் ஆண்டு, மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறைத் தலைமையகத்தில், விபச்சாரத் தடுப்புப் பிரிவு (Anti-Trafficking Cell) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

### மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம்

மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் 1995 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. குற்றப் பிரிவின் காவல் துறைத் தலைவர், அலுவல் வழி இயக்குநராகப் பொறுப்பு வகித்து வருகிறார். காவல் துறையினரின் செயல் திறமையை மேம்படுத்துவது, குற்ற ஆவணக் காப்பு முறையை மேம்படுத்துவது போன்றவை மாநிலக் குற்ற ஆவணக் காப்பகத்தின் நோக்கங்களாகும்.

### (அ) காவல் துறை கணினி பிரிவு

காவல் துறை ஆவணங்களைக் கணினிமயமாக்குவதில் தமிழ்நாடு காவல் துறை நாட்டிற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளின் அனைத்து விவரங்களையும் பதிவு செய்வதே இதன் நோக்கமாகும்.

மத்திய உள் துறை அமைச்சகத்தின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (The National Crime Record Bureau), தேசிய அளவிலான குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய விவரங்களை, வரைஅளவுப்படுத்தப்பட்ட படிவங்கள் மூலம் பெற்றுத் தொகுத்திட, கடந்த 1-1-1996 முதல் 'குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல் முறை' என்ற மென்பொருளை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது. இதற்காக மாவட்டங்களுக்கும், ஆணையரகங்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் இப்பணியைக் கண்காணித்து வருகிறது.

### (ஆ) விரல் ரேகைப் பதிவுப் பிரிவு

நம் நாட்டின் மிகப் பழமையான விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகளில் ஒன்றான தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுப் பிரிவு 1895 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தனி விரல் ரேகை பதிவு முறையானது அகில இந்திய அளவில் முதன் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

தொடக்க காலத்தில் விரல் ரேகை கண்டறியும் பணி கருவிகளின் உதவியின்றிச் செய்யப்பட்டது. 1999–ல் அறிமுகப்படுத்தப்பட்ட விரல் ரேகை பகுத்தாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் முறையில் ஐந்து இலட்சம் கை விரல் ரேகை அடையாளச் சீட்டுகள் பதிவு செய்ய இயலும். இவற்றால் கைது செய்யப்பட்டவர்கள் விரல் ரேகை மற்றும் சம்பவ இடங்களில் கிடைக்கும் விரல் ரேகை ஆகியவற்றை ஒப்பிடும் பணி எளித்தாக்கப்பட்டுள்ளது. இதுவரையில், 1,72,969 விரல் ரேகை அடையாளச் சீட்டுகள் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## குற்ற தடுப்புப் பிரிவு

காவல் துறைத் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்பட்டு வரும் இத்தனிப் பிரிவில் கீழ்க்கண்ட பிரிவுகள் உள்ளன:—

**(அ) சிறப்பு புலனாய்வுப் பிரிவு**

மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதற்கும் அவ்வழக்குகளில் புலனாய்வுகளும், விசாரணைகளும் முழுமையாக/விரைவாக நடைபெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தவும், சிறப்பு புலனாய்வுப் பிரிவு ஒன்று மாநில குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு காவல் துறைத் தலைவர் ஒருவர் தலைமையின்கீழ் இயங்குகிறது. மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட 118 வழக்குகள் மற்றும் இதர மூன்று வழக்குகளின் புலன் விசாரணை மற்றும் வழக்கு நடத்துதலை இப்பிரிவு தற்போது மேற்பார்வை செய்து வருகிறது.

**2003 ஆம் ஆண்டில் தண்டனையில் முடிந்த குறிப்பிடத்தக்க வழக்குகள்**

2003 ஆம் ஆண்டில் ஒன்பது வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட 66 பேரில் 49 பேர் தண்டனை பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், 25 பேருக்கு ஆயுள் தண்டனையும், 23 பேருக்கு தலா நான்கு ஆண்டுகள் மற்றும் மூன்று திங்கள் கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

(1) **பஜார் காவல் நிலைய குற்ற (கா.நி.கு) எண்.1026/91,** இந்திய தண்டனைச் சட்டப் (இதச) பிரிவு 147, 148, 149, 332, 302, 109 உடன் இணைந்த (உ/இ) 120–பி இதச **(சிவா என்ற சிவக்குமார் கொலை வழக்கு)** கோயம்புத்தூர், மூன்றாவது விரைவு நீதிமன்றத்தில் ஒன்பது



2004 ஜூலை 31]

எதிரிகளான (1) ஜாகிர் உசேன், (2) சாகுல் அமீது, (3) பாபு என்ற ஓம் பாபு, (4) சாபுர் ரஹ்மான், (5) ஹாருண் பாட்சா, (6) பிலால் ஹாஜியார் என்ற அப்துல் அனீப், (7) சுபேர், (8) சாகுல் அமீது (9) எஸ்.ஏ.பாஷா ஆகியோருக்கு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டது.

(2) **திருச்சி உறையூர் கா.நி.கு.எண்.59/99,** இதச பிரிவு 147, 148, 341, 302, 379, 201, 109, 120–பி இதச **(டாக்டர் ஸ்ரீதர் கொலை வழக்கு).** குற்றம் சாட்டப்பட்ட 13 பேரில் (1) ஜாகிர் உசேன், (2) மூசா என்ற தடா மூசா என்ற சையத் பாய், (3) சித்திக் அலி என்ற சுல்தான், (4) ஷேக் சிந்தா மெதார் என்ற ஜாபர் என்ற சிந்தா, (5) சாதிக் என்ற கான் என்ற ரஹ்மத்துல்லா கான், (6) உமர் பாரூக் என்ற மொய்தீன் அப்துல் காதர் பாய் (7) ஷாஜஹான் ஆகிய 7 பேர் தண்டனை பெற்றுள்ளனர். எதிரி 1 முதல் 6 வரையிலானவர்களுக்கு ஆயுள் தண்டனையும், 7–வது நபருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டன.

(3) **மேட்டுப்பாளையம் கா.நி.கு.எண்.1/96,** இதச பிரிவு 147, 148, 149, 302, 120–பி இதச **(கார்த்திகேயன் கொலை வழக்கு).** ஹக்கீம் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(4) **ஆர்–7 கே.கே.நகர் கா.நி.கு.எண்.1739/97,** இதச பிரிவு 302, 120–பி (உ/இ) 449, 302 (உ/இ) 34, 109 இதச **(இமாம் கொலை வழக்கு).** (1) ஏர்வாடி காசிம், (2) அலி அப்துல்லா, (3) அப்பாஸ் என்ற மொட்டை அப்பாஸ் ஆகிய மூன்று பேர் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(5) **மேலப்பாளையம் கா.நி.கு.எண்.10/2001,** இதச பிரிவு 147, 148, 341, 302, 120–பி, 153(ஏ) **(சத்தியசிலன் கொலை வழக்கு).** (1) சையது அலி, (2) முஜ்புர் ரஹ்மான், (3) முகமது இஸ்மாயில், (4) பஷீர் ஷேக் அப்துல் காதர், (5) ஆலம் என்ற கொத்துல் ஆலம், (6) கலீல் என்ற கலிலூர் ரஹ்மான், (7) அலி என்ற முகமது அலி (8) முகமது தீனுல் ஹாரீஸ் (9) அப்துல் லத்தீப் ஆகிய ஒன்பது எதிரிகளுக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(6) **தாம்பரம் கா.நி.குற்ற எண்.116/98, (7) பூந்தமல்லி கா.நி.குற்ற எண்.192/98, 8) வேப்பேரி கா.நி.குற்ற எண். 327/98 வழக்குகளுடன் இணைந்த 9) ஆர்.2 கோடம்பாக்கம் கா.நி.குற்ற எண்.741/98,** இதச பிரிவு 120–பி, 307, 353, 1908 ஆம் ஆண்டு வெடிமருந்து பொருள்

சட்டப்பிரிவு 4 மற்றும் 5, இந்திய ஆயுதச் சட்டப் பிரிவு 3 (உ/இ) 25 (1)(பி) மற்றும் 7 **(வெடிமருந்து பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு).** இவ்வழக்கு சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் பெரிய அளவில் வெடிமருந்துப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்காகும். குற்றஞ்சாட்டப்பட்ட 23 பேர்களான (1) எஸ்.ஏ.பாஷா, (2) சம்சுதீன், (3) சர்புதீன், (4) பஷீர், (5) அபுதாகிர், (6) ஜாபர் அலி, (7) ஆரிபா பேகம், (8) முகமது பசித் என்ற பசித், (9) குட்டி என்ற முகமது அலி கான், (10) பாபு என்ற அமானுல்லா, (11) குனியமுத்தூர் யூசுப் என்ற ஷாஜஹான், (12) ஹக்கீம் என்ற ஹக்கி என்ற அன்வர், (13) தாஜுதீன் என்ற அபு முஜாஹித், (14) யாகூப், (15) அப்பாஸ், (16) சாதிக், (17) சாகுல் ஹமீது, (18) முகமது அசன், (19) பெரம்பூர் ஜாகிர்உசேன், (20) முகமது பிலால்,(21) உஸ்மான் அலி என்ற இப்ராஹிம், (22) ஆயிஷா என்ற சங்கீதா, (23) ஜாகிர் உசேன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் மற்றும் 3 திங்கள் கடுங்காவல் தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

### (ஆ) போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு

போதைப் பொருள் கடத்தல் தடுப்பு சட்டத்தை தமிழ்நாட்டில் அமல்படுத்த இப்பிரிவு உருவாக்கப்பட்டது. தற்பொழுது 12 இடங்களில் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுகள் உள்ளன.

2003–2004 ஆம் ஆண்டில் (1–4–2004 வரை) இப்பிரிவுகள் 1450 வழக்குகளைக் கண்டுபிடித்து, 1,426 குற்றவாளிகளைக் கைது செய்து, பன்னாட்டுச் சந்தையில் ரூ.32.3 கோடி பெறுமானமுள்ள 32.3 கிலோ எடையுள்ள ஹெராயின் போதைப் பொருளைப் பறிமுதல் செய்துள்ளன. இவை தவிர ரூ.46.32 கோடி மதிப்புள்ள அபின், ஹசிஸ், பச்சை கஞ்சா, டயாசிபாம் மற்றும் கஞ்சா ஆகியவை கைப்பற்றப்பட்டன. குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் 6 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். 620 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன.

### (இ) வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு

காப்புரிமைச் சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 1995 ஆம் ஆண்டு வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. சென்னை, சேலம், கோவை, திருச்சி, மதுரை மற்றும்



திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் இப்பிரிவு பணியாற்றி வருகிறது. 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் (1–4–2004 வரை) இப்பிரிவு 848 குற்ற நிகழ்வுகளை கண்டுபிடித்து, ரூபாய் 6,23,10,826 பெறுமானமுள்ள பொருட்களைக் கைப்பற்றியுள்ளது. 242 குற்றவாளிகள் தண்டனை பெற்றுள்ளனர்.

### (ஈ) கூட்டுக் கொள்ளை தடுப்புப் பிரிவு

இப்பிரிவு, மாநில மற்றும் மாநிலங்களுக்கிடையே செயல்படும் குற்றவாளிகள் மற்றும் அவர்களுடைய நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சேகரித்து அதை பிற காவல் பிரிவுகளுக்கு அனுப்பி வருகிறது. உயர் நீதிமன்றம் மற்றும் அரசின் உத்தரவின்படியும் காவல் துறைத் தலைமை இயக்குநர் ஆணையின்படியும் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான வழக்குகளில் புலன் விசாரணையும் செய்து வருகிறது.

## பொருளாதாரக் குற்ற தடுப்புப் பிரிவு

### (அ) நிதி நிறுவனங்கள் பிரிவு

பொருளாதாரக் குற்ற தடுப்புப் பிரிவு (நிதி நிறுவனங்கள்), வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மோசடி மற்றும் பணம் திருப்பி அளிக்காதது பற்றிய வழக்குகளை புலன் விசாரணை செய்ய அமைக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டில், 180 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவ்வழக்குகளில், 27 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. தலைமறைவாக இருந்த 480 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். கடந்த நான்கு ஆண்டுகளில் 945 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வைப்பீடுதாரர்களுக்கு ரூ.167.26 கோடி பெற்றுத் தரப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட மற்றும் கடன் திருப்பிச் செலுத்தத் தவறியவர்களுக்கு சொந்தமான ரூ.1706.46 கோடி பெறுமான சொத்துக்கள் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கென பட்டியலிடப்பட்டுள்ளன.

### (ஆ) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு (C.C.I.W)

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் நடக்கும் நிதிக் கையாடல்களை விசாரணை செய்ய 1971 ஆம் ஆண்டு வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது. இப்பிரிவு புலனாய்வு

செய்த வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே வேலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை ஆகிய இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

1–4–2004 நிலவரப்படி, 190 வழக்குகள் புலன் விசாரணையிலும், 950 வழக்குகள் நீதிமன்ற நிலுவையிலும் உள்ளன.

**(இ) சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு**

ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள தொன்மை வாய்ந்த சிலை திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை செய்வதும், காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களால் ஒப்படைக்கப்படும் சிலைத் திருட்டு வழக்குகளை புலன் விசாரணை செய்வதும், மாவட்ட, மாநகர காவல் துறையால் கையாளப்படும் முக்கியமான சிலை திருட்டு வழக்குகளின் புலன் விசாரணைப் பணிகளை ஒருங்கிணைப்பதும், தொன்மை வாய்ந்த கலைப் பொருள் வணிகர்களின் சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகள் பற்றிய உளவுத் தகவல்களைச் சேகரிப்பதும் இப்பிரிவின் முக்கிய பணிகளாகும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவாகும் சிலை திருட்டு வழக்குகளையும் இப்பிரிவு கண்காணித்து வருகிறது.

2003–2004 ஆம் ஆண்டில் (1–4–2004 வரை), விசாரணை மேற்கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட 10 வழக்குகளில், 19 உலோக சிலைகள், 10 புராதன கல் தூண்கள், ஒரு உலோக பாவை விளக்கு ஆகியவற்றை இப்பிரிவு மீட்டுள்ளது.

**சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு**

காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையில் இயங்கும் இப்பிரிவு பின்வரும் பணிகளை மேற்பார்வையிடுகிறது:—

**(அ) தமிழ்நாடு அதிரடிப் படை**

தமிழ்நாடு அதிரடிப் படைப் பிரிவில் உள்ள அதிரடி வீரர்களுக்கு ஆயுதங்களைக் கையாளுதல், எந்தச் சூழ்நிலையிலும் தன்னுயிர் காத்துக் கொள்ளும் கலை, ஆயுதங்கள் இல்லாமல் எதிரிகளை ஒடுக்குதல், செங்குத்துப் பாறைகள் மீது ஏறுதல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் உத்திகள், முக்கியப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் அதிரடித் தாக்குதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளை ஒடுக்கும்



நடவடிக்கைகள், தீவிரவாதக் குற்றவாளிகளுக்கு வழித்துணைக் காவல் மற்றும் பெரிய அளவில் சட்டம் ஒழுங்கு பாதிப்பு ஏற்படும் என கருதப்படும் சமயங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற பணிகளுக்காக மாநிலத்தின் பல்வேறு இடங்களுக்கும் இவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

**(ஆ) தமிழ்நாடு கமாண்டோ பயிற்சிப் பள்ளி**

மாநகரங்கள், மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணிபுரியும், உதவி ஆய்வாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் பணியாற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு விரைந்து செயல்படும் துப்பாக்கி சுடும் பயிற்சி (Reflex Shooting) தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளியால் அளிக்கப்பட்டது. 233 காவல் அதிகாரிகளுக்கு, பதினைந்து நாள் அதிரடிப் படை புத்தாக்கப் பயிற்சியும், 977 காவல் துறை பணியாளர்களுக்கு வழித்தட கண்காணிப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. காவல் துறை பணியாளர்கள் 157 பேருக்கு பன்னிரண்டு வார கால காவல் அதிரடிப் படை பயிற்றுநர் பயிற்சி அளிக்கப்பட்டது. நாட்டில் முதன்முதலாக மகளிர் அதிரடிப் படையை உருவாக்கி அதன் முதல் குழுவுக்கு பயிற்சி அளித்த பெருமை தமிழ்நாட்டையே சாரும். 2–6–2003 அன்று முதல் மகளிர் அதிரடிப் படை என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

ஆடவர் அதிரடிப் படையினரைப் போலவே, மகளிர் அதிரடிப் படையினரும் அனைத்து கடுமையான பயிற்சிகளையும் பெற்று வருகின்றனர். குதிரையேற்றம், படகு ஓட்டுதல், மணலில் ஓடுதல், பாரா மிதத்தல் (Para Sailing), ஓட்டப் பயிற்சி, கயிற்றில் சரிந்து இறங்கும் பயிற்சி, நீச்சல், வாகனங்கள் ஓட்டுதல், ஆயுதங்களைக் கையாளுதல், எல்லா தானியங்கி ஆயுதங்களின் மூலம் சுடுதல், 20 கி.மீ. வரையிலான தொலைதூர ஓட்டம், யோகா, தியானம், ஆயுதங்களின்றித் தாக்குதல் போன்றவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 251 மகளிர் காவலர்கள் அதிரடிப் படைப் பயிற்சியை முடித்துள்ளனர்.

**(இ) வெடிகுண்டு கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை**

வெடிகுண்டு கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படையானது, 1991 ஆம் ஆண்டு என்னால் அமைக்கப்பட்டது. நாட்டிலேயே முதன்முறையாக இப்படையை அமைத்த பெருமையைத் தமிழ்நாடு பெறுகிறது. தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியின்கீழ் இயங்கிவரும்

[2004 ஜூலை 31

சிறப்புமிக்க இப்படையானது விரைந்து வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்வதில் திறமையாகச் செயல்பட்டு வருகிறது. தேசியப் பாதுகாப்புப் படை, விமானப் பாதுகாப்புத் துறை (BCAS) ஆகியவற்றில் பணிபுரிந்த அனுபவம் வாய்ந்த கடமை உணர்வு மிக்க முன்னாள் இராணுவ வீரர்களை வைத்து இப்பிரிவு அமைக்கப்பட்டது.

### நுண்ணறிவுப் பிரிவு

தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புக் கோட்டம் ஆகியவை அடங்கிய நுண்ணறிவுப் பிரிவு, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (நுண்ணறிவு) அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகிறது. முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு தவிர, இப்பிரிவானது புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்து ஒப்பாய்வு செய்து உரியவர்களுக்கு அனுப்பும் பணியையும் கவனித்து வருகிறது.

**(அ) தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

இப்பிரிவானது, மாநிலத்தில் வகுப்பு மோதல் மற்றும் சாதி மோதல் பதட்டநிலை மற்றும் பிற சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் குறித்த உளவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு செய்து உள்ளூர் காவல் துறையினருடன் அவற்றைப் பகிர்ந்து கொள்கிறது. இப்பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும் / மாநகரிலும் காவல் துறை ஆய்வாளரின் தலைமையில் இயங்கி வருகிறது.

**(ஆ) 'க்யூ' பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை)**

இடதுசாரி தீவிரவாதிகள் மற்றும் பிற போராளிகளின் நடவடிக்கைகளை 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை கூர்ந்து கண்காணித்து வருகிறது. தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை புலன் விசாரணை செய்வதையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. இப்பிரிவு அனைத்து மாவட்டங்களிலும்/ மாநகரங்களிலும் செயல்பட்டு வருகிறது.

**(இ) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

அதி முக்கிய பிரமுகர்கள், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் முக்கிய, மிக முக்கிய பிரமுகர்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்பு தொடர்பான



2004 ஜூலை 31]

நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. தமிழக முதல்வருக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியை மேற்கொள்வதுடன், பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனித்து வருகிறது. முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்புக்காக இப்பிரிவில் தனியாக ஒரு அதிரடிப் படையும் செயல்பட்டு வருகிறது.

**(ஈ) சிறப்புப் பிரிவு**

கோவை தொடர் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து, முஸ்லீம் மற்றும் இந்து அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கண்காணிக்க, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, இந்த சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்த சிறப்புப் பிரிவின் அலகுகள் செயல்படுகின்றன. காவல் துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் அவருக்கு உதவியாக மூன்று காவல் ஆய்வாளர்களுடன் ஒவ்வொரு அலகும் செயல்படுகின்றன.

**(உ) காவல் சுருக்கெழுத்துத் துறை**

காவல் சுருக்கெழுத்துத் துறையின் கிளைகள் அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் உள்ளன. பொதுக்கூட்டப் பேச்சுக்களை முழுமையாகக் குறிப்பெடுப்பது, ஆட்சேபகரமான, அவதூறான பேச்சுக்களைக் கண்காணிப்பதும் இத்துறையின் முக்கியப் பணிகளாகும். இது தவிர, குற்றப் புலனாய்வுத் துறையின் மாநில குற்றப் பிரிவு, 'க்யூ' பிரிவு, சிறப்புப் பிரிவு கவனித்து வரும் பரபரப்பான வழக்குகள் குறித்த முக்கிய ஆவணங்களை மொழியாக்கம் செய்யும் பணியும், தமிழ்நாடு சட்டமன்றம் மற்றும் பொதுத் (மிக கமுக்கம்) துறை சம்பந்தப்பட்ட முக்கியப் பணிகளும் இத்துறையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

ரூபாய் 7.39 கோடி செலவில், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், ஒவ்வொரு துணைக் கோட்டத்திற்கும், தலா ஒரு வீடியோ காமிரா வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. சட்டம்-ஒழுங்கு நிகழ்வுகள், பொதுக்கூட்டங்கள் போன்றவற்றைச் சுருக்கெழுத்துத் துறைப் பணியாளர்கள் துல்லியமாகக் குறிப்பெடுக்க வீடியோ காமிரா மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

[2004 ஜூலை 31

## மோப்ப நாய் படைப் பிரிவு

சிறப்பு அதிரடிப் படை, ரயில்வே காவல் படை, தமிழ்நாடு அதிரடிப் படை போன்ற சிறப்புப் பிரிவுகள் உட்பட ஒவ்வொரு மாவட்டங்களிலும் / மாநகரங்களிலும் மோப்ப நாய் படைகள் இயங்கி வரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். பெரும்பாலான மாவட்டங்களிலும் / மாநகரங்களிலும் காவல் பணியில் ஈடுபடுத்தப்படும் மோப்ப நாய்களும், வெடிபொருட்களைக் கண்டுபிடிக்கும் மோப்ப நாய்களும் உள்ளன. சில பிரிவுகளில் போதை மருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் மோப்ப நாய்களும் உள்ளன.

இம்மாநிலத்தில் உள்ள மோப்ப நாய் படைப் பிரிவில் தற்போது தடத்தைப் பின்பற்றிச் செல்லும் 85 மோப்ப நாய்களும், வெடி மருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் 77 மோப்ப நாய்களும், 4 மீட்பு நாய்களும், போதைப் பொருள் கண்டறியும் 9 மோப்ப நாய்களும் உள்ளன.

## குதிரைப் படைப் பிரிவு

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 4 மாநகரங்களில் விழாக்கள்/ஊர்வலங்கள்/பெரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகையில் நெரிசலைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினம், சுதந்திர தினம் போன்ற சிறப்புக் கால அணிவகுப்புகளிலும் குதிரைப் படை பயன்படுத்தப்படுகிறது. 1–1–2004 அன்றைய நிலவரப்படி தமிழ்நாடு காவல் துறையில் 44 குதிரைகள் உள்ளன.

## தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

காவல் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் 12 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பிரிவுகளும், ஆவடியில் உள்ள படைக்கள மையம் ஒன்றும் இயங்கி வருகின்றன. இதில், தனிப்பட்ட மகளிர் காவல் படை ஒன்றும், சிறப்பு படைப் பிரிவு ஒன்றும் அடங்கும். தமிழ்நாடு சிறப்புக் காவல் எட்டாவது அணி, புது டெல்லியில் உள்ள திகார் சிறையில் அயற்பணியாற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் சிறப்புக் காவல் படை, அகில இந்திய அளவில், மாநிலங்களில் அமைக்கப்பட்ட முதல் அனைத்து பெண்கள் படைப் பிரிவு என்ற பெருமையினைப் பெறுகிறது. இதனை நான் கடந்த 30–1–2004 அன்று துவக்கி வைத்தேன். தமிழ்நாடு சிறப்புப் படை, பேரழிவு ஆயுதங்களைக் கையாள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

தேர்தல் பாதுகாப்புப் பணி உட்பட, பல்வேறு சட்டம் ஒழுங்கு பராமரிப்பு பணிகளில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பணியாளர்கள் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெளி மாநிலங்களிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

20–11–2003 முதல் 30–11–2003 வரை சட்டீஸ்கர் மாநிலத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் எட்டு அணிகள் அம்மாநிலத்திற்கு அனுப்பப்பட்டன. பாபர் மசூதி இடிப்பு நினைவு நாளையொட்டி, சட்டம் ஒழுங்கு பராமரிப்புப் பணிக்காக 30–11–2003 முதல் 8–12–2003 வரை கேரள மாநிலம் கோழிக்கோட்டுக்கு ஒரு சிறப்புக் காவல் படை அணி அனுப்பப்பட்டது. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் பணிகளுக்கென 10 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பிரிவுகள் அனுப்பி வைக்கப்பட்டன. வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பிரிவுகள் தங்களது பணிகளைச் செவ்வனே செய்து அந்த மாநில அரசுகளின் பாராட்டுக்களைப் பெற்றன.

## சிறப்பு அதிரடிப் படை

விமானக் கடத்தலைத் தடுப்பது, ஆயுதமேந்திப் போராடும் போராளிகளைச் சமாளிப்பது, தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளவே சிறப்பு அதிரடிப் படை (Special Task Force) அமைக்கப்பட்டது. இச்சிறப்பு அதிரடிப் படை, தற்போது தலைமறைவாக உள்ள சந்தன மரக் கடத்தல் வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையில் சிறப்பு அதிரடிப் படை இயங்கி வருகிறது. 31–3–2004 நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 253 ஆகும். உள்ளூர்க் காவல் நிலையங்களிலிருந்தும், ஆயுதப் படை/ தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவு ஆகியவற்றிலிருந்தும் அயற்பணி அடிப்படையில் 638 காவல் துறை பணியாளர்கள் இப்படையில் பணியாற்றுகின்றனர். சிறப்பு அதிரடிப் படையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி அவர்களை ஓடி ஒளியச் செய்துள்ளனர்.

[2004 ஜூலை 31

## ஊர்க் காவல் படை

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு ஊர்க் காவல் படையானது ஒரு தன்னார்வ அமைப்பாகும். காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் பதவி வழியால் இப்படையின் தலைமைத் தளவாயாகப் பதவி வகிக்கிறார். அந்தந்த மாவட்டங்களில் உள்ள காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை ஆணையாளர்கள் அங்குள்ள ஊர்க் காவல் படையின் தளவாய்களாக பொறுப்பு வகிக்கிறார்கள்.

தமிழ்நாடு ஊர்க் காவல் படையிலுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 11,605 ஆகும். இதில் 2,750 மகளிர் ஊர்க் காவல் படையினரும் அடங்குவர்.

ஊர்க் காவல் படை, மக்கள் பாதுகாப்புப் படை ஆகியவை காவல் துறைக்கு உதவி செய்யும் துணைப் படைகளாக இயங்கி வருகின்றன. மேலும் உள்ளூர் பாதுகாப்புப் பணிகளைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல், போக்குவரத்தை முறைப்படுத்தல், கோவில் திருவிழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளில் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல், தேர்தல் பாதுகாப்புப் பணி ஆகியவற்றில் காவல் துறையினருக்கு உதவியாக ஊர்க் காவல் படையினர் செயல்படுகின்றனர். இயற்கைச் சீற்றங்களின்போதும், ஏனைய அவசர காலங்களின்போதும் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்கின்றனர்.

அண்மைக் காலமாக, ஊர்க் காவல் படையினர் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம், மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளிலும் அரசு அதிகாரிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

## கடலோர பாதுகாப்புப் படை

1994 ஆம் ஆண்டில் கடலோர பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டது. எரிபொருள், மருந்துப் பொருட்கள் மற்றும் இன்றியமையாப் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் கடல்வழியாக கடத்தப்படுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டுக்குள் போராளிகளின் ஊடுருவலைத் தடுக்கவும், மீனவர்களும், போராளிகளும் இணைந்து சட்டத்திற்கு புறம்பாக இயங்குதலைத் தவிர்க்கவும் இப்படை அமைக்கப்பட்டது.



2004 ஜூலை 31]

கடலோர பாதுகாப்புப் படை தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் அறுபது சோதனைச் சாவடிகளை அமைத்துக் கண்காணித்து வருகிறது. இது தவிர, கப்பற்படை, கடலோரக் காவல் படை, உள்ளூர்க் காவல் துறை, மீன் வளத் துறை, சுங்கம் மற்றும் வருவாய்த் துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து இப்படை பணியாற்றி வருகிறது. 141 கடலோரக் கிராமங்களில் கிராமக் கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் மூலமாகக் கடலோரப் பாதுகாப்பு குறித்து நுண்ணறிவுத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

## ரயில்வே காவல் படை

1932 ஆம் ஆண்டில் திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு ரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு சென்னையிலும் ரயில்வே காவல் படை துவக்கப்பட்டது. இப்படை காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையின்கீழ், 31 ரயில்வே காவல் நிலையங்கள் மற்றும் 26 புறக்காவல் நிலையங்களுடன் தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது.

ரயில் பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகள் பாதுகாப்பில் ரயில்வே காவல் படையினர் முக்கியக் கவனம் செலுத்தி வருகின்றனர். முக்கியப் பிரமுகர்களுக்கும், ரயில்வே சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதுடன் குற்றத் தடுப்பு மற்றும் கண்டுபிடிப்புப் பணிகளையும் ரயில்வே காவல் படை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்களுக்கு உதவும் நோக்குடன் இம்மாநிலத்திலுள்ள முக்கிய ரயில் நிலையங்களில் 24 மணி நேரமும் இயங்கும் 14 உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## மதுவிலக்கு அமல் பிரிவு

கள்ளச்சாராயம் காய்ச்சுவது, அதனைக் கடத்துவது, இருப்பில் வைத்திருப்பது, விற்பனை செய்வது, போலி மது பானம் தயாரிப்பது, அனுமதி இல்லாத மதுபானங்களை விற்பனை செய்வது ஆகியவற்றை முற்றிலுமாகத் தடுக்கவும், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாக சாராயம் மற்றும் மதுபானங்களைக் கடத்துவதைத் தடுத்து நிறுத்தவும் மதுவிலக்கு அமல் பிரிவு அமைக்கப்பட்டது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் ஒருவரின் தலைமையின்கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. காவல் துறை ஆய்வாளர் ஒருவரது தலைமையில் மதுவிலக்கு அமல் பிரிவு அலகுகள் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டில் மொத்தம் 94 அலகுகள் செயல்படுகின்றன.

2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் (1–4–2004 வரை) 2.36 இலட்சம் குற்ற நிகழ்வுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 2.17 இலட்சம் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே காலகட்டத்தில், 96.05 இலட்சம் லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. கர்நாடகத்திலிருந்தும், பாண்டிச்சேரியிலிருந்தும் கடத்தி வரப்பட்ட 40,398 லிட்டர் போலி மற்றும் அனுமதி பெறா மதுபானங்கள் கைப்பற்றப்பட்டன. 3.71 இலட்சம் லிட்டர் எரிசாராயமும், 175 லிட்டர் மெத்தனாலும் பறிமுதல் செய்யப்பட்டன. 149 பெண் குற்றவாளிகள் உட்பட 898 மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு கள்ளச்சாராயத் தடுப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 1991 நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது. காவல் துறை உதவி ஆய்வாளர்கள், இரண்டாம் நிலை ஆண் மற்றும் பெண் காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் தீயணைப்பு வீரர்கள், சிறைத் துறையின் இரண்டாம் நிலை ஆண் மற்றும் பெண் சிறைக் காவலர்கள் (வார்டர்கள்) ஆகியோரைத் தேர்வு செய்யும் பொறுப்பு இவ்வாரியத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 8431 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள், 2306 இரண்டாம் நிலை பெண் காவலர்களைத் தேர்வு செய்ய அரசு உத்தரவிட்டது. 8431 ஆண் காவலர்களில், 7845 நபர்களுக்கு பணி நியமன உத்தரவு அளிக்கப்பட்டு, 1–12–2003 முதல் அவர்கள் பயிற்சியில் உள்ளனர். மேலும் 2306 இரண்டாம் நிலை பெண் காவலர்களுக்கான ஆள் எடுப்பு அறிவிக்கை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் வாரியத்தால் விரைவில் வெளியிடப்பட உள்ளது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் காலியாக உள்ள பெண் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை நிரப்பவும், ஒவ்வொரு காவல் நிலையத்திலும், சட்டம்–ஒழுங்குப் பிரிவில் ஒரு பெண் உதவி ஆய்வாளர் என்ற வீதத்தில் நியமனம் செய்யவும், மொத்தம் 961 பெண் உதவி ஆய்வாளர்களைப் புதிதாகப் பணியமர்த்த அரசு உத்தரவிட்டுள்ளது. ஆள் எடுப்புப் பணி நடவடிக்கைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.



## காவல் பயிற்சிக் கல்லூரி

தமிழ்நாட்டில் காவல் பணியாளர்களுக்கான பயிற்சி, இக்கல்லூரியால் நடத்தப்பட்டு வருகிறது. காவல் துறையில் பணித்திறனுடன் கடமையாற்ற பயிற்சி ஒரு முக்கியமான அம்சமாகும். அடிப்படைப் பயிற்சித் திட்டத்தில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன; புதிய பயிற்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்லூரி நடத்தி வரும் பயிற்சித் திட்டங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பயிற்சி | பங்கேற்போர் மற்றும் பயிற்சி கால அளவு |
|---|---|---|
| 1 | பணிசார் பயிற்சி | நேரடி நியமனம் பெற்ற 55 ஆம் அணியைச் சேர்ந்த மூன்று இகா.ப தகுதி காண் பருவ அதிகாரிகள் 1-12-2003 முதல் 11-1-2004 வரை ஆறு வார கால பயிற்சி பெற்றனர். |
| 2 | அடிப்படைப் பயிற்சி | 1579 இரண்டாம் நிலைப் பெண் காவலர்கள் 3-3-2003 முதல் 30-11-2003 வரை 9 மாதப் பயிற்சி பெற்றனர். நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 21 காவல் துறை துணை கண்காணிப்பாளர்களுக்கு ஒரு வருட பயிற்சி அளிக்கப்பட்டது. நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 8 உதவி ஆய்வாளர்களுக்கு 15-12-2003 முதல் ஓராண்டு பயிற்சி.<br>183 காவலர்களுக்கு (ஆண்-136, பெண்-47) 21-7-2003 முதல் 20-4-2004 வரை 9 மாத பயிற்சி.<br>7832 ஆண் காவலர்களுக்கு 1-12-2003 முதல் அடிப்படைப் பயிற்சி. |
| 3 | பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சி | 212 ஆண் தலைமைக் காவலர்களுக்கும், 77 பெண் தலைமைக் காவலர்களுக்கும், 9 வார பயிற்சி. (19-1-2004 முதல் 20-3-2004 வரை) |
| 4 | பணியிடை பயிற்சி | 755 காவல் பணியாளர்களுக்கு 3 மாத பயிற்சி (1-1-2004 முதல் 31-3-2004 வரை) |

961 பெண் உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிப்பதற்கான ஆயத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது, 2004 ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டில் தொடங்கக்கூடும்.

காவல் துறை உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணை கண்காணிப்பாளர்கள் ஆகிய கள அலுவலர்களது பணித்திறமையை மேம்படுத்த பல்வேறு பாடங்களில் 60 செறிவுப் பயிற்சி வகுப்புகள் சுழற்சி நிதியத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்டன. பெண் ஆய்வாளர்கள் மற்றும் பெண் உதவி ஆய்வாளர்களுக்கு ஒருங்கிணைந்த புலன் விசாரணை முறை, ஆலோசனை மையங்களில் கையாள வேண்டிய உத்தி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

கணினி வழிக் குற்றங்கள், மேலாண்மை மற்றும் ஊடக மேலாண்மை, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், புவியியல் அடிப்படையிலான தகவல்களைச் சேகரித்தல், தேர்தல் பணி, காவலில் சித்ரவதை மற்றும் துன்புறுத்தலைத் தவிர்க்கும் நடவடிக்கை, போதை மருந்து கடத்தலைத் தடுத்தல் போன்றவை குறித்து உயரதிகாரிகளுக்குச் செறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

2003–2004 ஆம் ஆண்டில், காவல் துறைப் பயிற்சிக்கென ரூ.454.05 இலட்சம், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2128.31 இலட்சத்தில், ரூ.2103.3 இலட்சம் ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சமூக நீதி

சமூக நீதிப் பிரிவு, 1955 ஆம் ஆண்டின் குடியுரிமை பாதுகாப்புச் சட்ட விதிகளையும், 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின் பிரிவுகளையும் அமல்படுத்தி வருகிறது. மாநிலம் முழுமையும் செயல்பட்டு வரும் இப்பிரிவானது காவல் துறை தலைமை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. பதிவு செய்யப்படும் வழக்குகள் குறித்த விவரங்களையும் முக்கிய பிரச்சினைகள் குறித்த அறிக்கைகளையும், இப்பிரிவு, அரசுக்கு மாதம் இரு முறை அனுப்பி வருகிறது. இப்பிரிவு மேற்கொண்ட முயற்சியின் விளைவாக விழுப்புரம் மாவட்டம், வீரபயங்கரம் கிராமத்தில் ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த கோவில் பிரச்சினையில் தீர்வு காணப்பட்டது. வன்கொடுமைகள் நிகழ வாய்ப்புள்ள கிராமங்கள்/பகுதிகளைக் கண்டறிந்து அங்கு நிலைமைகளை இப்பிரிவு கூர்ந்து கவனித்து வருகிறது.



திருவண்ணாமலை மாவட்டம் புலவன்பாடி கிராமத்திலும், திருவாரூர் மாவட்டம் கிளிரியத்திலும், நாமக்கல் மாவட்டம் முஞ்சனூரிலும், ஆதிதிராவிடர்களுக்கும் மற்ற பிரிவினருக்கும் இடையே சுடுகாடு தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையில் இப்பிரிவு மேற்கொண்ட முயற்சிகளால் நல்ல தீர்வு காணப்பட்டது.

## குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு

இப்பிரிவானது, இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தையும், மத்திய அரசு மற்றும் தமிழக அரசு பிறப்பித்துள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் அமல்படுத்தி வருகிறது. காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநரின் தலைமையின்கீழ் குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுத் துறை செயல்பட்டு வருகிறது. இவருக்கு உதவிட காவல் துறைத் தலைவர் ஒருவரும் ஏனைய அதிகாரிகளும் உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 16 அலகுகள் இயங்கி வருகின்றன.

2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் (1–4–2004 வரை) 240 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, சுமார் 5,79,94,214 ரூபாய் பெறுமானமுள்ள கடத்தப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இக்காலகட்டத்தில் ரூ.12,70,74,000 மதிப்புள்ள 293 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 1980 ஆம் ஆண்டு கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருள்கள் வழங்கல் பராமரிப்புச், சட்டத்தின்கீழ் ஐந்து நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 6

### காவல் துறை வாகனக் கட்டமைப்பு

காவல் துறைப் பணியில் விரைந்து செயல்படுதல் மிக அவசியமான ஒன்றாக உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு காவல் துறையின் பயன்பாட்டிற்குத் தேவையான வாகன வசதிகளை, தமிழ்நாடு அரசு தொடர்ந்து அளித்து வருகிறது. 1-4-2004 அன்றைய நிலவரப்படி, தமிழகக் காவல் துறையின் மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 9065 ஆகும்.

வகை வாரியாக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள விவரம்.

**வகைவாரியான வாகன விவரங்கள்**




| | | |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | : | பேருந்து / லாரி |
| மிதரக வாகனங்கள் | : | சிற்றுந்து / வேன் |
| இலகுரக வாகனங்கள் | : | கார் / டாடா சுமோ / பொலிரோ / டொயோட்டா குவாலிஸ் |
| இரண்டு சக்கர வாகனங்கள் | : | மொப்பட் / மோட்டார் சைக்கிள் |
| இதர வாகனங்கள் | : | வஜ்ஜிரா / கிரேன் / கைதி பாதுகாப்பு வாகனம் / தண்ணீர் வீசி அடிக்கும் வாகனம் / ஆம்புலன்ஸ் |



2004 ஜூலை 31]

### தமிழ்நாடு காவல் துறை வாகனப் பணிமனைகள்

இரண்டு காவல் துறை வாகனப் பணிமனை மற்றும் பயிற்சிப் பள்ளிகள் 7-1-1976 முதல் ஆவடியிலும், 10-3-1988 முதல் திருச்சியிலும் இயங்கி வருகின்றன. காவல் துறை வாகனங்களில் ஏற்படும் அனைத்து வகைப் பழுதுகளும் இவ்விரு இடங்களில் சரி செய்யப்படுகின்றன.

2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் 1-4-2004 வரை திருச்சியில் உள்ள மண்டல காவல் துறை வாகனப் பணிமனையில் 998 பழுதுபார்ப்புப் பணிகளும், ஆவடியில் உள்ள பணிமனையில் 2,832 பழுதுபார்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 7

### காவலர் நலன்

காவல் துறைப் பணியாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனுக்கென பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

**1. தமிழ்நாடு காவலர் நல நிதி**

அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிவாரண உதவி அளிக்கும் நோக்கத்துடன் 1957 ஆம் ஆண்டு இந்நிதி துவக்கப்பட்டது. இந்நிதிக்கு, அதிகாரிகளிடமிருந்து நன்கொடைகளும், அரசிதழ் பதிவு பெறாப் பணியாளர்களிடமிருந்து சந்தாத் தொகையும் பெறப்படுகிறது. இந்நிதியிலிருந்து குடும்ப நிவாரண உதவி, சிறப்பு மருத்துவ நிவாரண உதவி மற்றும் கல்வி உதவித் தொகை ஆகியவை தகுதியுள்ள சந்தாதாரர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. 2003 ஆம் ஆண்டில் இந்நிதிக்கென அரசு ரூ.50 இலட்சம் அளித்துள்ளது. 2003 ஆம் ஆண்டில், 3,576 சந்தாதாரர்களுக்கு ரூ.1,31,44,500/- படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு கல்வி உதவித் தொகை**

1959 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியிலிருந்து தகுதிவாய்ந்த, அரசிதழ் பதிவு பெறாத காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரி, தொழிற்கல்லூரி ஆகியவற்றில் சேர்ந்து படிக்க உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிலிருந்தும் அவ்வப்போது பெறப்படும் நன்கொடை மற்றும் வருடாந்திரப் பங்களிப்பு மூலம் இந்நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியில் உள்ள மொத்த தொகை ரூ.1,16,254/-லிருந்து 2003 ஆம் ஆண்டில் 33 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக ரூ.1,12,500/- வழங்கப்பட்டுள்ளது.

**3. தமிழ்நாடு அரசு சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதி**

காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளின் கல்வி உதவிக்காக 1994 ஆம் ஆண்டில் இச்சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதியை நான் ஏற்படுத்தினேன். காவல் துறை பணியாளர்கள் இத்திட்டத்திற்கு நான்கு



2004 ஜூலை 31]

இலட்ச ரூபாய் செலுத்தியுள்ளனர். அரசு, தொகுப்பு நிதிக்குத் தனது பங்காக ரூ.16 இலட்சம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், இத்திட்டத்தின்கீழ், காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் சிறப்புக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வில் முதலிடம் பெறும் மாணவ/மாணவிக்கு ரூ.40,000/-மும், இரண்டாமிடம் முதல் ஒன்பதாமிடம் வரையில் பெறும் மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.20,000/-மும் மேற்படிப்புக்காக அளிக்கப்பட்டு வருகிறது.

**4. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தை 1993 ஆம் ஆண்டில் நான் அறிமுகப்படுத்தினேன். இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளித் தேர்வில் (பிளஸ்-2) மாவட்ட அளவில் முதலிடம் பெறுவோருக்கு ரூபாய் 7,000/-, இரண்டாமிடம் பெறுவோருக்கு ரூபாய் 5,000/-, மூன்றாமிடம் பெறுவோருக்கு ரூபாய் 3000/-அளிக்கப்படுகிறது. இதே போன்று, பத்தாம் வகுப்பு தேர்வில் மாவட்டத்தில் முதலிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் பெறுவோருக்கு முறையே ரூ.6,000/-, ரூ.4,000/-, ரூ.2,000/- வழங்கப்படுகிறது. 2003 ஆம் ஆண்டில் காவல் துறையினரின் குழந்தைகள் 224 பேருக்கு ரூ.9.9 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**5. காவல் துறை மருத்துவமனைகள்**

காவல் துறைப் பணியாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் மருத்துவ உதவி அளிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் 11 காவல் துறை மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

**6. தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர் நலவாழ்வு நிதி**

இத்திட்டம் என்னால் 1995-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பெரிய அளவில் மருத்துவ சிகிச்சை அல்லது சிறப்பு அறுவைச் சிகிச்சைக்கென நிதியுதவி அளிக்கப்படுகிறது. 13 நோய்கள் இத்திட்டத்தின்கீழ் கொணரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மருத்துவ சிகிச்சை அளித்திட 145

மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உறுப்பினராக சேரும் ஒவ்வொரு பணியாளரும் மாதம் பதினைந்து ரூபாய் செலுத்துகிறார். ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்திற்கென அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி வருகிறது. 2003 ஆம் ஆண்டில், 178 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். அவர்களுக்கு நிதியுதவியாக ரூ.1,11,44,542/– வழங்கப்பட்டுள்ளது.

### 7. குடும்ப நல நிதி

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பணியாளரும் மாதச் சந்தாவாக ரூ.20/– செலுத்துகின்றனர். இறக்க நேரிடும் ஊழியரின் வாரிசுதாரருக்குக் கருணைத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது.

### 8. வீர தீரச் செயல் புரியும்போது காவல் துறை பணியாளர்கள் உயிரிழந்தாலோ அல்லது காயமடைந்தாலோ கொடுக்கப்படும் கருணைத் தொகை

கடமை ஆற்றும் போது வீர தீரச் செயல்கள் புரிந்து உயிரிழந்த அல்லது காயமடைந்த காவல் துறைப் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு கருணைத் தொகை வழங்க அரசு 2001 ஆம் ஆண்டில் உத்தரவிட்டது:–

| | | |
|---|---|---|
| 1) | இறப்பு | ரூ.5,00,000/– |
| 2) | நிரந்தர முடக்கம் | ரூ.1,00,000/– |
| 3) | கொடுங்காயம் | ரூ.20,000/– |
| 4) | சிறு காயம் | ரூ.10,000/– |

அதிமுக்கியப் பாதுகாப்புப் பிரிவு, கமாண்டோ படை மற்றும் கமாண்டோ பள்ளியில் பணியாற்றி, வீர தீரச் செயல் புரிந்து உயிர் இழக்கும் காவல் துறை துணை கண்காணிப்பாளரின் வாரிசுகளுக்கு ரூபாய் பத்து இலட்சமும், காவலர் முதல் ஆய்வாளர்கள் வரையிலான பதவி வகித்த பணியாளர் வாரிசுகளுக்கு ரூபாய் ஆறு இலட்சமும் வழங்கப்படுகிறது. நிரந்தர உடல் ஊனம், பார்வை இழப்பு, உணர்வு இழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய் நான்கு இலட்சமும், உருக்குலைந்தோருக்கு இரண்டு இலட்சமும் என அனைத்து





நிலைக் காவல் பணியாளர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக உயிரிழந்த பணியாளர் கடைசியாக வாங்கிய சம்பளம், அவர் பணியில் நீடித்திருந்தால் என்றைக்கு ஓய்வு பெறுவாரோ அந்த நாள் வரை வழங்கப்படும்.

தங்களது உயிரைத் துச்சமென மதித்துக் கடமையாற்றுகின்ற சிறப்பு அதிரடிப் படை வீரர்களுக்கு வழங்கப்படுகின்ற கருணைத் தொகை குறைவு என்கின்ற காரணத்தாலும், நிரந்தர உடல் முடக்கம் அடைகின்ற வீரர்களுடைய குடும்பங்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், அவர்களுக்கு உயரிய பாதுகாப்பு உணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்ற வகையிலும், பணியில் இருக்கும்போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீர மரணம் அடையும் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடையும் சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் அனைவருக்கும், அவர்களது பதவி நிலைகளைக் கருத்தில் கொள்ளாது, கருணைத் தொகையினை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி நான் ஆணையிட்டேன்.

2003–2004 ஆம் ஆண்டில், காயமடைந்த பத்து நபர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 9. தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர் குழு காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு அரசு காவல் துறையின் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப் படைப் பிரிவு ஆகியவற்றில் பணியாற்றுபவர்களுக்கு ஓர் உத்வேகத்தை அளித்து, அவர்கள் முழு ஈடுபாட்டுடனும், துணிவுடனும் பணியாற்ற ஊக்கம் அளிக்கும் வகையில் 1993 ஆம் ஆண்டில் குழுக் காப்பீட்டுத் திட்டம் எனும் திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். பின்னர், இத்திட்டம் இதர காவல் துறை பணியாளர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், பணியின்போது இறக்க நேரிடும் (தற்செயல் மரணம் உட்பட) அல்லது நிரந்தர முடக்கம் அல்லது பகுதி உடல் ஊனம் ஏற்படும் தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்படுகிறது:–

| | இறப்பு அல்லது நிரந்தர முடக்கம் | பகுதி உடல் ஊனம் |
|---|---|---|
| 1. சிறப்பு அதிரடிப் படை, கமாண்டோ பள்ளி, கமாண்டோ படை, அதி விரைவு படை மற்றும் அதி முக்கிய நபர்கள் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் அனைத்து பணியாளர் | ரூ.10 இலட்சம் | 50 சதவீதம் |
| 2. ஏனைய காவல் பணியாளர்கள்<br>i) காவலர் முதல் கூடுதல் துணைக் கண்காணிப்பாளர் வரை | ரூ.1 இலட்சம் | |
| ii) காவல் துறை கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் வரை | ரூ.5 இலட்சம் | ஊன அளவிற்கேற்ப நிதி உதவி வழங்கப்படும் |
| iii) காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் | ரூ.7.5 இலட்சம் | |
| iv) காவல் துறைத் தலைமை இயக்குநர் | ரூ.10 இலட்சம் | |

ஆனால், பணியில் இருக்கும் போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீர மரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைகின்ற காவல் துறையினரின் குடும்பத்தினர், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி அல்லது அரசு வழங்குகின்ற கருணைத் தொகை இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே பெற முடியும் என்று தற்போது விதிமுறை உள்ளது. இந்த நிலையினை மாற்றி வீர மரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைபவர்களின் தியாகத்தைக் கருத்தில் கொண்டு, அரசின் கருணைத் தொகையுடன், குழு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற நிதியையும் சேர்த்து வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.



2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென அரசு ரூ.1 கோடி வழங்கியுள்ளது. இறந்து போன 87 காவல் துறை பணியாளர்களின் குடும்பங்களுக்கும், பகுதி உடல் ஊனம் அடைந்த நான்கு காவல் துறை பணியாளர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் ரூ.93.79 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 10. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதி

2003–2004 ஆம் ஆண்டில் பணியில் இருக்கும்போது இறந்த 63 காவல் துறை பணியாளர்களின் வாரிசுகளுக்கு சிறப்பு நிகழ்வாகக் கருதி இந்நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 8

### காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

காவல் துறைக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் அனைத்தையும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கவனித்து வருகிறது.

**கட்டடம் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்**

(அ) 2003–2004 ஆம் ஆண்டில் 124.061 கோடி ரூபாய் செலவில் 3,000 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டது.

(ஆ) 2003–2004 ஆம் ஆண்டில் (1–4–2004 வரை) 2,946 குடியிருப்புகளும் 120 காவல் நிலையங்களுக்கான கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

(இ) 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.102.6 இலட்சம் செலவில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, மாவட்ட ஆயுதப் படை, பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பெண் காவலர்களுக்காக 114 ஓய்வறைகள், கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்ட அரசு ஆணை வழங்கியுள்ளது. இதற்கான கட்டுமானப் பணி தமிழ்நாடு காவல் வீட்டு வசதி வாரியத்தால் தொடங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

(ஈ) மாவட்டங்களிலிருந்து சென்னைக்குப் பணி நிமித்தமாக வரும் பெண் அதிகாரிகள், மற்றும் பெண் காவலர்களுக்கென சென்னை ஐசக் தெருவில், ரூ.62.2 இலட்சம் செலவில் விருந்தினர் அறைகள் / ஓய்வறைகள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 1349, உள் துறை (காவல்–10) நாள் 17–12–2003–ல். நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(உ) மாவட்டங்களிலிருந்து சென்னனக்குப் பணி நிமித்தமாக வரும் ஆண் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கென சென்னை ஜாபர் சரங் தெருவில், ரூ.67.3 இலட்சம் செலவில் விருந்தினர் அறைகள் / ஓய்வறைகள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 1350, உள் துறை (காவல்–10) நாள் 17–12–2003–ல் அரசு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



### தமிழ்நாட்டிலுள்ள காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கையைக் காட்டும் விளக்கப் படங்கள்

**காவல் நிலையங்கள்**




**காவலர் குடியிருப்புகள்**

***1-4-2004 நிலவரப்படி மொத்த காவலர்களின் எண்ணிக்கை — 95427***



[2004 ஜூலை 31

# அத்தியாயம் 9

## காவல் துறையை நவீனமயமாக்குதல்

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதையும், குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பதையும், குற்றங்கள் நிகழாமல் தடுப்பதையும் முதன்மைப் பணியாகக் கொண்டுள்ள காவல் துறையானது, மாறிவரும் தேவை மற்றும் காலத்திற்கேற்பவும், வளர்ச்சியடைந்துவரும் சூழலுக்கேற்பவும் பணியாற்றிடத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. குற்றம் புரிவோர் சிறந்த தகவல் தொடர்பு சாதனங்களையும், ஆயுதங்களையும், வாகனங்களையும் பயன்படுத்தி வரும் இந்தக் கால கட்டத்தில் காவல் துறையும் அதற்கேற்றவாறு தன்னை நவீனப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. இதனை எதிர்கொள்வதற்காக, கட்டடம், வீட்டு வசதி, வாகன வசதி, ஆயுதம், தகவல் தொடர்பு சாதனங்கள், பயிற்சி, தடய அறிவியல் கூடங்கள் மற்றும் கணினி வசதிகள் என்ற வகைகளில் காவல் துறையை நவீனமயமாக்க, ஒவ்வோர் ஆண்டும் இந்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. அதற்கேற்றவாறு மாநில அரசும் ஒவ்வொரு ஆண்டும் தனது பங்கிற்கு 2002-2003 வரையில் சமமாக நிதி ஒதுக்கி வந்தது. 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு 60:40 என்ற அடிப்படையில் உள்ளது.

இந்திய அரசும், மாநில அரசும் வழங்கி வரும் நிதியைக் கொண்டு, நெடுஞ்சாலை ரோந்துப் பணிக்காகப் புதிய வாகனங்களும், மேம்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களும், கைதிகளை ஏற்றிச் செல்லவும் மற்றும் அவர்களுக்கான வழித்துணைக் காவலர்களுக்குமான வாகனங்களும், அதிக சக்தி வாய்ந்த உயிருக்கு ஊறு விளைவிக்காத ஆயுதங்களும், நவீன வகை வாக்கி-டாக்கி தகவல் தொடர்பு சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் தகவல் தொடர்பு வசதி, பெரும் பரப்பு வலையமைப்பு, அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் கணினி, தகவல் தொடர்புப் பிரிவில் புதிய தொழில்நுட்பங்களைக் கையாளுதல் போன்ற வசதிகளும் காவல் துறையில் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் காவல் துறைக்கு மிக நவீன உயர் தொழில்நுட்பக் கருவிகள் பெறப்படுகின்றன.

கடந்த மூன்றாண்டுகளாக காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மத்திய அரசும், மாநில அரசும் ஒதுக்கிய நிதி விவரங்கள் பின்வருமாறு:



2004 ஜூலை 31]

| ஆண்டு | மத்திய அரசு ஒதுக்கியது | மாநில அரசு ஒதுக்கியது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| 2001-2002 | 68.10 | 68.10 | 136.20 |
| 2002-2003 | 68.10 | 68.10 | 136.20 |
| 2003-2004 | 52.47 | 36.67 | 89.14 |
| மொத்தம் | 188.67 | 172.87 | 361.54 |

### காவல் துறையை நவீனமயமாக்குதல்

*2003-2004 ஆம் ஆண்டுக்கான வகைவாரியான நிதி ஒதுக்கீடு*
*(ரூபாய் இலட்சத்தில்)*




- கட்டடங்கள் - 1531
- வீட்டுவசதி - 2255
- வாகனங்கள் - 2218
- ஆயுதங்கள் - 5
- தொலைத்தொடர்பு - 235
- பயிற்சி - 454
- தடய அறிவியல் ஆய்வகம் / விரல் ரேகைப் பதிவுக்கூடம் - 45
- உபகரணங்கள் - 1444
- கணினிமயமாக்கல் - 727

# அத்தியாயம் 10

## புதிய தொடக்கங்கள்

### 1. நெடுஞ்சாலை சுற்றுக்காவல் பணி

பாதுகாப்பான சாலைப் போக்குவரத்தைப் பேணுவதில் நெடுஞ்சாலை சுற்றுக்காவலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 1991 முதல் 1996 வரை நான் மாநில முதலமைச்சராக முதல் முறை பதவி வகித்த போது நெடுஞ்சாலை சுற்றுக்காவல் திட்டத்தினை நான் உருவாக்கினேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அடுத்து வந்த அரசு இந்தத் திட்டத்தை புறக்கணித்து விட்டதால், நெடுஞ்சாலை சுற்றுக்காவல் திட்டம் செயலற்றுப் போய் விட்டது. மீண்டும் 2001 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நெடுஞ்சாலை சுற்றுக்காவல் திட்டத்தினை முழுவதுமாக மாற்றியமைக்கவும் விரிவாக்கம் செய்யவும் ஆணையிட்டேன்.

அவசர கால சாலை விபத்து நிவாரண மையங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் புதிய நெடுஞ்சாலை சுற்றுக்காவல் திட்டம் 23–8–2003 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. 160 நெடுஞ்சாலை சுற்றுக்காவல் குழுக்கள், 80 புதிய வாகனங்களைக் கொண்டு, இரண்டு பிரிவாக, முறை மாற்றுப் பணி மூலம் செயல்படுகின்றன. 24 மணி நேரமும் தேசிய நெடுஞ்சாலைகளில் சுற்றுக்காவல் மேற்கொள்ளும் குழுக்கள் பயன்படுத்தும் இந்த வாகனங்கள் ஒவ்வொன்றிலும் வாகனங்களின் வேகத்தை அறியும் ஒரு ராடார் துப்பாக்கியும், மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுபவர்களைக் கண்டுபிடிக்கும் கருவியும் (Breathalyser) பொருத்தப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைகளில் அதிகமாக விபத்து ஏற்படக்கூடிய பகுதிகளுக்கான அவசர கால விபத்து நிவாரண மையங்களின் முதல் தொகுப்பு 21–11–2002 அன்று என்னால் துவக்கப்பட்டது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 67 அவசர கால சாலை விபத்து நிவாரண மையங்கள், நெடுஞ்சாலை சுற்றுக்காவலுடன் இணைந்து செயல்படுகின்றன. சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக விரைந்து, 'பொன்னான நேரம்' (Golden Hour) என்று சொல்லப்படும் விபத்து நடந்த ஒரு மணி நேரத்திற்குள், அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதன் மூலம் அரிய பல மனித உயிர்களை காப்பாற்றுவதற்கு இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது. 2002 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் 2004 ஆம் ஆண்டு மே திங்கள் வரையில் நிகழ்ந்த சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்ட 9,395





நபர்கள் இந்த அவசர சிகிச்சை நிவாரண மையங்களின் மூலம் உயிர் காக்கப்பட்டுள்ளனர். மேலும் காயமுற்ற 7,422 பேர் உடனடியாக மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்காக இலவசமாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

மண்டல காவல் துறைத் தலைவர்கள் வாரம் ஒரு முறையும், காவல் துறை இயக்குநர் மாதம் ஒரு முறையும், நெடுஞ்சாலை சுற்றுக்காவல் திட்டப் பணிகளை தீவிரமாக கண்காணித்து, ஆய்வு செய்கின்றனர்.

### 2. சென்னை மாநகரில் மேற்கொள்ளப்படும் சுற்றுக்காவல் பணி மற்றும் சென்னை மாநகரக் காவல் பணிக்கான நவீன காவல் கட்டுப்பாட்டு அறை

சென்னை மாநகரில் மோட்டார் வாகனங்கள் மூலம் சுற்றுக்காவலைத் தீவிரப்படுத்தும் வகையில் 40 டொயாட்டோ குவாலிஸ் வாகனங்களையும், 162 மோட்டார் சைக்கிள்களையும் வாங்குவதற்கு நான் ஆணையிட்டேன்.

மேலும், சென்னை நகரில் சுற்றுக்காவலை மேம்படுத்தும் வகையில், சென்னை மாநகர காவல் துறைக்குப் புதிதாக 36 பொலிரோ சுற்றுக்காவல் வாகனங்களும், 229 சுற்றுக்காவல் வாகனங்களும் (சட்டம் & ஒழுங்கு உதவி ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள்) மற்றும் போக்குவரத்தைக் கண்காணிக்க 100 வாகனங்களும் (போக்குவரத்து உதவி ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள்) வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரக் காவல் துறைக்கு, அனைத்து வசதிகளையும் கொண்ட நவீன கட்டுப்பாட்டு அறையை 18–2–2004 அன்று நான் துவக்கி வைத்தேன். அக்கட்டுப்பாட்டு அறையில் அவசர அழைப்புகளுக்கு பணியாளர்களை அனுப்பும் தானியங்கி முறை, வாகனங்கள் இருக்குமிடம் காட்டும் தானியங்கி முறை (Automatic Call Despatch and Automatic Vehicle Location System) ஆகிய வசதிகள் உள்ளன. இதன் மூலம் சுற்றுக்காவலை சிறந்த முறையில் ஒருங்கிணைத்து அதன் மூலம் குற்ற நிகழ்வுகள் மற்றும் விதிமீறல்களை கண்காணிப்பதிலும், கண்டுபிடிப்பதிலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் பெரிதும் உதவிகரமாக உள்ளன.

சென்னை மாநகரில் மோட்டார் வாகனங்கள் மூலம் சுற்றுக்காவலைத் தீவிரப்படுத்தும் பணிகள் நவீன கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளுடன் ஒன்றிணைந்து, அவசர தொலைபேசி

அழைப்புகளின்மீது உடனடி நடவடிக்கை எடுக்க வழிகோலியுள்ளது. இம்முறை சென்னை மாநகரில் மோட்டார் வாகனங்கள் மூலம் சுற்றுக்காவலைத் தீவிரப்படுத்தும் முறையில் ஒரு புதிய அத்தியாயத்தை துவக்கியுள்ளது.

**3. மக்கள் சமுதாயக் காவல் கழகம்**

காவல் துறை, மக்களுடன் தோழமையுடன் பணியாற்றுவதை ஊக்குவிக்கும் கொள்கையின் ஒரு பகுதியாக, ஆசியாவிலேயே முதல் முறையாக சமுதாய காவல் அமைப்புக்காக, "மக்கள் காவல் கழகம்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தும் முடிவை தமிழ்நாடு அரசு அறிவித்தது. 2002 ஆம் ஆண்டுக்கான புதிய படைப்புக்கான இங்கிலாந்து அரசியின் விருதின்கீழ் சென்னையில் ஏற்படுத்தப்பட்ட காவல் நண்பர்கள் பல் ஊடகப் பயிற்சி மையம், மக்கள் சமுதாய காவல் கழகமாக செயல்படுகிறது. மாவட்டம் ஒன்றுக்கு ரூ.50,000/- என்ற ஆண்டு ஒதுக்கீட்டின் ஒரு பகுதி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 7,000 காவல் நண்பர்களுக்கும் 7,000 காவல் துறை பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**4. மகளிர் காவல் படை**

பல்வேறு தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் பணியாற்றி வந்த மகளிர் காவலர்களைக் கொண்டு மகளிர் காவல் படை ஒன்று, 30-1-2004 அன்று துவக்கப்பட்டு ஆவடியில் செயல்பட்டு வருகிறது. இந்த வகையில் இந்தியாவிலேயே முற்றிலும் மகளிரைக் கொண்ட காவல் படையை உடைய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

**5. மகளிர் நீதிமன்றங்கள்**

மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விரைந்து விசாரித்து முடிக்க சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் மகளிர் நீதிமன்றம் ஏற்படுத்த 28-6-2002 அன்று அரசு ஒப்புதல் வழங்கியது. மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பெருநகரங்களில் மகளிருக்கு எதிரான குற்ற வழக்குகளை மட்டுமே விசாரிப்பதற்காக நான்கு மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இத்தகைய மகளிர் நீதிமன்றங்கள் மகளிருக்கு எதிரான குற்றங்களை விரைந்து விசாரித்து முடிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.





**6. சென்னைப் பெருநகரில் நவீன காவல் கட்டுப்பாட்டு அறை**

ரூ.108 இலட்சம் செலவில், சென்னை எழும்பூரில் உள்ள பெருநகரக் காவல் ஆணையர் அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள நவீன காவல் கட்டுப்பாட்டு அறை 18-2-2004 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட வசதிகள் உள்ளன:

- 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஒருங்கிணைந்த அழைப்பு மையம்
- வாகனங்கள் இருப்பிடத்தை அறியும் தானியங்கி வசதி
- மின் ரோந்து
- பெண்களுக்கான ஆபத்துக் கால தொலைபேசி உதவி
- சிறார்களுக்கான ஆபத்துக் கால தொலைபேசி உதவி
- மூத்த குடிமக்களுக்கான ஆபத்துக் கால தொலைபேசி உதவி
- காற்று மற்றும் ஒலி மாசுபடுத்தல் குறித்த தகவல் தெரிவித்தல்
- கால்நடைகளுக்குக் கொடுமை இழைத்தல் குறித்த தகவல் தெரிவித்தல்
- தன்னைக் குறித்த அடையாளம் வெளிக்காட்டாமல் தகவல் தெரிவித்தல்

இதேபோன்ற நவீன கட்டுப்பாட்டு அறைகள் மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் தலா ரூ.110 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**7. இரவு நேரப் பணிப்படி**

இரவு நேரப் பணிபுரியும் ஆய்வாளர் நிலை வரையிலான ரயில்வே காவல் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.20/- என்ற வீதத்தில் மாதத்தில் 10 நாட்களுக்கு இரவு நேரப் பணிப்படி வழங்கிட அரசு உள் (காவல்-14) துறையின் 24-3-2003 ஆம் நாளிட்ட அரசாணை எண் 245-ல் அனுமதி வழங்கியுள்ளது.

**8. காவல் துறைப் பணியாளர்களின் சீருடை தயாரிக்கக் கொடுக்கப்படும் பணம் அதிகரிப்பு**

போக்குவரத்துப் பிரிவில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடை தையற் கூலியை ரூ.280/-ல் இருந்து ரூ.450/- ஆகவும் (இரண்டு பேண்ட், நான்கு சட்டை) மற்ற பிரிவில் பணியாற்றுபவர்களுக்கு ரூ.200/-ல் இருந்து ரூ.300/- ஆகவும் (2 இணை) உயர்த்தி 28-7-2003 அன்று அரசு ஆணை பிறப்பித்தது. இதன் காரணமாக, அரசு கூடுதல் தொடர் செலவினங்களின்கீழ் ரூ.84.48 இலட்சம் அனுமதித்துள்ளது.

**9. சிறுவர் மன்றங்கள் அமைத்தல்**

குடிசைப்பகுதி சிறுவர்களை சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதிலிருந்து தடுத்து, ஆக்கபூர்வமான வழிகளில் நெறிப்படுத்தி, மக்களுக்கு காவல் துறை உற்ற நண்பன் என்ற சூழலை நிலைப்படுத்த மாநிலம் முழுவதிலும் அமைக்கப்பட்ட 117 சிறுவர் மன்றங்களை 17-9-2003 அன்று நான் தொடங்கி வைத்தேன். இவற்றில் அரசால் அமைக்கப்பட்ட சிறுவர் மன்றங்கள் 64 ஆகும். மேலும், சென்னை நகரத்தில் மட்டும் 53 சிறுவர் மன்றங்கள் நிறுவனங்களின் ஆதரவுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

**10. கூடுதல் ஆயுதப் படைப் பிரிவுக்கு அனுமதியளித்தல்**

பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப ஆயுதப் படைப் பிரிவை அதிகரிக்கும் வண்ணம் முதற்கட்டமாக மத்திய சிறைச்சாலைகள் அமைந்துள்ள 9 இடங்களில் ஆயுதப் படைப் பிரிவுகளைத் துவக்க, 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் நாள் அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**11. விளையாட்டு மேம்பாடு நிதி**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் காவல் துறையினரின் திறமையை வெளிப்படுத்துகிற வகையில், விளையாட்டு மேம்பாடு நிதி ஒன்றை அரசாணை நிலை எண் 1004, உள் துறை (காவல்-7), நாள் 17-10-2003-ல் ஏற்படுத்தி, தமிழக அரசு ரூ.15 இலட்சம் நிதியை ஒதுக்கியுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி, காவல் துறை விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, நவீன விளையாட்டு சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன.



**12. காவல் துறை-பொதுமக்கள் விளையாட்டுப் போட்டி**

காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தவும், மக்களிடையே காவல் துறை மதிப்பை உயர்த்தவும், மாவட்டங்களிலும், ஆணையரகங்களிலும், காவலர்-பொதுமக்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசாணை (நிலை) எண் 679, உள் துறை (காவல்-13), நாள் 8-8-2003-ல் ரூ.17.5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**13. கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படும் நபர்களுக்கான உணவுப் படியை அதிகரித்தல்**

கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட நபர்களுக்குரிய உணவுப் படியை நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.15-ல் இருந்து ரூ.35 ஆக உயர்த்தி 28-8-2003 அன்று அரசாணை வழங்கப்பட்டது.

**14. இருபத்து ஏழு காவல் துறை ஆய்வாளர் பதவிகளை நிலை உயர்த்துதல்**

2003 ஆம் ஆண்டில் சென்னை நகரில், குற்றப் பிரிவிற்கு தனியே ஆய்வாளர் இல்லாத காவல் நிலையங்களில் 27 உதவி ஆய்வாளர் பதவிகளை ஆய்வாளர்களாக நிலை உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்தது.

**15. நூறு ஆயுத சேமப்படை உதவி ஆய்வாளர் பதவிகள் ஏற்படுத்த அனுமதியளித்தல்**

சென்னை மாநகரில் போக்குவரத்து சீரமைப்புக்காகவும், அதிகாரிகளை ரோந்துப் பணியில் அதிகமாக ஈடுபடுத்தவும் 2003 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் மோட்டார் சைக்கிளுடன்கூடிய நூறு ஆயுத சேமப்படைக் காவல் துறை உதவி ஆய்வாளர் பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

**16. 231 காவல் துறை உதவி ஆய்வாளர் பதவிகள் ஏற்படுத்த அனுமதியளித்தல்**

சென்னை மாநகரில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றத் தடுப்புப் பணிகளுக்காக 77 காவல் நிலையங்களில் 231 உதவி ஆய்வாளர் பதவி ஏற்படுத்த 2003 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்தது.

**17. அலுவலக உதவியாளர் பதவிகளை இளநிலை உதவியாளர் பதவிகளாக நிலை உயர்த்துதல்**

காவல் துறையில் அடிப்படை நிலையில் உள்ள அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடு, 2004 ஆம் ஆண்டில் 21 அலுவலக உதவியாளர் பதவிகள், இளநிலை உதவியாளர் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**18. நாற்பது அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்குதல்**

அரசு, மாநிலம் முழுவதும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஏற்கெனவே, 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2003 ஆம் ஆண்டில் மூன்றாவது கட்டமாக மேலும் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் துவக்க அரசு ஒப்புதல் அளித்தது. 1-4-2004 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**19. கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்கம்**

நிர்வாகம் செவ்வனே நடக்கவும், பயனுள்ள முறையில் இயங்கவும் தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி, தருமபுரி என்று இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டம் 9-2-2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்துக்குத் தனியே ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**20. இதர முயற்சிகள்**

2003 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட புதிய முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது:

(1) சென்னை மாநகரத்தில் 25 முக்கிய சந்திப்புகளில் உள்ள போக்குவரத்து விளக்குகளில் விநாடிகளைக் காட்டும் கருவி (Count Down Timers) அமைக்கவும், தற்போது 60 சந்திப்புகளில் உள்ள போக்குவரத்து விளக்குகளை L.E.D. அமைப்பு கொண்ட விளக்குகளாக நிலை உயர்த்தவும் அரசு ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது.



(2) 67 காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு மடியமர் கணினிகள் (Lap Top) வழங்கப்பட்டுள்ளன.

(3) விரைந்து தகவல் பரிமாற்றங்கள் செய்துகொள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் இணையதள அஞ்சல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) காவல் துறை தலைமை இயக்குநர், மண்டல காவல் துறைத் தலைவர்கள், காவல் துறை ஆணையாளர்கள், சரக காவல் துறைத் துணைத் தலைவர்கள், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகிய அதிகாரிகளுக்கு காணொலிக் கருத்தரங்க வசதி (வீடியோ கான்பரன்சிங்) செய்யப்பட்டுள்ளது.

(5) போக்குவரத்தைக் கண்காணிக்கவும், ஒழுங்குபடுத்தவும், சென்னை மாநகரில் முக்கியமான எட்டு சந்திப்புகளில் வீடியோ காமிரா பொருத்தப்பட்டு உள்சுற்று தொலைக்காட்சி வழியே மேற்பார்வையிடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(6) தற்போதுள்ள 'அனலாக்' தொலைத்தொடர்பு முறையை 'டிஜிட்டல்' தொலைத் தொடர்பாக மாற்ற அனுமதிக்கப்பட்டுப் பணி நடந்து வருகிறது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும், தொலைத் தொடர்பு சீராக அமையும்.

(7) தமிழ்நாடு காவல் துறையின் ஆயுத பலத்தை அதிகரிக்கும் வகையில் திருச்சி ஆயுதத் தொழிற்சாலையிலிருந்து முந்நூறு 5.56 'இன்சாஸ்' ரக துப்பாக்கிகள் வாங்கப்பட்டன. 12-போர் பம்ப் ஆக்ஷன் திறன் கொண்ட 15 துப்பாக்கிகளும் வாங்கப்பட்டன.

(8) முக்கிய நபர்கள் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் வெடிகுண்டு மிரட்டல் ஆகியவை பெருகி வருவதால் சென்னை மற்றும் 11 காவல் துறை சரக தலைமை இடங்களுக்கும் மற்றும் தலைமைச் செயலக பாதுகாப்பு மாவட்டத்திற்கும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் அணி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு அணிக்கும் வெடிபொருள் ஆவி கண்டுபிடிப்பான், கண்ணி வெடிகளை கண்டறியும் கருவி, எக்ஸ்-ஊடுகதிர் ஆய்வு கருவி, கையடக்க உலோகக் கண்டுபிடிப்பான், வாயிலில் பொருத்தப்படும் உலோகக் கண்டுபிடிப்பான்,

பல்வேறு பகுதி வாயிலில் பொருத்தப்படும் உலோகக் கண்டுபிடிப்பான், வெடிபொருள் கண்டுபிடிப்புப் பேழை, தேடுகருவிக்கான பேழை, வாகனங்களுக்கடியில் சோதனை செய்யும் கண்ணாடி பொருத்திய கருவி ஆகிய குண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) போராளிகள், தீவிரவாதிகள், கொடுங்குற்றவாளிகள் உள்ளிட்ட சிறைக் கைதிகளை, பல்வேறு இடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லவும், பொது வாகனங்களில் அவர்களை அழைத்துச் செல்லும்போது, காவல் பிடியிலிருந்து அவர்கள் தப்பிச் செல்வதைத் தடுக்கவும், மத்திய சிறைச்சாலைகள் அமைந்துள்ள மாவட்டங்களுக்கு/ நகரங்களுக்கு 27 காவல் பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**21. நீதிமன்றங்களுடன் சிறைச்சாலைகளை இணைக்கும் வீடியோ கலந்தாய்வுத் திட்டம்**

நாட்டிலேயே முதன்முதலாக சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் காவலை நீட்டிப்பு செய்வதை சிறைச்சாலை வளாகத்திற்குள்ளேயே செயல்படுத்தக்கூடிய தன்னிகரற்ற வீடியோ கலந்தாய்வு முறை என்னால் 1-7-2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. "தொலைக்காட்சி மூலம் நீதி வழங்கல் முறை" என்ற இந்த வீடியோ கலந்தாய்வுத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள, மகளிருக்கான இரண்டு சிறைச்சாலைகள் உள்ளிட்ட ஒன்பது சிறைச்சாலைகள் 270 நீதிமன்றங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. நீதித் துறை நடுவர்கள் நீதிமன்றங்களில் உள்ள தங்களது அறைகளில் அமர்ந்துகொண்டே வீடியோ கலந்தாய்வுத் திட்டத்தின் மூலம் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் காவலை நீட்டிக்கும் சீரிய திட்டம் ரூபாய் 8.61 கோடி செலவில் மாநிலத்தில் 78 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த கலந்தாய்வு வசதி சிறைவாசிகளை வழிக்காவல் மூலம் அழைத்துச் செல்வது மற்றும் நீதித் துறை நடுவர்கள் முன்பாக ஆஜர்படுத்துவது போன்ற காவல் துறையின் கடினமான செயல்களைத் தவிர்ப்பதாக அமைகிறது. சிறைக் கைதிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச்



செல்லும் பணியாளர்களுக்கான நிர்வாகச் செலவுகள் மற்றும் போக்குவரத்துக்கான எரிபொருள் செலவு போன்றவற்றுக்கான மொத்த செலவுத் தொகை ரூ.10.69 கோடி, இந்தத் திட்டத்தின் செயல்பாட்டினால் அரசுக்கு சேமிப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், நீதிமன்றங்களுக்கு அழைத்துச் சென்று திரும்பும்போது, சிறைவாசிகள் தப்பிச் செல்வதைத் தடுத்தல், சிறைச்சாலைக்குள் பொருட்களைக் கடத்திச் செல்லுதல் மற்றும் நீதிமன்றங்களில் கூட்ட நெரிசல் ஏற்படுதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கும் இந்த வீடியோ கலந்தாய்வு வசதி ஏதுவாக அமையும்.

**22. சென்னை மாநகர மோப்ப நாய் படைப் பிரிவில் நாய்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்**

சென்னை மாநகரத்தில் உள்ள மோப்ப நாய் பிரிவை வலுப்படுத்திட புதிதாக 10 மோப்ப நாய்களை வாங்க அரசு ஆணை எண் 663, உள் (காவல்-8) துறை, நாள் 5-8-2003-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**23. சென்னைப் புறநகரப் பகுதியில் (செங்கை கிழக்கு மாவட்டத்தில் அடங்கியது) காவல் நிலையங்களை வலுப்படுத்துதல்**

செங்கை கிழக்கு மாவட்டத்தில் அடங்கிய சென்னைப் புறநகர் பகுதியில் உள்ள காவல் நிலையங்களை வலுப்படுத்துவதற்காக 22.4 கோடி ரூபாய் அளவுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, இத்திட்டம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படும். முதற்கட்டமாக ஆயுதம் மற்றும் வெடிமருந்துகள் மற்றும் எரிபொருள் வாங்குவதற்காக ரூ.2.24 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**24. 2004-2005-க்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள்**

(அ) ரூ.1.89 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டம், சாமல்பட்டி கிராமத்தில் காவல் நிலையம் ஒன்றை அமைத்தல்.

[2004 ஜூலை 31

(ஆ) ரூ.1 கோடி செலவில் போச்சம்பள்ளியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 6–வது அணிக்கான நிர்வாக மற்றும் இதர அலுவலகக் கட்டடங்களைக் கட்டுதல்.

(இ) ரூ.81.18 இலட்சம் செலவில், மாவட்டங்களிலும், சிறப்புக் காவல் குழுமங்களிலும், ஆணையரகங்களிலும் உள்ள காவல் துறை அலுவலகங்கள் உபயோகத்திற்கென 13 ஆம்புலன்ஸ் வாங்குதல்.

(ஈ) ரூ.35 இலட்சம் செலவில் புதிய கார்கள் வாங்குதல்.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 11

### முதலமைச்சர் அவர்களின் குறை தீர்ப்பு நடவடிக்கைகள்

காவல் துறையைச் சேர்ந்த 8,395 பேரைச் சந்தித்து, அவர்களது குறைகளை நேரில் கேட்டறியும் மகத்தான பணியை நான் மேற்கொண்டேன். காவல் துறையினரின் குறை தீர்க்கும் பணிக்கு, இது ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளித்திருக்கிறது. காவல் துறைக் கண்காணிப்பாளர்/ தளவாய் முதல், காவல் துறை தலைமை இயக்குநர் வரையுள்ள உயர் அதிகாரிகள் முறையாகக் குறை தீர்ப்பு நாள் நடத்தி, காவல் துறையின் அனைத்து நிலையில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் குறைகளைத் தீர்த்திட உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கு உயரிய முன்னுரிமை தந்து வருகிறார்கள்.

# அத்தியாயம் 12

## தடய அறிவியல் துறை

1849 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உருவான மிகப் பழமையான பாரம்பரியம் உள்ள தடய அறிவியல் துறையானது சட்டங்களைச் செயல்படுத்தும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு அமைப்புகளுக்குத் தடய அறிவியல் சார்ந்த பணிகளை நல்கும் ஒரு முதன்மையான அமைப்பாக உள்ளது.

சென்னையிலுள்ள இத்துறையின் தலைமை ஆய்வகம் மானுடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணம், ஆயத்துறை, வெடிமருந்துகள், உபகரணங்கள், போதைப் பொருட்கள், நிழற்படம், இயற்பியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், ஊநீரியல் மற்றும் நச்சியல் ஆகிய 15 உட்பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், தடய அறிவியல் சேவையை பரவலாக்கும் நோக்குடன் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 9 இடங்களில் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை, இந்த வட்டாரங்கள் சம்பந்தப்பட்ட, நச்சியல், மதுவிலக்கு, உயிரியல், போதைப் பொருள், ஊநீரியல், ஆயத்துறை தொடர்பான வழக்குத் தடயங்களைப் பகுப்பாய்வு செய்கின்றன.

மேலும், தடய அறிவியல் ஆய்வினை, குற்ற நிகழ்விடத்திலேயே மேற்கொள்ளும் வகையில், 35 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் (காவல் துறை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று மற்றும் மாநிலத்திலுள்ள ஆணையர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று) இயங்கி வருகின்றன.

சட்டங்களைச் செயற்படுத்தும் பல்வேறு துறைகளுக்கு தடய அறிவியல் சேவை ஆற்றுவதோடு மட்டுமல்லாமல், இத்துறை சென்னை மாநகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மருத்துவமனைகளில் விஷ பாதிப்பால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மருத்துவம் சார்ந்த நச்சியல் ஆய்வு தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் “பெற்றோரைக் கண்டறியும்” ஆய்வும் இத்துறையில் 1985 முதல் நடத்தப்பட்டு வருகிறது.



இத்துறையில் 2003 ஆம் ஆண்டில் 70,092 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,09,982 தடயப் பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

### செயல்பாட்டின் சிறப்பு அம்சங்கள்

2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டுகளில் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் இத்துறைக்காக கட்டடங்கள் கட்டுதல், வாகனங்கள் வாங்குதல் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு அரசால் ரூ.11.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், இராமநாதபுரம் மற்றும் விழுப்புரத்தில் உள்ள வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களுக்கான கட்டடங்களைக் கட்டி வருகிறது. சென்னையில் உள்ள ஆய்வகத்திற்காக கட்டுமானப் பணி விரைவில் தொடங்கப்படும்.

தடய அறிவியல் துறையினரின் பணிசார் போக்குவரத்து வசதிக்காக 17 ஈப்புகள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆய்வுப் பணிகளை மேலும் துல்லியமாகவும், சிறப்பாகவும் மேற்கொள்வதற்கு வசதியாக ஆண்டன்பார் ஒளி விலகல் அளவைக் கருவி, ABI பிரிசம்–3100, டி.என்ஏ சீக்வென்ஸர், பெட்ரோலியம் ஆய்வுக் கருவி போன்ற பல துல்லியமான நவீன கருவிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், பீர் பகுப்பாய்வு சாதனங்கள் வாங்குவதற்காக ரூ.15 இலட்சமும் எமிஷன் ஸ்பெக்ட்ரோகிராப் சாதனம் வாங்குவதற்காக ரூ.30 இலட்சமும் வழங்கியுள்ளது.

இந்தியாவில் நவீன வசதிகள் உடைய பிரிவுகளில் ஒன்றாக தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் உள்ள மரபணுவியல் ஆய்வுப் பிரிவு திகழ்கிறது.

### சிறப்புத் திட்டங்கள்

(அ) உள் துறை (நவீனப்படுத்துதல்) 26–9–2001 ஆம் நாளிட்ட அரசாணை என் 943–ல் ரூபாய் 6 இலட்சம் மதிப்பில் ஐ.ஆர்.ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர் வாங்குவதற்கும், ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் யு.வி.விஸ் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர் வாங்குவதற்கும் மொத்தம் 11 இலட்சம் ரூபாய்

அனுமதிக்கப்பட்டது. நடப்பாண்டில் (2003–2004) இவை வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) நான்கு வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு அகச்சிவப்பு ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர் ரூபாய் 28 இலட்சம் செலவில் வாங்கி வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

## நிறைவுரை

அரசின் உறுதுணையோடும், வழிகாட்டுதலோடும், தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுவரும் அண்மை வளர்ச்சிகளைத் தனதாக்கிக் கொண்டு, அனைத்து நிலையினருக்கும் தக்க பயிற்சியை அளிப்பதன் வாயிலாக, மனிதவள வளர்ச்சிக்கும், வலிமைப்பாட்டுக்கும் வாய்ப்பளித்து, காவல் துறை விரைவாக, நவீனமயமாகி வருகிறது. புதிதாக உருவாகி வரும் சவால்களைச் சந்திக்கும் வகையில் புதிய உத்திகளும், புதிய முன்மாதிரிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலை அமைதியாகவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது. குற்ற வீதங்கள் தொடர்ந்து குறைந்து வருகின்றன; குற்றவாளிகள் விரைந்து சட்டத்தின் பிடியில் கொண்டு வரப்படுகிறார்கள். மத அடிப்படைவாத சக்திகளும், சாதி வெறி சக்திகளும், தீவிரவாத சக்திகளும் எச்சரிக்கையோடு கண்காணிக்கப்பட்டு, அவற்றின் முயற்சிகள் முனைப்போடு எதிர்கொள்ளப்பட்டு முறியடிக்கப்பட்டுள்ளன. காவலர்–பொதுமக்கள் உறவு பலப்படுத்தப்பட்டு வருகிறது. காவல் துறை பொதுமக்களின் ஆதரவையும், கூட்டுறவையும் வேண்டி அவற்றை வெற்றிகரமாகப் பெற்றுள்ளது. மகளிர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் போன்ற சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் தேவைகளுக்கேற்பச் செயல்படுவதிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. போதைப்பொருள் கடத்துதல், சாராயம் காய்ச்சுதல் போன்ற சமூக விரோத நடவடிக்கைகள் விரைவாகவும், கடுமையாகவும் ஒடுக்கப்பட்டு வருகின்றன. புதிய சூழ்நிலைகள் மற்றும் புதிய சவால்கள் எழும்போது, மேலும் மாறுதல்களும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. திட்டமிட்ட தொடர் சீர்திருத்தங்களை இடர்ப்பாடின்றி நடைமுறைப்படுத்துவதில் அரசு அசைக்க முடியாத உறுதியோடு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.



## இணைப்பு–1

2003 ஆம் ஆண்டு மற்றும் 2004 ஆம் ஆண்டில் காவல் துறையினருக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள் (31–03–2004 வரை)

| வரிசை எண் | பதக்கங்கள் | கா.து.த.இ. | கூ.கா.து.த.இ. | கா.து.த. | கா.து.து.த. | கா.து.க. / து.ஆ. | கூ.கா.து.க. | கா.து.து.க./உ.ஆ. | ஆய்வாளர் | உதவி ஆய்வாளர் | தலைமைக் காவலர் | முதல் நிலைக் காவலர் | இரண்டாம் நிலைக் காவலர் | மொத்தம் | அரசு ஆணை / கடிதம் எண் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காவலர் பதக்கம் — 2003 | | | | | | | | | | 1164 (ஆ. 9 (பெ) | 150 | | 1323 | அரசு ஆணை (நிலை) எண். 39, உள் (க.ம) துறை, நாள் 13.1.2003 | ஒவ்வொரு பதக்கத்துடன் பதக்கப் படியாக தலைமைக் காவலருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/—ம் காவலருக்கு ரூ.40/—ம் வழங்கப்படுகிறது |
| 2 | குடியரசுத் தலைவரின் குடியரசு தின விழா பதக்கம் — 2003 | | | | | | | | | | | | | | அரசு கடித எண்(க.ம) 492-1/2003, உள்(க.ம) துறை, நாள் 29-1-2003 | பதக்கம் மட்டும் |
| | 1) தகைசால் பணி | | | 1 | | | | 1 | | | | | | 2 | | |
| | 2) மெச்சத் தக்க பணி | | 1 | | 1 | | | 1 | 5 | | | | | 8 | | |
| 3 | குடியரசுத் தலைவரின் சுதந்திர தின விழா பதக்கம் — 2003 | | | | | | | | | | | | | | அரசு கடித எண்(க.ம) 3061—1 /2003 நாள் 20-8-2003 | பதக்கம் மட்டும் |
| | 1) தகைசால் பணி | | 1 | | | | | | | | | | | 1 | | |
| | 2) மெச்சத் தக்க பணி | | | | 2 | | 2 | 5 | 6 | 1 | 1 | 1 | | 18 | | |

கா.து.த.இ. (டிஜிபி)—காவல் துறை தலைமை இயக்குநர், கூ.கா.து.இ. (எடிஜிபி)—கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர்.

கா.து.த. (ஐஜிபி)—காவல் துறை தலைவர், கா.து.து.த. (டிஐஜி)—காவல் துறை துணைத் தலைவர்.

கா.து.க. (எஸ்பி)—காவல் துறை கண்காணிப்பாளர், கூ.கா.து.க. (எடிஎஸ்பி)—கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர்.

கா.து.து.க. (டி.எஸ்.பி)—காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், து.ஆ. (டிசி)—துணை ஆணையர், உ.ஆ. (ஏசி) —உதவி ஆணையர்.

| வரிசை எண் | பதக்கங்கள் | கா.து.த.இ. | கூ.கா.து.த.இ. | கா.து.த. | கா.து.து.த. | கா.து.க. / து.ஆ. | கூ.கா.து.க. | கா.து.து.க./உ.ஆ. | ஆய்வாளர் | உதவி ஆய்வாளர் | தலைமைக் காவலர் | முதல் நிலைக் காவலர் | இரண்டாம் நிலைக் காவலர் | மொத்தம் | அரசு ஆணை / கடிதம் எண் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முதலமைச்சரின் காவலர் பதக்கம் —2003 (அண்ணா பதக்கம்) | | | | | | | | | | | | | | அரசு ஆணை (நிலை) எண் 873, உள் (கா.ம) துறை, நாள் 12-9-2003 | பதக்கத்துடன் ஒட்டுமொத்த மானியம் காவலர் முதல் தலைமைக் காவலர் வரை ரூ.2000/— காவல் துறை உதவி ஆய்வாளர் முதல் காவல் துறை ஆய்வாளர் வரை ரூ.3000/— துணைக் காவல் துறை கண்காணிப்பாளர் களுக்கு ரூ.5000/— ரொக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேலான பதவிகளுக்கு ரொக்கத் தொகை வழங்கப் படுவதில்லை |
| | 1) வீர தீர செயல் (இல்லை) | | | | | | | | | | | | | | | |
| | 2) சிறப்பு பணி | | | | | | | 10 | 34 (ஆ) 1 (பெ) | 11 | 32 | 7 | 2 | 100 | | |
| 5 | கள்ளச்சாராய ஒழிப்பு சிறப்புப் பணிக்கான மகாத்மா காந்தி காவல் பதக்கம் — 2003 | | | | | | | | 1 | 1 | | | | 2 | அரசு ஆணை (நிலை)எண் 239, மதுவிலக்கு (VII) துறை, நாள் 30-9-2003 | ஒவ்வொன்றுக்கும் பதக்கம் மற்றும் ரொக்கத் தொகை ரூ.10 ஆயிரம் |
| 6 | காவல் புலன் விசாரணை முதலமைச்சர் சிறப்புப் பதக்கம் —2003 | | | | | 1 | | 3 | 5 | 1 | | | | 10 | அரசு ஆணை (நிலை) எண் 800 உள் (கா.ம) துறை, நாள் 11-8-2003 | ஒவ்வொன்றுக்கும் தங்கப்பதக்கம் மற்றும் ரொக்கத் தொகை ரூ.5 ஆயிரம் |
| 7 | முதலமைச்சரின் காவலர் பதக்கம் —2004 | | | | | | | | | | 1361 (ஆ) 7 (பெ) | 132 (நிலை I&II) | | 1500 | | |



## இணைப்பு–2

### 2003 ஆம் ஆண்டு மற்றும் 2004 ஆம் ஆண்டில் ஊர்க்காவல் படையினருக்கும் மக்கள் பாதுகாப்புப் படையினருக்கும் வழங்கப்பட்ட பதக்கங்கள் (மார்ச் 2004 வரை)

| வ. எண் | பதக்கம் | கோட்டத் தலைவர் / பகுதித் தலைவர் | குழுமத் தலைவர் | விரார் குழுமத் தலைவர் | மகளிர் ஊர்க் காவல் படை | வழங்கப் பட்ட மொத்த பதக்கங்கள் | அரசாணை / கடிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | குடியரசுத் தலைவரின் குடியரசு தின விழா பதக்கம்–2003 | | | | | | அரசு க.எண். (கு.ம) /494–1/ 2003, உள்(கு.ம) துறை, நாள் 28-1-2003 | பதக்கம் மட்டும் |
| | அ) தகைசால பணி | 1 (உதவித் தளவாய் பொது) | | | | 1 | | |
| | ஆ) மெச்சத் தக்க பணி | 1 (துணைப் பகுதித் தளவாய்) | | 2 | | 3 | | |
| 2 | குடியரசுத் தலைவரின் சுதந்திர தின விழா பதக்கம்–2003 | | | | | | அரசு க.எண். (கு.ம) 1062/ உள்(கு.ம) துறை, நாள் 23-2-2004 | பதக்கம் மட்டும் |
| | அ) தகைசால பணி (இல்லை) | | | | | | | |
| | ஆ) மெச்சத் தக்க பணி | 1 பிரிவுத் தலைவர் | 2 | 1 அணித் தளவாய் 1 உதவித் தளவாய் | | 5 | | |
| 3 | முதலமைச்சரின ஊர்க்காவல் படையின ருக்கான (அண்ணா) பதக்கம் – 2003 | | | | | | அரசாணை (நிலை) எண்.876 உள் (கு.ம) துறை, நாள் 12-9-2003 | கம்பெனித் தளவாய்க்கு ரூ.3000– ரொக்கத் தொகையும், அணித் தளவாய்க்கும் மகளிர் ஊர்க்காவல் படையின ருக்கும் ரூ.2000–ம் வழங்கப் படுகிறது |
| | 1) வீர தீரச் செயல் (இல்லை) | | | | | | | |
| | 2) பாராட்டத் தக்க பணி | | 1 | 2 | | 3 | | |

## தமிழ்நாடு காவல் துறையின் நிர்வாக அமைப்பு – 2004

**As on 1-4-2004**



[illegible]

1. [illegible] இயக்குநர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம், சென்னை
2. [illegible] முதன்மை விழிப்பு அலுவலர், மாநில போக்குவரத்துக்கழகம், திருச்சி
3. [illegible] முதன்மை விழிப்பு அலுவலர் மாநகர போக்குவரத்துக்கழகம், சென்னை
4. [illegible] விழிப்பு, தமிழ்நாடு மின்வாரியம், சென்னை
5. [illegible] இயக்குநர், குற்ற வழக்கு தொடர்பு, சென்னை
6. [illegible] சிறைத் துறை இயக்குநர், சென்னை
7. [illegible] மாநில மனித உரிமை ஆணையம், சென்னை
8. [illegible] இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, சென்னை
9. [illegible] முதன்மை விழிப்பு அலுவலர், ஆவின், சென்னை
10. [illegible] முதன்மை விழிப்பு அலுவலர், மாநில போக்குவரத்துக்கழகம், நாகர்கோவில்
11. [illegible] விழிப்பு அலுவலர், தமிழ்நாடு செய்தி அச்சு மற்றும் காகிதம் லிமிடெட், புகலூர்
12. [illegible] ஆளுநரின் மெய்க்காப்பாளர், சென்னை
13. [illegible] விழிப்பு அலுவலர், மாநகர போக்குவரத்துக்கழகம், சென்னை
14. [illegible] மாநில மனித உரிமை ஆணையம், சென்னை

DGP–காவல் துறை தலைமை இயக்குநர்
ADGP–கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர்
IGP–காவல் துறை தலைவர்

DIG–காவல் துறை துணைத் தலைவர்
AIG–காவல் துறை உதவித் தலைவர்

SP–காவல் துறை கண்காணிப்பாளர்
COP–காவல் துறை ஆணையர்
JCP–காவல் துறை இணை ஆணையர்
DCP–காவல் துறை துணை ஆணையர்
CMD–தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
JD–இணை இயக்குநர்
DD–துணை இயக்குநர்
CMT–தளவாய்
CVO–முதன்மை விழிப்பு அலுவலர்
V & AC–ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை

SIC–சிறப்பு புலனாய்வு பிரிவு
SIT–சிறப்பு புலனாய்வு குழு

STF–சிறப்பு அதிரடிப்படை

L & O–சட்டம் மற்றும் ஒழுங்கு
HQ–தலைமையிடம்

EOW–பொருளாதார குற்றப் பிரிவு
ENF–அமலாக்கம்
CB CID–குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை
CSG–கடலோரப் பாதுகாப்புப் பிரிவு
HG–ஊர் காவல்படை
TS–தொழில்நுட்பப் பணிகள்
PTC–காவல் பயிற்சிக் கல்லூரி
TRNG–பயிற்சி
TNUSRB–தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு

STC–மாநில போக்குவரத்துக் கழகம்
MTC–மாநகர போக்குவரத்துக் கழகம்

TNPPL–தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம், புகலூர்
TNEB–தமிழ்நாடு மின் வாரியம்
SHRC–மாநில மனித உரிமை ஆணையம்
ADC–ஆளுநரின் மெய்க்காப்பாளர்



# இணைப்பு XVI

*(133 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 22 – உள் துறை– தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### I. முன்னுரை

தீ விபத்துகள், இதர விபத்துகள், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் பிற பேரழிவுகள் ஆகியவற்றைத் திறம்பட எதிர் கொண்டு அவற்றால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளைத் தக்க முறையில் கையாண்டு குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளும் முதன்மை முகமையாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை விளங்கி வருகிறது. நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல், வளர்ந்துவரும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் ஆகியவற்றின் விரைவான வளர்ச்சி, இந்திய துணைக் கண்டத்தின் நிலப் பகுதிகள் நில நடுக்கத்திற்கு உட்படக்கூடும் என்ற அபாயம் ஆகியவற்றினால் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை எதிர்கொள்ளும் சவால்கள் நாள்தோறும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. மிக அபாயகரமான அவசர நிலைமைகளைத் திறம்பட எதிர்கொள்ளும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான அனைத்து வாய்ப்புகளையும் இத்துறை பயன்படுத்திக் கொண்டு வருகிறது. இத்துறைக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்காக அரசு தாராளமாக நிதியளித்து வருகிறது. சுமார் நூறு நவீன தீயணைப்பு ஊர்திகளை வாங்க அரசு அனுமதியளித்தது. அவற்றை வாங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தீ பாதிக்காத உடை, இரசாயனப் பாதுகாப்பு உடை மற்றும் தீயால் பாதிக்கப்படாத கையுறைகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தொழில்நுட்பம் செறிந்த நவீனமயமாக்குதலோடு அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கும் இத்துறை முக்கியத்துவம் அளித்து வருகிறது. உலகளவில் சிறந்த தீயணைப்பு சேவை அளிக்கும் படைகளில் ஒன்றாக விளங்கும் வகையில் இத்துறை தன்னை ஆயத்தப்படுத்தி வருகிறது.

நீதியரசர் திரு. கே.எஸ். பக்தவத்சலம் (ஓய்வு) அவர்களைத் தலைவராகவும், திரு சீ. இரமணி, இ.கா.ப., காவல் துறை தலைமை இயக்குநர் (பயிற்சி) அவர்களை உறுப்பினராகவும், திரு ச.கு. டோக்ரா, இ.கா.ப., இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

அவர்களை அமைப்பாளராகவும் கொண்டு அரசு அமைத்துள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் அனைத்துக் கூறுகளையும் ஆராய்ந்து விரிவான அறிக்கையினை விரைவில் அளிக்க உள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில்தான் இத்தகைய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதால் பிற மாநிலங்களும் இவ்வாணையத்தின் அறிக்கையை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை முதல் தரமான துறையாக உருவாக்கி எதிர்காலத்தில் எழும் சவால்களை சமாளிக்கத் தகுதியான துறையாக ஆக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில் அரசினால் அமைக்கப்பட்டுள்ள "பேரழிவு மேலாண்மை ஆணையம்", தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை ஏற்படுத்தி அவற்றுக்குத் தேவையான பயிற்சியை அளிக்கும் பொறுப்பினை இத்துறைக்கு அளித்துள்ளது. ஒரு நவீன சமுதாயமானது, நில நடுக்கம், சூறாவளி, தீவிரவாதிகளின் தாக்குதல் போன்ற திடீரென ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்ளத் தக்கவகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும்; அவற்றை எதிர்கொள்ளும் வகையில் பொதுமக்களுக்கு தக்க பயிற்சி அளிக்க வேண்டும். முதன்மை பேரழிவு மேலாண் முகமையாக உள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அதற்கான தயார் நிலையில் இருக்க வேண்டும் என அரசு கருதுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

## II. குறிக்கோள்கள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சேவையினை அடிப்படையாகக் கொண்ட துறையாகும். தீ, வெள்ளம், கட்டட இடிபாடுகள், பிற அசம்பாவிதங்களால் உயிருக்கோ உடைமைக்கோ அபாயம் ஏற்ப்டும் தருணங்களில் உடனடியாக இத்துறை நடவடிக்கைகளில் இறங்குகிறது. "காக்கும் பணி எங்கள் பணி" என்பதே இத்துறையின் கொள்கையாகும். தீ விபத்துகள் மற்றும் பிற அசம்பாவிதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ள கோவில் திருவிழாக்கள், பெரிய அளவிலான கூட்டங்கள், மற்றும் சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் எழும் நிகழ்வுகள் ஆகியவற்றின்போது இத்துறை தனது பணிகளை அளித்து வருகிறது. மீட்புப் பணிகளில் இத்துறையின் தேவைகள் தன்னிறைவு அடையும் வகையில் போதுமான எண்ணிக்கையில் நோயாளர் ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

தீப் பாதுகாப்பு குறித்த சட்டம் மற்றும் விதிகளைச் செயல்படுத்தும் முதன்மை முகமையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை



செயல்பட்டு வருகிறது. மேலும் இத்துறை தீ விபத்து, வெள்ளம் மற்றும் இதர பேரிடர் குறித்த அனைத்து புள்ளி விவரங்கள், பகுப்பாய்வு மற்றும் கருத்துகள் ஆகியவற்றை அளிக்கும் முதன்மைத் துறையாகவும் விளங்கி வருகிறது.

## III. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினை நவீனமயமாக்குதல்

தற்செயலாக நிகழும் தீ விபத்துகள், வெள்ளம், நில நடுக்கம் மற்றும் பிற இயற்கை பேரிடர்கள் ஆகியவற்றுடன் புதிய சவால்களையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தற்போது எதிர்கொண்டு வருகிறது. தீவிரவாதிகளின் தாக்குதல், சாதி, இன மோதல்கள் போன்ற அச்சுறுத்தல்களின்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது காவல் துறை, வருவாய்த் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இரசாயனக் கசிவுகள், அடுக்கு மாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகள், எளிதில் அணுகமுடியாத வகையில் நெருக்கமாகவும் அதிக மக்கள்தொகை கொண்டதாகவும் உள்ள நகரப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகள், கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவும் காலங்களில் தீயணைப்பதற்குத் தண்ணீரையே முதன்மைப் பொருளாகப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையில் ஏற்படும் இடர்ப்பாடுகள் போன்ற சவால்களை எதிர்கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

## IV. பேரழிவு மேலாண்மையில் எதிர்கொள்ளும் அறைகூவல்கள்

தொன்றுதொட்டு தமிழகம் புயல், வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றினால் பேரழிவிற்கு உள்ளாகக்கூடிய மாநிலமாக இருந்து வருகிறது. கடந்த காலத்தில் இம்மாநிலம் இதுபோன்ற பல பேரழிவுகளைச் சந்தித்துள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட மாநிலத்தின் நிர்வாகம் இத்தகைய காலங்களில் சூழ்நிலைக்கேற்ப தக்கவாறு செயல்பட்டு உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் ஆகியவற்றைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. தற்பொழுது கடுமையான புதிய அச்சுறுத்தல் ஒன்றை நாம் எதிர் நோக்கியுள்ளோம். தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர் மாநகரங்கள் உட்பட பெரும்பாலான இடங்கள் நிலநடுக்கம் ஏற்படக்கூடிய இடங்களாக அறியப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்வுகளை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அரசு, தலைமைச் செயலரது தலைமையின்கீழ் ஒரு உயர்நிலை பேரழிவு மேலாண்மை ஆணையத்தினை, அரசுச் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை

உறுப்பினர்களாகக் கொண்டு அமைத்துள்ளது. இவ்வாணையம் பேரழிவு–தயார் நிலை மற்றும் பேரழிவு–குறைப்பிற்கான விரிவான திட்டங்களைத் தீட்டும் பணியினை மேற்கொண்டுள்ளது.

இப்பேரழிவு மேலாண்மை திட்டத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பங்கு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. பேரழிவு நேரத்தில் மீட்புப் பணிகள் மேற்கொள்வதற்கு இத்துறை பிரதான முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவலர்கள் மற்றும் கமாண்டோக்களை கொண்டு தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை இத்துறை அமைத்துள்ளது. இக்குழுக்களுக்கு பேரழிவுகளை கையாள்வது குறித்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## V. நிர்வாக / பணி அமைப்பு

உள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. காவல் துறைத் தலைவர் நிலையில் உள்ள ஒருவர் இத்துறையின் இயக்குநராக உள்ளார். இவருக்கு உதவியாக நான்கு துணை இயக்குநர்கள் உள்ளனர். ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு துணை இயக்குநர் தலைவராக உள்ளார். ஒவ்வொரு மண்டலத்திலும் 4 முதல் 9 கோட்டங்கள் உள்ளன. மாநிலத்தில் 28 கோட்டங்கள் உள்ளன; ஒவ்வொரு கோட்டமும் கோட்ட அலுவலர் ஒருவரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறது. ஒவ்வொரு கோட்டமும் அதன் கட்டுப்பாட்டில் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது. 12 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்கள் உள்ளன. மாநிலப் பயிற்சி மையம் ஒன்று துணை இயக்குநர் பதவி நிலையில் உள்ள இயக்குநர் (பயிற்சி) அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் தாம்பரத்தில் செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள மாநில பணிமனையும் இவருடைய கட்டுப்பர்ட்டின்கீழ் இயங்கி வருகிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு குறித்த விளக்கப்படம் இணைப்பு I–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## VI. செயல்பாட்டு நடைமுறைகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இத்துறையின் அடிப்படை அமைப்பாகும். தமிழகத்தில் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. இவைகள் தவிர, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக ஒகேனக்கல்லில் ஒரு மீட்புப் பணி நிலையம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைப்பதற்கு



சில அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன. அதன்படி 25 கி.மீ. சுற்றளவுள்ள இடத்திற்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருக்க வேண்டும். மேலும் 50,000–க்குக் குறையாத மக்கள் தொகை மற்றும் ரூ.50,000/– மதிப்பிற்கு குறைவில்லாத சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள தீ விபத்து அபாயங்கள் ஆகியவைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

இன்னலில் அவதியுறும் பொதுமக்களுக்கு உயர்ந்த சேவை அளிக்க ஏதுவாக பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் உள்ள தீயணைப்புப் படைகளும் அவசர காலங்களில் இத்துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட அரசு உரிய அறிவுரைகள் வழங்கியுள்ளது.

## VII. உள் கட்டமைப்பு வசதிகள்

### (அ) மனித ஆற்றல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 6606 ஆகும். பதவி வாரியான பணியாளர் விவரங்கள் இணைப்புகள்–II மற்றும் III–ல் கொடுக்கப்பட்டுள்ளன. கோட்ட அலுவலர், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பணிமனை), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பணியாளர்கள் நேரடி நியமன முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவிக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் மூலம் பணியாளர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 2002 முதல் 2004–வரை அரசு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,041 நபர்களை தீயணைப்போர்களாக காலியாக இருந்த இடங்களில் நியமனம் செய்துள்ளது.

பெண்களுக்கு சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகவும் மற்றும் பாலின வேறுபாடுகளைக் களைவதற்காகவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அனைத்து நிலைகளிலும் உள்ள பதவிகளுக்கு அதாவது கோட்ட அலுவலர், நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்போர் ஆகியவற்றில் பெண்களை நேரடியாக நியமனம் செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட பணி விதிகளுக்கு திருத்தம் வெளியிட் 12–10–2001 அன்று அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. கோட்ட அலுவலர் பதவிக்கு பெண்களை நியமனம் செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான விதிகளைத் திருத்தி, 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 01–08–2003 அன்று பெண் கோட்ட அலுவலர்கள் இருவர் நேரடி நியமனம் செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். வெற்றிகரமாக பயிற்சி முடித்து அவர்கள் பதவிப் பொறுப்பேற்றுள்ளனர்.

மேலும் தீயணைப்போர், சிறைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் பதவிகளுக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் பொதுவான தேர்வு முறையினை மேற்கொள்ள வேண்டும் என இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

**ஆ) ஊர்திகள் மற்றும் தளவாடங்கள்**

தீ விபத்துகள், மீட்புப் பணிகள் மற்றும் இதர இயற்கை இடர்ப்பாடுகளின்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பங்கு முக்கியமானதாகும். இத்தகைய நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கு ஏதுவாக இத்துறைக்கு 326 நீர்தாங்கி ஊர்திகளும், 80 நோயாளர் ஊர்திகளும், 13 நுரை தகர்வு சிறு ஊர்திகளும், 5 அவசரகால மீட்பு ஊர்திகளும், நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட (இங்கிலாந்து–சைமன் ஸ்நார்கல்) ஊர்தி ஒன்றும், சுழல் மேஜை ஏணி ஊர்தி (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு) ஒன்றும், முறையே 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் 2 (பிராண்டோ ஸ்கைலிப்ட்–பின்லாந்து தயாரிப்பு), நீர்விடுகுழாய் பதிக்கும் ஊர்தி ஒன்றும், 51 தண்ணீர் லாரிகளும், மீட்பு ஊர்தி ஒன்றும், 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகளும், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகளும், 93 மிதவைப் பம்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவி பொருத்திய சீருந்துகள், ஈப்புகள், பேருந்து, மோட்டார் சைக்கிள்கள் ஆகிய 61 ஊர்திகளும் வழங்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களும் போதுமான அளவில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்துறையை முழுமையாக நவீனப்படுத்த அரசு ஆர்வம் கொண்டுள்ளது. பழைய மற்றும் பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. அவைகளுக்குப் பதிலாக 84 நீர்தாங்கி வண்டிகள் ரூ.11.01 கோடி செலவிலும்; 18 தண்ணீர் லாரிகள் ரூ.1.88 கோடி செலவிலும் வாங்க 2003–2004 ஆம் நிதியாண்டில் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும் 2003–2004 ஆம் நிதியாண்டில் கொல்லிமலை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.5.27 லட்சம் செலவில் ஒரு நோயாளர் ஊர்தி வாங்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்பு மேலாண்மையினை மேலும் வலிமை வாய்ந்ததாக ஆக்கும்பொருட்டு சில முக்கியமான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு நவீன உபகரணங்களான தூக்கும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் மீட்புப் பணிகளுக்கான



அனைத்து உபகரணங்களையும் கொண்ட பெட்டி ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்துறையில் 3 கண்ணாடி இழை விசைப் படகுகள் மற்றும் 8 மிதவைப் படகுகளும் உள்ளன. இவை தவிர, காவல் துறையினர் வசம் உள்ள படகுகளையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ஒப்புவிக்க 2002 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஆணை வெளியிட்டது. இத்துறையில், அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி பொருத்திய தலைக் கவசம்–1, கையில் எடுத்துச் செல்லக் கூடிய அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவிகள்–2, உயிர் உள்ளவர் சிக்கியுள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள்–2, பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள்–2 ஆகிய உபகரணங்களும் உள்ளன.

81 தீ பாதிக்காத உடைகள், 83 இரசாயன பாதுகாப்பு உடைகள் மற்றும் தீ பாதிக்காத 222 இணை கையுறைகள் ஆகியவற்றை ரூ. 2 கோடி செலவில் வாங்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

**VIII. தகவல் தொடர்பு**

**(அ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள்**

தீ மற்றும் பிற காரணங்களினால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு உரிய நேரத்தில் உடனடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டியது இன்றியமையாததாகும். இதற்காக ஆட்களையும், இயந்திரங்களையும் பாதிக்கப்பட்ட இடத்திற்கு சரியான நேரத்தில் கொண்டு சேர்ப்பது அவசியமாகும். தீ விபத்து பற்றி உடனடியாகத் தகவல் பெற்று சம்பவ இடத்திற்கு விரைவாக உரிய நேரத்தில் செல்வதற்கு ஏதுவாக அனைத்துத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலும் தொலைபேசிகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் சில மாவட்ட தலைநகரங்களில் '101' என்ற எண் கொண்ட இலவச தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. சென்னை நகருக்கு வாக்கிடாக்கிகள், மறு ஒலிபரப்புக் கருவிகள் உள்பட 122 குறைந்த நுண் அலைவரிசை கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டத் தலைமையகங்களுடனும் மற்றும் சில பதற்றமான இடங்களோடும் மாநிலத் தலைமையகம், அதிநுண் அலைவரிசைக் கருவிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இவ்விடங்களில் 32 அதிநுண் அலைவரிசைக் கருவிகள் பொருத்தப்பட்டு அவை செயல்பாட்டில் உள்ளன. மேலும், ரூ.16.06 இலட்சம் செலவில் 9 அதிநுண் அலைவரிசைக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

## (ஆ) பதில்செயல்பாட்டு நேரம் (Response Time)

விபத்து அழைப்பு பெறப்பெற்ற கணத்திலிருந்து முதல் தீயணைப்பு ஊர்தி விபத்து நடந்த இடத்தைச் சென்று அடைய எடுத்துக் கொள்ளும் நேரமே பதில்செயல்பாட்டு நேரமாகும். இத்துறையின் தீவிர நடவடிக்கையினால் பதில்செயல்பாட்டு நேரம் சீராக குறைந்து கொண்டே வருகிறது. சென்னை மாநகரில் இந்த பதில்செயல்பாட்டு நேரத்தினை 10 நிமிடங்கள் அல்லது அதற்குக் குறைவாகக் கொண்டு வருவதில் இத்துறை வெற்றி கண்டுள்ளது. செய்திப் பரிமாற்றத்தை விரைவுபடுத்தவும், அதன் மூலம் பதில்செயல்பாட்டு நேரத்தை குறைக்கும் வகையிலும் தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும், '101' மற்றும் '102' எண்கள் கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் கம்பியில்லாத் தொலை தொடர்புக் கருவிகள் பொருத்திய ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் இயங்கி வருகின்றன. பதில் செயல்பாட்டு நேரத்தை மேலும் குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

## (இ) துறையின் இணையதளம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென இணையதளம் ஒன்று தேசிய தகவல் தொடர்பு மையத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இணையதளம், பொதுமக்களுக்கு தீப்பாதுகாப்பு பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதில் முக்கியப் பங்காற்றுவதுடன் உரிம நிபந்தனைகள் மற்றும் விதிகள் குறித்த தகவல்களையும் அளிக்கிறது. இந்த இணையதளத்தின் முகவரி–**http://www.tn.nic.in/fireservice** என்பதாகும். இந்த இணையதளமானது இத்துறையின் செயல் திறனை வெளிப்படுத்துவதுடன், பொதுமக்களுக்கு தீப்பாதுகாப்பு குறித்து அறிவு புகட்டும் ஒரு மிகப் பெரிய கருவியாகவும் செயல்பட்டு வருகிறது.

## IX. பயிற்சி வசதிகள்

புதிய உத்திகளை விடாது தொடர்ந்து கற்றுத் தெளிந்தால் மட்டுமே தீயணைப்பு வீரர்கள் தொழில்ரீதியாக அப்பணிக்குத் தகுந்தவர்களாக விளங்க இயலும். இதற்கு நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி அவசியமாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் புதிதாக சேருபவர்களுக்கு முதலில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தீத்தடுப்பு மற்றும் மீட்பு முறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும், நவீன தொழில்நுட்பங்களையும் துறையில் அனைத்து நிலைகளிலும் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கற்பிக்கவும் அவர்களுக்கு அளிக்கும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு ரூ.4.50 கோடி செலவில் நவீன பயிற்சி மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தாம்பரத்தில் உள்ள இப்பயிற்சி மையத்தில் தற்சமயம் நவீன பயிற்றுவிப்பு



உபகரணங்கள், அவசரகால மீட்பு ஊர்தி, இடம் பெயரும் உயர்தூண் விளக்கு (டிராலி டைப் லைட் டவர் மாஸ்ட்), கணினிகள், இரசாயன அங்கிகள், நீர்மூழ்கிக் கவச உடைகள், பன்முனை ஊடக ஒளிக்கதிர் கருவி, நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்தி மற்றும் உடற்பயிற்சிக் கருவிகள் ஆகியவை உள்ளன. இங்கு அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தத்தக்க கான்கிரீட் அணிவகுப்பு மைதானம், புகை அறை, பம்புகள், நீர் வெளியேற்றும் திறனறி சோதனைத் தொட்டி ஆகியவை பயிற்சியாளர்களுக்கு நல்ல வெளிப்பயிற்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நல்ல வகுப்பறைகள், சிறப்பான நூலகம், மாதிரி வடிவமைப்புகள், நல்ல உணவகம் மற்றும் தங்குவதற்கான வசதியும் பயிற்சியின் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி மையம் நாக்பூர் தேசிய தீயணைப்புப் பணிக் கல்லூரிக்கு இணையாக விளங்குகிறது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தீயணைப்பு வீரர்களுக்கு மட்டுமல்லாமல், பிற மாநிலங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றைச் சார்ந்த தீயணைப்பு வீரர்களுக்கும், மற்றும் பொதுமக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

பயிற்சி அளிப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களது அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு பயிற்சிப்படியாக வழங்கப்படுகிறது. நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட நிலைய அலுவலர்கள், தீயணைப்போர்கள், பெண் கோட்ட அலுவலர்கள் இருவர் ஆகியோருக்கு 2003 ஆம் ஆண்டில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. தீயணைப்புத் துறை சாராப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தீயணைப்போர் பதவியிலிருந்து தீயணைப்போர் ஓட்டுநர் பதவிக்கும், தீயணைப்போர் ஓட்டுநர் பதவியிலிருந்து இயந்திர கம்மியர் ஓட்டுநர் பதவிக்கும் பணியமர்த்த தெரிவு செய்யப்பட்டோருக்கும் இம் மாநிலப் பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாக்பூரிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரியில் அளிக்கப்படும் பயிற்சித் திட்டங்களை நடத்தத் தகுதி வாய்ந்த பிராந்தியப் பயிற்சி மையமாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயிற்சி மையத்தினை மைய அரசின் உள் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. நாக்பூரிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரி பிற மாநிலங்கள், மத்திய அரசு நிறுவனங்கள், இராணுவம், கடற்படை ஆகியவற்றைச் சார்ந்த சார்நிலை அலுவலர்களுக்காக நடத்தும் பயிற்சியினை தாம்பரத்திலுள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பயிற்சி மையம் அளித்து வருகிறது.

[2004 ஜூலை 31

## X. பணிமனை

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காக மாநிலப் பணிமனை ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது. ஊர்திகளின் பழுது செப்பனிடும் தொகை ரூ.2,500/-க்கு மேல் ரூ.20,000/- வரை. உள்ள இனங்களில் இப்பணிமனையின் தானியங்கிப் பொறியாளருக்கு மதிப்பீடுகளை பரிசீலித்து தொழில்நுட்பச் சான்று வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் தீயணைப்பு ஊர்திகளுக்கு பழுது நீக்கம் செய்வதற்காக தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

## XI. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்

மாநிலத்தில் தற்பொழுது 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 111 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும் 42 நிலையங்கள் சொந்த இடத்தில் பகுதி–நிரந்தரக் கட்டடங்களிலும், 127 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஒகேனக்கல்லில் மீட்புப் பணிகள் நிலையம் ஒன்று அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பதினொன்றாவது நிதிக் குழு மானியத் தொகையிலிருந்து பொதுப் பணித் துறை மூலம் ரூ. 6 கோடி செலவில் 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டுகளில் 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு கட்டடம் கட்டித் தர அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் நிலக்கோட்டை, வேப்பூர், பரங்கிப்பேட்டை, வேட்டவலம், இராசிபுரம், ஆற்காடு, ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், வத்திராயிருப்பு, பொன்னமராவதி, நாங்குநேரி, பேட்டை, வால்பாறை, இராயபுரம், வியாசர்பாடி, தாம்பரம், பொன்னேரி, செஞ்சி, செங்கோட்டை, ஜெகதாப்பட்டினம், கமுதி, கன்னியாகுமரி, தேவகோட்டை, திருச்செங்கோடு, திருமுட்டம், திட்டக்குடி, ஜவ்வாதுமலை, மன்னார்குடி, குடியாத்தம், திருப்பத்தூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய 31 நிலையங்களுக்கான கட்டடங்கள் பொதுப் பணித் துறையினரால் கட்டி முடிக்கப்பட்டு இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. சேரன்மாதேவி, பழனி மற்றும் கோயம்புத்தூர் (வடக்கு) ஆகிய 3 நிலையங்களுக்கான கட்டடம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும் பெண்ணாகரம், ஆத்தூர், முசிறி, உத்தமபாளையம், போச்சம்பள்ளி, திருச்சுழி, கொல்லங்கோடு, வள்ளியூர், சாயல்குடி, உசிலம்பட்டி, பெரணமல்லூர், கொடுமுடி, பவானி, மானாமதுரை, திருவண்ணாமலை ஆகிய 15 ஊர்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள் ரூ.3.56 கோடி செலவில் கட்ட 2003–2004 ஆம் நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

## XII. பெருமளவில் ஆற்றிய பணிகள்

### (அ) தீத் தடுப்பு

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முதன்மைப் பணி தீத் தடுப்பு ஆகும். பொதுமக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென 12 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் தீத் தடுப்பு முறைகளை ஊரக மற்றும் நகரப் பகுதி மக்களிடம் கற்பிப்பதால் தீயினால் ஏற்படும் ஆபத்துகள் பெருமளவு குறைக்கப்படுகின்றன. பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கிராமங்கள், குடிசைப் பகுதிகள் ஆகியவற்றில் உள்ளவர்களுக்கு சொற்பொழிவுகள், செயல்முறை விளக்கங்கள் ஆகியவை மூலம் தீத்தடுப்பு, பாதுகாப்பு முறைகள் குறித்து இக்குழுக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன. 2003 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் இக்குழுக்கள் 2150 இடங்களில் தீத் தடுப்பு முறைகள் குறித்து பயிற்றுவித்துள்ளன.

சென்னை மாநகரில் தீத் தடுப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வியக்கத்தக்க பலன்கள் அளித்துள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் பெரிய மற்றும் நடுத்தர தீ விபத்து நிகழ்வுகள் கணிசமான அளவு குறைந்துள்ளதை கீழ்க்காண் வரைபடம் தெளிவாக்குகிறது.




தீயணைப்புப் படை வீரர்களுக்கு தீபாவளி என்பது கொடுங்கனவாக இருந்து வந்தது. தற்போது தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தீபாவளி விபத்தில்லா விழாவாக மாற்றப்பட்டுள்ளது. இதனை கீழ்க்காண் வரைபடம் எடுத்துக்காட்டுகிறது:–

**2001 -2003-ஆம் ஆண்டுகளில் சென்னை மாநகரில் தீபாவளித் தீ விபத்து அழைப்புகளின் ஒப்புநோக்கு புள்ளி விவரம்.**




பெருந்தீ மற்றும் நடுத்தர தீ விபத்து நிகழ்வுகளில் ஏற்பட்டுள்ள சரிவு இத்துறையின் தீத்தடுப்பு பிரச்சாரம் பயனுள்ளதாக விளங்கியதற்கு தக்கதொரு சான்றாகும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளில் நடமாடும் திரையரங்கம் அமைத்ததும் ஒன்றாகும். இத்துறையின் ஊர்தி ஒன்று நடமாடும் திரையரங்கமாக மாற்றியமைக்கப்பட்டு, அதன் மூலம் இத்துறையினால் தயாரிக்கப்பட்ட தீத் தடுப்பு முறைகளை அறிவுறுத்தும் திரைப்படங்கள் பொதுமக்களுக்கு காண்பிக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தினை சென்னையின் மூலை முடுக்குகளிலெல்லாம் கொண்டு செல்ல இந்த நடமாடும் திரையரங்கம் உதவியாக உள்ளது.

### (ஆ) புறத் தீயணைப்பு நிலையங்கள்

கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளை விரைவாக சமாளிக்க புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. உயர் கொள்ளளவு கொண்ட செயற்கை இழை நீர்த்தொட்டிகள் அல்லது மடக்கக்கூடிய நீர்த்தொட்டிகள், எளிதில் தூக்கிச் செல்லத்தக்க நீர்விடு குழாய்களுடன் கூடிய பம்புகள், கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள் ஆகியவைகளுடன் சென்னை நகரின் குடிசைப் பகுதிகளில் 12 இடங்களில் புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் இந்த வருட கோடைக் காலத்தில் நிறுவப்பட்டன. தீ விபத்து ஏற்படக்கூடிய பகுதிகளைக் கண்காணிக்கும்பொருட்டு இப்புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நாள் முழுவதும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.





### (இ) திரையரங்குகள் / கட்டடங்களில் தீத் தடுப்பு

திரையரங்குகள், தீ விபத்துக்கு உள்ளாகக்கூடிய இடங்களாக உள்ளன. எனவே திரையரங்குகளில் தீப் பாதுகாப்பு முறைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. எனவே தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளை ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்ய, பல் துறைக் குழு ஒன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரது தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து உரிம நிபந்தனை மீறல்கள் ஏதும் இருப்பின், தக்க நடவடிக்கைக்காக உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறது. 2003 ஆம் ஆண்டில் 1038 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் 2003 ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் சுமார் 16,000 கட்டடங்கள் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு நோக்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

### (ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்

2003 ஆம் ஆண்டில் 16,109 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. அவ்விபத்துகளில் 89 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 177 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இழந்த உடைமைகளின் மதிப்பு ரூ.24.58 கோடியும், மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு ரூ.122 கோடியும் ஆகும். சென்னை மாநகரத்தில் தீ விபத்து நிகழ்வு இடங்களில் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நீர் தாங்கி ஊர்திகளுக்கு மாநகர குடிநீர் வாரியத்தின் தண்ணீர் லாரிகள் மூலம் நீர் மீள நிரப்பப்படுவதால் தீயணைப்புப் பணிகளை தொடர்ச்சியாகவும், திறமையாகவும் மேற்கொள்ள முடிகிறது. உயிர்களையும் பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்ற இது பேருதவியாக அமைகிறது.

பல்வகை பணிகளுக்கான சிறப்புக் குழுக்களை அமைக்கும் நடவடிக்கையை இத்துறை மேற்கொண்டுள்ளது. இக்குழுக்களுக்கு ஒத்திகைப் பயிற்சி அளிப்பதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒத்திகைப் பயிற்சியின் காரணமாக தீயணைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், தீ விபத்துகளை உடனடியாகக் கையாள உதவுவதால் பெரிய மற்றும் நடுத்தர தீ விபத்துகளாக மாறக்கூடிய தன்மை கொண்ட தீ

விபத்துகள்கூட சிறிய தீ விபத்துகளாக முடிந்து விடுகின்றன. சென்னையில் கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட பெரிய மற்றும் நடுத்தர தீ விபத்துகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் தீ விபத்துகள் குறைந்துள்ளது தெளிவாகிறது:–

| ஆண்டு | பெருந் தீ | நடுத்தரத் தீ |
|---|---|---|
| 2001 | 16 | 50 |
| 2002 | 22 | 35 |
| 2003 | 12 | 14 |

### (உ) மீட்பு அழைப்புகள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பெறப்படும் மீட்பு அழைப்புகள் பெரும்பாலும் சாலை விபத்து, இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப்பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களை சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இன்னல்களில் சிக்குண்டவர்கள் ஆகியோரை காப்பாற்றக்கோரும் அவசர அழைப்புகளாகவே உள்ளன. 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில், முறையே 4,881 மற்றும் 5,219 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டில் வரப்பெற்ற மீட்பு அழைப்புகளால் 3,903 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

### (ஊ) கட்டண அழைப்புகளும் நோயாளர் ஊர்தி அழைப்புகளும்

கொல்லிமலை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதியதாக வழங்கப்பட்டுள்ள நோயாளர் ஊர்தியைச் சேர்த்து மொத்தம் 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. தீ விபத்து மற்றும் இதர விபத்துகளின்போது காயமடைந்த நபர்கள் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். மேலும் நோயாளிகளையும், காயமடைந்தோரையும் குறைந்த வாடகையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் சேவையும் அளிக்கப்படுகிறது. 2003 ஆம் ஆண்டில், நோயாளர் ஊர்திகள் வேண்டி 1590 அழைப்புகள் பெறப்பட்டன. இவற்றுள் 1271 வாடகைக் கட்டணம் செலுத்தப்பட்ட அழைப்புகளாகும். வாடகைக் கட்டண அழைப்புகளை மேற்கொண்ட வகையில் ரூ.2.62 இலட்சம் வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.



### எ) பொது நலன் கருதி ஆயத்த நிலைப் பணி

முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள்/பொதுக் கூட்டங்கள் மற்றும் விழாக்களின்போதும் பெரிய பந்தல்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய தருணங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் தயார் நிலையில் அங்கு நிறுத்தி வைக்கப்படுகின்றன. இது தவிர தனியார்களின் விழாக்களுக்கு கட்டண அடிப்படையில் துறையின் தீயணைப்பு ஊர்திகள் ஆயத்த நிலையில் வைக்கப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில் ரூ.32.85 இலட்சம் ஆயத்த நிலைப் பணிக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவில் இத்துறை மேற்கொண்ட ஆயத்த நிலைப் பணிகள் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விழாவில் இத்துறையின் பணி பொதுமக்களாலும், ஊடகங்களாலும் பெரிய அளவில் பாராட்டப்பட்டது. இந்த ஆயத்த நிலைப் பணியில் 20 நீர்தாங்கி வண்டிகள், ஒரு அவசரகால மீட்பு ஊர்தி மற்றும் 20 நோயாளர் ஊர்திகளுடன் 90 அலுவலர்கள் மற்றும் 392 தீயணைப்பு வீரர்கள் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்விழாவின் அதிமுக்கிய நாட்களான 03–03–2004 முதல் 07–03–2004 வரையிலான காலத்திற்கு, எவ்விதமான சூழலையும் சமாளிக்கக்கூடிய வகையில் பயிற்சி அளிக்கப்பட்ட 155 கமாண்டோக்கள் பிரத்யேகமாக மகாமகம் மற்றும் பொற்றாமரை குளங்களைச் சுற்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

## XIII. ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்

இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்பட பணிபுரிய ஊக்குவிக்கும் வகையிலும் இத்துறையின் நோக்கங்களை அடைவதற்கு ஏதுவாகவும், பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன மற்றும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### அ) விருதுகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினை அங்கீகரிக்கும் வகையில், மாநில அரசால் பின்வரும் விருதுகள் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன:–

[2004 ஜூலை 31

**(1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (அண்ணா பதக்கம்)**

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவி நிலைக்கேற்ப ரூ.2,000/- முதல் ரூ.5,000/- வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள். 2003 ஆம் ஆண்டில் 8 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டன.

**(2) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுவது)**

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.40/-ம், முன்னணித் தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்-இயந்திரக் கம்மியர் ஆகியவர்களுக்கு மாதந்தோறும் ரூ.50/-ம் ரொக்கப் படியாக வழங்கப்படுகிறது. 2004 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(3) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணிப் பதக்கம்**

இந்தப் பதக்கமானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் திறனறிந்து அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டும், அவர்களுக்கு உற்சாகமளித்து உயர்நோக்கினை அடையும் வகையில் உத்வேகம் அளிக்கவும் 2001 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அரசால் ஏற்படுத்தப்பட்டது. நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் ஆகியோருக்கு பதவிக்கு ஒன்று வீதம் ஆண்டுதோறும் மூன்று பதக்கங்கள் தீயணைப்பு நாளான ஏப்ரல், 14 ஆம் நாள் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் 8 கிராம் எடையில் 22 கேரட் தங்கத்தில் செய்யப்பட்டதாகும். மேலும், நிலைய அலுவலருக்கு ரூ.3,000/-ம், முன்னணி தீயணைப்போருக்கு ரூ.2,500/-ம், மற்றும் தீயணைப்போருக்கு ரூ.2,000/-ம் ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படுகிறது. இப்பதக்கம் முதுநிலை அடிப்படையில் வழங்கப்படுவதில்லை; மாறாக திறம்பட கடமையாற்றுவோருக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.



2004 ஜூலை 31]

**(4) மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட பின்வரும் விருதுகளும் வழங்கப்படுகின்றன:-**

அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

இ) வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

**ஆ) நலத் திட்டங்கள்**

**1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இன்னலுக்குள்ளாகும் பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கான தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி 1962 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. உறுப்பினர்களின் நலனுக்காக கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது:-

(அ) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற நீடித்த நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்க

(ஆ) உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக

(இ) மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவுக்காக

இத்திட்டத்தில் தற்போது 5,549 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.6.70 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ. 5 இலட்சம் ஆகும். அரசு வழங்கும் மானியத் தொகையை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது.

[2004 ஜூலை 31

## 2. குடும்ப நல நிதித் திட்டம்

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1 இலட்சம் அரசால் அளிக்கப்படுகிறது.

## 3. கருணைத் தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு பின்வருமாறு கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது:–

| | | |
|---|---|---|
| அ | பணியிலிருக்கும்போது மரணமடைந்த பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.5,00,000/- |
| ஆ | பணியாற்றும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு | ரூ.1,00,000/- |
| இ | பணியாற்றும்போது கடுமையாக காயமடைந்தவர்களுக்கு | ரூ.20,000/- |
| ஈ | பணியாற்றும்போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ.10,000/- |

## 4. குழுக் காப்பீட்டுத் திட்டம்

பணியிலிருக்கும்போது உயிர் இழக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலுள்ள அனைத்து பணியாளர்களின் குடும்பத்திற்கும் நிவாரணம் அளிப்பதற்காக, இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைத்து நிலையில் உள்ளவர்களும் பயனடையும் வகையில் குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படுகிறது.

## 5. உணவு மானிய திட்டம்

உதவிக் கோட்ட அலுவலர் நிலை வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ.50 இலட்சம் அரசு செலவிடுகிறது.



2004 ஜூலை 31]

## 6. குடியிருப்புகள் கட்டுதல்

அவசரக் காலங்களில் உடனடியாக ஆட்களைத் திரட்டவும், செயல்திறனைக் கூட்டவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே குடியிருப்பு அளிப்பது அவசியமாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்காக ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருவதென அரசு ஏற்கெனவே முடிவெடுத்திருந்தது. 2001–2002 ஆம் ஆண்டிலிருந்து குடியிருப்புகளின் எண்ணிக்கையை ஆண்டொன்றுக்கு 100 லிருந்து 200 ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் வழங்குதலை விரைவுபடுத்தும்.

## XIV. புதிய முயற்சிகள்

### அ) செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

பொதுமக்களுக்கு வழங்கப்படும் பணியின் தரத்தையும் மற்றும் பணியாளர்களின் நலத்தினையும் மேம்படுத்துவதன் அவசியத்தை கருத்திற் கொண்டு இத்துறையின் செயல்பாட்டை மேம்படுத்த அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(1) கழிவு செய்யப்பட்ட பழைய ஊர்திகளுக்குப் பதிலாக ரூ.11.01 கோடி செலவில் 84 நீர்தாங்கி வண்டிகளை 2003-2004 ஆம் நிதியாண்டில் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(2) இத்துறையில் உள்ள 142 அரசு கட்டடங்களில் ரூ.14.20 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்த அரசாணை (நிலை) எண் 479, உள் (காவல்–17) துறை, நாள்: 02–06–2003–ல் ஆணை வழங்கியது.

(3) 2003–2004 ஆம் நிதியாண்டில் 15 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு ரூ. 356.40 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்ட அரசாணை (நிலை) எண் 485, உள் (காவல்–17) துறை, நாள் 03–06–2003–ல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

(4) காவல் மற்றும் சிறைத் துறைகளில் உள்ளதைப் போன்று பணியில் இருக்கும்போது வீரதீரச் செயலில் ஈடுபட்டு உயிர் துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் கடைசியாக பெற்று வந்த சம்பளத்தை அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் எப்போது ஓய்வு பெற்றிருப்பார்களோ அந்த நாள் வரை அவர்களது வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்க அரசாணை (நிலை) எண் 1046, உள் (காவல்–17) துறை, நாள் 03-11-2003–ல் ஆணைகள் வழங்கியுள்ளது.

**ஆ) 2004–2005 ஆம் ஆண்டிற்கான பகுதி II – திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்**

(1) பயிற்சியை மேம்படுத்துவதற்கும், மேன்மையான நிர்வாகத்தினை வழங்குவதற்காகவும் 2004–2005 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தில் ரூ.35 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் டிஜிடல் சாதனங்கள் போன்றவைகளை தலைமையகத்திற்கும் கோட்ட அலுவலகங்களுக்கும் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) கழிவு செய்யப்பட்ட பழைய ஊர்திகளுக்குப் பதிலாக 10 நீர்தாங்கி வண்டிகளை வாங்க பொதுக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்படும் கடன் தொகைக்கான அசல் மற்றும் வட்டி செலுத்த ரூ.25.99 இலட்சம் 2004–2005 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இ) கும்பகோணத்தில் ஏற்பட்ட துயர நிகழ்விற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியொன்றில் 16–7–2004 அன்று ஏற்பட்ட கொடிய, நெஞ்சை உருக்கும் தீ விபத்தில் 94 குழந்தைகள் பலியானது நம்மையெல்லாம் பேரதிர்ச்சிக்கும் ஆழ்ந்த வருத்தத்திற்கும் உள்ளாக்கியது. வேகமாக நவீனமடைந்து வரும் சமுதாயத்தில் தீ விபத்துகள் ஏற்படுத்தும் சவால்கள் மற்றும் அபாயங்களை இச்சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்த அறைகூவலை அரசு மிகக் கவனத்துடன் எடுத்துக்கொண்டு மீண்டும் இத்தகைய துயர நிகழ்வுகள் ஏற்படுவதை தடுக்கும்முகத்தான் பின்வரும் போர்க்கால நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தியுள்ளது:–



(1) அனைத்துப் பள்ளிகளிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரால் தீப்பாதுகாப்பு குறித்த தணிக்கை செய்வது கட்டாயமாக்கப்படும். அனைத்துப் பள்ளிகளிலும் போதுமான அளவில் நுழைவாயில், வெளியேறும் வாயில், அவசரகால வாயில்கள் உள்ளது உறுதி செய்யப்படும்.

(2) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உள்ளூர் நிலையங்களின் மேற்பார்வையில் ஆண்டுக்கு இருமுறை தீ விபத்திலிருந்து தற்காத்துக்கொள்ளும் பயிற்சி கட்டாயமாக நடத்தப்பட வேண்டும்.

(3) அனைத்து ஆசிரியர்களுக்கும் தீ விபத்துகளை கையாள்வது குறித்தும், தீப்பாதுகாப்பு ஒத்திகைகள் நடத்துவது குறித்தும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறுகிய கால பயிற்சி அளிக்கும். பொதுமக்களுக்கு தீப்பாதுகாப்பு முறைகள் குறித்து கற்பிக்க வகை செய்யும்பொருட்டு கல்வி புகட்டும் படங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு வழங்கப்படும்.

(4) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிடமிருந்து பள்ளிகள் தடையின்மைச் சான்று பெறுவது கட்டாயமாக்கப்படுகிறது. தீத்தடுப்பு நடைமுறைகளை அமல்படுத்துவதை அலட்சியப்படுத்தும் அல்லது மேற்பார்வையிடுவதில் சுணக்கம் காட்டும் அதிகாரிகள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள்.

**XV. நிறைவுரை**

தொழில்மயமாதலும், நகரமயமாதலும், விரைந்து நிகழ்ந்து வரும் இன்றைய சமுதாயத்தில், பேரிடர் மேலாண்மை ஒரு கொள்கைச் சவாலாகவே ஆகி உள்ளது. இத்தகைய சூழ்நிலையில், விபத்துகளைத் தவிர்ப்பதிலும், அவற்றைத் திறம்பட எதிர்கொள்வதிலும், அரசின், தலையாய முகமை அமைப்பு என்ற வகையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு மிக முக்கிய பங்கு உண்டு. அரசின் வலுவான ஆதரவோடும், வழிகாட்டுதலோடும், இத்துறை தனது குறிக்கோளை நிறைவேற்ற முனைப்போடு முயன்று வருகிறது.

[2004 ஜூலை 31

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சென்னை நகரில், கடுமையான மற்றும் நடுத்தரத் தீ விபத்துகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைப்பதில் வெற்றி பெற்றுள்ளது. மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நடமாடும் திரையரங்குகள் போன்ற நவீன மற்றும், புது வழி காணும் நடவடிக்கைகளை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மேற்கொண்டது நல்ல பலன்களை நல்கியுள்ளது. இந்த முயற்சிகளுக்கு இன்னும் வலுவூட்டும் வகையில், இந்த ஆண்டு, கணினிகள் (Computers), டிஜிட்டல் வீடியோ கேமராக்கள் (Digital Video Cameras), டிஜிட்டல் ஸ்டில் கேமராக்களை (Digital Still Cameras) வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

அரசு தொடர்ந்து வழங்கும் ஆதரவோடும், வழிகாட்டுதலோடும், எதிர்வரும் சவால்களைச் சந்திப்பதிலும், மனித முயற்சியால் எந்த அளவு இயலுமோ, அந்த அளவுக்கு, அழிவுகளைத் தவிர்ப்பதை உறுதி செய்வதிலும், அவற்றைத் தவிர்க்க இயலாதபோது உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், ஏற்படும் இழப்பை இயன்ற அளவு குறைக்கும் வகையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மிகுந்த தன்னம்பிக்கையோடு திகழ்கிறது.



2004 ஜூலை 31]



## இணைப்பு—II

### களப் பதவிகளின் விவரங்கள்

| வரிசை எண் | பதவியின் பெயர் | மொத்த பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயக்குநர் | 1 |
| 2. | துணை இயக்குநர் | 4 |
| 3. | இயக்குநர் (பயிற்சி)–துணை இயக்குநர் நிலை | 1 |
| 4. | துணை இயக்குநர் (பயிற்சி)–கோட்ட அலுவலர் நிலை | 1 |
| 5. | டெல்லர் இன்ஜினியர் – கோட்ட அலுவலர் நிலை | 1 |
| 6. | கோட்ட அலுவலர் | 29 |
| 7. | உதவிப் பொறியாளர் (உந்தூர்தி) | 1 |
| 8. | உதவி கோட்ட அலுவலர் | 43 |
| 9. | விரிவுரையாளர் – உதவி கோட்ட அலுவலர் நிலை | 1 |
| 10. | நிலைய அலுவலர் | 308 |
| 11. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 13 |
| 12. | உதவி நிலைய அலுவலர் | 16 |
| 13. | முன்னணி தீயணைப்போர் | 719 |
| 14. | எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 249 |
| 15. | தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் எந்திரக் கம்மியர் | 1032 |
| 16. | தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவிகள் | 3869 |
| மொத்தம் | | 6288 |



## இணைப்பு—III

### அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிர்வாகம்) | 1 |
| 2. | இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிர்வாகம்) | 2 |
| 3. | நிர்வாக அலுவலர் | 1 |
| 4. | கண்காணிப்பாளர் | 33 |
| 5. | உதவியாளர் | 92 |
| 6. | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 6 |
| 7. | இளநிலை உதவியாளர் | 62 |
| 8. | தட்டச்சர் | 33 |
| 9. | பதிவுரு உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் | 31 |
| 10. | அலுவலக உதவியாளர் மற்றும் இதர கடைநிலை ஊழியர்கள் | 57 |
| மொத்தம் | | 318 |

[2004 ஜூலை 31

# இணைப்பு XVII

(133 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 37 – பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

பொதுத் துறை, பொது நிர்வாகம் தொடர்பான சில முக்கியமான பணிகளைக் கவனித்து வருகிறது. பொதுத் துறையில் கவனிக்கப்பட்டு வரும் சில முக்கிய பணிகள் பின்வருமாறு:-

- மரபுப் பணி
- அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் நலன்
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் அளித்தல்
- முதலமைச்சரின் தனிப் பிரிவு
- முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் முன்னாள் படைவீரர் கழகத்தினை நிர்வகித்தல்
- புதுடில்லி, சென்னை மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிர்வகித்தல்
- சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த பணிகள்
- இந்திய ஆட்சிப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் குறித்த பணிகள்
- தேர்தல்கள் நடத்துதல்
- தலைமைச் செயலக வளாகத்திலுள்ள கட்டடங்களின் பராமரிப்பு
- மாநிலங்களுக்கிடையேயான மற்றும் தென் மண்டலக் குழுக்கள் சம்பந்தப்பட்ட அலுவல்கள்



2004 ஜூலை 31]

- பாகிஸ்தான் மற்றும் பங்களா தேச நாட்டினர் தவிர இந்தியாவிற்கு வரும் பிற அயல் நாட்டினரின் அனைத்து விதமான விசாக்களை நீட்டிப்பு செய்தல்

2. மேற்கண்ட பணிகள் தவிர, மானியக் கோரிக்கை எண் 2-ல் சேர்க்கப்பட்டுள்ள மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட பணிகளையும் பொதுத் துறை கவனிக்கிறது. இந்தியக் குடியரசுத் தலைவர், இந்திய பிரதமர், மத்திய அரசு அமைச்சர்கள் போன்ற சீர்மக்கள் வருகையின்போதும், ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சீர் மக்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகையின்போதும், அவை தொடர்பான பணிகளையும் இத்துறையில் உள்ள மரபுச் சீர்முறைப் பிரிவு கவனிக்கிறது. பொதுத் துறையின் மற்றொரு பிரிவு, இலங்கை அகதிகள், முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களது குடும்பங்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் ஆகியோர் நலன் குறித்த பணிகளைக் கவனிக்கிறது. இத்துறை மத்திய அரசின் பாதுகாப்புத் துறை, உள் துறை, வெளிவிவகாரத் துறை ஆகிய துறைகளுடன் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொதுவான பொருட்கள் குறித்து அவ்வப்போது தொடர்புகொண்டு வருகிறது. மேலும், அமைச்சர்களின் அலுவலகப் பணியாளர்கள் தொடர்பான அனைத்து நிருவாகப் பணிகளையும், அவர்களுக்கு மோட்டார் வண்டிகள், கணினி, தொலைபேசி மற்றும் இதர அலுவலகச் சாதனங்கள் ஆகியவை வழங்குவது குறித்த பணிகளையும் இத்துறை கவனிக்கிறது.

3. தலைமைச் செயலக வளாகத்துக்குள் கட்டுமானப் பணிகள், மேற்பார்வை மற்றும் சுற்றுப்புறப் பராமரிப்பு ஆகியவையும் பொதுத் துறையைச் சார்ந்ததே ஆகும். தற்போதுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை 27 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள பிரதான கட்டடம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகை ஆகியவை தலைமைச் செயலகத்தில் பணியாற்றிவரும் அதிக அளவிலான பணியாளர்களுக்கும் அவர்களின் அதிகரித்துவரும் தேவைகளுக்கும் ஏற்ப போதிய இடவசதி கொண்டதாக இல்லை. தற்போதுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டப்படும்போது நவீன வசதிகளுடன், எதிர்காலத் தேவைக்கேற்ற கூடுதல் இட வசதிகளைக் கொண்டு கட்டப்படவில்லை. கட்டடங்களின் உட்புறத்தில் பல இடங்களில் விரிசல்கள் மற்றும் நீர்க் கசிவு ஏற்பட்டு கட்டடம் பாதுகாப்பில்லாமல் உள்ளது. இக்கட்டடங்களில் உள்ள கழிப்பிட

வசதிகள் போதுமானவையாக இல்லாததோடு, அவை உபயோகிப்பதற்குத் தகுதியற்றவையாகவும் உள்ளன. கோட்டூர் கிராமத்தின் அருகேயுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில், முழு வசதியுடன் கூடிய ஒரு புதிய தலைமைச் செயலகக் கட்டடம் கட்டுவது குறித்த கருத்துருவிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

4. சட்டம் ஒழுங்கு மற்றும் கூருணர்வுடைய பொருள்கள் தொடர்பாக 1952 ஆம் ஆண்டின் விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் அரசால் நியமிக்கப்படும் விசாரணை ஆணையங்கள் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றின் பணியாளர் பற்றிய பொருள்களை இத்துறை கவனித்து வருகிறது. மேற்காணும் தகைசால் பெருமக்களுக்குத் தேவையான அலுவலக அறைகள் ஒதுக்குதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல், அறைகலன்கள், தொலைபேசி வசதி, சீருந்து முதலியவற்றை வரையரைப்படி வழங்குதல் போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது.

## 1. அகதிகள் மறுவாழ்வு

### அகதிகள் வருகை

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக, இந்திய வம்சாவழி இலங்கைத் தமிழர்கள் புகலிடம் தேடி, இந்தியாவிற்கு அகதிகளாக வரத் துவங்கினர். தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 31-5-2004-ன் நிலவரப்படி, தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிறப்பு முகாம் உட்பட 103 முகாம்களில் 56,828 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 19 அகதிகள் மட்டும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

1983 முதல் 1995 வரையில் இரு கால கட்டங்களில் 99,469 அகதிகள் அரசு நடவடிக்கையின்மூலமாக முறையாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 1983 முதல் 2004 வரை (31-5-2004 வரை) 96,700 இலங்கைத் தமிழ் அகதிகள் சுய விருப்பத்தின்பேரில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இலங்கை அகதிகளுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவில், பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.





அகதிகளின் பராமரிப்பிற்கான அனைத்து செலவினங்களும் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசினால் ஈடுசெய்யப்பட்டு வருகின்றன.

### இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

#### 1. பணக்கொடை

தமிழகத்திலுள்ள பல்வேறு அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ளவாறு கீழ்க்கண்ட விகிதங்களில் பணக்கொடை அளிக்கப்பட்டு வருகிறது:

| | | |
|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | மாதமொன்றுக்கு ரூ.200 |
| 2. | 12 வயதும் அதற்கு மேலுமுள்ள ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதமொன்றுக்கு ரூ.144 |
| 3. | முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதமொன்றுக்கு ரூ.90 |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதமொன்றுக்கு ரூ.45 |

முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் அனைவருக்கும் மாதமொன்றிற்கு சுமார் ரூ.90 இலட்சம் வரை பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது.

#### 2. மலிவு விலையில் அரிசி

அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு மலிவு விலையில், அரிசி கிலோ ஒன்றிற்கு 57 பைசா வீதம் மைய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட அளவுகளில் வழங்கப்பட்டு வருகிறது:

| | | (நாளொன்றிற்கு) |
|---|---|---|
| (அ) | பெரியவர்கள் | 400 கிராம் |
| (ஆ) | குழந்தைகள் (8 வயதிற்குட்பட்டவர்கள்) | 200 கிராம் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமது நியாய விலைக் கடைகள் மூலமாக, அரிசியை அகதிகளுக்கு வழங்குகிறது. அரசிடமிருந்து விலை வித்தியாசத் தொகையைத் திரும்பப் பெற்று வருகிறது. இவ்வகையில் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.30 கோடி செலவாகிறது.

**3. துணிமணிகள்**

முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் குடும்பத்திற்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி துணிமணிகள், பாய் ஆகியவை ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு குடும்பத்திற்கும் போர்வைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.2 கோடி செலவிடப்படுகிறது.

**4. பாத்திரங்கள்**

முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து அகதிகளுக்கும் 5 வகையான 8 பாத்திரங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கென ரூ.15 இலட்சம் செலவாகிறது.

**5. மருத்துவ உதவி**

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

**6. கல்வி வசதிகள்**

தமிழ்நாடு அரசு இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி ஏற்படுத்தித் தருகிறது. அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் படித்தமைக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி செல்லும் குழந்தைகளுக்குச் சீருடைகள், மதிய உணவு, பயணச் சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. அகதிகளின் குழந்தைகள், தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமென்றாலும் தங்கி படிப்பைத் தொடர அனுமதிக்கப்படுவதுடன் அவர்களுக்கான பணக்கொடை மற்றும் இதர நிவாரண உதவிகள், சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் வழங்கப்படுகின்றன.



**7. உள் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் 2003–2004**

இலங்கை அகதிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் உள் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அகதிகள் முகாம்களில் மின் வசதி, குடிநீர், கழிப்பிட வசதி மற்றும் குடிசைகள் பழுதுபார்த்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும்பொருட்டு மத்திய அரசு ரூ.1.10 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், மத்திய அரசு ரூ.39,94,615 மதிப்பீட்டிற்கான பணிகளை மேற்கொள்ள இசைவு அளித்துள்ளது. இப்பணிகள் 2004-2005 நிதியாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. ரூ.1.42 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு மத்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு முதலில் இச்செலவினத்தை மேற்கொண்டு பின்னர் மத்திய அரசிடமிருந்து அத்தொகையை ஈடு செய்து கொள்ளும்.

**8. அகதிகளைத் திருப்பி அனுப்புதல்**

இலங்கை அகதிகள் இறுதியாக இலங்கை திரும்பிச் செல்ல "முறையாக திரும்பச் செல்லும் திட்டத்தின்" (Organised Repatriation) கீழ் அவர்கள் அனுப்பப்பட தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள, மத்திய அரசு கொள்கை அளவில் இசைவு அளித்துள்ளது. எனினும் முறையாக திரும்ப அனுப்பப்படும் பணி, இலங்கை அரசிடமிருந்து சாதகமான இசைவு பெறப்பட்ட பின்னரே துவங்கப்படும்.

சுயவிருப்பத்தின்பேரில், தாயகம் அல்லது பிற நாடுகளுக்குச் சொந்தச் செலவில் செல்ல விரும்பும் இலங்கை அகதிகள் தேவையான "வெளியேற்ற அனுமதி" (Exit Permit) வழங்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர்.

## 2. முன்னாள் படைவீரர் நலத் துறை

முன்னாள் படைவீரர் நல இயக்ககம், அரசு பொதுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் மற்றும் படைப் பணியில் உள்ளோர் குடும்பங்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு, இந்த இயக்ககத்தினைச் சார்ந்ததாகும். அனைத்து நலப் பணிகளும் இந்த இயக்ககத்தின் 25 மாவட்ட அலுவலகங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31-03-2004 அன்றுள்ள நிலவரப்படி 1,57,312 முன்னாள் படைவீரர்/விதவையர் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

2. இத்துறையின் முக்கிய செயல்பாடுகள் கீழ்வருமாறு:

(1) அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்தல்

(2) சுயவேலைவாய்ப்பு வழங்குதல்

(3) பயிற்சி வசதிகள்

(4) நலத் திட்ட உதவிகள்

3. போரில் இறந்துவிட்ட வீரர்களின் குடும்பங்களுக்கும், போரில் ஊனமுற்றவர்களுக்கும் அரசு கருணைத் தொகை வழங்குகிறது. மேலும் வீரப் பதக்கங்கள், சிறப்புப் பணிக்கான பதக்கங்கள் மற்றும் மகன்கள்/மகள்களைப் படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோர்க்கு ஊக்க மானியம் ஆகியவை தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. இத்துறையின் மொத்த நிர்வாகச் செலவில் 50 விழுக்காட்டுத் தொகையினை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது.

4. கீழ்க்கண்ட இரண்டு நிதிகள் முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் நிருவகிக்கப்படுகிறது:

(1) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

(2) தொகுப்பு நிதி

2003-2004 ஆம் நிதியாண்டில், 20,715 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் பயனடைந்துள்ளனர். அவர்களுக்கு ரூ.749 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

5. 2001 ஆம் ஆண்டிலிருந்து, வீர விருது பெற்ற இராணுவ வீரர்களுக்கு நிலக்கொடைக்குப் பதிலாக மத்திய அரசு நிர்ணயித்துள்ள தொகைக்கு இணையாக ரொக்க தொகையை அரசு வழங்கி வருகிறது. நாட்டிற்காக எல்லைப்புறத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்கள்/எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் தியாகத்தினை அங்கீகரிக்கும்வகையில் வீர மரணமடைந்த வீரர்களுக்கு, உரிய இறுதி மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. இறுதிச் சடங்கில் வீர மரணமெய்திய இராணுவ வீரரின் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு இறுதி மரியாதை



அளிக்கும்படி அரசு ஆணையிட்டுள்ளது. வீர மரணமெய்திய இராணுவ மற்றும் எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பங்களுக்கு ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும், வாரிசுதாரர் ஒருவருக்கு அவருடைய தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் எதிரிப் படைகள், தீவிரவாதிகள் மற்றும் ஊடுருவல்களுக்கெதிரான நடவடிக்கைகளில் வீர மரணமெய்திய இராணுவ வீரர்கள் மற்றும் எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் 15 குடும்பங்களுக்கு கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக மொத்தம் ரூபாய் 71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

6. அரசு இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில், குறிப்பிட்ட எண்ணிக்கையில் முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் பணியில் உள்ள வீரர்களின் பிள்ளைகளுக்கு இடங்களை ஒதுக்கியுள்ளது. பொறியியல் பட்டப் படிப்புக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் 6 இடங்களும், மற்ற பொறியியல் கல்லூரிகளில் 75 இடங்களும், மருத்துவப் பட்டப் படிப்புக்கு 6 இடங்களும், செவிலியர் பயிற்சிப் படிப்புக்கு 60 இடங்களும், பல்தொழில் பயிலகங்களில் பட்டயப் படிப்புக்கு 100 இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புக்கு 6 இடங்களும் மற்றும் சட்டப் படிப்பு பிரிவில் 5 விழுக்காடு இடங்களும் இவற்றில் அடங்கும். 2002 ஆம் கல்வியாண்டு முதல் ஆசிரியர் பயிற்சிப் படிப்புக்கான இடங்கள் 67-லிருந்து 132 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை காவலர்கள், தேர்வுக்குத் தேவையான உடல் மற்றும் அறிவுத் திறன் தேர்வுகளை முன்னாள் படைவீரர்களுக்குச் சாதகமாக இந்த அரசு ரத்துச் செய்துள்ளது. காவலர்கள் தேர்வுக்குப் போட்டியிடும் முன்னாள் படைவீரர்களைப் பொறுத்தவரை வயது உச்ச வரம்பு 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

7. முன்னாள் படைவீரரைச் சார்ந்தோருக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில், தமிழாசிரியர் பயிற்சிப் படிப்புக்கு ஓர் இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள்வரை உள்ள கல்லூரிகளில் இரண்டு இடங்களும், இரண்டுக்கு மேல் பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் மூன்று இடங்களும் அரசு ஒதுக்கியுள்ளது.

**இராணுவ வீரர் இல்லம்**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ.1.94 கோடி செலவினத்தில் ஈரோட்டில் இராணுவ வீரர் இல்லம் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதற்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆலயப் பாதுகாப்புப் படை**

1992 ஆம் ஆண்டில் கோயில்களைப் பாதுகாக்கவும், அங்குள்ள சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் முதலியன களவாடப்படுவதைத் தடுப்பதற்காகவும் முன்னாள் படைவீரர்களைத் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தி கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இதுவரை 2,681 முன்னாள் படைவீரர்கள் தொகுப்பூதியத்தில் பல்வேறு கோயில்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதம் ரூ.1,500 தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**கொடி நாள்**

தமிழ்நாடு கொடி நாள் நிதிவசூலில் 1985 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நாட்டில் முன்னணியில் இருந்து வருகிறது. 2002 ஆம் ஆண்டுக்கு கொடி நாள் நிதி வசூல் இலக்காக ரூ.4.60 கோடி நிர்ணயிக்கப்பட்டபோதிலும், வசூலிக்கப்பட்ட தொகை ரூ.6.85 கோடியாகும். 2003 ஆம் ஆண்டுக்கு (07-12-2003 முதல் 06-12-2004 வரையிலான காலத்திற்கு) நிர்ணயிக்கப்பட்ட கொடிநாள் நிதி வசூல் இலக்கு ரூ.6 கோடி ஆகும். இதில் 30-04-2004 அன்றுவரை ரூ.2.43 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் (டெக்ஸ்கோ)**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) கம்பெனிகள் சட்டத்தின்படி 28-1-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் சுய ஆதரவுள்ள, இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். இதன் உரிமைபெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூபாய் 22.91 இலட்சம் ஆகும்.





இக்கழகத்தின் முக்கிய செயல்பாடுகள் கீழ்வருமாறு:-

- தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலத்திற்கு ஏற்றவகையில் பல திட்டங்களைத் திட்டமிடுதல், உருவாக்குதல் அவற்றைச் செயல்படுத்துதல், ஆகியவற்றில் தக்க உதவிகளை அளிப்பது.
- நிறுவனம் என்ற அளவில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

பதிவுபெற்ற முன்னாள் படைவீரர்கள், பெரும்பாலும் மைய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புப் பணிக்கென அமர்த்தப்படுகின்றனர். பாதுகாப்பு அமைச்சகத்தின் மறு புனரமைப்பு, தலைமை இயக்குநரால் பாதுகாப்புப் பணிக்கு அனுப்பப்படும் முன்னாள் படைவீரர்களுக்கான ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்பணிகளுக்கென 12 விழுக்காடு பணிக் கட்டணமாக மேற்கண்ட அரசு நிறுவனங்களிடமிருந்து டெக்ஸ்கோ பெற்று வருகிறது. இக்கழகம் தென்னக இரயில்வே, மதுரை பிரிவில் 20-04-2002 அன்று முதல் வாகனங்களை நிறுத்துவதற்காக பணம் வசூலிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இம்முறையில் வசூலிக்கப்படும் கட்டணத் தொகையை இருவரும் 50:50 விழுக்காடு முறையில் பகிர்ந்துகொள்ளலாம் என இக்கழகம் முடிவெடுத்துள்ளது. இதேபோன்று தென்னக இரயில்வே, பெரம்பூர் இரயில் நிலையத்தில் வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் முறையை 27-9-2003 முதல் இக்கழகம் மேற்கொண்டது.

31-3-2004-ன் நிலவரப்படி இக்கழகத்தால் 7,275 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**3. முதலமைச்சரின் தனிப் பிரிவு**

முதலமைச்சரின் தனிப் பிரிவு பொதுமக்களின் குறைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலருக்கு வழக்கமான அலுவலக ரீதியான தொடர்பு முறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டு, மாநில அரசின் எந்தத் துறையின் எந்த நிலையிலுள்ள அலுவலர்களிடமும் நேரடியாகத் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்னையிலும் மற்றும் சுற்றுப்பயணத்தின்போது தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் அளிக்கப்படும் மனுக்கள் உடனடி நடவடிக்கைக்காக, தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும், துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் கணினியில் பதிவு செய்த பின் அனுப்பப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு வருகைதரும் அனைத்து நாட்களிலும், இதர அலுவலகப் பணி நிலைமையைப் பொறுத்து, பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணிக்குள்ளாக பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து மனுக்களைப் பெற்று வருகிறார்கள். பொதுமக்கள், தனிப் பிரிவில், தனி அலுவலரிடம் நேரடியாக அனைத்து வேலை நாட்களிலும் மனுக்கள் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதோடு, தபால், நிகரி மற்றும் மின் அஞ்சல் மூலமாகவும் அனுப்பித் தீர்வு காண வகை செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு 10 சமூக நல சேவகர்கள்/ ஆலோசகர்கள் பணியிடங்களை உருவாக்கி அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள், துயருடன் வரும் மனுதாரர்களின் கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டு அவர்களுக்கு அரசின் நலத் திட்டங்களைப் பற்றியும், அதனைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் விரிவான ஆலோசனை வழங்குகிறார்கள். முதலமைச்சர் தனிப் பிரிவில் இயங்கி வரும் விசாரணை மையத்தில் பொதுமக்களின் மனுக்களின்மீதான தற்போதைய நிலவரம் கணினியில் சரிபார்த்து மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மனுக்களின்மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்து விரைவுபடுத்துவது, குறை தீர்ப்பு அமைப்பின் மிக முக்கியப் பங்காகும். இதனை நிறைவு செய்யும்வகையில் தலைமைச் செயலகம் மற்றும் துறைத் தலைவர்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் மக்கள் குறை தீர்ப்பு தனித் துணை ஆட்சியர்களுடன் குறிப்பிட்ட காலமுறையில் அவ்வப்பொழுது ஆய்வுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில் மட்டும் 4,05,517 மனுக்கள் தனிப் பிரிவில் பெறப்பட்டு அதில் 3,65,802 (90.21%) மனுக்கள் தீர்வு காணப்பட்டன.





முதலமைச்சரின் தனிப் பிரிவு மனுக்களின்மீது விரைவாகவும், மனுதாரர்களுக்கு நிறைவளிக்கும்வகையிலும் அதிக எண்ணிக்கையில் தீர்வு கண்டு சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களின் சீரிய செயல்பாட்டை அங்கீகரித்து பாராட்டும்வகையில், அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிசு வழங்கப்படுகிறது.

2003 ஆம் ஆண்டில் முதலமைச்சர் தனிப் பிரிவிற்கு ரூபாய் 23 இலட்சம் செலவினத்தில் புதிய கணினிகள் மற்றும் மென்பொருட்கள் பெறப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் தனிப் பிரிவின் சாதனைகள்**

(அ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 1,179 ஏழை எளிய மக்களின் உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்கென முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2,87,76,160/- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தொழிற்கல்வி பயில்வதற்கு மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டும் வசதி இல்லாத காரணத்தால் சேர இயலாமல் தவித்த 339 மாணவர்களுக்கு ரூ.89,65,235/- முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

(இ) பல்வேறு வகையில் நிதியுதவி கோரிய 449 நபர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.1,33,27,304/- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கென 5,164 ஊனமுற்றோருக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.54,95,276/- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**கோரிக்கைகளின் விவரம் மற்றும் கோரப்பட்ட நிதி 2004–2005**

| வ. எண் | இனம் | கோரிக்கையின் தன்மை | தொகை (ரூபாய் ஆயிரத்தில்) | மொத்தம் (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 37 01 தலைமைச் செயலகம் | சாட்டியது<br>அனுமதித்தது | 7,20<br>24,22,25 | 7,20<br>*34,22,25 |
| 2 | 37 02 தேர்தல்கள் | அனுமதித்தது | 59,20,69 | 59,20,69 |
| 3 | 37 03 முன்னாள் படைவீரர் | அனுமதித்தது | 4,61,44 | 4,61,44 |
| 4 | 37 04 மறுவாழ்வு | அனுமதித்தது | 24,69,95 | 24,69,95 |
| 5 | 37 05 புதுதில்லியில் உள்ள தமிழ் நாடு இல்லம் | அனுமதித்தது | 3,18,43 | 3,18,43 |
| 6 | 37 06 மாநில மனித உரிமைகள் ஆணையம் | அனுமதித்தது | 1,26,28 | 1,26,28 |
| | மொத்தம் | சாட்டியது<br>அனுமதித்தது | 7,20<br>117,19,04 | 7,20<br>127,19,04 |

* மூலதனம் ரூ.10,00,00 இதில் சேர்க்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

# இணைப்பு XVIII

*(133 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 37 – பொதுத் துறை

## தேர்தல்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

கோரிக்கை எண் 37 – "தேர்தல்கள்" என்ற தலைப்பின்கீழ் 2004–2005 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.59,20,69,000/- நிதி தேவைப்படுகிறது. இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதி 10–5–2004 அன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் செலவினங்களுக்கும் 1-1-2005–ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்வதற்கும், தகுதி பெற்ற எஞ்சிய வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், தேர்தல் நிர்வாக நிரந்தர அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப் படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் தேவைப்படுகிறது.

14–வது மக்களவைக்கு 2004 ஆம் ஆண்டு மே திங்களில் 10 ஆம் நாள் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, தற்போதைய மக்களவையில் இம்மாநிலத்திலிருந்து உறுப்பினர் இடம் ஏதும் காலியில்லை.

தமிழக சட்டமன்றப் பேரவைக்கு 10–5–2001–ல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இதையடுத்து 12–வது தமிழக சட்டமன்றம் 14–5–2001 அன்று முறையாக அமைக்கப்பட்டது. தற்போது தமிழக சட்டமன்றப் பேரவையில் எந்தத் தொகுதியிலும் காலியிடம் ஏதும் இல்லை.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 37–ல் 2004–2005 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.59,20,69,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

## 2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)

**102. தேர்தல் அதிகாரிகள்**

| | |
|---|---|
| எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் | ரூ.4,51,18,000/- |

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

| | |
|---|---|
| எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் | ரூ. 8,66,75,000/- |

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | |
|---|---|
| எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் | ரூ. 18,95,000/- |

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | |
|---|---|
| எஎ. இடைத் தேர்தல்கள் | ரூ. 18,000/- (அடையாள ஒதுக்கீடு) |
| எபி. மக்களவைக்குத் தேர்தல் | ரூ. 39,10,92,000/- |

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | |
|---|---|
| எஎ. மாநில சட்டப் பேரவை | ரூ. 12,37,000/- |

**108. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்**

| | |
|---|---|
| எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் | ரூ.6,60,34,000/- |
| மொத்தம் | ரூ.59,20,69,000/- |

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கான செலவு மேற்கொள்வதற்காக தேவைப்படுகின்றது:



**102. தேர்தல் அதிகாரிகள்**

**எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்**

மதிப்பீடு - ரூ.4,51,18,000/-

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமைத் தேர்தல் அதிகாரி உள்ளார். மாநில தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவி புரிய இணைச் செயலர் / துணைச் செயலர் அந்தஸ்தில் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் உள்ளனர். முன்னதாக இந்தத் துறையில் மூன்று இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் இருந்தனர். தேர்தல் பணிகளை கணினிமயமாக்குதல் பணிக்காக மட்டுமே 1997 ஆம் ஆண்டு ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினி) பதவி ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பதவி தற்போது சார்நிலை அலுவலர் பதவிகளுடன் தொடர்ந்து இருந்து வருகிறது. மற்றுமொரு இணைச் செயலர் மற்றும் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி, தேர்தல் தொடர்பான பணிகளையும், தொகுதி எல்லை மறுவரையறை பணிகளையும் கவனித்து வருகிறார். செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும்பொருட்டு மற்றுமொரு இந்திய ஆட்சிப் பணி அந்தஸ்தில் இருந்த இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி சார்நிலை அலுவலர் பதவிகளுடன், தற்காலிகமாக ஜூன் 2001 முதல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு துணைச் செயலர், ஒரு சார்புச் செயலர், ஆறு நிரந்தரப் பிரிவுகள் மற்றும் ஒரு தற்காலிகப் பிரிவும் பொதுத் (தேர்தல்) துறையில் உள்ளன. பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது கூடுதல் பணிகளைக் கவனிக்க தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மாவட்டங்களிலும் கூடுதலாக தற்காலிகப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

தேர்தல் சம்பந்தமான பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய 29 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநகராட்சி ஆணையாளர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாக

அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் உள்ள அனைத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப்பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணிகளைக் கவனிக்க மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகப் பணியிடமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர்-தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் நிரந்தரமாகத் தோற்றுவிக்கப்பட்டு சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், இதர செலவினம், தொலைபேசி கட்டணங்கள் இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கின்றது.

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

**எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள்:**

மதிப்பீடு – ரூ.8,66,75,000/-

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள்



போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்கான நிரந்தரப் பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படி, அனைத்துத் தொகுதிகளுக்குரிய வாக்காளர் பட்டியல்கள் மக்களவை அல்லது மாநில சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் காலியான இடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் இடைத் தேர்தலுக்கு முன்னரும் திருத்தியமைக்கப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் தகுதியேற்படுத்தும் நாளை அறிவித்து திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென ஆண்டின் எந்தக் காலத்தில் அறிவுறுத்தினாலும், அவ்வாறே திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலையும் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படலாம்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து திருத்தப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ், மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையரும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர்.

1-1-2004 ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று கடந்த வருடம் இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தது. வரைவு வாக்காளர் பட்டியல்கள் 17-11-2003 அன்று வெளியிடப்பட்டன. டிசம்பர் திங்கள் 6 மற்றும் 7 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. பெயர் சேர்த்தல்/நீக்கலுக்காகப் பெறப்பட்ட மனுக்களின்மீது முடிவெடுக்கப்பட்ட பிறகு துணைப் பட்டியல்கள் 25-2-2004 அன்று வெளியிடப்பட்டன. இவ்வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 14-வது மக்களவைக்கான தேர்தல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான 70. மங்களூர் (தனி) தொகுதிக்கான இடைத்தேர்தலும் 10-5-2004 அன்று நடைபெற்றன.

மக்களவைப் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு வாக்காளர் பட்டியலில் பெருமளவு பெயர்கள் விடுபட்டதாக பல புகார்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்திலும், தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகங்களில் அமைக்கப்பட்ட வாக்காளர் பதிவு மையங்களிலும் பெறப்பட்டன.

இப்புகார்களின்மீது விசாரணை நடத்தவும், பெயர்கள் விடுபட்டது மற்றும் நீக்கப்பட்டதற்கான காரணங்களை ஆய்ந்தறியவும், எவரேனும் அலுவலர்கள் இதற்குக் காரணமா என்று கண்டறியவும் மேலும் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் உள்ள குறைபாடுகளைக் களைந்து வாக்காளர் பட்டியலில் உள்ளடங்கியுள்ள விவரங்கள் மற்றும் தரத்தினை மேம்படுத்திட உரிய நடவடிக்கை எடுத்திடவும் கேரள மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியான திரு. பி.ஜே. தாமஸ் அவர்களை விசாரணை அதிகாரியாக நியமித்து இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது. இவ்விசாரணை 2004 ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி முடிவடைய வேண்டும் எனவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கிடையில் வாக்காளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் முழு ஒத்துழைப்போடு முழு வாக்காளர் பட்டியலையும் சரியானதாகவும், முழுமையானதாகவும் தயாரிக்கும்பொருட்டு 1-1-2005 ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இவ்வட்டவணையின்படி வாக்காளர் பட்டியலின் ஒவ்வொரு பிரிவிற்கும் அடையாளக் குறிப்புப் பட்டியல் தயார் செய்தல் மற்றும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாளைக்கு முன்னதாக, வெவ்வேறு பகுதிகள் / குடியிருப்போர் நலச் சங்கங்கள் / வீடு கட்டுவோர் சங்கங்கள் / கிராம சபைகள் ஆகியவற்றிற்கு மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் பட்டியலைக் கொண்டு வாக்காளர் பட்டியலின் ஒவ்வொரு பாகத்தையும் பிரித்து விநியோகித்தல் ஆகிய பணிகள் 1-7-2004 முதல் தொடங்கிவிட்டன. வரைவு வாக்காளர் பட்டியல்கள் 15-9-2004 அன்றும் இறுதிப் பட்டியல்கள் 3-1-2005 அன்றும் வெளியிடப்பட உள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டதாகப் பெறப்பட்ட புகார்கள்மீது விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள கேரள மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. பி.ஜே. தாமஸ் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலின் உள்ளடங்கிய விவரங்களையும் தரத்தையும் மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்கவுள்ளது.



**கணினி கட்டமைப்பு**

கடந்த சில வருடங்களாக இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணியை செம்மையாகவும் பயனுள்ள வகையில் செய்ய தகவல் தொழில்நுட்ப கணினியில் உள் மற்றும் வெளிப்பயன்பாடு மற்றும் இது தொடர்பான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி, தேவையான கணினி கட்டமைப்புகள் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அலுவலருக்கும் 5 கணினி மற்றும் 1 செர்வர் வீதம் வழங்கப்பட்டுள்ளன. தலைமை தேர்தல் அலுவலரது அலுவலகத்திற்கு 1 செர்வர் மற்றும் 14 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்பு ஒன்றை மாநில அளவிலான முகவராக நியமிக்க இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தபடி, "சி.எம்.சி. லிமிடெட்" எனும் நிறுவனம், தேர்தல் பணிகள் குறித்த அனைத்து தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அனைத்து மாவட்டங்களில் கணினி பணிகளை மேற்கொள்ளத் தேவையான பணியாளர்களை நியமித்துள்ளது. இந்த நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய கணினி பணியாளர்களுக்கான சம்பளம், கணினி பராமரிப்பு மற்றும் கணினி உதிரிப் பாகங்களுக்கான செலவுகள் இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் நேரிடையாக தேர்தல் விவரங்களை இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்க வசதியாக ஏற்கெனவே உள்ள பழைய கணினி அமைப்புகளை உயர்திறன் கொண்டதாக மாற்றுவது அல்லது முற்றிலுமாக மாற்றியமைப்பது ஆகிய பணிகளை, நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக செய்துமுடிக்க அனைத்து தலைமைத் தேர்தல் அதிகாரிகளையும் இந்திய தேர்தல் ஆணையம் பணித்தது. ஆகவே ரூ.37,64,760/- செலவில் தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்களது அலுவலகங்களில் உள்ள கணினிகளுக்குப் பதிலாக புதிதாக கணினிகள் வழங்க "எல்காட்" கேட்டுக்கொள்ளப்பட்டது. இப்பணிகள் முடிவடைந்துள்ளது. ஏற்கெனவே உள்ள பழைய கணினிகளை "எல்காட்" நிறுவனமே திரும்பப் பெற்றுக்கொள்ளவும், அக்கணினிகளை விற்பதால் கிடைக்கும் தொகையை அரசுக்குச் செலுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளது. தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் 30 மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் அலுவலகங்களிலும் உள்ள கணினி பராமரிப்புச் செலவு, கணினி உதிரிப் பாகங்கள், மென்பொருள்

[2004 ஜூலை 31

ஆகிய செலவுகள் மாநில அளவிலான முகவரான CMC நிறுவனத்தின் கணினி பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தத் துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் வரைவு மற்றும் இறுதிப் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், பயணப் படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென 2004–2005 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.8,66,75,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செலவினத்தின் 50 விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்துகொள்ளும்.

**104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்**

**மதிப்பீடு – *ரூ.18,95,000/–***

மக்களவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமாக தேர்தல் பொருட்கள் மற்றும் மின்னணு இயந்திரங்களை வைப்பதற்கான கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொதுத் (தேர்தல்கள்) துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் ஆகியவையும் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குப்பதிவிற்குரிய உபகரணங்கள் ஆகியவை வேலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி அகிய மாவட்டங்களிலுள்ள தனியார் இடங்களிலும், விருத்தாச்சலம், விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனத்திற்கு வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருடகள் வாங்குதல் ஆகியவை மேற்கண்ட தலைப்பின்கீழ் செலவிடப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.



2004 ஜூலை 31]

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள்**

**மதிப்பீடு – *ரூ.18,000/– (அடையாள ஒதுக்கீடு)***

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்திலுள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்**

**மதிப்பீடு – *ரூ.39,10,92,000/–***

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசிடமிருந்து முழுமையாகப் பெறப்படும். 14-வது மக்களவைக்கு பொதுத் தேர்தல்கள் 10–05–2004 அன்று நடைபெற்றது. வாக்குப் பதிவு/வாக்குகள் எண்ணுகை அலுவலர்களுக்கான மற்றும் ஊர்தி ஓட்டுநர்கள் ஊதியம், தேர்தல் பணிக்காக பணியிலமர்த்தப்படும் முன்னாள் படைவீரர் மற்றும் ஓய்வுபெற்ற காவல் பணியாளர்களுக்கான செலவு, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் மாவட்டங்களிலும் தேர்தல் நடத்துவதற்காக நியமிக்கப்படும் சிறப்புப் பணி அலுவலர்களுக்கான ஊதியம், தேர்தல் பார்வையாளர்களுக்கான செலவினங்கள், வாக்குகள் எண்ணும் இடங்களில் தடை அரண்கள் அமைப்பதற்கான செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் போன்ற முக்கிய செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் மின்கலன்கள், அழியாத மை, பச்சைக் காகித முத்திரைகள், வெளிப்புற ஒட்டுத்தாள் முத்திரைகள், பித்தளை உலோக முத்திரைகள் மற்றும் பிற பொருட்கள் வாங்குவதற்கான செலவினம் மேற்கண்ட உபதலைப்பின்கீழ் செலவிடப்படும். இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

## 106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

### எஎ. மாநில சட்டப் பேரவை

*மதிப்பீடு - ரூ.12,37,000/-*

மாநில சட்டமன்றப் பேரவைக்கு பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. தொல். திருமாவளவன், உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததால் 70. மங்களூர் (தனி) சட்டமன்றத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டது. அத்தொகுதியில் ஏற்பட்ட இந்த காலியிடத்திற்கு 14-வது மக்களவைக்கான பொதுத் தேர்தலுடன் 10-5-2004 அன்று இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத் தேர்தலுக்கான செலவு இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காலியிடங்கள் ஏதும் தற்பொழுது இல்லை. பொதுத் (தேர்தல்கள்) துறையில் மின் தட்டச்சுகள், போட்டோ நகல் எடுக்கும் கருவிகள் மற்றும் தொலை அச்சுக் கருவிகள் ஆகியவை உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை

2001 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 84-வது திருத்தத்தின்படி (21-02-2002-ல் அறிவிக்கப்பட்டது) அரசமைப்புச் சட்டத்தின் 81, 82, 170, 330 மற்றும் 332-வது ஷரத்துகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு நடைபெறவுள்ள முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வரை மாற்றம் எதுவுமின்றி நீடிக்கும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள தொகுதி ஒதுக்கீடு 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும். ஒவ்வொரு மாநிலத்திலுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்யப்படும். இவ்வாறு மறுவரையறை செய்யப்பட்ட நாடாளுமன்ற/சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் 2026 ஆம்





ஆண்டிற்குப் பிறகு நடைபெறவுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புவரை மாற்றம் செய்யப்படாமல் நீடிக்கும். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாற்றம் செய்யப்படவுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் மக்கள் தொகை முடிந்தவரை மாநிலம் முழுவதும் ஒரே விகிதத்தில் இருக்குமாறு எல்லைகள் மறுவரையறை செய்யப்படும். 15-02-2004 அன்றுள்ள நிர்வாக அலகுகளின் அடிப்படையில் எல்லை மறுவரையறை செய்யப்படும். இதற்கு ஏதுவாக 15-2-2004 அன்றுள்ள நிர்வாக அலகுகளை மறு எல்லை வரையறை முடியும்வரை மாற்றம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது என்று எல்லை வரையறை ஆணையம் அனைத்து மாநில அரசுகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட மேற்கண்ட திருத்தங்களுக்கேற்ப, எல்லை மறுவரையறை சட்டம், 2002, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 3-வது பிரிவிற்கேற்ப எல்லை மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டு மேற்கண்ட பணி அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. குல்தீப் சிங் அவர்களின் தலைமையில் 04-07-2002 முதல் எல்லை மறுவரையறை ஆணையம் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் இந்தியத் தேர்தல் ஆணையர் திரு. பி.பி. தாண்டன் அவர்களும், அந்தந்த மாநிலத் தேர்தல் ஆணையர்களும் அலுவல்சாரா உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 மக்களவை உறுப்பினர்களும், அம்மாநில சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக (Associate Members) நியமிக்கப்பட்டுள்ளனர். 14-வது மக்களவைக்கான பொதுத் தேர்தல்கள் இதற்கிடையில் நடைபெற்றதால், தமிழ்நாட்டிலிருந்து மக்களவைக்குப் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களில் ஐவரை மக்களவை சபாநாயகர் நியமிப்பார். தற்பொழுது தமிழ்நாட்டிலிருந்து மக்களவைக்கு 39 தொகுதிகளும், மாநில சட்டமன்றத்திற்கு 234 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போதைய எல்லை மறுவரையறைப் பணிகள் முடிந்தபின்னும், தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றம் செய்யப்படாமல் இருக்கும்.

எல்லை மறுவரையறை சட்டம் 2002-ன்கீழ் உள்ள பிரிவு 9-ன் வரைமுறைகளின்படி, மாநிலத்திலுள்ள மக்கள்தொகை விகிதாசாரத்திற்கேற்றவாறு தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மக்கள்

[2004 ஜுலை 31

தொகை விழுக்காடு அதிகமாகவுள்ள தொகுதிகளைக் கருத்திற்கொண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மக்கள் தொகை விபரம் மற்றும் வரைபடங்களை எல்லை மறுவரையறை ஆணையம் சேகரித்து வருகிறது. இப்பணி முடிவடைந்த பிறகு, எல்லை மறுவரையறை ஆணையம், மாதிரி வரைவுக் குறிப்பேடு ஒன்றைத் தயாரிக்கும். இதன் பிறகு ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்ய எல்லை மறுவரையறை ஆணையம் முடிவு செய்துள்ளது. எல்லை மறுவரையறை ஆணையத்தால் தயாரித்து ஒப்புதலளிக்கப்படும் மாதிரி வரைவு குறிப்பேடு மைய/மாநில அரசிதழ்களில் வெளியிடப்படும். அதன்மீது பொது மக்களிடமிருந்து எதிர்ப்புரைகளும், ஆலோசனைகளும் வரவேற்கப்படும். இதற்குரிய கால அவகாசம் முடிவுற்ற உடன் எல்லை மறுவரையறை ஆணையம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஓரிடத்திலோ அல்லது வெவ்வேறு இடங்களிலோ பொது மக்களின் கருத்துகளை நேரில் கேட்டறியும். இப்பணி முடிவுற்றவுடன் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை பற்றிய இறுதி ஆணைகளை ஆணையம் வெளியிடும்.

எல்லை மறுவரையறை தொடர்புடைய பணிகளுக்கான எழுதுபொருள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் செலவு, மாவட்ட/வட்ட வரைபடங்கள் தயாரிப்பிற்கான செலவு, விளம்பர வெளியீடுகள் முதலிய செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசின் இந்தக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**ஏஏ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

**மதிப்பீடு - ரூ.6,60,34,000/-**

வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அமல்படுத்தவும் அட்டை தயாரிப்புக்குத் தேவையான மென்பொருள் மற்றும் விவரங்கள் தொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அவ்விரிவான வழிகாட்டுதல்கள் 2000 ஆம் ஆண்டு பெறப்பட்டது.



2004 ஜுலை 31]

அனைத்து பொதுத் தேர்தல்கள் மற்றும் மக்களவை, சட்டமன்றங்களுக்கான இடைத் தேர்தல்களில் வாக்காளர்கள் தங்கள் அடையாளங்களை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மூலம் உறுதி செய்ய வேண்டும் என இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தது. தமிழ்நாட்டில் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் மூன்று கட்டங்களாக இதுவரை நடத்தப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டு, பின்னர் மைய இடத்தில் அடையாள அட்டை தயாரிக்கப்பட்டு, இறுதியாகத் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் மாவட்டத் தேர்தல் அலுவலர் மூலமாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் பின்னர் வழங்கப்பட்ட விரிவான வழிகாட்டுதல்களின்படி இரண்டாம் கட்ட புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி 2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகவும், மூன்றாம் கட்டப் பணிகள் 2002–2003 ஆம் ஆண்டிலும் நடத்தப்பட்டது.

இம்மாநிலத்தில் மூன்று கட்டப் பணிகளுக்குப் பிறகு தற்போது 3.53 கோடி வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டத்தில், மீதமுள்ள வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். இப்பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் நிறுவனங்களை முடிவு செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமான "எல்காட்", மாநிலத்தை ஆறு மண்டலங்களாகப் பிரித்து, தலைமைத் தேர்தல் அதிகாரி சார்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியது. மேலும் இப்பணியை, புகைப்படம் எடுத்தவுடன் அடையாள அட்டையை "அப்போதே வழங்கவும்" (Online method) கருதப்பட்டுள்ளது. "எல்காட்" நிறுவனத்துடன் கலந்துபேசி இதற்கான வழிமுறைகள் முடிவு செய்யப்பட வேண்டும்.

மேற்படி கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிப்பு மற்றும் முந்தைய தயாரிப்புகளுக்கான நிலுவைத் தொகை ஆகிய செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.6,60,34,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செலவில் 50 சதவிகிதத்தை மைய அரசே ஏற்றுக்கொள்ளும்.

# இணைப்பு XIX

*(134 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**முன்னுரை:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலன்களைக் காப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்திட பல்வேறு நலத் திட்டங்களைச் செயலாக்குவதற்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**இட ஒதுக்கீடு**

2. தமிழ்நாட்டில் பல்லாண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென இட ஒதுக்கீட்டுக் கொள்கை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் அனுமதி ஆகியவற்றிற்கான இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக விளங்கி, 1921 ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீட்டுக் கொள்கை தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக இப்பிரிவினர் பெரும் பயனடைந்து சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப, படிப்படியாக உயர்ந்து தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. ஆதி திராவிடர்களுக்கு



18 விழுக்காடு, பழங்குடியினருக்கு 1 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடு, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்குத் தற்போதைய கொள்கை வழிவகுக்கிறது. மண்டல் குழு வழக்கு என்று அழைக்கப்படும் இந்திரா சஹானி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் ஒட்டுமொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இவ்வரசுதான் சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994) ஒன்றை இயற்றி, அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்தது. இச்சட்டத்தினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு நீதியர் ஆயத்திற்கு அனுப்பப்பட்டு அவை நிலுவையில் இருந்து வருகின்றன. இவ்வழக்குகளை விரைந்து முடித்திட இவ்வரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் நலிவுற்ற இப்பிரிவினரின் தொகை எத்தனை விழுக்காடாக இருக்கின்றதோ அதற்கு ஏற்றபடி இட ஒதுக்கீட்டின் அளவும் அமைய வேண்டும் என்பதே இவ்வரசின் உறுதியான முடிவாகும். வெவ்வேறு பிரிவினரை உள்ளடக்கிய நலிவுற்ற இம்மக்களுக்கு இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயம் செய்வதில் வேறு சில சமூக அளவுகோல்கள் மற்றும் வரலாற்று உண்மைகளும் அடிப்படையாக அமைகின்றன. இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். எனவே இட ஒதுக்கீட்டின் அளவினை நியாயமாக நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தந்த மாநில அரசின் முடிவிற்கு விடப்பட வேண்டும். இதற்கு வழிவகை செய்திட அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவர மைய அரசு கோரப்பட்டுள்ளது.

மைய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துமாறும், அனைத்திந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துமாறும் மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தியுள்ளது.

## கல்வி

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்:**

3. பிரமலைக் கள்ளர் இனத்தவர் அதிகமுள்ள மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், பிரமலைக் கள்ளர் இன மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 51,829. மொத்தம் 2,007 பயிற்றுவிக்கும் மற்றும் பயிற்றுவிக்கா பணியாளர்கள் இப்பள்ளிகளில் பணியாற்றுகின்றனர். இப்பள்ளிகளின் கல்வித் தரத்தினை மேம்படுத்த அரசு அனைத்து வழிகளிலும் முயற்சி எடுத்து வருகிறது. பள்ளிகளின் நிலை உயர்த்துதல், கூடுதலாக வகுப்பறைகள் கட்டுதல், ஆய்வுக்கூடங்கள் கட்டுதல், ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்கல் போன்றவை அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் ஆகும். மிக முக்கிய நடவடிக்கையாக அனைத்து கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் மின்சாரம், குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளும் அரசுக் கட்டடங்களில் இயங்குகின்றன. அரசால் கணினிக் கல்வி அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆரம்பிக்கப்பட்டபொழுது, 8 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2004–05 ஆம் ஆண்டில் மீதியுள்ள 7 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி ஆரம்பிக்கப்படும்.

260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயலாக்கத்திற்காக 2004-05 ஆம் ஆண்டிற்கு ரூ.22.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிலையத்திலும் திருச்சி மாவட்டம், குமுளூர் மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிலையத்திலும் தலா 50 இடங்கள்கொண்ட 2 பிரிவுகள் பிரமலைக் கள்ளர் இனத்தவர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்க 2003-04 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளன.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவர்களுக்கு குறிப்பேடுகள், புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல்.**

4. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8-வது வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு குறிப்பேடுகளும், 10-வது வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களும், 3-வது வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.



மேற்கூறியவற்றிற்காக 2004-05 ஆம் ஆண்டிற்கு ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாணவர் இல்லங்கள்:**

5. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்கள் நலன் கருதி, 972 மாணவர் இல்லங்கள் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 537 மாணவர் இல்லங்கள் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையாலும், 435 மாணவர் இல்லங்கள் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் 54,880 மாணவர்கள் வருடந்தோறும், பயனடைகின்றனர். பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ள மாணவ/மாணவியர் இந்த மாணவர் இல்லங்களில் சேர அனுமதிக்கப்படுகின்றனர்.

அரசுக் கட்டடங்களில் இயங்கும் மாணவர் இல்லங்களில் குடிநீர், மின்சாரம் மற்றும் கழிவறை ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் மாணவர் இல்லங்களில் தேவையான அளவிற்கு அடிப்படை வசதிகள் இல்லை. எனவே போதிய அடிப்படை வசதிகளுடன் மாணவர்கள் தங்குவதற்கு அதிகமான இட வசதியுடன்கூடிய சொந்தக் கட்டடங்களை மாணவர் இல்லங்களுக்கு கட்டிட அரசு தீர்மானித்துள்ளது.

2001-02 ஆம் ஆண்டில் ரூ.36.99 கோடி செலவில் 114 மாணவர் இல்லங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 2003–04 ஆம் ஆண்டில் ரூ.31.50 கோடி மதிப்பீட்டில் 100 மாணவர் இல்லங்களுக்குக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டது.

2004-05 ஆம் ஆண்டில் மேலும் 100 மாணவர் இல்லங்களுக்கு ரூ.31.50 கோடி செலவில் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். இதனால், தற்போதுள்ள 972 மாணவர் இல்லங்களில் 516 மாணவர் இல்லங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கும். மீதி 456 மாணவர் இல்லங்களுக்கும் வருகின்ற ஆண்டுகளில் படிப்படியாக அரசுக் கட்டடங்கள் கட்டப்படும்.

மாணவர் இல்லங்களுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவர் இல்லங்களுக்கு) விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் நூலக வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 343 மாணவர் இல்லங்களுக்கு சமையல் எரிவாயு

இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2004-05-ல் 100 மாணவர் இல்லங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கட்டடம் கட்டுவதுடன், மேலும் 100 மாணவர் இல்லங்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் எரிவாயு இணைப்பு வழங்கப்படும். மீதியுள்ள மாணவர் இல்லங்களுக்கு வரும் ஆண்டுகளில் படிப்படியாக எரிவாயு இணைப்பு வழங்கப்படும்.

மாணவர்களது பொது அறிவுத்திறன் வளர்த்திட ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் ஆங்கில நாளிதழ் ஒன்றும், இரண்டு தமிழ் நாளிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. 10 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர் இல்ல மாணவர்களுக்கு வெவ்வேறு திட்டங்களின்கீழ் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுத் தேர்வுகளை செம்மையாகச் செய்திட 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர் இல்ல மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டிப் புத்தகங்கள் அனைத்து பாடப் பிரிவுகளிலும் வழங்கப்படுகின்றன. மலைப்பகுதியிலுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் குளிர் காலங்களில் தங்களைக் காத்திட ஏதுவாக வருடந்தோறும் கம்பளி மேலாடைகள் வழங்கப்படுகின்றன. மாணவர் இல்லங்கள் முறையாகச் செயலாற்றிட ஒவ்வொரு விடுதிக்கும் "விடுதி நிர்வாகக் குழு" அமைத்து கண்காணிக்கப்படுகிறது.

972 மாணவர் இல்லங்களின் பராமரிப்பிற்காக 2004-05 ஆம் ஆண்டில் ரூ.48.47 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவுத் தொகை:**

6. கல்லூரி மற்றும் பள்ளி இல்ல மாணவர்களுக்கு உணவுத் தொகை முறையே ரூ.400/- மற்றும் ரூ.300/- வீதம் நபர் ஒருவருக்கு மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

2004-05 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.15.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவு மானியம்:**

7. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பு மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் மாணவர் இல்ல மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது ஒரு மாணவருக்கு ரூ.150/- வீதம் ஒரு வருடத்தில் 10 மாதங்களுக்கு





உணவு மானியம் ஒப்பளிக்கப்படுகிறது. இத்திட்டத்தால் 2003-04 ஆம் ஆண்டில் 1,920 மாணவர்கள் பயனடைந்தனர்.

2004-05 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.27.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சீருடை வழங்குதல்:**

8. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவ/மாணவியர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவர் இல்லங்களில் தங்கியுள்ள 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவ / மாணவியர்களுக்கும் இலவசமாக 2 தொகுதி பாலிகாட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் இல்லங்களில் 19,120 மாணவர்களும், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நல மாணவர் இல்லங்களில் 20,000 மாணவர்களும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 45,000 மாணவர்களும் பயன்பெறுகின்றனர்.

இதற்கென 2004-05 ஆம் ஆண்டிற்கு ரூ1.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**படிப்பு உதவித் தொகை திட்டங்கள்**

9. பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்கும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/ மாணவியருக்கு பல்வேறு படிப்பு உதவித் தொகைகளான பள்ளிப் படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பட்டப் படிப்புகளுக்கு இலவசக் கல்வி ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பள்ளி இறுதிப் படிப்பு முதல் மூன்று ஆண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பு முடிய பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த உச்சவரம்பு ஏதுமில்லை. (பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., மற்றும் பிற).

**(அ) பள்ளிப் படிப்பு உதவித் தொகை:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின் கீழ்:

[2004 ஜூலை 31

(1) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு சிறப்பு கட்டணத் தொகை ஈடுசெய்யப்படுகிறது.

(2) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

(3) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர் பொதுத் தேர்வுக்கு செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் நேரிடையாக அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு ஈடுசெய்யப்படுகிறது.

(4) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழி கல்வி பயிலும் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது.

(5) மாணவர் இல்லங்களில் தங்கி 6 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

(6) மாணவர் இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக சிறப்பு வழிகாட்டிப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

2004-05 ஆம் ஆண்டிற்கு 8,50,000 மாணவர்கள் பயனடைய ரூ.13.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை:**

பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் மேல் நிலைப் பள்ளி முதல் கல்லூரி/பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி நிலைவரை படிக்கும் மாணவர்களின் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவற்றில் ஒரு பகுதியும், முழு தேர்வுக் கட்டணமும் வழங்கப்படுகிறது.

**ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஈடு செய்தல்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழிக் கல்வி மூலம் பதினொன்றாவது மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு



2004 ஜூலை 31]

பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது. இச்சலுகை பெற அவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமலும் குடும்பத்தில் வேறு பட்டதாரி எவரும் இல்லாமலும் இருக்க வேண்டும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் எந்தவித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டிற்கு, 5,30,000 மாணவர்கள் பயன்பெற ரூ.17.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் மற்றும் தொழில்பட்டப் படிப்பிற்கான இலவசக் கல்வித் திட்டம்:**

இலவசக் கல்வித் திட்டமானது, பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் மற்றும் தொழில்பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கும் ஓர் உன்னதமான உதவித் தொகை திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் அரசு/அரசு உதவி பெறும் நிறுவனங்களுக்கு வரையறுக்கும் வீதத்தில் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத இதர கட்டணங்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டிற்கு 1,11,500 மாணவர்கள் பயன்பெற ரூ.27.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) மத்திய அரசின் கல்வி உதவித் தொகை திட்டம்:**

**(1) பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

மத்திய அரசு முதன்முறையாக பள்ளிப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தை (மாநில அரசு 50% மத்திய அரசு 50% என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு செயல்படுத்தும் வகையில் ரூ.2.40 கோடி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் 2003-04-ல் அரசு மாணவர் இல்லங்களில் தங்கிப் பயின்ற 9 ஆம் மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்கள் 16,000 பேர் பயனடைந்துள்ளனர்.

**(2) பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

மத்திய அரசு முதன் முறையாக பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்த ரூ.3.53 கோடி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் கீழ் பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் மற்றும் தொழிற்கல்வி பயின்ற 20,280 இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 2003-04-ல் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2004-05 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.5.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்**

10. கிராமப்புறங்களில் ஆரம்பப் பள்ளி அளவிலேயே படிப்பினை நிறுத்தி விடுவது பரவலாக, குறிப்பாக மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண் குழந்தைகளிடம் இருப்பதைக் குறைத்து அவர்கள் கல்வியைத் தொடர்வதை ஊக்குவிக்கும்பொருட்டு, 3 முதல் 5 ஆம் வகுப்புகள்வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500/- வீதமும், 6 ஆம் வகுப்பில் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.1,000/-மும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டில் 90,000 மாணவியர்கள் பயன் பெற ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்**

11. பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன், வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத முன்னோடித் திட்டமாக 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தை 2004-05 முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் மாணவியர்களுக்கு விரிவுபடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டம் ஏறக்குறைய 2,96,000 மாணவியர்கள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.47.36 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.



**சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குதல்**

**(அ) மாநில அளவிலான பரிசுகள்**

12. ஒவ்வோர் ஆண்டும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினர் இருவருக்கு (ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்) பரிசுகள் வழங்கப்படுகின்றன.

12 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினராக இருந்தால் ரூ.3,000/-ம், மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பினராக இருந்தால் ரூ.5,000/-ம் வழங்கப்படுகிறது.

10 ஆம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினராக இருந்தால் ரூ.1500/-ம், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பினராக இருந்தால் ரூ.3000/-ம் வழங்கப்படுகிறது.

**(ஆ) மாவட்ட அளவிலான பரிசுகள்**

13. ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட இன மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.1,500/-ம், மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.3,000/-ம் வழங்கப்படுகின்றன. இதுபோன்று பத்தாம் வகுப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்ட இன மாணவ/மாணவியருக்கு ரூ.500/- வீதம் இரண்டு முதல் பரிசுகள், ரூ.250/- வீதம் இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் ரூ.150/- வீதம் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சாந்தவர்களுக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.1,000/-, ரூ.500/- மற்றும் ரூ.300/- ஆகும்.

2004-05 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு**

14. ஒவ்வொரு மாவட்டத்திலும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களில் முதலாம் மற்றும் இரண்டாம் இடம்

பெற்று தொழில் பட்டப் படிப்பில் சேர்ந்து பயிலும் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.3000/- வீதம் 4/5 ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு. வழங்கப்படுகிறது.

**(ஈ) தந்தை பெரியார் நினைவு விருது**

*15.* ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்று பாலிடெக்னிக்குகளில் சேரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களில் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.3,000/- வீதம் மூன்று வருடங்களுக்கு தந்தை பெரியார் நினைவு விருது வழங்கப்படுகிறது.

2004-05 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் விருதுகள் வழங்கிட ரூ.23.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொருளாதார மேம்பாடு**

*16.* மிகவும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரது பொருளாதார மேம்பாட்டிற்காக, தையல் இயந்திரம் வழங்குதல் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

*17.* ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த 2001-02 ஆம் ஆண்டில், அரசு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தினை அமல்படுத்தியது. 2004-05 ஆம் ஆண்டில் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்கிட ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சியும் வேலைவாய்ப்பும்**

**அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்**

*18.* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றிபெற போட்டியிடும்



வகையில் 100 மாணவ, மாணவியருக்கு பயிற்சி அளிக்க சென்னையில் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சி நிலையம் ஆதிதிராவிடருக்கான பயிற்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. மேலும், வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில், 75 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ/மாணவியர் இப்பயிற்சி நிலையத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள். எனினும், பயிற்சி நிலையத்துடன் இணைந்த மாணவர் இல்லத்தில் அனுமதிபெற பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படக்கூடாது. மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500/- வீதம் உணவுக் கட்டணம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.39.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்**

*19.* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பு இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட மற்றும் வருமானமுள்ள சுயதொழில் செய்திட வேலைவாய்ப்பு தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பிலுள்ள படித்த வேலையில்லாத தொழில்நுட்ப அறிவுடைய இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்குவது மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சிகளுக்கான கட்டணம் 90:10 என்ற வகையில் முறையே அரசு மற்றும் பயனாளிகளால் செலுத்தப்படும்.

2004-05 ஆம் ஆண்டில் ரூ.90.00 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீட்டுவசதி**

*20.* பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 1.5 இலட்சம் பட்டாக்கள் வழங்கப் பட்டிருப்பினும், அம்மனைகளில் இதுவரை சுமார் 5,000 வீடுகள் மட்டுமே பயனாளிகளால் கட்டப்பட்டுள்ளன. மேற்படி குடியிருப்புகளில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் தெரு

விளக்குகள் அமைத்தல் முதலிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதுதான் பட்டாதாரர்கள் வீடுகள் கட்டுவதற்கு உந்துதலாக அமையும் என அரசு கருதுகிறது. எனவே, ஒடுக்கப்பட்ட இனத்தவர்களை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் புதிய நடவடிக்கைகளின்கீழ், உள்கட்டமைப்புப் பணிகளான சாலை வசதிகள் செய்தல், தெரு விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் சாக்கடை வசதிகளை அக்குடியிருப்புகளில் அமைத்தல் ஆகியவற்றை 2001-02 முதல் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது.

2004-05 ஆம் ஆண்டில் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்திற்கு ரூ.128.00 இலட்சமும், நிலம் கையகப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.107.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

21. மண்டல் குழு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திருத்தி அமைக்கும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பு இயக்கங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்து ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

22. தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. பொருளாதார மேம்பாட்டிற்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர், குழுக்கள் மற்றும் சங்கங்களிலிருந்து பெறப்படும் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறு உள்ள திட்டம், வியாபாரம் அல்லது செயல் திட்டங்களுக்கு குறைந்த



வட்டியில் நிதி உதவி அளித்தல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புது தில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகவராக செயல்படுகிறது.

கீழ்க்கண்ட நிறுவனங்கள் கடன்களை வழங்கவும், கடன்களை வசூலிக்கவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் துணை முகவர்களாக செயல்பட அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

1. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3. கூட்டுறவு வங்கிகள்
4. தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
5. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புது தில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 1993-94 ஆம் ஆண்டு முதல் ரூ.42.06 கோடி காலக் கடனாகப் பெற்று முழுமையாகப் பயன்படுத்தியுள்ளது.

மேலும் சிறுபான்மையினருக்கு கடன் வழங்குவதற்காக புது தில்லியிலுள்ள தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.4.64 கோடி காலக் கடனாகப் பெற்று, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கும் முன்னர், இக்கழகத்தால் சிறுபான்மையினருக்கு காலக் கடன் ரூ.1.43 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் இக்கழகம், தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி இணையங்களின் உறுப்பினர்கள் மற்றும் தனி நபர்கள் (தனியார் கட்டடங்களில் இயங்கும் அரசு மாணவர் இல்லங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வழங்கும் கடன்கள் உட்பட) கடன்களாக 77,506 நபர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ.49.69 கோடி கடன் வழங்கியுள்ளது.

### சிறு கடன் திட்டம்

23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள ஒரு இலட்சம் மகளிருக்கு சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்காக தலா ரூ.2,000/- வீதம் கூட்டுறவு வங்கிகளின் மூலம் சிறு கடன் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் புது தில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் இதுவரையில் 37,665 பயனாளிகளுக்கு ரூ.7.53 கோடி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்கு கடன் வழங்கும் திட்டம்

24. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மகளிர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- கடனுதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

### தமிழ்நாடு வக்ஃபு வாரியம்

25. 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டம் (மத்தியச் சட்டம் 43/1995) 1-1-1996 முதல் அமலுக்கு வந்தது. மேற்படி சட்டப் பிரிவுகளின்கீழ் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. வக்ஃபு வாரியம் 13 உறுப்பினர்களைக் கொண்டதாகும். (இணைப்பு-அ) வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்து தொடர்பான தகராறுகளை முடிவுசெய்வதற்கு, 30 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்ஃபு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அரசு நிதியிலிருந்து அரசு, நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.45.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பழுதுபார்ப்பு / புனரமைப்பு மானியம்

26. மசூதிகள் மற்றும் தர்காக்கள் புதுப்பித்தல் மற்றும் முஸ்லிம் இடுகாடுகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு ஒவ்வோராண்டும், அரசு மானியம் வழங்கி



வருகிறது. இத்திட்டத்திற்கென 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உலமா ஓய்வூதியத் திட்டம்

27. பேஷ் இமாம், முஅஜ்ஜின், அரபி ஆசிரியர் அல்லது முஜாவர் (முஸ்லிம்) ஆக 20 ஆண்டுகள் பணியாற்றி, 60 வயதை அடைந்த அளவை செய்யப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டு ஆண்டு சகாயத் தொகை செலுத்தும் வக்ஃபு நிறுவனங்களில் பணிபுரிந்து, வறிய நிலையில் உள்ள உலமாக்களுக்கு, உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2200. உலமா ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் தற்போதைய எண்ணிக்கை 1545. நிலுவையிலுள்ள விண்ணப்பங்களைப் பரிசீலித்து தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்பளிப்பு ஆணைகளை வெளியிடுவதற்கு தமிழ்நாடு வக்ஃபு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அன்னதானத் திட்டம்

28. தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 12 தர்காக்களில் (இணைப்பு-ஆ) அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 3-3-2003 அன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், வியாழக்கிழமைதோறும் ஏழை பக்தர்களுக்கு தர்காக்களில் கொடையாளிகள் மூலமாகப் பெறப்படும் பொது நன்கொடைகளிலிருந்து உணவு வழங்கப்படுகிறது.

### தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

29. ஹஜ் குழு சட்டம், 2002, 5-12-2002 முதல் அமலுக்கு வந்தது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவை மேற்சொன்ன சட்டத்திலுள்ள பிரிவுகளின்கீழ் அமைத்து 27-6-2003 அன்று அறிவிக்கை வெளியிட்டது. இக்குழு, அலுவல்சார் உறுப்பினரான, குழுவின் செயல் அலுவலருடன் சேர்த்து 16 உறுப்பினர்கள் அடங்கியதாகும். (இணைப்பு-இ)

நிர்வாகச் செலவுகளுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, ஒவ்வோராண்டும் ரூ. 10.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. ஹஜ் புனிதப் பயணத்தின்போது, வெளியூர்களிலிருந்து வரும் ஹஜ் பயணிகளுக்கு சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்குமிடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து ஜித்தாவிற்கு விமானங்கள் இயங்குவதற்கான உரிய ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் போன்ற சேவைகளை, ஹஜ் பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செய்து கொடுக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் நிர்வாகச் செலவிற்கான மானியத்துடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும் ஹஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களைத் தேர்வு செய்யும் குழுவின் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும் ஆகும் செலவினத்திற்காகவும் மானியம் அளித்து வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் இதற்கு ரூ.5.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம்**

30. முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம், சங்கங்கள் பதிவிற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சங்கத்தின் தலைவராவார். ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதாந்திரப் படி வழங்குதல், தகுதியுடைய முஸ்லிம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லிம் மகளிருக்கு கைத்திறத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் அமைத்தல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். இச்சங்கம் தொண்டர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவதன்மூலம் தேவையான நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய திட்டங்கள்**

31. பின்வரும் புதிய திட்டங்கள் 2004-05 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்:





| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்தச் செலவு | 2004-05ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **பிற்படுத்தப்பட்டோர்** | | |
| 1 | மாணவரில்லங்களின் சிறந்த காப்பாளர் / காப்பாளினிக்கு மாநில அளவிலான பரிசுகள் வழங்குதல் | 0.10 | 0.10 |
| 2 | மின் ஆளுகை மாவட்ட அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வழங்கல் | 23.20 | 23.20 |
| 3 | பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவரில்லங்கள் 50-க்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கல் | 15.00 | 15.00 |
| 4 | பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவியர் இல்லங்கள் மூன்றுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல் | 8.25 | 8.25 |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவரில்லங்கள் 50-க்கு நூலகப் புத்தகங்கள் வழங்குதல் | 2.95 | 2.95 |
| | **மிகப்பிற்படுத்தப்பட்டோர்** | | |
| 6 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மாநில அளவிலான பரிசுகள் வழங்குதல் | 0.12 | 0.12 |

| | | | |
|---|---|---|---|
| 7 | கள்ளர் பள்ளிகளுக்கு பயிற்றுவித்தலுக்கான கருவிகளையும் பொருட்களையும் வாங்குதல் | 15.00 | 15.00 |
| 8 | 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் கள்ளர் பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் | 0.16 | 0.16 |
| 9 | 15 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 23 உயர்நிலைப் பள்ளிகளுக்கு படிப்பெருக்கி இயந்திரம் வழங்கல் | 7.60 | 7.60 |
| 10 | மின்ஆளுகை - மதுரை, தனித்துணை ஆட்சியர் (கசீ) அலுவலகத்திற்குக் கணினிகள் வழங்கல் | 2.32 | 2.32 |
| 11 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் இல்லங்கள் 50-க்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கல் | 15.00 | 15.00 |
| 12 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவியர் இல்லங்கள் மூன்றுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல் | 8.25 | 8.25 |
| 13 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் கல்லூரி மாணவரில்லங்கள் 29-க்கு நூலகப் புத்தகங்கள் வழங்குதல் | 1.45 | 1.45 |
| 14 | உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள்/ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் | 25.00 | 25.00 |
| 15 | 7 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறைகளுக்கு வகை செய்தல் | 2.25 | 2.25 |
| | பெரு மொத்தம் | 126.65 | 126.65 |



**முடிவுரை**

*32.* தமிழக அரசு நலிவுற்ற நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கு மிக முக்கியத்துவம் அளிப்பதுடன் அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்த மேற்குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

[2004 ஜூலை 31

## இணைப்பு–அ

### தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களின் பட்டியல்

1. திருமதி பதர் சயீத், தலைவர்
2. திரு. எம்.ஏ. காதர், எம்.பி.
3. திரு. எம்.எஸ். அப்துல் காதர், முன்னாள் எம்.பி.
4. திரு. எம்.ஏ. ஹக்கீம், எம்.எல்.ஏ.
5. திரு. ஈ.ஏ. லியாவுதீன் சேட், எம்.எல்.ஏ.
6. திருமதி ஏ.எஸ். பீபீ ஜான், பி.ஏ.,பி.எல்.
7. திரு. எம்.கே. கான், பி.எஸ்ஸி.,பி.எல்.
8. டாக்டர் ஹாஜா கே. மஜீத்
9. திரு. எம். முகம்மது சிக்கந்தர்
10. திரு. எம்.எஸ்.ஏ. ஷாஜகான்
11. டாக்டர் எஸ். தஸ்தகீர் (மறைவு)
12. திரு. குலாம் அகமது அஸ்கரி, தலைமை காஜி (ஷியா) (மறைவு)
13. திரு. எஸ். முனிர் ஹோடா, இ.ஆ.ப.



2004 ஜூலை 31]

## இணைப்பு–ஆ

### அன்னதானத் திட்டத்தின்கீழ் உள்ள தர்காக்களின் பட்டியல்

வ.எண் தர்காக்களின் பெயர்கள்

1. ஏர்வாடி தர்கா, இராமநாதபுரம் மாவட்டம்.
2. ஹஜரத் நூர் முகமது ஷா அவுலியா தர்கா, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.
3. ஹஜரத் சையது அலி பாத்திமா தர்கா, ஆத்தங்கரை பள்ளிவாசல், புளிமாங்குளம், திருநெல்வேலி மாவட்டம்.
4. திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நாதர் வலி தர்கா, திருச்சி.
5. நாகூர் தர்கா, நாகூர், நாகப்பட்டினம் மாவட்டம்.
6. இரட்டை மஸ்தான் தர்கா, குண்டி ராஜபாளையம், தஞ்சாவூர்.
7. ஹஜரத் தமீம் அன்ஸாரி (ரஹ்) தர்கா, கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம்.
8. ஹஜரத் மோதி பாவா அவுலியா தர்கா, எழும்பூர், சென்னை-8.
9. ஷேக் அப்துல்லா அவுலியா தர்கா, சிங்கம்புணரி, திருப்பத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம்.
10. பாப்பாவூர் ஹஜரத் காஜா ஷேக் அலாவுதின் சிஷ்தி ஆண்டவர்கள் தர்கா, அண்டனபேட்டை, நாகப்பட்டினம் மாவட்டம்.
11. மொய்தீன் ஆண்டவர் புராதன தர்கா மற்றும் பள்ளிவாசல், தெற்கு தெரு, மதுரை.
12. ஹஜரத் காஜா சையத் சுல்தான் அலாவுதின் அவுலியா தர்கா மற்றும் மசூதி, கோரிபாளையம், மதுரை.

[2004 ஜூலை 31

## இணைப்பு—இ

### தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினர்களின் பட்டியல்

1. திரு. எஸ்.பி.எம். சையது கான், எம்.பி., தலைவர், ஹஜ் குழு.
2. திரு. அன்வர் ராஜா, சட்டமன்ற உறுப்பினர்.
3. திரு. எம்.ஏ. ஹக்கீம், சட்டமன்ற உறுப்பினர்.
4. திரு. எஸ்.எம்.ஏ. ஜலீல், நகராட்சி கவுன்சிலர்.
5. டாக்டர் (திருமதி) நிலோஃபர் கஃபீல், நகராட்சித் தலைவி, வாணியம்பாடி.
6. திரு. லத்தீப், தலைவர், கொள்ளிடம் பஞ்சாயத்து யூனியன்.
7. திரு. ஹாஜி முகம்மது சலாவுதின் அயூப், தலைமை காஜி (சுன்னி).
8. பேராசிரியர் திரு. கே.எம். காதர் மொஹிதீன்.
9. திரு. குலாம் முகம்மது மெஹ்திகான், தலைமை ஷியா காஜி.
10. திரு. அல்ஹாஜ் நவாப் முகம்மது அப்துல் அலி, மேன்மைதங்கிய ஆற்காடு இளவரசர்.
11. திரு. எம். முகம்மது ஹாஷிம், தலைவர், தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி.
12. டாக்டர் ஹமீது அப்துல் காதர், சீதக் டிரஸ்டு, சென்னை.
13. டாக்டர் ஹாஜா கே. மஜீத், மரியம் பரிசோதனை மையம், சென்னை
14. திரு. அப்சல் சாஹிப், பர்வீன் டிராவல்ஸ், சென்னை.
15. திருமதி பதர் சயீத், தலைவர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை.
16. திரு. கே. அலாவுதின், இ.ஆ.ப., உறுப்பினர் மற்றும் செயல்-அலுவலர்.



2004 ஜூலை 31]

## இணைப்பு—ஈ

### 2004-2005 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறைத் தலைவர் | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | - | 136.05 | 136.05 |
| வக்ஃபு வாரியம், ஹஜ் குழு மற்றும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் | 0.02 | 191.50 | 191.52 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 5035.93 | 2022.86 | 7058.79 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 4560.19 | 3385.12 | 7945.31 |
| பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | - | 29.09 | 29.09 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | - | 18.88 | 18.88 |
| மூலதனச் செலவு (ஹட்கோ கடன்) | 599.43 | - | 599.43 |
| மொத்தம் | 10195.57 | 5783.50 | 15979.07 |

[2004 ஜூலை 31

# இணைப்பு XX

(134 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

## சிறுபான்மையினர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, சிறுபான்மையினர் இம்மாநிலத்தின் ஓர் அங்கமாக விளங்குவதை உணரும் வகையில் அவர்களின் நலனுக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினரின் பொருளாதார, சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்கு மாண்புமிகு பிரதமரின் 15 அம்சத் திட்டம் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படுகிறது.

சிறுபான்மையினரின் நலனுக்காகக் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) காவல் துறை பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளித்தல்.

(ஆ) வளர்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.



2004 ஜூலை 31]

(ஈ) மொழி வழிச சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி மற்றும் தேரூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

### 1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.2.50 கோடி நிதி உதவி பெற்று 1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு இஸ்லாமியர் அதிகம் வாழும் மாவட்டங்களில் தொழில் முனைவோர் பயிற்சி அளித்து ஒவ்வொருவருக்கும் சுயதொழில் தொடங்கிட ரூ.25,000/– கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

### மகிளா சம்ரிதி யோஜனா

இத்திட்டம் அரசுசாரா நிறுவனங்கள் வாயிலாக 10 சிறுபான்மையின மகளிருக்கு ரூ.1,80,000/– செலவில் தையல், பின்னல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி அளிக்க செயல்படுத்தப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர் இவர்கள் சுயஉதவிக் குழுக்கள் அமைத்து சிறு கடன் பெற்றிட ஊக்குவிக்கப்படுவார்கள்.

### சிறுபான்மையினருக்கு சிறு கடன் வசதி

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து காலக்கடன் தொகையாக ரூ. 25.00 இலட்சம் பெற்று, நபர் ஒருவருக்கு ரூ.10,000/–க்கு மிகாமல் கடன் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### தோல் பொருட்கள் வாழ்க்கைத் தொழில் பயிற்சி

2003–2004 ஆம் ஆண்டில் 50 சிறுபான்மையின மாணவர்களின் தோல் பொருட்கள் வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்காக ரூ.2.82 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சென்னை அம்பத்தூரில் உள்ள இந்தியன் தோல் பொருட்கள் நிலையத்தால் இப்பயிற்சி தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்காக நடத்தப்படுகின்றது.

[2004 ஜூலை 31

**மாநில சிறுபான்மையினர் ஆணையம்**

இம்மாநிலத்தின் மத வழி மற்றும் மொழி வழிச் சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும்பொருட்டு, மாநிலத்தில் சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் சிறுபான்மை மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக மனுதாரர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து, அம்மனுக்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள்மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கண்டறியும்பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு இவர்களுக்கான நலத் திட்டங்களைத் திறம்பட செயலாக்கிட அரசுக்குத் தக்க பரிந்துரைகளைச் செய்கின்றது.



2004 ஜூலை 31]

# இணைப்பு XXI

*(134 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 44 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

*"தமிழ் தமிழருக்கு மட்டும் உரிய மொழி அன்று;*
*இத் தரணிக்கே உரிய மொழி!*
*தமிழ் உள்ளூர் மொழியன்று;*
*உலக மொழி!*
*அத்தகைய உலக மொழியை*
*'வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்'*
*வளர்மொழியாக்க*
*உறுதி கொள்வோம்"*

*– மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்*

மொழி என்பது மனிதனை – சமுதாயத்தை அடையாளம் காட்டும் நாகரிகச் சின்னம் ஆகும். தம் மக்களின் தொன்மை, நாகரிகம், வரலாறு, பண்பாடு, கலை, வாழ்வியல் முறை, வளர்ச்சி நிலை முதலியவற்றைக் கொண்ட பெட்டகமாக ஒவ்வொரு மொழியும், இலக்கியமும் திகழ்கின்றன. இந்த வகையில் தமிழ் மக்களை உலகுக்கு அடையாளம் காட்டித் தலை நிமிரவைத்த பெருமை நம் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் நிரம்ப உண்டு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தொன்மைவாய்ந்த இலக்கியங்கள், இலக்கணங்கள், நீதி நூல்கள், காப்பியங்கள், பக்திப் பனுவல்கள், கலை – அறிவியல் படைப்புகள் என நம் தமிழ் மொழிச் செல்வங்கள் எண்ணற்றவை. இச்செல்வங்கள் தமிழ் மக்களின் – இந்திய மக்களின் உள்ளங்களை மட்டுமன்றி மேனாட்டு அறிஞர்களின் உள்ளங்களையும் கொள்ளை கொள்வன. அதனால் அவர்களும் தாம் ஆற்ற வந்த பணிகளோடு தமிழ் கற்கும் பணியையும் தமிழ் பரப்பும் பணியையும் மேற்கொள்ளலாயினர். திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்கள் ஆங்கிலத்திலும் மற்றும் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்கள் உணரும் நிலையை எய்தின.

[2004 ஜூலை 31

உலகத்தின் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து மொழியும் வளர்ந்து வருதல் வேண்டும் என்பதனால், காலந்தோறும் மொழியை வளப்படுத்துதலும் தேவையாகிறது. இது அறிவியல் தொழில்நுட்ப யுகம். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் புறக்கணித்துவிட்டு எந்த ஒரு மொழியும் ஏற்றம் பெறுதல் இயலாது. மொழியைப் புறக்கணித்துவிட்டு எந்த ஒரு சமுதாயமும் ஏற்றம் பெற முடியாது.

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் 1995 ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கீழ்க்காணும் முழக்கத்தை வெளியிட்டார்கள்:–

> **"புதிய மாற்றங்களை ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் அந்த மொழியின் வலிமையைக் குறைத்து விடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக மாறவேண்டுமென்றால் நிலைத்த பழமையும், வளரும் புதுமையும் இரண்டறக்கலந்து இரண்டின் தன்மைகளையும் உள்ளடக்கியதாக அந்த மொழி வளர்ந்து வர வேண்டும்".**
>
> **"1981 ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில் முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்'என்று முழங்கினார்கள். சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தி உள்ளதை நிரந்தரமாக்கிடவும், 'அறிவியலிலும் தமிழ் அனைத்திலும் தமிழ்' என்பதை உணர்த்திடவும், 'இன்றும் தமிழ் என்றும் தமிழ்' என்ற புதிய முழக்கத்தை இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில் நான் பெருமிதமும் பேருவகையும் அடைகிறேன்."**

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையைச் செயற்படுத்தும் வகையில் தமிழ் மொழி – பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ் மக்களின் வளர்ச்சி உள்ளது எனும் கோட்பாட்டுடன் தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை தன் பயணத்தைத் தொடர்கிறது.



2004 ஜூலை 31]

இத்துறையின்கீழ் இயங்கும் அலுவலகங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் முதலியன தமிழ் மொழி-பண்பாட்டின் பன்னோக்கு வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன**

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
2. மொழிபெயர்ப்புப் பிரிவு
3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
5. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

**தொன்மரபு காப்பன**

6. தொல்லியல் துறை
7. அருங்காட்சியகங்கள்

**வளர்கலை ஊக்குவன**

8. கலை – பண்பாட்டு இயக்ககம்
9. மண்டலப் பண்பாட்டு மையங்கள்
10. அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள்
11. அரசு கவின் கலைக் கல்லூரிகள்
12. அரசு கட்டட, சிற்பக் கலைக் கல்லூரி
13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
14. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
15. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

**2004–2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| | **வருவாய்ப் பகுதி** | | | |
| **2059** | **பொதுப் பணிகள்** | | | |
| 01 | அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 053 | பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 49,10 | 49,10 |
| **2202** | **பொதுக் கல்வி** | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | | | |
| 102 | பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | — | 4,25,00 | 4,25,00 |
| **05** | **மொழி வளர்ச்சி** | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 16,55 | 2,55,00 | 2,71,55 |
| 102 | இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 1 | 53,00 | 53,01 |
| 800 | ஏனைய செலவு | 24,32 | 9,81,55 | 10,05,87 |
| **2205 00** | **கலையும் பண்பாடும்** | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 3,70 | 56,22 | 59,92 |
| 101 | நுண்கலைக் கல்வி | 2,32,85 | 3,62,64 | 5,95,49 |
| 102 | கலை—பண்பாட்டை வளர்த்தல் | 75,58 | 2,95,53 | 3,71,11 |
| 103 | தொல்லியல் | 21,27 | 2,81,76 | 3,03,03 |
| 105 | பொது நூலகங்கள் | — | 29,95 | 29,95 |



| | | | | |
|---|---|---|---|---|
| 107 | அருங்காட்சியகங்கள் | 54,84 | 3,08,38 | 3,63,22 |
| 800 | ஏனைய செலவு | — | — | — |
| **2251 00** | **தலைமைச் செயலகம்—சமூகப் பணிகள்** | | | |
| 090 | தலைமைச் செயலகம் | — | 2,20,90 | 2,20,90 |
| | **மொத்தம் நிகரக் கோரிக்கை** | | | |
| | கூட்டுக — திருப்பி வசூலிப்பவை | | | |
| | **மானியக் கோரிக்கை எண் 44** | 4,29,12 | 33,19,03 | 37,48,15 |

**2004–2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்**

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | |
|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **தமிழ் வளர்ச்சி இயக்ககம்** | | | |
| 1. | தமிழ் வளர்ச்சி இயக்ககத்தைக் கணினிமயமாக்குதல். | 0.10 | 1.90 | 2.00 |
| 2. | தமிழ் மொழியை விருப்பப் பாடமாக நடத்தும் திட்டம். | 1.00 | 0.00 | 1.00 |
| 3. | தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் நூலகம் அமைத்தல். | 0.00 | 1.00 | 1.00 |
| 4. | கிராமங்களின் விவரம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சிறப்பிடங்கள் மற்றும் அதன் சிறப்புத் தன்மைகள் ஆகிய தகவல்களை வெளியிடல் | 5.00 | 0.00 | 5.00 |

| | | | |
|---|---|---|---|
| 5. தமிழில் மென்பொருள் | 1.00 | 0.00 | 1.00 |
| 6. கணினி அகராதி | 1.00 | 0.00 | 1.00 |
| 7. எழுத்து; உச்சரிப்பு சரிபார்ப்பு மென்பொருள் தயாரிப்பு. | 1.00 | 0.00 | 1.00 |
| 8. இலக்கணம் சரிபார்ப்பு மென்பொருள் தயாரிப்பு. | 1.00 | 0.00 | 1.00 |
| **அகரமுதலித் திட்ட இயக்ககம்** | | | |
| 9. ஆறு தொகுதிகளைக் கொண்ட அகரமுதலி வெளியிடல். | 0.00 | 12.00 | 12.00 |
| 10. ஆறு தொகுதிகளைக் கொண்ட அகராதியின் தொகுப்புப்பணி மற்றும் கணினி ஒளி அச்சுப் பணி ஆகியவற்றிற்கான 180 நாட்கள் பயிற்சி வகுப்பு நடத்துதல். | 0.00 | 4.05 | 4.05 |
| 11. கணினி எழுது பொருள்கள் வாங்குதல். | 0.00 | 0.50 | 0.50 |
| **தொல்லியல் துறை** | | | |
| 12. துறைக்கான உயர்தர இணையதளத்தை மேம்படுத்துதல். | 0.25 | 4.75 | 5.00 |
| 13. திருவண்ணாமலை மாவட்டம், ஆண்டிப்பட்டி, தருமபுரி மாவட்டத்திலுள்ள மோடூர் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல். | 0.00 | 5.00 | |



| | | | |
|---|---|---|---|
| **அருங்காட்சியகம்** | | | |
| 14. சென்னை அருங்காட்சியகத்திற்கு வண்ண ஜெராக்ஸ் எந்திரம் வாங்குதல். | 1.50 | 8.50 | 10.00 |
| 15. புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள காட்சிக்கூடங்களைப் புதுப்பித்தல் மற்றும் மாற்றி சீரமைத்தல். | 0.00 | 3.38 | 3.38 |
| 16. திருச்சி அருங்காட்சியகத்தில் கழிப்பிடம் கட்டுதல். | 0.00 | 0.95 | 0.95 |
| 17. அஞ்சல்தலைக் காட்சிக்கூடத்தை நவீனமயமாக்கல். | 0.00 | 7.50 | 7.50 |
| 18. பொருளாதாரத் தாவரக் காட்சிக்கூடத்தில் ஒளிவசதி மற்றும் மின்சாரப் பணிகளை மேம்படுத்துதல். | 0.00 | 8.00 | 8.00 |
| 19. கல்வெட்டு சான்றாவண காப்பிடத்தை வலிவூட்டுதல். | 0.00 | 25.00 | 25.00 |
| 20. அருங்காட்சியகத்தின் புதிய மற்றும் பழைய வெளியீடுகள், படத்துடன் கூடிய அஞ்சல் அட்டைகள் போன்றவற்றை அச்சிடுதல், மறு வெளியீடுகளைக் கொண்டுவருதல். | 0.00 | 10.00 | 10.00 |
| 21. மாவட்ட அருங்காட்சியகத்தில் உள்ள காட்சிக்கூடங்களை மேம்படுத்துதல். | 0.00 | 20.00 | 20.00 |
| 22. பல்நோக்கு பயன்பாட்டு வாகனத்தை வாங்குதல். | 0.00 | 6.00 | 6.00 |

**கலை – பண்பாட்டு இயக்ககம்**

| | | | |
|---|---|---|---|
| 23. மாமல்லபுரம், அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, அரசு கவின்கலைக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகள், கலை பண்பாட்டு இயக்ககம் ஆகியவற்றிற்கு 36 கணினிகள் வாங்குதல். | 0.00 | 20.00 | 20.00 |
| 24. கலை பண்பாடு இயக்ககப் பயன்பாட்டிற்காக மின்னணு ஃப்ரான்க்கிங் சாதனம் வாங்குதல். | 0.05 | 0.75 | 0.80 |
| 25. சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரிக்கு இயந்திரங்களும் சாதனங்களும் வாங்குதல். | 0.00 | 5.00 | 5.00 |
| 26. கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரிக்கு நவீன ஒளிப்பட சாதனம் வாங்குதல். | 0.00 | 2.00 | 2.00 |
| 27. சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள 480 மாணவர்களுக்கு இலவசமாக வழங்க கலைப் பொருட்கள் வாங்குதல். | 4.00 | 0.00 | 4.00 |
| 28. மாமல்லபுரம், அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு அறைகலன்கள் வாங்குதல். | 0.00 | 2.00 | 2.00 |
| 29. திருவையாறு, அரசு இசைக் கல்லூரிக்கு இசைக் கருவிகள் மற்றும் இசை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் வாங்குதல். | 0.00 | 1.00 | 1.00 |
| 30. 17 மாவட்ட இசைப் பள்ளிகளுக்காக இசைக் கருவிகள், இசை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் வாங்குதல். | 0.00 | 2.50 | 2.50 |
| 31. சென்னை, அரசு இசைக் கல்லூரி மாணவர்களுக்காக எழுதுபலகையுடன் கூடிய 100 நாற்காலிகள் வாங்குதல். | 0.00 | 1.00 | 1.00 |
| 32. 17 மாவட்ட இசைப் பள்ளி நூலகங்களுக்கு அலமாரிகள் வாங்குதல். | 0.00 | 1.70 | 1.70 |
| 33. சென்னை, அரசு இசைக் கல்லூரி மகளிர் விடுதிக்காக நாற்காலிகள், கட்டில்கள், உணவு மேசைகள், தொலைக் காட்சிப் பெட்டி மற்றும் வி.சி.ஆர். வாங்குதல். | 0.10 | 1.75 | 1.85 |
| 34. சென்னை மற்றும் மதுரை அரசு இசைக் கல்லூரி, கிராமியக் கலை மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்குதலும் இசைக் கருவிகள் வாங்குதலும். | 0.70 | 0.00 | 0.70 |
| 35. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில், தொடர்புடைய துறை வல்லுநர்களைக் கொண்டு விரிவுரைகளும், செயல்முறை விளக்கங்களும் நடத்துதல். | 0.00 | 1.70 | 1.70 |
| 36. நலிவுற்ற கலைஞர்கள் 500 பேருக்கு நிதியுதவி. | 30.00 | 0.00 | 30.00 |
| 37. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலமாக கிராமியக் கலை விழாக்கள் நடத்துதல். | 0.00 | 9.00 | 9.00 |
| 38. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவால் அரிய கவின் கலைகளைக் குறுந்தட்டில் தயாரித்தல். | 0.00 | 0.75 | 0.75 |
| 39. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலமாக கலைஞர்கள் 'யார்? எவர்?' அகராதியை வெளியிடுதல். | 0.00 | 1.25 | 1.25 |

| | | | |
|---|---|---|---|
| 40. சவகர் பால பவனத்திற்குக் கணினி வாங்குதல். | 1.00 | 7.00 | 8.00 |
| 41. மதுரை, அரசு இசைக் கல்லூரியில் புதிய வகுப்பறைகள் கட்டுதல். | 0.00 | 10.00 | 10.00 |
| 42. சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரிக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல். | 0.00 | 10.00 | 10.00 |
| மொத்தம் | 47.70 | 195.93 | 243.63 |

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் மொழியின் பயன்பாட்டை அனைத்து வகையிலும் மேம்படுத்த இவ்வரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. ஆட்சிமொழிக் குழுவாக 1957-ல் உருவாகி, பின்னர் தமிழ் வளர்ச்சி இயக்ககமாக மாறியுள்ள இத்துறையின் தலையாய பணிகள் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கமும் தமிழ் மொழி வளர்ச்சியும் ஆகும்.

### ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

#### ஆய்வு

அரசு அலுவலகங்களில் தமிழ் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கத் தமிழ் வளர்ச்சித் துறை பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு அலுவலகங்கள் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பில் ஆய்வு செய்யப்படுகின்றன. தலைமைச் செயலகத் துறைகள், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளர் அவர்களாலும், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவை தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களாலும், மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை, மாவட்ட நிலை மற்றும் சார்நிலை அலுவலகங்கள் மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் மற்றும் தொடர்புடைய மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோராலும் குறித்த காலத்திற்கொருமுறை ஆய்வு செய்யப்பெறுகின்றன.





#### சிறப்பாய்வுத் திட்டம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை மேம்படுத்தும் பொருட்டும் விரைவுபடுத்தும் பொருட்டும் 'சிறப்பாய்வுத் திட்டம்' 2003 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தலைமைச் செயலகத்தில் உள்ள ஒவ்வொரு துறையும், அத்துறையின்கீழ் இயங்கும் அனைத்துத் துறைத் தலைமை அலுவலகங்களும், அவற்றின் சார்நிலை அலுவலகங்களும் ஒரே காலத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

#### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆட்சிமொழித் திட்டத்தின் நோக்கம், செயற்பாடு ஆகியன குறித்து அரசு அலுவலர்கள்/பணியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத்திட்டம் நிறைவேற்றப்படுவதனை ஊக்குவிக்கும் நோக்கிலும் மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன.

#### ஆட்சிச் சொல்லகராதி, சிறப்புச் சொல்லகராதிகள்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவன ஆட்சிச்சொல் அகராதிகளாகும். எனவே, இதுவரையில் அதன் ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறப்புச் சொல்லகராதியையும் தொகுத்து அச்சிடும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

#### மொழிபெயர்ப்புப் பணிகள்

அரசு அலுவலகங்களில் தமிழ்மொழி முழுமையாகப் பயன்படுத்தப் படுவதற்குத் துணை புரியும் வகையில் தேவையான மொழி பெயர்ப்புகள் செய்தளிக்கப்படுகின்றன. படிவங்கள், பதிவேடுகள், விதிகள், விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள் முதலியன தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

### தமிழ் வளர்ச்சிப் பணிகள்

#### நூல்வெளியீட நிதியுதவி

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். எனவே தமிழ்மொழியில் நூல்கள் வெளிவருவதற்குத் துணைபுரியும் வகையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. நிதியுதவி வழங்கத் தெரிவு

செய்யப்படும் ஒவ்வொரு நூலிற்கும் பெருமளவாக நூலாக்கச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ.25,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக அளிக்கப்படுகிறது.

**சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு**

தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 30 வகைப்பாடுகளில் ஒவ்வொரு வகைப்பாட்டின்கீழும் சிறந்த நூலொன்றுக்கு ரூ.10,000/– வீதம் 30 நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசு பெறும் நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தார் ஒவ்வொருவருக்கும் ரூ.2,000/– வீதம் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 26 நூல்களுக்கும், அவற்றைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பரிசுக்கான நூல்களைத் தெரிவு செய்ய 31–வது வகைப்பாடாக 'விளையாட்டுப் புத்தகங்கள்' என்ற தலைப்பும் தற்போது சேர்க்கப்பட்டுள்ளது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி**

தமிழுக்குத் தொண்டாற்றிய அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம் ரூ.400/–க்கு மேற்படாத, அகவை 58 முடிந்த தகுதியுடைய தமிழறிஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ரூ.500/– வீதம் வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஐந்து தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

**தமிழ் மொழி–பண்பாட்டைப் பேணி வளர்க்கப் பாடுபட்டவர்களுக்கு நிதியுதவி**

தமிழ் மொழி–பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்பட்டுவரும் நிதியுதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருவதோடு, அவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது. மேலும், தமிழ் அறிஞர் சிலருக்கு ஒட்டுமொத்த நிதியுதவியாக ரூ.10,000/–மும், மரபுரிமையருக்கு ஒட்டுமொத்த நிதியுதவியாக ரூ.5,000/–மும் வழங்கப்பட்டுள்ளது.





**குறள் பரிசு**

திருக்குறள் முற்றோதல் செய்த செல்வி சிவராஜி மற்றும் செல்வி இரா.அருள்ஜோதி ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருக்குறள் முற்றோதல் செய்த செல்வி அ. செல்வபாரதி, செல்வன் அ. எழிலரசன் மற்றும் செல்வன் அ. பழனிமுத்து ஆகியோருக்கும் ரூ.5,000/– வீதம் வழங்க அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**திருவள்ளுவர் விருது**

திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்டதாகும். 2004ஆம் ஆண்டுக்கான விருது சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்/ பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம் / நிதியுதவி தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்பிடவும், பிற மாநிலங்களிலுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும், பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம்/நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

2003 – 2004 ஆம் ஆண்டில் புது தில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ ரூ.50.00 இலட்சம் நல்கை வழங்கப்பட்டுள்ளது.

**விழாக்கள் மற்றும் நூற்றாண்டு விழாக்கள்**

தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள பெருமக்களைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா, உ.வே.சாமிநாதய்யர் பிறந்த நாள் விழா முதலியன கொண்டாடப்பெறுகின்றன. மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவை 30–12–2003 அன்று சென்னையில் அரசு கொண்டாடியது.

**தமிழ்நாட்டு வரலாறு**

தமிழ்நாட்டின் உண்மையான வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அதனை முறைப்படித் தொகுத்து ஏழு தொகுதி நூல்களாக வெளியிட ஏற்கெனவே செய்துள்ள முடிவினையொட்டி, இதுவரை ஐந்து தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளையும் மற்றும் தமிழ்நாட்டு வரலாறு முழுவதும் அடங்கிய ஒரே தொகுதி நூலையும் தயாரித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இ.ஆ.ப. தேர்வுக் கருவி நூல்**

இந்திய ஆட்சிப் பணி தேர்வினைத் தமிழில் எழுதுவோருக்குத் துணைபுரியும் வகையில் தமிழில் கருவி நூல்கள் தயாரிக்கும் திட்டத்தின்கீழ், 'தமிழ் மொழி வரலாறு' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. வரலாறு-புவியியல் கருவி நூல்கள் தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்**

தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருதி, இத்துறையின் வாயிலாக அவ்வப்போது தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**புதிய தமிழ் இலக்கிய வரலாறு**

இதுவரை பலராலும் வெளியிடப்பட்டுள்ள தமிழ் இலக்கிய வரலாறு தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங்களை மட்டுமே சார்ந்ததாக உள்ளது. இந்நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளின் தமிழ் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்துப் புதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூலை உருவாக்கும் தமிழ் வளர்ச்சித் துறையின் திட்டப்பணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

**தமிழ் நூல் விவர அட்டவணை**

தமிழ்நாட்டில் வெளிவந்து பதிவு செய்யப்பெற்று ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்களுக்கு விவர அட்டவணை நூல்கள் தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 1935 ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவர அட்டவணை நூல்கள்



வெளியிடப்பட்டுள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவரங்கள் தயாரிக்கப்பட்டுக் கணினியில் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1946 ஆம் ஆண்டு முதல் உரிய நூல்களுக்கு விவரத் தொகுப்புப்பணி நடைபெற்று வருகிறது. தமிழ் நூல் விவரங்களை இணையத்தின் வழி பரவலாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**'குடிமகன்/குடிமகள்' என்ற சொல்லைப் பயன்படுத்த ஆணை**

உறுதிமொழி ஏற்றல், அரசு ஆணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயற்பாடுகள், பள்ளி, கல்லூரி பாடநூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள், அகராதிகள் மற்றும் படிவங்கள் ஆகிய அனைத்து நேர்வுகளிலும் 'citizen' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் 'குடிமகன்/குடிமகள்' என்றே இனி பயன்படுத்த வேண்டும் எனவும், 'சொல்வங்கி' அமைப்புவழி வெளிவரும் சொற்களையும் அரசு அலுவலகங்கள் தவறாமல் பயன்படுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**சொல் வங்கி**

தமிழில் வழங்கிவரும் பிற மொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ளவும், பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய தேவைக்கேற்பப் புதுப்பித்துக்கொள்ளவும், மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளவும் உரிய ஓர் அமைப்பாகச் 'சொல் வங்கி' எனும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. திங்கள்தோறும் பல்துறை வல்லுநர்கள் கூடி, புதிய புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்குகின்றனர். இச்சொற்களை அனைவரும் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஔவையார் சிலைக்கு மாலை அணிவித்தல்**

பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்த ஔவைப் பெருமாட்டியின் புகழைப் போற்றும் வகையில், அரசின் சார்பில் ஔவையார் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யும் நிகழ்ச்சி ஆண்டுதோறும் உலக மகளிர் தினத்தன்று (மார்ச்-8) நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

### நூல்கள் நாட்டுடைமையாக்கம்

புகழ்மிக்க தமிழறிஞர்களின் படைப்புகள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்னும் நோக்கத்தில் அரசு அவ்வப்போது தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி வருகிறது. இவ்வகையில், 2003–2004 ஆம் ஆண்டில் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், திரு. கநா. சுப்பிரமணியம் மற்றும் திரு. ந. பிச்சமூர்த்தி ஆகியோரின் நூல்களை நாட்டுடைமையாக்க அரசு அறிவித்துள்ளது.

### தமிழ் மன்றம்

மாணவர்களின் தமிழ்ப் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் வண்ணம், மாவட்டந்தோறும் தமிழ் மன்றங்கள் அமைத்து 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களிடையே கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் மாணவர்கள் விருப்புடன் ஈடுபடவும், மாணவப் பருவத்திலேயே மனதில் தாய்மொழிப்பற்றை விதைக்கவும் அரசு வழி வகுத்துள்ளது. மாவட்டந்தோறும் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் முதல் பரிசு மற்றும் இரண்டாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசு ரூ.500/– ஆக இருந்தது ரூ.1,000/– ஆகவும், இரண்டாம் பரிசு ரூ.250/– ஆக இருந்தது ரூ. 500/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 2003–2004 ஆம் ஆண்டு முதல் மாநில அளவிலும் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, மாவட்டத்தில் முதல் பரிசு பெற்றவர்கள் மாநிலப் போட்டியில் கலந்துகொள்வார்கள். போட்டியில் வெற்றி பெறுகிறவர்களுக்குக் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் முதல் பரிசு ரூ.5,000/–, இரண்டாம் பரிசு ரூ.3,000/– மற்றும் மூன்றாம் பரிசு ரூ.2,000/– என மூன்று பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதன்படி பள்ளி மாணவர்களுக்கு 183 பரிசுகள் ரூ. 1,60,500/– செலவில் வழங்கப்படுகின்றன.

### கல்லூரி மாணவர்களுக்குப் போட்டிகள்

கல்லூரி மாணவர்களிடம் தமிழ்ப் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் நோக்கில், மாவட்டந்தோறும் கல்லூரி மாணவர்களிடையே மாவட்ட மற்றும் மாநில அளவில் தமிழில்



கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் மாவட்ட நிலையில் முதல் பரிசு மட்டும் ரூ.1,000/– வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் பரிசு பெற்ற மாணவர்கள் மாநில அளவில் போட்டியில் கலந்துகொள்கின்றனர். அவ்வாறு கலந்து கொள்ளும் மாணவர்களில் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் வெற்றிபெறும் முதல் மூன்று மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் முதல் பரிசு ரூ.5,000/–, இரண்டாம் பரிசு ரூ.3,000/–, மூன்றாம் பரிசு ரூ.2,000/– என வழங்கப்படுகிறது. இதன்படி கல்லூரி மாணவர்களுக்கு 96 பரிசுகள் ரூ.1,17,000/– செலவில் வழங்கப்படுகின்றன.

### இலக்கியச் சொல்லடைவு

தமிழின் சொல்வளத்தை அறுதியிடவும், வழக்கொழிந்துபோன பழந்தமிழ்ச் சொற்களை மீண்டும் புழக்கத்தில் கொண்டு வரவும், சொற்களுக்குரிய பல்வேறு பொருளை அறிந்து அவற்றை முறையாகப் பயன்படுத்தவும் முழுமையான இலக்கியச் சொல்லடைவு இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில்கொண்டு, சங்க காலம் முதல் பாரதிதாசன் காலம் வரையிலான இலக்கியங்களைக் கொண்டு இலக்கியச் சொல்லடைவு தயாரிக்கும் திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கலைச்சொற்களஞ்சியம்

தமிழிலக்கியங்கள், கல்வெட்டுகள் மற்றும் மக்களின் வழக்குச் சொற்கள் ஆகியவற்றிலிருந்து கலைச் சொற்களையும், கலைச் சொல்லுக்குரிய தகுதி பெறும் சொற்களையும் விவரங்களுடன் தொகுத்துக் கலைச்சொற்களஞ்சியம் தயாரிக்கும் திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### திருக்குறள் கலைக்களஞ்சியம்

சென்னைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த திருக்குறள் கலைக்களஞ்சியப் பணி விரைவில் முடிக்கக் கருதி, இப்போது இப்பணி தமிழ் வளர்ச்சி இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**வள்ளலார் நினைவிடம்**

சென்னை ஏழுகிணறு பகுதியில் வள்ளலார் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக ஆக்கப்பட கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம்**

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் 150 ஆம் ஆண்டு பிறந்த நாளையொட்டி, அவரது நினைவுகளைப் போற்றும் வண்ணம் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரம் என்ற ஊரில் அவர் வாழ்ந்த இல்லத்தை நாட்டுடைமையாக்கி, பழுது பார்த்து, 'தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம்' என்ற பெயரில் அரசு செலவில் பராமரித்துப் போற்றிப் பாதுகாக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**பல்துறைக் கலைக்களஞ்சியம்**

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில், ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாகக் கலைக்களஞ்சியங்கள் உருவாக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு, தமிழில் பல்துறைக் கலைக்களஞ்சியம் தயாரித்திட அரசு ஆணையிட்டுள்ளது. இப்பணியினை தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள உயர்நிலைக் குழுவால் முடிவு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**புதிய திட்டங்கள்**

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தைக் கணினிமயமாக்குதல், தமிழ் மொழியை விருப்பப் பாடமாக நடத்தும் திட்டம், தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் நூலகம் அமைத்தல், ஊர் வரலாறு, தமிழ்நாட்டிலுள்ள சிறப்பிடங்கள் மற்றும் அதன் சிறப்புத் தன்மைகள் ஆகிய தகவல்களை வெளியிடல், தமிழில் மென்பொருள், கணினி அகராதி, எழுத்து உச்சரிப்பு சரிபார்ப்பு, மென்பொருள் தயாரிப்பு, இலக்கணம் சரிபார்ப்பு மென்பொருள் தயாரிப்பு ஆகிய திட்டங்களை 2004-2005 ஆம் ஆண்டில் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.





## மொழிபெயர்ப்புப் பிரிவு

தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் ஓர் அங்கமாகச் செயல்பட்டுவரும் மொழிபெயர்ப்புப் பிரிவு, ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் தலைமைச் செயலக நிருவாகத் துறைகளுக்கு உதவும் வகையில், தமிழ் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகிறது. இப்பிரிவில், பொதுவாக, பொதுமக்களின் தகவலுக்காக தமிழ்நாடு அரசிதழ்களிலும், மாவட்ட அரசிதழ்களிலும் வெளியிடப்படும் அரசு அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும் துறைவாரியான கொள்கை விளக்கக் குறிப்புகள், அரசு பொது நிறுவனங்கள் மற்றும் பொது கணக்குக் குழுக்களின் அறிக்கைகள், காவல் துறை மற்றும் சிறைத் துறையின் சிறப்புப் பதக்கங்களுக்கான தகுதியுரைகள், விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை, காபிஃபோசா சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் தடுப்புக் காவல் ஆணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், பத்திரிகைச் செய்திகள், பொதுத் தேர்தல் துறை வெளியிடும் கையேடுகள் மற்றும் அறிவிக்கைகள் மற்றும் நிதிக் குழு அறிக்கைகள் ஆகியவற்றின் மொழியாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், மத்திய அரசிடமிருந்து இந்தி மொழியில் வரப்பெறுகின்ற கடிதங்கள் முதலானவற்றிற்கும் இத்துறை, ஆங்கில மொழியாக்கம் அளிக்கிறது.

மேற்சொன்ன வாலாயமான பணிகளோடு, 2003-2004 ஆம் ஆண்டில் நான்கு விசாரணை ஆணைய அறிக்கைகள் – அதாவது, நீதிபதி திரு. கே.எஸ். பக்தவத்சலம் அவர்கள் தலைமையிலான இரண்டு விசாரணை ஆணையங்கள், திரு. எஸ். நடராசன் அவர்கள் தலைமையிலான ஒரு விசாரணைஆணையம் மற்றும் நீதிபதி திரு. கு. சுப்பிரமணி அவர்கள் தலைமையிலான ஒரு விசாரணை ஆணையம் ஆகியவற்றின் அறிக்கைகள் இப்பிரிவில் மொழிபெயர்க்கப்பட்டன. மேலும், மாநில மனித உரிமைகள் ஆணைய அறிக்கை, சட்டமன்ற உரிமைக் குழு அறிக்கை ஆகியனவும் மொழி பெயர்க்கப்பட்டன.

இவையன்னியில் ஒவ்வோராண்டும், நிதித் துறைக்கு உதவி இயக்குநர் ஒருவர் தலைமையில், பிரிவு அலுவலர் ஒருவர், உதவிப் பிரிவு அலுவலர்கள் மூவர் அடங்கிய மொழிபெயர்ப்புக் குழு ஒன்று முகமையில் அனுப்பப்படுகிறது. இக்குழு, ஆளுநர் உரை, வரவு – செலவுத் திட்ட உரை, வரவு – செலவுத் திட்டம் தொடர்பான ஆவணங்கள் மற்றும்

[2004 ஜூலை 31

துணை மானியக் கோரிக்கைகள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொள்கிறது. தவிரவும், ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின் போதும் உதவிப் பிரிவு அலுவலர் ஒருவர் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர் சட்டமன்றக் கூட்டம் தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறார். அதுபோலவே, மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகளின் மாநாடு நடைபெறும்போது, அது தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக இப்பிரிவில் இருந்து ஒரு குழு பொதுத் (மரபு) துறைக்கு அனுப்பப்படுகிறது.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம்-சுவடிப் புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம் என்ற நான்கு துறைகள் இப்போது உள்ளன. இந்நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகள்; நூல்கள் வெளியிடுதல்; வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் மொழி பயிற்றுவித்தல்; சுவடியியல், மொழிபெயர்ப்பியல் வகுப்புகள் நடத்துதல்; கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல்; செய்திக்கதிர், தமிழியல் ஆய்விதழ் வெளியிடுதல்; பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனக் கல்விசார் அலுவலர்கள் தமிழியல் தொடர்பான பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்து வருகின்றனர். இவை இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, நாட்டுப்புறவியல் மற்றும் மொழிபெயர்ப்புத் தொடர்பானவை என அமைகின்றன.

இந்நிறுவனம் இதுவரையில் 483 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இந்நிறுவனக் கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், அரியநூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன.



2004 ஜூலை 31]

மேலும், இந்நிறுவனம், அரிய தமிழ் நூல்கள்/சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிடுவதற்கென, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதி பெற்று நூல்களை வெளியிட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் மட்டும் இந்நிறுவனம் 38 நூல்களை வெளியிட்டுள்ளது.

இந்நிறுவனம் தனியாகவும், பிற நிறுவனங்களோடு இணைந்தும் பல கருத்தரங்குகளையும் பணிப்பட்டறைகளையும் நடத்தி வருகின்றது. 2003-2004 ஆம் ஆண்டில் புது தில்லியிலுள்ள விஞ்ஞான் பிரசார் நிறுவனத்துடன் இணைந்து **'தென்னிந்திய மொழிகளில் அறிவியல் பரப்புதல்'** குறித்த மூன்று நாள் கருத்தரங்கம், சாகித்திய அகாதெமியுடன் இணைந்து 'தமிழில் செய்யுளியல் கோட்பாடுகள்' என்ற ஒருநாள் கருத்துக்கோவை அரங்கம், அறிவியல் தமிழறிஞர் பெ.நா. அப்புசாமி அறக்கட்டளை சார்பில் ஒருநாள் 'அறிவியல் தமிழ்க் கருத்தரங்கம்' மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து 'பன்னாட்டுத் திருக்குறள் கருத்தரங்கம்' ஆகிய கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன.

தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிச் சிறப்புச் சேர்த்து அமரத்துவம் பெற்ற தமிழறிஞர்களை நாட்டுக்கும், தமிழுலகத்திற்கும் அறிமுகப்படுத்தும் வகையில் பல்வேறு தமிழறிஞர்கள் பெயரில் கருத்தரங்குகள் நடத்தும் திட்டம் தொடங்கப்பட்டு, இதுவரை 11 அறிஞர்கள் பற்றி கருத்தரங்குகள் நடத்தப் பெற்றுள்ளன. நிறுவனத்தில் இப்போது 28 அறக்கட்டளைகள் புலமைமிக்க அறிஞர்கள் பெயரில் நிறுவப்பெற்றுள்ளன. இந்த அறக்கட்டளை சார்பாக அறக்கட்டளைப் பொழிவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடைபெற்ற அறக்கட்டளைப் பொழிவுகள், அவ்வப்போது நூல்களாக வெளியிடப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கீழ்க்குறித்த 2 புதிய அறக்கட்டளைகள் ஒவ்வொன்றும் ரூ.50,000/- முக மதிப்பில் நிறுவப்பட்டுள்ளன.

1. இராமலிங்கம் - அபிராமி அறக்கட்டளை
2. அறிவியல் தமிழறிஞர் பெ.நா. அப்புசாமி அறக்கட்டளை

இந்நிறுவனத்தில் உள்ள நூலகத்தில் தற்போது 75,065 நூல்கள் உள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகக் கட்டடம் பழுதடைந்து, ஒரு பகுதி இடிந்த நிலையில் இருந்ததை சீரமைக்க ரூ.6.35 இலட்சம் அரசு சிறப்பு நல்கையாக வழங்கி பொதுப் பணித் துறை மூலமாக பணி முடிக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1971 ஆம் ஆண்டு முதல் 'தமிழியல்' என்னும் அரையாண்டு ஆய்விதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இறுதியாக வெளிவந்த இதழ் 64 ஆகும். நடப்புப் பருவத்தில், இரண்டு இதழ்கள் வெளியிடப்பெற்றுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1987ஆம் ஆண்டு முதல் 'செய்திக்கதிர்' எனும் காலாண்டிதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இவ்விதழ்வழி நிறுவனத்தின் நடப்புகளை உலகறியச் செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன், சிறுவர் இலக்கியம் – விளக்க நூற்றொகை, தமிழிலக்கியக் குறியீடுகள் – அகராதி, தமிழ் கற்பதற்கான பல்லூடக குறுந்தகடு, கம்பன் களஞ்சியம் மற்றும் தமிழர் பண்பாட்டுக் கலைச் சொற்கோவை ஆகிய ஐந்து பெருந்திட்டப் பணிகள் நடப்புப் பருவத்தில் தொடங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

**புதிய திட்டங்கள்**

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்வழிப் பட்டங்கள் வழங்குகிற வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வியல் நிறைஞர், தமிழியல் முதுகலை ஆகிய பட்ட வகுப்புகள் தொடங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் மொழி, மொழி சார்ந்த கலைகள், இலக்கியங்கள் மற்றும் அறிவியல் ஆகியவற்றை உயர்நிலையில் ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) கீழ் ஏற்படுத்தப்பட்டது. இது, பல்வேறு துறை ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு திட்டப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழ்மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்கான உயர்நிலைக் கல்வி மையமாக விளங்குகிறது. இப் பல்கலைக்கழகம் தமிழ் மொழியின் பல்வேறு கூறுகளான கலை, பண்பாடு, கூத்து, சிற்பம், கட்டடவியல், இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, சமயம், மெய்ப்பொருளியல், நில அறிவியல், சித்த மருத்துவம் மற்றும் தொல்லியல் போன்ற துறைகளை ஆய்ந்து வரைமுறைப்படுத்தும் பணியை 1981 ஆம் ஆண்டு முதல் தொடங்கி பல அரிய ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. இத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இதுவரையிலும் 300-க்கும் மேற்பட்ட அரிய ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளது.



இப்பல்கலைக்கழகம் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம், களஞ்சியம் மற்றும் அகராதி ஆகிய துறைகள் உட்பட 23 துறைகள் மற்றும் 5 புலங்களை உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் முதன்முதலாக 2002–2003 ஆம் ஆண்டு முதல் முதுகலைப் பட்ட வகுப்புகள் புதிதாகத் தொடங்கப்பெற்றன. இக்கல்வியாண்டில் பின்வரும் படிப்புகள் தொடர்ந்து பயிற்றுவிக்கப்படும்.

| வரிசை எண் | முதுகலை வகுப்பு | துறை |
|---|---|---|
| 1 | தமிழ் | இலக்கியம் |
| 2 | பயன்பாட்டு மொழியியல் | மொழியியல் |
| 3 | வரலாறு, தொல்லியல் மற்றும் சுவடியியல் | சுவடிப்புலம் |
| 4 | வரலாறு, கலை மற்றும் பண்பாடு | சிற்பத் துறை |
| 5 | திருக்கோயில் நிருவாகம், சுற்றுலாவியல் மற்றும் தத்துவம் | தத்துவம் |
| 6 | இசை | இசை |
| 7 | வரலாறு மற்றும் தொல்லியல் | கல்வெட்டியல் |
| 8 | பயன்பாட்டுத் தமிழியல் | அகராதியியல் |

முனைவர் பட்டப் படிப்பில் 542 ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வினை இவ்வாண்டும் தொடர்கிறார்கள்.

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழியியல் பள்ளி வாயிலாகத் தகுதிகாண் பருவத்திலுள்ள இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி அலுவலர்களுக்கான தமிழ்மொழிப் பயிற்சி வகுப்புகள் வழக்கம் போல் அரசின் உதவியோடு நடத்தப்பட்டு வருகிறது.

100 மாணவர்களுடன் நாட்டு நலத் திட்ட (NSS) அமைப்பு ஒன்று நிறுவப்பட்டு, இந்த ஆண்டு முதல் முதன்முதலாக செயல்படவுள்ளது.

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப் பெற்றுள்ள பல்வேறு அறக்கட்டளையின் சார்பில் கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. துறைகளில் ஆசிரியர்–மாணவர்கள் இணைந்து பங்கேற்கும் வகையிலான

[2004 ஜூலை 31

திணையரங்கம், பயிலரங்கம், மொழியரங்கம் ஆகியவை காலமுறைப்படி நடத்தப்படுகின்றன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், பல்கலைக்கழக மேம்பாட்டிற்காக ரூ.225.00 இலட்சம் நிதியுதவிக்கான ஒப்புதல் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெறப்பட்டுள்ளது. நிதியுதவி ரூ.225.00 இலட்சம் தலைப்புவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்

| | | | |
|---|---|---|---|
| 1. | கட்டடங்கள் | – | ரூ. 75.00 |
| 2. | நூல்கள் மற்றும் வெளியீடுகள் | – | ரூ. 10.00 |
| 3. | கருவிகள் | – | ரூ. 112.25 |
| 4. | ஏனையவை | – | ரூ. 27.75 |
| | மொத்தம் | – | ரூ. 225.00 |

2004–2005 ஆம் ஆண்டில் 20 நூல்கள் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளன. 2003 ஆம் ஆண்டில் (சனவரி முதல் டிசம்பர் 2003 வரை) மொத்தம் ரூ.27.46 இலட்சம் மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நிதியுதவியோடு, தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றிற்குப் புகழ் சேர்க்கும் வகையில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை எய்தும் நோக்குடன் முனைப்புடன் செயல்படும்.

**மதுரை உலகத் தமிழ்ச் சங்கம்**

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கும் பணி தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் தமிழக அரசால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில், பொதுப் பணித் துறை மூலம் பெயர்ப்பலகை நிறுவப்பட்டுள்ளது. தொடக்கப் பணிக்காக ரூ.5.00 இலட்சம் தொகையை அரசு தற்போது வழங்கியுள்ளது. இத்தொகையைக் கொண்டு சுற்றுச்சுவர் கட்டும் பணி தொடங்கப்படும்.



2004 ஜூலை 31]

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

தமிழ் மொழி வளர்ச்சிக்கும் வளத்துக்கும் அடிப்படையான பணிகளில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி தொகுத்து வெளியிடுதலும் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கிறது. விரிவான சொற்பிறப்பியல் அகரமுதலியைப் பன்மடலங்களில் தொகுத்து வெளியிடுவதே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் நோக்கமாகும். இருமொழிப் பேரகராதியான இந்நூல் அனைவருக்கும் பயன்படும் பொதுவகை அகராதியாகவும், குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்தரும் சிறந்த கருவிநூலாகவும் திகழ்வது தனிச்சிறப்புக்குரியதாகும். தமிழ்மொழி வளத்தை உலகிற்குக் காட்டுவதோடு தனித்தமிழ் ஆர்வலர்களுக்குப் பயன்படும் வகையிலும் இப்பேரகரமுதலியில் தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களும் பிரித்துக் காட்டப்படுகின்றன. தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், இலக்கணம் மற்றும் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களும், சான்றுகளும் தேவையான இடங்களில் பட விளக்கங்களும் இடம் பெற்றிருப்பது இப்பேரகரமுதலிக்கு அணி சேர்க்கும் சிறப்புக் கூறுகளுள் சிலவாகும்.

இந்திய மொழிகளிலேயே விரிவான மற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த தகவல்களைக் கொண்டு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, இயக்ககத்தால் வெளியிடப்பெறுகிறது. இவ்வியக்ககம் வெளியிடத் திட்டமிட்டுள்ள 31 பகுதிகளில், இதுவரை வெளிவந்துள்ள 6 பகுதிகள் மொழி வல்லுநர்கள் மற்றும் பல தரப்பட்ட அறிஞர் பெருமக்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டுள்ளன. அகரமுதலியின் எஞ்சிய 25 பகுதிகளை நான்காண்டு கால வரம்பெல்லைக்குள் தொகுத்து வெளியிடும் பணியை விரைவுபடுத்தி, இலக்கினை எய்தும் வகையில், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அகரமுதலித் திட்டத்திற்கு அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்ததன் பலனாக, 2002–2003 ஆம் ஆண்டில், 6 பகுதிகள் ஒருசேரத் தொகுத்து அச்சுக்கு அணியமாக்கப்பட்டது. இத்துறையின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். அதனைத் தொடர்ந்து, 2003–2004 ஆம் ஆண்டில், மேலும் 6 பகுதிகள் அச்சுக்கு அணியமாக்கப்பட்டுள்ளன.

**புதிய திட்டங்கள்**

2004–2005 ஆம் ஆண்டில், எஞ்சிய 13 பகுதிகளில், மேலும் 6 பகுதிகளை முடித்திடவும், 6 தொகுதிகளைக் கொண்ட அகராதியின் தொகுப்புப் பணி மற்றும் கணினி ஒளி அச்சுப் பணி ஆகியவற்றிற்கான 180 நாட்கள் பயிற்சி வகுப்பு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இயக்ககத்திற்குக் கணினி அச்சுப்பொருள் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தொல்லியல் துறை

தொல்லியல் துறையானது, 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இத்துறையின் முக்கியக் குறிக்கோள் தமிழகத்திலுள்ள பழங்கால நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்வதும் ஆகும். கல்வெட்டுக்களைப் படியெடுத்து, அச்சிட்டு, நூல் வடிவில் வெளிக்கொணர்தல், மாவட்ட அகழ்வைப்பகங்கள் அமைத்தல், தொன்மை வாய்ந்த கலைப்பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாக்க வேதியியல் கூடம் அமைத்தல், தொன்மைச் சிறப்பு வாய்ந்த கலைப்பொருட்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை உள்ளடக்கி இத்துறை தனது பணிகளை விரிவுபடுத்தியுள்ளது.

மதச்சார்பற்ற கட்டடங்கள் உட்பட 87 வரலாற்றுச் சின்னங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மரபுப் பாதுகாப்பிற்கென பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் ரூ.500.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்நிதியில், இதுவரையில் ரூ.455.31 இலட்சத்திற்குப் பணிகள் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்துறையை நவீனப்படுத்த, 11 கணினிகள் உரிய துணைப் பாகங்களுடன் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து விவரங்களையும் கணினி/ குறுந்தகடுகளில் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வரலாற்று நினைவுச் சின்னங்கள், தொன்மைமிக்க கலைப் பொருட்கள், கல்வெட்டுக்கள் மற்றும் ஓலைச்சுவடிகளின் நிழற்படங்களைக் கணினி மற்றும் குறுந்தகடுகளில் மாற்றி நீண்ட காலம் பேணிப் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.





தொல்லியல் ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பாடங்களில் ஓராண்டு பட்டயப்படிப்பு நடத்தப்படுகிறது. இத்துறையில் ஒவ்வோராண்டும் முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, கல்வெட்டு மற்றும் தொல்லியல் பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகம் தற்போது இத்துறையினை தொல்லியல் முனைவர் பட்டம் பெறுவதற்கான ஆய்வு மையமாக அங்கீகரித்துள்ளது.

15 அகழ்வைப்பகங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. அகழாய்வுகளில் கிடைக்கும் தொல்பொருட்கள் மற்றும் தொல்லியல் அலுவலர்களால் சேகரிக்கப்படும் தொல்பொருட்கள், இத்துறையில் உள்ள தொல்லியல் இரசாயனக் கூடங்களில் இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்டு இவ்வருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சின்னங்களின் புகைப்படங்கள் மற்றும் அகழாய்வு தொடர்பான தொல்பொருட்கள் குறித்த புகைப்படங்கள் புகைப்படப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. காலாண்டு இதழ்கள், அகழாய்வு அறிக்கைகள், கல்வெட்டுக்கள் மற்றும் துறை சார்ந்த பதிப்புகள் அச்சுப்பிரிவில் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

'1972 ஆம் ஆண்டு பழம்பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் பதிவுச்சட்டத்தின்படி', மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டத்தின்கீழ், இத்துறையின் கட்டுப்பாட்டில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இரு பதிவு அலுவலர் அலுவலகங்கள், பழம்பொருட்களைப் பதிவு செய்வதற்காகச் செயல்பட்டு வருகின்றன. இங்கு நூறாண்டுகளுக்கு முற்பட்ட கலைப் பொருட்கள் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க பஞ்சலோக சிலைகள் மற்றும் கலைப் பொருட்கள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் ஏற்ற வகையில், கலைப் பொருட்களைப் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்பெறுகின்றன.

அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இது சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளது. இந்நூலகத்தில் மருத்துவம், கணிதம், சோதிடம், வானவியல் மற்றும் இலக்கியம் தொடர்பான 72,300–க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் மற்றும் ஏனைய சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**புதிய திட்டங்கள்**

2004–2005 ஆம் ஆண்டில், உயர்தரமான இணையதளம் ஒன்றை ரூ.5.00 இலட்சத்தில் இத்துறைக்கென தனியாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரையில், இத்துறை வரலாற்றுச் சிறப்புமிக்க 25 இடங்களில் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், 2004–2005 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மோதூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் ரூ.5.00 இலட்சத்தில் அகழாய்வுப் பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அருங்காட்சியகங்கள்

சென்னை, அரசு அருங்காட்சியகம் நம் நாட்டின் அருங்காட்சியகங்களில் மிகப் பழமை வாய்ந்த இரண்டாவது பெரிய அருங்காட்சியகமாகும். இவ்வருங்காட்சியகத்தில் தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், வேதியியல் கூடம், கலைக் கூடங்கள் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் ஆகியவை உள்ளன. அரிய பல தொல்பொருட்களும் அறிவியல் பொருட்களும் இங்கு பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர் மற்றும் பெருமக்கள் பலரும் ஜூன், 2003-ல் நடைபெற்ற சென்னை அரசு அருங்காட்சியக 151-வது நிறைவு விழாவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், சென்னை அருங்காட்சியகத்தின் 151-வது ஆண்டு நிறைவுவிழா நினைவுப் பட்டயத்தைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். பின்னர், மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் 151-வது ஆண்டு நிறைவு விழா மலரை வெளியிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதைப் பெற்றுக் கொண்டார். பல அருங்காட்சியக வெளியீடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அவற்றை மேதகு ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இது ஒரு சிறப்புவாய்ந்த மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். அரசின் பெருங்கொடையினால், உலகத் தரத்திற்கு இணையாக சென்னை அருங்காட்சியக வளாகம் முழுவதும் பொலிவூட்டப்பட்டுள்ளது.





சென்னை அருங்காட்சியகத்தின் 151-வது ஆண்டு விழாவையொட்டி, அருங்காட்சியகங்களைப் புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பேணுதல், நிலை உயர்த்தல் மற்றும் சிறப்புப் பிரச்சினைகள் மானியம் – பாரம்பரிய பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 2002–2003 ஆம் ஆண்டில் பதினோராவது நிதிக் குழு ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க்காணும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன:–

1. 'தமிழ்நாடு தொழில்கள் மற்றும் கைத்தொழில்கள் வளர்ச்சி விளக்கக் காட்சிக்கூடம்' என்ற பொருளில் புதிய காட்சிக்கூடம் அமைக்கப்பட்டது.
2. முப்பரிமாண படக் கூடம் (3D effect, hologram) புதிதாக அமைக்கப்பட்டது.
3. படிமக் கூடம் (வெண்கலச் சிலைகள் கூடம்–Bronze gallery), நாணயவியல் கூடம் (Coins gallery) மற்றும் வேதியியல் பாதுகாப்புக் கூடம் (Conservation gallery) ஆகிய கூடங்கள் புதுப்பிக்கப்பட்டன.
4. அருங்காட்சியக வளாக நிலம் செம்மைப்படுத்தப்பட்டது மற்றும் அதன் முன்புறமுள்ள தொன்மையான சுற்றுச் சுவர் புதுப்பிக்கப்பட்டது.
5. உள்சுற்று தொலைக்காட்சி மற்றும் பாதுகாப்பு அமைப்புப் பணி நிறுவப்பட்டது.

151-வது ஆண்டு விழா நிறைவையொட்டி, இறுதியாக தேசிய கருத்தரங்கம் ஒன்று, 'இன்றைய அருங்காட்சியகச் செயல்முறைகள்' என்ற தலைப்பில் 2003 டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. மேலும், திங்கள்தோறும் சிறப்புச் சொற்பொழிவுகள் மற்றும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் நடத்தப்பட்டன.

2003–2004 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ், புவியியல் கலைக் கூடக் கட்டடத்தைப் பழுதுபார்க்கும் பணிக்கென ரூ.10.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அதற்கான சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

தற்பொழுது இருபது மாவட்ட அருங்காட்சியகங்கள் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருட்டிணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய நகரங்களில் இயங்கி

வருகின்றன. இவ்வருங்காட்சியகங்கள் சீரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றன.

**புதிய திட்டங்கள்**

2004–2005 ஆம் ஆண்டில் கலர் ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குதல், புதுக்கோட்டை அருங்காட்சியகக் காட்சிக் கூடங்களைப் புதுபபித்துச் சீரமைத்தல், மாவட்ட அருங்காட்சியகங்களில் உள்ள காட்சிக் கூடங்களை நவீனப்படுத்திப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் மொத்தம் ரூ.92.17 இலட்சத்தில் நிறைவேற்றப்பட உள்ளன.

## கலை – பண்பாட்டு இயக்ககம்

கலைக் கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் தனியே ஒரு குடையின்கீழ் கொணர்ந்து, கலை பண்பாட்டு இயக்ககம் எனும் தனி இயக்ககம் டிசம்பர் 1991-ல் அரசால் உருவாக்கப்பட்டது. கலை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதே கலை-பண்பாட்டு இயக்ககத்தின் இன்றியமையாத நோக்கமாகும். இவ்வியக்கக அமைப்பைப் பணியாட்சி அலுவலகங்கள், கலைக் கல்வி நிறுவனங்கள், கலை வளர்ச்சி நிறுவனங்கள் என மூன்றாக வகைப்படுத்தலாம். பணியாட்சி அலுவலகங்களான கலை-பண்பாட்டு இயக்ககம் சென்னையிலும், மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள் தமிழ்நாட்டில் ஆறு இடங்களிலும் இயங்கி வருகின்றன. கலை-பண்பாட்டு மையங்கள் கலைப் பணிகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து, அரசின் கொள்கைகளை நிறைவேற்றத் துணை செய்கின்றன. கலைக் கல்வி நிறுவனங்கள், இசை, நாட்டியம், கருவி இசை, நாட்டுப்புறக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை மற்றும் பிற கவின் கலைகளைக் கற்பிக்கும்வகையில், அரசு இசைக் கல்லூரிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு இடங்களிலும், மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள் சென்னையில் மயிலாப்பூர் மற்றும் தியாகராய நகர் ஆகிய இரு மையங்களிலும், மதுரையில் ஒரு மையத்திலும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 17 இடங்களிலும், அரசு கவின் கலைக் கல்லூரிகள் சென்னை, கும்பகோணம் ஆகிய இரு இடங்களிலும், அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரத்திலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்; தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகியவை சென்னையிலும், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள் மாநிலத்தில்





35 இடங்களிலும் மற்றும் மாவட்டங்கள் தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

**மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள்**

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆறு மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து, அரசின் கொள்கைகளைச் செம்மையாக மாவட்ட அளவில் நிறைவேற்றி வருகின்றன. உதவி இயக்குநர்கள் தலைமையில் இயங்கும் மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு, மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் இயங்கும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை விழாக்களையும், கலைப் பயிற்சிகளையும் அளித்து வருகின்றன. தமிழ்நாட்டில் பாரம்பரிய பண்பாடு குறித்த விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதற்கும், தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கும் மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் இதர கலை நிறுவனங்களுடன் இணைந்து மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. இப்பணிகளுக்காக அரசு, 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.8.50 இலட்சமும், 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.62.99 இலட்சமும், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சமும் நிதி வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.15.00 இலட்சம் நிதி வழங்கப்படவுள்ளது. மண்டலக் கலை-பண்பாட்டு மையங்களில் கலைப் பணிகளை விரைவுபடுத்தும்வகையில், 2002–2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், மதுரை கலை-பண்பாட்டு மையங்களுக்கு தலா ஒன்று வீதம் ஒளியச்சு இயந்திரங்களும், 2003–2004 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மையங்களுக்கு தலா ஒன்று வீதம் ஒளியச்சு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**மாவட்டக் கலை மன்றங்கள்**

நமது தொன்மைமிக்க கலை வடிவங்களை மேம்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் பரப்புவதற்கும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிக் காக்கவும் மற்றும் திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து

ஊக்குவிக்கவும், மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது, தமிழ்நாட்டில் கிருட்டிணகிரி மாவட்டம் நீங்கலாக, இதர மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு, மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. கிருட்டிணகிரி மாவட்டத்தில் மாவட்டக் கலை மன்றம் ஏற்படுத்த கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**மாவட்ட அளவிலான விருதுகள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமைமிக்க 5 கலைஞர்களுக்கு அவர்களது அகவைக்கும், கலைப் புலமைக்கும் ஏற்ப விருதுகள் வழங்கும் திட்டம், 2002–2003 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இத்திட்டத்தின்கீழ், பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன:–

| | | |
|---|---|---|
| 18 | அகவை மற்றும் அதற்கு உட்பட்ட அகவைப் பிரிவினர் | – 'கலை இளமணி' விருது |
| 19–35 | அகவைப் பிரிவினர் | – 'கலை வளர்மணி' விருது |
| 36–50 | அகவைப் பிரிவினர் | – 'கலைச் சுடர் மணி' விருது |
| 51–60 | அகவைப் பிரிவினர் | – 'கலை நன்மணி' விருது |
| 61 | அகவை மற்றும் அதற்கு மேற்பட்ட அகவைப் பிரிவினர் | – 'கலை முதுமணி' விருது |

விருது பெறுவதற்குத் தகுதியுடைய கலைஞர்களைத் தெரிவு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையில் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், மாவட்டக் கலை மன்றங்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. விருதுகள் வழங்க அரசு, 2002–2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.625 இலட்சமும், 2003–2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.75 இலட்சமும் வழங்கியது. 2004–2005 ஆம் ஆண்டில், இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.3.75 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

**அடையாள அட்டைகள்**

2002–2003 ஆம் ஆண்டில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 11,776 கலைஞர்களுக்கு அடையாள





அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசிடமிருந்து நிதி உதவியைப் பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்குக் கலைஞர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பயணச் சலுகை துய்த்தல் ஆகிய பயன்களைப் பெற கலைஞர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் பயன்பட்டு வருகின்றன.

**கலைக் கல்வி நிறுவனங்கள்**

**1. அரசு இசைக் கல்லூரி, சென்னை**

இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, நாதசுரம், முகர்சிங், பரதநாட்டியம், தவில், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், நட்டுவாங்கம் மற்றும் முதுகலை இசைக் கலைமணி ஆகியவற்றில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சி ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2003–2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 330 மாணவ, மாணவியர் பயின்றனர்.

**2. அரசு இசைக் கல்லூரி, மதுரை**

இக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரத நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சி ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2003–2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 178 மாணவ, மாணவியர் பயின்றனர்.

**3. அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்**

இக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சி ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2003–2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 116 மாணவ, மாணவியர் பயின்றனர்.

**4. அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

இக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதசுரம், பரதநாட்டியம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இளங்கலை இசையில் மூன்றாண்டு குரலிசை பட்டப் படிப்பும்

[2004 ஜூலை 31

பயிற்றுவிக்கப்படுகின்றன. 2003-2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 149 மாணவ, மாணவியர் பயின்றனர்.

**மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள்**

சென்னையில் தியாகராய நகர், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம் ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வந்த மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள், 2004-2005 ஆம் கல்வியாண்டு முதல் தியாகராய நகர், மைலாப்பூர் ஆகிய இரு மையங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மேலும், மதுரையில் ஒரு மாலை நேர இசைக் கல்லூரி மையம் நடத்தப்பட்டு வருகிறது. சென்னை தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகியவற்றிலும், மைலாப்பூர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரத நாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன. 2003-2004 ஆம் கல்வியாண்டில் இம்மாலை நேர மையங்களில் 155 மாணவ, மாணவியர் பயின்றனர்.

2003-2004 ஆம் ஆண்டில், அரசு இசைக் கல்லூரிகளில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு இசைக் கருவிகள் வாங்க ரூ. 4.00 இலட்சமும், அறைகலன்கள் வாங்க ரூ. 3.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. அரசு இசைக் கல்லூரி ஆசிரியர்களின் இசைக் கல்வித் திறனை மேம்படுத்தும்பொருட்டு, ரூ. 2.00 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. அரசு இசைக் கல்லூரிகளில் மாணவர்களின் நலன்கருதி, ஆண்டு இசைவிழாக்கள் நடத்தப் பெறுவதற்காக, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.3.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இசை விழாக்கள் 2003-2004 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

**மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்**

திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை, திருவாரூர், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருட்டிணகிரி, சீர்காழி, கரூர், ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய 17 இடங்களில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதசுரம், தவில் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் மாவட்ட அரசு இசைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.1.00 இலட்சம் செலவில், புத்தாக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ரூ.1.00 இலட்சத்திற்கு இசைக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு இசைப் பள்ளிகள் மற்றும் இசைக் கல்லூரிகளுக்கான பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்க ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் கல்வியாண்டில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் மொத்தம் 1,169 மாணவ, மாணவியர் இசைக் கல்வி பயின்றனர்.



2004 ஜூலை 31]

**அரசு கவின் கலைக் கல்லூரிகள்**

**1. அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை**

இக்கல்லூரியில் பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுக் கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டுக் கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

1. சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
2. துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு
3. காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
4. வண்ணக் கலை
5. சிற்பக் கலை
6. பதிப்போவியம்

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

1. வண்ணக் கலை
2. காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
3. சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
4. துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

இக்கல்லூரியில் பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சியாகும். இக்கல்லூரி 153 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பெருமைக்குரியதாகும். இக்கல்லூரியின் பாடத் திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். 2003-2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 512 மாணவர்கள் பயின்றனர்.

[2004 ஜூலை 31

## 2. அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

இக்கல்லூரியில் பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுக் கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டுக் கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

1. வண்ணக் கலை
2. காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
3. சிற்பக் கலை

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

1. வண்ணக் கலை
2. சிற்பக் கலை

இக்கல்லூரியில் பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதி, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சியாகும். இக்கல்லூரியின் பாடத் திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றதாகும். 2003–2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 283 மாணவ, மாணவியர் பயின்றனர். 2003–2004 ஆம் கல்வியாண்டில் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்ற பட்டப் படிப்பு மாணவர்களுக்கு இலவச வரைபொருட்கள் ரூ.2.65 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.2.00 இலட்சம் செலவில் இக்கல்லூரிக்கு அறைகலன்கள் வாங்கப் பெற்றுள்ளன.

### அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரத்தில் அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 2000–2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டுப் பட்டப் படிப்பு தொடங்கப்பெற்று கற்பிக்கப்பட்டு வருகின்றது. மரபு கட்டடக்கலைப் பிரிவில், தொழில் நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபு சிற்பக்கலை, மரபு ஓவியக்கலை–வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின் கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. 2003–2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 122 மாணவ, மாணவியர் பயின்றனர்.



2004 ஜூலை 31]

2003–2004 ஆம் ஆண்டில் மாமல்லபுரம் அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களின் பயனுக்காக ரூ.3.00 இலட்சம் செலவில், கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டன.

### கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவிபெறும் தனியார் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம் 2000–2001 ஆம் கல்வியாண்டு முதல் கலை-பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்லூரியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இள நுண்கலைப் பட்டப் படிப்புகள், மூன்றாண்டு பட்டப் படிப்புகள், முதுகலைப் பட்டப் படிப்புகள், பின்வரும் பாடப் பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இள நுண்கலைப் பட்டப் படிப்பு:**

1. பரதநாட்டியம்
2. குரலிசை
3. வயலின்
4. வீணை
5. மிருதங்கம்

இப்பிரிவில் பட்டம்பெற, குறைந்த பட்சக் கல்வித் தகுதி பத்தாம் வகுப்புத் தேர்ச்சியாகும்.

**மூன்றாண்டு பட்டப் படிப்பு:**

1. பரத நாட்டியம்
2. குரலிசை
3. வயலின்
4. வீணை
5. மிருதங்கம்

இப்பட்டப் படிப்பிற்குக் குறைந்தபட்சக் கல்வித் தகுதி, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சியாகும்.

[2004 ஜூலை 31

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

1. பரதநாட்டியம்
2. குரலிசை
3. வயலின்
4. வீணை
5. மிருதங்கம்

இதைத் தவிர, பரதநாட்டியத்தில் முழு நேர, பகுதி நேர முனைவர் பட்டப் படிப்பும் உள்ளது. 2003–2004 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 250 மாணவ, மாணவியர் பயின்றனர்.

**இராக ஆராய்ச்சி மையம்**

இராகங்கள் மற்றும் இராக இசையின் விளைவுகள்பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு, தமிழக அரசால் 1992 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவராக கலைமாமணி திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். இம்மையத்திற்கு, அது தொடங்கப்பட்டதிலிருந்து 2003–2004 ஆம் ஆண்டுவரை ரூ. 22.00 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டுள்ளது. மருத்துவ ரீதியான பண்களின் சக்திகளை அறிவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இராகங்களை நல்ல இசைப் புலமை பெற்ற இசைக் கலைஞர்கள், மருத்துவர்கள் மற்றும் பல ஆய்வாளர்களைக் கொண்ட அறிஞர்கள் மூலமாக மக்களுக்குப் பயன்படும் விதமாக ஆய்வரங்கம் நடத்தப்படுகிறது. சென்னையில் மட்டும் நடந்து வந்த இந்த இராக ஆராய்ச்சி மையத்தின் இசை அரங்கம், ஆய்வரங்கம், திருச்சி, புதுக்கோட்டை., மதுரை போன்ற ஏனைய மாவட்டங்களிலும், அங்குள்ள உள்ளூர் மக்கள் பயன்பெறும்விதமாக, 'இராக வைபவம்' என்ற தலைப்பில் ஆய்வாளர்களையும், இசைக் கலைஞர்களையும் ஒருங்கிணைத்து 2003–2004 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. ஆய்வரங்க இசை நிகழ்ச்சிகள் புகைப்படத்திலும், ஒளி நாடாக்களிலும் பதிவாக்கப்பட்டு, இதுவரை நூற்றுக்கும் மேலான ஒளி நாடாக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**நூல் வெளியீட்டிற்கு நிதியுதவி**

பரத நாட்டியம் குறித்த புத்தகங்கள் (3 தொகுதிகள்) வெளியிட அருந்யோதயா கலை நிறுவனத்திற்கு அரசால் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.7.00 இலட்சம் தொகை வழங்கப்பட்டு, புத்தகங்களும் வெளியிடப்பட்டுவிட்டன.



2004 ஜூலை 31]

**தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்**

மேதகு தமிழக ஆளுநரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும் வழங்கப்படும் என்ற அரசு அறிவிப்பினையடுத்து, 2003–2004 ஆம் ஆண்டில், முதல் தவணையாக ரூ.25.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழக அரசு, தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்கு ரூ.175.00 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும், தென்னகப் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டப்பெறுவதற்கு ரூ.2.00 கோடி நிதியுதவியும், மையம் ஏற்படுத்த ரூ.1.54 கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலமும் தமிழக அரசு ஏற்கெனவே அளித்துள்ளது. தென்னகப் பண்பாட்டு மையம் தனித்தும், மாநில கலை பண்பாட்டுத் துறை வழியாக நிதி உதவி வழங்கியும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை தமிழ்நாட்டில் நடத்தி வருகிறது. 2003–2004 ஆம் நிதியாண்டில் தென்னகப் பண்பாட்டு மையம் கலை பண்பாட்டுத் துறைக்கு ரூ.12.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ததில், தமிழிசை விழா, கிராமியக் கலை விழா, பழங்குடிக் கலை விழா, தமிழிசை மூவர் விழா, மயிலாடுதுறை மூவர் விழா, இளைஞர் கலை விழா, சாரல் விழா, பொங்கல் கலை விழா போன்ற பல்வேறு கலை விழாக்கள் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் சிறப்பாக நடத்தப்பெற்றன.

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

இந்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை, மாநில அளவில் செயற்படுத்துவதற்காகவும், தொன்மைவாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. இந்நிறுவனம், மாநில அரசு வழங்கும் மானியத் தொகைமூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**1. கலைப் பணித் திட்டங்கள்**

மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், புகழ் பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின்மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து, அதன்மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும், ஊக்கமும் அளித்தல், கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' என்ற மாநில விருது வழங்கி சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், அரிய பழம்பெரும் கலை நூல்களை வெளியிட, நூல் வெளியீட்டு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தொண்டு கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை, வருங்காலச் சந்ததியினரும் கண்டு உணரும்வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழிக் கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

**2. கலைமாமணி விருது வழங்குதல்**

கலைத் துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும்பொருட்டு, அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்குகிறது. இதுவரையில் 1259 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில் இதுகாறும் 272 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் 1974–75 ஆம் ஆண்டு முதல் 1986–87 ஆம் ஆண்டு முடிய ரூ.1000/– வீதம் 147 கலைஞர்களுக்கும், 1990–91 ஆம் ஆண்டு முதல் 1993–94 ஆம் ஆண்டு முடிய ரூ. 5,000/– வீதம்



17 கலைஞர்களுக்கும், 1994–95 ஆம் ஆண்டு முதல் 1998–99 ஆம் ஆண்டு முடிய ரூ.10,000/– வீதம் 13 கலைஞர்களுக்கும், 2000, 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் ரூ.15,000/–வீதம் 13 கலைஞர்களுக்கும் ஆகமொத்தம் 190 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயற்பட்டுவரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும்வகையில், இதுவரையில் 24 கலை நிறுவனங்களுக்கும் 16 நாடகக் குழுக்களுக்கும் கேடயம் மற்றும் சுழற்கேடயம் வழங்கப் பெற்றுள்ளன.

**3. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/– நிதியுதவியாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 6563 கலைஞர்கள் நிதியுதவி பெறும்வகையில், அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**4. மறைந்த புகழ்பெற்ற கலைஞரின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்**

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 1986 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையில், ரூ. 2,000/– வீதம் வழங்கிய வகையில் 88 குடும்பங்களும், 1992 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையில், ரூ. 3,000/– வீதம் வழங்கிய வகையில் 77 குடும்பங்களும், 1998 ஆம் ஆண்டு முதல் நாளது வரையில் ரூ. 5,000/– வீதம் வழங்கிய வகையில், 81 குடும்பங்களும் பயன்பெற்றுள்ளன. இதுவரை கலைஞரின் மறைவினால் தவிக்கும் 246 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இக்குடும்பப் பராமரிப்பு நிதியுதவியை ரூ. 5,000/–த்திலிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**5. மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்**

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களுக்கிடையே கலை பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இந்திய அரசின் சார்பில் புதுதில்லி, சங்கீத நாடக அகாதெமியும், தமிழக அரசின் சார்பில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே

கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்திற்கு 81 வெளி மாநிலக் கலைக் குழுக்கள் வருகைபுரிந்துள்ளன. 83 தமிழகக் கலைக் குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வந்துள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் தமிழகக் கலைக் குழு ஒன்று இராஜஸ்தான் மாநிலத்திற்குச் சென்று கலை நிகழ்ச்சிகளை 24–02–2004 முதல் 06–03–2004 முடிய நடத்தியது. மேலும், தமிழ்நாட்டில், இராஜஸ்தான் மாநிலக் கலைக் குழு வரவேற்கப்பட்டு, 13–03–2004 முதல் 20–3–2004 முடிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## 6. திறம்படைத்த இளங்கலைஞர்களை ஊக்குவித்தல்

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசை ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும்வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் கலைத் தொண்டு நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து, அதன்வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. 2003–2004 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் பயனாக 31 கலைஞர்கள், வல்லுநர் குழுக்களால் தேர்வு செய்யப்பெற்றுத் தமிழகத்தில் நன்கு இயங்கும் 14 கலைத் தொண்டு நிறுவனங்களின்வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1662 இளங்கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 7. கிராமியக் கலைஞர்களுக்கு/கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

ஊரகக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும் இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/– தொகையும், ஒவ்வொரு கலைக் குழுவிற்கும் ரூ.2,500/– தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1425 ஊரகக் கலைஞர்களும்/ கலைக் குழுக்களும் பயன் துய்த்துள்ளனர்.

## 8. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்து நடத்துவதற்கு நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.



## 9. அரிய கலை நூல்களுக்கு மானியம் வழங்குதல்

அரிய கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 103 நூல்கள் மன்ற நல்கையுடன் வெளியிடப்பட்டுள்ளன.

## 10. கலை விழாக்கள்

மறைந்துவரும் நம் மரபுவழிச் சிறப்புமிக்க ஊரகக் கலைகளின் சிறப்பினை, தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும்வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்துவரும் ஊரகக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும்வண்ணமும், மன்றம் ஊரகக் கலை விழாக்களுக்கும், மறைந்த கலைஞர்களை நினைவுகூர் விழாக்களுக்கும் ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது. கலை மேதைகளின் நினைவு விழா, சலங்கை விழா, முப்பெரும் கலை விழா, நாடக விழா, நாட்டிய விழா ஆகிய விழாக்களையும், குற்றாலத்தில் சாரல் விழா போன்ற விழாக்களையும் மன்றம் நடத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து 2–8–2003 முதல் 9–8–2003 வரை குற்றாலத்தில் சாரல் விழாவினையும், அருள்மிகு முருகப்பெருமானின் திருக்கோயில்களில் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் கந்தசஷ்டி விழாவினை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் ஒத்துழைப்புடன் அறுபடை வீடுகளில் கந்தசஷ்டி கலை விழா 25–10–2003 அன்று திருத்தணியிலும், 26–10–2003 அன்று சுவாமிமலையிலும், 27–10–2003 அன்று பழனியிலும், 28–10–2003 அன்று பழமுதிர்ச்சோலையிலும், 29–10–2003 அன்று திருப்பரங்குன்றத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன் 17–01–2004 மற்றும் 18–01–2004 ஆகிய நாட்களில் சென்னையில் பொங்கல் கலை விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. மகாமகத் திருவிழாவினை முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 4, 5 ஆகிய தேதிகளில் கும்பகோணத்தில் மன்றத்தின் சார்பாகச் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மேலும், இரண்டு வெளி மாநிலங்களில் தமிழகக் கலை விழாக்களையும், தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்திடவும், புதிதாக நாட்டிய நாடகங்களை உருவாக்கி மேடையேற்றம் செய்யவும் மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. மேலும், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிராமியக் கலை விழாக்களை மிகச் சிறப்பாக நடத்திட மன்றம் திட்டமிட்டு வருகின்றது.

**11. பரதநாட்டியக் கலைஞர்களுக்கு நட்டுவாங்கப் பயிற்சி அளித்தல்**

நட்டுவாங்கக் கலைஞர்களை உருவாக்கும் திட்டத்தின்கீழ், 6 பரதநாட்டியக் கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி உதவித் தொகை வழங்கி கலை வல்லுநர் ஒருவரைக் கொண்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**12. நாதசுரம்–தவில் கலைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்**

நாதசுரம், தவில் கலைப் பிரிவுகளில் இளங்கலைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ், 10 நாதசுரக் கலைஞர்களுக்கும், 4 தவில் கலைஞர்களுக்கும் பயிற்சி உதவித் தொகை வழங்கி கலை வல்லுநர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**13. குழந்தைக் கலைஞர்களை ஊக்குவித்தல்**

5 வயது முதல் 15 வயது வரையிலான இசைத் துறையைச் சார்ந்த 22 குழந்தைக் கலைஞர்களும், பரதநாட்டியத் துறையைச் சார்ந்த 20 குழந்தைக் கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டு அந்தந்தத் துறையில் தத்தமது திறனை வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கும்பொருட்டு வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசை பயிலும் இசைத் துறைக் குழந்தைக் கலைஞர்களுக்கும், பரதநாட்டியத் துறைக் குழந்தைக் கலைஞர்களுக்கும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு கலைப் பணிகளுக்காக தன்னார்வக் கலைத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நல்கை வழங்கி வருகின்றது.

**தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு**

கவின் கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், பரப்பவும் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும், புதுதில்லி, லலித கலா அகாதெமியுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, 1975 ஆம் ஆண்டில் அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இக்கலையமைப்பு மாநில அரசு வழங்கும் உதவி மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.



**'கலைச்செம்மல்' விருது வழங்கும் திட்டம்**

மரபுவழி, புதுப்பாணி கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்துவரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் 'கலைச்செம்மல்' விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதாளர் ஒவ்வொருவருக்கும், பாராட்டிதழுடன் ரூ.20,000/– விருதுத் தொகையாக வழங்கப்படுகிறது. இதுவரை மரபுவழிப் பிரிவில் 5 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், புதுப்பாணிப் பிரிவில் 36 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**மாநில அளவில் மரபுவழிக் கலைக் காட்சி நடத்தி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில், மரபுவழிக் கலைக் காட்சிகள், ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக் காட்சி விருதுகளாக ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வழங்கப்படுகிறது. இதுவரை 43 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு மரபுவழிக் கலைக் காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாநில அளவில் புதுப்பாணிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில், புதுப்பாணிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக் காட்சி விருதுகளாக 30 வயது நிறைவடைந்த 'மூத்த கலைஞர்கள்' பங்குகொள்ளும் பிரிவில் ஒவ்வொருவருக்கும் ரூ.15,000/– வீதமும், 30 வயது நிறைவடையாத 'இளங்கலைஞர்கள்' பங்குகொள்ளும் பிரிவில் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வீதமும் வழங்கப்படுகிறது. 2003 ஆம் ஆண்டில் மூத்த கலைஞர்கள் பிரிவில் 5 கலைஞர்களுக்கும், இளங் கலைஞர்கள் பிரிவில் 10 கலைஞர்களுக்கும் வழங்கப்பட்ட விருதுகள் உட்பட இதுவரை 249 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்குப் புதுப்பாணிக் கலைக் காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**தனி நபர் கலைக் காட்சி அல்லது கூட்டுக் கலைக் காட்சி நடத்த நிதியுதவி வழங்கும் திட்டம்**

தமிழ்நாட்டில் ஓவிய, சிற்பக் கலைஞர்கள் தங்களது கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகளைத் தனியாகவோ அல்லது

[2004 ஜூலை 31

குழுவாகவோ இணைந்து நடத்திட, கலைக் காட்சி ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுவரை 124 கலைஞர்கள் தனி நபர் கலைக் காட்சி நடத்துவதற்காகவும், 10 குழுக்கள் கூட்டுக் கலைக் காட்சி நடத்துவதற்காகவும் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**நுண்கலை பயிலும் இளங்கலைஞர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்**

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும்வகையில், இளங்கலை மற்றும் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவியருக்கு முறையே ரூ.3000/- மற்றும் ரூ.5,000/- வீதம் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இளங்கலைப் பிரிவில் 398 பேருக்கும், முதுகலைப் பிரிவில் 34 பேருக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாவட்டங்களில் கலைக் கூடங்கள்**

ஓவிய நுண்கலைக் குழுவின் கலைக் கூடம் ஒன்று உதகமண்டலத்திலும், மற்றொன்று மதுரை கலை பண்பாட்டு மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்திலும் செயல்படுகின்றன. அக்கலைக் கூடங்களில் தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களின் படைப்புகள் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**'நுண்கலை' கலையிதழ் வெளியீடு**

கலை ஆர்வலர்கள் பயன்பெறும்வகையில் 'நுண்கலை' என்னும் கலையிதழ், ஓவிய நுண்கலைக் குழுவால் வெளியிடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக்காட்டும்வகையில் இதுவரை தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் கொண்ட இப்பதிப்பின் 23 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**மாவட்டங்களில் கலைக் காட்சிகள் நடத்தும் திட்டம்**

உள்ளூர் கலைஞர்களை ஊக்கப்படுத்தும்வகையில் கலை பண்பாட்டுத் துறையின் ஆறு மண்டல மையங்களுடன் இணைந்து கலைக் காட்சிகள் நடத்திட மண்டலத்திற்கு இதுவரை ரூ.10,000/- என



2004 ஜூலை 31]

வழங்கப்பட்டு வந்த தொகை 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து மண்டலத்திற்கு ரூ. 15,000/- என உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்டங்களில் நடத்தப்பெறும் கலைக் காட்சிகள், கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளால் ஓவிய, சிற்பக் கலைஞர்கள் விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர். மேலும், ஓவியப் போட்டிகளில் பங்குபெறும் மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். நுண்கலைகளைப் பற்றி பொதுமக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும் இந்நிகழ்ச்சிகள் தூண்டுகோலாக அமைகின்றன.

**நுண்கலைகளில் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

நுண்கலை பயில ஆர்வமுள்ளோருக்காக நுண்கலைப் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைதோறும் சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தொடக்க நிலை பயில விருப்பம் உள்ள ஆர்வலர்கள் ரூ. 600/- கட்டணம் செலுத்தியும், உயர்நிலை பயில விருப்பம் உள்ள ஆர்வலர்கள் ரூ. 900/- கட்டணம் செலுத்தியும், பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம். திருத்தப்பட்ட பாடத் திட்டங்களுடன் 2004, சனவரி முதல் தொடங்கப்பட்ட ஆறு மாத காலப் பயிற்சி வகுப்பில் தொடக்க நிலைப் பிரிவில் 40 ஆர்வலர்களும், உயர்நிலைப் பிரிவில் 25 ஆர்வலர்களும் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் 1979 ஆம் ஆண்டில், சென்னையில் தொடங்கப்பட்டு நன்கு செயல்பட்டு வருகிறது. ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதுக்குட்பட்ட மாணவர்களிடையே மறைந்துகிடக்கும் படைப்பாற்றல் திறனை வெளிக்கொணரவும், அவர்களுக்குக் கலைப் பயிற்சி அளித்து கலைத் திறமையினை மேம்படுத்துவதும் இதன் தலையாய நோக்கங்களாகும்.

சென்னை உட்பட 35 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. 23 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் எனவும், 10 இடங்களில் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும், இரு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன:—

**1. மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்**

சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோவில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம்.

**2. சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்**

பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை, மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல்.

**3. சவகர் சிறுவர் மன்ற ஊரக மையம்**

புதுக்கோட்டை மாவட்டம் பொன். புதுப்பட்டி மற்றும் மதுரை எல்லிஸ் நகர்.

இம்மன்றங்கள் அரசு வழங்கும் மானியத் தொகைமூலம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன.

**சிறுவர் மன்றங்களில் பகுதி நேரமாகப் பயிற்றுவிக்கப்படும் கலைகள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| 1. பரதநாட்டியம் | 11. ஆர்மோனியம்-கீபோர்டு |
| 2. நாட்டுப்புற நடனம் | 12. வீணை |
| 3. கைவினை | 13. அயல்முரசு (டிரம்ஸ்) |
| 4. குரலிசை | 14. அயல்முழவு (பேண்ட்ஸ்) |
| 5. நாடகம் | 15. தையல் |
| 6. உடல்திறன் பயிற்சி | 16. ஓவியம் |
| 7. மிருதங்கம் | 17. திரை அச்சு |
| 8. தபேலா | 18. புல்லாங்குழல் |
| 9. கராத்தே | 19. யோகா |
| 10. கணினி | 20. சிலம்பம். |

சென்னையில் 16 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் மற்றும் விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும் மாலை நேரத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலும் 2003–2004 ஆம் ஆண்டில் 9000 சிறுவர், சிறுமியர் பயிற்சி பெற்றனர். இரு ஊரக சவகர் சிறுவர் மன்றங்கள் நீங்கலாக அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலும் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.



**அயல்நாடுகளில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் சிறுவர்கள் பங்கேற்றல்**

நார்வே நாட்டில் ஜூன், 2003-ல் நடைபெற்ற நார்வே கலை விழாவில் இந்தியாவின் சார்பாக சென்னை, சவகர் சிறுவர் மன்றத்திலிருந்து ஒரு மாணவி கலந்துகொண்டு பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் ஆகியவற்றை நிகழ்த்தினார். 2004 பிப்ரவரி மாதம் மொரிஷியஸ் நாட்டில் நடைபெற்ற பன்னாட்டு குழந்தைகள் விழாவில் இந்தியாவின் சார்பில் சென்னையைச் சேர்ந்த ஒரு மாணவியும், வேலூரைச் சேர்ந்த ஒரு மாணவியும் கலந்துகொண்டு கரகம், காவடி போன்ற தமிழ்நாட்டு நாட்டுப்புற நடனங்களை நிகழ்த்தினர்.

**பிற மாநில நிகழ்ச்சிகளில் சிறுவர்கள் பங்கேற்றல்**

2003 மே மாதம் பாண்டிச்சேரி சவகர் சிறுவர் மன்றத்தில் ஆறு நாட்கள் நடத்தப்பெற்ற அகில இந்தியக் குழந்தைகள் முகாமில் ஏழு குழந்தைகளும், 2003 நவம்பர் மாதம் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் ஏழு நாட்கள் நடத்தப்பெற்ற தேசியக் குழந்தைகள் முகாமில் 42 குழந்தைகளும் தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொண்டு தங்கள் கலைத் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். 2003 டிசம்பர் மாதம் ஒரிசா மாநிலம், புவனேஸ்வர் நகரில் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தினரால் மூன்று நாட்களுக்கு நடத்தப்பட்ட இளம் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கான தேசிய மாநாட்டில், தமிழ்நாட்டில் அனைத்து சிறுவர் மன்றங்களிலிருந்து 14 சிறார்களும், ஐந்து நாட்கள் சண்டிகர் நகரில் நடைபெற்ற தேசிய ஜிம்னாஸ்டிக் போட்டியில் இரண்டு குழந்தைகளும் கலந்துகொண்டனர்.

**பிற மாநில சிறுவர் மன்றக் குழந்தைகள் தமிழகம் வருகை**

தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையம் அளிக்கும் நிதியுதவி கலை பரிமாற்றத் திட்டத்தின்கீழ் 2003 ஆகஸ்டு மாதத்தில் ஒரிசா சிறுவர் மன்றக் குழந்தைகள் மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலும், 2003 டிசம்பர் மாதத்தில் ஜம்மு காஷ்மீர் சிறுவர் மன்றக் குழந்தைகள் சென்னை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலும் தங்கள் மாநில கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காண்பித்துள்ளனர். கேரள மாநிலம், திருச்சூர் சவகர் சிறுவர் மன்றச் சிறார்கள் 2004 பிப்ரவரி மாதத்தில் தருமபுரி, கரூர் ஆகிய இடங்களில் தங்கள் மாநிலக் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர்.

**மாநில அளவிலான திட்டங்கள்**

**1. சிலம்பாட்டப் போட்டி**

2003 அக்டோபர் மாதத்தில் மாநில அளவிலான சிலம்பாட்டப் போட்டி மதுரையில் மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. இப்போட்டியில் சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 100 குழந்தைகளும், தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகத்திலிருந்து 300 குழந்தைகளும் கலந்துகொண்டனர். சவகர் சிறுவர் மன்றக் குழந்தைகள் பல பரிசுகளை வென்றதுடன் மாநில சாம்பியன் பட்டத்தையும் வென்றுள்ளனர்.

**2. கராத்தே போட்டி**

தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 குழந்தைகளுக்கு மாநில கராத்தே – டோ – சங்கத்தினருடன் இணைந்து மாநில கராத்தே போட்டிகள் 2004 பிப்ரவரி மாதத்தில் சென்னையில் நடத்தப்பட்டது.

**3. உடல்திறன் போட்டி (Gymnastics)**

2003 நவம்பர் மாதம் மாநில ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகள் ஆற்காடு நகரில் இரு நாட்கள் நடத்தப்பட்டன. இதில் சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 117 குழந்தைகளும், தமிழ்நாடு உடல்திறன் கழகத்தைச் சேர்ந்த 130 குழந்தைகளும் கலந்துகொண்டனர். இப்போட்டியில் மாநில சாம்பியன் பட்டத்தை சவகர் சிறுவர் மன்றம் வென்றுள்ளது.

**4. மாவட்டக் கலைப் போட்டிகள்**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் குரலிசை, நடனம், ஓவியம் ஆகிய கலைகளில் கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்கள் 2003 நவம்பர் மாதத்தில் மாநில அளவில் சேலத்தில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டனர். மாநிலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**5. கோடைக்கால மற்றும் மாரிக்காலப் பயிற்சி முகாம்கள்**

நடனம், நாடகம், குரலிசை, ஓவியம், கைவினை ஆகிய கலைகளில் மாநிலத்திலுள்ள அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100



குழந்தைகளுக்கு 2003 மே மாதம் 10 நாட்கள் கொல்லிமலையில் கோடைக்கால சிறப்புப் பயிற்சியும், 2003 டிசம்பர் மாதம் 9 நாட்கள் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி நகரில் 111 குழந்தைகளுக்கு மாரிக்கால சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலும் இலவசக் கலைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் 4500 சிறுவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**6. பரதநாட்டிய அரங்கேற்றம்**

நடனத்தில் ஆர்வமுள்ள வறிய நிலையிலிருக்கும் குழந்தைகளை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் நாமக்கல், சேலம் சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த மூன்று வறிய குழந்தைகளுக்கு சிறுவர் மன்றம் செலவில் 2003 ஜூலை மாதம் நடன அரங்கேற்றம் நடத்தப்பட்டது.

**7. கலைச் சுற்றுலா**

2003 டிசம்பர் மாதத்தில் கலைச் சுற்றுலா திட்டத்தின்கீழ் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த 111 குழந்தைகள் கேரள மாநிலம், மூணாறு மற்றும் ஆண்டிப்பட்டி அருகிலுள்ள வைகை அணை போன்ற இடங்களுக்கு கலைச் சுற்றுலா சென்றுள்ளனர்.

**தனியார் அமைப்புகள் சவகர் சிறுவர் மன்றத்துடன் இணைதல்**

சவகர் சிறுவர் மன்றத் திட்டங்களில் பங்குபெறுவதற்காக சென்னையில் உள்ள தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்கு ஆண்டொன்றுக்கு அரசு நிர்ணயித்தபடி ஆண்டு இணைவுக் கட்டணம் ரூ.250/- செலுத்துவதற்காக தமிழ்நாட்டிலுள்ள தனியார் நிறுவனங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**தேசிய இளந்திரு விருது (BAL SHREE AWARD)**

மேடைக் கலை, படைப்புக் கலை, அறிவியற் கலை, எழுத்துக் கலை ஆகியவற்றில் புதுமை படைத்திடும் சிறாருக்கு மேதகு குடியரசுத் தலைவரின் இளந்திரு எனும் உயரிய விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் தேசிய இளந்திரு விருதுக்கான போட்டியில் பங்குபெற தமிழ்நாட்டிலிருந்து 13 பேர்

தெரிவு செய்யப்பட்டு புதுதில்லியில் நடத்தப்பட்ட தேசிய போட்டியில் கலந்து கொண்டனர். இவர்களில் சென்னையைச் சேர்ந்த செல்வி ஸ்ருதி எழுத்துக் கலைக்காகவும், திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வன் மோகன்ராஜ் அறிவியற் கலைக்காகவும் தெரிவு செய்யப்பட்டு மேதகு குடியரசுத் தலைவரிடம் 10-02-2004 அன்று தேசிய இளந்திரு விருது பெற்றுள்ளனர்.

இந்த உயரிய விருதினை 2000–2001 ஆம் ஆண்டு குரலிசைக்காகப் பெற்ற தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வன் சபரிநாத், எழுத்துக் கலைக்காகப் பெற்ற சென்னையைச் சேர்ந்த செல்வி ரேவதி, 2001–2002 ஆம் ஆண்டு எழுத்துக் கலைக்காக விருது பெற்ற சென்னையைச் சேர்ந்த செல்வன் ரசூல் ஆகியோருடன் 2003–2004 ஆம் ஆண்டில் விருது பெற்ற மேற்குறிப்பிடப்பட்ட இருவரையும் சேர்த்து விருது பெற்ற மொத்தம் 5 சிறுவர்களைச் சிறப்பித்துப் பாராட்டி ஊக்குவிக்கும்வகையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதம் வழங்கிட அரசு அனுமதி அளித்துள்ளது.

**புதிய திட்டங்கள்**

2004–2005 ஆம் ஆண்டில், கலை-பண்பாட்டு இயக்ககத்திற்கு மின் அஞ்சல் பொறி வாங்குதல், அரசு கவின் கலைக் கல்லூரிகள் பயன்பாட்டிற்காக கணினிகள், இயந்திரங்கள், சாதனங்கள், புகைப்படப் பிரிவை நவீனமயமாக்க பட்ப்பிடிப்புக் கருவிகள், தளவாடங்கள், மாணாக்கர்களுக்கான இலவச வரைபொருட்கள் வாங்குதல், மாமல்லபுரம், அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிக்கு அறைகலன்கள் வாங்குதல், இசைக் கல்லூரிகளுக்காகவும், இசைப் பள்ளிகளுக்காகவும் இசைக் கருவிகள், நாற்காலிகள், புத்தகங்கள், புத்தக அடுக்குகள், மாணவியர் விடுதிக்குக் கட்டில், நாற்காலி, தொலைக்காட்சிப் பெட்டி, ஒளிப்பதிவு சாதனம் ஆகியவை வாங்குதல், நாட்டுப்புறக் கலை மாணவ, மாணவியர்களுக்குப் பயிற்சி உதவித் தொகை வழங்கல், இசைப் பள்ளிகளில் கலை வல்லுநர்களின் செயல் விளக்கப் பயிற்சிகள் மேற்கொள்ளுதல், மதுரை, அரசு இசைக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரிக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் கிராமிய இசை விழா நடத்துதல்,



500 நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்குதல், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுமூலம் தமிழக நுண்கலைகளைப் பற்றி ஆவணத் தொகுப்பு மென் தகட்டில் பதிவு செய்தல், தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலைஞர்கள் விவரத் தொகுப்பு 'யார் எவர்' என்னும் வெளியீடு அச்சிடுதல், சவகர் சிறுவர் மன்றத்திற்கு கணினி வாங்குதல் போன்ற புதிய திட்டங்களைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே மறைந்து கிடக்கும் நலிவடைந்த பாரம்பரியக் கலைகளைப் பொதுமக்கள் அனைவரும் அறியும்வண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இக்கலைகளில் ஆர்வத்தை ஊட்டும்வண்ணம் கலை-பண்பாட்டுத் துறை பல்வேறு நிலைகளில் முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழ் மக்களுடைய நாகரிகமும், பண்பாடும் செழித்தோங்கவும், தமிழ் மொழி தொய்வின்றி வளர்ச்சி பெறவும் இத்துறை மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செம்மையுற நடைமுறைப்படுத்தி, அர்ப்பணிப்பு உணர்வுடன் இடையறாது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 31

## இணைப்பு XXII

*(135 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–பால்வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004--2005

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள பெரும்பான்மையான விவசாயிகளிடமும் விவசாயத் தொழிலாளர்களிடமும் கால்நடைகள் உள்ளன. கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு பால்பண்ணைத் தொழில் போதிய வேலைவாய்ப்பினை அளிக்கிறது. கிராமப்புறங்களில் வசிக்கும் கீழ்நிலையில் உள்ளவர்கள், சிறு விவசாயிகள் மற்றும் நடுத்தர விவசாயிகள் நிலையான வருமானம் பெறுவதில் பால்பண்ணைத் தொழில் ஒரு முக்கியப் பங்கு வகிப்பதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் உதவியாக அமைந்துள்ளது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக விவசாயிகளுக்கு பால்பண்ணைத் தொழில் நிலையான தொடர் வருவாயை வழங்குகிறது. இதனால் கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைய பால்பண்ணை சிறந்த வாழ்க்கைத் தொழிலாக உள்ளது. இதைத்தவிர, பால் மற்றும் பால் பொருட்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் தேவையான ஊட்டச்சத்தினை அளிக்கும் உணவாக உள்ளது.

1958 ஆம் ஆண்டில் 'தமிழ்நாட்டில் பால்வளத் துறை ஆரம்பிக்கப்பட்டது. 1-8-1965-லிருந்து பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள் பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டன. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்கீழ் செயற்பதிவாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் "ஆனந்த்" பாணியில் சங்கங்கள் செயல்படத் தொடங்கியபோது 1-2-1961 ஆம் தேதியன்று தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பதிவு செய்யப்பட்டது.

அதுவரை தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் செய்யப்பட்டு வந்த வணிக நடவடிக்கைகளாகிய பால் கொள்முதல், பதப்படுத்துதல், குளிரூட்டுதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்து பணிகளும் "ஆவின்" என்று எல்லோராலும் அறியப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு மாற்றப்பட்டன.



2004 ஜூலை 31]

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையினால், தனியார் பால் நிறுவனங்கள், பால்பண்ணைத் தொழிலில் நுழைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முறையான முயற்சிகளின் மூலமும் உரிய உத்திகளை பயன்படுத்தியும் பால் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாட்டிற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பால் கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையம் குறிப்பிடும்படியான வெற்றியினைப் பெற்றுள்ளன.

### 2. பால்வளத் துறையின் முக்கிய நோக்கங்கள்

(1) நிலையான, மாறாத மற்றும் ஒழுங்குப்படுத்தப்பட்ட விற்பனை முறைகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல்.

(2) நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்களும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல்.

மேற்கண்ட முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பல நடவடிக்கைகள் பால்வளத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவையாவன:—

பால் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு, இலவச மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் செய்தல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல்.

கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தவும் நீண்ட காலத்திற்கு பால் அளிப்பதில் முன்னேற்றம் அடையச் செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளல்.

நவீன பதனிடும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தும் புதிய குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பதப்படுத்தும் நிலையம் அமைத்தும், தேவையான புதிய வசதிகளை ஏற்படுத்தியும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்க வகை செய்தல்.

### 3. பால்வளத் துறையின் அமைப்பு

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் பால்வளத் துறையின் தலைவராவார். பால் கூட்டுறவுகளின் செயற்பதிவாளராக ஆணையர் செயல்படுகிறார். மேலும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் அலுவல்சார் - நிர்வாக இயக்குநராகவும் இருந்து வருகிறார்.

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் கீழ் சட்டபூர்வப் பணிகளான கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை, ஆய்வு, விசாரணை, தகராறு தீர்த்து வைத்தல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல் ஆகிய பணிகளைச் செய்கிறார். மேற்கண்ட சட்டபூர்வ பணிகளைச் செய்வதற்கு ஆணையருக்கு உதவியாக கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் நிலையில் ஒரு துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் ஒரு துணைப் பதிவாளர் (தலைமையிடம்) தவிர, மாவட்ட அளவில் 23 சரக துணைப் பதிவாளர்கள் (பால்பதம்), பதிவாளரின் சட்டபூர்வ அதிகாரங்களைப் பெற்று செயல்படுகின்றனர். பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் விவரம் இணைப்பில் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 4. பால்வளத் துறையின் செயல்பாடுகள்

பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், பதிவு செய்து அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவைகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் போன்றவை பால்வளத் துறையின் முக்கியப் பணிகளாகும்.

விசாரணை, ஆய்வு, தண்ட வசூல் நடவடிக்கை மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக செயல்படும் நிர்வாகக் குழுவினைக் கலைத்து தனி அலுவலர்கள் நியமனம் செய்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களின் செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகிய சட்டபூர்வ பணிகளை பால்வளத் துறை செய்து வருகிறது. நீதித் துறை சார்புடைய அதிகாரங்களான தகராறுகளைத் தீர்த்தல், மேல்முறையீடு, சீராய்வு,



மறு ஆய்வு போன்றவற்றை முடிவு செய்யும் அதிகாரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் சரக துணைப் பதிவாளர் (பால்பதம்) ஆகியோருக்கு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

பால் மற்றும் பால்பொருட்கள் ஆணை, 1992-ன்கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், மாநில பதிவு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் செயல்பட்டு வருகின்ற தனியார் பால் பண்ணைகள் உள்ளிட்ட பால்பண்ணைகள் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாண்டாலோ அல்லது பால் பொருட்களிலுள்ள மொத்த சத்து வருடத்திற்கு 500 மெட்ரிக் டன்னுக்கும் மேலாக கையாண்டாலோ அவை பால் மற்றும் பால் பொருட்கள் ஆணையின்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / மாநில பதிவு அலுவலருக்கு நாளொன்றுக்கு 10,000 லிட்டர் முதல் 2,00,000 லிட்டர் வரை பால் கையாளும் பால் பண்ணைகளுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆணையர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சரக துணைப் பதிவாளர் (பால்பதம்) ஆகியோருக்கு பதிவுபெற்ற பால் பண்ணைகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும் காலமுறை ஆய்வு மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

#### 4.1. பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்த சட்டப் பிரிவு 11-ன்கீழ் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதிபெற்ற 25 அல்லது அதற்கு மேலும் உள்ள, பால் மாடுகள் வைத்திருக்கும் நபர்கள் ஒன்று சேர்ந்து, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை செயல் எல்லையாகக் கொண்டு, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள சரகத் துணைப் பதிவாளர்களை அணுகி ஆலோசனை பெறலாம். பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சங்கத்திற்கு தரமான பாலை வழங்க வேண்டும். சங்கமானது தரத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்யும்; உறுப்பினர்கள் பால் வழங்கியதற்காக 10/15 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் பெறுவர்.

சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல், சமன்படுத்தப்பட்ட கால்நடைத் தீவனங்கள் வழங்குதல் ஆகியவை செய்து தரப்படுகின்றன. விவசாயிகளுக்கு வழங்கும் கால்நடை பராமரிப்பு பயிற்சி, கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தி அதன்மூலம் அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உறுப்பினர்கள் நீண்ட காலத்திற்கு பயன்பெறுவதை உறுதி செய்கிறது.

### 4.2. மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

பால்வளத் தொழிலில் மகளிர் பங்கினை அதிகரிக்கும் முயற்சியாகத்தான் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த பகுதிகளில் அமைக்க ஊக்கப்படுத்தப்படுகின்றனர். அதன்படி, தமிழகத்தில் தற்பொழுது 1451 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களின் பதவிக்காலம் ஏற்கெனவே முடிந்ததால், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 33(10) (aa)-யின்படி அந்நிர்வாகக் குழுக்க்ளின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய பதவிக்காலத்தை அரசு ஆணைகளின்படி முடிவுக்கு கொண்டுவந்து, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 89(1)-ன்கீழ், தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 26-5-2001 முதல் தனி அலுவலர்களின் பொறுப்பில் இயங்கி வருகின்றன. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களைப் பொறுத்த அளவில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அதன் நிர்வாக இயக்குநரே தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் அமைக்கப்பட்டதும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு தனி அலுவலராக 27-02-2004 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.





### 5. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்

தமிழகத்தில், 30 மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. 16 பால் பதப்படுத்தும் பண்ணைகள், நாளொன்றுக்கு 18.92 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறனுடன் செயல்படுகின்றன. மேலும் 39 பால் குளிரூட்டும் நிலையங்கள், நாளொன்றுக்கு 12.83 இலட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் திறனுடன் செயல்படுகின்றன.

ஒன்றியங்களின் முக்கியமான பணிகள் கீழே தரப்பட்டுள்ளன:

(1) புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

(2) புதிய கொள்முதல் வழித்தடங்கள் அமைத்து சங்கங்களிலிருந்து பால் கொள்முதல் செய்தல்.

(3) பாலை சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து, நவீன பால் பண்ணைகளில் பதப்படுத்தி, தரத்தினை உறுதி செய்தல்.

(4) சென்னை மாநகரத்திற்குத் தேவைப்படும் பாலினை சுகாதார முறைப்படி அனுப்பிவைத்தல்.

(5) கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலையை நிர்ணயம் செய்தல்.

(6) புதிய விற்பனை உத்திகளின் மூலம் ஒன்றியங்களின் பால் விற்பனையை அதிகரித்தல்.

(7) இடுபொருட்களை சங்க உறுப்பினர்களுக்கு அளித்தல்.

(8) பிரதம சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற்றும் அவசரகால மருத்துவ வசதி வழங்குதல் மற்றும் சங்கப் பணியாளர்களுக்கு கால்நடை முதலுதவிப் பயிற்சியும் மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சியும் வழங்குதல்.

(9) சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(10) சங்கங்களுக்கு பால் கொள்கலன்கள், பால் பரிசோதனைக் கருவி மற்றும் திரவ நைட்ரஜன் குடுவைகள் வழங்குதல்.

(11) சேலம், ஈரோடு, மதுரை, தர்மபுரி ஒன்றியங்களில் உள்ள சமன்படுத்தும் பால் பண்ணைகளில் பால் பதனிடும் வசதியுடன், பால் பொருட்களை உற்பத்தி செய்யும் வசதிகளும் உள்ளன. ஒன்றியங்களின் உள்ளூர் விற்பனை நீங்கலாக உள்ள உபரி பால், அருகிலுள்ள சமன்படுத்தும் பால் பண்ணைகளுக்கு பால் உபபொருட்களாக மாற்ற எடுத்துச் செல்லப்படுகிறது. இந்தப் பால்பண்ணைகளில், பால் உபபொருட்களாகிய வெண்ணெய், பால் பவுடர் மற்றும் நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

(12) மாதவரம், ஈரோடு மற்றும் கப்பலூரில் உள்ள மூன்று கால்நடை தீவன ஆலைகள் முறையே காஞ்சிபுரம், திருவள்ளூர், ஈரோடு மற்றும் மதுரை ஒன்றியங்களினால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும். இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் குச்சிவகை மற்றும் தூள்வகை சரிவிகித கால்நடைத் தீவனங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படும் கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**6. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமாகும். இணையத்தின் நான்கு பால்பண்ணைகள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் பால்பண்ணை நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டரும், மாதவரத்தில் நாளொன்றுக்கு 2.00 இலட்சம் லிட்டரும், சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டர் செயல்திறனுடன் இயங்கி வருகின்றன. இப்பண்ணைகள் ஒன்றியங் களிலிருந்து பாலினைப் பெற்று, பதப்படுத்தி, பால் பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றன. அம்பத்தூரில் உள்ள பால் உபபொருட்கள் பண்ணை, பால் உபபொருட்களாகிய யோகர்ட், ஐஸ்கிரீம், கோவா, குலோப்ஜாமூன், மோர், தயிர், மற்றும் மைசூர்பா போன்றவைகளைத் தயாரித்து வருகின்றது. இந்த ஆண்டில்



ஆவின் டிலைட், தயிர், லஸ்ஸி, பாட்டிலில் அடைக்கப்பட்ட நறுமணப் பால் மற்றும் சிறிய பாக்கெட்டுகளில் பால் பவுடர் ஆகிய புதிய பால் உபபொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இணையத்தின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன:—

(1) பெருநகர் பால் விற்பனைப் பிரிவு

(2) பெருநகர் பால் உபபொருட்கள் விற்பனைப் பிரிவு

(3) பிற மாநிலங்களில் பால் உபபொருட்கள் விற்பனைப் பிரிவு.

சென்னைப் பெருநகரிலும் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் பால் உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக நந்தனத்தில் உள்ள பால்பொருள் விற்பனைப் பிரிவின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. பால் உபபொருட்கள், அம்பத்தூரில் உள்ள இருப்புக்கூடத்தில் வைக்கப்பட்டு, விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

பால் பைகள், 23 வட்டார அலுவலகங்கள், 529 பால் டிப்போக்கள், 172 பால் விற்பனை மையங்கள், 47 மொத்த பால் விற்பனையாளர்கள், 50 பால் சில்லறை விற்பனையாளர்கள், 50 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பால் உபபொருட்கள் 37 ஆவின் பாலகங்கள், 137 சில்லறை உரிமம் பெற்றவர்கள், 12 மொத்த விற்பனையாளர்கள், 3000 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனை மூலம் மேற்கொள்கிறது.

நுகர்வோருக்கு நிலைப்படுத்திய பால், எருமைப் பால், இருநிலை சமன்படுத்திய பால் ஆகியவை 218 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மற்றும் 180 பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்களிலும் பால் பொருட்கள் விற்கப்படுகின்றன. தற்பொழுது, தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் பாக்கெட் பால் விற்பனையும் செய்யப்படுகின்றது.

ஒன்றியங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து வழி நடத்தி, அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை இணையம் வழங்குகிறது. ஒன்றியங்கள் சார்பாக திட்டமிடல்,

பால்பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளையும், இயந்திர சாதனங்களை நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பணிகளையும் "டர்ன்கீ" (Turnkey) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களான பால் பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக் கட்டி ஆகியவற்றை தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் வழிவகை செய்கிறது.

### 7. பால் கொள்முதல்

பெருவாரியான கிராம மக்கள், குறிப்பாக பெண்கள், கறவை மாடுகளைவைத்து, அது தரும் பாலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்து அதன் மூலம் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இதனைக் கருத்திற்கொண்டும் கிராமப்புற பொருளாதார மேம்பாடு மற்றும் தனி நபர் வருமானத்தை உயர்த்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் பசும்பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.50-லிருந்து ரூ.10.50 என்ற அளவிலும், எருமைப் பால் விலையை லிட்டர் ஒன்றிற்கு ரூ.11.44 லிருந்து ரூ. 12.50 என்ற அளவிலும் உயர்த்தி 1-6-2004 முதல் கொள்முதல் செய்யவும், மேற்படி கொள்முதல் விலையை காலதாமதமின்றி வழங்கவும், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களை அரசு அறிவுறுத்தியுள்ளது. கொள்முதல் விலையை உயர்த்துகின்ற இத்தருணத்தில் பாலின் விற்பனை விலை உயர்த்தப்பட மாட்டாது எனவும் உறுதியளித்துள்ளது.

பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பினை அதிகரிக்க 1-6-2004 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தற்போதுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கையை குறைந்தபட்சம் 1000 அதிகரிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து அதன்படி வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் பயனாளிகளுக்கு கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்படும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் பால் கொள்முதல் விலை 1-6-2004 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.



| எருமைப் பால் | | பசும்பால் | |
|---|---|---|---|
| ஒரு லிட்டரின் விலை | | ஒரு லிட்டரின் விலை | |
| 1-6-2004-க்கு முன்னர் | 1-6-2004-ல் இருந்து | 1-6-2004-க்கு முன்னர் | 1-6-2004-ல் இருந்து |
| ரூ.11.44 | ரூ.12.50 | ரூ.9.50 | ரூ.10.50 |

### 8. பால் விற்பனை விலை (பால் பைகள்)

**பைகளில் விற்கப்படும் பல்வேறு வகையான பால் விலை விவரம்**

| சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Toned Milk | | நிலைப் படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Standardised Milk | | முழுக் கொழுப்புச் செறிந்த பால் (லிட்டர் ஒன்றுக்கு) Full cream Milk | | இரு நிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Double Tonned Milk | |
|---|---|---|---|---|---|---|---|
| பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் |
| ரூ 12.50 | ரூ. 14.00 | ரூ. 4.50 | ரூ. 16.00 | ரூ. 16.50 | ரூ. 18.00 | ரூ. 11.50 | ரூ. 13.00 |

**பால் விற்பனை விலை (தானியங்கி பால் வழங்கும் நிலையம் மூலம்)**

| நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Standardised Milk | | எருமைப் பால் (லிட்டர் ஒன்றுக்கு) Buffalo Milk | | இருநிலை சமன்படுத்திய பால்(லிட்டர் ஒன்றுக்கு) Double tonned milk | |
|---|---|---|---|---|---|
| பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் |
| ரூ.14.00 | ரூ.14.50 | — | ரூ.15.00 | — | ரூ.11.00 |

[2004 ஜூலை 31

## 9. பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்

கூட்டுறவு அமைப்பின்கீழ் 12.46 இலட்சம் பசு மற்றும் 2.21 இலட்சம் எருமை கறவை இனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனவிருத்திக்கான உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல் செய்யத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு கால்நடைத் தீவனமும், பசுந்தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும், கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

## 10. செயற்கை முறை கருவூட்டல் மற்றும் கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகள்

செயற்கை முறை கருவூட்டல் வசதி 2222 பால் கூட்டுறவு சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 12.14 இலட்சம் கால்நடைகளுக்கு உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் 3.27 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தேர்ச்சிபெற்ற மருத்துவர்களைக் கொண்ட நடமாடும் கால்நடைப் பிரிவுகளை நடத்துகின்றன. 5022 பால் கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடை மருத்துவ நலத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் 5.29 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கால்நடை உரிமையாளர்களிடம் இருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக அவசர கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் 74 முழுநேர கால்நடை சிகிச்சைப் பிரிவுகளையும், 24 அவசர கால சிகிச்சைப் பிரிவுகளையும் நடத்தி வருகின்றன.

## 11. இனவிருத்தித் திட்டம்

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக, 2003-2004 ஆம் ஆண்டில் 1.51 இலட்சம் வீரியமுள்ள கிடேரிக் கன்றுகள் பிறந்துள்ளன. கடந்த 2003-2004 ஆம் ஆண்டில் உதகமண்டலத்திலுள்ள பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை



2004 ஜூலை 31]

இனப் பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும் முறையே 12.56 இலட்சங்கள் பசுவின மற்றும் 2.28 இலட்சங்கள் எருமையின உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## 12. ஒன்றியங்களுக்கான புனரமைப்புத் திட்டம்

நட்டத்தில் இயங்கும் ஒன்றியங்களைச் சீரமைப்பதற்காக மத்திய அரசு, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் "கூட்டுறவுகளுக்கு உதவும் புனரமைப்புத் திட்டம்" ஒன்றினை சில நிபந்தனைகளுடன் உருவாக்கியது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் 50 விழுக்காடு மத்திய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் மானியமாக வழங்கும்.

இத்திட்டத்தின்கீழ், தொடக்க ஆய்வு மதிப்பீட்டிற்கு பிறகு ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களை தேசிய பால்வள வாரியம் தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.6.50 கோடி ஏற்கெனவே தமிழக அரசின் பங்காக வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, முதலாண்டு தவணையாக ரூ.3.75 கோடியும், இரண்டாம் ஆண்டு தவணையாக ரூ.2.00 கோடியும் முறையே விழுப்புரம், ஈரோடு ஒன்றியங்களுக்கு வழங்கியுள்ளது. மூன்றாம் ஆண்டு தவணைத் தொகை ரூ.75 இலட்சம் பெறவேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட தொகைகளை இரண்டு ஒன்றியங்களும் பால் உற்பத்தியாளர்களின் பால்பண நிலுவைத் தொகையைப் பட்டுவாடா செய்ய பயன்படுத்தியுள்ளது. திட்டம் தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலிருந்து இரண்டு ஒன்றியங்களும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

## 13. பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி

பண்ணைத் தொழிலில் ஆர்வம் உடைய சொத்துக்கள் இல்லாத கிராமப்புற பெண்கள், குடும்பத் தலைமை பொறுப்பேற்றுள்ள பெண்கள் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் சார்ந்த பெண்கள் ஆகியோரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பிற்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.649.463 இலட்சம் ஆகும். இத்திட்டம் மூன்றாண்டுகளில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. 10,000 பெண்களுக்கு கூட்டுறவுக் கொள்கைகள் குறித்த சட்ட அறிவு,

கால்நடைகளுக்கான செயற்கை முறை கருத்தரிப்பு, முதலுதவி, பால் சோதனைக் கருவி உபயோகித்தல், பால் கலப்படம் கண்டுபிடிப்பு, பால் மாடுகள் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் மைய அரசின் 90 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு திட்டத் தொகையை பயனாளிகளுக்காக, மாவட்ட ஒன்றியங்கள் ஏற்றுள்ளன.

மத்திய அரசிடமிருந்து முதல் தவணையாக ரூ.132.48 இலட்சம் பெறப்பட்டு அதில் ரூ.111.08 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு குறியீடான 110 அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் 7750 உறுப்பினர் சேர்க்கை ஆகியவற்றில் 110 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நிறுவப்பட்டு 7688 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 14. 2003-2004 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள்

### (அ) பிரதம சங்க அளவில்

#### (1) பால் கொள்முதல்

கூட்டுறவு அமைப்புகள் மூலம் கொள்முதல் செய்யப்படும் பால் அளவு நாளொன்றிற்கு 18.88 இலட்சம் லிட்டரிலிருந்து 20.60 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டைவிட 9.11 சதவீதம் உயர்வாகும்.

தரமான பாலை கொள்முதல் செய்து, அதன்மூலம் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு பாலின் தரமளக்கும் முறை பிரதம கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப் படுகிறது. பாலின் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளுக்கு நல்ல பலன்கள் கிடைத்துள்ளன. சென்னைக்கு வரும் பாலின் தரம் கொழுப்புச்சத்து 4.3 விழுக்காடாக இருந்த நிலை மாற்றப்பட்டு 4.5 விழுக்காடாகவும், இதர சத்துகள் 8.2 விழுக்காடாக இருந்த நிலை மாற்றப்பட்டு 8.3 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தர முன்னேற்றத்தின் காரணமாக நுகர்வோர்களுக்கு தரம் உயர்வான பால் விநியோகிக்கப்படுகிறது.



#### 2. உறுப்பினர்களுக்கு பால் பணம் பட்டுவாடா

2001 ஆம் ஆண்டு, மே மாத நிலவரப்படி உறுப்பினர்களுக்கு சங்கங்கள் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.35.00 கோடியாக இருந்தது. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக கடந்த நிதியாண்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு தரவேண்டிய நிலுவைத் தொகை முழுவதும் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. இந்த நிலையே நடப்பு ஆண்டிலும் தொடர்கிறது. தற்போது பால் உற்பத்தியாளர்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறை நிலுவையின்றி பால் பணம் வழங்கப்படுகிறது.

#### 3. புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

2003-2004 ஆம் நிதியாண்டில் 209 பால் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

#### 4. இலாபத்தில் செயல்படும் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள்

2000-2001 ஆம் ஆண்டில் செயல்பட்ட 7626 சங்கங்களில் 3950 சங்கங்கள் மட்டுமே இலாபத்தில் செயல்பட்டு வந்தன. கிராம அளவில் செயல்படுகின்ற பால் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்ற போதுதான், பால் வழங்கும் உறுப்பினர்கள் தங்களுக்குரிய பால் பணப் பட்டுவாடாவை உரிய நேரத்தில் பெறுவதோடு 'போனஸ் மற்றும் ஊக்கத் தொகை போன்ற பணப்பயன்களையும் பெறமுடியும். இதைக் கருத்திற்கொண்டு சங்கங்களின் நிதி ஆதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படும் 7117 சங்கங்கள் அனைத்துமே இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

### (ஆ) ஒன்றியங்கள் அளவில்

#### 1. "புதிய பொது வடிவம்" அறிமுகப்படுத்துதல்

நுகர்வோருக்குச் சென்றடையும் பாலின் தரத்தினை உறுதி செய்யும் "புதிய பொது வடிவம்" என்ற கூட்டுறவு முத்திரையை சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் நீலகிரி ஒன்றியங்கள் பயன்படுத்தி வருகின்றன. இது "ஆவின்" என்ற வணிகச் சின்னம் மக்களிடையே பிரபலமடைய வழிவகுத்துள்ளது.

## 2. பால் பொருட்களின் ஏற்றுமதி தரச் சான்றிதழ்

சேலம், ஈரோடு ஒன்றியங்களால் தயாரிக்கப்படும் பால் பவுடருக்கு ஏற்றுமதி உரிமம் (Export Licence) பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கண்ட இரண்டு ஒன்றியங்களும் பால் பவுடர் ஏற்றுமதி செய்ய வழிவகுத்துள்ளது.

## 3. பால் உபபொருட்களின் விற்பனை

1996 முதல் 2001 வரையிலான காலத்தில் நெய் விற்பனை சராசரியாக ஆண்டொன்றுக்கு 3411 மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. அதேபோல் கொழுப்பு நீக்கிய பால் பொடி விற்பனை 2647 மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. இணையம் மற்றும் ஒன்றியங்கள் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் பயனாக 2003-2004 ஆம் ஆண்டில் நெய் விற்பனை உயர்ந்து 6230 மெட்ரிக் டன் அளவுக்கு விற்பனை உயர்ந்தது. மேலும் கொழுப்பு நீக்கிய பால் பவுடர் விற்பனை 9631 மெட்ரிக் டன்னாக விற்பனை உயர்ந்துள்ளது.

மேலும் புதுடெல்லியுள்ள மதர் டெய்ரிக்கு, தொடர்ச்சியாக பால் பவுடர் மற்றும் வெண்ணெய் 2004 ஆம் ஆண்டு முழுவதும் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டில், திருப்பதி திருமலை தேவஸ்தானத்திற்கு 1200 மெட்ரிக் டன் நெய் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டு முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது.

## 4. உள்கட்டமைப்பு வசதிகள்

2003-2004 ஆம் ஆண்டில் அதிகப்படியாக கொள்முதல் செய்யப்படும் பாலை கையாளுவதற்காக பால்பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களில் அடிப்படை வசதிகள் ரூ.25.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. திருச்சி, விழுப்புரம் ஒன்றியங்களில் ரூ.37.00 இலட்சம் செலவில் புதிய மின் உற்பத்தி இயந்திரங்களும், விழுப்புரம் பால்பண்ணையில் ரூ.12.00 இலட்சம் செலவில் புதிய நீராவி கொதிகலனும் நிறுவப்பட்டன. ஈரோடு ஒன்றியத்தில் ரூ.40.00 இலட்சம் செலவில் சிறிய பைகளில் பால் பவுடர் அடைக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.



தனியார் விற்பனையின் போட்டியை எதிர்கொள்ளும் வகையில், கோயம்புத்தூர், திருச்சி, சென்னையில் உள்ள பால்பண்ணைகளில் ரூ.250.00 இலட்சம் செலவில் பால் சமச்சீர்ப்படுத்தும் இயந்திரங்கள் விரைவில் நிறுவப்பட உள்ளன. சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் பால் பைகளில் நிரப்பும் அளவுக்கு திறனை மேம்படுத்த ரூ.1.50 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாதவரம் பால்பண்ணையில் ரூ.37.00 இலட்சம் செலவில் பால் இயந்திரங்கள் சுத்திகரிக்கும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டம், தெளூர் கிராமத்தில் விளாங்குடிகைகாட்டி என்ற இடத்தில் நாளொன்றிற்கு 1.00 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் ரூ.2.00 கோடி செலவில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

## 5. இலாபம் ஈட்டும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

2000-2001 ஆம் ஆண்டில் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 5 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மட்டுமே இலாபம் ஈட்டின. 2003-2004 ஆம் ஆண்டில் ஈரோடு, விழுப்புரம், வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சிவகங்கை, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 15 மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் இலாபம் ஈட்டி உள்ளன.

### (இ) இணைய அளவில்

#### (1) புதிய பொது வடிவம் அறிமுகப்படுத்துதல்

தேசிய பால்வள நிறுவனத்தின் "புதிய பொது வடிவம்" என்ற கூட்டுறவு முத்திரை, இணையத்தால் 12-11-2001 அன்று சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னையிலுள்ள அனைத்து ஆவின் விற்பனை வாகனங்களின் இரு பக்கங்களிலும், நல்ல விளம்பரத்திற்காக 'புதிய பொது வடிவம்' என்ற கூட்டுறவு முத்திரை வரையப்பட்டுள்ளது.

(2) வானொலி மற்றும் தொலைக்காட்சியில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. நிரந்தர விளம்பர பலகைகள், பேருந்து நிழற்குடைகள் மூலமாக ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் குறித்து விளம்பரம் செய்யப்படுகின்றன.

(3) விற்பனையை உயர்த்தும் உத்திகளாக பால் அட்டைதாரர்களுக்கு ஊக்கப் பரிசுத் திட்டங்கள் மற்றும் வெகுமதி பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு போட்டிகளை எதிர்கொள்ளுவதுடன் மற்ற நுகர்வோர்களை "ஆவின்" வாடிக்கையாளர்களாக மாற்ற வழிவகை காணப்பட்டது.

(4) 2000-2001 ஆம் ஆண்டு வரை இணையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட நடவடிக்கையின் பலனாக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.17.21 கோடி மிகை வருவாய் ஈட்டி வரலாறு காணாத சாதனையை எட்டியுள்ளது:—

(அ) வாகனச் செலவு குறைத்தல்

(ஆ) தூய மற்றும் தரமான பால் ஒன்றியங்களிலிருந்து கொள்முதல் செய்து சென்னை மாநகர நுகர்வோர்களின் தேவைக்கேற்ப வழங்குதல்

(இ) பால் பைகள் வீணாவதைத் தவிர்த்தல்

(ஈ) பால் சேதாரச் செலவு குறைத்தல்

(உ) இருப்பு கொள்முதல் செலவை குறைத்தல்

(ஊ) எண்ணெய், தண்ணீர் மற்றும் மின்சாரச் செலவு குறைத்தல்

(எ) சரியான வியாபார யுக்திகளினால் பால் பவுடர், வெண்ணெய் மற்றும் நெய் ஆகியவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்தல்

(ஏ) ஏர்-இந்தியா போன்ற நிறுவனங்களுக்கு டெட்ரா பாக்கெட் பால் விற்பனை செய்தல்



**15. பால்வளத் துறையின் பொதுவான புள்ளிவிவரங்கள்**

| வ. எண் | இனம் | 31-03-2004 ஆம் நாள் நிலவரப்படி |
|---|---|---|
| 1 | தொடக்க சங்கங்களின் எண்ணிக்கை<br>அ. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 8621<br>ஆ. பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் 1<br>இ. கூட்டுறவு பால் பண்ணை 1<br>ஈ. பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 60<br>உ. பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியம் 1 | 8684 |
| 2 | செயல்படும் சங்கங்கள் | 7117 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை | 22.57 இலட்சம் |
| 4 | சங்க அளவில் பால் உற்பத்தி நாளொன்றுக்கு | 20.60 இலட்சம் லிட்டர் |
| 5 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 6 | மாநில அளவு இணையம் | 1 |
| 7 | ஒன்றிய அளவில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு | 17.26 இலட்சம் லிட்டர் |
| 8 | சென்னை மாநகரத்தில் பால் விற்பனை நாளொன்றுக்கு | 6.98 இலட்சம் லிட்டர் |
| 9 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியங்களின் அளவில் பால் விற்பனை நாளொன்றுக்கு | 6.69 இலட்சம் லிட்டர் |

| | | |
|---|---|---|
| 10 | பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை | 16 |
| 11 | பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு | 18.92 இலட்சம் லிட்டர் |
| 12 | பால் குளிரூட்டும் நிலையங்கள் எண்ணிக்கை | 39 |
| 13 | குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு | 12.83 இலட்சம் லிட்டர் |
| 14 | தானியங்கி பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை | 218 |

## 16. 2004–2005 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

### 1. சங்கங்கள் அளவில்

#### தூய்மையான பால் உற்பத்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வேலூர், விழுப்புரம் மற்றும் திருச்சி ஒன்றியங்களைச் சார்ந்த திருவண்ணாமலை மற்றும் சின்னசேலம் மற்றும் ஜெயங்கொண்டம் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பாலில் ஆரம்பத் தரம் உயர்த்தப்பட, 14 பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படவுள்ளன.

### 2. ஒன்றிய அளவில்

எருமை இனவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட தற்போது ஈரோட்டில் இயங்கி வரும் பொலிகாளை பண்ணை, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள புதுக்குடி கிராமத்தில் நவீன வசதியுடன் மாற்றி அமைக்கப்பட உள்ளது.

### 3. இணைய அளவில்

சென்னை மாநகரத்தில் 2004-2005 ஆம் ஆண்டில் பால் பை விற்பனையை நாளொன்றுக்கு 6.13 இலட்சம் லிட்டரிலிருந்து 6.75 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்துவதற்கும், தானியங்கி பால் விற்பனையை நாளொன்றுக்கு 0.85 இலட்சம் லிட்டரிலிருந்து 0.95 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்துவதற்கும், ஆக மொத்தம் 7.70



இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்த கீழ்க்கண்ட உத்திகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பாலின் தரத்தினை உயர்த்த தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, சென்னை மாநகர பால்பண்ணைகள் அகில உலகத் தரக்கட்டுப்பாட்டு கழகத்தின் ISO 9001:2000 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. இது சென்னை மாநகர பால்பண்ணைகள், பால் மற்றும் நறுமணப் பால் உற்பத்திக்காக "பால் பெறுதல், பதப்படுத்துதல், சமன்படுத்துதல், பைகளில் அடைத்தல் மற்றும் பால் பைகளை விற்பனைக்கு அனுப்புதல்" ஆகிய செயல்களை செயல்படுத்தியதற்காக இச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இணையத்தின் மேம்படுத்தப்பட்ட தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில், சென்னை மாநகரப் பால் பண்ணைகளுக்கு HACCP தரச் சான்றிதழ் விரைவில் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 17. உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்

வரும் ஆண்டுகளில் பால் உற்பத்தி நாளொன்றிற்கு 23 முதல் 25 இலட்சம் லிட்டர் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கருத்தில்கொண்டு குளிரூட்டும் வசதி, கையாளும் திறன், வெண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் பால் பவுடர் செய்யும் திறன் ஆகியவை உயர்த்தப்பட உள்ளது. தேசிய பால்வள நிறுவனத்திடம் ரூ.25.00 கோடி நிதியுதவி பெற்று திருச்சி, மதுரை, வேலூர் மற்றும் சேலம் பால்பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகள் உயர்த்தப்படவுள்ளது. மேலும், நாளொன்றிற்கு 30 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் பண்ணையும், நாளொன்றிற்கு 3 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால்பண்ணையும் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## 18. தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம்

ரூ.77.88 இலட்சம் செலவில் மத்திய அரசின் 100 சதவீத மானியத்தில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆணையரின் கட்டுப்பாட்டில்

31-03-2004 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வகம் நுகர்வோருக்கு விநியோகம் செய்யும் பால் மற்றும் பால் உபபொருட்களின் தரத்தினை பரிசோதனை செய்து உறுதிசெய்யும்.

**19. பகுதி-II திட்டம் - 2004-2005**

(1) 5263 துருவுறா எஃகு (Stainless Steel) பால் கொள்கலன்கள் 1053 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு செலவை தமிழக அரசு ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடு செலவை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கும்.

(2) 3 லிட்டர் கொள்ளளவு கொண்ட 424 திரவ நைட்ரஜன் குடுவைகள் ரூ.36 இலட்சம் செலவில் 424 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு செலவை தமிழக அரசு ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடு செலவை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கும்.

(3) 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 பால் குளிர்விப்பான்கள் ரூ.42 இலட்சம் செலவில் 6 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் அமைக்கப்படும். இதில் ரூ.20 இலட்சம் செலவை தமிழக அரசு ஏற்கும். மீதமுள்ள ரூ.22 இலட்சம் செலவை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்கும்.

(4) மாதவரம் பால்பண்ணையில் 2.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை ரூ.30 இலட்சம் செலவில் தமிழக அரசால் செப்பனிடப்படும்.

**20. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை, 1-10-1987 முதல் செயல்பட்டு வருகிறது. கிராம அளவில் செயல்பட்டுவரும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் இயங்கும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவைகளின் சட்ட ரீதியான தணிக்கை, இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில், 370 பணியாளர்கள் மாற்றுப் பணி அடிப்படையில் கூட்டுறவு மற்றும் இதர துறையிலிருந்து பெறப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.





**தணிக்கை முன்னேற்றம்**

**(அ) பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்**

2002-2003 ஆண்டிற்கு தணிக்கை செய்யத் திட்டமிடப்பட்ட 8,555 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், 31-03-2004 வரை 6089 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 2466 சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்**

1998-99 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை தொடர்பாக அனைத்து ஒன்றியங்களுக்கும் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**1999-2000 இறுதி தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில் 16 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு சான்று வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஒன்றியத்தில் தணிக்கை நடைபெற்று வருகிறது.

**2000-2001 இறுதி தணிக்கை**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 14 ஒன்றியங்களுக்கான தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. 3 ஒன்றியங்களுக்கான தணிக்கை துவங்கப்பட்டு, நடைபெற்றுவருகிறது.

**2001-2002 இறுதி தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில், 12 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஒன்றியத்தில் தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. 4 ஒன்றியங்களில் தணிக்கை துவக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

## 2002–2003 இறுதி தணிக்கை

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில் 7 ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு, தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 10 ஒன்றியங்களில் தணிக்கை நடைபெற்று வருகிறது.

## (இ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

1999-2000 ஆண்டு வரை பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையினரால் தணிக்கை முடிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிற்குரிய தணிக்கைச் சான்று இயக்குநரது சோதனைத் தணிக்கைக்குப் பிறகு வழங்கப்படும். 2000-2001 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்டு இறுதி தணிக்கைச் சான்று வழங்கப்பட உள்ளது. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்று வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தணிக்கை விரைவில் துவங்கப்படவுள்ளது.

## அரசு வருவாய்

2000-2001 மற்றும் 2001-2002-ல் தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணத்தின்கீழ் கடந்த மார்ச் 2004 முடிய கேட்பு ரூ.287.28 இலட்சத்தில் ரூ.278.73 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணத்தின்கீழ் கடந்த மார்ச் 2004 முடிய கேட்பு ரூ.160.98 இலட்சத்தில் ரூ.155.29 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## 21. தொகுப்புரை

கிராமப்புறங்களில் கறவை மாடுகள் வைத்துள்ள விவசாயிகளின் பாலுக்கு நல்ல விலை கிடைக்கவும், அவர்கள் கிராமங்களில் அமைந்துள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்ந்து பயன்பெறவும் பால்வளத் துறை ஊக்குவித்து வருகிறது.

17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் "ஆவின்" என்ற வணிகச் சின்னத்தில் பல்வேறு வகையான பால் மற்றும் பால் பொருள்களை



விற்பனை செய்து வருகின்றன. பால், நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், கோவா போன்ற பால் பொருட்களை விற்பனை செய்து நிரந்தர வருவாய் பெற்று தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேலை இல்லாத இளையோர்கள் எளிதில் முகவர் உரிமம் பெறும் வகையில் அதிக வாய்ப்புகளை இணையமும், ஒன்றியங்களும் அளிக்கின்றன.

2003-2004 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் ஆற்றல்மிக்க தலைமையின்கீழ் பால்வளத் துறை மற்றும் ஆவின் செயல்பாடுகள் புதிய உத்வேகம் பெற்று வளர்ச்சி பெற்றுள்ளன. தொடர்ந்து நட்டத்திலும் பால் பணம் வழங்கமுடியாமலும் சந்தையில் அதன் விற்பனை பங்கிலிருந்தும் சரிவடைந்த நிலையிலும் செயல்பட்டு வந்த ஆவின் நிறுவனம் தற்போது முழுவதுமாக மாறித் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக இலாபம் ஈட்டி வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திறமைவாய்ந்த வழிகாட்டுதலால் நடப்பாண்டில் புதிய உத்திகளைக் கையாண்டு, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி பால்வளத் துறை புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது.






## நிர்வாக அமைப்பு
## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்




பொ. மேலாளர் (செ) – பொது மேலாளர் (சென்னை மாநகரம்)
பொ.மேலாளர் (ப – வி) – பொது மேலாளர் (பனிக்குழு –விற்பனை)
பொ.மேலாளர் (நிதி) – பொது மேலாளர் (நிதி)
பொ.மேலாளர் (நிதி.ஒ) –பொது மேலாளர் நிதி ஒருங்கிணைப்பு)
பொ.மேலாளர் (பொறியியல்) – பொது மேலாளர் (பொறியியல்)

துபொ.மேலாளர் (திட்டம்) – துணை பொது மேலாளர் (திட்டம்)
துபொ. மேலாளர் (பா. உ) – துணை பொதுமேலாளர் (பால் உற்பத்தி)
து.பொ.மேலாளர்(ஸ்டெப்)–துணைபொதுமேலாளர்(மகளிர்ப்பயிற்சிமற்றும்வேலைவாய்ப்புதிட்டம்
துபொ. மேலாளர் (துக) – துணை பொது மேலாளர் (தரக்கட்டுப்பாடு)
நிஇ / பொ.மே (ஒன்றியம்)– நிர்வாக இயக்குனர் / பொது மேலாளர் (ஒன்றியம்)
துபொ. மேலாளர் (வெமா.வி) – துணை பொது மேலாளர் (வெளிமாநில விற்பனை)
துபொ.மேலாளர் (செ. வி) – துணை பொது மேலாளர் (சென்னை மாநகர விற்பனை)
துபொ.மேலாளர் (ஒன்றிய வி) – துணை பொது மேலாளர் (ஒன்றிய விற்பனை)
துபொ. மேலாளர் (கட்டுமானம்) – துணை பொது மேலாளர் (கட்டுமானம்)
துபொ. மேலாளர் (பமே) – துணை பொது மேலாளர் (பண்ணை மேம்பாடு)
துபொ.மேலாளர் (ஜெ.க.ப.) – துணை பொது மேலாளர் (ஜெர்சி கருவுல பண்ணை)
துபொ.மேலாளர் (எ.உ.நி) – துணை பொது மேலாளர் (எருமையின உறைவிந்து நிலையம்)
துபொ.மேலாளர்(உதிஒ) – துணை பொது மேலாளர் (உற்பத்தி திட்ட ஒருங்கிணைப்பு)


நிர்வாக அமைப்பு
பொது மேலாளர் அலுவலகம்
பொது மேலாளர்
நுகர்வோர் பிரிவு
பால் பொருட்கள் பண்ணை
மொத்த விற்பனை
பால்பை பிரிவு
கணக்கு
தரக்கட்டுப்பாடு
திட்டம்
சோழிங்க நல்லூர்
அம்பத்தூர் பால் பண்ணை
மாதவரம் பால் பண்ணை
இயக்கம்
தரக்கட்டுப்பாடு
பராமரிப்பு




நிர்வாக அமைப்பு
மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்
நிர்வாக இயக்குநர் / பொது மேலாளர்
விற்பனை
கணக்கு
நிர்வாகம்
தரக்கட்டுப்பாடு
இயக்கம் மற்றும் பராமரிப்பு
உதவி பொது மேலாளர் (விற்பனை)
உதவி மேலாளர் (விற்பனை)
உதவி பொது மேலாளர் (கணக்கு)
உதவி மேலாளர் (கணக்கு)
உதவி பொது மேலாளர் (நிர்வாகம்)
உதவி மேலாளர் (நிர்வாகம்)
உதவி பொது மேலாளர் (தரக்கட்டுப்பாடு)
உதவி மேலாளர் (த.க.)
துணை பொது மேலாளர் (பால்கொள்முதல் மற்றும் உள்ளீட்டு பணி)
உதவி பொது மேலாளர் (பா.கொ.& உ. பணி)
துணை பொது மேலாளர் (உற்பத்தி மற்றும் பராமரிப்பு)
உதவி பொது மேலாளர் (பொறியியல்) – 1
உதவி பொது மேலாளர் (உற்பத்தி) – 1

## பால் உபபொருட்கள் விற்பனை






## பால் கூட்டுறவுச் சங்கங்கள்

| வருடம் | மொத்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | இலாபம் ஈட்டிய சங்கங்கள் | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1997-1998 | 9582 | 7797 | 3008 | 39% |
| 1998-1999 | 10211 | 7900 | 3700 | 46% |
| 1999-2000 | 10368 | 7818 | 3810 | 49% |
| 2000-2001 | 10041 | 7626 | 3950 | 51% |
| 2001-2002 | 8803 | 7381 | 4100 | 55% |
| 2002-2003 | 8486 | 6980 | 6980 | 100% |
| 2003-2004 | 8684 | 7117 | 7117 | 100% |

[2004 ஜூலை 31

## இணைப்பு XXIII

*(135 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 28 –**

**செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005**

**I. சுற்றுலா – ஒரு பார்வை**

சுற்றுலா மனித வாழ்வில் ஒரு முக்கியமான அங்கமாக விளங்குகிறது. பொருளாதாரத்தில் சேவைத் துறையின் ஒரு பகுதியாக சுற்றுலாத் துறை அமைந்துள்ளது. சுற்றுலா மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கவும், அன்னியச் செலாவணியை ஈட்டவும் உதவுகிறது. சுற்றுலா என்பது பல இடங்களை சுற்றிப் பார்ப்பது, விடுமுறை நாட்களை கழிப்பது, கல்வி, வியாபாரம், மருத்துவ சிகிச்சை, நலவாழ்வு போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகும். பல நாடுகளில் சுற்றுலா ஒரு தொழில் துறையாக கருதப்படுகிறது. மனித வரலாற்றில் சுற்றுலா எப்பொழுது துவங்கியது என்று துல்லியமாக கூறுவது சற்று கடினமாகும். ஆனால், சுற்றுலா என்பது மனித இனம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானதாக இருக்கலாம் என்று நாம் எளிதில் யூகிக்கலாம். மனித இனத்தினுடன் இணைந்து சுற்றுலாத் துறையும் மிகப்பெரிய வளர்ச்சியை கடந்த சில நூற்றாண்டுகளில் கண்டுள்ளது. தற்பொழுது சுற்றுலாத் துறையானது உலகிலேயே மிகப்பெரிய மற்றும் மிக வேகமாக வளரும் துறையாகக் கருதப்படுகிறது. "சுற்றுலா", ஜாதி, நிறம், மதம், இனம், மொழி போன்ற தடைகளை மீறிச் செல்ல வல்லதாகும். அனைத்துத் தரப்பு மக்களும், பல வயதினைச் சார்ந்தவர்களும், பல்வேறு அளவில் வருமானம் கிடைக்கக்கூடிய மக்களும் நிச்சயமாக தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது சுற்றுலாவின் தன்மையை அனுபவிக்கிறார்கள். "சுற்றுலா" வியக்கத்தக்க அளவிற்கு அன்னியச் செலாவணி ஈட்டவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மக்கள் மத்தியில் அன்பையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கும் ஆற்றல் படைத்ததாகும். எனவேதான், இத்துறை உலகில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது.



2004 ஜூலை 31]

**1. "சுற்றுலா" – உலக அளவில் ஒரு கண்ணோட்டம்**

தீவிரவாதம், சார்ஸ் நோய், சுற்றுச்சூழல் மாற்றங்கள், உலக அளவில் பொருளாதார குறைபாடுகள், ஈராக் போர், மக்களிடையே செலவழிக்கும் தன்மையில் உள்ள குறைவுகள் போன்ற இடையூறுகள் இருந்த பொழுதிலும், சுற்றுலா தன்னுடைய புத்துணர்ச்சியை தக்கவைத்துள்ளது. உலக அளவில் ஆண்டுதோறும் சுற்றுலாத் துறையின் மதிப்பீடு 3.4 டிரில்லியன் டாலர் ஆகும். கோஸ்டாரிகா மற்றும் மாலத்தீவு போன்ற நாடுகளில் சுற்றுலா அன்னியச் செலாவணியை மிக அதிகமாக ஈட்டித் தருகிறது. சீன நாட்டில் அதன் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் 3.8 சதவிகிதம் சுற்றுலாவிற்காக செலவழிக்கப்படுகிறது. சீனா, சுற்றுலாப் பயணிகளை (31.2 மில்லியன்) ஈர்ப்பதில் ஐந்தாவது இடத்தை வகிக்கின்றது. "உலகப் பயணம் மற்றும் சுற்றுலா குழு" (World Travel and Tourism Council) என்ற அமைப்பு "சுற்றுலா கணக்கு ஆராய்ச்சி" (Satellite Accounting) என்ற முறையில் 160 நாடுகளில் கடந்த 10 ஆண்டுகளில் சுற்றுலாவிற்கு நாட்டின் பொருளாதாரத்தில் எவ்வளவு பங்கு உள்ளது என்று கணக்கிட்டது. உலகத்தில் சுற்றுலாப் பயணிகள் கடந்த பத்து ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளைவிட ஆசியா மற்றும் கீழ்த்திசை நாடுகளை அதிகமாக நாடிச் செல்வதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**2. இந்தியாவில் "சுற்றுலா"**

இந்தியா என்பது மனம், ஆத்மா மற்றும் ஐம்புலன்களின் சுய கண்டுபிடிப்பு மற்றும் சுய நிறைவின் பயணமாகும். மார்க் ட்வைன், இந்தியா குறித்து கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். இந்தியா அனைவரும் பார்க்க விரும்பும் ஒரு நாடாகும். ஒரு முறை இந்தியாவை பார்த்தவர்கள் உலகின் பிற பாகங்கள் அனைத்தையும் பார்த்தாலும் இந்திய நாட்டின் சுற்றுலா வளத்திற்கு ஈடாக அதை கருதமாட்டார்கள்.

"உலகப் பயணம் மற்றும் சுற்றுலா குழு" என்ற அமைப்பு ஆண்டுதோறும் சுற்றுலாத் துறை 10.1 சதவிகிதம் வளர்ச்சி அடைவதாகவும் இந்தியா உலகில் சுற்றுலாத் துறையில் பெரிய இடத்தை பெறுவதற்கு தேவையான சுற்றுலா வளங்களை கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. கொண்டே நாஸ்ட் (Conde Nast) என்ற ஐரோப்பாவின் முன்னிலையில் உள்ள பத்திரிகை சமீபத்தில் நடத்திய ஆய்வு ஒன்றில் உலகின் முதல் 10 சுற்றுலா சிறப்பு மிக்க நாடுகள் பட்டியலில் இந்தியா முதன்முறையாக இடம்

பிடித்துள்ளது என தெரிவித்துள்ளது. இந்தியாவின் வியப்பூட்டும் சுற்றுலா வளங்கள், அதன் பாரம்பரிய கலாச்சாரம், பண்பாடு, 5000 ஆண்டுகள் பழமையான வரலாறு, உலகின் மிக உயரமான மலை, அழகிய கடற்கரை, காடுகள், கடற்கரையை ஒட்டிய ஏரிகள், வரலாற்றுச் சின்னங்கள், கோட்டைகள், அரண்மனைகள் முதலியன ஆகும். இந்தியா, ஐரோப்பா மற்றும் தூர கிழக்கு நாடுகள், ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு நடுவில் ஒரு சிறந்த இடத்தை பிடித்துள்ளது. அனைத்து பன்னாட்டு விமானங்களும் இந்தியாவை கடந்துதான் பறக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இந்தியாவிற்கு ஆண்டுதோறும் 2.5 மில்லியன் வெளிநாட்டவர்கள் வருகைபுரிகிறார்கள். இதில் 30 சதவிகிதம் சுற்றுலாப் பயணிகள் ஆவார்கள். சுற்றுலா, இந்தியாவில் வட மாநிலங்களிலும், இராஜஸ்தானிலும் அதிகமாக மையங்கொண்டுள்ளது. இதில் தென் மாநிலங்கள் இந்தியாவிற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளில் 25 சதவிகிதத்தை மட்டுமே ஈர்க்கின்றன.

**II. தமிழ்நாட்டில் சுற்றுலா**

தமிழ்நாடு தற்பொழுது பார்க்க தவற முடியாத (Not to be Missed) ஒரு சுற்றுலாத்தலமாக விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் எடுக்கப்பட்ட பல சீரிய நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டின் சுற்றுலா, பன்னாட்டு சுற்றுலாவில் முக்கியத்துவம் அடைந்துள்ளது. சென்னையில் அக்டோபர் 2003–ல் நடத்தப்பட்ட 64–வது "ஸ்கால்" உலக மாநாடு ஒரு திருப்பு முனையாகும். சுமார் 600 பிரதிநிதிகள் 38 நாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து இம்மாநாட்டிற்கு வருகை தந்தார்கள். சென்னையில் சமீப காலத்தில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்ற மாநாடுகளிலேயே அதிக அளவில் வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்ற மாநாடு இதுவேயாகும். மிகவும் புகழ்பெற்ற செல்லிங் லாங் ஹால் (Selling Long Haul) என்ற பத்திரிகை தனது மார்ச் 2004 பன்னாட்டு உலக சந்தை (ITB - International Travel Bourse) பெர்லின் வெளியீட்டில், "தமிழ்நாடு" இந்தியாவின் சுற்றுலாத் தலமாக மாறி வருகிறது என குறிப்பிட்டுள்ளது. ஸ்கால் மாநாடு 2003 ஆம் ஆண்டின் "சிறந்த சுற்றுலா நிகழ்வு" என்ற விருதை தமிழ்நாட்டிற்கு கிடைக்க செய்தது. இந்த விருதினை பெற்றதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலாவின் பெருமை வெளிக் கொணரப்பட்டுள்ளது. இந்த விருது மார்ச் 2004–ல் புதுதில்லியில் நடைபெற்ற தெற்கு ஆசிய சுற்றுலா மாநாட்டில் வழங்கப்பட்டது.



**1. ஏழு அம்ச நடவடிக்கைத் திட்டம் (7 point action plan)**

20–10–2003 அன்று சென்னையில் நடைபெற்ற ஸ்கால் அமைப்பின் 64–வது உலக மாநாடு துவக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கான ஏழு அம்ச நடவடிக்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இந்த ஏழு அம்ச நடவடிக்கை திட்டம் வருங்கால முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

(அ) தமிழ்நாட்டில் பிரபலமாகாத சிறப்பு சுற்றுலாத்தலங்கள் சில உள்ளன. உதாரணமாக செட்டிநாடு, பிச்சாவரம், பழவேற்காடு முதலியன. இவ்வாறு மறைந்து கிடக்கும் சுற்றுலாச் செல்வங்களை (Hidden Treasures) வெளிக்கொணருதல்.

(ஆ) சென்னை மற்றும் கோயம்புத்தூரை பன்னாட்டு மாநாடு மற்றும் பொருட்காட்சி நடத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைத்தல்.

(இ) அண்டை நாடுகளுடன் ஒத்துழைத்து இரண்டு சுற்றுலாத் தலங்களை ஒன்றாக இணைத்தல் மற்றும் பொதுவான சுற்றுலாச் சுற்றுச்சாலைகள் மேம்படுத்துதல்.

(ஈ) சுற்றுலாத்தலங்களுக்கு செல்லும் பாதைகளை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்.

(உ) சுற்றுலாத்தலங்களில் கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகளை களைதல்.

(ஊ) மிகத்தீவிரமான விளம்பர முறையை மேற்கொள்ளுதல்.

(எ) சுற்றுலாவிற்கென விமான சேவை மற்றும் கப்பல்வழி (Cruise) பயணம் ஏற்படுத்துதல்.

மேற்கூறிய திட்டம் செயல்படுத்தும்பொழுது தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறைக்கு மிகப்பெரிய புத்துணர்வு கிடைக்கும். மேலும் தமிழ்நாடு நிச்சயமாக அகில உலக சுற்றுலா வரைபடத்தில் ஒரு நிலையான இடத்தை பெறும்.

[2004 ஜூலை 31

**2. "மகிழ்வூட்டும் தமிழ்நாடு – நீங்களே அனுபவியுங்கள்" விளம்பரம்**

சுற்றுலாத் துறை 2003–2004 ஆம் ஆண்டு மேற்கூறிய விளம்பரத்தை துவக்கியது. இந்த சொற்றொடர் மிகவும் பிரபலமாகிவிட்டது. மேலும், இத்துறையின் விளம்பர முயற்சிகளுக்கு இது மிகவும் உதவி வருகிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாவிற்கு இது ஒரு சிறந்த விளம்பர முறையாக திகழ்கிறது. மேற்கூறிய சொற்றொடரின் முதற்பகுதி தமிழ்நாட்டின் சிறந்த சுற்றுலா வளத்தை குறிக்கின்றது. சொற்றொடரின் அடுத்த பகுதி இந்தியாவில் மற்றும் வெளிநாட்டில் உள்ள சுற்றுலாப் பயணிகளின் மனதை தொடும் அளவிற்கு உள்ளது. இந்த விளம்பரம் பாரம்பரியம், வரலாறு, பண்பாடு, ஆன்மீகம் மற்றும் அமைதி போன்றவைகளை சித்தரிக்கின்றது. இதுவே, தமிழ்நாடு சுற்றுலாவின் வலுவான அம்சங்களாகும்.

**3. தமிழ்நாட்டின் சுற்றுலா வளம்**

தமிழ்நாடு ஒரு தனித்தன்மை கொண்ட மகிழ்ச்சியூட்டும் மாநிலமாகும். இங்கே தொழில்நுட்பம் பாரம்பரியத்துடன் இணைந்து திகழ்கிறது. தமிழ்நாட்டில் பண்டைய காலத்து கலைத்திறன் தற்பொழுதைய புத்துணர்ச்சியுடன் கலந்து காணப்படுகிறது. இயற்கையானது மாசற்றதாக உள்ளது. மேற்கூறிய காரணத்தால் தமிழ்நாடு ஆண்டு முழுவதும் சுற்றிப்பார்க்கக்கூடிய ஒரு சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் பெருமளவுக்கு சுற்றுலா வளம் காணப்படுகின்றது. அவைகளை கீழ்கண்டவாறு பிரிக்கலாம்.

***(அ) மலைவாசஸ்தலங்கள்*** — இங்கு அழகிய மலைத்தொடர்ச்சிகள், புல்வெளிப்படுகைகள், பலவிதமான செடிகொடிகள் முதலியன காணப்படுகின்றன. இங்கே சுற்றுலா, சுற்றுச்சூழலுக்கு நண்பனாக விளங்கிவருகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு குறிப்பிடத்தக்க மலைவாசஸ்தலங்களாகும்.

***(ஆ) கடற்கரை வாசஸ்தலங்கள்*** — இந்தியாவில் 7100 கி.மீ. நீளமுள்ள கடற்கரை உள்ளது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 1000 கி.மீ. நீளம் உள்ள கடற்கரை பகுதி உள்ளது. இந்த கடற்கரை வெண்ணிற மணல் மற்றும் சூரிய ஒளிக்கதிர்கள் வீசும் அழகிய கடற்கரை பகுதியாக காட்சி



2004 ஜூலை 31]

அளிக்கின்றது. சென்னையில் உள்ள மெரினா கடற்கரை, உலகிலேயே இரண்டாவது பெரிய கடற்கரைப் பகுதியாக உள்ளது. அண்மையில் மெரினாவை அழகுபடுத்தும் திட்டம் அரசால் மேற்கொள்ளப்பட்டது. இது அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. மெரினா கடற்கரை அதன் பழைய சிறப்பை மீண்டும் பெற்றுள்ளது.

***(இ) நீர்வீழ்ச்சிகள்*** — நீர்வீழ்ச்சிகளில் மிக அதிகமாக நீர் விழுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஒகேனக்கல், குற்றாலம், திற்பரப்பு, கும்பக்கரை, பாபநாசம் முதலியன குறிப்பிடத்தக்க நீர்வீழ்ச்சிகளாகும்.

***(ஈ) முதுமலை, ஆனமலை, முண்டந்துரை மற்றும் களக்காடு போன்ற வன விலங்கு சரணாலயங்கள்.***

***(உ) உயிரியல் பூங்காக்கள்*** — இங்கே பலவிதமான உயிரினங்களை அதன் இயற்கையான சூழ்நிலைகளில் காணலாம்.

***(ஊ) பறவைகள் சரணாலயம்***—இங்கே எழுப்பப்படும் பலவிதமான பறவைகளின் ஒலிகள் செவிக்கு இனிமையாக உள்ளன.

***(எ) தாவரவியல்/தோட்டக்கலை பூங்காக்கள்***—இங்கே தோட்டங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் பராமரிக்கப்படுகின்றன.

***(ஏ) கோவில்கள்/தேவாலயங்கள்/மசூதிகள்*** —இங்குள்ள சிற்பங்கள் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டவையாகும். வெளியில் காணப்படும் ஒவ்வொரு இடமும் சிற்பங்களால் நிறைந்து காணப்படுகின்றன. இந்த சிற்பங்கள் மிக துல்லியமாகவும் வெவ்வேறு விதமாகவும் செதுக்கப்பட்ட பொழுதிலும் ஒன்றோடொன்று இணைந்து உள்ளதாகவே காணப்படுகிறது. இவை சிற்பிகளின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. சில புனிதத்தலங்களின் வரலாறு சுமார் 1000 ஆண்டுகளுக்குமேல் பழமையானதாகும்.

***(ஐ) பாரம்பரிய நினைவுச் சின்னங்கள்***—இதில் உள்ள கலைநுட்பம் சிறப்புடனும், உணர்ச்சிமிக்கதாகவும் அமைந்துள்ளது. கடந்த நூற்றாண்டுகளின் பொறியியல் திறனை இந்த கட்டடங்கள் வெளிப்படுத்துகின்றன.

[2004 ஜூலை 31

(ஒ) **சதுப்புநிலக் காடுகள் (Mangrove Forests)** — கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் உள்ள சதுப்பு நிலக்காடுகள் உலகிலேயே மிகப்பெரிய சதுப்பு நிலக்காடுகளில் ஒன்றாகும். திருவாரூர் மாவட்டத்தில் உள்ள முத்துப்பேட்டையிலும் சதுப்புநிலக் காடுகள் காணப்படுகின்றன.

(ஓ) **ஏரிகள்** — கடற்பகுதியுடன் அமையப்பெற்ற பழவேற்காடு ஏரி இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய ஏரியாகும். (முதலாவது ஒரிசாவிலுள்ள சிலிகா ஏரியாகும்.)

**(4) தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வகைகள்**

பொதுவாக தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட சுற்றுலா வகைகளைப் பார்க்கலாம்:

**இன்பச் சுற்றுலா**

தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் தங்களிடம் உள்ள உபரி நேரத்தை உல்லாசமாக கழிக்க வருகிறார்கள். இவர்கள் பொதுவாக மலைவாசஸ்தலங்கள், கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், உயிரியல் பூங்காக்கள் போன்றவற்றிற்கு செல்கின்றார்கள்.

**புனிதச் சுற்றுலா**

புனிதத் தலங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளும் பெரிய குழுவாக கருதப்படுகிறார்கள். இவர்கள் பொதுவாக தங்கள் மதம் சார்ந்த ஆலயங்களுக்குச் செல்கின்றார்கள். சில சமயங்களில் தங்கள் மத கோட்பாடுகளையும் மீறி பிற மதம் சார்ந்த வழிபாட்டுத் தலங்களுக்கு சென்று வழிபடுவதும் உண்டு.

**பாரம்பரியச் சுற்றுலா**

இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் பொதுவாக ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடுவதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்களாக காணப்படுகிறார்கள்.



2004 ஜூலை 31]

**சாகசச் சுற்றுலா**

இந்தக் குழுவைச் சார்ந்தவர்கள் மிகவும் சுறுசுறுப்பான இளைஞர்கள் ஆவார்கள். இக்குழுவினர் மலை ஏறுதல், ஆகாய/நீர் விளையாட்டுகள் போன்றவற்றில் நாட்டமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

**வியாபாரச் சுற்றுலா**

மாநாடுகள், கருத்தரங்குகள், பொதுக்குழுக் கூட்டங்கள், தேர்தல்கள் முதலியவற்றில் கலந்துகொள்ள வருபவர்கள் தங்கள் வணிகப் பணிகளுடன் சுற்றுலாவையும் இணைத்துக்கொள்கிறார்கள்.

**மருத்துவச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் மிகச்சிறந்த மருத்துவ (அலோபதி, ஆயுர்வேதம், சித்தா, யுனானி) வசதிகள் உள்ளன. இத்துடன் தமிழ்நாட்டின் பாரம்பரிய விருந்தோம்பல் தன்மையும் இணைந்து பிற மாநிலங்கள்/அண்டை நாடுகளிலிருந்து உடல்நலக் குறைவுள்ளவர்களைக் கவர்கின்றன. சிகிச்சைக்குபின் பூரண சுகம் பெற்றவுடன் நோயாளிகளும், அவர்களுக்கு உறுதுணையாக வருபவர்களும் சுற்றுலாத்தலங்களுக்குச் செல்வது உண்டு.

**பொருட்காட்சி/விழாக்கள் சுற்றுலா**

பொதுவாக பெரிய பண்டிகைகளையொட்டி (உதாரணமாக பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் முதலிய) சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகக் காணப்படுகிறது. பொருட்காட்சிகள் (சென்னை தீவுத்திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பொருட்காட்சி போன்றவை) அதிக அளவு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க உதவுகின்றன.

**சமூக விழாக்கள்**

திருமணம், புதுமனை புகுவிழா மற்றும் காதணி விழா போன்ற நிகழ்ச்சிகளையொட்டி வருகைதரும் மக்கள் நிகழ்ச்சிகளுக்கு முன் அல்லது பின் சுற்றுலாத்தலங்களுக்குச் செல்கிறார்கள்.

**கல்விச் சுற்றுலா**

கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் தங்கள் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுற்றுலாத்தலங்களுக்குச் செல்கிறார்கள்.

[2004 ஜூலை 31

இந்தப் பயணம் கல்வி கற்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தாலும், பின்னர், அது சுற்றுலாப் பயணமாகவே மாறிவிடுகிறது. சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பூம்புகார் சுற்றுலா வளாகம், மதுரை திருமலை மன்னர் அரண்மனையில் நடைபெற்று வரும் ஒலி-ஒளிக் காட்சி, பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை போன்ற சுற்றுலாத்தலங்களுக்குச் செல்லும் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது.

**5. சுற்றுலாப் பயணிகள் வருகை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் ஜூலை 2001-ல் நடைபெற்ற சுற்றுலாத் துறையின் முதல் ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 7-9 சதவிகிதத்திலிருந்து 10-12 சதவிகிதமாக உயர்த்த முடிவெடுக்கப்பட்டது. அக்கூட்டத்திற்குப் பிறகு சுற்றுலாத் துறையின் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கூறிய இலக்கை அடையும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகள் நல்ல பலனைத் தர ஆரம்பித்துள்ளது என்பதை கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் மூலம் அறியலாம்.

| ஆண்டு | உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2000 | 229.82 | 7.86 | 237.68 |
| 2001 | 238.12 | 7.73 | 245.85 |
| 2002 | 246.61 | 8.05 | 254.66 |
| 2003 | 270.59 | 9.02 | 279.61 |

மேற்கூறிய பட்டியல் மூலம் தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணலாம். இந்த முயற்சி 2004-2005-ல் தொடரும்.



2004 ஜூலை 31]

**III. சுற்றுலா ஆணையரகம் மற்றும் அதன்கீழ் இயங்கும் அலுவலகங்கள்**

சுற்றுலா ஆணையரகம், சுற்றுலா ஆணையர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. சுற்றுலா ஆணையர் அவர்களுக்கு உதவி செய்ய ஒரு இணை இயக்குநர், மூன்று துணை இயக்குநர்கள், இரண்டு உதவி இயக்குநர்கள், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் தலைமையிடம்/பிற அலுவலகங்களில் பணிபுரியும் 200 அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர். சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்கள் (14 தமிழ்நாட்டிலும் 6 வெளிமாநிலங்களிலும்) மற்றும் 26 சுற்றுலாத் தகவல் மையங்கள் (18 தமிழ்நாட்டிலும் 8 வெளிமாநிலங்களிலும்) இயங்கி வருகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான ஆலோசனை வழங்குதல், தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சியர்/பொதுப் பணித் துறை/உள்ளாட்சி அமைப்புகளுடன் திட்டம் செயல்படுத்துவதில் ஒத்துழைத்தல் போன்றவை மேற்கூறிய அலுவலகங்களின் முக்கியமான பணிகளாகும்.

சுற்றுலா அலுவலகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

**தமிழ்நாட்டில் செயல்படுபவை**

(1) கன்னியாகுமரி

(2) திருநெல்வேலி

(3) இராமேசுவரம்

(4) தருமபுரி

(5) கொடைக்கானல்

(6) மதுரை

(7) உதகமண்டலம்

(8) சேலம்

(9) திருச்சிராப்பள்ளி

(10) தஞ்சாவூர்

(11) பூம்புகார்

(12) சிதம்பரம்

(13) மாமல்லபுரம்

(14) சென்னை

**தமிழ்நாட்டிற்கு வெளியே செயல்படுபவை**

(15) மும்பை

(16) கொல்கத்தா

(17) பனாஜி–கோவா

(18) புதுதில்லி

(19) ஜெய்ப்பூர்

(20) ஆக்ரா

**சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் செயல்பட்டுவரும் சுற்றுலாத் தகவல் மையங்கள்**

**தமிழ்நாட்டில் செயல்படுபவை**

(1) இரயில் நிலையம், திருநெல்வேலி

(2) பாஞ்சாலங்குறிச்சி

(3) இரயில் நிலையம், இராமேசுவரம்

(4) பேருந்து நிலையம், இராமேசுவரம்

(5) விமான நிலையம், மதுரை

(6) இரயில் நிலையம், மதுரை

(7) கூடலூர் (நீலகிரி மாவட்டம்)

(8) இரயில் நிலையம், கோயம்புத்தூர்

(9) விமான நிலையம், கோயம்புத்தூர்



(10) இரயில் நிலையம், திருச்சிராப்பள்ளி

(11) விமான நிலையம், திருச்சிராப்பள்ளி

(12) இரயில் நிலையம், சென்னை ( சென்ட்ரல்)

(13) இரயில் நிலையம், சென்னை (எழும்பூர்)

(14) காமராசர் உள்நாட்டு விமான நிலையம், சென்னை

(15) அண்ணா பன்னாட்டு விமான நிலையம், சென்னை

(16) புறநகர் பேருந்து நிலையம், கோயம்பேடு, சென்னை

(17) தரங்கம்பாடி

(18) ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்

**தமிழ்நாட்டிற்கு வெளியே செயல்படுபவை**

(19) இரயில் நிலையம், பெங்களூர்

(20) ஐதராபாத்

(21) திருவனந்தபுரம்

(22) அகமதாபாத்

(23) புவனேஷ்வர்

(24) சண்டிகர்

(25) கௌகாத்தி

(26) வாரணாசி

**IV. (அ) பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த மாநிலங்களுக்கு நிதியுதவி அளிக்கும் மைய அரசின் புதிய கொள்கை**

ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நாடு முழுவதும் தனித்தனி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பல சிறிய சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்காக மாநில அரசுகளுக்கும்,

மத்திய நிர்வாகப் பகுதி அரசுகளுக்கும் மைய அரசின் சுற்றுலாத் துறை நிதியுதவி அளித்து வந்தது. இந்த நிதி உதவி மிகவும் குறைவாக இருந்தது. ஆகையால், இது நாட்டிலுள்ள சுற்றுலாத்தலங்களின் கட்டமைப்பு வசதிகளில் பெருமளவு தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002–2007) சுற்றுலா துரிதமாகவும் கணிசமாகவும் வளர்ச்சிபெற, பின்வரும் புதிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது:

**1. சுற்றுலாச் சுற்றுச்சாலைகளின் ஒருங்கிணைந்த மேம்பாடு**

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

**(அ) விவேகானந்தா சுற்றுலாச் சுற்றுச்சாலை மேம்பாடு**

சுவாமி விவேகானந்தர், தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான புனிதத்தலங்களான கன்னியாகுமரி, இராமேசுவரம், இராமநாதபுரம் முதலிய இடங்களுக்கு சென்றுள்ளார். இவற்றில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளுக்காக 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.6.63 கோடி மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டு இராமேசுவரம், இராமநாதபுரம் போன்ற சுற்றுலா/ புனிதத்தலங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இராமேசுவரம் இந்தியாவின் ஒரு முக்கியமான புனிதத்தலமாகும். மத்திய அரசு இதனை ஒரு தேசிய புனிதத்தலமாக அறிவித்துள்ளது. இந்தியாவிலேயே மிக நீளமான ஆலய உட்பாதை, குளிக்குமிடம், கந்தமாதன பர்வதம், கோதண்டராமர் ஆலயம், சிறிய தீவுகள் போன்றவற்றிற்கு புகழ் பெற்றதாகும். 2003 ஆம் ஆண்டு 17,27,143 சுற்றுலாப்பயணிகள் இராமேசுவரத்திற்கு வருகைபுரிந்துள்ளனர். 1897 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தா மேல்நாட்டிலிருந்து திரும்பிவரும்பொழுது பாம்பனிற்கு வந்தார். அவர் ஜனவரி 1897–ல் இராமேசுவரம் ஆலயத்திற்கு சென்றார். அங்கே விவேக பாஸ்கரத்தில் தங்கினார். இராமேசுவரத்திற்கு விஜயம் செய்தபோது இராமநாதபுரத்தில் இராமலிங்க விலாசம் என்ற இடத்தில் தங்கினார். சுவாமி விவேகானந்தர் பரமக்குடிக்கும் சென்றார். இத்திட்டத்தின்கீழ் பாம்பனில் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, விவேக பாஸ்கரம், அக்னி தீர்த்தம், கந்தமாதன பர்வதம், ஜடாயு தீர்த்தம், இராமலிங்க விலாசம் மேம்பாடு மற்றும் சுற்றுலாத்தகவல் மையம் அமைத்தல் போன்ற





பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மொத்த செலவினமான ரூ.168.24 இலட்சத்தை மத்திய அரசு மார்ச் 2004–ல் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**(ஆ) ஸ்ரீ ஆதிசங்கரர் சுற்றுலாச் சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் காஞ்சிபுரத்தில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

காஞ்சிபுரம் இந்தியாவில் உள்ள 7 புனித நகரங்களில் ஒன்றாகும். இது சென்னைக்கு தென்மேற்கு திசையில் 76 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் முற்காலத்தில் பல்லவர்களின் தலைநகரமாக விளங்கியது. காஞ்சிபுரம், ஆலயங்கள் மற்றும் பட்டுப்புடவைகளுக்கு புகழ்பெற்றதாகும். ஏகாம்பரேசுவரர் ஆலயம், வரதராஜ பெருமாள் ஆலயம், கைலாசநாதர் ஆலயம், காமாட்சி அம்மன் ஆலயம், வைகுண்ட பெருமாள் ஆலயம் மற்றும் காமகோடி மடம் முதலியன காஞ்சிபுரத்தில் உள்ள முக்கிய புனிதத் தலங்களாகும். ஸ்ரீ ஆதிசங்கரர் தமிழ்நாட்டில் 11 மாநிலங்களில் உள்ள சுமார் 17 இடங்களுக்கு விஜயம் செய்துள்ளார். அந்த 17 இடங்களில் காஞ்சிபுரம் முக்கியமான நகரமாகும். ஸ்ரீ ஆதிசங்கரர் அவர்கள் விஜயம் செய்த இடங்களை படிப்படியாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக காஞ்சிபுரம் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.259.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு ஸ்ரீ ஆதி சங்கரர் அவர்கள் விஜயம் செய்த பிற இடங்கள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

**2. கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத்தலம் மேம்பாடு**

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சிறப்பு சுற்றுலாத்தலம் தெரிவுசெய்யப்பட்டு அதில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மத்திய அரசால் மேற்கொள்ளப்படும். சுற்றுலாத்தலத்தை சுற்றியுள்ள பகுதிகள் மேம்பாடு, விளக்குகள் அமைத்தல், கழிவு நீர் வசதிகள், சாலையோர வசதிகள், நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு, விளம்பரப் பலகைகள், சுற்றுலாத் தகவல் மையம் அமைத்தல் போன்ற பணிகள் தெரிவு செய்யப்பட்ட சுற்றுலாத்தலத்தில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் மாமல்லபுரத்தில் 2003–2004 ஆம் ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**மாமல்லபுரம் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் முதற்கட்டமாக கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

**(அ) கடற்கரைகோயில் பகுதி – திட்ட மதிப்பீடு – ரூ.2.00 கோடி**

இத்திட்டத்தின்கீழ் 15 வணிகக் கடைகள் கட்டுதல், சுற்றுச்சுவர் கட்டுதல், கிணறு, நுழைவுச்சீட்டு வழங்குமிடம், வாகனம் நிறுத்துமிடம், நடைபாதை அமைத்தல், நிலச்சீரமைப்பு, செடிகள் நடுதல், மின் வசதிகள் போன்றவை இடம் பெறுகின்றன. இப்பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

**(ஆ) ஐந்து இரதங்கள் பகுதி – திட்ட மதிப்பீடு ரூ.3.00 கோடி**

இத்திட்டத்தின்கீழ் சுற்றுச்சுவர் கட்டுதல், நிலச்சீரமைப்பு, 101 வணிகக் கடைகள் கட்டுதல் (ஐந்து இரதங்கள் பகுதிக்கு செல்லும் வழியில் உள்ள கடைகள் புதிய கடைகளுக்கு மாற்றப்படும்), சிற்றுண்டிச்சாலை, கழிப்பறை, பேருந்து நிழற்கூடம், நுழைவுச்சீட்டு வழங்குமிடம், நடைபாதை அமைத்தல் முதலிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கூறிய பணிகள் அனைத்தையும் மத்திய பொதுப் பணித் துறை செயல்படுத்தி வருகிறது. இதற்கான வரைபடங்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (Housing & Urban Development Corporation) தயாரித்தது.

இரண்டாம் கட்டமாக கீழ்க்கண்ட பணிகள் 2004–2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும்.

அர்ச்சுனன்தபசு பகுதி மேம்பாடு

டொலட்ச்சவா மண்டபம் மற்றும் பூதத்தாழ்வார் மண்டபம் மேம்பாடு

மேல்நிலைப் பள்ளி, துவக்கப் பள்ளி மற்றும் பால்வாடிக்கு புதிய கட்டடம் கட்டுதல்

புலிக்குகைப் பகுதி மேம்பாடு

புதிய பேருந்து நிலையம் கட்டுதல்.



மாமல்லபுரம் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ.19.00 கோடியாகும். இதில் தமிழ்நாடு அரசு, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில மாற்றம் செய்ய ரூ.1.56 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**ஏற்காடு மேம்படுத்துதல்**

சுற்றுலாத்தலம் / கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின்கீழ் ஏற்காடு பகுதி மேம்பாட்டிற்காக ரூ.519.00 இலட்சம் நிதி கோரி 2004–2005–ல் மத்திய அரசுக்கு ஜூன் 2004–ல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**3. கிராமப்புற சுற்றுலா மேம்பாடு**

உலகம் முழுவதும் தொழில் துறையின் முன்னேற்றத்தினால் நகரப் பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நகர்ப்புற வாழ்க்கையில் உள்ள சிரமங்களால் கிராமிய பகுதிகளை மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். வளர்ச்சிபெற்ற நாடுகளில் கிராமிய பகுதிகளுக்கு சென்று அங்கு ஓய்வெடுப்பதும், சுகமாக வாழ்வதும் ஒரு புதிய சுற்றுலாவாக உருவெடுத்துள்ளது. இந்தியாவிலும் கிராமியச் சுற்றுலாவில் நாட்டம் அதிகரிக்கின்றது. எனவே, மத்திய அரசு கிராமியச் சுற்றுலா மேம்பாட்டிற்காக ஒரு பகுதிக்கு ரூ.50.00 இலட்சம் வரை ஒப்பளிப்பு செய்ய முன்வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராமத்தை சுற்றியுள்ள பகுதி மேம்பாடு, சாலை மேம்பாடு, விளக்கு வசதி, கழிவு நீர் அகற்றல், சாலையோர வசதிகள், நினைவுச்சின்னங்கள் புனரமைப்பு, விளம்பரப் பலகைகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட பகுதிகளில் கிராமிய சுற்றுலாவிற்கு மத்திய அரசு நிதி உதவி அளித்துள்ளது:

| | |
|---|---|
| கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் | ரூ.48.68 இலட்சம் |
| செட்டிநாடு , சிவகங்கை மாவட்டம் | ரூ. 50.00 இலட்சம் |
| தீர்த்தமலை, தருமபுரி மாவட்டம் | ரூ. 50.00 இலட்சம் |

2004–2005–ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தேவிப்பட்டினத்தை ரூ.50.00 இலட்சம் செலவில் கிராமப்புற சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த மைய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**4. அதிக வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்கள்**

இத்திட்டத்தின்கீழ் சொகுசு இரயில், படகு சேவை, கம்பிவழிப் பயணம் போன்ற திட்டங்களுக்கு 25 சதவிகிதம் வரை நிதியுதவியினை மத்திய அரசு வழங்கும். இந்தத் திட்டங்களில் கம்பிவழிப் பயணம் (Ropeway) சுற்றுலாப் பயணிகளிடையே அதிக வரவேற்பை பெறும். கம்பிவழிப் பயணம் மேற்கொள்ளும்பொழுது சுற்றுலாப் பயணிகள் உயரத்திலிருந்து கீழே உள்ள அழகிய இயற்கை காட்சிகளை கண்டுகளிக்கலாம்.

இத்திட்டத்தின்கீழ் கொடைக்கானல், மற்றும் உதகமண்டலத்தில் கம்பிவழிப் பயணம் ஏற்படுத்தப்படும். (இது தவிர மத்திய அரசு நிதி உதவியின்றி கன்னியாகுமரி மற்றும் ஏற்காட்டில் கம்பிவழிப் பயணம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது).

**5. சேவை புரிபவர்க்கு பயிற்சி அளித்தல்**

சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சேவை புரிபவர்கள் சுற்றுலாப் பயணத்தை எந்த ஒரு குறைவுமின்றி மேற்கொள்ள பெரிதும் உதவுகிறார்கள். 2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட சேவைபுரிபவர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளிக்கப்படும். இதற்காக மத்திய அரசு மார்ச் 2004–ல் ரூ.7.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**அ) தாபா (Dhaba) பணியாளர்கள்**

சுற்றுலாத்தலங்களில் பல அங்கீகரிக்கப்பட்ட/ அங்கீகரிக்கப்படாத ஓட்டல்கள் உள்ளன. இந்த ஓட்டல்கள் அதிக வருமானம் / நடுத்தர வருமானம் உள்ள சுற்றுலாப்பயணிகளுக்கு மட்டுமே ஏற்றதாக உள்ளது. மிகவும் குறைந்த அளவு வருமானம் உள்ளவர்கள் இத்தகைய ஓட்டல்களுக்குச் செல்ல தயங்குகிறார்கள். இதனால் அனைத்து புனித/ சுற்றுலாத்தலங்களிலும் தாபா (சிறிய சிற்றுண்டிச் சாலை) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த தாபாக்களில் சுற்றுலாப் பயணிகள் முன்னிலையில் அனைத்து ரக உணவுகளும் சூடாக தயாரித்து வழங்கப்படுகின்றன. தாபாக்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நன்னடத்தை, சமையற்கலை மற்றும் சுகாதாரம் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படும்.





**ஆ) வாடகை சீருந்து / பேருந்து ஓட்டுநர்கள்**

சுற்றுலா வாகனங்கள் ஓட்டுபவர்கள் பொதுவாக குறைந்த கல்வி அறிவு உடையவர்களாக காணப்படுகிறார்கள். குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் பழக தேவையான அளவு அனுபவம் அவர்களுக்கு இல்லை. ஓட்டுநர்கள் அதிகமாக கட்டணம் வசூலிப்பது குறித்து காவல் துறையில் புகார்கள் பெறப்படுகின்றன. ஓட்டுநர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்த சுற்றுலாத் துறை விரும்புகிறது. இதற்காக ஓட்டுநர்களுக்கு நலவாழ்வு, சுகாதாரம், சுத்தம், அடிப்படை சேவை முறைகள், நன்னடத்தை மற்றும் அடிப்படை மரியாதை போன்ற பொருட்கள் குறித்து பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இ) ஓட்டலில் பணிபுரிவர்களுக்கு பயிற்சி**

சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத்தலங்களில் எதிர்பார்க்கும் கட்டமைப்பு வசதிகளில் ஒன்று தரமான உணவு வகைகளை நியாயமான விலையில் வழங்கக்கூடிய சிற்றுண்டி சாலைகள்/ ஓட்டல்கள், தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட / அங்கீகரிக்கப்படாத ஓட்டல்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. இந்த ஓட்டல்கள் பலவிதமான உணவு வகைகளை (சைவம் மற்றும் அசைவம்) தயாரித்து வழங்குகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் தனியார் ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பழகும் முறை, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

**ஈ) வரவேற்பாளர்கள்**

சுற்றுலாத் துறையில் பணியாற்றும் வரவேற்பாளர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு பாரம்பரிய வரவேற்பை அளிப்பதில் நல்ல அனுபவம் படைத்தவர்கள் ஆவார்கள். வரவேற்பாளர்களிடம் காணப்படும் இந்த திறமையை மேலும் அதிகப்படுத்த சுற்றுலாத் துறை விரும்புகிறது. இதன்படி, வரவேற்பாளர்களுக்கு நலவாழ்வு, தன்சுத்தம், சுகாதாரம், அடிப்படை சேவை முறைகள், நன்னடத்தை போன்ற பொருட்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

[2004 ஜூலை 31

**உ) உணவு மற்றும் உறைவிடம் (Bed and Breakfast) வழங்குபவர்களின் உதவியாளர்களுக்கு பயிற்சி**

சில சுற்றுலாப் பயணிகள் குறைந்த செலவில் அதே சமயம் சுகாதாரமான சூழ்நிலையில் தங்கும் வசதியை நாடுகின்றனர். உள்ளூர் வாழ்க்கை முறையை அனுபவிக்கவும் சில சுற்றுலாப் பயணிகள் விரும்புவது உண்டு. இத்தகைய சுற்றுலாப் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்ய சுற்றுலாத் துறை 2001–2002 ஆம் ஆண்டு "உணவு மற்றும் உறைவிடம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. "ஒரு விருந்தினரை அழைத்து நண்பராக திருப்பி அனுப்புங்கள்" என்று காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் இத்திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒரு வீட்டின் உரிமையாளர் சில அறைகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு அளித்து அவர்களுக்கு தேவையான சிற்றுண்டியையும் வீட்டின் உரிமையாளர் வழங்குவார். இத்தகைய உரிமையாளர்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் சில சுற்றுலா தகவல்களைக் கொண்ட சிறிய கையேடு ஒன்று 2001–2002 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையால் வெளியிடப்பட்டது. இந்த விவரங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வலைத்தளத்தில் காணலாம். 2001–2002 முதல் 2003–2004 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தினால் 3258 சுற்றுலாப் பயணிகள் பயனடைந்துள்ளார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இத்திட்டத்தில் இணைந்துள்ள வீட்டு உரிமையாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| சென்னை | — | 117 |
| மதுரை | — | 12 |
| திருநெல்வேலி | — | 6 |
| கன்னியாகுமரி | — | 4 |
| தஞ்சாவூர் | — | 2 |
| கொடைக்கானல் | — | 1 |
| விருதுநகர் | — | 1 |
| சேலம் | — | 1 |
| மொத்தம் | — | 144 |



2004 ஜூலை 31]

வீட்டு உரிமையாளர்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை கவனிக்க உதவியாளர்கள் தேவைப்படுகின்றது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்தகைய உதவியாளர்களுக்கு நல்வாழ்வு, தன்சுத்தம், சுகாதாரம், அடிப்படை சேவை முறைகள், சத்துணவு போன்ற பொருட்கள் குறித்து பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6. மாமல்லபுரம் அருகில் சுற்றுலா கிராமம் அமைத்தல்**

முன்னாள் பாரத பிரதமர் காலஞ்சென்ற திரு. சவுத்ரி சரண்சிங், நூற்றாண்டு விழாவினையொட்டி மத்திய அரசு சுற்றுலாத் துறை மார்ச் 2004–ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாமல்லபுரம் அருகில் சுற்றுலா கிராமம் அமைக்க ரூ.40.00 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நாட்டுப்புற நாடகங்கள்/கைவினைப்பொருட்கள் கண்காட்சி நடத்த மண்டபம், நூலகம் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2003–2004 ஆம் ஆண்டில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி**

பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியில், கணிசமான அளவிற்கு விரைவில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை மத்திய அரசுக்கு பல கருத்துருக்களை அனுப்பி வைத்தது. 2003–2004 ஆம் ஆண்டில் 18 திட்டங்களுக்கு மத்திய அரசு ரூ.21.80 கோடி ஒப்பளிப்பு செய்தது. (2002–2003 ஆம் ஆண்டில் ரூ. 7.67 கோடி தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது) இதில் பணிகள் துவங்குவதற்கு ஏதுவாக, முதல்தவணையாக ரூ.13.73 கோடியினை மைய அரசு விடுவித்துள்ளது. மத்திய அரசு 2003–2004 ஆம் ஆண்டில் ஒப்பளித்துள்ள இத்தொகை (ரூ.21.80 கோடி) முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பெரிய தொகையாகும். இதேபோன்ற முயற்சிகள் 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடரும்.

**4 ஆ) மத்திய அரசு நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்**

மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக திட்டங்கள் செயல்படுத்த மாநில அரசுகளுக்கும்/யூனியன் பிரதேசங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. எட்டு மற்றும்

[2004 ஜூலை 31

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டில் 144 சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த நிதி வழங்கியது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| *144 திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கு* | *2,535.44* |
| *144 திட்டங்களுக்கு மாநில அரசின் பங்கு* | *1,132.65* |
| மொத்தம் | *3,668.09* |

இதில் 114 திட்டங்கள் முடிவுற்றன. மீதமுள்ள 30 திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விவரம் பின்வருமாறு:—

**மைய அரசு நிதி உதவித் திட்டங்கள்**
**நடைபெற்று வரும் திட்டங்களின் விவரம்**

| வ. எண் | வருடம் | திட்டத்தின் பெயர் | மொத்த திட்டத் தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1996-97 | வேலூர் கோட்டையில் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் | 40.00 |
| 2 | 1998-99 | காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயில் அருகில் சுற்றுச்சூழல் மேம்பாடு | 22.50 |
| 3 | 1998-99 | நாகூரில் கழிப்பிட வசதிகள் | 16.00 |
| 4 | 1999-2000 | ஏற்காட்டில் இயற்கை வழிப் பாதை மேம்பாடு | 2.00 |
| 5 | 1999-2000 | காஞ்சிபுரம் அருள்மிகு வரதராச பெருமாள் கோயில் அருகில் கழிப்பிட வசதிகள் | 16.00 |



2004 ஜூலை 31]

| | | | |
|---|---|---|---|
| 6 | 1999-2000 | சென்னை எலியட்ஸ் கடற்கரையில் நிலச்சீரமைப்பு, நடைபாதை மற்றும் விளக்குகள் அமைத்தல் | 38.43 |
| 7 | 1999-2000 | வேலூர் கோட்டை புனரமைப்பு பணிகள் | 22.50 |
| 8 | 1999-2000 | மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் மற்றும் ஐந்து ரதங்கள் பகுதியில் சுற்றுச் சூழல் மேம்பாடு | 27.83 |
| 9 | 1999-2000 | மதுரை திருமலை மன்னர் அரண்மனையில் வாகனம் நிறுத்துமிடம் | 20.00 |
| 10 | 1999-2000 | கொடைக்கானலில் வாகனம் நிறுத்துமிடம் | 30.00 |
| 11 | 1999-2000 | திருத்தணியில் வாகனம் நிறுத்துமிடம் | 25.00 |
| 12 | 1999-2000 | மதுரையில் யாத்ரி நிவாஸ் (பயணியர் விடுதி) | 52.10 |
| 13 | 1999-2000 | கன்னியாகுமரியில் வாகனம் நிறுத்துமிடம் | 100.00 |
| 14 | 1999-2000 | மதுரை திருமலை மன்னர் அரண்மனை ஒலி—ஒளிக்காட்சி நவீன மயமாக்குதல் | 96.18 |
| 15 | 1999-2000 | தஞ்சாவூர் பெரிய கோயிலைச் சுற்றி சுற்றுச் சூழல் மேம்பாடு | 22.00 |
| 16 | 1999-2000 | ஏலகிரியில் யாத்ரி நிவாஸ் (பயணியர் விடுதி) கட்டுதல் | 40.00 |

| | | | |
|---|---|---|---|
| 17 | 1999-2000 | மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி சுற்றுச்சூழல் மேம்பாடு | 12.00 |
| 18 | 2000-2001 | ஏற்காட்டில் மலைவழிப்பாதை மற்றும் ஏரி மேம்பாடு | 15.00 |
| 19 | 2000-2001 | சுத்தமல்லியில் கிராமிய சுற்றுலா மேம்பாடு | 20.00 |
| 20 | 2000-2001 | மாமல்லபுரத்தில் வாகனம் நிறுத்துமிடம் | 24.00 |
| 21 | 2000-2001 | திருச்செந்தூரில் கழிப்பிட வசதிகள் | 24.00 |
| 22 | 2001-02 | வீடூர் அணையில் சுற்றுலா மேம்பாடு | 10.00 |
| 23 | 2001-02 | திருவண்ணாமலையில் உயர் மின் கம்ப விளக்குகள் | 10.00 |
| 24 | 2001-02 | திருத்தணியில் உயர் மின் கம்ப விளக்குகள் | 10.00 |
| 25 | 2001-02 | திருவேற்காட்டில் கழிப்பிட வசதிகள் | 16.00 |
| 26 | 2001-02 | புளியஞ்சோலையில் சுற்றுலா மேம்பாடு | 35.00 |
| 27 | 2001-02 | கன்னியாகுமரியில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 60.00 |
| 28 | 2001-02 | செஞ்சியில் சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு | 75.00 |
| 29 | 2001-02 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளை கணினி மயமாக்குதல் | 50.00 |
| 30 | 2001-02 | முட்டுக்காட்டில் புனல் விளையாட்டு மேம்பாடு செய்தல் | 20.00 |





**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மற்றும் பைகாரா படகு குழாம் மேம்பாடு, மலை ஏற்றப் பகுதி மேம்பாடு முதலிய பணிகளுக்காக 2003–2004 ஆம் ஆண்டு ரூ.110.75 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2004–2005 ஆம் ஆண்டில் டி.ஆர். பஜாரில் ஒரு புதிய படகு குழாம் அமைக்கவும் நீலகிரி மாவட்டத்தில் காட்சி முனைகள் மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டு கொடைக்கானல் படகு குழாமை மேம்படுத்தவும் அதற்கு புதிய படகுகள் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். கொடைக்கானலில் தற்பொழுது உள்ள இளைஞர் விடுதி புதுப்பிக்கப்படும். மேற்கூறிய திட்டங்களின் தோராயமான மதிப்பீடு ரூ.45.00 இலட்சமாகும்.

**V) அறிவிப்புகள் 2003–2004 – எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

2003–2004 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்பொழுது சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட சில முக்கியமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக சுற்றுலாத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அ) சுற்றுலா சுற்றுச்சாலை**

இந்த புதிய சுற்றுலாத் திட்டம் சுற்றுலாப் பயணிகளிடையே அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள் நவக்கிரக ஆலயங்கள்மீது அதிக நாட்டம் உடையவர்களாக காணப்படுகிறார்கள். தமிழகத்திலுள்ள நவக்கிரக ஆலயங்கள் பட்டியலில் சூரியனார் கோவில், திங்களூர் வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, கஞ்சனூர், கீழ்பெரும்பள்ளம் மற்றும் திருநாகேஸ்வரம் அடங்கும். மேற்கூறிய ஆலய பகுதிகளில் குடிநீர், கழிப்பறை, ஓய்வறை முதலிய அடிப்படை வசதிகள் ரூ.50.00 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

### ஆ) பெருந்திட்டம்

மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள பல இலட்சக் கணக்கான தொகை ஒப்பளிப்பு செய்கின்றன. இத்தகைய நிதிகளை நல்ல முறையில் பயன்படுத்த பெருந்திட்டம் தயாரிப்பது அவசியமாகிறது. எனவே, 3 சுற்றுலாச் சுற்றுச்சாலைகள் மற்றும் 8 சுற்றுலாத்தலங்கள் குறித்து பெருந்திட்டம் தயாரிக்க ரூ.25.00 இலட்சம் 2003–2004–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. பெருந்திட்டம் தயாரிக்கும் பணி ஒரு தனியார் நிறுவனத்திடம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆகஸ்ட் 2004–க்குள் இப்பணியை முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையை சுற்றியுள்ள ஆலயங்களின் சுற்றுலாச் சுற்றுச்சாலைக்கான பெருந்திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது.

### இ) சுற்றுலா தகவல் மையம் திறப்பு

சுற்றுலாத் துறை, ஏற்கெனவே தமிழ்நாட்டிற்கு வெளியே 6 சுற்றுலா அலுவலகங்களையும் 3 சுற்றுலா தகவல் மையங்களையும் திறந்துள்ளது. தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை மேலும் சில மாநிலங்களில் விளம்பரப்படுத்தும் நோக்கத்தோடு 5 சுற்றுலா தகவல் மையங்கள் புவனேஸ்வர், கௌகாத்தி, அகமதாபாத், சண்டிகர் மற்றும் வாரணாசியில் ரூ.7.75 இலட்சம் செலவில் திறக்கப்பட்டுள்ளன.

### ஈ) விளம்பர முகாம்

ஒவ்வொரு மாநிலத்திலும் சுற்றுலாத் தகவல் மையம் திறப்பது என்பது அரசுக்கு அதிக செலவை ஏற்படுத்தும். எனவே, முக்கியமான நகரங்களில் விளம்பர முகாம்கள் நடத்தப்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டு விளம்பர முகாம்கள் இந்தோர், புனே, சிம்லா, லக்னோ, வாரணாசி, கௌகாத்தி, அகமதாபாத் மற்றும் சூரத் ஆகிய இடங்களில் ரூ.18.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

### உ) ஸ்கால் மாநாடு

ஸ்கால் (SKAL) என்பது உலகமெங்கிலும் உள்ள சுற்றுலா தலைவர்களின் அமைப்பாகும். இவ்வமைப்பு உலகத்தில் சுற்றுலாவையும் நட்பையும் வளர்க்கிறது. இந்த அமைப்பு 1932 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இன்று, இவ்வமைப்பு 80 நாடுகளில் 25,000



உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு தனது 64–வது உலக மாநாட்டினை முதன்முறையாக சென்னையில் (இந்தியாவிலும்கூட) 19–10–2003 முதல் 24–10–2003 வரை நடத்தியது. சுற்றுலாத் துறை இந்த மாநாட்டினை ஏற்று நடத்தியது. மாண்புமிகு முதலமைச்சர் இந்த மாநாட்டின் துவக்க நாளன்று தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கான ஏழு அம்சத் திட்டத்தை அறிவித்து "மகிழ்விக்கும் தமிழ்நாடு" என்ற முழுமையான சுற்றுலா கையேட்டையும் வெளியிட்டார்கள். தமிழக அரசு, இந்த மாநாட்டில் சுற்றுலாத் துறையின் பங்கேற்புக்காக ரூ.25.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது.

### ஊ) சுற்றுலா வழிகாட்டி பயிற்சி

சுற்றுலா வழிகாட்டி பயிற்சி உதகமண்டலத்தில் டிசம்பர் 2003–லும், மதுரையில் ஜனவரி 2004–லும், சென்னையில் மார்ச் 2004–லும் நடைபெற்றது. இந்த மூன்று மையங்களிலும் 90 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மூன்று மையங்களிலும் பயிற்சி அளிக்க ரூ.5.00 இலட்சம் செலவிடப்பட்டது.

### 2003–2004 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பிற திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| வெளி மாநிலங்களில் உள்ள தமிழக அரசின் சுற்றுலா அலுவலகங்கள்/ சுற்றுலா தகவல் மையங்களை கணினிமயமாக்குதல் | 9.00 |
| விளம்பர பணிகளுக்கு ஒளிவீழ்த்தி கருவி கொள்முதல் செய்தல் | 2.20 |
| சில குறிப்பிட்ட சுற்றுலா அலுவலகங்களில் நிகரி வசதி செய்தல் | 6.80 |
| சுற்றுலா ஆணையரகத்திற்கு சிறிய கணினி கொள்முதல் செய்தல் | 1.50 |

(ரூபாய் இலட்சத்தில்)

மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம் மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்களிலும், பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள (கட்டபொம்மன் நினைவுக் கோட்டை) சுற்றுலா தகவல் மையத்திலும் மழைநீர் சேகரிப்பு வசதி செய்தல். 2.00

**VI) மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு**

சுற்றுலா மேம்பாட்டிற்கு இந்த அரசு அதிக கவனத்தை செலுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு பங்காற்றியுள்ளார்கள். பதவியேற்றவுடன் 13-7-2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள். அச்சமயம் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அறிவுரை வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய அறிவுரைகளை செயல்படுத்த (அதாவது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த மற்றும் விளம்பர பணிகள் மேற்கொள்ள) அதிக நிதி தேவைப்பட்டது. தமிழக அரசு தற்பொழுது முன் எப்போதும் இல்லாத அளவிற்கு வரவு-செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கி வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டுக்கு ரூ.30.35 கோடி ஒதுக்கியுள்ளது.

**1) சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தபோது, புதிய இயற்கை எழில்கொண்ட சுற்றுலாத்தலங்களை கண்டறிந்து அவைகளை மேம்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி, பொதுக் கழிப்பிடம், நிழற்குடை, விளக்குகள், சிற்றுண்டிச்சாலை, நடைபாதை, வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் செய்யப்பட்டன. 2003-2004 ஆம் ஆண்டு ரூ.52.95 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.



| வ. எண் | திட்டம் | மாவட்டம் | சுற்றுலாத் துறை பங்கு ரூ இலட்சத்தில் | மாவட்ட நிர்வாகம் பங்கு ரூ இலட்சத்தில் | மொத்தம் ரூ இலட்சத்தில |
|---|---|---|---|---|---|
| 1 | பர்வதமலை மேம்பாடு | திருவண்ணாமலை | 40.00 | 41.17 | 81.17 |
| 2 | ரோச் பூங்கா, தூத்துக்குடி—படகு குழாம் அமைத்தல் | தூத்துக்குடி | 7.00 | 7.00 | 14.00 |
| 3 | திருமுல்லை வாசல் கடற்கரை மேம்பாடு | நாகப் பட்டினம் | 2.45 | 5.00 | 7.45 |
| 4 | அருள்மிகு பிரசன்ன வெங்கடா—சலபதி பெருமாள் திருக்கோயில், குணசீலம், திருச்சி மாவட்டம் — கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு | திருச்சிராப் பள்ளி | 1.25 | 3.75 | 5.00 |
| 5. | கரூர் மாவட்டத்தில் புனிதத் தலங்கள் மேம்பாடு | கரூர் | 2.25 | 6.75 | 9.00 |

***2004—2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட இடங்களில் கட்டமைப்பு வசதி திட்டங்கள் மேற்கொள்ளப்படும்***

| வ எண் | திட்டம் | மாவட்டம் | சுற்றுலாத் துறை பங்கு ரூ இலட்சத்தில் | மாவட்ட நிர்வாகம் பங்கு ரூ இலட்சத்தில் | மொத்தம் ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | பிச்சாவரம்— சிதம்பரம் சாலை மேம்பாடு | கடலூர் | 30.00 | 30.00 | 60.00 |
| | | | பணி முடிவுற்றது | | |
| 2 | கோவை— குற்றாலம் மற்றும் வெள்ளியங்கிரி ஆலயம் மேம்பாடு | கோயம்புத்தூர் | 67.71 | 67.71 | 135.42 |
| 3 | திருமூர்த்தி மலை மேம்பாடு | கோயம்புத்தூர் | 4.22 | 4.23 | 8.45 |
| 4 | நவதிருப்பதி ஆலய பகுதிகள் மேம்பாடு | தூத்துக்குடி | 24.38 | 24.37 | 48.75 |
| 5 | புதுத்தான் குடியிருப்பு மேம்பாடு | திருநெல்வேலி | 11.00 | 11.00 | 22.00 |
| 6 | திருப்புடை மருதூர் மேம்பாடு | திருநெல்வேலி | 10.45 | 10.00 | 20.45 |
| 7 | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு மேம்பாடு | நாமக்கல் | 49.40 | 50.00 | 99.40 |
| 8 | அடைக்கல மாதா தேவாலயம், ஏலாக்குறிச்சி மேம்பாடு | பெரம்பலூர் | 0.82 | 2.48 | 3.30 |
| 9 | கன்னியாகுமரி சுற்றுலா வளாகத்தில் வாகனம் நிறுத்துமிடம் | கன்னியாகுமரி | 1.20 | 1.20 | 2.40 |



**VII) 2004–2005 ஆம் ஆண்டிற்கான குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்**

*அ) சுற்றுலாப் பயணிகள் வருகை*

சுற்றுலாத் துறை ஏற்கெனவே தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை பத்தாவது ஐந்தாண்டு (2002–2007) திட்டக் காலத்தில் தற்போது உள்ள 7–9 சதவிகிதத்திலிருந்து 10–12 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று தீர்மானித்துள்ளது. இதே இலக்கு 2004–2005 ஆம் ஆண்டிற்கும் பொருந்தும்.

*ஆ) சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலம்*

அரசுக்கு வருமானம் ஈட்டுவதை மனதிற்கொண்டால் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் கால அளவு முக்கியத்துவம் பெறுகிறது எனவே, சுற்றுலாத் துறை தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலத்தை கீழ்க்கண்டவாறு நீட்டிப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

| வ. எண் | தற்போது சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் காலம் | 2004—2005 ஆம் ஆண்டிற்கு சுற்றுலாத் துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு |
|---|---|---|
| 1 | 4—5 நாட்கள் (உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்) | 7—8 நாட்கள் |
| 2 | 7 நாட்கள் (வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்) | 10 நாட்கள் |

இ) பிற மாநில சுற்றுலாத் துறை / சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் (குறிப்பாக மூன்று தென் மாநிலங்களான கேரளம், கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் முதலிய மாநிலங்களுடன்) சிறந்த வகையில் ஒத்துழைத்தல்.

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் (குறிப்பாக தகவல் தொழில்நுட்பம்) ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை சுற்றுலா வளர்ச்சிக்கு பயன்படுத்துதல்

உ) சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் படிப்படியாக ஏற்படுத்தப்படும். 2001–2002ஆம் ஆண்டு இப்பணி துவக்கப்பட்டது. இது ஆண்டுதோறும் தடையின்றி தொடரும்.

**ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு**

இதுகாறும் சுற்றுலாத் துறையின் நடவடிக்கைகள் மிகக் குறுகிய வட்டத்திற்குள் காணப்பட்டன. அதாவது தமிழ்நாட்டில் அதிக அளவு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது மற்றும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமே சுற்றுலாத் துறையின் முக்கிய நடவடிக்கையாக இருந்தது. ஆனால் சுற்றுலாத் துறை இனி வருங்காலங்களில் ஒரு புதிய அணுகுமுறையை அறிமுகப்படுத்த விரும்புகிறது. இது "ஒருங்கிணைந்த சுற்றுலா மேலாண்மை" என்று அழைக்கப்படும். இதன்படி சுற்றுலாவுடன் தொடர்புடைய கீழ்க்கண்ட அனைத்து செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.



அன்னியச் செலாவணி ஈட்டுதல்

வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

கலாச்சாரப் பாதுகாப்பு

கைவினைப் பொருட்கள் ஊக்குவிப்பு

சுற்றுலாத் தலங்களிலிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றுவது

சுற்றுலாத் தலங்களில் பிச்சைக்காரர் தொல்லை ஒழித்தல்

சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு

**விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்துதல்**

"மகிழ்விக்கும் தமிழ்நாடு" (Enchanting Tamil Nadu) என்ற புதிய சந்தைப்படுத்தும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் (64–வது ஸ்கால் மாநாடு அக்டோபர் 2003 சென்னையில் நடைபெற்றபோது) துவக்கப்பட்டது. இந்த விளம்பர முயற்சியுடன் ஒரு தீவிர சந்தைப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2003–2004 ஆம் ஆண்டு தகவல் சாதனங்கள் (அச்சு மற்றும் தொலைக்காட்சி போன்ற) தமிழ்நாட்டில் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்த முழுவதுமாக பயன்படுத்தப்பட்டது. இந்த முயற்சியில் சில முக்கியமான பகுதிகள்/நாடுகளான ஐரோப்பா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் விமானத்தில் உபயோகப்படுத்தும் இதழ்கள் மூலமாக கவனம் செலுத்தப்பட்டது. 2003–2004 ஆம் ஆண்டு அறுபடை வீடு மற்றும் நவக்கிரக சுற்றுலா சுற்றுச்சாலை, மறைந்து கிடக்கும் சுற்றுலா செல்வங்கள், ஆங்கிலம் மற்றும் இந்தியில் தமிழ்நாடு வரைபடம், ஆங்கிலத்தில் சென்னை வரைபடம் முதலிய மடிப்பேடுகள் வெளியிடப்பட்டன. முதன்முறையாக சுற்றுலாத் துறை ஏடிபி (ATP - Association of Tennis Professionals) டென்னிஸ் விளையாட்டுப் போட்டியின்போது விளம்பரம் செய்தது. இந்த விளையாட்டு அரங்கில் முக்கியமான இடத்தில் வைக்கப்பட்ட சுற்றுலாத் துறையின் விளம்பரப் பலகை உலகமெங்கும் உள்ள பல மில்லியன் பார்வையாளர்களை தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை மூலம் சென்றடைந்தது.

சுற்றுலா என்பது ஒரு நுகர்வோர் பயன்படுத்தும் பொருட்கள் அல்லது வீடுகளில் உபயோகப்படுத்தப்படும் சாதனம் போல் அல்ல. சுற்றுலாப் பயணிகள் தங்கள்வசம் உள்ள பணத்தை கணிசமான

[2004 ஜூலை 31

அளவிற்கு செலவிடுகிறார்கள். அவ்வாறு செலவிடும்பொழுது அதற்குப் பதில் அவர்களுக்கு கிடைப்பது மகிழ்ச்சி மட்டுமே. இதனை அளக்க எந்தவிதமான அளவுகோலும் இல்லை. எனவே, சுற்றுலாவை சந்தைப்படுத்துவது மிகவும் கடினமான செயலாகும். தனியார் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து அதிக போட்டி நிலவுவதால் சந்தைப்படுத்துவது மிகவும் கடினமாகிறது. எனவே, சுற்றுலாவை சந்தைப்படுத்த ஒரு புதிய வழிமுறையை கையாள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறை நுகர்வோர் பயன்படுத்தும் பொருட்களை விளம்பரப்படுத்துவது போன்றிருக்கும். சந்தைப்படுத்தும் இத்துறையின் முயற்சிகள் கீழ்க்கண்ட சாதனங்களைக் கொண்டு மேலும் தீவிரப்படுத்தப்படும்.

நாளேடுகள் /வார / மாத இதழ்களில் விளம்பரம்,

செயற்கைக்கோள் மூலம் தனியார் தொலைக்காட்சிகளில் சிறிய விளக்கப்படம் ஒளிபரப்பு, இரயில் நிலையம், விமான நிலையம், பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சி மூலம் சிறிய விளம்பரம் ஒளிபரப்பு,

முக்கியமான இடங்களில் தொடுதிரை கணினி நிறுவுதல்,

வலைத்தளம்,

மின்–அஞ்சல் ரசிகர் மன்றம்,

அனைத்து மாநிலங்களிலும் சுற்றுலா தகவல் மையங்களை படிப்படியாக திறந்து வைத்தல்,

பல மொழிகளில் உயர்ரக மடிப்பேடு வெளியிடுதல்,

35/16 மிமீ. விளம்பரப் படங்கள் திரை அரங்குகளில் திரையிடுதல்,

மின்னணு சந்தைப்படுத்துதல்,

டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய சுற்றுலாத் கையேடு பல மொழிகளில் வெளியிடுதல், பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுற்றுலா சங்கங்கள்,

சாலை காட்சிகள் (Road Shows)

சாலையோரம் உள்ள பூங்காக்கள் பராமரிப்பு மற்றும்

வானொலி / தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் வழங்குதல்.



2004 ஜூலை 31]

**ஆன்மீகச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் ஏராளமான ஆலயங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் மிகப்பெரிய ஆலயங்கள் கலைநுட்பத்துடனும், புனிதத் தன்மையுடனும், வரலாற்றுச் சிறப்புகளுடனும் நிகழ்வுகளை எடுத்துக்கூறும் வகையில் உள்ளன. காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை, கன்னியாகுமரி, இராமேசுவரம், தஞ்சாவூர், கும்பகோணம், திருவரங்கம் ஆகிய ஊர்களில் உள்ள ஆலயங்கள் இதற்கு சான்றாகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களின் கலைநுட்பங்கள் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கின்றன. ஆலய வளாகப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்போது, சுற்றுலாத் துறையும் இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு சுற்றுலாத் துறை, புனிதத் தலங்களில் தேவைப்படும் அடிப்படை வசதிகளை செய்து வருகிறது.

**மாதா கோயில்கள்**

வேளாங்கண்ணி (நாகப்பட்டினம் மாவட்டம்), மணப்பாடு (தூத்துக்குடி மாவட்டம்), சாந்தோம் (சென்னை) ஆகிய இடங்களில் உள்ள மாதா கோயில்களுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே, இங்கு வரும் பயணிகளின் நன்மையைக் கருத்தில்கொண்டு, அடிப்படை வசதிகளை மேற்கொள்ள இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

முதற்கட்டமாக 2001–2002 ஆம் ஆண்டு வேளாங்கண்ணியில் மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை கட்ட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஜூன் 2003–ல் பணிகள் முடிவுற்றன.

**ஏலாக்குறிச்சி:** வரலாற்று சிறப்புமிக்க அடைக்கலமாதா ஆலயம், திருமானூர் ஒன்றியம், அரியலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சியில் உள்ளது.

மராத்தியர்கள் 1682 முதல் 1711 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூரை ஆண்டார்கள். இந்த காலகட்டத்தில் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் மராத்திய ஆட்சியாளர்களுக்கும் சில பிரச்சனைகள் எழுந்ததை அடுத்து கிறிஸ்தவர்கள் ஏலாக்குறிச்சியில் தஞ்சம் புகுந்தார்கள். அச்சமயம் கடுமையான வறட்சி நிலவியது. வீரமாமுனிவர்

ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்தபொழுது, மேரி அன்னை அங்கு ஒரு தேவாலயத்தை எழுப்பும்படி வீரமாமுனிவருக்கு கட்டளை கொடுத்தார்கள். இதன் அடிப்படையில்தான் ஏலாக்குறிச்சியில் ஆலயம் கட்டப்பட்டது. தினமும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள்/பக்தர்கள் இங்கு வருகிறார்கள். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த சில அடிப்படை வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு இந்த ஆலயப் பகுதியில் ரூ.3.30 இலட்சத்தில் சில அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**இடைக்காட்டூர்:** இடைக்காட்டூர், சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரைக்கு அருகில் உள்ளது. இது மதுரையிலிருந்து 15 கி.மீ தூரத்தில் இராமேசுவரத்திற்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ளது. இவ்வூர், 1866 ஆம் ஆண்டு சுமார் 200 ரோமன் கத்தோலிக்க குடும்பங்களால் கட்டப்பட்ட மாதா கோயிலுக்கு பிரசித்தி பெற்றதாகும். இந்த மாதா கோயில் கட்டடக் கலையின் ஒரு அற்புதமாகும். இக்கோயில் இத்தாலிய ஆலயம் போன்று கோதிக் கலைவண்ணம் கொண்டதாகும். இடைக்காட்டூருக்கு தினந்தோறும் 600 முதல் 1000 வரை சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். விழா நாட்களில் இது 15000 வரையிலும் அதிகரிக்கின்றது. தற்பொழுது இங்கே குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் மட்டுமே உள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் சில அடிப்படை வசதிகள், அதாவது விளக்குகள், அணுகுசாலை, ஓய்வுக்கூடம், வாகனம் நிறுத்துமிடம், சிற்றுண்டிச்சாலை, பொருட்கள் பாதுகாப்பு அறை முதலியன செய்யப்படும்.

**மசூதிகள்**

தமிழ்நாட்டில், நாகூர் தர்கா (நாகப்பட்டினம் மாவட்டம்), ஆத்தங்கரை பள்ளிவாசல் (திருநெல்வேலி மாவட்டம்), ஏர்வாடி தர்கா (இராமநாதபுரம் மாவட்டம்) போன்றவை மிகவும் புகழ்பெற்றவைகளாகும். இந்த இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகைபுரிவதால் இங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. முதற்கட்டமாக 2000–2001 ஆம் ஆண்டில் நாகூரில் மத்திய–மாநில அரசு நிதியுதவியுடன் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை கட்ட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதற்கான பணிகள் நடப்பாண்டில் முடிவுறும். 2004–2005 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி தர்கா மற்றும் சீனியப்பா தர்காவில் அடிப்படை வசதிகள் செய்யப்படும்.



**வரலாற்று நினைவுச் சின்னங்கள்**

மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் மாநில அரசு தொல்பொருள் துறையின் பராமரிப்பில் பல புராதனச் சின்னங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டில் மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் எண்ணிக்கை | – | 241 |
| மாநில அரசின் தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நினைவுச் சின்னங்கள் எண்ணிக்கை | – | 83 |

இந்த இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகைபுரிவதால் அவர்களின் வசதிக்காக மத்திய/மாநில, தொல்பொருள் ஆய்வுத் துறைகளின் உதவியோடு அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை செய்து வருகிறது. இந்தப் பணிகள் 2004–2005 ஆம் ஆண்டும் தொடரும்.

**சுற்றுச்சூழல் சுற்றுலா**

சுற்றுச்சூழல் சுற்றுலா ஒரு புதிய செயல் கருத்தாகும். இது ஆறு, வனம் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிகளைக் காண அதிகம் விரும்புகின்றனர்.

**குருசடைத் தீவுகள்:** இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குருசடைத் தீவுகள் சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கான மற்றொரு முக்கியமான இடமாகும். குருசடைத் தீவுகளில் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக, கண்ணாடி அடித்தளம் கொண்ட படகுகள் வாங்க 2000–2001ஆம் ஆண்டு மைய அரசு ரூ.18.90 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த படகுகள் கொள்முதல் செய்யப்பட்டு 2003ஆம் ஆண்டு முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

**பிச்சாவரம்:** பிச்சாவரம் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் வங்காள விரிகுடா கடல் அருகில் அமையப்பெற்றுள்ளது. பிச்சாவரத்தில் உள்ள கடல் நீர் வெள்ளாறு மற்றும் கொள்ளிடத்துடன் இணைந்துள்ளது. 3541 ஏக்கர் பரப்பளவு

[2004 ஜூலை 31

கொண்ட பிச்சாவரத்தில் பல தீவுகள் உள்ளன. காட்டு ஆடுகள், நரி, கீரி (mongoose), காட்டுக்கோழி (black naped hen), நீர் கீரி (otter), ராஜாளி (king vulture), நீர்கோழி (water hen), நாரை, பாம்புகள் போன்ற வனவிலங்குகளை பிச்சாவரத்தில் காணலாம். பிச்சாவரத்தின் தனித்தன்மை அதன் 18 வகையான சதுப்புநிலக் காடுகளேயாகும். சதுப்புநிலக் காடுகள் கடற்கரையோரம் வளருகின்றன. பிச்சாரவரத்தில் ஆயிரக்கணக்கான ஓடைகள் உள்ளன. இதை உணர்த்தும் வகையில் "நாரையும் அறியா 4000 ஓடைகள்" என்ற பழமொழி ஒன்றும் உள்ளது.

பிச்சாரவரத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில் 6 குடில்கள், பலர் தங்கும் விடுதி (dormitory), ஒரு சிற்றுண்டியகம் மற்றும் படகு இல்லம் முதலியன உள்ளன.

1999–2000 ஆம் ஆண்டு பிச்சாவரத்தில் ரூ..55.55 இலட்சம் செலவில் மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் படகு இல்லம் மேம்பாடு, விளக்குகள், சிறுவர் விளையாட்டு சாதனம், சமையலறை உபகரணங்கள், குளிக்கும் வசதிகள், மின்னாக்கி, நீர் தெளிக்கும் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மிகப் பழுதடைந்த நிலையில் இருந்ததால் சிதம்பரம்–பிச்சாவரம் சாலை 2003–2004 ஆம் ஆண்டு ரூ.60.00 இலட்சம் செலவில் சீர்செய்யப்பட்டது. சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிச்சாவரம் (எம்.ஜி.ஆர். திட்டு, சின்னவாய்க்கால், பரங்கிப்பேட்டை) கோடியக்கரை மற்றும் முத்துப்பேட்டை மேம்பாட்டிற்காக ரூ.375.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டு, மைய அரசுக்கு நிதி ஒப்பளிப்பு கோரி ஜூலை 2004–ல் அனுப்பப்பட்டுள்ளது. ரூ.34.45 இலட்சம் மதிப்பீட்டில் கோடியக்கரையில் வனக்குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**கடற்கரைச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகியவை கடற்கரைச் சுற்றுலாவிற்கு புகழ்பெற்ற இடங்களாகும். கடற்கரைச் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக பிரபலமாகாத கடற்கரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி அதிக அளவில் பிரபலமாகாத கீழ்க்கண்ட கடற்கரைப் பகுதிகளின் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(1) கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் மற்றும் தெக்குறிச்சி கடற்கரை – ரூ.150.00 இலட்சம்



2004 ஜூலை 31]

(2) நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாசல் கடற்கரை – ரூ.7.45 இலட்சம்

இதற்கான பணிகள் 2004–2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**கலாச்சார விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள்**

பழமையும் செழிப்பும் மிக்க கலாச்சாரமும் பண்பாடும் தமிழ்நாட்டின் சிறப்பு அம்சங்களாகும். இதில் இசை, நடனம் மற்றும் நாடகம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக விளங்குகிறது. காலங்கள் பல சென்றாலும் தனக்கே உரிய பெருமையை இழக்காமல் உள்ள பரத நாட்டியத்தினைக் காணும் வாய்ப்பினை எந்த ஒரு சுற்றுலாப் பயணியும் விட்டுக்கொடுக்க முன்வரமாட்டார் என்பது அனுபவ உண்மையாகும். எனவே, தமிழக பண்பாட்டுச் சுற்றுலாவை வளர்க்கும் வகையில் சில விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. வெளிநாட்டுப் பயண நிறுவனங்கள், தங்கள் பயணத் திட்டங்களை இவ்விழாக்காலங்களுக்கு ஏற்றவாறு முன்கூட்டியே திட்டமிடுகின்றன.

**கோடை விழாக்கள்**

ஆண்டுதோறும் மே மற்றும் ஜூன் மாதங்களில் கோடை விழாக்கள் உதகமண்டலம், கொடைக்கானல், சுருளி அருவி, சிறுமலை, ஏலகிரி, கொல்லிமலை, ஏற்காடு, நாகப்பட்டினம் கடற்கரை, வால்பாறை, ஜவ்வாது மலை, பச்சைமலை, வெள்ளி கடற்கரை – கடலூர் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

முதல் விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவாக பாஞ்சாலங்குறிச்சியில் ஆண்டுதோறும் மே மாதத்தில் சிறப்பு விழா ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

குற்றாலம் மற்றும் பாலமதி ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க சாரல் விழா நடத்தப்பட்டு வருகிறது.

**நாட்டிய விழா**

(1) நாட்டிய விழா – மாமல்லபுரம் –டிசம்பர் / ஜனவரி

(2) நாட்டியாஞ்சலி விழா– சிதம்பரம்– பிப்ரவரி / மார்ச்

**பொருட்காட்சி மற்றும் கண்காட்சிகள்**

1. இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி – தீவுத் திடல், சென்னை – டிசம்பர் முதல் மார்ச் வரை
2. உலக சுற்றுலா தின விழா – அனைத்து சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் (வெளி மாநிலங்களில் இயங்குபவை உட்பட) – செப்டம்பர்
3. சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செய்தித் துறை நடத்தும் பொருட்காட்சிகளில் இத்துறை கலந்துகொண்டு சுற்றுலா பற்றிய விவரங்களை அளிக்கிறது.

இது தவிர சிறப்பு விழாக்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (1) | சந்தனக்கூடு விழா | – ஏர்வாடி | – மார்ச் |
| (2) | சித்திரை முழு நிலவு விழா | – பூம்புகார் மற்றும் மதுரை | – ஏப்ரல்/மே |
| (3) | தேர்த் திருவிழா | – திருவாரூர் | – மே |
| (4) | சித்திரை விசு விழா | – திருநெல்வேலி | – மே |
| (5) | ஆடிப்பூரம் | – மேல்மருவத்தூர் | – ஜூலை |
| 6) | ஆடிப்பெருக்கு மற்றும் ஒகேனக்கல் | – பவானி கூடுதுறை | – ஜூலை/ ஆகஸ்ட் |
| (7) | வேளாங்கண்ணி மாதா திருவிழா | – வேளாங்கண்ணி | – ஆகஸ்ட்/ செப்டம்பர் |
| (8) | கந்தூரி விழா | – நாகூர் | – ஆகஸ்ட்/ செப்டம்பர் |
| (9) | சதய விழா | – தஞ்சாவூர் | – அக்டோபர்/ நவம்பர் |



**அறுவடைத் திருவிழாக்கள்**

| | | | |
|---|---|---|---|
| (1) | பொங்கல் | – அனைத்து சுற்றுலாத் தலங்களில் | – ஜனவரி |
| (2) | தேயிலை (ம) சுற்றுலா | – உதகமண்டலம் / குன்னூர் | – ஜனவரி |
| (3) | மாங்கனி விழா | – கிருட்டிணகிரி | – ஜூன் |

**தேசிய பூங்காக்கள் / வனவிலங்கு சரணாலயங்கள்**

கீழ்க்கண்ட தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வனத் துறையுடன் இணைந்து கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன:—

**தேசிய பூங்காக்கள் அமைந்துள்ள இடங்கள்**

| | |
|---|---|
| 1. முதுமலை | – நீலகிரி மாவட்டம் |
| 2. முக்குறுத்தி | – நீலகிரி மாவட்டம் |
| 3. இந்திராகாந்தி தேசிய பூங்கா | – கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4. கிண்டி | – சென்னை மாவட்டம் |
| 5. மன்னார் வளைகுடா | – இராமநாதபுரம் மாவட்டம் |

**வனவிலங்கு சரணாலயங்கள் அமைந்துள்ள இடங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முதுமலை | – | நீலகிரி மாவட்டம் |
| 2. | இந்திராகாந்தி தேசிய பூங்கா | – | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. | முண்டந்துறை | – | திருநெல்வேலி மாவட்டம் |
| 4. | களக்காடு | – | திருநெல்வேலி மாவட்டம் |
| 5. | ஸ்ரீவில்லிப்புத்தூர் | – | விருதுநகர் மாவட்டம் |

[2004 ஜூலை 31

6. கோடியக்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

7. வல்லநாடு – தூத்துக்குடி மாவட்டம்

8. கன்னியாகுமரி – கன்னியாகுமரி மாவட்டம்

**பறவைகள் சரணாலயம்**

தமிழ்நாட்டில் 12 பறவைகள் சரணாலயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. வேடந்தாங்கல் – காஞ்சிபுரம் மாவட்டம்
2. கரிகிளி – காஞ்சிபுரம் மாவட்டம்
3. பழவேற்காடு – திருவள்ளூர் மாவட்டம்
4. வேட்டங்குடி – சிவகங்கை மாவட்டம்
5. கஞ்சாங்குளம் – இராமநாதபுரம் மாவட்டம்
6. சித்திரங்குடி – இராமநாதபுரம் மாவட்டம்
7. மேலசெல்வனூர் / கீழசெல்வனூர் – இராமநாதபுரம் மாவட்டம்
8. உதய மார்தாண்டபுரம் – திருவாரூர் மாவட்டம்
9. வடூர் – நாகப்பட்டினம் மாவட்டம்
10. கூந்தன்குளம் – திருநெல்வேலி மாவட்டம்
11. கரைவெட்டி – பெரம்பலூர் மாவட்டம்
12. வெள்ளோடு – ஈரோடு மாவட்டம்

இந்த பறவைகள் சரணாலயத்திற்குப் பருவகாலங்களில் பல்வேறு நாடுகளிலிருந்து பல வகையான பறவைகள் வருகின்றன. அவற்றைக் கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதால் அங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இத்துறை உத்தேசித்துள்ளது.



2004 ஜூலை 31]

**பாரம்பரியச் சுற்றுலா**

மத்திய அரசு கீழ்க்கண்ட இடங்களை சுற்றுலாத் தலங்களாகவும் புனிதத் தலங்களாகவும் அறிவித்துள்ளது.

| சுற்றுலாத் தலம் | புனிதத் தலம் |
|---|---|
| கன்னியாகுமரி | மதுரை |
| மதுரை | நாகப்பட்டினம் |
| மாமல்லபுரம் | நாகூர் |
| உதகமண்டலம் | பழனி |
| இராமேசுவரம் | இராமேசுவரம் |
| வேளாங்கண்ணி | தஞ்சாவூர் |
| தஞ்சாவூர் | |
| திருச்சிராப்பள்ளி | |
| தரங்கம்பாடி | |
| திருவண்ணாமலை | |

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி தமிழ்நாட்டில் உள்ள கீழ்க்கண்ட 38 பாரம்பரிய நகரங்களையும் பாதுகாக்க, நகர மற்றும் ஊரமைப்புத் துறையுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1993-1994 ஆம் ஆண்டில் இந்நகரங்கள் பாரம்பரியமிக்க நகரங்கள் என அறிவிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1) காஞ்சிபுரம் | 11) மதுரை | 21) நாகூர் | 31) மருதூர் |
| 2) சிதம்பரம் | 12) பழனி | 22) வேளாங்கண்ணி | 32) குறிஞ்சிப்பாடி |
| 3) இராமேசுவரம் | 13) திருச்செந்தூர் | 23) குற்றாலம் | 33) திருமயம் |
| 4) ஸ்ரீரங்கம் | 14) திருத்தணி | 24) ஸ்ரீபெரும்புதூர் | 34) சித்தன்ன வாசல் |
| 5) மாமல்லபுரம் | 15) கன்னியாகுமரி | 25) திருநெல்வேலி | 35) ஆவுடையார் கோவில் |
| 6) திருவில்லிப் புத்தூர் | 16) திருவண்ணா மலை | 26) திருச்செங்கோடு | 36) பத்மநாபபுரம் |
| 7) தஞ்சாவூர் | 17) செஞ்சி | 27) காரைக்குடி | 37) கொளச்சல் |
| 8) கும்பகோணம் | 18) செட்டிநாடு | 28) பேரூர் | 38) மரக்காணம் |
| 9) கங்கைகொண்ட சோழபுரம் | 19) வாலிநோக்கம் | 29) பவானி | |
| 10) பூம்புகார் | 20) தரங்கம்பாடி | 30) பிச்சாவரம் | |

இதில் கீழ்க்கண்ட 16 நகரங்களின் வளர்ச்சிக்காக 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுகளில் தலா ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| சிதம்பரம் | பூம்புகார் |
| பழநி | காரைக்குடி |
| செஞ்சி | இராமேசுவரம் |
| பேரூர் | கொளச்சல் |
| நாகூர் | வேளாங்கண்ணி |
| கங்கைகொண்ட சோழபுரம் | திருச்செந்தூர் |
| திருத்தணி | ஸ்ரீபெரும்புதூர் |
| திருச்செங்கோடு | சித்தன்னவாசல் |

**தரங்கம்பாடி.**—இந்த புராதன நகரம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடி தாலுக்காவில் உள்ளது. இது கிழக்குக் கடற்கரைச் சாலையில் சென்னையிலிருந்து 296 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 1620 ஆம் ஆண்டு தஞ்சாவூர், விஜயரகுநாத நாயக் ராஜாவின் ஆட்சியின்கீழ் இருந்து வந்தது. 5–5–1620 அன்று அவர் கிறிஸ்டியன் IV என்ற டென்மார்க் ராஜாவிற்கு தரங்கம்பாடியில் ஒரு வர்த்தக மையம் அமைக்க அனுமதி வழங்கினார். டேனிஷ் ஆட்சி இந்தியாவில் இதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குபின் தரங்கம்பாடியில் பல கட்டடங்கள் எழும்பின. தரங்கம்பாடியில் உள்ள முக்கியமான சுற்றுலாத்தலங்கள் பின்வருமாறு:

(அ) அருள்மிகு மாசிலாமணிநாதர் ஆலயம் – இந்த ஆலயம் 1305 ஆம் ஆண்டு குலசேகர பாண்டிய மன்னரால் கட்டப்பட்டது. இன்று இந்த ஆலயம் சிதிலமடைந்து காணப்படுகிறது. சுற்றுலாத் துறை, அருள்மிகு மாசிலாமணிநாதர் ஆலயத்தை எவ்வாறு சீரமைக்கலாம் என்பது குறித்து இந்து அறநிலையத் துறை மற்றும் தொல்பொருள் ஆய்வுத் துறையுடன் ஆலோசித்து வருகிறது.

(ஆ) டேனிஷ் கோட்டை – இது 1620 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்பொழுது இக்கோட்டை மாநில அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோட்டையில் ஒரு அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது.



(இ) சியோன் ஆலயம் – இந்த ஆலயம் 1701 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 1839 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. தற்பொழுது இந்த ஆலயம் நல்ல நிலையில் உள்ளது.

(ஈ) ஆளுநர் மாளிகை – 1784 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த மாளிகை சிதிலமடைந்து காணப்படுகிறது. இந்த ஆளுநர் மாளிகையை தனியார் பங்கேற்புடன் புதுப்பித்து, அதனை பாரம்பரிய ஓட்டலாக நடத்த சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

(உ) நுழைவாயில் – 1792 ஆம் ஆண்டு தரங்கம்பாடி நகரத்திற்குள் நுழையும் இடத்தில் இது கட்டப்பட்டுள்ளது.

(ஊ) ஓசோன் மிகுதியான கடற்கரை – சுத்தமான தரங்கம்பாடி கடற்கரை ஓசோன் மிகுதியாக உள்ள கடற்கரையாக கண்டறியப்பட்டுள்ளது. உடலுக்கு இடையூறு விளைவிக்கும் அல்ட்ரா வயலட் கதிர்கள் சுற்றுச்சூழலை பாதிக்காமலிருக்கும் வகையில் ஓசோன் செயல்படுகிறது. எனவே, உடல்நலத்திற்கு இது புத்துணர்ச்சியை உண்டாக்குகிறது. இயற்கை ஓசோன் அளவு உலகிலேயே இரண்டாவதாக இங்குதான் மிக அதிகமாக காணப்படுகிறது. (முதல் இடம் சுவிஸ் நாட்டில் ஒரு பகுதியில் உள்ளது)

(எ) சீகன்பால்கு (Barthalomeus Ziegenbalg), புளூட்சோ (Plutschau) இருவர்களும் 9–7–1706 ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் வந்திறங்கி தமிழுக்கு ஆற்றிய தொண்டு வியப்புக்குரியது. 1712 ஆம் ஆண்டு முதன்முதலாக தமிழ் அச்சு இயந்திரத்தை தரங்கம்பாடியில் சீகன்பால்கு நிறுவினார். அவர் பரிசுத்த வேதாகமத்தை (புதிய ஏற்பாடு) முதன் முறையாக தமிழில் மொழிபெயர்த்து அதை 1715 ஆம் ஆண்டு தமிழில் அச்சடித்தார்.

(ஏ) சுற்றுலாத் துறை, மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் (1994–95) தரங்கம்பாடியில் ரூ.34.49 இலட்சம் செலவில் ஒரு சுற்றுலா தகவல் மையம் அமைத்துள்ளது. இது 2000 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

**நகர மற்றும் ஊரமைப்புத் துறை நிதியிலிருந்து சில சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு**

2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட இடங்கள் நகர மற்றும் ஊரமைப்புத் துறை வழங்கும் நிதியிலிருந்து மேம்படுத்தப்படும்:—

| | |
|---|---|
| திருவரங்கம் | ரூ. 50.00 இலட்சம் |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் | ரூ. 50.00 இலட்சம் |
| பிச்சாவரம் | ரூ. 50.00 இலட்சம் |
| பவானி | ரூ. 50.00 இலட்சம் |
| நவதிருப்பதிகள் ஆலய பகுதி | ரூ. 50.00 இலட்சம் |
| ஸ்ரீமுஷ்ணம் மற்றும் திருக்கோவிலூர் | ரூ. 50.00 இலட்சம் |
| ஆவுடையார்கோவில் | ரூ. 25.00 இலட்சம் |
| இடைக்காட்டூர் | ரூ. 25.00 இலட்சம் |

இது தவிர செட்டிநாடு மற்றும் பழவேற்காடு பகுதிகள் 2004–2005 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை நிதியிலிருந்து மேம்படுத்தப்படும்.

**(VIII) 2004–2005 ஆம் ஆண்டின் இதர முயற்சிகள்**

**(1) ஒலி–ஒளிக் காட்சிகள்**

**(அ) திருமலை மன்னர் அரண்மனை, மதுரை ஒலி–ஒளிக் காட்சி**

1981 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி திருமலை மன்னர் அரண்மனையில் ஒலி–ஒளிக் காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. தினமும் இரண்டு காட்சிகள் ஒன்று ஆங்கிலத்திலும், மற்றொன்று தமிழிலும் நடைபெற்று வருகின்றன. நுழைவுக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு சாதாரண வகுப்பிற்கு ரூ. 5/–ம், சிறப்பு வகுப்பிற்கு ரூ. 10/–ம் வசூலிக்கப்படுகிறது. கடந்த 23 ஆண்டுகளாக இந்த ஒலி–ஒளிக் காட்சியின் இயந்திரங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருவதால் அவை மிகவும் வலுவிழந்து பழமையாகிவிட்டன. எனவே இந்த அமைப்பை நவீனப்படுத்த தமிழ்நாடு அரசு அனுப்பிய கருத்துருவை ஏற்றுக்கொண்டு மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. திட்டத்தின்



மதிப்பீடு ரூ.96.18 இலட்சமாகும் (மத்திய அரசின் பங்கு ரூ.54.65 இலட்சம் + மாநில அரசின் பங்கு ரூ. 41.53 இலட்சம்). இதற்கான பணிகளை இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2004–2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும்.

**(ஆ) விவேகானந்தர் நினைவுப் பாறை, கன்னியாகுமரியில் ஒலி–ஒளிக் காட்சி**

கன்னியாகுமரி இந்திய நாட்டின் நிலப்பகுதியின் முடிவாக உள்ளது. முக்கடல்கள் ஒன்றாக சேரும் இந்த இடம் தமிழ்நாட்டில் உள்ள சிறந்த சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். எனவே, கன்னியாகுமரியில் ரூ.225.00 இலட்சம் செலவில் ஒலி–ஒளிக் காட்சி ஏற்படுத்த மத்திய அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இதற்கான பணிகள் 2004–2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**(இ) மாமல்லபுரத்தில் ஒலி–ஒளிக் காட்சி**

மாமல்லபுரம் தமிழ்நாட்டில் உள்ள இரண்டு உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாகும். (மற்றொன்று பிரகதீஸ்வரர் ஆலயம், தஞ்சாவூர்). மத்திய அரசு ஒருங்கிணைந்த மாமல்லபுரம் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தை 2002 ஆம் ஆண்டு முதல் சுமார் ரூ. 19.00 கோடி செலவில் மேற்கொண்டுள்ளது. மாமல்லபுரத்திற்கு 2003 ஆம் ஆண்டில் ஒன்பது இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர். எனவே, மாமல்லபுரத்தில் ஒலி–ஒளிக் காட்சி அமைத்தால் அது மிகுந்த வரவேற்பைப் பெறும். மத்திய அரசு சுற்றுலாத் துறையை இத்திட்டத்திற்காக ரூ. 235 இலட்சம் ஒப்பளிப்பு செய்யக் கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(2) வெள்ள ஒளி விளக்கு**

**(அ) தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் வெள்ள ஒளி விளக்கு**

தமிழ்நாட்டில் உள்ள இரண்டு உலக பாரம்பரிய சின்னங்களில் தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயம் ஒன்றாகும். (மற்றொன்று மாமல்லபுரம் ஆகும்) தஞ்சாவூர் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. இவ்வாலயம் இராச இராச சோழர் – 1 அவர்களால் கட்டப்பட்டது. 14 அடுக்கு கொண்ட பிரமிட் வடிவில் வடிவமைக்கப்பட்ட விமானம் 64.8 மீட்டர் உயரம் கொண்டதாகும். அதற்கு மேல் 81.3 டன் எடை

கொண்ட கிரானைட் கல்லில் செதுக்கப்பட்ட கும்மட்டம் உள்ளது. சுமார் 4,000 சுற்றுலாப் பயணிகள் / பக்தர்கள் இந்த ஆலயத்திற்கு நாள்தோறும் வருகின்றனர். எனவே ஆலய பகுதியில் / வாகனம் நிறுத்துமிடத்தில் வெள்ள ஒளி விளக்குகள் பொருத்தவும், பழுதடைந்து போன மின் விளக்குகள் / உபகரணங்களை மாற்றவும் மத்திய அரசு ரூ. 16.50 இலட்சம் 2002–2003 ஆம் ஆண்டு வழங்கியுள்ளது. இதற்கான பணிகளை மாநில பொதுப் பணித் துறை விரைவில் துவங்கும்.

**(ஆ) தாராசுரத்தில் உள்ள அருள்மிகு அயிராதீஸ்வரர் ஆலய வளாகத்தில் வெள்ள ஒளி விளக்கு**

யுனெஸ்கோ (UNESCO) என்ற அமைப்பு தாராசுரம் மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்தை உலக பாரம்பரிய சின்னங்களாக அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாராசுரத்திற்கு ஒரு அகில உலக அமைப்பு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதால், சுற்றுலாத் துறையும் அதனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தாராசுரம் சோழர் காலத்தின் ஆலயத்திற்கு புகழ்பெற்றதாகும். இது தஞ்சாவூரிலிருந்து 40 கி.மீ. தொலைவிலும், கும்பகோணம் நகருக்கு மேற்கே 5 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

அருள்மிகு அயிராதீஸ்வரர் ஆலயம் இரண்டாம் இராச இராச சோழர் அவர்களால் 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

இந்த ஆலயக் கட்டடம் 24 மீட்டர் x 63 மீட்டர் என்ற அளவில் உள்ள அஸ்திவாரத்திற்கு மேல் கட்டப்பட்டுள்ளது. சுமார் 1500 சுற்றுலாப் பயணிகள் / பக்தர்கள் தினமும் இவ்வாலயத்திற்கு வருகை புரிகின்றனர். மத்திய அரசு இந்த ஆலயத்தில் வெள்ள ஒளி விளக்கு பொருத்த பிப்ரவரி 2004–ல் ரூ. 24.05 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிவன் ஆலயம், அம்மன் சந்நிதி மற்றும் பூங்காக்களில் விளக்குகள் பொருத்தப்படும். இதற்கான பணிகள் விரைவில் துவங்கும்.

**(3) மருத்துவ சுற்றுலா**

மருத்துவ சுற்றுலா என்பது இன்று உலகம் முழுவதும் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு, குழந்தை நலம் காத்தல், யோகா, ரீகி ஆயுர்வேதம், அழகு பெற அறுவை சிகிச்சை, எடை குறைப்பு போன்ற மருத்துவ பிரிவுகளில் மிகச் சிறந்த வசதிகள் உள்ளன. இந்த மருத்துவ வசதிகள், தமிழர்களின் பாரம்பரிய விருந்தோம்பல், மிக நியாயமான மருத்துவ செலவுகள்





போன்றவற்றுடன் இணைவதால் தமிழ்நாடு இன்று தேசிய மற்றும் பன்னாட்டு மருத்துவ வரைபடங்களில் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஏற்கெனவே இந்தியாவில் பிற மாநிலங்களிலிருந்தும் அண்டை நாடுகளிலிருந்தும் அதிகமான நோயாளிகள் வருகிறார்கள். அவர்களை கவனிக்க உறவினர்கள் வருகிறார்கள். நோயாளிகளும் அவர்களுக்கு துணையாக வருபவர்களும் சிகிச்சைக்குப் பின் சுற்றுலாப் பயணிகளாக மாறிவிடுகிறார்கள். இந்த ஒரு மாற்றத்தை சுற்றுலாத் துறை 2004–2005 ஆம் ஆண்டு அதிகமாக பயன்படுத்த விரும்புகிறது. சுற்றுலாத் துறையின் நடவடிக்கைகள் சென்னையை ஒரு அனைத்து வசதிகளும் கொண்ட உலக நலவாழ்வு மையமாக மாற்றுவதற்கு ஏதுவாக அமையும். இதன் முதல் கட்டமாக மத்திய அரசு மருத்துவ நுழைவிசைவு (Medical Visa) வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்தபடியாக பல வசதிகள் கொண்ட மருத்துவமனைகள், நட்சத்திர ஓட்டல்கள், தேசிய / பன்னாட்டு சுற்றுலாப் பயண முகவர்கள் முதலியோருடன் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**(4) விடுமுறை ஆலோசகர்**

சுற்றுலாத் துறையில் இன்று புதிதாக தோன்றியுள்ள சேவை "விடுமுறை ஆலோசகரின் சேவையாகும்". உயர் அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருக்கு தங்கள் சுற்றுலாப் பயணம் குறித்த தேவையான ஏற்பாடுகளை சிந்தித்து அதனை நிறைவேற்ற கால அவகாசம் இருப்பதில்லை. இந்தக் கட்டத்தில்தான் விடுமுறை ஆலோசகர்கள் நுழைகிறார்கள். சுற்றுலாப் பயண நாட்கள், இடங்கள் முடிவு செய்தல், இரயில் / விமானம்/ பேருந்து / ஓட்டலில் இடம் முன்பதிவு செய்தல், வழிகாட்டிகள் அமர்த்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்தல், வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்தல், பொழுதுபோக்கு மையங்கள் / உடற்பயிற்சி மையங்களுக்கு செல்லுதல் போன்ற சேவைகளை விடுமுறை ஆலோசகர் செய்து கொடுப்பதால், விடுமுறை ஆலோசகர் பெயருக்குக் காசோலை வழங்குவது மட்டுமே சுற்றுலாப் பயணிகளின் வேலையாகும். சுருங்கக் கூறினால், விடுமுறை ஆலோசகர் என்பவர் பயண முகவர், சுற்றுலா ஊர்திகள் இயக்குபவர், வழிகாட்டி, தனி உதவியாளர் போன்றவர்களின் பணிகளை தனியாக செய்வார். இந்த புதிய முறையினை சுற்றுலாத் துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பெரிய அளவில் கையாளும்.

[2004 ஜூலை 31

**(5) மண்டல சுற்றுலா அமைப்பு**

சுற்றுலாத் துறை, தென்னிந்தியா, இலங்கை மற்றும் மாலத் தீவுகள் ஆகியவற்றை இணைத்து ஒரு மண்டல சுற்றுலா அமைப்பு ஏற்படுத்துவது குறித்து ஆராயும். இதற்காக, கேரளம், கர்நாடகம் மற்றும் ஆந்திர பிரதேசம் மாநில சுற்றுலாத் துறைகளுடன் ஆலோசனை நடத்தப்படும். இலங்கை விமான நிறுவனம், சென்னைக்கும் கொழும்புவிற்கும் இடையே மூன்று கூடுதல் விமான சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை அடுத்து இந்த இரு நகரங்களுக்குமிடையே ஒரு வாரத்தில் 18 விமான சேவைகள் இயக்கப்படுகின்றன. பல இந்திய தனியார் நிறுவனங்கள் சென்னைக்கும், கொழும்புவுக்கும் இடையே விமான சேவையை ஆரம்பித்துள்ளன. இந்த மண்டல சுற்றுலா அமைப்பானது சென்னைக்கு அதிக பயனளிக்கும். ஏனென்றால் சென்னை, தென்னிந்தியாவிற்கு ஒரு நுழைவு வாயிலாக திகழ்கிறது. சென்னையிலிருந்து தென்னிந்தியாவில் உள்ள பிற சுற்றுலாத் தலங்களுக்கு செல்ல நல்ல சாலை வசதி உள்ளது. மேலும் தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் நல்ல கலாச்சார உறவுகள் உள்ளன. இவை மண்டல சுற்றுலா அமைப்பு ஏற்படுத்துவதற்கு உகந்தவையாகும்.

**(6) பறவைகள் பூங்கா**

சுற்றுலாப் பயணிகள், பறவைகளை ரசிப்பதில் ஆர்வம் உடையவர்கள். தமிழ்நாட்டில் பத்துக்கும் மேற்பட்ட பறவைகள் சரணாலயங்கள் உள்ளதால் இவை இத்தகைய பறவை பிரியர்களுக்கு நல்ல பொழுதுபோக்கு இடமாக உள்ளது. சுற்றுலாத் துறை சுற்றுலாப் பயணிகளுக்கு பறவைகளைப் பற்றி அறிய வசதியை ஏற்படுத்த விரும்புகிறது. இதனால் பறவைகள் சரணாலயம் அருகில் பறவைகள் பூங்கா ஏற்படுத்தப்படும். முதற்கட்டமாக இராமேசுவரத்தில் சுற்றுச் சூழல் மற்றும் பறவைகள் பூங்கா ஒன்று அமைக்கப்படும். ஏனென்றால் அருகில் உள்ள மன்னார் வளைகுடாவில் பறவைகள் மிகுந்து காணப்படுகின்றன. இதற்காக மத்திய அரசு ரூ.50.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்த பறவைகள் பூங்காவில் பறவைகள் குறித்து அனைத்து விவரங்களும், ஒலி-ஒளிக் காட்சிகள் மூலம் விளக்கப்படும். இதில் குடிநீர் வசதி, கழிப்பறை, சிற்றுண்டி, ஓய்வறை, சிறுவர் விளையாட்டுப் பூங்கா முதலிய வசதிகளும் செய்யப்படும். இதற்கான பணிகள் 2004-2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.



2004 ஜூலை 31]

**(7) தனியார்மயமாக்குதல்**

அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப சுற்றுலாத் துறையும் 2001 ஆம் ஆண்டு தனியார் முதலீட்டார்களை மிகப்பெரிய சுற்றுலாத் திட்டங்களை செயல்படுத்துவதில் பங்கேற்க ஊக்கமளிக்க வேண்டும் என்று முடிவு செய்தது. தமிழ்நாட்டில் கல்வி அறிவுள்ளவர்கள் 73.5 சதவிகிதம் ஆக உள்ளது. இதுதவிர, தமிழ்நாட்டில் நன்கு வளர்ச்சி அடைந்த உற்பத்தித் துறை, தடங்கலின்றி கிடைக்கும் மின்சாரம், மூன்று பெரிய துறைமுகங்கள், பன்னாட்டு விமான சேவை உடைய மூன்று விமான நிலையங்கள், நல்ல திறமைவாய்ந்த பணியாளர்கள், நம்பிக்கையான சர்வதேச புள்ளிவிவர இணைப்புகள் வழங்கும் (VSNL) சேவை போன்றவை இருப்பதால் தமிழ்நாடு தனியார் முதலீட்டார்களின் சொர்க்கம் எனக் கருதப்படுகிறது. தனியார் முதலீட்டார்களை கம்பிவழிப் பயணம், ஒலி-ஒளிக் காட்சி, படகு சவாரி, ஆகாய / நீர் விளையாட்டுப் பூங்கா, உடற்பயிற்சி மையம் போன்ற பிரம்மாண்டமான சுற்றுலாத் திட்டங்களை செயல்படுத்துவதில் ஈடுபடுத்திக்கொள்ள சுற்றுலாத் துறை விரும்புகிறது. இத்திட்டங்களை செயலாக்குவதில் சுற்றுலாத் துறையின் பங்கு தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிப்பது மட்டுமே ஆகும்.

**(8) தகவல் தொழில்நுட்பம்**

சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்களும், 26 சுற்றுலாத் தகவல் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதில் கீழ்க்கண்ட அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டு உள்ளது.

| சுற்றுலா அலுவலகம் | சுற்றுலாத் தகவல் மையம் |
|---|---|
| கன்னியாகுமரி, திருநெல்வேலி | திருவனந்தபுரம் |
| இராமேசுவரம், தருமபுரி | பெங்களூர் |
| கொடைக்கானல், மதுரை | ஐதராபாத் |
| உதகமண்டலம், சேலம், திருச்சி, | |
| தஞ்சாவூர், பூம்புகார், சிதம்பரம், | |
| மாமல்லபுரம், சென்னை, | |
| கோவா, மும்பை, புதுதில்லி, | |
| ஆக்ரா, ஜெய்ப்பூர், கொல்கத்தா | |

[2004 ஜூலை 31

2004–2005 ஆம் ஆண்டு மேற்கொண்டு 6 சுற்றுலா அலுவலகங்கள் கணினி மயமாக்கியதை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (சுற்றுலா ஆணையரகம் மற்றும் சென்னை, மாமல்லபுரம், திருச்சி, உதகமண்டலம், கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள்)

அனைத்து அலுவலகங்களிலும் கணினி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலாத் தகவல் மையங்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பிரிவுகள் ஒன்றோடொன்று வான் இணைப்பு (WAN Connectivity) மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் சரியான தகவல்களைச் சேகரித்து வைத்து, தேவைப்படும்பொழுது துல்லியமாக பெற்றுக்கொள்ள இயலும்.

**9) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல்**

சுற்றுலாத் துறையின் ஒரு பெரிய நன்மை என்னவென்றால் அது அதிக அன்னியச் செலாவணியை ஈட்ட வல்லதாகும். சுற்றுலாத் துறையில் அதிகம் செலவழிக்கக் கூடியவர்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆவார்கள். இவர்கள், மாநில அரசுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டுவதில் கணிசமான அளவு உதவிபுரிகின்றனர். 2003–2004 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்றது.

உலக சுற்றுலாச் சந்தை, லண்டன்

இந்திய பொருட்காட்சி, கோலாலம்பூர்

அகில உலக பயண சந்தை (International Trade Bourse), பெர்லின்

சுற்றுலாத் துறை வெளிநாட்டிலிருந்து மேலும் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்கும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை முகவர்கள், லண்டன், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ்நாட்டில் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்தி வருகிறார்கள். 2004–2005 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ் மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இன மரபு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் அதிக முக்கியத்துவம் செலுத்தும்.



2004 ஜூலை 31]

**(IX) உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் பயிற்சி**

சுற்றுலா, விருந்தோம்பலை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, வரவேற்பு, சமையல், விருந்தோம்பல், அரங்கு உள் அலங்காரம் போன்றவற்றில் தொழில் திறமை தேவைப்படுகிறது. இப்பணிகளில் பயிற்சி அளிக்க தமிழ்நாட்டில் இரண்டு அரசு நிறுவனங்கள் உள்ளன.

**(அ) மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பப் பயிலகம், திருச்சிராப்பள்ளி**

1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தை புதுதில்லி, அனைத்திந்திய தொழில்நுட்ப பயிற்சிக்குழு அங்கீகரித்துள்ளது. இது தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு 1986 வரை மைய அரசு நிதி உதவி அளித்தது. அதன் பின்னர் தமிழ்நாடு அரசு இப்பயிலகத்திற்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகிறது. மூன்றாண்டு பட்டப் படிப்பு மற்றும் ஓராண்டு சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஓட்டல் வரவேற்பு, கணக்கு வைப்பு முறை, இல்லம் பராமரித்தல், சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பரிமாறுதல், ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டங்களைத் தயாரித்தல், உணவு உற்பத்தி செய்யும் முறைகள் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு பயிற்சிகளுக்கு சுமார் 400 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சி பெற்ற மாணவர்கள் வளாக நேர்க்காணல் முறை மூலம் வேலைவாய்ப்பும் பெறுகின்றனர்.

**(ஆ) உணவாக்கத் தொழில்நுட்பம், உணவக மேலாண்மை மற்றும் சத்துணவுப் பயிலகம், தரமணி, சென்னை–113**

1963 ஆம் ஆண்டு மைய அரசு இந்நிறுவனத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசும் இந்நிறுவனத்திற்கு ஆதரவு அளித்து வருகிறது. மூலதனத்தை மத்திய அரசு சுற்றுலாத் துறை வழங்குகிறது. தொடர் செலவுகளை இந்நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் செயலர் இதன் ஆளுநர் குழுத் தலைவர் ஆவார். ஓட்டல் மேலாண்மை, உணவு தயாரிப்பு, பானங்கள் தயாரிப்பு போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது சுமார் 300 மாணவ, மாணவியர் பயிற்சி பெறுகின்றனர். மத்திய அரசு

இந்நிறுவனத்தில் கூடுதல் கட்டடம் கட்டவும், மேலும் சில வசதிகள் செய்யவும் ரூ.4.22 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்தப் பணிகள் 2004–2005 ஆம் ஆண்டில் முடிவு பெறும்.

### (X) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக சுற்றுலா தொடர்புடைய கட்டமைப்பு வசதிகளை வணிக அடிப்படையில் ஏற்படுத்தும் முக்கிய நோக்கத்திற்காக 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 5 அரசு விடுதிகள் மற்றும் 2 பேருந்துகளுடன் எளிமையான முறையில் செயல்படத் துவங்கியது. அந்த நாள் முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இன்று தென்னிந்தியாவில் மிக அதிகமான ஓட்டல்களை (மொத்தம் 55) சொந்தமாக கொண்டுள்ளது என்ற பெருமையை பெற்றுள்ளது. சுற்றுலாப் பேருந்துகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கீழ்கண்ட வசதிகளை செய்துள்ளது.

ஓட்டல்கள்,

இளைஞர் விடுதிகள்,

சிற்றுண்டிச் சாலைகள்,

படகு குழாம்கள்,

தொலைநோக்கு இல்லங்கள்,

ஏரிப் பூங்கா,

பெட்ரோல் நிலையம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இளைஞர் விடுதி நடத்தி வருகிறது. இங்கு குறைவாக செலவு செய்யக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்குக் குறைந்த செலவில் (சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் நேரங்களில் கூட) உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காட்டில் தங்கும் வசதி கிடைக்கின்றது.



### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் தனியார் மயமாக்குதல்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 30 ஓட்டல்கள் மற்றும் 7 சிற்றுண்டிச் சாலைகளை தனியாருக்கு குத்தகைக்கு விட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நாள் வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 12 ஓட்டல்கள் மற்றும் 4 சிற்றுண்டிச் சாலைகளை தனியாருக்கு குத்தகை அடிப்படையில் கொடுத்துள்ளது. மேலும், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூரில் (யூனிட்–II) உள்ள இரண்டு ஓட்டல்கள் 1994–95 ஆம் ஆண்டு நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்துப் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அரை நாள் முதல் 14 நாட்கள் வரை நீடிக்கக்கூடிய சுமார் 37 சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது. இந்தப் பயணத் திட்டங்கள் மூலம் அனைத்து தென் மாநிலங்கள் மற்றும் மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் ஒரிசா மாநிலங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கும் செல்லலாம். இது தவிர தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ் மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் குறிப்பான தேவைக்கேற்ப சிறப்புச் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அரை நாள் | – | சென்னை நகர சுற்றுலா |
| 2. | ஒரு நாள் | – | மாமல்லபுரம் சுற்றுலா |
| 3. | ஒரு நாள் | – | பாண்டிச்சேரி சுற்றுலா |
| 4. | ஒரு நாள் | – | திருப்பதி சுற்றுலா |
| 5. | ஒரு நாள் | – | திருவண்ணாமலை கிரிவலம் சுற்றுலா |
| 6. | ஒரு நாள் | – | சுருட்டப்பள்ளி சுற்றுலா |
| 7. | ஒரு நாள் | – | சக்தி சுற்றுலா (தேவியர் தரிசனம்) |
| 8. | ஒரு நாள் | – | திருமால் தரிசனம் சென்னையை சுற்றியுள்ள (ஒன்பது வைஷ்ணவ கோயில்கள்) |

[2004 ஜூலை 31

9. ஒரு நாள் – கொளவாய் ஏரி – வண்டலூர் உயிரியல் பூங்கா, கிஷ்கிந்தா சுற்றுலா

10. ஒரு நாள் – பொழுதுபோக்கு சுற்றுலா

11. மூன்று நாட்கள் – நவக்கிரக சுற்றுலா (ஒன்பது கிரகங்கள்)

12. மூன்று நாட்கள் – நவதிருப்பதிகள் (திருநெல்வேலி) சுற்றுலா

13. மூன்று நாட்கள் – பஞ்சபூத ஸ்தலங்கள் சுற்றுலா

14. மூன்று நாட்கள் – அறுபடை வீடு சுற்றுலா (முருகன் சுற்றுலா)

15. ஆறு நாட்கள் – தென்னிந்திய சுற்றுலா

16. ஏழு நாட்கள் – மூகாம்பிகை சுற்றுலா

17. ஏழு நாட்கள் – கோவா – மந்திராலயம் – புட்டபர்த்தி சுற்றுலா

18. ஏழு நாட்கள் – ஆந்திர சுற்றுலா

19. எட்டு நாட்கள் – கிழக்கு – மேற்கு கடற்கரை சுற்றுலா

20. எட்டு நாட்கள் – தமிழ்நாடு சுற்றுலா

21. பதினான்கு நாட்கள்– மும்பை – அஜந்தா – எல்லோரா சுற்றுலா

22. பதினான்கு நாட்கள் – தென்னிந்திய (Sunny South) சுற்றுலா

23. பதினான்கு நாட்கள் – பூரி – கயா – காசி அலகாபாத் சுற்றுலா

**சிறப்புச் சுற்றுலா**

24. ஊட்டி சுற்றுலா

25. கொடைக்கானல் சுற்றுலா

26. ஏற்காடு – ஒகேனக்கல் சுற்றுலா

27. மைசூர் சுற்றுலா



2004 ஜூலை 31]

28. ஏலகிரி சுற்றுலா

29. மூன்று நாள் – மூணார் சுற்றுலா

30. குற்றாலம் சுற்றுலா

31. ஒரு நாள் – திருத்தணி – காளஹஸ்தி – நல்லாத்தூர்–மாத்தூர் சுற்றுலா

32. ஒரு நாள் – தொண்டைநாட்டு திருப்பதிகள் சுற்றுலா

33. ஒரு நாள் – தென்னாங்கூர் – உத்திரமேரூர் – மதுராந்தகம் சுற்றுலா

34. ஒரு நாள் – வல்லக்கோட்டை – திருத்தணி சுற்றுலா

35. நான்கு நாட்கள் – சோழ நாட்டு திருப்பதிகள் சுற்றுலா

36. ஐந்து நாட்கள் – பாண்டியநாட்டு திருப்பதிகள் சுற்றுலா

37. ஐந்து நாட்கள் – ஹைதராபாத் – விஜயவாடா சுற்றுலா

**இரயில் மற்றும் சாலை சுற்றுலாப் பயணத்திட்டம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தை செப்டம்பர் 2002 ஆம் ஆண்டு துவங்கியது. வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இரயிலில் பயணச்சீட்டு வழங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்திய இரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலாக் கழகத்துடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பயணத் திட்டம் தற்பொழுது மும்பை, புதுதில்லி, கொல்கத்தா, அகமதாபாத், லக்னோ போன்ற நகரங்களிலிருந்து இயக்கப்படுகிறது. 2003–2004 ஆம் ஆண்டு 796 சுற்றுலாப் பயணிகள் (மும்பை, புதுதில்லி, கொல்கத்தா மற்றும் அகமதாபாத்திலிருந்து) இச்சேவையை பயன்படுத்தியுள்ளார்கள். இத்திட்டம் மூலம் மேற்கூறிய காலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைத்த வருமானம் ரூ.60.90 இலட்சமாகும். இத்திட்டத்தில் பங்குபெறும் சுற்றுலாப் பயணிகளுக்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ஒரு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு அங்கிருந்து அவர்கள் "10 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா"விற்காக நவீன பேருந்து மூலம் அழைத்துச்

செல்லப்படுகிறார்கள். சுற்றுலாப் பயணம் முடிவுற்ற பின்னர் சுற்றுலாப் பயணிகள் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் அன்பாக வழியனுப்பி வைக்கப்படுகிறார்கள். இந்த இரயில்–சாலை சுற்றுலாப் பயணத் திட்டம் சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்கு முதன்முறையாக வருகை தரும் முதிர்வயதுள்ள (Senior Citizen) சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இத்திட்டம் ஐதராபாத் மற்றும் ஜெய்ப்பூர் போன்ற நகரங்களுக்கு விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

**பொருட்காட்சிப் பிரிவு**

2003–2004 ஆம் ஆண்டு இப்பிரிவு மிக அதிகமாக ரூ. 82 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. பல செலவுகள் குறைக்கப்பட்டதால் அதிக இலாபம் கிடைக்கப்பெற்றது. பொருட்காட்சி நடைபெறாத நாட்களில் டாஜ் (Taj Exhibition) பொருட்காட்சி, ஐசிஇ (ICE) பொருட்காட்சி போன்ற பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. இதனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கணிசமான அளவு வருமானம் கிடைத்துள்ளது. தனியார் மூலம் பொருட்காட்சிகள் தொடர்ந்து நடைபெறும் வகையில் இத்தகைய பொருட்காட்சிகள் நடத்தும் நிறுவனங்களிடையே தீவுத் திடல் குறித்து விளம்பரம் செய்யப்படுகிறது.

**2003–2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

(1) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்கெனவே 12 ஓட்டல்கள் மற்றும் 4 சிற்றுண்டிச் சாலைகளை தனியார் வசம் குத்தகை அடிப்படையில் ஒப்படைத்துள்ளது. இது தவிர, அரசு ஒப்புதல் அளித்துள்ள மீதமுள்ள 18 ஓட்டல்கள் மற்றும் 3 சிற்றுண்டிச் சாலைகளையும் தனியாருக்கு குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குத்தகைக்கு விடப்பட்டதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு முன்னதாக ஏற்பட்ட நட்டங்கள் தவிர்க்கப்பட்டுவிட்டது. மேலும் குத்தகைக் கட்டணம் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு நல்ல வருவாய் கிடைத்துள்ளது. இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது நிதி நிலைமையை குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்படுத்தியுள்ளது.



(2) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 295 பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வு அளித்துள்ளது. இதற்குரிய செலவுத் தொகையான ரூ. 760 இலட்சத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது நிதியிலிருந்து மேற்கொண்டது. இதற்காக நிதி நிறுவனங்களிலிருந்து கடன் ஏதும் பெறவில்லை. இதனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு நிருவாகச் செலவில் ஆண்டுதோறும் ரூ.270 இலட்சம் செலவு தவிர்க்கப்பட்டுள்ளது.

(3) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சூரிய ஒளி (Solar System) மூலம் நீர் சூடாக்கும் கருவிகளை மாமல்லபுரம், ஓசூர், கிருட்டிணகிரி, காஞ்சிபுரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்களில் நிறுவியுள்ளது. இதனால் இந்த ஓட்டல்களில் மின் கட்டணம் கணிசமான அளவு குறையும்.

(4) சுற்றுலாப் பயணிகளின் தேவைக்காக அனைத்து ஓட்டல்களிலும் வாடகை அடிப்படையில் தொலைக்காட்சி பெட்டி வசதி செய்யப்பட்டுள்ளது.

(5) குளிர்சாதன வசதி அனைத்து பெரிய ஓட்டல்களிலும் செய்யப்பட்டுள்ளது.

(6) தேசிய விமான நிலையம் ஆணையத்தின் பணியாளர்களுக்கு கொடைக்கானலில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டலில் தங்கும் வசதி அளிக்க ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(7) சென்னை பெட்ரோலியம் கழக நிறுவனம் மற்றும் பல தனியார் நிறுவனங்களைச் சார்ந்த 2000 பணியாளர்களுக்கு சிறப்புச் சுற்றுலா பயணத் திட்டம் நடத்தப்பட்டது.

(8) கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள முதலியார்குப்பத்தில் மே 2003-ல் ஒரு புதிய படகு குழாம் துவக்கப்பட்டது.

(9) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் சுற்றுலா ஆணையரகத்திற்கு சென்னை வாலாசா சாலையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் இட ஒதுக்கீட்டை சிக்கனமாக ஒதுக்கியதன் மூலம் இந்த கட்டடத்தில் 4-வது

மாடியில் உள்ள இடம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.12.75 இலட்சம் வருவாய் கிடைக்கும்.

## 2004–2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்

(1) உதகமண்டலத்தில் ஒரு கூடுதல் படகு குழாம் விரைவில் திறந்து வைக்கப்படும். இதனால் ஏற்கெனவே உள்ள படகு குழாமில் உள்ள சுற்றுலாப் பயணிகள் கூட்டம் சற்று குறையும். படகு குழாம் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைக்கும் வருவாயும் கூடும்.

(2) உதகமண்டலம் அருகில் டி.ஆர். பஜார் பகுதியில் ஒரு புதிய படகு குழாம் அமைக்கப்பட உள்ளது. இது சுற்றுலாப் பயணிகளை வருங்காலங்களில் அதிக அளவில் ஈர்க்கும்.

(3) உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி மற்றும் ஏற்காட்டில் கம்பிவழிப் பயணம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு விரைவில் பணி ஆணை வழங்கப்பட உள்ளது. மேற்கூறிய அனைத்து இடங்களிலும் 24 மாதத்திற்குள் பணிகள் முடிவடையும். இந்த வசதிகள் தமிழ்நாட்டிற்கு அதிக அளவு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும். மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கணிசமான அளவு வருவாய் கிடைக்கும்.

(4) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலா பயணத் திட்டங்களுக்கு கணினி மூலம் முன்பதிவு செய்யும் (பணம் செலுத்தும் வசதியுடன்) திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2-7-2004 அன்று சென்னையில் துவக்கி வைத்தார்கள். இத்தகைய திட்டத்தை இந்தியாவிலேயே முதலாவது செயல்படுத்திய பெருமை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைச் சாரும். இந்த வலைத்தளத்தின் முகவரி http://www.ttdconline.com ஆகும். சுற்றுலாப் பயணிகள் தங்கள் இல்லங்களிலிருந்தே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாப் பயணத் திட்டங்களுக்கு முன்பதிவு செய்யலாம். இதற்கான கட்டணத்தை கடன் அட்டை



(Credit Card) மூலம் உடனடியாக செலுத்தலாம். அவ்வாறு செலுத்தியவுடன் முன்பதிவு அப்பொழுதே உறுதி செய்யப்படும். உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உடனடியாக முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிதி நிலைமை

2002– 2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மொத்த விற்பனை அளவுத் தொகை (Turnover) ரூ. 3527.66 இலட்சமாகும். 2003–2004–ல் விற்பனை அளவுத் தொகை ரூ.3953.90 இலட்சமாகும். இது முந்தைய ஆண்டைவிட (2002–2003) 12% அதிகமாகும். தணிக்கை முடிந்தவுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 2003–2004 ஆம் ஆண்டில் மிக அதிக அளவிற்கு ரூ.245.60 இலட்சம் நிகர இலாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.50.73 இலட்சம் மட்டுமே நிகர இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் கிடைக்கும் இலாபம் 2002–2003 ஆம் ஆண்டை விட 38.4% கூடுதலாகும். பல சிக்கன நடவடிக்கைகள், விருப்ப ஓய்வுத் திட்டம், இழப்பு ஏற்படும் ஓட்டல்களை தனியாருக்கு குத்தகைக்கு விடுதல், சீரிய சந்தை முறைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் அதிக இலாபம் பெற இயன்றது.

[2004 ஜூலை 31

# இணைப்பு XXIV

(136 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 31 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### முன்னுரை

நாட்டின் தொழில் அமைதியைக் காத்து சுமுகமான தொழில் உறவினை நிலைநாட்டுவதும், தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களது குறைபாடுகள் அனைத்தும் தொழிலாளர் நலத் துறையின் மூலம் தீர்வு காணப்படுவதும் தமிழக அரசின் முக்கியமான குறிக்கோள்களாகும். தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் தங்களது கூட்டு கடமையை உணர்ந்து வேலைநிறுத்தங்களற்ற ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும் தொழிலாளர் துறை பெரிதும் பாடுபட்டு வருகிறது. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வகம் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அமைப்பு ரீதியான தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு பணிகளை இரண்டு மத்திய அரசு நிறுவனங்களான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் ஆகியவை மேற்கொண்டு வருகின்றன. அமைப்பு சாரா தொழிலாளர்களை பொறுத்தவரை கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியமும், உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியமும் அவர்களது நலனை பாதுகாத்து வருகிறது. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் இந்த அமைப்புகளின் பயிற்சி தேவையை சந்தித்து வருகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையகம் இரு பிரிவுகளுக்கு தலைமைப் பொறுப்பு வகிக்கிறது. வேலைவாய்ப்புப் பிரிவு, பல்வேறு வேலைவாய்ப்பகங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பயிற்சிப் பிரிவு, தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் இவை போன்ற நிறுவனங்கள் மூலம் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மாநில குழந்தை தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நல சங்கம் மாநிலத்தில் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கும் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், வெளிநாடுகளில் பணிபுரிய விருப்பமுள்ள தொழிலாளர்களுக்கு பணியமர்த்தம் பெற உதவி புரிகிறது.



2004 ஜூலை 31]

2. மேற்கண்ட துறைகளின் செயற்பாடுகள் பின்வரும் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. 2004–2005 பகுதி–2 திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள் விவரம் வருமாறு:–

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | **தலைமைச் செயலகம் (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை)** தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் கணினி பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல் | 15.50 |
| 2. | ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்றை வாங்குதல் | 1.50 |
| 3. | **தொழிலாளர் நல ஆணையரகம்** நிகரி வாங்குவது உட்பட, கணினி மயமாக்குதலும் கணினி வழி நிருவாகமும் | 10.20 |
| 4. | கையால் இயக்கப்படும் 10 தராசுகளை கணினி வகையிலான தராசுகளாக மாற்றுதல் | 30.00 |
| 5. | எடைமேடைகளை சரி பார்ப்பதற்காக இயங்கும் வேகன் ஒன்றை வாங்குதல் | 7.90 |
| 6. | மாநிலத்திலுள்ள அலுவலர் குடியிருப்புகளை பழுதுபார்த்து சீரமைத்தல் | 10.93 |
| 7. | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (வேலைவாய்ப்பு பிரிவு)** வேலைவாய்ப்பு அலுவலகங்களிலுள்ள கணினி ஏற்பாட்டினை நிலை உயர்த்துதல் | 46.62 |
| 8. | வேலைவாய்ப்பு - பயிற்சி (வேலைவாய்ப்பு பிரிவு) ஆணையர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக கணினிகள் வாங்குதல் | 1.70 |
| 9. | உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு என்று கணினிகள் வாங்குதல் | 0.85 |

| | | |
|---|---|---|
| 10. | வேலைவாய்ப்பு அலுவலகங்களை அத்துறையின் இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கும் வகையில் பெரிய அளவிலான கணினி கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துதல் | 5.00 |
| | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சிப் பிரிவு)** | |
| 11. | திண்டுக்கல் அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தற்போது இருக்கும் தொழிற்பாட திட்டத்தை மாற்றி அதற்குப் பதிலாக தகவல் தொழில்நுட்பம், மின்னணு ஏற்பாட்டு பராமரிப்பு மற்றும் துணி வெட்டுதல் - தைத்தல் பாட திட்டத்தை அறிமுகப்படுத்துதல் | 19.05 |
| 12. | 10 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களின் அலுவலகங்களில் கணினி வசதி செய்து கொடுத்தல் | 20.00 |
| 13. | திண்டுக்கல் அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு சொந்த கட்டடம் கட்டுதல் | 61.00 |
| 14. | 13 தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு / மையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுத்தல் | 3.71 |
| 15. | 10 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பம்புசெட்டுடன், ஆழ்துளை கிணறுகள் ஏற்படுத்துதல் | 15.00 |
| 16. | 30 தொழிற்பயிற்சி நிலையங்களில் கம்மியர் (மோட்டார் வண்டி) தொழில் படிப்பிற்கான திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டத்தின்படி கருவிகளும் சாதனங்களும் வாங்குதல் | 100.00 |
| 17. | பேட்டையிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு துணைப் பாகங்களுடன் கூடிய சி.என்.சி கடைசல் பிடிகளுக்கான சி.ஏ.எம். செய்திட்ட தனிக் கணினிகளும் வாங்குதல் | 34.43 |
| 18. | ஆண்டிப்பட்டியிலுள்ள அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல் | 70.00 |



| | | |
|---|---|---|
| 19. | **தொழிற்சாலைகள் ஆய்வாளரகம்**<br>தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் (உற்பத்தி திறன் பிரிவு) சென்னை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் கோட்டம் 1, கோட்டம் 2 ஆகிய 5 அலுவலகங்களுக்கு நிகரிகளுக்கு வகை செய்தல் | 1.10 |
| 20. | வேலூர், சிவகங்கை, கோவில்பட்டி, ஊட்டி, மேட்டூர் மற்றும் பொள்ளாச்சி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு 6 கணினிகளுக்கு வகை செய்தல் | 5.00 |
| 21. | பரிசோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்களுக்கு ஐட்ரோஸ்டேடிக் டெஸ்டிங் பிரசர் வெசில்கள் 30ம் அல்ட்ரோசானிக் டெஸ்டிங் மெஷின்கள் 10ம் வாங்குதல் | 5.40 |
| | **மருத்துவ மற்றும் கிராம சுகாதார பணி இயக்குநரகம் (அரசு தொழிலாளர் ஈட்டுறுதி)** | 15.00 |
| 22. | 15 கணினிகள் வாங்குதல் | |
| 23. | தொழிலாளர் நல ஈட்டுறுதி கழக மருத்துவமனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் சாதனங்கள் வாங்குதல் | 280.00 |
| 24. | இயக்குநரகத்திற்கு நிகரி இயந்திரம் ஒன்றை வாங்குதல் | 0.20 |
| 25. | இயக்குநரகத்திற்கு EPABX ஏற்பாட்டிற்கும் 3 தொலைபேசி இணைப்புகளுக்கும் வகை செய்தல் | 3.15 |
| 26. | அயனாவரத்திலுள்ள மாநில தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைக்கு EPABX ஏற்பாட்டிற்கு வகைசெய்தல் | 4.67 |
| | **மொத்தம்** | **767.91** |

# அத்தியாயம் 1

## தொழில் உறவுகள்

1.1. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் போன்ற குறிக்கோளை அடைய தொழில் அமைதியை பாதுகாப்பது முக்கியமாகும். சுமுகமான தொழில் உறவிற்கு முன்னேற்ற எண்ணம் கொண்ட நிர்வாகமும் பொறுப்புடன் நடந்துகொள்ளும் தொழிலாளர்களுமே தேவையானதாகும். உற்பத்தி பெருக்கம், தர மேம்பாடு மற்றும் செலவினக் குறைப்பு ஆகியவற்றை எய்திட நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு அனைத்து மட்டங்களிலும் மிக நெருங்கிய அளவில் இருக்க வேண்டும். நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுக்கிடையிலான தாவாக்களை தீர்த்து வைப்பதற்கான அமைப்பு மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் ஆகியன குறித்து தொழிற்தகராறு சட்டம், 1947 மற்றும் அதன் கீழுள்ள விதிகளில் கூறப்பட்டுள்ளன. தொழிலாளர் மற்றும் நிர்வாகங்களுக்கிடையிலான சுமுகமான நல்லுறவின் மூலம், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகிய இலக்குகளை அடைய வழிவகுப்பது தொழிலாளர் துறையின் பணியாகும். தகுந்த தருணத்தில் தலையிட்டு, சமரச உடன்பாடு ஏற்படுத்தி, தொழிற்தாவாக்களை தீர்த்து வைப்பதன் மூலம் தொழிலாளர் துறை அலுவலர்கள் முக்கியமான இப்பணியை ஆற்றி வருகின்றனர். தொழிலாளர் துறை அலுவலர்களின் திறமையான தலையீடுகள் மூலம் பல வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டில், வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் ஏற்பட்ட மொத்த மனித இழப்பு நாட்கள், 2002 ஆம் ஆண்டை விடக் குறைந்துள்ளன. அதன் விவரம் கீழ் வருமாறு:–

| வருடம் | மனித இழப்பு நாட்கள் | | மொத்தம் |
|---|---|---|---|
| | வேலைநிறுத்தம் | கதவடைப்பு | |
| 2002 | 6,65,262 | 11,88,502 | 18,53,764 |
| 2003 | 5,40,155 | 10,30,708 | 15,70,863 |
| 01-01-2004 முதல் 31-03-2004 முடிய | 24,678 | 2,82,716 | 3,07,394 |



பெரும்பாலான கதவடைப்புகள், நிதிப் பிரச்சினை காரணமாக ஏற்பட்டுள்ளதேயன்றி, தொழிற் தகராறுகளால் அல்ல. 2003 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட மொத்த வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் முறையே 56 மற்றும் 52 ஆகும். 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 5 வேலைநிறுத்தங்களும், 11 கதவடைப்புகளும் தீர்த்து வைக்கப்பட்டன.

1.2. 2003 ஆம் ஆண்டில், 9,034 தொழிற் தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன. இவற்றில் இந்த ஆண்டு மற்றும் முந்தைய ஆண்டு எழுப்பப்பட்ட தொழிற் தாவாக்களும் அடங்கும். 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 1,833 தொழிற் தாவாக்கள் தீர்த்து வைக்கப் பட்டன.

1.3. 2003 ஆம் ஆண்டில் போனஸ் தொடர்புடைய தொழிற் தாவாக்களை, தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடன் கையாண்டுள்ளனர். அதன்விளைவாக போனஸ் தொடர்புடைய பெரும்பாலான பிரச்சினைகள் குறைந்த கால அளவில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டு போனஸ் காலத்தில் அமைதி நிலவியது.

### முத்தரப்புக் குழு

1.4. மூடப்பட்ட தொழில் நிறுவனங்களைத் திறப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய அரசாணை எண் (டி) 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–02–2002–ல் மாவட்டந் தோறும் முத்தரப்புக் குழுக்களை அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார். இதன் உறுப்பினர்–செயலாளர் அம்மாவட்டத்தின் தொழிலாளர் அலுவலர்/தொழிலாளர் உதவி ஆணையர் ஆவார். சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிலாளர் மற்றும் வேலையளிப்பவர் சார்பில், மூன்று பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர். இக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி இப்பொருள் குறித்து விவாதிக்கும்.

### தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்

1.5. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க நிர்வாகத் தரப்பில் 4 பிரதிநிதிகளும், தொழிற்சங்கத் தரப்பில் 4 பிரதிநிதிகளும் கொண்ட முத்தரப்புத் தேர்வுக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## நீண்டகாலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கான நிவாரணம்

*1.6.* தமிழ்நாட்டில் நீண்டகாலமாக இயங்காமல் மூடப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250/– வீதம் உதவித் தொகை வழங்க அரசு ஒரு திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பட்டியலில் 69 நிறுவனங்கள் உள்ளன. இதுவரை 8,975 தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். 2003 ஆம் ஆண்டில், 880 தொழிலாளர்களுக்கு ரூ.13,17,000/– உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## சிறப்புத் தொழில் தீர்ப்பாயம்

*1.7.* பஞ்சாலைத் தொழிலாளாகளுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான தொழிற் தாவாக்களை விசாரித்து தீர்வு செய்வதற்காக, அரசாணை எண் ( டி) 569, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19–07–2002–ல் சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தினை அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தின ஊதியக் குறைப்பு மற்றும் இதர பணி நிலைமைகள் குறித்து எழுப்பப்பட்ட தொழிற் தாவா சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளது.

## கணினிமயமாக்கல்

*1.8.* தலைமை அலுவலகத்திலும், நல வாரியங்களிலும் மற்றும் இதர மாவட்ட அலுவலகங்களிலும் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆண்டில், பகுதி–2 திட்டத்தின்கீழ் இத்துறைக்காக தொலைநகல் இயந்திரம் உட்பட புதிய கணினிகளை வாங்கிட ரூ. 10.20 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறைக்கென தனியாக இணைய தளம் (website) ஒன்று விரைவில் உருவாக்கப்படவுள்ளது. இவ்விணையதளத்தில், தொழிலாளர் சம்பந்தப்பட்ட விவரங்களான குறைந்தபட்ச ஊதியங்கள், சம்பளப் பட்டுவாடா போன்ற மற்றும் நல வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் தொடர்புடைய செயல்பாடுகள் உள்ளடக்கியிருக்கும்.



## தொழிலாளர் நீதிமன்றங்கள்

*1.9.* தொழிற் தகராறுகள் சட்டம், 1947 அட்டவணை இரண்டில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்கள்மீது தீர்ப்பு வழங்க மாநிலம் முழுவதும் 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் உள்ளன.

*1.10.* சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தொழில் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றது. தொழிற் தகராறுகள் சட்டம், 1947 அட்டவணை இரண்டு அல்லது மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள்மீது தொழிற் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்க முடியும்.

## மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்)

*1.11.* தொழிலாளர் துறை, தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவுடன் இணைந்து வேலையாள் இழப்பீடு சட்டம், 1923–ன்கீழ் எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளில் மிக விரைவாக நீதி கிடைக்க 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றத்தை அமைத்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் 29 வழக்குகள் முடிக்கப்பட்டு, கேட்புரிமை தாரர்களுக்கு ரூ.41,04,198/– ஈட்டுத் தொகை வழங்கிட உத்தரவிடப்பட்டது.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 2

## அமலாக்கம்

2.1. தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்வதே தொழிலாளர் துறையின் முக்கியப் பணியாகும். சுதந்திரத்திற்குப் பின்னர், தொழிலாளர் நலன்களைக் காக்கவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாத்திடவும் தொழிற் தகராறுகள் சட்டத்துடன் இதர பல சட்டங்கள் நாடாளுமன்றத்தாலும், சட்டப் பேரவையாலும் இயற்றப்பட்டுள்ளன. பெரும்பாலான சட்டங்கள் தொழிலாளர் துறையால் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

அவை குறித்த சுருக்க விவரம் பின்வருமாறு:

### தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

2.2. மாநிலத்தில் மொத்தம் 3,45,507 கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. 2003 ஆம் ஆண்டில், 3,81,829 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 50,102 வழக்குகள் முடிக்கப்பட்டன. அவற்றுள் 31,654 இணக்க வழக்குகளில் இணக்கக் கட்டணத் தொகையாக ரூ. 18,27,410/- துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 18,448 வழக்குகளில் நீதிமன்றங்கள் ரூ. 75,570/- அபராதத் தொகை விதித்துள்ளன. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 88,923 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 8,508 இணக்க வழக்குகள் முடிக்கப்பட்டன. அவற்றுள் 7,475 வழக்குகளில் இணக்கக் கட்டணத் தொகையாக ரூ. 5,48,822/- துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,033 வழக்குகளில் நீதிமன்றங்கள் ரூ. 13,375/- அபராதத் தொகை விதித்துள்ளன.

### தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

2.3. மாநிலத்தில் மொத்தம் 29,772 உணவு நிறுவனங்கள் உள்ளன. 2003 ஆம் ஆண்டில், வேலையளிப்பவர்களிடமிருந்து ரூ.11,98,355/- பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 43,208 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 3,670 இணக்க வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.2,97,050/- இணக்கக் கட்டணத் தொகையாகத் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 1,159 வழக்குகளில் நீதிமன்றங்களால் ரூ.25,090/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில்,



2004 ஜூலை 31]

வேலையளிப்பவர்களிடமிருந்து ரூ.3,01,307/- பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 9,848 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 917 இணக்க வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.75,035/- இணக்கக் கட்டணத் தொகையாகத் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 327 வழக்குகளில் நீதிமன்றங்களால் ரூ.6,905/-அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

2.4. 2003 ஆம் ஆண்டில், மொத்தம் 1,09,253 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 6,678 வழக்குகள் முடிக்கப்பட்டு, 6,335 வழக்குகளில் ரூ. 3,28,254/- இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 343 வழக்குகளில் ரூ.11,885/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், மொத்தம் 29,629 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2,258 இணக்க வழக்குகள் முடிக்கப்பட்டு, 1,977 வழக்குகளில் ரூ.1,07,060/- இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 281 வழக்குகளில் ரூ.2,745/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

### தொழிற் சங்கங்கள் சட்டம், 1926

2.5. 2003 ஆம் ஆண்டில், 297 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.46,175/- பதிவுக் கட்டணமாகவும், திருத்தக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 101 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.11,950/- பதிவுக் கட்டணமாகவும், திருத்தக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. 31-03-2004 வரையிலான காலத்தில் மொத்தம் 9,715 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936

2.6. 2003 ஆம் ஆண்டில், மேல்முறையீட்டு அலுவலர் முன்பு தாக்கல் செய்யப்பட்ட 210 கேட்பு மனுக்களில் 149 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ. 26,64,364/- பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், தாக்கல் செய்யப்பட்ட 68 கேட்பு மனுக்களில் 35 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.30,13,476/- பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

**தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

27. 2003 ஆம் ஆண்டில், 326 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 84 நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

2.8. தமிழ்நாட்டில் உள்ள மொத்த தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 61,439 ஹெக்டேர் மற்றும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 91,211 ஆகும். (36,496 ஆண்கள் மற்றும் 54,715 பெண்கள்) மொத்தம் 687 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்கள் உள்ளன. 2003 ஆம் ஆண்டில் 5,050 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 194 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.74,700/- அபராதத் தொகை நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 906 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 39 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ. 11,950/- அபராதத் தொகை நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டுள்ளது.

**உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955**

2.9. 2003 ஆம் ஆண்டில், அமலாக்க அலுவலர்களால் 129 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 27 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961**

2.10. 2003 ஆம் ஆண்டின் இறுதியில், பதிவு பெற்ற மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 1,867 ஆகும். அந்நிறுவனங்களில் 1,18,382 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பதிவுக் கட்டணமாக ரூ.4,42,781/- வசூலிக்கப்பட்டுள்ளது. 6,029 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 400 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.1,22,440/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 17 ஆகும். அந்நிறுவனங்களில் 119 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பதிவுக் கட்டணமாக ரூ.80,047/- வசூலிக்கப்பட்டுள்ளது. 1,466 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 103 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.36,350/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.





**பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966**

2.11. 2003 ஆம் ஆண்டு இறுதியில், மாநிலத்தில் 2,020 பதிவு செய்யப்பட்ட பீடி நிறுவனங்கள் இருந்தன. 4,774 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 646 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு ரூ.55,950/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. 2,48,772 பீடித் தொழிலாளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 30 பீடி நிறுவனங்கள் புதியதாகப் பதிவு செய்யப்பட்டன. 1,349 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 144 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு ரூ.26,275/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்**

2.12. மத்திய அரசின் "ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்" தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, மத்திய அரசு, பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து வீடு ஒன்றுக்கு அதிகபட்ச மானியமாக ரூ.20,000/- அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50 சதவிகிதம் தொகை இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்குகிறது.

இத்திட்டத்திற்கு மாநில அரசின் மானியமாக வீடு ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்ட அரசு தீர்மானித்துள்ளது. வீடு ஒன்றின் திட்ட மதிப்பீடு ரூ.40,000/- ஆகும். இதில் மத்திய, மாநில அரசுகளின் மானியத் தொகை மொத்தம் ரூ.25,000/- போக மீதம் ரூ.15,000/-ஐ பயனீட்டாளர்கள் செலவிட்டு, கட்டுமானப் பணியினைத் தாங்களே மேற்கொள்ள வேண்டும்.

2002-2003 ஆம் ஆண்டுக்கு தமிழக அரசு மானியமாக வீடு ஒன்றுக்கு தலா ரூ.5,000/- வீதம் திருவள்ளூர், வேலூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பீடித் தொழிலாளர்களால் கட்டப்படவுள்ள 375 வீடுகளுக்கு மொத்தம் ரூ.18.75 லட்சம் அனுமதிக்கப்பட்டு, மேற்படி மானியத் தொகை 277 பயனிட்டாளர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளது. 277 பயனீட்டாளர்களில் 160 பயனீட்டாளர்களுக்கு மட்டும் மத்திய அரசு தனது மானியத்தினை வழங்கி ஆணை பிறப்பித்தது. அதன்படி, முதல்/இரண்டாம் தவணையாக 160 பயனீட்டாளர்களுக்கு ரூ.11.56 லட்சம் பெறப்பட்டு பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

அதேபோன்று 2003–2004 ஆம் ஆண்டில் மத்திய அரசு 124 வீடுகளுக்கு மானியம் அனுமதித்து நிர்வாக ஒப்புதல் வழங்கியது. மாநில அரசு, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 124 வீடுகளுக்கு தலா ரூ.5000/– வீதம் மொத்தம் ரூ.6.20 லட்சம் அனுமதித்து ஆணைகள் வழங்கியது. இந்த 124 பயனீட்டாளர்களில் 92 பயனீட்டாளர்களுக்கு மாநில அரசின் மானியத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. மத்திய அரசின் மானியம் வழங்குவதற்குரிய ஆணைகள் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

இது தவிர, 2003–2004 ஆம் ஆண்டில் 2,715 பயனீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, இவர்களுக்கு மத்திய அரசின் மானியமாக ரூ.5.43 கோடி வழங்கிடக் கேட்டு மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான நிர்வாக ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன் மாநில அரசின் மானியம் இப்பயனீட்டாளர்களுக்கு வழங்க ஆணைகள் வழங்கப்படும்.

2004–2005 ஆம் ஆண்டுக்கு 2,786 பயனீட்டாளர்களைத் தெரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

2.13. 2003 ஆம் ஆண்டில் 3,029 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 120 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாகப் பதிவு செய்யப்பட்டன. 172 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 605 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 24 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாகப் பதிவு செய்யப்பட்டன. 66 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன.

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981

2.14. 2003 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 803 மனுக்கள் முடிக்கப்பட்டு, இதன் காரணமாக 1,187 தொழிலாளர்கள் பயனடைந்தனர். 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில் தாக்கல் செய்யப்பட்ட 50 மனுக்கள் முடிக்கப்பட்டு, 157 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.



2004 ஜூலை 31]

### எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985

2.15. 2003 ஆம் ஆண்டில் 8,44,285 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 30,141 வழக்குகள் முடிக்கப்பட்டன. இவற்றில் 30,050 வழக்குகளில் ரூ. 61,90,792/– இணக்கக் கட்டணம் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 91 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.31,175/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 1,63,275 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 12,379 வழக்குகள் முடிக்கப்பட்டன. இவற்றில் 12,364 வழக்குகளில் ரூ.29,76,794/– இணக்கக் கட்டணம் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 15 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.15,660/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்

2.16 மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு முதல்நிலை வாரியம் ஆகும். இவ்வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சராவார். இவ்வாரியம் தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றி விவாதித்து தொழிலாளர் கொள்கை உருவாக்க, அரசுக்குப் பயனுள்ள ஆலோசனைகளை வழங்குகிறது.

## அத்தியாயம் 3

## குறைந்தபட்ச ஊதியங்கள்

3.1. 2003 ஆம் ஆண்டில், அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து இறுதி அறிவிக்கையை வெளியிட்டுள்ளது:

1. உணவு பதப்படுத்தும் தொழில்
2. புகையிலை (பீடி சுற்றுதல்) தயாரிப்பு தொழில்
3. செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில்
4. புகையிலை (வாசனை மற்றும் மெல்லும் புகையிலை) தயாரிப்பு தொழில்
5. புகையிலை (மூக்குப் பொடி) தயாரிப்பு தொழில்
6. அரிசி ஆலைகள், மாவாலைகள் மற்றும் பருப்பாலைகள் தொழில்
7. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டும் தொழில்
8. பொது மோட்டார் போக்குவரத்து தொழில்
9. கடல் உணவு பதப்படுத்தும் தொழில்
10. சோப்பு தயாரிக்கும் தொழில்
11. காபிக் கொட்டை பதப்படுத்தும் தொழில்
12. கயிறு தயாரிக்கும் தொழில்

3.2. 2003 ஆம் ஆண்டில், அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்வது தொடர்பாக முதனிலை அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது:

1. சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு அல்லது கட்டடங்கள் கட்டும் தொழில்
2. சினிமாத் தொழில்
3. பட்டு இழை முறுக்கும் தொழில்





4. காட்டன் ஜின்னிங், பிரெஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்
5. தேங்காய் உரிக்கும் தொழில்
6. எண்ணெய் ஆலைத் தொழில்
7. முந்திரித் தொழில்
8. ஓட்டல்கள் மற்றும் உணவு நிறுவனங்கள்
9. தோல் பதனிடுதல் மற்றும் தோல் தயாரிக்கும் தொழில்
10. பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்
11. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தொழில்
12. பாரங்களை ஏற்றி இறக்கும் தொழில்
13. அச்சகங்கள் தொழில்
14. பாதுகாவலர் தொழில்
15. தையற் தொழில்
16. பட்டுப் புழு வளர்க்கும் தொழில்

3.3. 2003 ஆம் ஆண்டில், அரசாணை எண் 34, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 05-05-2003-ல், வணிக ரீதியில் நடத்தப்படும் அரசு உதவி பெறாத தனியார் கல்வி நிறுவனங்கள் (டுடோரியல் கல்லூரிகள், ஆரம்பப் பள்ளிகள், நர்சரி மற்றும் ஆங்கிலப் பள்ளிகள் போன்றவை) தொழிலுக்கு அரசு, முதன்முறையாகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்துள்ளது. சென்னை-93, சாலிக்கிராமத்திலுள்ள, 'தி தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகள் அசோசியேஷன்' என்னும் அமைப்பு மேற்படி அரசாணையை எதிர்த்து, அவ்வரசாணையை நடைமுறைப்படுத்துவது குறித்த அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்கும்பொருட்டு, தடை விதிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமை மனு (டபிள்யு.பி. எண் 6858/2004) ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. உரிமை மனு எண் 6858/04-ன் உரிமை பல்வகை மனு எண் 8082/2004-ல் சென்னை உயர் நீதிமன்றம் 19-03-2004 நாளிட்ட உத்தரவில் இவ்வரசாணைக்கு இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியுள்ளது.

[2004 ஜூலை 31

3.4. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்வது தொடர்பாக முதனிலை அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது:

1. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்
2. தச்சு மற்றும் கருமார் தொழில்
3. உப்பளங்கள் தொழில்

3.5. 2003 ஆம் ஆண்டில், தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும்பொருட்டு ஆலோசனைக் குழுவினை அரசு அமைத்துள்ளது.

3.6. 2003 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 2,171 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.2,04,19,554/- தொகை அளிக்க உத்தரவிடப்பட்டது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், இச்சட்டத்தின்கீழ் 794 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. கேட்பு மனுதாரர்களுக்கு ரூ. 8,18,20,068/- தொகை அளிக்க உத்தரவிடப்பட்டது.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 4

## சமூகப் பாதுகாப்பு

**வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923**

4.1. இந்த ஆண்டில், 3,186 கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டுகள் நிலுவையுடன் சேர்த்து 3,449 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.16,97,67,033/- இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 1,061 கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டுகள் நிலுவையுடன் சேர்த்து 1,069 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.5,93,17,017/- இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்ய உத்தரவிடப் பட்டுள்ளது.

**மகப்பேறு நலச் சட்டம், 1961**

4.2. இச்சட்டத்தில், குழந்தைப்பேற்றிற்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றிதழின்பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு முதலிய சலுகைகள் உள்ளன. மேலும், பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக அளிக்கவில்லையெனில், ரூ.250/- மருத்துவ போனசாக வழங்க சட்டம் வழிவகை செய்கிறது.

**போனஸ் வழங்குதல் சட்டம், 1965**

4.3. இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்கள் எண்ணிக்கை 10-க்குக் குறையும் நேர்வுகளிலும், இந்நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச போனஸ் (8.33%) வழங்க வேண்டும். இச்சட்டத்தின்கீழ் அதிகபட்சமாக 20% போனஸ் வழங்கவேண்டும்.

**பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972**

4.4. 2003 ஆம் ஆண்டில், 2,381 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு ரூ.3,80,02,957/- மனுதாரர்களுக்குப் பட்டுவாடா செய்ய உத்தரவிடப்

பட்டுள்ளது. 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 432 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு ரூ.63,410/– மனுதாரர்களுக்குப் பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

**சம ஊதியச் சட்டம், 1976**

4.5. 2003 ஆம் ஆண்டில், 11,586 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 4 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ.2,000/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 3,439 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1 வழக்குத் தொடரப்பட்டு ரூ.400/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

4.6. 2003 ஆம் ஆண்டில், 406 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.52,90,139/– மனுதாரர்களுக்குப் பட்டுவாடா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 31–03–2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 106 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு ரூ.73,61,113/– மனுதாரர்களுக்குப் பட்டுவாடா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் சாசனம்**

4.7 தொழிலாளர் ஆணையம் மக்கள் சாசனம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த மக்கள் சாசனத்தில் இத்துறையின் செயல்பாடுகள் குறித்தும், இத்துறையால் அமலாக்கம் செய்யப்படும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்தும், இந்தச் சட்டங்கள் மற்றும் திட்டங்களின் பயன்களை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் பொதுமக்கள் தெளிவாக அறிந்துகொள்ள விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.





## அத்தியாயம் 5

## குழந்தைத் தொழிலாளர்

**தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்**

**செயல் திட்டம்**

5.1. தமிழகத்தை அனைத்து வகைகளிலும் மிகச் சிறந்த மாநிலமாக உருவாக்கிட வேண்டுமென்ற நோக்குடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15 அம்சத் திட்டம் ஒன்றினை அறிவித்தார்கள். "குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்", 15 அம்சத் திட்டங்களில் முக்கியமான ஒன்றாகும். இவ்விலக்கினை அடைவதற்காக, அரசாணை (நிலை) எண் 53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–05–2003–ன்படி செயல் திட்டம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டது. அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களை 2005 ஆம் ஆண்டுக்குள்ளும், அபாயகரமற்ற தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களை 2007 ஆம் ஆண்டுக்குள்ளும் அகற்றுதல் இச்செயல் திட்டத்தின் நோக்கமாகும்.

குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல் செயல் திட்டத்தை அமல்படுத்துவதற்காக, மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம் ஏற்படுத்துவதற்கு அரசு உத்தரவு பிறப்பித்து 2003–04–ல், ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இச்சங்கம், 21–10–2003 அன்று சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**5.2. செயல் திட்டத்தின் குறிக்கோள்களை எட்ட மேற்கொள்ளப்படும் வழிமுறைகள்**

அ. கணக்கெடுப்பு நடத்தி குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிதல்.

ஆ. குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களைச் சிறப்புப் பள்ளிகளில் சேர்த்தல்.

இ. சிறப்புப் பள்ளிகளில் பயின்ற குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்த்தல்.

ஈ. 5 முதல் 7 வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதற்குச் சிறப்பு இயக்கம் நடத்துதல்.

உ. முறை சார்ந்த கல்வித் திட்டத்தை வலுப்படுத்துதல்.

ஊ. குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுக்கும் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல்.

எ. குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும், வேலைக்குச் செல்லக் கூடாது என்ற பரவலான சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

ஏ. குழந்தைத் தொழிலாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

ஐ. பல்வேறு துறைகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்தல்.

ஒ. குழந்தைத் தொழிலாளர் இல்லாத பஞ்சாயத்து/நகரப் பஞ்சாயத்து/பேரூராட்சி ஆகியவற்றிற்கு அரசு வெகுமதி அளித்தல்.

**கணக்கெடுப்பு**

5.3. வழக்கு எண் 3295/03-ல் அளிக்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் மாநில மனித உரிமைக் கழகத்தால் மார்ச் 2003-ல் மாநில அளவில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 70,344 குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இந்தக் கணக்கெடுப்புத் தொடர்பான விவரங்கள் www.tnchildlabour.tn.gov.in-ல் உள்ளன.

**5.4. குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு**

- கணக்கெடுப்பின்போது கண்டறியப்பட்ட 5 முதல் 8 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளையும் உடனடியாகப் பள்ளிகளில் சேர்க்க மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.





- 9 முதல் 14 வயது வரையிலான குழந்தைத் தொழிலாளர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளிலும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் நடைபெறும் சர்வ சிக்ஷா அபியான் பள்ளிகளிலும், குடியிருப்பு முகாம்களிலும் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

**தமிழ்நாட்டில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

5.5. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், 1995-96 ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், தருமபுரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டிலிருந்தும் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தேனி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களையும் சேர்ப்பதற்கு இந்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

**சிறப்புப் பள்ளிகளின் செயல்பாடு**

5.6. தற்பொழுது 484 சிறப்புப் பள்ளிகளில் 20,330 குழந்தைத் தொழிலாளர்கள் பயின்று வருகின்றனர். ஓர் ஆசிரியர், ஒரு தொழிற் கல்வி ஆசிரியர் மற்றும் ஓர் உதவியாளரால் ஒவ்வொரு சிறப்பு பள்ளியும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளி ஆசிரியர்களுக்கு DPEP மற்றும் DIET பணியாளர்கள் பயிற்சி அளிக்கிறார்கள். குழந்தைகள் மூன்று நிலைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அவர்கள் விளையாட்டு முறையின் மூலமாகப் பயிற்றுவிக்கப்பட்டு, முறையான கல்விக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சிறப்புப் பள்ளிகள், சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

சிறப்புப் பள்ளிகளில் பயின்று வரும் குழந்தைகளுக்குச் சத்துணவு ஊக்கத்தொகையாக ரூ.100/–, இலவச பஸ் பாஸ் மற்றும் சீருடைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. புதிய தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டம் தொடர்புடைய வழிகாட்டுதல் நெறிமுறைகள் 2004-2005 முதல் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

**முன் தொழிற் கல்வி**

5.7. தையல், துணிகளில் வரைதல், கூடை பின்னுதல், கம்பளி நூல் வேலைகள், கைவினைப் பொருட்கள் செய்தல், மெழுகுவர்த்தி மற்றும் சாக்பீஸ் செய்தல், காளான் வளர்த்தல், புக் பைண்டிங், தச்சுத் தொழில், பொம்மை செய்தல் போன்ற முன்தொழிற் கல்விப் பயிற்சியும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தைகளுக்கு உள்விளையாட்டு மற்றும் வெளி விளையாட்டிற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**குழந்தைத் தொழிலாளர்களை முறையான பள்ளிகளில் சேர்த்தல்**

5.8. சிறப்புப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற குழந்தைகளை முறையான கல்விக் கூடங்களில் சேர்ப்பதற்கு மாநில கல்வித் துறையின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெற்றுவரும் குழந்தைகளை முறையான பள்ளிகளில் ஆறாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள சம்பந்தப்பட்ட பள்ளி அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 8,432 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**இந்திய அமெரிக்கக் குழந்தைத் தொழிலாளர் முறை நீக்கும் திட்டம்**

5.9. இந்திய அரசின் தொழிலாளர் துறையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தொழிலாளர் துறையும் சேர்ந்து ஆகஸ்ட் 2000–ல் குழந்தைத் தொழிலாளர் நீக்கம் குறித்தான கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டன. இதன்விளைவாக, இந்திய அமெரிக்கக் கூட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு இதற்கான நிதியை இந்திய அரசும், அமெரிக்க அரசும் வழங்கி வருகின்றன. குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டுள்ள காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாமக்கல், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பல்நோக்குச் செயல்பாடுகள் மூலம், குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேற்படித் திட்டம் மிக விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த சட்டங்கள் அமலாக்கம்**

5.10. இம்மாநிலத்தில், குழந்தைத் தொழிலாளர் முறை நீக்கம் குறித்த கீழ்க்காணும் சட்டங்களை தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அமல்படுத்துகின்றனர்:



1. குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986
2. தொழிற்சாலைகள் சட்டம், 1948
3. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், 1961
4. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமைகள்) சட்டம், 1966
5. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947
6. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

செயல் திட்டம் துவக்கப்பட்டபின், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவதற்காகச் சிறப்பு ஆய்வுகள் (திடீர், சிறப்பு மற்றும் கூட்டாய்வுகள்) தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறையினரால் மேற்கொள்ளப்பட்டன. 1,79,238 நிறுவனங்களில் அமலாக்க அதிகாரிகள் ஆய்வுகள் மேற்கொண்டதன் விளைவாக, 2003 ஆம் ஆண்டில் வேலையளிப்போருக்கு எதிராகத் தொடரப்பட்ட 1,650 வழக்குகளில் 268 வழக்குகள் தண்டணையில் முடிவுற்றன. 2002 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட 413 வழக்குகளில் 108 வழக்குகள் தண்டணையில் முடிவுற்றன. செயல் திட்டத்தின் விளைவாக, குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குவதற்கான சட்ட அமலாக்கம் உத்வேகம் பெற்றுள்ளது.

**மாவட்ட குழந்தைத் தொழிலாளர் முறை நீக்கும் படைகள்**

5.11. அனைத்து மாவட்டங்களிலும், தொழிலாளர் ஆய்வர்கள். தொழிற்சாலைகள் ஆய்வர்கள், அங்கீகரிக்கப்பட்ட தொண்டர்கள், அரசு சாராத அமைப்புகள் மற்றும் உதவி மருத்துவ அலுவலர்கள் ஆகியவர்களைக் கொண்ட படை (Squad) ஒன்றினை ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அந்தப் படை (Squad) ஆய்வுகளை மேற்கொண்டு அரசிற்கு அறிக்கைகளை அனுப்புகின்றது. இந்தப் படைகளால் கூட்டாய்வுகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**

**குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்**

*5.12* குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை மற்றும் இந்நடைமுறையை நீக்குவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஜூன் 12 ஆம் நாளன்று அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேற்படி நிகழ்ச்சிகளில் பேரணிகள், பொதுக் கூட்டங்கள், விளம்பரங்கள், போட்டிகள் ஆகியவை நடத்தப்பட்டன. இந்த விழிப்புணர்வின் முக்கியத்துவத்தினை மீண்டும் வலியுறுத்துவதற்காக இதுபோன்ற நிகழ்ச்சிகள் குழந்தைகள் தினமான நவம்பர் 14 ஆம் தேதியன்றும் நடத்தப்பட்டன.

➢ மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கத்தால் கீழ்க்கண்ட புத்தகங்கள் மற்றும் இதழ்கள் வெளியிடப்பட்டன:

1. குழந்தைத் தொழிலாளர் நீக்குவது தொடர்பான செயல் திட்டம்
2. அமலாக்க அலுவலர்களுக்கான கையேடு
3. குழந்தைகள் தினம் கொண்டாட்டம் தொடர்பான கையேடு
4. இந்திய-அமெரிக்கக் கூட்டுத் திட்டம் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள்
5. குழந்தைத் தொழிலாளர் நீக்குதல் தொடர்பான ஸ்டிக்கர்கள்

*5.13.* உலக மகளிர் தினமான மார்ச் திங்கள் 8 ஆம் நாளன்று, 500 மகளிர் சுய உதவிக் குழுக்களடங்கிய மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றது. மகளிர் தங்களுக்குண்டான உரிமைகள் குறித்து அறிந்துகொள்ள உதவுவதோடு, குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குவதில் அவர்களின் பங்கேற்பு என்ன என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்குடன் இம்மாநாடு கூட்டப்பெற்றது.

**வேலையளிப்போரிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்**

*5.14.* குழந்தைத் தொழிலாளர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த, வேலையளிப்பவர்கள் சங்கங்கள்/அமைப்புகள்,



தொழிற்சங்கத் தலைவர்கள், ஒட்டல் உரிமையாளர்கள் மற்றும் வணிகர்கள் ஆகியவர்களை உள்ளடக்கி கூட்டங்களை நடத்த அமலாக்க அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதன்விளைவாக, குழந்தைத் தொழிலாளர்களை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்த வேண்டாம் என்று வேலையளிப்பவர்களின் அமைப்புகள் தங்களது உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கைகளை அனுப்பி உள்ளன. குறிப்பாக, சேலம் சில்வர் செயின் உற்பத்தியாளர் சங்கம், திருநெல்வேலி மற்றும் வேலூர் பீடி உற்பத்தியாளர்கள் சங்கம், காஞ்சிபுரம் பட்டு நெசவாளர்கள், விருதுநகர் தீப்பெட்டி மற்றும் பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றோடு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**பயிற்சி**

*5.15.* இத்துறையைச் சார்ந்த அமலாக்க அலுவலர்கள், கல்வித் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்கள், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் இதர துறை அலுவலர்களுக்கான மாவட்ட அளவிலான பயிலரங்கங்கள் 27 மாவட்டங்களில் மே 2003-ல் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்கள், குழந்தைத் தொழிலாளர் முறை நீக்கம் சம்பந்தமான பல்வேறு சட்டங்கள் குறித்த தெளிவுரைகளைப் பெற்றுக்கொண்டதோடு, பல்வேறு வகையான கருத்துகளையும் செயல்பாடுகளையும் அறிந்து கொண்டனர்.

➢ குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதற்குப் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, 26-6-2003 அன்று மாநில அளவிலான பயிலரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கத்தில், அரசுத் துறை மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுவதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

**பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம்**

*5.16.* பயிற்சியாளர்களுக்கான (அமலாக்க அலுவலர்கள்) பயிற்சி முகாம் 15-03-2004 முதல் 19-03-2004 வரை சென்னையில் நடத்தப்பட்டது. இம்முகாமில் மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தொழிற்சாலை ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

# அத்தியாயம் 6

## நல வாரியங்கள்

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

*6.1. 1972* ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் ஐந்து சிப்பந்திகளுக்குமேல் பணிபுரியும் கடை நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களைச் சார்ந்த குடும்பத்தினர்களுக்கும் இந்நலத் திட்டங்கள் பயன்பட்டு வருகின்றன. இச்சட்டம் பொருந்தும் நிறுவனத்தின் வேலையளிப்பவர்கள் ஒவ்வொரு தொழிலாளிக்காக வருடத்திற்கு ரூ.10/–ம், ஒவ்வொரு தொழிலாளியும் வருடத்திற்கு ரூ.5/–ம் சந்தாத் தொகையாக இவ்வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். அரசும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வருடத்திற்கு ரூ.5/–ஐ இவ்வாரியத்திற்கு நிதியாக அளிக்கின்றது. மேலும் தொழிலாளர் நலச் சட்டங்களை மீறியதற்காக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதற்காக விதிக்கப்படும் தொகையும் இவ்வாரியத்திற்கு அளிக்கப்படுகின்றது.

2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய ஆண்டுகளில் தொழிலாளர் நல நிதி வசூல் விவரம்:

| | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|
| தொழிலாளர் நல நிதி | 3,73,92,772/- | 3,74,81,894/- |
| நீதிமன்ற அபராதத் தொகை | 1,02,33,464/- | 58,05,833/- |
| **மொத்தம்** | 4,76,26,236/- | 4,32,87,727/- |

**6.2. வழங்கப்படும் நலப் பயன்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**

(அ) 9 ஆம் வகுப்பு முதல் முதுநிலைப் பட்டப் படிப்பு படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்குவதற்கு ரூ.35/–லிருந்து ரூ.150/– வரை வழங்கப்படுகிறது.



(ஆ) தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி பயிலுவதற்காக கீழ்க்கண்ட உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன:

| வ.எண் | விவரம் | உதவித் தொகை |
|---|---|---|
| 1 | மருத்துவப் பட்டப் படிப்பு | ரூ. 1200/- வீதம் ஓராண்டிற்கு |
| 2 | பொறியியல் பட்டப் படிப்பு | ரூ. 1200/- வீதம் ஓராண்டிற்கு |
| 3 | சட்டப் பட்டப் படிப்பு | ரூ. 1200/- வீதம் ஓராண்டிற்கு |
| 4 | விவசாயப் பட்டப் படிப்பு | ரூ. 1200/- வீதம் ஓராண்டிற்கு |
| 5 | தொழிற்பயிற்சிக் கல்வி | ரூ. 500/- வீதம் ஓராண்டிற்கு |
| 6 | மேல்நிலைக் கல்வி | ரூ. 600/- வீதம் ஓராண்டிற்கு |
| 7 | பொறியியல் பட்டயப் படிப்பு | ரூ. 720/- வீதம் ஓராண்டிற்கு |
| 8 | மருத்துவப் பட்டயப் படிப்பு | ரூ. 720/- வீதம் ஓராண்டிற்கு |

(இ) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு நடத்தும் பொதுத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகளில் தேறியவர்களின் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் முதல் பரிசாக ரூ.1000/– மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.500/– வழங்கப்படுகிறது.

(ஈ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு ரூ.200/– உதவித் தொகை வழங்கப்படுகிறது.

உ) தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி பெறுவதற்கு மாதம் ரூ.15/– வீதமும் மற்றும் தேர்வுக் கட்டணமும் உதவித் தொகையாக மீள வழங்கப்படுகிறது.

ஊ) ஊனமுற்ற தொழிலாளர் மற்றும் பிள்ளைகளுக்கு மூன்று சக்கர வண்டி காது கேட்காத தொழிலாளர்களுக்கு காது கேட்கும் கருவி வாங்க ரூ.1000/– உதவித் தொகை வழங்கப்படுகிறது.

எ) தொழிலாளர்கள் பணிக்காலத்தில் இறந்தால் ஈமச் சடங்கிற்காக ரூ.500/– வழங்கப்படுகிறது.

இந்த வாரியம், 1-1-2003 முதல் 31-12-2003 வரை, 6,103 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு ரூ. 21,06,996/– உதவித் தொகை அளித்துள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 1,082 தொழிலாளர் மற்றும் தொழிலாளர்களைச் சார்ந்தவர்களுக்கு ரூ.7,48,606/– உதவித் தொகை அளித்துள்ளது.

6.3. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தமிழகம் முழுவதும் உள்ள 71 தொழிலாளர் நல மையங்களில் தையற்பயிற்சி வகுப்புகள், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் படிப்பகங்கள் நடத்தி வருகின்றது. 19 குழந்தைகள் காப்பகமும், 63 படிப்பகங்களும் தொழிலாளர் நல மையங்களில் செயல்பட்டு வருகின்றன.

6.4. தொழிலாளர் நல மையங்களில் உள்ள குழந்தைகள் காப்பகங்களில், தொழிலாளர்களின் இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தினமும் இலவச சத்துணவு மற்றும் பால் வழங்கப்படுகிறது. அத்துடன் வாரம் இரு தினங்கள் பழம் மற்றும் முட்டை வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு, வருடத்திற்கு இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை வழங்கப்படுகிறது. குழந்தைகள் மருத்துவரால் காலமுறையாக மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது.

6.5. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில், தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தாரும் தங்குவதற்கு, குறைந்த செலவில் ஓய்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் மேற்கண்ட ஓய்வு இல்லங்களை 5,678 தொழிலாளர்களும், அவரைச் சார்ந்தவர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

6.6. சென்னையில் தொழிற்சங்க நிர்வாகிகள் தங்குவதற்கு, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில் ஓய்வு இல்லம் ஒன்று செயல்பட்டு வருகிறது. ஒருவருக்கு நாளொன்றுக்கு மிகக் குறைந்த வாடகையாக ரூ.20/– வசூல் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு, 5,199 தொழிலாளர்கள் இந்த ஓய்வு இல்லத்தை தங்குவதற்குப் பயன்படுத்தினர்.

6.7. தாம்பரம் சானடோரியம் (26 படுக்கைகள்), ஆசாரிபள்ளம் (30 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி



(20 படுக்கைகள்), கீழ்ப்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய அரசு மருத்துவமனைகளில் தொழிலாளர் நலனுக்காக தனியே காசநோய் பிரிவுகள் உள்ளன.

6.8. தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் நன்மைக்காக 'உழைப்பவர் உலகம்' என்ற மாத இதழை இவ்வாரியம் வெளியிடுகிறது. இந்த இதழை 3,286 சந்தாதாரர்கள் வாங்கிப் பயன்பெற்று வருகின்றனர்.

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

6.9. 31-12-2003 வரை இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 5,19,870. ஒரு தொழிலாளிக்கு ரூ.25/- வீதம், மொத்தம் ரூ.1,29,96,750/- பதிவுத் தொகையாக பெறப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 16,360. மொத்தம் ரூ.4,09,000/- பதிவுத் தொகையாக பெறப்பட்டுள்ளது. பதிவு செய்துகொண்ட அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ரூ.10/– செலுத்தி தனது பதிவினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

6.10. கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் அனைத்து நபர்கள் மற்றும் முகமைகளிடமிருந்தும் பங்களிப்புத் தொகையாக, கட்டுமானச் செலவுக்கான மதிப்பீட்டுத் தொகையில் 0.3 சதவிகிதம் பெறப்படுகிறது. இந்தத் தொகை உள்ளாட்சி அமைப்புகளால், கட்டுமானப் பணி மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கும் நேர்வில் வசூல் செய்யப்பட்டு வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது. 2003 ஆம் ஆண்டில், இவ்வாரியத்தில் பங்களிப்புத் தொகையாக ரூ. 20,15,21,855/- பெறப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், பங்களிப்புத் தொகையாக ரூ.6,54,58,827/–பெறப்பட்டுள்ளது.

**வாரியத்தினால் அமலாக்கப்படும் நலத் திட்டங்கள்**

**தனிநபர் குழு விபத்து காப்பீட்டுத் திட்டம்**

6.11. இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்ட கட்டுமானத் தொழிலாளர்கள், தனி நபர் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்

காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் இந்த காப்பீட்டுத் திட்டத்தினை மீண்டும் புதுப்பிப்பதற்கான கட்டணம் காப்பீட்டு கழகத்திற்கு வாரியத்தால் செலுத்தப்படுகிறது.

*6.12.* இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

| | | பயன் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | அ | விபத்து இறப்பு | 1,00,000/- |
| | ஆ | இழப்பு (1) இரு கைகளும் | 1,00,000/- |
| | | (2) இரு கால்களும் | |
| | | (3) ஒரு கை ஒரு கால் | |
| | | (4) இரண்டு கண்களும் பார்வை இழப்பு | |
| | இ | ஒரு கை, ஒரு கால் அல்லது ஒரு கண் இழப்பு | 50,000/- |
| | ஈ | நிரந்தரமான பகுதி இழப்பு | மருத்துவர் மதிப்பீடும் சதவீதம் |
| 2 | | இயற்கை மரணம் | 10,000/- |
| 3 | | ஈமச்சடங்கு செலவு | 2,000/- |
| 4 | | கல்வி உதவித் தொகை (தொழிலாளர்களின் இரு குழந்தைகளுக்கு) | |
| | (i) | *10* ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | (ii) | *12* ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | (iii) | முறையான இளநிலை பட்டப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 1,500/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 1,750/- |
| | (iv) | முறையான முதுநிலை பட்டப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 2,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 3,000/- |
| | (v) | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் அதுபோன்ற தொழில் நுட்பப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 2,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 4,000/- |
| | (vi) | முதுகலை தொழில் நுட்பப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 4,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 6,000/- |
| | (vii) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 1,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 1,200/- |
| 5 | | திருமண உதவி (தொழிலாளி / மகன் / மகள் திருமணத்திற்கு இருமுறை) | 2,000/- |
| 6 | | மகப்பேறு உதவி (இரு குழந்தைகளுக்கு மட்டும்) | 2,000/- |
| 7 | | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகை ஈடு செய்தல் (ஒரு வருடத்திற்கு *1000* நபர்களுக்கு மட்டும்) | 250/- |



*6.13. 2003* ஆம் ஆண்டில், பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் *12,988* பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.*3,86,66,750/-* வழங்கப்பட்டுள்ளது. *31-03-2004* உடன் முடிவடைந்த காலாண்டில், *4,312* பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.*1,54,65,275/-* வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர நல வாரியங்கள்

*6.14.* அமைப்பு சாரா தொழிலாளர் நலனுக்கென கீழ்க்கண்ட நல வாரியங்களையும் அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

1. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
2. தமிழ்நாடு ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

3. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
4. தமிழ்நாடு முடி திருத்துவோர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
5. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
6. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
7. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
8. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
9. தமிழ்நாடு ஓவியர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
10. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

**வாரியங்களின் ஒருங்கிணைப்பு**

6.15. ஒரே வகைத் திட்டங்களை நிர்வகிப்பதற்காக, தனித்தனி தொழில்களுக்கென தனித்தனி வாரியங்கள் செயல்படுவது பொருளாதார வகையிலும், நிர்வாக வகையிலும் மற்றும் நிதி வகையிலும் உகந்ததாக இராது என அரசு கருதி தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் மற்றும் இதர எட்டு நல வாரியங்களை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியத்துடன் ஒருங்கிணைக்க முடிவு செய்தது. வாரிய ஒருங்கிணைப்புக்கான சட்ட ரீதியான நடவடிக்கைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

6.16. உடலுழைப்புத் தொழிலாளி பதிவின்போது, ஒருமுறை பங்குத் தொகையாக ரூ.100/—ஐ செலுத்த வேண்டும். இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ரூ.10/— செலுத்தி பதிவினை புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.





6.17. 2003 ஆம் ஆண்டு வரை மொத்தம் 6,42,882 தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டுள்ளனர். இதுவரை பதிவுக் கட்டணமாக ரூ.60,32,051/— வசூல் செய்யப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், மொத்தம் 6,54,616 தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். பதிவுக் கட்டணமாக ரூ.18,56,145/- வசூல் செய்யப் பட்டுள்ளது.

6.18. பிரதான நிதி ஆதாரம் மோட்டார் வாகனங்கள் வரியில் ஒரு சதவீதம் மூலம் கிடைக்கிறது. இத்தொகை வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களால் மோட்டார் வாகன வரி வசூலிக்கும்போது வசூல் செய்யப்பட்டு வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது. 2003 ஆம் ஆண்டில், பங்குத் தொகையாக ரூ.5,46,11,987/- பெறப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், பங்குத் தொகையாக ரூ.1,14,45,769/- இவ்வாரியத்தில் பெறப்பட்டுள்ளது.

6.19. இவ்வாரியங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

| பயன் | | | | | தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1. | அ | விபத்து இறப்பு | | | 1,00,000/- |
| | ஆ | இழப்பு | (1) | இரு கைகளும் | 1,00,000/- |
| | | | (2) | இரு கால்களும் | |
| | | | (3) | ஒரு கை ஒரு கால் | |
| | | | (4) | இரண்டு கண்களும் பார்வை இழப்பு | |
| | இ | ஒரு கை, ஒரு கால் அல்லது ஒரு கண் இழப்பு | | | 50,000/- |
| | ஈ | நிரந்தரமான பகுதி இழப்பு | | | மருத்துவர் மதிப்பிடும் சதவீதம் |
| 2 | இயற்கை மரணம் | | | | 10,000/- |
| 3 | ஈமச்சடங்கு செலவு | | | | 2,000/- |

| | | | |
|---|---|---|---|
| 4 | கல்வி உதவித் தொகை (தொழிலாளர்களின் இரு குழந்தைகளுக்கு) | | |
| | (i) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | (ii) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | (iii) | முறையான இளநிலை பட்டப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 1,500/- |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 1,750/- |
| | (iv) | முறையான முதுநிலை பட்டப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 2,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 3,000/- |
| | (v) | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் அதுபோன்ற தொழில் நுட்பப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 2,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 4,000/- |
| | (vi) | முதுகலை தொழில் நுட்பப் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 4,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 6,000/- |
| | (vii) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | |
| | | ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | 1,000/- |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 1,200/- |
| 5 | திருமண உதவி (தொழிலாளி / மகன் / மகள் திருமணத்திற்கு இருமுறை) | | 2,000/- |
| 6 | மகப்பேறு உதவி (இரு குழந்தைகளுக்கு மட்டும்) | | 2,000/- |

*6.20.* இவ்வாரியத்தால் அளிக்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் கீழ், 2003 ஆம் ஆண்டில், 2,866 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.84,16,200/- வழங்கப்பட்டுள்ளது. 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 1,565 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.60,91,000/- வழங்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 7

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

*7.1.* இக்கல்வி நிலையம், பயிற்சி திட்டங்கள், கருத்தரங்குகள், புத்தாக்கப் படிப்புகள், புத்தறிவு பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை தனியார் மற்றும் பொதுத்துறை தொழிலகங்களில் பணிபுரியும் மேற்பார்வை மற்றும் நிர்வாகப் பணியாளர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை துறைகள் அலுவலர்கள் தேவைகளுக்கு பொருந்தும் வகையில் நடத்தி வருகிறது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதிநேர தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) ஒன்றினையும், தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு (பி.எல்.எம்.), தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு (எம்.எல்.எம்.), ஆகிய முழுநேர பட்டப் படிப்புகளையும் நடத்தி வருகிறது. இவ்விரு படிப்புகளும் சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றவையாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தால் அறிவுறுத்தியவாறு, மேற்படி படிப்புகள், இளங்கலை (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் முதுகலை (தொழிலாளர் மேலாண்மை) என மாற்றப்பட்டன.

*7.2.* இவ்வாண்டில் இக்கல்வி நிலையத்திலிருந்து பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு முடித்து வெளிவந்துள்ளவர்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பயிற்சி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு | 47 |
| 2. | தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு | 35 |
| 3. | தொழிலாளர் நிர்வாகம் முதுகலை பட்டயப் படிப்பு | 27 |
| **மொத்தம்** | | 109 |

[2004 ஜூலை 31

7.3. இக்கல்வி நிலையம் 2003 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்கள், நிர்வாகத் தரப்பினர் மற்றும் வணிகர்கள் ஆகியோருக்காக 41 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் நடத்தியுள்ளது. இதன் மூலம் மொத்தம் 2,362 நபர்கள் பயனடைந்துள்ளனர். 31-03-2004 உடன் முடிவடைந்த காலாண்டில், 19 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் மொத்தம் 846 நபர்கள் பயனடைந்துள்ளனர்.



2004 ஜூலை 31]

# அத்தியாயம் 8

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

8.1. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, தமிழ்நாட்டில் உள்ள பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற அரசின் கோட்பாடுகளை செயல்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. மேற்கண்ட கோட்பாடுகளை எய்துவதற்காக, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களை இத்துறை செயல்படுத்துகிறது. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தி, நிர்வகிக்கும் இத்துறை தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் கட்டுப்பாட்டில் உள்ளது.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் முக்கிய செயல்பாடுகள் கீழ்க்கண்ட இரண்டு ஆகும்:-

1. முறைப்படுத்தும் செயல்பாடுகள் (சட்ட அமலாக்கம்)
2. உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

### முறைப்படுத்தும் செயல்பாடுகள்

### ஆய்வுகள்

8.2. தொழில்நுட்பம் நிறைந்த தொழிற்சாலைகள் சட்டம், 1948, தொழிலகங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம், நல வசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களையும் முழுமையாகச் சென்றடையும் வண்ணம், அனைத்து முயற்சிகளும் துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், அபாய செயல்முறைகள் இல்லாத, சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு

[2004 ஜூலை 31

முறை ஆய்வு செய்யப்படுகின்றன. எனினும், உடல்நலம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டி, அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவன சான்று பெற்றிருந்தாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டு, இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் குறித்து சீரான கண்காணிப்பு மேற்கொள்ள, சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வுகள் மூலம் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை மேற்கொள்ளும் திறம்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுமுகமான பணிச்சூழல் உறுதிபடுத்தப்படுகின்றது.

**குழு ஆய்வுகள்**

*8.3.* பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீபாவளிப் பண்டிகை காலத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடி விபத்துகள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளின் பாதுகாப்பான பணிநிலையையும், வேலை முறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக சிறப்புக்குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி சிறப்பு ஆய்வுகள் காரணமாக சிவகாசியில் 2003 ஆம் ஆண்டில், தீபாவளி பண்டிகை காலத்தில் பெரும் தீ மற்றும் வெடி விபத்துகள் ஏற்படவில்லை.

**விபத்துகள்**

*8.4.* இத்துறையின் ஆய்வாளர்கள், பாதுகாப்பு அளவீடு மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டு செயல்படுவதால் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும் விபத்து எண்ணிக்கை குறைந்தே உள்ளது.



2004 ஜூலை 31]

*2001, 2002, 2003 மற்றும் 2004 (31–03–2004 வரை) ஆண்டுகளின்* விபத்துகள் விவரம்:–

| வருடம் | மொத்தத் தொழிற்சாலைகள் எண்ணிக்கை | மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை | மரண விபத்து | மரணமற்ற விபத்து |
|---|---|---|---|---|
| 2001 | 31,343 | 12,23,060 | 37 | 2,140 |
| 2002 | 32,723 | 12,37,653 | 36 | 2,136 |
| 2003 | 34,071 | 12,56,120 | 35 | 1,908 |
| 2004 (31-3-2004 வரை) | 34,101 | 12,56,402 | 9 | 454 |

**புகார் விசாரணை**

*8.5.* தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்கு தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 563 புகார்களும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 31–03–2004 முடிய உள்ள காலாண்டில் பெறப்பட்ட 127 புகார்களும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளரால் சென்னையிலும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் மாவட்டங்களிலும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் எழுப்பப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்

8.6.1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் அட்டவணை 1-ன்படி, 29 செயல்முறைத் தொழில்கள் ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் தனிக் கவனம் செலுத்தப்படாவிடில், இத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களால் தொழிலாளர் மற்றும் பொதுமக்களின் உடல் நலத்திற்கும், சுற்றுச் சூழல் தூய்மைக்கும் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படும் அபாயநிலை உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகளில் தொழிலியல் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, அவை அதிகப்படியான கவனத்துடன் ஆய்வு செய்யப்படுகின்றன. சில இரசாயனத் தொழிற்சாலைகளில், கட்டுப்படுத்த இயலாத அளவில் செயல்முறைகள் மேற்கொள்ளப்படுவதால், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அருகாமையில் வசிக்கும் பொதுமக்களுக்கும் அபாயத்தை விளைவிப்பதுடன், சுற்றுச் சூழலையும் பாதிக்கிறது. இத்தகைய தொழிற்சாலைகள் 'பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்' என பகுக்கப்பட்டு, இவைகளின் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. நமது மாநிலத்தில் இதுபோன்ற 120 தொழிற்சாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

1988 ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் "பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு" ஒன்று, தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளரின் தலைமையில் உருவாக்கப்ப்ட்டது. அபாயம் விளைவிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பேரபாயத்தை தடுக்கக்கூடிய செயல்முறைகளை உருவாக்குவதற்கு இந்தக் குழு வழிகாட்டுவதுடன், அவைகள் நிறைவேற்றப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகளும் இக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டு வரை, பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகளிலிருந்து 120 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் பெறப்பட்டு, அவைகளில் 99 திட்டங்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 23-04-1998 தேதியிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, அரசாணை (நிலை) எண் 109-ல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில் ஏற்படக் கூடிய பெரும் விபத்துகள் மற்றும் அபாயநிலை அழிவுகளைத் தடுத்து, கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மாவட்ட அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர் செயலாளர்களாகவும், மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினராகவும் செயல்படுகின்றனர்.





அபாயநிலை அவசரக் காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் அவ்வப்போது நடத்தப்பட்டு, ஆயத்த நிலைத் திட்டங்கள் சீர்படுத்தப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில், இதுபோன்ற 94 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. 31-03-2004 முடிய உள்ள காலாண்டில் 8 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி, ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41—அ—வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள மனைமதிப்பீட்டு குழு, "பெரும் விபத்து மற்றும் பேரபாயம்" விளைவிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, இத்தொழிற் சாலைகள் அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. 2003 ஆம் ஆண்டில் இது தொடர்பான ஆறு விண்ணப்பங்களும், 31—03—2004 முடிய உள்ள காலாண்டில் ஒரு விண்ணப்பமும் மனை மதிப்பீட்டு குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டன. இந்தவகை ஒப்புதலில், அரசு விதிக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு, துவக்க நிலையிலிருந்தே ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

### 1948 ஆம் ஆண்டைய குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்

8.7. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய நிலையினை பாதுகாக்கும்பொருட்டு, வழக்கமாக மேற்கொள்ளும் ஆய்வுகளைத் தவிர, நடப்பு ஆண்டில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படாததற்காக கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதுடன், சட்ட விதிகளை பின்பற்றத் தவறிய நிர்வாகங்கள் மீது வழக்குகளும் தொடரப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 131 நீதிமன்ற வழக்குகளும், 102 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. 31-03-2004 முடிய உள்ள காலாண்டில், 17 நீதிமன்ற வழக்குகளும், 6 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

### குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்

8.8. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு சட்ட விதிமுறைகளுள் ஒன்றான பிரிவு 67–ன்படி, தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் தொடர்பாக இத்துறை மிகவும் சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, சட்ட விதிகளை கடைபிடிக்க தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள்மீது, தொழிற்சாலை சட்டப் பிரிவு 92–ல் விதிக்கப்பட்ட தண்டனையைவிட கடுமையானதாகக் கருதப்படும் குழந்தைத் தொழிலாளர் சட்டம் பிரிவு 14 மற்றும் 15–ன்கீழ் தண்டனை விதிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இவ்வாறாக, 2003 ஆம் ஆண்டு, 236 வழக்குகள் தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ரூ. 7,15,500/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மேலும், 31–03–2004 முடிய உள்ள காலாண்டில் 34 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, ரூ. 1,94,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கமான ஆய்வுகளைத் தவிர பிரதி மாதமும் சிறப்பு ஆய்வுகள் நடத்தி ஊறு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்துதலைத் தடுப்பதற்கு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. தற்போது இதுபோன்ற ஆய்வுகள் மேற்கொள்ளும் பணி அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டில் 2,138 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31–03–2004 முடிய உள்ள காலாண்டில் 223 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



### இதர சட்டங்கள்

8.9. மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர, சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

### உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு

### உடல்நல மேம்பாடு செயல்பாடுகள்

8.10. இரசாயனத் தொழிற்சாலைகளில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையால் தொழிலாளர்களின் உடல் நலத்திற்கு ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்தவும், உடல் நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள், தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு, அதன்வழி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும் அவர்தம் நல மேம்பாட்டு வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

இத்துறையில் இயங்கிவரும் தொழில் நலவியலகம், சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள அமோனியா, குளோரின், சல்பர்–டை–ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல் நலம் பாதிக்கப்படுவதை கண்காணிக்கிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக்கூடிய விளைவுகள் குறித்தும் இந்த தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.

தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களது காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்களின் மனநிலை

[2004 ஜுலை 31

பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சனையை எதிர்கொள்ள இத்துறை சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் சப்தத்தினை அளவீடு செய்ய, தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு ஒலி அளப்பான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதிக இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் இத்துறை ஆய்வாளர்கள் அந்த சப்தத்தினை இந்த அளவீட்டு கருவி மூலம் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க வழிமுறைகள் தெரிவித்து வருகின்றனர்.

**சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்**

8.11. தொழிலாளர் பாதுகாப்பு, தொழிலாளர் உடல் நலம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளிலும் பணிகளை விரிவுபடுத்த வேண்டி, தொழிற்சாலைகள் சட்டத்தை செயல்படுத்துவதுடன், 1988 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களும் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும், அதிக அழுத்தத்தில் இயங்கும் அழுத்தக் கலன்களின் இயக்கப் பாதுகாப்பினை உறுதி செய்வதே சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களின் முதன்நிலை பணியாக வகுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தும் பொறுப்பும் இக்கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. விபத்து அதிகம் ஏற்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் செயலாக்கம் குறித்த பாதுகாப்பு அளவீடுகள் இக்கோட்டங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கோட்டங்களின் 8 உதவி மருத்துவ அலுவலர்கள், அபாய செயல்முறை உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உடல் நலப் பாதுகாப்பு குறித்து கண்காணிப்பு மேற்கொள்கின்றனர்.

**மாநில பாதுகாப்பு விருதுகள்**

8.12. தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும்பொருட்டு, அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனிதநேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட, பணிபுரிந்த மனித நேரங்கள்



2004 ஜுலை 31]

அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ்வு எண்ணிக்கை விகிதம் குறைவு, நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், முதல் பரிசாக ரூ.2,500/– மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.1,500/– மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மேலும், விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

31-03-2003 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் 1998, 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளுக்கான உயர்ந்த உழைப்பாளர் விருது 101 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், மேற்படி ஆண்டுகளுக்கான பாதுகாப்பு விருது 198 தொழிற்சாலைகள் நிர்வாகத்தினருக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது.

| பரிசு | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|
| முதல் பரிசாக ரூ. 2500/- பெறுமான வெள்ளிக் கேடயமும் சான்றிதழும் பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை. | 55 | 70 | 73 |
| இரண்டாம் பரிசாக ரூ. 1500/- பெறுமான வெள்ளிக் கேடயமும் சான்றிதழும் பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை. | 40 | 49 | 45 |
| மூன்றாம் பரிசாக சான்றிதழ் பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை. | 33 | 30 | 38 |

**தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

8.13. தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துகளுக்கு மட்டுமின்றி, 24 மணிநேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்படும். 2002 ஆம் ஆண்டு வரை தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 1,09,633 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 2003 ஆம் ஆண்டில் 21,315 தொழிலாளர்களும், 31-03-2004 முடிய உள்ள காலாண்டில் 4,996 தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர். 2003 ஆம் ஆண்டில் ரூ.7,00,000/– ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## பயிற்சி மற்றும் கருத்தரங்கு

### பாதுகாப்புப் பயிற்சி பணிகள்

8.14. தொழிலகங்களில் விபத்துகளின் நிகழ்வுகளைத் தடுத்திட, சட்டச் செயலாக்க பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. விபத்துகளைத் தடுத்திட, தொழிலாளர் களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றன.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திலேயே, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தி, அதன்மூலம் விபத்துக்களைக் குறைப்பதற்கு துணை புரிந்துள்ளன. 2003 ஆம் ஆண்டில், 272 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 7,998 தொழிலாளர்களும், 31-03-2004 முடிய உள்ள காலாண்டில் 92 பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டு 3,194 தொழிலாளர்களும் பயனடைந்துள்ளனர்.



### சிவகாசி பயிற்சி மையம்

8.15. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதிப் பொருட்களை கையாளுகின்றனர். இவற்றைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகள் இவர்களுக்குத் தெரிவதில்லை. இதன் காரணமாக தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேதியல் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கும், செயல்படுத்துவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் மற்றும் இருப்பு வைத்துக் கொள்வதற்கும் பல்வேறு வகையான பாதுகாப்பு வழிமுறைகளைத் தொழிலாளர்களுக்குக் கற்றுத் தருவதற்காக, சிவகாசியில் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் தலைமையில் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் சீரிய பணியினைத் தொடர்ந்து, தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட 71 பயிற்சி வகுப்புகளில தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையைச் சார்ந்த 3,124 தொழிலாளர்களும், 31–03–2004 முடிய உள்ள காலாண்டில் 32 பயிற்சி வகுப்புகளில் 1,073 தொழிலாளர்களும் பயனடைந்துள்ளனர்.

### கருத்தரங்குகள்

8.16. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளன்றி, தொழிலகப் பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும்வண்ணம் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. எதிர்காலத்தில், தேசிய பாதுகாப்புக் குழுமம் மற்றும் இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை கருத்துரு கொண்டுள்ளது.

## மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழு

8.17. 1988 ஆம் ஆண்டு முதல், மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழு ஆகிய இரண்டு குழுக்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தரத்தில் உறுப்பினர் செயலாளரைக் கொண்டு செயலபட்டு வருகின்றன.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசுத் துறைகளின் பிரதிநிதிகள், அபாயகரமான தொழிற்சாலை நிர்வாகங்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், இரசாயன பொறி இயல் வல்லுநர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலாளர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இக்குழுவின் செயற்காலம் 31–08–2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழு, அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்களைத் தலைவராகவும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரதிநிதிகள், தொழிற் நிறுவன கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுநர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலாளர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இதன் செயற்காலம் 31–08–2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் முடிவு செய்தபடி, தோல் பதனிடும் தொழிற்சாலைகள், காகித தொழிற்சாலைகள், சர்க்கரை, எரிசாராயம் மற்றும் மதுபான தொழிற்சாலைகள், அனல் மின்நிலையங்கள், அபாயகரமான மற்றும் இடர்மிகுந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றில் தொழிலாளர் பாதுகாப்பு சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்பொருட்டு, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் வல்லுநர்களாக



உள்ளவர்கள் இக்குழுக்களில் உறுப்பினர்களாவர். இத்துணைக் குழுக்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்தி, தமது அறிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளன. அரசின் ஆணைகளின்படி, இத்துணைக் குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டி, சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகங்களுக்கு அப்பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

08–01–2004 அன்று அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழுவின் 10-வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்மீது தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள துணைக் குழுக்கள் தவிர, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள்ள, கீழ்க்காணும் துணைக் குழுக்கள், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்/ உறுப்பினர் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளன.

(1) மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கவும், எஞ்சியுள்ள பெரும் விபத்து இடர்தரு தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளவும், பெரும் விபத்து இடர்தரு தொழிற்சாலைகளுக்கான துணைக் குழு, 03–01–2003 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அரசாணை (நிலை) எண் 2–ல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இத்துணைக் குழு சமையல் எரிவாயுவைப் பெருமளவு கொள்கலன்களில் சேமித்து வைத்து உபயோகிக்கும் தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொண்டது. இத்துணைக் குழுவின் ஆய்வின் அடிப்படையில், தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 விதி 95–ன்கீழ், திரவப்படுத்தப்பட்ட / உயர் அழுத்தத்திலுள்ள எளிதில் தீப்பற்றக்கூடிய வாயுக்களுக்கான பாதுகாப்பு வரைவு அட்டவணை உருவாக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

(2) 07-01-2003 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அரசாணை (நிலை) எண் 3–ல் அமைக்கப்பட்டது நூற்பாலைகளுக்கான துணைக் குழு. இத்துணைக் குழு 30 நூற்பாலைகளைப் பார்வையிட்டு, பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் சுற்றுச்சூழல்

தொடர்பாக ஆய்வுகளை நடத்தி, தேவையான தகவல்களை திரட்டியுள்ளது. குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(3) 14-01-2003 நாளிட்ட, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அரசாணை (நிலை) எண் 8—ல் அமைக்கப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கான துணைக் குழு, தமிழகம் முழுவதும் உள்ள 14 சிமெண்ட் ஆலைகளில் ஆய்வு மேற்கொண்டு, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய அம்சங்கள் குறித்த தகவல்களையும், புள்ளி-விவரங்களையும் சேகரித்துள்ளது. பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவைகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளுடன் துணைக் குழுவின் அறிக்கை இறுதி வடிவம் பெற்றுவருகிறது.

**மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு**

8.18. மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பெருவிபத்து மற்றும் இடர் மிகுந்த தொழிற்சாலைகளில் இருந்து ஆண்டுதோறும் பெறப்படும் பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்யும் நோக்குடன் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு, அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

இக்குழு, இதுவரை 38 கூட்டங்களை நடத்தியுள்ளது. 45 பெரும் விபத்து மற்றும் இடர்மிகு தொழிற்சாலைகளில் இருந்து பெறப்பட்ட பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்து பரிந்துரைகளை வழங்கியுள்ளது. இக்குழு குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டங்களை நடத்தி வருகின்றது.

**மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு**

**8.19. மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுவின் மூன்று முக்கிய செயல்பாடுகளாவன:—**

(1) வேலை அளிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தக்க பயிற்சியும், ஆலோசனையும் தந்து இவர்களுக்கிடையே





சுமுகமான, இயல்பான சூழ்நிலையை உருவாக்கி அதன் அடிப்படையில் உற்பத்தித் திறன் பற்றிய இவர்களுடைய மாறுபட்ட சிந்தனைகளுக்கு இடையே ஏற்படும் பெரிய இடைவெளியைக் குறைத்தல்.

(2) வேறுபட்ட சிந்தனை தாக்கங்களைக் கொண்ட உற்பத்தியின் இரண்டு முக்கிய கோட்பாடுகளான பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதையும் மாறாக அவை ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவை என்பதையும் வலியுறுத்தி ஒருங்கிணைப்பது.

(3) அரசு, நிர்வாகங்கள், தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து இயங்கும் இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கையை ஒவ்வொரு வருடமும் விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளைச் சிறப்பான முறையில் ஆற்றுவதற்கு, மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு, அரசாணை எண் 1866, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4-9-1985-ல் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தித் திறன் குறித்த பயிற்சி வகுப்பு நடத்த போதுமான வசதிகள் இல்லாதிருந்தபோதிலும், இக்குழு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**நவீனமயமாக்குதல்**

8.20. பன்னாட்டு நிறுவனங்களின் அந்நிய முதலீடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் துவங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில், ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் பொறியியல் கல்வித் தகுதி பெற்றுள்ள அலுவலர்கள், தற்கால தொழில்நுட்ப மேம்பாட்டுக்கேற்ப தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இக்குறிக்கோள்களுடன் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள் மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், நிர்வாகம்,

தொழில்நுட்பத் திறமை, பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகியவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, தொலைநோக்குப் பார்வையுடன் நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

**எதிர்காலத் திட்டங்கள்**

8.21. மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட "கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம்" 1996—ன்கீழ் தமிழ்நாடு விதிகள் இயற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விதிகள் அறிவிக்கை செய்யப் பெற்ற பின்னர் இவ்விதிகளின்கீழ், கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடற் சுகாதாரம் மற்றும் இதர நலன்களை உறுதி செய்திட அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்துறையில் e-Governance-ஐ சிறப்பான முறையில் செயல்படுத்தும்பொருட்டு, இத்துறையின் பணிகளை ஆய்ந்தறிந்து தேசிய தகவல் மையம் அறிக்கை கொடுத்துள்ளது. அவ்வறிக்கையின்படி, இத்துறையின் சார்நிலை அலுவலகங்களைத் தலைமை அலுவலகத்துடன் Network மூலம் இணைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகள் நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் ஆண்டறிக்கைகள் எளிமையாக்கப்பட்டு, துரிதமாக சமர்ப்பிக்க ஏதுவாக பல சட்டங்களை ஒருங்கிணைத்து, ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை ஒன்று வடிவமைக்கப்பட்டு, வரைவு அறிக்கை அரசாணை எண் 128, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 14—11—2003 மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்**

8.22. ஆய்வகத் துறையின் அனைத்துப் பணிகளிலும் பாராட்டத்தக்க வகையில் வளர்ச்சியை இத்துறையின் செயலாக்க அறிக்கையில் காண முடிகிறது. 2002 ஆம் ஆண்டில், 12,37,653 தொழிலாளர்களுடன், 32,723 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 2003 ஆம் ஆண்டில் 12,56,120 தொழிலாளர்களுடன், 34,071 ஆக அதிகரித்துள்ளது. 1948 ஆம் ஆண்டைய தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர சட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள



பயன்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதி செய்யும்பொருட்டு, 2003 ஆம் ஆண்டில் 27,752 முறையான ஆய்வுகளும், 926 சோதனை ஆய்வுகளும், 339 திடீர் ஆய்வுகளும், 7,863 சிறப்பு, விடுமுறை மற்றும் இரவு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சிறப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தவகையில் 131 நீதிமன்ற வழக்குகளும், 102 கேட்பு மனுக்களும் இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 31

# அத்தியாயம் 9

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்புப் பிரிவு)

**வேலைவாய்ப்புப் பணிகள்**

**வேலைவாய்ப்பகங்களின் பணிகள்**

9.1. வேலைநாடுநரைப் பதிவு செய்தல், தக்க காலியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரைத்தல், வேலைவாய்ப்பற்றோருக்கும், மாணவர்களுக்கும் தொழில்முறை வழிகாட்டிப் பணிகள் ஆற்றுதல், வேலைவாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்பற்றோர் பற்றிய புள்ளி விவரங்களை அவ்வப்போது சேகரித்து அறிக்கைகள் தயார் செய்தல் போன்றவை இத்துறையின் வேலைவாய்ப்புப் பிரிவின் முக்கியப் பணிகளாகும்.

**வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு**

9.2. வேலைவாய்ப்புப் பிரிவில் ஆணையருக்கு உதவியாக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) மற்றும் இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிப்பதற்கென சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 30 வருவாய் மாவட்டங்களில் 29 வருவாய் மாவட்டங்களுக்குத் தனித்தனியாக ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் உள்ளது. புதிதாக பிரிவினை செய்யப்பட்ட தர்மபுரி மாவட்டத்திற்கென ஓசூரில் இயங்கி வரும் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தரம் உயர்த்தப்பட்டு, தர்மபுரியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது. இவைதவிர, கீழ்க்காணும் சிறப்பு அலுவலகங்களும் வேலைவாய்ப்புப் பிரிவின்கீழ் செயல்பட்டு வருகின்றன:—



2004 ஜூலை 31]

| | | |
|---|---|---|
| (அ) | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம் சென்னை. | 1 |
| (ஆ) | தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், அடையாறு, சென்னை. | 1 |
| (இ) | தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம் சென்னை, மற்றும் கோயம்புத்தூர். | 2 |
| (ஈ) | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், அண்ணா நகர், சென்னை. | 1 |
| (உ) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் கடலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்கள். | 5 |
| (ஊ) | பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் சிறப்பு நிலையங்கள்,சேலம், சங்கராபுரம் (விழுப்புரம்) திருவண்ணாமலை மற்றும் உதகமண்டலம். | 4 |
| | மொத்தம் | **14** |

**2003-04 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பணிகளின் செயல்பாடுகள்**

**பதிவு மற்றும் பரிந்துரைப் பணிகள்**

9.3. 1-1-2003 முதல் 31-3-2004 வரை, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் 3,89,367 மனுதாரர்கள் வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்தனர். அவர்களுள் 35,504 மனுதாரர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

31-3-04 நிலவரப்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களின் உயிர் பதிவேட்டில் வேலைக்காகப் பதிவு செய்துள்ள மனுதாரர்களின் எண்ணிக்கை 49.85 இலட்சம் ஆகும். அவர்களுள் 18.29 இலட்சம் பெண்கள், 11.68 இலட்சம் ஆதி திராவிடர்கள் மற்றும் 13,566 பழங்குடியினர் ஆவர்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவித்தல்) சட்டம் 1959றி ஐ அமல்படுத்துதல்**

9.4. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவித்தல்) சட்டம் 1959—ன்கீழ், வேலையளிப்போரிடமிருந்து வேலை நிலவரத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. 31–3–2002 மற்றும் 31–3–2003—ல் தொடர்பு கொள்ளப்பட்ட பொது மற்றும் தனியார்த் துறை நிறுவனங்கள் மற்றும் அந்நிறுவனங்களில் பணியாற்றிய மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம் | 31-3-2002 உடன் முடிவுற்ற ஆண்டு | | 31-3-2003 உடன் முடிவுற்ற ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | | பொதுத் துறை | தனியார் துறை | பொதுத் துறை | தனியார் துறை |
| 1 | புள்ளி விவரங்கள் பெற தொடர்பு கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,242 | 13,258 | 12,256 | 13,528 |
| 2 | புள்ளி விவரங்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,214 | 12,460 | 12,223 | 12,657 |
| 3 | பணியாளர் எண்ணிக்கை | 16,12,297 | 9,04,061 | 15,70,322 | 8,31,888 |

**மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு அளிக்கப்படும் தொழில்முறை வழிகாட்டுதல்**

9.5 தமிழ்நாட்டில் மொத்தம் 18 தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்குத் தொழில் தகவல் மற்றும் பயிற்சி விவரங்கள் போன்றவற்றைச் சேகரித்து வழங்கி வருகின்றன. பதிவின் போது வழிகாட்டுதல், தனி நபர் ஆலோசனை அளித்தல், பழைய பதிவுகளின் மறு ஆய்வு பரிசீலனை, குழு விவாதம், தொழில் பற்றிய விவரங்களை அளித்தல், தொழிற்பழகுநர் பணியமர்த்தல் மற்றும்



பயிற்சிகளில் பணியமர்த்தல், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்முறை வழிகாட்டி சொற்பொழிவாற்றுதல், வேலையளிப்போருடன் தொடர்புகொள்ளுதல், வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடத்துதல், மற்றும் தமிழ்நாடு தொழிற்கல்விகளுக்கான நுழைவுத் தேர்வுகளுக்காக ஆதி திராவிடர் மனுதாரர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவை இப்பிரிவுகள் ஆற்றும் பணிகள் ஆகும்.

1–1–2003 முதல் 31–03–2004 வரை 1,454 மனுதாரர்கள் பயிற்சியில் அமர்த்தப்பட்டனர். 1,709 தொழில் முறை வழிகாட்டி சொற்பொழிவுகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களால் ஆற்றப்பட்டுள்ளன. 29 தொழில்நெறிக் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**ஆதி திராவிட இனத்தோர்க்கு தமிழ்நாடு தொழிற்கல்விகளுக்கான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள்**

9.6. 1–1–2003 முதல் 31–03–2004 வரை ரூ.5.85 இலட்சம் செலவில் 1025 இந்து ஆதி திராவிட மனுதாரர்களுக்கு 2003 ஆம் வருடத்திய தொழிற் கல்விகளுக்கான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

**சுய வேலைவாய்ப்பு**

9.7. 1–1–2003 முதல் 31–03–2004 வரை சுய வேலைவாய்ப்புக்காக 2,196 மனுதாரர்களுக்குப் பல்வேறு வங்கிகளிலிருந்து பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ரூ.788.43 இலட்சம் கடன் உதவியாகப் பெற்றுத்தர வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உதவி செய்தன

**உடல் ஊனமுற்றோருக்கான பணியமர்த்தல் / மறுவாழ்வு**

9.8. சென்னை, அண்ணா நகரில் அமைந்துள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், நாகர்கோவில், கோயம்புத்தூர், சேலம், காஞ்சிபுரம், வேலூர், ஈரோடு, உதகமண்டலம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோருக்கான 13 சிறப்புப் பிரிவுகள் மூலம் உடல் ஊனமுற்றோருக்குப் பணியமர்த்தம் மற்றும் மறு வாழ்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

31-03-2004 நிலவரப்படி 74,180 உடல் ஊனமுற்றோர்கள் பதிவு செய்து வேலைக்காக உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கின்றனர். அவர்களில் 7,699 கண் பார்வையற்றோர், 6,106 செவிப் புலனிழந்தோர் மற்றும் 60,375 உறுப்பு நலம் குன்றியோர் ஆவர். 1-1-2003 முதல் 31-03-04 வரை 213 கண் பார்வையற்றோர், 201 செவிப் புலனிழந்தோர் மற்றும் 3,315 உறுப்பு நலம் குன்றியோர் பதிவு செய்துள்ளனர்.

**பார்வையற்றோருக்கு, வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம்**

9.9. 2003-2004 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.30.00 இலட்சத்தில் ரூ.24.70 இலட்சம் செலவிடப்பட்டு, அதன்மூலம் 1056 மனுதாரர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள்**

**சிறப்புத் தொழில்முறை வழிகாட்டும் மையங்கள்**

9.10. உதகமண்டலம், சங்கராபுரம், திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய 4 இடங்களிலும் பழங்குடியினருக்கான சிறப்பு வழிகாட்டி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களின் முக்கிய செயல்பாடுகள் வருமாறு:

1. தொழில்கள் மற்றும் பயிற்சி பற்றிய விவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் விவரங்களைப் பழங்குடியினருக்கு வழங்குதல்.

2. பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு வழிகாட்டுவதற்காக காலாண்டு இடைவெளியில் தொழில் தகவல் கையேடுகளை வெளியிடுதல்.

3. பெருவாரியான அளவில் பழங்குடியின மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் மற்றும் தங்கியிருக்கும் விடுதிகளுக்குச் சென்று தொழில்முறை வழிகாட்டுதல், சொற்பொழிவுகள் மூலம் அவர்களுக்கு மேற்படிப்பு, தொழிற் கல்வி படிப்பு, பயிற்சி வசதிகள், வெளிநாடுகளில் கிடைக்கும் கல்வி மற்றும் தொழில்கள் பற்றிய விவரங்கள், கல்வி உதவித் தொகை பற்றிய விவரங்கள் மற்றும் பழங்குடியினர் பற்றாக்குறை காணப்படும் தொழில்கள் (உதாரணம் சுருக்கெழுத்துத் தட்டச்சர், இடைநிலை ஆசிரியர்) பற்றிய விவரங்களை வழங்குதல்.



4. பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்ய தகுதிவாய்ந்த பழங்குடியினத்தவர் கிடைக்கப்பெறாத நேர்வுகள் தெரிவு செய்யப்பட்டு, அப்பணியிடங்களை நிரப்பும் வண்ணம் பழங்குடியினருக்குத் தகுந்த பயிற்சியளித்தல்.

5. பழங்குடியினர் வசிக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களை வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்தல்

6. பழங்குடியினரை சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்கப்படுத்தி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெற்றுத் தருதல்.

**பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்**

| வரிசை எண் | 2003-2004 ஆம் ஆண்டில் செயல்பாடுகளின் விவரம் (31-03-2004 முடிய) | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நெடுந்தொலைவில் வசிக்கும், பதிவு செய்யப்பட்ட பழங்குடியின மனுதாரர்கள் எண்ணிக்கை | 246 |
| 2 | பதிவின்போது வழிகாட்டப்பட்ட பழங்குடியின மனுதாரர்களின் எண்ணிக்கை | 432 |
| 3 | தனிநபர் தகவல் வழங்கப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை | 1443 |

[2004 ஜூலை 31

| | | |
|---|---|---|
| 4 | வழிகாட்டுதலுக்காக நடத்தப்பட்ட குழுக் கூட்டங்கள் | 161 |
| 5 | பழங்குடியின மனுதாரர்களுக்காக நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு பயன்பெற்ற மனுதாரர்களின் எண்ணிக்கை | 5600 |
| 6 | ஆற்றப்பட்ட தொழில்நெறி சொற்பொழிவுகள் | 129 |
| 7 | தொடர்பு கொள்ளப்பட்ட வேலையளிப்போர்/ நிறுவனங்களின் எண்ணிக்கை | 89 |
| 8 | விஜயம் செய்யப்பட்ட பழங்குடியினருக்கான பள்ளிகள் மற்றும் தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை | 86 |
| 9 | வேலையில் அமர்த்தப்பட்ட பழங்குடியின மனுதாரர்களின் எண்ணிக்கை | 39 |
| 10 | நடத்தப்பட்ட தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் | 17 |

**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்**

9.11. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர் ஆகிய 5 இடங்களில் ஆதி திராவிட/பழங்குடி இன மனுதாரர்களுக்குப் பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:—

(அ) ஆதி திராவிட/பழங்குடி இனத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்களுக்குத் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் தொழில் தகவல்கள் பற்றிய விவரங்கள் அளித்தல்.

(ஆ) ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு தன்னம்பிக்கையூட்டுதல் மற்றும் தொடர்புடைய திட்டங்களை வகுத்துச் செயலாக்குதல்.



2004 ஜூலை 31]

(இ) பணி மேம்பாட்டுத் திட்டங்களை அமைத்து நடத்துதல்.

(ஈ) ஆதி திராவிட/பழங்குடியின வேலைநாடுநர்களுக்குத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தில் பயிற்சிபெற வசதிகள் ஏற்படுத்துதல்.

(உ) ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு இதுபோன்ற பிற தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்கண்ட பணிகள் தவிர, பல்வேறு தேர்வுக் குழுக்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் இந்து ஆதி திராவிட மனுதாரர்களுக்குப் பயிற்சியளிக்கும் பணியினையும் இம்மையங்கள் ஆற்றி வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் ஆதி திராவிட மனுதாரர்களின் வெற்றி வாய்ப்பிற்கு வழிவகுக்கின்றன.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டும் மையங்களின்மூலம் பயனடைந்த ஆதி திராவிட பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு:—

| வரிசை எண் | 2003-2004 ஆம் ஆண்டில் செயல்பாடுகளின் விவரங்கள் (31-03-2004 நிலவரப்படி) | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வாழ்க்கைத் தொழில் மற்றும் பயிற்சி பற்றிய தகவல்கள் வழங்கப்பட்ட மூத்த ஆதி திராவிட பதிவுதாரர்களின் எண்ணிக்கை | 2454 |
| 2 | ஆதி திராவிட பதிவுதாரர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை. | 143 |
| 3 | வாழ்க்கைத் தொழில்நெறி உரைகளின் எண்ணிக்கை | 314 |
| 4 | சுயவேலைவாய்ப்பிற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 458 |

**கிராமப்புறங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் தோற்றுவித்தல்**

9.12. ஊரகத்தில் படித்தவர்கள் நலனுக்காக அரசாணை எண் 57 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்1) துறை, நாள் 26-6-2002-ல், 6 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் ஏற்படுத்த ஆணைகள் வழங்கப்பட்டன. பின்னர், அரசாணை எண் 114, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்1) துறை, நாள் 29-9-2003-ல், எஞ்சியுள்ள 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 23-9-2003 அன்று சிவகங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னார்வப் பயிலும் வட்டங்களைத் தொடங்கி வைத்து அர்ப்பணித்தார்.

தன்னார்வப் பயிலும் வட்டங்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் போட்டியிடும் திறனை மேம்படுத்துகிறது. இம்மனுதாரர்களுக்காக போதுமான புத்தகங்கள், மாத இதழ்கள் / வார இதழ்கள் / நாளிதழ்கள் ஆகியவை தன்னார்வப் பயிலும் வட்டங்களில் வாங்கிப் பயன்படுத்தப்படுகின்றன. இதைத் தவிர, பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு மனுதாரர்களை தயார்படுத்துவதற்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகளையும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் நடத்துகின்றன.

மேற்படி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கான புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் இதர சாதனங்கள் வாங்குவதற்கு அரசால் ரூ.53.06 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 31-03-2004 வரை 7,316 மனுதாரர்கள் உறுப்பினர்களாகியுள்ளனர். 2003-2004 ஆம் ஆண்டில் 31-03-2004 முடிய ரூ.51.96 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**தனியார் துறையில் பணியமர்த்தல்**

9.13. பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தல் குறைந்து வரும் நிலையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்குத் தனியார் துறையில் பணியமர்த்தம் பெற்று வழங்குவதையும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இலக்காகக்





கொண்டுள்ளன. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தனியார் துறையில் பணியமர்த்தல் முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பிரதி மாதம் இரண்டாம் வெள்ளிக்கிழமை தனியார் துறை பணியமர்த்தல் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த முகாம்களில் தனியார் துறை வேலையளிப்போர்கள் மற்றும் வேலைநாடும் மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே சந்திக்கின்றனர். அன்றையதினமே வேலையளிப்பவர் பணி நியமனம் வழங்குகிறார். தனியார் துறை வேலையளிப்பவர்களுக்குத் தேர்வு செய்வதற்கான செலவினம் மற்றும் காலம் மிச்சமாவதால் இத்தகு முகாம்கள் பரவலாக வரவேற்கப்படுகின்றன. இப்பணி, தனியார் துறை வேலையளிப்பவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. 01-01-2003 முதல் 31-03-2004 வரையிலான காலவெளியில் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களாலும் 9,118 மனுதாரர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்**

9.14. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் அனைத்தும் கணினிமயமாக்கும் பணி 1986 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டிலுள்ள 33 வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**தனியார் துறையில் பணியமர்த்தலை ஊக்குவிக்க இணையதளம் அமைத்தல்**

9.15. வேலைவாய்ப்புத் துறையின் இணையதளம், (www.employment.tn.gov.in) ரூ.7.05 இலட்சம் செலவில் 2002-2003-ல் அரசால் ஒப்பளிக்கப்பட்டு, 06-06-2003 முதல் சென்னை தேசிய தகவல் மைய உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த இணையதளத்தில் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தைச் சார்ந்த 2.85 லட்சம் பதிவுதாரர்கள் பற்றிய விவரங்கள் உள்ளன. இந்த இணையதளம் தொடங்கப்பட்டதிலிருந்து 31-03-2004

[2004 ஜூலை 31

வரையிலான குறுகிய காலவெளியில் 1,09,038/- க்கும் அதிகமானோரால் பார்வையிடப்பட்டுள்ளது. 935–க்கும் மேற்பட்ட வேலையளிப்பவர்கள் இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர். தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் செல்லாமலேயே 'ஆன்–லைன்' முறையில் தங்கள் பதிவுகளைப் புதுப்பித்துக்கொள்ளும் வசதி இதன் சிறப்பம்சமாகும்.

இந்த இணையதளம், இணையவலை உபயோகிப்பவர்களிடையே துரித வெற்றியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இவ்விணையதளத்தில் இணையவலை உபயோகிப்பவர்களின் பயனுக்காக, உயர் கல்வி, போட்டித் தேர்வுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளின்மீதான தகவல்கள் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்விணையதளத்தில் வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் விவரங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்விணையதளத்தில் அளிக்கப்படுகின்ற விவரங்களைக் காலவெளி நிலவரப்படி தொடர்ந்து முழுமைப்படுத்தி வருதல் இதன் சிறப்பு அம்சமாகும்.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 10

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

10.1. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 30–11–1978 அன்று பதிவு செய்யப்பட்டது. இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும். இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம், வேலை தேடும் இந்திய தொழிலாளர்கள் அயல்நாடுகளில் தகுந்த பணியமர்த்தங்களைப் பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும். வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

10.2. இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 31–3–2003 அன்று உள்ளபடி, அமைந்தவாறு அதன் மொத்த இலாபம் ரூ.22.75 இலட்சமாகும்.

10.3. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31–3–2004 வரை 5,793 பதிவுதாரர்களுக்கு அயல்நாடுகளில் வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் மட்டும் 49 மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்துள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் பயன் பெற்றோர்களில் பெரும்பாலோர் முழுத் திறன் படைத்த அல்லது ஓரளவு திறன் படைத்த பணியாளர்களும் மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களும் ஆவர். ஏப்ரல் 2003 முதல் மார்ச் 2004 வரை, 298 பதிவுதாரர்களுக்கு, குறிப்பாக மருத்துவர்களுக்கும், மருத்துவம் சார் பணியாளர்களுக்கும், பல்வேறு நாடுகளில் பணியமர்த்துதலுக்கான தற்காலிக நியமன ஆணையினை சவுதி அரேபியா சுகாதாரத் துறைச் சரகத்தின் மூலம் இந்நிறுவனம் பெற்றுள்ளது. சவுதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் தமது துறைக்குத் தேவையான மருத்துவர்களையும், மருத்துவத் தொழில்நுட்பப் பணியாளர்களையும் தேர்வு செய்வதற்குச் சார்ந்திருக்கும் நிறுவனங்களில் இந்நிறுவனமும் ஒன்றாகும்.

10.4. தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம் பின்வரும் பணிகளையும் செய்து வருகிறது:—

(1) சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் தொடர்பான பணிகளை அளிப்பது;

(2) வெளிநாடுகளில் உள்ள வேலையளிப்போரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கும், தம் சொந்த முயற்சியால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறும் மனுதாரர்களுக்கும் விசா முத்திரையிடுவது தொடர்பான பணியைச் செய்து தருவது;

(3) உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச் சீட்டுகளை விற்பனை செய்வது. இந்நிறுவனம் முழுமைபெற்ற ஒரு பயணப் பிரிவைக் கொண்டுள்ளது. பன்னாட்டு விமான போக்குவரத்துக் கழகம் என்ற அமைப்பின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்நிறுவனம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச் சீட்டுகளையும் கையிருப்பு வைத்துள்ளது. மேலும், இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் அயல்நாட்டு விமானப் பயணச் சீட்டுகளை கணினி மூலம் முன்பதிவு செய்யும் வசதிகளைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் 31-3-2004-ல் முடிவடைந்த நிதியாண்டில் ரூ.4.73 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. இது, 31-3-2003 ஆம் நிதி ஆண்டில் ஈட்டிய வருவாயான ரூ.4.46 இலட்சத்தைவிட ரூ. 0.27 இலட்சம் கூடுதலாகும்;

(4) இந்நிறுவனம் அயல்நாட்டில் வாழும் தமிழருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்துகின்றது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே செலுத்த வேண்டிய எளிய பிரீமியத் தொகையின் மூலம் 5 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான விபத்து மற்றும் மருத்துவப் பாதுகாப்புப் பெற இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13-5-2002



அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 31-3-2004 அன்று வரை 58 காப்புறுதிப் பத்திரங்களை அளித்து, 2003-2004-ல் ரூ.2.63 இலட்சம் பிரீமியமாகப் பெற்று, அதன் மூலம் ரூ.0.62 இலட்சம் வருமானமாகப் பெற்றுள்ளது. இத்திட்டத்தைச் செவ்வனே செயலாக்க 37 காப்பீட்டு முகவர்கள் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட வாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

10.5. இந்நிறுவனம் 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூபாய் 9.26 இலட்சம் நிகர வருமானமாகப் பெற்று, தமிழக அரசுக்கு 8 விழுக்காடு இலாபப் பங்கு அளித்துள்ளது. இந்த இலாபப் பங்கு முந்தைய ஆண்டு அரசுக்கு அளித்த 7 விழுக்காடு இலாபப் பங்கைவிட ஒரு விழுக்காடு அதிகமாகும்.

# அத்தியாயம் 11

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (பயிற்சிப் பிரிவு)

### தொழில்நுட்பப் பயிற்சி

### துறையின் குறிக்கோள்

*11.1.* நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப, பல திறன் ஆற்றல் உள்ள, பயிற்சி பெற்ற மனித சக்தி, தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரம் அதனுடைய தொழில் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தொழிற்துறையின் வளர்ச்சிக்காக, ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்ற நிலையில் கைவினைஞர் பயிற்சித் திட்டம், அரசினர் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் பல தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்ற ஆற்றல் படைத்த கைவினைஞர்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்துறையினால் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தேசிய தொழிற்சான்றினைப் பெற்றவர் நம் நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெறும் தகுதி மற்றும் நன்மதிப்பைப் பெற்றுள்ளதால், தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

### அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

*11.2.* கைவினைஞர் பயிற்சித் திட்டம், தமிழ்நாடெங்கும் நிறுவப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின்மூலம் கைவினைஞர்களை உருவாக்குகிறது. தமிழ்நாடெங்கும் பரவலாக உள்ள 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், 39 பொறியியல் மற்றும் 16 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன. மொத்த பயிற்சியாளர் (மாணவர் மற்றும் மாணவியர்) இருக்கைகள் 18,394 ஆகும். தொழிற்பிரிவின் இயல்புக்கேற்றவாறு பயிற்சியின் கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுமார் 15,636 மாணவர் மற்றும் மாணவியர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். இம்மாநிலத்திலுள்ள 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுள் மகளிருக்கென 13 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், ஆதி திராவிடருக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்களுக்கென சங்கராபுரத்தில் ஒன்றும் இயங்குகின்றன. மகளிர் முன்னேற்றத்திற்காக ஆண்டிப்பட்டி, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், ஓசூர், தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மூன்று மகளிர் பிரிவுகளும், 616 இருக்கைகளுடன் ஜனவரி 2004 முதல் தொடங்கப்பட்டுள்ளன.



அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 2003–04 ஆம் ஆண்டின் பயிற்சியாளர்கள் சேர்க்கை 13,205 ஆகும்.

*11.3.* அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இட ஒதுக்கீட்டு முறைக்கு உட்பட்டு, மதிப்பெண் தகுதி அடிப்படையில் ஆண்டுதோறும் மாணவர்கள் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகின்றனர். தொழிற்பயிற்சி நிலையத்தில் சேருவதற்குக் குறைந்தபட்ச கல்வித் தகுதி தொழிற்பிரிவுக்கு ஏற்ப, எட்டாம் வகுப்பு தேர்ச்சி முதல் மேல்நிலைக் கல்வி அதாவது +2 வரை ஆகும். பயிற்சியின் கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிற்பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் அகில இந்திய ரீதியில் ஒரே சீராக இருக்கும் வகையில், தேசிய வாழ்வியல் கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் வடிவமைக்கப்பட்டுள்ளன. பயிற்சியின் முடிவில் தொழிற்தேர்வுகள் அகில இந்திய அளவில் ஜூலை மாதம் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தேசிய தொழிற்சான்றுகள் வழங்கப்படுகின்றன. தேர்ச்சி பெறாத பயிற்சியாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் www.Employment.tn.gov.in/iti–ல் வெளியிடப் பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற்சான்று வழங்கப்படுகிறது.

*11.4.* தொழிற்சாலைகளின் தேவைகள், பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளைக் கையாளும் முறை மாறுபட்டு வரும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு புதிய தொழிற் பிரிவுகளான கணினி வழி அச்சுக் கோர்த்தல், கம்மியர் (தொழில் மின்னணுவியல்), கம்மியர் (இயந்திர மின்னணுவியல்) தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் கருவிகள் பராமரிப்பு போன்ற நவீன தொழிற்பிரிவுகள் 2003–2004 ஆம் ஆண்டில் சில அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் துவங்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில்

உள்ள தொழிற்சாலைகள் தொழிற்பயிற்சி நிலையங்களின் கூட்டு நடவடிக்கையை முன்னேற்றவும் பயிற்சி மற்றும் மனித ஆற்றலை மேம்படுத்தவும் இந்திய தொழிலியல் நேசக் கட்டமைப்புடன் "கருத்து மற்றும் நோக்கங்களை ஒப்புக்கொள்ளும் சுருக்கக் குறிப்பு ஒப்பந்தம்" ஒன்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினால் 5 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் 5 தொழில் நிறுவனங்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை நீங்கலாக தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறந்த முறையில் இயங்குவதற்கும், தொழிலாளர் சந்தைக்கும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் மேலாண் நிலைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற் கட்டமாக இம்மேலாண் நிலைக் குழு அம்பத்தூர் மற்றும் ஓசூர் ஆகிய 2 தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்சியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆதி திராவிடர்களுக்கு | : | ரூ.150/– மாதந்தோறும் |
| (ஆ) | பழங்குடியினத்தவர்க்கு | : | ரூ.175/– மாதந்தோறும் |
| (இ) | சீர்மரபினருக்கு | : | ரூ.140/– மாதந்தோறும் |
| (ஈ) | பர்மா / இலங்கை/வியட்நாம் அகதிகளுக்கு | : | ரூ.175/– மாதந்தோறும் |
| (உ) | பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.16,100/–க்கு மிகாமல் இருக்கும் மொத்த பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினருக்கு | : | ரூ.50/–மாதந்தோறும் |

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள்**

11.5. தொழிற்சாலைகளுக்கு தேவையான திறமை வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கிடும் சீரிய முயற்சிக்கு உதவிடும் வகையில், தொழிற்பயிற்சியில் தனியாரும் பங்கு பெற ஊக்கம் அளிக்கப்படுகிறது. தேசிய வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 615 தொழிற் பயிற்சி மையங்கள், 60,213 பயிற்சியாளர்கள் இருக்கைகளுடன் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் ஐம்பது விழுக்காடு இருக்கைகள், அரசின் இன ஒதுக்கீடு மற்றும் மதிப்பெண் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன.



**தொழிற்பள்ளிகள்**

11.6. அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தவிர 37,480 இருக்கைகள் கொண்ட 116 தனியார் தொழிற்பள்ளிகள் உள்ளன. இத் தொழிற்பள்ளிகள் 70 தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன. இத்தொழிற்பள்ளிகளில், உணவு தயாரித்தல், தையற் கலை, கணினி மென்பொருள், அழகுக் கலை, ஆபீஸ் ஆட்டோமேஷன் மற்றும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 45 நாட்கள் முதல் 3 ஆண்டுகள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு வரையில் கல்வி பயின்றவர்கள் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இப்பயிற்சியாளர்களுக்கு மாநில அளவில் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்று வழங்கப்படுகின்றது. 116 தொழிற்பள்ளிகளுள், 49 பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

**தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்**

11.7. அரசு/தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்கள் தமது செயல்திறனை மேம்படுத்திக்கொள்ள தொழில் நிறுவனங்களில் ஓராண்டு முதல் நான்காண்டு வரை தொழிற்பழகுநர் பயிற்சி பெற பரிந்துரைத்து அனுப்பப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் 1984 தொழில் நிறுவனங்களில் 153 தொழிற்பிரிவுகளில் தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது (31–03–2004), 14,858 தொழிற்பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சிக் காலத்தில் தொழிற்பழகுநர்கள் பணிமனை செய்முறைத் திறனை தொழில் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடத திறனை இத்துறையின்கீழ் இயங்கும் 11 தொடர் அறிவுரை மையங்களிலும் பெறுகின்றனர். தொழிற்பழகுநர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதந்தோறும் ரூ.820/– முதல் ரூ.1,230/– வரை உதவித் தொகையாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன. பயிற்சியின் முடிவில் அகில இந்திய ரீதியில் தொழிற்தேர்வு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற தொழிற் பழகுநர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 12,500 தொழிற்பழகுநர்கள் தொழிற்தேர்வில் கலந்துகொள்கின்றனர்.

தொழில் நிறுவனங்களால் புதிதாக அமர்த்தப்படும் தொழிற் பழகுநர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல் அவசியமாகிறது. மேலும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற் பிரிவுகளுக்கான அடிப்படைப் பயிற்சி, தொழிற்பழகுநர் திட்டத்தின் கீழ் உள்ள அடிப்படைப் பயிற்சி மையத்தில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உணவகம், உணவாக்கம் மற்றும் பரிமாறுதல் தொழிற்பிரிவிற்கான அடிப்படைப் பயிற்சி மையம் அம்பத்தூரிலும், இரசாயன தொழிற்பிரிவிற்கான அடிப்படை பயிற்சி மையம் இராணிப்பேட்டையிலும் இயங்குகின்றன. உணவகம் மற்றும் இரசாயன தொழிற்சாலைகளில் பயிற்சி பெறும் தொழிற்பழகுநர்களுக்கு இம்மையங்களில் அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஆதி திராவிட வகுப்பினர் / பழங்குடியினர் நலத் திட்டம்**

*11.8.* ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியின வகுப்பினர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கு எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்க வழிகோலும் சில தொழிற்பிரிவுகளில் தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ஆதி திராவிடர் வகுப்பினருக்கென்று தனியே ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 96 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. இதில் மூன்று தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது .

'பழங்குடியினர் துணைத் திட்டம்' என்பது மலைவாழ் பழங்குடியின மக்களை தொழிற்பயிற்சியில் ஈடுபடுத்தக்கூடிய தனிச் சிறப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினருக்கென தனியாக 80 இருக்கைகளுடன் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் இயங்கி வருகிறது. இதில் மூன்று தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இதைத் தவிர, அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 18% இருக்கைகள் ஆதி திராவிடர் வகுப்பினருக்காகவும், 1% இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**அகில இந்திய திறனாய்வுப் போட்டி**

*11.9.* பல்வேறு மாநிலங்களில் பயிலும் தொழிற்பயிற்சியாளர்களின் போட்டியிடும் திறமையை வளர்க்கும் வகையில், அகில இந்திய திறனாய்வுப் போட்டி 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ஒவ்வோர் ஆண்டும் அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள் 10



தொழிற்பிரிவுகளில் நடத்தப்பட்டு ஒவ்வொரு தொழிற்பிரிவிலும் வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன.

இதுவரை நடைபெற்றுள்ள 39 அகில இந்திய திறனாய்வுப் போட்டிகளில், தமிழ்நாடு இணையற்ற சாதனை புரிந்து, சிறந்த மாநிலம் என்ற பரிசினை 19 முறை வென்று குடியரசுத் தலைவர் கேடயத்தை 19 ஆண்டுகள் பெற்றுள்ளது. ஜனவரி 2003-ல் நடைபெற்ற 39-வது அகில இந்திய திறனாய்வு போட்டியில், கம்மியர் கருவிகள் மற்றும் கம்மியர் மோட்டார் வாகனம் ஆகிய தொழிற் பிரிவுகளில் தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொண்ட பயிற்சியாளர்கள் வெற்றி அடைந்துள்ளனர். வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு ரூ.10,000/- ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் இந்திய அரசால் வழங்கப்படவுள்ளது. இச்சாதனை, தமிழ்நாட்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் சிறந்த பயிற்சியையும் பயனடைந்த பயிற்சியாளர்களின் திறமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

**மாண்புமிகு முதலமைச்சர் விருது**

*11.10.* பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, ஆண்டு தோறும் மாநில அளவில் 14 தொழிற்பிரிவுகளில் திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற்பிரிவிலும் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு ரொக்கத் தொகையாக ரூ.5000/-மும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளரை உருவாக்க காரணமாக இருந்த பயிற்றுநர்களுக்கும் கீழ்க்குறிப்பிட்டவாறு ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | சிறந்த பயிற்சியாளர் | ரூ.5000/- |
| 2. | முதல்வர் | ரூ.1000/- |
| 3. | இளநிலை பயிற்சி அலுவலர் / உதவி பயிற்சி அலுவலர் | ரூ.1750/- |
| 4. | பணிமனை கணிதம் மற்றும் அறிவியல் பயிற்றுநர் | ரூ. 500/- |
| 5. | பொறியியல் வரைபட பயிற்றுநர் | ரூ 500/- |

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் வகிக்கும் பயிற்சியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது**

11.11. பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளித்து, தனித்து விளங்கும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்-2, உதவி பயிற்சி அலுவலர்-4, இளநிலை பயிற்சி அலுவலர்-4) மற்றும் இரு முதல்வர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500/-க்கான கிசான் விகாஸ் பத்திரமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**பயிற்றுநர்களுக்கு பயிற்சி**

11.12. மிக விரைவாக முன்னேறி வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வண்ணம், பயிற்றுநர்கள் மத்திய அரசினால் நடத்தப்படும் மத்திய பயிற்சி நிலையங்கள் மற்றும் முன்னோடி பயிற்சி நிலையங்கள் போன்றவற்றிற்கு பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். ஒவ்வோர் ஆண்டும், 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையங்கள் / முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சியாளர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சியின் காலம் ஓர் ஆண்டு ஆகும். இப்பயிற்சி அவர்களது நவீன தொழில்நுட்ப அறிவினையும், செயல்திறனையும் மேம்படுத்திக்கொள்ள உதவுகின்றது. இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர் ஆகியோருக்கு கல்வி கற்பிக்கும் நுணுக்கம், ஒலி, ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை போன்றவற்றில் இருவார கால பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இப்புத்தறிவுப் பயிற்சித் திட்டம் அவர்களுடைய கற்பிக்கும் திறனை கூர்மைப்படுத்துகிறது. இந்தப் பயிற்சி, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு ஒப்பற்ற பயிற்சி அளிக்க பயனுள்ளதாக அமைகின்றது.

**வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்டம்**

11.13. தொழிலகத் தொழிலாளர்கள் பயனடைய அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் வாழ்வியல் முன்னேற்ற பயிற்சி அளிக்கப்படுகிறது. கணினியுடன் இணைந்த நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாட்டினை தொழிலாளர்கள் தெரிந்துகொள்ளும் வகையில், இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி, தொழிலாளர்களை நவீன தொழில்நுட்ப அறிவினைப் பெற்ற வல்லுனர்களாக ஆக்குகிறது.





**உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம்**

11.14. உயர் தொழில்நுட்பத் திறனின் தாக்கம், தொழில் வளர்ச்சியிலும் தானியங்கி கருவிகளிலும் முக்கியமானதாக ஆகி வருகிறது. எனவே, நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பழுதுபார்த்தல் , பராமரித்தல், இயக்குதல் போன்றவற்றில் புதிய தலைமுறை தொழிலாளர்களை உருவாக்க உயர் தொழில்நுட்பத் திறனை போதிக்கும்பொருட்டு, அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன:

1. தானியங்கி இயந்திரத் தொழில்.
2. கணினி சார் வரைவு.
3. எழுத்து மற்றும் எண் மின்னணுவியல்.
4. தனி கணினி பராமரிப்பு.

**மின் கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு**

11.15. மின்சார ஒப்பந்ததாரர்களிடம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றி, குறைந்தது 5 வருட முன் அனுபவம் பெற்ற 21 வயதை அடைந்தவர்கள் இத்தேர்விற்கு தகுதியுடையவர்கள் ஆவர். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இத்தேர்வு கடைசியாக டிசம்பர் 2003-ல் நடைபெற்றது. இத்தேர்வில் கலந்துகொண்ட 5,036 பேர்களுள் 4,186 பேர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு, "மின் கம்பி உதவியாளர் தகுதி" சான்றிதழ் வழங்கப்படுகிறது.

[2004 ஜூலை 31

# அத்தியாயம் 12

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம்

**முன்னுரை:**

12.1. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஒதுக்கச் சட்டத்தின்கீழ், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திடம் கீழ்க்கண்ட மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது:

1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952.
2. தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976.
3. தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995.

சமூகப் பாதுகாப்பு அளிப்பதும், தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்திலேயே அவர்களிடம் சேமிப்பு உணர்வினைத் தூண்டுவதும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் பயன்பெறவும், அவர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால் அவர்களுடைய குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்வதும் இம்மூன்று திட்டங்களின் முதன்மையான நோக்கங்களாகும். தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களுக்காக தமிழ்நாட்டிலுள்ள மண்டல அமைப்பு நிதி நிறுவனம் சேவை செய்து வருகிறது. அது, வருங்கால வைப்பு நிதி மண்டல ஆணையர் (நிலை—I) தலைமையில் இயங்குகிறது.

**தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952**

12.2. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டமானது, குறிப்பிட்ட 180 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு முன்னர் இச்சட்டம் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை பணிக்கமர்த்தியிருந்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு செயல்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள் / நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இந்தத் திட்டத்திற்கு 22-9-1997 முதல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி, அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழிற்சாலைகளின் பட்டியலின்கீழுள்ள 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்கள் அவை அமைக்கப்பட்ட நாள் முதல் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.



2004 ஜூலை 31]

12.3. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலத்தில் 31-3-2004 அன்றுள்ளபடி, இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை 51,398 ஆகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 45,46,404 ஆகும்.

**சந்தாதாரர்களுக்கு சேவை**

12.4. ஒவ்வொரு தொழிலாளருக்கும், அவரது கணக்கில் நிலுவையில் உள்ள அவரது சந்தாத் தொகைக்கு (வேலையளிப்போர் பங்கு உட்பட) ஆண்டு வருமானப் பங்கீட்டுப் பங்கு வட்டியாக வழங்கப்படுகிறது. 1952-53-ல் ஆண்டுக்கு 3 சதவீதமாக இருந்த வட்டி வீதம் 1-4-2003 முதல் 9 சதவீதமாக அமைந்துள்ளது. இத்திட்டத்திலிருந்து விடுவித்துச் (outgoing) செல்லும் உறுப்பினர்களுக்குக் கூடுதலாக 0.5 சதவீதம் போனஸ் அளிக்கப்படுகிறது.

12.5. வருங்கால வைப்பு நிதியில் குறைந்தபட்ச உறுப்பினர் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர், உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படுகிறது:

1. உறுப்பினரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக
2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர்/ சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக
3. குழந்தைகளின் உயர் கல்வி, வீடு அல்லது வீட்டுமனை வாங்க
4. வீடு கட்டுவதற்குப் பெற்ற கடன்களைத் திரும்பத் செலுத்த
5. உடல் நலமின்மைச் செலவுக்காக
6. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை ஈடுகட்ட

[2004 ஜூலை 31

7. உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக

8. இயற்கைக் காரணங்களினால் ஏற்படும் சேதத்திற்கு ஈடுகட்ட ஆகும் எதிர்பாராத செலவிற்காக

12.6. இத்திட்டத்தின் உறுப்பினராக உள்ள ஒருவர் கீழ்க்காணும் நேர்வுகளில் அவருடைய பங்குத் தொகையை இறுதியாக முழுவதுமாக திரும்பப் பெற உரிமையுடையவராகிறார்:

1. 56 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது

2. நிரந்தரமாக மற்றும் முழுவதுமாக பணி செய்ய இயலாதபோது

3. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும்போது அல்லது ஆட்குறைப்புச் செய்யப்படும்போது

4. சில சூழ்நிலைகள் காரணமாக உறுப்பினர் தகுதியை இழந்துவிடும்போது

12.7. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952—ன்கீழ், கடந்த ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு பல்வேறு இனங்களில் தீர்வு செய்யப்பட்டுள்ள நேர்வுகள் குறித்த விவரம் கீழ்வருமாறு:



2004 ஜூலை 31]

**அ. இறுதியாக தீர்வு செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதி நிலுவைகள்**

| | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|---|
| தீர்வு செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 254570 | 269218 | 293919 | 318644 | 408263 |
| தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 42867.87 | 48403.90 | 59308.60 | 75134.08 | 80865.00 |
| **ஆ. பகுதி திரும்பப் பெறுதல்/முன்பணம்** | | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட நேர்வுகள் | 60,766 | 77,919 | 80,800 | 75,555 | 95,168 |
| ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 9391.44 | 16411.67 | 23104.83 | 26701.64 | 24645.18 |
| **இ. கணக்கு மாறுதல்கள்** | | | | | |
| மாறுதல் செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 35784 | 38891 | 31698 | 20564 | 28944 |

**வழங்கப்பட்ட ஆண்டு கணக்கு பட்டியல்கள்**

12.8. கடந்த ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கணக்குப் பட்டியல்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|
| 39,63,615 | 45,34,377 | 44,50,731 | 51,27,581 | 50,62,541 |

[2004 ஜூலை 31

## தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

### செயல் வரம்பு

*12.9.* இத்திட்டம் 1-8-1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. அது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தக்கூடிய அனைத்துத் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் பொருந்துகிறது.

### பங்களிப்பு

*12.10.* காப்புறுதி நிதிக்கு தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லை என்ற நிலையில் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் ஊதியத்தில் 0.5 சதவீதம் என்ற வீதத்தில் வேலையளிப்போர் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். மத்திய அரசும் இந்தக் காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது வேலையளிப்போர் சந்தாத் தொகையில் பாதிக்கு சமமான தொகையாக இருக்கும்.

### பயன்

*12.11.* தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்துவிட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் முந்தைய 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரித் தொகைக்கு சமமாக கூடுதல் தொகை வழங்கப்படும். இது, அதிகபட்சமாக ரூ.60,000/– ஆகும்.

*12.12.* கடந்த ஆண்டுகளில், இறந்துவிட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டப் பயன் வகையில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொகைகள் வழங்கி தீர்க்கப்பட்டுள்ளன:



2004 ஜூலை 31]

| | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|---|
| தொகை வழங்கித் தீர்க்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 3519 | 3258 | 3076 | 3389 | 2974 |
| பட்டுவாடா செய்யப்பட்ட பணம் (ரூபாய் இலட்சத்தில்) | 320.97 | 348.82 | 417.70 | 541.41 | 427.48 |

## தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995

*12.13.* 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை மாற்றி விட்டு உருவாக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தின்கீழ் 16-11-1995 அன்று வகுக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கீழ்க்காணும் பயன்களுக்கு வகைசெய்கிறது:

| வ. எண் | தகுதி | ஓய்வூதிய வகை |
|---|---|---|
| அ. | பணியில் இருந்தாலும், இல்லாவிடினும் 58 வயது நிரம்பியுள்ளதன் பேரில் | வயது முதிர்வு ஓய்வூதியம் |
| ஆ. | 50 வயதிற்கு மேல், 58 வயதிற்குக் கீழ் பணியை விட்டுச் சென்று விட்டிருந்தால் | குறைக்கப்பட்ட ஓய்வூதியம் |
| இ. | முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன்பேரில் பணியை விட்டுச் சென்று விட்டிருந்தால் | இயலாமை ஓய்வூதியம் |
| ஈ. | உறுப்பினர் இறந்து விடுவதன்பேரில் | விதவை-குழந்தைகள் ஓய்வூதியம் |

| | | |
|---|---|---|
| உ. | பெற்றோர் இறந்து விடுவதன்பேரில்/அல்லது உறுப்பினர் இறந்த பிறகு தம்பதியர்களில் ஒருவர் மறுமணம் செய்து கொள்வதன்பேரில் | அனாதை ஓய்வூதியம் |
| ஊ. | உறுப்பினர் இறந்துவிடுவதன்பேரில், உறுப்பினர் இறந்துவிடும் நாளன்று தம்பதியரில் ஒருவர் அல்லது 25 வயதுக்குக் குறைவாக உள்ள தகுதிவாய்ந்த குழந்தைகள் இல்லாதபோது | நியமனதாரர் ஓய்வூதியம் |

**12.14. 31-12-2003 அன்று ஓய்வூதியதாரர் எண்ணிக்கை கீழ்வருமாறு**

| உறுப்பினர் ஓய்வு ஊதியம் | விதவை/ மனைவியை இழந்தவர் ஓய்வூதியம் | குழந்தை ஓய்வு ஊதியம் | அனாதை ஓய்வு ஊதியம் | நியமன தாரர் ஓய்வு ஊதியம் | ஊனமுற்றோர் ஓய்வு ஊதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 136564 | 56001 | 46612 | 1071 | 1124 | 1087 | 243887 |

12.15. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், ஆண்டுதோறும் ஓய்வூதிய நிதியை மதிப்பிட வகை செய்கிறது. ஆண்டுதோறும் மதிப்பீடு செய்வதன் விளைவாக ஓய்வூதியம் பெறுபவர்கள் அவர்களுடைய ஓய்வூதியத்தில் 16-11-1996 முதல் 4 விழுக்காடும், 16-11-1998 முதல் 5.5 விழுக்காடும், 1-4-1999 முதல் 4 விழுக்காடும், 1-4-2000 முதல் 4 விழுக்காடும் இடைக்கால நிவாரணத் தொகையாகப் பெற அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

12.16. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிற வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ., யூ.டி.ஐ. மற்றும் எச்.டி.எப்.சி. ஆகிய வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. தபால் அலுவலகங்கள்மூலம் ஓய்வூதியம் வழங்கும் வண்ணம் தபால் துறையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது.





12.17. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், நிறுவனம் ஒன்றை விட்டுச செல்லும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுடன், திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும். 10 ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரிந்த உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற சம்பளம், அவர்கள் பணியை விட்டுச் சென்ற நாளில் அவர்களுடைய பணிக்கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியப் பயனைத் திரும்பப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

12.18. கடந்த ஆண்டுகளில், திரும்பப் பெறும் பயனை அடைந்த / திட்டச் சான்றிதழ்கள் வழங்கப் பெற்றுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|---|
| தீர்வு செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 207787 | 215861 | 233919 | 324363 | 332295 |
| வழங்கப்பட்ட திட்டச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | 16129 | 20836 | 22814 | 28449 | 22372 |

# அத்தியாயம் 13

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

*13.1.* இந்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது, அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும். தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஏற்படும் நோய்கள், மகப்பேறு, மரணம், பணியின்போது ஏற்படும் விபத்து, காயம் காரணமாக ஏற்படும் இயலாமை போன்ற நிகழ்வுகளில் இத்திட்டம் அவர்களுக்கு உதவுகிறது. அதன் விவரம் கீழ்வருமாறு :-

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவ உதவி | மருத்துவ வசதிகள் காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு திட்டத்தில் சேர்ந்த நாள் முதல் அளிக்கப்படுகின்றன. ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன. |
| 2 | உடல் நலமின்மை உதவி | உடல் நலமின்மை உதவி, காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அரசினால் நியமிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில், பணமாக வழங்கப்படுகிறது. |
| 3 | பேறுகால உதவி | மகளிர் காப்பீட்டாளருக்கு, பேறுகாலத்தில் அல்லது கருக்கலைப்பு காலத்தில் பேறுகாலத் தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைக்கு உதவி அளிக்கப்படுகிறது (அதிகபட்சம் 85 நாட்கள்). |





| | | |
|---|---|---|
| 4 | இயலாமையுற்றோருக்கான உதவி (பணமாக) | இயலாமையுற்றோருக்கான உதவி, காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் குறைகளுக்கும், தொழில் வழி நோய்களுக்கும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர காப்பீட்டாளருக்கு வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்பயனும் கிடைக்கும். |
| 5 | சார்ந்துள்ளோர்கள் நல உதவி (பணமாக) | வேலை செய்யும்போது ஏற்படும் விபத்தினால் அல்லது தொழில் வழி நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரைச் சார்ந்துள்ளவர்க்கு இந்த உதவி வழங்கப்படுகிறது. |
| 6 | உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி (பணமாக) | நீண்ட கால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகை நோய்களில் ஏதேனும் ஒன்றினால் பாதிக்கப்படும் காப்பீட்டாளருக்கு, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவ ஆலோசனையின்பேரில், விடுப்பிலிருக்கும் நாட்களுக்கு பண உதவி வழங்கப்படுகிறது. |
| 7 | உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி (பணமாக) | தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் கருத்தடை(வாசக்டமி/ட்யூபக்டமி) செய்துகொள்ளும்போது பண உதவி உயர்த்தி வழங்கப்படுகிறது. |
| 8 | தற்காலிக இயலாமை உற்றோருக்கான உதவி (பணமாக) | காப்பீட்டாளருக்கு தற்காலிக இயலாமை ஏற்படும்போது, 70 விழுக்காடு ஊதியம் தற்காலிக இயலாமை தொடரும் வரை அரசால் நியமிக்கப்பட்டுள்ள காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில் பணமாக வழங்கப்படுகிறது. |
| 9 | நிரந்தர இயலாமை உற்றோருக்கான உதவி (பணமாக) | நிரந்தர இயலாமையுற்ற காப்பீட்டாளருக்கு வாழ்நாள் முழுவதும் பணமாக வழங்கப்படுகிறது. |
| 10 | இறுதிச் சடங்கிற்குரிய உதவி (பணமாக) | காப்பீட்டாளரின் இறுதிச் சடங்கிற்கு அதிகபட்சமாக ரூ. 2500/- வழங்கப்படுகிறது. |

13.2. இத்திட்டத்தில், சக்கர நாற்காலி, பல்செட், மூக்குக் கண்ணாடி, காலிழந்தோர் பயன்படுத்தும் ஊன்றுகோல் போன்ற உதவி சாதனங்கள் காப்பீட்டாளர்களுக்குப் பயன்படும் வகையில் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், வருமுன் காக்கும் திட்டங்களாக நோய் தடை காப்பு, குடும்ப நலப் பணிகள், எச்ஐவி / எயிட்ஸ் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் உள்ளன. காப்பீட்டாளரின் மனைவி மற்றும் பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறாதிருந்தால் மருத்துவ ஊக்கத் தொகையாக ரூ.250/– அளிக்கப்படுகிறது.

13.3. இத்திட்டம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டம், 1948–ல் உள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குறிக்கோளையடைய, தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு உடல் நலக் காப்பீடு முழுமையான மருத்துவ வசதிகளை அளிப்பதுடன், ஊதிய இழப்பு அல்லது உழைகக இயலாத நிலை ஏற்படும்போது ஈடுசெய்யும் வண்ணம், பண உதவியையும் வழங்குகிறது.

13.4. இத்திட்டம், 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி., தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது.

13.5. இத்திட்டத்தின்கீழ்வரும் நிர்வாகங்கள் மற்றும் அமைப்புகளில் பணிபுரியும் ரூ.7500/– வரை ஊதியம் பெறும் பணியாளர்கள் இந்த பலநோக்கு சமூக நலப் பாதுகாப்புப் பயன்களைப் பெறுகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியில், தொழிலாளர்கள் ஊதியத்தில் 1.75 சதவீதம் தொழிலாளர்கள் பங்காகும். 4.75 சதவீதத்திற்கு ஈடான தொகை வேலையளிப்போர் பங்காகும்.

13.6. தமிழ்நாட்டில் 181 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், 5 நடமாடும் மருந்தகங்கள் மற்றும் 2 பயனீட்டாளர்கள் மருந்தகங்கள் மூலம் மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது. மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 2,363 ஆகும்.

13.7. பயனீட்டு மருந்தகங்கள், வேலையளிக்கும் நிறுவனத்தினரால் நடத்தப்படுகின்றன. இம்மருந்தகங்களில் அளிக்கப்படும் மருத்துவ வசதிகள் மாநில அரசால் நடத்தப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி



மருந்தகங்களில் வழங்கப்படும் மருத்துவ வசதிகளுக்கு இணையாக இருக்க வேண்டும். நிறுவனத்திற்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ளபடி தலைவீதக் கட்டணம் ஒரு காப்பீட்டாளருக்கு செலுத்தப்படுகின்றது. தற்போது தலைவீதக் கட்டணம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.60/– ஆகும். தமிழ்நாட்டில் தற்போது இரண்டு பயனீட்டாளர் மருந்தகங்கள் உள்ளன.

1. பயனீட்டாளர் மருந்தகம், டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிட்டெட்,டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. பயனீட்டாளர் மருந்தகம், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிட்டெட், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

மருத்துவ வசதிகளுக்காகும் செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக்கொள்கின்றது. பின்னர், செலவினத்தில் 7/8 பங்கினை, காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.750/– என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மாநில அரசுக்கு திரும்பச் செலுத்துகின்றது.

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கே.கே. நகர் (தொழில் நோய் அறியும் ஆராய்ச்சி மையம்)

13.8. சென்னை, கே.கே. நகரில் அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, புதுதில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தென் மண்டலத்திலுள்ள தொழில்வழி நோய் அறியும் ஆராய்ச்சி மையம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கை 330.

13.9. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருத்துவ சிகிச்சை பெற தகுதியுடையவராகிறார்கள். அதுமட்டுமின்றி, காப்பீட்டாளர்களுக்கு எதிர்பாராத விளைவுகளால் ஊதிய இழப்பு மற்றும் ஈட்டும் திறன் குறைவு ஏற்படும்போது, அவர்கள் பணப்பயனுக்கு தகுதியுடையவர்களாகிறார்கள். பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தின்போது பேறுகால உதவி பெறுகின்றார்கள். மேலும் காப்பீட்டாளர் தன் வேலையின் காரணமாக அடைந்த காயத்தினாலோ, தொழில்வழி நோய்களினாலோ மரணமடைந்தால் அவரைச் சார்ந்தோர் குடும்ப ஓய்வூதியம் பெற உரிமையுடையவராகின்றனர்.

**புதிய மருந்தகம்**

*13.10.* சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியில் *1-10-2003* முதல் ஒரு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் செயல்படுகிறது.

*13.11. 2003-2004* ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய பகுதிகளுக்கு திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அப்பகுதிகள் ஏற்கெனவே இயங்கி வரும் மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | விரிவுபடுத்தும் இடங்கள் / மாவட்டம் | இணைக்கப்படும் தொ.அ.ஈ. மருந்தகம் | செயல்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | களிக்கம்பட்டி கிராமம், திண்டுக்கல் மாவட்டம் | பேகம்பூர் | 1-4-2003 |
| 2 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | பல்லாவரம் | 1-5-2003 |
| 3 | ஆர். வாடிப்பட்டி மற்றும் பாப்பம்பட்டி புற எல்லை கிராமங்கள், திண்டுக்கல் மாவட்டம் | நெய்காரப்பட்டி | 1-6-2003 |
| 4 | ஈஞ்சார், விருதுநகர் மாவட்டம் | சிவகாசி | 1-10-2003 |
| 5 | சிவகாசி புற நகர், டி.சல்வார்பட்டி, விருதுநகர் மாவட்டம் | சிவகாசி மற்றும் தாயல்பட்டி | 1-12-2003 |
| 6 | மதுரை, பொன்னகரம், மதுரை மாவட்டம் | பொன்னகரம் | 1-1-2004 |
| 7 | பொள்ளாச்சி புறநகர், சோழவன்பாளையம் (ம) சோழனூர், கோவை மாவட்டம் | ஒத்தக்கால் மண்டபம், பொள்ளாச்சி | 1-2-2004 |
| 8 | நிலவாரப்பட்டி, சேலம் | அன்னதானப்பட்டி இருப்பு, சீலநாய்க்கன்பட்டி | 1-3-2004 |





*13.12.* மேலும், *2004-2005* ஆம் ஆண்டில் தொ.அ.ஈ. திட்டம் கீழ்க்கண்ட புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு, அருகிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைப்பது தொடர்பான கருத்துருக்கள் அரசின் தீவிர ஆய்வில் உள்ளன:—

| வ. எண் | பகுதியின் பெயர்/ மாவட்டம் | இணைக்கப்பட்டுள்ள / இணைக்கப்படவுள்ள தொ. அ. ஈ. மருந்தகம் |
|---|---|---|
| 1 | உத்தமசோழபுரம் (நாகப்பட்டினம்) | நாகப்பட்டினத்துடன் இணைத்து நாகூருக்கு மாற்றுதல் |
| 2 | வேடசந்தூர் புறநகர் (திண்டுக்கல்) | 1-4-2004 முதல் வேடசந்தூர் மருந்தகத்துடன் இணைக்கப்பட்டது |
| 3 | திருச்செங்கோடு புறநகர் (நாமக்கல்) | திருச்செங்கோடு |
| 4 | கோயம்புத்தூர் பகுதி (கோயம்புத்தூர்) | திருப்பூர் 1, அவினாசி, சின்னியம்பாளையம், காரமடை மற்றும் மேட்டுப்பாளையம் |
| 5 | கங்கைகொண்டான் பகுதி (திருநெல்வேலி) | தாழையூத்தில் உள்ள ஒரு மருத்துவர் தொ.அ.ஈ. மருந்தகத்தினை இரு மருத்துவா மருந்தகமாக தரம் உயர்த்துதல் |
| 6 | திருநெல்வேலி புறநகர் (திருநெல்வேலி) | வண்ணார்பேட்டை |
| 7 | திருவள்ளூர் புறநகர் (திருவள்ளூர்) | திருவள்ளூர் |
| 8 | கன்னியாகுமரி புறநகர் பகுதி (கன்னியாகுமரி) | நாகர்கோவில் |

*13.13.* காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் இரு மருத்துவர் தொ.அ.ஈ. மருந்தகங்கள் திறப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

*13.14. 2004-2005* ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் காப்பீட்டு மருத்துவ பயிற்சியாளர் (ஐ.எம்.பி.) மருந்தகங்கள் திறப்பதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது:—

| வ. எண் | இடத்தின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | பண்ருட்டி | கடலூர் |
| 2 | வடுகந்தாங்கல்-பள்ளிகொண்டா | வேலூர் |
| 3 | திண்டிவனம் | விழுப்புரம் |
| 4 | பரமக்குடி | இராமநாதபுரம் |
| 5 | சிவகங்கை | சிவகங்கை |
| 6 | சேசன் சாவடி (வாழப்பாடி மற்றும் காரிப்பட்டி) | சேலம் |
| 7 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |

**மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை**

13.15. அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தொ.அ. ஈ. மருத்துவமனைகளில் சிறுநீரகவியல் பிரிவு தொடங்க தேவையான உபகரணங்கள் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கான மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் அறிவிக்கை வெளியிடப்பட்டதும் சிறுநீரகவியல் பிரிவு தொடங்கப்படும்.

**நோய் அறியும் மையங்கள்**

13.16. முதற்கட்டமாக அம்பத்தூர், பல்லாவரம், இராஜபாளையம், துடியலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள தொ.அ. ஈ. மருந்தகங்களில் நோய் அறியும் மையங்கள் துவங்க தொ.அ.ஈ. கழகம், புது டெல்லியின் ஒப்புதல் பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

**சித்த மருத்துவம்**

13.17. சித்த மருத்துவப் பிரிவு தற்போது தொ.அ.ஈ. மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவினை மதுரை, வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் தொடங்க தொ.அ.ஈ. கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், சிவகாசி, திருச்சி, ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள தொ.அ. ஈ. மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்குவது குறித்து தொ.அ. ஈ. கழகம் (ம) அரசினால் பரிசீலிக்கப்படும்.



**யோகா**

13.18. முறையான யோகா பயிற்சியின் மூலம் பல நோய்கள் குணமடைகின்றன. எனவே தொ.அ. ஈ. மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் யோகா பிரிவு தொடங்கும் செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

**சுழற்சி நிதி**

13.19. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ உதவி பெறும் காப்பீட்டாளர் மற்றும் அவரைச் சார்ந்தோர் செய்யும் மருத்துவ செலவினைத் திரும்பச் செலுத்தும் நடைமுறையினை அரசு ஆராய்ந்தது. தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, ஒரு சுழற்சி நிதியை உருவாக்கி செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இந்தச் சுழற்சி நிதியை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மண்டல இயக்குநர் நிர்வகித்து, காசோலையை ஈட்டுறுதி மருந்தகத்தின் மருத்துவ அலுவலர் மூலம் காப்பீட்டாளருக்கு வழங்குவார். மேலும், செலவினத்தைத் திரும்பச் செலுத்துவதைப் பொறுத்தவரையில், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (தொ.அ.ஈ.) அவர்களின் பண ஒப்பளிப்பு அதிகாரத்தினை காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ. 5,000-லிருந்து ரூ. 75,000-ஆக உயர்த்தியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, காப்பீட்டாளர் மருத்துவ செலவு செய்யும் தொகை விரைவில் திரும்ப வழங்கப்படுகிறது. மேலும், மருத்துவ செலவு திரும்பப் பெறும் பட்டியல்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 400, நிதி (சம்பளம்) துறை, நாள் 29-8-2000-ல் குறிப்பிடப்பட்டுள்ள நோய்கள் மற்றும் சிகிச்சை பெறுவதற்கான மருத்துவமனைகள் ஆகியவற்றின் அடிப்படையில், சுழற்சி நிதியின் வரம்பிற்குள் பற்பல நோய்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

**மருத்துவ செலவு செய்த பணம் திரும்ப அளித்தல்**

13.20. 2003–2004 ஆம் ஆண்டில் இருதய அறுவைச் சிகிச்சைகள், சிறுநீரகவியல், நரம்பியல், புற்றுநோய், முதுகுத் தண்டு தொடர்பான சிகிச்சைகள் மற்றும் புற்றுநோய் ஆகிய பல்வேறு சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர்கள் செலவழித்த தொகையான ரூ.2,14,69,575/- திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

## தொ. அ. ஈ. திட்டம், தமிழ்நாடு புள்ளிவிவரங்கள்

1. திட்டம் செயல்படத் துவங்கிய நாள் .. 23-01-1955

2. 31-03-2004 தேதி அன்றுள்ள தொ. அ. ஈ. மருந்தகங்கள் .. 188

### மண்டல வாரியாக மருந்தகங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மை

| வ. எண் | மண்டலம் | நிலையான மருந்தகங்கள் | நடமாடும் மருந்தகங்கள் | பயனீட்டாளர் மருந்தகங்கள் | சொந்தக் கட்டிடத்தில் இயங்குபவை | வாடகைக் கட்டிடத்தில் இயங்குபவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 39 | - | - | 27 | 12 | 39 |
| 2 | மதுரை | 55 | 1 | - | 14 | 42 | 56 |
| 3 | கோயம்புத்தூர் | 37 | 2 | - | 14 | 25 | 39 |
| 4 | சேலம் | 50 | 2 | 2 | 12 | 42 | 54 |
| | மொத்தம் | 181 | 5 | 2 | 67 | 121 | 188 |

3. 1-1-2004 தேதி அன்று உள்ள மொத்த காப்பீட்டாளர்கள் .. 11,24,679

4. 1-1-2004 தேதி அன்று மொத்த பயனாளிகள் . 43,52,508

5. மொத்த தொ.அ.ஈ. மருத்துவமனைகள் .. 8 + 1

6. அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை .. 2,363

7. படுக்கைகள்–மருத்துவமனைவாரியாக ..



2004 ஜூலை 31]

| வ. எண் | மருத்துவமனையின் பெயர் | படுக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொ. அ. ஈ. மருத்துவமனை, அயனாவரம், சென்னை–23 | 616 |
| 2 | தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர் | 506 |
| 3 | தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை | 209 |
| 4 | தொ.அ.ஈ. மருத்துவமனை, வேலூர் | 50 |
| 5 | தொ.அ.ஈ. மருத்துவமனை, சேலம் | 50 |
| 6 | தொ.அ.ஈ. மருத்துவமனை, சிவகாசி | 100 |
| 7 | தொ.அ.ஈ. மருத்துவமனை, ஓசூர் | 50 |
| 8 | தொ.அ.ஈ. மருத்துவமனை, திருச்சி | 50 |
| 9 | தொ.அ.ஈ. கழக மருத்துவமனை, கே.கே. நகர், சென்னை–78 (புது டெல்லி தொ.அ.ஈ. கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது) | 330 |
| 10 | தொ.அ.ஈ. மருத்துவமனை இணைப்புகளில் | 136 |
| 11 | அரசு மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட்டவை | 266 |
| | மொத்தம் | 2363 |

### 8. சிகிச்சை பெற்றோர் விபரம்

| வ.எண் | விவரம் | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|---|
| 1 | சிகிச்சை பெற்ற வெளிநோயாளிகள் | 73,44,038 | 65,44,208 |
| 2 | சிகிச்சை பெற்ற உள்நோயாளிகள் | 3,14,413 | 3,09,272 |
| | மொத்தம் | 76,58,451 | 68,53,480 |

## இணைப்பு XXV

*(136 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

#### முன்னுரை

மக்களாட்சி என்பது மனித சமூகம் கண்ட உன்னத ஆட்சி முறையாகும்.

மக்களாட்சி என்பது அரசு, நிர்வாகம் ஆகியவற்றோடு மட்டும் தொடர்புடைய அமைப்பு மட்டுமன்று. இது மக்களின் வளமான வாழ்விற்கு வலுவான அடித்தளத்தினை உருவாக்கித்தரும் ஒரு வாழ்க்கை முறையாக பரிணாமம் பெற்றுள்ளது. மக்களாட்சியில் அரசு என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றது.

மக்களாட்சி அமைப்பில், செய்தி–மக்கள் தொடர்புத் துறை ஒரு முக்கிய துறையாகும். அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த தகவல்களை ஏடுகள் மற்றும் ஒலி, ஒளி ஊடகங்கள் மூலம் எடுத்துரைத்து மக்களுக்கு விழிப்புணர்வினைத் தோற்றுவிப்பதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. அதன் விளைவாக, திட்டங்களின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைகின்றன.

அரசின் திட்டங்களை மக்களுக்கு விளம்பரப்படுத்துவதன் மூலமாகவும், மக்களோடு இரண்டறக் கலந்து செயலாற்றுவதன் வாயிலாகவும் அரசுக்கும், மக்களுக்கும் இடையே நல்லெண்ணப் பாலத்தினை உருவாக்க இத்துறை பாடுபடுகிறது.



விடுதலைப் போராட்ட வீரர்கள், நாட்டுக்கு உழைத்த தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோருக்குப் பெருமை சேர்க்கும் அரும்பணியிலும் இத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலும், வழிகாட்டுதலிலும், இத்துறை தனது பணியினை மேலும் செம்மையாக ஆற்றும் வகையில், உரிய கட்டமைப்பு வசதிகளைப் பெற்று, நவீனப்படுத்தப்பட்டு, அதிக அளவிற்கு வலுப்பெற்று விளங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 1

### செய்தி வெளியீட்டுப் பிரிவு

நாளிதழ்கள், பருவ இதழ்கள், தொலைக்காட்சிகள், வானொலி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் மக்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை மேம்படுத்தும் முக்கிய ஊடகங்களாக உள்ளன. தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, அரசின் முக்கிய திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவை குறித்த செய்திகளை பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் அலுவலகங்களிலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள், அரசின் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள், அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள், ஆக்கப் பணிகளைப் பற்றிய செய்திகள் போன்றவற்றை அவற்றோடு தொடர்புடைய புகைப்படங்களுடன் நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்கள், வானொலி மற்றும் இணைய தளங்கள் என ஏறத்தாழ 100 தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு, நேரடியாகவும், நிகரி மற்றும் கணினி மூலமாகவும் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கான செய்தியாளர் கூட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்து, மாவட்டங்களில் வெளியிடப்படும் ஏடுகளிலும் அச்செய்திகள் இடம்பெற இப்பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை போன்றவற்றை புகைப்படம் எடுத்து அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்கும் பணியினை மேற்கொள்வதுடன், இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் படம் எடுப்பதற்குத் தேவையான உதவிகளை தொலைக்காட்சிகளின் ஒளிப்பதிவாளர்கள் மற்றும் நாளிதழ்களின் புகைப்படக்காரர்களுக்கு இப்பிரிவு வழங்கி வருகின்றது. 2003–2004 ஆம் ஆண்டு இப்பிரிவிற்கு கணினி, ஒளி நகல் பெருக்கி இயந்திரம் வாங்கவும், குளிர்சாதன வசதி செய்து தரவும் ரூ.4.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

### செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை

சென்னையிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் வெளியாகும் நாளிதழ்களின் செய்தியாளர்கள், வானொலி, அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகள், திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு 'செய்தியாளர் அங்கீகார அட்டைகள்' ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசால் அமைக்கப்படும் செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில் 577 செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டைகள் தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அங்கீகார அட்டைகள் பெறும் பத்திரிகையாளர்களுக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்ய பேருந்து அட்டையும், இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகையும், அரசு வாடகைக் குடியிருப்பு வீடுகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டு வருகின்றன.

### பருவ இதழ்களின் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் செய்தியாளர் கூட்டம், முக்கியப் பிரமுகர்கள் வருகை, அரசு விழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பதற்கென வார இதழ்கள், மாத இதழ்கள் போன்ற பருவ இதழ்களைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கு 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் 255 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் சென்னையில் வழங்கப்பட்டுள்ளன.

### பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகளும், அதற்கு மேலும் தொடர்ச்சியாகப் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள்,

[2004 ஜூலை 31

செய்தியாளர்கள் இவர்களில் எவரேனும் பணியிலிருக்கும்போதே இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கும் 'பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவி நிதி 4–9–2001 முதல் ரூ. 50,000/–லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 22 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு உதவி நிதி வழங்கப் பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, மாதந்தோறும் ரூ.250/– மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர் இந்த ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு மாதந்தோறும் ரூ.2,000/– என்ற அளவில் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க பத்திரிகையாளர் மாத ஓய்வூதியத் தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 67 பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இயற்கை எய்திவிட்டால், அவரின் துணைவியாருக்கு அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.500/– வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தை 4–9–2001 முதல் ரூ.500/-லிருந்து ரூ.1,500/-ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்தார்கள். இத்திட்டத்தின்கீழ் தற்பொழுது 12 பேர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.



2004 ஜூலை 31]

**பத்திரிகையாளர்களுக்கு கலபத் தவணையில் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகள்**

தமிழகத்தில் உள்ள அனைத்து உழைக்கும் பத்திரிகையாளர்களும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்பு அல்லது வீடு வாங்குவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு ஏற்கெனவே அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து செயல்படுத்துகின்றன.

**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றை புகைப்படம் எடுத்து உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. புகைப்படப் பிரிவின் பயன்பாட்டிற்காக 2002–2003 ஆம் ஆண்டு, இரண்டு புதிய டிஜிட்டல் கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நாளிதழ்களுக்கு வண்ணப் புகைப்படங்கள் 'இ–மெயில்' மூலம் விரைவாக அனுப்ப ஏதுவாக உள்ளது.

53-192—66

## அத்தியாயம் 2

### நினைவகங்கள்

நாட்டு விடுதலைக்காகப் போராடிய தியாக சீலர்கள், சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிய சான்றோர்கள் ஆகியோரின் பெருமையைப் போற்றிடும் வகையில், அரசின் சார்பில் அவர்களுக்கு நினைவகங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் அமைத்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. 38 நினைவகங்கள், 2 அரங்கங்கள், 4 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுப் பூங்கா ஆகியவை இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நினைவகங்கள் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலும், பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலும் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.
2. பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.
3. வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் கோட்டம் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை.
4. கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை.
5. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை.
6. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
7. இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
8. காமராஜர் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
9. மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.



10. தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
11. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
12. காமராஜர் நினைவு இல்லம், திருமலை சாலை, தியாகராயநகர், சென்னை.
13. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், துளசிங்கம் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
14. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
15. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண்(போர் நினைவுச் சின்னம் அருகில்) காமராஜர் சாலை, சென்னை.
16. குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண் (காந்தி சிலை அருகில்) காமராஜர் சாலை, சென்னை.
17. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.
18. முத்து மண்டபம் – இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், பாலாற்றங்கரை, வேலூர், வேலூர் மாவட்டம்.
19. அண்ணா கலை அரங்கம், ஆபீஸர்ஸ் லேன், வேலூர், வேலூர் மாவட்டம்.
20. சிப்பாய்க் கலகம் நினைவுத் தூண், மக்கான் சந்திப்பு, வேலூர், வேலூர் மாவட்டம்.
21. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
22. பெரியார்–அண்ணா நினைவகம், பெரியார் தெரு, ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

23. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர் குமரன் சாலை, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

24. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

25. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், வராகனேரி அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

26. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி கிராமம், நாகப்பட்டினம் மாவட்டம்.

27. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், கவிஞர் இராமலிங்கம் தெரு, நாமக்கல், நாமக்கல் மாவட்டம்.

28. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், முத்துப்பேட்டை சாலை, நாடியம்மாள்புரம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

29. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், புதிய பேருந்து நிலையம் அருகில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

30. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், தெற்கு ரத வீதி, குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

31. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், சுவீடிஷ் மிஷன் மருத்துவமனை வளாகம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

32. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், விஸ்வநாததாஸ் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

33. தியாகசீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

34. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல் கிராமம், சிவகிரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

35. காமராஜர் இல்லம், சுலோசனா தெரு, விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.



36. பாரதி மணிமண்டபம், தூத்துக்குடி சாலை, எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

37. பாரதி இல்லம், பாரதி தெரு, எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

38. வ.உ.சி. இல்லம், வ.உ.சி. தெரு, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

39. காந்தி நினைவு மண்டபம், கடற்கரை சாலை, கன்னியாகுமரி.

40. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கடற்கரை சாலை, கன்னியாகுமரி மாவட்டம்.

41. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

42. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், சர்.சி.பி. ராமசாமி நினைவுப் பூங்கா, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

43. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான கயத்தாறில் நினைவுப் பூங்கா, தூத்துக்குடி மாவட்டம்.

44. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் மணிமண்டபம், சென்னை.

45. பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்.

தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபத்திற்கான கட்டுமானப் பணிகள், ரூ.35 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. அங்கு அவரது முழு உருவ வெண்கலச் சிலையை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய நினைவாக, திருநெல்வேலியில் மணிமண்டபம் அமைக்க ரூ.75.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு, 13-3-2003 அன்று திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு

[2004 ஜூலை 31

முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இந்த மணிமண்டபத்திற்கான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, கோவை சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது வ.உ.சிதம்பரனார் அவர்கள் இழுத்த செக்கு, சென்னை கிண்டி தியாகிகள் நினைவாலயத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் மாதிரி வடிவம் ஒன்று இந்த மணிமண்டபத்தில் இடம்பெறவும், அவர் இயக்கிய சுதேசி கப்பல் போன்றதொரு மாதிரி வடிவத்தை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நினைவாக, நினைவு மண்டபம் அமைப்பதற்கு இலவசமாக இட ஒதுக்கீடு செய்து, அதில் தென்னிந்திய நடிகர் சங்கம், கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை, மயிலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், அடையாறு ஆந்திர மகிளசபா அருகில் இதற்கென 0.65 ஏக்கர் இடம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நினைவகம் அமைக்கும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலத்தில் மணிமண்டபம் மற்றும் அவரது முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரித்து அனுப்புமாறு பொதுப் பணித் துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளி கிராமத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க, தேவையான நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம் ஓடாநிலையில் விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் அமைக்க ஏறத்தாழ 7 ஏக்கர் தனியார் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2004 ஜூலை 31]

தருமபுரி மாவட்டம், அதியமான் கிராமத்தில் அதியமான் ஔவையார் கோட்டம் அமைக்க ரூ.1,28,000 செலவில் அருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோட்டத்தின் கட்டுமான பணிக்கான மதிப்பீடு பொதுப் பணித் துறையிடம் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெறப்பட்டதும் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு பணிகள் துவக்கப்படும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாக பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊரான விருதுநகரில் நினைவுத் தூண் அமைப்பதற்காக ரூ.5.00 இலட்சமும், மணிமண்டபம் கட்டுவதற்காக ரூ.9.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.14.00 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, 14–7–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. விருதுநகர் நகராட்சி தங்கும் விடுதி வளாகத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்தும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாவினையொட்டி, திருப்பூர் குமரன் நினைவகத்தில் அவரது மார்பளவு வெண்கலச் சிலையினை நிறுவ ஆணையிடப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அருங்காட்சியகம் ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், தந்தை பெரியார் ஆகியோரின் 9 அடி உயர வெண்கலச் சிலை, ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் செலவில் செய்து புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அரசின் பராமரிப்பிலுள்ள 20 முக்கிய நினைவகங்களில் கிரானைட் கல்லினால் ஆன செய்தி விவரப் பலகைகள் வைக்க ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 3

### அரசு விழாக்கள் – பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் வகையில், அவர்களது பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன. அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்தும் மரியாதை செலுத்தப்படுகிறது.

கீழ்க்காணும் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 17 | முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் |
| 2. | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் |
| 3. | ஜனவரி 30 | மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் |
| 4. | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் |
| 5. | ஏப்ரல் 27 | சர். பிட்டி. தியாகராயர் பிறந்த நாள் |
| 6. | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் |
| 7. | ஜூன் 5 | கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் பிறந்த நாள் |
| 8. | ஜூன் 24 | கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள் |
| 9. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் |
| 10. | ஜூலை 17 | தியாகிகள் தினம் – தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் |
| 11. | செப்டம்பர் 5 | கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சி. பிறந்த நாள் |
| 12. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் |



2004 ஜூலை 31]

| | | |
|---|---|---|
| 13. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் |
| 14. | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள் |
| 15. | அக்டோபர் 2 | மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் |
| 16. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் |
| 17. | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் |
| 18. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் |
| 19. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் |

கடந்த 2003–2004 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள், மாவட்டங்களில் கொண்டாடப்பட்டன.

1. வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா 12-4-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் கொண்டாடப்பட்டது.
2. ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் பிறந்த நாள் விழா இராமநாதபுரத்தில் 26-4-2003 அன்று கொண்டாடப் பட்டது.
3. வீரன் சுந்தரலிங்கம் பிறந்தநாள் விழா 26-4-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் கவர்ணகிரியில் கொண்டாடப் பட்டது.
4. வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா 9-5-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங் குறிச்சியில் கொண்டாடப்பட்டது.
5. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா 15-7-2003 அன்று விருதுநகரில் கொண்டாடப்பட்டது.
6. தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா 2-8-2003 அன்று ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் கொண்டாடப்பட்டது.
7. வல்வில் ஓரி விழா 3-8-2003 அன்று நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் கொண்டாடப்பட்டது.

8. வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா 7-9-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் கொண்டாடப் பட்டது.

9. சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா 2-10-2003 அன்று கொண்டாடப்பட்டது.

10. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பிறந்த நாள் விழா 30-10-2003 அன்று மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கொண்டாடப்பட்டது.

11. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா 10-12-2003 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில் கொண்டாடப் பட்டது.

12. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா 11-12-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் கொண்டாடப் பட்டது.

13. திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா 30-1-2004 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் கொண்டாடப் பட்டது.

**பல்துறைப் பணி விளக்க முகாம்கள்**

பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் சார்பில் அரங்குகள் அமைத்து அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கக்கூடிய வகையில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் மாவட்டங்களில் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நேரங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கிராமங்களில் நடைபெறும் மக்கள் குறைகேட்பு நிகழ்ச்சிகளிலும், பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.





**மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு**

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த தகவல்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் போன்றவற்றை மாவட்டத்திலுள்ள மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், பல்வேறு துறைகளின் மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணியினைத் தீவிரப்படுத்தி, செம்மையாகச் செயல்படுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக் கூட்டம், மாதம் ஒரு முறை, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. அரசின் திட்டங்களை விளம்பரப்படுத்தும் நடைமுறைகள் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 4

### தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | .... | ரூ.2 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |
| 2. | இரண்டாம் பரிசு | .... | ரூ.1 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |
| 3. | மூன்றாம் பரிசு | ... | ரூ.75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |
| 4. | சிறப்புப் பரிசு | ... | ரூ.75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |

பெண்களின் முன்னேற்றம் மற்றும் பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

தேர்வு பெறும் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 2000 ஆம் ஆண்டிற்கான விருதுபெறும் கலைஞர்களில் ஆண் மற்றும் பெண் 'டப்பிங்' கலைஞர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.



2004 ஜூலை 31]

### கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த் திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜாசாண்டோ, எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி, தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### அரசு மானியம்

குறைந்த செலவில், சமூக நீதி கொண்ட திரைப்படங்களைத் தயாரிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, இவ்வகையான படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின்கீழ் படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

### கோரிக்கை வரி விலக்கு அளிக்கும் திட்டம்

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் தகுதியுடைய திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் நான்கு வாரங்களுக்கு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

### திரைப்படத் துறையினருக்கு அரசின் சலுகைகள்

1. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்குத் தலா ரூ.5 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.
2. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.
3. திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் சாதனை புரிந்தவர்களுக்கு வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

4. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது.

5. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

6. சண்டைக் காட்சிகளில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால் அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.



## அத்தியாயம் 5

### திரைப்படம், விடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழில் ஒன்றாகும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 1,835 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர திரையரங்குகள் | 1,372 |
| 2. | பகுதி நிரந்தர திரையரங்குகள் | 136 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 320 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 7 |
| | மொத்தம் .. | 1,835 |

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம், அதன்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளின் அடிப்படையில் வசதிகளுடன்கூடிய வலுவான கட்டடங்கள் உட்பட திரையரங்குகளின் முறையான பராமரிப்புக்கு வகை செய்கின்றன.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்வரசு பின்வரும் சலுகைகளை அளித்துள்ளது.

(அ) உரிமம் வழங்கும் அலுவலர்/வணிக வரித் துறை அலுவலர்களுக்கு முன் அறிவிப்புக் கொடுத்து திரையரங்கு உரிமதாரர்கள், கடைசி வகுப்பைத் தவிர மற்ற வகுப்புகளுக்கு விதிக்கப்படும் கட்டணத்தில் 7.5 சதவீதம் வரை உயர்த்தி நிர்ணயிக்க அனுமதித்துள்ளது. கடைசி வகுப்புக் கட்டணம் மாநகரங்களில் ரூ.10-க்கு (ரூபாய் பத்து

மட்டும்) மிகாமலும் மற்ற இடங்களில் ரூ.5–க்கு (ரூபாய் ஐந்து மட்டும்) மிகாமலும் இருக்க வேண்டும். மேலும், அது அடுத்த உயர் வகுப்புக் கட்டண வீதங்களைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும். திரையரங்குகள் அனுமதிக்கப்பட்ட மொத்த இருக்கையில் 10 சதவிகித இருக்கைகளை கடைசி வகுப்புக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

(ஆ) உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிக வரித் துறை அலுவலர்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு புதிய திரைப்படங்கள் திரையிடப்படும் நாளிலிருந்து இரண்டு வார காலத்திற்கு உச்சவரம்பு இன்றி கட்டண வீதங்களை நிர்ணயிக்க திரையரங்கு உரிமதாரர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரைப்படங்கள், பொதுமக்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் முக்கிய பங்கு வகிப்பதாலும், ரசிகர்கள், அதற்காக் கணிசமான தொகையைக் கட்டணமாகச் செலுத்துவதாலும், அவர்களுக்கு உரிய வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்கின்ற வகையில், திரையரங்குகள் சுத்தமாகவும், நல்ல நிலைகளிலும் பராமரிக்க வேண்டுமென எதிர்பார்ப்பதை நியாயமற்றதெனக் கூறமுடியாது. ஏழை எளிய மக்கள் சுகாதாரமான சூழ்நிலையில் வசதியாக அமர்ந்து திரைப்படங்களை ரசித்து மகிழவேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். கழிப்பிட வசதியைச் சரியாகப் பராமரிக்காதது, காற்றோட்ட வசதி குறைவு, குளிர்வசதிக்கான சாதனங்களை (A/C) இயக்காதது போன்ற பல புகார்கள் தொடர்ந்து வரப்பெற்றமையால் திரையரங்குகளைக் கூட்டாக இணைந்து பார்வையிட்டு சுகாதாரமாக நல்ல முறையில் பராமரிக்காத, உரிய வசதிகளை வழங்காத திரையரங்கு உரிமதாரர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும், அரசு, உள் துறையின் 16-4-2002 ஆம் நாளிட்ட கடித எண் 35964/சினிமா.1/2002-1-ல் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

**வீடியோ சட்டமும் விதிகளும்**

தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புவதை முறைப்படுத்துவதற்காகவும், இதன் இடைநிகழ்வான அல்லது தொடர்புடைய பொருள்களுக்காகவும், தமிழ்நாடு அரசு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் பதிவுக் கருவிகளின் மூலம் தொலைக்காட்சித்





திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இந்தச் சட்டம், வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் (வீடியோ நூலகங்கள்) மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாவர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

**திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு**

தமிழ்நாடு அரசு, உள் துறையின் (திரைப்படம் 2) 17–2–1995 ஆம் நாளிட்ட 3 (டி) 16 ஆம் எண் அரசாணையின்படி தமிழ்நாடு புலனாய்வுத் துறை குற்றப் பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தற்போது சென்னை காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. மேலும் பதிப்புரிமைச் சட்டம், 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவினைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

இப்பிரிவுக்கென, காவல் துறை கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை ஆய்வாளர்கள் ஆறுவர், காவல் துறை உதவி ஆய்வாளர்கள் இருவர், காவலர்கள் (நிலை 1) பதினான்கு மற்றும் காவலர்கள் இருவர் ஆகிய பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இப்பிரிவிற்கு ஒரு கார், ஒரு ஜீப், 4 மோட்டார் வண்டிகள் அனுமதிக்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டு அனைத்துப் பிரிவுகளுக்கும் புதியதாக தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் ஆறு சிறு பிரிவுகள் உள்ளன. ஒவ்வாரு சிறு பிரிவிலும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரும் மற்றும் காவலர்கள் (நிலை 1) இருவரும் உள்ளனர். இந்த பிரிவிலுள்ள ஆறு சிறு பிரிவுகளும், அரசாணை நிலை எண் 864, உள் (காவல் 14) துறை, நாள்10–6–2004–ன்படி காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு சிறு பிரிவுகளின் தலைமையிடங்கள், மற்றும் அவற்றின் அதிகார வரம்பு குறித்த விவரம் வருமாறு:

[2004 ஜூலை 31

| தொடர் எண் | சிறு பிரிவுகள் | சரகம் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகர், செங்கல்பட்டு சரகம் மற்றும் விழுப்புரம் சரகம். |
| 2. | சேலம் | சேலம் மாநகர், சேலம் சரகம் மற்றும் வேலூர் சரகம். |
| 3. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகர் மற்றும் கோயம்புத்தூர் சரகம். |
| 4. | திருச்சி | திருச்சி சரகம் மற்றும் தஞ்சாவூர் சரகம். |
| 5. | மதுரை | மதுரை மாநகர், மதுரை சரகம், இராமநாதபுரம் சரகம் மற்றும் திண்டுக்கல் சரகம். |
| 6. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகர் மற்றும் திருநெல்வேலி சரகம். |

வீடியோ திருட்டு குற்றங்கள் அண்மைக் காலத்தில் புதிய தொழில் நுட்பத்தால் தோன்றிய ஒன்றாகும். வீடியோ நூலக முதலாளிகளுடன் வணிக ரீதியில் தொடர்பு வைத்துள்ளவர்களே பெரும்பாலும் பிரபலமான திரைப்படங்களைத் திருட்டுத்தனமாக பதிவு செய்து வருகின்றனர். இத்தகைய நபர்கள் திரையரங்கு உரிமையாளர்கள் அல்லது திரையரங்குகளின் திரைப்படம் காட்டும் கருவி இயக்குபவர்கள் ஆகியோரின் உடந்தையுடன் சட்டத்திற்குப் புறம்பாக புதிய திரைப்படங்களை வீடியோ கேசட்டுகளில் திருட்டுத்தனமாக பதிவு செய்கிறார்கள். வீடியோ கேசட்டுகளைத் திருட்டுத்தனமாக பதிவு செய்வதற்கு பிற முறைகளும் கையாளப்படுகின்றன. மலேசியாவிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் வீடியோ குறுந்தகடுகள் வந்து கொண்டு இருக்கின்றன. எனினும் விமான நிலையங்களில் இவற்றைக் கைப்பற்றுவது தொடர்பாக எடுத்துவரும் நடவடிக்கைகள் காரணமாக, இவற்றின் வரத்து தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருட்டைக் கட்டுப்படுத்துவதற்கு 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, வீடியோ கேசட் ஒளிப்பதிவுக்



2004 ஜூலை 31]

கருவி மற்றும் கேபிள் தொலைக்காட்சி மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) திரைப்படங்கள் சட்டம் போன்ற சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திருட்டு வீடியோ குற்றங்களைத் தடுக்கும் தனிப் பிரிவின் செயல்பாடுகளாவன :

(1) திருட்டு வீடியோ குறுந்தகடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.

(2) திரைப்படத் தயாரிப்பாளர்கள் அளிக்கும் தகவலைச் சரிபார்த்தல்.

(3) திடீர் சோதனை நடத்தி குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்தல்.

(4) குற்றத்திற்கு உட்படுத்தும் பொருட்களைக் கைப்பற்றுதல்.

(5) தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், குற்றம் சாட்டப்பட்டவரை 'ரிமாண்டு' காவலில் வைத்தல், புலனாய்வை முடித்த பின்னர், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தல்.

(6) நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளில் கலந்து கொண்டு உதவி செய்தல்.

பதிப்புரிமைத் திருட்டு, ஒலிப்பதிவுத் திருட்டு, திரைப்படத் திருட்டு, கணினி மென்பொருள் திருட்டு ஆகியன 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் வரும் நான்கு வகையான திருட்டுக்கள் ஆகும். குறுகிய காலத்தில் பணம் சம்பாதிப்பதும், சட்டப்படியான வரிகள் மற்றும் உரிமத் தொகைகள் செலுத்துவதைத் தவிர்ப்பதும் இந்த அனைத்து வகைத் திருட்டுக்களின் நோக்கம் ஆகும். பதிவு செய்யப்பட்ட இசை, திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட வீடியோ கேசட்டுகள் ஆகியவை சம்பந்தப்பட்டது. ஆசிரியர்கள், கலைஞர்கள், வெளியீட்டாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு எந்தவித ஆதாயமுமின்றி உலகின் பல பாகங்களில் மீண்டும் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஒலி நிகழ்ச்சியைப் பதிவு செய்தல், நிலைப்படுத்தல், மீண்டும் தயாரித்தல் தொடர்பாகப் பெருகி வரும் நவீன தொழில்நுட்பங்களுடன் வீடியோ தொழில்நுட்ப வருகையும்

சேர்ந்து இத்திருட்டுக்குப் பெரிதும் துணை புரிகின்றன. இதுதவிர நம் நாட்டில் அண்மையில் வீடியோ துறையில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சியினால் சான்றளிக்கப்படாத வீடியோ திரைப்படங்கள் பெருமளவில் காட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஒளிப்பதிவு வீடியோ ஒளிப்பதிவுக் கருவிகளின் மூலமாகவும் கேபிள் தொலைக்காட்சி மூலமாகவும் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி, (2) இச்சட்டம் 7 மற்றும் 5 ஆம் பிரிவுகளின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு ஒரு இடத்திலும் வீடியோ ஒளிப்பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டக்கூடாது. இச்சட்டத்தின் 6 மற்றும் 5 ஆம் பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி அன்றி மற்றபடி எவரும் கேபிள் தொலைக்காட்சி மூலமாக தொலைக்காட்சித் திரையில் திரைப்படத்தைத் திரையிடக் கூடாது.

1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின்கீழ், சான்றளிக்கப்பட்ட திரைப்படங்களைப் பொறுத்தவரையில் விநியோகஸ்தர்களுக்கும், திரைப்படம் காட்டுபவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டிய தகவல் மற்றும் ஆவணங்கள் யாதொரு விநியோகஸ்தருக்கு அல்லது திரைப்படம் காட்டுபவருக்கு சான்றளிக்கப்பட்ட திரைப்படத்தை அளிக்கும் ஒருவர், வரையறுக்கக்கூடிய முறையில், நேர்விற்கேற்ப விநியோக்ஸ்தரிடம் அல்லது திரைப்படம் காட்டுபவரிடம் திரைப்படத்தின் பெயர், நீளம், அத்திரைப்படத்திற்கு வழங்கப்பட்ட சான்றிதழின் எண் மற்றும் தன்மை, அச்சான்றிதழ் ஏதேனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப் பட்டிருந்தால் அந்த நிபந்தனைகள், அந்த திரைப்படத்தைப் பொறுத்தமட்டில் வரையறுக்கப்படக்கூடிய ஏனைய விவரங்களை அளிக்கவேண்டும். திரைப்படம் காட்டுவதற்கு உரிமம் பெறப்பட வேண்டும். இப்பகுதியில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டாலன்றி மற்றபடி, ஒருவர் இப்பகுதியின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட இடத்தைத் தவிர, வேறு இடத்தில் அல்லது இத்தகைய உரிமத்தின் மூலம் விதிக்கப்பட்ட நிபந்தனை மற்றும் கட்டுப்பாடுகளுக்கிணங்க வேறு வகையில் திரைப்படக் கருவி மூலமாக, திரைப்படம் காட்டக் கூடாது.

வீடியோ வகையிலான திருட்டுத் தடுப்புப் பிரிவில் 2002 ஆம் ஆண்டில் 650 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2003 ஆம் ஆண்டில்



594 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1-1-2003 முதல் 31-12-2003 வரையிலான கால அளவில் வீடியோ வகைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு கைப்பற்றிய குற்றத்திற்குட்படுத்தும் சொத்துக்களின் மதிப்பு ரூ.4,15,04,230/- ஆகும். 1995 முதல் 2004 (31-5-2004 வரை) வரையிலான கால அளவில் இப்பிரிவு கைப்பற்றிய குற்றத்திற்குட்படுத்தும் சொத்துக்களின் மதிப்பு ரூ.17,01,02,673/- ஆகும்.

தொடர்புடைய தயாரிப்பாளர்களிடமிருந்து உரிய பதிப்புரிமை பெறாமல் கள்ளத்தனமாக வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொலைதூரம் செல்லும் சில பேருந்துகள், வீடியோ ஒளிப்பதிவுக் கருவி மூலம் திருட்டு வீடியோ திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரையில் காட்டுகின்றன. இவ்வகைக் குற்றங்கள் பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. சம்பந்தப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களிடமிருந்து பதிப்புரிமை பெறாமல் வீடியோ ஒளிப்பதிவுக் கருவி மூலம் கேபிள் தொலைக்காட்சியில் புதிய படங்களைக் காட்டும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் கடுமையாக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**கேபிள் தொலைக்காட்சிக் கூட்டமைப்பு**

கேபிள் தொலைக்காட்சி மூலம் திரைப்படங்களைக் காட்டுவதை முறைபடுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு 1991 ஆம் ஆண்டு வீடியோ கருவி மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுவது (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் செயலுக்கு வந்துள்ளது.

மத்திய அரசு 1995 ஆம் ஆண்டு மத்திய கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு விதிகளை இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்துகின்ற ஒன்றாகும். இதன்படி, தலைமை அஞ்சல் நிலைய அலுவலர், பதிவு செய்யும் அலுவலர் ஆவார். 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி (36/2000) மாவட்ட மாஜிஸ்டிரேட்டு, உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு மற்றும் சென்னை காவல் துறை ஆணையாளர் ஆகியோருக்கு இச்சட்டத்தின் 3, 5, 6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறி குற்றம் செய்த கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**கண்டிஷனல் அக்ஸஸ் சிஸ்டம் (சி.ஏ.எஸ்.)**

இவ்வழிமுறையின்கீழ், சந்தாதாரர்கள் தாங்கள் பார்க்க விரும்பும் கட்டண அலைவரிசைகளைக் காண உண்டாக்கப்பட்ட ஒரு முறையாகும். இந்த முறையின்படி, பார்வையாளர்கள் அவர்கள் பார்க்கும் கட்டண அலைவரிசை ஒளிபரப்புக்கான கட்டணத்தை செலுத்தி பார்க்கலாம். இதற்கு 'செட்-டாப் பாக்ஸ்' என்னும் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இதர கட்டணமில்லா அலைவரிசை ஒளிபரப்புகளைக் காண இக்கருவி தேவையில்லை. இதன்படி 30 கட்டணமில்லாச் சானல்களை ரூ.72/-க்கு (மற்றும் வரி) காணலாம். இது கேபிள் டிவி நெட்வொர்க் (முறைப்படுத்தல்) சட்டம், 1995, பிரிவு 4(ஏ)-யின்படி முறைப்படுத்தப்பட்டது. இவ்வழிமுறையானது சென்னை நகரம் மற்றும் டெல்லியின் ஒரு பகுதி ஆகியவற்றில் ஜூலை 2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், பிப்ரவரி 2004-ல் ஓர் அறிக்கையின்படி இம்முறையானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து சென்னையைச் சேர்ந்த முதன்மையான கேபிள் ஆபரேட்டர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி மத்திய அரசின் நிறுத்தத்திற்கு தடை பெற்றது. இது இன்றும் அமலில் உள்ளது. ஆகவே சென்னையைப் பொறுத்தமட்டிலும் 'கண்டிஷனல் அக்ஸஸ் சிஸ்டம் (சி.ஏ.எஸ்.)' நடைமுறையில் உள்ளது.

சென்னை, குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவு வீடியோ வகையிலான திருட்டுத் தடுப்புப் பிரிவு, 2003 ஆம் ஆண்டில் கேபிள் தொலைக்காட்சிகள் தொடர்பாக, 50 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் 66 வழக்குகள் மட்டும் பதிவாயின. அனைத்து வழக்குகளும் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.





## அத்தியாயம் 6

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, கருத்து விளக்கப் படங்களும் வீடியோ செய்தி மலர்களும் தயாரித்து வருகிறது. அரசின் முக்கிய நிகழ்ச்சிகளையும், குறிப்பாக அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் இத்தயாரிப்புகள் உள்ளடக்கி உள்ளன.

ஒவ்வொன்றும் 10 நிமிட கால அளவிலான 12 வீடியோ செய்தி மலர்கள், 6 கருத்து விளக்கப்படங்கள் ஆகியன 35 மி.மீ. வண்ணப் படச்சுருளில் ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு வந்தன. 2004-2005 ஆம் ஆண்டு முதல் 12 வீடியோ செய்தி மலர்களும் 35 மி.மீ. படச்சுருளில் 12 செய்தி மலர்களும் தயாரித்து வெளியிட உள்ளன.

வீடியோவில் தயாரிக்கப்படும் செய்தி மலர்கள் அரசு தொலைக்காட்சியான பொதிகை மற்றும் தனியார் தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்பட்டு, அரசின் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடைய வகை செய்யப்படுகிறது.

இந்த வீடியோ செய்தி மலர்கள் குறுந்தகடுகளாக மாற்றப்பட்டு, அவற்றில் 60 பிரதிகள் மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அனைத்துக்கும் அனுப்பப்பட்டு, கள விளம்பரப் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றன. 2004-2005 ஆம் ஆண்டு முதல் குறுந்தகடுகளாக்கும் பிரதிகளின் எண்ணிக்கை 350 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது.

35 மி.மீ. வண்ணப் படச்சுருளில் தயாரிக்கப்படும் கருத்து விளக்கப்படங்கள் இதுநாள் வரை 75 பிரதிகள் வீதம் எடுக்கப்பட்டு, மத்திய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் தமிழ்நாட்டின் அனைத்து திரையரங்குகளிலும் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது. 2004-2005 ஆம் ஆண்டு முதல் கருத்து விளக்கப் படங்களின் எண்ணிக்கை 6-லிருந்து 12 ஆக உயர்த்தப்பட்டு, பிரதிகளின் எண்ணிக்கையும் 147 ஆக உயர்த்தப்பட்டு, தமிழகத்தின் அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அரசுத் துறைகளுக்கும், அரசுச் சார்பு நிறுவனங்களுக்கும் 35 மி.மீ. வண்ணப்படச் சுருளில் அல்லது வீடியோவில், விளக்கப் படங்கள்/விளம்பரப் படங்கள் போன்றவற்றை அந்தந்தத் துறைகள், நிறுவனங்களின் தேவைக்கேற்ப, அவை அவற்றின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்றாற்போல் தயாரித்து இந்நிறுவனம் வழங்குகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதற்கென ரூ.2.29 கோடி செலவில் வீடியோ படப்பிடிப்புக் கருவிகள் வாங்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையில் நிறுவப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளை இக்கருவிகள் மூலம் வீடியோ படம் எடுத்து, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் ஒளிபரப்புச் செய்ய வழங்கப்படுகிறது.





## அத்தியாயம் 7

### தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழிலநுட்பங்கள் மற்றும் அவை தொடர்பான பயிற்சிகளுடன்கூடிய பாடங்களை பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனமாகும்.

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி தரும் இந்தியாவின் மூன்று நிறுவனங்களில் ஒன்றான இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் செய்தி—மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப்படிப்புகள் நடத்தப்படுகின்றன:

| வ.எண் | பட்டயப்படிப்பு | காலம் | கல்வித் தகுதி | இருக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல் | 3 ஆண்டுகள் | ஏதாவது ஒரு பட்டப் படிப்பு | 14 |
| 2. | ஒளிப்பதிவு | 3 ஆண்டுகள் | ப்ளஸ் 2 | 14 |
| 3. | ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல் | 3 ஆண்டுகள் | ப்ளஸ் 2 | 14 |
| 4. | படப்பதனிடுதல் | 3 ஆண்டுகள் | ப்ளஸ் 2 | 14 |
| 5. | படத்தொகுப்பு | 3 ஆண்டுகள் | ப்ளஸ் 2 | 14 |

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லா பட்டயப் படிப்புகளுக்கும் புது டெல்லியில் உள்ள அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒவ்வொரு பட்டயப் படிப்பிற்குமான 12 இருக்கைகள் 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல் 14 இருக்கைகளாக அதிகரிக்கப்பட்டன.

ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் தொடங்கும் இப்பட்டயப் படிப்பிற்கான மாணவர்களின் சேர்க்கை பற்றிய அறிவிக்கைகள் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் விளம்பரமாக வெளியிடப்படுகின்றன.

இறுதி ஆண்டில் பட்டயப் படிப்பின் அனைத்துப் பிரிவு மாணவ–மாணவியர்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றனர். அவர்கள் 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் தயாரிக்கப் பயிற்சியளிக்கப்படுகிறது.

சென்னை தொலைக்காட்சி பொதிகை சேனலில் சனிக்கிழமைதோறும் ஒளிப்பரப்பாகும் 'முதல் முயற்சி' நிகழ்ச்சியில், இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட பட்டய குறும்படங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. அந்த குறும்படங்கள் தொடர்புடையோரின் பேட்டிகளும் இந்நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றன.

இந்நிறுவனத்தில் பயின்று பட்டயத் தகுதிபெற்ற மாணவ–மாணவியர்களில் பலர், திரைப்படத் துறை, அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புகளைப் பெற்று, தங்கள் தனித்தன்மைகளை வெளிக்காட்டி வருகின்றனர்.

2001 – 2002 கல்வியாண்டில் மூன்றாம் ஆண்டு இயக்குதல் பிரிவு மாணவர் திரு. பிரபு ராதாகிருஷ்ணன் எடுத்த பட்டயக் குறும்படமான "பரமபதம்" என்ற படத்திற்கு தேசிய திரைப்பட விருது கிடைத்தது. புதுடெல்லியில் 29–12–2003 அன்று நடைபெற்ற 50–வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் திருமிகு ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் வெள்ளித் தாமரைப் பதக்கம் மற்றும் ரூ.5,000/–க்கான காசோலையைப் பரிசாக வழங்கினார்கள்.



இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் பட்டயக் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு "தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்" ஆண்டுதோறும் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. இவ்விருதில் ஒரு பவுன் தங்கப் பதக்கம், ரூ.5,000/– ரொக்கப் பரிசு மற்றும் நினைவுக் கேடயம் அடங்கும்.

**கணினி மையம்**

இந்நிறுவன மாணவர்களுக்காக ரூ.11 இலட்சம் செலவில் ஒரு கணினி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கணினி மையத்தின் மூலம் மாணவர்களுக்கு மிக நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்க வகை செய்யும்பொருட்டு ரூ.75,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 8

### பொருட்காட்சி

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படும் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள், சாதனைகள் ஆகியவை பற்றிய விளக்கங்களை மக்கள் அறியச் செய்திடும் பணியினை ஆற்றி வருகின்றன. ஆண்டுதோறும் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் ஏப்ரல்–ஜூன் மாதங்களிலும், சேலத்தில் ஜூலை–செப்டம்பர் மாதங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பொருட்காட்சிகளில், அரசுத் துறைகள், அரசுச் சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை கலந்து கொள்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்கு பொழுதுபோக்காக அமைவதோடு நேரிடையாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது.

1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை இத்துறை மூலம் 111 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசுக்கு ரூ.11.74 கோடி நிகர இலாபம் கிடைத்தது.

மகாமகம் திருவிழாவையொட்டி (பிப்ரவரி–மார்ச் 2004) அரசுப் பொருட்காட்சி கும்பகோணத்தில் 30 நாட்கள் நடத்தப்பட்டு, ரூ.18.46 இலட்சம் நிகர இலாபம் ஈட்டப்பட்டது. தற்போது திருநெல்வேலியில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. மேலும், சேலத்தில் அரசுப் பொருட்காட்சி நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறு கண்காட்சிகள், மாவட்டங்களில் ஆண்டுதோறும் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களில் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள்மூலம் நடத்தப்படுகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் 2003 அக்டோபர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழாவில் (Phool Walon Ki Saire) இத்துறையின் பொருட்காட்சிப் பிரிவு பங்கேற்று முதல் பரிசினைப் பெற்றது.



2004 ஜூலை 31]

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். இவ்வாண்டும், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு, கலைநிகழ்ச்சிகள், வர்ணனையாளர்கள் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று அரங்கு அமைத்து வருகிறது. புதுடெல்லியில் ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழகத்தின் சார்பில் இத்துறை பங்கேற்கிறது. இத்துறையின் பொறுப்பில் உள்ள 'தமிழ்நாடு அரங்கில்' தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளும் தங்கள் துறையின் செயல்பாடுகளை காட்சிப்படுத்தும் ஒருங்கிணைப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 9

### தமிழரசு

தமிழக அரசின் செயல்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் ஊடகம் 'தமிழரசு' இதழ்.

தமிழரசு இதழில் அரசின் சாதனைகள், மேதகு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள், அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், அறிவிப்புகள், மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், திட்டங்கள், செயல்பாடுகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், இலக்கியக் கட்டுரைகள், மருத்துவச் செய்திகள் மற்றும் பிறமொழிக் கதைகள் போன்றவை வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழரசு இதழ் அச்சிடுவதற்கென இத்துறையின்கீழ் தமிழரசு அச்சகம் இயங்கி வருகிறது. சிறப்பான முறையில் இதழ்களை அச்சிடுவதற்கு ஏற்ற வகையில், தமிழரசு அச்சகத்திற்கென நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல் சிறப்பு வெளியீடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள் ஆகியனவும் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

தமிழரசு தமிழ் இதழ் மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு தமிழ் இதழின் விலை ரூ.10. ஆண்டுச் சந்தா ரூ.120. ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.1,000/-.

தமிழரசு ஆங்கில இதழின் விலை ரூ.15. ஆண்டுச் சந்தா ரூ.60. ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.500/-. இதழுக்கான சந்தாக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

தமிழரசு இதழின் ஆண்டுச் சந்தா 30-6-2004 வரை 48,814; ஆயுள் சந்தா 37,346; ஆக மொத்தம் 86,160 சந்தாக்கள். மேலும் அரசின் வளர்ச்சித் திட்டங்கள், அரசின் செய்திகள் மேலும் அதிக மக்களிடையே சென்று அவர்கள் பயனடையும் வகையில் கூடுதலாக சந்தாக்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 31]

**சிறப்பு வெளியீடுகள்**

1. இந்த அரசு ஏழை எளியோரின் அரசு (ஜூன், 2001)
2. வளம் தரும் திசையில் தமிழகம் (100 நாள் சாதனைகள்) (ஆகஸ்ட், 2001)
3. பெரியார் விருது – அம்பேத்கர் விருது – திரு.வி.க. விருது – பாரதியார் விருது – பாரதிதாசன் விருது – கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா – தகுதி உரைத் தொகுப்பு (26 டிசம்பர், 2001)
4. முதல்நிலை நோக்கி முன்னேறும் தமிழகம் (மார்ச், 2002)
5. தன்னிகரற்ற தமிழகத்தை உருவாக்க 15 அம்சத் திட்டம் (ஏப்ரல், 2002)
6. தமிழகம் என்றென்றும் அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்வோம் (ஏப்ரல், 2002)
7. பிளாஸ்டிக் பொருட்களின் தீமையை மக்கள் உணரச் செய்வோம் (மே, 2002)
8. இந்தியாவில் முதலீட்டுக்கு உகந்த முதன்மையான மாநிலம் தமிழ்நாடு (ஆகஸ்ட், 2002)
9. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை (காவிரி நதிநீர்ப் பிரச்சினை) (14 செப்டம்பர், 2002)
10. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை (அரிசி விலை) (25 செப்டம்பர், 2002)
11. மக்களின் நம்பிக்கையே நமக்கு வலிமை தரும் சக்தி (பிப்ரவரி, 2003)
12. அமைதி ஆட்சி செலுத்தும் தமிழகம் (ஏப்ரல், 2003)
13. தமிழகத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்கிறது (மே, 2003)

14. நாங்கள் மக்கள் பக்கம், மக்கள் எங்கள் பக்கம், வெற்றி எங்கள் பக்கம் (பிப்ரவரி, 2004)

15. மாவட்டங்களில் நடைபெற்ற அரசு விழாக்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு

16. மக்கள் நலன் பாதுகாக்கும் தமிழக அரசின் அறிவிப்புகள் (மே, 2004)

17. நாட்டு மக்கள் நலன் காக்க அரசின் புது அறிவிப்புகள் (ஜூன், 2004)

தமிழறிஞர்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய கையேடுகள் அச்சிட்டு, நினைவகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.





## அத்தியாயம் 10

### விளம்பரம்

தமிழ்நாடு அரசின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடும் முறை மையப்படுத்தப்பட்டு, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மூலமாக வெளியிடப்பட்டு வருகின்றன. அரசுத் துறைகள், பல்வேறு கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசுச் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் அனைத்தும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு விளம்பரங்கள் அவற்றிற்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள், மத்திய அரசு தேசிய தகவல் மையத்தின், தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுகின்றன.

அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன் இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்திற்குட்பட்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000, இயற்றப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட/மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

[2004 ஜூலை 31

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியன பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடப்படுகின்றன. ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள்மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 11

### மேற்கோள் பிரிவு

ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள், பருவ இதழ்களின் முக்கியச் செய்தி நறுக்குகளை அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைச் செயலாளர்களுக்கும் பார்வைக்கெனவும், நடவடிக்கைக்கெனவும் எனத் தொகுத்து அனுப்பிவைக்கும் பணியை, மேற்கோள் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

இப்பிரிவில் பல ஆண்டுகளுக்கு முந்தைய நாளிதழ்களின் தொகுப்புகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து துறைகளுக்குத் தேவைப்படும் செய்தி நறுக்குகளை வழங்கும் பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

இப்பிரிவின் பயன்பாட்டுக்கென ஒரு கணினி, அதன் துணைக் கருவிகள் மற்றும் ஒரு நிகரி ரூ. 1.51 இலட்சத்தில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

**மின்னணு ஆவணக் காப்பக முறை**

மேற்கோள் பிரிவில் உள்ள நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களின் முக்கியச் செய்தி நறுக்குகள் மற்றும் அரசின் முக்கிய நிகழ்வுத் தொகுப்புகளை சி.டி.க்களாக தயாரித்துப் பராமரிக்கும் 'மின்னணு ஆவணக் காப்பக முறை' செயல்படுத்தப்பட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 12

### மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களும், பல்வேறு விளம்பர நிகழ்ச்சிகள் மூலம் அரசினுடைய வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிய விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏழை, எளிய மக்களின் நலனுக்காக, அரசு மேற்கொள்ளும் பல்வேறு நலத்திட்டப் பணிகள் பற்றி, விளம்பரப் பணிகள் மேற்கொள்ள, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நவீன விளம்பரச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 12 ஒளிநகல் இயந்திரங்கள், 12 நிகரிகள் வாங்கப்பட்டு, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் ஒளிநகல் இயந்திரங்களும், நிகரி இயந்திரங்களும் வழங்கப்பட்டு இவ்வகைத் தேவையில் அவை தன்னிறைவு பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு, 14 செய்தியாளர் ஊர்திகளும், 2 வீடியோ விளம்பர ஊர்திகளும் ரூ.66 இலட்சம் செலவில், 15 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்காக வாங்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டு ரூ.0.29 இலட்சம் செலவில் 10 வீ.சி.டி. கருவிகள் வாங்கப்பட்டு, மாவட்டங்களிலுள்ள 6 செய்தி நிலையங்களுக்கும், 3 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், தலைமையிடத்திற்கு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டங்களில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் சாதனைகள் அடங்கிய சிறு கையேடுகள் கடந்த ஆண்டு முதல் வெளியிடப்படுகின்றன.

மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களால், கிராமப்புறங்களில் வீடியோ படக்காட்சிகள், விழாக்கள் நடைபெறும்போது, அவ்விடங்களில் சிறிய கண்காட்சிகளை நடத்த 29 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய புகைப்பட விளம்பரப் பலகைகள் ரூ.10.59 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 13

### செய்தி நிலையங்கள்

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின்கீழ் ஆறு செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

சென்னையில் மாநிலச் செய்தி நிலையம், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இயங்கி வருகிறது. இச்செய்தி நிலையத்தில் 16,977 மேற்கோள் நூல்கள் உள்ளன. இவை பத்திரிகையாளர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

புதுடெல்லி, சாணக்கியபுரியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் அமைந்துள்ள செய்தி நிலையம், இத்துறையின் உதவி இயக்குநர் மேற்பார்வையில் இயங்குகிறது.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள நான்கு செய்தி நிலையங்கள் அந்தந்த மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களின் மேற்பார்வையில் இயங்குகின்றன.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 14

### 2003-2004 ஆம் ஆண்டில் பகுதி - II மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு அதிகத் திறன் கொண்ட ஒளிநகல் இயந்திரம் மற்றும் கணினி உபகரணங்களுடன் வாங்கப்பட்டு, குளிர்சாதன வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. | 4.10 |
| 2. | மேற்கோள் பிரிவிற்காக நிகரி மற்றும் கணினி உபகரணங்களுடன் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. | 1.51 |
| 3. | 3 மாவட்ட செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகங்கள், 6 செய்தி நிலையங்கள் மற்றும் தலைமையிடத்திற்கு மொத்தம் 10 வீ.சி.டி. கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. | 0.29 |
| 4. | செய்தி வெளியீட்டுப் பிரிவில் இணைய வலைதளம் அமைத்தல். | 25.00 |
| 5. | தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களுக்காக கணினி மையம் அமைத்தல். | 8.00 |
| 6. | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரிலான இணையதளம் அமைத்தல். | 0.79 |
| 7. | செய்தி - மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களுக்கு முதற்கட்டப் பயிற்சி | 1.99 |
| | | **41.68** |



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 15

### பொது

### செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் 36 அலுவலர்களுக்கு நவீன தகவல் மற்றும் விளம்பரத் தொழில்நுட்பங்களில், முதற்கட்டமாக ரூ.2 இலட்சம் செலவில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

[2004 ஜூலை 31

## இணைப்பு XXVI

*(137 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 47 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### அத்தியாயம் 1

### முன்னுரை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது மனதிலும் உடலிலும் உறுதியுள்ள இளைய தலைமுறையினரை உருவாக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இளைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்புமிக்க செல்வமாகும். ஒரு நாட்டின் செழுமை அந்த நாட்டினுடைய இளைஞர்களின் பண்பினாலும் அவர்கள் பெற்றுள்ள வெற்றிகளாலும் அளவிடப்படுகிறது. கல்வியில் மேன்மை, விளையாட்டு மற்றும் போட்டிகளில் திறமை, சேவை மனப்பான்மைக்கு இட்டுச் செல்லும் சமுதாயத்தினுடைய தேவைகளை அறியும் விழிப்புணர்வு ஆகிய இவை ஒரு மாணவனை சிறந்த ஒரு முழு மனிதனாக உருவாக்க தேவையானவையாகும். விளையாட்டுகள் மற்றும் போட்டி விளையாட்டுகள், தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித்திட்டம் மற்றும் சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை, மேற்கூறிய நற்பண்புகளை இளைஞர்களுக்குப் புகட்டி, அவர்களை நாளைய பொறுப்புள்ள குடிமகனாக மலரச் செய்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தின்படி இவ்வாண்டு விளையாட்டு மேம்பாட்டிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிதிநிலை அறிக்கையில் தகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – தோற்றம்

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை எண் 641, கல்வி (ஒய்1)த் துறை, நாள் 18-7-1992-ல் அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில



2004 ஜூலை 31]

விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார்.

தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

### 1.2 குறிக்கோள்களும், இலக்குகளும்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்களும் இலக்குகளும்:

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.
2. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.
3. தலைச்சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.
4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.
5. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

[2004 ஜூலை 31

6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

1.3. தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

## நிதி ஒதுக்கீடு

2004-2005 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண்-47-ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.48.14 கோடி ஆகும். இதில் ரூ.25.92 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும்.



2004 ஜூலை 31]

# அத்தியாயம் 2

## விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### 2.1 சென்னையிலுள்ள நவீன விளையாட்டரங்கங்கள் :—

விளையாட்டு மேம்பாட்டிற்கு கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு ஆற்றுகிறது. சென்னையில் தடகளம் மற்றும் கால்பந்து விளையாட்டிற்கென கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1992-93 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக சர்வதேசத் தரத்திலான செயற்கை புல்தரை கொண்ட ஹாக்கி விளையாட்டரங்கம், செயற்கை விளையாட்டு தளத்தைக் கொண்ட டென்னிஸ் விளையாட்டரங்கம், பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், நீச்சல் குள வளாகம் ஆகிய விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவை நவீனமானதாகவும், சர்வதேச தரம் வாய்ந்ததாகவும் உள்ளன. இதன் விவரம் பின்வருமாறு :-

1. **ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை-3**—இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 இருக்கை வசதியைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும் கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்), தடகள ஓடுகளம் (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்), மூன்று வாலிபால் ஆடுகளங்கள், ஒரு கடற்கரை மணல் தளத்தை கொண்ட பீச் வாலிபால் ஆடுகளம் - மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளைக் கொண்டது.

2. **பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை-3**—8000 இருக்கை வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுகளுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது.

3. **வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை-8**—இவ்விளையாட்டரங்கம் 4000 இருக்கை வசதியுடன் செயற்கை புல்வெளி (ஆஸ்ட்ரோ டர்ப்) வளைகோல்பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

4. **நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை-32**—இவ்விளையாட்டரங்கம் 4000 இருக்கை வசதியுடன் ஒரு போட்டி குளம் - (50 x 25 மீ.), ஒரு பாய்ச்சல் குளம் - (18 x 25 மீ.) மற்றும் ஒரு பயிற்சி குளம்- (20 x 25 மீ.) ஆகிய வசதிகளுடையது.

5. **டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை-34**—இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5000 இருக்கை வசதிகள் மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2000 இருக்கை வசதிகள் உள்ளன. இந்த செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வதேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன் கூடியதாகவும் உள்ளன.

மேற்கண்ட நவீன விளையாட்டரங்கங்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் நடத்திட உரிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது, சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் உள்ள செயற்கை புல்வெளி உபயோகமற்றதாகிவிட்டது. எனவே, புதிய செயற்கை புல்வெளியுடன் சுமார் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அது மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.

## 2.2 சென்னையில் உள்ள இதர கட்டமைப்பு வசதிகள்

1. **ஷெனாய்நகர் நீச்சல் குள வளாகம், சென்னை-30**—இங்கு 33 x 21 மீ. அளவு கொண்ட நீச்சல் குளமும், கையுந்துபந்து மற்றும் சிறகுப்பந்து ஆடுகளமும் உள்ளது.

2. **நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை-84**—இங்கு 400 மீ. ஓடுபாதை-1, கூடைப்பந்து ஆடுகளங்கள்-2, கபாடி ஆடுகளங்கள்-2, டென்னிஸ் ஆடுகளங்கள்-2, கையுந்துபந்து ஆடுகளங்கள்-2 உள்ளன. நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் உள்ள கால்பந்து மைதானம் தற்பொழுது இயற்கை புல்வெளி கால்பந்து மைதானமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் தனியார் கூட்டாண்மை கட்டமைப்பு மேம்பாட்டு அடிப்படையில் ஸ்குவாஷ் விளையாட்டிற்கென ஸ்குவாஷ் வளாகம் கட்டப்பட்டுள்ளது.





3. **அண்ணா நீச்சல் குளம், மெரினா, சென்னை**—சீரமைக்கப்பட்ட அண்ணா நீச்சல் குளம் நீச்சல் பயிற்சிக்காகவும், பொது மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4. **சதுரங்க விளையாட்டுக் கூடம், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் சென்னை**—ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் சதுரங்க விளையாட்டுக் கூடம் சதுரங்க விளையாட்டு வீரர்களுக்காகவும், சதுரங்க விளையாட்டு குழுக்களுக்காகவும் துவங்கப்பட்டுள்ளது.

5. **வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் அமைந்துள்ள ஜிம்னாஸ்டிக் விளையாட்டுக் கூடம், சென்னை**—ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரர்களுக்கு இளம் வயதிலிருந்தே பயிற்சி அளிப்பதற்காக சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் ஜிம்னாஸ்டிக் விளையாட்டுக் கூடம் நிறுவப்பட்டுள்ளது.

6. **சென்னையில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டரங்க வளாகத்தில் அமைந்துள்ள வாள் பயிற்சி விளையாட்டுக் கூடம்**—தமிழ்நாட்டில் வாள் பயிற்சி விளையாட்டு பிரபலமாகி வருகிறது. எனவே, வாள் பயிற்சிக் கூடம் ஒன்று சென்னை பல்நோக்கு உள் விளையாட்டரங்க வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

7. **சென்னையில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டரங்க வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு சிமென்ட் கூடைப்பந்து ஆடுகளங்கள், சென்னை**—பல்நோக்கு உள் விளையாட்டரங்க வளாகத்தில் மின்னொளி வசதியுடன் கூடிய இரண்டு சிமென்ட் கூடைப்பந்து ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. **சென்னையில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டரங்க வளாகத்தில் அமைந்துள்ள திறந்தவெளி குத்துச்சண்டை ஆடுகளம், சென்னை**—சென்னையில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டரங்கில் ஒரு திறந்தவெளி குத்துச்சண்டை ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது

**2.3 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்கள்**

மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்களை ஏற்படுத்த மைய அரசு மானியம் தந்து உதவி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், மைய அரசு 50 சதவிகிதம் உச்ச வரம்பு மானியமாக ஒரு கோடி ரூபாய் தருகின்றது. மலைப்பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு 75 சதவிகிதம் உச்ச வரம்பு மானியமாக 1.50 கோடி ரூபாய் தருகின்றது. தமிழ்நாட்டில் கோவை, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் இந்த சிறப்புச் சலுகையின்கீழ் அதிக மானியம் பெற தகுதி பெற்றுள்ளன.

மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் நீச்சல் குளம் கட்டுமானப் பணிகளுக்காகும் செலவின பங்கீடு விவரம் பின்வருமாறு:-

1. மைய அரசின் பங்கீடு .. 50 விழுக்காடு.
2. மாநில அரசின் பங்கீடு .. 25 விழுக்காடு.
3. விளையாட்டரங்கக் குழு பங்கீடு (பொதுமக்களின் நன்கொடைகள்) .. 25 விழுக்காடு.

மாவட்ட விளையாட்டு அரங்குகளில் பின்வரும் வசதிகளை ஏற்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன:-



| வ. எண். | விளையாட்டு வசதிகள் | பரிந்துரைக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டரங்கம் 8 ஓடுகளப் பாதைகளைக் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து, வளைகோல்பந்து மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் | 36 |
| 2. | திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு மரபுவழி விளையாட்டுகள், கோ—கோ, கபாடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு | 10 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கும் அறை | 10 |
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்திகரிப்புக் கருவியுடன் கூடிய 25 மீ. x 13 மீ. அளவிலான நீச்சல் குளம் | 50 |
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட 35 மீ x 19 மீ x 12.5 மீ அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடைமாற்று அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம். | 90 |
| 6. | மொத்தத்தில் 80 படுக்கைகளைக் கொண்ட விடுதியில் குறைந்தபட்சம் மாணவியர்க்கென 30 படுக்கைகள் | 60 |
| | மொத்தம் | 256 |

மைய அரசு, உச்சவரம்பு மானியத் தொகை ரூபாய் 1 கோடி (பழங்குடியினர், மலைவாழ்பகுதியினர் நீங்கலாக) என நிர்ணயித்துள்ளதால், எந்தவித விளையாட்டு வசதிகளும் இல்லாத மாவட்டங்களில் குறைந்தபட்ச வசதிகளைக் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகங்களை மேம்படுத்துவதெனத் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான பங்கீட்டுத் தொகை பின்வருமாறு:

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | உத்தேச மதிப்பீடு | மைய அரசின் உச்ச வரம்பு மானியம் | மாநில அரசின் பங்கீடு | பொது மக்களிடமிருந்து பெறும் நன்கொடை |
|---|---|---|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டு அரங்கம் 8 ஓடுகள பாதையுள்ள 400 மீ. ஓடுகளம், கால்பந்து, வளைகோல்பந்து, மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் | 36 | 18 | 9 | 9 |
| 2. | திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு மரபுவழி விளையாட்டுக்கள், கோ—கோ, கபாடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு | 10 | 5 | 2.5 | 2.5 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளு தூக்கும் கருவி வைக்கக் கூடிய அறை | 10 | 5 | 2.5 | 2.5 |
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்திகரிப்புக் கருவியுடன் கூடிய 25 மீ. x 13 மீ. அளவிலான நீச்சல் குளம் | 50 | 25 | 12.5 | 12.5 |





| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட 35 மீ. x 19 மீ. x 12.5 மீ. அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடை மாற்று அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம் | 90 | 45 | 22.5 | 22.5 |
| | **மொத்தம்** | **196** | **98** | **49** | **49** |

மேற்கண்ட 5 வசதிகளையுடைய மாவட்ட விளையாட்டு வளாகம் ᐧற்படுத்திட மாநில அரசின் பங்கீட்டுத் தொகை ரூ.49 இலட்சம் ஆகும்.

## மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு

| வ. எண். | மாவட்டம் | வெளி விளையாட்டு அரங்கம் | | | நீச்சல் குளம் | பல் நோக்கு விளையாட்டு அரங்கம் | சிறகுப் பந்து உள் விளையாட்டுக் கூடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | 400 மீ தடகள ஓடுபாதையுடன் கால்பந்து/ வளைகோல் பந்து ஆடுகளம் | வெளி விளையாட்டு மைதானம் | மல்டி ஜிம் | | | |
| 1. | தஞ்சாவூர் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 2. | தருமபுரி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 3. | நீலகிரி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | உண்டு |
| 4. | ஈரோடு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 5. | சேலம் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 6. | மதுரை | உண்டு | உண்டு | உண்டு | கட்டு மானப் பணி நடை பெற்று வருகிறது | உண்டு | இல்லை |
| 7. | திருச்சிராப்பள்ளி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | கட்டு மானப் பணி நடை பெற்று வருகிறது | உண்டு |

[2004 ஜுலை 31

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | கன்னியாகுமரி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 9. | இராமநாதபுரம் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 10. | விருதுநகர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 11 | திருநெல்வேலி | உண்டு & புல்வெளி—யுடன் கூடிய கால்பந்து ஆடுகளம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 12. | தூத்துக்குடி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 13. | காஞ்சிபுரம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 14. | கடலூர் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 15. | வேலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 16. | கோயம்புத்தூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 17. | புதுக்கோட்டை | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| 18. | நாகப்பட்டினம் | உண்டு | உண்டு | உண்டு | கட்டுமானப் பணி நடை பெற்று வருகிறது | இல்லை | உண்டு |
| 19. | திண்டுக்கல் | உண்டு & புல்வெளி—யுடன் கூடிய கால்பந்து ஆடுகளம் | உண்டு | உண்டு | கட்டுமானப் பணி நடை பெற உள்ளது | இல்லை | இல்லை |

### 2.5 விளையாட்டில் தனியார் பிரிவுகள் பங்கேற்பு / கூட்டாண்மை

விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தனியார் கூட்டாண்மை ஊக்குவிக்கப்படுகிறது.

அதன்படி கீழ்க்கண்ட கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன:-

(1) சென்னை முகப்பேரில் நீச்சல் குளம் அமைத்தல்.

(2) மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உடல் ஊனமுற்றோருக்கு உள் விளையாட்டரங்க வசதி ஏற்படுத்துதல்.

(3) திருச்சி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சி நடத்தப்படுவதற்கு இடம்.

(4) நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மலைப்பிரதேச விளையாட்டுப் பயிற்சி மையம் அமைத்தல்.



2004 ஜுலை 31]

### 2.6 செயற்கை இழை ஆடுகளம் அமைத்தல்

செயற்கை இழை ஆடுகளம் தற்பொழுது பரவலாக பெரிய அளவிலான பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மைய அரசு செயற்கை தரைகள், அதாவது தடகள ஓடுபாதை மற்றும் வளைகோல்பந்து புல்தளங்கள் ஆகியவை அமைத்திட நிதியுதவியாக 50:50 என்ற விகிதாச்சாரத்தில் அதிகபட்சமாக ரூ.1.00 கோடி நிதியுதவி அளிக்கின்றது.

மேற்படி திட்டத்தின்கீழ், சென்னை-8, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கில் அமைந்துள்ள செயற்கை இழை ஆடுகளம், மைய அரசிடமிருந்து ரூ. 1 கோடி மற்றும் மாநில அரசின் நிதியுதவியாக ரூ.1 கோடி பெற்று, மாற்றி அமைக்கப்பட உள்ளது.

### 2.7 சென்னை-8, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டு அரங்கில் மின்னொளி விளக்கு அமைப்பு

பன்னாட்டு அளவிலான வளைகோல்பந்து போட்டிகள் மின்னொளி விளக்கு வசதிகளுடன் விளையாடப்படுகிறது. சென்னை-8, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கில் பன்னாட்டு அளவிலான வளைகோல்பந்து போட்டிகள் நடத்திட, வண்ண ஒளிபரப்புக்கு தக்க வகையில் மின்னொளி விளக்கு வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

### 2.8 இந்திய விளையாட்டுக் குழுமத்தின் தென் மண்டல துணை மையத்தினை கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலுகா நீண்டகரையில் நிறுவுதல்

இந்திய விளையாட்டுக் குழுமம், மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டுவரும் ஒரு முன்னோடி நிறுவனமாகும். இந்திய விளையாட்டுக் குழுமம் சர்வதேச தரத்திலான பயிற்சி வசதிகளைக் கொண்ட 6 மண்டல மையங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்திய விளையாட்டுக் குழுமத்தின் தென் மண்டலத்தின் துணை மையத்தை தமிழ்நாட்டில் கன்னியாகுமரி

மாவட்டம் - அகஸ்தீஸ்வரம் தாலுகா நீண்டகரையில் அமைத்திட மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழக அரசு இந்திய விளையாட்டுக் குழுமத்தின் தென் மண்டலத்தின் துணை மையத்தினை அமைப்பதற்காக 52 ஏக்கர் நிலத்தினை வழங்கியுள்ளது. தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டம்-அகஸ்தீஸ்வரம் தாலுகா நீண்டகரையில் இந்திய விளையாட்டுக் குழுமத்தின் தென் மண்டலத்திற்கான துணை மையத்தை அமைப்பதற்கு மைய அரசு ரூ.10.00 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.



## அத்தியாயம் 3

### உடற்தகுதி எண்ணத்தை பரவலாக்குதல், விளையாட்டில் திறமை மிக்கவர்களை கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்

ஒவ்வொரு மனிதனுக்கும் உடற்தகுதி இன்றியமையாத அடிப்படைத் தகுதியாகும். பன்னாட்டு அளவில் வெற்றிவாகை சூடிட திறமையினையும், உடற்தகுதியினையும் ஒருங்கிணைப்பது அவசியமாகும். எனவே, இளம் வயதில் திறமை மிக்கவர்களை இனம் கண்டறியவும், உடற்தகுதிக்கான எண்ணத்தினை பள்ளிப் பருவத்திலேயே நிலைப்படுத்தவும், அதனை பரவலாக்கிடவும் கருதி மாநில அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு எடுத்துள்ளது.

### 3.1 பள்ளிகளில் உடற்திறன் தேர்வுகளை பரவலாக நடத்தி அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்

2002-2003 கல்வி ஆண்டு முதல் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ், உடற்திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களிடையே விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு அறிவுறுத்தலின்பேரில், உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர்/சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. அந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்துகொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு திறன் மிக்கவர்கள் விவரம் மாநில அளவிலான விவரக் குறிப்பேட்டில் (டேட்டா பேஸ்) பதிவு செய்யப்பட்டு, அதன்மூலம் வருங்கால திறன் மிக்கவர்களை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர், தொடக்கப் பள்ளி இயக்குநர் மற்றும் ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளின் ஆய்வாளர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.2 சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் கல்வி மாவட்டம் மற்றும் மண்டல அளவில் நடத்தப்படுகின்ற போட்டிகளின்மூலம் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல்

அரசு அறிவுறுத்தலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் உள்ள சிறுவர்/ சிறுமியர்களின் உடற்திறனை கண்டறிய, வேகமாக ஓடுதல் (Speed), அதிகமாக தாக்குப்பிடிக்கும் திறனைக் கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனை கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு, அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10-க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10-க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீ., 200 மீ., 400 மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 63 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய போட்டிகளை நடத்தின. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. விளையாட்டுத் திறனைக் கண்டறிய மண்டல அளவில் ஏற்கெனவே மேலே குறிப்பிட்ட 6 தடகளப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. அப்போட்டிகளில் பங்கேற்க கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

### 3.3 கண்டறியப்பட்ட திறமை உள்ளவர்களுக்கு, சிறப்பு பயிற்சி முகாம்கள் மூலம் திறமையை மேம்படுத்துதல்

மண்டல அளவிலான போட்டிகளில் கண்டறியப்பட்ட திறன் மிக்கவர்களுக்கு சிறப்பு கோடை காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும். மேலும், கண்டறியப்பட்ட திறமை மிக்கவர்களின் (Aptitude) விருப்பத்தின் அடிப்படையிலும் மற்றும் குறிப்பிட்ட விளையாட்டில் திறமை உள்ளவரா என்றும், அல்லது தடகள விளையாட்டில் எந்தப் பிரிவில் திறமை உள்ளவர் என கண்டறிந்து அந்தந்த விளையாட்டின் அடிப்படை நுட்பங்கள் மற்றும் நுணுக்கங்கள் கற்றுக் கொடுக்கப்படும். இதே போன்று கல்வி மாவட்ட அளவிலும் சிறப்பு பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்.



### 3.4 மதுரை நகர் குதித்தல் மற்றும் குறுந்தூர ஓட்டங்களுக்கான அகாடமி

இளையோர் பிரிவில் திறமையுள்ளவர்கள் அதிகம் இருப்பதை கருத்திற்கொண்டு, குதித்தல் மற்றும் குறுந்தூர ஓட்டம் தொடர்பான தடகள விளையாட்டிற்காக ஒரு விளையாட்டு அகாடமியை மதுரையில் நிறுவ அரசு ஆணையிட்டது. ஆர்வம் மற்றும் திறமையுள்ள சிறுவர்/ சிறுமியர்களுக்கு, குதித்தல் மற்றும் குறுந்தூர ஓட்டத்தில் தேசிய அளவில் சிறப்பு நிலையை பெற அந்த அகாடமியில் பயிற்சி அளிக்கப்படும். சர்வதேச அளவில் பதக்கங்களைப் பெற்ற புகழ் பெற்ற தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுப் பயிற்சியில் தனித் திறமை பெற்ற பயிற்றுனர்களைக் கொண்ட ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டது. இந்த வல்லுனர் குழு பள்ளிக் கல்வி இயக்குநரகத்தால் நடத்தப்படுகின்ற குடியரசு தின போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கிடையே திறமை உள்ள மாணவ/மாணவியர்களை இனம் கண்டுள்ளது. மேலும், சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் மண்டல அளவில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்ற சிறுவர்/சிறுமியரின் தகுதிகளையும் இந்த வல்லுனர் குழு ஆய்வு செய்து, அதில் திறமையுள்ளவர்கள் மதுரையில் அமைக்கப்பட உள்ள குதித்தல் மற்றும் குறுந்தூர ஓட்ட அகாடமியில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவ்வாறு திறமையுள்ளவர்களுக்கு சீரான மற்றும் விஞ்ஞான ரீதியான பயிற்சியின் மூலம் அவர்களுக்கு வல்லுனர்களைக் கொண்ட குழுவினைக் கொண்டு வாரத்தின் கடைசி நாட்களில் (சனி மற்றும் ஞாயிறு) சிறப்புப் பயிற்சிகளும், விளையாட்டு உபகரணங்களும், சத்தான உணவுகளும், தடகள விளையாட்டுப் போட்டிகளில் உயர் நிலையில் பங்கேற்க வசதிகளும் மற்றும் பல சலுகைகளும் இந்த சிறப்பு அகாடமிமூலம் வழங்கப்பட உள்ளன.

### 3.5 விளையாட்டு அகாடமிகளை நிறுவுதல்

சில மாவட்டங்களில் அல்லது குறிப்பிட்ட இடங்களில் சில விளையாட்டுகள் பிரபலமாக உள்ளன. ஒரு திட்டத்தின்மூலம் அப்பகுதிகளில் உள்ள திறமைகளை மேம்படுத்தவேண்டியது அவசியமாகிறது. அதனால், அந்தப் பகுதிகளில் உள்ள திறமை மிக்கவர்களுடைய திறமைகளை மேம்படுத்துவதால், அவர்கள் தேசிய அளவில் வெற்றிவாகை சூட வாய்ப்புள்ளது. அதனடிப்படையில், கல்வி நிறுவனங்கள், குழுக்கள், விளையாட்டுக் கழகங்களின் பங்கேற்புடன் கீழ்க்கண்ட விளையாட்டு அகாடமிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- விருதுநகரில் ஹாக்கி அகாடமி
- திண்டுக்கல்லில் கையுந்துபந்து அகாடமி
- சென்னையில் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் ஸ்குவாஷ் அகாடமி
- சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியில் உள்ள சலுகைகளை பெற இயலாத சமுதாயத்தினரிடையே மேசைப்பந்து விளையாட்டை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொன் போஸ்கோ மேசைப்பந்து அகாடமி.
- தமிழ்நாடு செய்லிங் கழகத்துடன் செய்லிங் அகாடமி.
- சென்னை அசோக் நகர் புதூர் அரசு மேனிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி.

மேற்படி அகாடமிகள் அந்தந்த பிரிவு விளையாட்டுக்களில் வல்லுனர்கள் குழுவின் உதவியுடன் மிகவும் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

### 3.6 சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம் சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்லக்கூடிய தனித்தன்மையுடைய திறமையுள்ள விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் ஒரு ஒப்பற்ற திட்டமாகும். சேம்பியன்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்குபெறச் செய்து, வெற்றிபெற்று நமது நாட்டிற்கு பெருமை சேர்த்திடுவதற்காக ஒரு திட்டமிடப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முயற்சி இன்றியமையாததாகும். அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் தமிழகத்திலிருந்து பதக்கங்களைப் பெற வாய்ப்புள்ள சேம்பியன்களை இனம் கண்டு அவ்வாறு இனம் கண்டறியப்பட்டவர்களுக்கு சரியான உதவிகள் வழங்கப்படுமானால் அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்த்து சர்வதேச அளவிலான போட்டியில் அவர்களை பங்குகொள்ளச் செய்ய இயலும். தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றவர்கள் மேலும் சில குறிப்பிட்ட விளையாட்டுகளில் தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் பெற்றவர்கள்தான் இத்திட்டத்தின்கீழ் பயனடைய முடியும் என்ற



கடுமையான தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின்மூலம் இனம் கண்டறியப்பட்ட விளையாட்டு சேம்பியன்களுக்கு தேவையான உதவிகளும் வழங்கப்படுகின்றன. நிதி உதவிகள் பெறவும், உளவியல் திறன் மற்றும் அவர்களுடைய உடல்ரீதியான வலிமையினை மேம்படுத்தவும், அந்தந்த விளையாட்டிற்குத் தேவையான சத்தான உணவு உட்கொள்ளும் முறையைப் பின்பற்றுதல் மற்றும் போட்டிகளில் வெற்றிவாகை பெற இயக்கும் ஆற்றல் போன்றவைகளில் மேம்படுத்தப்பட்ட பயிற்சியையும், அதனால் அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் வெற்றி வாகை சூட வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்த இயலுகிறது.

## அத்தியாயம் 4

### பயிற்சியளித்தல் மற்றும் பயிற்சியளிக்கும் திறனை மேம்படுத்துதல்

பயிற்சி என்பது முறைப்படி திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறனை அதிகப்படுத்துவதற்கும், சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் ஒரு திறவுகோலாகும். தமிழக அரசு அனைத்து வயது பிரிவுகளில் உள்ள விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

### 4.1 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு நிர்மாணித்துள்ளது.

| வ. எண். | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல் |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலை விளையாட்டுப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம், கிரிக்கெட், கால்பந்து |

| வ. எண். | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |



விளையாட்டு விடுதிகள், விளையாட்டு விடுதி காப்பாளர்கள், பயிற்றுனர்கள் மற்றும் சமையல் பணியாளர்கள் ஆகியோர்களைக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நேரிடை பார்வையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

**தேர்வு முறை:** தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

| மாவட்ட அளவிலான தேர்வு | உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படுகிறது |
|---|---|
| மாநில அளவிலான தேர்வு | குழு விளையாட்டுகளில் விளையாட்டுத் திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனியாள் விளையாட்டுகளில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தேர்ச்சி பெற்ற பயிற்றுனர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. |

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 710 மாணவர், மாணவியர்களின் ஊட்ட உணவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் கீழ்க்கண்டவாறு அரசால் மானியம் அளிக்கப்படுகிறது:-

| வ. எண். | | விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | | மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) | ரூ.720 |
| 2. | | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | ரூ.700 |
| 3. | | ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டு உபகரணங்கள் வாங்க | ரூ.250 |
| 4. | | ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை | |
| | (அ) | விளையாட்டுப் பள்ளி | ரூ.400 |
| | (ஆ) | விளையாட்டு விடுதி | ரூ.300 |

### 4.2. சிறப்பு விளையாட்டு விடுதி

கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 1994-95 ஆம் ஆண்டில் செயல்படுத்திடவும், 50 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறவும் அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1) தடகளம் 2) கூடைப்பந்து 3) குத்துச்சண்டை 4) நீச்சல் மற்றும் 5) கையுந்துபந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினை தொடர்வதோடு அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் நோக்கமாகும். இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களைத் தந்துள்ளது. தங்கும் வசதியை நவீனப்படுத்தி, ஒவ்வொரு விளையாட்டு வீரரும் தங்குவதற்கு சிறு தனி படுக்கையறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (10 மாதத்திற்கு) | ரூ.1500 |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுககு | ரூ.3000 |
| 3. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | ரூ.1500 |

### 4.3. வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும், பெற்றுத் தந்துள்ளனர். இக்காரணத்தினால் அங்கு சிறப்பு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர் மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10 வீதம் சிற்றுண்டி தொகையாக வருடத்தில் 365



நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும் விளையாட்டு உபகரணப் படியாக ஒவ்வொருவருக்கும் ரூ.2400 (ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, சத்துவாச்சாரியில் பளுதூக்குவதற்கான சிறப்பு மேம்பாட்டு மையத்தில் 12 மாணவியர்கள் 2003-2004-ல் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

### 4.4. கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்கள், திறமையின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்டு 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க, விளையாட்டு சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கோவை நேரு விளையாட்டரங்கில் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3200/-ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றுக்கு ரூ.10/-ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக நாள் ஒன்றுக்கு ரூ.10/-ம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

### 4.5. திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்றுனர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3,600 விளையாட்டு உபகரணப் படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ.10-ம், மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10-ம் வழங்கப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 31

## 4.6. கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில் அரசு, அந்தந்த கல்லூரிகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளை பயன்படுத்த, கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், அரசு குறைந்தபட்ச தகுதியை நிர்ணயித்தும், கல்லூரி நிர்வாகமே இத்திட்டத்தின்கீழ் மாணவர்களை தேர்வு செய்யவும் அனுமதி வழங்கியுள்ளது.

அதன் விபரம் பின்வருமாறு:—



2004 ஜூலை 31]

| வ. எண். | கல்லூரியின் பெயர் | விளையாட்டுகள் | பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | **ஆண்கள் கல்லூரி**<br>லயோலா கல்லூரி, சென்னை-34 | கால்பந்து<br>தடகளம்<br>கூடைப்பந்து | 16<br>10<br>12 |
| 2. | சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை—45 | தடகளம் | 10 |
| 3. | பி.எஸ்.ஜி.ஆர். கலைக் கல்லூரி, கோவை. | கூடைப்பந்து | 12 |
| 4. | பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30 | வளைகோல்பந்து | 16 |
| 5. | ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி | கையுந்துபந்து | 12 |
| 6. | தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | தடகளம்<br>கூடைப்பந்து<br>கால்பந்து | 10<br>12<br>16 |
| 7. | எம்.எஸ்.எஸ்.வக்ப் போர்டு கல்லூரி, மதுரை | தடகளம் | 10 |
| 1. | **பெண்கள் கல்லூரி**<br>எத்திராஜ் கல்லூரி, சென்னை | தடகளம்<br>கூடைப்பந்து<br>கையுந்துபந்து | 10<br>12<br>12 |
| 2. | எஸ்.டி.என்.பி.வைஷ்ணவா கல்லூரி, சென்னை | தடகளம்<br>வளைகோல்பந்து | 10<br>16 |
| 3. | வி.வி.வி. கல்லூரி, விருதுநகர் | தடகளம் | 10 |
| 4. | ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, பெரியகுளம் | கையுந்துபந்து | 12 |
| 5. | நிர்மலா கல்லூரி, கோவை | கூடைப்பந்து | 12 |

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த சிறந்த திறன்படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து நிதியுதவி கீழ்க்காணும் வகையில் வழங்கப்படுகிறது:—

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப்படி (10 மாதங்களுக்கு) | ரூ. 600 |
| 2. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணம் வாங்குவதற்கு | ரூ. 500 |

**பயிற்சி:** அந்தந்த கல்லூரி நிர்வாகமே, தனது சொந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு பொறுப்பாகும்.

**4.7. இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையங்கள்**

இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையங்களை, தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் துவக்க, விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை தமிழக அரசு அளிக்கிறது:—

| இடம் | திட்டம் | விளையாட்டுப் பிரிவு |
|---|---|---|
| சென்னை | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | வளைகோல்பந்து, கால்பந்து, கபாடி |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | வளைகோல்பந்து, கபாடி, குத்துச்சண்டை |
| | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவியர்கள்) | வளைகோல்பந்து, கையுந்துபந்து, கபாடி |
| சேலம் | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| நாகர்கோவில் | இந்திய விளையாட்டு ஆணைய சிறப்பு விளையாட்டு டே போர்டர் திட்டம் | தடகளம், கராத்தே, கபாடி |

**4.8. கோடை கால பயிற்சி முகாம்கள்**

ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத் தலைநகரங்களில், 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாத ஆண், பெண் இருபாலருக்கும், மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் - தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிரபலமான விளையாட்டுகளில் கோடை கால பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.



**4.9. சிறப்பு பயிற்சித் திட்டம்**

**(அ) நீச்சல் பயிற்றுவித்தல்**

ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறையில், வேளச்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குள வளாகத்திலும், செனாய் நகர் நீச்சல் குளத்திலும் நீச்சல் பயிற்றுவித்தல் நடத்தப்பட்டு வருகிறது.

**(ஆ) டென்னிஸ் பயிற்றுவித்தல்**

நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் ‘டென்னிஸ் பயிற்சி’ திட்டம், டென்னிஸ் அனுபவமற்றவர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

# அத்தியாயம் 5

## விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் கலாச்சாரத்தை மேம்படுத்துதல்

விளையாட்டுகளில், விளையாட்டு வீரர்களுடைய திறனை மேம்படுத்த போட்டிகள் உதவி புரிகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்திய விளையாட்டுக் குழுமம், மாநில விளையாட்டுக் கழகங்கள், அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் பலதரப்பட்ட விளையாட்டுகளில் அனைத்து வயது பிரிவினருக்கும் போட்டிகள் நடத்தி வருகின்றன.

### I. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

### 5.1. விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. அவர்களின் விளையாட்டு திறமைகளை மேம்படுத்தவும், போட்டிகளில் கலந்து கொள்வதை ஊக்குவிக்கவும், பல்வேறு மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மற்றும் இதர போட்டிகளிலும் விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகள் பங்கு பெறுகின்றன.

### 5.2. அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டியில் வெற்றி பெறுபவர்களைக் கொண்டு மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் சுற்றுமுறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.



### 5.3. சென்னை மராத்தான்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இன்டர்நேஷனல் கழகமும் இணைந்து, "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயப் போட்டியை சர்வதேச மராத்தான் போட்டிகளுக்கு இணையாக நடத்தி வருகிறது. ஆண்களுக்கு 42 கி.மீ. தூரமும், பெண்களுக்கு 21 கி.மீ. தூரமும் கொண்டதாக இந்த மராத்தான் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், அண்டை நாடுகளிலிருந்தும் இந்த சிறப்புமிக்க போட்டியில் 400-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்.

### 5.4. சென்னையில் தர நிர்ணயப் போட்டிகள்

ஒன்று/மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் நீச்சல் வீரர்களின் திறமைகளை அதிகப்படுத்தும் வகையில், மாநில தர நிர்ணயப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தடகள விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு வயது பிரிவுகளில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான செயற்கை ஓடுகள தளத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாநில தர நிர்ணய நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.5. மண்டல அளவிலான தர நிர்ணயப் போட்டிகள்

தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியரிடையே விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கின்ற மனப்பக்குவத்தை ஊக்குவிக்கும் வகையில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மண்டல அளவில் தர நிர்ணயப் போட்டிகள் பல்வேறு வயது பிரிவுகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.6. சர்வதேச விளையாட்டு முறை கால்பந்து போட்டிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு கால்பந்து விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து கால்பந்து விளையாட்டில், கால்பந்து விளையாட்டுப் பயிற்சியாளர்கள் மற்றும் கால்பந்து விளையாட்டுக் கழகத்தில் உள்ள நடுவர்களுக்கு பயன்படும் வகையில் **"சி லைசென்ஸ் கோர்ஸ்"** என்ற நவீன தொழில்நுட்பம் வாய்ந்த பயிற்சி வகுப்பினை நடத்தியது. ஆசிய கால்பந்து

இணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி இயக்குநர்மூலம் இந்த பயிற்சி வகுப்பினை நடத்தி, கால்பந்து விளையாட்டில் உள்ள நவீன நுணுக்கங்களைப் பற்றி பயிற்சி வகுப்பில் பங்கேற்றவர்களுடைய திறனை மேம்படும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வாறு இந்த "சி லைசென்ஸ் கோர்ஸில்" கலந்துகொண்ட பயிற்றுனர்கள் மற்றும் நடுவர்கள் அவர்களுடைய மாணவர்களுக்கு கற்றுத்தந்த கால்பந்து விளையாடும் முறையினை, மதிப்பீடு செய்யும் வகையில், சர்வதேச கால்பந்து விளையாடும் முறையில் அமைந்த போட்டி நடத்தப்பட்டது.

**5.7. ஐந்து புதிய விளையாட்டுகள்**

குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் தற்போது உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன் ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள் சண்டை, குத்துச்சண்டை மற்றும் நீச்சல் ஆகிய 5 புதிய விளையாட்டுப் போட்டிகள் சேர்க்கப்பட்டன. பள்ளிகளில் பணிபுரிகின்ற உடற்பயிற்சி கல்வி இயக்குநர்கள்/உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கு இந்த புதிய விளையாட்டுகளின் விதிமுறைகள் மற்றும் நுணுக்கங்களைப் பற்றி தெரியப்படுத்த சம்பந்தப்பட்ட விளையாட்டுகளில் உள்ள வல்லுனர்கள் மூலம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இந்த 5 புதிய விளையாட்டுகளில் விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், பள்ளிக் கல்வி இயக்குநரகமும் இணைந்து நடத்தின.

**5.8. கடற்கரை மணற்பரப்பில் நடத்தப்படும் பீச் வாலிபால் விளையாட்டில் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகள் நடத்துதல்**

தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் உள்ள பள்ளிகள் கண்டறியப்பட்டு, அங்கு படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர் பயனடையும் வகையில், கடற்கரை மணற்பரப்பில் விளையாடும் பீச் வாலிபால் என்ற புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக, 9 கடற்கரை மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பள்ளிகளுக்கிடையேயான பீச் வாலிபால் போட்டிகள் கடற்கரை மணற்பரப்பில் நடத்தப்பட்டன. சர்வதேச போட்டியில் பங்கேற்கும் வகையில் கடற்கரை மணற்பரப்பில் விளையாடப்படும் பீச் வாலிபால் விளையாட்டில் ஈடுபடுகின்ற விளையாட்டு வீரர்களுக்கு உதவும் வகையில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் இந்த ஆண்டு கடற்கரை மணற்பரப்பைக் கொண்ட பீச் வாலிபால் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.



**II. தேசிய சேம்பியன் போட்டிகள் மற்றும் / அகில இந்திய அளவிலான போட்டிகள்**

**5.9. அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்**

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசியப் போட்டிகளில் பங்கேற்கும்முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன.

**5.10. தேசிய மகளிர் விளையாட்டு விழா**

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிர் பிரிவினரை 13 விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை (வயது வரம்பின்றி) நடத்தி வருகிறது. தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இப்போட்டிகளில் பங்கு பெறுவதற்கான மாநில அணியினை தேர்ந்தெடுப்பதற்காக ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தெரிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை பல்வேறு மாநிலங்களில் நடத்தி வருகிறது. தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கும்முன் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

**5.11. இந்திய பள்ளிகளின் விளையாட்டு இணையம் நடத்தும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்**

இந்திய பள்ளிகள் விளையாட்டு இணையம் ஒவ்வொரு ஆண்டும் (பல்வேறு வயது பிரிவுகளில்) சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்காக பல்வேறு விளையாட்டுகளில் தேசிய பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழ்நாடு மாநில அணிகள் இப்போட்டிகளில் தொடர்ந்து கலந்துகொண்டு வருகின்றன. தேசியப் போட்டிகளில் பங்கேற்பதற்குமுன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு பயிற்சி முகாமும் நடத்தப்படுகிறது.

**5.12. அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகள்**

அரசுத் துறைகளில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேர்வுப் போட்டிகளை நடத்தி தமிழக அணியினை தேர்வு செய்கிறது. அகில இந்திய அளவில் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்ற அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கேற்கிறது.

**5.13. தேசிய விளையாட்டு சேம்பியன்ஷிப் போட்டிகள் / பெடரேஷன் கோப்பை போட்டிகள் நடத்துதல்**

சென்னையில் சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்கள் தேசிய விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் இதர முக்கிய விளையாட்டுப் போட்டிகளையும் சென்னையில் நடத்த தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இவ்வாறான சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன்மூலம், தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இயலுவதோடு மட்டுமின்றி, ஏனைய விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்யும் மனப் பக்குவத்தினையும் வளர்க்க உதவுகிறது.

**III. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் கலாச்சாரம்**

**5.14. சென்னை ஓப்பன்**

டென்னிஸ் விளையாட்டில் இதுவரையில் சென்னையில் "TATA OPEN" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் IMC (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து இந்த போட்டியை "CHENNAI OPEN" என்ற பெயரில் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கத்தில், போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் சர்வதேசத் தரத்தை ஒட்டிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்புமிக்க விளையாட்டுப் போட்டியாகும். இந்தப் போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டில் புகழ்பெற்ற சேம்பியன் டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் கலந்து



கொள்கின்றனர். சென்னையில் நடத்தப்படுகின்ற டென்னிஸ் போட்டிகள் உலகம் முழுவதும் தொலைக்காட்சிகளில் நேரடையாக ஒளி பரப்பப்படுவதால், அதனைப் பார்க்க பார்வையாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் உலகத்தின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமாய் உள்ளனர்.

**5.15. சாம்பியன்ஸ் டிராபி 2005**

சர்வதேச ஹாக்கி இணையமும், தமிழ்நாடு ஹாக்கி சங்கமும் இணைந்து சாம்பியன்ஸ் டிராபி 2005 எனும் போட்டியினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் நடத்திட திட்டமிட்டுள்ளது. தலைசிறந்த முதல்நிலை சர்வதேச அணிகள் இப்போட்டியில் கலந்து கொள்ளும்.

**5.16.** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அனைத்து விளையாட்டுச் சங்கங்களுக்கும் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துவதில் உதவிகள் புரியும்.

# அத்தியாயம் 6

## உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

### 6.1. விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இத்திட்டத்தின்கீழ், 17 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும், உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ. 5,000-மும், கல்லூரி / பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500-ம் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.2. முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு தலா ரூ. 1.00 இலட்சம் பண முடிப்பு, பாராட்டுப் பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயம் ஆகியவற்றை பரிசாக அரசு வழங்கி வருகின்றது. இதுவரை சர்வதேச போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

### 6.3. ஊக்கத் தொகை

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும்பட்சத்தில், வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்கு பதிலாக ஊக்கத் தொகை வழங்கவும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் (இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் நடத்தப்படுவது) பதக்கங்கள் பெறும்பட்சத்தில், அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும், அரசு, அரசாணை (நிலை) எண் 5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நாள்: 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கியுள்ளது:—





**போட்டிகளின் முன்னுரிமை மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுகளின் வரிசைக் கிரமம் | ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | ஒலிம்பிக் ஒற்றையர் போட்டி/ குழுப்போட்டிகள் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100.00 | 50.00 | 25.00 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) ஒற்றையர் போட்டி/ குழுப் போட்டிகள் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) ஒற்றையர் போட்டி/ குழுப் போட்டிகள் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண் கலம் | தங்கம் | வெள்ளி | வெண் கலம் |
| 4 | தெற்காசிய/ தேசிய விளையாட்டுப் போட்டிகள் | ரூ. 100 இலட்சம் | ரூ. 50,000 | ரூ. 25,000 | ரூ. 20,000 | ரூ. 15,000 | ரூ. 10,000 |
| | | | | | ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | |

முந்தைய சாதனையை முறியடிக்கும் விளையாட்டு வீரர்களுக்கு ரூ. 1.00 இலட்சம் வழங்க 2-12-2003 நாளிட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசாணை (நிலை) எண் 64-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### 6.4. நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒய்வூதியம் வழங்குதல்

தற்போது நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2000-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ஓய்வூதியம் பெற 24 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### 6.5. விளையாட்டு வீரர்கள் நல நிதி

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### 6.6. அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல்

தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் மற்றும் 43 மாநில விளையாட்டுக் கழகங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் மற்றும் அப்போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்கும் மானியம் வழங்கப்படுகின்றது.

### 6.7. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க மைய அரசின் பயணச் செலவின உதவியினைப் பெறாதபட்சத்தில், விமானப் பயணக் கட்டணத்திற்கான மானியம் அதிகபட்சமாக ரூ.25,000 வரை வழங்கப்படுகிறது.



### 6.8. திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்

தற்போது காவல் துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10% இட ஒதுக்கீடு முறை, ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 6.9. பயிற்றுனர்களுக்கும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பணியாற்றும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுனர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்படும். அதுபோன்று சிறந்த பணியாற்றும் இரு உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் ரூ. 1.00 இலட்சம் பரிசுத் தொகையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

[2004 ஜூலை 31

## அத்தியாயம் 7

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 7.1. இளைஞர் மன்றங்கள்

இன்றைய இளைஞர்களிடையேயுள்ள சக்தியினையும், திறமையினையும், தனி மனித வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் பயன் அடையும் வகையில் வெளிக்கொணர வேண்டும். நமது இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக்கொணரும் வகையில், இளைஞர் நலத் திட்டங்களை செயல்படுத்திட அரசு முடிவு எடுத்துள்ளது. அதன்படி 300 இளைஞர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களின் நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தி அவர்களை விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தும் பணிகளில் இம்மன்றங்கள் செயல்படும். அவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் மது அருந்தாமை, தீண்டாமை ஒழிப்பு, சமுதாயக் காவல் பணிகள், வீரதீரச் செயல்கள் போன்ற பணிகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுவார்கள்.

### 7.2. இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.



2004 ஜூலை 31]

தற்சமயம் தமிழ்நாட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 4 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் சர்வதேசத் தரம் வாய்ந்த இளைஞர் விடுதி கட்டுவதற்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 7.3. இளைஞர் விழா

மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-16 வரை இளைஞர் விழாவினை நடத்தி வருகிறது. தமிழ்நாடு அணி 18 வெவ்வேறு போட்டிகளிலும் போட்டிகள் அல்லாத பல கலை நிகழ்ச்சிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் பங்கேற்கிறது.

### 7.4. இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட சிறுதொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய ஒருமைப்பாட்டை பேணிடவும்:—

1. தொழிற்கல்வி திட்டம்
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
3. கண்காட்சித் திட்டம்

ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற்கொள்ள இளைஞர் மேம்பாட்டு நிதியுதவி திட்டத்தின்கீழ் மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது.

15-35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்குபெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவ கேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவு சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது.

[2004 ஜூலை 31

அவ்வாறான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மேற்படி நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது.

இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கான மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படும் கருத்துருக்கள் மைய அரசுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு, நேரு யுவ கேந்திரா மூலமாக அனுப்பி வைக்கப்படுகின்றன.



2004 ஜூலை 31]

## அத்தியாயம் 8

### தேசிய மாணவர் படை

**தொடக்கம் :**

தேசிய மாணவர் படை இயக்ககம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படைச் சட்டத்தின் (எண் XXXI 1948) கீழ் 16-7-1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

**குறிக்கோள் :**

(அ) இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமை, சமய சார்பற்ற நோக்கம், துணிவுச் செயல், போட்டி, நேர்மைப் பண்பு மற்றும் சுயநலமில்லாத தொண்டுகளின் உயர் குறிக்கோள்களை வளர்த்து அவர்களை ஒரு நல்ல குடிமகனாக்குதல்.

(ஆ) ஒழுங்குமுறையில் பயிற்சி பெற்று சிறந்த செயல் நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு அவர்கள் வாழ்வின் அனைத்து நடைமுறைகள் மற்றும் ஆயுதப்படைகளிலும் தலைமை பொறுப்பு வகிக்க வகை செய்து அவர்களை நாட்டுப் பணிக்காக எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயுதப் படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**நிர்வாகம்**

தேசிய மாணவர் படையைச் சார்ந்த பல்வேறு பயிற்சிகள் மைய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. தேசிய மாணவர் படைத் துறையில் பணிபுரியும் துணை இயக்குநர் வரையிலான பணியாளர்களின் ஊதியம் மாநில அரசால் வழங்கப்படுகிறது. மாணவர்களின் சிற்றுண்டிப் படி, பயிற்சி கட்டணங்கள் ஆகியவற்றையும் மாநில அரசே மேற்கொள்கிறது. தேசிய மாணவர் படையின் துணைத் தலைமை இயக்குனருக்கு தமிழக அரசின்கீழ் உள்ள துறைத் தலைவர் அந்தஸ்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 31

**தேசிய மாணவர் படை மாணவர் எண்ணிக்கை**

தேசிய மாணவர் படையில் 94,914 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இவர்களில் 69,765 மாணவர்கள் பள்ளிகளிலும் 25,149 மாணவர்கள் கல்லூரிகளிலும் உள்ளனர்.

**வரவு—செலவுத் திட்ட ஒதுக்கீடு**

2004-2005 ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழக அரசு தேசிய மாணவர் படை இயக்ககத்திற்கு ரூ.13.78 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**விருதுகள்**

தமிழக தேசிய மாணவர் படை இயக்ககம் அனைத்திந்திய 16 இயக்ககங்களுக்கிடையேயான சேம்பியன்ஷிப்/பாரத பிரதமரின் பதாகையையும் 2004 ஜனவரி 27-ல், புதுடில்லியில் நடைபெற்ற போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

**ஊக்கங்கள்**

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் ஊக்கங்களை தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு அளித்துள்ளது :—

(அ) 80 முதுநிலை பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.1,200-ம் 90 இளநிலை பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.600-ம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) குடியரசு தின முகாம் மற்றும் மாநில அளவிலான முகாம்களில் பங்குபெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடத்திற்கு ரூ. 3.17 இலட்சங்கள் வரை ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாட்டில், இளநிலை பட்டதாரி பயிற்சி மற்றும் முதுநிலை பட்டதாரி பயிற்சி ஆசிரியர் தேர்வுகளிலும், நியமனத்திலும் நடைபெறும் வாய்மொழி தேர்வினில் வழங்கப்படும் 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படை செயல்பாடுகளுக்காக 1/2 மதிப்பெண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2004 ஜூலை 31]

**முதலமைச்சர் அணி வகுப்பு**

சென்னையில் 4-2-2004 அன்று “முதலமைச்சர் அணிவகுப்பு” நடத்தப்பட்டது. முதலமைச்சர் பதாகை, இயக்ககங்களுக்கிடையேயான போட்டிகளில் வென்ற திருச்சிராப்பள்ளி தொகுதி தலைமையகத்திற்கு அளிக்கப்பட்டது.

## அத்தியாயம் 9

### நாட்டுநலப் பணித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாட்டுநலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான மான்யம் 7 : 5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டுநலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2003-2004 ஆம் கல்வியாண்டு முதல் 2,30,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுள், சிறப்பு முகாம்களில் 1,15,000 மாணவ தொண்டர்கள் 2003-2004 கல்வியாண்டில் பங்கேற்றுள்ளனர். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் 1,390 நாட்டுநலப் பணித் திட்ட அலகுகளும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 235 அலகுகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 1,350 அலகுகளும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நாட்டுநலப் பணித் திட்ட தொண்டர்களும் அலுவலர்களும், அரசின் பல்வேறு நலத் திட்டங்களை குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம் மற்றும் மரம் நடுதல், இரத்த தானம், மழை நீர் சேகரிப்பு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, அனைவருக்கும் கல்வி, எயிட்ஸ் விழிப்புணர்வு, நுகர்வோர் விழிப்புணர்வு, சுகாதார முகாம்கள் ஆகியவற்றையும் செயல்படுத்துவதில் இவ்வியக்கம் செயல்படுகிறது.

சாலை சீரமைத்தல், பேருந்து நிழற்குடை, குடிநீர்த் தொட்டி அமைத்தல், பள்ளி மற்றும் கோயில் வளாகங்கள் சீரமைத்தல், கைப்பம்புகள் அமைத்தல் ஆகிய நாட்டுநலப் பணித் திட்ட சிறப்பு முகாம் பணிகள் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் சொத்து உடைமை மதிப்பீடு சுமார் 4 கோடி ரூபாயாகும்.



## அத்தியாயம் 10

### சாரண சாரணியர் இயக்கம்

97 வருட பழமைவாய்ந்த சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கம், நாட்டுப்பற்று மற்றும் நல்ல பண்புகள் ஆகியவைகளை புகட்டுவதாகும். இது ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கமாகும். 'எப்போதும் தயாராக இரு' என்பது அதன் கோட்பாடு ஆகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 5,816 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 1,13,767 மாணவர்களும், 55,183 மாணவியர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 2003-2004 ஆம் ஆண்டு 5,721 சிறந்த சாரண சாரணியர்க்கு 'இராஜ்ய புரஸ்கர்' விருது வழங்கப்பட்டது. அரசு, இவ்விருதிற்காக ஓராண்டிற்கு ரூ.5 இலட்சம் செலவு மேற்கொண்டுள்ளது. 465 சாரணர்கள் மற்றும் 407 சாரணியர் ஜனாதிபதி விருதிற்காக தகுதி பெற்றுள்ளனர். இதுதவிர பராமரிப்பு மானியமாக தமிழக அரசால் 2003-2004 ஆம் ஆண்டுக்கு ரூ. 8.00 இலட்சம் வழங்கப்பட்டது.

### நிறைவுரை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நற்பணிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. நாட்டின், விளையாட்டு மற்றும் இளைஞர் நலனில், தமிழ்நாடு உன்னத நிலையினை அடையும் வகையில், இளைஞர்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்றுவதில் கடுமையாக உழைக்க இத்துறை முயற்சித்து வருகிறது.

185247
600 008